கிருஸ்மஸ் விடுமுறை நாட்களை உத்தேசித்து அடுத்த சனிக்கிழமையன்று புல்லெட்டின் வெளிவரமாட்டாது. அடுத்த பதிப்பு 1945-ம்௵ ஜனவரி௴ 6௳ யன்று வெளிவரும்.—*பத்திராதிபர்.*


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம்௵ டிஸம்பர்௴ 23௳ [ந. 229


**தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.**

பிரஸங்கம் **CCXXIX.**

## ஜப்பானை முறியடிப்பதுதான் இந்தியாவின் முக்கியமான பிரச்னை.

### *தற்காப்புப் படைகளில் சேருங்கள், சேனையில் எந்தப் பகுதியில் சேவை செய்தாலும் அதுவே ஒரு பெரிய கல்வி.*

***புதுக்கோட்டை ஸமஸ்தானம் முதலாவது கௌன்ஸிலர் கான் பகதூர் பி. கலிபுல்லா சாகேப், அண்ணாமலை சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவின்பொழுது நிகழ்த்திய சொற்பொழிவு.***

*ஐரோப்பிய யுத்தத்தின் கடைசி கட்டத்திற்கு நாம் வந்துவிட்டபோதிலும் மிகவும் கடுமையான போரை இனிமேல்தான் நடத்தவேண்டியிருக்கும். ஆகையால் எத்திசையிலும் யுத்த முயற்சியில் தளர்ச்சி ஏற்பட்டால் வெற்றி பெறுவது தாமதப்படும். ஆசியாவில் நாம் இன்னும் போரை சரியாகத் துவக்கவில்லை. ஜப்பானியர்களின் தாக்குதல்களுக்கு முன் சைனா சுருண்டு விழுகிறது. பர்மாவின் பெரும் பாகமும் மலேயா பூராவும் எதிரியின் ஆக்கிரமிப்பில் இருந்துவருகின்றன. இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில் 1942-ம் வருஷத்தில் இருந்த பீதியும் அமைதிக் குறைவும் போய்விட்ட போதிலும் படையெடுப்பு பயமும் தொந்தரவளிக்கக்கூடிய விமானத் தாக்குதல்களுக்குட்படுவதும் பூராவாகப் போய்விடவில்லை. ஜப்பான் வீழ்ச்சிபெற்று அடிபணிந்தால் ஒழிய இந்தியாவின் பத்திரம் உத்திரவாதம் செய்யப்படமாட்டாது. இந்தியர்களுக்கும் கதி மோக்ஷமும் கிடையாது.*

*உங்கள் முன் நிற்பதில் இதுதான் முதல்தரமான பிரச்னை. இந்தப் பிரச்னையை எவ்விதம் தீர்ப்பது. அதற்காக எந்த முறைகளைக் கையாளுவது என்பதைப் பொறுத்துத்தான் இந்தியாவின் எதிர்காலம் நிலைபெறும். இந்தியாவின் தற்போதைய பத்திரத்திற்கு பிரிட்டனுடன் நமக்குள்ள தொடர்புதான் காரணமென்பதை நீங்கள் ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். பிரிட்டனில்லாதிருந்தால் ஜப்பான் இந்தியாவை ஒரே மூச்சில் கபளீகரம் செய்திருக்கும். எதிர் காலத்தில் இந்தியா புகழ்பெறவேண்டும் என்ற நமது உயர்வான எண்ணங்களுக்கு கோரமான முடிவு ஏற்பட்டிருக்கும்.*

JL
V21194;19(3M)M,N39
N44



## ஐக்கிய தேசங்களின் உதாரணம்.

நாம் தேச பக்தி உள்ளவர்களாகவும், சுதந்திரத்துடனும், க்ஷேமமாகவும் வாழ விரும்பி எதிர்காலத்தில் கீர்த்தி அடையவேண்டுமென்றாலும் நம்முடைய பாத்தியதையை ஸ்தாபிக்கவும் உலகத்திலுள்ள எந்த தேசத்தைப்போலும் நாமும் சுதந்திரத்துடன் இருக்க உரிமை உள்ளவர்கள் என்று உலகத்தாருக்கு ருஜூச் செய்யவும் இதுதான் தருணம். சுதந்திரமும் சுயேச்சையும் கேட்ட மாத்திரத்தில் கிடைத்துவிடாது. ஒருவரிடமிருந்தும் நாம் அதை இனாமாக அடையவேண்டியதில்லை. அதற்கு நாம் அருகதையுள்ளவர்களாக இருந்து அதை அடையவேண்டும். ஐந்து வருடங்களுக்கு மேலாக நடைபெறும் இந்த மகத்தான போரில் உலகத்திலுள்ள சுதந்திரம் பெற்ற நாடுகளும் மக்களும் சுயநல மறுப்புடனும் தியாகத்துடனும் எவ்வளவு சேவை செய்து வருகிறார்கள் என்பது கண்கூடான விஷயம். மேலும் இந்த அநேக தேசங்கள் எதிரியை எதிர்த்துப் போராடுவதில் ஒன்றுபட்டு பலமான போர்முனையை அமைத்து வருகிறார்கள் என்பதையும் கவனியுங்கள்.

கிரேட் பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா என்ற மூன்று வல்லரசுகள் சுதந்திரமும் க்ஷேம வாழ்க்கையும் உள்ள தேசங்கள். இவைகளைப்போல் நாமும் வாழவேண்டுமானால் அதற்குத் தகுந்தபடி தன்னலமறுப்பும், ஒற்றுமையும் காட்டி நாம் நம்முடைய பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டாமா ?

இந்த உலகமளாவிய யுத்தத்தில் கிடைக்கப்போகும் வெற்றியின் பலனை அனுபவிக்க நமக்கு எவ்விதத்தில் பாத்தியமிருக்கிறது. இந்த நாட்டில் ஒரு மாகாணத்துக்கும் மற்றொரு மாகாணத்துக்கும், ஒரு சமூகத்துக்கும், மற்றொரு சமூகத்துக்கும், ஒரு ஜாதிக்கும், மற்றொரு ஜாதிக்கும், ஒரு பாஷைக்கும், மற்றொரு பாஷைக்கும் சச்சரவுகள் நடந்து வருகின்றன. இவ்விதமான அல்பமான சண்டைகளுக்கு இதுவா உசித காலம்? இப்பொழுது இந்தியாவை விட்டு வெளியேறுங்கள் என்று சொல்லுவது தகுமா? பிரிடிஷார்கள் இந்தியாவை விட்டு அகன்றால், உடன் காலத்திலேயே அராஜகமும் குழப்பமும் ஏற்பட்டு இறுதியில் அடிமைத்தனம் ஏற்படும். நிச்சயமாக சமாதானமும் ஒழுங்கு முறையும், சுதந்திரமும், சுயேச்சையும் ஏற்படாது. நான் இவ்விதம் பேசுவதிலிருந்து பிரிடனுக்காக சிபார்சு செய்கிறேன் என்று நினைக்கவேண்டாம். இந்தியாவினுடையவும் அதன் எதிர்காலப் புகழையும் உத்தேசித்துத்தான் நான் அவ்விதம் சொல்லுகிறேன். நிலைமையை நன்கு பரிசீலனை செய்து உண்மையை அறிந்து கொள்ளுங்கள். அதன்பின் ஆலோசனை செய்து இந்திய சுதந்திரத்தை அடைவதற்கு வழிகளையும் முறைகளையும் கண்டுபிடிக்க முயலுங்கள்.

இந்தியாவினுடையவும், உலகத்தினுடையவும் சரித்திரத்திலேயே இதுவரையில் இல்லாத வண்ணம் இப்பொழுது மேதாவிகளுக்கும் தைரியசாலிகளுக்கும் அறிய சந்தர்ப்பங்களிருக்கின்றன.

சேனையில் எந்தப் பகுதியில் சேவை செய்தாலும் அதுவே ஒரு பெரிய கல்வியாகும். இப்பொழுது கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் இதுவரையில் ஏற்பட்டதில்லை. அநேக ஆண்டுகள் வரையில் கிடைக்கவும் கிடைக்காது. இந்த சந்தர்ப்பத்தை நழுவ வொட்டாமல் உபயோகப்படுத்தி தேசத்தின் உத்தாரணத்துக்கு வழியைத் தேடவேண்டும்.

தைரியக் குறைவாக உள்ளவர்கள் இந்தியாவிலும் பிரிடனிலும் உள்ள தொழிற்பயிற்சி ஸ்தாபனங்களிலும் பயிற்சி முகாம்களிலும் சேர்ந்து தொழிற்முறைகளையும் வியாபாரத்தையும் கற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். கைத்தொழில், வியாபாரம் முன்னேற்றமடைந்து ஆதிக்கம் பெற்றால்தான் ராஜீயத்துறையில் முக்கியத்வமும் பெருமையும் சித்திக்குமென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ராஜீயவாதிகள் எவ்விதம் போதித்த போதிலும், இந்தியாவின் கைத்தொழில்களும் விவசாயமும் வளர்ச்சிபெற்று மற்ற தேசங்களைவிட அதிகமான உச்சநிலையை அடைந்தாலொழிய இந்தியா உண்மையில் சுதந்திரமாக இருக்கமுடியாது. பெருமையை அடைய முடியாது என்பது என்னுடைய சித்தாந்தம்.

69413

### உணவுப் பொருள் உற்பத்தி.

உங்களுடைய பிரயாசையை விவசாயத்திலும் ஈடுபடுத்தலாம். இந்தியாவில் விவசாயம் தான் மிகுதி. சரித்திர ஆரம்பம் முதல் அவ்விதமாகவே இருந்துவருகிறது. ஆகிலும் இந்தியர்கள் பிராசீனமான சாகுபடி முறைகளைத்தான் கையாண்டு வருகிறார்கள். விவசாயத்தில் ஏற்பட்டிருக்கும் நூதனமான முறைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவும் மறுக்கிறார்கள், இன்று உணவுப்பொருளின் குறைவு மிகுதியாக ஏற்பட்டிருப்பதினால் பிராசீனமான விவசாய முறைகளிலுள்ள குற்றங்களும் குறைவுகளும் இப்பொழுது நன்கு வெளிப்பட்டுவிட்டன



இந்தியாவில் ஏராளமான பலரகமுள்ள செழிப்பான பூமியிருக்கிறது. அதனுடைய தேவைக்கும் ஏற்றுமதிக்கும் மிகுதியான பலவகைப்பட்ட உணவுப் பொருள்களை அது உற்பத்தி செய்து ஸப்ளை செய்யக்கூடும், ஊக்கமும் துணிவும் குறைவுபட்டதின் காரணமாக உணவுப் பொருள் குறைவு ஏற்பட்டதினால் வங்காளத்தில் கடும் பஞ்சம் உண்டாகிற்று. இந்தியா பூராவிலும் வாழ்க்கைக்குரிய பொருள்களுக்கே நெருக்கடி ஏற்பட்டது. இந்த நிலைமை ஏற்பட்டதற்கு நமக்குமுன் இருந்தவர்களும், இப்பொழுது இருப்பவர்களுமான கல்விகற்ற வகுப்பினர் வாழ்க்கை முறையின் ஒரு பாகமாக விவசாயத்தைக் கருதாததுதான் காரணம். நீங்கள் அந்தத் தவறுதல்களை உணர்ந்து அதற்குத்தகுந்த பரிஹாரம் தேடவேண்டும்.

எந்தத் தொழிலை நீங்கள் ஏற்றுக்கொண்டாலும் உங்களுடைய வாழ்க்கை முறைகளையும் உங்களுடைய ஹவாலுக்குட்படக்கூடிய எல்லோருடையவும் வாழ்க்கை முறைகளையும் உயர்த்துவதுதான் உங்களுடைய முக்கியமான லக்ஷியமாக இருக்கவேண்டும்.

ஸ்வராஜ்யம் பெற நமக்கு உள்ள உரிமையை வற்புறுத்தும்பொழுது வெகுநாளாக இருந்துவரும் தொடர்புகளை நாம் வெட்டிவிட எண்ணக்கூடாது. நாம் ஏற்படுத்தக்கூடிய அரசியல் திட்டம் பூர்ண சுதந்திரத்தை உத்திரவாதம் செய்வதுடன் பிரிடனுடன் இந்தியாவுக்குள்ள நட்பையும் பலப்படுத்தவேண்டும். குடியரசு அந்தஸ்து இந்தியாவுக்கு பொருத்தமானதுதான் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்தியாவுடையவும் பிரிடனுடையவும் க்ஷேமம் அவ்விருநாடுகளிலுள்ள மேதாவிகள் ஒன்றுபட்ட ஒரு அரசியல் திட்டத்தை அமைப்பதைப் பொருத்திருக்கிறது. அந்த அரசியல் இந்தியாவுக்கு சுதந்திரத்தையும் சுயேச்சையையும் உத்தரவாதம் செய்வதுடன் இருநாடுகளின் க்ஷேமத்துக்காக இருதேசங்களிடையே உள்ள நட்பையும் பலப்படுத்தவேண்டும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 12—12—44 (செவ்வாய்க்கிழமை). | ருஷ்யர்கள் ஹங்கேரியிலுள்ள கோடலோவை ஆக்கிரமித்தார்கள். |
| 13—12—44 (புதன்கிழமை). | அமெரிக்க ஏழாவது சேனை செல்ட்ஸை அடைந்தது. |
| 14—12—44 (வியாழக்கிழமை). | அமெரிக்க ஏழாவது சேனை ஜெர்மனியில் பாலடினேட்டுக்குள் மூன்று இடத்தில் நுழைந்தது. |
| | நேசதேசப்படைகள் பர்மாவில் பூதேடாங்கைப் பிடித்தன. |
| | அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸ் தீவில் மிண்டோரோவில் இறங்கினார்கள். |
| 15—12—44 (வெள்ளிக்கிழமை). | பிரிடிஷ் எட்டாவது சேனை பேயன்ஸாவுக்கு அருகில் நாஸித் தற்காப்பு அரணை நொருக்கிவிட்டது. |
| 16—12—44 (சனிக்கிழமை). | ஜெர்மானியர்கள் மேற்குப் போர்முனையில் அமெரிக்க முதலாவது சேனை இருக்குமிடத்தில் பதில் தாக்குதலை ஆரம்பித்தார்கள். |
| 17—12—44 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசப்படைகள் இதாலியில் பேயன்ஸாவை பிடித்தன. |
| | பிரெஞ்சு ருஷ்ய ஒப்பந்தத்தின் ஷரத்துகள் பிரசுரிக்கப்பட்டன. |
| 18—12—44 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் புடாபெஸ்டுக்கு வடக்கில் ஸைக் எல்லையைத் தாண்டிச்சென்றார்கள். |

## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.**—இந்த வார ஆரம்பத்தில் அமெரிக்க முதலாவது சேனை டுரன் பிரதேசத்தில் ரோலன்ஸ், பிராயிக், பியா, மார்கென், ஹோவன், மேரியா வீலர், டீரிக், வீலர்கி, விஷோபென், பர்ஸ்னர், கஸ்ஸனிக், பிர்கல், கப்ராட் முதலிய இடங்களைப்பிடித்தது.

டிஸம்பர் 16-ம் தேதியன்று ஜெர்மானியர்கள் பெல்ஜியம், லக்ஸம்பர்க் எல்லைகளில் 60 மைல் நீளமுள்ள போர்முனையில் பதில் தாக்குதல் செய்தார்கள். இரண்டு பகுதிகளாகத் தாக்கி வருகிறார்கள். ஒன்று, தெற்கு பெல்ஜியத்தில் மால்மெடிக்குத் தெற்கில், மற்றொன்று வடக்கு லக்ஸம்பர்க்கில் பாஸ்டோக்னியை நோக்கி. மால்மெடி, ஜெர்மன் வசம் ஆகிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. 20-ம் தேதி கிடைத்த தகவலிலிருந்து வடக்குப்பகுதியில் ஊடுருவிச் செல்வது தடைபெற்றதென்றும், தெற்கில் சில இடங்கள் திருப்பிப் பிடிக்கப்பட்டனவென்றும் தெரியவருகிறது.

**அமெரிக்க மூன்றாவது சேனை.**—டில்லிங்கன் பிரதேசத்தில் கடும் போரை நடத்திவருகிறது. மெட்ஸ் பிரதேசத்தில் கடைசிக் கோட்டையான ஜீண்டி ஆர்க் விழுந்துவிட்டது.

**அமெரிக்க ஏழாவது சேனை.**—கார்ல்ஸ்ருகியை நோக்கி முன்னேறி வருகிறது. பிளியஸ், லாடர் நதிகள் கடக்கப்பட்டன. ஸெல்ட்ஸை விட்டு ஜெர்மானியர்கள் துரத்தி அடிக்கப் பட்டனர். ஜெர்மன் பாலடினேட் மாகாணத்திற்குள் 4 இடங்களில் படைகள் நுழைந்து விட்டன. மாகினோ அரணின் தற்காப்புகள் ஊடுருவிச்செல்லப்பட்டன. நீடர்ரோடேர்ன், நீடர்-கெய்ல்பாக், எர்ச்சிங்கன் முதலிய இடங்களுக்குள் படைகள் புகுந்தன. மன்சௌஸ், ஷாபன் ஹௌஸ், விண்டர்பாக், நீவில்லர் முதலிய இடங்கள் சுத்தி செய்யப்பட்டன. ரீன்ஹீம் பிடிபட்டது.

**வாஸ்கஸ் பிரதேசம்.**—லிம்பாக், விஸ்ஸெம்போர்க், ஷிபன் ஹார்ட் முதலியவைகள் விடுவிக்கப்பட்டன. ஹாடவீலர், பண்டந்தால், நீடர் ஷில்லெடன் பாக்குக்குள் படைகள் நுழைந்தன.

**கிழக்குப் போர்முனை.**—ஸெர்னிஸ், ஸெண்ட்ரோ, ரட்பானியா, பேவிபால்வா, டாலியா, பட்னுக், (எல்லாம் ஹங்கேரியில்) விடுவிக்கப்பட்டன. செம்படை வியன்னாவிக்குப் போகும் வழியிலுள்ள பிராடிஸ்லாவா இடவெளியை நோக்கி முன்னேறுகிறது. புடாபெஸ்டுக்கு வடக்கிலும் வடகிழக்கிலும் செம்படை ஸெக்கோஸ்லாவேகியா எல்லையைத்தாண்டி அநேக நகரங்களைப்பிடித்தது.

**இதாலி.**—எட்டாவது சேனை பேயன்ஸாவையும், ஸெல்லியையும் பிடித்தது. லாமோன் நதியைக் கடந்தது. ஸீனியோ நதியை நோக்கி முன்னேறுகிறது.

**தூரக்கிழக்கு.**—பிலிப்பைன்ஸைச் சேர்ந்த லெய்ட்டித்தீவில் கோகானும் வாலன்ஷியாவும் விடுவிக்கப்பட்டன.

அமெரிக்கப்படைகள் மிண்டாரோ என்னும் தீவில் இறங்கி லான்ஜோஸ் என்னும் நகரத்தைப்பிடித்தன. ஜப்பானிலுள்ள நாகோயா வெடி விமானங்களால் தாக்கப்பட்டது.

**பர்மா.**—வட பர்மாவிலுள்ள ஜப்பானின் பெரிய தளமான பின்லேபூ பிடிபட்டது.

**சைனு.**—குவாங்ஸியிலிருந்து ஜப்பானியர்கள் துரத்தி அடிக்கப்பட்டபின் குவேசௌ மாகாணத்தின் தலைநகரமான குவேயாங்குக்கு ஏற்பட்டிருந்த அபாயம் நீங்கிவிட்டது. சீனர்கள் நான்டான், சேஹோ, டாஸாண்டங், பேயோ பிஞ்ஜான் முதலிவற்றைப் பிடித்துவிட்டார்கள்.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**10—12—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—"V-2" இலக்குகள்—ஹாலந்து (Holland), காப்லென்ஸ் (Coblenz), பிங்ஜன் (Bingen).

அரண் கட்டப்பட்ட இடங்கள்.—லாஷீம் (Losheim), எபர்தாய் (Eberthai), தாலி (Tholey), லெபாக் (Lebach) வெய்ஸ்பாக் (Wiesbach).

ராணுவ இலக்குகள் டாங்கி முகாம்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.



ரயில் போக்குவரத்துகள்.—பிரென்னர் (Brenner) பாதை, போ (Po) சமவெளி.

கட்டடங்கள் பீரங்கி ஸ்தாபனங்கள்.—வட இதாலி (North Italy).

எதிரி தற்காப்புகள்.—இதாலியிலுள்ள பாயென்ஸா (Faenza).

ரயில் இலக்குகள்.—ஆஸ்திரியா (Austria).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (5 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைனியங்கள்.—ஆர்மாக் (Ormoc) சமவெளி, பிலிப்பைன்ஸிலுள்ள லெய்டி (Leyte).

**பர்மா (Burma).**

பாலங்கள்.—சிண்ட்வின் (Chindwin) அரங்கம், ஸாயி (Saye).

களஞ்சியங்கள்.—ஷிபா (Hsipaw)க்கு வடக்கு.

ஸ்டோர் பிரதேசங்கள்.—கோக்டீர் (Gőkteir).

எதிரி முகாம்கள்.—பூதிடாங் (Buthidaung)கிற்கருகில்.

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—மெய்டிலா (Meiktila).

**11—12—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—(17 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

எண்ணெய்க் கிணறுகள்.—மூஸெயர்பாம் (Moosierbaum).

தளவாட டெப்போ.—வியென்னு (Vienna.)

கப்பல் தளங்கள், ரயில்வே தளங்கள்.—கிராஸ் (Graz).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—பென்ஸால் (Benzol) ஆஸ்டர்பெல்டு (Osterfeld).

பென்ஸால் (Benzol) நிலயங்கள்.—மெய்டெரிக் (Meiderich), பிரக்ஹாஸன் (Bruckhausen).

ரயில்வே தளங்கள்.—பிராங்பர்ட் (Frankfurt), ஹானு (Hanau), கெய்ஸன் (Giessen).

"V-2" இலக்குகள்.—ஹாலந்து (Holland).

எதிரி போக்குவரத்துகள்.—மத்திய யூகோஸ்லாவியா (Central Yugoslavia).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

ஜப்பானியச் சைனியங்கள், ரயில்வே போக்குவரத்துகள், பாலங்கள்.—வின்தோ (Wuntho), டிகாயிங் (Tiguaing), கியாங்கன் (Kyungon).

விமான நிலயங்கள்.—மெய்க்திலா (Meiktila), தீடா (Thedaw).

படகுகள்.—பாமோ (Bhamo) விற்கருகில்.

ஸ்டோர்கள்.—லாஷியோவிற்கருகில் மெஸா (Meza).

கப்பல்கள்.—ஹெயின்ஸி (Heienze).

ரயில்வே ஸ்டேஷன்.—ஈயு (Ye).

**12—12—44.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—துருப்பு முகாம்கள்—டூரன் (Duren) பிரதேசம்.

பீரங்கி ஸ்தாபனங்கள், பலத்த முனைகள்.—எர்க்எலன்ஸ் (Erkelenz), போஸ்லார் (Boslar), ஸ்கோபோவன் (Schophoven), ஸ்டாக்ஹெய்ம் (Stockheim), வெய்லர்ஸ்ட் (Weilerswist), எஸ்கர்ச்சன் (Euskirchen).

எதிரி ரயில் போக்குவரத்துகள், போக்குவரத்து சாதனங்கள்.—கிழக்கு ஹாலந்து (E. Holland), மேற்கு ஜெர்மனி (W. Germany).

வண்டி முகாம்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

இலக்குகள்.—வட இதாலி (N. Italy).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (11 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

தொழிற்சாலை இலக்குகள்.—ஹான்ஷு (Honshu) என்ற ஜப்பானியத் தீவு.

**பர்மா (Burma).**

பாலம்.—கலீவா (Kalewa).

போக்குவரத்து இலக்குகள்.—மத்திய பர்மா (Central Burma).

**13—12—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எண்ணெய்க் குழியல்கள்—ஷ்வல் பிராக்கன் (Szwel Brucken), ஷாண்டா (Zandau), கார்ல்ஸ்ருகி (Karlsruhe).

ரயில்வே இலக்குகள்.—மான்ஷெய்ம் (Monsheim).

போக்குவரத்து இலக்குகள்.—போ (Po) சமவெளி, பிரென்னர் (Brenner).

எதிரி துருப்புகள், பீரங்கி ஸ்தாபனங்கள்:—பொலோனு (Bologna) பிரதேசம்.

எலெக்டிரிகல் ஸ்டேஷன்கள், ரஸ்தா போக்குவரத்துகள்.—பிரான்ஸ் (France), இதாலி (Italy) எல்லைப் பிரதேசம்.

விமான நிலயம்.—ஸ்பெஷியா (Spezia).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்.-நாகோயா (Nagoya).
கப்பற்கட்டுந் துறைகள்.—ஸாண்டாகான் (Sandakan).
எண்ணெய்க் கிணறு.—போர்னியோவிலுள்ள டிராகன் (Trakan).

14—12—44 (வியாழக்கிழமை).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—கோட்டை கட்டப்பட்ட நிலயங்கள்—ஸ்சோகனஸ்ஸபன் (Schoneseffen) ஹெல்லன் தாய் (Hellenthai), கால் (Kall).
இலக்குகள்.—ஸல்பிக் (Zulpich).
ரயில்வே தளங்கள்.—எஸ்கர்ச்சன் (Euskirchen).
ரயில் போக்குவரத்து போக்குவரத்து ஸ்தாபனங்கள்.—ஹாலந்து (Holland), மேற்கு ஜெர்மனி.
எதிரி ஸப்ளை லயன்கள்.—இதாலியில் உள்ள ஜெர்மன் அரங்கிற்கு சில படைகள்.
எண்ணெய் தளவாடக் குவியல்கள்.—இதாலி யுத்த அரங்கின் வடக்கு.
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East.)

ஜப்பானிய சைனியங்கள்.-லெயிட்டி (Leyte), மிண்டோரோ (Mindoro).

### பர்மா (Burma).

இலக்குகள்.—ஸியாமிலுள்ள காஞ்சானபுரி (Kanchanapuri). (2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

15—12—44. (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொழிற்சாலை ரயில் ஸ்தலங்கள்—ஹனோவர் (Hanover), காஸல் (Kassel).
இலக்குகள்.—ரோஸன்ஹீம் (Rosenheim), ஆஸ்திரியாவிலுள்ள இன்ஸ்பர்க் (Innsbruck), லின்ஸ் (Linz), ஸால்ஸ்பர்க் (Salzburg), ஆம்ஸ்டெட்டின் (Amstettin).
ரயில்வே தளங்கள்.—பிரென்னர் கணவாயின் வடக்கு முடிவு.
ரயில் பாதைகள்.—மாண்டுவா (Mantua), பியாஸென்ஸா (Piacenza), விரோனு (Verona).
எதிரி ரஸ்தா முகாம்கள் விமான நிலயங்கள்.-யூகோஸ்லாவியா (Yugoslavia).
கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (52 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
இரவு—லட்விக்ஷாபன் (Ludwigshaven).

### தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

### பர்மா (Burma).

எதிரி ஸப்ளை பிரதேசங்கள்.—லாஷியோ (Lashio).
துருப்புகள் ஸ்டோர்கள்.— நாம்காம் (Namkham).

16—12—44 (சனிக்கிழமை).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொழிற்சாலை, ரயில்வே ஸ்தலங்கள்-ஸீஜன் (Siegen).
எண்ணெய் ஸ்தாபனங்கள்.—பிரக்ஸ் (Brux).
இலக்குகள்.—ஆஸ்திரியாவிலுள்ள இன்னஸ்பர்க் (Innsbruck).
இலக்குகள்.—ஜெர்மனி (Germany), ஆஸ்திரியா (Austria), ஸெக்கோஸ்லேவாக்கியா (Czechoslovakia).
பீரங்கி ஸ்தாபனங்கள் பலத்த முனைகள் ரஸ்தா போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
கப்பற்கட்டும் துறைகள்.—ஸ்பெஷியா (Spezia)
கப்பல்கள்.—வட எட்ரியாடிக் (N. Adriatic).
மோட்டார் போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).
மோட்டார் வண்டிகள்.— யூகோஸ்லாவியா (Yugoslavia).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—லூஷான் (Luzon).
எதிரி சைனியங்கள்.—லெயடி (Leyte), மிண்டோரோ (Mindoro).

### பர்மா (Burma).

ரஸ்தா பாலம்.—மாங்மிட் (Mongmit),
ஸ்டோர் பிரதேசம்.—ஷிபா (Hsipaw), வடகிழக்கு.
ரஸ்தா போக்குவரத்து.-டாங்குப் (Taungup) புரோம் (Prome).
கப்பல்கள்.—ஐராவதி (Irrawaddy).
ரயில்வேக்கள்.—ரங்கூன் (Rangoon), மோல்மீன் (Moulmein).
உதவி.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் உள்ள தரைப்படைகள்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

11—12—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

12—12—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.



13—12—44. (புதன்கிழமை);

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.

ருஷ்யா (Russia) தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

14—12—44. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia). தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

15—12—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

பாமோ (Bhamo) பிரதேசம் (4 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

16—12—44. (சனிக்கிழமை). & 17—12—44 (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஆசி.** இச் சஞ்சிகை படிப்பாளர்களுக்கு புதுவருஷ பிரயுக்தமாக நமது ஆசியைக் கூறுகிறோம். 1944-ம் வருஷம் முடிவு பெறுகிறது. அடுத்த சஞ்சிகை வெளிவரும்பொழுது புதுவருஷம் ஆரம்பமாகிவிடும்.

வி வி வி வி வி

**1944.** இவ்வருஷத்தில் நமக்கு அநேக வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. ஐரோப்பாவில், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, மத்திய இதாலி, பால்கன் நாடுகள் பூராவும், ருஷ்யாவில் விடுதலை பெருமல் எஞ்சியுள்ள பாகங்கள், போலந்தின் பாதிபாகம், பால்டிக் நாடுகள் எல்லாம் விடுவிக்கப்பட்டன. ஜெர்மனியும் முற்றுகைக்குட்பட்டுவிட்டது. தூரக்கிழக்கில் நிலைமையில் விசேஷ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நேசதேசப் படைகள் மார்ஷல்ஸ் தீவுகளிலிருந்து பிலிப்பைன்ஸுக்கு முன்னேறி 3,000-மைல்கள் சென்று ஜப்பானை நெருங்கிவிட்டார்கள். வடக்கு பர்மா சுத்திசெய்யப்பட்டுவிட்டது. சுங்கிங்குக்கு ஏற்பட்டிருந்த அபாயம் இப்பொழுது நீங்கிவிட்டது.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** வார ஆரம்பத்தில் ஜெர்மனி அதன் எல்லைச்சரகத்திலுள்ள நதி தற்காப்புகளிலெல்லாம் கஷ்டப்பட்டுக்கொண்டு இடங்கொடுத்துவந்தது. பிரிடிஷ் படைகள் மாஸ்நதியின் மேற்குக்கரையை சுத்திசெய்தன. அமெரிக்க 9-வது, 1-வது சேனைகளுடன் சேர்ந்து ரோயர்நதியின் இடது கரையை அடைந்துவிட்டன. அமெரிக்க மூன்றுவது சேனை சாரைத்தாண்டியபின் ஸீக்பிரட் அரணின் முதல் பகுதியைத் தாக்கிஞர்கள். அமெரிக்க 7-வது சேனை பினியஸ், லாடர் நதிகளைத்தாண்டி ஜெர்மன் பாலடினெட்டில் முன்னேறும் வாசலை ஏற்படுத்தியிருக்கிறது.

வி வி வி வி வி

**டிஸம்பர் 16.** யுத்த நிலமையில் மாறுதல் ஏற்படப்போகிறதென்று மேற்குப் போர்முனையிலுள்ள ராய்டரின் நிருபர் வெளியிட்டார். அதேதினத்தன்று ஜெர்மன் சேனுதிபதியான வான் ரண்ட்ஸ்டெட், பான்ஸர் படைகளையும் விமானங்களையும் 'V' ஆயுதங்களையும், ஹிட்லரின் பெயரை மந்திரமாக உபயோகித்து 60-மைல் அளவில் அமெரிக்க 1-வது சேனையின் ஸ்தானங்களை பதில் முறையில் தாக்கிஞன். அவன் இரண்டு பகுதியில் தாக்குதலைத் துவக்கியிருக்கிருன். தெற்கு பெல்ஜியத்தில் மால்டிக்குத் தெற்கில் ஒன்று. மற்றொன்று வடக்கு லக்ஸம்பர்க்கு வழியாக லீஜை லக்ஷியமாகக்கொண்டு தெற்கில் 30-மைல் தூரத்தில் மற்றொரு தாக்குதல். டிஸம்பர் 20-ம் தேதியன்று வந்த தகவலிலிருந்து வடக்குப்பக்கத்திய தாக்குதல் தடுக்கப்பட்டுவிட்டதென்றும் தெற்குப் பகுதியில் நேசதேசப்படைகள் சில இடங்களைத் திரும்பிப் பிடித்ததாகவும் தெரியவருகிறது. தாக்குதல் தொடர்ச்சியாக நடைபெறுகிறது. நிலமையில் தெளிவு காணப்படவில்லை. கடற் கரையில் இவ்வருஷ ஆரம்பத்தில் நடைபெற்றது போல இது கடைசி பிரயத்னமென்று லண்டனிலுள்ளவர்கள் நினைக்கிருர்கள். மேலும் இது காலஹரணம் செய்ய ஒரு உபாயம் என்றும் நினைக்கிருர்கள். எந்நிலமையிலும், தற்காப்பு யுத்தத்தை நடித்தமுடியாமல், ஊடுருவிச்சென்று தப்பி ஓட முயலுகிருனென்று தோன்றுகிறது. இந்தத் தாக்குதலை சமாளித்துவிடலாமென்று நேசதேசத் தலைமை காரியாலயத்திலுள்ளவர்கள் நம்பிக்கையுடனிருந்துவருகிருர்கள். ஆகிலும் நிலமையைப்பற்றி அலக்ஷிய புத்தியுடனிருக்க உத்தேசம் கிடையாது.

**வியன்னாவுக்கு** ஹங்கேரியத் தலைநகரான புடாபெஸ்டுக்கு முன்னேறுவதில் வியன்னாவுக்குப் போவதுதான் லக்ஷியம் என்று ருஷ்யர்கள் சொல்லுகிறார்கள். புடாபெஸ்டு வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் தாக்கப்படுவதினால் அது சமீப எதிர்காலத்தில் வீழ்ச்சிபெறக்கூடும். அது எப்படி இருப்பினும் வியன்னா தான் அதன் முக்கிய லக்ஷியம். அது ஆஸ்திரியாவின் தலைநகரம் என்பதுடன் டான்யூப் நதி பள்ளத்தாக்குக்கும், ஒரு பக்கம் ஜெர்மனிக்கும் மற்றொரு பக்கம் மத்தியக் கிழக்கு மத்தியதரைக்கடல் பிரதேசத்துக்கும் செல்ல வாசற்படி போன்றது. வியன்னாவைப் பிடித்துவிட்டால் ஆஸ்திரியா விடுதலை பெறுவதுடன் இதாலிக்கும் யூகோஸ்லாவியாவுக்கும் ஜெர்மனி அனுப்பிவந்த ஸப்ளை மார்க்கம் துணிக்கப்பட்டுவிடும். பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்யப்படைகள் பெர்லினை நோக்கிச்செல்ல ஒரு ரஸ்தா திறக்கப்பட்டுவிடும்.

வி வி வி வி வி

**தூரக்கிழக்கு.** லெய்ட்டியில் நேசதேசப்படை முன்னேறி வருகிறது, வாலன்ஷியா என்ற நகரம் பிடிபட்டது. இது வரையில் பத்து ஜப்பானிய துணைக்காவல் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன, அல்லது நாசமாக்கப்பட்டன. 30,000 சோல்ஜர்கள் மூழ்கடிக்கப்பட்டார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள். லெய்ட்டி ஸாமார் பிரதேசத்தில் எதிரிக்கு 84,038 பேர்கள் நஷ்டம். அவைகளில் 35,285 பேர் இறந்தவர்கள் அல்லது கைவிடப்பட்டவர்கள். அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மிண்டோரோ தீவில் இறங்கின. அதிலுள்ள ஸான்ஜோஸ் என்ற நகரம் பிடிபட்டது. கொரில்லாப்படைகள் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மற்றும் அறு தீவுகளில் முன்னேறித் தாக்கி வருகின்றன. மாகாணங்கள் விடுவிக்கப்படுகின்றன. மிண்டாரோவில் படைகள் இறங்கியபொழுது நேசதேசக் கப்பல்கள் ஜப்பானின் ஆதிக்கத்துக்குட்பட்ட 600 மைல் சமுத்திரத்தைத்தாண்டி அநேக விமானதளங்களிலுள்ள ஜப்பானியத் தீவுகள் ஓரமாகவும் சென்று அங்கு வந்தன. ஆகிலும் பிரயாணத்தின் பொழுதும் இறங்கிய பின்னும் யாதொரு எதிர்ப்பும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வி வி வி வி வி

**டோகியோ.** மறுபடியும் தாக்கப்பட்டது. டோகியோவிலுள்ள சக்ரவர்த்தியின் அரண்மனைத் தாக்கப்பட்டால் பதில் நடவடிக்கை ஆரம்பிப்பதாக காய்ஸோ என்ற ஜப்பானிய பிரதம மந்திரி வெளியிட்டிருக்கிறார். ஜப்பானியர் வசமுள்ள விமானிகளைக் கொன்றுவிடுவதாக அவர் உத்தேசிக்கிறார் போலும். அரண்மனையை வேண்டுமென்று தாக்க மாட்டார்கள். ஆகிலும் அது டோகியோ ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிர்த்தாற்போல இருப்பதால் ஆகஸ்மாத்தாக தாக்கப்படலாம். இதை ஒரு காரணமாகக்கொண்டு அக்கிரம நடவடிக்கைகளை ஜப்பான் ஆரம்பித்தால் நேசதேசத்தார்கள் அதற்குத் தகுந்த சிக்ஷையை விதிப்பார்கள்.

வி வி வி வி வி

**பின்வாங்கும் படைகள்.** நாஸி கைதிகளிடமிருந்து கிடைத்த தகவல்கள் மூலம் தோல்விக்குப் பின்னும் யுத்தத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று டைம்ஸ் பத்திரிகையின் ரோயர் நிருபர் எழுதுகிறார். பவேரியா, ஆஸ்திரியா, இதாலி, ஆல்ப்ஸ் மலைகளில் ஓபாக் சால்பர்க்கிலுள்ள ஹிட்லரின் மலை வாசஸ்தலத்திற்கு சமீப தூரத்தில் தங்குமிடங்கள் கட்டப்படுகின்றன. அதில் பூமிக்கு அடியில் போக்குவரத்து மார்க்கங்களும் அமைப்புகளும் அருப்புகளும் ஏற்பாடு செய்யப்படும். அதற்குள் ஹிட்லரும் அவனுடைய ஜெனரல்களும் சென்று நேசதேசத்தார்கள் பலஹீனமடைந்து ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளும் நாளை எதிர்பார்த்து இருப்பார்கள். இதற்கும் கொரில்லாப் படைகளுக்கும் வித்தியாசம் உண்டு. இதிலுள்ளவர்கள் நாச வேலையில் பயிற்சி பெற்று ரகசியமாக நேசதேசத் தலைவர்களையும், ஜெர்மனியில் அவர்களுக்கு உதவி செய்கிறவர்களையும் ஒழிக்க முயலுவார்கள்.

வி வி வி வி வி

**ஆர்ன்ஹெமின் மேரி.** டாக்டர் கோயபெல்ஸின் கபடமான பிரசாரத்திற்கு பிரிடிஷ் சோல்ஜர்கள் இந்தப் பெயரை வழங்கிவருகிறார்கள். இந்த நிகழ்ச்சி சில காலமாக ஒவ்வொரு நாள் பிற்பகலிலும் பிரிடனிலிருந்து ஐரோப்பாவிற்கு அனுப்பப்படும் ஒலிபெருக்குடன் லண்டனிலிருந்து வந்ததுபோல சேர்ந்து வெளியிடப்படுகிறது. உண்மையில் அது ஜெர்மன் ஒலிபரப்புத்தான். அந்த ஒலி பெருக்கில் தினசரி யுத்தச் செய்திகளின் பேரில் ஜெர்மன் அபிப்பிராயம் சொல்லப்படுகிறது. நேசதேச லாபங்கள் மறைத்துச் சொல்லப்படுகின்றன. நேசதேச நஷ்டங்கள் அதிகப்படுத்திச் சொல்லப்படுகின்றன. நேசதேச நிலயங்களை திருப்பிப்பிடித்ததாகவும் சொல்லுகிறார்கள்.



இந்தக் கட்டுக்கதை பிரிடிஷ் ஒலிபரப்பின் அடுத்த நிகழ்ச்சி ஆரம்பிக்கும்பொழுது மறைந்துவிடுகிறது. இந்த தந்திரத்தைக் கண்டுபிடித்து இந்தத் தகவல்களை ஒலி பெருக்கிறவன் ஸ்திரீயானபடியால் அவளுக்கு ஆர்ன்ஹெமின் மேரி என்று சொல்லுகிறார்கள். அவள் பி. பி. ஸி.-யில் ஒலிபெருக்கும் மாதைப்போல் ஒத்ததான தொனியில் ஒலி பெருக்குகிறாள்.

வி வி வி வி வி

**இதாலி.** ஸீனர் பொனுமி ஆறு கக்ஷிகளுக்கு பதிலாக நான்கு கட்சிகளின் பிரதிநிதிகளடங்கிய ஒரு கூட்டு மந்திரி சபையை அமைத்திருக்கிறார். ஜனசமூகக் கக்ஷியும் ஆக்ஷனிஸ்ட் கக்ஷியும் அதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இவ்விதமான தாத்காலிகமான நிர்வாகங்களை அமைப்பதில் நேசதேசத்தாரின் கொள்கை யாதெனில், இதாலியின் விடுதலைக்காக ஒத்துழைத்த அநேக கக்ஷிக்காரர்களை ஒன்றுகூட்டுவதுதான். ஒழுங்கு முறையையும், பொருளாதார முன்னேற்றத்தையும் அமைக்க அவர்கள் முன்வந்து ஒத்துழைக்கவேண்டும். மேலும் வடக்கிலிருந்து எதிரிகளைத் துரத்திவிடுவதும் மற்றொரு வேலையாகும்.

வி வி வி வி வி

**கிரீஸ்.** உள் நாட்டுப் போர் இன்னும் நடைபெறுகிறது. ஆகிலும் 19-ம் தேதியன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் அறிவித்த பிரகாரம் நிலைமையில் தெளிவேற்படுகிறது. டிஸம்பர் 13உ அன்று எலிஸபெத் துறைமுகத்தில் இந்த சம்பவத்தைப்பற்றி வியாக்யானம் செய்யும்பொழுது பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் பின்வருமாறு பேசினார்.

ஜெர்மனியின் அடக்குமுறை மறைந்தபின் அதற்குப் பதிலாக கொரில்லாப் படைகள் கலகத்தை ஆரம்பித்து ஜனங்களை துன்புறுத்தி வருகின்றன. அவைகள் கொள்ளைக்கூட்டத்தாரைப்போல் இரக்கமற்றிருக்கிறார்கள். அவர்களை ஆதரிக்காதவர்களை அவர்கள் சுட்டுக் கொல்லுகிறார்கள் அல்லது தூக்கிலிடுகிறார்கள். நாட்டில் வறுமை அதிகரித்துவிட்டது. நிலைமையை சமாளிக்காவிட்டால் வெற்றிற்கே ஹானி ஏற்பட்டுவிடும். இந்தப் படைகளை நிராயுதபாணிகளாகச் செய்யாவிட்டால் கலகமும் குழப்பமும் அராஜகமும் உள் நாட்டுக் கலகமும்தான் நாம் எதிர்பார்க்கும் சமாதானத்திற்குப் பதிலாக ஐரோப்பாவில் நிலவும்.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதை கிரேக்கர்கள் கையில் விட்டுவிடக்கூடாது. ஆக்கிரமணம் செய்து இருக்கும் பிரிடிஷ் படைகள் ஒழுங்கை நிலைநாட்டவேண்டும்.

வி வி வி வி வி

**இந்தியாவின் யுத்த முயற்சி.** யுத்தத்திற்கு இந்தியா செய்திருக்கும் பேருதவியை நன்றறிவுடனும் நல்ல அபிப்பிராயத்துடனும் மதித்திருக்கும் இந்தியாவின் சேனாதிபதியான ஸர் கிளாடி ஆச்சின்லெக்குக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். டிஸம்பர் 13உ அன்று பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டில் அவர் பின்வருமாறு பேசினார்.

இந்தியாவில் எங்குபார்த்தாலும் ஒவ்வொருவரும் யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கு தம்மால் இயன்றவரை பிரயத்தனம் செய்துவருகிறார்கள். நான் பூரா விவரங்களையும் பார்க்காவிட்டாலும், யுத்தமுயற்சியின் ஒரு சிறிது அளவை கவனித்திருக்கிறேன்.

எங்குபார்த்தாலும் மகத்தான உத்சாகமும் ஆர்வமும் காணப்படுகிறது. சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பியபின் நான் பார்த்தவைகளைக் கண்டு எனக்கு அதிக உத்சாகமும் தைரியமும் ஏற்படுகிறது.

இந்தியா யுத்தத்தினால் ஒரு சிறிதுதான் பாதிக்கப்பட்டிருக்கிறதென்று சில வட்டாரங்களில் அபிப்பிராயமிருந்து வருகிறது. இது தவறு, இந்தியாவிலுள்ள ஏழை மக்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் யுத்த முயற்சியின் பளுவை பொருத்து வருகிறார்கள். சிலர் அவர்கள் அறியாமலேயே அதைத் தாங்கிவரக்கூடும். சாதாரண விவசாயியும் சிரமப்படுகிறான். இந்தியாவுக்கு வெளியே உள்ளவர்கள் இந்திய விவசாயி எவ்வளவு சிக்கன முறையில் ஜீவித்து வருகிறான் என்பதை உணரவில்லை. அமெரிக்காவிலும் பிரிடனிலும் உள்ளவர்களுக்கு வசதிக் குறைவினால் ஏற்படும் சிரமங்களைப்போல இந்திய விவசாயியின் குடும்பத்துக்கு வேண்டிய ஆடைகள் கிடைக்காவிட்டாலும் அவன் சிரமப்படுவான்.

வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் யுத்த சம்பந்தமான சட்டங்கள்.** ஸமஸ்தானத்தில் காகித கட்டுப்பாடு, அதன் சிக்கன உபயோகம் முதலியவற்றைப் பற்றி கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

## தியாகம் செய்ய பொதுமக்களின் விருப்பம்.

### பிரிடனின் பூர்ணமான யுத்த முயற்சி.

சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் 1944-ம் வருஷம் முற்பாதியில் பிரிடனின் யுத்த தளவாட உற்பத்தி யுத்த ஆரம்பத்திலிருந்து அது வரையிலுள்ளதைவிட ஆறு பங்கு அதிகமானதென்று சொல்லப்பட்டது. இதைத் தவிர பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கும், 70 சதவிகிதம் யுத்த தளவாடங்களை ஸப்ளை செய்திருக்கிறதினாலும், ருஷ்யாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் பேருதவி செய்திருப்பதினாலும் அதற்கு ஸ்வதந்திரத்தின் ஆயுத சாலை என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களில் காணப்படாத பிரிடிஷ் யுத்த உற்பத்தியிலுள்ள இரண்டு முக்கியமான அம்சங்களை இங்கு கூறுவேம்.

(a) பிரிடிஷ் உற்பத்தி முறைகளின் திறமையும் சிக்கனமும். விசேஷமாக தொழிற்சாலைகளுக்கு வந்த 2,250,000 புதிய ரிக்ரூட்டுகளை வெற்றிகரமாக நடத்தியது குறிப்பிடத்தக்கது. பிரிடிஷ் இஞ்ஜினியர்கள் சிக்கலான நடவடிக்கைகளை அக்கக்காகப் பிரித்து தேர்ச்சி பெற்றத் தொழிலாளர்கள் செய்யக்கூடிய நிலைமையில் அமைத்தார்கள். இதைத் தவிர குறிப்பிடத்தக்க சிக்கனமும் கையாளப்பட்டது. கனமான வெடி விமானத்தைக் கட்டக்கூடிய மணிகள் 66 சதவிகிதம் குறைக்கப்படுவிட்டன. போபாரின் மேடை திருத்தியமைக்கப்பட்டுவிட்டதால் 1,000 மணி வேலைக்கு பதிலாக அந்த வேலை 230 மணிகளில் செய்யப்பட்டு வருகிறது. இதே விதமாக 25 ராத்தல் குண்டு வீசும் பீரங்கிகள் உற்பத்தி செய்யும் நேரம் 50 சதவிகிதம் குறைந்துவிட்டது. தோட்டாக்குழாய்களை ஒளிப்பட மின்சார அறை முறையில் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதால் தொழிலாளர்களின் சிரமமும் பிரதேச அவசியமும் 50 சதவிகிதம் குறைந்துவிட்டது. இதன் பயனாக செலவு குறைந்துவிட்டது. ஒரு பிரென் துப்பாக்கியின் பாகம் 239 பவுனிலிருந்து 11½ பவுனுக்குக் குறைந்துவிட்டது. இரண்டு ராத்தல் பீரங்கியின் பாகம் ஆயிரம் பவுனிலிருந்து 250 பவுனுக்குக் குறைந்தது. ஆகிலும் அதன் தரம் அபிவிருத்தி அடைந்தது.

(b) பிரிடனில் தற்போதிருந்த மூஸ்தீப்புகளில் நூதன முறைகளும் அபிவிருத்திகளும் ஏற்பட்டன. அதன் மூலம் உற்பத்தி முறைகள் அடிக்கடி திருத்தி அமைக்கவேண்டியதாக இருந்தது. ஆகிலும் ஆயுதங்கள் தடையன்னியில் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. பிரிடிஷ் தொழிற்சாலைகள் வேலை செய்து வந்த பொழுதே அபிவிருத்திகளையும் நூதன முறைகளையும் கையாண்டு வந்தன.

பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள், இஞ்ஜினியர்கள் முதலியவர்களின் பிரயத்னத்தினால் கிடைத்த லாபங்கள் பின்வருமாறு.

கடல் யுத்தம்—ராடார் கருவி; மின்சாரத்தை அகற்றும் சாதனம்—மல்பரி சேர்மானத் துறைமுகம். லே தேடு விளக்கு, விமானங்களுக்குத் தேடுவிளக்கு, புதியரகக் கப்பல்கள்—நீர்மூழ்கியை அழிக்கும் கப்பல்கள், போர்க் கப்பல்கள் துணைக் காவல் புரியும் விமானந்தாங்கிக் கப்பல் (பைடர் என்னும் கப்பல் தான் முதன் முதலாகக் கட்டப்பட்டது). தரைப் போர்—இரண்டு ராத்தல் குண்டுகளை வீசும் பீரங்கிகளுக்கு பதிலாக, ஆறு, 17 ராத்தல் குண்டுகளை வீசும் டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள், டாங்கிகளுக்குத் தண்ணீர் உள்ளே நுழையாமல் கவசம். சுரங்க வெடிகளை அகற்ற டாங்கிகளுக்கு அடிக்கும் சங்கிலிகள் அமைப்பு. பேயிலி பாலங்கள், டாங்கி எதிர்ப்பு அமைப்புகள்.

விமான யுத்தம்:—12,000 ராத்தல் வெடி குண்டு, ஸ்பிட் ஃபயர் விமானம் மார்க் XIV ரகமாக அபிவிருத்தி செய்யப்பட்டது. மெர்லின், டைஃபூன், வெர்ல்விண்ட் என்னும் விமானங்களிலுள்ள எஞ்ஜின்களிலிருந்து ரோல்ஸ் ராய்ஸ் கிரிப்பின் எஞ்ஜினின் உற்பத்தி—இந்த என்ஜின்கள் புதிய சண்டை விமானங்களில் அமைக்கப்பட்டன. வெடி விமானங்களுக்குப் பதிலாக லங்காஸ்டர், ஹாலிபாக்ஸ், ஸ்டிர்லிங்க் விமானங்களின் தயாரிப்பு, மஸ்கிடோ மர விமானம், கைரொ திருஷ்டிப்பெட்டி (இதை ரோம் நிருபர் வர்ணித்திருக்கிறார்). விமானங்களில் அவுட்டு வாணங்கள், ஜெட் விமானங்கள், டாங்கிகளை எடுத்துச் செல்லும் ஹாமில்தார் கிளைடர் விமானம்.

சுதந்திரத்தின் ஆயுத சாலை என்ற முறையில் பிரிடன் நேசதேசத்தார்களுக்குச் செய்து உள்ள பேருதவியை இந்த அறிக்கை வெளியிடுகிறது. பிரிடிஷ் சேவைப்படையிலுள்ள 5 மிலியன் பிரிடிஷார்கள் ஆயுத உற்பத்தி சாலைகளிலும், மற்ற யுத்த தொழிற்சாலைகளிலும் ஒத்துழைத்திருக்கிறார்கள். யுத்த முயற்சியை துரிதமாக மேற்கொள்ள பொதுஜனங்களின் தன்னலமறுப்பும் தியாகமும் தான் காரணங்களாகும்.



## ஐந்து ஆடவர்களுக்குப் பதிலாக நான்கு ஸ்திரீகள்.

### பிரிடனில் மனித சக்தி அமைப்பு.

லண்டன் பத்திரிகைகளில் வெளிவந்த ஒரு ரேகாப் படத்திலிருந்து பிரிடனின் பூர்ணமான யுத்த முயற்சிக்கு சாதகமாக பிரிடனின் மனித சக்தியை சிக்கன முறையிலும் நன்றாகவும் அமைத்தார்களென்ற பொருள் காணப்படுகிறது. அதில் ஒவ்வொரு கருப்பு அடையாளமும் 10,000 ஸ்திரீகளைக் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு வெண்மை அடையாளமும் 10,000 ஆடவர்களைக் குறிப்பிடுகிறது. அந்தப் படத்திலிருந்து முக்கியமான நான்கு பொதுஜனத் தொழிற்சாலைகளிலும், சேனைப்படைகளிலும் ஒவ்வொன்றிலும் ஆடவர்களுக்குப் பதிலாக ஸ்திரீகள் எவ்வளவு பேர்களிருந்தார்களென்று வெளிப்படுகிறது.

சராசரி யுத்த சேவைக்குச் சென்ற ஐந்து ஆட்வர்களுக்கு பதிலாக நான்கு ஸ்திரீகள் அமர்த்தப்பட்டார்கள். விவசாயம், பொதுஜன நிர்வாகப்படை, பொதுஜன சேவை, போக்குவரத்து, கப்பற்படை, மீன்பிடிப்பது முதலிய தொழில்களிலீடுபட்டிருந்த 5,40,000 ஆடவர்களுக்கு பதிலாக 4,35,000 ஸ்திரீகள் வேலை செய்தார்கள். குறைவாகயிருந்த 5 லக்ஷம் ஜனங்களுக்குப் பதிலாக ஸ்திரீகள் ஜாஸ்திநேரம் வேலை செய்துவந்தார்கள். கிழவர்கள் முன் வந்தார்கள். புதிய தேவைகளுக்குத் தகுந்தவாறு சேவைகள் திருத்தியமைக்கப்பட்டன.

ஆகிலும் இந்தத் தொழிற்சாலைகளும் சேவைப்படைகளும் சமாதான காலத்தைவிட அதிக வேலை செய்யவேண்டியிருந்தது. உதாரணமாக, விவசாயம் மூலம் உணவுப்பொருள் 20 சத விகிதம் அதிகரித்தது. இருப்புப்பாதை மூலம் செல்லும் பிரயாணிகளும், துருப்புகளும் 60 சத விகிதம் அதிகமான மைல்கள் சென்றிருக்கிறார்கள். சாமான் வண்டிகள் 40 சத விகிதம் அதிகமான தூரம் சென்றிருக்கின்றன. மோட்டார்கள் 33 சத விகிதம் அதிகமான தூரம் பிரயாணம் செய்திருக்கின்றன. இந்தக் குறிப்புகளைக் கவனித்தால் பிரிடனின் 47 மிலியன் ஜனங்களும் உலகத்திலேயே மிகவும் மகத்தான திறமையுள்ள யுத்த முயற்சியில் எவ்விதம் ஈடுபட்டார்கள் என்பதை நன்கு விளக்குகின்றன்.

---

## நாஸி ஜெர்மனியில் எஸ். எஸ். படைகளின் ஆதிக்கம்.

### (பீடர் லாலஸ், டெயிலி டெலிகிராப் பத்திரிகை).

நாஸிகளின் எஸ். எஸ். இயக்கத்தை நிர்மூலமாக்குவது தான் ஆக்கிரமிப்பு சேனையின் முக்கியமான அலுவலாகும். இது எவ்விதம் நடைபெறும் என்பதை அறியவேண்டுமானால் எஸ். எஸ். படைகளென்பது நாஸி அதிகாரிகளின் மெய்க்காப்பாளர் என்பதோ அல்லது காவல் முகாம்களின் அதிகாரிகள் என்பதோ என்ற எண்ணத்தை மறந்துவிடவேண்டும்.

எஸ். எஸ். படையின் ஆரம்பம் அவ்விதம் தான். புரட்சிக் கட்சியின் தனிப்பட்ட போலீஸ் படையாக இருந்தது போக அது ஜெர்மனியின் உள் நாட்டு பாதுகாப்புக்கு ஜவாப்தாரியாக ஆகிவிட்டது. அது ஜெர்மன் போலீஸ் படையுடன் ஒன்று சேர்க்கப்பட்டுவிட்டது. உள் நாட்டு பத்திரப் படையின் அதிகாரங்களும் அதிகரிக்கப்பட்டுவிட்டன. அந்தப் படையில் எல்லா தொழில்களிலிருந்தும் ஆட்கள் சேமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1944-ம் வருஷத்திய தேசிய ஜன சமூக வருஷாந்திர புஸ்தகம் என்ற பதிப்பில் கீழ்க்கண்ட விஷயங்கள் கானப்படுகின்றன. எஸ். எஸ். படைக்கு ஆட்களை எடுப்பது ரத்தம் பரிசிரமம் முதலியவற்றின் உபயோகத்தை அறிவதை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு எஸ். எஸ். படையினரும் தேசிய ஜன சமூக இயக்கத்தின் நோக்கங்களையம் குணங்களையும் மிகுதியாகப் பெற்றிருக்கவேண்டும். அவனுக்கு அளிக்கப்படும் புத்தி விசாலம், தேக ஆரோக்கியம் முதலியவயற்றிற்கு உரிய பயிற்சியானது, அவன் தனியாக இருந்தாலும் அல்லது கோஷ்டியில் இருந்தாலும், தேசீய ஜன சமூகக்கொள்கையின் வெற்றிக்கு அவன் போராடக் கூடிய சக்தி உள்ளவனாக இருக்கிறது.

அந்தப் படையில் மெம்பராக இருப்பதில் அநேக சௌகரியங்கள் உண்டு. அதில் மெம்பராக இருப்பவருக்கு நல்ல உத்தியோகமும், தொழில், ராஜீயம், கலைகள் முதலியவற்றில் முன்னேற்றமடைய உதவியும் கிடைக்கும். நாஸி ஜெர்மனியின் பிரமுகர்கள் என்ற புத்தகத்தில் கோசம், வியாபாரம், கைத்தொழில்கள் முதலியவற்றில் உள்ள 1,200 பேர்களின் பெயர் காணப்படுகிறது. அவைகளில் 300 பேர்கள் எஸ். எஸ். படையைச் சேர்ந்தவர்கள். இவ்விதமாக தயையற்ற மிகவும் சக்தி வாய்ந்த நாஸிக் கட்சியின் ஒரு பாகமான இந்தப் படை தேசத்தின் முக்கியத்துவமுள்ள ஜனங்களில் 25 சதவிகிதம் பிரதிநித்துவம் பெற்றிருக்கிறது.

ஆகையால் ஜெர்மனியை அடக்கி ஆளுவதில் அந்தப் படையை நிர்மூலமாக்குவதுதான் மிகவும் முக்கியமான வேலை. வாழ்க்கையை பாதிக்கக் கூடிய அதன் சக்தியை நாம் ஒருக்காலும் குறைத்துச் சொல்ல முடியாது.

ஹிட்லரைச் சுற்றி குறைந்த பக்ஷம் ஏழு எஸ். எஸ். அதிகாரிகள் இருந்து வந்தார்கள். முக்கியமாக அவருடைய சொந்த 'மெய்க்காப்பாளர் ஜூலியஸ்ஷருவாப், அவருடைய வைத்திய ஆபீஸர், காரியாலயத்தின் தலைவர், ஹான்ஸ்பார் என்ற சொந்த விமானி. அவர் எஸ். எஸ். படையின் மேஜர் ஜெனரலும் கூட. ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் மத்திய நிர்வாகத்திலும், ஜெர்மன் மந்திரி இலாக்காக்களிலும், அயல் நாட்டு காரியாலயங்களிலும் எஸ். எஸ். ஜெனரல்கள் அநேக காலமாக மிகவும் முக்கியத்வம் உள்ள ஸ்தானங்களில் அமர்ந்திருந்திருக்கிறார்கள். ஹிம்லரின் அமுலுக்கு உட்பட்ட உள் நாட்டு மந்திரி இலாக்காவிலும் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் உண்டு.

உச்சியில் அதிகாரம் வகிப்பது போல கீழ்தரஸ்தானங்களிலும் அவர்களுடைய செல்வாக்கு அதிகரித்துவிட்டது. நகரசபைப் பரிபாலனத்திலும் ஹிட்லர் அதிகாரத்துக்கு வருமுன் உத்தியோகம் வகித்த மேயர்கள் எஸ். எஸ். படையில் சேராவிட்டால் அந்த ஸ்தானத்தை வகிக்க முடியாது.

கல்வி, சங்கீதம், கலை, தர்மம், செஞ்சிலுவை ஸ்தாபனங்கள் இவைகளில் எல்லாம் எஸ். எஸ். மெம்பர்கள் மிகுதியாக இருக்கிறார்கள். முடிவாகச் சொல்லப்போனால் ராஜீயம் கலக்காத எந்த விஷயமும் ஜெர்மனியில் கிடையாது. எஸ். எஸ். படைகளின் பிடிப்பு கலந்திராத ராஜீயமும் கிடையாது.

---

## ஜெர்மனியின் போக்குவரத்து மார்க்கங்கள்.

### சர்பரா மார்க்கங்கள் துணிக்கப்பட்டுவிட்டன.

(பால் வெக்னர்).

ஸீக்பிரட் அரணுக்குப் பின்புறமுள்ள ஜெர்மன் போக்குவரத்து மார்க்கங்கள் ஆகாயத்திலிருந்து இடைவிடாது வெடி குண்டுகளால் தாக்கப்படுகின்றன. ஜெர்மானியர்கள் அதிக நம்பிக்கை கொண்டிருந்த உள்நாட்டு மார்க்கங்களை நொறுக்குவதுதான் நமது லக்ஷியம்.

நார்மண்டியில் போர் நடைபெற்றபொழுது ஜெர்மன் தொழிற்சாலைகளிலிருந்தும், வெடி மருந்து ஸ்டோர்களிலிருந்தும் யுத்த தளவாடங்களும், பின்புறமுள்ள முகாம்களிலுள்ள துருப்புகளும் போர்முனைக்கு வந்துசேர ஒரு வாரத்திற்கு மேலாகிற்று. இப்பொழுது உதவிப்படைகளையும், சர்பராக்களையும் ஜெர்மனியின் உள்நாட்டிலிருந்து ஒரே இரவில் கொண்டுவந்துவிடலாம். போக்குவரத்து வசதிகளின் குறைவும், போக்குவரத்துப் படைகளுக்குத் தேவையான மனிதர்களின் குறைவும் மார்க்கங்கள் குறைந்து விட்டதால் அபாரமாக ஏற்படக்கூடும். மேலும் ஸீக்பிரட் அரணுக்குச்செல்ல அமைக்கப்பட்டிருக்கும் ஜெர்மன் போக்குவரத்து அமைப்பு மிகவும் அடர்த்தியானது, அதிகத் திறமை வாய்ந்தது.

ஆகையால் இருப்புப்பாதை அமைப்புகளும், ஸ்டேஷன்களும், ரெயில் வண்டிகள் தங்குமிடங்களும், பாலங்களும், கேட்டுகளும் அரண்களுமுள்ள இந்த போக்குவரத்து அமைப்பை நொறுக்கவேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. நேசதேச விமானங்கள் உள்நாட்டிற்குச் செல்லும் ஸப்ளை மார்க்கங்களைத் துணித்து விடுவதிலும், ஸீக்பிரட் அரணுக்குப் பின்புறமுள்ள தேசத்தை அழித்து விடுவதிலும், வெற்றிபெற்று விட்டால் ஸீக்பிரட் அரண், ரைன்நதி பிராந்தியப் போரில் நமக்குப் பாதி வெற்றி கிடைத்தது போலாகும். நமது விமானிகள் அவ்விதம் செய்து விடுவார்களென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

ஸீக்பிரட் அரணிலிருந்து உள்நாட்டுக்குச் செல்லும் போக்குவரத்து மார்க்கங்கள் வடக்கிலிருந்து தெற்கு வரையில் வெஸ்ட்பேலியா மாகாணம், ரைன் மாகாணம், ஹெஸ்ஸி நாஸா, ஹெஸ்ஸி, ஸார், பேடன் முதலிய இடங்கள் வழியாகச் செல்லுகின்றன. இந்தப் பிரதேசத்தில் இருப்புப்பாதைகளும், ரஸ்தாக்களும், உள்நாட்டு நதி மார்க்கங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. யுத்தத்துக்கு முன் அது 72,000 கிலோமீடர்கள் தூரமுள்ளதாக இருந்தது. இது பூமத்திய ரேகையின் சுற்றளவுக்கு இரண்டு பங்குகொண்டது.

ஜெர்மனியில் மற்ற எந்த இடத்திலும் இவ்வளவு அடர்த்தியான இருப்புப்பாதைகள் கிடையாது. ஆஸ்திரியாவை விலக்கி பாக்கியுள்ள ஜெர்மன் எல்லைச்சரக நாடுகள் ஜெர்மனியின் பரப்பில் 18 சதவிகிதம்தான் இருக்கின்றன. ஆகிலும் ஜெர்மன் போக்குவரத்து மார்க்கங்களின் 25 சதவிகிதம் இந்த மாகாணங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனி



யில் 1,000 சதுர கிலோமீடருக்கு சராசரி 145 கிலோமீடர் இருப்புப்பாதைகளிருக்கின்றன. எல்லைச்சரக மாகாணங்களில் இருப்புப்பாதைகள் கனமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. வெஸ்ட்பேலியாவில் 1,000 சதுர கிலோமீடருக்கு 200 கிலோமீடர் உள்ள இருப்புப்பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. ரைன் மாகாணத்தில் அது 225 கிலோமீடராகவும், ஹெஸ்ஸி நாஸாவில் 162 ஆகவும், ஹெஸ்ஸியில் 206 கிலோமீடராகவும், ஸாரில் 242 கிலோமீடராகவும், பாடனில் 163 கிலோமீடராகவும் இருந்துவருகிறது.

ஆகிலும் ஜெர்மனியின் மற்ற பாகங்களிலிருப்பதைவிட இந்த மாகாணங்களில் பிரதானமான இருப்புப்பாதைகள் அதிகமாகயிருக்கின்றன. ஜெர்மனி பூராவிலுமுள்ள முக்கியமான இருப்புப்பாதைகள் 44 சதவிகிதம் என்றால் எல்லைச்சரக மாகாணங்களில் அது 55 சதவிகிதமாக இருக்கிறது.

சாமான்கள் போக்குவரவு சம்பந்தமாகவும், போர்முனைக்கு துருப்புகளையும் தளவாடங்களையும் அனுப்புவதில் மேற்கு ஜெர்மனியிலுள்ள போக்குவரத்து திட்டம் மிகவும் முக்கியத்துவமுள்ளது. யுத்தத்துக்கு முன் இருப்புப்பாதை மார்க்கமாகச் சென்ற ஜெர்மன் சாமான் போக்குவரத்தின் 46 சதவிகிதம் எல்லைச்சரக மாகாணங்கள் வழியாகச் சென்றது. நதிகள், கால்வாய்கள் வழியாக 50 சதவிகிதம் சாமான்கள் சென்றன. ரஸ்தா வழியாக எவ்வளவு சாமான்கள் கொண்டுபோகப்பட்டன என்பதற்கு புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. ஜெர்மனியில் இருப்புப்பாதை வழியாகச் செல்லும் சாமான் போக்குவரத்துகளின் 18 சதவிகிதம் ரூர் மாகாணத்தில் குவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ரூரின் பரப்பு ஜெர்மனியின் பூராப் பரப்பின் ஐந்து சதவிகிதம்தான்.

1938-ம் வருஷத்துக்கு முன் உள்நாட்டு தண்ணீர் மார்க்கங்கள் போக்குவரத்து மார்க்கங்களில் மிகவும் குறைவான முக்கியத்வம்தான் பெற்றிருந்தன. மேலே சொல்லிய மாகாணங்களில் தண்ணீர் மார்க்கமாக இருப்புப்பாதை வழியாகச் சென்ற போக்குவரத்துகளின் 25 சதவிகிதம்தான் கொண்டுபோகப்பட்டது. யுத்த காலத்தில் இது மூன்று மடங்காக அதிகரித்துவிட்டது. இதற்குச் சாதகமாகயிருந்தது மிட்டலாந்து கால்வாய். அந்தக் கால்வாய் அநேக வருடங்களாக கட்டப்பட்டு யுத்த ஆரம்பத்துக்கு முன்தான் வெட்டி முடிக்கப்பட்டது. டான்யூப்பைத் தவிர மற்றெல்லாக் கால்வாய்களுக்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறது. ஆகையால் அதற்கு "டர்ன்டேபிள்" என்ற காரணப்பெயர் வழங்கப்பட்டது.

ராணுவ முக்கியத்வமுள்ளதென்ற முறையில் அது ஸீக்பிரட் அரணின் பின்புறத்தில் முக்கிய போக்குவரத்து மார்க்கமாகயிருக்கிறது. அந்தக் கால்வாய் ஸைலீஷியா, மேற்கு பிரஷ்யா, போமரேனியா, ஸாக்ஸனி, பெர் முதலிய நாடுகளை மேற்குப் போர்முனையுடன் சேர்த்து வருகிறது. போர்முனைக்கருகில் ரைன் நதிக்கும், மிட்டலாந்து கால்வாயிக்கும் மத்தியில் ரைன் ஹெர்ன் கால்வாயும் டார்ட்மாண்ட் எம்ஸ் கால்வாயுமிருக்கின்றன. சால்ஸ்கிட்டர் மாகாணத்திலுள்ள ஜெர்மன் கோயரிங்க் எஃகுத் தொழிற்சாலைக்கும், பால்ர்ஸ்லேபணிலுள்ள ஜனங்களின் மோட்டார் தொழிற்சாலைக்கும், மிட்டலாந்து கால்வாயிக்கும் மத்தியில் அநேக கால்வாய்களிருக்கின்றன. ஐரோப்பாவில் உள்நாட்டிலுள்ள பெரிய துறைமுகமான டூயிஸ்பர்க் ரூரார்ட்டில் மட்டும் ஒவ்வொரு வருஷமும் 35 மிலியன் டன்கள் எடையுள்ள சாமான்கள் அனுப்பப்பட்டன.

ஆகிலும் நவீன யுத்த முறையில் ஒன்றுபட்ட உள்நாட்டு போக்குவரத்து மார்க்கங்களில் சில கெடுதல்களுமிருக்கின்றன. விரிவாக அமைக்கப்பட்ட போக்குவரத்து மார்க்கங்களைவிட இவைகளை ஆகாயத்திலிருந்து சுலபமாகத் தாக்கிவிடலாம். எதிரிக்கு ஆகாய ஆதிக்கம் இருக்கும்பொழுது இது திறம்பட நடைபெறும். இந்த அனுபவம் வடக்கு ஆபிரிக்காப் போரிலேயே கிடைத்துவிட்டது. மத்திய தரைக் கடலைத்தாண்டி ரோமலுக்கு ஸப்ளைகள் 300 கிலோமிடர் தூரம்தான் வரவேண்டியிருந்தது. எகிப்திலுள்ள பீல்ட்மார்ஷல் மாண்ட்காமரிக்குப் போகக்கூடிய சர்பராக்கள் 20,000 கிலோமீடர்கள் செல்லவேண்டியிருந்தது. நேசதேச வெடிவிமானங்கள் ரோமலுக்குச் சென்ற உதவிப் படைகளையும் சர்பராக்களையும் மூழ்கடித்து விட்டதினால், குறுகிய ஸப்ளை மார்க்கமிருந்தும் ரோமலுக்கு ஒன்றும் பயன்படவில்லை.

பிரான்ஸிலும் இதே நிலைமை ஏற்பட்டது. நேசதேச வெடி விமானங்கள் பிரெஞ்சு போக்குவரத்து மார்க்கங்களை நொறுக்கிவிட்டதினால் ஜெர்மானியர்கள் பலமான உதவிப் படைகளைப் போர்முனைக்கு அனுப்ப முடியவில்லை.

ரைன் நதிப்போர்முனையில் லக்ஷியங்களுக்கு வெகு சமீபத்தில் விமான தளங்களைப் பெற்றிருக்கும் உபரி சௌகர்யம் நேசதேசத்தார்களுக்கு இருக்கிறது. இதன் மூலம் நேசதேச விமானப் படைகளின் தாக்கும் சக்தியும் விசேஷமாக அதிகரித்துவிட்டது.

## பிரிடிஷ் விமானப்படை சக்தியின் ரகசியங்கள்.

**(விங் கமாண்டர் L. V. பிரேசர்).**

மேற்கு ஜெர்மனியின் தோற்றத்தை தியானம் செய்யுங்கள். தொழிற்சாலை லக்ஷியங்கள் தவிடுபொடியாகிவிட்டன. கால்வாய்களில் தண்ணீர் இல்லை. இருப்புப்பாதை, ரஸ்தா மார்க்கங்கள் குழப்பமான நிலைமையிலிருக்கின்றன. இவைபோன்ற அநேக வெளிப்படையான தோற்றங்கள் பிரிடனின் விமான சக்தியை வெளிப்படுத்துகின்றன. இந்த சக்திக்கு பிரிடிஷ் தொழிற்சாலைகளில் பிரிடிஷ் மக்கள் உற்பத்தி செய்த 102,609 விமானங்கள் உதவியாக இருந்தன.

ஐந்து வருஷங்களுக்கு முன்னதாக பிரிடன் போரில் இறங்கியபொழுது பிரிடனில் இருந்த போர் விமானங்கள் மிகவும் குறைவாகத்தானிருந்தன. அந்த விமானப்படையில் ஹரிகேன், ஸ்பிட் பைடர்கள் உள்பட அநேக உயர்வான சண்டை விமானங்களிருந்த போதிலும், மற்ற விமானங்கள் அவ்வளவு சிலாக்கியமானவைகளல்ல. அப்பொழுதிருந்த விமானிகளும் இப்பொழுதிருக்கும் சக்தி வாய்ந்த மகத்தான படையுடன் ஒப்பிட்டால் ஒரு சிறிதளவுதான் என்று சொல்லவேண்டும். பிரிடனுக்கு அப்பொழுது அதிகமான விமானப் படையும், பயிற்சிபெற்ற விமானிகளும், வேலைக்காரர்களும் தேவைப்பட்டது.

விமானிகளையும் சேவைப்படைகளையும் தயாரிக்க பயிற்சி விமானங்கள் கட்டப்பட வேண்டியிருந்தது. 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் பிரிடிஷ் விமானப்படை அதை முதன்மையாகக் கவனிக்கவேண்டியிருந்தது. முதல் ஆறு மாதங்களில் இரண்டு சண்டை விமானங்களையும், நடுத்தரமான பாம்பர்களையும் கட்டினால் ஒரு பயிற்சிவிமானமும் கட்டப்பட்டுவந்தது. பிரிடன் முதல் நான்கு மாதங்களில் 1,072 நடுத்தரமான, லேசான வெடி விமானங்களும், 447 சண்டை விமானங்களும் கட்டப்பட்டன.

அதே சமயத்தில் 772 பயிற்சி விமானங்களும் கட்டப்பட்டன. முதல் ஒரு வருஷத்தில் ஏராளமான வாலிபர்கள் விமானப்படையில் சேர்ந்துகொண்டார்கள் என்பதற்கு 1940-ல் கட்டப்பட்ட பயிற்சி விமான உற்பத்தியைப் பார்த்தாலே போதுமானது. அவர்களில் அநேகர் 1940-ம் வருஷம் மே மாதம் கனடாவில் ஆரம்பமான சாம்ராஜ்ய கூட்டுறவு விமானப்படை பயிற்சி முகாமுக்கு பயிற்சி பெறச் சென்றிருக்கிறார்கள். 3,679 நடுத்தரமான, லேசான வெடி விமானங்களும், 4,283 சண்டை விமானங்களும் கட்டப்பட்ட பொழுது 5,125 பயிற்சி விமானங்கள் கட்டப்பட்டன.

சண்டை விமான உற்பத்தியும் அதிகரித்தது. 1939-ம் வருஷத்தில் மாதம் ஒன்றுக்கு 110 வீதம் கட்டப்பட்டபொழுது, 1944-ம் வருஷம் முதல் ஆறு மாதங்களில் 940 சண்டை விமானங்கள் கட்டப்பட்டன. பிரிடிஷ் கவர்ன்மெண்டார் சமீபத்தில் வெளியிட்ட "பிரிடனின் யுத்த முயற்சியைப்பற்றிய புள்ளி விவரங்கள்" என்ற தலையங்கமுள்ள பிரசுரத்தில் கண்ட இந்தப் புள்ளி விவரங்கள் சிலாக்கியமாகயிருக்கின்றன. ஆனால் இது பிரிடிஷ் விமானப்படையின் ஆதிக்கத்துக்குக் காரணமான மகத்தான யுத்த முயற்சியின் ஒரு பாகம் தான்.

ஒவ்வொரு மாதமும் விமான உற்பத்தியும் விமான இஞ்ஜின் உற்பத்தியும் அதிகரித்த பொழுது, பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் இராப்பகலாக உழைத்து வெடிவிமானங்களுக்கும், சண்டை விமானங்களுக்கும் அதிக சக்தியையும், வேகத்தையும், பாரம் தாங்கும் பலத்தையும் அதிகரிக்க முயன்றார்கள். அவர்களின் ஆராய்ச்சியின் பயனாகத்தான் 12,000 ராத்தல் எடை உள்ள வெடிகுண்டுகளை ஏற்றிச்சென்ற லங்காஸ்டர் கனமான வெடி விமானங்கள் அமைக்கப் பட்டன. அந்த வெடி குண்டுகள் ஜெர்மனி பேரில் பட்டப்பகலில் போடப்பட்டன. மேலும் டெம்பஸ்ட் போன்ற அதிக வேகமான சண்டை விமானங்களும் கட்டப்பட்டுவந்தன.

நான்கு இஞ்ஜின்களுள்ள விமானங்களைக் கட்ட ஆரம்பித்தவுடன் விமான இஞ்ஜின்களையும், விமானத்தின் பாகங்களையும் தயாரிக்கும் வேலை துரிதப்படுத்தப்பட்டது. இந்த உற்பத்தி 1939-ம் வருஷம் முதலில் மாதம் ஒன்றுக்கு 1,130 விமான இஞ்ஜின்கள் வீதம் கட்டி முடித்துவந்ததுபோக, 1944-ம் வருஷம் முதல் ஆறு மாதங்களில் மாதம் ஒன்றுக்கு 5,270 வீதம் கட்டப்பட்டுவந்தது. இந்தக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இஞ்ஜின்களின் குதிரை சக்தியும் இரட்டிப்பு அடைந்தது.

பிரிடிஷ் தொழிற்சாலைகள் ஏராளமாக விமானங்களையும் விமான இஞ்ஜின்களையும் உற்பத்தி செய்து வந்தபொழுது விமான வேலைக்காரர்கள் மிகவும் கஷ்டமான நிலைமையிலும்,



எதிரியின் வெடி குண்டுகளின் வீச்சுக்குட்பட்டும் அவ்வளவு உற்பத்திக்கு சாதகமாக வேலை செய்த தொழிலாளர்களுக்கும் ஏராளமான பாராட்டைத் தெரிவித்தார்கள். விமானப் படைகளை பழுதுபார்ப்பதும் உறுதியுடன் நடைபெற்றுவந்தது.

ஜெர்மனியின் யுத்த தொழிற்சாலைகளைத் தாக்க பெரிய வெடி விமானங்களுக்கு அதிக சக்தி வாய்ந்த இஞ்ஜின்களை பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் தயாரித்து வந்த பொழுதும் அபாரமான அழிக்கும் சக்தியுள்ள வெடி குண்டுகளையும் உற்பத்தி செய்ய அவர்கள் ஏற்பாடு செய்து வந்தார்கள். அவர்களின் ஆராய்ச்சிகளும், ஊசி முனைக் குறிப்புடன் அடிக்க் அடிக்க பிரிடிஷ் விமானிகளும், சேவைப்படைகளும், பெற்ற பயிற்சியின் பயன்களும் இன்று நன்றாய் பிரதிபலித்து வருகின்றன. அதன் பயனாகத் தான் ஏராளமாக ஜெர்மன் நகரங்களும் தொழிற்சாலை, இருப்புப்பாதை நிலயங்களும் நேசதேச வசமாகி வருகின்றன.

வெடிகுண்டுகளின் கனமும், அழிக்கும் சக்தியும், அளவும், வெடி மருந்தும் அதிகரித்து விட்டன. 1939-ல் ஒரு வெடி விமானத்தில் 12 டன்கள் எடையுள்ள வெடி குண்டுகள் ஏற்றிச்செல்லப்பட்டன. 1943-ல் அது நான்கு டன்களுக்கு அதிகரித்தது. ஒரு பாய்ச்சலில் 1,000 மைல்கள் வரையில் கொண்டுபோகப்பட்ட வெடிகுண்டுகளின் கனம் 1939-ம் வருஷத்தில் 210 டன்களாக இருந்தது. 1944-ம் வருஷ ஆரம்பத்தில் 3,000 டன்களாக அதிகரித்தது.

பிரிடனின் விமான பல ஐந்தொகையில் இத்துடன் விவரங்கள் முடிவடைந்தன வென்று நினைக்காதீர்கள். குத்தகைக் கடனுக்குப் பதில் உதவி முறையில் பிரிடன் அமெரிக்க விமானப்படைகளுக்கு 133 விமான தளங்களையும், டெப்போக்களையும், தலைமைக் காரியாலயங்களையும், வாசஸ்தல வசதிகளையும் அளித்திருக்கிறது. மேலும் 500 கிளைடர்கள் உள்பட 2,104 விமானப்படையையும், 570 உபரி விமான இஞ்ஜின்களையும், 1,37,000 ஜெட்டிஸன் எண்ணெய் டாங்கிகளையும், (சண்டை விமானங்களின் வட்டாரத்தை இவைகள் அதிகரிக்கக்கூடியவை) கவசங்களையும், விமானப்படை டயர்களையும், பளபளப்பான ப்ளக்குகளையும் மற்ற அநேக உபகரணங்களையும் பிரிடன் அனுப்பியிருக்கிறது.

ஆகாயத்தில் போர் புரிவதும், தொழிற்சாலைகளிலும், விமானங்களிலும் வேலை செய்கிறவர்களுமான பிரிடிஷ் ஆடவர்கள், ஸ்திரீகளின் "ரத்தம், வியர்வை, கண்ணீர்" முதலியவற்றின் அரிய சேவையின் முக்கிய பலன் 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்திற்கும், 1944-ம் வருஷம் ஜூன் மாதத்திற்கும் மத்தியில் கட்டப்பட்ட விமானங்களின் உற்பத்தியில் பிரதிபலித்துவிட்டது. இந்தக் காலத்தில் 1,02,609 விமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

---

## ஜெர்மன் இருப்புப் பாதைகள் பேரில் வெடிகுண்டு வீச்சு.

**(அப்ஸர்வர் பத்திரிகையின் விமான நிருபர்).**

மார்ச்சு மாதத்தில் பிரெஞ்சு இருப்புப் பாதைகளைத் தாக்கும் விமான நடவடிக்கை துவங்கிய பொழுது நார்மண்டிப் பிரதேசத்தைத் துண்டித்துவிட்டு பாஸ்டிகலேயிலும் தெற்கு பிரான்ஸிலும் உள்ள ஜெர்மன் படைகள், நேசதேசப் படைகள் முன்னேறும் வாசல்களில் பலமாக ஊன்றிக்கொள்ளும் வரையில், அந்த முன்னேறும் வாசல்களுக்குச் செல்லக் கூடாதென்று லக்ஷியமிருந்தது. வெடி குண்டு வீச்சினால் போர் முனையைத் துண்டிக்கும் நடவடிக்கை மிகவும் எளிதில் நடைபெற்றதால், அதன் பிரயோஜனத்தை ஒருவரும் சரியான படி மதித்துப் பார்க்கவில்லை. பிரான்ஸில் படைகளை இறக்கிய வரையில் விமானப் படை இருப்புப் பாதை அமைப்புகளை உபயோகமற்றதாகச் செய்யமுடியாதென்று நமது அனுபவத்திலிருந்து தோன்றிற்று. பழுதுபட்ட இருப்புப் பாதைகளை ஒன்று அல்லது இரண்டு மணிகளுக்குள் பழுது பார்த்துவிட முடிந்தது. D தினத்திற்கு முன்னும் பிறகும் பாம்பர் கமாண்டைச் சேர்ந்த வெடி விமானங்கள் பிரான்ஸிலும் பெல்ஜியத்திலுமுள்ள முக்கியமான லக்ஷியங்களைத் தாக்கின. பழுது பார்த்து பூர்த்தியாகக்கூடிய நிலைமையிலிருந்தபொழுது விமானங்கள் மறுபடியும் அந்த லக்ஷியங்களைத் தாக்கின. இவ்விதமாக எதிரிக்கு பழுது பார்க்கும் பிரச்னையே ஒரு பிரமாதமானதாக வெடி விமானங்கள் செய்துவிட்டன.

ஆனால் பிரெஞ்சு இருப்புப் பாதைகளைப்போல் ஜெர்மனியிலுள்ள அமைப்பைச் சுலபமாக அழித்துவிட முடியாது. ஏனென்றால் அழிக்கப்படும் ஒரு பாதைக்குப் பதிலாக ஆறு பாதைகள் வேறு பக்கங்களிருக்கின்றன.

ஜெர்மனியில் இருப்புப்பாதை அமைப்பில் வடக்குப் பகுதியைவிட தெற்குப் பகுதிதான் சுலபமாகத் தாக்கக்கூடியது. ஆகிலும் ரூர், மத்திய ரைன் பிரதேசத்திலுள்ள இருப்புப் பாதை அமைப்பு மிகவும் சிலாக்கியமானது. ஏனெனில் அதுதான் ஜெர்மன் இருப்புப்பாதை திட்டத்தின் ஹிருதயம் போன்றது.

ஜெர்மனியின் தற்காப்பாளர்களுக்கு உதவி செய்துவரும் இந்த சிக்கலான இருப்புப் பாதை அமைப்பை நொறுக்கும் சக்தி பாம்பர் கமாண்டைச் சேர்ந்த விமானங்களுக்குத்தான் இருக்கிறது.

அதிருஷ்டவசமாக இருப்புப் பாதைகளுக்கு பதிலாக யுத்தத்துக்குமுன் ஹிட்லர் அமைத்திருந்த ரஸ்தாக்களெல்லாம் இப்பொழுது பயன்படவில்லை. ஏனெனில் எஸ்ஸன் மாகாணத்திலுள்ள ரயில் வண்டி தங்குமிடம் நொறுக்கப்பட்டால் எதிரி இருப்புப்பாதை வழியாகக். கொண்டுபோகக்கூடிய சாமான்களை தினசரி 1,00,000 லாரிகளில் கொண்டு போகவேண்டியதாக ஏற்பட்டுவிடும். இது சாத்தியமானதென்று வைத்துக்கொண்டாலும் ஜெர்மனியிடம் போதுமான எண்ணெய் கிடையாது.

இருப்புப்பாதைகளுக்கு ப்ரதியாக உபயோகப்படும் நதி மார்க்கங்களும், டார்ட்மெண்ட் எம்ஸ் கால்வாயும், மிட்டலாண்ட் கால்வாயும் உடைபட்டுவிட்டதனால் சீர் கெட்டுப்போய் விட்டன. மேலும் அவைகள் மூலமாகவும் எதிரி சாமான்களைக்கொண்டுபோகவும் அனுமதிக் கப்படமாட்டான்.

## ஆக்கனில் மறுபடியும் சுறுசுறுப்பு.

ஆக்கனில் மறுபடியும் சுறு சுறுப்பு காணப்படுகிறது. அமெரிக்கர்கள் சில வாரங்களுக்கு முன் அங்கு சென்றபொழுது 1,300 பேர்கள் தானிருந்தார்கள். வீடுகள் வசதிக் குறைவாக இருந்தபோதிலும் அங்கு இப்பொழுது 14,000 பேர்கள் இருக்கிறார்கள். அது 25,000-க்கு அதிகரிக்குமென்று தோன்றுகிறது.

ஸேவிங்ஸ் பாங்கிகள் மறுபடியும் திறக்கப்பட்டுவிட்டன. ஏராளமான பொருள் வைத்தி ருக்கும் ஜெர்மானியர்கள் முதல் ஐந்து நாட்களுக்குள்ளாகவே 235,000 மார்க்குக்களை டிபா ஸிட் செய்திருக்கிறார்கள். இரண்டு கடன்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆக்கனிலுள்ள சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்க ஒன்று. மற்றொன்று சிறிய வியாபாரங்களை ஆரம் பிக்கப் பொருளுதவி.

அங்கு 20 டாக்டர்கள், அநேகம் பல் டாக்டர்கள், 400 படுக்கைகளுள்ள நான்கு ஆஸ்பத்திரிகள், ஏராளமான மருந்துகளும் காணப்படுகின்றன. நல்ல தண்ணீர் ஸப்ளைக்கும் கழிவு தண்ணீர் அகற்றுவதற்கும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கட்டடங்களைப் பழுது பார்ப்பதற்குத் தொழிலாளர்கள் கிடைப்பதில்லை.

ஜனங்களின் பெரும்பாகம் ஸ்திரீகள். ஆடவர்கள் 60-க்கு மேற்பட்டவர்களாயும், 16 வயதுக்குட்பட்டவர்களாகவுமிருக்கிறார்கள். நகரத்திலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள உணவுப்பொருள் ஜனங்களுக்குப் போதுமானது. சாதாரணமாக ஆக்கனில் 170,000 ஜனங்கள் வாசம் செய்து வந்தார்கள்.

ஆக்கனில் ஒரு பத்திரிகையும் பிரசுரமாகிவிட்டது. டீ நியூஸ் ஸீட்டின் முதல் பதிப்பு நவம்பர் 27-ம் தேதியன்று வெளிவந்தது. ஜெர்மானியர்களுக்காக இதை அமெரிக்கர்கள் பிரசுரித்தார்கள். இது வாரப்பத்திரிகை. ஆறு ஜெர்மானியர்களுக்கு ஒரு பத்திரிகை வீதம் வழங்கப்படும்.

முதலாவது பதிப்பில் ஜெனரல் ஈஸன் ஹவர் விடுத்த முதல் பிரகடனமும் ராணுவ நிர்வாகத்தின் வேலைகளைப்பற்றிய ரிபோர்ட்டுகளும் அச்சிடப்பட்டிருக்கின்றன. நேசதேசப் படைகள் வெற்றிபெற்றவர்களாக அங்கு வந்தபோதிலும் அவர்கள் ஜனங்களை ஹிம்சிக்க வரவில்லை என்பதை அவைகள் வெளிப்படுத்திவிடுகின்றன.

பிரகிருத யுத்த விஷயங்களும் சர்வதேச முக்கியத்துவமுள்ள தகவல்களும் அந்தப் பதிப்பில் காணப்படுகின்றன. நாஸிகளின் ஆக்ஷிக்குட்பட்டிருந்த ஜெர்மானியர்களுக்கு இந்தவிஷயங் கள் இதுவரையில் அறிமுகப்படுத்தியதே கிடையாது. உள்நாட்டு ஜெர்மன் உணவுப்பொருள் நிர்வாகத்தைப்பற்றியும், ராணுவ நிர்வாகத்தின் அலுவல்களைப்பற்றியும் அதில் தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. முக்கியமாக நாஸிகளுடன் ஓடிப்போய்விட்ட ஜெர்மன் போலீஸ் காரர்களுக்குப் பதிலாக போலீஸ்காரர்களுக்குப் பயிற்சி அளிக்க ஒரு பள்ளிக்கூடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள அநேக நகரங்களில் இருந்து அநேக வாலண்டியர்கள் வந்திருக்கிறார்கள்.

## வெடிமருந்தில்லாமல் நேசதேசப் போர்.

### மால்டா விமானப் போர்.

(டெயிலி எக்ஸ்பிரஸின் விமான நிருபர்).

இரண்டு வருட விமானத் தாக்குதலுக்குப்பின் மத்தியதரைக்கடலிலுள்ள மால்டா என்னும் முக்கியமான தீவை பிரிடன் இழந்துவிடும் தருவாயிலிருந்ததென்பதை சாதல்வார்



ஆபீஸில் உத்தியோக முறையில் வெளியிட்டிருக்கும் மால்டா விமானப்போர் என்னும் புஸ்தகத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் விலை ஒரு ஷில்லிங்.

1942-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஜெர்மன், இதாலிய விமானப் படைகள் மால்டா பேரில் 6,728 வெடி குண்டுகளை வீசின. 23 மாதப்போருக்குப்பின் எதிரியுடன் போர் புரிய நான்கு விமானங்களையும், விமான தளத்தைக் காப்பாற்ற இரண்டு விமானங்களையும் அனுப்பினால் போதுமென்று மால்டாவைத் தற்காப்புச் செய்தவர்கள் நினைத்தார்கள்.

வெடிமருந்து குறைவாகயிருந்ததால் தரையிலிருந்த பீரங்கிகள் ஒவ்வொரு பீரங்கியிலி ருந்தும் 15 ரௌண்ட்தான் சுடமுடிந்தது. பிரிடிஷ் சண்டை விமானங்களும் குண்டு களில்லாமலேயே போர் புரிந்து வந்தன. அவ்விதம் அவர்களிடம் போதுமான குண்டுகள் இல்லையென்று ஜெர்மனி ஒருபொழுதும் தெரிந்துகொள்ளவில்லை. ஆகிலும் பிரிடிஷ் சண்டை விமானங்கள் தோன்றியபொழுது எதிரிகள் பின்வாங்கி ஓடிவிட்டார்கள்.

எப்பாடுபட்டும் மூன்று தளங்கள் காப்பாற்றப்படவேண்டியிருந்தன.

2,500 ஸோல்ஜர்கள் கோஷ்டிகளாக இருந்து சதாகாலமும் வேலை செய்து எதிரி விமானங்களை பிரென் துப்பாக்கி மூலமாகவும், துப்பாக்கி மூலமாகவும் எதிர்த்துப் போராடி னார்கள்.

1942-ம் வருஷ முடிவில் 14,000 டன்களுக்கு அதிகமான மொத்த எடையுள்ள வெடி குண்டுகள் மால்டாவிலும் கோசோவிலுமுள்ள 143 சதுர மைல்களின் பேரில் வீசப்பட்டன. இந்த அவகாசத்தில் 200-க்கு ஒருவர் வீதம் 1,468 பேர்கள் கொல்லப்பட்டார்கள். 24,000 கட்டடங்கள், அழிக்கப்பட்டன அல்லது பழுதுபட்டுவிட்டன.

எதிரிக்கு 1,129 விமானங்கள் நஷ்டம். அவைகளில் 236 விமான எதிர்ப்பு பீரங்கியால் சுட்டுவீழ்த்தப்பட்டன. பிரிடன் 568 விமானங்களை இழந்தது.

1942-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் கிராண்ட் துறைமுகத்துக்கு வெளியே ஏராளமான சாமான் கப்பல்கள் நின்றுகொண்டிருந்தபொழுது, எதிரி விமானங்கள் ஒன்றும் தென்பட வில்லை. மால்டாவின் முற்றுகை அத்துடன் மறைந்தது.

## ஐரோப்பிய பத்திரத்தில் புதிய கட்டம்.

### பிரெஞ்சு-ருஷ்ய நட்பு ஒப்பந்தம்.

(டைம்ஸ் பத்திரிகை).

டிஸம்பர் 10-ம் தேதியன்று ருஷ்யாவும் பிரான்ஸூம் செய்துகொண்ட பரஸ்பர உதவி ஒப்பந்தம் அவ்விரு நாடுகளுக்குள்ளிருக்கும் சம்பந்தங்களில் அபிவிருத்தியை வெளிப்படுத்து வதுடன், ஐரோப்பாவின் பத்திர திட்டத்தில் ஒரு புதிய கட்டம் ஏற்பட்டுவிட்டதென்பதையும் வெளிப்படுத்துகிறது.

இது பிரான்ஸூக்கும் ருஷ்யாவுக்குமிருந்த பழைய நட்பை புதிப்பித்துக்கொண்டது மட்டும் என்பதில்லை. புதிய ருஷ்யாவும் புதிய பிரான்ஸூம் ஜெர்மனி என்ற பிணியினால் அதிக கஷ்டங்களை அனுபவித்திருக்கின்றன. ஆகையினால்தான் மாஸ்கோவிலிருந்து அவ்விரு நாடுகளும் வெளியிட்ட அறிக்கையில் மார்ஷல் ஸ்டாலினும், ஜெனரல் டிகாலும் அவர்களுடைய சகாக்களும் சமாதான அமைப்பைப்பற்றி சர்ச்சை செய்தபொழுது ஜெர்மனியின் பிரச்னையை யும் முக்கியமாக எண்ணியிருந்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா விதமான ராஜீய நடவடிக்கைகளிலும் ருஷ்யாவின் அதன் மகத்தான ஜன சமூக, பொருளாதார முயற்சிகளும், ருஷ்யாவும் சென்ற சமாதானத்துக்குப்பின் ஜெர்மனியின் ராணுவ சக்தி பலமடைந்ததுபோல், மறுபடியும் ஓங்கி பாதிக்கப்படாமல் காபந்து செய்யவேண்டுமென்று ருஷ்ய நிர்வாகம் அக்கரை கொண்டிருக்கிறது.

பிரான்ஸூக்கு இவ்விதமான லக்ஷியம் இருந்துவருகிறது. இவர்களுக்குள் ஏற்பட்ட உடன்படிக்கை பிரிடனுக்கும் ருஷ்யாவுக்கும் இரண்டு வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட நட்பை பலப்படுத்திவிட்டது. அந்த நட்பின் மூலம்தான் வெற்றிகரமாகப் போரை நடத்தமுடிந்தது. வருங்கால சமாதானத்திற்கும் திட்டம்போட சாதகம் ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையை மாதிரியாகக்கொண்டு மற்ற நாடுகளும் பின்பற்றுமென்று பிரிடன் நினைத்து வந்தது. இப் பொழுது ஏற்பட்ட உடன்படிக்கையை பிரிடனும், ருஷ்யாவும், பிரான்ஸூம் வரவேற்கும்.

ஜெனரல் டிகால் சம்பந்தப்பட்டமட்டில் இந்த ஒப்பந்தம் அவருடைய மதிப்பை அதிகரித்துவிடும். விடுதலையடைந்த பிரான்ஸில் தலைவர் பதவியை அவர் ஏற்றுக்கொள்ளுமுன்பே ஐரோப்பாவின் எதிர்காலத்தில் ருஷ்யா ஒரு முக்கியமான பொருப்பெடுத்துக்கொள்ளும் என்பதை அவர் நன்கு உணர்ந்துவிட்டார். இரு நாடுகளும் இவ்வளவு சீக்கிரத்தில் அவர் உடன்படிக்கையை ஏற்படுத்திவிட்டாரென்பது அவருடைய ராஜ தந்திர ஊக்கத்தை வெளிப்படுத்துகிறது. ருஷ்யாவுடன் யுத்தத்திலும் சமாதான காலத்திலும் பிரிடனும் பிரான்ஸும் விசுவாசமுள்ளதாக இருந்துவரும் என்று ஏற்பட்டுவிட்டதால், உருவான ஒரு அடிப்படையின்பேரில் மேற்கு ஐரோப்பாவில் ஒரு சங்கத்தை அமைக்க சர்ச்சை செய்யலாம். உடன்படிக்கை மூலமோ மற்றெந்த வகையிலோ அக்கிரம ஆக்கிரமணத்தைத் தடுக்க என்ன ஏற்பாடுகள் செய்தாலும், வெற்றிக்குப்பின் பொருளாதார முறையில் ஒத்துழைப்பு அவசியம் என்பது நிச்சயமானது. படையெடுப்பினால் ஏற்பட்ட அழிவைச் சீர்படுத்துவது என்ற நடவடிக்கைதான் ஜெர்மனியின் கொடுமைகளுக்கு உட்பட்ட தேசங்களின் நம்பிக்கைக்கும் திரமான புத்திக்கும் உரைகல்லாக இருக்கும். பிரிடனுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் உலக பத்திரமும் பொருளாதார சுபிக்ஷமும் ஒன்றுசேர்த்து கோடிடப்பட்டிருக்கின்றன. இவை இரண்டுக்கும் ஒற்றுமைதான் சிறந்த திறவுகோல். தேசிய அந்தஸ்தைப் பெற்ற பிரான்ஸ், ஐரோப்பிய திட்டத்தின் புனருத்தாரணத்திற்குத் தன்னாலியன்ற பேருதவியைச் செய்யக்கூடும். ருஷ்யாவுடன் அதற்குள்ள ஒப்பந்தமும், பிரிடனுடன் அதற்குள்ள சகோதரபாவமும் அதன் உதவி தாராளமாகக் கிடைக்கக்கூடுமென்பதைத்தான் ருஜூச் செய்கின்றன.

---

# பிரான்ஸ் பெரிய வல்லரசாக மாறிவிட்டது.

## அயல் நாட்டு விவகாரங்களில் பெரும் பங்கு.

**ஜோஸப் ஸி ஹார்ஷ்.**

(கிரிஸ்டியன் ஸயன்ஸ் மானிடர்.)

ஐரோப்பாவில் பிராசீனமான நடவடிக்கை பிரெஞ்சு தேசம் வெகு சீக்கிரத்தில் புத்துயிர் பெறும் சக்தி பெற்றிருப்பதுதான். ரோமன் சாம்ராஜ்யம் பிரெஞ்சு தேசத்தை ஸ்தாபித்த பின் ரைன் நதிக்கும் அட்லாண்டிக் கடலுக்கும் பிரென்னீஸ் மலைக்கும் இங்கிலீஷ் கால்வாய்க்கும் மத்தியிலுள்ள ஜனங்கள் பொருட்படுத்தப்படவில்லை.

அவர்கள் முறியடிக்கப்பட்டிருக்கிறார்கள். சோர்வடைந்திருக்கிறார்கள். உலகத்தின் எதிர்கால க்ஷேமத்தில் அவர்களுக்கு ஒரு சிறுபான்மையான ஸ்தானம்தான் உலகத்தார் வழங்கியிருக்கிறார்கள். இவ்விதமாக பிரான்ஸை உலக முக்கியத்துவத்திலிருந்து அடிக்கடி எடுத்துவிடுவது 1940-ம் வருஷத்தில் பிரான்ஸின் ராணுவ வீழ்ச்சிக்குப்பின் ஏற்பட்டு சமீப காலம் வரையில் நிலைத்திருந்தது. இது தவறான கொள்கையென்று இப்பொழுது மறுபடியும் ருஜூவாகிவிட்டது.

இன்று கிட்டத்தட்ட மூன்று மிலியன் ஜனங்கள் ஜெர்மனியில் கைதியாகவோ, அல்லது கட்டாய சேவை செய்துகொண்டோ இருந்தாலும், பிரான்ஸ் இன்று திடீரென்று புதிய ஐரோப்பிய அமைப்பில் ஒரு பெரும் பங்கெடுத்துக்கொண்டது. இது ஒரு மிகுதியான பல ஹீனம் ஒன்று சொல்லலாம். ஆகிலும் பிரான்ஸிலிருந்து திரும்பிவந்த உற்று நோக்காளர்கள் 1918-ம் வருடத்திய மகத்தான வெற்றிக்குப் பின் பலஹீனமடைந்த பிரான்ஸ் 1940-ம் வருஷத்திய தோல்விக்குப்பின் புதிய திறமையையும் வலுவையும் அடைந்துவிட்டது என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

உள் நாட்டு ராஜீய விவகாரங்களில் நல்ல முறையில் வெற்றி தோன்றுகிறது. ஜெனரல் டிகாலின் நிர்வாகம் பிரான்ஸை திருத்தியமைக்க சக்தியற்றதென்று நினைத்ததற்கு மாறாக அநேக சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறது. அயல் நாட்டிலிருந்த அரசாங்கம் உண்மையான தாத்காலிக நிர்வாகமாக இருந்துவருகிறது.

பொது ஜன தேருதலுக்கு நிற்க அது ஒப்புக்கொண்டதே அதன் வலுவை வெளிப்படுத்துகிறது. பிப்ரவரியில் நகர பரிபாலன சபைத் தேருதல்கள் நடைபெறும்.

முக்கியமாக அதன் புனருத்தாரணம் அயல் நாட்டு விவகாரங்களில் நன்கு காணப்படுகிறது. அயல் நாட்டு விவகாரம் பெரும் பங்கெடுத்துக்கொண்டுவிட்டது. அதற்கு அஸ்திவாரம் பிரதம மந்திரி சர்ச்சில் பிரான்ஸுக்கு விஜயம் செய்தபோது போடப்பட்டது. அடுத்தபடியாக பிரான்ஸுக்கு ஐரோப்பிய ஆலோசனைக் கமிஷனில் ஒரு ஸ்தானம் கொடுக்கப்பட்டது. அதன்பின் மாஸ்கோவுக்கு வரும்படி டிகாலுக்கு மார்ஷல் ஸ்டாலின் அழைப்பு அனுப்பினார்.



# தற்போதிய ஹாலந்தின் நிலைமை.

(மாஞ்சஸ்டர் கார்டியனின் ராணுவ நிருபர்.)

ஹாலந்தில் மாஸ் நதிக்கு மேற்குப்பக்கத்திலிருந்த ஜெர்மானியர்கள் பூராவும், சில மறைந்து இருந்து சுடுகிறவர்களைத்தவிர சுத்தி செய்யப்பட்டுவிட்டார்கள். அவர்கள் சென்றதற்கு இழிவான அடையாளமாக அவர்கள் அணைகளை உடைத்துவிட்டு பிரவாகம் அதிகமாக இருந்த நதிகளில் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தி விட்டார்கள்.

வெள்ளப்பெருக்கேற்பட்ட பிரதேசத்தின் பெரும்பாகம் ஆர்ன்ஹெமுக்கும், நிஜ்மேகனுக்கும் மத்தியிலிருந்து வருகிறது. இந்த வெள்ளப்பெருக்கின் காரணமாக நமது துருப்புகள் முன்னணி தளங்களிலிருந்து சிறிது பின்வாங்கும்படி நேரிட்டது. அதன் விளைவுகள் ராணுவ முறையில் பயன் படாவிட்டாலும் ஹாலந்தின் ஜனங்களின் துயரத்தை அதிகரித்து விட்டன.

டச்சுக்காரர்கள் ஸகிப்புத்தன்மை உள்ளவர்களாதலாலும், இன்னும் சில காரணங்களினாலும் ஹாலந்திலுள்ள பொது ஜனங்களின் கஷ்ட அனுபவம் வெளிவரவில்லை.

எவ்வளவு பேர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று குறிப்பாகச் சொல்லக்கூடவில்லை. ஆகிலும் ஹாலந்தில் வெள்ளத்திலிருந்து, ஓடி வரும் ஜனங்களுக்கு உணவு அளிப்பதும், அவர்களின் தேகஆரோக்யத்தைக் கவனிப்பதும் தான் மகத்தான பிரச்னைகளாக யிருக்கின்றனவென்று பொது ஜன வியவகார அதிகாரிகள் சொல்லுகிறார்கள். விடுதலைபெற்ற நாடுகளில் முக்யமான பிரச்னையான போக்குவரவு மார்க்கங்களின் சிரமம் ஹாலந்தில் வெள்ளத்தின் கொடுமையால் பன்மடங்கு அதிகரித்து விட்டது. தனிப்பட்ட போக்குவரத்து வசதிகள் இங்கு அமைக்கப்படவேண்டும்.

ஐரோப்பாவில் எந்த நாட்டையும்விட ஹாலந்தின் நிலைமை மோசமாகயிருக்கிறது. டச்சு ஜனங்கள் கஷ்டங்களை எவ்வளவு பொறுமையுடன் சகித்து வந்தார்களென்பதையும், இறுதியில் விடுதலைபெற நடைப்பெற்ற போரில் அவர்கள் எவ்விதம் நேசதேசப்படைகளுடன் தோளோடு தோள் நின்று போர் புரிந்தார்களென்பதையும் போதுமானபடி பாராட்டுவதற்கு சாத்தியமில்லை.

---

# ஜப்பானின் கடல் மார்க்கங்கள் மூடப்பட்டுவிட்டன.

## பஸிபிக்கில் நேசதேசத்தாரின் யுத்த தந்திரம்.

**பால் வோல்.**

(கிருஸ்டியன் ஸயன்ஸ் மானிடர்.)

1901-ம் வருஷத்தில் பிரிடனைத் தாக்க ஒரு திட்டத்தை வகுக்கும்படி அதிகாரிகளுக்கு கெயிஸர் உத்தரவு போட்டது முதல் பிரஷ்யாவின் யுத்த தந்திர நிபுணர்கள் கடல் தாண்டிப் போரை நடத்த உபாயங்களையும் சாதனங்களையும் கண்டுபிடிக்க முயன்று வந்தார்கள். சரித்திரத்தின் விசித்திரமான போக்கினால் இந்த திட்டங்கள் ஜப்பானிய சாம்ராஜ்யத்தை தாக்கிவரும் நேசதேசத்தார்களுக்கு உபயோகமுள்ளதாகயிருக்கிறது.

கெயிஸருடையவும், ஹிட்லருடையவும் ராணுவ ஆலோசகர்கள் பிரிடனையும், ஐரோப்பாவையும் கடல்தாண்டி உள்ள தேசங்களையும் ஒன்றுபடுத்தும் கப்பல்களின் கூட்டம் நங்கூரம் பாய்ச்சி நிற்கும் துறைமுகங்களை மூடிவிட்டால்தான் பிரிடனை ஜெயிக்க முடியுமென்று அறிந்துவிட்டார்கள். 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் 28-ம் தேதியன்று ராணுவக் கொள்கை, ராணுவ விஞ்ஞான சாஸ்திரம் முதலியவற்றிற்காக ஏற்படுத்தப்பட்ட ஜெர்மன் சங்கத்திற்கு உதவி கடற்தளபதி டானர் அனுப்பிய ரிபோர்ட்டில் இந்த லக்ஷியம் தெளிவுபட விவரிக்கப்பட்டிருக்கிறது. "பிரிடனின் கடல் மார்க்கங்களை நாம் அடக்கியாளவேண்டும். அதற்காக கப்பல் பலத்தைக் குறைக்கவேண்டும். இரண்டு முனைகளிலுள்ள ஸ்தானங்களையும் இறுதியில் நமது வசப்படுத்திவிடவேண்டும்."

பிலிப்பைன்ஸில் மாக் ஆர்தர் இறங்கியதும், குவாம் சைபான் என்ற தீவுகளைக் கைப்பற்றியதும் நேசதேசத்தாரின் தூரக்கிழக்குப் போரில் இந்த லக்ஷியத்தை உடையவை. பிலிப்பைன்ஸில் ஜப்பானியக் கடற்படை நங்கூரம் பாய்ச்சி நிற்கக்கூடிய முக்கியமான துறைமுகத்தை அமெரிக்கப் படைகள் பிடித்துவிட்டன. மேலும் அமெரிக்கர்கள் தென்கிழக்கு ஆசியாவுக்கும் ஜப்பானுக்குமுள்ள கடல் போக்குவரத்தை மூடிவிட்டன. இதன் மூலமாக

ஒரு பாய்ச்சல் ஸ்தலமும் கிடைத்துவிட்டது. அதிலிருந்து விமானப்படையும் கடற்படையும் பார்மோஸாவையும் தெற்குச் சைனாவையும் தாக்கக்கூடும்.

லூஸானின் வடக்கு நுனிக்கும் பார்மோஸாவுக்கும் உள்ள தூரம் தெற்கு பிரான்ஸுக்கும் வடக்கு ஆபிரிக்காவுக்குமுள்ளதைவிட அதிகமானதல்ல. பார்மோஸாவுக்கும் ஜப்பானின் தெற்குத் தீவான கியூஷுவுக்குமுள்ள தூரம் பிலிப்பைன்ஸிலுள்ள லெயிடிக்கு ஜெனரல் மாக் ஆர்தரின் படைகளைக்கொண்டுவர கடற்படை கடந்துசென்ற தூரத்திற்கு அதிகமானதல்ல.

நேசதேசத்தார்கள் கடல் மார்க்கத்தில் ஒவ்வொரு தீவாகப் பிடித்து முன்னேறும் வாசல்களை ஏற்படுத்திவந்துவிட்டால், மத்தியதரைக் கடலின் இருகரையிலுமுள்ள பிரதேசங்களுக்குள் இருக்கும் தூர அளவிற்கு, பஸிபிக் கடல் மார்க்கங்களும் வந்துவிடும். மாக் ஆர்தர் சொல்லுகிறபடி அவர்கள் எதிரியுடன் படைகள் போர்தொடுக்கும் நிலைமையை அடைய நாங்கள் வழிகளையும் சாதனங்களையும் கண்டுபிடித்துவிட்டோம். இது தூரக்கிழக்குப் போரில் இறுதியில் முன்னேறித்தாக்கும் கூட்டத்தைத் துவக்கிவருகிறது. ஜெர்மன் திட்டப்படி தீவாக உள்ள பிரிட்டனை அதன் கடல் மார்க்கங்களை நொருக்கியபின்தான் ஜெயிக்கமுடியும் என்று தோன்றிற்று, அது போல் ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் மத்திய பாகத்தைத் தாக்கவேண்டுமானால் கடல் போரைத் திறம்பட நடத்தவேண்டும். ஜப்பானின் கப்பல்கள் தங்கியிருக்கும் துறைமுகங்களின் பேரில் அடிக்கடி வெடிகுண்டுகளை வீசவேண்டும்.

நேசதேசக் கப்பல்களும் வெடி விமானங்களும் 8 மிலியன் மொத்த டன்கள் எடையுள்ள ஜப்பானிய கடற்படையை ஏறக்குறைய 5 மிலியன் டன்களுக்குக் குறைத்துவிட்டதாலும், ஜப்பானின் முக்கியமான துறைமுகங்களையும், ஜப்பானிலிருந்து தாவரப் பொருள்களுள்ள பிரதேசங்களுக்கும் தூரத்திலுள்ள ராணுவ முகாம்களுக்கும் போகும் ஸப்ளை தளங்களையும் வெடிகுண்டுகள்மூலம் நொருக்கிவிட்டதாலும்தான் பிலிப்பைன்ஸில் படைகளிறங்குவது சாத்தியமாயிற்று.

ஏற்கனவே ஜப்பானியர்கள் ஈடு செய்யக்கூடாதபடி நேசதேசத்தார்கள் எதிரியின் ஏராளமான கப்பல்களை மூழ்கடித்துவருகிறார்கள். ஆகிலும் எதிரியிடம் போதுமான சாமான் கப்பல் படைகளிருக்கின்றன.

1939-ம் வருஷம் வரையில் 4 மிலியன் டன்களுக்குக் குறைவான ஜப்பானியக் கப்பல்கள் ஜப்பானிய ஸமுத்திரங்களிலும், சீனா கடற்கரையோரமாக, தென்கிழக்கு ஆசியாவிலும் நடமாடிக்கொண்டிருந்தன. ஜப்பானிய கடற்கரை ஓரமாகச் சென்ற போக்குவரத்து இப்பொழுது இருப்புப்பாதை மார்க்கங்கள் மூலமாக நடைபெறுகிறது. நிலக்கரி, இரும்பு உலோகம், மொரும்பு, மற்ற கட்டட தளவாடங்கள் இருப்புப்பாதை மூலம் கொண்டுபோகப் படுவதால், கடற்கரை ஓரமாகச் சென்ற 15 லக்ஷம் டன்களுள்ள கப்பல்களில் மூன்றில் ஒரு பங்கை தூரக்கிழக்கு நாடுகளுக்கு எதிரிகொண்டு போயிருக்கிறான்.

இந்தோசைனா, ஸியாம், பர்மா முதலிய இடங்களில் ஜப்பானிய இஞ்ஜினியர்கள் புதிய இருப்புப்பாதை மார்க்கங்களை அமைத்திருப்பதினாலும் கப்பல்கள் மீதப்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் மஞ்சூரியாவிலும், கொரியாவிலும், வடக்கு சைனாவிலும் 1939-ம் வருஷம் முதல் தொழிற்சாலை, தாவரப்பொருள்கள் உற்பத்தி துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டதால், நிலக்கரி, இரும்பு உலோகம், இரும்புக்கட்டி, எஃகுக்கட்டி, அலுமினியம், சேர்க்கை எண்ணெயில் 15 முதல் 20 மிலியன் பீப்பாய்கள், 40 மிலியன் புஷல்கள்கொண்ட ஸோயா பீன்கள் போன்ற ஜப்பானுக்குத் தேவையான யுத்த தளவாடங்களை உள்நாட்டு உற்பத்தியிலிருந்து பெற்றுவந்தது. யுத்தத்துக்குமுன் இந்த சாமான்களில் பெரும்பாகம் பஸிபிக் கடலையும் அல்லதும் தெற்கு சீனக் கடலையும் தாண்டி ஆயிரக்கணக்கான மைல் வரவேண்டியதாக இருந்தது.

ஜப்பானிய கடற்படை போரில் நேசதேசக்கப்பல்களும் விமானங்களும் செய்யும் தாக்குதல்களுக்கு மிகுதியான பலன்கள் ஏற்படாததற்கு மேலேசொல்லியவைதான் காரணங்கள். ஒரு பாலத்தை தகர்க்கவேண்டுமென்றால் அதன் தூண்களை நொருக்கவேண்டுமென்பதுபோல கடல்மார்க்கங்களில் செல்லும் கப்பல்களின் நஷ்டமானவைகளுக்குப் பதிலாக சுலபமாகக் கப்பல்களைக் கட்டிவிடலாம்.

கப்பல்களுக்கு முக்கியமானவைகள் துறைமுகங்கள், எண்ணெய் நிரப்பும் இடங்கள், சர்பரா தளங்கள், இருகரைகளிலும் ஜப்பானிய கடல் மார்க்கங்களிலும் முக்கியமான ரிலே ஸ்டேஷன்கள். பிலிப்பைன்ஸிலும், வங்காளகுடாக்கடலிலும், மத்திய பஸிபிக்கிலும் உள்ள



கப்பல் தங்குமிடங்களைப் பிடித்துவிட்டபின் நேசதேச விமானங்கள் அடிக்கடி பார்மோஸா, தெற்கு சைனா மார்க்கத்திலுள்ள வெஞ்சௌ, போர்னியோவிலுள்ள பாலிக்பாபனிலுள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் நிலயங்கள், சுமத்ராவிலுள்ள பாலம்பாங், ஜாவாவிலுள்ள படாவியாத் துறைமுகம் முதலியவற்றை பலமாகத் தாக்கிவருகின்றன.

இந்தத் தாக்குதலுக்கு அனுசரணையாக அமெரிக்காவின் B 29 விமானங்கள் வெகுதூரம் சென்று ஜப்பானுக்கருகிலுள்ள முக்கியமான ஸ்தானங்களைத் தாக்கிவருகின்றன. மஞ்சூரியாவிலுள்ள டெயிரனிலுள்ள துறைமுகங்கள், கொரியாவிலுள்ள பூஸான், இருப்புப்பாதை நிலயம், கொரியாக்கடலின் கிழக்குக்கோடியிலுள்ள ஷிமோனோசேகி, மோஜி என்ற துறைமுகங்கள், வடக்கு, மத்திய சைனாவிலுள்ள அநேக துறைமுகங்கள் முதலியவைகள் தாக்கப்பட்டுவருகின்றன. இந்தத் தாக்குதல்கள் மூலம் கப்பல்களில் சாமான் ஏற்றுவதும் இறக்குவதும் தடைபடுகிறது. எதிரி சர்பராக்களை வேறுவழியாகக் கொண்டுபோக வேண்டியிருக்கிறது. கப்பல்கள் மூழ்கடிக்கப்படுவதுடன் சாமான்களைக் கொண்டுபோவதற்கும் கப்பல்களை ஈடுபடுத்தவேண்டியிருக்கிறது.

ஜப்பானிய கடற்படையின் இருஓரங்களிலுமுள்ள துறைமுகங்களும் நிலயங்களும் நேசதேசத் தாக்குதலின் வட்டாரத்துக்குட்பட்டுவிட்டன. பிரிட்டனின் கடல் மார்க்கங்களை நொருக்க உத்தேசித்த ஹிட்லருக்கு இந்த சௌகரியம் ஏற்படவில்லை. நேசதேச விமான தளங்கள் டோக்கியோவுக்கருகில் நெருங்கி அமைக்கப்படும்பொழுது சூபர் பறக்கும்கோட்டை விமானங்கள் வெடிகுண்டுவீச்சை அதிகரிக்கும். மிஸ்ட்டர் சர்ச்சில் சொன்னபிரகாரம் "ஜப்பானிலுள்ள முக்கியமான ஸ்தாபனங்களும் யுத்த தளவாட உற்பத்திசாலைகளும் அதிகமாகத் தாக்கப்படும். இதுதான் ஆசியாவில் எதிரியின் தோல்விக்கும் ஜப்பானியத் தீவுகளின் இறுதித் தோல்விக்கும் இது முற்போக்கான நடவடிக்கையாகும்."

---

## அனாவசியமான பேச்சிற்குத் தடை.

### இந்தியாவில் ஜப்பானிய ஒற்றர்களும் ஏஜெண்டுகளும் கையாண்ட முறைகள்.

**(மதராஸ் யுத்த சஞ்சிகை).**

சமீப காலத்தில் பத்திரிகைகளிலும், அகில இந்தியா ஒலிபரப்பிலும், போஸ்டர்கள் மூலமாகவும், சம்பாஷணையிலும் ராயசத்திலும் பத்திரம் அவசியமென்று வற்புறுத்துவதை மேதாவிகள் அறிந்திருக்கக்கூடும். அதாவது அஜாக்கிரதையான சம்பாஷணையைக் கண்டனம் செய்ய பெரும் முயற்சி செய்யப்பட்டுவருகிறது. எதிரி வங்காள குடாக்கடலுக்கு வெகு தூரம் தள்ளி இருப்பதினால் இவ்விதமான பிரசாரம் அனாவசியமென்றும் மதராஸ் மாகாணத்தில் பேசப்படும் வார்த்தைகளும் கட்டுரைகளும் எதிரிக்கு எட்டாதென்றும் சொல்லக்கூடும்.

இது தவறான அபிப்பிராயம். நேசதேசங்களுக்கும் அச்சு வல்லரசுகளுக்குமுள்ள போக்குவரவு சாதனங்கள் முற்றிலும் நின்றுபோய்விட்டனவென்று பாமர ஜனங்கள் நினைத்தபோதிலும், முக்கியமான தகவல்கள் எதிரிக்கு எட்டுவதற்கு இன்னும் அநேக துறைகளிருக்கின்றன. தபால் பைகள் தவறி விடலாம். அதை எதிரியின் ஏஜெண்டுகள் பொறுக்கித் தகவல்களைத் துரிதமாக தங்களுடைய நாட்டிற்கு அனுப்பிவிடலாம்.

மேலும் நடுநிலைமை வகிக்கும் நாடுகள் வழியாகவும் தகவல்கள் எட்டக்கூடும். வெயர்லஸும் தந்தியும் பயன்படுத்தப்படலாம். அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. நம்முடைய யுத்த முயற்சிகளைப்பற்றிய தகவல்கள் எதிரிக்கு எந்த எந்தத் துறைகள் மூலம் கிடைத்து வருகின்றனவென்று அதிகார வர்க்கத்தார் நன்கு அறிவார்கள். ஆகையால் யுத்தம் சீக்கிரம் முடியவேண்டுமென்று விரும்பும் ஒவ்வொருவரும் நமது யுத்த முயற்சிகளைப் பற்றிய ஒரு தகவலும் எதிரியின் ஸோல்ஜர்களுக்கோ, அல்லது துரோகிகளுக்கோ அல்லது ஏஜெண்டுகளுக்கோ கிடைக்கக்கூடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

#### தகவல்களைத் திரட்டுவது வெகு சுலபம்.

ஒரு இருப்புப்பாதை வழியாக பிரயாணம் செய்தால் ஒரு பெரிய விமான தளம் இருப்பதைக் காணலாமென்று ஒருவர் அவருடைய ஸ்நேகிதருக்கு எழுதினால் பாதகம் ஒன்றுமில்லை

யென்று சாதாரண ஜனங்கள் நினைக்கலாம். இது தவறான எண்ணம். தென் இந்தியாவிலுள்ள ஒரு விமான தளத்தைப்பற்றிய தகவல் கல்கத்தாவிலுள்ள ஒருவனுக்கு யுத்த சம்பந்தமாக ஒரு உதவியையும் அளிக்காதபோதிலும் அங்குள்ளவர் தகவலை அவருடைய ஸ்னேகிதர்களிடம் பரிமாறினால் அது பரவிவிடும். அவர்களில் எதிரியின் ஏஜெண்டும் இருக்கலாம். அவர் தன்னுடைய ஊருக்குத் தகவல் அனுப்புவதின் மூலம் விமான தளம் எந்த இடத்திலிருக்கிற தென்று குறிப்பாக எதிரிக்குத் தெரியவந்துவிடும்.

இதற்கு அடுத்தபடியாக அந்த விமான தளத்தில் என்ன நடைபெற்றதென்று எதிரி அறிய பிரியப்படுவான். காலக்கிரமத்தில் அங்கு எவ்வளவு விமானங்கள் வந்து போகின்றன வென்றும் அதன்மற்ற உபயோகங்களென்னவென்றும் அவன் அறிந்து விடுவான். எதிரி தற்காப்புப் போரை நடத்திவரும்பொழுது நாம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறோமென்று அறிய எதிரி ஆவலுள்ளவனாக இருக்கும் பொழுதும் இந்தத் தகவல்கள் எவ்வளவு மதிப்புள்ளவை என்பதை யோஜித்துப்பாருங்கள்.

விமான தளத்தைப்பற்றிச் சொன்னவையெல்லாம் இந்தியாவின் யுத்த முயற்சி சம்பந்தமான மற்ற நடவடிக்கைகளுக்கும் பொருந்தும்.

யுத்தத்துக்கு அநேக வருஷங்களுக்கு முன் யுத்தப் பிரியமுள்ள இங்கித மற்ற ஜப்பானிய ராணுவ ஆசிரியர்கள் பிரிடிஷ் சாம்ராஜ்யத்துடனும் அமெரிக்காவுடனும் போரைத் துவக்கப்போகிறோமென்று பகிரங்கமாகச் சொல்லி வந்தார்கள். ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் திட்டப்படி, ஜப்பானியர்கள் 1941—42-ம் வருஷங்களில் ஆக்கிரமித்த அமெரிக்க, பிரிடிஷ், டச்சு நாடுகளில் ஏராளமான ஜப்பானிய ஏஜெண்டுகள், பல் டாக்டர்களாகவும், ஒளிப்படம் பிடிப்பவர்களாகவும், விபசாரவிடுதிகளின் ஸ்வான்தார்களாகவும் இருந்து மிகவும் சாதாரணமான வாழ்க்கையை நடத்திவந்திருக்கிறார்கள்.

## போலி நண்பர்கள்.

ஆகையால் பெர்ல் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்கியபொழுது எல்லா நாடுகளிலும் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற ஒற்றர்களின் கூட்டம் ஏராளமாக இருந்துவந்தது. இந்த ஒற்றர்கள்தான் ஜப்பானின் துரிதமான வெற்றிகளுக்குக் காரணம் என்பது உலகமறிந்த விஷயம்.

இந்தியாவிலும் துறைமுக நகரங்களில் ஏராளமான ஜப்பானியர்கள் வசித்து வந்தார்கள். தென்னிந்தியாவிலிருந்த ஜப்பானியர்கள் பெரும்பாலும் வியாபாரிகள். ஜப்பானிலுள்ள பெரிய தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள். மேலும் சார வேலை செய்வதற்கு வியாபாரிகளுக்குத்தான் அநேக சந்தர்ப்பங்கள் உண்டு. அதே விதமாக ஜப்பானியர்களும் அந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டார்கள். ஆகையால் யுத்தத்துக்கு முன் அந்த வியாபாரிகள் மதராஸை விட்டு வெளியேறியபொழுது அவர்களுக்குத் தேவையான தகவல்களை அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யாமல் போயிருப்பார்கள் என்று எண்ணுவது முட்டாள்தனமாகும்.

மேலும் தெற்கு இந்தியாவிற்கு சில ஜப்பானிய கலைஞான தூதர்கள் வந்தார்கள். அவர்கள் கலைஞான சம்பந்தமாகவும், வியாபார சம்பந்தமாகவும் ஒருவிதமான அறிவையும் புகட்டவில்லை. ஜப்பானின் வியாபார முறைகள் நமக்குத் தெரிந்தவைகள்தான். அவர்கள் யாதொரு நோக்கமில்லாமல் விரிவாக பொருட் செலவில் சுற்றுப்பிரயாணம் செய்ததென்பதிலிருந்தே அவர்கள் சாரவேலைக்குத்தான் வந்தார்களென்று நிச்சயமாகச் சொல்லாம். ஜப்பானியப் படைகளின் ஆபீஸர்களும் சாம்ராஜ்யத்திலுள்ள கேந்திரஸ்தானங்களில் மறைமுகமாக அநேக வருஷங்கள் தங்கியிருக்கவும் தயாராக இருந்தார்கள். இங்கு ஒரு சிறு விருத்தாந்தத்தைக் கூறுவோம்.

ஒரு இந்தியர் ஜப்பானுக்கு முதல் முதலாக விஜயம் செய்தபொழுது ஒரு அனுபவம் பெற்றார். கோபியிலுள்ள சுங்கவரி நிலயத்திற்குச் சென்றபொழுது "நீங்கள் எங்கு வசித்து வந்தீர்கள்" என்று ஒரு கேள்வி கேட்டார்கள். அவர் பங்களூர் என்று சொன்னார் "நகரமா படைமுகமா" வென்று ஜப்பானிய அதிகாரி மறுபடியும் கேட்டார். இவ்வளவு சிறிய உத்யோகஸ்தருக்கு இவ்வளவு நுட்பமான அறிவு எவ்விதம் ஏற்பட்டதென்று இந்தியருக்கு வியப்பு உண்டாகிற்று. ஆனால் ஜப்பானியர்கள் எந்த விஷயத்தையும் பரிஷ்காரமாகத் தெரிந்துகொள்ளுவார்கள். ஆகையால் 1941-ம் வருஷத்துக்குமுன் இந்தியா இருந்த நிலைமை பூராவும் ஜப்பானுக்கு அத்துபடியாகிவிட்டது. ஆகையால் நாம் பேசுவதும் எழுதுவதும் கடுமையான தணிக்கைக் குட்படவேண்டுமென்பது நிதர்சனமானது.



## நீர்மூழ்கிகளிலிருந்து இறங்கினார்கள்.

அநேகமாக இந்த மாகாணத்திலிருந்து கிடைத்த தகவல்கள் பழைய நடவடிக்கைகளைப் பொருத்தமட்டில்தான். ஆகிலும் நடப்பு, எதிர்கால நிலைமையை நாம் எவ்விதம் சமாளிப்பது? ஒரு சமயத்தில் வெயர்லஸ் கருவிகளுள்ள இந்தியர்கள் ஜப்பானியரின் ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்து நீர்மூழ்கிகள் மூலம் இந்தியாவிற்கு வந்திருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் ஒரு சிறிய பாரா அச்சிடப்பட்டிருந்தது. ஜப்பானை மோசம் செய்யவேண்டுமென்று தீவிரமான எண்ணம் கொண்டிருந்த இந்த இந்தியர்கள் இந்தியாவிற்கு வந்தவுடன் அதிகாரிகளிடம் சரணடைந்து அவர்களுக்கு ஜப்பான் இட்ட கட்டளையை ஸவிஸ்தாரமாகச் சொல்லிவிட்டார்கள். அவர்கள் இப்பொழுது விடுதலையடைந்துவிட்டார்கள். இந்தியாவில் மற்ற இடங்களில் இறங்கிய ஏஜெண்டுகள் அவ்விதம் செய்யவில்லை. அவர்களைக் கண்டுபிடித்து ராஜதுரோகத்துக்காக அவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள்.

நீர்மூழ்கிகள் மிகவும் உபயோகமுள்ளவைகள். நீர்மூழ்கிகளிலிருந்து எதிரியின் கரைகளில் ஆட்களை இறக்கி விடுவதென்னும் வேலை மிகவும் அபாயம் பொருந்தியதினால் எந்த கடற்படையும் ஜப்பானிய கடற்படையும் கூட அதை மேற்கொள்ளாது. ஆனால் இந்தத் துணிவுகரமான நடவடிக்கையினாலும் சார வேலையினின்றும் அதிக லாபம் கிடைக்குமென்று தோன்றினால் ஜப்பான் அதை மேற்கொள்ளக்கூடும். இந்த அபாயத்தையும் லக்ஷியம் செய்யாமல் ஜப்பான் துணிந்துவிட்டதென்பதை நோக்குங்கால் இந்தியாவில் நடைபெறும் தகவல்களை அறிய அதற்கு எவ்வளவு ஆர்வமிருக்கிறதென்பதை நாம் அறிந்துகொள்ளலாம். அந்த ஏஜெண்டுகள் கடற்படை, ராணுவ விமானப்படை நிலயங்கள், துறைமுகங்கள், இருப்புப் பாதை ஸ்டேஷன்கள், படைமுகாம்கள், முகாம்கள், பண்டகசாலைகள் முதலியவற்றின் சமீபத்தில் வசித்துக்கொண்டு அந்த இடங்களில் வேலை செய்துவருகிறவர்கள் அஜாக்ரதையாக வெளியிடும் வார்த்தைகளைச் செவிகொடுத்து அறிந்துவிடலாம்.

இவ்விதமாகக் கிடைக்கும் தகவல் துணுக்குகளை ஒன்றுகூட்டி விரிவான ஒரு அபிப்ராயத்தை ஜோடிக்க ஜப்பானிய அறிக்கை நிபுணர்களிருந்துவருகிறார்கள். அவர்களுக்கு மேலே சொல்லிய ஏஜெண்டுகள்தான் உதவியளித்து வருகிறார்கள். வெயர்லஸ் கருவியுடன் கூடிய மற்ற ஏஜெண்டுகளும் விமான மூலமாகவும் குடைகள் மூலமாகவும், தரைமூலமாக எல்லைச் சரகத்தைத் தாண்டியும், இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இந்தத் துணிவுகரமான நடவடிக்கைகளும் நல்ல ஆயத்தத்திற்குப் பிறகுதான் கையாளப் பட்டிருக்கின்றன.

தத்வதரிசிகளான ஜப்பானியர்கள் உபயோகமற்ற ஒரு வேலையில் காலத்தையும், தளவாடங்களையும் பொருளையும் செலவிட்டு ஏஜெண்டுகளைத் தயாரிப்பார்களென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?

## 10 சிறந்த விதிகள்.

இந்த ஏஜெண்டுகளைத் தேடிப்பிடிக்க அரசாங்கம் எவ்வளவோ செய்துவருகிறது. அவர்களைக் கைது செய்வதைவிட இந்தியாவைப்பற்றிய ஒரு தகவலும் எதிரிக்குக் கிட்டாதபடி செய்வதுதான் முக்கியத்துவமுள்ளது. ராயசத்திலும் சம்பாஷணையிலும் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையுடனிருந்துகொண்டு இதில் சொல்லப்படும் விதிகளை அனுஷ்டானம் செய்தால் தான் எதிரியின் முயற்சிகளை வீணாக்கிவிடலாம். இதை நாம் சாதித்துவிட்டால் D. தின சமயத்தில் மிஸ்டர் சர்ச்சில் சொன்ன பிரகாரம் எதிரியை பிரமிக்கும்படி செய்துவிடலாம். நாம் அவ்விதம் செய்தால் நேசதேசப் போர்ப்படைகளிலுள்ள அநேகர்களின் உயிரை நாம் காப்பாற்றக்கூடும். ஏற்கனவே நீடித்துவிட்ட யுத்தத்தையும் சீக்கிரத்தில் முடிவு செய்ய ஹேதுவாகயிருக்கும்.

(1) ஒருவருடைய இங்கிதத்தை அறிந்தாலொழிய அவரிடம் ஒரு தகவலையும் சொல்லக் கூடாது.

(2) யுத்த முயற்சிக்கு அவசியமிருந்தாலொழிய ஒருவருக்கும் ஒரு தகவலையும் கொடுக்காதே.

(3) யுத்தத்துக்கு அவசியமானதற்கு அதிகமாக ஒரு தகவலையும் அவருக்குக் கொடுக்காதே.

(4) யுத்த முயற்சிக்கு உபயோகப்படும் சமயத்தில்தான் அந்தத் தகவலை அவனுக்குக் கொடுக்கவேண்டும்.

(5) குப்பைக் கூடையிலுள்ள காகிதத்தின் விஷயங்கள் தவறாக உபயோகப்படுத்தப் படுமென்பதை புறக்கணித்துவிடக்கூடாது.

(6) தகவலறிவதற்கு எதிரிக்குள்ள மூலாதாரங்களைக் குறைத்து மதிக்கக்கூடாது.

(7) பிறரைவிட உனக்கு சில விஷயங்கள் தெரியுமென்று வீண் அகம்பாவம் கொள்ளக் கூடாது.

(8) சேவைப் படையினராக இருந்தாலும் சரி, பொதுமக்களாக இருந்தாலும் சரி, அபாயகரமான பேச்சுக்களை அவர்கள் பேச ஆரம்பித்தால் கண்டித்துவிடத் தயங்காதே.

(9) ஒட்டுக் கேட்கிறவர்களின் அபாயத்தைக் குறைத்து மதிக்காதே.

(10) உன்னுடைய எழுத்துக்களுக்கும் உன்னுடைய பேச்சுக்கும் ஒவ்வொருவரும் தானே தணிக்கை செய்யவேண்டும். —

---

**மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் கல்லூரி, புதுக்கோட்டை டெக்னிகல் டிரெயினிங் சென்டரில் பயிற்சிக்கு காலியாயுள்ள ஸ்தானங்களை காண்பிக்கும் சிட்டை.**

| | | | |
|---|---|---|---|
| எலக்டிரிஷியன்கள் | ... | ... | 14 |
| பிட்டர்கள் | ... | ... | 20 |


## 'வி' டயரி-1945.

(குறிப்புப் புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்குமுந்துங்கள்! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம் :—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

**புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.**

பிரஸங்கம் 229. (3-வது பிரிவு).

23-12-44 முனிஸிபல் ஆபீஸ் ... மாலை 6.00

24—12—44 முதல் 2—1—45 வரை ... கிறிஸ்துமஸ் விடுமுறை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—30-12-44.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் ஜனவரி மீ 6வ [ந. 230


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXXX.

## ஸ்வதந்திர விளக்குகள்.

### மன்னரின் கிருஸ்துமஸ் பிரசங்கம்.

உலகத்தில் சந்தோஷமும் ஒற்றுமையும் நிலவவேண்டும். நம் மத்தியிலிருந்து யுத்தத்தை ஒழிக்கவேண்டும். இதற்காக எல்லா நாடுகளிலும் ஒழுங்கும் ஸ்வதந்திரமும் புத்துயிர் பெற்றெழ வேண்டுமென்று நாம் கிருஸ்துமஸ் தினமாகிய இன்று வேண்டுகிறோம். கிருஸ்துமஸ் செய்தியின் உத்தேசமான உலகமளாவிய ஒரு தர்மத்தை அடைவதற்கு மனித சக்தியைக் கொண்டு நாம் குறுக்கு வழியைக் காண முடியாதென்றாலும் அது இன்னமும் நமது இறுதி லக்ஷியமாகவே இருந்து வருகிறது. இத்தனை வருஷங்களாக கஷ்டங்களையும் இன்னல்களையும் நாம் அனுபவித்த பிறகு இப்பொழுது நமது லக்ஷியத்திற்கு இன்னும் சமீபத்தில் சென்றுவிட்டதாகவே நான் கருதுகிறேன்.

1945-ல் நமக்கு என்னென்ன நேரிடப் போகிறதென்பது நமக்குத் தெரியாது. ஆனால் கடந்த காலத்தில் நாம் அனுபவித்த கஷ்டங்களை நோக்கினால் நமது கஷ்டங்களெல்லாம் நாளாவட்டத்தில் குறைந்து வருகின்றன.

முதலில் 1914-லிலும் பின்னர் 1939-லிலும் ஜெர்மானியர்கள் ஐரோப்பிய நாகரீக விளக்குகளை அணைத்துவிட முற்பட்டார்கள். அவ்விளக்குகளெல்லாம் மீண்டும் ஏற்றப்பட்டுவருகின்றன. யுத்தம் மூடுபனிபோல் சூழ்ந்திருந்தபோதிலும் அவ்விளக்குகளில் சில ஒளி வீச ஆரம்பித்துவிட்டன.

கவலை போய் நம்பிக்கை வந்திருக்கிறது. அடுத்த கிருஸ்துமஸுக்குள் விடுதலைப் போராட்டம் ஈஸ்வர கிருபையால் முடிந்துவிடுமென்று எதிர்பார்ப்போம்.

சாம்ராஜ்யம் முழுவதிலும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் எல்லாரும் கடும் உழைப்பினாலும், தியாகத்தினாலும் வெற்றியைச் சீக்கிரத்தில் பெறுவதற்கு நமக்கு உதவி செய்திருக்கிறார்கள். நாம் பல ஆபத்துகளை அனுபவித்திருக்கிறோம். பொது உழைப்பில் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்திருக்கிறோம். ஏனெனில் உலக நாடுகளெல்லாம் ஒற்றுமையுடன் வாழ, அதிக உழைப்பும், பக்தியும், பொறுமையும், சகிப்புத் தன்மையும் வேண்டும்.

ஜெர்மனி—ஜப்பானின் தோல்வியுடன் நமது வேலையின் முதல் பாகம் முடிவடையும். "கொடுங்கோன்மைக்குட்படாத" ஸ்வதந்திரமக்களடங்கிய உலகத்தை அமைப்பதே நமது இரண்டாவது காரியம். இந்த கனமான பாதையில் நமக்கு மனித சமூகத்தின் அசைக்க முடியாத மனவுறுதியும் ஸ்வதந்திர ஜோதியும் துணையாக இருக்கின்றன. நாம் நிச்சயமாக லக்ஷிய சித்தியைப்பெறுவோம்.

# சேமிப்புக் கொள்கை.

1944-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 15-ம் தேதியன்று ஜார்ஜ் டவுன் ஸெயிண்ட் மேரி ஹாலில் காப்டன் G. T. B. ஹார்வி ஆற்றிய சொற்பொழிவு. தேசத்தின் செலவுச் செட்டு விஷயமாக மதராஸ் ஜனங்களின் மனதை இழுக்க பலமான இயக்கம் செய்யப்பட்டதின் இறுதியில் நான் பேசுகிறேன்.

சேமிப்புத் திட்டம் யுத்த நடவடிக்கையென்று சிலர் சொல்லுகிறார்கள். இதுவும் ஒருவிதமான யுத்த முயற்சிதான். இதற்கும் மதராஸ் ஜனங்கள் நன்றாக அனுவாதம் செய்திருக்கிறார்கள்.

மத்திய சேமிப்பு இயக்கத்தினுடையவும் அல்லது மதராஸ் மாகாண தற்காப்புக்கடன் கமிஷனருடையவும் நோக்கம் இது இல்லை என்று நான் சொல்லுவேன். அதன் தலைவர் நமக்கு உற்சாகத்தையும் தெளிவான அபிப்பிராயங்களையும் அடிக்கடி ஊட்டியிருக்கிறார். சேமிப்பு பக்ஷத்தின் கடைசிக் கூட்டமான இன்றைய‍க் கூட்டத்தில் அவர் தலைமையும் வகித்திருக்கிறார்.

### சிலாக்கியமான எண்ணம்.

மதராஸ் மாகாணத்தில் இவ்வருஷத்தில் 20 கோடி ரூபாய்களைச் சேமித்துவிடுவது தான் இதன் லக்ஷியமில்லை. இதன் லக்ஷியம் அதைவிட உயர்வானது, முக்கியத்துவமுள்ளது. செலவில் செட்டாக இருக்கும் பழக்கத்தை இப்பொழுதும் எக்காலத்துக்கும் அடுத்துவரும் சில வருஷங்களுக்கும் ஜனங்கள் அனுஷ்டிக்கவேண்டுமென்ற ஒரு முக்கியமான தேசியக் கொள்கையை ஊட்டுவதுதான் முக்கியமான எண்ணம். வருங்காலத்தில் யுத்த நிலைமையிலிருந்து சமாதான பொருளாதார நிலைமைக்கும் நாம் திருத்தியமைத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது ஒருபுரத்தில் யுத்த தளவாடங்களுக்கு மிகுதியான தேவை ஏற்பட்டிருக்கிறது. அவைகளை உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஏராளமான ஊதியம் கொடுத்துவருகிறார்கள். மற்றொருபுரத்தில் பொதுஜனங்களுக்குரிய பொருள்கள் மிகவும் குறைந்துவிட்டன. செலாவணி பெருவாரியாக அதிகரித்துவிட்டது. செலாவணிப் பெருக்கைப்பற்றி நான் பின்பு விவரிக்கிறேன்.

இப்பொழுது இந்த இயக்கத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். நீங்கள் அதிக தியாகம் செய்யவேண்டியதில்லை. பணத்தை பத்திரமாக முதலீடு செய்து, சிறிது வட்டியுடன் கொஞ்ச காலத்திற்குப்பின் அதற்கு உண்மையான பொருமானம் ஏற்படும் பொழுது அதைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறோம். ஆகையினால் தான் நகரம் பூராவிலும் "சேமிப்பு செய்வது புத்திசாலித்தனம்" என்ற சுவர் படங்கள் காணப்படுகின்றன.

### அடிப்படையான காரணங்கள்.

என்ன நேரிட்டிருக்கிறது. மிலியன்கள் கணக்கான பவுன்களை ஆகாயம், நகரங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிகள் முதலியவற்றில் வெடிகுண்டுகளை அமைக்க விநியோகம் செய்திருக்கிறோம். உலகத்தின் உண்மையான ஐசுவரியமான, (இது பொருள் அல்ல), மனிதர்களின் தொழிற் சக்தி, மனிதர்களின் புத்தி சக்தி, உலகத்தின் இயற்கை பொருள்கள் எல்லாம் பொதுஜனங்களின் அமைதிக்கும் தொழில் அபிவிருத்திக்கும் உபயோகப்படவேண்டியதற்குப் பதிலாக ஒரே புகைமயமாகச் சென்றுவிட்டன.

வெற்றி என்ற சிரமசாத்தியமான, எளிதில் அழிவுபெறக்கூடிய ஒரு லக்ஷியத்தை அடைய முயன்றுவருவதினால் ஜனங்களின் க்ஷேமத்திற்குரிய கப்பல் வசதிகள், பொதுஜன சாமான்கள், போக்குவரத்து சாதனங்கள், குழந்தைகளின் போஷணை, சுகத்துக்குரிய ஒளஷதங்கள், இன்னும் அநேக போகபோக்கியங்கள் எல்லாம் குறைவுபட்டுவிட்டன. இதைவிட இன்னும் அநேக கெடுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

### செலாவணி அதிகரிப்பு.

இந்தக் குழப்பமான நிலைமைக்காக பொருள் ஏராளமாகச் செலவிட வேண்டியிருந்ததால் உலகத்தின் பண்டம் மாற்றுதலில் ஒரு அம்சமான பணமும் செலாவணியும் அபாரமாக அதிகரித்துவிட்டன. அதற்கு மற்றொரு அம்சமான சாமான்களின் பொருளாதார சமத்வம் குறைந்து அபாரமாகக் குறைவுபட்டுவிட்டன. ஆகையால் அவைகளை வாங்குவதென்றால் அவைகளின் மதிப்புக்கு மிகவும் அதிகமான பொருளைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. சுருங்கச் சொன்னால் சாமானின் உண்மையான பொருமானம் நிலைபெறாமல் அதன் விலை மிகுதியாக அதிகரித்திருக்கிறது.



ஆகையால் பணப்பெருமை பெற்றிருக்கும், அல்லது அறிவீனர்களும், சுயநலம் கருதுகிறவர்களுமான ஜனங்கள் ரூ. 2,500 பொருமானமுள்ள மோட்டாரை ரூ. 12,000-க்கும் ரூ. 20,000 பொருமானமுள்ள சொத்தை 50,000 ரூபாய்க்கும், ரூ. 45 பொருமானமுள்ள புடவையை ரூ. 120-க்கும் வாங்கிவிடுகிறார்கள். அவ்விதம் செய்வது தேசாபிமான மற்றதென்றும் நிச்சயமாக முட்டாள்தனமான காரியமென்றும் அவர்கள் சிறிதுகூட அறியவில்லை. ஏன் தேசாபிமானமற்றவர்களென்றால், அனாவசியமான ஒரு பொருளை அவர்கள் அதிக விலை கொடுத்து வாங்குவதினால், தேசத்தினுடைய தேவைக்கும் தேக ஆரோக்கியத்துக்கும் அத்யாவசியமானதும் ஏழை மக்களுக்கு உரியதுமானதுமான பொருள்களின் விலை அதிகரித்துவிடுகிறது. விலை அதிகரிப்பு திட்டம் நன்றாய் போஷிக்கப்படுகிறது.

அவர்கள் முட்டாள்கள் என்று சொல்லுவது ஏனெனில் அவர்கள் பொருளுக்குத் தகுதியான மதிப்பைப் பெறவில்லை. 1944-ம் வருஷ முடிவில் அவர்கள் நகைகளிலோ, துணிமணிகளிலோ அல்லது வீடு, நிலம் முதலியவற்றிலோ பொருளை முதலீடு செய்தால், ஒன்று இரண்டு வருஷங்களுக்குப்பின் யுத்த தளவாட உற்பத்தி குறைந்து சம்பளப் பட்டியல் தொகை குறைந்து, பொதுஜனங்களுக்குரிய பொருள்களின் மிகுதி ஏற்பட்டு, ஸப்ளை டிமாண்டின் சம்பந்தத்தினால் விலைவாசிகள் குறைந்துவிடும்பொழுது, அதே பொருள்களை அவர்கள் இன்று நிலைபெறும் விலையின் 50, 40, 30 சத விகிதத்திற்கு வாங்கிவிடலாம். இன்று பொருளைச் செலவிட்டவர்கள் அவர்களுடைய அவசரத்தினால் ஏற்பட்ட நஷ்டத்தைப்பற்றி அப்பொழுது துக்கிக்கவேண்டியதாகத்தானிருக்கும்.

### நமது கடமை.

செலாவணிப் பெருக்கு, கள்ள வியாபாரம் முதலியவற்றைப்பற்றி சரியான அபிப்பிராயமில்லாதிருப்பதை நிவர்த்திக்கும் முறைகளைப்பற்றி சென்ற 15 நாட்களாக நீங்கள் அதிகம் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நிர்வாகம் தங்களுடைய பூரா சக்தியையும் உபயோகித்து ஸ்டாண்டர்ட் பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அநியாய லாபத்தடை சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். ஆதாய வியாபாரத்தைத் தடுத்து இருக்கிறார்கள். மேலும் அவர்களிடம் உள்ள உபரிப் பொருளுக்கு பொருமானமுள்ள சாமான்களை கண்டுபிடித்து வழங்கிவருகிறார்கள். அதாவது சுயநலம் கருதி மிகுதியான விலைக்கு வாங்காமல் நியாயமான முதலீடு செய்யவேண்டுமென்று சொல்லிவருகிறார்கள்.

அதாவது பொதுமக்களின் செவழிக்கும் சக்தியைக் குறைக்க அவர்கள் முயலுகிறார்கள். செலாவணியைப் பெருக்கி விலைவாசியை அதிகரித்து தேசத்தின் பொருளாதாரத்தில் சமத்வத்தைக் குறைத்துவிடுவதைத் தடுப்பதன்மூலம் செல்வப் பெருக்கு என்ற பேயின் அட்டகாசம் குறைந்துவிடும். அவ்விதம் செய்யாவிடில் இந்தியாவின் புதிய ருசிகரமான எதிர்காலத்திற்கு சமத்துவமில்லாத உள்நாட்டுப் பொருளாதார நிலைமை இன்னல்களை உண்டு பண்ணி அதை நிலைகுலைத்துவிடும். ஆகையால் தேசத்தின் நலத்தைக் கோரி நாம் இப்பொழுதே நடவடிக்கைகளைத் துவக்கவேண்டும்.

நாம் ஏற்பாடு செய்திருக்கும் ஏராளமான சேமிப்புத் திட்டங்கள் ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் பொருளுக்கு பத்திரமும், நியாயமான வட்டியும், நல்ல வெகுமதியும் தருகின்றன. மேலும் தேசியச் செலவு செட்டு என்ற வகையில் ஒரு சிறந்த போதனையை அளிக்கின்றன. யுத்தங்களுக்குப்பின் நமக்கு அனுபவ சித்தமான, விலை உயர்வு, செலாவணிப் பெருக்கு, நஷ்டங்கள் முதலியவற்றைத் தடுக்க இந்த முறையையே அநேக தேசங்கள் இதற்குமுன் கையாண்டுவந்திருக்கின்றன. இங்கிலாந்தில் இப்பொழுது 3 லக்ஷம் சேமிப்பு கோஷ்டிகளிருக்கின்றன.

### சேமிப்பு முறைகள்.

முடிவாக சேமிப்பு செய்வது புத்திசாலித்தனம் என்று சொல்ல விரும்புகிறேன். இதை நிர்வாகம் கட்டாய முறையாகச் செய்தாலும் அதை நான் முழுமனதுடன் வரவேற்பேன். அது வேறு விஷயம்.

ஆகையால் உபரிப்பொருள் உள்ள ஆடவர்களும், ஸ்திரீகளும், ஏராளமான பொருளுள்ள வியாபார ஸ்தலங்களும், பாங்கிகளும் பொருளை அரசாங்கத்தினிடம் முதலீடு செய்து 3 சத விகிதம் வட்டியை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவ்விதம் செய்தால் அவைகள் செலாவணியிலிருந்து குறைவுபடும். அவைகளை யுத்தக் கடன் பத்திரங்களிலும், பரிசு பத்திரங்களிலும், சேமிப்புப் பத்திரங்களிலும் போடவேண்டும். ஐந்து வருஷங்களுக்குமுன் இப்பொழுது கிடைத்துவரும் ஊதியத்தில் பாதிகூட கிடைக்காது என்று எண்ணி, இப்பொழுது ஏராளமான ஊதியம் பெற்றுவரும் ஏழை மக்களும் இப்பொழுதிருக்கும் பொருமானத்திற்கு சாமான்களை வாங்கக்கூடாது. அவைகளை சேவிங்க்ஸ் ஸ்டாம்புகளையும் பிறகு சேமிப்பு

பத்திரங்களையும் வாங்க உபயோகிக்கவேண்டும். அதைத் திருப்பிப் பெறும்பொழுது அதிக வட்டி கிடைக்கும். அப்பொழுது அதன் பொருமானம் அதிகரிக்கும். அவ்விதம் செய்யாவிடில் சமத்துவமில்லாத பொருளாதாரமுள்ள தேசங்கள் யுத்தத்துக்குப்பின் சீர்கெட்டுப் போகும் சுழலில் அகப்பட்டு அதோகதியை அடைந்துவிடுவார்கள்.

உங்களிடம் பொருளிருப்பதினால் இந்த அனுவசியமான பொருளை வாங்கித்தான் ஆக வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் அது சரியான நடவடிக்கையல்ல.

நீங்கள் செய்வது புத்திசாலித்தனமல்ல. உங்களுடைய தேசத்திற்கு நீங்கள் உதவி செய்யாமலிருக்கக்கூடாது. கள்ள விலைக்குச் சாமான்களை வாங்க நீங்கள் பிரியப்படமாட்டீர்கள். மேலும் உங்களுடைய குழந்தைகள், தேசத்தின் எதிர்கால க்ஷேமத்தைக்கோறி நீங்கள் செய்துவரும் செல்வ நிலை சம்பந்தமான யோசனைகளெல்லாம் சமாதானம் வரும்பொழுது திடீரென்றோ அல்லது சாவதானமாகவோ, நிச்சயமாக நிலைமை மாறிவிடும்பொழுது, கவிழ்ந்துவிடும். ஆகையால், சேமிப்பு செய்வதுதான் புத்திசாலித்தனம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 18—12—44 (திங்கட்கிழமை). | பிரிடிஷ் எட்டாம்படை இதாலியில் செனியோ நதியைத் தாண்டிற்று. செம்படை செக் எல்லையை புடாபெஸ்டுக்கு வடகிழக்கில் கடந்தது. |
| 19—12—44 (செவ்வாய்க்கிழமை). | பிரிடிஷ் படைகள் மாண்டலேவுக்குத் தெற்கில் 20 மைல்களுக் கப்பாலிலுள்ள கிண்டாவை ஆகிரமித்தன. |
| | அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டத்தில் லெயிடியிலுள்ள வாலன்ஷியாவைப் பிடித்தார்கள். |
| 20—12—44 (புதன்கிழமை). | நேசதேசப் படைகள் ஜெர்மானியரிடமிருந்து மோன்ஷாவைத் திருப்பிப் பிடித்தார்கள். |
| 21—12—44 (வியாழக்கிழமை). | நேசதேசப் படைகள் பர்மாவில் காலினைப் பிடித்தன. |
| 22—12—44 (வெள்ளிக்கிழமை). | பிரிடிஷ் 8-வது சேனை இதாலியில் பாக்னகாவெல்லோவைப் பிடித்தது. |
| | நேசதேசப் படைகள் பர்மாவில் டிகியாங்கைப் பிடித்தன. |
| 23—12—44 (சனிக்கிழமை). | நேசதேசப் படைகள் பர்மாவில் டான்பெயிக்கைப் பிடித்தன. |
| 24—12—44 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசப்படைகள் ஜெர்மன் முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டன. |
| 25—12—44 திங்கட்கிழமை. | மிஸ்டர் சர்ச்சில் கிரேக்க பிரச்னையைத் தீர்க்க ஆதென்ஸுக்குச் சென்றார். |
| | மாக்ஆர்தரின் லெயிடிப் போர் முடிந்தது. |
| 26—12—44 செவ்வாய்க்கிழமை. | ருஷ்யப்படைகள் புடாபெஸ்டின் தெருக்களுக்குள் ஊடுருவிச் சென்றன. |
| 27—12—44 புதன்கிழமை. | நேசதேசப்படைகள் ஆர்டெனிஸ் பகுதியில் ஜெர்மனியின் முன்னேற்றத்தைத் தடுத்தன. |



### (A)-முக்கியமான சம்பவங்கள்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 29—12—44 வெள்ளிக்கிழமை. | நேசதேசப்படைகள் ஆர்டெனிஸ் பகுதியில் ஜெர்மன் படைகளைப் பின்புறமாகத் தள்ளின. |
| 30—12—44 சனிக்கிழமை. | நேசதேசப்படைகள் பர்மாவிலிருந்து சீன எல்லைக்குள் நுழைந்தன. |
| | புடாபெஸ்டு ருஷ்ய ராணுவத்தினிடம் சரணடைய மறுத்தது. |
| 31—12—44 ஞாயிற்றுக்கிழமை. | ருஷ்யர்கள் ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்டுக்குள் நுழைந்தார்கள். |
| | நேசதேசப்படைகள் பெல்ஜியத்தில் புதிய தாக்குதலைத் துவக்கின. |
| 1—1—45 திங்கட்கிழமை. | நேசதேசப்படைகள் பர்மாவில் ராதெடாங்கை ஆக்கிரமித்தன. |
| | நேசதேசப்படைகள் லக்ஸம்பர்க் ஜெர்மன் எல்லைச் சரகத்திலுள்ள எக்டர்னக்கைத் திருப்பிப் பிடித்தன. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.**—லக்ஸம்பர்க்குக்குள்ளும் பெல்ஜியத்திற்குள்ளும் ஜெர்மானியர் முன்னேறியது தடைப்பட்டது. ம்யூஸ் நதியை அடைய முயன்ற எதிரியின் படைகள் துறத்தியடிக்கப்பட்டன. ஆர்டெனிஸிலிருந்த நெருக்கடி ஓய்ந்துவிட்டது. அமெரிக்க 1-வது படையை ஜெர்மானியர் பாஸ்டோக்னியில் வளைத்துக்கொண்டிருந்தார்கள். சார் பிரதேசத்திலிருந்து அங்கு கொண்டுபோகப்பட்ட அமெரிக்க 3-வது படை அதை டிஸம்பர் 28-ம் தேதியன்று விடுவித்தது. அமெரிக்க 3-வது சேனை ஜெர்மனியின் தெற்கு பார்சுவத்தில் தாக்கி வருகிறது. அமெரிக்க 1-வது படை எதிரியின் வடக்கு பார்சுவத்தில் தாக்கிவருகிறது. முதல் வாரத்தில் ஜெர்மனியின் முன்னேற்ற உப்பல் 2,000 சதுர மைல்களாக இருந்தது 25 சத விகிதம் இப்பொழுது குறைந்துவிட்டது.

சாரகுமைன்ஸுக்கும் ரைன் நதிக்கும் மத்தியிலுள்ள அமெரிக்க 7-வது படையை ஜெர்மானியர்கள் பதில் தாக்குதல் செய்கிறார்களென்று தகவல் கிடைத்திருக்கிறது.

24—12—44 முதல் 4—1—45 வரையில் கீழ்கண்ட இடங்கள் பிடிக்கப்பட்டன :—

ஜெர்மனியின் வடக்கு பார்சுவம்.—விண்டன், மாபாக், ஆம்கொமெண்ட், அமோனினிஸ், மாலம்பிரி.

ஜெர்மனியின் தெற்கு பார்சுவம்.—ஸெயிண்ட்வித், ஸ்டாவெலட், சௌமாண்ட், மார்டலாங்க், ஹெடர் ஷீட், மான்ஹே, லா கிளீஸ், மாஸ்ட்ராப், போனல், இன்சன்பார்ன், மெஸ்னிள், ஹோமென், ராக்போர்ட், எக்டர்னக், ஹூபர்மாண்ட், பானரு, மாயிர்சி, ரெமாக்னி, செனோக்னி.

பாஸ்டோக்னி பிராந்தியத்தில் எதிரிகள் மார்வீ, வாக்ஸ் லெஸ் ரோசியரிஸ், லிப்ராமாண்ட் முதலியவற்றைக் கைப்பற்றினார்கள். நேசதேசப்படைகள் சொனன்சாம்லைப் பிடித்தனர்.

**கிழக்குப் போர்முனை.**—செகோஸ்லோவாகியாவுக்குள் சென்றுகொண்டிருக்கும் ருஷ்யப் படைகள் ரிமாஸாம்பாட், பெலட், லிங்க்வா முதலியவற்றைப் பிடித்தன. ஹங்கேரியா எல்லைக்குச் சமீபத்திலுள்ள முக்கியமான இருப்புப்பாதை ஜங்ஷனான லொஸாங் கூடிய சீக்கிரம் விழுந்துவிடும். இபாலி, ஹொரான் நதிகளுக்கு மத்தியிலுள்ள பிரதேசத்திலிருந்து எதிரிகள் துரத்தியடிக்கப்பட்டார்கள்.

வீயன்னவை நோக்கி ருஷ்யர்கள் இரண்டு பகுதிகளாக முன்னேறுகிறார்கள். ஒன்று டான்யூப் நதி வளைவுக்குமேல் ஹொரான் நதியை ஒட்டி பிராடிஸ்லாவா வெளியை நோக்கி முன்னேறுகிறது. மற்றொன்று வெர்டிஸ் மலைகளைச் சுற்றிக்கொண்டு கியாரை நோக்கி

முன்னேறிவருகிறது. ஹங்கேரியில் செம்படை கீழ்கண்ட இடங்களைப் பிடித்தது. கிஸ்டெரெனியி, எஸ்டர்கோம், ஸல்கோடார்கென், பெல்ஸொகால், கெலன்பெல்ட், ஆர்பாட், ரெகோஸ்டாவா, ஆண்ட்ராஸி, போல்கிராட். ஹங்கேரியின் தலைநகரமான பூடாபெஸ்டில் கடும்போர்கள் நடைபெறுகின்றன.

இதாலி.—பேயன்ஸாவுக்கு வடக்கில் கஸோலி நாவிக்ளியோவுக்குக் கிழக்கில் எதிரியின் எதிர்ப்பு நின்றுவிட்டது. செக்கியே பள்ளத்தாக்கு வழியாக லுக்காவை நோக்கி ஜெர்மனியின் தாக்குதல் வேகம் தணிந்துவிட்டது. ஜெர்மனி பிடித்த பார்ஸா என்னும் நகரத்தை நாம் திருப்பிப் பிடித்துவிட்டோம். எட்டாம் படை ரோஸட்டாவுக்குள் புகுந்தபின் ஸினியோ நதியிலிருந்து அபினைன்மலை வரையில் 20 மைல்கள் கொண்ட போர்முனையில் நிலைபெற்றிருக்கிறது.

பஸிபிக்.—லேயிடிப் போர் முடிந்தது. இந்த நடவடிக்கையில் ஜப்பானுக்கு 1,17,000 பேர்கள் நஷ்டமாகின.

டோகியோ, மஞ்சூரியாவிலுள்ள முக்டன் முதலிய இடங்கள் வெடி குண்டுகளால் தாக்கப்படுகின்றன.

சைனா.—சீனர்கள் குவாங்க்ஸி மாகாணத்தில் ஜப்பானியர் வசமுள்ள ஹோகி நகரத்தை சமீபித்து விட்டார்கள்.

பர்மா.—வட பர்மாவில் 30,000 சதுர மைல்கள் கொண்ட பிரதேசம் விடுவிக்கப்பட்டது. ஸிண்ட்வினிலிருந்து ஐராவதிவரையிலுள்ள காடுகளைத் தாண்டியபின் IV-வது இந்தியப் படைப்பகுதி மாண்டலேயிலிருந்து 100 மைல்களிலுள்ள கான்பாலுவை அடைந்தது. பிரிடிஷ் 36-வது டிவிஷன் படைகள் இராவதி நதியிலுள்ள ஜப்பானியரை சுத்தி செய்து வருகிறது. அமெரிக்காவில் அமுலுக்குட்பட்ட சீனப்படை பாமோவிலிருந்து பர்மா ரஸ்தாவுக்கு முன்னேறும் பொழுது சீன எல்லையைத் தாண்டி லாய்விங்கை அடைந்துவிட்டது. ஸிண்ட்வின் நதி பிரதேசத்திலுள்ள 14-வது சேனை காலிவாவிலிருந்து முன்னேறி யேயூவை அடைந்துவிட்டது. யேயூ மாண்டலேக்குப்போகும் இருப்புப்பாதைக்கு முக்கிய ஸ்தானம். அது மத்திய பர்மாவிலுள்ள நெல் களஞ்சிய பிரதேசத்திற்கு மேற்கு எல்லையிலுள்ளது. அரகானில் 14-வது சேனையைச்சேர்ந்த படைகள் மாயூ தீப கற்பத்தின் தெற்குக் கோடியிலுள்ள பௌல் முனையை அடைந்துவிட்டன. படைகள் அக்யாப் தீவிலிறங்கிவிட்டன.

கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. பூதேடாங்குக் கருகில் காண்டாங்க், மாயூ நதியிலுள்ள ராதேடாங்க், கான்பாங்க், வந்தோ, நாம்கரன், காலின், டிகியாங்க், அரகானில் டான்பேயிக், பாங்க்கான்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**17—12—44.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரயில்வே இலக்குகள்—ரைன் சமவெளி (Rhine).

துருப்பு முகாம்கள் பீரங்கி ஸ்தாபனங்கள்.—ஸார்பிரக்கன் (Saarbrucken).

ரயில் ரஸ்தா இலக்குகள்.—எதிரி அரண்களுக்குப் பின்.

இலக்குகள்.—ஸைலீஷியா (Silesia).

ரயில்வேக்கள்.—ஆஸ்திரியா (Austria).

போக்குவரத்து ஸாதனங்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

கடற்படை தளம்.—லாடிவ்யாவிலுள்ள லிபா (Libau).

இரவு.—ரயில்வே ஜங்ஷன்—ஜெர்மனியிலுள்ள உல்ம் (Ulm).

### தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

### பர்மா (Burma).

எதிரி முனைகள், பட்டணப் பிரதேசங்கள், துருப்பு முகாம்கள்.—சாக்டா (Chauktaw)

சேமிப்புகள் கட்டடங்கள்.—மாண்டலே (Mandalay), லாஷியே (Lashio) ரயில்வே.

இதர இலக்குகள்.—ரங்கூன் (Rangoon), புரோம் (Prome).

ஜப்பானிய முகாம்.—ஹெஹோ (Heho).

போக்குவரத்துகள் -வட பர்மா (N. Burma)

**18—12—44.** (திங்கட்கிழமை).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ஜெர்மன் ரயில்வே—டூயிஸ்பர்க் (Duisberg).



சேனைகள் யுத்த தளவர்டங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.-கொலோன் (Cologne), காப்லென்ஸ் (Coblenz), மெய்ன்ஸ் (Mainz), மேற்கு ஜெர்மனியில் இதர இடங்கள்.

எண்ணெய்க் கிணறுகள்.—பிலெச்சாமர் (Blechhammer), ஓடெஸ்டால் (Odestal), ஸெக்கோஸ்லோவாக்கியாவிலுள்ள மொர்ஸ்கா (Moraska), ஆஸ்ட்ராவா (Ostrava).

ரயில் ரோடுகள்.—ஆஸ்திரியாவிலுள்ள ஸால்ஸ்பர்க் (Salzburg).

இலக்குகள்.—வெல்ஸ் (Wels).

ரயின் லயன்கள்.—ரோஸன்ஹிமிற்கும் (Rosenheim), வெல்ஸிற்கு (Wels)மிடையில்.

எதிரி போக்குவரத்துகள்.—தெற்கு யூகோஸ்லாவியா.

இலக்குகள்.—வட இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

எதிரி போக்குவரத்துகள்.—இதாலியில் யுத்த அரங்கங்களுக்குப் பின்.

பீரங்கி ஸ்தாபனங்கள்.—எதிரி ஆக்கிரமித்த யூகோஸ்லாவியா (Yugoslavia).

ரயில் தளங்கள்.—வியென்னா (Vienna), யூகோஸ்லாவியா (Yugoslavia).

இலக்குகள்.—வியென்னா (Vienna) பிரதேசம், ஸொப்ரான் (Sopron).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—கப்பல்கள்.—பால்டிக் துறைமுகம் டினிமா (Gdynia)?

இலக்குகள்.—நூரம்பர்க் (Nuremburg) & மன்ஸ்டர் (Munster).

விமான நிலயங்கள்.–1 எதிரி அரண்களுக்குப் பின்.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய சைனியங்கள்.-பிலிப்பைன்ஸிலுள்ள மின்டோரோ (Mindoro) தீவு.

விமானத் தொழிற்சாலை நாகோயா (Nagoya).

### பர்மா (Burma).

இலக்குகள்.—ரங்கூன் (Rangoon), மாண்டலே (Mandalay) ரயில்வே.

கிராமம்.—வுந்தோவிற்கருகில் (Wuntho).

டேஸ்.—(Taze).

படகுகள்.—யெனங்யாங் (Yenangyang).

ஸ்டோர் பிரதேசங்கள்.-லாஷியோ (Lashio)வுக்கு வடமேற்கு, டாகாங் (Tagaung).

**19—12—44.** (செவ்வாய்க்கிழமை).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரஸ்தா, ரயில் ஜங்ஷன்கள்.-டிரையர் (Trier) முதல் ஓமண்டு (Oemund) வரையில்.

எண்ணெ கிணறு ஸ்தாபனங்கள்.-பிலாச்சாமர் (Blechhammer).

இலக்குகள்.—ஹெர்ஹான் (Herhahn), ஆல்ப் Olff, ஹார்பர்ஸ்செய்டு (Harperscheid), புளுமென்தால் (Blumenthal), ஹெல்லென்தால் (Hellenthal), (46 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன, 15 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

எண்ணெக் கிணறுகள்.-ஜெர்மனி (Germany), ஆஸ்திரியா (Austria), ஹங்கேரி (Hungary), யூகோஸ்லாவியா (Yugoslavia).

எதிரி போக்குவரத்துகள், ரஸ்தா போக்குவரத்துகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

கட்டடங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—வடமேற்கு இதாலி (N W. Italy).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

தொழிற்சாலை இலக்குகள்.—கியூஷு (Kyushu).

### பர்மா (Burma).

ராணுவப் பிரதேசங்கள், ஸ்டேஷன்.—மேமியோ (Maymyo).

துவியல்கள், எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan).

ஸ்டோர் பிரதேசம்.—மாக்வி (Magwe).

2 ரயில்வேப் பாலங்கள்.—மத்திய பர்மா (Central Burma).

படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

**20—12—44.** (புதன்கிழமை).

### ஜெர்மனியும் ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரயில் இலக்குகள்—வட ஹாலந்து (North Holland)

பலத்த முனைகள், போக்குவரத்துகள்.—எதிரி அரண்களுக்குப்பின்.

இலக்குகள்.—ஜெர்மனி (Germany), ஸெக்கோஸ்லோவாக்கியா (Czechoslovakia), ஆஸ்திரியா (Austria).

ரஸ்தா இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—இதாலிய யுத்த அரங்கம்.

விமானச் சண்டைகள், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (27 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

### தூரக்கிழக்கு (Far East.)

ஜப்பானியச் சைனியங்கள்.—மின்டோரோ (Mindoro).

எதிரிக் கப்பல்கள்.—பிலிப்பைன்ஸ் (Philippines).

### பர்மா (Burma).

ஸ்டோர்கள், கட்டடங்கள், சேமிப்புகள்.—*லாஷியோ* (Lashio), *மாண்டலே* (Mandalay) *ரயில்வே.*

இலக்குகள்.—*லாஷியோ* (Lashio) *ஜில்லா.*

ஸப்ளை ஸ்தலங்கள், எதிரி சைனியங்கள்.—*மாயு* (Mayu) *கலடான் நதிக்களுக்கிடையில்.*

**21—12—44** (*வியாழக்கிழமை*).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் இதர யுத்த அரங்கங்களும்.

பகல்.—துருப்புகள், ரயில்வே நகரம்.—*டிரையர்* (Trier).

ரயில்வே தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.–*கொலோன்* (Cologne), *பான்* (Bann).

இலக்குகள்.—*ஜெர்மனி* (Germany), *செக்கோஸ்லோவாக்கியா* (Czechoslovakia), *ஆஸ்திரியா* (Austria).

ரஸ்தாக்கள், போக்குவரத்துகள்.—*யூகோஸ்லாவியா* (Yugoslavia).

கப்பல்கள்.—*எட்ரியாடிக்* (Adriatic).

போக்குவரத்துகள், பாலங்கள்.—*போ* (Po) *சமவெளி.*

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.* (68 *எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன*).

### தூரக்கிழக்கு (Far East).

கப்பற்கட்டுந்துறைகள்.—*கோலூன்* (Kowloon).

*பாயார்ட்* (Bayard) *கோட்டை.*

இலக்குகள்.—*ஹெய்னன்* (Hainan).

ஜப்பானியக் கப்பற்கூட்டம்.—*பாண்டா* (Banda) *கடல்.*

### பர்மா (Burma).

ரயில்வே ஸ்தளங்கள்.—*ஹென்ஸாடா* (Henzada).

இலக்குகள்.—*டேஸ்* (Taze).

போக்குவரத்துகள்.—*மூனிவா* (Monywa).

முகாம் பிரதேசங்கள்.–*டாபாயின்* (Tabayin).

பாலம்.—*ஆலான்* (Alon).

கிராமங்கள்.—*நாகாவிங்காங்யாங்* (Nakawngkongyaung), *வெட்லெட்* (Wetlet).

**22—12—44.** (*வெள்ளிக்கிழமை*).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—இலக்குகள்—*டிரையர்* (Trier), *ஸ்பெயிச்சர்* (Speicher).

ஆக் ஆக் நிலயங்கள்.—*லெபாக்* (Lebach) *கிழக்கு.*

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.–*கொலோன்* (Cologne).

இலக்குகள்.—*ஜெர்மனி* (Germany), *செக்கோஸ்லோவாக்கியா* (Czechoslovakia), *ஆஸ்திரியா* (Austria).

ரஸ்தாக்கள் போக்குவரத்து இலக்குகள்.—*போ* (Po) *சமவெளி, யூகோஸ்லாவியா* (Yugoslavia).

விமானச் சண்டைகள்.—*மேற்கு அரங்கம்* Western Front).
(59 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

இரவு.—சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்—*காப்லென்ஸ்* (Coblenz), *பிங்கன்* (Bingen).

விமானச் சண்டைகள்.—*மேற்கு அரங்கம்* (6 *எதிரி விமானங்கள் நாஸமாக்கப்பட்டன,* 3 *நேசதேச விமானங்கள் காணப்படவில்லை*).

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்.—*தென்மேற்கு பஸிபிக்* (S. W. Pacific).

கப்பல்கள்.—*பிலிப்பைன்லைச்சுற்றிலும்.*

### பர்மா (Burma).

ராணுவ முகாம்கள்.—*டாங்குப்* (Taungup).

ரயில் தளங்கள்.—*மோல்மீன்* (Moulmein).

ராணுவப் பிரதேசங்கள்.—*மு* (Mu) *நதிக்கும் ஐராவதி* (Irrawaddy)*க்குமிடையில்.*

விமான நிலயம்.—*ஹெஹோ* (Heho).

சேமிப்புகள்.—*மத்திய பர்மா* (Central Burma).

முகாம்கள், ஸ்டோர்கள், ரஸ்தாக்கள், பாலங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—*அரக்கான்* (Arakan).

படகுகள்.—*ஐராவதி* Irrawaddy).

விமான நிலயம்.—*மெய்க்திலா* (Meiktila).

**23—12—44** (*சனிக்கிழமை*).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—(55 *எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன*).

ஜெர்மன் துருப்புகள், பலத்த முனைகள்.—*மேற்கு அரங்கில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

விமான நிலயங்கள் ரஸ்தா, ரயில் லயன்கள், மோட்டார் போக்குவரத்துகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—*யுத்தம் நடக்கும் அரண்களுக்குப்பின்.*

போக்குவரத்துகள்.—*யூகோஸ்லாவியா* (Yugoslavia), *போ* (Po) *சமவெளி.*

இலக்குகள்.—*ஹங்கேரி* (Hungary), *ஆஸ்திரியா* (Austria), *செக்கோஸ்லோவாக்கியா* (Czechoslovakia).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—கண்ணிவெடி பாவுதல்—*எதிரி ஜலப்பிராந்தியங்களில்.*



### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய க்ப்பல்கள், விமான நிலயங்கள்.—*தென்மேற்கு பஸிபிக்கில் பல இடங்கள்.*

தரைப்படைகள் உதவி.—*லெய்ட்டி* (Leyte).

### பர்மா (Burma).

ஒரு *தகவலும் இல்லை.*

**24—12—44.** (*ஞாயிற்றுக்கிழமை*).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—போக்குவரத்துகள், சப்ளை ஸ்தலங்கள்.–U. S. *அரண்களுக்கு போகும் வழிக்கு எதிரிலுள்ள பாலம்.*

விமான நிலயங்கள்.—*பிராங்பர்ட்* (Frankfurt).

இதா ராணுவ ஸ்தாபனங்கள்.—*மேற்கு ஜெர்மனி* (Western Germany).

"V-2"சேமிப்புகள், தாக்குதல்கள்.-*ஹாலந்து* (Holland).

இலக்குகள்.—*செக்கோஸ்லோவாக்கியா*:(Czechoslovakia), *ஆஸ்திரியா* (Austria), *யுகோஸ்லாவியா* (Yugoslavia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்,—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்,* (37 *எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன*).

இரவு.—ரயில்வே இலக்குகள்.—*கொலோன்* (Cologne).

விமான நிலயம்.—*போன்* (Bonn).

### தூரக்கிழக்கு (Far East).

கிளாங் விமான நிலயம்.—*மணிலா* (Manila), (18 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

எதிரி இலக்குகள்,—*நியூ கினியாவிலுள்ள வீவாக்* (Wewak), *போனின்* (Bonin).

### பர்மா (Burma).

ரயில்வே தளங்கள்.—*புலாங்தாங்* (Peulang Thuong).

இலக்குகள்.—*அரக்கான்* (Arakan).

ஸ்டோர் பிரதேசம்.—*மேமியோ* (Maymyo).

சேமிப்புகள்.—*மாண்டலே* (Mandalay), (Lashio) *ரயில்வே.*

படகுகள்.—*ஐராவதி* (Irrawaddy).

ஸ்டோர்கள்.—*டாங்குப்* (Taungup).

விமான நிலயங்கள்.—*நாம்ஸாங்* (Namsang), *மெய்க்திலா* (Meiktila).

**25—12—44** (*திங்கட்கிழமை*).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ராணுவ ரயில்கள்.—*காப்லென்ஸ்* (Coblenz).

ரயில்வே இலக்குகள்.-*கொலோன்*(Cologne).

2 விமான நிலயங்கள்.—*ரூர்* (Ruhr).

விமான நிலயங்கள்.—*போன்* (Bonn).

ரயில்வே தளங்கள்.—*எம்மன்-டிங்கன்* (Emmen-Dingen).

பாலங்கள்.—*ஜெர்மனி* (Germany).

எண்ணெய்க் கிணறுகள்.—*பிரக்ஸ்* (Brux).

ரயில்வே தளங்கள்.—*ஆஸ்திரியா* (Austria).

போக்கு வரத்துகள்.—*யுகோஸ்லாவியா* (Yugoslavia), *போ* (Po) *சமவெளி.*

விமானச் சண்டைகள்.-*ருஷ்ய யுத்த அரங்கம்*

### தூரக்கிழக்கு (Far East).

கிளாங் விமான நிலயம்.—*மணிலா* (Manila), (39 *ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன*).

விமான நிலயங்கள்.—*நீக்ரோஸ்* (Negros); *மிண்டானோ* (Mindanao);

### பர்மா (Burma).

போக்குவரத்துகள்.—*மத்திய பர்மா* (Central Burma).

**26—12—44.** (*செவ்வாய்க்கிழமை*).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்த நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ஜெர்மன் துருப்புகள், போக்குவரத்துகள்—*யுத்த அரங்கிலும், பின்னும்* (72 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன;* 12 *எதிரி விமானங்கள் காணவில்லை*).

போக்குவரத்துகள்.—*வடக்கு இத்தாலி* (N. Italy), *யுகோஸ்லாவியா* (Yugoslavia); *ஆஸ்திரியா* (Austria).

இலக்குகள்.—*புடாபெஸ்ட்டைச் சுற்றில்.*

### தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—*இவோஜிமா* (Iwojima);

ஜப்பானிய யுத்த கப்பல்கள்.—*மிண்டோரோ* (Mindoro), (3 *நாஸகாரிகள் மூழ்கடிக்கப்பட்டன.* 1 *யுத்தக்கப்பலும்,* 1 *குரூஸியரும் மூழ்கடிக்கப்பட்டன*).

### பர்மா (Burma).

கிராமம்.—*மாயு* (Mayu), *நதிக்கு கிழக்கு.*

படகுகள்.—*ஐராவதி* (Irrawaddy).

**27—12—44.** (*புதன்கிழமை*).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்:—இலக்குகள்.—*வியன்னா* (Vienna) *பிரதேசம்;*

ரெயில் முனைகள்.—*தென் ஆஸ்திரியாவிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும், இதாலிக்குச் செல்லும் ஸப்ளைகள்.*

ஜெர்மன் சைன்னியங்கள்.—வட இதாலி.

போக்குவரத்துகள்.—வட *இதாலி* (N. Italy) *போ* (Po) *சமவெளி;*

விமானச் சண்டைகள், தரைமீதுள்ள விமானங்கள்.—*ருஷ்யா யுத்த அரங்கம் முழுதும்.*

### தூரக்கிழக்கு (Far East).

டோக்கியோ (Tokyo).

### பர்மா (Burma).

பாலங்கள் போக்குவரத்துகள்.—*மத்திய பர்மா* (Central Burma).

**28—12—44.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

*ஒரு தகவலுமில்லை.*

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைன்யங்கள் விமான நிலயங்கள்.-*பிலிபைன்ஸிலுள்ள* (Luzon).

**பர்மா (Burma).**

போக்கு வரத்துகள்.—*மத்திய பர்மா* (Central Burma).

படகுகள்.—*ஐராவதி.*

**29—12—44.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—(32 *எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 75 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை*).

எதிரி ரயில் போக்குவரத்துகள்.—*ரூருக்* (Ruhr) *வடக்கு, ரூருக்கு செல்லும் வழி.*

மோட்டார்ப் போக்குவரத்து, பீரங்கி ஸ்தாபனங்கள்.—*பெல்ஜியம்* (Belgium), *லக்ஸம்பர்க்* (Luxembourg).

சேனைகள் யுத்த தளவாடங்கள், தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—*ஜெர்மனி* (Germany)

ஸ்டோர் குவியல்கள்.—*ஆச்கன்* (Aachen).

ரயில் தளங்கள்.—*மேல்ரைன் சமவெளி.*

எதிரி துருப்பு பீரங்கிகள்.—*ஸ்கோவன்* (Schouwen) *என்ற டச்சுத் தீவு.*

E. & R. படகு.-*ராட்டர்டாம்* (Rotterdam).

எதிரி ஸப்ளை.—*வட இதாலி* (N. Italy).

எதிரி போக்குவரத்து.—*வட கிழக்கு இதாலி.*

பல லக்ஷியங்கள்.—*மேற்கு யுத்த அரங்கப் பிரதேசம்.*

ராணுவ இலக்குகள்.—*வட மேற்கு இதாலி* (N. W. Italy).

எதிரி போக்குவரத்துகள்.—*யூகோஸ்லாவியா* (Yugoslavia).

படகுகள்.—*வட ஏட்ரியாடிக்* (N. Adriatic), *ஜினோவா* (Genoa).

விமானச் சண்டைகள்.-*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.-ரெயில்வே ஜெங்ஷன்கள், தளங்கள்.-*டிராய்ஸ்டார்ட்* (Troisdort).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—*ஸ்கோல்வன் பாயர்* (Scholven Bauer).

**தூரக் கிழக்கு (Far East).**

*ஒரு தகவலும் இல்லை.*

**பர்மா (Burma).**

*ஒரு தகவலுமில்லை.*

**30—12—44.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.-*மான்ஹிம்* (Mannheim) *கெய்ஸர்லாடர்ன்* (Kaiserlautern), *காஸ்ஸல்* (Kassel).

ரயில்வேப் பாலங்கள்.—*மேற்கு ஜெர்மனி* (Western Germany).

போக்குவரத்துகள்.—*ரூர்* (Ruhr), *ரைன்லாந்து* (Rhineland).

"V 2" ஸ்தலங்கள்.—*ஹாலந்து* (Holland).

பாலங்கள்.—*பிரென்னி கால்வாய்.*

தளவாடக்குவியல்கள்.—*பொசாரு.*

மோட்டார் போக்குவரத்துகள், ரயில் தளவாடங்கள், பாலங்கள், முனைகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—*இதாலி.*

விமானச்சண்டைகள் தரைமீதுள்ள விமானங்கள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—*கொலோன்* (Cologne).

இலக்குகள்.—*ஹனோவர்* (Hanover) *மேற்கு ஜெர்மனியில் பல இடங்கள்.*

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைனியங்கள் கப்பல்கள்.—*லூஸானிலும் அதைச் சுற்றிலும்.*

**பர்மா (Burma).**

தரைப்படைக்கு உதவி.—*அரக்கான்* (Arakan).

டாங்குப் (Taungup).

எதிரி படகுகள்.—*புரோமி* (Prome)*க்கும் ஹென்ஸடா* (Henzada)*விற்குமிடையில்.*

எண்ணெய்க் தளங்கள்.—*சாக்* (Chauk).

சுரங்க வெடி பாவுதல்.—*எதிரி ஜலப் பிராந்தியங்களில்.*

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**18—12—44.** திங்கட்கிழமை.

**பிரிடன் (Britain).**

*சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.*

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**19—12—44** ; செவ்வாய்க்கிழமை.

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**தூரக்கிழக்கு (Far East).**

பலத்த முனைகள்.—*பிலிப்பைன்ஸிலுள்ள மிண்டோரோ* (Mindoro).

**20—12—44.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*



**21—12—44** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*ஒரு தகவலும் இல்லை.*

**22—12—44.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

*ஒரு தகவலும் இல்லை.*

**தூரக்கிழக்கு (Far East).**

நேசதேச சைனியங்கள்.—*மிண்டோரோ* (Mindoro).

**23—12—44.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

*சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.*

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**24—12—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

*சில இடங்கள்.—வட, தென் இங்கிலாந்து.*

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**25—12—44.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**தூரக்கிழக்கு (Far East).**

சில இடங்கள்.—*கிழக்கு வங்காளம் (சேதம் இல்லை.*

**26—12—44.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

*ஒரு தகவலும் இல்லை.*

**தூரக்கிழக்கு (Far East).**

அமெரிக்க விமான தளம்.—*மாரியானுஸிலுள்ள செய்பான்* (Saipan).

**27—12—44.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

*சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.*

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East)**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**28—12—44.** (வியாழக்கிழமை) &
**29—12—44.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**30—12—44** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*ஒரு தகவலும் இல்லை.*

**31—12—44** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லை.*

**தூரக்கிழக்கு (Far East).**

நேசதேச சைன்யங்கள்.—*மிண்டோரோ* (Mindoro), (14 *ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.*

## *யுத்தக் குறிப்புகள்.*

**ஸ்வதந்திர தீபங்கள்.** *புது வருஷம் துவங்கிவிட்டது. இவ்வருஷத்தில் யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்படுமென்ற நம்பிக்கையுடன் நாம் நமது வேலையைத் துவக்கம் செய்வோம்.*

*மன்னர்பிரான் கிருஸ்துமஸ் ஒலிபரப்பைவிட அழகும் தெளிவும் நிரம்பிய சொற்பொழிவு ஒன்றும் கிடையாது:—அவர் பின்வருமாறு சொன்னார். "1945-ம் வருஷத்தில் என்ன நேரிடுமென்று நாம் சொல்லுவதற்கில்லை. அடுத்த கிருஸ்துமஸ் கொண்டாட்டத்தின் போது யுத்தம் நடைபெறுதென்று நான் நினைக்கிறேன்." அவ்விதமே நடைபெறவேண்டுமென்று நாமும் விரும்புகிறோம். இதற்கு முன் நடைபெற்ற கிருஸ்துமஸ் பண்டிகைகளைவிட இந்த கிருஸ்துமஸ் நிச்சயமாகத் தெளிவாக இருக்கிறது. ஜெர்மானியர்கள் அணைத்துவிட்ட ஸ்வதந்திர தீபங்கள் ஒவ்வொன்றாக ஏற்றி வைக்கப்படுகின்றன. கவலை ஒழிந்து நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி பின்வருமாறு சொல்லுகிறார்." சென்ற கிருஸ்துமஸின்பொழுது நாம் இங்கிலாந்தில் நம்பிக்கையுடனும் ஆவலுடனும் இரண்டாம் போர்முனையைத் துவக்கம் செய்துவந்தோம். இந்த கிருஸ்துமஸ்ஸின்பொழுது நாம் ஜெர்மனியில் போரை நடத்துகிறோம். "ஜெர்மனியை முறியடிக்கவேண்டியதுதான் பாக்கி இருக்கிறது."*

*இதுதான் கடவுளின் விருப்பம். இது அற்புதமானது.*

*ஆகையால் இவ்வருஷ ஆரம்பத்தில் நன்றியறிவுடனும் பிரார்த்தனையுடனும் நேசதேசத்தார்களுக்கு கூடிய சீக்கிரம் வெற்றி கிடைக்குமாறு கடவுள் அருள் புரிவாராக என்ற வேண்டுகோளுடன் நாம் நமது வேலையைத் துவக்குவோம்.*

வி வி வி வி வி

**ஒப்பிடுதல்.** *மன்னரின் கிருஸ்துமஸ் செய்தியையும் புது வருஷப்பிறப்பு இரவு நடுநிசியில் ஞாயிறன்று ஹிட்லர் ஆத்திரத்துடன் ஓலமிட்டதையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அவருடைய செய்தியில் துவேஷமும் தீங்கும்,*

யூதர்கள், போல் ஷீவீக்குகளை நிந்திப்பதும், அவரை எதிர்த்துப் போராடத் துணிவுள்ளவர்களை அழித்து விடுவோம் என்ற அரட்டலும் காணப்பட்டன. ஆகிலும் 1944-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு மிகவும் சங்கடமான நிலைமை ஏற்பட்டதென்று அவர் ஒப்புக்கொள்ளுகிறார். இவ்வருஷத்தில் கிட்டத்தட்டத் தோல்வி ஏற்பட்டதென்று கோயபல்ஸ் ஒப்புக்கொள்ளுகிறார். ஆகிலும் எவ்விதமாகிலும் வெற்றி கிடைத்துவிடுமென்று ஹிட்லர் நம்பியிருக்கிறான். ஆர்டெனிஸ் போர்முனையில் அவனுக்கு ஏற்பட்ட தாத்காலிகமான வெற்றி அவனுக்கு நம்பிக்கையை உண்டுபண்ணியிருக்கிறது.

வி வி வி வி வி

**ஆர்டெனிஸ்.** அங்கு நடைபெற்ற போர் யுத்தம் முடிவடைந்துவிட்டதென்று சொல்லுகிறவர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்தது போலாகும். சமீப காலத்தில் ஜனபிரதிநிதி சபையிலும் அதற்கு வெளியிலும் அயல்நாடுகளிலும் அநேகர்கள் மிஸ்ட்டர் சர்ச்சிலின் பேரில் குறை கூறி வருகிறார்கள். முக்கியமாக Mr. H. G. வெல்ஸ் பிரதம மந்திரியின் வேலை முடிந்து விட்டதென்றும் அவர் இனிமேல் ரிட்டயராகவேண்டியதுதான் என்றும் சொல்லியிருக்கிறார். அவர்களுக்கெல்லாம் ஆர்டெனிஸ் போர் ஒரு எச்சரிக்கையை விடுக்கிறது. மிஸ்ட்டர் சர்ச்சில் அடிக்கடி விடுத்துவந்த எச்சரிக்கையையும் இது ஞாபகப்படுத்துகிறது. அவர்கள் சாகும் தருவாயிலிருந்த போதிலும் எதிரிகள் இன்னும் பலம்பெற்றிருக்கிறார்கள். நெருக்கடியிருக்கும் இச்சமயத்தில் ராஜீய விவகாரங்களிலும் ராஜீயக் கக்ஷி பிரதி கக்ஷி நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்தவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறவர்களுக்கு ஆர்டெனிஸ் போரும் மிஸ்ட்டர் சர்ச்சிலின் வார்த்தைகளும் பின்வருமாறு போதிக்கின்றன. “பொதுஜன விவகாரத்திற்கு இது தருணமில்லை, இப்பொழுது பிளவு ஏற்பட்டால் யுத்த முயற்சிக்குக் குந்தகம் ஏற்படும். யுத்த சிரமங்கள் நீடிக்கும். விவகாரம் செய்வதற்கும் சண்டை போடுவதற்கும் இது தருணமில்லை. இப்பொழுதுதான் நம்முடைய முயற்சிகளை இரட்டிக்கவேண்டும்.

வி வி வி வி வி

**நாஸிகளின் பதில் தாக்குதல்.** மேற்குப் போர் முனையில் ஜெர்மனி பதில் தாக்குதலைத் துவக்கியிருப்பதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. எல்லாம் ஒரு முடிவுக்குத்தான் வருகின்றன. ஈசன் ஹவர் மாஸ், ரோயர், நதிக்கரைகளை ஆக்கிரமித்துவிட்டபடியாலும் ஸார் நதியைத் தாண்டிவிட்டதாலும் பீதியடைந்து ஜெர்மனி கடைசி பிரயத்தனமாக ஒரு தாக்குதலை மேற்கொண்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. எல்லைப்புறத்தில் நேசதேசத்தாரின் முன்னேற்றத்தின் முதல் கட்டம் முடிந்து அவர்கள் ரைன்லாந்து, ரூர், ஸார் பிரதேசத்திற்குள் புகுந்துவிட்டார்கள். கோலோன் தென்பட்டுவிட்டது. தற்காப்புப் போரிலும் ருண்ட்ஸ்டெட் தினசரி 6,000 பேர்களை இழந்து வந்தான். இவ்விதம் அழிவு ஏற்பட்டால் நாளடைவில் ஜெர்மனியின் வலிமையும் மூல பலமும் அழிந்துவிடும். பதில் தாக்குதல் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. மனிதர்களைக் குறைவாகக் காவு கொடுக்க இதுதான் சுலபமான வழி.

இரண்டாவதாக ஜெர்மன் மக்களிடையே அதிருப்தியும் மனச்சோர்வும் ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஹிட்லரின் சொற்பொழிவிலிருந்து இது தெளிவுபடுகிறது. ஆகையால் ஹிட்லரின் பெயரை மந்திரமாக உபயோகித்து கடைசியாக ஒரு முயற்சி செய்வது அவசியமாகிற்று. இந்த முடிவுக்கு வருவதற்கு ஆர்டெனிஸ் முன்னேற்றத்துக்கு ஹிட்லரின் உற்சாகம்தான் காரணமென்று வெளிவந்த செய்தியும் ஹிட்லர் ஒரு தெய்வப்பிறப்பென்றும், அவருக்கு அறிவு அதிகமென்றும் அவரை ஜெர்மானியர்கள் சரித்திரத்திலேயே மிகவும் கியாதிபெற்றவரென்று ஆராதிக்கவேண்டுமென்றும் கொயபல்ஸ் ஹிட்லரை தப்பு ஸ்தோத்திரம் செய்ததிலிருந்தும் ஆதாரம் கிடைத்திருக்கிறது.

மூன்றாவது காரணம் பெட்ரோல் குறைவு எண்ணெய் குறைவு ஏற்பட்டால் ஜெர்மனி சரணடைந்து விடுமென்று எல்லோரும் எண்ணினார்கள். இந்த அபிப்பிராயத்துடன் தான் நேசதேச விமானப் படைகள் எண்ணெய் உற்பத்தி நிலயங்களை அழித்து வந்திருக்கிறார்கள். அதன் பயனாகத்தான் இது வரையில் ஜெர்மனிக்கு அபாயம் ஏற்பட்டபொழுதும் ஜெர்மன் விமானப் படை தலை காட்டவில்லை. கிடைத்த உபரி எண்ணெய் ஸப்ளையைக்கொண்டும் புதிதாகச் சேர்க்கப்பட்ட சேனைகளைக்கொண்டும் ரண்ட்ஸ்டெட் தரையில் முன்னேறித் தாக்கத் துணிந்துவிட்டான். அதற்கு அவன் ஜெர்மன் விமானப் படையின் உதவியையும் எதிர் பார்க்கலாம்,

மேலும் போலந்து பிரச்னை அநேகமாகத் தீர்ந்துவிட்டதென்று மிஸ்ட்டர் சர்ச்சில் பார்லிமெண்டில் சமீப காலத்தில் வெளியிட்டதிலிருந்தும் ரண்ஸ்ட்டெட் இந்தத் தாக்குதலைத் துவக்கியிருக்கலாம். போலந்தில் பூமி உலர்ந்து கெட்டிப்பட்டுவருகிறதென்றும் ருஷ்யர்கள்



பேரலந்து போர் முனையில் இருப்புப்பாதையை அமைத்து விட்டார்களென்றும் அவன் அறிவான்.. 350 ருஷ்ய டிவிஷன்கள் கொண்ட படைகளும் அவைகளில் சில படைகளும் போலந்தில் தாக்கத் தயாராக இருக்கின்றன. கிழக்குப் பக்கத்தில் போர் மூளு முன் மேற்குப் பக்கத்தில் நேசதேசத்தார்களை பலமாகத் தாக்குவதென்பதுதான் ரண்ட்ஸ்டெட்டின் யுத்த தந்திரம்.

இந்த முயற்சிக்கு காலநிலை அனுகூலமாக இருந்தது. போர்முனை பூராவிலும் சாம்பல் நிறமுள்ள பனி மூடி இருந்தது. ஜெர்மனியில் பிரகாசமான சூர்ய வெளிச்சமிருந்தது. நேசதேச விமான நடவடிக்கைக்கு சிரமம் ஏற்பட்டபொழுது ஜெர்மன் உதவிப் படைகள் குவிந்தன. மேலும் தவறுதல் செய்யும் கார்போரல் ஹிட்லருக்குப் பதிலாக நிபுணரும் அனுபவம் வாய்ந்தவருமான ஒரு சேனாதிபதி ஜெர்மன் படைகளுக்குத் தலைமை வகித்தார்.

பெல்ஜியத்திலுள்ள மால்மெடிக்கும் லக்ஸம்பர்க்கிலுள்ள எக்டர்னுக்கும் மத்தியிலும் அமெரிக்க 1-வது, 3-வது படைகளுக்கு மத்தியிலும் பல ஹீனமான பாகத்தில் 60 மைல் நீளத்தில் ஜெர்மனி தாக்கிற்று. இங்கு காட்டுபிரதேசங்களில் கடுமையான போர் மூண்டது. அதில் அகப்பட்டுக்கொண்ட அமெரிக்க ஒண்ணாவது படை விமானப் படை ஒத்தாசையுடன் தைரியத்துடன் போர் புரிந்து தப்பித்துக்கொண்டது.

கெடுதலான காலம் போய்விட்டது. பாலடினேட்டிற்குள் நுழைந்து ஸீக்பிரண் அரணின் முதல் வட்டாரத்தை ஊடுருவிச்சென்ற ஜெனரல் பாட்டனின் மூன்றாவது சேனை அமெரிக்க 1-வது அகப்பட்டுக்கொண்ட படைகளை விடுவித்ததுடன் ஜெர்மனியின் தெற்கு விலாப் பக்கத்தில் ஒரு மகத்தான தாக்குதலைத் துவக்கிவிட்டது. இது திருப்திகரமாகவே நடைபெற்றுவருகிறது. சேனை வடக்குப்பக்கத்திலிருந்து தாக்கிவருகிறது. 2,000 சதுர மைல்கள் கொண்ட ஜெர்மனியின் உப்பல் இப்பொழுது 50 சதவிகிதம் குறைந்துவிட்டது. ஜெர்மனியர்கள் அநேகமாக எல்லா இடங்களிலிருந்தும் பின்புறம் தள்ளப்பட்டுவிட்டார்கள். பாஸ்டாக்னியில் ஏற்பட்டிருந்த முற்றுகை அகற்றப்பட்டுவிட்டது.

ஆனால் ஜெர்மன் முன்னேற்றம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. ஜனவரி மாதம் 1-ம் தேதி வந்த ரிபோர்ட்டுகளிலிருந்து ஜெர்மானியர்கள் பாஸ்டாக்னிக்கு இருபக்கத்திலும் தாக்கி வருகிறார்கள். பாஸ்டாக்னிக்கு வடக்கில்தான் லீஜுக்குப் போகும் முக்கியமான ரஸ்தா இருக்கிறது. சார்க்கெ மைன்ஸுகளுக்குக் கிழக்கில் வாஸ்கஸ் மலைகளில் திடீரென்று தோன்றிய ஜெர்மன் படைகளுடன் அமெரிக்க 7-வது படை போர் தொடுத்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

ஆர்டெனிஸ் என்பது மேற்குப் போர்முனையின் ஒரு அம்சம்தான். இந்த நடவடிக்கையை, சென்ற ஆறு மாதங்களாக நேசதேசத்தார்கள் செய்துவந்த அரிய செய்கைகள் உள்ள ஒரு மகத்தான திட்டத்தில் அமைத்துத்தான் பார்க்கவேண்டும். இந்த நடவடிக்கைகள் மூலம் சரித்திரத்தில் இணையற்ற வகையில் படைகள் பிரான்ஸிலிறங்கின. ஹிட்லரின் மேற்கு ஐரோப்பிய அரண் தகர்க்கப்பட்டது, பிரான்ஸும் பெல்ஜியமும் விடுவிக்கப்பட்டன. ஜெர்மனியின் மேற்கு எல்லைச்சரகம் ஊடுறுவிச்செல்லப்பட்டது.

வி வி வி வி வி

**இதாலி.** 1944-ல் இதாலிய தீபகற்பம் பூராவும் விடுவிக்கப்பட்டது. இது பெரிய ராணுவ நிகழ்ச்சிதான். இதைவிட பிரான்ஸில் நடைபெற்ற போர் பகட்டானதென்றாலும், அது ஒன்றும் இளப்பமான நடவடிக்கையல்ல. நெபோலியனுக்கு ஸ்பெயின் இருந்ததுபோல் ஜெர்மனிக்கு இதாலி ஒரு பெரிய புண்ணாக இருந்தது. உயிர் தப்பிப்பிழைப்பதற்காக இதாலியில் போர் புரிந்துவரும் 50 டிவிஷன் ஜெர்மன் படைகள் உதவிக்கு வந்தால் சௌகரியமாக இருக்குமென்று ரண்ஸ்ட்டெட் நினைக்கக்கூடும். இதாலியில் அமெரிக்க 5-வது சேனையும் பிரிடிஷ் 8-வது சேனையும் மிகவும் கடுமையான பருவ காலத்தையும், அநேக மலைத்தொடர்கள், வெள்ளப்பெருக்குள்ள நதிகள், முதலியவற்றின் இன்னல்களையும், மிகவும் சுற்றுவழியுடன் வரும் ஸப்ளைகளின் சிரமங்களையும் சமாளித்துக்கொண்டு போராடவேண்டியிருக்கிறது. எதிரிக்கு தாய்நாட்டிலிருந்து உதவிப் படைகள் நேர் முகமாக வந்து சேருகின்றன. பேயன்ஸாவும் ரோசெடாவும் விழுந்துவிட்டன. 5-வது சேனை செர்கியோ நதிக்கு முன்னேறிவிட்டது. 8-வது சேனை சேனியோ நதிக்கு முன்னேறிவிட்டது. இதாலியப் போர் சரித்திரத்தில் தனிப்புகழ் பெற்றுவிட்டது.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.** கிழக்குப் போர்முனையிலும் 1944-ம் வருஷத்திய நடவடிக்கைகள் திருப்தியளிக்கக்கூடியவையாகத் தானிருக்கின்றன. செம்படையின் அரிய சேவையைப்பற்றி நாம் பெருமை கொள்ள

வேண்டும். அது ருஷ்ய பூமியிலிருந்து எதிரியை அப்புறப்படுத்தியிருக்கிறது, பின்லாந்து பூராவையும்விடுவித்திருக்கிறது. ஜெர்மனியின் நண்பர்களை ஒவ்வொன்ருய் விடுவித்திருக்கிறது. அது இப்பொழுது வடக்கில், கிழக்கு பிரஷ்ய எல்லையையும் மத்தியில் வார்சாவையும், தெற்கில் புடா பெஸ்டையும் அடைந்துவிட்டது. ஜெர்மனிக்குப் போகும் தெற்கு வாசற்படி போன்ற வியன்னுவுக்குச் செல்லும் மார்க்கத்தைச் சுத்திசெய்து வருகிறது. ஸெகோஸ்லாவேகியாவின் பெரும் பாகம் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. ஹங்கேரியின் தலைநகரத்திலுள்ள புடா கூடிய சீக்கிரம் விழுந்துவிடும். பெஸ்டுக்கு ஆபத்து உண்டாகிவிட்டது. புடாவுக்கும் பெஸ்டுக்கும் நடைபெறும் போர் ஸ்டாலின்கிராட்டைவிட மகத்தானதென்று சொல்லுகிருர்கள்.

வி வி வி வி வி

**பர்மா.** பிரிகேடியர் I. S. ஜேஹூ டில்லியிலிருந்து புது வருஷப் பிறப்புக்கு முன் ஒலிபெருக்கியிருக்கிருர். அது பின்வருமாறு "நாம் இன்னும், ரத்தம் சிந்தவேண்டும், சகித்துக்கொள்ளவேண்டும், தளவாடங்களைத் தியாகம் செய்யவேண்டும் என்பதினுல் 1945-ம் வருஷம் ஒரு சந்தோஷகரமான வருஷமென்று சொல்லுவதற்கில்லை. 1944-ம் வருஷத்திய நடவடிக்கைகள் நமக்கு சந்தோஷகரமான புதிய யுகத்தை உத்தரவாதம் செய்திருக்கின்றன. அதை நாம் நமது பூரா பலத்துடன் பரிபாலித்து வரவேண்டும்." மிகவும் அறிவுள்ள வார்த்தைகள்.

பர்மாப் போர்முனைப் போரிலும் நமக்கு ஏமாற்றம் கிடையாது 1944-ம் வருஷத்தின் ஆரம்பத்தில் ஜப்பானியர் இந்தியாவை பயமுறுத்தியது போக இரண்டாவது பகுதியில் நிலைமை தலை கீழாக மாறிவிட்டதென்பதைக் கவனியுங்கள். அநேக நடவடிக்கைகள் மூலம் 14-வது சேனை ஜப்பானியரிடமிருந்து இந்தியாவில் ஏற்பட்ட பீதியை நிவர்த்தி செய்தது. மற்ற நேசதேசப் படைகளுடன் ஒன்று சேர்ந்து 14-வது சேனை பர்மாவில் 30,000 சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தை விடுவித்திருக்கிறது. லிடோ ரஸ்தாவில் 300 மைல்கள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. பர்மாவிலிருந்து சீன எல்லைச்சரகம் தாண்டப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**தூரக்கிழக்கு.** பஸிபிக் போரில் மாண்டலேயும் கூடிய சீக்கிரத்தில் விடுவிக்கப்படும். ஆகியாப் தீவு விடுவிக்கப்பட்டது. பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. தென் மேற்கு பஸிபிக்கிலிருந்து மத்திய பஸிபிக்குக்கு அமெரிக்கப் படைகள் முன்னேறியது சிறந்த நடவடிக்கையாகும். லேயிடித்தீவு நடவடிக்கை வெற்றிகரமாக முடிந்தது. 117,997 ஜப்பானியர்கள் உயிர் துறந்தார்கள். மிண்டோரோவின் பெரும் பாகம் ஆக்கிரமிக்கப்பட்டது. அவை இரண்டும் பிலிப்பைன்ஸிலிருக்கின்றன. பிரிடிஷ் பஸிபிக் கடற்படை பஸிபிக் ஸமுத்திரத்திற்குச் சென்றுவிடும். ஜப்பானிய தொழிற்சாலை தளங்கள் விமானப் படை மூலம் நொறுக்கப்படுகின்றன. ஜப்பானிய கடற்படைக் குறைந்து வருகிறதாலும் போர்க் கப்பல்கள் அதிக நஷ்டமடைந்து வருவதாலும், விமான நடவடிக்கை பலப்படுவதினுலும், இறுதியில் ஜப்பானில் படையெடுப்பு ஏற்படப்போவதினுலும். 1945-ம் வருஷத்தில் ஜப்பானுக்குத் துயரம் ஏற்படுமென்று கடற் தளபதி நிமிட்ஸ் எதிர் பார்க்கிருர்.

வி வி வி வி வி

**சைனு.** சீனுப் போர்முனையிலும் உள்ள நடவடிக்கைகளைப்பற்றி நாம் குதூகலப்படும்படி யிருந்தால் நலம் என்று நினைக்கிறேன். சென்ற வருஷத்தில் சைனுவுக்கு மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. சீனர்கள் பலமாக எதிர்த்துப் போராடியதினுலும் அமெரிக்கா உதவி செய்ததினுலும் இப்பொழுது அபாயம் தாத்காலிகமாக நீங்கிவிட்டது. மார்ஷல் சியாங்கேஷேக் எப்பொழுதும்போல எஃகைப்போல் உறுதியுடனிருக்கிருர். பொது உடைமைக் கக்ஷிக்காரர்களை சமாதானப்படுத்தி யுத்த சமயத்திலும் நாட்டில் ஜனநாயக நிர்வாகத்தை அமைக்க பிரயத்னம் செய்துவருகிருர். அவருடைய செய்தி நம்பிக்கையையும் உத்சாசத்தையும் ஊட்டுகிறது. அவர் பின்வருமாறு சொன்னுன் :

"இன்றுடன் ஜப்பானிடமிருந்து ஏற்பட்ட நெருக்கடியான நிலைமை முடிந்துவிட்டது. குவேயாங்குக்குத் தென்கிழக்கில் 135 மைல்களிலுள்ள ஹோசிஹ் என்ற பர்மா ரஸ்தாவிலுள்ள நகரத்தில்தான் போர் நடைபெறுகிறது. நாளையதினம் சைனு 9-வது வருஷ யுத்தத்தைத் துவங்கிவிடும். 1945-ம் வருஷத்தில் முடிவான வெற்றி ஏற்படுமென்று சீன பத்திரிகாசிரியர்கள் நினைக்கிருர்கள். ஆசியாவில் ஜப்பானை முறியடிக்கும் பொருப்பு சைனுவிடமிருக்கிறதென்று சைனுவிலுள்ள ராஜதந்திரிகள் உணர்ந்துவிட்டார்களென்று பொதுஜன மத்தியில் அவர்கள் வெளியிட்டிருக்கிருர்கள்."

ஒன்பது வருஷ காலமாக சிரமப்பட்டுக் கஷ்டங்களை சகித்து யுத்தத்தில் சமாளித்து வந்ததின் பிரயோஜனம் இப்பொழுது நன்கு வெளிப்படுகிறது.



**கிரீஸ்.** 1944-ம் வருஷத்தில் ராணுவ நடவடிக்கை திருப்திகரமாக இருக்கிறதென்ருலும் நேசதேச ராஜீய வியவகாரம் மேகாவிருதமாக இருக்கிறது. ஆகிலும் மேகங்கள் சுத்தி ஆகிவிடுகின்றனவென்பதற்கும் சூசகங்கள் கிடைத்துவருகின்றன.

கிருஸ்துமஸ் தினத்தன்று வயதுமுதிர்ந்த ராஜதந்திரிகள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்பொழுது சுற்றுப்பிரயாணம் செய்யும் பாடகரான மிஸ்டர் சர்ச்சில் மிஸ்டர் ஈடனுடனும் கொலையாளிகளின் வெடிகுண்டுகள் சுற்றிலும் பாயவும், கிரிஸில் அராஜகமும் நாசமும் தலையெடுக்காமல் தடுக்க ஆதென்ஸுக்கு விமானத்தில் சென்ருர். இந்தமாதிரி அவர் சுற்றுப்பிரயாணம் செய்வது எந்த இடத்துக்குச் செல்லவும், சம்பவங்களைப் பயன்படுத்தி அவைகளுக்குக்கூடிய சீக்கிரத்தில் முடிவு ஏற்படுத்தவும் பிரதம மந்திரிக்குள்ள ஊக்கத்தையும் வேகத்தையும் வெளிப்படுத்துகின்றன.

கிரீஸின் நடவடிக்கை மிகவும் துக்ககரமானது. வறுக்கும் சட்டியிலிருந்து அது நெருப்பிலேயேவிழுந்துவிட்டது. ஜெர்மனியின் கொடுமை ஆக்ஷியிலிருந்துவிடுபட்ட கிரீஸில் இப்பொழுது உள்நாட்டுக்கலகம் துவங்கிவிட்டது. இலாஸும் எடிஸும் போர்புரிகின்றன. பிரிடன் ஒழுங்கை ஏற்படுத்த முயலுகிறது. போர்புரியும் கக்ஷிகள் கலைந்துவிடுவதாக காஸர்டாவில் ஆதென்ஸிலிருந்த பிரிடிஷ் ஜெனரல் அவர்களிடமிருந்து வாக்குறுதியைப் பெற்றுவிட்டார். உணவுப்பொருளும் ஆடைகளும் வழங்கப்பட்டன. ஆகிலும் இலாஸ் கக்ஷி வாக்குறுதியை உதறிவிட்டு உணவுப்பொருள் வந்துகொண்டிருந்த துறைமுகத்தை முற்றுகை செய்துவிட்டது. பிரிடன் வலது கக்ஷியையும் இடது கக்ஷியையும், அல்லது மன்னர் ஆக்ஷியையும் ரிஜன்ஸியையும் ஒன்றையும் ஆதரிக்கவில்லையென்று வெளிப்படுத்தியது. இது கிரேக்கர்களின் சொந்த காரியமாகும். கிரீஸிலுள்ள நிலைமை யுத்த முயற்சிக்குக் குந்தகம் விளைவிப்பதால் கிரீஸில் சமாதானமும் ஒழுங்குமுறையும் நிலவவேண்டுமென்பது பிரிடனின் லக்ஷியம். கிரீஸின் நிர்வாகம் அமைதியுடன் நடைபெறவேண்டுமென்றுதான் பிரிடன் கவலைப்படுகிறது.

டிசம்பர் 26-ம் தேதி ஆதென்ஸில் நடைபெற்ற மகாநாட்டில், மிஸ்டர் சர்ச்சில் கிரேக்க பிரதிநிதிகளுக்குப் பின்வருமாறு போதித்தார். மேற்குப் போர்முனையில் மகத்தான போர் நடைபெறும்பொழுது இங்கிலாந்தின் பிரதம மந்திரி கிரீஸுக்கு வந்ததின் காரணம் கிரீஸினிடம் அவருக்குள்ள கண்யமும் அந்த தேசத்தின் கௌரவத்தை ஸ்தாபிக்கவும்தான். மேலும் சர்வதேச சமாஜத்தில் கிரீஸ் ஒரு ஸ்தானம் வகிக்கவேண்டும். பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டில் அவர் பின்வருமாறு கூறினுர். நாங்கள் கிரீஸிலிருந்து ஒரு லாபத்தையும் விரும்பவில்லை. நாங்கள் சுயநலம் ஒன்றையும் கருதவில்லை. எங்களுக்கு தேசங்களை சம்பாதிக்கும் ஆசை இல்லை. எங்களுக்கு அங்கு தளங்கள் வேண்டியதில்லை. எங்களுக்குப் பொருள் தேவையில்லை. நாங்கள் கொடுக்கும் நிலைமையிலிருக்கிருேம். கிரீஸிலிருந்து நட்பைத்தவிற வேறு ஒரு பிரயோஜனத்தையும் நாங்கள் தேடவில்லை."

பிரதம மந்திரியின் விஜயத்திலிருந்து என்ன பிரயோஜனம் ஏற்பட்டதென்று இப்பொழுது சொல்லுவதற்கில்லை. வேலை முடிந்தபின் அவர் லண்டனுக்குத் திரும்பிவிட்டார். பாபண்ட்ரியூவின் நிர்வாகம் ராஜினுமாச் செய்துவிட்டது. ஒரு புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டுவிட்டது. ஜெனரல் ப்ளாஸ்டிராஸ் அதற்குப் பிரதம மந்திரி. கிரீஸின் மன்னரும் ஜனங்கள் அழைத்தாலொழிய அங்கு செல்லமாட்டார். ஜெனரல் ஸ்கோபி ஆதன்ஸையும், துறைமுகத்தையும் சுத்திசெய்துவிட்டார். சண்டை போடும் கக்ஷிகள் உடன்படிக்கை செய்துகொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரியவருகிறது. அழுக்கான நடவடிக்கைகள் முடிந்துவிடுமென்று நாம் நம்புவோம்.

வி வி வி வி வி

**போலந்து.** லண்டனிலுள்ள போலீஸ் நிர்வாகத்துடன் பேரம் செய்வதில் ஆயாசம் அடைந்து லப்ளினிலுள்ள போலீஸ் கமிட்டி போலந்தில் விடுதலை பெற்ற நாடுகளின் நிர்வாகத்தை தாத்காலிகமாக ஒப்புக்கொண்டது. ருஷ்யர்கள் தத்வதரிசிகளானதால், செம்பழத்தைவிட்டு தொரட்டிப் பழத்துக்கு அண்ணூர்ந்து பார்த்து நிற்காமல் தாத்காலிகமான லப்ளின் நிர்வாகத்தை ஒப்புக்கொண்டுவிட்டார்கள். பிரிடனும் அமெரிக்காவும் லண்டனிலுள்ள போலீஸ் நிர்வாகத்தைதான் இன்னமும் ஒப்புக்கொள்ளுகின்றன. ராஜ தந்திர முறையில் இதனுல் குழப்ப மேற்படக்கூடுமென்றும் ராணுவ முறையில் இது உபயோகமுள்ளது. வார்ஸாமுன் காத்துக்கொண்டிருந்த ருஷ்ய சேனைகள் இப்பொழுது முன்னேறக்கூடும்.

**ஹங்கேரி.** ருஷ்யாவின் ஆதரவின்கீழ் ஹங்கேரியும் தாத்காலிக நிர்வாகத்தை அமைத்து விட்டது. புடாபெஸ்ட் வீழ்ச்சி பெற்றபின் அந்த நிர்வாகம் புடாபெஸ்டில் ஸ்தாபிக்கப்படும்.

வி வி வி வி வி

**பிரான்ஸ்.** நேசதேசங்களுடன் சேர்ந்து போரின் அதன் சர்வ ஐச்வர்யங்களையும் ஈடுபடுத்துவதாக வாக்குறுதி செய்துவிட்டது. அது தனிப்பட்ட முறையில் சமாதானத்தையோ அல்லது யுத்த நிறுத்தத்தையோ செய்துகொள்ளாது. அட்லாண்டிக் சாஸனத்தின் ஷரத்துகளை அது அனுசரித்து வரும். டிகால் பின்வருமாறு சொல்லுகிறான். "நாங்கள் காயம்பட்டிருக்கிறோம். ஆகிலும் வெற்றிக்காக பிரான்ஸ் ஆயுதபாணிகளாக யுத்தமுனையில் நின்று நிச்சயமாகப் போர்புரியும்."

வி வி வி வி வி

**துருக்கி.** ஜப்பானுடன் துருக்கிக்கு உள்ள ராஜதந்திர உறவுகளை துருக்கி ரத்துசெய்துவிட்டது. இதனால் ஐரோப்பாவில் ஒரு முக்கியமான தகவல் அறியும் நிலயத்தை ஜப்பான் இழந்துவிட்டது.

---

## நாஸிகளின் பதில் தாக்குதலின் அர்த்தம்.

### ஹிட்லரின் வெறிபிடித்த முயற்சி.

(டெயிலி டெலகிராப்).

பெல்ஜியத்தின் தென் கிழக்கு மூலையிலும் லக்ஸம்பர்க்கின் வடகிழக்கு எல்லைச்சரகத்திலும் நிலைபெற்றிருக்கும் அமெரிக்க 1-வது சேனையைத் தாக்க முற்பட்டிருக்கும் ஜெர்மனியின் முயற்சி ஜாக்கிரதையாகத் திட்டம் போடப்பட்டு பரிஷ்காரமாக அமைக்கப்பட்ட பதில் தாக்குதல்.

ஆகையால் அதன் விளைவுகளை ஆரம்ப வெற்றிகளைக்கொண்டு மதிக்கக்கூடாது. நமது போக்குவரத்து மார்க்கங்களைக் குலைக்கவும் நமது மூலப்படைகளை இந்த அபாயத்தைத் தடுக்க அனுப்பச் செய்து மற்ற இடங்களிலும் உள்ள அல்லது ஆயத்தம் செய்யப்படும் போருக்கு பலஹீனமேற்படுத்துவதும்தான் ஜெர்மனியின் யுத்த தந்திரம்.

காஸ்ஸரினிலும் அவ்ராஞ்சஸிலும் எதிரி ஏராளமான கவசங்களை ஈடு படுத்தி அவைகளை இழந்தது போல இன்று அவனிடமுள்ள மூலபலத்தின் பெரும் பாகத்தை உபயோகித்து வருகிறான். அவன் கோலோன் பிராந்தியத்தில் ஏராளமான படைகளைக் குவித்து வைத்திருந்தான்.

இந்தப் படைகளை நேசதேசப் படைகள் கோலோன் சமவெளிக்கு ஊடுருவிச் சென்றபின் தற்காப்பு முறையிலும் அல்லது அவனுடைய ஆயத்தங்களை மறை மூகப்படுத்தக் கூடிய காடுகளடங்கிய பகுதியில் முன்னேறித்தாக்கவும் உபயோகப்படுத்தியிருக்கலாம். ஆகிலும் அவன் முடிவு செய்ததைப்பற்றி நாம் வருந்துவதற்குக் காரணமில்லை. தற்காப்பு முறையிலிருந்தால் அவனுக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தைவிட இப்பொழுது மேற்குப் போர்முனையில் இந்தத்தாக்குதலினால் அதிக நஷ்டமேற்படுவதற்கு ஹேஷ்யங்களிருக்கின்றன. ஜூன் மாதம் முதல் நேசதேச ஆகாச ஆதிக்கத்தை எதிர்த்து நிற்க முயன்ற ஜெர்மன் விமானப் படைக்கு என்ன நேரிட்டதோ அதே கதிதான் தரையில் நேசதேசத்தாரின் வலிமையை எதிர்த்து போராடும் பான்ஸர் படைகளுக்கும் காலாட் படைகளுக்கும் நேரிடும்.

மேலும் இந்தத் தாக்குதலில் ஒரு முக்கியமான அர்த்தம் இருக்கிறதென்று தோன்றுகிறது. கிழக்கிலும், மேற்கிலும், இதாலியிலும் வெகு காலமாக அநேக கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட்டபின்னும் எந்தப் போர்முனையிலும் பலமாக முன்னேறித்தாக்கும் சக்தியை ஜெர்மனி பெற்றிருக்கிறதென்ற ருஜூவானது நேசதேச ஜனங்களுக்கு திகிலை உண்டாக்கிவிடுமென்று எதிரி எண்ணம் கொண்டிருக்கலாம். இந்த அநேக தலைகளுள்ள பாம்பைக் கொல்ல முடியுமாவென்று அவர்களுக்கு சந்தேகம் ஏற்படலாம். வெளிப்படையாக தீர்க்க முடியாத ராணுவ, ராஜிய பிரச்னைகள் இருந்து வரும்பொழுது இறுதி வெற்றிவரையில் போரை நடத்துவது என்ற அவர்களின் ஊக்கத்தில் சிறிது தளர்ச்சி ஏற்படக்கூடுமென்றும் எதிரி நினைக்கலாம். பிரிடிஷ் மக்கள் சம்மந்தப்பட்ட மட்டில் இந்த அபிப்பிராயம் முற்றிலும் தவறானதாகும்.

ஜெர்மனி சாகும் தருவாயில் இல்லை என்ற ஞாபகம் நமக்கு ஏற்படுவது ஒரு வகையில் நலம்தான். நாம் அறியக்கூடிய வகையில், இந்தத்தாக்குதலில் ஹிட்லரின் வெறி காணப்படுகிறது. யுத்த நடவடிக்கைகளைத்தானே நேரில் நடத்த ஹிட்லர் முன் வந்துவிட்டதினால் நேசதேசத்தாருக்கு ஹிட்லர் ஒரு பெரிய சாதகத்தைச் செய்துவிட்டான் என்று எண்ணுவதற்கும் இது அனுகூலமாயிருக்கிறது.



எந்நிலைமையிலும், காலநிலைமையில் தெளிவு ஏற்பட்டு நேசதேச விமானப்படையின் நடமாட்டத்துக்குப் பூரா சௌகரியங்களும் ஏற்பட்டால் ஜெர்மனியின் முன்னேறித் தாக்கும் நடவடிக்கை எந்தப் போர்முனையிலும் ராணுவ நிலைமையை மாற்றிவிட முடியாதென்பது வெகு சீக்கிரத்தில் புலப்பட்டுவிடும். இந்த முன்னேற்றம் ஓய்ந்தபின் முன்னைவிட அப்பொழுது எந்தப் போர்முனையிலும் சமாளித்து நிற்கும் சக்தியை எதிரி இழந்து விடுவான். பிரான்ஸிலிருந்தும், பெல்ஜியத்திலிருந்தும் துரத்தியடிக்கப்பட்டபின் குவிக்கப்பட்ட மூலப் படைகளின் பெரும் பாகத்தை ஜெர்மனிகூய நேசதேசப் படைகள் அழித்துவிடாமல் தடுக்க இப்பொழுது ஈடுபடுத்த முயற்சித்திருக்கிறான். இந்த நடவடிக்கையின் பூரா ஐந்தொகையைப் போடுவதற்கு சிறிது காலமாகும். ஆகிலும் ஜெனரல் ஈசன்ஹவரிடம் ஏராளமான படை பலமிருப்பதினால் ஐந்தொகையில் ஜெர்மனி பக்கத்தில்தான் அதிக நஷ்டம் காணப்படும் என்பது நிதர்சனமானது.

---

## பால்கன் நாடுகளிலிருந்து ஜெர்மனியின் பின்வாங்குதல்.

(டைம்ஸ் பத்திரிகையின் ராணுவ நிருபர்).

மார்ஷல் டிடோவின் பிரதிநிதியான ஜெனரல் வெல்பிட் கொரில்லாப் படைகளின் சமீப கால நடவடிக்கைகளைப் பற்றி லண்டனில் ஒரு விருத்தாந்தம் கூறியிருக்கிறார். அதையும் பல்கேரிய ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் சில தகவல்களையும் சேர்த்துப்பார்த்தால் சமீப காலத்தில் பால்கன் நாடுகளின் நிலமை ராணுவ தந்திர முறையில் எவ்விதமிருக்கிறதென்பதைப்பற்றி நாம் தெளிவான முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கிறது. இப்பொழுது ஜெர்மனி பின்வாங்கும் நடவடிக்கை எந்த கட்டத்திலிருக்கிறதென்றும் நன்கு வெளிப்படுகிறது.

முதலாவதாக, யூகோஸ்லாவியர்கள் பாலடான் ஏறிப்பகுதியிலுள்ள மார்ஷல் டோல்புகின் கீழுள்ள ருஷ்யப்படைகளுக்கு பார்ச்வத்தில் ரக்ஷணையாக இருந்துவருகிறார்கள். இரண்டு டிவிஷன் படைகள் இதற்காக டிராவா நதியைத் தாண்டிவிட்டன. அதற்குத் தெற்கில் டான்யூப் நதிக்கும், ஸ்ரெம் அல்லது சிர்மியா என்ற மாகாணமாகிய சாவாவுக்கும் மத்தியில் இரண்டு சேனைப் பகுதிகளிருக்கின்றன. ஆனால் பிரிடனின் சேனை எண்ணிக்கைப்படி இது ஒரு சிறிய படைப் பகுதியென்றுதான் சொல்லவேண்டும்.

ஜெர்மானியர்கள் விங்கோல்ஸி என்ற ரஸ்தா இருப்புப்பாதை மத்திய நிலயத்தை பலமாகத் தற்காப்பு செய்துவருகிறார்கள். அதற்கும் ஸாக்ரப்புக்கும் சம்பந்தம் இருப்பதால் விங்கோவ்ஸி ஜெர்மானியர்களுக்கு முக்கியத்துவமுள்ளது. ஸலோனிகா—ஸ்கோபிள்ஜி—கிரால்ஜேவோ பெல்கிரேட் இருப்புப்பாதை செல்லும் இபார் பள்ளத்தாக்கு வழியாக வடக்கு நோக்கிச் செல்லும் ஜெர்மன் படைகள் விலாப்பக்கத்திலும் பின்புறத்திலும் தேசிய விடுதலைப் படைகள், பல்கேரியப்படைகளால் தாக்கப்படுகின்றன. அந்தப் படைகள் பலஹீனமுள்ள 10 டிவிஷன்கள் என்று கணக்கிடப்படுகிறது.

யூகோஸ்லாவியாவில் சில ருஷ்யப் படைகளிருக்கின்றன. பல்கேரிய சேனையும் ஏராளமாக அங்கு வந்துவிட்டது. பல்கேரியர்கள் மூன்று பகுதிகளாக அக்டோபர் மாதத்தில் அந்நாட்டிற்குள் புகுந்தார்கள். வடக்குப் பகுதியில் போலியா பெல்கிரேட் இருப்புப்பாதை வழியாகச் சென்ற படை கடும்போருக்குப் பின் அக்டோபர் 16-ம் தேதியன்று நிஷுக்குள் நுழைந்தது. அதற்குப் பிறகு அது மேற்கு நோக்கி முன்னேறிற்று. இந்தப்படைகள் இப்பொழுது இபார் பள்ளத்தாக்கில் ஜெர்மானியர்களைத் தாக்கிவருகிறதென்று தோன்றுகிறது. பலமான இரண்டாவது படை கியூஸ்டெண்டிலிருந்து ஸ்கோபிள்ஜிக்கு மேற்கு முகமாகப் போகும் ரஸ்தா வழியாகச் சென்று, சென்ற மாதத்தில் ஸ்கோபின்ஜியைப் பிடித்தது. மூன்றாவது படை ஸட்ருமிகாக் கணவாய் வழியாக நுழைந்து வார்டாரை அடைந்தது. ஸ்டிப்பையும், வெலலையும் பிடித்தது.

பல்கேரியர்கள் பலமாகத் தாக்கியதினால் அதிக நஷ்டத்துக்குள்ளாகினார்களென்று ஜெனரல் வெல்பிட் தெளிவுறச் சொன்னார். அல்பேனியாவிலிருந்து பின்வாங்கியதும் மாண்டினீக்ரோவில் ரக்ஷணை செய்துவரும் படைகளும் சேர்ந்து மூன்று டிவிஷன்கள் கொண்ட ஜெர்மன் படை ஆல்பேனியாவின் எல்லைச் சரகத்திற்கு வடக்கில் போட்கோரிசாவைச் சுற்றி குவிக்கப்பட்டிருக்கிறது. அது வடகிழக்கு நோக்கி ஊடுருவிச் சென்று இபாரிலுள்ள படைகளுடன் சேர முயன்றுவருகிறது. வடக்கிலிருந்து வந்த உதவிப் படை பிஜெலே போல்ஜியை ஆகிரமித்தபின் அதற்கு வழியைச் சுத்தி செய்ய முயன்றுவருகிறது. இதுவரையில் ஜெர்மன் படைகள் சமாளித்து நின்றுவருகிறார்கள். ஆகிலும் ஜெர்மானியர்கள் ஊடுருவிச் சென்றுவிடக்கூடும்.

வடமேற்கில் பாஸ்னியாவில் படைகள் பின்வாங்குவதற்கு வசதியளிக்க போக்குவரத்து மார்க்கங்களைக் காப்பாற்ற ஜெர்மானியர்கள் கூடுமான பிரயத்தனங்களைச் செய்து வருகின்றன.

அவைகள் முக்கியமாக நதிப் பாலங்களை நொருக்க முயற்சி செய்துவரும் கொரில்லாப்படைகளைத் தாக்கி வருகின்றன.

உள்நாட்டு உதவிப் படைகளைத் தவிர, ரக்ஷகப் படைகள், போக்குவரத்துப் படைகள் உள்பட ஜெர்மனியிடம் 18 டிவிஷன் துருப்புகளிருக்கின்றனவென்று ஜெனரல் வெல்பிட் மதிப்பிடுகிறார். இந்தப் படைகள் வெற்றிகரமாகப் பின் வாங்கிவிட்டால் அவைகள் பலமான உதவிப் படைகளாக இருக்கும். இதுவரையில் பின்வாங்குவதில் 10,000 பேர்கள் கைது செய்யப்பட்டுவிட்டார்கள், மற்றும் அநேகர்கள் உயிர் துறந்தார்கள். ஏராளமான போக்குவரத்து வண்டிகளும் எதிரிக்கு நஷ்டமாகிவிட்டன.

---

## ஆல்பேனியாவின் விடுதலை.

### கொரில்லாச் சண்டையில் நேசதேசத்தாரின் பங்கு.

**(டைம்ஸ் பத்திரிகை.)**

ஆல்பேனியாவில் அச்சு எதிரிகளைத் துணிவுகரமாகத் துவக்கி இறுதியில் பூரணமான வெற்றி பெற்ற கொரில்லாப்படைகளின் போரில் பிரிடன் எவ்வளவு பங்கெடுத்துக் கொண்டது என்பதைப்பற்றி இப்பொழுது முதல் தடவையாக நமக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

இந்த நடவடிக்கைகள் பின் வருபவை. துணிவுகரமான தாக்குதல்கள், வெற்றிகரமாக மறைந்து இருப்பது, சுற்றிவளைத்துவரும் ஜெர்மன் படைகளிடமிருந்து சாதுரியமாக தப்பிவிடுவது, சங்கியையிலும் ஆயுதங்களிலும் மிகுதி பெற்ற எதிரியுடன் விடாப்பிடிப்புடன் சமாளித்து நிற்பது, கடுங்குளிர், சோர்வு முதலியவற்றைதீரத்துடன் சகித்துக் கொள்வது. 1943ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் தேசாபிமானப் படைகளுடன் முதல் முதலாக தொடர்பு ஏற்படுத்திய பிரிடிஷ், ஆபீஸர்கள், சோல்ஜர்களின் சிறு பகுதி கொரில்லாப் படைகளை சீர்படுத்தி அவைகளுக்கு பயிர்ச்சியும் அளித்தன. அப்படைகள் முதலில் சிறியதாக இருந்த போதிலும் பின்பு வலிமையிலும் புத்திசாலித்தனத்திலும் யுத்த அனுபவத்திலும் நாளடைவில் அதிகரித்துவிட்டன.

அவைகளின் விடாமுயர்ச்சியாலும் பிரிடிஷ் விமானப்படையின் மிகுதியான ஆதரவினாலும் ஜனவரியில் 5,000 பேர்களாக இருந்த படைகள் ஸெப்டம்பர் மாதத்தில் டிவிஷன்களாகவும் பிரிகேடுகளாகவும் அமைக்கப்பட்டு 30,000 க்கு அதிகரித்தது. கடற்படை கமாண்டோ படைகளின் உதவி கொண்டு, ஜெர்மானியர்கள் வடக்கு முகமாக பின் வாங்கும் பொழுது அவைகள் தொந்திரவையும் நாசத்தையும் உண்டு பண்ணின. பிரிடிஷ்-ஆல்பேனியர்களின் ஒன்றுபட்ட படைகள் பிற்போக்குகளையும் ஏமாற்றங்களையும் தவிர்த்து பிழைத்திருக்க போதுமானபலம் பெற்றிருந்தது. துரதிர்ஷ்டமான நடவடிக்கைகளும் எதிரியின் பலாத்காரமும் அழிவும் அவர்களுடைய ஊக்கத்தை குலைக்கவில்லை. அவர்களின் பிரயத்தினம் ஆல்பேனியாவின் விடுதலையை அளித்துவிட்டது. இந்தத் துணிவுகரமான நடவடிக்கையில் ஒரு சிறிய தீரமுள்ள பிரிடிஷ் படை இவ்வளவு அரிய சேவையை செய்திருக்கிறதென்பது சந்தோஷகரமான செய்தி.

---

## V. 2. ஜெர்மன் ரகசிய ஆயுதத்துடன் செய்த போரில் ஸ்பிட்பையரின் பாகம்.

### ஓட்டியில்லா ஆயுதங்களின் போருக்கு ஜவாப்பு.

**(விங் கமாண்டர் L. V. பிரேசர்).**

பிரிடனின் சண்டை விமானப் படையைச்சேர்ந்த ஸ்பிட்பையர் விமானங்கள் விமான யுத்தத்தில் மிகவும் சிக்கலான அற்புதமான போரில் ஈடுபட்டிருக்கின்றன. இதுதான் V. 2. என்னும் ஜெர்மனியின் வெகுதூரம் செல்லும் அவுட் வாணங்களை அழிப்பது. அந்த வாணங்களை ஜெர்மானியர்கள் ஹாலந்திலிருந்து தெற்கு இங்கிலாந்து பேரிலும் மேற்குப் போர்முனையில் போர் புரிந்துவரும் நேசதேசப்படைகள் பேரிலும் ஏவி வருகிறார்கள்.

அடிப்படையை நோக்குமளவில் V. 2. என்பது வெகுதூரம் செல்லும் வெடிகுண்டு. இதுவும் வெகுதூரம் சென்று வெடிக்கக்கூடியது. பீரங்கிக்குண்டுக்கும் இதற்கும் ஒரு வித்தியாசமுண்டு. இதற்கு புரொபெல்லண்ட் குண்டிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. இது பீரங்கியிலிருந்து சுடப்படுவதில்லை. இந்த ஆயுதத்தை அழிக்கவேண்டுமானால் அது புறப்படும் ஸ்தானங்களைக் கைப்பற்றிவிடவேண்டும்.



இப்பொழுது பிரிடனின் ஸ்பிட்பையர் சண்டை விமானங்கள் V. 2. ஆயுதங்களையும் அதன் வேலைக்காரர்களையும் அதன் நிலயங்களையும் தாக்கிக் கூடுமான வரையில் அழித்து வருகின்றன.

வேலைக்குத் தக்கவாறு ஸ்பிட்பையர் விமானங்கள் உபயோகப்படுகின்றன. குண்டுகள் புறப்படும் இடங்கள் விரிவான பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. நல்ல லக்ஷியங்களாக இருக்க அவைகள் பிரமாதமான அமைப்புகளாக அமைக்கப்படவில்லை.

ஆகையால் கனமான வெடி விமானங்கள் ஏராளமாகச் சென்று தாக்குவதென்பது சுலபமான நடவடிக்கையல்ல. சிறிய வெடிகுண்டுகளை நன்றாய்க் குறிதவறாமல் போடுவதுதான் அத்யாவசியமான காரியம். தாக்குதல் இடைவிடாமலும் அநேக இடங்களிலும் நடைபெற வேண்டும். முக்கியமாக அவுட் வாணங்கள் புறப்படும் இடங்கள், அவைகளைக் கொண்டு வரும் போக்குவரத்துகள், அவைகளைக் குவித்துவைத்திருக்கும் இடங்கள், அவைகளை அமைக்கும் சாலைகள், முதலியவற்றின் பேரில் வெடிகுண்டுகளைப் போடவேண்டும்.

ஒவ்வொரு அவுட் வாணத்தையும் அது புறப்படும் இடத்துக்கு வரும் வரையிலும் அது அங்கிருந்து புறப்படும் வரையிலும் கூடுமானவரையில் தாக்கிவிடவேண்டும். அது புறப்பட்டுவிட்டால் விமானங்கள் அதை ஒன்றும் செய்யமுடியாது. அது அதிக வேகத்துடன் அபாரமான உயரம் சென்று அதன்பின் மகத்தான சப்தத்துடன் பூமியில் விழுகிறது. இந்த விசித்திரமான போரை நடத்த ஸ்பிட்பையர்கள் ஏவப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாக்குதலிலும் ஒவ்வொரு விமானமும் மிகவும் ஜாக்கிரதையாகக் குறி தவறாமல் வெடிகுண்டுகளைப் போடவேண்டும். இந்தத் தாக்குதல் அநேக ஆயிரம் அடி உயரத்திலிருந்து நடத்தப்படவேண்டும். குண்டுகள் லக்ஷியத்தின் பேரில் 2,000 அல்லது 3,000 அடிகளிலிருந்து போடப்படவேண்டும். குண்டு வீச்சுக்குப்பின் பீரங்கிகளும் யந்திர பீரங்கிகளும் குண்டுகளை வீசி லக்ஷியங்களுள்ள பிரதேசத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் தரை மட்டமாக்கவேண்டும்.

இந்தத் தாக்குதல்களில் குறிதவறாமலடிப்பது இரண்டு காரணங்களுக்காக அவசியமானது. முதலாவது லக்ஷியங்கள் சிறியவைகள், நன்றாக ஜாக்கிரதையுடன் மறைத்து வைக்கப்பட்டிருப்பவைகள். இரண்டாவது, அவைகள் பொதுஜனங்களின் சொத்துக்களுக்கு அருகாமையிலிருக்கின்றன. பொது ஜனங்களின் சொத்துக்களை நாசம் செய்வது கூடாது. இது விஷயத்தில் ஸ்பிட் பையர் விமானிகள் அதிகத் திறமையுள்ளவர்களாதலால் பிரிடிஷ் நடுத்தர வெடி விமானப்படைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த குறிப்பான லக்ஷியங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்பிட் பையர் வெடி விமானங்கள் வெற்றிகரமாக டச்சு நாடுகளில் மறைமுகமாக இருந்த V. 2. குண்டுகளின் ஸ்டோர், தயாரிக்கும் இடங்கள், புறப்படும் ஸ்தானங்கள் முதலியவற்றைத் தாக்கியபொழுதுதான் நவம்பர் 21-ம் தேதியன்று V. 2. லக்ஷியங்கள் தாக்கப்படுகின்றன என்று விமானப்படை இலாக்கா பொதுஜனங்களுக்கு அறிமுகப் படுத்தியது. வெடிகுண்டுகள் லக்ஷியங்கள் பேரில் நேராக விழுந்தன. விமானிகள் அவுட் வாணம் புறப்பட தயாராக இருந்த நிலைமையில் அதன்பேரில் குண்டு விழுந்ததைக் கண்ணுற்றார்கள்.

ஸ்பிட்பையர் விமானங்கள் V. 2. அவுட் வாணங்களை பகல் நேரம் பூராவிலும் விமான நடவடிக்கைக்கு சௌகரியமில்லாத காலத்திலும் எதிரியின் மிகவும் கடுமையான விமான எதிர்ப்பு பீரங்கி தாக்குதலுக்கு உட்பட்டும் இடைவிடாது தாக்கி வந்தன.

V. 2. அவுட் வாணங்களை ஜெர்மனியர்கள் மிகுதியாக மதித்து வருவதால் அவைகளிருக்கும் நிலயங்களில் ஏராளமான விமான எதிர்ப்பு பீரங்கிகளை அமைத்து அவைகளைக் காப்பாற்றி வருகிறார்கள். அவைகளைக்கண்டு ஸ்பிட் பையர் விமானங்கள் தயங்கி நிற்கவில்லை. தாக்குதலின் எண்ணிக்கை மூன்று ஸ்தானங்களுக்கு அதிகரித்துவிட்டது.

இதைத் தவிர ஹாலந்தில் ரோந்து செய்யும் சண்டை விமானங்கள் V. 2. புறப்படும் நிலயங்களுக்கு வரும் ரஸ்தா, இருப்புப்பாதை போக்குவரத்துகளை அநேகம் தடவை தாக்கியிருக்கின்றன.

இவ்விதமான வெற்றிக்கு ஸ்பிட்பையர் விமானிகள் தளங்களுக்குச் சமீபத்திலுள்ள இடங்களில் தளங்களைத் தாக்குவதின் மூலம் அநேக வாரங்களாக விசேஷப்பயிற்சி பெற்றதுதான் காரணமாகும். சண்டை விமானப்படை அவுட் வாணங்களைத் தாக்குவதின்மூலம் ஒருவர் செல்லக்கூடிய சண்டை விமானம் உயரத்திலிருந்து குறிதவறாமல் குண்டு வீசுவதைவிட குண்டுசி முனையுள்ள பாகங்கள் பேரிலும் வெடிகுண்டுகளை அதிகக் குறிப்பாக போடக்கூடும் என்பதை ருசுச் செய்துவிட்டது.

உதாரணமாக ஹேக்கிலுள்ள சரித்திரப் புகழ்பெற்ற பழைய அரண்மனையாக இருந்து இப்பொழுது கலைஞான கண்காட்சி சாலையாக உள்ள இடத்திலிருந்து 300 கெஜத்துக்கு சமீபத்

தில் ஜெர்மானியர்கள் அவுட் வாணங்களின் ஸ்டோரையும் புறப்படும் ஸ்தானத்தையும் அமைத்திருக்கிறார்கள். பிரிடிஷ் ஆஸ்திரேலிய விமானப்படையைச் சேர்ந்த ஸ்பிட்பையர் விமானங்கள் ஒரே தாக்குதலில் அந்த பிரதேசத்துக்கு வெளியில் ஒரு குண்டைக்கூட வீண் செய்யாமல் அந்த ஸ்தலத்தையே நொருக்க முயன்றார்கள்.

மற்றும் ஜெர்மானியர்கள் டச்சு நகரத்திலுள்ள முக்கியமான தெருவிலுள்ள ஒரு சிற்றுண்டிசாலையை ஹோட்டலின் உப நிலையமாக ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்பிட்பையர் விமானங்கள் அதற்கு சமீபத்திலுள்ள சொத்துக்களுக்கு சேதமன்னியில் ஹோட்டல் பேரில் குண்டுகளைப் போட்டன.

மற்றொரு 100கஜ அகலமுள்ள ரயில்வண்டித் தொடர்கள் நிற்குமிடமும் வெற்றிகரமாக தாக்கப்பட்டது. அதற்கு ஒரு பக்கத்தில் ஒரு பெரிய ஆஸ்பத்திரியும் மற்றொரு பக்கத்தில் அநேக வீடுகளும் இருந்தன. அந்த இடத்தில் V. 2. வாணங்களை ஏற்றிச் செல்லும் வண்டித் தொடர்கள் நின்றுகொண்டிருந்தன. ஸ்பிட்பையர் விமானங்கள் மேகங்களுக்கு மத்தியில் 8,000 அடி பருந்துப் பாய்ச்சல் செய்து ரயில்வண்டிகள் தங்குமிடத்தை மட்டும் நொருக்கி விட்டு சமீபத்திலுள்ள கட்டடங்களுக்கு யாதொரு சேதமன்னியிலும் திரும்பிச் சென்றன.

இந்த உதாரணங்கள் அவுட் வாணங்களைத்தாக்கும் போரிலுள்ள சிரமங்களையும் அபாயங்களையும் வெளிப்படுத்துகின்றன. இந்தப் போர் முடிந்தபாடில்லை. இதற்குப்பதில் செய்வது தரைப் படைகளின் செய்கையைப் பொருத்தது. எதிரிகளின் ஆகாயத்தில் ஆதிக்கம்பெற்ற விமானப் படையின் சக்தியை வெற்றிகரமாக மிகவும் சிக்கலான மறைமுகமான வேலைக்கு உபயோகப்படுத்தலாம் என்பதற்கு இந்தத் தாக்குதல் மற்றொரு உதாரணமாகும்.

எதிரி யுத்தத்தில் வெற்றிபெற உபயோகித்த ரகசிய ஆயுதங்களான காந்த சுரங்க வெடிகள், பறக்கும் வெடிகுண்டுகள் எக்கதியை அடைந்தனவோ அவ்வழியைத்தான் V. 2. அவுட்வாணமும் பின்பற்றும். அதன் வரலாறு பின்வருமாறு :—ஒரு புதிய ஆயுதத்தைக் கண்டு பிடித்து அதை உற்பத்திசெய்வதில் ஜெர்மானியர்கள் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆனால் அது ஜனங்கள் முன் தோன்றிய சிறிது காலத்திற்குள் அதற்கு பரிகாரத்தை பிரிடன் தேடிவிடுகிறது.

---

# ஐரோப்பா போரில் விமான நடவடிக்கை.

## எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களின் சிரமங்கள்.

### E. கோல்ஸ்டன் ஷெப்பர்ட்.

(ஸண்டே டைம்ஸ் பத்திரிகை).

பிரயாசையும் புத்தி விசாலமுள்ள ஒரு எதிரியை அசைவற்று இருக்கும்படி செய்ய வேண்டுமானால் இடைவிடாது தாக்கவேண்டுமென்று பிரிடிஷ் விமானப்படை அநேக நாட்களுக்குமுன்பே அறிந்து விட்டது. நார்மண்டியில் ராணுவ அவசியத்துக்குப்போது மானபடி துணிக்கப்படும் முறையை விமான நடவடிக்கை மூலம் சாதித்தோம். இந்த திட்டம் ரைன் நதிக்கு சமீபத்தில் உருவெடுத்து வருகிறது. விடாமுயற்சிதான் இதைப் போஷித்துவரக்கூடும். விசாலமான பரப்புகளில் இடைவிடாது தாக்குவதும் நல்ல பலன்களை அளித்துவருகிறதென்பது குறிப்பிடத்தக்கது. ஜெர்மன் கப்பல்கள் கரையோரமாகச் செல்லும் நாட்டின் கடற்கரைபிரதேசம்தான் பிரிடிஷ் விமான நடவடிக்கைக்கு மிகவும் சிரமமான வட்டாரம். அந்தக் கப்பல்களுக்கு துணைக்காவல் புரியும் கப்பல்களுக்கும் கடற்கரை பீரங்கிகளுக்கும் நேசதேச மஸ்கிடோ விமானங்களும் போபைடர் விமானங்களும் சவால் விடுக்கின்றன. ஆறு ராத்தல் குண்டுகளை வீசக்கூடிய பீரங்கிகளுள்ள மஸ்கிடோ விமானங்களுக்கு அநேக வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. அதன் மூலம் ஜெர்மன் போக்குவரத்து தடைபெற்றுவிட்டது.

இதற்கும் மற்ற சம்பவங்களுக்கும் யாதொரு சம்பந்தமில்லாதபோதிலும் இந்த நடவடிக்கை ஜெர்மனியின் தற்காப்பை ஒருவாறு பாதிக்கும். வடக்கு நார்வேயில் இன்னும் 16 முதல் 18 டிவிஷன் ஜெர்மன் துருப்புகள் இருக்கின்றன. அவைகளில் சிலவற்றை ஜெர்மனிக்குக் கொண்டுவந்தால் நலமாக இருக்கும். நார்வேயிக்கும் ஜெர்மனிக்குமுள்ள போக்கு வரத்து வழிமறிக்கப்படுவதினால் வடக்கிலுள்ள படைகளின் சலனம் குறைந்து விட்டது. ஒரு மாதத்தில் ஒரு டிவிஷனைத்தான் ஜெர்மனிக்குக் கொண்டுவர முடிகிறது. பின்வாங்கும் வழிகளும் துணிக்கப்பட்டு விட்டன. ரைன் நதியிலுள்ள படைகளுக்கு அவைகள் உதவியாக வரக்கூடுமாகையால் பிரிடிஷ் கடற்கரை கமாண்டு விமானப்படையின் நெடுந்தூரச்சென்று தாக்கும் நடவடிக்கைகள் போக்குவரத்து மார்க்கங்களின் போரில் சம்பந்தப்பட்டவையென்று சொல்லலாம்.



போர் முனைக்குப் பின்புறமுள்ள உதவிப்படைகளை துண்டித்துவிடுவதுபோல தூர தேசங்களிலுள்ள படைகளைத் துணித்துவிடுவதும் முக்கியத்துவமுள்ளதுதான். இதாலிய, பால்கன் நாடுகளிலுள்ள தளங்களிலிருந்து விமானங்கள் இந்த அலுவல்களைச்செய்து வருகின்றன. 10 முதல் 12 வரையுள்ள ஜெர்மன் டிவிஷன்கள் ருஷ்யர்களிடமிருந்து ஆஸ்திரியாவைக் காப்பாற்ற யூகோஸ்லேவியாவிலிருந்து பின்வாங்க முயலுகின்றன. யூகோஸ்லேவிய கொரில்லாப்படைகளின் கண் காணிப்பிலிருந்து தப்பி ஓடக்கூடிய படைகள் ஹங்கேரி வழியாகச் செல்ல முடியாமல் அங்குள்ள இருப்புப்பாதைகள் தகர்க்கப்படுகின்றன. இருப்புப்பாதைகளை உபயோகமில்லாமல் செய்வது சுலபமான காரியமல்ல. ஆகிலும் விமானப்படைகள் இது விஷயத்தில் பெரும் முயற்சி செய்துவருகின்றன. சமீபகாலத்தில் ஒரு தினத்தன்று அமெரிக்க 8-வது விமானப்படையைச் சேர்ந்த கனமான வெடி விமானங்கள் மேற்கு ஜெர்மனியிலுள்ள ஏழு ரயில்வே இஞ்சின்கள் தங்குமிடத்தைத்தாக்கின. பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் முக்கியமாக எண்ணெய் பிரதேசங்களையும் போக்குவரத்து இலக்குகளையும்தான் தாக்கிவருகின்றன. அத்துடன் பைடர் வெடி விமானங்கள் ரயில் வண்டித் தொடர்களையும் தாக்கிவருகின்றன. சென்ற மாதத்தில் ஜெர்மனியிலுள்ள 1,000 ரயில் இஞ்சின்கள் பழுதுபடுத்தப்பட்டன. அல்லது நாசமாக்கப் பட்டன. ஆகையால் சலன சக்தியைக் குறைத்து விடுவதென்பதில் கவனம் செலுத்துவதற்கு நார்மண்டி நடவடிக்கை உற்சாகம் ஊட்டுகிறது. ஆனால் இப்பொழுது உள்ள திட்டம் விரிவானது. எண்ணெய் ஸப்ளையில்தான் இப்பொழுது நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனிக்கு எண்ணெய் ஸப்ளை செய்துவந்த மற்றும் இரண்டு எண்ணெய் பிரதேசங்கள் கூடிய சீக்கிரத்தில் ருஷ்யர் வசமாகிவிடும். ஹங்கேரிய எண்ணெய் பிரதேசமும் பாலடான் ஏரிக்கு மேற்கில் வெகு தூரத்திலில்லை. கூடிய சீக்கிரத்தில் வியன்னாவுக்கு வடக்கிலுள்ள எண்ணெய் பிரதேதத்துக்கும் ஆபத்து நேரிட்டுவிடும். வெடி விமானங்களுக்கு எண்ணெய் பிரதேசங்கள் லாபகரமான லக்ஷியங்களில்லை. அவைகளைவிட எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலைகளும் சேர்க்கை எண்ணெயை உற்பத்திசெய்யும் சாலைகளும்தான் சிறந்த லக்ஷியங்கள். ஹானோவைச் சுற்றியும் ஸிட்சிக்கு சமீபத்திலுள்ள மற்ற தொழிற்சாலைகளிலும் சமீபகாலத்தில் அமெரிக்கர்கள்கண்ட விமான எதிர்ப்பு பீரங்கிகளை நோக்குங்கால, ஜெர்மானியர்கள் எண்ணெய் பிரதேசங்களின் முக்கியத்துவத்தை எவ்விதம் மதிக்கிறார்களென்பது வெளியாகும்.

ஆகையால் விமான நடவடிக்கை என்பது நன்றாய் நடத்தப்பட்டதாகக் காணப்படும். அதில் ஏற்படும் செலவிற்கும் தகுந்த பலன் கிடைக்கும். அதன் மூலம் எதிரியின் போக்கு வரத்துகளுக்கு சிரமம் ஏற்பட்டிருக்கிறது. அடிக்கடி வெளியிடப்படும் புள்ளிவிபரங்களை நோக்கினால் 3,000 விமானங்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கின்றனவென்று வெளிவருகிறது. கால்வாய்களையும், இருப்புப் பாதைகளையும் தகர்த்துவதினாலும், கப்பல்களை மூழ் கடிப்பதினாலும் எண்ணெய் ஸ்தாபனங்களை அழிப்பதினாலும், விமானங்கள் மேற்குப் போர் முனையைவிட அதிக விஸ்தாரமான போர் முனையில் எதிரியின் போக்குவரத்துகளை நாசமாக்கி வருகின்றன. உண்மையில் அவர்களுடைய யுத்த தந்திர நடவடிக்கை இப்பொழுது போராகவே மாறிவிட்டது. மேற்குப் போர்முனையின் நீண்டகால விமான நடவடிக்கையின் இறுதி கட்டத்தில் அதிக விளைவுகள் ஏற்பட்டுவிட்டது. இதை போர்முனை நடவடிக்கைக்கு சமானமாகச் சொல்லலாம்.

---

# அவர்கள் செலவைப் பொருட்படுத்தவில்லை.

## ஜனங்களின் தியாகத்தின் கதை.

### (H. G. பார்ன்ஸ்).

பிரிடனில் தேசீய வாழ்க்கையில் யுத்த முயற்சியால் பாதிக்கப்படாத எந்த பாகமும் கிடையாது. பிரிடனின் யுத்த முயற்சியைப்பற்றி ரகசியமான புள்ளி விபரங்களை வெளியிட்டுள்ள சமீப அறிக்கையின் முக்கியமான பாகம் யாதெனில் பிரிடனின் பூரா ஐச்வர்யங்களும் ஜெர்மனியையும் அதன் கூட்டத்தாரையும் முறியடிக்க நன்கு ஈடுபடுத்தப்பட்டனவென்பது தான். சரித்திரத்தில் எந்த நாடும் அதன் அளவுக்கு அதிகமான முறையில் எந்த விஷயத்திலும் இவ்வளவு தியாகம் செய்திருக்க முடியாது.

ராணுவ அவசியத்துக்கு ஏராளமான படைகளைத் திரட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது தான். 47 மிலியன் ஜனங்களில் 1944-ம் வருஷம் ஜூலை மாதத்தில் $5\frac{1}{4}$ மிலியன் ஜனங்கள் கவசம்பூண்ட படைகளிலும் பொதுஜன தற்காப்பு ஸ்தாபனங்களிலும் ஈடுபட்டிருந்தன. இன்னும் விமான நடவடிக்கை ஓய்ந்துவிடாததால் போர்ப் படைகளைப் போல பொதுஜன தற்காப்புப் படைகளும் இப்பொழுதும் அவசியம்தான். இதைத் தவிர ஏறக்குறைய 1 மிலியன் ஜனங்கள் யுத்த ஆரம்பத்திலிருந்து சேனையில் சேர்ந்து போர் புரிகிறார்கள் இதில்

உயிர் துறந்தவர்களும் யுத்தக் கைதிகளும் நோயின் காரணமாக சேவைப்படையிலிருந்து நீக்கப்பட்டவர்களும் சேர்ந்தவர்கள் தான்.

அதாவது பிரிடனின் ஜனத்தொகையில் ஆண், பெண், குழந்தைகள் உள்பட்டவர்களில் 7½-க்கு ஒருவர் வீதம் யுத்த சேவைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சேனையில் பத்து சதவிகிதம் கணக்கில் ஸ்திரீகள் ஆடையணிந்து சேவை செய்துவருகிறார்கள். அவர்கள் போர்முனைக்குச் செல்லாவிட்டாலும், மற்ற சேனைகளில் மனிதர்கள் செய்யும் வேலையை பிரிடனில் ஸ்திரீகள் செய்துவருகிறார்கள். இதன் மூலம் போர்முனைவேலைக்கு அநேக ஆடவர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

ஆகிலும் சோல்ஜர்களைப்போல அவர்களின் வேலையும் அபாயம் பொருந்தியது தான். உதாரணமாக, அவர்கள் விமான எதிர்ப்பு பீரங்கிகளைச் சுட அனுமதிக்கப்படுவதில்லை. ஆகிலும் அவர்கள் பீரங்கிகளுள்ள ஸ்தலத்திலுள்ள பலவிதக்கருவிகளைக் கையாண்டுவருகிறார்கள். மற்ற வேலைகளையும் செய்துவருகிறார்கள். ஆகையால் மனிதர்களைப்போல அவர்களும் விமானத்தாக்குதலுக்கு உட்படுகிறார்கள். ஜெர்மன் விமான நடவடிக்கையின்பொழுது விமான எதிர்ப்பு பீரங்கி நிலயங்களில் வேலைசெய்துவந்த ஸ்திரீகள் போர்முனையிலுள்ள போர்ப்படைகளைவிட அடிக்கடி வெடிகுண்டு வீச்சுக்குட்பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் ஏராளமான பிரிடிஷ்படைகள் பிரிடனின் சக்திக்கு உபரியாகவே போர்முனையின் முன்னணியில் போரில் கலந்துகொண்டிருக்கிறார்கள். பிரிடனின் புள்ளிவிபரங்களையும் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளுடையவும் குடியரசு நாடுகளுடையவும் புள்ளிவிபரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மை நன்கு விளங்கும். பிரிடனின் பொது ஜன தற்காப்பைத் தவிர பிரிடிஷ் சாம்ராஜ்யப்படைகள் 9¼ மிலியன்கள் கணக்காகுகின்றன. அவற்றில் 5 மிலியன் அதாவது 54 சத விகிதம் பிரிடனிலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றன.

சாம்ராஜ்ய குடியரசு நாட்டுத் துருப்புகள் உலகத்திலேயே மிகவும் சிறந்த உறுதியுள்ள போர்வீரர்கள், முக்கியமாக ஆஸ்திரேலியர்களும், நியூஸிலாந்து துருப்புகளும், தெற்கு ஆபிரிக்கர்களும், கனடியர்களும், இந்தியர்களும் சிறந்த ராணுவப் புகழைப் பெற்றிருக்கிறார்கள். இந்த யுத்தத்திலும் அவர்களின் முயற்சி தளர்ச்சி பெறவில்லை.

ஆகிலும் பிரிடனுக்கும் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கும் ஏற்பட்ட 1 மிலியன் மனிதர்கள் காயம்பட்டதைக் கவனிக்கும்கால் அவர்களில் 60 சத விகிதம் பிரிடனைச் சேர்ந்தவர்கள். இதுவும் அவர்களின் சங்கியைக்கு அதிகமான அளவு தான்.

இறந்தவர்களின் தொகையைக் கவனித்தாலும், 72 சத விகிதத்துக்குக் குறைவானவர்கள் பிரிடனைச் சேர்ந்தவர்கள். இந்தப் புள்ளி விபரங்களிலிருந்து எதையும், முக்கியமான உயர்வான மனிதர்களைக், காவு கொடுப்பதிலும் பிரிடன் சிறிதுகூட பின்வாங்கவில்லை என்று வெளிப்படுகிறது.

தியாகங்களின் அத்யாயம் இத்துடன் முடிவடைந்துவிடவில்லை. பிரிடிஷ் கப்பல்களில் சென்ற 30,000 மாலுமிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எதிரியின் வெடிகுண்டு வீச்சின் காரணமாக 57,000 பொதுமக்கள் இறந்திருக்கிறார்கள். அவர்களில் 31,000 பேர்கள் ஸ்திரீகளும் குழந்தைகளும்.

எந்நிலைமையிலும் ராணுவ சேவைக்குப் படை திரட்டு, ராணுவ நஷ்டம் முதலியவற்றின் புள்ளி விபரங்கள் சிறப்பாக இருக்கின்றன. ஆகிலும் இந்தக் கணக்குகள் சென்ற ஐந்து வருஷங்களில் பிரிடன் செய்த பூர்ணமான யுத்த முயற்சியின் ஒரு அம்சம் தான். மற்ற ஆதாரங்களிலிருந்து ஆயுதங்களும் முஸ்தீப்புகளும் கிடைத்தாலும் அதன் ஜனத்தொகைக்கு அதிகமான அளவிற்கு பிரிடனைப்போல மற்றறெந்த தேசமும் இவ்வளவு பெரிய சேனையைத் தயாரித்திருக்கவில்லை.

ஆகிலும் பிரிடிஷ் சாம் ராஜ்யப் படைகளின் ஒன்பது மிலியன்களுக்குத் தேவையான ஆயுதங்களின் 10-ல் 7 பாகத்தை பிரிடன் உற்பத்தி செய்கிறது. மற்ற நேசதேச சேனைகளுக்கும் ஒரு சிறிது அளவு தளவாடங்களை வழங்கியிருக்கிறது. பாக்கியுள்ள 30 சத விகிதத்தில் அமெரிக்கா 20 சத விகிதமும் சாம்ராஜ்ய நாடுகள் 10 சத விகிதமும் ஸப்ளை செய்திருக்கின்றன. அதாவது போர்முனைக்கு ஒரு பெரிய சேனையை அனுப்பியதுடன் அதற்குப் போதுமான முஸ்தீப்புகளையும் நேசதேசத்தார்களுக்கு உபரியாக 20 சத விகிதத்தையும் உற்பத்தி செய்திருக்கிறது.

பூர்ணமான யுத்தத்தைப்பற்றி ஜெர்மனி பீத்திக்கொண்டது. ஆகிலும் கிடைத்திருக்கும் புள்ளி விபரங்களிலிருந்து ஜனநாயக ஆக்ஷி முறைப்படி பொறுப்புள்ள தலைவர்களின் நாயகத்தின் கீழ் யுத்தத்திலீடுபட்ட ஸ்வதந்திரமும் ஜனநாயக மனப்பான்மையுமுள்ள பொது மக்கள் தான் அதற்குப் பூர்ணமான அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.



# ஐந்து வருடங்களில் 5,744 யுத்தக்கப்பல்கள் மிதக்க விடப்பட்டன.

## மகத்தான முயற்சி மூலம் பெரிய கடற்படை தயாரிக்கப்பட்டது.

ரியர் கடற் தளபதி H. G. தர்ஸ்பீல்ட்.
(டைம்ஸ் பத்திரிகையின் கடற்படை நிருபர்).

பிரிடனின் யுத்த முயற்சியைப்பற்றி வெளியிடப்பட்ட சமீப அறிக்கையில் சில ஸ்வாரஸ்யமான புள்ளி விபரங்கள் காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமானவை 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் முதல் பிரிட்டிஷ் கடற் படையின் விஸ்தாரத்தில் கட்டப்பட்ட கப்பல்களும் அவைகளில் அமைக்கப்பட்ட முஸ்தீப்புகளும் தான்.

யுத்த ஆரம்பத்தில் கடற்படையை விஸ்தாரப்படுத்துவது அவசரமான அவசியமாயிற்று. ஏனெனில் சமாதான காலத்தில் கடற்படை ஒப்பந்த மூலம் பத்திரத்துக்குத் தேவையான ரகமுள்ள யுத்தக்கப்பல்களைக் கட்டி வருவது தடைப்பட்டிருந்தது.

1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் நாசகாரிகளும், பாய்மரச் சிறு கப்பல்களும் தான் சாமான் கப்பல்களுக்குத் துணைக்காவல் புரிவதற்கும் யூ படகுகளின் தாக்குதலைச் சமாளிப்பதற்கும் அவசரமாகத் தேவைப்பட்டன. அப்பொழுது பெரிய சண்டைக் கப்பல்களைக் கட்டவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஏனெனில் ஏற்கனவேயிருந்த யுத்தக் கப்பல்கள் ஜெர்மனியிடமிருந்த கப்பல்களைத் தாக்க சக்தி பெற்றிருந்தன. ஆகிலும் 1937-ம் வருஷத்தில் கட்ட ஆரம்பிக்கப்பட்ட ஐந்தாம் ஜார்ஜ் வகுப்பைச் சேர்ந்த கப்பல்களைக் கட்டி முடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஜெர்மன் யுத்தக்கப்பல்களான பிஸ்மார்க்கும், டிர்பிட்ஸும் மிதக்கவிடப்பட்ட பொழுது அந்தக் கப்பல்களும் சமுத்திரத்தில் சஞ்சாரம் செய்யத் தொடங்கின.

பிரிடனில் சஞ்சாரிகள் மிகுதியாக இல்லை. ஆகையால் நடமாடிவந்த ஒரு சில சஞ்சாரிகள் அநேக சிரமங்களை அனுபவித்து வெகு காலம் கடலில் ரோந்து செய்யவேண்டியிருந்தன. சிறிய யுத்தக்கப்பல்களைப் போல் அவைகளுக்கு அதிகத் தேவை ஏற்படவில்லை. சிறிய கப்பல்கள் தான் பிரிடனின் கடல் போக்கு வரத்துக்கு ரக்ஷணையளிக்க கடல் மார்க்கங்களில் ஆதிக்கம் பெறத்தேவையாக இருந்தன.

1940-ம் வருஷம் மே மாதத்திற்குப்பின் இந்தக் குறைவு அதிகரித்து விட்டது. ஏனெனில் நார்வே, ஹாலந்து, பிரெஞ்சுதேசப் போர்களில் கடற்கரை யோரங்களில் பிரிடனுக்கு ஏராளமான கப்பல்கள் நஷ்டமாகி விட்டன. இதே சமயத்தில் ஜெர்மனி ஏராளமான யூ படகுகளைக் கட்டி சமுத்திரத்துக்குள் அனுப்பி விட்டது. பிரெஞ்சு, பெல்ஜிய, டச்சுக் கடற் கரைகளை ஜெர்மனி ஆக்கிரமித்த பின் மஸ்கிடோ கடல் போரின் அபிவிருத்தி ஏற்பட்டது. அதாவது சிறிய வேகம் பொருந்திய படகுகள் பெரிய கப்பல்கள் செல்லக்கூடாத கடல் பிரதேசங்களில் நடவடிக்கையை ஆரம்பித்தன. இந்த வகையிலும் புதிய ரகக் கப்பல்களை ஏராளமாகக் கட்ட வேண்டிய நெருக்கடி பிரிடனுக்கு ஏற்பட்டது.

அறிக்கையில் காணப்பட்ட புள்ளி விபரங்கள் கட்டப்பட்டு மிதக்கவிடப்பட்ட கப்பல்களின் விவரங்களை விளக்கிக் காட்டவில்லை. அவைகளை இப்பொழுது வெளியிடுவதும் சாவதான மல்ல. அவைகளை மூன்று இனங்களாகப் பிரிக்கலாம். "பெரிய யுத்தக் கப்பல்கள்", "மஸ்கிடோ படகுகள்" "மற்ற கப்பல்கள்."

முதல் வகுப்பில் நாசகாரிகளையும் போர்க் கப்பல்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவைகளின் சராசரி அளவு சுமாராக 2,000 டன்கள் எடையுள்ளது. இந்த இனத்தில் ஏராளமான யுத்தக் கப்பல்களும், சஞ்சாரிகளும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். அவைகளில் 1930-ம் வருஷக் கடைசியில் 17-ம், 1940-ல் 106-ம் கட்டி முடிக்கப்பட்டன, 1941, 42, 43-ல் இந்த விவரம் வருஷத்துக்கு 170 ஆகவும் மொத்தமாக 3 லக்ஷம் டன்களாக மாறி விட்டது. இந்த அளவு 1941-ம் வருஷம் முதல் பாதியிலும் நிலை பெற்றிருந்தது. இந்த ரகத்தில் மொத்தம் 722 கப்பல்கள் கட்டி முடிக்கப்பட்டன.

மாஸ்கிடோப் படகு ரகத்தில் 100 டன்கள் எடையுள்ள படகுகள் 1939-ம் வருஷத்தில் இரண்டும் 1940-ல் 121-ம் கட்டி முடிக்கப்பட்டன, அடுத்த இரண்டு வருடங்களில் சராசரி 400 படகுகள் கட்டப்பட்டன. அதற்குப்பின் அந்த அளவு சற்றுக் குறைந்தது. இந்த ரகத்தில் மொத்தமாக 1,400 படகுகள் கட்டப்பட்டன. மற்றக் கப்பல்கள் என்ற ரகத்தில் படைகளை யிறக்கும் படகுகளும், (இவைகள் சென்ற இரண்டு வருஷத்தில் நடைபெற்ற இரு வகைப்பட்ட நடவடிக்கைகளுக்கு மிகுதியாகத் தேவையாக இருந்தன.) கடலில் யுத்த நடவடிக்கைகளுக்குத் தேவையான சாமான் கப்பல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சாமான் கப்பல்கள் முன் சொன்ன இரண்டு இனங்களில் சேர்க்கப்படக்கூடியவையல்ல. 1939-ம் வருஷம் கடைசியில் 9 கப்பல்களும் 1940-ம் வருஷத்தில் 200 கப்பல்களும் கட்டி முடிக்கப்

பட்டன. 1941-ல் இந்தத் தொகை 314-க்கு அதிகரித்தது. 1942-ல் அது 605 ஆகவும் 1943-ல் 1,601 ஆகவும் அதிகரித்தது. அதன் எடைமானம் சராசரி 100 டன்களாக இருந்தன. 1944-ம் வருஷம் முன் ஆறு மாதங்களில் 907 படகுகள் கட்டப்பட்டன.

மொத்தமாக யுத்த ஆரம்பத்திற்குப்பின் பிரிடனில் 5,744 கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சேனைகளுக்கு யந்திர சாதனங்களையும் விமானப்படைக்கு முஸ்தீப்புகளையும் வழங்குவதற்கு அவசியமான அளவிற்கு யுத்தக்கப்பல்களைக் கட்டுவதற்கும் தொழிலாளர்களும் ஐச்வர்யங்களும் தேவைப்படும். ஆகிலும் இவைகள் புதிய கப்பல்களைக்கட்ட செலவிடப்பட்டன. இவ்விதமாக பிரிடனின் கப்பல் கட்டும் வேலை நடந்து வந்த பொழுதுகூட எதிரிகளின் நடவடிக்கையால் பழுது பட்டதும் அல்லது யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டுத் தேய்வுற்றதும் ஆன கப்பல்களைப் பழுது பார்க்கும் அவசியமும் ஏற்பட்டது.

மேலே சொல்லிய புள்ளி விவரங்களுடன் மற்றொரு அம்சத்தையும் குறிப்பிடவேண்டும். இன்று கட்டப்படும் ஒவ்வொரு யுத்தக் கப்பலிலும் சாமான் கப்பலிலும் விரிவான முஸ்தீப்புகள் அமைக்கப்படவேண்டும். யுத்தம் ஆரம்பித்த பின் அந்த அவசியம் அதிகரித்து விட்டது. ராடார் சாதனத்தை அமைப்பதற்கு விரிவான நுட்பமான யந்திரங்கள் அவசியமாகும். மேலும் நவீன முறையில் விமான எதிர்ப்பு பீரங்கிகள், தீயணைக்கும் கருவிகள், மின்சாரத்தை அகற்றும் அமைப்பு, ஆஸ்டிக்குகள், மற்றும் இவைகளுக்கு சமமான அநேக முஸ்தீப்புகள் கப்பல்களின் முஸ்தீப்புகளை சிக்கலாகச்செய்து விட்டன. மேலும் அவைகளை அமைக்க அதிக சிரமமும் புத்தி விசாலமும் அவசியமாகும். சென்ற யுத்தங்களின் பொழுது பிரிட்டன் செய்த யுத்த முயற்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த யுத்தத்தில் முயற்சி இப்பொழுது வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்களை விட இரட்டிப்பு மடங்கானதென்றே தான் சொல்லவேண்டும்.

---

## வட பர்மாவில் நேசதேச முன்னேற்றம்.

### யானைகளுக்கான போரில் வெற்றி.

கிராஹெம் ஸ்டான் போர்ட்.

(டெயிலி மெயில் பத்திரிகை).

சமீப காலத்தில் பர்மா போர்முனையில் விரிவாக நான் சுற்றுப்பிரயாணம் செய்ததிலிருந்து பர்மாவிலுள்ள சுமாராக பத்து டிவிஷன்கள் கொண்ட ஜப்பானியப்படை தற்காப்பு போரை நடத்தத்தான் போதுமானதென்றும் அவைகளுக்கு துரிதமாக உதவிப்படை ஏராளமாக வந்து சேராவிட்டால் அவைகள் பதில் முறையில் முன்னேறித்தாக்குவது மிகவும் அசாத்திய மென்றும் நான் நினைக்கவேண்டியிருக்கிறது.

இந்தியாவில் படையெடுத்ததில் அவர்களுக்கு ஏற்பட்ட பலமான அழிவிற்குப்பின் சில ஜப்பானிய டிவிஷன்கள் மனித பலம் குறைந்தும் மன உறுதி குலைந்தும் இருக்கின்றன. இந்த சிறிய படை பர்மாவின் சுலபமாகத் தாக்குதலுக்குட்பட்ட கடற்கரையைத் தற்காப்பு செய்வது, வடக்கிலிருந்து நமது தரைப்படையின் முன்னேற்றத்தைத் தடுப்பது என்ற மகத்தான வேலைகளைச் செய்யவேண்டும். வட பர்மா பூராவையும் கைவிட்டால்தான் இந்தக் காரியம் நிறைவேறும். அவ்விதம் செய்தால் அடுத்த பருவ காலத்திற்குள் இராவதி சமவெளிக்குள் நேசதேசப்படைகள் ஊடுருவிச் சென்றுவிடாமல் தடுத்துவிடலாம் என்று எண்ணலாம். பருவகாலத்தில் வழக்கம்போல சாமான்களைக்கொண்டு போவதற்கும் போக்குவரத்துக்கும் சிரமங்கள் ஏற்படும்.

ஆகையால் படைகளின் பெரும் பாகம் கடற்கரையை ரக்ஷித்து வரும்பொழுது பாக்கி இருக்கும் படைகள் வட பர்மாவிலிருந்து வெளியேறுவதற்காக சாவதானமாகவும் சாதுரியத்துடனும் காலதாமதம் செய்யும் போரை நடத்தி வருகின்றன. பிரிடிஷ் படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்க முயலுவதற்கு அவைகள் நூற்றுக்கணக்கான சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தைக் கைவிடவேண்டும். நேசதேசத்தாரிடம் படைபலம், கவசபலம் பீரங்கிப் பலம், மிகுதியாக இருக்கிறது. மேலும் ஆகாயத்திலும் நமக்கு ஆதிக்கம் இருக்கிறது.

பர்மாவில் யானைகளுக்கான போரில் நாம் வெற்றி பெற்றுவிட்டோம். 300 மைல்கள் கொண்ட போர்முனை பூராவிலும் பர்மிய யானை மாவுத்தர்கள் யானைகளை பிரிடிஷார் வசம் ஒப்படைத்து வருகிறார்கள். ஜப்பானியர்களுக்கு யானைகளை நடத்தத் தெரியவில்லை என்றும் அதை அறியும் பிரிடிஷாருடன் சேர்ந்துகொள்ள அவர்களுக்கு சந்தோஷம் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். மூன்று வருஷமாக பர்மா போரில் யானைகளுக்கான சண்டை அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஜப்பானியர்கள் பர்மாவுக்குள் நுழைந்தபோது அவர்கள் அநேக யானைகளைக் கைப்பற்றினார்கள். அவர்கள் பின்வாங்கியபொழுது சின்ட்வின் நதியைத் தாண்டி ஐம்பது யானைகளைத்தான் கொண்டுபோக முடிந்தது.



## ஜப்பானை வெடிகுண்டுகளினால் அழிக்கமுடியுமா.

(பீடர் டி மெண்டல்ஸான்).

விமானந்தாங்கிகளிலிருந்தும் சைனாவிலும் சைபானிலும் உள்ள விமானத் தளங்களிலிருந்தும் செல்லும் அமெரிக்க சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் பகல் இரவாக ஜப்பானைப் பலமாகத் தாக்கிவருவதிலிருந்து மறுபடியும் பழைய பிரச்னை கிளம்பிவிட்டது. விமானப்படை சக்தியினால் மட்டும் எதிரியின் ராஜ்யத்தை அழித்துவிடுவதால் எதிரியை யுத்தத்தை நிறுத்திவிடும்படி செய்யமுடியுமா?

ஐரோப்பியப் போர்முனையிலும் விமானத் தாக்குதல் மூலம் ஜெர்மனியை அடிபணியச் செய்யக்கூடுமாவென்பதைப்பற்றி நிபுணர்களின் அநேக கோஷ்டிகள் வெகுகாலம் விவாதித்து வந்தனவென்பது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். சிலர் இது சாத்தியமென்று நினைத்தார்கள். மற்றவர்கள் இது பயன்படாதென்று சொன்னார்கள். ஆகிலும் எதிரியின் தொழிற்சாலைகளையும் போக்குவரத்து மார்க்கங்களையும் பலமாகத் தாக்கி அழித்துவிட்டால் எதிரி சரணடைவது துரிதப்படுமென்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். மூன்றாவது கக்ஷிக்காரர்கள், யுத்த காலத்தைக் குறைத்துவிடாததுடன், பலமான விமான நடவடிக்கையின்மூலம் பொது ஜனங்களின் மன உறுதி பலப்படுமென்றும், யுத்த தொழிற்சாலைகளும் போக்குவரத்துகளும் ஒரு சிறிதுதான் பாதிக்கப்படுமென்றும், அவைகளை வெகு சீக்கிரத்தில் பழுதுபார்க்க முடியுமென்பது அனுபவ சித்தமென்றும் சொல்லிவந்தார்கள்.

ஆனாலும் இந்த சர்ச்சைக்கு ஒரு முடிவு ஏற்படவில்லை. பிரான்ஸில் படைகளிறங்கிய பின் இது விவகாரத்துக்குறியதாக மட்டும் இருந்துவந்தது. ஆனால் இந்தப் பிரச்னை கோளத்தின் மற்றொரு பகுதியில் தலைகாட்டிவிட்டது. இந்த விஷயத்தில் ஜப்பான் முக்கியமாக டோக்கியோவின் நிலைமை என்ன? தூரம், எண்ணெய், வெடிகுண்டு ஏற்றிச்செல்லும் குறைவுகள், வெகுதூரம் சென்று தாக்குவதில் எதிரியின் சண்டை விமானங்களினால் தாக்கப்படும் நிலைமை, தகுதியுள்ள நிலயங்களின் குறைவு இதுபோன்ற அநேக சிக்கல்கள் ஸ்பஷ்டமானவையாதலால் அவைகளைப்பற்றி நாம் இங்கு விவாதிக்கப்போவதில்லை.

ஆகிலும் ஜப்பானின் சிரமங்கள் என்ன? ஜப்பானின் மகத்தான நகரங்கள் தாக்கப்பட்டால் அதை சமாளித்து நிற்க ஜப்பான் மன உறுதியிலும், வலிமையிலும் எந்நிலைமையிலிருக்கிறது? இந்த விஷயத்தில்தான் அநேக தவறான அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன. டோக்கியோவிலுள்ள வீடுகளெல்லாம் மரத்தினாலும், காகிதத்தினாலும் கட்டப்பட்டவை என்றும் அவைகள் போரில் எறி வெடிகளைப் போட்டுவிட்டால் அவைகள் உடன்காலத்திலேயே தீக்கிரையாகிவிடுமென்றும் பொதுஜனங்கள் நம்பியிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறான அபிப்பிராயம். உலகத்திலுள்ள எந்த நாட்டைப்போலும் வெடிகுண்டு வீச்சை சமாளிக்கவும் அதன் விளைவுகளை நிவர்த்தி செய்யவும் டோக்கியோ நன்றாகத் தயாராக இருக்கிறது. டோக்கியோ உலகத்திலேயே மூன்றாவது பெரிய நகரம். நவீன முறையில் அது அமைக்கப்பட்டிருக்கிறது. காவாஸாகி, யோகஹாமா, யோகோஸுகா என்ற கடற்படை தளம் ஆகிய மூன்றுமுள்ள டோக்கியோ தலைநகரம் 82,50,000 ஜனத்தொகை உள்ளது. அநேக வருஷங்களாக பூகம்பத்துக்கும் உட்பட்டு அவற்றை சமாளிக்கத் தயாராகியிருக்கிறது.

1923-ம் வருஷ பூகம்பத்தில் டோக்கியோவின் பாதி பாகம் அழிந்தபொழுது நகரம் புதிய முறையில் ஏழு வருஷங்களில் திருப்பியும் கட்டப்பட்டது. 1930-ம் வருஷம் மார்ச்சு மாதம் 26-ம் தேதியன்று உத்தியோக முறையில் நகரம் அமைக்கப்பட்டுவிட்டதாக வெளியிடப்பட்டபொழுது அதன் நவீன கட்டடங்களில் அநேகத்தில் பூகம்பத்துக்கு அசையாத அமைப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதன் முக்கியத்துவம் தெளிவானது. பூகம்ப அதிர்ச்சிகளையும், தீயையும் சமாளித்து நிற்க பலமாக அமைக்கப்பட்ட கட்டடங்கள் கனமான வெடிகுண்டுகளின் அதிர்ச்சிகளையும் சமாளித்து நிற்க சக்திபெற்றவை. நகரத்திலுள்ள அநேக கட்டடங்கள் மரத்தினால் கட்டப்பட்டவை என்பது உண்மைதான். ஆகிலும் கட்டட அமைப்பில் தீயை சமாளித்து நிற்கும் தளவாடங்களும் ஏராளமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நகரத்தில் ஜன நெருக்கடி மிகுதியாக இருந்தபோதிலும் ஒளிந்துகொள்வதற்கும், தீயை பரவவொட்டாமல் தடுப்பதற்கும் குறைந்த பக்ஷம் 50 உத்யானவனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கத்திலுள்ளவர்கள் மற்றொரு இடத்துக்குச் செல்லக்கூடாதென்ற கட்டுப்பாடு பலமாக இருந்துவருகிறது. மேலும் தீயணைப்பதற்கு உதவி செய்யக்கூடிய வகையில் அநேக கால்வாய்களும், நதிகளும் நகரத்தில் ஓடுகின்றன. மேலும் நகரத்தில் அநேக கிணறுகளும், குட்டைகளுமிருக்கின்றன. கட்டட தளவாடங்கள் மிகவும் குறைவாகயிருந்த

போதிலும் பொதுஜனங்கள் வசிப்பதற்காக விடுதிகள் நகரத்தின் சுற்றுப்புறங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஜப்பானியர்கள் இத்துடன் நின்றுவிடவில்லை. டோக்கியோவின் பல பாகங்களில் அவர்கள் கான்களையும் பதுங்குமிடங்களையும் அமைத்திருக்கிறார்கள்.

நகரத்தில் பூமிக்குள்ளிருக்கும் அமைப்புகள் ஆழமுள்ளதாக இருந்தபோதிலும் ஜனத்தொகையில் ஒரு சிறிது பாகத்தைத்தான் காப்பாற்றப் போதுமானது. டோக்கியோவில் விமானத் தாக்குதல் எச்சரிக்கை முறைகளும் பொதுஜன தற்காப்பும் திறம்பட அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரிடனிலும், ஜெர்மனியிலும் உள்ள ஏற்பாடுகளைப்போல் டோக்கியோவின் அமைப்புகளும் திறமையுள்ளவையென்று சொல்லாமலிருக்க ஒரு முகாந்திரமும் கிடையாது. அது ஜெர்மன் திட்டத்தைப்போலவே அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அடிப்படையாக டெனரிகுமி அல்லது அயல்வீட்டு சங்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

ஜப்பானியர்கள் விமானத் தாக்குதலை சமாளிக்கவும் போதுமான தற்காப்புகளை அமைத்திருக்கிறார்கள். டோக்கியோவிலும் மற்ற பெரிய நகரங்களிலும் ஏராளமான விமான தளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு இடத்தில் எதிரியின் வெடி விமானங்கள் தோன்றினால் சண்டை விமானங்கள் ஒரே கூட்டமாக எல்லாத் தளங்களிலிருந்தும் அந்த இடத்தில் குவிந்துவிடும். ஆனால் அந்தச் சண்டை விமானங்கள் சூபர் பறக்கும் கோட்டைகளை சமாளிக்கக்கூடியவையல்ல. ஆனால் முக்கியமான விஷயம் யாதெனில் அவைகள் திரும்பிச் செல்லுவதில்லை. அவைகள் நேராக எதிரியை விமானத்தின் பேரில் பாய்ந்து இரண்டுமாக ஒன்றாய் நொருங்கித் தரையில் விழுந்துவிடும். அங்குள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகளும் ஏராளமாகவும் உயர்தரமாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆகையால் ஜப்பானின் வெடிகுண்டு வீச்சின் மூலம் அழித்து அதை அடிபணியச் செய்யமுடியுமா? விஷயங்கள் ஆராய்ச்சி செய்தமட்டில் அது சாத்தியமற்றதென்றுதான் சொல்லவேண்டும். ஒருக்கால் ஜப்பானின் மன உறுதியிலும் கவசத்திலும் எதிர்பாராத வண்ணம் பிளவுகள் ஏற்பட்டால் இது சம்பாவிதமாக இருக்கும். அவ்விதமான பிளவு ஏற்பட்டதாக இது வரையில் ஒரு சூசகமும் காணப்படவில்லை.

ஜப்பானின் யுத்த தளவாட உற்பத்திசாலைகளை விமானத் தாக்குதல் மூலம் அழித்துவிடுவதென்பது மற்றொரு பிரச்னை. இங்கு இரண்டு அம்சங்களை கவனிக்கவேண்டும். ஒன்று ஜப்பானின் கனமான தொழிற்சாலைகள் மிகவும் நெருக்கமாக அமைக்கப்பட்டிருப்பதால் அவைகள் சிறந்த லக்ஷியங்களாகும். மற்றொன்று ஜப்பானியர்கள் பரம்பரையாக கைத்தொழில் செய்கிறவர்களாதலால் அந்தத் தொழிற்சாலைகள் அநேக நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் சிறிய தொழிற்சாலைகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த முறையை ஐரோப்பிய நாடுகள் விமானத் தாக்குதலின் அபாயத்துக்குட்படாமல் தடுக்க யுத்த காலத்தில் கையாளும்படியான நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டிருந்தார்கள்.

இவ்விதமாக தொழிற்சாலை ஸ்தாபனங்களை நொருக்குவதிலிருந்தும் ஏற்படக்கூடிய விளைவுகள் உடன்காலத்தில் தோன்றுவிட்டாலும் துறைமுகங்களையும் துறைமுக அமைப்புகளையும் பலமாகத் தாக்குவது என்பது மற்றொரு விஷயம். இந்த விஷயத்தில்தான் ஜப்பானின் தற்காப்பு அமைப்பு பலஹீனமானது.

---

## தூரக்கிழக்கு நடவடிக்கைகளின் வருங்காலத் தோற்றம்.

### ஜப்பானைத் தாக்க இரண்டு கடல்களிலும் போர்முனை.

(A. J. மாக்வின்னி.)

தூரக்கிழக்கில் எதிர் காலத்திய நடவடிக்கையைப்பற்றி பிரிடிஷ் கடற்படை இலாகா முடிவுசெய்துவிட்டது. பிரிடனை சுற்றியுள்ள கடற்படையின் தளகர்த்தராக இருந்து பலமாகத் தாக்கி அநேக வெற்றிகளைப்பெற்ற கடற் தளபதி ஸர்ப்ரூஸ் பிரேஸர் தூரக்கிழக்குக் கடற்படையின் கடற் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். நியமனமான மூன்று மாதங்களுக்குப் பின் அவர் கடற்படை இலாகாவுடன் கலந்து பேச விமானமூலம் லண்டனுக்குத் திரும்பிவந்தார். அந்த சம்பாஷணைமூலம் ஏற்பட்ட மாறுதல்கள் இப்பொழுது வெளிவந்துள்ளன. ஜெர்மன் யுத்தக் கப்பலான ஷார்ன்ஹர்ஸ்டை மூழ்கடிப்பதிலும் ருஷ்யாவுக்கு பிரிடிஷ் துணைக் காவல் கப்பல் கூட்டங்கள் பத்திரமாகச் செல்லுவதிலும் நாயகம் வகித்த கடற் தளபதி பிரேஸார் ஸிலோனிலிருந்து புறப்பட்டு பஸிபிக் கடலிலுள்ள பிரிடிஷ் கடற்படையின் சேனாதிபத்யத்தை ஏற்றுக்கொள்ளச் சென்றுவிட்டார்.



சிங்கப்பூரின் வீழ்ச்சிக்குப்பின் கிழக்குக் கடற் படை பின்வாங்கியபின் ஆஸ்திரேலியாதான் இப்பொழுது பிரிடிஷ் கடற்படைக்கு பாய்ச்சல் ஸ்தலம். ஜப்பானியர்கள் தங்களுக்குச் சொந்தமான கடல்கள் என்று நினைக்கும் இடங்களிலுள்ள எதிரிக் கப்பல்களைத் தாக்கவும் அத்தளங்கள் உபயோகமுள்ளவை.

கிழக்கிந்தியப் படைகளின் சேனாதிபதியான கடற் தளபதி ஸர் A. J. பவர் ஸிலோனிலுள்ள அவருடைய தலைமை காரியாலத்தில் ஆயத்தம் செய்து வருகிறார். பஸிபிக்கிலுள்ள அமெரிக்காவின் பலமான கடற் படையைத் தவிர, பிரிடிஷ் கடற் படை மலேயாத் தீவுக் கூட்டங்களின் இருபக்கங்களிலிருந்தும் தாக்கச் சக்தியுள்ளதென்று உத்தியோக முறையில் சொல்லிவருகிறார்கள். ஆகிலும் படைகளின் அமைப்பு நிலமையைப்பற்றி நான் ஒன்றும் சொல்லக்கூடவில்லை. ஆனால் கடற்படை இலாகா முதல் பிரபுவான மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர், பின்வருமாறு சொல்லுகிறார். ஜப்பானியக் கடற்படையைத் தனிமையில் தாக்கிப் போர் நடத்தக்கூடிய ஒரு கடற்படையை பஸிபிக்கில் அமைத்துவிடுவதாக பிரிடன் உத்தேசித்திருக்கிறது.

இந்தப் புதிய ஏற்பாட்டின்படி யுத்த தந்திரத்திற்கு ஒத்த வகையில் பிரிடிஷ் கடற்படை அந்த அந்த பிராந்தியங்களில் போர்தொடுக்கும். மிஸ்டர் அலெக்ஸாண்டர் சொல்லுவதைப் பார்த்தால் பிரிடிஷ் கடற்படை ஜப்பானுக்கருகிலுள்ள சமுத்திரங்களிலேயே போரை நடத்துமென்று தெளிவுபடுகிறது.

நான் கடற் தளபதி பிரேஸரிடமுள்ள கடற்படையில் கூடிய சீக்கிரத்தில் கலந்து கொள்ளுவேன். நான் இது வரையில் கிழக்கு இந்திய கடற் படையுடன் வசித்துவந்தேன். இந்த மகா ஸமுத்திரத்தில் ஆபீஸர்களுக்கும் மாலுமிகளுக்கும் தொடர்ச்சியான நடவடிக்கை ஒன்றும் ஏற்படவில்லை. பசிபிக்கில்தான் கடற்போர்கள் நடந்துவந்தன, ஆனால் இப்பொழுது பசிபிக்கிலேயே போரை நடத்தவேண்டுமென்று ஏற்பட்டுவிட்டதால் அவர்களுக்கு அதிக உத்சாகம் உண்டாகிவிட்டது.

பஸிபிக்கில் தேவைப்பட்டவைகள் யுத்தக் கப்பல்கள், விமானம்தாங்கிகள், சஞ்சாரிகள். அவைகளுக்குத் துணையாக நாசகாரிக் கப்பல்கள்தான். இது உண்மைதான், பஸிபிக் சமுத்திரத்தின் விசாலமான பிராந்தியங்களில் போகும் கப்பல் கூட்டம், போதுமான எண்ணெய், பழுதுபார்க்கும் சாதனங்கள், வெடிமருந்துகள், உணவுப் பொருள் கப்பல்கள் முதலியவற்றைப் பெற்றிருக்கவேண்டும். இந்தக் கடற் படையுடன் அநேக ரகக் கப்பல்களும் செல்லும் என்று நவம்பர் மாதத்தில் மிஸ்டர் சர்ச்சில் வெளியிட்டார். இந்த உபகரணங்களும் சேர்ந்துவிட்டால் அந்த கடற்படை கடற்கரையிலுள்ள தளங்களின் சகாயத்தைத் தேடவேண்டியதில்லை. ஆகையால் பிரிடிஷ் கடற்படை ஆஸ்திரேலிய தளங்களில் தங்கியிருக்குமென்றும் அங்கிருந்து எதிரியைத் தாக்கச் சென்று வேலை முடிந்தபின் துரிதமாக ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பிவந்து விடுமென்றும் எண்ணுவது தவறாகும். பிரிடிஷ் கப்பல்கள் யுத்த வட்டாரத்திலேயே அநேக வாரங்கள் வரையில் தங்கி நிற்கும் காலம் வந்துவிடும்.

மலேயாவுக்கு மேற்கு பக்கத்தில் ஜப்பானிய கடற்படையுடன் போர் தொடுப்பது சம்பாவிதமில்லை. சில நீர்மூழ்கிகள் மட்டும் அங்கு தலைகாட்டக்கூடும். ஜப்பானியர்கள் இந்து மகா சமுத்திரத்தையே கணக்கிலிருந்து எடுத்துவிட்டதாகத் தெரியவருகிறது. அங்கு இப்பொழுது பிரிடிஷ் யுத்தக்கப்பல்கள்தான் ஆதிக்கம் பெற்றுவருகின்றன. ஆகிலும் கப்பற்படை கிழக்கு இந்தியப் பகுதியில் அநேக வேலைகளைச் செய்யவேண்டியிருக்கும். எந்த நேரத்திலும் 2 மிலியன் எடையுள்ள கப்பற் படை இந்து மகா சமுத்திரத்தில் சஞ்சாரம் செய்து கொண்டேயிருக்கிறது. இந்தக் கப்பல் கூட்டத்தை ஜப்பானியர்களின் புதிய நீர்மூழ்கிகள் தாக்க முடியாதபடி காப்பாற்றிவரவேண்டும்.

மகத்தான தாக்குதலுக்கு முற்போக்குக்காக பிரமாதமான ஆயத்தம் செய்து வரப்படுகிறது. அநேகமாக அந்தத் தாக்குதல் 1945-ம் வருஷத்தில் நடைபெறக்கூடும். இந்த ஆயத்தத்தைக் கெடுத்துவிட ஜப்பானியர்கள் தங்களாலியன்றதைச் செய்யக்கூடும். எப்பொழுது தாக்குதல் ஆரம்பிக்கப்படுமென்று நான் சொல்லுவதற்கில்லை. ஆகிலும் இந்த மகத்தான நடவடிக்கை இப்பொழுதே ஆரம்பிக்கப்படாது என்று நினைக்கலாம். ஏனென்றால் இரு சமுத்திரங்களிலும் பலமான கடற்படைகளை அமைத்து விடுவதென்று இப்பொழுதுதான் முடிவு செய்திருக்கிறார்கள்.

வரப்போகும் சில மாதங்களில் அநேக திசைகளில் பகட்டான தாக்குதல்கள் நடைபெறக்கூடும். ஆகிலும் அவைகள் இறுதி வெற்றிக்கு முற்போக்காக எதிரியின் ஸ்தானங்களை

நொருக்குவது என்ற ஏற்பாட்டின் ஒரு அம்சமாகத்தானிருக்கும். இதே சமயத்தில் தூரக் கிழக்கில் பிரிடனின் கடற்படை பலம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இன்னும் அனேக கப்பல்களும் விமானம் தாங்கிகளும், அநேக சஞ்சாரிகளும், நாசகாரிகளும், போர்க்கப்பல்களும், இழுப்புப் படகுகளும், நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல்களும் இந்த மகத்தான கடற்படையில் குவிக்கப்படும். இது சம்பந்தமாக பிரிடனின் பிரக்கியாதிபெற்ற கடற் தளபதியின் பெயரும் வெளியிடப்படும். உலகத்திலுள்ள எல்லா யுத்தக் கப்பல்களைவிட உயர்வான புதிய பிரிடிஷ் யுத்தக் கப்பல் மிதக்கவிடப்பட்டுவிட்டதென்றும் வெளிவந்துவிட்டது.

முதல் கடல் பிரபு இந்தக் கடற்படை உஷ்ணர்த் ரேகை செல்லும் எல்லா பாகங்களிலும் சஞ்சரிக்குமென்று சொன்னார். அதாவது அது ஜப்பானுடன் போர் தொடுக்கும் என்று பொருள்படுகிறது.

---

# கடற் போர்.

## பஸிபிக்கில் நேசதேச வலிமை.

(பிரியான் டன்ஸடால்).

கடற் தளபதி ஸர் ப்ரூஸ் பிரெஸரிடமுள்ள பிரிடிஷ் பஸிபிக் கடற்படை மத்திய பஸிபிக்கிலுள்ள கடற் தளபதி நிமிட்ஸினுடையவும் அல்லது தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள ஜெனரல் மாக் ஆர்தருடையவும் நடவடிக்கைகளுக்கு ஒத்தாசை செய்யும். இவ்வளவு கியாதியும் அனுபவமும்பெற்ற சீனியர் ஆபீஸரின் தலைமையில் ஒரு புதிய கமாண்டை ஏற்படுத்தியதிலிருந்து இனிமேல் பிரிடனின் கடற்படையின் பெரும்பாகம் இந்துமகா சமுத்திரத்திலும் அட்லாண்டிக்கிலும், மத்தியதரைக் கடலிலும் நடமாடாமல் பஸிபிக்கடலில் வேலை செய்யுமென்று நிர்சனமாகிவிட்டது.

மேலும் கடற்தளபதி பிரெசரின் தலைமையிலுள்ள கடற்படையில் பிரிடனின் முக்கியமான சண்டைக் கப்பல்களும் விமானம்தாங்கிக் கப்பல்களும் சேர்க்கப்படுமென்றும் நினைக்கலாம். சிங்கப்பூர் வீழ்ச்சிபெற்றபின் பஸிபிக் கடலில் பிரிடிஷ் கடற்படையின் பிரதிநிதிகளாக ஆஸ்திரேலிய கடற்படையைச்சேர்ந்த கப்பல்களும் துணைக்காவல் கப்பல்களும்தான் இருந்துவந்தன. மலேயா-தீபகற்பத்திலும் அல்லது டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளுக்குத் தெற்கு, மேற்குப் பக்கங்களிலும் ஒன்றுபட்ட நடவடிக்கைகளில் பிரிடிஷ் பஸிபிக் கடற்படையும் இந்துமகா சமுத்திரத்தில் கலந்துகொள்ளும். ஏனென்றால் இந்துமகா சமுத்திரத்திலும் ஆஸ்திரேலியாவிலும் தளங்கள் கிடைத்துவிட்டதால் பிரிடிஷ் பஸிபிக் கடற்படையின் நடவடிக்கைக்கு அதிக வசதிகள் கிடைத்திருக்கின்றன.

பிரிடிஷ் கடற்படையின் பெரும் பகுதியை பஸிபிக்கில் அமைப்பதென்ற முடிவு சமீபத்தில் செய்யப்பட்டது. அதற்காக தளங்களை அமைப்பதற்கும் மத்திய ரேகையில் போர் புரிவதற்காக பெரிய கப்பல்களைத் திருத்தியமைப்பதற்கும் அநேக ஏற்பாடுகள் செய்யவேண்டியதாகிவிட்டது. இதாலிய கடற்படை சரணடைந்ததும், ஜெர்மனியின் கடற்படை பலம் கொஞ்சம் கொஞ்சமாக அழிவுபட்டதும்தான் ஐரோப்பிய சமுத்திரங்களிலிருந்து கிழக்கு சமுத்திரங்களுக்கு பிரிடிஷ் கடற்படையின் பெரும்பாகத்தை அனுப்ப சாதகமளித்தன. டிர்பிட்ஸை இறுதியில் மூழ்கடிப்பதற்கு முன்னதாகவே கப்பல்கள் கிழக்கு சமுத்திரத்திரங்களுக்கு அனுப்பப்பட்டுவந்தன. ஆகிலும் டிர்பிட்ஸை அழிக்க ஐரோப்பிய சமுத்திரங்களில் ஒரு சிறிய படையும் வைக்கப்பட்டிருந்தது.

1944-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் யூ படகு நடவடிக்கைகளைப்பற்றி வெளியிடப்பட்ட பிரிடிஷ், அமெரிக்க கூட்டறிக்கையில் நேசதேசத்தார்களுக்கு இப்பொழுதும் கப்பல் நஷ்டம் குறைவென்று சொல்லப்பட்டிருக்கிறது. யூ படகுகளை மூழ்கடிக்கும் நடவடிக்கையும் திருப்திகரமாக நடந்துவருகிறது. புதியாக யூ படகுகள் புதிய முஸ்தீப்புகளுடன் மகத்தான நடவடிக்கையை எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் ஆரம்பிக்கக்கூடுமென்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருக்கும் மிகுதியான பிராணவாயுவைச் சேகரித்துவைப்பது, என்ற புதிய உபாயம் யூ படகுகள் தண்ணீருக்குள் வெகுகாலம் மூழ்கிச்செல்ல சாதகம் அளிக்கும். ' அதன்மூலம் சென்ற மூன்று வருஷங்களில் சென்றிராத இடங்களுக்கும் யூ படகுகள் இப்பொழுது செல்லக்கூடும்.



யூ படகுகள் கடலில் ஏராளமாக சஞ்சாரம் செய்தாலும், செய்யாவிட்டாலும் கடலில் பிரிடிஷ் கடற்படையின் போதுமான பாசமும், கடற்கரை அமைப்பும் எப்பொழுதும் வலுவாகவும் தயாராகவும் இருக்கவேண்டுமென்பதை இது ஞாபகப்படுத்துகின்றது. கடலில் முறியடிக்கப்பட்டபோதிலும்; ஜெர்மானியர்கள் புதிய உபாயங்களுள்ள அநேக யூ படகுகளை அநேக தளங்களில் வைத்திருக்கிறார்கள். இந்த தளங்களையும் அவைகளிலுள்ள யூ படகுகளையும் விமானத் தாக்குதலின்மூலம் அழித்துவிட முடியாததினால், யூ படகுகள் நடவடிக்கையைத் துவக்கும்சமயத்தில் அவைகளை எதிர்த்துப்போராட பிரிடிஷ் கடற்படை எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும்.

இது ஒரு புதிதான நிலைமையல்ல. ஏனெனில் எதிரிகள் கடலில் நடமாடினாலும் நடமாடாவிட்டாலும் கடலில் ஒரு பாகத்தின் கடற்படையை வைத்திருக்கும் ஒரு வல்லரசுக்கு இது பிரமாதமான காரியமில்லை. பிரிடன் எதிரியின் கொள்ளைக் கப்பல்களின் தாக்குதலுக்குட்பட்டபொழுதும் இந்த நிலைமைதான் காணப்பட்டது. ஜெர்மனியின் கடற்படையைச் சென்ற யுத்தத்தில் எதிர்த்துப்போராடியபொழுதும் இதே திருப்திகரமான நிலைமைதான் காணப்பட்டது.

ஆகிலும் மாரிகாலத்தில் வடக்கு சமுத்திரங்களில் கப்பல்களினுடையவும், மாலுமிகளுடையவும் நஷ்டம் மிகுதியாக இருந்தபோதிலும் அதற்கு உபயோகமுள்ளவகையில் பலன்கள் கிடைத்துவிட்டன. இடைவிடாது கடலில் ரோந்து செய்வதன்மூலம் பிரிடிஷ் கடற்கரை படை, ஆகாய நடவடிக்கைகளுக்கு சாதகமான கடல் மார்க்கங்களைப் பத்திரப்படுத்திவருகின்றது. அத்துடன் கடல் மார்க்கமாக ஜெர்மனிக்கு ஒரு விதமான ஸப்ளையும் வராமல் தடுக்கப்படுகிறது. ஜெர்மனியின் வடமேற்குப் பக்கத்தில் கடற்கரையோரமாக நடைபெற்ற போக்குவரத்தும் சமீபகாலத்தில் நின்றுவிடக்கூடும்.

நார்வே கடற்கரையிலும், பிரிடிஷ் கடல்படை கடல்மூலமாகவும், ஆகாய மூலமாகவும் ஜெர்மனியின் கடற்கரையோரமாகச்செல்லும் கப்பல்களைத்தாக்கிவருகிறது. அபாரமான நஷ்டங்களுக்குப்பின்னும் அநேக லக்ஷியங்கள் அங்கு இருக்கின்றன என்பதிலிருந்து வடக்கு நார்வேயிலிருந்து படைகளை அப்புறப்படுத்தவும், எஞ்சியுள்ளவர்களுக்கு சர்பராக்களைக் கொண்டுபோகவும், ஜெர்மனி எவ்வளவு தியாகம் செய்யத் தயாராக இருக்கிறதென்பது வெளியாகுகிறது.

சமீபகாலத்தில் கடற்படையைச்சேர்ந்த பையர்ப்ளை, அவெஞ்சர், ஒயில்ட்காட் விமானங்கள், விமானந்தாங்கிகளிலிருந்து சென்று தெற்கு நார்வேயில் ஹாக்ஸண்டுக்கு அப்பாலில் இருந்த இரண்டு எதிரி சர்பராக் கப்பல்களுக்கும் இரண்டு எதிரி சாமான் படகுகளுக்கும் தீமூட்டிவிட்டன. இந்த பிராந்தியத்தை விவரிக்கும் கடற்படை இலாகா பிரசுரத்தில் அங்கு கடும் குளிர் நிலவுகிறதென்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து பிரிடிஷ் கடற்படையும் விமானப்படையும் எவ்வித கஷ்டமான நிலைமையிலும் பிரிடனிலிருந்து 300-மைல்கள் தாண்டியுள்ள எதிரிவசமுள்ள கடற்கரைக்கு சமீபத்தில் வெற்றிகரமாக நடவடிக்கைகளை நடத்துமென்பது வெளிப்படுகிறது.

---

## ஜெனராலிஸிமோ குறைகூறுகிறவர்களுக்குப் பதிலளிக்கிறார்.

(ஸ்டுவர்ட் கெல்டர்.)

நியூஸ்கிரானிகிளின் விசேஷ நிருபரான ஸ்டேவர்ட் கெல்டருக்கு சுங்கிங்கில் பேட்டி அளித்தபொழுது சைனாவின் யுத்தத்துக்குப் பிந்திய பிரச்னைகளை விவாதித்தும் அவருடைய நிர்வாகத்தைப்பற்றி குறைகூறுகிறவர்களுக்கும் ஜெனராலிஸிமோ சியாங்கேஷேக் பதிலுரைத்தார். இரண்டு வருடங்களுக்குப்பிறகு இப்பொழுதுதான் அவர் அயல்நாட்டு நிருபருக்கு முதன் முதலாக பேட்டியளித்தார். கெல்டர் பின்வருமாறு ரிபோர்ட் செய்திருக்கிறார்.

"சுங்கிங்கிலிருந்து சொந்த நாடுகளுக்குத் திரும்பிவந்திருக்கும் பத்திராதிபர்கள் சியாங்கேஷேக்கையும் அவருடைய நிர்வாகத்தைப்பற்றியும், அநேகம் குறைகளை வெளியிட்டு தணிக்கை செய்யப்படாத அநேக கட்டுரைகளை எழுதியிருப்பதினின்றும், உலகம்பூராவும் நிலவிவரும் சில கேள்விகளுக்கு ஜெனராலிஸிமோ என்னிடம் பதில் சொன்னார்.

**கேள்வி.**—சைனாவின் தற்போதைய யுத்த நிலைமையைப்பற்றியும் நேசதேச யுத்த முயற்சிக்கு அது எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது என்பதைப்பற்றியும் நீங்கள் சொல்லக்கூடுமா?

**விடை.**—சீனாவின் தற்போதைய யுத்த நிலைமை நெருக்கடியாகத்தான் இருக்கிறது. சமாளிக்க முடியாததென்று ஒன்றுமில்லை. எதிரியின் தற்போதைய நடவடிக்கையின் லக்ஷியத்தை நான் இப்பொழுது சர்ச்சை செய்வதாக உத்தேசிக்கவில்லை. இந்தப் போர்முனையில் சீனாவுடையவும் அதன் நேசநாடுகளுடையவும் ஒன்றுபட்ட யுத்த முயற்சிகளை அழித்துவிடுவது என்று எதிரி எண்ணியிருந்தால் அவனுடைய திட்டம் ஒருபொழுதும் நிறைவேறாது என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன்.

**கேள்வி.**—எவ்வித கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் நேசதேசத்தார்கள் சீனாவுக்கு வேண்டிய அத்யாவசியமான உதவிகளை அனுப்பினார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? உங்களுடைய நிலைமையைத்தீர்க்க சமீப எதிர்காலத்தில் அவர்கள் இன்னமும் ஏதாவது செய்யவேண்டுமென்று எண்ணுகிறீர்களா?

**விடை.**—தற்போதைய நேசதேச யுத்த நடவடிக்கைக்குத் தக்கவாறு அவர்கள் சீனாவுக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆகிலும் சீனாவின் அவசரத் தேவைகளைக் கவனிக்கும்பொழுது தேவைகளுக்கும் ஸப்ளை செய்யப்பட்டிருக்கும் சாமான்களுக்கும் வெகு வித்யாசம் இருப்பதாகக் காணப்படுகிறது. சமீப எதிர் காலத்தில் நேசதேசத்தாரின் ஒத்தாசை அதிகரிக்குமென்று நான் நம்புகிறேன்.

**கேள்வி.**—சைனா ஜனநாயகத்தைக் கைக்கொள்ளாமல் தனிப்பட்ட ஒரு கட்சியின் ஆட்சியில் இருந்துவருகிறது என்ற குற்றச்சாட்டிற்கு இணங்கி சமீபகாலத்தில் உங்கள் நிர்வாகத்தில் மாறுதலேற்பட்டதிலிருந்து உலகத்தில் அதிக பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. (சைனா ஜனநாயக ஆட்சி உள்ளதா? இல்லாவிடில் ஏன் அவ்விதமில்லை) என்று சாதாரண ஆங்கிலேயர் ஒருவர் உம்மைக் கேட்டால் அதற்கு நீர் என்ன பதிலளிப்பீர்?

**விடை.**—சீன ஜனநாயகத்துக்கும் பிரிடிஷ் ஜனநாயகத்துக்கும் தற்போதுள்ள அமைப்பில் சிறிதுதான் ஏற்ற வித்யாசம் இருக்கிறது. இறுதி லக்ஷியத்தில் இரண்டுக்கும் முக்கியமான வித்யாசங்கள் இல்லை. இரண்டு தேசத்தவர்களின் மனப்பான்மையும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டதுதான். சிறிது வித்யாசம் காணப்படுவதற்கு சைனாவின் தற்போதைய ஜன சமூக நிலைமைதான் காரணம். கோமிண்டாங் வேஷம் போட பிரியப்படவில்லை. அல்லது ஜனநாயகத்தை அடைய குறுக்கான மார்க்கங்களை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை. அவ்விதம் செய்தால் ஜனநாயகம் ஒரு பேடிஜமாக ஆகிவிடும். தேசத்தின் பத்திரத்துக்கு ஆபத்து உண்டாகிவிடும்.

சைனா ஜனநாயக முறையில் இல்லை என்ற குற்றச் சாட்டுக்கு ஜெனராலிஸிமோ பின்வருமாறு பதில் சொன்னார். ஒன்று, இரண்டு வருடங்களுக்குமுன் இவ்வித குறைகூறுவதற்கே இடமில்லாமலிருந்தது. அதன்பிறகு ஜனநாயகமுறையில் சீனா முற்போக்கு அடைந்திருக்கிறதேயொழிய பிற்போக்கு அடையவில்லை.

**கேள்வி.**—மத்திய நிர்வாகத்துக்கும் பொதுஉடைமைக்கட்சிப் படைகளுக்கும் சதாகாலமும் பிளவு ஏற்பட்டிருக்கிறதைக்கண்டு ஆங்கிலேயர்கள் வியப்புறுகிறார்கள். நீங்கள் இருவர்களும் சேர்ந்து ஏன் யுத்தத்தில் ஈடுபடவில்லை என்று ஆச்சரியப்படுகிறார்கள். இது விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

**விடை.**—அவ்வப்பொழுது தோன்றக்கூடிய பிரச்னைகளை தீர்க்க எங்கள் நிர்வாகமும் கட்சியும் முயன்றுவருகிறோம். நாங்கள் விளம்பரம் பெறவேண்டுமென்று அக்கரைகொள்ளவில்லை. இதுதான் தற்போதைய நிலைமைக்குக் காரணம். பொதுஉடைமைக் கட்சிக்காரர்களின் பிரச்னையை அதிகப் பொறுமையுடன் தீர்க்க நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். கட்சிப்பற்று இல்லாத அங்கத்தினர்களை தேசிய நிர்வாகத்தில் சேர்த்துகொள்ள கோமிண்டாங் ஒருபொழுதும் தடைசெய்யவில்லை. உண்மையில் அது எல்லா கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் வரவேற்று வந்தது.

**கேள்வி.**—உண்மையான தீரம்படைத்த உங்களுடைய சோல்ஜர்களுக்குப் போதுமான ஆகாரம் கொடுக்கப்படவில்லை என்றும் நன்றாக கவனிக்கப்படவில்லை என்றும் குறைகூறுகிறார்கள். அதற்கு நிர்வாகம்தான் ஜவாப்தாரி என்பது அவர்களின் அபிப்பிராயம். அதற்கு நீங்கள் என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்.



**விடை.**—எங்களுடைய சோல்ஜர்களின் சுகமான வாழ்க்கைக்கு நாங்கள் வேண்டிய அளவு
செய்துதான் வருகிறோம். எங்கள் தேசத்தின் நிலைமை திருப்திகரமாக இல்லை. சைனா
வின் கெடுதலான ஜனசமூக அமைப்பும் அவசியமான சீர்திருத்தங்களைச் செய்வதற்கு
சிரமங்களை உண்டுபண்ணின. மேலும் சீனா ஏழுவருடங்களாகப் போரை நடத்தியிருக்
கிறது. மூன்று வருடங்களாக கடுமையான முற்றுகைக்கு உட்பட்டிருக்கிறது. எங்கள்
நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் தளவாடக்குறைவும் போக்குவரத்து சாதனங்கள், மார்க்கங்
களின் சிரமங்கள் எந்தநாட்டிலும் ஏற்பட்டிராது. ஆகையால் குறைகூறுகிறவர்கள்
இந்த விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் நலமாயிருக்கும்.

**கேள்வி.**—யுத்தத்திற்குப்பின் உங்களுக்கும் பிரிடன், அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும், மற்ற நாடுகளுக்கும் ஏற்படும் சம்பந்தத்தைப்பற்றி நீங்கள் சொல்லுவீர்களா?

**பதில்.**—ஒருபுறம் விடுதலையையும் ஸ்வதந்திரத்தையும் பெறுவதும் மற்றொருபுறம் உலக
சமாதானத்தையும் நீதிமுறையையும் ஸ்தாபிப்பதும்தான் எங்களுடைய யுத்த லக்ஷியங்
கள். ஆகையால் யுத்தத்திற்குப்பின் சமாதானத்தையும் நீதிமுறையையும் நேசிக்கும்
நாடுகளுடன் சைனா ஒத்துழைக்கும் விசேஷமாக பஸிபிக்கில் சமாதானத்தை நிலை
நாட்டிய நாடுடன் அதிக நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும். யுத்தத்துக்குப்
பின் ஜப்பானை நடத்தும் முறையில் முதன்முதலாக நேசதேசத்தார்கள் ஜப்பானை
நிராயுதபாணியாக்கிவிடவேண்டும். யுத்தத்துக்குப்பின் ஜப்பானில் அமைக்கப்பட
வேண்டிய நிர்வாகம் உள்நாட்டுப் பிரச்னை சம்பந்தமாக நேசதேசத்தார்கள் அவற்றை
ஜப்பானிய மக்களிடமே ஒப்படைத்துவிடவேண்டுமென்று நான் நினைக்கிறேன். சைனா
வில் தொழில் சாலைகளை அதிகரிப்பதும் போக்குவரத்து மார்க்கங்களை அபிவிருத்தி
செய்வதும் கல்வியின்மையை அகற்றுவதும் தேசிய கல்வி திட்டத்தை அமைப்பதும்
தான் முக்கியப் பிரச்னைகளாகும்.

பிரிடிஷ் மக்களுக்கு அவர் ஒரு விசேஷ செய்தியை வெளியிட்டார். வெற்றி நெருங்க
நெருங்க சைனா அதிக தியாகங்களைச் செய்யும். நீங்கள் அபாரமான தியாகங்களைச் செய்து
வருகிறீர்கள். இந்த சந்நிவேசத்தில் சைனா அதன் நேசநாடுகளிடமிருந்து எதிர்பார்ப்ப
தெல்லாம் சிறந்த நல்லுணர்ச்சியும் அதிக அனுதாபமும் நெருங்கிய ஒத்துழைப்பும்தான்.

---

## மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் கல்லூரி, புதுக்கோட்டை டெக்னிகல் டிரெயினிங் செண்டரில் பயிற்சிக்கு காலியாயுள்ள ஸ்தானங்களை காண்பிக்கும் சிட்டை.

27—12—44.

| | | |
|---|---|---|
| எலக்டிரிஷியன்கள் | ... | ... 16 |
| பிட்டர்கள் | ... | ... 22 |

---

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## ‘வி’ டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0 ; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0 ; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3
அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்குமுந்துங்கள் ! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம் :—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 230. (4-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6- 1-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 10- 1-45 | வடவாளம் | ... மாலை 7.00 |
| 7- 1-45 | கீரப்பழனி | ... „ 7.00 | | „ | சம்மட்டிவிடுதி | ... „ 7.30 |
| „ | ஆலூர் | ... „ 7.30 | | 11- 1-45 | கல்லூர் | ... „ 7.00 |
| 8- 1-45 | புத்தாம்பூர் | ... „ 7.00 | | „ | மாத்தூர் | ... „ 7.30 |
| „ | வைத்திக்கோவில் | ... „ 7,30 | | 12- 1-45 | நச்சாந்துபட்டி | ... „ 7.00 |
| 9- 1-45 | நார்த்தாமலை | ... „ 7.00 | | „ | விராச்சிலை | ... „ 7.30 |
| „ | உப்பிலியக்குடி | ... „ 7.30 | | | | |

### பிரஸங்கம் 231. (5-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16- 1-45 | பள்ளிவாசல் | ... மாலை 7.00 | | 18- 1-45 | அன்னவாசல் | ... மாலை 7.00 |
| „ | பில்லமங்கலம் | ... „ 7.30 | | „ | மேலக்குரிச்சி | ... „ 7.30 |
| 17- 1-45 | புலியூர் | ... „ 7.00 | | 19- 1-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... „ 7.00 |
| „ | கண்ணங்குடி | ... „ 7.30 | | „ | கீழாநிலைக்கோட்டை | ... „ 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 9— 1—45 | கல்குடி. | 14— 1—45 | விராச்சிலை. |
| 11— 1—45 | குழிபிறை. | 16— 1—45 | பேராம்பூர். |
| 12— 1—45 | புதுக்கோட்டை. | 18— 1—45 | கிழாநிலை. |
| 13— 1—45 | வெட்டம்விடுதி. | 19— 1—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—9-1-45.


# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் ஞு ஜனவரி மீ 13உ [ந. 231


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும் ; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXXXI.

## 1944-ம் வருஷத்திய ஐரோப்பா.

(W. N. ஞூயர்.)

1944-ம் வருஷத்தில் இறுதியில் தோன்றும் ராஜீய பிரச்னைகள் அவ்வருஷத்திய ராணுவ நடவடிக்கைகளின் விளைவுகள்தான். தற்கால நிகழ்ச்சிகளில் அதிக கவனம் செலுத்துவதினால் சென்ற பன்னிரண்டு மாதங்களில் ஏற்பட்ட விசேஷ மாறுதல்களை நாம் மறந்துவிடக்கூடும்.

1943-ம் வருஷ முடிவில் 1940, 1941, 1942-ம் வருஷங்களில் ஜெர்மனிக்குக் கிடைத்த வெற்றிகள் மூலம் அமைக்கப்பட்ட மகத்தான ராஜீய அமைப்புகள் எல்லா நாடுகளிலும் பலமாக ஊன்றியிருந்தன. அநேக வகைகளாக, ஹிட்லரின் சாம்ராஜ்யம் வடக்குக் கடலிலிருந்து பாஸ்பரஸ் வரைக்கும் பிரினீஸ் மலைகளிலிருந்து வெண்கடல் வரைக்கும் பரவியிருந்தது. இதனால் நேசதேசத்தாருக்கு மகத்தான ராணுவ பிரச்னைகள் முன் நின்றதே ஒழிய ராஜீய பிரச்னைகள் ஆரம்பத்தருவாயில்தானிருந்து வந்தன. 1943-ம் வருஷத்திலிருந்த சாம்ராஜ்யம் 1944-ம் வருஷத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிட்டது. ஐரோப்பாவின் பெரும்பாகம் ஜெர்மன் ஆக்கிரமணத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.

ஐரோப்பாவில் ராஜீய முறையிலும், பொருளாதார முறையிலும், புனருத்தாரணம் செய்யும் வேலை யுத்தம் உச்ச நிலைமையிலிருந்தபொழுதே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இந்த வேலை சமாதானகாலத்திலேயே மிகவும் சிரம சாத்யமானதாகும். ஸ்வதந்திரமுள்ள ஸ்தாபனங்களை அமைப்பதைவிட அவைகளை அழிப்பது வெகு சுலபமானது. ஜனநாயகத்தைத் திரும்பி உண்டுபண்ணுவதைவிட கொடுங்கோன்மையைச் சுமத்துவது சுலபமானது. ஆகையால் நேசதேசத்தார்களுக்கு ஏராளமான பிரச்னைகள் தோன்றியிருக்கின்றன. இந்தத் தொரவுகள் அதிகக் கெடுதலாக இல்லையென்றுதான் நாம் சந்தோஷப்படவேண்டும். பொருளாதாரத்தைவிட மற்றும் மூன்றுவகைப்பட்ட பிரச்னைகள் இருந்துவருகின்றன.

முதலாவதாக, நேசதேசத்தாருக்கும் மாஜி எதிரி நாடுகளுக்குமுள்ள சம்பந்தங்கள் இதாலி, பின்லாந்து, பல்கேரியா, ருமேனியா போன்ற நாடுகள் ஜெர்மனியுடன் பெரிய அளவிலோ அல்லது ஒரு சிறிது அளவிலோ போர்தொடுக்க முற்பட்டுவிட்டார்கள். இது ஒரு சிக்கலான நிலைமை. இதை நிருதியற்ற ஒரு முறைப்படி நாம் வெற்றிகரமாக சமாளித்து வருகிறோம். ஒவ்வொரு நாட்டிலும் அரசியல்லமைப்பு தாத்காலிகமாக ரக்ஷிக்கப்படுகிறது. நபர்களைத் தவிற மற்ற மாறுதல்கள் எல்லாம் யுத்தத்துக்குபின் என்று ஒதுக்கி வைக்கப்பட்டுவிட்டன. ஆகையால் இதாலியிலும், ருமேனியாவிலும், பல்கேரியாவிலும் மன்னர்

ஆட்சி நிலைபெற்றிருக்கிறது. ஆகிலும் இதாலியில் மன்னரும், பல்கேரியாவில் ரீஜண்டும் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டார்கள். இதாலியில் மன்னர் ஆட்சியை அமைத்திருப்பதிலிருந்து பிரிடிஷ் நிர்வாகத்தில் மன்னர் ஆட்சியிடம் உள்ள ஆர்வம் இங்கும் காணப்படுகிறதென்று குறை கூறுகிறவர்கள், ருஷ்ய ஆக்கிரமிக்குட்பட்டிருக்கும் ருமேனியாவில் மன்னர் சிம்மாதனத்தில் வீற்றிருக்கிறார் என்பதை மறந்துவிடுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு தேசத்திலும் அதமபக்ஷமான மாறுதல்கள்தான் செய்யப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைபெற்றிருக்கும் நாடுகளின் நிலைமை வேறுவிதம். ஆனால் பிரான்ஸில் பிரச்னை சுலபமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. ஏனென்றால் அங்கு பழைய நிர்வாகத்தை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆரம்பத்தில் புரட்சிச் சக்தியாகவும், உள்நாட்டு, வெளிநாட்டு எதிர்ப்புக் கோஷ்டிகளின் ஒற்றுமையினின்றும் அமைக்கப்பட்ட டிகாலின் நிர்வாகம் ஜெர்மன் ஆக்கிரமிப்பு காலத்தில் தோன்றிய புதிய ராஜீய சக்திகளுடன் சுலபமாகத் திருத்தி அமைத்துக்கொண்டது.

பெல்ஜியத்தில் கடுமையான நியாயவாதிகளுக்கும் துடித்துக்கொண்டிருந்த புரட்சிக்காரர்களுக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட்டன. அந்த பிரச்னைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

யூகோஸ்லாவியாவில் எதிர்பாராதவண்ணம், தேச பிரஷ்டமடைந்திருந்த மன்னர் ஆட்சிக்கும் உள்நாட்டிலிருந்த புரட்சிக்காரர்களுக்கும், மார்ஷல் டிடோ, டாக்டர் சுபாசிக்கின் உயர்வான புத்திசாலித்தனத்தினால் வெற்றிகரமாக சமரசம் ஏற்பட்டிருக்கிறது.

அவ்விதமான பலமான பகுத்தறிவுள்ள தலைவர்கள் இல்லாததினால்தான் கிரீஸில் அமைதியுடன் வித்தியாசங்கள் சரிப்படுத்தப்படக்கூடவில்லை.

1944-ம் வருஷ முடிவில் ருஷ்ய போலிஷ் பிரச்னைதான் பாக்கியிருந்துவருகிறது. மற்றவைகளுக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. மற்ற எந்த இடத்திலும் இவ்விதமான அடிப்படையுள்ள பிரச்னை கிடையாது. இதில் நேசதேசத்தார்களுக்குள் தேசத்தை அடையும் சம்பந்தமான பிரச்னை தோன்றியிருக்கிறது. கொள்கையில் இந்த பிரச்னையை யுத்தத்துக்குப் பின் தீர்க்க ஒத்திவைத்திருக்கலாம். ஆனால் நடைமுறையில் போலந்தின் பலபாகங்கள் விடுவிக்கப்பட்டுவிட்டதால் ருஷ்யாவின் பொது ஜன நிர்வாகத்துக்கும், போலந்தின் பொது ஜன நிர்வாகத்துக்கும் தாத்காலிகமாக வலையறுப்புக்கு கோடு அவசியமாகும். அதற்கு மேற்குப் பக்கத்தில் ருஷ்ய ராணுவ அதிகாரிகள் ஒத்துழைக்கக்கூடிய ஒரு போலிஷ் நிர்வாகமும் அமைக்கப்படவேண்டும்.

சம்பவங்களை நோக்குங்கால் இந்த பிரச்னைக்கு ஒருவிதமான முடிவு ஏற்படுமென்று தோன்றுகிறது. ருஷ்யா இதை விரும்பவில்லை. மேலும் போலிஷ் நிர்வாகம் எதிர்பார்த்தபடி போலிஷ் ஜனங்களின் எதிர்ப்பு பலமாக இருந்தால் இந்த திட்டம் நிலைபெறாது, உபயோகப்படாது. சம்பவங்களின் மூலம் நடவடிக்கையை முடிவு செய்வதென்பது முட்டாள்தனம் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

கிரீஸும், போலந்தும் ஒரு அழுக்கான பாகங்கள், ஆகிலும் ஜெர்மன் ஆதிக்கத்துக்குப் பின் உண்டாகியிருக்கும் கிளர்ச்சி வலுவாக இல்லை என்பது ஆச்சரியப்படத்தக்க விஷயம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 1—1—45 (திங்கட்கிழமை). | ஜெர்மானியர்கள் அமெரிக்க 7-வது சேனையைக்குறித்துப் புதிய தாக்குதலைத் துவக்கினார்கள். |
| 2—1—45 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப்படைகள் பர்மாவில் காபொ வீரைப் பிடித்தன. |
| 3—1—45 (புதன்கிழமை). | கிரீஸில் ஜெனரல் பிளாஸ்டிராஸ் பிரதமந்திரியாக ஒரு புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டிருக்கிறது. |
| | நேசதேச 14-வது படை பர்மாவில் யெயூவைப்பிடித்தது. |
| | துருக்கி ஜப்பானுடன் கொண்டிருந்த ராஜதந்திர உறவுகளை ரத்து செய்தது. |



### (A)-முக்கியமான சம்பவங்கள்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 4—1—45 (வியாழக்கிழமை). | நேசதேசத் துருப்புகள் அக்யாப் தீவிலிறங்கி அதை விடுவித்தன. |
| 5—1—45 (வெள்ளிக்கிழமை). | பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி ஆர்டெனிஸ் உப்பலுக்கு வடக்கிலுள்ள எல்லாப் படைகளின் கமாண்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். |
| | ருஷ்ய நிர்வாகம் லப்ளினிலுள்ள போலந்தின் தாத்காலிக நிர்வாகத்தை ஒப்புக்கொண்டது. |
| 6—1—45 (சனிக்கிழமை). | நேசதேசப் படைகள் ஆதன்ஸிலிருந்து கலகக்காரர்களை அப்புறப்படுத்திவிட்டார்கள். |
| | சீனர்கள் பாமோ-நாம்-காம் ரஸ்தாவில் மான்விங்கை ஆக்கிரமித்தனர். |
| 7—1—45 (ஞாயிற்றுக்கிழமை). | அமெரிக்க கடற்படை பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள லூஸான் பேரில் குண்டுகளைப் பொழிந்தது. |
| 8—1—45 (திங்கட்கிழமை.) | நேசதேசத்தார்கள் பர்மாவில் ஷ்வீபோவைப் பிடித்தார்கள். |
| 9—1—45 (செவ்வாய்க்கிழமை.) | அமெரிக்கர் பிலிப்பைன்ஸிலுள்ள லூஸானில் இறங்கினார்கள். |

### (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.**—ஆர்டெனிஸில் ஜெர்மன் உப்பலுக்கு வடக்கிலுள்ள படைகளுக்கு பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரியும், அதற்குத் தெற்கிலுள்ள படைகளுக்கு ஜெனரல் ஓமார் பிராட்லியும் கமாண்டர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**வடக்கு விளாப்பக்கம்.**—ஜெர்மானியர்கள் ராக்போர்சினி—செல்லிஸ் முக்கோணத்தில் ஊடுருவிச் சென்றதைத் தடுக்க பிரிடிஷ் படைகள் இதற்கு முன் உதவிசெய்தன. இப்பொழுது பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரியிடம் உள்ள பிரிடிஷ், அமெரிக்கப் படைகள் எதிரியின் வடக்கு பார்ஸ்வத்திலிருக்கும் படைகளை பின்புறம் துரத்தியடித்துவருகின்றன. ஜெர்மனியின் முன்னணி ஸ்தலம் இப்பொழுது 11 மைல் அகலத்துக்குக் குறுகிவிட்டது. ஜெர்மனியின் வடக்கு பார்ச்வத்திலுள்ள படைகளுக்கு வரும் லாரோகி-வீல்ஸாம் ஸப்ளை மார்க்கத்தை மூன்று இடங்களில் துண்டித்துவிட்டார்கள். லாரோகி மறுபடியும் ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த விளாப்பக்கத்தில் கீழ் கண்ட இடங்களும் பிடிபட்டன. மாலம்பிரி, ஆர்பிரிபாண்டேன், லியர்ன்லியூ, ரெண்டியூ, லாபிளே, டெவாண்டேவ், கிர்ஸடார்ப், டால், ஓடிகன், டோசாம்ஸ், ரெகோன், சார்ட், வெர்லூமாண்ட், டாம்ரி, சிலி, சியோக்ஸ், பாயிடி கோலாமாண்ட்.

வென்லூவுக்கு வடக்கில் வான் ஸமில் ம்யூஸ் நதியைத் தாண்டி ஏற்பட்டிருந்த ஜெர்மனியின் முன்னேறும் வாசல் அழிக்கப்பட்டது.

**பாஸ்டோக்னிற்கு மேற்கு.**—அமெரிக்க 3-வது படை முன்னேறிவருகிறது. பாஸ்டாக்னிக்கு வடமேற்கிலுள்ளதும் உப்பலுக்குத் தெற்கிலுள்ள படைகளுக்கு முக்கியமான ஸப்ளை மார்க்கமுமான ஸெயிண்ட் ஹ்யூபர்ட்—ஸெயிண்ட் வித் ரஸ்தா, துண்டிக்கப்படும் அபாயத்துக்குட்பட்டுவிட்டது.

**தெற்கு பார்ச்வம்.**—அமெரிக்க 3-வது படை கிரிமாண்ட், மாண்டி, ஸெயிண்ட் எடியினி, மார்கரெட், டில்லட் முதலிய இடங்களைப்பிடித்தது.

**ஸார் பிரதேசம்.**—ஜெர்மானியர்கள் லோரேன், ஆல்ஸாஸுக்குள் நுழைவதற்கு விஸ்ஸம்போர்க்கில் ஒரு பாய்ச்சல் ஸ்தலத்தை ஏற்படுத்திவிட்டார்கள். ஸார்குமைன்ஸுக்குக் கிழக்கில் ஜெர்மன் எல்லைச்சரத்தைத் தாண்டி நின்ற அமெரிக்கப் படைகள் பின்வாங்கிவிட்டன. ஆல்ஸாஸில் நிலைமையில் தெளிவு ஏற்பட்டுவிட்டது. ஸ்டிராஸ்பர்க்குக்கு வடக்கிலுள்ள பாலமுனைக் குறைந்துவிட்டதும் ஸார்குமைன்ஸ்—ஹாகெனு ரஸ்தாவின் குறுக்கே

விங்கார்னுக்கு வடக்கில் பதில் தாக்குதல் செய்யப்பட்டதும்தான் இதற்குக் காரணங்கள். ஜெர்மானியர்கள் ஹாகெனுவைத் தாக்கிவருகிறார்கள்.

**கிழக்குப் போர்முனை.**—டான்யுபுக்கு வடக்கில் ஊடுருவிச்சென்றதை பயன்படுத்தி ருஷ்யர்கள் வியன்னுவுக்குப் போகும் ரஸ்தாவிலுள்ள நைத்ரா நதியை நோக்கி முன்னேறுகிறார்கள். இந்த முன்னேற்றத்துக்கு பதில் நடவடிக்கையாக ஜெர்மானியர்கள் ருஷ்யர்கள் முன்னேறி யிருந்த ஆஸ்திரிய எல்லைச் சரக நாடான கோமாரோமுக்கு சமீபத்தில் ஒரு புதிய தாக்குதலைத் துவக்கிவிட்டார்கள்.

புடாபெஸ்டில் தெருத்தெருவான சண்டை கோரமாக நடைபெற்று வருகிறது. சர்பராக்கள் குடைகள் மூலம் போடப்படுகின்றன. சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் படைகளை விடுவிப்பதற்காக புடாபெஸ்டுக்குச் செல்ல ஜெர்மன் படைகள் புடாபெஸ்டிலிருந்து 18 மைல்கள் தூரத்திலுள்ள பிக்ஸ்காவில் கடும்போரை நடத்திவருகின்றன. பெஸ்டின் மூன்றில் ஒரு பாகம் ருஷ்யர் வசமாகிவிட்டது. ருஷ்யர்கள் வியன்னுவுக்குப்போகும் ரஸ்தாவிலும் புடாபெஸ்டுக்கு வடமேற்கிலுமுள்ள எஸ்டர் கோமைக்கை விட்டுவிட்டார்கள். பேலா, பாடோர்ருகசி, பக்ஸ், மாடார், ஙிஸ்பெஸ்ட் (புடாபெஸ்டுக்கு வடகிழக்கிலுள்ள சிறிய நகரம்) பிடிபட்டன. செகோஸ்லாவேகியாவில் ருஷ்யர்கள் பின்சினுவையும் காலோண்டாவையும் பிடித்தபின் லோஸான்க்ஸைநோக்கி முன்னேறி வருகின்றன.

**இதாலி.**—ஆட்ரியாடிக் பகுதியில் 8-வது சேனை வள்ளி டி கோமகியோ வளைகுடா, ரேனோநதி, ராவென்னுவுக்கு வடக்கில் ஒன்பதுமைல்களிலுள்ள ஆட்ரியாடிக் கடற் முதலியவற்றின் கரையை அடைந்துவிட்டது. கான்வென்டெல்லோவும் ஸான் ஆல்பெர்ட்ஸுவும் பிடிபட்டுவிட்டன. மாரிகாலக் கடும் குளிர் நடவடிக்கைகளுக்கு இடஞ்சலாக இருக்கிறது.

**கிரீஸ்.**—பிரிடிஷ் துருப்புகள் கிரேக்கத் தலைநகரத்தைச் சுத்திசெய்தபின் இலாஸின் கேந்திர ஸ்தானமும் வடமேற்கில் 35 மைல்களிலுள்ளதுமான திப்ஸுக்குள் நுழைந்துவிட்டன.

**பிலிப்பைன்ஸ்.**—மிண்டாரோத்தீவில் படைகள் மறுபடியும் இறங்கின. மாரிண்டுகேத் தீவு ஆக்கிரமிக்கப்பட்டது. மணிலா தலைநகரமாக உள்ள லூஸான்தீவில் படைகள் இறங்கிவிட்டன.

**சைனு.**—குவாங்க்ஸி மாகாணத்தில் வடக்கிலுள்ள முக்கியமான, கேந்திர ஸ்தானமான சியானை சீனர்கள் திரும்பிப் பிடித்து விட்டார்கள்.

**பர்மா.**—வடக்குப் பகுதியில் சீனர்கள் பாமோ—நாம் காம்-ரஸ்தா வழியாக முன்னேறி வருகிறார்கள். மிட்கினு-மாண்டலே ரஸ்தாவிலுள்ள ஷ்விபோ என்ற பெரிய நகரம் பிடிபட்டது. அக்யாப் தீவும் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**31—12—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—(78 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 51 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

3 ரயில்வேப் பாலங்கள்.—ஹாலந்திலுள்ள ஷெர்ட்டோஜன்போஸிற்கும் (S'hertogenbosch), உட்ரெக்ட்டிற்கும் (Utrecht) இடையில்.

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—ஆமர்ஸ்போர்ட் (Amersfort) பிரதேசம்.

ரயில்வே தளங்கள்.—ஹாம் (Hamm), வோவிங்கல் (Vohwinkel).

போக்குவரத்துகள்.—பாட்குருஸ்னுக் (Badkreuznach), கெய்ஸர்லாடர்ன் (Kaiserlautern), ஹாம்பர்க் (Hamburg), பிர்மாஸென்ஸ் (Pirmasens), மியூஸ்டாட் (Meustadt).

எண்ணெய்க் கிணறுகள்.—ஹாம்பர்க் (Hamburg) பிரதேசம், மிஸ்பர்க் (Misburg) பிரதேசம்.

ஸப்மரீன் தளம்.—ஹாம்பர்க் (Hamburg).

விமானத் தொழிற்சாலை.—வென்ஸன்டார்ப் (Wenzendorf).

ரயில் இலக்குகள்.—போ (Po) சமவெளி, பிரென்னர் (Brenner) கணவாய், வட இதாலி (N. Italy).



பாலங்கள், ரயில், ரஸ்தா, போக்குவரத்துகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—போர் நடக்கும் பிரதேசத்திற்கருகில்.

விமானச் சண்டைகள், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

(4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு.—பெர்லின் (Berlin).

ரயில் தளங்கள்.—ஆஸ்டர் பெல்டு (Osterfeld).

(5 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி வண்டிகள்.—போர்னியோவிலுள்ள ஸாந்தாகன் (Sandakan).

விமான நிலயங்கள், பெட்ரோல் கிணறுகள்—மிரி (Miri), பாலிக்பாபன் (Balik Papan) அருகில்.

ஜப்பானிய தளம்.-இவோஜிமா (IwoJima).

எதிரி இலக்குகள்.—வட குரைல்ஸ் (Kuriles).

**பர்மா (Burma).**

விமான நிலயம்.—மாண்டலே (Mandalay) பிரதேசம்.

பாலங்கள்.-மாண்டலே-ரங்கூன் (Mandalay-Rangoon) பாதை.

**1—1—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—டார்ட்மண்ட் எம்ஸ் கால்வாய்—ஜெர்மனி (Germany).

எதிரி துருப்பு முகாம்கள், பாலங்கள், இதர இலக்குகள்.—ஹாலந்து (Holland).

ரயில் பாலங்கள், சேனைகள் யுத்த தளவாடங்கள், தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—காப்லென்ஸ் (Coblenz) பிரதேசம்.

எண்ணெய்க் கிணறுகள்—டால்பெர்கன் (Dollbergen).

இலக்குகள்.—ஆர்டன்ஸ் (Ardennes).

ரயில்வே போக்குவரத்துகள், கவசம் பூண்ட வண்டிகள்.—பிரம் (Prum)மிற்கு தெற்கிலும், மேற்கிலும்.

ஸ்டோர் துவியல்கள், தொழிற்சாலைக் கட்டடங்கள்.—கெய்ஸர்லாடர்ன் (Kaiserlautern).

பாலங்கள், தளவாடக் குவியல்கள்.—வட இதாலி (North Italy).

எதிரி சைனியங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள், துருப்பு முகாம்கள்.—இதாலிய யுத்த அரங்கம்.

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும் (4 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

ரயில் தளங்கள்.—சைனுவில் ஸுசௌ (Suchow).

துருப்பு முகாம்கள்.—பெய்ப்பிங் (Peiping), ஹாங்கோ (Hankow) ரெயில்வே.

**பர்மா (Burma).**

பாலங்கள்.—மத்திய பர்மா (Central Burma).

கடற்கரைக் கப்பல்கள்.—ஆம்ஹர்ஸ்ட் (Amherst) முனை.

துவியல்கள்.—அக்யாப் (Akyab).

**2—1—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—போக்குவரத்து இலக்குகள்.—ரூர் (Rhur), ரைன் (Rhine).

இதர இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (W. Germany).

எதிரி போக்குவரத்துகள்.-போ (N. W. Po) சமவெளியின் வடமேற்கு.

இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பல்கள்.—ஜினேவா (Genoa) வளைகுடா.

எதிரி ராணுவ நிலயங்கள்.—இதாலிய ரெவிரா (Riviera).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு—தொழிற்சாலை, ரயில்வே ஸ்தலங்கள்.-நூரம்பர்க் (Nuremburg).

ரசாயன தொழிற்சாலைகள்.—லட்விக்ஷாபன் (Ludwigshafen).

பேர்லின் (Berlin).

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—பார்மோஸா (Formosa).

விமான நிலயங்கள்.—பிலிப்பைன்ஸிலுள்ள மணிலாவுக்கருகில்.

ஜப்பானியக் கப்பல்கள்.—லூஸான் (Luzon) கடற்கரை.

**பர்மா (Burma).**

சேமிப்புகள்.—ஹெஹோ (Heho).

நீராவி யந்திரங்கள்.—மத்திய பர்மா (Central Burma).

**3—1—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—காஸ்ட்ராப்-ராக்ஸல், ஹன்ஸா தொழிற்சாலைகள்.—டார்ட்மண்ட் (Dortmund).

"V-2" இலக்குகள்.—ஹாலந்து (Holland).

எதிரி சேனைகள்.—பாஸ்டாக்னி (Bastogne), செயின்ட் வித் (Saint Vith).

ரயில் ஜங்ஷன், ரயில் பாலங்கள்.—மேற்கு அரங்கில் பல பாகங்கள்.

துருப்பு முகாம்கள், தற்காப்பு நிலைகள்.—நியூன்கிரிச்சன் (Neunkirchen), கெய்ஸர் லாடர்ன் (Kaiserlautern).

ரயில், ரஸ்தா போக்குவரத்துகள்.—ஹாம்பர்க் (Hamburg), கெய்ஸர்லாடர்ன் (Kaiserlautern).

பீரங்கி ஸ்தாபனங்கள், பால முனைகள்.—இதாலிய யுத்த அரங்கம்.

கவச சேமிப்புகள்.—வட இதாலி (N.Italy).

ரயில் தளங்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுதும். (58 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East.)**

தொழில்சாலை இலக்குகள்.—ஹான்ஷூ (Honshu).

இலக்குகள்.—நாகோயா (Nagoya).

**பர்மா (Burma).**

நீராவி யந்திரங்கள், சேமிப்புகள் —பாங்காக் (Bangkok)—மோல்மீன் (Moulmein) ரயில்வே.

துருப்பு முகாம்கள்.-மோல்மீன் (Moulmein).

**4—1—45** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல் :—ரயில்வேக்கள், ரஸ்தா ஸ்தலங்கள்.-பெல்ஜியம்-ஜெர்மன் (Belgian-German) எல்லை.

ரயில்வே தளவாடங்கள், தயார் செய்து சேமிக்குமிடங்கள்.--ஆஸ்ச்சாபன்பர்க் (Aschaffenburg), புல்டா (Fulda), கொலோனுக்கு (Cologne) அருகில்.

பெட்ரோல் நிலையங்கள்.—ரூர் (Ruhr), காஸ்ட்ராப் (Castrop), ராக்ஸல் (Rauxel), ஹன்ஸா (Hansa).

ரயில்வே தளங்கள்.—எம்மர்டிங்கன் (Emmendingen).

பீரங்கிஸ்தாபனங்கள்.-கொலாமர்(Colamar).

ரயில் இலக்குகள்.—வட இதாலி (N. Italy).

ரயில்கள்.—ஸாக்ரப் (Zagreb), வியன்னு (Vienna).

ரயில் பாலங்கள்.—கிஸ்மன் (Cismon), டிராண்டு (Trentu), வெனிஸ் (Venice).

பல இலக்குகள்.-பிரென்னர் பாஸ் (Brenner Poss).

இரவு :—பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

எண்ணெய்க் கிணறுகள்.--ஸுமத்ராவிலுள்ள பாங்காலான் பிரிந்தான் (Pangkalan Brindan).

விமான நிலயங்கள்.—லூஸானிலுள்ள மணிலாவிலும், மணிலாவைச்சுற்றிலும்.

ஜப்பானியக் கப்பல்கள்.—பிலிப்பைன்ஸ் (Philippines).

**பர்மா (Burma).**

போக்குவரத்து ஸாதனங்கள்.-பர்மாவிலுள்ள எல்லாப் பிரதேசங்களும்.

பாலம்.—பாங்காக் (Bangok)—மோல்மீன் (Moulmein).

தொழிற்சாலை.-யெனங்யாங் (Yenangyaung).

**5—1—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல் :—ஜெர்மன் துருப்புகள், பீரங்கி ஸ்தாபனங்கள், ஸப்ளைகள்.—பிரான்ஸிலுள்ள ராயன் (Royan).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.— லட்விக்ஷாபன் (Ludwigshafen).

போக்குவரத்து ஸ்தலங்கள், ரயில்வே தளங்கள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

இலக்குகள் —ஜெர்மன் லயன்கள்.

"V" இலக்குகள்.—ஹாலந்து (Holland).

தொழிற்சாலை கட்டடங்கள்.—ஸ்லையெட்ரெட்ச்ட் (Sliedrecht).

பாலங்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

ரஸ்தா, ரயில் இலக்குகள்.—இதாலியில் ஜெர்மன் அரண்கள்.

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்க முழுவதும். (17 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

இரவு:—பேர்லின் (Berlin) ,ஹனேவர் (Hanover).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைனியங்கள், துருப்புகள், போக்குவரத்துகள்.—பார்மோஸா (Formosa), லூஸான் (Luzon), இவோடிமா (Iwo Tima).

**பர்மா (Burma).**

போக்குவரத்துகள்.—மத்திய பர்மா (Central Burma).

படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

**6—1—45.** (சனிக்கிழமை)

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்:—ரயில்வே போக்குவரத்துகள்.—ஷட்பன் (Zutphen).

பாலங்கள்.—ரைன் (Rhine).

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.-காப்லென்ஸ் (Coblenz), கொலோன் (Cologne), லட்விக்ஷாபென் (Ludwigshafen).

இதர ரயில்வே தளங்கள், ஜங்க்ஷன்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ரயில்வே போக்குவரத்துகள்.—ஸ்டட்கார்ட் (Stuttgart) டிற்கும் வுர்ஷ்பர்க் (Wurzburg)கிற்கும் இடையில்.



விமான நிலயம்.—பைபெல்ஸ்டாட் (Biebelstadt).

எதிரி துருப்புகள்.—வியானென் (Vianen).

எதிரி போக்குவரத்துகள், ஸப்ளை குவியல்கள், எதிரிகளுக்குக் கிடைத்த கட்டடங்கள், எண்ணெய், வாயு, டாங்கிக் கப்பல்கள்.—வடமேற்கு இதாலி (N. W. Italy).

வேவு பார்த்தல்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களும், போ (Po) சமவெளியும்.

விமானச் சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (62 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு:—தொழிற்சாலை ரயில்வே ஸ்தலம்.—மியூனிச் (Munich).

இலக்குகள்.—ஹனேவர் (Hanover), ஹனு (Hanau), நூரம்பர்க் (Nuremburg).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—சைனுவில் ஹாங்கோ Hankow (China).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—பார்மோஸா (Formosa).

விமான நிலயங்கள்.—பிலிப்பைன்ஸில் மணிலா சமீபம். Manilla (Philippines).

**பர்மா (Burma).**

துருப்பு முகாம்கள்—அக்யாப்பின் வடகிழக்கு.

போக்குவரத்துகள்.—மாண்டலேயின் தெற்கிலும், தென்மேற்கிலும்.

விமான நிலயங்கள்.—மத்திய பர்மா (Central Burma).

பீரங்கி ஸ்தாபனங்கள்.-ஸாகெய்ன் (Sagain).

கப்பல்கள், படகுகள்.-ஐராவதி(Irrawaddy).

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**1—1—45.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ஐரோப்பா (Europe).**

நேசதேச விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). (364 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**2—1—45.** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ஐரோப்பா (Europe).**

நேசதேச விமான நிலயங்கள்.—பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland).

**3—1—45.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**4—1—45** (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**5—1—45.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**6—1—45** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**7—1—45** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

---

# *யுத்தக் குறிப்புகள்.*

**இந்த நிலைமைபோல எப்பொழுதும் இருந்ததில்லை.**

புதுவருஷத்தின் முதல் வாரத்தில் காணப்பட்ட மனக் கிலேசம் இப்பொழுது மறைந்து உண்மைகளைச் சரியானபடி மதிக்கும் காலம் தோன்றிவிட்டதென்பதற்காக நாம் சந்தோஷிக்கிறோம். புதுவருஷ ஆரம்பத்தில் பத்திரிகாசிரியர்களும் குறைகூறுகிறவர்களும் தங்களுடைய திறமையைக் காட்டிவந்தார்கள். அட்லாண்டிக்கு இரு கரையிலுமுள்ளவர்கள் வார்த்தைகளை பரிவர்த்தனை செய்துவந்தார்கள். அவர்கள் ஒரு விஷயத்தையும் மறந்துவிடவில்லை. அவர்கள் நேசதேசத்தார்களுக்குள் ஏற்பட்ட மனஸ்தாபங்களை மிகைப்படுத்தினார்கள். காதலர்களுக்குள் ஏற்பட்ட சண்டைகளைப்போல சண்டைக்குப்பின் ஒற்றுமை அதிகரிக்குமென்பதை அவர்கள் உணரவில்லை. கிரீஸிலும், போலந்திலும், இதாலியிலும், பிரான்ஸிலும், பெல்ஜியத்திலுமுள்ள நிலமையைப்பற்றி அவர்கள் சுட்டிக்காட்டிவருகிறார்கள். கொடுங்கோன்மையிலிருந்து விடுபட்ட நாடுகளில் நிலமை மிகவும் கேவலமாக ஆகிவிடவில்லையென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்போலும். ஆர்டென்ஸில் ஜெர்மனியின் முன்னேற்றத்தை கிலாகித்துப் பேசுகிறார்களே ஒழிய ருஷ்யர்கள் ஜெர்மனியை பாரண்ட்ஸ் கடலிலிருந்து கருங்கடல் வரைக்கும் தாக்கி வருகிறார்கள்

என்பதை மறந்துவிடுகிறார்கள். சைனாவின் சிரமங்களைப்பற்றி துக்கிக்கிறார்களே ஒழிய பர்மாவிலும், பிலிப்பைன்ஸிலும் நமக்கு வெற்றிகள் கிடைத்திருக்கின்றன என்பதை அவர்கள் மதிக்கவில்லை. அவர்கள் பலவிதமான கோரமான தோற்றங்களை வர்ணிக்கிறார்களே ஒழிய அதன்மூலம் ஜெர்மனிக்கு V-3 ஆயுதத்தை உண்டுபண்ணிவருகிறார்களென்பதை மறந்துவிடுகிறார்கள். இந்த நடவடிக்கைமூலம் நேசதேச ஒற்றுமையைக் குலைத்து அவனுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்யகொள்ள எண்ணிக்கொண்டிருக்கும் எதிரிக்கு விஷம பிரசாரத்திற்குத் தகவல்களைக் கொடுத்துவருகிறார்கள்.

வி வி வி வி வி

**திருப்திகரமானது.** முதல்வாரம் சென்றபின் நிலைமையில் சற்று நிதானம் ஏற்பட்டிருக்கிறது. ராணுவ முறையிலும் ராஜதந்திர முறையிலும் சுபசூசகமான இவ்விதமான நிலைமை எப்பொழுதும் இருந்ததில்லை. 1944-ம் வருஷத்தில் ஜெர்மனியை வளைத்துக்கொள்ள டெகரானில் திட்டம் போட்டு அது நிறைவேறியதென்று சொல்லலாம். 1944-ம் வருஷத்தில் அநேக வருஷங்களாக நாம் கனவுகண்ட இரண்டாம்போர்முனை ஏற்படுத்தப்பட்டது. மேற்குப் பக்கத்தில் ஜெர்மனி நம்பிக்கை வைத்திருந்த அட்லாண்டிக் அரண் மற்ற அரண்களைப்போலவும் சீனாவின் மதிலைப் போலவும் நொருங்கி மறைந்துவிட்டது. ருஷ்யர்கள் பால்டிக், பால்கன் நாடுகளை ஆக்கிரமித்ததும், இதாலியிலும் தெற்கு பிரான்ஸிலும் நேசதேசப்படைகள் முன்னேறியதும் எதிரியைச் சுற்றிவரும் வளையத்தை நெருக்கிவிட்டன. 1939-ம் வருஷத்தில் ஜெர்மனி பெயரிட்ட சுற்றிவளைப்பது என்ற பதத்தை நேசதேசத்தார்கள் அன்வர்த்தநாமமாவாகச் செய்து விட்டார்கள்.

எதிரி பன்னிரண்டு ஐரோப்பிய தேசங்களின் தலைநகரங்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்டுவிட்டான். புடாபெஸ்டும் வார்சாவும் கூடிய சீக்கிரம் விடுவிக்கப்படும். அட்டை மாளிகைபோல் ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டை நொருங்கிவிட்டது. ஆகஸ்ட் மாதத்தில் ருமேனியா விழுந்தது. ஒரு வாரத்திற்குப்பின் அதை பல்கேரியா பின்பற்றிவிட்டது. அதன்பின் யூகோஸ்லாவியாவும் விழுந்தது. அக்டோபர் மாதத்தில் கிரீஸ் விடுதலை பெற்றது. ஹங்கேரிக்குள்ளும் படையெடுத்துவிட்டார்கள். நவம்பருக்குள்ளாக பின்லாந்தும் மற்ற பால்டிக் நாடுகளும் விடுவிக்கப்பட்டன.

ஆர்ன்ஹெம், ஆர்டெனிஸ் பிற்போக்குகளைப்பற்றிக் கூறுகிறவர்கள் கேயன், ஆவ்ராஞ்சஸ், ஆண்ட்வெர்ப் போர்களை மறந்துவிட்டார்கள்போலத் தோன்றுகிறது. மேலும் ஆர்ன்ஹெம் நடவடிக்கை சரித்திரத்திலேயே கீர்த்திபெற்றதென்பதையும் அவர்கள் மறந்துவிட்டார்கள். ஆர்டெனிஸைப் பற்றிய தலையங்கங்கள் பத்திரிகைகளிலிருந்து சமீப காலத்தில் மறைந்துவிடும். அதன்மூலம் ஜெர்மனியின் வீழ்ச்சி துரிதப்படக்கூடும்.

வி வி வி வி வி

**அதிருப்தி.** ஆனால் குறைகூறுகிறவர்கள் "ராஜ தந்திர நடவடிக்கைகளைப் பாருங்கள், போலந்து, கிரீஸ், சைனாவைக் கவனியுங்கள்," என்று சொல்லுகிறார்கள். அவ்விதம் நாம் செய்தாலும் மனம் கலங்குவதற்கு ஒரு காரணமும் இல்லை. நாம் பின்கண்ட பதிலை உரைக்கிறோம். "போலந்தின் நடவடிக்கையிருந்தபோதிலும் பிரிடனுக்கும் ருஷ்யாவுக்குமுள்ள தற்போதிய அந்யோன்யத்தை கவனியுங்கள். பிரான்ஸ் ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அனுப்பியுள்ள செய்தியில் காணப்படும் பிரிடிஷ் அமெரிக்க ஒற்றுமையைக் கவனியுங்கள். ஐரோப்பிய நிலைமையில் சிறிது அமைதிக்குறைவு இருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்கவில்லை. ஆகிலும் பெல்ஜியம், பிரான்ஸ், இதாலியில் நிலைமையில் தெளிவு ஏற்படுவதைக் கவனியுங்கள். அங்கே நிரந்தரமான நிர்வாகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அராஜகத்துக்கு இது அநேக முறைகளில் சிலாக்கியமானது. கிரீஸில் கலகம் சாவதானமாக அடங்கி வருகிறது."

வி வி வி வி வி

**போலந்து.** லண்டனிலும் லப்ளினிலும் உள்ள போலிஷ் நிர்வாகங்கள் ஒத்துழைக்காமல் இருக்கலாம். லண்டனிலுள்ளவர்கள் லப்ளினிலுள்ளவர்களை ருஷ்யர்களின் ஏஜெண்டுகளென்றும் தாங்கள்தான் போலந்தின் நியாயமான நிர்வாகத்தின் பிரதிநிதிகளென்றும் சொல்லலாம். அவர்களையும் பிரிடனும் அமெரிக்காவும் ஆதரிக்கலாம். லப்ளினிலுள்ளவர்களை ருஷ்யா ஆதரிக்கலாம். ஆகிலும் நேசதேசத்தாரிடையே பிளவு ஏற்பட்டுவிட்டதென்று எண்ணும் எதிரியும் குறை கூறுகிறவர்களும் ஏமாற்றமடைந்துவிடுவார்கள். இந்த நடவடிக்கை மகத்தான தேசங்களின் ஐக்கிய பத்தியத்தைக் கெடுத்துவிடாது. ருஷ்யாவின் நடவடிக்கையைக்கண்டு பிரிடனும் அமெரிக்காவும் ஆச்சரியப்படவில்லை. அதுபோல பிரிடிஷ், அமெரிக்க மனப்பான்மையைக்கண்டு ருஷ்யாவும் திகைக்கவில்லை. வித்தியாசங்கள் மூலம் சில சிரமங்கள் ஏற்படலாம். ஆகிலும் நேசதேசத்தாரின் லக்ஷியம் ஒரு பொழுதும் தவறி விடாது. லப்ளின் அல்லது லண்டனிலுள்ள கக்ஷிகளைச்சேர்ந்த போலிஷ் தேசாபிமானப் படைகளுக்கு போலந்தை ஜெர்மன் பிடிப்பிலிருந்து விடுவிக்கவேண்டுமென்ற பொதுப் படையான லக்ஷியமிருந்துவருகிறது. நேசதேசத்தாரின் லக்ஷியமும் இதுதான்.



வி வி வி வி வி

**ஆங்கிலோ-அமெரிக்க உறவுகள்.** பிரிடிஷ் அமெரிக்க பத்திரிகாசிரியர்களுக்கிடையே இவ்வருஷத்தின் முதல் வாரத்தில் குற்றம் சாட்டும் பதிலளிப்பதும் நடைபெற்றதென்பதற்கு நாம் வருந்துகிறோம். ஏதோ சிறிது அதிருப்தி இருப்பதாகவும் அதிலிருந்து புலப்படுகிறது. ஆகிலும் பொறுப்புள்ளவர்களின் அறிக்கைகளின் மூலம் இந்த சச்சரவு வேகம் தணிந்துவிட்டது. அமெரிக்காவில் நவம்பர் மாதம் நடைபெற்ற தேருதலின் மூலம் தனித்து நிற்பது தவறென்ற தோற்றம் உண்டாகிவிட்டது. புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் காங்கிரஸ் சபையில் அநேக முற்போக்குள்ள வாலிபர்கள் இருக்கிறார்கள். அமெரிக்கா உலக விஷயங்களில் முதன்மையான ஸ்தானம் வகிக்கவேண்டுமென்று அவர்கள் எண்ணம் கொண்டிருக்கிறார்கள். தனித்து நிற்பதற்கும் சர்வதேச விவகாரங்களில் கலந்து கொள்ளுவதற்கும் இடையே சண்டை இடைவிடாது நடக்கலாம். அட்லாண்டிக் சாஸனத்துக்கும் டம்பார்டன் ஓக்ஸ் முடிவுக்கும் சச்சரவு ஏற்படலாம். எல்லைச் சரக பிரச்னையும் செல்வாக்கு வட்டாரம் சம்பந்தமான பிரச்னையும் கிளர்ச்சிகளையும் உண்டுபண்ணலாம். வருங்காலத்திய உலக பத்திரத்தைப்பற்றியும் தற்காப்புகளையும்பற்றி சிரமங்கள் ஏற்படும். அவைகளைத் தீர்க்காவிடில் இந்த யுத்தத்தை நடத்தியது வீணாகிவிடும். எவ்விதம் நடைபெறினும் பிரமாதமான காரியம் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. அமெரிக்காவுக்கும் நேசதேசங்களுக்குமிடையே பிளவு ஏற்படாது. ஏனென்றால் மகத்தான பிரச்னைகளில் ஒரு பிளவும் ஏற்படவில்லை அவ்விதமாகக் கிளம்பும் வதந்திகள் எல்லாம் ஜெர்மனியின் கட்டுக்கதைகள். வெள்ளிக்கிழமையன்று காங்கிரஸுக்கு அனுப்பிய பலமான அறிக்கையில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் நிலைமையைத் தெளிவுபடுத்திவிட்டார். அவர் பின்வருமாறு சொன்னார்.

"ஒன்றுபட்ட திட்டத்தை நிறுவி, ஒத்துழைத்துப் போரை நடத்தியதென்பது பிரிடிஷ், அமெரிக்க நாடுகளின் திறமைக்குப் புகழுரையாகும்.

"கிரீஸிலும் போலந்திலும் ஏற்பட்டிருக்கும் நிலைமையைப்பற்றி எனக்குக் கவலை இல்லையென்று நான் சொல்லவில்லை. சில பிரமுகர்கள் சொல்லுவதுபோல் இந்த நிலைமையைத் தீர்ப்பது சுலபமானதல்ல, சாதாரணமானதல்ல. நியாயமார்க்கத்திலில்லாவிட்டாலும் தேச பிரஷ்டமடைந்த நிர்வாகத்துக்கும், கிழறுப்பான் வேலை செய்யும் கோஷ்டித் தலைவர்களுக்கும் நம்மைவிட பிரதேசத்தை சமீபித்திருக்கும் பெரிய வல்லரசுகளுக்கும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

"எதிரிகளை முறியடிக்கும் தருவாய் நெருங்க நெருங்க நேசதேசத்தார்களிடையேயுள்ள வித்யாசங்கள் நமக்கு நன்குபுலப்படுகின்றன. ஆகிலும் யுத்தத்தில் வெற்றிபெறுவது, சமாதானத்தை ஏற்படுத்துவது என்ற மிகவும் முக்கியமான பொதுப்படையான அக்கரைகளை மறந்துவிடவோ அல்லது புறக்கணித்துவிடவோ அந்த வித்யாசங்கள் நம்மை பாதிக்கும்படி விடக்கூடாது.

"நமக்குள் ஒற்றுமையை வளர்ச்சி செய்வது பொதுப்படையான அபாயமும் பொதுவான நம்பிக்கையும்தான். நமது சங்கம் நிர்வாகங்களின் கூட்டமில்லை. ஆனால் தேசங்களில் சமாஜம்.

"அயல்நாட்டுக் கொள்கைகளில் நேசதேசத்தார்களுடன் நாம் தோளோடு தோள்நின்று வருகிறோம். இந்த ஒற்றுமை யுத்தத்திற்காகமட்டுமில்லை. வெற்றியின் நோக்கங்களைப் பெறுவதற்கும்தான் நாம் ஒன்றுபட்டிருக்கிறோம்."

பிரிடிஷ்—அமெரிக்க சம்பந்தங்களில் சிறிது குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று ராய்ட்டர் சொன்னபொழுது நமக்குச் சிறிது கவலையுண்டாகிற்று. ஆனால் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் செய்தி இது தவறென்று ருஜூச்செய்துவிட்டது. மூன்று வல்லரசுகளும் கூடியசீக்கிரம் கூடிப்பேசுவார்களென்றும் ஆனால் கூடும் இடமும் காலமும் வெளிப்படாதென்றும் மகாநாட்டின் விவரங்களை அதற்கு ஒரு வாரத்திற்குப்பின்தான் உலகம் அறியக்கூடுமென்றும் அவர் வெளியிட்டிருக்கிறார். இது திருப்திகரமான செய்திதான். நேசதேசத்தார்களிடையே ஒற்றுமை குறையவில்லை என்ற வாக்குறுதி ஏற்படும்பொழுது அவர்கள் எங்கு, எப்பொழுது கூடப்போகிறார்களென்பதைக் கேட்டு உலகம் ஒன்றும் லாபமடையப்போவதில்லை.

**பிரிடனின் மனப்பான்மை.** ராணுவ முறையில் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரி கீழ்கண்ட செய்தியை பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டில் வெளியிட்டார்.

"அமெரிக்க ஸோல்ஜரின் போர்வீரத்தினாலும் நேசதேசத்தாரின் ஒத்துழைப்பினாலும் ருண்ட்ஸ்டெட் முறியடிக்கப்பட்டுவிட்டான். அமெரிக்க ஸோல்ஜர்களுக்கு என்னுடைய பாராட்டுகளை அறிவிக்கிறேன். அவர்களைவிடப் போர்புரிவதற்குத் தகுந்த சகாக்கள் அகப்படமாட்டார்கள்.

"நல்ல முறையில் சொல்லப்படும் குற்றச்சாட்டுகளுக்கு நான் ஆக்ஷேபிக்கவில்லை. ஆகிலும் நேசதேச ஒற்றுமையைக் குலைக்கக்கூடியதும் அதனால் எதிரிக்கு உதவியளிக்கக் கூடியதுமான நாசவேலை செய்யக்கூடிய குற்றச்சாட்டை நாம் ஒழித்துவிடவேண்டும்.

"டிஸம்பர் 16-ம் தேதியன்று பீல்ட் மார்ஷல் ருண்ட்ஸ்டெட் தாக்கியபொழுது அவன் திடீரென்று தாக்கினான். ஆகையால் அமெரிக்க 1-வது சேனையின் மத்தியில் பலமாக ஊடுருவிச் சென்றான். அவன் பலஹீனமான பாகத்தில் ஊடுருவிச்சென்றும் மீயூஸ்நதியை நோக்கி முன்னேறினான். ஆகிலும் எல்லாப்படைகளும் அந்த அபாயத்தைத் தடுக்க முன் வந்தன. தேசிய பிரச்னைகள் கவனிக்கப்படவில்லை."

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** ஆர்டெனிஸ் உப்பலுக்கு வடக்குப் பக்கத்திலுள்ள படை களுக்கு பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரியும், தெற்குப் பக்கத்தில் ஜெனரல் ஓமார் பிராட்லியும் சேனாதிபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மனி ஊடுருவிச்சென்றதினால் இந்த மாறுதல் அவசியமாயிற்று. பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரியிடம் ஒரு பிரிடிஷ் படையும், ஒரு கனடியப்படையும், இரண்டு அமெரிக்கப் படைகளும் இப்பொழுது இருக்கின்றன. உப்பலின் இரண்டு விலாப்பக்கங்களிலும் எதிரி பின்புறம் துரத்தியடிக்கப்படுகிறான். இருபடைகளுக்குமுள்ள இடைவெளி பத்துமைல் களுக்குக் குறைந்துவிட்டது. ஸ்ட்ராஸ்போர்க்கை நோக்கி முன்னேறிய ஜெர்மன் படைகளின் வேகம் தடைபட்டுவிட்டது. அமெரிக்க 3-வது சேனை பாஸ்டோக்னிக்கு மேற்கில் முன்னேறிவருகிறது.

ருண்ட்ஸ்டெட்டின் தாக்குதல் திட்டம், ரகசியம், தயாரிப்பு, நடவடிக்கை முதலிய வைகள் மிகவும் சிறந்ததென்று தெளிவுபடுகிறது. போரின் முடிவைப்பற்றி முடிவான அபிப்பிராயம் சொல்லுவதற்கில்லை. அவருடைய லக்ஷியம் என்ன? அவரா அல்லது ஈசன் ஹவரா முதலில் தாக்கப்போகிறார்? ஆகையால் நாம் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். ஆகிலும் ஒன்று இரண்டு விஷயங்களை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். பிரிடிஷ் விமானப்படையை ஒத்ததுபோல் நேசதேச விமான தளங்களைத் தாக்கிய ஜெர்மன் விமானப் படை இகழ்ச்சி பெற்றுவிட்டது. தாக்கவந்த விமானங்களில் 40 சதவிகிதம் அழிந்துவிட்டது. இரண்டாவதாக, மஸ்கிடோ விமானங்கள் ஜெர்மன் போக்குவரத்துகளைத் தாக்கி அழித்து விட்டதால் ஆர்டெனிஸ் உப்பலிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு வரும் ஸப்ளைகள் தடைபட்டு விட்டன. மூன்றாவதாக, தாத்காலிகமாக முன்னேறித் தாக்கும் சக்தியை நேசதேசப் படைகள் பெற்றுவிட்டன. நான்காவதாக, ருண்ட்ஸ்டெட்டின் படைகளை கணக்கில் எழுதிவிட வேண்டியதுதான் என்று பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரி சொல்லியிருக்கிறார். அவனுடைய குறுகிய காலமுள்ள தாக்குதலினால் யுத்தத்துக்கு முடிவு சீக்கிரத்தில் ஏற்படக்கூடிய தாகையால் ருண்ட்ஸ்டெட் நேசதேசத்தார்களுக்கு இணையற்ற சேவையைச் செய்திருக்கிறார் என்று ஜெனரல் ஓமார் பிராட்லி சொல்லியிருக்கிறார்.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.** டான்யூப் நதிக்கு வடக்கில் ஊடுருவிச் சென்ற ருஷ்யப் படைகள் ஆஸ்திரியாவை நோக்கி முன்னேறும் பொழுது கோமாராம் என்ற பெரிய இருப்புப்பாதை, ரஸ்தா ஜங்க்ஷனையும் நைத்ரா நதியை யும் சமீபித்துவிட்டன. புடாபெஸ்ட் முற்றுகை செய்யப்படுகிறது. நகரத்தில் புகையும் அக்னியும் சூழ்ந்து நிற்கின்றன. தெருத்தெருவாகவும் வீடு வீடாகவும் சண்டை நடைபெறு கிறது. சென்ற வெள்ளிக்கிழமையன்று ஒரே நாளில் ஜெர்மானியர் கொண்டுவந்த 300 டாங்கிகள் அழிக்கப்பட்டன. 3,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்கள். 600 பேர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். டான்யூப் நதிக்குக் கிழக்குக்கரையிலுள்ள பெஸ்டின் மூன்றில் ஒரு பாகம் ருஷ்ய வசமாகி விட்டது. மேற்குக் கரையிலுள்ள புடாவில் சில ஸ்தானங்களை ஜெர்மானியர் தற்காப்புச் செய்துவருகிறார்கள். துயரம் ஓய்ந்தபாடில்லை.



**இதாலி.** பனி, மழை, மற்ற மாரிகால அசௌகரியங்களையும் பொருட் படுத்தாமல் நேசதேசத்தார்கள் முன்னேறி வருகிறார் கள். 8-ம் படையைச் சேர்ந்த கனடியத் துருப்புகள் புதிய தாக்குதலைத் துவக்கி வல்லி டி கோமாக்கியோ வளைகுடாவின் கரைகளையும் ராவன்னாவுக்கு வடக்கிலுள்ள கடற்கரையையும் அடைந்துவிட்டன.

வி வி வி வி வி

**பர்மா.** இந்த வாரத்தில் இங்கு மகத்தான லாபங்கள் கிடைத் துள்ளது. வட பர்மாவின் கரடுமுரடான காடுகளைத் தாண்டி நேசதேசப்படைகள் ஐராவதியின் நெல் விளையும் பிரதேசத்திற்குள் புகுந்து விட்டன. ஷ்விபோ சமவெளிக்கு நீர்ப்பாசனத்தைக் கட்டுப்பாடு செய்யும் காபோ அணையும் ஷ்விபோ நகரமும் பிடிபட்டன. யெயூவும் ஷ்விபோவும் பிடிபட்டதினால் மாண்டலேக்குப் போகும் மார்க்கம் திறக்கப்பட்டுவிட்டது. மாண்டலேக்கான போர் சமீபித்துவிட்டது.

பிரிடிஷ் துருப்புகள் அக்யாப் தீவை ஆக்கிரமித்துவிட்டன. மாயூ தீபகற்பம் சுத்தி செய்யப்பட்டுவிட்டது. அக்யாப் போர் முடிவடைந்து விட்டன.

பர்மாவின் வடக்குப் பகுதிப் போரில் படைகள் பாமோ-நாம்-காம் ரஸ்தாவழியாக முன்னேறி வருகின்றன.

பர்மாவின் நிலைமையை விமர்சனம் செய்து டைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது.

"நெடும் போக்காக கவனித்தால் பர்மாவில் எதிரிக்கு பத்திரக்குறைவான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்விதம் சொல்லுவதிலிருந்து எதிரி சீக்கிரத்தில் விழுந்துவிடுவா னென்று நம்பிக்கை கொள்ளுவது நியாயமற்றதாகும். எதிரியின் படைகள் இது வரையில் ஊக்கத்துடன் போரை நடத்திருக்கின்றன. அவனுக்கு வடக்கு பர்மாவைக் காலிசெய்வதாக உத்தேசமிருப்பதாகத் தோன்றவில்லை. நாம் காமிலிருந்து ஐராவதிக்கும் மாண்டலேக்கும் செல்லும் கோடிலும் அங்கிருந்து ஷ்விபோவுக்கும் மாண்டலேக்கும் வடக்கில் சிண்ட்வின் நதியிலுள்ள மனிவா துறைமுகத்துக்கும் போகும் கோட்டில் நின்று போரை நடத்த எதிரி உத்தேசித்திருக்கிறான் என்று தோன்றுகிறது."

வி வி வி வி வி

**பஸிபிக்.** இந்த வாரத்தில் பிலிப்பைன்ஸ் தீவின் விடுதலை துரிதப் படுத்தப்படுகிறது. மிண்டாரோத் தீவில் உபரிப் படைகள் இறங்கிவிட்டன. மாரிண்டிகித் தீவிலும் படைகள் இறங்கிவிட்டன. லூஸானுக் குள் படைகள் புகுந்துவிட்டன.

6,000 மைல்கள் கொண்ட கடல் மார்க்கத்தில் முன்னேறித்தாக்கும் சக்தியை நேச தேசத்தார்கள் பெற்றுவிட்டார்கள். ஸைபான், குவாம், டினியன், பாலா, லேடி போன்ற தளங்கள் நேசதேச வசமாகிவிட்டன. அவை யெல்லாம் பிலிப்பைன் கடலைத்தாண்டி ஜப்பானை நோக்கி இருக்கின்றன. ஜப்பானையே தாக்க நேசதேசத்தார்கள் ஸன்னத்தமாக இருக்கிறார்கள். பிலிப்பைன்ஸ் தீவுகள் படத்தில் சிறியதாக இருக்கலாம். ஆகிலும் அவைகள் வடக்கிலிருந்து தெற்கு வரையில் 1,000 மைல்கள் விஸ்தாரமுள்ளவை. அதில் 7,083 தீவுகளிருக்கின்றன. அவைகள் 114,830 சதுர மைல்கள் கொண்டவை.

இந்த சந்தர்ப்பங்களில் 1941-ம் வருஷம் ஜப்பானுக்கு சௌகரியமான காலமென்று ஜப்பானிய விமர்சகர் சொல்லுவது நம்பத்தக்கதில்லை. 1941-ம் வருஷத்தில்தான் ஜப்பானியர் கள் நியூ கினியா, கில்பெர்ட், மார்ஷல்ஸ், மாரியனாஸ், அலூஷியன்ஸ் தீவுகளிலிருந்து துரத்தி யடிக்கப்பட்டார்கள். பிலிப்பைன்ஸின் ஆக்கிரமணம் துவங்கியது. ஜப்பான் வெடி விமானங் களால் அடிக்கடி தாக்கப்பட்டது. 1944-ம் வருஷத்தில்தான் இந்தியாவைப் படையெடுப்பது என்று ஜப்பானியர் முயற்சித்தது போக பர்மாவுக்குள் நமது படைகள் புகுந்தன. இவைகள் ஜப்பானுக்குக்கு சௌகரியமானவைகள் என்று நினைத்தால் எல்லோரும் அவைகளை வரவேற் கட்டும். 1945-ம் வருஷத்தில் நேரிடக்கூடிய கெடுதலை உத்தேசித்து 1944 சௌகரியமாக இருந்ததென்று ஜப்பான் நினைத்து வருவதுபோலத்தோன்றுகிறது.

வி வி வி வி வி

**கிரீஸ்.** கிரேக்க் கலவரம் முடிவடைந்து வருகிறதென்று நம்பு கிறோம். கலகக்காரர்கள் ஆதென்ஸிலிருந்து துரத்தி யடிக்கப்பட்டுவிட்டார்கள். திப்ஸுக்குள்ளும் அவர்கள் பின்பற்றிச் செல்லப்படுகிறார்கள். அநேகர்கள் சரணடையத் தயாராக இருக்கிறார்கள். ஆதென்ஸில் 3,20,000 சாப்பாடும் 1,00,000 பங்கீடுச் சீட்டுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

**சில புள்ளி விபரங்கள்.** (1) அமெரிக்காவில் 1944-ம் வருஷத்தில் 1,677 கப்பல்கள் கட்டப்பட்டன. அவைகள் 16,343,436 டன்கள். (2) அந்த வருஷத்தில் அமெரிக்கா 96,369 விமானங்களைக் கட்டியிருக்கிறது. (3) மாஸ்கோ ரேடியோவின் செய்தி பிரகாரம் 1944-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு 4,50,00,00 பேர்கள் நஷ்டமாகின. 30 லக்ஷம் கொல்லப்பட்டார்கள் அல்லது காயமடைந்தார்கள். 15,63,000 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். (4) D தினத்துக்குப் பின் மேற்குப் போர்முனையில் மட்டும் 7,56,000 ஜெர்மானியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மனியைப்போல ஆறு பங்குள்ள பிரதேசம் விடுவிக்கப்பட்டிருக்கிறது. (5) பிரிடிஷ் விமானப்படை 1944-ல் 525,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டு 36,000 சதுர மைல் கொண்ட பிரதேசத்தை அழித்திருக்கிறது.

வி வி வி வி வி

**புது வருஷப் பரிசு.** மாட்சி தங்கிய மன்னர்பிரான் இந்தியாவில் குடைத் திருப்புப் படையைத் தயாரிக்கும் திட்டத்தை அங்கீகாரம் செய்துவிட்டார். இதற்குமுன் தீரமாகப் போர் புரிந்திருக்கும் இந்தியக் குடைத் திருப்புகள் புதிய படையுடன் ஒன்று சேர்க்கப்படும்.

வி வி வி வி வி

**ஹிட்லர் மறந்துவிட்ட விளம்பரமில்லாத பெரிய சேனை.** இதுதான் பிரிடனிலுள்ள ஸ்திரீகளின் வாலண்டரி சேனைப் படை. அது 1 மிலியன் கொண்டது. யுத்த ஆரம்பத்திலிருந்து பகட்டன்னியில், சிரம சாத்தியமான அபாயம் பொருந்திய வேலையிலீடுபட்டிருக்கிறது என்று அச்சங்கத்தின் தலைவரான ரீடிங் சீமாட்டி டில்லியில் ஒலிபரப்பில் வெளியிட்டார். அந்த சேனைக்கு ஒரு பரிசும் வழங்கப்படவில்லை. ஆனால் அந்தப்படையிலுள்ளவர்களை தங்களுடைய பூரா பலத்தையும் அவகாசத்தையும் சேவையில் ஈடுபடுத்தவேண்டும். அவள் பின்வருமாறு சொன்னாள். "பிரிடனிலுள்ளவர்கள் ஐந்து வருஷங்களாகப் போரை நடத்தியிருக்கிறோம். நாங்கள் கோரமான தோற்றங்களைக் கண்டோம். எதிர்பாராத சப்தங்களைக் கேட்டோம். ஆகிலும் இந்த வருஷங்களில் எங்களுக்குக் கிடைத்த சேவை என்னும் பாக்கியத்தை நாங்கள் முழு மனதுடன் நிறைவேற்றினோம்.

"நாங்கள் மிகவும் சோர்வடைந்திருக்கிறோம். எங்களில் அநேகர் வீடு வாசல்களை இழந்திருக்கிறோம். ஆகிலும் இப்பொழுதுதான் ஆடவர்களுடன் ஸ்திரீகளும் முழுமனதுடனும் சுயநலமன்னியிலும் சேர்ந்து வேலை செய்யமுடியும் என்பதை நாங்கள் முதன்முதலாக உணர்ந்துவிட்டோம்."

---

## 1944-ம் வருஷத்திய லாபங்கள்.

**(இந்தியா கவர்ன்மெண்டின் பிரசுர நிலயம்).**

அநேக வெற்றிகள் கிடைக்கப்போகும் புதுவருஷ ஆரம்பத்தில் நேச தேசங்களிலுள்ள ஜனங்கள் ஒவ்வொரு போர்முனையிலும் நேச தேசங்களின் ஒற்றுமை மூலம் சென்ற வருஷத்தில் அநேக வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்களென்று சந்தோஷப்படுகிறார்கள். ஐரோப்பாவில் எல்லாப் போர்முனைகளிலும் நேச தேசங்களின் ஒன்றுபட்ட யுத்தத் தந்திரமும் ஐஸ்வர்யங்களும், ஐரோப்பாவிலுள்ள அநேக நாடுகளுக்கு விடுதலையை அளித்துவிட்டன. கிழக்கு, மேற்கு, தெற்கிலிருந்து முன்னேறிய படைகள் ஹிட்லரின் ஜெர்மனியின் எல்லைச்சரகத்துக்கு வந்துவிட்டன. தூரக்கிழக்கில் பஸிபிக்கிலுள்ள ஜப்பானிய உள்நாட்டுத் தற்காப்புகள் நொருக்கப்பட்டன. ஜப்பானும் அடிக்கடி நேசதேச வெடி விமானங்களால் தாக்கப்பட்டு வருகிறது.

இந்த வருஷத்தில் வெற்றிகரமான அநேக சர்வதேச மகாநாடுகள் கூடி புதிய ஸ்வதந்திரமுள்ள உலகத்தை அமைக்க அஸ்திவாரங்கள் போட்டன. யுத்தத்தினால் சீர்கெட்டுப்போன நாடுகளின் கஷ்ட நிவாரணத்துக்கும் புனருத்தாரணத்துக்கும், உணவுப்பொருள், கோசம், உலகபத்திரம் முதலியவற்றுக்காக பரஸ்பர ஒத்துழைப்புக்கும் திட்டங்கள் நிறுவப்பட்டன. 1944-ம் வருஷத்தில் நடைபெற்ற அநேக மகாநாடுகளில் முக்கியமானவை பன்னிரண்டு. அவையாவன.

லண்டன் ஜனவரி 14, ஐரோப்பிய ஆலோசனைக்கமிஷனின் முதல் கூட்டம்.

லண்டன் ஏப்ரல் 19, சர்வதேசக்கல்வி ஸ்தாபனத்தின் அமைப்பின் நகலை நேசதேசக் கல்வி இலாகா மந்திரிகள் ஒப்புக்கொண்டார்கள்.

பிலடெல்பியா ஏப்ரல் 24, சர்வதேசத் தொழிலாளர் ஆபீஸ், உரிமை சாஸனத்தை ஏற்றுக்கொண்டது.



லண்டன் மே 16, விடுதலைபெறும் நாடுகளின் நிர்வாகத்தைப்பற்றி பிரிடன், அமெரிக்கா, பெல்ஜியம், ஹாலந்தும், பிரிடனும், அமெரிக்காவும், ருஷ்யாவும், நார்வேயும் உடன்படிக்கை செய்துகொண்டன. அதன் தொடர்ச்சியாக மற்ற நாடுகளுக்குள்ளும் ஒப்பந்தம் ஏற்பட்டது

பிரெட்டன் உட்ஸ் ஜுலை 1, நேசதேசத்தார்கள் சர்வதேசப்பொருள் நிதியையும் பாங்கியையும் அமைக்க திட்டம்போட்டார்கள்.

லண்டன் ஆகஸ்டு 15, அகதிகள் சம்பந்தமான சர்வதேச நிர்வாகக் கமிட்டியின் முதலாவது பொதுக்கூட்டம் நடைபெற்றது.

டம்பார்டன் ஒக்ஸ் ஆகஸ்டு 21, பிரிடனும், அமெரிக்காவும், ருஷ்யாவும், சைனாவும் யுத்தத்துக்குப்பின் உலகபத்திரத்தைப்பற்றி விவாதித்து அடிப்படையான முடிவுக்கு வந்தன.

வாஷிங்டன் ஆகஸ்டு 22, உணவுப்பொருள், விவசாயம் முதலியவற்றைப்பற்றிய இடைகால கமிஷன் நிரந்தரமான ஸ்தாபனத்திற்காக நகல் திட்டத்தை சமர்ப்பித்தார்கள்.

க்விபெக் ஸெப்டம்பர் 12, அமெரிக்கா, பிரிடன், கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் பஸிபிக் போரைப்பற்றி விவாதித்தன.

மாண்ட்ரீல் ஸெப்டம்பர் 16, நேசதேச கஷ்ட நிவாரண புனருத்தாரண ஒப்பந்த சபையின் இரண்டாவது கூட்டத்திற்கு 44 தேசத்தவர்கள் பிரசன்னமாகி இருந்தார்கள்.

மாஸ்கோ அக்டோபர் 9, ஒன்றுபட்ட நேசதேச யுத்தத் தந்திரமும் யுத்தத்துக்குப் பிந்திய நடவடிக்கைகளும் சர்ச்சை செய்யப்பட்டன. க்விபெக் மகாநாட்டின் முடிவுகளைப் பற்றி மிஸ்டர் சர்ச்சில் ஸ்டாலினுக்கு அறிவித்தார்.

சிகாகோ நவம்பர் 1-உலக விமான நடவடிக்கை சம்பந்தமாகவும் அந்த நாடுகளில் ஆகாய ஸ்வதந்திரத்தைப்பற்றியும் 54 தேசங்களும், அதிகாரங்களும் ஒருமைப்பற்ற அபிப்பிராயம் தெரிவித்தன.

இந்த முக்கியமான நேசக் கூட்டங்களுக்கு தேசங்களிலுள்ள சகலவிதமான அதிகாரிகளும் ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்தித்து ஒத்துழைத்தார்கள். இதிலிருந்து சர்வதேசப்பற்றுதலும் பரஸ்பர உதவியும் அடிப்படையாகக்கொண்ட ஒரு மேன்மையான உணர்ச்சியும், பழக்கமும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. வரப்போகும் நேசதேச ஐக்கியக் கொண்டாட்டத்தினத்தன்று இறுதி வெற்றியும், நிரந்தரமான கூட்டுறவும் ஏற்பட்டுவிடுமென்பதையும் அவைகள் குறிப்பிக்கின்றன.

---

## 1944-ல் கடல் போர்.

### கடலாதிக்கத்தின் உபயோகம்.

**(பிரியான் டன்ஸ்டால்.)**

1944-ம் வருஷத்தில் கடல் போரின் முக்கியமான சம்பவம் யாதெனில் நார்மண்டியிலும், மத்திய தரைக் கடலிலும் படைகளை இறக்கியதன் மூலம் ஐரோப்பாவை விடுதலை செய்ய கடலாதிக்கத்தைப் பயன் படுத்தியது தான்.

இந்த நடவடிக்கையில் பிரிடிஷ் கடற்படை முக்கியமாக பங்கெடுத்துக் கொண்டது. அதற்கு கனடிய, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் கடற்படைகள் உதவி செய்து வந்தன. நான்கு வருஷங்களாக கடற்படை பலமாகவும், விரிவாகவும் போரை நடத்தியதின் காரணமாகத்தான் விடுதலைக்காகப் படைகள் இறங்கின. இந்தக் கடல் நடவடிக்கையில் ஜெர்மன் விமானப்படை, யூ படகுகளின் தொந்திரவன்னியில் ஜெர்மனி முற்றுகை செய்யப்பட்டது. கொள்ளையடித்துவந்த யூ படகுகளின் தோல்வி அபிவிருத்தியடைந்தது. இதாலிய கடற்படை முறியடிக்கப்பட்டு சரணடைந்தது. மத்தியதரைக் கடல் மறுபடியும் போக்குவரத்துக்கு திறக்கப்பட்டது. ஜெர்மனியின் கடற் படை கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டது.

ஐரோப்பிய விடுதலை நடவடிக்கை சாத்யமாகத் தோன்றிய பொழுது பூரா திட்டங்களும் நடவடிக்கைகளும் கடல்மார்க்கமாகவே நிறை வேற்றப்பட்டன. படைகளையிறக்க திட்டங்களை நிறுவி அவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியதென்பது கடற் படையின் மகத்தான நடவடிக்கையாகும். படைகளிறங்கிய உடன் காலத்தில் பிரிடனில் மிகவும் சிரமப்பட்டு திட்டம் போட்டு, அமைக்கப்பட்டு, நார்மண்டிக் கடற்கரையில் அமைக்க ஏற்பாடு செய்திருந்த "மல்பெரி அமைப்புகள்" துாக்குத் தூக்காகக் கடல் தாண்டி நார்மண்டிக்குக் கொண்டு போகப்பட்டு கடற்கரை இலாகாவின் யோசனைப்படி அங்கு ஒன்று சேர்க்கப்பட்டு

துறைமுகங்கள் அமைக்கப்பட்டன. இந்த திட்டங்களுக்கு பிரிடனின் சமஸ்தமான கடற்படை ஐச்வர்யங்களும் புத்திசாலித்தனமும் ஆயிரக்கணக்கான கடற் கரை மாலுமிகள், துறைமுக, கப்பல் கட்டும் தளம், முதலியவற்றிலுள்ள வேலைக்காரர்கள், கடற்படை என்ஜினியர்கள், சீதோஷ்ணஸ்திதியை நிர்த்தாரணம் செய்யும் என்ஜினியர்கள் முதலியவர்களின் சாமர்த்தியமும் பயன் படுத்தப்பட்டன.

படைகளை இறக்குவதன் மூலம் மத்தியதரைக் கடலின் அனுபவத்தை ஒட்டி உண்டு பண்ணப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு நன்றாய் திறம்பட அமைக்கப்பட்டிருந்த படகுகள் அவைகளின் ஓட்டிகள் முதலிய வற்றின் திறமையும் பரீக்ஷை செய்யப்பட்டு விட்டது.

இறங்கும் படைகளுக்கு ரக்ஷணையளிக்க வெடிகுண்டுகளை வீசவும் வெகு தூரத்திலிருந்து குண்டுகளைப் பொழியவும் யுத்தக் கப்பல்களும், சஞ்சாரிகளும் நாசகாரிகளும் ஏராளமாக உபயோகப்படுத்தப்பட்டன. யூ படகுகள், மனித மீன்வெடி, விசேஷமாக மீன்வெடிகள் அமைத்துக் கட்டப்பட்ட படகுகளிலிருந்தும் தொந்தரவை எதிர்பார்த்து பிரிடிஷ் கடற்படை கடல் தாண்டி போக்குவரத்து பத்திரமாகச் செல்லும்படி ரக்ஷணையளித்து வந்தது. பிரெஸ்டை விடுதலை செய்ததும் பிரான்ஸிலிருந்த தரைப் போக்கு வரத்து மார்க்கங்களைத் துணித்ததும் பிரெஞ்சு கடற் கரை யோரமாகவுள்ள அட்லாண்டிக் துறைமுகங்களிலிருந்து யூ படகுகள் நடவடிக்கைகளைத் திறம்பட நடத்த முடியாமல் போய் விட்டது.

அதற்குப்பின் வேகமாக முன்னேறிவரும் நேசதேச விடுதலைப் படைகளுக்கு சர்பராக்களை அனுப்ப வசதியளிப்பதற்காக கால்வாயிலுள்ள துறைமுகங்களை சுத்தி செய்ய வேண்டிய மகத்தான நடவடிக்கை துவங்கிற்று. இங்கு மத்தியதரைக் கடலில் ஏற்பட்ட அனுபவம் பயன் பட்டது. சுரங்க வெடிகள், கப்பல்களை மூழ்கடிப்பது, துறைமுகங்களைத் தகர்ப்பது போன்ற அநேக இன்னல்களை கடற்படை சமாளித்து அகற்றி விட்டன. ஆகிலும் இந்தத் துறைமுகங்கள் யுத்தத்துக்கு முன் நடைபெற்ற வியாபாரத்தை ஒத்து உலகத்திலேயே இரண்டாவது மகத்தான துறைமுகமான ஆண்ட்வெர்ப்புக்குச் சமானமானவையல்ல. ஆண்ட்வெர்ப்பை பழுதுபடாமல் நாம் கைவசப்படுத்திய பொழுது ஷெல்ட் நதியின் முகத்வாரத்தில் இரு பார்சுவங்களும் ஜெர்மனியின் வசமிருந்து வந்தன.

இதனால் வால்சரன் தீவிலிருந்த கனமான பீரங்கிகளையும் ஜெர்மன் படைகளையும் தாக்குவதற்காக ஒன்று பட்ட நடவடிக்கை அவசியமாகிற்று. இந்த நடவடிக்கையை பிரிடிஷ் கடற்படையும், பிரிடிஷ் மாரின் படைகளும், விசேஷ சேவைப்படைகளும் படைகளையிறக்கும் படகுகளிலிருந்த பீரங்கிகள் உதவி கொண்டு தைரியத்துடன் மேற்கொண்டன. இதற்கு அனுசரணையாக ஷெல்ட் நதி மூலமாக ஆண்ட்வெர்ப்புக்குப் போகும் மார்க்கத்தை பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த சுரங்கவாரிக் கப்பல்கள் வெகு சீக்கிரத்தில் சுத்தி செய்தன. நேசதேச சாமான் கப்பல்களின் வருகைக்குச் சௌகரியம் ஏற்பட்டது. மேற்கு ஐரோப்பாவில் வடக்குக் கோடியிலுள்ள போர் முனையிலுள்ள நேசதேசப் படைகளுக்கு சர்பராக்களை அனுப்ப ஆண்ட்வெர்ப்தான் மிகவும் சௌகரியமான துறைமுகம். இதன் மூலம் ஜெனரல் ஈசன் ஹவரிடமுள்ள நேசதேசப்படைகளின் ஸர்பரா பிரச்னை தீர்ந்து விட்டது.

வடக்குக்கடல், அட்லாண்டிக், ஆர்க்டிக் சமுத்திரம், நார்வேக்கருகிலும் ஹாலந்துக்கு ஸமீபத்திலுள்ள சமுத்திரங்களிலும் பிரிடிஷ் கடற்படை வேலை செய்திருக்கிறது. முதலாவதாக வடக்கு ருஷ்யாவுக்கு சாமான் கப்பல் கூட்டங்கள் வெற்றிகரமாகத் தொடர்ச்சியாகச் சென்றிருக்கின்றன. வடக்குக் கடல் மார்க்கங்களில் பிரிடனுக்கு நிச்சயமாக கடலாதிக்கமிருக்கிறதென்பது இதன் மூலம் ருஜுவாகிவிட்டது.

இரண்டாவதாக, நார்வே கடற் கரையோரமாக பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த யுத்தக் கப்பல்களும் கடல் விமானங்களும் ஜெர்மன் கடற்கரையோரமாகச் செல்லும் கப்பற்படையை கொஞ்சம் கொஞ்சமாக அழித்திருக்கின்றன. ஜெர்மனி அட்லாண்டிக் கடற்கரையோரமாகப் பெற்றிருக்கும் கடலாதிக்கத்தையும் பிரிடிஷ் கடற்படை குலைத்துவிடக்கூடுமென்பதற்கு இது ஒரு உதாரணம். வடக்கு நார்வேயில் ஜெர்மனியின் தரைப்படைகள் அகப்பட்டுக்கொண்டிருப்பதாலும், அவைகளைக் காலி செய்வதும் எஞ்சியுள்ளவைகளுக்கு சாபராக்களை அனுப்ப வேண்டியதும் அவசியமாகயிருப்பதினாலும் இந்த நடவடிக்கைகள் இப்பொழுது அதிக முக்கியத்துவம் பெற்று விட்டன.

மூன்றுவதாக, பிரிடிஷ் விமானப்படையும் கடல் விமானங்களும் அடிக்கடி தாக்கிய **பின்னும் 1943-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் சிறிய நீர் மூழ்கிகள் தாக்கிய பின்னும், டிராம்ஸோ வளைகுடாவிலுள்ள ஜெர்மனியின் மகத்தான யுத்தக்கப்பலான டிர்பிட்ஸ் இறுதியாக மூழ்கடிக்கப்பட்டது. கடைசியாக முன்னேறிவரும் ருஷ்யப்படைகளுடன் ஒத்துழைக்க வடக்கு நார்வேயில் பிரிடனிலிருந்து நார்வீஜியப் படைகளின் ஒரு பாகம் இறங்கியது.**



மத்தியதரைக் கடலில் பெரிய கடல் மார்க்கங்கள் நமது வசமாகிவிட்ட படியால் பிரிடிஷ் கடற்படை இதாலியின் இருபக்கங்களிலும் நேபிள்ஸ் துறை முகத்தின் மூலம் போரை பலமாக நடத்தி வருகிறது. மேலும் அமெரிக்கப்படைகள் உதவியுடன் தெற்கு பிரான்ஸின் விடுதலைக்காக அது படைகளை இறக்கியது. மேலும் பிரிடிஷ் கடற்படை கிரீஸில் படைகளை இறக்குவதற்கும் யூகோஸ்லேவியாவுக்கு உதவி செய்வதற்கும் சாதகம் செய்திருக்கிறது.

தூரக்கிழக்குப் போரிலும் பிரிடிஷ் தூரக்கிழக்குக் கடற் படையைச் சேர்ந்த கப்பல்களும் விமானங்களும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலும் நிகோபார் தீவுகளிலுமுள்ள ஜப்பானிய தளங்களை அநேகம் தடவைகளில் தாக்கியிருக்கின்றன. மலாக்கா ஜலசந்தியையும் அதற்கு சமீபத்திலுள்ள சமுத்திரங்களை உபயோகிக்க முயன்ற ஜப்பானியக் கடற்படையை பிரிடிஷ் நீர்மூழ்கிகள் பலமாக அழித்திருக்கின்றன. இந்துமஹா சமுத்திரத்திலுள்ள நேசதேசக் கடற்படைக்கு ஜப்பானிடமிருந்து யாதொரு தொந்திரவும் ஏற்படாமல் காபந்து செய்யப்பட்டது. ஜெனரல் மாக் ஆர்தாரின் ஒன்றுபட்ட நடவடிக்கைகளிலும் வடக்கு நியூகினியாவிலும் பிலிப்பைன்ஸிலும் படைகளிறங்கியதிலும் ஆஸ்திரேலிய கடற்படை அரிய சேவை செய்திருக்கிறது.

---

# 1944-ல் நேசதேச விமான நடவடிக்கை.

## தாக்கும் சக்தி வரவர அதிகரித்து வருகிறது.

**(விங் கமாண்டர் L. V. பிரேசர்).**

மேற்கு ஐரோப்பாவில் போர் அதிக வலுவடைந்து வரும் பொழுது எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமான ஒரு விஷயம் யுத்த மூடுபனியிலிருந்து வெளிப்படுகிறது. 1914-ம் வருஷ முடிவில் தரைப்படைகளுக்கு சகஜமாக உதவியளிக்கக்கூடாத பருவகால நிலைமையில் கூட பிரிடனிலும் ஐரோப்பாவிலுமுள்ள நேசதேச விமானங்கள் சரித்திரத்திலேயே மிகவும் மகத்தான விமான நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஒரு தினத்தன்று அவைகள் 7,000 தடவை பாய்ந்து சென்றன. 30,000 விமானிகள் பறந்து சென்றார்கள். அவைகள் மூன்று டிவிஷன்களுக்கு ஸமானம். அந்த விமானிகள் போர்முனை பேரிலும் அதற்குப் பின்புறத்திலும் குண்டுகளை வீசின. ஜெர்மன் விமானப்படை முன்வரும் படியான கட்டாயம் ஏற்பட்டது. எதிரியின் 700 விமானங்களில் 120 சுட்டு வீழ்த்தப்பட்டன.

அநேக வருடங்களாக திட்டங்கள் போட்டதினால்தான் இந்த நடவடிக்கை சாத்தியமாகிற்று. ஆகாயப் போரில் சரித்திரத்திலில்லாத வண்ணம் 1944-ம் வருஷத்தில்தான் தொடர்ச்சியாகவும் பலமாகவும் விரிவான பிரதேசங்களுக்கு ஏராளமான விமானங்கள் சென்று தாக்கின. 1943-ம் வருஷத்தில் நிறுவிய திட்டங்கள் 1944-ம் வருஷத்தில் பிரதிபலித்து விட்டன. பழைய நடவடிக்கைகளின் படிப்பினையை நன்கு அறிந்து கொண்டபின் நேசதேசப்படைகள் வடமேற்கு ஐரோப்பாவில் இறங்கின.

1944-ம் வருஷ ஆரம்பத்தில் பிரிடிஷ் பாம்பர் படையைச் சேர்ந்த வெடி விமானங்கள் ஜெர்மனி பேரில் வெடி குண்டுகளை வீசிவந்தன. அதன் அடிக்கும் சக்தி அதிகரித்து விட்டதால் 1944-ம் வருஷம் முதல் மூன்று மாதங்களில் போடப்பட்ட வெடிகுண்டுகள் 1943-ம் வருஷம் முதல் மூன்று மாதங்களில் போடப்பட்டதைவிட இரட்டிப்பு மடங்குள்ளதாகயிருந்தது. 1943-ம் வருஷத்தில் முதல் மூன்று மாதங்களில் 28,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடி குண்டுகள் வீசப்பட்ட தென்றால் 1944-ம் வருஷம் அதே சமயத்தில் 58,000 டன்கள் வீசப்பட்டன. 1944-ம் வருஷம் அடுத்த மூன்று மாதங்களில் இது 1,27,000 டன்களுக்கு அதிகரித்தது.

1943-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ஆரம்பித்த பெர்லினுக்கான போர் 1944-ம் வருஷம் மார்ச்சு மாதம் முடிய ஓய்வன்னியில் நடத்தப்பட்டது. இந்த நடவடிக்கையின் மூலம் ஜெர்மனியிலுள்ள 9,80,000 தொழிலாளர்கள் சராசரி 20 நாள்கள் செய்யக்கூடிய வேலையைச்செய்ய முடியாமல் போய்விட்டது. அதன் தொடர்ச்சியாக ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள மற்ற இலக்குகள் முக்கியமாக இருப்புப்பாதைகள் தாக்கப்பட்டன. D-தினத்துக்கு முற்போக்காக பிரான்ஸ், பெல்ஜியம், மேற்கு ஜெர்மனியிலுள்ள முக்கியமான இருப்புப்பாதை நிலையங்கள் இலக்குகளாக அமைக்கப்பட்டன. அவைகளைத் தாக்குவதற்கு மகத்தான குறிப்புவேண்டும். இங்குதான் வெடிவிமானங்களின் திறமை உபயோகமுள்ளதாக இருந்தது D-தினமாகிய ஜூன் 6-ம் தேதி யன்று பாம்பர் கமாண்டைச் சேர்ந்த வெடி விமானங்கள் 37 இருப்புப்பாதை நிலையங்களைப் பலமாக பழுது படுத்திவிட்டன. அதே சமயத்தில் V ஆயுதங்கள் புறப்படும் நிலயங்களும் அவைகளை வைத்திருக்கும் ஸ்டோர்களும் அடிக்கடி பலமாகத்தாக்கப்பட்டன.

1944-ம் வருஷம் ஜூலை முதல் ஸெப்டம்பர்முடிய ஜெர்மனியிலுள்ள போக்கு வரத்து மத்திய நிலையங்கள் பேரிலும் தொழிற்சாலை பிரதேசங்கள் பேரிலும் 44,000 டன் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன. அக்டோபர் மாதத்தில் ரூர் பிரதேசத்தைத் தாக்கும் நடவடிக்கை ஆரம்பமாகிற்று. எதிரி யுத்தத்தை மேலும் நடத்துவதற்குப் போதுமான தளவாடங்களை உற்பத்திசெய்துவிட தொழிற்சாலைகளைத் திருத்தியமைத்து விட்டான். அதற்கும் போர்முனைக்கும் 40 மைல்கள் தானிருந்தன. ஆகையால் ஒரு சிறந்த முன்னணி தளமாக உபயோகப்பட்டது. மேலும் அதில் மிகவும் சிக்கலான போக்கு வரத்து மார்க்கங்களிருந்து வந்தன.

பிரிடிஷ், அமெரிக்க விமானப்படைகள் எஞ்சியிருந்த வேலைசெய்துவந்த தொழிற் சாலைகளை அழிக்கவும், ரஸ்தா, இருப்புப்பாதை, தண்ணீர் மூலமாக உள்ள போக்குவரத்துக்களையும் நொருக்கவும் நடவடிக்கையைத் துவக்கின. ஜெர்மனியில் ஏற்கனவே பலமாக அநேகம் தடவைகளில் தாக்கப்பட்ட கொலோன் பேரில் நான்கு நாட்களில் 9,000 டன்கள் எடையுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன. டார்ட்மண்ட், எம்ஸ், மிட்டலாந்து கால்வாய்கள் உடைக்கப்பட்டுவிட்டதால் ஏராளமான போக்குவரத்துகள் நிலைகுலைந்து விட்டன.

இவைகளைவிட மிகவும் முக்கியத்துவமுள்ளதும் அற்புதமானதுமானது பிரிடிஷ் லங்காஸ்டர் விமானங்கள் எதிரியின் கப்பலான டிர்பிட்ஸை மூழ்கடித்ததுதான். 1944-ம் வருஷத்திய பாம்பர் கமாண்டின் நடவடிக்கையில் கீழ்கண்ட அம்சங்கள் குறிப்பிடத்தக்கவை. இரவிலும் பகலிலும், குறிதவருமல் வெடிகுண்டுகளை வீசுவது, வெடிகுண்டுகளின் பாரம் அதிகரிப்பது, அதிக அழிக்கும் சக்தியுள்ள புதிய வெடிகுண்டுகளை அமைப்பது, டிர்பிட்ஸை மூழ்கடிக்க உபயோகப்பட்ட 12,000 ராத்தல் எடையுள்ள பூகம்ப வெடிகுண்டுகளை உபயோகிப்பது.

1944-ம் வருஷத்தில் வீசப்பட்ட வெடி குண்டுகளினுல் மொத்த எடைமானம் அதிகரித்ததற்கு பாம்பர் கமாண்டைச் சேர்ந்த வெடி விமானங்கள் இரவு பகலாக ஒவ்வொரு நகரமாக குண்டுகளை வீசியதுதான் காரணமாகும். சண்டை விமானப்படையும் 1944-ம் வருஷத்தில் அநேக நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1944-ம் வருஷத்தின் முற்பாதியில் ஜெர்மன் விமானப்படை பிரிடன் பேரில் தலைகாட்டவில்லை. ஆனுல் ஜூன் மாதத்தில் நிலைமை மாறிவிட்டது. அந்த மாதத்தில் எதிரியின் 136 விமானங்கள் அழிக்கப்பட்டன. 18 இரவில் அழிக்கப்பட்டன. இதை நடத்திய மாஸ்கிடோ விமானங்கள் நார்மண்டி முன்னேறும் வாசல் பிராந்தியத்தில் இடைவிடாது இரவு காலத்தில் ரோந்து செய்துவந்தன.

D தினத்தன்றும் அதற்குப் பிறகும் சண்டை விமானப்படை நேசதேசத்தாரின் கடற்படைகளுக்கு ரக்ஷை அளித்து வந்தது. திடீரென்று மற்ருெரு அபாயமும் ஏற்பட்டது. அதன்பின் பறக்கும் வெடி குண்டுகள் லண்டனையும் தெற்கு இங்கிலாந்தையும் தாக்க ஆரம்பித்தன. பிரிடனில் மக்களை அடக்கி விடுவதென்று ஹிட்லர் நம்பியிருந்த ஒட்டியில்லாத விமானங்களில் 2,000-த்தை மூன்று மாதங்களுக்குள் சண்டை விமானிகள் அழித்துவிட்டார்கள் இந்த அபாயத்தைத் தவிர்ப்பதில் விமான எதிர்ப்பு பீரங்கிப்படைகளும் புகைக்கூண்டுப்படைகளும் பேருதவி செய்திருக்கின்றன. இதன் மூலமாகவும் எதிரிகள் அனுப்பும் எவ்வித நூதன ஆயுதங்களையும் ஒழிக்க பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகளின் சாமர்த்தியமும் போதுமானவை யென்று ருஜுவாகி விட்டது.

சண்டை விமானப்படை 1944-ம் வருஷத்தில் எதிரியின் விமான தளங்களின் பேரில் சென்று எதிரி விமானங்களை வழிமறித்ததென்பது மற்ருெரு விசேஷ நடவடிக்கையாகும். மஸ்கிடோ விமானங்கள் பிஸ்கே விரிகுடா, நார்வே, பால்டிக் கடல் பேரில் சென்று, சில சமயங்களில் 1000 மைல்களுக்கு மேல் ரோந்து செய்து ஆகாயத்திலும் தரையிலுமுள்ள எதிரியின் விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. இதைத் தவிர வெகு தூரம் செல்லும் மஸ்டங்க், ஸ்பிட்பையர் விமானங்கள் பிரிடிஷ் வெடி விமானங்களுக்குத் துணைக்காவல் செய்து ஜெர்மனிக்குள் வெகுதூரம் சென்றிருக்கின்றன. சமீப காலத்தில் ஹாலந்திலுள்ள V. 2 அவுட் வாணங்கள் புறப்படும் நிலையங்கள் தாக்கப்பட்டன. அதற்கு மேன்மையான திடமும் குறிதவருமல் அடிப்பதும் அவசியமாக இருந்தன. 1943-ம் வருஷம் கடைசியில் அமைக்கப்பட்ட இரண்டாவது டாக்டிகல் விமானப்படையும் முதல் ஆறுமாதங்களில் ஹிட்லரின் V ஆயுதங்களிருக்கும் சாலைகளைத் தாக்கிவந்தன. அது அநேக அற்புதமான நடவடிக்கைகளைச் செய்திருக்கிறன். மார்டேன் போரிலும், பாலே இடை வெளியிலும், ஸின் நதியைத்தாண்டியதிலும், எண்டோவனுக்கும் வூால் சென்னிலும் படைகள் முன்னேறிய பொழுதும் அது தரைப்படைகளுக்கு பேருதவி செய்திருக்கிறது.

பர்மாவிலும் ஐரோப்பாவிலும் நேசதேச விமானப்படை குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றிருக்கிறது. எல்லாப் போர் முனைகளிலும் 1944-ம் வருஷத்தில் அது எதிரிகள் பேரில் பூர்ணமான ஆதிக்கம் பெற்றுவிட்டது.



# ஜெர்மனியில் நேசதேச முன்னேற்றம்.

## சர்பரா பிரச்னை.

### ஸக்ருடேடர் (ஸண்டே டைம்ஸ் பத்திரிகை).

ஏராளமான தளவாடங்கள் கடல் தாண்டிச்செல்லுகின்றவென்பதும், அவைகளை சேனைகள் உபயோகித்துவருகின்றனவென்பதும் உண்மையே. மேலும் சேனைகளுக்கு உதவியாக விமானப்படை சென்று குண்டுகளைப் போடுகிறதென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

நவீன சேனைகள் சலனம் செய்யும்பொழுதும் இதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். குதிரைகளுக்குப்பதிலாக எண்ணையை உபயோகித்து லாரிகளில் படைகளைச் சலனம் செய்வதென்பது சிலாக்யமானதுதான். ஆனுல், கனமான யுத்த தளவாடங்களன்னியில் படைகளைச் சலனம்செய்வது பிரயோஜனமற்றதாகும். உதவியளிக்க பெட்ரோல் இஞ்சின் இருக்கிறதென்பது உண்மையே, ஆகிலும் ஒருமுறையில் அவைகளும் இடையூறுகள்தான். ஏனெனில் அவைகளுக்கு ஏராளமான எண்ணெய் தேவைப்படும். ராணுவஸ்து அதிகாரிக்கு எண்ணையைக் கொண்டுபோவதும் ஒரு சிரமமான காரியமாகும். நவீன சேனை ஒரு இடத்தில் ஸ்திரமாக இருப்பதில்லை என்பது பொருள்படுகிறது. ஒரு பெரிய போர்முனையில் இருபடைகள் நிலைகொண்டு போரை நடத்திவந்தாலும் படை வரிசைகளுக்குப்பின் ஏராளமான வண்டிகள் வேகமாகவும் இடைவிடாமலும், வெகுதூரம்சென்று திரும்பிவந்து கொண்டேயிருக்கும். இந்த நடவடிக்கை தற்காப்பு யுத்தம் செய்கிறவர்களுக்கும் முன்னேறித் தாக்குகிறவர்களுக்கும் அன்வயிக்கக்கூடியதுதான். முன்காலத்தில் போர்முனையில் தற்காப்பு செய்கிறவர்கள் சமீபதூரத்தில் குவித்துவைக்கப்பட்டிருக்கும் தளவாடக் குவியலை நம்பியிருக்கக்கூடும். இப்பொழுதோவென்றுல் விமானத்தாக்குதல் பயமிருப்பதால் சாமான்கள் தூக்குத்தூக்காக அநேக இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ரஸ்தாக்கள் மூலமாகவும், இருப்புப்பாதை மூலமாகவும் அவைகள் அடிக்கடி படைகளுக்குக் கொண்டுவரப்படுகின்றன. இந்தப் போக்குவரத்தைத் தடுப்பதில்தான் விமானப்படைக்குத்தகுந்த சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. விமான ஆதிக்கம் உள்ள கக்ஷியானது சௌகரியமான காலநிலை இருக்கும் பொழுது எதிரியின் போக்குவரத்துகளை பகலில் நடமாடவொட்டாமல் செய்துவிடலாம். அவ்விதம்செய்தால் முன்னேறித் தாக்குகிறவருக்குத் தடங்கல் ஏற்படுவதுடன் சங்கடமும் உண்டாகும். டுனிஸியாப் படையெடுப்பின்பொழுது இந்த சிரமம் ஏற்பட்டது. அதேவிதமாக பிரான்ஸில் தாக்குதல் செய்யப்பட்டபொழுது தற்காப்புச் செய்கிறவருக்கு அதிக நெருக்கடி ஏற்பட்டது.

சமீபகாலத்தில் பிரான்ஸுக்கான போரில் வெற்றிபெற்றதுபோல் ஜெர்மனிக்கான போரிலும் அதே தந்திரத்தை நேசதேச விமானப்படைக் கையாண்டுவருகிறது. ஆகிலும் காலநிலை பிரதிகூலமாக இருக்கிறது. தினம் தவருமல் மேகங்களும், மழையும் டாக்டிகல் விமானங்களை சலிக்கமுடியாமல் செய்துவிட்டன. இடைவெளியில் சிறிது சௌகரியம் ஏற்படும்பொழுது வெடி விமானங்கள் அதைப் பயன்படுத்தி போக்குவரத்து மார்க்கங்களையும் டாங்கிகளையும், கேந்திர ஸ்தானங்களையும், பீரங்கி நிலையங்களையும் தாக்கிவருகின்றன. ஆனுல் அவ்வித சந்தர்ப்பங்கள் அபூர்வமாகத்தான் கிடைக்கின்றன. இந்த நிலைமையில் எதிரியின் போக்குவரத்துகளை முற்றுகை செய்யும் பொருப்பு நான்கு எஞ்சின்களுள்ள விமானங்களுக்கு ஏற்பட்டது.

ஸ்ட்ராடஜிக் விமானங்களுக்கு டாக்டிகல் விமானங்களைவிட சில உபரி சௌகரியங்களிருக்கின்றன. வெகுதூரம் செல்லும் விமானங்களாகையால் அவைகள் பிரிடனிலுள்ள விமான தளங்களிலிருந்து புறப்படுகின்றன. அங்கு எதிரிகளின் தொந்திரவு கிடையாது. அவைகள் இருட்டிலும், மூடுபனியிலும், மழையிலும் புறப்படுவதற்கும் இறங்குவதற்கும் வசதிகளை உபயோகித்துவரக்கூடும்.

பெரிய வெடி விமானங்கள் ரஸ்தாவழியாகச்செல்லும் தூக்குத்தூக்கான போக்குவரத்து வண்டிகளைத்தாக்க லாயக்கற்றவைகள். ஆனுல், அவைகள் அசைவற்றிருக்கும் இருப்புப்பாதை ஜங்க்ஷன்கள், வண்டித்தொடர்கள், தங்குமிடங்கள், தொழிற்சாலைகள், சாமான் கிட்டங்கிகள், பெரிய சாமான் குவியல்கள் முதலியவற்றைத்தாக்கத் தகுதியுள்ளவைகள். இந்த வேலையில்தான் அவைகள் இப்பொழுது ரூர் பிரதேசத்திலுள்ள ஏற்கனவே நொருக்கப்பட்ட அநேக நகரங்களின்பேரில் வெடிகுண்டுகளைப் பொழிந்துவருகின்றன. இந்த லக்ஷியங்கள்தான் ரைன் நதிக்கரையிலுள்ள ஜெர்மன் சேனைக்குத் தினசரி உதவிசெய்து வந்தன. ஆகையால் அவைகள் ஏற்பாடாகத் தாக்கப்படுகின்றன. அதுபோலவே தெற்குக் கோடியிலுள்ள பிராங்க்பர்ட்டு போன்ற மற்ற நகரங்களும் தாக்கப்படுகின்றன. இதே சமயத்தில் தரைப்போரும் D தினத்திற்கு முன்பும் அல்லது D தினத்துக்கு முன் இதாலிய

போரும் இருந்தவிதமாக அயர்வுற்றிருக்கவில்லை. கெட்டபருவ நிலைமையிலும் மூடுபனியுள்ள போர்முனையிலும் அடிக்கடி பலமான தாக்குதல்கள் செய்யப்படுகின்றன. இந்தத் தாக்குதலின்மூலம் ஜெர்மானியிலுள்ள சிறு பகுதிகள் சுத்திசெய்யப்படுகின்றன. நதிகளுக்கு சமீபத்திலுள்ள நேசதேச நிலையங்கள் பலப்படுத்தப்படுகின்றன. ஆல்ஸாஸிலும், லோரேனிலும்தான் படை நடமாட்டம் அதிகமாகயிருக்கிறது. ஆல்ஸாஸில் கோல்மாரில் ஊன்றி நிற்கும் ஜெர்மனியர்களைச் சீக்கிரம் துரத்தியடிக்கவும் லோரேனில் ஸார் பிரதேசத்திற்கு வாசற்படிபோன்ற பாகத்தைப் பிடிக்கவும் முயற்சிசெய்யப்பட்டுவருகிறது. ஸார் பிரதேசத்தில் ஏராளமான இயற்கையான, கல்பிதமான அநேக இடையூறுகள் நேசதேசப்படைகளுக்கு முன் காணப்படுகின்றன. போதுமான நஷ்டத்தை உண்டுபண்ணிவிட்டு ஜெர்மனி இங்கு சற்று இடம்கொடுத்துப் பின்வாங்கலாம்.

மேலே சர்ச்சைசெய்யப்பட்ட விமான நடவடிக்கையுடன் நேசதேச வெடிவிமானங்கள் ஜெர்மனியின் மர்ம ஸ்தானத்தைத் தாக்குவதையும் நிறுத்திவிடவில்லை. சமீபத்தில் பெர்லினும், சேர்க்கை எண்ணெயை உற்பத்திசெய்யும் லியூனாவும் தாக்கப்பட்டன. 1944-ம் வருஷம் பூராவிலும் எண்ணெய் பிரதேசங்களைத்தாக்குவதுதான் நேசதேச வெடிவிமானங்களின் திட்டமாக இருந்தது. ஜெர்மனி, ருமேனிய எண்ணெயை இழந்துவிட்டதால் அதற்கு எண்ணெய்க்குறைவு சமீபகாலத்தில் ஏற்பட்டுவிடும். இந்த நெருக்கடி ஏற்படாததற்கு அதனிடம் அபாரமான கையிருப்பு இருப்பதுதான் என்று சொல்லலாம். மேலும் ஜெர்மன் விமானப்படைகள் சங்கியை குறைந்துவிட்டதினாலும் எண்ணெய்ச்செலவில் அதிகச் சிக்கனம் ஏற்பட்டிருக்கிறது.

---

## நேசதேச விமானப்படையில் சேவைக்கு அதிக விமான பலமிருக்கிறது.

### முன்னணியிலுள்ள படை பலம்.

(டெயிலி டெலகிராப்).

போர்முனையில் 5,000 விமானங்கள் உபயோகப்பட்டதுபோக இப்பொழுது எல்லாப் போர்முனைகளிலும் 4,000 விமானங்கள்தான் ஜெர்மனியிடம் இருக்கின்றன. மூலபலமும் அதிகமாக இல்லை.

அவைகளில் 70 சத விகிதம்தான் ஒரு சமயத்தில் உபயோகப்படக்கூடியவை. ஏனெனில் விமான பாகங்களைக் கட்டும் தொழிற்சாலைகளை நேசதேச விமானப்படைகள் பலமாகத் தாக்கியிருக்கின்றன. ஜெர்மன் படையின் பாதி பாகத்துக்கு மேற்பட்ட விமானங்கள் மேற்குப் போர்முனையில் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் பெரும் பாகம் ரண்ஸ்டெண்டின் தாக்குதலுக்கு நேர்முகமாக ஒத்தாசை செய்துவருகின்றன.

அவைகளில் 1,000 விமானங்கள் இரவுச் சண்டை விமானங்கள். பாம்பர் கமாண்டின் தாக்குதல்களை சமாளிக்க அவைகள் அநேக பாகங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. பாக்கி இருப்பவைகளும் சண்டை விமானங்கள். அவைகள் அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த பறக்கும் கோட்டை விமானங்களையும், லிபரேட்டர் விமானங்களையும் தாக்க அடிக்கடி ஏவப்படுகின்றன. சில சண்டை வெடி விமானங்கள் நாஸி பான்சர் டிவிஷன் படைகளுடன் ஒத்துழைக்கின்றன.

எதிரி அநேகமாக 100 சுழல் வாயுவால் ஓட்டப்படும் M. E. 262 விமானங்களை சண்டை விமானங்களாகவும், சண்டை வெடி விமானங்களாகவும், சில H. E. 163 அவுட் வானங்களால் ஓட்டப்படும் சண்டை விமானங்களை வழி மறிக்கும் விமானங்களாகவும், உபயோகித்து வருகிறான். மேலும் H. E. 111 எதிரியிடம் 100, 200 வெடி விமானங்கள் இருக்கின்றன. எதிரி H. E. 111 விமானங்களைத்தான் விமானத்திலிருந்து V-1 குண்டுகளைப் போட உபயோகித்துவருகிறான்.

இவைகளை எதிர்த்துப் போராட அமெரிக்காமட்டும் 5,000 முதல்தரமான விமானங்களை வைத்திருக்கிறது. அவைகள் பின்வருமாறு நிலைபெற்றிருக்கின்றன. 8-வது அமெரிக்க விமானப்படை—2,200 வெடி விமானங்கள். 8-வது அமெரிக்க விமானப்படை 1,200 சண்டை விமானங்கள், ஒன்பதாவது விமானப்படையில் 2,000 நடுத்தர வெடி விமானங்கள் சண்டை வெடி விமானங்கள், சண்டை போடும் விமானங்கள்.

ஜெர்மனியைவிட நேசதேசத்தார்களுக்கு உதவியளிக்க மிகுதியான விமான பலம் இருக்கிறது. மேலே சொல்லிய கணக்கில் அமெரிக்க 15-வது விமானப்படையிலும், அமெரிக்க விமானப் போக்குவரத்துப் படையிலுமுள்ள விமானங்கள் சேர்க்கப்படவில்லை.



## மிகப் பெரிய சாமான் கப்பல் கூட்டம்.

### எதிர்ப்பன்னியில் அட்லாண்டிக் கடலைக் கடந்தது.

(ரியர் கடற்தளபதி *H. G.* தர்ஸ்பீல்ட்).

சரித்திரத்திலேயே மிகப் பெரிய சாமான் கப்பல் கூட்டம் அட்லாண்டிக் கடலைத் தாண்டிச் சென்ற கதையை பிரிடனின் கடற்படை இலாகா முதல் பிரபு சமீப காலத்தில் ஒரு சொற்பொழிவு மூலம் விளக்கினார். அந்தக் கூட்டத்தில் 167 கப்பல்களிருந்தன. அவை சமுத்திரத்தில் 26 சதுர மைல்கள் பரவியிருந்தன. மிகவும் வேகமாகச் செல்லும் துணைக் காவல் கப்பலுக்கு கப்பல் வரிசை பூராவும் கடந்து சென்று திரும்பி வர ஐந்து மணி நேரங்கள் ஆகின.

இதற்குமுன் சமாதான காலத்தில் இதைவிட அதிகமான கப்பல்கள் கொண்ட கூட்டம் கடல் தாண்டிச் சென்றிருக்கலாம். ஆகிலும் இப்பொழுது வந்த சாமான் கப்பல் கூட்டம் 1 மிலியன் டன்களுக்குமேல் எடையுள்ள சாமானைக் கொண்டுவந்தது. அவற்றில் 1,019,829 டன்கள் எடையுள்ள சாமான்கள் பிரிடனுக்கு வந்துசேர்ந்தன. மற்ற நாடுகளுக்கும் சாமான்கள் சென்றன என்று நிச்சயமாகச் சொல்லலாம். சாமான்களின் பெரும் பாகம் பிரிடிஷ் மக்களுக்கும் பிரிடனிலுள்ள பெரிய சேனைகளுக்கும் உணவுப்பொருளைக் கொண்டு வந்தன. மற்றும் யுத்த தளவாடங்களும் எண்ணெயும் ஏராளமாக வந்தன. 10,000 வண்டிகளும் வந்தன.

அட்லாண்டிக்கை கப்பல்கள் 17 நாட்களில் தாண்டின. அந்த சமயத்தில் ஒரு யூ படகுதான் அதை சமீபித்துச் சென்றது. துணைக்காவல் மிகவும் பலமாக இருந்ததால் யூ படகு ஒரு தாக்குதலையும் செய்ய முடியவில்லை.

இவ்விதமாக மகத்தான சாமான் கப்பல் கூட்டம் பத்திரமாகவும் வழிமறிப்பன்னியிலும் கடல் தாண்டிச் செல்லுவது என்பதுதான். பிரிடனுக்குள்ள கடலாதிக்கத்தையும் ஜெர்மனி அனுப்பக்கூடிய எந்தப் புதிய ஆயுதங்களையும், முறைகளையும் பொருட்படுத்தாமல் அந்த ஆதிக்கத்தைப் பரிபாலிக்கும் சக்தியையும் ருஜூச் செய்திருக்கின்றன.

1939-ம் வருஷத்தில் ஜெர்மனி காந்தக்கண்ணிகளை அமைத்து முன்னேற்றமடைந்தபின் பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் ஜெர்மனியைக் காட்டிலும் சிறிது அதிக முன்னேற்றம் அடைந்து விட்டார்கள். புதிய ஆயுதங்களையும், அதிக சக்திவாய்ந்த யூ படகுகளையும் கட்ட ஜெர்மனி முயலுமென்பதில் சந்தேகமில்லை. ஆகிலும் நேசதேச சாமான் கப்பல் கூட்டங்கள் அவற்றை லக்ஷியம் செய்யாமல் அட்லாண்டிக் கடலை வெற்றிகரமாகத் தாண்டி வந்துவிடும்.

---

## அவர்கள் யுத்தத்தைப் பற்றி எழுதுகிறார்கள்.

(*J. H. B.* பீல்).

ஒருவன் வெகுகாலம் ஜீவித்திருக்கவேண்டுமானால் அவன் எல்லா விஷயங்களையும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று ஒரு இந்திய வேதாந்தி சொன்னார். அதுபோல் தான் நாம் போர்முனைகளிலிருந்து அதிகாலையில் நமக்குக்கிடைக்கும் தினசரி யுத்தச் செய்திகளை ஒப்புக்கொள்ளுகிறோம்.

பிரிடனின் யுத்தச்செய்திகளுக்கு ஆதாரம் பல்வேறு தலைமைக் காரியாலயங்களிலிருந்து வெளியிடப்படும் உத்தியோக அறிக்கைகள்தான். போர் வீரர்கள் வெளியிடும் இந்தப் பிரசுரங்கள் உண்மையை உள்ளது உள்ளபடி வெளியிடுகின்றன. யுத்த நிருபர்கள்தான் அந்தத் தகவல்களுக்கு உருவம் அமைத்து விடுகிறார்கள். தீரச் செய்கைகளையும் தெளிவுபட விவரிக்கிறார்கள். அதன் மூலம் உத்தியோக முறையில் வெளியிடப்படும் சுருக்கமான உண்மைகளுக்கு ஸ்வாரஸ்யம் ஏற்படுகிறது.

இந்த யுத்தத்தில் முகாண்மையாக உள்ள பிரிடிஷ் நேசதேச பத்திரிகைகளுடையவும், அறிக்கை நிலையங்களுடையவும் நிருபர்கள் போர்முனைகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சேனை, கடற்படை, விமானப் படையிலுள்ள நிருபர்களெல்லாம் உடுப்புப் போட்டுக்கொண்டு தோள்வளையில் "பிரிடிஷ் யுத்த நிருபர்" என்ற அடையாளமும் அணிந்து கொண்டிருக்கிறார்கள்.

பிரிடிஷ் பத்திரிக்காசிரியர்கள் அநாமதேயமாய்ச் செய்திகளை எழுதியனுப்பி வருகிறார்கள். போர் வீரர்களுக்கு அளிக்கப்படும் கௌரவங்கள் அவர்களுக்குக் கிட்டாவிட்டாலும் அவர்கள் அநேக அபாயங்களுக்கு உட்படவேண்டியிருக்கிறது. அவர்கள் மிகுதியான

தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். 20-க்கு மேற்பட்டவர்கள் போர்முனையில் உயிர் துறந்திருக்கிறார்கள். அநேகர்கள் கைதுசெய்யப்பட்டுவிட்டார்கள். முக்கியமானவர்கள், லிபியாவில் B. B. C.யின் விசேஷ நிருபரான எட்வர்ட் வார்ட், அநேகர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள் அல்லது கோரமான கஷ்டங்களுக்குள்ளாகி இருக்கிறார்கள்.

கடற்படையுடன் செல்லும் மாரிஸ் ப்ரௌன் என்பவர் ஐந்து நாட்கள்வரையில் ஒரு கட்டையைப் பிடித்துத் தப்பித்து உதவிகிடைக்குமென்று நம்பியிருந்தார். கார்டன்யங் என்பவர் பர்மாவிலிருந்து தகவல்களை அறிய பருந்துப் பாய்ச்சல் விமானங்களின் தாக்குதலுக்கும் மறைந்து சுடுகிறவர்களின் அபாயத்துக்கும் உட்பட்டிருந்தார். வாலிபமுள்ள பீடர் டட் பில்ட் என்ற ஆஸ்திரேலியர் போர்முனைச் செய்திகளை அறிய லிபியாவின் பாலைவனங்களில் அலைந்து திரிந்தார்.

ஆகிலும் டங்கர்க் சம்பவத்தின் பொழுது நான் சந்தித்த ஒரு பிரிடிஷ் யுத்த நிருபரின் ஞாபகம் எனக்கு வருகிறது. அப்பொழுது கப்பல்கள் துறைமுகத்துக்கு வந்தவுடன் அவைகளைக் கணக்கெழுதும் வேலையில் நான் அமர்ந்திருந்தேன். ஒரு கப்பலில் ஒரு நிருபர் அவருடைய ரிபோர்ட்டை டைப் அடித்துக்கொண்டிருந்தார். அவருடைய இரண்டு விரல்கள் வெடி குண்டுத் துணுக்கினால் சேதிக்கப்பட்டிருந்தன. வலது கண் பாண்டேஜினால் மூடப்பட்டிருந்தது. எஞ்சின்களின் சப்தத்திற்கு மேல் அவருடைய டைப் மெஷினின் சப்தம் என்னைக் கவர்ந்தது. கடற்கரைகளில் காத்துக்கொண்டிருக்கும் ஆட்களைக் காணுவதற்காக அவர் சமுத்திரத்தில் நீந்திச்சென்றாரென்று நான் பின்பு அறிந்தேன.

பிரிடனின் யுத்த நிருபர்கள் பாரம்பரியமாகவே புகழ் பெற்றவர்கள். அவர்களில் அநேக மேதாவிகளிருந்திருக்கிறார்கள். வின்ஸ்டன் சர்ச்சில், செசில் ரோட்ஸ், டப்பரின் சீமான், மிஸ்டர் L. S. அமெரி போன்றவர்கள் யுத்த நிருபர்களாக வேலைபார்த்திருக்கிறார்கள்.

தெற்கு ஆபிரிக்க யுத்தத்தில் ஒரு பிரிடிஷ் யுத்த நிருபர்தான் பத்திரிகை பிரசுரத்தில் அதிக கீர்த்தி பெற்றிருக்கிறார். போயர் படை வரிசைகளைத் தாண்டிச் சென்றபொழுது அவர் பலமாக முற்றுகைக்குள்ளான மேப்கிஸ்குக்குள் அகப்பட்டுக்கொண்டார். அங்கு என்ன நடைபெறுகிறதென்று யுத்த நிலையத்துக்குக்கூட ஒன்றும் தெரியாது. யுத்த நிருபர் பின்பு கேப்டவுனுக்குத் தப்பிச்சென்று 10,000 வார்த்தைகள் கொண்ட ஒரு செய்தியை அனுப்பினார்.

இன்று யுத்த நிருபர்கள் போர்முன்னணியிலேயே இருக்கிறார்கள். D தினத்தன்று ஒரு பி. பி. ஸி. நிருபர் பாரசூட் படைகளுடன் ஜெர்மன் படை வரிசைகளுக்குப்பின் இறக்கப்பட்டார். மூன்று நாட்கள் வரையில் எதிரிகள் அவரைத் தேடினார்கள். அவர் பி. பி. ஸி.க்கும் ஒரு தகவலையும் கொடுக்கவில்லை. நான்காவது நாளன்று அவர் லண்டனுக்குத் திரும்பிவந்து அவர் அனுபவித்த கஷ்டங்களையும், குண்டு வீச்சு சிரமங்களையும் வெளியிட்டார். அது நவீன பத்திரிகை முறையில் மிகவும் சிறந்தது. அவர்கள் இல்லாவிடில் போர்முனையிலுள்ளவர்களின் தினசரி வாழ்க்கை முறைகளும் ஒரே கொடுமைக் கதையிலிருந்து சற்று ஆறுதலளிக்கக்கூடிய தனிப்பட்டவர்களின் உயர்வான தீரமும் நமக்குப் புலப்படாது.

ஆகையால் அடுத்தபடியாக மூன்று வரிசைகள் உள்ள ஒரு யுத்தச் செய்தி பிரிடிஷ் ஆதாரங்களிலிருந்து கிடைக்கும்பொழுது அதைச் சேமித்து, அனுப்பி, அச்சுவேதில் ஏற்படும் அபாயங்கள், பொருட் செலவு, முயற்சி, சாமர்த்தியம் முதலியவற்றைச் சற்று நிதானித்துப் பாருங்கள். ஒவ்வொரு தேசமும் ஒவ்வொருவிதமான வேலையைச் செய்து வருகிறது. ஆகிலும் ஒவ்வொன்றும் ஒரு சிறந்த வேலையைச் செய்துவருகிறது.

---

## விமானம்தாங்கிக் கப்பல்களில் விமானம் பழுதுபார்க்கும் ஏற்பாடுகள்.

(கடற்படை நிருபர்).

பஸிபிக் சமுத்திரம், இந்து மகாசமுத்திரங்களின் பரப்பைத் தாண்டிப் போருக்குச் செல்லும் நேசதேச யுத்தக்கப்பல்களுடன் செல்லும் தொழிற்சாலை, சாமான் கப்பல்களில் வேலை செய்துவரும் கடற்படை சேவையார்களுக்கு சகலவிதமான வசதிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அவ்விதமான கப்பல்களில் அநேகம் ஏற்கனவே தூரக் கிழக்குக்குப் புறப்பட்டுவிட்டன. மற்றவைகள் இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலுமுள்ள துறைமுகங்களில் தயார் செய்யப்பட்டுவருகின்றன.

இந்த ரகத்தைச் சேர்ந்த ஒரு கப்பல் வடக்கிலுள்ள ஒரு துறைமுகத்தில் இறுதியாக ஒத்திகை செய்வதை நான் கண்ணுற்றேன். அது விமானத்தின் பாகங்களைப் பழுதுபார்க்கும் கப்பல். இதுபோன்ற அநேக கப்பல்களில் விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்களைப்



பழுது பார்க்க வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கப்பல் விமானத்தின் முக்கிய பாகங்களையும், வால் பக்கத்தையும், யூனிட்டுகளையும், சக்கரங்களையும், மின்சார அமைப்பையும் பழுது பார்க்கக்கூடும். அந்தக் கப்பலில் தேர்ச்சிபெற்ற 250 பிட்டர்களும், 80 மின்சார வேலை செய்கிறவர்களும் 360 தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களும் (கருமான்கள், டர்னர்கள், சாமான் வேலைக்காரர்கள், உலோக வேலைக்காரர்கள்) இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் கடற்படையைச் சேர்ந்த விமானப் படையிலுள்ளவர்கள்.

கப்பலின் அடிபாகத்தில் 18 விரிவான ஒர்க்ஷாப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் யந்திரங்கள் சாலையுமிருக்கிறது. அதில் 8 அங்குலமுள்ள கடைசல் யந்திரம் முதல் கடிகார வேலை செய்கிறவரின் கடைசல் யந்திரமும், செதுக்கும் யந்திரமும், சாமான் உற்பத்தி செய்யும் ஆலையும், வர்ண வேலை சாலையும், மரவேலை ஆலையும், மின்சார வேலை சாலையுமிருக்கின்றன. “இந்த சாலைகளில் நவீன முறைப்படியுள்ள முஸ்தீப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் குறைவாக ஒன்றுமில்லை” என்று ஒரு ஆபீஸர் சொன்னார்.

ஒர்க்கு ஷாப்புகள் பெரியதாயும் காற்றுள்ளுள்ளதாயும் இருக்கின்றன. கப்பலில் காற்று அதிகமாக இல்லாமல் அமைக்கப்பட்டிருக்கிறது. கூடுமானவரையில் கொசு உபாதி இல்லாமலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கொசு வலைகளும் கப்பலிலுள்ள கதவுகளின் பலகணிகளில் பரிஷ்காரமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிகக் காற்றுவேண்டுமென்றால் பலகணிகளையும் திறந்துவைத்துக்கொள்ளலாம். கப்பலில் துணி வெளுக்கும் சாலையும், சினிமாவும் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் பொழுதுபோக்குக்கும் அநேக இடங்கள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன. ஏராளமான சாமான்களுள்ள பண்டக சாலையும் ஸ்நான கட்டங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

---

## போ நதிப் பள்ளத்தாக்கில் மத்தியதரைகடல் விமானப்படை.

### ஐரோப்பாவில் பலமான தாக்குதல்.

(விங்க் கமாண்டர் *L. V.* பிரேசர்).

ஜெர்மனியின் பதில் தாக்குதலுக்கு உதவியாக ஜெர்மன் விமானப்படை முன்வந்துவிட்டபின் ஜெர்மனியின் சண்டை விமானப்படை மத்தியதரைக்கடல் பிரதேசத்திலிருந்து வந்த நேசதேச சகலமான வெடிவிமானங்களுடனும் சண்டை விமானங்களுடனும் போர் புரிந்தது.

ஜெர்மனியின் தென்மேற்குப் போர்முனை ஒரு பக்க விளையாட்டல்லவென்றும் ஐரோப்பாவில் ஜெர்மனியை நசுக்க நேசதேசத்தார் செய்துவரும் பெரும் முயற்சியின் ஒரு முக்கியமான நடவடிக்கையென்றும் அடிக்கடி நமக்கு ஞாபகப்படுத்திவருகிறார்கள். மேற்குப் போர்முனையின் மகத்தான தன்மையும் அநேக நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் அநேக போர்கள் நடைபெற்று எல்லோருக்கும் பழக்கமான பிரதேசங்களில் போர் நடப்பதாலும் ஐரோப்பாவின் பூர்ணமான யுத்தப்போக்கை அது சற்று மறைமுகப்படுத்திவருகிறது.

அடுத்தபடியாக பேயன்ஸாவை விடுவித்த நடவடிக்கை அல்லது டிஸம்பர் 7-ம் தேதி நடைபெற்ற விமானப்போர் போன்ற சில நடவடிக்கைகள் இதாலியப் போர்முனைக்குப் பரவியிருக்கும் மத்தியதரைக்கடல் போரும் உலகமளாவிய யுத்தத்தில் மற்றெந்த நடவடிக்கையைப்போலும் முக்கியமானது, சிரமமானது, கௌரவமானது என்பதை ஞாபகப்படுத்துகின்றன. ஜெனரல் ஈசன்ஹுவரின் போரைப்போல பீல்ட்மார்ஷல் அலெக்ஸாண்டரின் போரும் வெற்றிக்கு உதவக்கூடியதுதான்.

இதாலியிலிருந்தும், பிரிடனிலிருந்தும் யுத்த தந்திரமுறையில் விமான நடவடிக்கையை மேற்கொண்டதின் விளைவாகத்தான் டிஸம்பர் 17-ம் தேதியன்று ஒரு விமானப் போர் மூண்டது. அன்று நேசதேச விமானப்படைகள் ஜெர்மனியின் எண்ணெய் உற்பத்திசாலைகளின்பேரில் குண்டுகளைப் போடச்சென்றன. ஜெர்மன் சண்டை விமானங்கள், முக்கியமாக பாக்உல்ப் 190-விமானங்கள், நமது விமானங்களை வழிமறித்ததன் காரணமாக செகோஸ்லேவாக்கியாவில் ப்ருனோவுக்கு வடக்கில் பெரிய ஆகாயப்போர் நடந்தது.

போரின் விளைவுகள் ருசிகரமானவை. எதிரியின் 100-விமானங்களில் 48-சண்டை விமானங்கள் அழிக்கப்பட்டன. மற்றும் சில விமானங்கள் அழிவுபட்டிருக்கலாம். அன்று மத்தியதரைக்கடலிலிருந்து விமான நடவடிக்கையைத் துவக்கிய நேசதேச விமானங்களில் 29 விமானங்கள் அழிந்தன.

இதைவிட மற்ற எவ்விதமான நடவடிக்கையில் நேசதேச விமானிகள் ஈடுபட்டார்கள் என்று கவனிப்போம். அவற்றின் சுருக்கத்தை கவனித்தாலேயே விமானப்படை சகல விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயாராக இருக்கிறதென்பது வெளியாகும்.

அந்த விமானப்படையின் முக்கியமான பலம் அமெரிக்க கனமான வெடி விமானங்கள் தான். அவைகள் எதிரியின் யுத்த தளவாட உற்பத்தி ஸ்தானங்களை, முக்கியமாக ஜெர்மனியின் எண்ணெய் உற்பத்தி நிலயங்களைத்தாக்கி வருகின்றன. அவைகள் தெற்கு ஐரோப்பாவின குறுக்கே சென்று ருஷ்யாவின் தெற்கு சேனைகள் முன்னேறிவரும் படை வரிசைகளுக்குப்பின் வெடிகுண்டுகளை வீசி வருகின்றன.

வடக்கு இதாலியில் விமானப்படை சேனைகளுக்கு உதவியளிக்கும்முறையில் இருவகைகளில் உதவிசெய்து வருகின்றன. விமான நடவடிக்கைக்கு கால நிலைமை சௌகரியமாகயிருக்கும்பொழுது அவைகள் இடைவிடாது ஜெர்மனியின் தென்மேற்குப் போர்முனையிலுள்ள படை வரிசைகளுக்குப் பின்னுள்ள ஸப்ளைகளையும் போக்குவரவு மார்க்கங்களையும் தாக்கிவருகின்றன. அதன் விளைவாக போ நதிப் பள்ளத்தாக்கிலுள்ள போக்குவரத்துகளில் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. சமீபகாலத்தில் ஒரே தினத்தன்று ரஸ்தாக்கள், இருப்புப்பாதை பாலங்கள்பேரில் விமானிகள் வெடிகுண்டுகளை நேராடிப்போட்டார்கள். 60-இடங்களில் இருப்புப்பாதை வழிகளைத் துணித்துவிட்டார்கள். எட்டு இருப்புப்பாதை எஞ்சின்களையும் 60-இருப்புப்பாதை வண்டிகளையும், 20-ரஸ்தாவில் செல்லும் வண்டிகளையும், 15 குதிரைபூட்டிய வண்டிகளையும் அழித்தார்கள். குதிரை வண்டிகளை உபயோகிக்க நேர்ந்ததிலிருந்தே ஜெர்மனியின் போக்குவரத்துக்கு எவ்வளவு சங்கடம் ஏற்பட்டிருக்கிறதென்பது தெரியவருகிறது. மேலும், போக்குவரத்து வண்டிகளும் பழுதுபடுத்தப்பட்டிருக்கின்றன.

மற்றொரு நடவடிக்கை யாதெனியில், விமானப்படை போர்புரியும் சேனைகளுடன் ஒத்துழைக்கிறது. மேலும் மருந்துக் குவியல்களையும், எண்ணெய் சேமிப்புகளையும் பீரங்கி நிலையங்களையும் அவைகள் அழித்துவருகின்றன. போ நதிப் பள்ளத்தாக்குப் போர்முனையின் வலது பார்ச்வத்தில் பிரிடனின் வட ஆபிரிக்க விமானப்படைதான் இந்தப்போரை நடத்திவருகிறது.

கடைசியாக கிழக்குப் பக்கத்தில் இதாலியிலிருந்து யூகோஸ்லாவியாவைத் தாக்கும் முறையில் ஒரு மிகவும் ஸ்வாரஸ்யமான நடவடிக்கை நடைபெற்று வருகிறது. சௌடாரிவரியின் சமீபத்தில் உள்ள முக்கோணத்தில் மார்ஷல் டிடோவின் கொரில்லாப்படைகள் 30,000 ஜெர்மானியர்களை வளைத்துக்கொண்டிருக்கிறார்கள். ருஷ்யர்கள் பின்வாங்கும் வழியை அடைத்துவிடுமுன் தப்பிஓட ஜெர்மன்படைகள் தீவிரமாக முயற்சிசெய்து வருகின்றன. கொரில்லாப்படைகளால் துன்புறுத்தப்படும் அந்த ஜெர்மன் படைகளை பிரிடிஷ வெல்லிங்டன் வெடி விமானங்களும் சில சமயங்களில் சண்டை விமானங்களும் பலமாகத் தாக்கிவருகின்றன. இந்தப் பிராந்தியத்தில் நேசதேசத்தாருக்கு நிரபேக்ஷணையாக ஆகாய ஆதிக்கமிருந்துவருகிறது. அவ்விதமில்லாவிடில் நாம் வெல்லிங்டன் விமானங்களை இங்கு உபயோகிக்கமுடியாது. ஏனென்றால் இரண்டு இஞ்சின்கள் உள்ள இந்த விமானங்கள் 4,000 ராத்தல் எடையுள்ள வெடிகுண்டுகளை ஏற்றிச்செல்லக்கூடும். இவைகளைக்கொண்டுதான் யுத்தத்தின் ஆரம்ப வருடங்களில் ஜெர்மனி பேரில் பிரிடன் விமான நடவடிக்கையைச்செய்து வந்தது. யூகோஸ்லாவியா பேரில் அவைகள் சண்டை விமானங்களின் துணையன்னியில் பட்டப்பகலிலேயே நடமாடுகின்றன. அவைகளை ஜெர்மன் படைகள் தங்களிடமுள்ள லேசான விமான எதிர்ப்பு பீரங்கிகள் மூலம்தான் தாக்கிவருகின்றன.

## ஜப்பானிய கடற்படையின் விதி.

### இரு போர்முனைகளில் போர்புரிய வேண்டிய அவசியம்.

(கிளாஸ்கோ ஹெரால்ட்).

ஜப்பானிய கடற்படை சங்கடமான நிலைமையிலிருக்கிறது. கடற் தளபதி நிமிட்ஸின் சிறந்த யுத்த தந்திரத்தினால் பஸிபிக்கடலின் வெளிப்புறங்களில் ஜப்பானிய கடற்படையின் நடமாட்டம் குறைந்து விட்டது.

அமெரிக்கர்கள் லேயிடியைக் கைப்பற்றுவதையும் அது தடுக்கக்கூடவில்லை. பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டத்தில் லேயிடி மத்தியமான பாகத்தை வகிப்பதனால் சமீப எதிர்காலத்தில் மணிலாவையும் மிண்டானோவையும் கைப்பற்ற நடவடிக்கைகள் துவங்குமென்று தோன்றுகிறது. இந்த இரண்டு ஸ்தானங்களையும் ஜப்பானிய ஆக்கிரமிப்பு சேனைகள் எஞ்சியுள்ள ஜப்பானிய விமானப்படையின் உதவிக் கொண்டு காப்பாற்ற கடும் போரை நடத்தக்கூடும்.

ஆனால் ஜப்பானியக் கடற்படை மற்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் கமாண்டர் சாடோ பின் வருமாறு எழுதினார். "ஜப்பானுக்கு வரும் எண்ணெயில் பாதிபாகம் டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து வருகிறது." ஆகையால் ஜப்பானின் தற்காப்பு சக்திக்கு அந்தக் கடல் மார்க்கத்தின் பத்திரம் மிகவும் அவசியமானது. இந்த ஒரு



காரணத்தினால் ஜப்பானியக் கடற் படையின் பெரும் பாகம் முன்னேறித்தாக்காமல் சாமான் கப்பல்களுக்குத் துணைக்காவல் புரிவதில் ஈடுபட்டிருக்கிறது. அமெரிக்கர்கள் மூழ்கடித்த கப்பல்களுக்குப் பதிலாக மூன்று வருஷங்களில் ஜப்பான் ஏராளமான கப்பல்களைக் கட்டியிருக்கக்கூடுமென்றாலும, இப்பொழுது இருக்கும் நிலைமையில் ஜப்பானிய கடற்படை ஒரு பக்கம் பஸிபிக்கிலுள்ள அமெரிக்கக் கடற்படையோடும், மற்றொரு பக்கம் இந்துமஹாசமுத்திரத்தில் பிரிடிஷ் கடற்படையுடனும், ஆக இரண்டு போர் முனைகளில் போர் புரியவேண்டுமென்பதை நன்கு அறிய வேண்டும்.

அது வெகுகாலமாக, ராணுவத்துக்குத் தேவையான போக்கு வரத்து மார்க்கங்களை சம்பாதிக்க இரண்டாம் பக்ஷமான சாதனமாகத்தான் இருக்கிறதென்பதை எல்லோரும் அறிவார்கள். இவ்விதமாக தற்காப்பு முறையைக் கையாண்டு வந்ததினால்தான் அது பிரிடிஷ் கடற்படை சூயஸ்கால்வாய்க்குக் கிழக்கில் ஆதிக்கம் பெறுமுன் அமெரிக்கக் கடற்படையை எதிர்த்துப் போராட முன்வரவில்லை. இந்த சந்தர்ப்பம் சில மாதங்களுக்கு முன்பே போய்விட்டது. அமெரிக்காவும் பிரிடனும் எதிரியின் வலிமையைக் குறைத்து மதித்து விடுமென்று சொல்லுவதற்கில்லை. எதிரி தரையில், முக்கியமாக ஜபபானில் கடுமையாகப் போர் செய்வான், ஆகிலும் கடற்படையின் உதவி கொண்டு கிழக்கிந்தியத் தீவுகளையும் ஜப்பானையும் காப்பாற்றக்கூடிய சக்தி அதற்கு நீடித்திருக்கும் என்று சொல்லுவதற்கில்லை. கடற்படை பலம் நொருங்கி விட்டால் ஜப்பானின் முடிவு துரிதமாக ஏற்பட்டு விடும்.

## மலைகளில் போர் வீரர்கள்.

### பர்மா ஜாதியாருக்குப் புகழுரை.

(டைம்ஸ் பத்திரிகை.)

அஸ்ஸாம், பர்மா எல்லைச் சரகத்தில் நாகா மலைகளிலுள்ள முரட்டு ஸ்வபாவமுள்ள ஜாதியார்கள் நேசதேசத்தாருக்குச் செய்த உதவியைப்பற்றி விவரிக்கும் பொழுது டைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு எழுதியிருக்கிறது.

ஜப்பானியரின் லஞ்சம், பயமுறுத்தல், வாதங்கள் முதலியவற்றை அலக்ஷியம் செய்து நகரவாசிகள் பிரிடனிடம் உறுதியான ராஜ விசுவாசத்துடன் இருந்துவந்தார்கள். நகரவாசிகள் மட்டும்தான் இவ்விதம் ஒப்பற்றிருந்தார்கள் என்பதில்லை. பர்மா எல்லையைத் தாண்டி சின் மலைவாசிகளும் போர் முனையின் முன்னணியில் நின்றார்கள். அவர்களும் நகரவாசிகளைப்போல் நடந்துகொண்டார்கள். அவர்கள் ஈடுபடுவதற்கு உதவியாக பர்மா எல்லைச்சரகப் படையைச் சேர்ந்த சின்மலை பட்டாளம் இருந்தது. ஆகிலும் ஜப்பானியர்களுக்கு அதிக இம்சை விளைவிக்கும் முறையில் அவர்கள் செய்த போரின் முக்கியத்துவம் யாதெனில் அவர்கள் ஆயுதம் பூண்டு ஒவ்வொருவரும் கொரில்லா நடவடிக்கையைக் கையாண்டு வந்தார்கள். மேலும் நாகாவாசிகளைப்போல அவர்கள் தங்களுடைய நாட்டை மீட்பதற்காக மட்டும் போர் புரியவில்லை. விசேஷமாக அவர்களுடன் ஒத்துழைத்துவரும் நேசதேசப்படைகளுக்குத் தேவையான தொழிலாளர்களையும் தளவாடங்களையும் ஸப்ளை செய்வதில்தான் அவர்கள் பெரும் முயற்சி செய்துவந்தார்கள்.

பிரிடிஷ் கக்ஷியில் உறுதியான பக்தியை வடகிழக்கு பர்மாவிலுள்ள கசின் மலைகளிலிருக்கும் தீரமுள்ள மலை வாசிகளும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். 1942-ம் வருஷம் முடிவிலிருந்து அவர்கள் ஜப்பானியர்களை படைகளுடனும், உள் நாட்டு ரக்ஷகப்படைகளுடனும், ஆயுத பாணிகளான கிராம வாசிகளுடனும் எதிர்த்துப் போராடி இருக்கிறார்கள். கொடுந்துன்பத்தையும் மரணத்தையும் சந்தோஷத்துடன் பொருத்துக்கொண்டு அவர்கள் நேசதேசத்தாருக்கு திறமையுள்ள சாரர்களாக இருந்து வந்தார்கள். ஜப்பானியப்படைகளை எல்லா பக்கங்களிலும் சோர்வன்னியில் தாக்கிவந்தார்கள். எதிரிக்கு ஏராளமான மனித நஷ்டத்தை உண்டு பண்ணினார்கள். நமது படைகள் குவிந்து நிற்கும் படியாக அவர்களுடைய நாட்டில் பலமான ஏற்பாடுகளைச் செய்துவந்தார்கள். அந்த நாட்டிலுள்ள மனித பலம், தளவாட பலம் எல்லாவற்றையும் நமது உபயோகத்துக்கு அவர்கள் சந்தோஷத்துடன் சமர்ப்பித்தார்கள்.

யுத்தக் கொடுமையினால் துன்புற்ற இப்பேர்பட்ட தீரமும் உறுதியும் உள்ள ஜனங்களுக்கு உதவி செய்ய இந்தியாவிலும் பர்மாவிலுமுள்ள அதிகார வர்க்கத்தார் முயற்சி செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. லோக விவகாரத்துக்குரிய வகையில் நாம் அளிக்கும் எவ்வித உதவியும் அவர்களின் யோக்யதைக்கு அதிகமென்று சொல்ல முடியாது. நேச

தேசத்தாரிடம் நகரவாசிகளுக்கும், சீனர்களுக்கும், காசின்களுக்கும் மற்ற மலைவீரர்களுக்கும் உள்ள விசுவாசத்திற்கு அநேக தலைமுறையாக பிரிடிஷ் அதிகாரிகள் நீதி; அனுதாபம் அன்பு, என்ற குணங்களைப் பரவச்செய்ததுதான் காரணமாகும். பிரிடிஷ் அதிகாரிகள் ஆடம்பரமன்னியிலும் வேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்தும் வேலை செய்து வந்திருக்கிறார்கள். சரித்திரத்தில் அவர்களுடைய பெயர்கள் எழுதப்படாமல் அவர்கள் மறைந்து விடலாம். ஆகிலும் அவர்களுடைய சிரமத்தின் பலன்கள் சித்தித்து விட்டன. அவர்கள் அன்புடன் ஆதரித்து உழைத்து வந்த தேசமக்கள் மிகவும் நெருக்கடியான சமயத்தில் நேச தேசத்தாரிடம் உறுதியுடன் விசுவாசம் காட்டியிருக்கிறார்கள்.


## 'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்குமுந்துங்கள்! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்:—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

**பிரஸங்கம் 231. (5-வது பிரிவு).**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16- 1-45 | பள்ளிவாசல் | ... மாலை | 7.00 | 18- 1-45 | அன்னவாசல் | ... மாலை | 7.00 |
| ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 | ,, | கிழக்குரிச்சி | ... ,, | 7.30 |
| 17- 1-45 | புலியூர் | ... ,, | 7.00 | 19- 1-45 | கிழாநிலை-புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 | ,, | கிழாநிலைக்கோட்டை | ... ,, | 7.30 |

**பிரஸங்கம் 232. (6-வது பிரிவு).**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 20- 1-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 24- 1-45 | அரிமளம் | ... மாலை | 7.00 |
| 21- 1-45 | கீரனூர் | ... ,, | 7.00 | ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| ,, | நாஞ்சூர் | ... ,, | 7.30 | 25- 1-45 | உடையாளிப்பட்டி | ... ,, | 7.00 |
| 22- 1-45 | குடுமியாமலை | ... ,, | 7.00 | ,, | கிள்ளுகோட்டை | ... ,, | 7.30 |
| ,, | பாம்பூர் | ... ,, | 7.30 | 26- 1-45 | பொ. புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| 23- 1-45 | பெருங்களூர் | ... ,, | 7.00 | ,, | வேந்தம்பட்டி | ... ,, | 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 | | | | |

**யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.**

| | | | |
|---|---|---|---|
| 13—1—45 | வெட்டன்விடுதி. | 20—1—45 | திருமெய்யம். |
| 14—1—45 | விராச்சிலை. | 21—1—45 | தீத்தான்விடுதி. |
| 16—1—45 | பேராம்பூர். | 23—1—45 | வடகாடு. |
| 18—1—45 | கிழாநிலை. | 25—1—45 | ஆலங்குடி. |
| 19—1—45 | புதுக்கோட்டை. | 26—1—45 | புதுக்கோட்டை. |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை, தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்பவேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—16-1-45.


# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வரு ஜனவரிமீ 20உ [நெ. 232


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

## போலந்தின் தலைநகரமான வார்ஸா ருஷ்யர்களால் விடுவிக்கப்பட்டது.

**யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.**

—20-ம் பக்கம் பார்க்க.

பிரஸங்கம் CCXXXII.

## 1945-ம் வருஷ சம்பவங்களைப்பற்றி ஆருடம்.

(விக்ஹாம் ஸ்டீட்).

நவீன யுத்தத்தில் பருவ காலங்களையும் தேதிகளையும் பொருட்படுத்துவதில்லை. 1944-ம் வருஷம் டிசம்பர் மாதத்துக்கும் 1945-ம் வருஷம் ஜனவரி மாதத்துக்கும் இடைவிடாத அநேக கோர்வைகளிருக்கின்றன. புது வருஷத்தில் நேசதேசப் படைகள் இறங்கிய பின் முதல் தடவையாக ஜெர்மன் விமானப்படை படுதோல்வியடைந்தது. பலமான விரோதங்களும் சமாதானத்துக்கும் வழிதேடுவதுமாக கிரேக்க உள்நாட்டுப் போர் நடை பெற்று வந்தது. பசிபிக்கிலும் பர்மாவிலும் ஜப்பானியர்களைத் தாக்கும் நேசதேச நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெற்றது.

புது வருஷ ஆரம்ப தினத்தன்று இரண்டு முக்கியமான சம்பவங்கள் நேரிட்டன. ஒன்று ஜெர்மன் மக்களுக்கு ஹிட்லர் செய்தி அனுப்பினான். வாஷிங்டனிலுள்ள பிரெஞ்சு ஸ்தானிகர் நேசதேசத்தாரின் அறிக்கையில் கையெழுத்திட்டார்.

நான் ஹிட்லரின் சொற்பொழிவை கவனத்துடன் செவியுற்றேன். ஹிட்லர் ஏற்கனவே ஆற்றிய சொற்பொழிவுகளிலிருந்து இது தயாரிக்கப்பட்டதென்றால் அது சாதுர்யமான சிருஷ்டனை தஸ்தாவேஜுதான். அதன் த்வனியும் உச்சரிப்பும் ஹிட்லருடையதுதான். அதன் பாணியும் திருத்த முடியாத ஜெர்மன் முறையை ஒட்டியிருந்தது. பயங்காளித்தனத்தினாலும் ஆர்வக்குறைவினாலும் தான் இதாலி, பின்லாந்து, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி முதலிய நாடுகள் வீழ்ச்சி பெற்றன என்று சொற்பொழிவில் காணப்பட்டது. அவன் செய்த பழைய

பிரசங்கங்களிலிருந்து திருடியிருக்கமுடியாது. ஹிட்லர் நேர்முகமாகப் பேசினாலும், அல்லது செய்திகளை அனுப்பியிருந்தாலும் அது பாதகமில்லை. விஷயமும், தோரணையும், த்வனியும் ஹிட்லருடையது தான்.

அந்தப் பேச்சில் விசனம் காணப்பட்டதே ஒழிய நம்பிக்கை காணப்படவில்லை. அது ஹீனஸ்வரமாக இருந்தது. இறுதி வெற்றி ஜெர்மனிக்குத்தான் என்ற வாக்குறுதி வீண் பேச்சுத்தான். நேசதேச விமானப்படை நடவடிக்கையினால் வீடுகளிலிருந்து வெளியேறியிருக்கும் ஜெர்மன் மக்களில் மூன்றின் ஒரு பாகம் வெற்றிக்குப்பின் நொருக்கப்பட்ட நகரங்களை அதிக அழகாகக் கட்டிவிடுவோமென்று ஹிட்லர் வெளியிட்ட வாக்குறுதியைக் கண்டு ஆறுதலடைய மாட்டார்கள். ஆர்டெனிஸில் ரண்ட்ஸ்டெட்டின் தாக்குதல் தடைப்பட்டு விட்டது. புடாபெஸ்ட் தீப்பற்றி எறிகிறது. ருஷ்ய பீரங்கிகளின் சுடும் சப்தம் சமீபகாலத்தில் வியன்னாவில் கேட்கக்கூடும். 1945-ம் வருஷத்தில் வெற்றி நிச்சயமென்று எல்லா ஜெர்மானியர்களும் அறிவார்கள். ஆனால் அது அவர்களுக்கு இல்லை.

பிரிடனிலாவது அல்லது மற்ற எந்த நாட்டிலாவது வெற்றி சீக்கிரம் கிடைத்து விடுமென்று எதிர்பார்க்கப்படவில்லை. சென்ற ஸெப்டம்பர் மாதத்தில் ஏற்பட்டிருந்த பூர்ணமான நம்பிக்கை இப்பொழுது பிரதிகூலமான சந்தர்ப்பங்களினால் குறைந்து விட்டது.

ஜெர்மனியின் பதில் தாக்குதலுக்கு முன்பே பிரதிகூலமான காலநிலைமையும் சப்ளைகளைக் கொண்டு போகும் சிரமங்களும் தோன்றி நேசதேச முற்போக்கைத் தடை செய்து விட்டன. ஆண்ட்வெர்ப் துறைமுகம் உபயோகத்துக்கு வந்து விட்டதால் நேசதேசப்படைகளுக்கு ஸப்ளைகளை அனுப்பும் பிரச்னை தீர்ந்து விடுமாகையால் ரண்ட்ஸ்டெட் அந்த பெல்ஜியத் துறைமுகத்தைத் திரும்பப்பிடித்து நேசதேச யுத்த தந்திரத்தைத் கெடுத்து விடுவதாக திட்டம் வகுத்தான். அவன் இகழ்ச்சி பெற்று விட்டதால் ஜெர்மனியின் பௌதிக, ஆத்மீய உணர்ச்சிகளுக்கு அதிர்ச்சி ஏற்படும்.

ருண்ட்ஸ்டெட்டின் தாக்குதல் தாத்காலிகமாக மேற்குப் போரின் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தி விட்டாலும் இது போன்ற மகத்தான தாக்குதலை வருங்காலத்தில் ஜெர்மனி செய்யக்கூடாமல் ஜெர்மனிக்கு பலமான நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அநேக முனைகளில் ஜெர்மனி சில்லரைத் தாக்குதல்களை நடத்தக்கூடும். இதே சமயத்தில் நேசதேச விமானப் படை ஜெர்மன் போக்குவரவு மார்க்கங்களுக்கும் ஐச்வர்யங்களுக்கும் அபாரமான நஷ்டத்தை உண்டுபண்ணியிருக்கின்றன.

இந்த கோரமான போரிலிருந்து ஜெர்மன் சேனை ஆரம்ப வெற்றிக்குப் பின் பின்புறம் துரத்தியடிக்கப்பட்டதா அல்லது ஜெர்மனியின் துணிவின் மூலம் அதற்குப்பெரிய நாசம் ஏற்பட்டதாவென்பது வெளியாகும். அதன் ராணுவ அம்சங்களைப்பற்றிய முடிவை நாம் ஒத்திவைக்க வேண்டும். ஆகிலும் அதினின்றும் நேசதேசத்தார்களின் ஆத்மீய, ராஜீய உணர்ச்சிக்கு ஏற்பட்ட விளைவுகளை நாம் மதித்து விடலாம். அநேக நேசதேசங்களில் நல்ல முறையில் ஏமாற்றம் ஏற்பட்டு விட்டது. ருண்ட்ஸ்டெட் தாக்குமுன் கெடுதலான நம்பிக்கை இருந்து வந்தது. நேசதேசத்தார்கள் யுத்தத்தில் கவனம் செலுத்துவதை விட யுத்தத் துக்குப்பிந்திய பிரச்னைகளில் அதிக கவனம் செலுத்தி வந்தார்கள். நேசதேச நிர்வாகங்களிடையே மனஸ்தாப சின்னங்கள் தோன்றின. ருண்ட்ஸ்டெட் தாக்கியதின் பயனாக இந்த மனஸ்தாபங்கள் மறைந்து நம்பிக்கையும் குறைந்தது.

ஆபாசமான பிரச்னைகளை சமாதானம் ஏற்பட்டபின் தீர்த்துக்கொள்ளலாமென்று நினைத்திருந்த எண்ணம் கிரீஸிலும் மற்ற நாடுகளிலும் அவ்வித பிரச்னைகளை உடன் காலத்திலேயே தீர்த்துவிடவேண்டுமென்பதினால் நிலை குலைந்தது. வின்ஸ்டன் சர்ச்சில் துணிவுகரமாக ஆதென்ஸுக்கு சென்றதன் பயனாக கிரேக்க ரீஜன்ஸி நிர்வாகம் அமைக்கப்பட்டது. பிரிடிஷ் நடவடிக்கையில் சிலருக்கு ஏற்பட்டிருந்த சந்தேகம் இவ்விதமாக ஒரு சிறிது நிவர்த்தியாகி விட்டது.

மற்ற விடுதலை பெற்ற நாடுகளிலும் தேசீய புனருத்தாரணத்தில் எதிர்ப்புப் படைகள் முக்கியமான பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்பது நியாயம் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. யுத்தத்துக்குப்பின் ஐரோப்பாவில் எழக்கூடிய அநேக பிரச்னைகள் இப்பொழுதே முக்கியத்வம் பெற்று வருகின்றன.

இந்த அம்சத்தினால் சமாதானப் பேச்சுகள் சுலபமாகிவிடும். உண்மைகளை மதித்து விடுவதுதான் நேசதேச நடவடிக்கையின் திட்டங்களைவிட சிறந்த நடவடிக்கையாகும்.

மகத்தான நேசதேச ஐக்யத்தில் பிரான்ஸும் ஒரு முக்கியமான நபர் என்ற எண்ணம் பிரான்ஸில் தோன்றியிருப்பது திருப்திகரமானது. 1944-ம் வருஷத்தில் நேசதேசத்தாருக்குக் கிடைத்த வெற்றிகள் மூலம் தோன்றிய இந்த உணர்ச்சி 1945-ன் நடவடிக்கைக்கு சுப சூசகங்கள்.



# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 9—1—45 (செவ்வாய்க்கிழமை.) | அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த லூஸானியிறங்கின. |
| 10—1—45 (புதன்கிழமை). | நேசதேசப் படைகள் பெல்ஜியத்திலுள்ள ஸெயிண்ட் ஹூபர்டை ஆக்கிரமித்தன.<br>நேசதேசப் படைகள் லூஸானில் நான்கு நகரங்களை விடுவித்தன. |
| 11—1—45 (வியாழக்கிழமை). | நேசதேசப் படைகள் பர்மாவில் பூடாலினை ஆக்கிரமித்தன.<br>நேசதேசப் படைகள் ஆர்டெனிஸ் முனையில் லாரோஷியைப் பிடித்தன. |
| 12—1—45 (வெள்ளிக்கிழமை). | ருஷ்யர்கள் தெற்கு போலந்தில் புதிய தாக்குதலைத் துவக்கினார்கள்.<br>நேசதேசப் படைகள் பார்மோஸாவுக்கருகில் ஜப்பானிய சாமான் கப்பல் கூட்டத்தைத் தாக்கின. |
| 13—1—45 (சனிக்கிழமை). | அமெரிக்கர்கள் லூஸானில் 20 மைல்கள் முன்னேறினார்கள்.<br>நேசதேசப் படைகள் பர்மாவில் ஆகியாவிற்கு 32 மைல்களுக்குக்கப்பாலிலுள்ள மெபானிலிறங்கின.<br>மேற்குப்போர்முனையில் பிரிடிஷ் படைகள் லேயாக்ஸையும் அமெரிக்கர்கள் பெர்டோக்னியையும் ஆக்கிரமித்தன. |
| 14—1—45 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசப்படைகள் பர்மாவில் வெட்லட்டையும் ஷ்வீபோ மாண்டலே ரஸ்தாவையும் பிடித்தன.<br>ஜெனரல் பாட்டனின் சேனை ஜெர்மனிக்குள் மறுபடியும் நுழைந்தது.<br>ருஷ்யப்படைகள் லூசனெக், பிங்க்செள இரண்டையும் பிடித்தன. |
| 15—1—45 (திங்கட்கிழமை). | நேசதேசப்படைகள் பெல்ஜியத்தில் ஹௌபாலிஸிக்குள் நுழைந்தன.<br>அமெரிக்கப்படைகள் லூஸானிலுள்ள ஆக்னோ நதியைத் தாண்டின. |
| 16—1—45 (செவ்வாய்க்கிழமை). | அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த லூஸானில் மற்றொரு இடத்திலிறங்கின. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.—**

(1) **வடக்கு பார்ச்வம்.**—இந்தப் பார்ச்வத்திலுள்ள ஜெர்மன் படைகள் சாவதானமாக அழிக்கப்படுகின்றன. ஜெர்மனியின் உப்பல் மூன்றில் இரண்டு பங்காகக் குறைக்கப்பட்டு விட்டது. ஆர்டெனிஸ் காட்டின் பெரும்பாகம் சுத்தி செய்யப்பட்டது. அமெரிக்க மூன்றுவது படையுடன் பிரிடிஷ் சேனை தொடர்பு ஏற்படுத்திவிட்டது. அதுபோலவே அமெரிக்க 1-வது படைக்கும் மூன்றுவது படைக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. பிரிடிஷ் படையும் அமெரிக்கப் படையும் புதிய தாக்குதல்களைத் துவக்கிவிட்டன. பிரிடிஷ் படைகள் மாஸ்-ரோயர் நதிக்கு மத்தியிலும் அமெரிக்கப் படைகள் லாரோஷ்-பெர்டாக்னி ரஸ்தா வழியாக விப்ரினை நோக்கியும், லாரோஷ் வில்ஸமுக்கு மத்தியிலும், ஸ்டாவ்லாட்டுக்கும் மால்மெடிக்கும் மத்தியிலும், ஜெர்மன் எல்லைச் சரகத்தைத் தாண்டியும், தாக்கி வருகின்றன.

**அமெரிக்க 3-வது சேனை.**—ஜெர்மனிக்குள் டெட்டிங்கன், நென்னிக், வீஸ் முதலியவற்றைப் பிடித்தன.

இந்த வாரத்தில் ஊர்தி நதியிலுள்ள லாரோக்கியும் ஹௌபாலிஸியும் பிடிபட்டன.

இந்த வாரத்தில் பிடிபட்ட மற்ற இடங்கள் :—

சாம்ரி, ஆம்பினி, குருஹாண்ட், பூரி, பாரிபர்ஸ், மாஸ்டரோ, மாஸ்ஜினி, ராய், ரோடியஸ்டார், ரெகொக்னி, பிஹென், குருனி, ஆர்தோ, அசௌபி, ஹெனுமாண்ட், ஹெடோமாண்ட் திரிமாண்ட், பேமான் வில்லி, செரேயின், லிக்னுவில்லி, விப்ரின்.

2. **பாஸ்டோக்னி பிராந்தியம்.**—பாஸ்டோக்னிக்குத் தென்கிழக்கிலுள்ள ஜெர்மன் உப்பல் தடைக்கப்பட்டுவிட்டது. லாரோகி—சாம்பியன் ரஸ்தா துணிக்கப்பட்டுவிட்டது. கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன.

பெட்லாங்கி, டில்லட், வில்லியர்ஸ் லா போனரியூ, ஹார்லாங்க், பெர்ப், ரேனுமாண்ட், கிவ்ருலி, பிரெடாக்னி, வெல்லரு, குருன் ஸெயிண்ட் ஹூபர்ட், நோவில்லுக்குள் படைகள் நுழைந்து விட்டன.

**ரைன் நதிப் பள்ளத்தாக்கு.**—ஆலிஸாஸ் சமவெளிக்கான போர் ஹாட்டானைச் சுற்றி நடைபெறுகிறது. ஜெர்மனியின் முன்னேற்றம் ஹாகனுன் காட்டுக்கு வடக்கில் மாகினோ அரணுக்குள் நடைபெறுகிறது. இங்கு ஜெர்மானியர்கள் ஒபென்ஹிமையும் பூப் ஷேமிமையும் பிடித்து விட்டார்கள். அமெரிக்கர்கள் காம்ப்ஷீமை திருப்பிப் பிடித்துவிட்டார்கள்.

**கிழக்குப் போர்முனை.**—ருஷ்யர்கள் வார்ஸாவைப் பிடித்துவிட்டார்கள். புடாபெஸ்டுக்கான போர் நடைபெறுகிறது.

**புதிய ருஷ்யத் தாக்குதல்கள்.**—

(1) தெற்கு போலந்தில் ஸாண்டோமியர்ஸுக்கு மேற்கில் விஸ்டுலா முன்னேறும் வாசலில்—இங்கு சிமியல்னிக், சிட்லெரி, ஸ்டாட்னிகா, விஸ்லிகா, பங்க், சோரிஸ், பச், பிங்க்சௌ, கியல்ஸி, ராடாம் முதலிய இடங்கள் பிடிபட்டன.

(2) ஹங்கேரிய ஸ்லவேகியா எல்லைச் சாகத்தின் ஓரமாக—லூசனெக்கும் பிளௌஸியக்கும் விழுந்துவிட்டன.

(3) கிழக்கு பிரஷ்யா போர்முனையில் எபன்ரோட்—ஷலாஸ்பர்க் பகுதியில்.

(4) நாரியூப் போர்முனையில் வார்ஸாவுக்கு வடக்கில்.

**இதாலி.**—பனி பெய்வதால் ராணுவ நடவடிக்கையில் ஸ்தம்பிதம் ஏற்பட்டுவிட்டது.

**பிலிப்பைன்ஸ்.**-அமெரிக்கப் படைகள் ஆக்னோ நதியைத்தாண்டி 28 மைல்கள் முன்னேறிவிட்டன. லூசான் தீவில் சான்டோ தாமஸுக்கருகில் படைகள் புதிதாக இறங்கின. உதவிப் படைகளைக் கொண்டுவரும் எதிரியின் துணைக்காவல் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. லிங்கேயன், டாகுபான், சான் பாபியன், மாங்கல்டான் காடாபிளாவ், பினுலோனுக்ஸ்.

**பர்மா.**—மாண்டலேக்குப் போகும் ரஸ்தாவில் புடாலினும் செட்லட்டும் பிடிபட்டன. அக்யாபிலிருந்து 32 மைல்களிலுள்ள ஹண்டர்ஸ் விரிகுடாவிலுள்ள மெயிபான் தீபகற்பத்தில் படைகள் இறங்கின. மெயிபோன் நகரம் ஆக்கிரமிக்கப்பட்டது. சின்ட்வின் பிரதேசத்தில் காணியும் ஆலனும் ஆக்கிரமிக்கப்பட்டன. காலிமேயோவுக்குத் தெற்கில் 70 மைல்களிலுள்ள ஜப்பானிய தற்காப்பு தளமான கங்கா விழுந்துவிட்டது. சீனர்கள் பர்மா ரஸ்தாவுக்குப் போகும் மார்க்கத்திலுள்ள நாம்காம் என்ற கேந்திர ஸ்தானத்தைப் பிடித்து விட்டார்கள்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**7—1—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—“V-2” ஸ்தலங்கள்—ஹாலந்து (Holland).

ரயில்வே ஸ்தலங்கள்.—நியூஸ் (Neuss).

சேனைகள் யுத்த தளவாடங்கள், ரைன் நதிப் பாலங்கள், ரயில்வே ஜங்ஷன்கள்.—மேற்கு ஜெர்மனி (W. Germany).

ரயில் ரஸ்தா போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி, பிரென்னர் (Brenner) கணவாய்.

கப்பல்கள்.—வட இதாலி.

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—தொழிற்சாலை இலக்குகள்.-மியூனிச் (Munich).

**தூரக்கிழக்கு (Far East).**

நாகோயா (Nagoya).

குரைல்ஸிலுள்ள பாராமுஷிரோ (Paramushiro)



**பர்மா (Burma).**

எதிரி துருப்பு முகாம்கள்.—அக்யாப்பின் வடகிழக்கு.

**8—1—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—பிராங்பர்ட் (Frankfurt).

ரஸ்தா, ரயில் ஜங்ஷன்கள்.—ஆர்டென்ஸிற்கு நேர் எதிரே.

இடங்கள்.—லக்ஸம்பர்க் (Luxembourg), பெல்ஜியம் (Belgium).

ரயில்வே தளங்கள் பாலங்கள், போக்குவரத்துகள்.—ஹாம் (Hamm), பெயில்பெல்ஸி (Beilefelz), பாடெர்பான் (Baderborn), கொலோன் (Cologne), ராஸ்டாட் (Rastatt), லின்ஸ் (Linz).

தளவாடக் குவியல்கள்.—இமோலாவிற்கு (Imola) தெற்கு.

ரயில் போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள்.—பார்மோஸா (Formosa), ஆகினுவா (Okinawa), இஷிகாகின் (Ishigakin), மியாகோஜிமா (Miyakojima).

விமான நிலயங்கள், போக்குவரத்துகள் இதர இலக்குகள்.—லுஸான் (Luzon).

**பர்மா (Burma).**

ஜப்பானியத் துருப்பு முகாம்கள்.—டியென்னியோ (Teinnyo).

படகுகள்.—ஐராவதி (Irrawadey).

பாலங்கள்.—பர்மா-ஸியாம் (Burma-Siam) ரயில்வே.

ரயில்வே எஞ்சின் ஷெட்டுகள்.-(Moulmein).

எண்ணெய்க் கிணறு ஸ்தலங்கள்.—மத்திய பர்மா (Central Burma).

**9—1—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—கப்பல்கள்—நார்வே (Norway).

ரயில்வேப் பாலங்கள், பாலங்கள்.—ரிம்தால் (Rimmthal).

ரயில் தளங்கள்.—நியூஸ்டாட் (Neustadt), ராஸ்டாட் (Rastatt).

பாலங்கள்.-ரைன் (Rhine), ரோன் (Rhone).

ரயில் ரஸ்தா பாலங்கள்.—போ (Po) சமவெளி.

ரயில்வே ஸ்டேஷன்.—வட மேற்கு இதாலி (N. W. Italy).

உதவிப் படைகள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் தரைப்படைகள்.

விமானச் சண்டைகள், தரைமீதுள்ள விமானங்கள்.—ருஷ்யா யுத்த அரங்கம் முழுதும்.

**பர்மா (Burma).**

இலக்குகள்.-பர்மா-ஸியாம் (Burma-Siam), ரயில்வே.

படகுகள்.—வட கிழக்கு அக்யாப் (N. E (Akyab), ஐராவதி (Irrawaddy).

இலக்குகள்.—அரக்கான் (Arakan).

பீரங்கி ஸ்தலங்கள்.—யெனங்யாங் (Yenangyang).

பாடின் சுரங்கங்கள்.-வட மேற்கு லாஷியோ (N. W. Lashio).

**10—1—45.** (புதன்கிழமை)..

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—விமான நிலயங்கள்-போன் (Bonn), கோலோன் (Cologne), எஸ்கர்ச்சன் (Euskirchen).

ரஸ்தா ரயில் பாலங்கள்.—ரைன் (Rhine), கோலோன் (Cologne).

ரஸ்தா பாலங்கள், ஜங்ஷன்கள்.—ஜெர்மன் பெல்ஜியன் எல்லை (German—Belgian frontier).

ரயில் ரஸ்தா தளங்கள்.—கார்லஸ்ரு (Karlsruhe).

எதிரி போக்குவரத்துகள், ரஸ்தா ரயில் போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).

நதிப் போக்குவரத்துகள்.—போ (Po) நதி.

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—ஹானோவர் (Hanouer).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய கப்பற் கூட்டங்கள்.—இந்தோ-சைனு (Indo-china).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan).

ஜப்பானிய சேனைகள்.-வாண்டிங் (Wanting).

விமான நிலயங்கள்.—மாண்டலே (Mandalay) பிரதேசம்.

**11—1—45.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எதிரி போக்குவரத்துகள், துருப்பு முகாம்கள்—பாஸ்டாக்னி (Bastogne).

ரயில் தளங்கள், விமான நிலயங்கள்.—(W. Germany).

ரஸ்தாப் பாலங்கள், ஜங்ஷன்கள்.—ஜெர்மன் பெல்ஜியம் எல்லை.

ரஸ்தா, ரயில் பாலங்கள்.-கொலோன் ரைன் (Rhine).

விமான நிலயங்கள்.—போன் (Bonn), கொலோன் (Cologne), எஸ்கர்ச்சன் (Euskirchen).

சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—கார்ல்ஸ்ருகி (Karlsruhe).

ஸப்ளை குவியல்கள்.-ஷு-வெய்பிரக்கன் (Zweibrucken).

யுத்த தளவாடக் குவியல்கள்.—லாண்டா (Landau).

போக்குவரத்துக்கள், ஸ்டோர்கள், அரங்க ஸ்தாபனங்கள்.—வட இதாலி (North Italy).

யுத்தத் தளவாடக் குவியல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியக் கப்பற் கூட்டம்.—இந்தோ சீனு (Indo-China). (25 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; 13 கப்பல்கள் நாசமாக்கப்பட்டன).

ஜப்பானியக் கடல் விமானதளம், விமான நிலயங்கள்.—இந்தோ சீனு (Indo-China).

ஜப்பானியச் சைனியங்கள்.—மணிலா (Manila).

**பர்மா (Burma).**

7 பாலங்கள்.—ஸியாம் (Siam), வட பர்மா (N. Burma).

ரயில் ஸப்ளை லயன்கள்.—வட பர்மா (N. Burma).

விமான நிலயங்கள், தற்காப்புகள்.—மாண்டலேயைச் சுற்றிலும்.

**12—1—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல், யு படகு பிரங்கிகள்.—நார்வேயிலுள்ள பெர்கன் (Bergen).

கப்பல்கள்.—பெர்கன் (Bergen) அருகில்.

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—வர்டிங்ஜன் (Verdingen) ஜில்லா, கராபெல்டு (Krefeld).

போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி ஸ்பெஸியா (Spezia) பிரதேசம்.

கட்டடங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள் ஸ்டோர் குவியல்கள் —வட இதாலி (North Italy).

கப்பல்கள்.—மேற்கு எட்ரியாடிக்.

ரஸ்தா போக்குவரத்துகள்.-யூகோஸ்லாவியா (Yugoslavia).

விமானச் சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (8 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

ஜப்பானிய சைனியங்கள்.—மைபான் (Myebon).

இலக்குகள் —மாண்டலே (Mandalay).

ஜெட்டிகள்.—மெர்க்குய் (Mergui).

போக்குவரத்துகள்.—மத்திய பர்மா (Central Burma).

**13—1—45.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ரயில்வேப் பாலங்கள்.—டை ரனில் பிங்கன் முதல் கார்ல்ஸ்ருகி வரை.

ரயில் தளங்கள்.—பிஸ்கேப்ஷீம் (Bischoffsheim).

ரயில்வே போக்குவரத்துகள்.—ஸார்பிரக்கன், (Saarbrucken).

"V-2" ஸ்தலங்கள்.—ஹாலந்து (Holland).

கப்பல்கள்.—ஸ்காகெர்ராக் (Skagerrack).

போக்குவரத்து, இதார இலக்குகள்.—போ (Po) சமவெளி, வட இதாலி (N. Italy).

விமானச்சண்டைகள்.—ருஷ்ய அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைனியங்கள், விமான நிலயங்கள்.-மணிலா (Manila).

கப்பல்கள்.—பிலிப்பைன்ஸ் (Philippines).

**பர்மா (Burma).**

போக்குவரத்துகள், ஸ்டோர் கட்டடங்கள்.—வடக்கு, வடமேற்கு மாண்டலே, (Mandalay).

போக்குவரத்துகள்.—லாஷியோவைச் சுற்றிலும்.

படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

உதவிப் படைகள்.—மைபான் (Myebon).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**8—1—45.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**9—1—45.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

ஒரு தகவலும் இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

நேசதேச விமானமிறங்கும் தளங்கள்.—லூஸான் (Luzon).

**10—1—45.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**11—1—45** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.



**தூரக்கிழக்கு (Far East).**

அக்யாப் (Akyab) துறைமுகம். (5 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**12—1—45.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**13—1—45** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

நேசதேச சைனியங்கள்.—லிங்கயென் (Lingayen).

**14—1—45** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலுமில்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

அழிக்கப்படுகின்றன. புது வருஷ ஆரம்பத்திலிருந்த மனக்கிலேசம் நீங்கி இப்பொழுது நம்பிக்கைக்கு இடமுண்டாகிவிட்டது.

எதிரிகள் ம்யூஸ் நதியைத் தாண்டி ஆண்ட்வெர்ப், நாமூர், லீஜ், செட்டானைப் பிடித்துவிடுவ எதிரிகள் ம்யூஸ் நதியைத் தாண்டி ஆண்ட்வெர்ப், நாமூர், லீஜ், செட்டானைப் பிடித்துவிடுவ தென்ற நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். கிருஸ்துமஸ் பரிசாக ஆகனை படைகளுக்கு வழங்குவதாக ஹிட்லர் சொன்னபோதிலும் இது இன்னும் நேசதேச வசமிருந்து வருகிறது. ஆர்டெனிஸ் காடு சுத்தி செய்யப்பட்டுவிட்டது. ஜெர்மனியின் உப்பல் குறைந்துவிட்டது. அது சிறிது தொந்தரவுகளை அளிக்கக்கூடிய அல்பமான அளவிற்குக் குன்றிவிட்டது. பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரி சொல்லுவதுபோல ஜெர்மன் படைகள் அழிக்கப்படுகின்றன. நேசதேசப்படைகள் ஒன்று சேர்ந்துவிட்டன. ஜெர்மனிக்குள் மறுபடியும் முன்னேற ஆரம்பித்துவிட்டன.

நேசதேச விமானப்படைகளும் எதிரிக்குத் தொந்தரவளித்து வருகின்றன. அவைகள் எதிரியின் போக்குவரத்துகளை அழித்து போர்முனையிலிருக்கும் படைகளை துணித்து விடுகின்றன.

தாத்காலிகமாக ஏற்பட்ட பிற்போக்கிலிருந்து நேசதேசத்தாரிடையே நல்ல விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. சமாதான நிலைமைக்கு மாற்றியமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் மறுபடியும் யுத்த தளவாட உற்பத்தியில் ஈடுபட்டுவிட்டன. தோல்வி பெற்றபின் ஜெர்மனியை எவ்விதம் நடத்துவது என்று யோசனை செய்து வந்தவர்களெல்லாம் ஜெர்மனியை முறியடிக்குமுன் பல காரியங்களை செய்யவேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். ஆர்டெனிஸ் போர்முனையில் எதிரி பின்வாங்கியபோதிலும் மற்ற முனையில் ஊன்றி நின்று போரை நடத்துவதென்று எதிரி உத்தேசித்திருக்கிறுனென்று தெரியவருகிறது. ஆல்ஸாவில் ஜெர்மனியின் முயற்சி தளர்ச்சி பெறவில்லை. மிகுதியான நஷ்டமேற்பட்டபோதிலும் நார்வேயிலிருந்தும் டென்மார்க்கிலிருந்தும் உதவிப்படைகளைக் கொண்டுவந்து போர்முனையில் குவித்துவருகிறுன். கிருஸ்துமஸ் வாரத்தில் ஏற்பட்ட பிற்போக்குத் திருத்தியமைக்கப்பட்டதென்று சொல்லுவதற்கில்லை. தாத்காலிகமாக கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் நேசதேசத்தார்கள் ஒன்றுபட்டுத் தாக்கும் யோசனையை ருண்ட்ஸ்டெட் முறியடித்து விட்டான். ருஷ்யாவின் மாரிகாலத் தாக்குதல் கிழக்குப் போர்முனையில் துவங்கிவிட்டது. இது பத்து வாரங்கள் வரையில் நடைபெறும். பிறகு பனி உருக ஆரம்பித்தால் மறுபடியும் அயர்வு ஏற்படும். ஆனல் ருண்ட்ஸ்டெட்டின் நடவடிக்கை இரு முனையிலும் ஏக காலத்தில் தாக்குவதை முறியடித்துவிட்டது. ஆகையால் மேற்கு முனையில் நிலைமையை முன்னிருந்த அளவுக்கு நிலைநாட்டி கிழக்குப் போர்முனை தாக்குதலுக்குத் தடங்கல் ஏற்படுமுன் மேற்கு முனையில் தாக்குதல் ஆரம்பிக்கப்படவேண்டும்.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனை. ருஷ்யர்கள் அநேக இடங்களில் புதிய தாக்குதலைத் துவக்கிவிட்டார்கள். முக்கியமாக வார்ஸாவைச்சுற்றிலும், ஸைலீஷியா, கிழக்கு பிரஷ்யாவை நோக்கியும் போர் நடைபெறுகிறது. ஆகிலும் ருஷ்யர்களின் பூரா யுத்த தந்திரமும் வெளிவரவில்லை.

புடாபெஸ்டில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் படைகளுக்கு உதவியாக சொமராமில் ஜெர்மனி செய்த தாக்குதல் நின்றுவிட்டது.

**இதாலியப் போர்முனை.** இதாலியில் செர்கியோ பகுதியில் புது வருஷ ஆரம்பத்தில் ஜெர்மனி துவக்கிய தாக்குதலும் நின்றுவிட்டது. மாரிகால அசௌகரியத்தினால் இங்கு நேசதேச நடவடிக்கை ஸ்தம்பிதமாகிவிட்டது. மற்ற போர்முனைகளை பலப்படுத்துவதற்காக, ஹிட்லர் இதாலியிலுள்ள படைகளை வாபஸ் பெறுவதற்காக உத்தேசித்திருக்கிறானென்று சொல்லப்படுகிறது. ஆகிலும், நேசதேசப் படைகள் போநதிப் பள்ளத்தாக்குக்குள் செல்லும் போரைத்துவக்க காலநிலையின் சௌகரியத்தை எதிர்பார்த்து நிற்கிறார்கள். மேற்குப் பகுதியில் 5-வது சேனையும் கிழக்குப் பகுதியில் 8-வது சேனையும் தயாராக இருக்கின்றன. 8-வது சேனையிருக்கும் பகுதியில் சமீப காலத்தில் கடும் போர் நடைபெற்றது. கனடிய, பிரிடிஷ் படைகள் ராவென்னாவுக்கும் வள்ளி டி கோமாக்கியோவுக்கும் நடுவிலுள்ள பிரதேசத்தை சுத்தி செய்துவிட்டன. போலோனாவிலிருந்து வெனிஸ் வளைகுடா வரையிலுள்ள ஜெர்மன் விலாப்பக்கத்துக்கு இதன் மூலம் ஆபத்து உண்டாகியிருக்கிறது.

வி வி வி வி வி

**பிலிப்பைன்ஸ்.** லூசானில் படைகளிறங்கியதென்பது யுத்தத்தின் அற்புதச் செய்கைகளில் மிகவும் துணிவுகரமான இலாக்யமான நடவடிக்கையாகும். பிலிப்பைன்ஸுக்குத் திரும்பி வந்துவிடுவோமென்று வாக்குறுதி செய்ததை நிறைவேற்றும்பொருட்டு மூன்று வருஷங்களாக மாக் ஆர்தர் செய்த முயற்சியின் பலன் கிடைத்துவிட்டது. 1942-ம் வருஷ முடிவில் ஜப்பானியர்கள் ஸாலமன்ஸ், நியூகினியா தீவுகளுக்கு முன்னேறி ஆஸ்திரேலியாவுக்கும் அபாயத்தை உண்டுபண்ணினார்கள். இன்று அவர்கள் 4,000 மைல்கள் பின் துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார்கள். தீவு தீவாகத் தாவியும் தீவுகளைச் சுற்றிச் சென்றும் ஆர்ந்த நடவடிக்கை வெற்றிகரமாகக் கையாளப்பட்டது. லூசான் அமெரிக்காவிலிருந்து 6,000 மைல்கள் தாண்டியுள்ளது. ஆகிலும் அமெரிக்கப் படைகள் அதற்குள் சுலபமாகச் சென்றுவிட்டன. மூன்று வருஷங்களுக்குமுன் ஜப்பானியர்கள் படையெடுத்த இடத்திலேயே அமெரிக்கப்படைகள் இறங்கிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

லூசானின் முன்னேற்றம் திருப்திகரமாக நடைபெற்று வருகிறது. ஜனவரி 15-ம் தேதியன்று வந்த தகவலிலிருந்து அமெரிக்கர்கள் மணிலாவை நோக்கி 28 மைல்கள் முன்னேறிவிட்டதாகத் தெரியவருகிறது. இதை விமர்சனம் செய்யும் முறையில் பிலிப்பைன்ஸிலுள்ள டைம்ஸ் பத்திரிகையின் விசேஷ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

"பிலிப்பைன்ஸில் ஜெனரல் மாக் ஆர்தரின் படைகள் துரிதமாக முன்னேறுவதையும் அதிலிருந்து ஜப்பானியர்களின் வலிமை குன்றிவிட்டதென்று தோன்றுவதையும் கவனித்தால் ஐரோப்பிய யுத்தம் முடியுமுன் பசிபிக் போர் உச்சநிலைமையை அடைந்துவிடுமென்று தோன்றுகிறது. ஜப்பானியர்கள் முறியடிக்கப்பட்டுவிட்டார்களென்று இதிலிருந்து நினைக்க வேண்டாம். 110 மைல்கள் தாண்டி லிங்கேயனுக்கும் மணிலாவுக்கும் மத்தியிலுள்ள சமவெளிகளில் அமெரிக்கப் படைகள் கடும்போரை நடத்த வேண்டியிருக்கும்.

"ஜப்பானிய சாம்ராஜ்யத்துக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதை 1940-ம் வருஷம் பிரிடனுக்கு ஏற்பட்ட படையெடுப்பு பீதிக்கு ஒப்பிடலாம். ஆனால் ஒரு வித்தியாசம் உண்டு. பிரிடனின் எதிரிகளிடம் அப்பொழுது பலமான கடற்படை இல்லை. ஜப்பானைத் தாக்கக்கூடிய நேசதேசத்தாரிடம் அவ்விதமான கடற்படை பலமிருக்கிறது.

"ஜப்பானியர்கள் இறுதிப்போரை ஜப்பானிய சமுத்திரங்களுக்கு சமீபத்தில் நடத்துவதற்காக தங்களுடைய சக்தியை இப்பொழுது உபயோகப்படுத்தவில்லையென்று எச்சரிக்கையுடனிருப்பவர்கள் சொல்லிவரலாம். ஆகிலும் ஜப்பானியக் கடற்படை சமீப எதிர்காலத்தில் போரை நடத்தத்தான் வேண்டும். ஆகிலும் சைபானையும், லிங்கேயனில் பால முனைகளையும் ஏற்படுத்த வேண்டிய அளவுக்கு நேசதேசக் கடற்படையை உபயோகப்படுத்தவேண்டிய அவசியம் இனி ஏற்படாது.

"பிலிப்பைன்ஸில் லெயிடி, மிண்டாரோ, லூசானில் அக்டோபர் மாதத்திற்கும் ஜனவரி மாதத்திற்குமிடையே ஏற்பட்ட மூன்று படையெடுப்புகளைத் தடுக்க சக்தியற்றவர்கள் என்று ஜப்பான் வெளிப்படுத்தியபொழுது, ஜப்பானைத் தவிர பாக்கி எந்தப் பிரதேசத்தையும் அவர்கள் தற்காப்பு செய்யமுடியாதென்று எச்சரிக்கையுள்ளவர்களும் காணக்கூடும். ஜப்பானின் கடற்படை பலம் இழிவானதால் அது ஆசியாவில் நீண்டகால தரைப்போரை நடத்த உத்தேசித்திருக்கிறதென்று நினைப்பதற்கில்லை. ஆகிலும், பசிபிக் போரை மதித்துப் பார்க்கும்பொழுது, எங்கு, எப்பொழுது எவ்வகையில் போரை நடத்தவேண்டுமென்பதை நேசதேச கமாண்டர்கள்தான் நிர்த்தாரணம் செய்யவேண்டும்".



இந்த நெருக்கடியான நிலைமையை ஜப்பான் அறியாமலில்லை. "கிழக்கு ஆசியா போரில் பிலிப்பைன்ஸ்தான் மிகவும் முக்யத்வமுள்ள யுத்த அரங்கம்" என்று ஜப்பானிய பிரதம மந்திரி ஒப்புக்கொண்டிருக்கிறார். லூசானில் படைகளிறங்கியபின் பஸிபிக் பிராந்திய நாடு களின் விடுதலையில் ஒரு முக்கியமான கட்டம் தோன்றிவிட்டது. அதன் மூலம் கிழக்கு நாடுகளில் ஜப்பானின் புகழ் அழிந்துவிட்டது. மற்றொரு விளைவும் நன்கு புலப்படுகிறது. ஜப்பானியர்கள் பர்மாவைக் காலி செய்துவருகிறார்கள். சீனக்கடலும் இனிமேல் பத்திர மாக இல்லை. சைகோனிலிருந்து லூசானுக்கு இனிமேல் சாமான் கப்பல்கள் செல்லமுடி யாது. இனிமேல் சைனாவிலும் பார்மோசாவிலும் படைகளை நாம் சுலபமாக இறக்கிவிடலாம்.

வி வி வி வி வி

**பர்மா.** யுத்தம் உலகமளாவியதாக இருந்தாலும் ஐரோப்பிய பசிபிக் போர்கள் பர்மாவில் நடைபெறும் போரை மறை முகப்படுத்திவிட்டன. இந்த பிராந்தியத்தில் மிகவும் கரடு முரடான பிரதேசத்தில் கடுமையான போரை நடத்தி அநேக வெற்றிகள் கிடைத்துள்ளன. பர்மாவின் பாதி பாகம் நேசதேச வசமாகிவிட்டது. நாம்காம் பிடிபட்டபின் பர்மா ரஸ்தாவை திறக்கக் கூடிய சௌகரியம் ஏற்பட்டுவிட்டது. மேபான் தீபகற்பத்தில் படைகளிறங்கிய பின் அரக்கான் போரும் கூடிய சீக்கிரம் முடிவடைந்துவிடும். ஷ்விபோவும் வெட்லட்டும் பிடிபட்டபின் நேசதேசப் படைகள் மாண்டலேயை சமீபித்துவிட்டன. மாண்டலே விழுந்துவிட்டால் ரெங்கூனுக்கு மார்க்கம் திறக்கப்பட்டுவிடும்.

இவையெல்லாம் அற்புதமான நடவடிக்கைகள். வங்காளகுடாக்கடல் ஆதிக்கத்துக்கு முக்கியத்வமுள்ள அக்யாபில் இதுவரையில் பலமாகத் தற்காப்பு செய்துவந்த ஜப்பானியர் கள் அங்கு போர் நடத்தாமல் அதை விட்டுவிட்டார்களென்பது ஆச்சரியமாக இருக்கிறது. மேலும் சில மாதங்களுக்குமுன் இந்தியாவின் பேரில் படையெடுப்பது என்று முயற்சித்த எதிரி இப்பொழுது மாண்டலேயை நோக்கிப் பின்வாங்குகிறானென்பதும் விசித்திரமாக இருக் கிறது. இப்பொழுது ஜப்பானியர்கள் முன்னேறித் தாக்கவுமில்லை அல்லது இறுதிவரையில் போராடுவதுமில்லையென்று தெரியவருகிறது.

இந்த மாறுதலான நிலைமைக்கு அநேக காரணங்களுண்டு. அவைகளில் ஒன்று நேச தேசத்தாரின் விமான ஆதிக்கம். சிட்டகாங் வடக்கு பர்மாப் போரில் எதிரிக்கு ஏராளமான மனித நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. நேசதேசக் கடற்படை பிலிப்பைன்ஸ் சமுத்திரங்களுக்கு வந்தபின் கடல் மார்க்கப் போக்குவரத்தும் கஷ்டசாத்தியமாகிவிட்டது. பர்மாவுக்குச் செல்லக்கூடிய ஒரு தரைமார்க்கத்தை நேசதேச விமானங்கள் பாங்காக்குக்கும் மோல் மீனுக்கும் மத்தியில் துணித்துவிட்டன. ஆகையால் பர்மாவில் பலமான சேனையை வைத்தி ருக்கக்கூடிய சக்தியை ஜப்பான் இழந்துவிட்டது. ஆகிலும் புத்திசாலித்தனமாக போர் புரியாமல் எதிரி பர்மாவிலிருந்து வெளியேறுகிறான். 150,000 முதல் 200,000 ஜப்பானியப் படைகள் தென்கிழக்கு பர்மாவுக்குச் செல்லுகின்றன என்று ராணுவ உற்று நோக்காளர்கள் சொல்லுகிறார்கள். சுமாத்ராவிலுள்ள விமானப் படையுடன் 300 விமானங்களும் பின்வாங்கு கிறவர்களுக்கு ரக்ஷணையளித்துவருகின்றன.

வி வி வி வி வி

**ஆஸ்திரேலிய ஒத்துழைப்பு.** மத்திய, வடக்கு பஸிபிக்கில் அமெரிக்கப் படைகள் வடக்கு நோக்கி முன்னேறும்பொழுது ஆஸ்திரேலியர்கள் தென்மேற்கு பஸிபிக்கில் போரை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்களென்று வெளியிடப்பட்டிருக்கிறது. ஸாலமன்ஸ், நியூ பிரிடன், நியூ கினியாவிலிருந்த அமெரிக்கப் படைகளுக்குப் பதிலாக ஆஸ்திரேலிய, நியூஸிலாந்துப் படைகள் வந்துவிட்டன. நியூ கினியாவில் 30,000 ஜப்பானியர்கள் நீர்மூழ்கிகள் மூலமாக வரும் ஆகாரத்தையும் ரபால், வேவாக் போன்ற இடங்களில் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் உணவுப்பொருள்களையும் உட்கொண்டு பிழைத்திருக்கிறார்கள். இந்தப் படைகளை அழிக்கும் பொறுப்பு ஆஸ்திரேலியர் களுடையது. அதற்கு விமானம் தாங்கிகள் மிகுதியாக உள்ள பிரிடிஷ் கடற்படை உதவி அளிக்குமென்பது நிச்சயம்.

வி வி வி வி வி

**சைனா.** சைனாவிலுள்ள சீன, அமெரிக்க விமானப்படை பலம் அதிகரித்துவிட்டபின் ஜப்பானிய விமானப்படையின் தாக்கும் சக்தி குறைந்துவிட்டதென்று "சீன விமானப்படை" என்ற பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ருஜு யாதெனில் ஜப்பானிய விமானத் தாக்குதல் மூலம் சைனாவில் ஏற்பட்ட உயிர்ச் சேதம் குறைவுபட்டிருப்பதுதான். 1938—39-ம் வருஷத்தில்

இந்த கஷ்டம் மிகுதியாக இருந்தது. 39 பேர்கள் உயிர் துறந்தார்கள், 53 பேர்கள் காயப்பட்டார்கள், 150 வீடுகள் அழிவுபட்டன. இதுதான் நூறு வெடிகுண்டுகள் விளைவித்த நாசம். 1944-ம் வருஷத்தில் அதே குண்டு வீச்சின் மூலம் மூன்று பேர்கள் உயிர் துறந்தார்கள், நால்வருக்குக் காயம் ஏற்பட்டது. 6 வீடுகள் அழிவுபட்டன.

அமெரிக்க ஐக்கிய சீன கஷ்ட நிவாரண நிதியிலிருந்து சைனாவின் தொழிற்சாலை கூட்டுறவு சங்கங்களின் புனருத்தாரணத்திற்காக 4,22,50,000 ரூபாய்களை ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். ஹிமயமலையைத் தாண்டி தினசரி 30,000 டன்கள் எடையுள்ள சாமான்கள் சைனாவுக்கு அனுப்பப்படுகின்றன. பர்மா ரஸ்தா திறக்கப்பட்டால் இது அதிகரிக்கும். ஜனாதிபதி ரூஸ்வெல்டின் சொந்த பிரதிநிதியான மிஸ்டர் டோனால்ட் நெல்ஸன் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "ஜப்பானுக்குப் பதிலாக கிழக்குப் பிரதேசத்தில் சைனா முதன்மையான தொழிற்சாலை நாடாக ஸ்தாபிக்கப்பட்டால் நமக்கும் உலகம் பூராவுக்கும் சௌகரியமாக இருக்கும்."

உள்நாட்டு நிலைமையைப்பற்றி சர்ச்சை செய்யும்பொழுது சியாங்கே ஷேக் செய்யும் சீர் திருத்தங்கள் அதிகாரத்தை பலப்படுத்தவேண்டிய உத்தேசத்துடன் செய்யப்படுகின்றனவென்று எகனமிஸ்ட் பத்திரிகை அபிப்பிராயப்படுகிறது. யுத்த கால சிரமங்களை அறிவதுதான் நியாயமான அபிப்பிராயம். நாட்டில் ஜனநாயகத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்றாலும் பொதுஜன, ராணுவ, நிர்வாகத்தையும் அடக்கியாள வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

**கிரீஸ்.** கிரிஸின் கலவரம் அடங்கிவருகிறது. முற்றிலும் நின்றுவிட்டால் நன்றாக இருக்குமென்று நாம் நினைக்கிறோம். ஈலாஸ் படையின் பிரதிநிதிகள் ஜெனரல் ஸ்கோபியுடன் சமாதானம் செய்துகொண்டுவிட்டார்கள். ஆகிலும் அவர்கள் பிணையாணிகளை இன்னும் விடுவிக்கவில்லை. இது நடைபெறும் வரையில் சமாதானம் ஏற்படாது. ஆதென்ஸ் விடுதலை பெற்றதைப்பற்றி ஜனங்கள் சந்தோஷிக்கிறார்கள். பதினாயிரக்கணக்காக அவர்கள் தெருக்களில் ரோந்து செய்து பிரிடனுக்கு நன்றியறிவை வெளியிட்ட போதிலும் எடிஸ் துருப்புகள் பெலப்பனீஸ்ஸில் கமிம்போரை நடத்திவருகிறார்கள்.

வி வி வி வி வி

**பிரான்ஸ்.** மறுபடியும் ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது. யுத்த நிறுத்த தினத்தன்று மிஸ்டர் சர்ச்சில் பாரிஸுக்கு விஜயம் செய்தபின் பிரெஞ்சுப் படைகளுக்கு அதிக முஸ்தீப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. புது வருஷப்பிறப்பன்று செய்த ஒலிபெருக்கில் ஜெனரல் டிகால் பின்வருமாறு சொல்லுகிறார். "ஆயுதங்களை வழங்குவதில் நேசதேசத்தார்கள் உதவி செய்வதாக வாக்களித்துவிட்டார்கள்." வசந்த கால முடிவில் சிறந்த முஸ்தீப்புகளுள்ள 10 லக்ஷம் துருப்புகள் பிரான்ஸில் தயாராகிவிடும்.

வி வி வி வி வி

**இந்தியாவின் யுத்த முயற்சி.** இந்தியாவின் யுத்த முயற்சியைப்பற்றி பொறுப்பு வாய்ந்த வட்டாரங்களிலிருந்து பாராட்டுகள் வந்திருக்கின்றன. இந்தியா கமாண்டின் முக்கிய நிர்வாகியான லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் வில்பிரிட் G. லிண்ட்லெஸ் பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள்.

"இந்திய சேனாதிபதியின் அமுலுக்குள் 25,00,000 கவசம்பூண்ட படைகளிருக்கின்றன. 360 விமான தளங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. 13,20,000 போர் படைகளுக்கு இடவசதி தயார் செய்யப்பட்டிருக்கிறது. 70 பயிற்சி முகாம்களில் 4,70,000 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். 130 ஆஸ்பத்திரிகளில் 94,000 படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ராணுவ முஸ்தீப்புகள் 42 மிலியன் சதுரமைல்கள்கொண்ட பிரதேசத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. 104 விமான வேலைக்கார முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கப்பல்கட்டும் நிலயங்கள், துறைமுகங்கள், கடற்படை அபிவிருத்தி நிலயங்கள் 6 மிலியன் பவுன்கள் செலவில் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன அல்லது புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. வடக்கு பர்மாவில் லெடொ, டாமு, டிட்டிம், அரக்கான் போர்முனைகளில் நேசதேசப்படைகளுக்கு சாமான்களை அனுப்ப நான்கு ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களில் இருப்புப்பாதை இல்லை. அவைகள் இஞ்ஜினியர்களின் திறமையை வெளிப்படுத்துகின்றன.



**தேசிய சேமிப்பு திட்டம்.** அகில இந்திய இருவார சேமிப்பு திட்டத்தை ஒட்டி புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலும் இருவார இயக்கம் துவக்கப்பட்டிருக்கிறது. தேசம் பூராவிற்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் இந்த இயக்கத்தின் லக்ஷியங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. சேமிப்பு மூலம் யுத்தத்துக்கு உதவுவது முக்கியமான நோக்கமல்ல. ஜனங்களின் பொருளாதார க்ஷேமந்தான் முக்கியமாகக் கருதப்படுகிறது. சேமிப்புசெய்து கடன் கொடுப்பதினால் தனிப்பட்டவர்கள் செட்டாகச் செலவு செய்வதில் சிறந்த பயிற்சிபெறுகிறார்கள். மேலும் சொந்தப்பணத்தை பொதுஜன நன்மைக்கு விநியோகம் செய்யும் பழக்கமும் அவனுக்கு ஏற்படுகிறது. யுத்த காலத்தில் சேமிப்பு செய்வதின் மூலம் செல்வப்பெருக்குக் குறைக்கப்படுகிறது. இப்பொழுது சேமிக்கப்படும் ஒவ்வொரு அணுவும் சமாதானம் வரும்பொழுது அபாரமான பொருமானமுள்ளதாக இருக்கும். அரசாங்கத்தாரிடம் பொருளை முதலீடு செய்வதினால் அதற்கு பத்திரம் உண்டு. மேலும் 12 வருஷத்தில் தொகை 50 சதவிகிதம் அதிகரிப்பதால் லாபகரமானதும்தான்.

பொருளை முதலீடு செய்வதைவிட சிறிய சேமிப்பு இயக்கத்தைப் பரவச் செய்வதுதான் தற்போதிய முயற்சியின் லக்ஷியம். ஏனென்றால் அதிலிருந்து தேசமக்களின் பழக்கவழக்கங்களிலும் தோற்றத்திலும் நல்ல முறையில் மாறுதல் ஏற்படும்.

---

## ஆர்டென்னிஸ் பேரில் விமானப் போர்.

### ஜெர்மனியின் ஆரம்பத் தாக்குதலை விமானப்படை தடுத்துவிட்டது.

(விங் கமாண்டர் எல். வி. பிரேஸர்.)

ஆர்டென்னிஸ் போரில் பிரிடிஷ் விமானப்படையின் உதவி எவ்வளவு அதிக முக்கியத்துவமுள்ளது என்பதை ஜெர்மன் விமானப்படையே ஒப்புக்கொண்டுவிட்டது என்று தெரியவருகிறது. அவ்விதம் இல்லாதிருந்தால் நூற்றுக்கணக்கான ஜெர்மன் சண்டை விமானங்கள் புது வருஷப் பிறப்பன்று உருக்கமாக ஹாலந்திலும், பெல்ஜியத்திலுமுள்ள பிரிடனின் இரண்டாவது டாக்டிகல் விமானப்படைகள் இருக்கும் விமானத் தளங்களைத் தாக்கி ருண்ஸ்டெட் எதிர்த்துப் போராடவேண்டிய மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதத்தை அப்படையிலே அழிக்க பலமான முயற்சி செய்திருக்கமாட்டா.

ஜெர்மனியின் மதிப்புள்ள சண்டை விமானங்களை தாழப் பறந்து எதிரியைத் தாக்க உபயோகப்படுத்தப்பட்டது என்பது ஜெர்மனிக்கு ஏற்பட்ட அவசியத்தையும் கதியின்மையையும் வெளிப்படுத்துகிறது. அந்த நடவடிக்கையில் 136 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அவைகளில் நூறுக்கு மேற்பட்டவைகள் சண்டை விமானங்களாகவே நொருக்கப்பட்டன. அந்தக் கரிநாளன்று ஜெர்மனியின் முயற்சி வீணாயிற்றென்று நிச்சயமாகத் தெரியவருகிறது. ஜெர்மனி 364 விமானங்களை இழந்திருக்கிறது. அவைகளின் பெரும் பாகம் விமான எதிர்ப்பு பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. தரையிலிருந்த அநேக பிரிடிஷ் விமானங்கள் அழிவுபட்டபோதிலும் பிரிடன் நான்கு சண்டை விமானங்களைத்தான் இழந்தது. ஜெர்மனிக்கு 136 சண்டை விமானங்கள் நஷ்டம். ஆகையால் விமான யுத்தத்தில் பயிற்சி பெற்ற விமானிகள்தான் முக்கியமான அம்சம் என்ற உண்மை வெளிப்படுகிறது. இந்த விமானப் போர் ருண்ஸ்டெட் தாக்குதல் செய்த இடத்தில் நடைபெற்றது. தினசரி வெளியீடுகளையும் குறிப்புகளையும்விட இந்தப் போர் ஆர்டெனிஸில் பனி விலகி பிரிடிஷ்-அமெரிக்க விமானப்படைகள் ஒன்றுபட்ட நடவடிக்கையை மேற்கொண்டு ருண்ஸ்டெட்டின் ஆரம்ப வெற்றிக்கு முற்றுப்புள்ளி போட்ட சில நாட்களில் நடைபெற்ற சம்பவத்தின் முக்கியத்துவத்தை வற்புறுத்துகிறது. ஆறு நாட்கள் நடந்த இந்த விமானப்போர் இந்த யுத்தத்தில் மிகவும் முக்கியத்துவமுள்ளது. அசைந்து செல்லும் போர்ப் படைகளுக்கு விமானப்படை எவ்வளவு உதவி செய்யக்கூடும் என்பதையும் பிரிடிஷ்-அமெரிக்க விமானப் படை நல்லுணர்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் எவ்விதம் வேலை செய்து வருகின்றன என்பதையும் மதிக்க பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப்படை பனி விலகியபொழுது அமெரிக்க டாக்டிகல் விமானப்படையுடனும் ஒன்றுசேர தெற்கு நோக்கிச் சென்ற சம்பவங்களை விமர்சனம் செய்வது அவசியமாகும்.

பிரிடிஷ்-அமெரிக்க சண்டை விமானங்கள், சண்டை வெடி விமானங்கள், கனமான நடுத்தரமான வெடி விமானங்கள் எல்லாம் திட்டப்படி துரிதமாக பறந்து சென்றன. இரண்டாவது டாக்டிகல் விமானப்படையைச் சேர்ந்ததும் அமெரிக்க டாக்டிகல் விமானப் படையைச் சேர்ந்ததுமான விமானங்கள் பாய்ந்து சென்று வேவு பார்த்து வந்தன. பிரிடிஷ்-அமெரிக்க நடுத்தரமான வெடி விமானங்கள் போர்முனையிலும் அதற்குப் பின்புறத்திலும் உள்ள போக்குவரத்து மத்திய நிலயங்களையும் சாமான்கள் இறக்கும் நிலயங்களையும்

தாக்கின. கனமான வெடி விமானங்கள் எதிரியின் ஸர்ப்பராக்களை மேற்கு முகமாக கொண்டுவரப்பட்ட போக்குவரத்து மார்க்கங்களையும் இருப்புப்பாதைகளையும் தாக்கின.

ஜெர்மானியர் பதில் தாக்குதலை டிஸம்பர் 16உ அன்று துவக்கினார்கள். ஐந்து நாட்கள் வரையில் மூடுபனியும், கனமான தாழ்ந்த மேகங்களும் டாக்டிகல் விமானப்படையின் நடவடிக்கையைப் பாதித்தன. டிஸம்பர் 23உ அன்று பனி விலகிற்று. துடித்துக்கொண்டு இருந்த நேசதேச விமானிகள் அப்பொழுதாவது போரில் ஈடுபடலாமென்று எண்ணினார்கள். அன்று பிற்பகலிலேயே ஐரோப்பிய விமான தளங்களிலுள்ள பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் படை பறந்து சென்று அமெரிக்கப் படைகளுடன் ஒத்துழைத்தது.

ஜெர்மன் விமானப்படை போர்முனையில் தலைகாட்டாமலும் போர்முனைக்கு ஸர்ப்பராக்கள் வராமல் தடுப்பதும்தான் நமது விமானப்படையின் முக்கிய அலுவல்கள். இதே சமயத்தில் அமெரிக்க டாக்டிகல் விமானப்படையும் போர்முனைகளுக்குச் சென்று நடவடிக்கையை ஆரம்பித்தது. அவைகள்தான் ஜெர்மன் விமானப்படையின் தாக்குதலை சமாளித்து எதிரியின் 73 விமானங்களை சுட்டுவீழ்த்தின. அமெரிக்க விமானப்படை 17 விமானங்களை இழந்தது.

நேசதேச கனமான வெடி விமானங்கள் ஆகாயத்தில் தோன்றியவுடன் ஜெர்மன் படைகளுக்கு ரக்ஷணை அளிக்காமல் ஜெர்மன் விமானப்படை நேசதேச விமானங்களைத் தாக்க முயன்றது. அன்று இரவும் நேசதேச விமான நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெற்றது. அதில் இரண்டாவது டாக்டிகல் படையைச் சேர்ந்த நடுத்தரமான விமானங்கள் ஈடுபட்டன. எதிரிக்குக் கொஞ்சங்கூட சாவகாசம் கொடுக்கப்படவில்லை.

காலநிலையில் மாறுதல் ஏற்பட்டதினால் போக்குவரத்துக்களை பகலில் கொண்டுபோவது அபாயம் பொருந்தியதென்று வான் ருண்ஸ்டெட் நன்றாய் அறிந்திருப்பான். ஆகிலும் தாக்குதலின் நிலைமையை பலப்படுத்துவதற்கு அவன் அவ்விதம் செய்யவேண்டியதாயிற்று. இரவிலும் அவனுக்குச் சௌகரியம் ஏற்படவில்லை. ஏனெனில் பிரிடிஷ் மஸ்கிடோ விமானங்கள் போர்முனைக்குச் சென்று போக்குவரத்துக்களை வெடிகுண்டுகளால் நொருக்கின. கிறிஸ்துமஸ் தினத்தன்று ஜெர்மன் விமானப்படை சோர்வடைந்ததாகக் காணப்பட்டது. எதிரி சண்டை விமானங்கள் போருக்கு முன்வரவில்லை. அதற்குப் பதிலாக கனமான வெடி விமானங்களை தாக்க முயன்றன.

ஏறக்குறைய 400 அமெரிக்கப் பறக்கும் கோட்டைகளும், லிபரேடர்களும் பிராமிலுள்ள போக்குவரத்து நிலயத்தைத் தாக்கின. 800 நடுத்தரமான வெடி விமானங்கள் போர் முனையிலுள்ள மற்ற 9 லக்ஷியங்களையும் போர்முனைக்குப் பின்னுள்ள நான்கு முக்கியமான பாலங்களையும் தாக்கின. கிறிஸ்துமஸ் தினத்தன்று பாலேக்கு சமமான நஷ்டம் எதிரியின் போக்குவரத்துகளுக்கு ஏற்பட்டுவிட்டது. இரண்டரை நாட்களில் நேசதேச விமானப் படைகள் எதிரியின் 388 விமானங்களை நாசம் செய்தன, 105 விமானங்களைப் பழுதுபடுத்தின. 1,678 போக்குவரத்து சாதனங்களை அழித்தன. 757 வண்டிகளைப் பழுதுப்படுத்தின. நேச தேசத்தார்களுக்கு 240 விமானங்கள் நஷ்டமாயின.

ருண்ஸ்டெட்டின் முயற்சிகளுக்கு இந்த நடவடிக்கையினால் அதிக பாதகம் ஏற்பட்டது. ஜெர்மனியின் தானாகச் செல்லும் பீரங்கிகளும், கவசம் பூண்ட மோட்டார்களும் பெட்ரோல் குறைவினால் கைவிடப்பட்டு நமது வசமாயின. ஸப்ளை மார்க்கங்களை நாம் தாக்கியதின் பலன்களும் தெளிவாகத் தோன்றின. தரைப்போரின் நிலைமை நிலைபெற்றிருந்தது. சில இடங்களில் அமெரிக்கத் துருப்புகள் இழந்த பிரதேசத்தை மீட்டன. விமான மூலமாக உதவி அளிக்கப்பட்ட பாஸ்டாக்னியிலும் அமெரிக்கர்கள் தீரத்துடன் சமாளித்து நின்றார்கள். இரண்டாவது டாக்டிகல் விமானப்படை அவுட் வாணங்களைப்போடும் டைபூன் விமானங்களை அமெரிக்க முன்னணிப் படைகளின் உதவிக்கு அனுப்பிவந்தது. டைபூன் விமானங்கள் அமெரிக்க ஸோல்ஜர்களுக்கு முன்னால் 400 கெஜ தூரத்திலுள்ள எதிரியின் டாங்கிகளைத் தாக்கின. அமெரிக்க ஸோல்ஜர்கள் டாங்கிகளின் கோபுரத்தில் நின்று எதிரியின் டாங்கிகள் அழியும்பொழுது குதூகலப்பட்டனர்.

பிரிடிஷ்-அமெரிக்க விமான ஒத்துழைப்பு நடவடிக்கையின் விளைவுகளை சுருக்கமாகக் கூறலாம். அமெரிக்கத் தரைப்படைகளுக்கு ஏற்பட்ட தாக்குதல் அதம பக்ஷத்துக்குக் குறைந்தது. திருத்தி அமைக்கப்பட்ட ஜெர்மன் விமானப்படையின் பெரும்பாகம் சுட்டு வீழ்த்தப்பட்டது. எதிரியின் போக்குவரத்து மார்க்கங்கள் பலமாகச் சீர்கெட்டுப்போயின. போர் நடைபெற்று வருகிறது. ஆகிலும் ஜெர்மனியின் முன்னேற்றம் விமான பலத்தினால் தடைபட்டுவிட்டது.



# மகத்தான தேவைகளுக்கு முகான்மையளிக்கப்பட்டது.

## பரஸ்பர உதவி முறை.

### (நார்மான் கிரம்ப்).

பரஸ்பர உதவியைப்பற்றி பிரிடிஷ் நிர்வாகம் இரண்டாவது ரிபோர்ட்டை வெளியிட்டிருக்கிறது. அதில் 1944-ம் வருஷம் ஜுன் மாதம் முடிய £ 1,079,648,000 பொறுமானமுள்ள சாமான்கள் பதில் முறையில் அனுப்பப்பட்டனவென்று தெரியவருகிறது. அதில் £ 604,730,000 பொறுமானமுள்ளவைகள் அமெரிக்காவுக்கும் £ 269,457,000 பொறுமானமுள்ளவைகள் ருஷ்யாவுக்கும் £ 120,000,000 பொறுமானமுள்ளவைகள் போலந்துக்கும் அனுப்பப்பட்டன. போலந்துக்குக் கொடுக்கப்பட்ட உதவியில் அநேகம் போர்முனைகள் போர் புரியும் போலிஷ் படைகளுக்குப் புதிய முஸ்தீப்புகளை வழங்குவதில் பெரும்பாகம் செலவிடப்பட்டது.

இந்தப் புள்ளி விவரங்கள் மிகுதியாக இருந்தபோதிலும் பூரா விவரங்களும் அவைகளில் அடங்கியிருக்கவில்லை. பொருள் அளவினால் மதிக்கக்கூடாத ஏராளமான சேவைகளை பிரிடன் தாராளமாகச் செய்திருக்கிறது. பிரிடன் நூதனமான யுத்தக் கருவிகளை உற்பத்தி செய்திருக்கிறது முக்கியமானவை, ரேடியோ லொகேடர் கருவிகள், குழல் வாயுவால் ஓடும் விமானம், மெர்லின் எஞ்ஜின் முதலியவைகள். பிரிடன் தன்னந்தனியே நின்று போரை நடத்திய முறையிலிருந்து நேசதேசங்கள் அநேக விஷயங்களைக் கற்றுக்கொண்டன.

பரஸ்பர உதவியைப்பற்றி நவம்பர் 24-ம் தேதியன்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் காங்கிரஸுக்கு அனுப்பிய செய்தியில் பிரிடனைப் பாராட்டியிருக்கிறார். பிரிடனின் சிரமங்களைக் குறித்து அவர் பின்வருமாறு சொன்னார்:—"ஐந்து வருடங்களாக அவர்கள் விமானத் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கிறார்கள். ஐந்து வருடங்களாக அவர்கள் அநேக மணி நேரங்கள் யுத்த சேவையிலீடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆகாரமும், ஆடைகளும், மற்ற அவசியமான பொருள்களும் குறைவாக வழங்கப்பட்டன. ஐந்து வருஷங்களில் குடும்ப வாழ்க்கை சீர்கெட்டுவிட்டது. குழந்தைகள் பத்திரமான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டார்கள். தாய்மார்கள் தொழிற்சாலைகளில் வேலைக்குச் சென்றார்கள். தகப்பன் மார்கள் போர்ப்படைகளில் சேர்ந்துகொண்டார்கள்."

இந்தப் பாராட்டு தாராளமாக இருந்தாலும் உண்மையானதுதான். பிரிடன் செய்திருக்கும் பதிலுதவியை அவைகள் வற்புறுத்திச் சொல்லுகின்றன. பிரிடன் அமெரிக்கப் படைகளுக்கு புதிய முகாம்களையும் விமான தளங்களையும், பயிற்சி முகாம்களையும் அமைத்துக் கொடுத்தது. பிரிடிஷ் விவசாயிகள் அவர்களுக்காக தங்களுடைய வாசஸ்தலங்களைக் காலி செய்தார்கள். பிரிடிஷ் உணவுப் பொருள் உற்பத்தியும் அமெரிக்கப் படைகளின் தேவைக்கு முகான்மையாகக் கொடுக்கப்பட்டது. விமான தளங்களும், படை முகாம்களும், குடிசைகளும், ரஸ்தாக்களும், ஓடு பாதைகளும் அமைக்கப்பட்டது ஒரு சமயத்தில் இந்த வேலையில் 1,00,000 பிரிடிஷ் வேலைக்காரர்கள் ஈடுபட்டிருந்தார்கள். இந்த விஷயத்திலும் பிரிடனில் அழிவுபட்ட வீடுகளைப் புதிப்பிப்பதையும் பழுது பார்ப்பதையும்விட யுத்தப் படைகளின் தேவைக்கு முக்கியத்வம் அளிக்கப்பட்டது. உள்நாட்டு போக்குவரத்து சாதனங்களும் தாராளமாக யுத்த சேவைக்குக் கொடுக்கப்பட்டன. பிரிடிஷ் மக்கள் ரெயில் வண்டிகளில் நின்றுகொண்டே சென்றார்கள். டெலிபோனில் பேசுவதறகாக வெகுநேரம் காத்துக் கொண்டிருந்தார்கள். 1944-ம் வருஷம் ஜுன் மாதம் முடிய அமெரிக்கப் படைகளையும் முஸ்தீப்புகளையும் ஏற்றிச்செல்ல 6,50,000 ரெயில்வே வாகன்களும் 9,225 ஸ்பெஷல் ரெயில் வண்டிகளும் தேவைப்பட்டன.

இது பிரிடனின் தியாகத்தின் ஒரு அம்சம்தான். D. தினத்துக்குத் தயார் செய்து கொள்ளுவதற்காக பூமியின் தாழ் வரைகளில் தலைமைக் காரியாலயங்கள் அமைக்கப்பட்டன. கப்பல்களையும் சிறிய படகுகளையும் கட்டுப்படுத்த கண்ட்ரோல் ஸ்டேஷன்கள் அமைக்கப்பட்டன. பிரிடனின் எஃகு உற்பத்தி சிறிது காலம் ஒத்திவைக்கப்பட்டு டாங்கிகளும், வண்டிகளும் கடல் வழியாகச்சென்று கரை சேருவதற்குள் அலைகளுக்குள் தண்ணீர் புகுந்துவிடாமல் ஏற்பாடு செய்ய உபயோகப்படுத்தப்பட்டன. முன் கூட்டியே துறைமுகங்களுக்குத் தேவையான தளவாடங்களை அமைத்ததை நான் சொல்லியிருக்கிறேன். அவைகளைக் கட்டுவதற்கு 1,00,000 டன்கள் எடையுள்ள எஃகும் 6,00,000 டன்கள் எடையுள்ள காங்கிரீட்டும் தேவைப்பட்டன. அவைகளின் பொறுமானம் £ 25,000,000 எண்ணெயும் ஏராளமாகச் சேமிக்கப்பட்டது. முக்கியமாக உலகத்தின் அநேக பாகங்களிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கு பிரிடிஷ் எண்ணெய் தான் ஸப்ளை செய்யப்பட்டது. ஏனெனில் அங்கிருந்துதான் எண்ணெய் சுலபமாக ஸப்ளை செய்யக்கூடும். கடன் குத்தகை திட்டப்படி

அமெரிக்கா பிரிடனுக்கு அனுப்பிய எண்ணெயை பிரிடன் அங்குள்ள அமெரிக்கப் படைகளுக்குக் கொடுத்துவிட்டது. பரஸ்பர உதவியை இதற்கு மேல் நாம் எதிர்பார்க்கமுடியாது. சில சமயங்களில் பிரிடிஷ் டாங்கிகூட நார்மண்டியிலுள்ள அமெரிக்க எண்ணெய் கிட்டங்கியிலிருந்து எண்ணெயை நிரப்பிக்கொண்டது.

லிபியாவில் போர் நடைபெற்றபொழுது ஐந்து காலன் பெட்ரோல் நிறப்பக்கூடிய அநேக பீப்பாய்கள் நமது வசமாகின. அவைகள் ஜெர்மனிக்கு எவ்வளவு உபயோகமுள்ளதாக இருந்தனவென்று கண்டு பிடிக்கப்பட்டது. அவைகளை ஜெரிகள் என்று பெயரிட்டு பிரிடன் ஏராளமாக உற்பத்தி செய்து மேற்கு முனையில் உபயோகித்தார்கள்.

இவ்விதமாக எல்லோரும் யுத்த சேவை செய்திருக்கிறார்கள்.

## வியன்னாவுக்குப் போகும் ரஸ்தா.

(ஆஸ்வால்ட் டச்.)

ஆல்ப்ஸ் மலைத்தொடர் வியன்னாவுக்கு சமீபத்திலுள்ள கிழக்கு சமவெளிகளில் மறைந்துவிடுகிறது. வீனர்வால்ட், லெதா என்ற மலைகள்தான் மத்திய ஐரோப்பிய மலைத்தொடரின் கடைசி மலைக் குன்றுகள் என்று சொல்லலாம். வியன்னாவுக்குக் கிழக்கில் மார்ச்பெல்ட் என்ற மகத்தான ஹங்கேரிய சமவெளி ஆரம்பமாகிறது.

ருஷ்யப்படைகள் வியன்னாவை அணுகிவருகின்றன. அவைகள் ஹங்கேரிய சமவெளியின் பெரும்பாகத்தைத் தாண்டிவிட்டன. சில இடங்களில் புடாபெஸ்டுக்கு அடியில் மகத்தான ராணுவ இடைஞ்சலான டான்யூப் நதியையும் அநேக இடங்களில் தாண்டிவிட்டன.

ஆஸ்திரியாவுக்குச் செல்லுவதற்கு புடாபெஸ்டுதான் திறவுகோல் போன்றது என்றாலும் வியன்னாவுக்குப் போகும் ரஸ்தாக்கள் புடாபெஸ்டிலிருந்து புறப்படவில்லை. சுலபமான சிறந்த ரஸ்தா ஹங்கேரியின் தலைநகரத்துக்கு வடக்கில் டான்யூப் நதி ஓரமாக பிராடிஸ்லாவா, திபான் வழியாகச் செல்லுகின்றன. மற்றொரு பாதை புடாபெஸ்டுக்குத் தெற்கில் ஸ்டல் வீசன் பார்க்கு, பாபா, பிளாட்டன், நியூஸ்ரெட்லர் ஏரிகளுக்கு மத்திய வழியாகச்சென்று ஆல்ப்ஸ் மலையின் தெற்கு மலையடிவாரங்களுக்குச்சென்று வீனர் நியூஸ்டாட் வழியாக வியன்னாவுக்குச் செல்லுகின்றன.

வியன்னாவின் இயற்கையான தற்காப்பு ஹங்கேரிய ஆஸ்திரிய எல்லை அமைப்பைப் போன்றது. அது வடக்கு நோக்கி மார்ச், தாயா நதிகள் ஓரமாகச் செல்லுகிறது. அவைகள் செகோஸ்லவோகியாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் நூறு கிலோமீட்டர்கள் வரையில் எல்லைச் சரகமாக இருக்கின்றன. ஒரு பக்கத்தில் லெயிதா நதியும் மலைகளும், மற்றொருபுறத்தில் நியூஸீட்லர் ஏரியும் ராப் (கொயர்) நதியும் அதற்குப்பின் ஆல்ப்ஸ் மலையின் தெற்கு மலையடிவாரங்களும் ஆஸ்திரியா ஹங்கேரி எல்லைச்சரகத்தை அணுகுவதற்கு முக்கியமான இடையூறுகள். இந்த இயற்கையான தற்காப்புகள் சென்ற நூற்றாண்டுகளில் படைகளுக்கு பிரமாதமானதாக இருந்திருக்கும். ஆகையால் அவைகளுக்கு உதவியான பலமான நவீன முறைகளில் கட்டப்பட்ட கோட்டைகளிருந்தாலொழிய அவைகள் உபயோகப்படமாட்டா.

மார்ச், லெதா, ராப் நதிகள் அதிக அகலமில்லாதவை. நீபர், நிஸ்டர், பிராக், டைசா நதிக்குப் பாலங்களைக் கட்டி தாண்டிய படைகளுக்கு அவைகள் ஒரு சிரமத்தையும் கொடுக்காது. லெதா மலைகளும் ஆல்ப்ஸ் மலையடிவாரங்களும் மரங்களடர்ந்த காடுகள். அவை சில இடங்களில் மட்டும் 2,000 அடிகள் உயரமுள்ளவை. நியூஸிட்லர் ஏரி பூராவும் அதிக ஆழமில்லாதது. அநேக இடங்களில் அதை சுலபமாகத் தாண்டிவிடலாம். ஆகிலும் போர் படைகளுக்கு அவைகள் சில சிரமங்களை ஏற்படுத்தக்கூடும். ஆகையால் அந்த ஏரியைச் சுற்றிச் சென்றால்தான் எஸ்தோனியாவிலுள்ள பீபஸ் ஏரியைப்போல சதுப்பு நிலங்களுள்ள கரைகளைத் தவிர்த்துச் செல்லலாம். அக்டோபர் முடிவில் புடாபெஸ்டின் சுற்றுப்புறங்களில் முதன்முதலாக ருஷ்ய டாங்கிகள் தோன்றியபொழுது ஜெர்மனி ஆஸ்திரியாவிலுள்ள எல்லா ஆடவர்களையும் திரட்டி கிழக்கு பிரஷ்யாவிலும் ரைன்லாந்திலும் உள்ளதுபோல் தற்காப்பு அரண்களை அமைக்க முயன்றது. அங்கு அமைக்கப்பட்டிருக்கும் ஏராளமான கோட்டைகளும் அநேக இடங்களில் காங்கிரீட்டினால் அமைக்கப்பட்ட தற்காப்புக் கூடங்களும் டாங்கிப் பொறிகளும் மற்ற அமைப்புகளும் தெற்கு மொரேவியாவிலிருந்து தாயா மார்ச் நதிகளின் மேற்குக்கரை வழியாக டான்யூப் வரையில் பிராடிஸ்லாவாவுக்கு பத்து கிலோமீடர் மேற்கில் செல்லுகின்றன. அதன்பின் லெய்தா மலைகளை ஒட்டிச்சென்று தெற்கு நோக்கி நியூஸிட்லர் ஏரிக்குச் சென்று ஏரியின் மேற்குக்கரை வழியாக கிராஸ், லிங்கன்டார்ப்புக்கு சமீபத்திற்குச் செல்கின்றன.



அங்கிருந்து தற்காப்பு அரண்கள் ரோஸேலியன் மலைகள் வெக்ஸெல் குன்றுகள் லப்னிட்ஸ் மலைகளை ஒட்டிச்சென்று ராட்கர்ஸ்பர்க்குக்கு சமீபத்திலுள்ள மூர்வாலிக்குச்சென்று அங்கிருந்து தற்காப்பு அரண் கிழக்கிலிருந்து மேற்குமுகமாக காராவாங்கன் மலை உச்சிகளை ஒட்டிச்செல்கிறது. ஆனால் இந்தப் பகுதிகளெல்லாம் வியன்னாவின் தற்காப்புக்காக அமைக்கப்பட்டவைகள் என்று நினைக்கமுடியாது.

ஜெர்மனியின் தற்காப்புக்கு வியன்னா மிகவும் முக்கியமானது. வியன்னா வீழ்ச்சி பெற்றால் வடக்கிலிருந்து தெற்குக்கும், கிழக்கிலிருந்து மேற்குக்கும் இருப்புப்பாதைகளுக்கு மத்யஸ்தலம் போய்விடுவதுடன் ஜெர்மனியின் யுத்த யந்திரத்திற்கு மிகவும் முக்கியமான ஆயுதசாலையும் போய்விடும். ரூர் பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலைகள் அழிபட்டபின் வியன்னாவும் வியன்னா-ஸெயிண்ட் போல்டன்-வீனர் நியூஸ்டாட் என்ற நாடுகளுக்குள் அடங்கிய முக்கோணத்திலுள்ள தொழிற்சாலைகளும் ஜெர்மன் யுத்த முயற்சிக்கு உபயோகப்படக்கூடிய தொழிற்சாலை நிலயங்களாக பலமாக அமைக்கப்பட்டன.

வியன்னா விழுந்துவிட்டால் தெற்கு ஆஸ்திரியாவுக்குச் செல்வதற்கு ரஸ்தாவும் இருப்புப் பாதையும் ஒன்றும் பாக்கியிராது. தொழிற்சாலைகள் முக்கியமாக ஸ்டிரியாவில் இருக்கின்றன. எர்ஸ் பர்க்கும் தெற்கு இருப்புப் பாதையிலுள்ள மகத்தான உருக்கும் சாலைகளும் துணிக்கப்பட்டுவிடும். அதேபோல வியன்னாவுக்கு வடக்கில் சில கிலோமீட்டர்களில் உள்ள ஸிஸ்டர்ஸ்டார்ப் எண்ணெய்க் கிணறுகளும் துணிக்கப்பட்டுவிடும்.

இந்த எண்ணெய்க்கிணறுகளை ஜெர்மானியர்கள் விரிவான முறையில் அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். அங்கிருந்து ஒரு வருடத்திற்கு பத்து லக்ஷம்முதல் பதினைந்து லக்ஷம் டன்கள் எண்ணெயும் இயற்கை வாயுவையும் ஜெர்மனி அடைந்துவருகிறது. இந்த அளவு ஜெர்மனிக்குக் கிடைக்கும் இயற்கை எண்ணெய் ஸப்ளையில் 50 சதவிகிதம் ஆகும். ருமேனியாவிலிருந்து கிடைத்த எண்ணெய் ஸப்ளை குறைந்துவிட்டதால் ஜெர்மனிக்கு ஸிஸ்டர்ஸ்டார்பிலுள்ள எண்ணெய் அதிக முக்கியத்வம் பெற்றுவிட்டது. ஸிஸ்டர்ஸ்டார்ப் வியன்னாவுக்கு வடக்கில் நாற்பது கிலோமீட்டரிலும் மார்ச் நதிக்கு பின்புறத்திலும் இருக்கிறது. மேலும் அது கிழக்கு தற்காப்பு அரணுக்கு சமீபத்தில் இருக்கிறது.

## பிரிடனின் யுத்தகால தொழிற்சாலைகள்.

### அபிவிருத்திகளும், குறைவுபாடுகளும்.

(மார்டின் கோட்ஸ்).

பிரிடனின் யுத்த தளவாட மாதாந்திர உற்பத்தி யுத்த ஆரம்பத்திலிருந்ததைவிட 1944-ம் வருஷம் முதல் ஆறு மாதங்களில் ஆறு மடங்கு அதிகமாயிருந்தது. யுத்தகாலத்தில் பிரிடனின் அரிய செய்கைகளின் மகத்துவத்தைப்பற்றி ஒரு முடிவுக்குவர இது சாதகமளிக்கிறது.

யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளுக்குத் தேவையான முக்கியமான இயற்கைப் பொருள்களை வழங்குவதும், இயற்கைப் பொருள்கள், அறுகுறையாக முடிக்கப்பட்ட சாமான்களின் இறக்குமதியைக் கூடுமானவரையில் குறைப்பதும்தான் மிகவும் சிரமசாத்யமான பிரச்னையாக இருந்தது. இது எஃகு உற்பத்தி சம்பந்தப்பட்டமட்டில் அதிக முக்கியத்வமுள்ளது. சமாதான காலத்தில் அது இறக்குமதி செய்யப்பட்ட இரும்பு உலோகத்தைப் பொருத்து நடைபெற்றது. 1939-ம் வருஷத்தில் 5,240,000 டன் எடையுள்ள உயர்தர இரும்பு இறக்குமதி செய்யப்பட்டது. 1943-ம் வருஷத்தில் அது 185,000 டன்களுக்குக் குறைந்துவிட்டது. இந்த சமயத்தில் இரும்புக் குறைவுள்ளதாக உற்பத்திசெய்யப்பட்ட உலோகங்களில் 1939-ம் வருஷத்தில் 14,486,000 டன்களாக இருந்தது 1943-ல் 18,487,000 டன்களுக்கு அதிகரித்தது. மேலும் நல்ல ஏற்பாட்டின்மூலம் குப்பை இரும்புக் குவியல்கள் யுத்தத்துக்குமுன் குவிக்கப்பட்டிருந்ததைவிட மூன்றில் ஒரு பங்கு அதிகரித்துவிட்டன.

இவ்விதமாக விசேஷ ரகமுள்ள எஃகு சாமான்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டபோதிலும் 1943-ம் வருஷத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 13,031,000 டன்கள் எடையுள்ள எஃகு உள்பட எஃகு உற்பத்தி யுத்தத்தில் எல்லா வருடங்களிலும் சமாதானகால உற்பத்தியைவிட அதிகமாகத்தான் இருந்தது. இதன்மூலம் கனமான தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மிகுதியான எஃகு இறக்குமதியும் குறைவுபட்டுவிட்டது.

விமானங்களைக் கட்டுவதற்கு லேசான உலோகங்கள் அவசியமானதால் மாக்னிஷியம உற்பத்தி யுத்தகாலத்தில் 2,000 டன்களாக இருந்தது. 1943-ம் வருஷத்தில் 3,000 டன்களாக அதிகரித்தது. அதாவது 1,000 சதவிகிதம் அதிகரித்துவிட்டது. இதற்காக ஒரு புதிய தொழில் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட 56,000 டன்கள் எடையுள்ள அலுமினியம் யுத்தத்துக்கு முன்னிருந்ததைவிட மூன்று மடங்கு அதிகமானது.

யுத்தத்துக்குமுன் பிரிடனுக்குத் தேவையான மரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. கப்பல்களை மீதப்படுத்துவதற்காக யுத்தம் ஆரம்பமானபின் இறக்குமதிகள் குறைக்கப்பட்டன. மொருப்புச் செலவும் குறைக்கப்பட்டது. உள்நாட்டு உற்பத்தியும் நான்கு மடங்காக அதிகரித்துவிட்டது.

இயற்கைப் பொருள்களின் இறக்குமதியைக் குறைக்கவும் தொழிலாளர்களை யுத்த தளவாட உற்பத்திகளில் ஈடுபடுத்தவும் சில தொழிற்சாலைகளின் உற்பத்தி குறைக்கப்பட்டது. 1943-ல் உற்பத்திசெய்யப்பட்ட பத்திரிகை காகிதம் 1935-ம் வருஷத்தில் இருந்ததற்கு 15 சதவிகிதத்துக்குக் குறைந்துவிட்டது. இதேசமயத்தில் இறக்குமதிகளும் 75 சதவிகிதத்துக்குமேல் குறைக்கப்பட்டுவிட்டது.

யுத்தத்துக்கு முன்னிருந்ததைவிட 40 சதவிகிதம் பருத்தி நூல் நெசவும் குறைக்கப்பட்டது. பருத்தி சாமான் உற்பத்திகளும் 25 சதவிகிதம் குறைந்துவிட்டன.

ஆனால், எஃகு உற்பத்தியுடன் இயற்கைச் செம்பு இறக்குமதி 1939-ம் வருஷத்தில் 307,000 ஆக இருந்தது, 1943-ம் வருஷத்தில் 494,000 டன்களுக்கு அதிகரித்தது. உள்நாட்டில் உற்பத்தி அதிகரித்தபோதிலும் விமான உற்பத்தித் தொழிலுக்கு வேண்டிய அலுமினிய உற்பத்தி 58,000 டன்களிருந்து 212,000 டன்களுக்கு அதிகரித்தது.

ஜனங்களின் உபயோகத்துக்குரிய பொருள்களின் கட்டுப்பாடும் அதிகரித்தது. சில உதாரணங்களைக் கூறுவோம். 1935-ம் வருஷத்தில 161,000,000 ஜோடுகள் ஸப்ளை செய்யப்பட்டது. சென்ற வருஷத்தில் 90,000,000 ஜோடுகள்தான் ஸப்ளை செய்யப்பட்டன. மேஜோடுகள் உற்பத்தி 390 மிலியன்களாக இருந்தது, 240 மிலியனுக்குக் குறைந்துவிட்டது. நாற்காலி உற்பத்தி 2,700,000 லிருந்து 1 லக்ஷத்துக்குக் குறைந்துவிட்டது. கத்திகளின் உற்பத்தி 24 மிலியனிலிருந்து 4 மிலியனுக்குக் குறைந்தது. கரண்டிகளும் கவர் முள்ளுகளும் 56 மிலியன்களிலிருந்து 6 மிலியனுக்குக் குறைந்துவிட்டன.

மோட்டார்களும், பியானோக்களும், சீதளப்படுத்தும் கருவிகளும், டென்னிஸ், கோல்ப் விளையாட்டு பந்துகளும் உற்பத்திசெய்யப்படவே இல்லை. மற்ற சாமான்களின் உற்பத்தி பின்வருமாறு.

| சாமான். | | யுத்தத்துக்கு முன். | யுத்த சமயத்தில். |
|---|---|---|---|
| மோட்டார் சைக்கிள்கள் | ... | 47,000 | 2,000 |
| ரேடியோப் பெட்டிகள் | ... | 1,900,000 | 50,000 |
| டிரங்குப் பெட்டிகள் | ... | 8,500,000 | 1,000,000 |
| பிரயாணப் பைகள் | ... | 10,000,000 | 1,000,000 |
| பவுண்டன் பேனுக்கள் | ... | 9,000,000 | 2,000,000 |

தொழிற்சாலைகள் சமாதான உற்பத்திக்குத் திரும்பும்பொழுது இந்தப் பொருள்களும் அதிகமாகத் தேவை ஏற்படும்.

பிரிடிஷ் இருப்புப் பாதைகளும் அசாத்தியமென்று தோன்றின அநேக காரியங்களைச் செய்திருக்கின்றன. அவைகள் பிரயாணிகளின் 10 சதவிகித அதிகரிப்பை சமாளித்திருக்கின்றன. ஆனால் ரெயில் வண்டிகளின் சங்கியைக் குறைக்கப்பட்டு சாமான்களை ஏற்றிச்செல்லும் வண்டிகள் 40 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டன. மோட்டார் வண்டிகளின் சங்கியையும் 40 சதவிகிதம் குறைந்தது. ஆகிலும் பிரயாணிகளின் சங்கியை ஐந்தில் ஒரு பாகம் அதிகரித்தது.

பெட்ரோலையும், ரப்பரையும் குறைப்பதற்காக யுத்த ஆரம்பத்தில் தனிப்பட்டவர்களின் உபயோகத்துக்கு 2 மிலியன் கார்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டது. 1944-ம் வருஷ ஆரம்பத்தில் அது 7 லக்ஷத்துக்குக் குறைந்தது. இப்பொழுது தனிப்பட்டவர்கள் உபயோகிக்கும் பெட்ரோல் யுத்தத்துக்கு முன்னிருந்த அளவுக்கு எட்டில் ஒரு பாகம்தான்.



# பிரான்ஸின் அயல்நாட்டுக் கொள்கை.

## உள்நாட்டுப் பிரச்னைகளுடன் தொடர்பு.

(டைம்ஸ் பத்திரிகை).

ஜனவரி 1-ம் தேதியன்று வாஷிங்டனில் பிரெஞ்சு ஸ்தானிகர் நேசதேச உறுதி மொழியில் பிரான்ஸின் சார்பாக கையெழுத்திட்டார். இவ்விதமாக பிரான்ஸ் மகத்தான நேசதேச ஐக்யபத்தியத்தில் ஒரு பூர்ணமான மெம்பராகச் சேர்ந்துவிட்டது.

அது ஒரு பெரிய வல்லரசென்று நேசதேசத்தார்கள் ஏகமனதுடன் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். பிரெஞ்சு மக்கள் உள்நாட்டு ஏற்பாடுகளில் அதிக கவனம் செலுத்தவேண்டியிருந்தாலும், பிரான்ஸின் அந்தஸ்துக்குள்ள பொறுப்பை நன்கு உணர்ந்து விட்டார்கள். பாரிஸ் பத்திரிகைகளின் பிரசுரங்களில் பெரும்பாகம் சர்வதேச பிரச்னைகளைப்பற்றி கட்டுரைகளை எழுதிவருகிறது. ஆலோசனை சபையிலும், சர்வதேச பிரச்னைகள் சர்ச்சைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அந்த ஆலோசனை சபை பிரெஞ்சு, ருஷ்ய ஒப்பந்தத்தை வரவேற்றது. மற்ற நேசதேச நிர்வாகங்களுடனும் பிரெஞ்சு நிர்வாகம் அவ்விதமான ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவேண்டுமென்றும் அது வற்புறுத்துகிறது.

பிரெஞ்சு அயல் நாட்டு நடவடிக்கை திறம்பட நடைபெறவேண்டுமானால் அதற்கு பொருளாதார வலிமை வேண்டும். இது விஷயத்தில்தான் உள்நாட்டு பிரச்னைகளுக்கும் அயல் நாட்டு விவகாரங்களுக்குமுள்ள சம்பந்தம் தெளிவாகத் தோன்றுகிறது. இந்த சம்பந்தம் இருக்கவேண்டுமென்றுதான் பிரெஞ்சு எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர்கள் வற்புறுத்தினார்கள். பிரான்ஸில் தேசிய ஒற்றுமை ஏற்படுவதைப் பொருத்தும், பிரான்ஸுக்கு ஏற்பட்ட பொருளாதார அழிவை அது சீர்திருத்தும் வேகத்தைப் பொருத்தும்தான் பிரான்ஸின் அந்தஸ்தை மதிக்கவேண்டும்.

ஆலோசனை சபையில் நடைபெற்ற இரண்டுநாள் விவாதத்தில் இந்த விஷயம் சர்ச்சை செய்யப்பட்டதினால்தான் அது முக்கியத்வமுள்ளதாக இருக்கிறது. நிர்வாகத்தில் பூர்ணமான நம்பிக்கையும் புனருத்தாரண வேலையை அது தீவிரமாகக் கையாளவேண்டும் என்று வற்புறுத்தியும் ஒரு தீர்மானம் சர்ச்சையின் முடிவில் நிறைவேற்றப்பட்டது.

அக்டோபர் மாதத்தைவிட சென்ற மாதத்தில் பிரெஞ்சு இருப்புப்பாதைகள் மூலம் 20 சதவிகிதம் அதிகமான தளவாடங்கள் கொண்டுபோகப்பட்டதும் உள்நாட்டு நதிப்போக்குவரத்துடன் பூர்ணமாகத்திருப்பி அமைக்கப்பட்டதும். முக்கியமான பிரச்னைகளில் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்களென்று வெளிவருகிறது. பிரான்ஸின் தொழிற்சாலைகளுக்கு அவசியமான தாவரப்பொருள்களும் பிரெஞ்சுப்படைகளுக்கு ஆயுதங்களும்தான் தரபோதிய பிரான்ஸின் தேவைகள். விடுதலையடைந்த துறைமுகங்களைத் திருத்தி அமைத்துவிட்டதினால் ஸப்ளைப் பிரச்னையும் லேசாகத் தீர்ந்துவிட்டது.

---

# சேர்க்கை ரப்பர் உற்பத்தி.

## இறக்குமதி நஷ்டத்தை நேசதேசத்தார்கள் ஈடுசெய்கின்றன.

(டெயிலி டெலிகிராப் பத்திரிகையில் கென்னத் வில்லியம்ஸ்).

1941-ம் வருஷமுடிவில் பேர்ல் துறைமுக நடவடிக்கை திடுக்கிடும்படியாக நேரிட்டது. அதன்பின் மலேயாவும், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளும் எதிரி வசமாகின. அவைகள்தான் உலகத்திலுள்ள இயற்கை ரப்பரின் 20-சத விகித ஸப்ளைக்கு மூலாதாரம்.

ரப்பர் இல்லாமல் நேசதேசத்தார்கள் யுத்தத்தில் வெற்றிபெறமுடியாது. நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டதென்பதற்கு, 1938-ம் வருஷத்தில் பிரிடனுக்குவந்த 3,769,000 ஸெண்டாலஸ் ரப்பரில், 3,157,000 ஸெண்டாலஸ், மலேயாவிலிருந்தும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்தும் வந்தது. அமெரிக்காவுக்கும் அசௌகரியமான நிலைமை ஏற்பட்டது.

ராணுவ யந்திரங்களுக்கு எவ்வளவு பெட்ரோல் இருந்தாலும், சக்கரங்களுக்கு ரப்பர் இல்லாமல் உபயோகப்படமாட்டா.

இந்த நெருக்கடியை சமாளிக்க நேசதேச நிர்வாகங்கள் எண்ணெய் உற்பத்தி நிலயங்களை நோக்கினார்கள். இந்தப் பிரச்னையை எவ்விதம் தீர்த்துவிடுவது? சேர்க்கை ரப்பருக்கு முக்யப்பொருளான பூடாடியனை பெட்ரோலிலிருந்து எடுத்துவிட்டால் விமானங்களுக்குறிய பெட்ரோல் குறைந்துவிடும்போல் தோன்றிற்று. அதை மதுசாரத்திலிருந்து எடுத்தால் நேச தேசத்தார்கள் வசமுள்ள இருப்புக்குறைந்துவிடும். நிலக்கரியிலிருந்து எடுத்தால் செலவு மிகவும் அபாரமாக ஏற்படும்.

சேர்க்கை ரப்பரை உற்பத்திசெய்வதில் விவாதம் பலமாக இருந்தது. 1944-ம் வருஷ முடிவிற்குள் 1 மிலியன்டன்கள் ரப்பர் உற்பத்தி செய்யப்படவேண்டுமென்று உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்டபொழுது போட்டி போட்டுவந்த அநேக எண்ணெய் கம்பெனிகளும் தங்களுடைய ஐஸ்வர்யங்களையும், தொழில்முறைகளையும் ஒன்றுகூட்டி அந்த லக்ஷியத்தை அடைய முயன்றார்கள். அவர்கள் திறமையுடன் வேலைசெய்ததினால், 1943-ம் வருஷத்தில் 234,000-டன்களும், 1944-ம் வருஷத்தில் 811,000 டன்களும் உற்பத்தி செய்யப்பட்டன. 1945-ம் வருஷம் மத்தியில் உற்பத்தி, வருஷம் ஒன்றுக்கு 900,000 டன்களுக்கு அதிகரிக்குமென்று தோன்றுகிறது.

---

## இதாலியில் இந்தியப்படையின் தீரம்.

### அர்பினோ நகரசபை அச்சுச் சித்திரப்பதிப்பை பரிசளிக்கிறது.

டெயிலி டெலகிராபின் "லண்டன்—தினசரி நிகழ்ச்சி" என்ற தலையங்கத்தின் கீழ் பீடர் பரோ என்பவர் இதாலியில் அர்பினோ நகரசபை நான்காவது இந்தியப்படைத் தலைவருக்கு வழங்கிய அச்சுச் சித்திரப் பதிப்பை வெளியிட்டிருக்கிறார்.

அவர் எழுதுவதாவது. ராபேலின் பிறந்த இடமான சரித்திரப் புகழ்பெற்ற அர்பினோவை நான்காவது இந்தியப்படை ஆக்கிரமித்தபொழுது முன்னணிப் படைகளுடன்வந்த நேச தேசக் காரியாலய ஆபீஸர்களிடம் அந்த நகரசபையின் மேயர் தனக்கு அபாரமான பீதியிருப்பதாக வெளிப்படுத்தினார். ஜெர்மானியர்கள் அந்த நகரத்தையும் அதன் ஜனங்களையும் பலமாக அழித்திருக்கிறார்கள். ஆனால், மேயருக்கு நேசதேசத்தார்கள் அபயப்பிரதானம் செய்தார்கள்.

ஜெர்மானியர்கள் கெடுதல் செய்திருந்த ஜல சப்ளை அமைப்பை இந்தியத் துருப்புகள் பழுதுபார்த்தவுடன் அர்பினோ ஜனங்களுக்கும், துருப்புகளுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தியரைப் பாராட்டும்முறையில் நகரசபை ஜனப் பிரதிநிதிகள் அச்சுச் சித்திரப்பதிப்பைத் தயார்செய்துகொடுத்தார்கள்.

அதில் பின்வருமாறு செதுக்கப்பட்டிருந்தது. மேஜர் ஜெனரல் A. W. A. ஹோல்ஸ்வர்த், D. S. O., M. C. யின் கீழுள்ள நான்காவது இந்தியப்படைகள் 1944-ம் வருஷம் ஆகஸ்டு 28-ம் தேதியன்று அர்பினோ நகரத்தை விடுவித்த தீரத்திற்காக மேஜர் ஜெனராலுக்கு அர்பினோ நகரவாசிகள் அளித்தது. இந்த டிவிஷன் திறமையுடன் போர்புரிந்து மேன்மையான தியாகத்தைச்செய்தது. மாண்டிகால்வோ, ஆடிடோர், டாவொலெடோ முதலிய வெற்றிகள்மூலம் ஜெர்மன் பீரங்கிகளால் நொருக்கப்படாமல் நமக்கு பத்திரம் ஏற்பட்டது.

இந்த மறு பதிப்பு இங்கிலாந்திலுள்ள ஒரே ஒரு பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. அதை ஒன்பதாவது குர்கா ரைபிள்ஸ் படையின் ஒரு பட்டாளத்தைச்சேர்ந்த காப்டன் கார்டன்பெரி இங்கிலாந்துக்குக் கொண்டுவந்தார். இந்தப் பட்டாளம் அர்பினோவைச் சுற்றி நடந்த கடும் போரில் கலந்துகொண்டது. சென்ற செப்டம்பரில் ஸான்மாரினோவில் தீரத்துடன் போர் புரிந்து உயிர்துறந்தவரின் குடும்பத்தாருக்கு விக்டோரியா கிராஸ் பதக்கம் சமீபத்தில் வழங்கப்பட்டது.



## பர்மாப் போர் வலுவடைகிறது.

### தென்கிழக்கு ஆசியா கமாண்டின் யுத்த தந்திரம் பலனளித்து வருகிறது.

ஒன்பது மாதங்களுக்கு முன் டோக்கியோ ஆடம்பரமாக டில்லிக்குப் போகும் நடவடிக்கை நன்றாக நடைபெற்றுவருகிறதென்று பீத்திக்கொண்டது என்று டெயிலி டெலகிராப் பத்திரிகை எழுதியிருக்கிறது. பர்மாவிலிருந்து வரும் தகவல்களைக் கவனித்தால் டில்லிக்கு வந்த படைகளின் எஞ்சிய துருப்புகள் மாண்டலேக்கு சில மைல்களுக்குள் திரும்பி வந்துவிட்டான என்று தெரியவருகிறது. 14-வது சேனையின் காரியாலயத்தலைவரின் அபிப்பிராயப்படி அவர்கள் அந்த நகரத்தைக் காப்பாற்றுவதென்பது அசாத்தியமான காரியமென்று தோன்றுகிறது.

சென்ற வசந்த காலத்தில் இந்திய எல்லைச்சரகத்துக்கு முன்னேறிய எதிரிப் படைகளை துரத்தியடித்தது ஜப்பானியர்களுக்குப் பெரும் தோல்வியென்று இந்தத் தகவல் ருஜுப் படுத்துகிறது. அந்தத் துணிவுகரமான நடவடிக்கைக்கு எதிரி அனுப்பித்த சிறந்த படைகளின் பெரும் பாகத்தை எதிரி இழந்துவிட்டான். இப்பொழுதுதான் தென்கிழக்கு ஆசியா கமாண்டின் யுத்த தந்திரத்துக்கு சரியான அறுவடை கிடைக்கப்போகிறது.

கடல் மூலமாகவும், தரை மூலமாகவும் படைகளை இறக்காமல் தரை மூலமாக மட்டும் பர்மாவைத் திருப்பிப் பிடிப்பது தப்பிதமானதென்று அநேக உற்று நோக்காளர்கள் எண்ணியிருந்தார்கள். ஆகிலும் மற்ற போர் முனைகளுக்கு சப்பற்படையும் படைகளைப் இறக்கும் படகுகளும் தேவையாக இருந்தால் போர் முனையிலிருந்தவர்களுக்குத் தரை மார்க்கமாகத்தான் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று தோன்றிற்று. அந்த திட்டத்தின் பிரகாரம் வெகு தூரம் படைகள் முன்னேறிவிட்டன.

இந்த ராணுவ அற்புதச்செய்கைக்கு படைகளின் போர் வீரம் ஒரு புறமிருந்தாலும் விமானப் போக்குவரத்து உதவிதான் அதிக சாதகமாக இருந்தது. ஜப்பானியர் முன்னேறித் தாக்கியபொழுது சுற்றி வளைக்கப்பட்டிருந்த நமது படைகளுக்கு விமான மூலம் ஸப்ளைகள் வழங்கப்பட்டதினால்தான் அவைகள் சமாளித்து நின்றன. விமான மூலம்தான் படைகள் தூரதேசங்களுக்குக் கொண்டுபோகப்பட்டன. படைகளும் குவிக்கப்பட்டன. ஹிமாலய பர்வதம் வழியாக சைனாவுக்குக் கொண்டுபோகப்பட்ட ஸப்ளைகளைத் தவிர 1944-ம் வருஷம் மே மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரையில் விமானங்கள் மூலமாக 70,000 டன்கள் எடையுள்ள சர்பராக்களும், 93,000 துருப்புக்களும் சென்றிருக்கின்றன. யுத்தத்தைப்பற்றி சரித்திரம் எழுதப்படும்பொழுது இந்த வெகு தூரத்திலுள்ள கஷ்ட சாத்தியமான போர் முனையிலும் சிறந்த திட்டப்படி போர் நடைபெற்றதென்று தான் வரையப்படும்.

இப்பொழுது நேசதேசத்தாரின் தாக்குதல் வலுவடைந்து வருகிறது. இந்தப் போர் அநேக பகுதிகளில் நடைபெறுகிறது. ஒன்று சின்ட்வின் நதிப் பள்ளத்தாக்கிலிருந்து முன்னேறி மாண்டலேயிலிருந்து 20 மைலிலும் இருப்புப்பாதை முடியும் இமானயேசுவைப் பிடித்துவிட்டது. இந்தப் படைகள் ஏராளமாக நெல் விளையும் சமவெளிகளுள்ள ஸ்வீபோவுக்கு நீர்ப்பாசான வசதியளிக்கும் ஒரு முக்கியமான அணையை உடைபடாமல் பிடித்து விட்டார்கள்.

இரண்டாவது படை மிட்கினா போர்முனையிலிருந்து வரும் முக்கியமான இருப்புப் பாதை வழியாக முன்னேறி மாண்டலேயிக்கு 110 மைல்களுக்குள் வந்துவிட்டது. இராவதி நதிப் பள்ளத்தாக்கை மற்றொரு படை சுத்தி செய்து வருகிறது. அதற்குக் கிழக்கில் பழைய பர்மா ரஸ்தாவை நோக்கிச் செல்லும் மூன்றாவது படை பாமோவுக்குத் தெற்குக்கு வந்துவிட்டது. கடைசியாக அரக்கான் கடற்கரை மாகாணத்தில் மற்றொரு படை 1943-ம் வருஷத்தில் நமக்கு ஏற்பட்ட பிற்போக்கைச் சரிப்படுத்திவருகிறது.

இதற்கும் இரண்டரை வருஷங்களுக்குமுன் ஸர் ஹாரோல்ட் அலெக்ஸாண்டர் பர்மாவைத் தற்காப்பு செய்து வந்தவர்களில் மிஞ்சின துருப்புக்களை அஸ்ஸாமுக்குள் அழைத்துச் சென்றதற்கும் என்ன வித்தியாசம் பாருங்கள். "இந்த நடவடிக்கை உலகத்தின் கவனத்தை இழுத்துவிடும். இந்த வெற்றி யுத்தப் போக்கை பலமாக பாதிக்கும். யுத்தத்தின் முடிவையே ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தும்" என்று இம்பாலை நோக்கி முன்னேறியப் படைகளின் ஜப்பானியத் தலைவர் சென்ற மார்ச்சு மாதத்தில் சொன்னார். அதே வார்த்தைகளை லூயி மௌண்ட் பேடன் பிரபு தென் கிழக்கு ஆசியா கமாண்டிலுள்ள படைகளுக்குச் சொல்லக்கூடும். இதுதான் காலத்தின் மாறுதல்.

# யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

## *18.—"அமைப்பும் திட்டமும்."*

**சொற்பொழிவாளர்கள் :—மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் (தலைவர்).**
**ஸர் தியோடர் கிரிகரி.**
**ஸர் கிங்க்ஸ்லி மார்டின்.**

(1944-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 4-ம் தேதியன்று தூரக்கிழக்கு நாடுகளுக்குச் செய்யும் பி. பி. ஸி. ஒலிபரப்புப் பிரசங்கம்).

**ஸ்டீட் :** இன்று நாம் எதிர்காலத்தில் உலகத்திற்கும் அதன் உட்பிரிவுகளுக்கும் உரிய திட்டத்தையும் அமைப்பையும் பற்றிப் பேசுவோம். இதுவரையில் நாம் காணும் திட்டங்களெல்லாம் ஸமஸ்தானங்களின் திட்டங்களாக இருக்கின்றன. ஒவ்வொருவரும் அவர்களுக்குத் தோன்றியவைகளுக்கெல்லாம் திட்டங்களை வகுத்து வருகிறார்கள். கிங்க்ஸ்லி மார்டின், திட்டம் போடுவதை நீங்கள் ஆதரிக்கிறவர்களல்லவா. அதைப்பற்றி நீங்கள் சில விபரங்களைச் சொல்லுங்கள்.

**கிங்க்ஸ்லி மார்டின் :** 1932-ம் வருஷத்தில் ஒரு நாள் உலகத்திலேயே மிகப் பெரிய அணையான நீபர் அணையின் பேரில் நான் நின்றது எனக்கு ஞாபகம் வருகிறது. எனக்கு விஷயங்களைக் காண்பித்து வந்த ருஷ்ய நிபுணரிடம் "இது மிகவும் சிலாக்கியமாக இருக்கிறது. இதன் உபயோகம் என்ன" என்று கேட்டேன். "இது 1 மிலியன் ஜனங்களுக்கு மின்சார சக்தியைக் கொடுக்கும்" என்று அவர் பதிலுரைத்தார். "1 மிலியன் ஜனங்கள் எங்கிருக்கிறார்கள்" என்று நான் கேட்டேன். "அவர்கள் இப்பொழுது இங்கில்லை. ஆனால் மின்சாரத்தை உற்பத்தி செய்தவுடன் அவர்கள் இங்கு வந்து விடுவார்கள்." இது ஒரு உதாரணம். இந்த விஷயத்தைப்பற்றிப் பேசும்போழுது தனிப்பட்டவர் இதற்கு அவசியமில்லையென்று சொல்லக்கூடும். ஆகிலும் ருஷ்யாவில் நிர்வாகம் அணையைக்கட்டி அவசியத்தை உண்டுபண்ணிற்று.

அடுத்தபடியாக அமெரிக்காவிலுள்ள டென்னஸி பள்ளத்தாக்கு அதிகார திட்டத்தைக் கவனிப்போம். இதுவும் ருஷ்யாவின் திட்டத்தைப் போன்றது. ஆகிலும் அது ஜனநாயகமுள்ள ஒரு நாட்டில் ஏற்பாடு செய்யப்படவேண்டியிருந்ததால் சிக்கலான முறையில் நிறைவேற்றப்பட்டது. கிரிகரி, இங்கு இரண்டு விதமான சமூகத்துக்கு உரிய இரண்டு வித திட்டங்களிருக்கின்றன.

**கிரிகரி :** சரி, முதல்முதலாக முதலாளிகள் தங்களுக்கு லாபகரமாக இல்லாத முயற்சிகளில் பொருளை முதலீடு செய்வதில்லை என்று கிங்க்ஸ்லி மார்டின் சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ளமுடியாது.

**கிங்க்ஸ்லி மார்டின் :** அவ்விதம் நேரிடுமென்பதைக் கூடவா?

**கிரிகரி :** அதையும்தான். அமெரிக்க இருப்புப் பாதைகள் கண்டத்தின் குறுக்கே 60 அல்லது 70 வருடங்களுக்கு முன்தான் அமைக்கப்பட்டனவென்பதை தங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்.

**ஸ்டீட் :** அதற்கு பெரும்பாலும் பிரிடிஷ் பொருள்தான் செலவிடப்பட்டது.

**கிரிகரி :** அது உண்மைதான். ஆனால் ஒரு வித்தியாசம். இருப்புப் பாதையை அமைக்க ஒத்துக்கொண்டபொழுது இருப்புப்பாதையை ஒட்டி ஜனங்கள் வசிக்கக்கூடுமென்றும் காலக்கிரமத்தில் பொதுஜன நன்மையும் ஏற்படுமென்றும் அவர்கள் உணர்ந்து விட்டார்கள்.

திட்டம் நிறுவுவது சம்பந்தப்பட்டமட்டில், லக்ஷியத்தைப் பற்றி ஒற்றுமையிருக்கும் பொழுது திட்டம் போடுவது விரும்பத் தக்கது, சாத்தியமானது. நெடும் போக்கான திட்டத்தில் லக்ஷியத்தைப் பற்றி ஒன்றுபட்ட அபிப்பிராயம் ஏற்படுவதில்லை. திட்டம் அநேகம் காலம் நீடிக்கக்கூடியதாக இருந்தாலும் அல்லது லக்ஷியங்கள் மிகுதியாக இருந்தாலும் அந்த திட்டத்தில் ஒற்றுமை ஏற்படுவது மிகவும் சிரமசாத்யமானதாக இருக்கும். அதன் பிறகு அதை நிர்வகிப்பதற்கு யோக்கியதையுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் அவர்களின் முறைகளை அறிவதிலும் சிரமமேற்படுகிறது. மனிதர்களின் சுதந்திரத்துக்கு ஹானியின்றியில் திட்டத்தை எவ்விதம் வகுப்பதென்பதுதான் என்னுடைய யோசனை. பொதுஜன சுகாதாரம் போன்ற இதர நடவடிக்கைகளில்



அபிவிருத்தியில் மனிதர்களின் சுதந்திரம் விரும்பத்தகாத முறையில் பாதிக்கப்படுகிறதென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். ஆகிலும் வாழ்க்கையின் ஆத்மீய குணங்களை பற்றிய லக்ஷியங்களுள்ள திட்டத்தை வகுப்பதில்தான் எனக்கு அதிக சங்கடம் ஏற்படுகிறது.

**கிங்க்ஸ்லி மார்டின் :** நான் பொருளாதார அபிவிருத்திக்குரிய லக்ஷியங்களைப் பற்றித்தான் நினைத்திருந்தேன். ஆத்மீய குணங்களைப் பற்றிய திட்டங்களில் அதிக சிரமங்களிருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அது வேறு விஷயம். யுத்த அவசியத்தைத் தவிர பாக்கி மகத்தான சாகச காரியங்களில் முதலாளிகள் இறங்கப் பிரியப்படுவதில்லை. என்னைவிட கிரிகரிக்கு இந்த விஷயம் அதிகமாகத் தெரியவரும். ஆனால் தனிப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத விஷயங்களைப்பற்றி நாம் பேசிவருகிறோம். பொதுஜன சுகாதாரத்தை எடுத்துக்கொள்ளுவோம். சாதாரண இந்தியரின் விலா எலும்புகள் தோலுக்குமேல் காணப்படுகின்றன என்று கேள்விப்படுகிறேன். ஆங்கிலேயர் என்ற முறையில் எனக்கு இந்தியாவில் பொறுப்புண்டு. அங்கு முதலாளிகள் தேவைக்குத் தக்கபடி வாழ்க்கை முறையை உயர்த்தி விடுவார்களென்று நாம் நினைக்கமுடியாது.

**கிரிகரி :** நவீன நாகரீகத்தின் அபாரமான ஐச்வர்யங்களைக் கொண்டு, உடன் காலத்தில் லாபம் வராவிட்டாலும், மகத்தான முறையில் துணிவுகரமான முயற்சிகளிலுள்ள அபாயத்தையும் பொருட்படுத்தாமல் பொருளை முதலீடு செய்யமாட்டார்களென்று நான் நினைக்கவில்லை. இப்பொழுது நிர்வாகங்கள் வரும் லாபத்தின் பெரும் பாகத்தை எடுத்துக்கொண்டுவிடுவதினால் பணத்தை முதலீடு செய்வதில் உண்மையான அபாயம் இருக்கிறது. லாபம் வரும் என்பதும் சந்தேகாஸ்பதமாக இருக்கிறது. முதலீடு செய்யும் பொருளுக்குக் கிடைக்கும் லாபத்தை வரையறுப்பது நல்ல முறைதான். ஆகிலும் அவ்விதம் வரையறுத்துவிட்டால் முதலாளிகள் பொருளை முதலீடு செய்யக்கூடிய சௌகரியமான நிலைமை ஏற்படாது. இதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில், இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு முதன் முதலாக மின்சார உற்பத்தி விஸ்தரிப்பு அவசியமென்று எல்லாக் கக்ஷிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தை தனிப்பட்டவர்களா, அல்லது நிர்வாகமா கையாளுவதென்று இன்னும் முடிவு ஏற்படவில்லை. எவராக இருந்தாலும் யந்திர சாதனங்களும் கைத்தொழில் நிபுணர்களும் அவசியமாகும்.

**கிங்க்ஸ்லி மார்டின் :** நாம் சர்வதேசத்துக்குறியதாக ஒரு திட்டத்தைக் கையாளும் பொழுது அதற்கு திட்டம் அவசியமில்லையா?

**கிரிகரி :** ஆம், தனிப்பட்ட கம்பெனியாக இருந்தாலும் சரி, அரசாங்கமாக இருந்தாலும் சரி திட்டமில்லாமல் யந்திர சாதனங்களையும், மின்சார அமைப்புகளையும் ஏற்பாடு செய்ய முடியாது. இதை திட்டம் என்று சொல்லாமல் அவயவ அமைப்பு என்று நான் சொல்லுவேன்.

**கிங்க்ஸ்லி மார்டின் :** சரி. நானும் இதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

**ஸ்டீட் :** திட்டம் என்பதைவிட அவயவ அமைப்பு என்பது நல்ல பதம். ஏனென்றால் திட்டம் என்பது குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி, அவயவ அமைப்பு என்பது நடை முறையில் விருத்தியடைந்து கொண்டுவரும்.

**கிங்க்ஸ்லி மார்டின் :** முதலாளிகள் திட்டம் வகுப்பதிலோ அல்லது அமைப்புகளிலோ பொருள் முதலீடு செய்வதற்குத் தயங்குகிறார்களென்பதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன என்று கிரிகரி சொல்லுவது உண்மைதான். நிர்வாகம் ஏன் குறுக்கிட்டதென்றால் தனிப்பட்ட முதலாளித் தத்துவத்தினால் ஏழ்மைத்தனமும் வேலையில்லாத் திண்டாட்டமும் உலகில் காணப்படுகின்றன. நம்மிடமுள்ள ஐச்வர்யங்களை பொதுஜன நன்மைக்கு உபயோகப்படுத்தவேண்டியிருப்பதினால் திட்டம் போடுவதற்கு இப்பொழுது அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு நாட்டில் அநேகர்கள் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தும் சிலர்கள் ஏராளமாகப் பொருளைச் சம்பாதித்துக்கொண்டிருந்தால் அப்பொழுது நிர்வாகம் குறுக்கிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது.

**கிரிகரி :** வேலையின்மையைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் யாதெனில் சென்ற இருபது வருஷங்களில் அதிக வரிகள் மூலம் லாபங்கள் அதிகமாகக் குறைந்துவிட்டன. மேலும்

ஜனங்கள் முற்றிலும் புதிய சாமான்கள் தேவை என்கிறார்கள். கைத்தொழில் அமைப்பிலும் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு காரணங்களினால் முதலாளிகள் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது.

கிங்க்ஸ்லி மார்டின்: பொது மக்களின் தேவை என்ன, அதை எவ்விதம் வழங்குவது என்ற கட்டம் இப்பொழுது உலகில் ஏற்பட்டுவிட்டது.

கிரிகரி: ஒருவர் ஒரு புதிய சாமானை உற்பத்தி செய்து அதன் மூலம் தேவை ஏற்பட்டால் ஒழிய ஜனங்களில் தேவையென்னவென்று ஒருவரும் அறியமுடியாது.

கிங்க்ஸ்லி மார்டின்: கிரிகரி, ஆகிலும் நாம் சில தேவைகளை அறிவோம்.

கிரிகரி: ஆரம்பக் கல்வியின், விஸ்தாரமும், வாழ்க்கை முறையில் உயர்வும் ஐம்பது வருஷங்களுக்கு முன் கண்டிராத அநேக தேவைகளை உண்டுபண்ணிவிட்டன. தற்போதிய தேவைகளைத் தேடிக்கொண்டால் எதிர் காலத்திய தேவைகளை நாம் அலக்ஷியம் செய்ததாகும். பரீக்ஷை செய்யும் ஆர்வமும் அதன் மூலம் அழிந்துவிடும்.

ஸ்டீட்: நீங்கள் இருவரும் பிரிடன், பிரான்ஸ், போருக்கு முன்னிருந்த ஜெர்மனியைப்பற்றிப் பேசுகிறீர்களென்று நினைக்கிறேன். அமைப்பைப்பற்றிப் பேசும்பொழுது இந்தியா, சைனா, ஆபிரிக்கா போன்ற நாடுகளையும் நாம் கவனிக்கவேண்டும்.

கிங்க்ஸ்லி மார்டின்: உலகம் பூராவிலும் உள்ள ஆரம்ப உற்பத்தியாளரைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஸ்டீட்: இந்தியாவில் தொழிலாளர்களின் திட்டமான ராய்திட்டமும் முதலாளிகள் திட்டமான பம்பாய் திட்டமும் இப்பொழுது காணப்படுகின்றன. இருதிட்டங்களும் 15 வருஷங்களுக்குள் இந்தியாவின் வாழ்க்கை முறையை உயர்த்திவிடுவோம் என்று சொல்லுகின்றன. ஒன்று வாழ்க்கை முறை மூன்று மடங்கும் மற்றொரு நான்கு மடங்கும் உயர்ந்துவிடுமென்றும் பாத்தியம் கொண்டாடுகின்றன. ஒவ்வொரு திட்டத்துக்கும் ஏராளமான பொருள்வேண்டும். இரண்டும் செலவைப்பற்றிக் கவலைப்படவில்லை.

கிங்க்ஸ்லி மார்டின்: அவர்கள் பொருளைச் சேமித்துவிடுவார்கள்.

கிரிகரி: அவர்கள் அவ்விதம்தான் எண்ணம்கொண்டிருக்கிறார்கள்.

ஸ்டீட்: ஜனங்களுக்குச் செலவுசெய்வதற்கு அதிகப்பொருள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தால் உற்பத்தியாகும் பொருள்களை விற்கக்கூடிய மார்கெட்டுகளையும் நாம் ஸ்தாபித்துவிடலாம்.

கிரிகரி: நான் இதைப்பற்றி விரிவாகப் பேசக்கூடும். ராய்திட்டமும், பம்பாய் திட்டமும் அதில் ஏற்படக்கூடிய பெரும் செலவைக்குறைத்து மதித்திருக்கிறார்கள். உதாரணமாக பம்பாய் திட்டத்தில் ஒவ்வொரு வருஷமும் சுகாதார விஸிட்டர்கள், டாக்டர்கள், பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளத்தைக்கணக்கிடவில்லை. அதுபோல ராயின் திட்டமும் சரியான திட்டத்தை நிறுவவில்லை என்று நினைக்கிறேன். ஆனால், என்னுடைய வாதம் அதுவல்ல. பொருளைத் தாங்களே திறட்டிவிடுவோம் என்ற வாதங்களில் பொருளாதாரமுறையில் நியதிவாதம் காணப்படுகிறதனால் எனக்கு சந்தேகமுண்டாகிறது. நான் 1000 மிலியன் பவுண்டுகளைச் சேமித்து அதை ஒரு தோட்டத்தில் குழிகளைத்தோண்டி அவைகளை மூடும்வேலையில் உபயோகித்தால், அதன் மூலமாகத்தான் தேசத்தின் வருமானத்தை அதிகரித்ததாகும். ஆகையால் பிரச்னை பின்வருமாறு:—இவ்விதமாக அபிவிருத்தி செய்யும்முறை தானாகவே பரிபாலிக்கும் சக்தியும் தொடர்ச்சியாக நடைபெறும் சக்தியும் பெற்றிருக்கிறதாவென்று பத்து வருஷங்களில் நடைபெற்ற சம்பவங்களிலிருந்து எனக்கு அவ்விதமான அபிப்பிராயம் தோன்றவில்லை. உதாரணமாக, இந்தியாவிலுள்ளவர்கள் மின்சார உற்பத்தியந்திரங்களிலும், யந்திர ஆலைகளிலும், எஃகு உற்பத்திசாலைகளிலும் பொருளைச் செலவிடுகிறார்களென்று வைத்துக்கொள்ளுவோம். ஆகிலும் இது தொடர்ச்சியாக நடைபெறும் என்பதற்கு யாதொரு முகாந்திரமும் காணப்படவில்லை. மூலதனப்பொருள்கள் அமைக்கப்படும்பொழுது தேசீய வருமானம் அபிவிருத்தியடைகிறது. ஆகிலும் ருஷ்யாவன்னியில் இது தொடர்ச்சியாக நடைபெறும் என்று நாம் எண்ணலாமா? அவ்விதம் முடிவுக்குவர ஒரு ருஜுவும் கிடைக்கவில்லை.



ஸ்டீட்: இந்தியாவிலிருந்துவரும் ரிபோர்ட்டுகளிலிருந்து பொருள் அகப்படுமென்றும் பொருள் திறட்டவேண்டுமென்றும் சொல்லுவதாகத் தெரியவருகிறது.

கிரிகரி: அதை சிருஷ்டனை செய்யப்பட்ட பொருள் என்று சொல்லுகிறார்கள்.

ஸ்டீட்: ருஷ்ய திட்டம் வெற்றிகரமாக முடிவுபெற்றதற்கு, மிகவும் குறைவான வாழ்க்கை முறையுள்ள ஜனங்கள் ஒருபுறமும் ஒருவரும் புறக்கணிக்கமுடியாத உத்திரவுகளைப் பிறப்பிக்கக்கூடிய மிகவும் வலுவான ராஜீய பொருளாதார அதிகாரவர்க்கத்தார் மற்றொருபுறமும் இருந்தார்கள். அவசியமான ஐச்வர்யங்களுடனும் திட்டங்களை அமுல் நடத்தக்கூடியதுமான நிர்வாகம் வேறு எந்த தேசத்திலிருக்கிறது?

கிரிகரி: விக்டோரியா மகாராணி நாளில் காணப்பட்ட பொருளாதார நம்பிக்கையை இப்பொழுது திட்டம் வகுத்திருப்பவர்கள் மேற்கொண்டிருக்கும் எண்ணங்களைப் போலவேதான் அடிப்படையைக்கொண்டிருந்தன. ஆனால், நவீன பொருளாதாரவாதிகள் வியாபாரச் சுழலில் பலனைக்கண்டு மயங்கி நிற்கிறார்கள். திட்டங்களைமட்டும் நிறுவி 10,000 கோடி ரூபாய்களை செலவிடப்போகிறோம் என்று சொன்னால் 15 வருஷத்தில் அந்த திட்டம் பூர்த்தியாகிவிடுமென்று உத்தரவாதம் ஏற்படுமென்று நான் நம்பவில்லை. அத்துடன் இன்னும் அநேக நடவடிக்கைகளும் கையாளப்படவேண்டும்.

கிங்க்ஸ்லி மார்டின்: குழிகளைத் தோண்டுவதென்றும், மின்சார உற்பத்தி நிலயங்களை அமைப்பதென்றும் கிரிகரி பேசினார். ஆனால் இரண்டிற்கும் வித்யாசமுண்டு. மின்சார சத்திநிலயத்துக்கு சாச்வதமான உபயோகமுண்டு. அதிலிருந்து அபிவிருத்தி ஏற்படலாம். குழி தோண்டுவதிலிருந்து அவ்வித பிரயோஜனம் ஏற்படாது. மூலதனத்தை ஏற்படுத்தும் முறை தொடர்ச்சியாக நடைபெறாதென்று நீங்கள் நினைக்கலாம். இது வெகுகாலம் நீடித்து நடைபெறும். சீனக்கூலியினுடையவும் இந்திய விவசாயினுடையவும் வாழ்க்கை முறை திருப்திகரமாக ஆரம்பமாகும் என்று எண்ணுவதற்கு அநேக வருஷங்களாகும்.

கிரிகரி: இது உண்மை தான். இந்தியாவின் வாழ்க்கை முறை மேற்கு நாடுகளின் அளவுக்கு உயரவேண்டுமானால் முதலாளிகள் முயற்சி செய்தாலும் அல்லது நிர்வாகம் முயற்சி செய்தாலும் சரி, 100 வருஷங்கள் இடைவிடாத முயற்சி செய்யப்படவேண்டும்.

கிங்க்ஸ்லி மார்டின்: சரி, இரண்டாவதாக நீங்கள் சுதந்திர பிரச்னையைக் கிளப்பினீர்கள். டென்னஸி பள்ளத்தாக்கு அதிகாரிகள் திட்டம் ஜனநாயக ஜன சமூகங்களுக்கு அன்வயிக்குமென்று நான் சந்தோஷப்படுகிறேன். அதன் விளைவாக சுதந்திரம் அதிகரித்திருக்கிறது. சிலர் சுயநலத்துக்காக லாபம் சம்பாதித்துக்கொள்ள முடியாமல் சுதந்திரத்தை இழந்து இருக்கலாம். ஏனென்றால் சில துறைகளில் அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். ஆனால் அந்நாட்டிலுள்ள 100 ஜனங்களில் 99 பேர்களின் வாழ்க்கைமுறை அபிவிருத்தியடைந்திருக்கும். மேலும் ஒவ்வொரு சட்டமும், சமூக அபிவிருத்திகளும், மற்றவர்களின் தேவைகளிலிருந்து தனிப்பட்டவர்களின் சௌகரியமடையும் உரிமையைக் கட்டுப்படுத்தக்கூடிய அம்சங்களுள்ளவைதான்.

ஸ்டீட்: ஆகையால் நிர்வாகத்தின் தூண்டுதலினால் மாத்திரம் நாம் உத்தேசிக்கும் மகத்தான திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிவிடமுடியாது. முதலாளிகள் கோஷ்டியுடனும் நாம் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் முதலாளிகளை பொதுஜன சேவையில் ஈடுபடும்படி கொஞ்சம் கொஞ்சமாக கல்வியும் பயிற்சியும் அளிக்கப்படவேண்டும். ஆகிலும் லாபம் சம்பாதிக்கும் எண்ணத்திற்கும் பொதுஜன வாழ்க்கை முறையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற எண்ணத்திற்கும் ஒற்றுமை ஏற்படக்கூடாத அதிக வித்தியாசங்கள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

கிரிகரி: பொதுஜன ஊழியர்களைவிட முதலாளிகள் குறைவான புத்தி விசாலமும் பொதுஜன நலமும் படைத்தவர்களென்று சொல்லமுடியாது. எதிர்காலத்திய சக்திகளையும் நாம் பயன்படுத்தவேண்டுமானால் பொதுஜன சேவைக் கொள்கையிலீடுபட்ட எந்த சமூகமும் துணிவுகரமான நடவடிக்கையை மேற்கொள்ளாதென்று எனக்குத் தோன்றுகிறது. பொதுஜன சேவகர் முதன்முதலில் அவனுடைய பத்திரத்தைக் கோருவான். மேலும் பிரதிநிதி சபையில் பிரச்னம் பண்ணுவார்கள் என்ற பீதியிருக்கும்பொழுது அவர்கள் விசேஷமாக சுயநலம் கருதுவார்கள். ஆகிலும் முதலாளிகள் எவ்வித அபாயங்களையும் சமாளிக்கத் தயாராக இருப்பார்கள். அவர்கள் நஷ்டங்களையும் பொருத்துக்கொள்ளுவார்கள்.

**கிங்க்ஸ்லி மார்டின்:** நானும் அதிகாரிகளுடையவும் தனிப்பட்டவர்களுடையவும் தாராதரங்களைப் பற்றி விவாதிக்கக்கூடும். நீர் ஒரு முதலாளியாக இருந்து நீர் திருப்தி செய்யக்கூடிய பங்காளிகளுமிருந்தால் உன்னுடைய நடவடிக்கையிலிருந்து பொருளாதார லாபங்கள் கிடைக்கவேண்டும். தேசத்தின் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையிலிருந்து ஒரு பொருளாதார லாபமும் கிடைக்காததால் அந்த வேலையை நிர்வாகம்தான் மேற்கொள்ளவேண்டும்.

**கிரிகரி:** நகர பரிபாலன அதிகாரிகள் பொதுஜன சுகாதாரத்தில் பொருளைச் செலவிட ஆக்ஷேபிக்கிறார்கள். ஏனென்றால் வரிவிகிதம் அதிகரிக்குமென்று அவர்கள் பயப்படுகிறார்கள்.

**கிங்க்ஸ்லி மார்டின்:** ஜனங்கள் அதிக சேவை தேவையென்று சொன்னதின் காரணமாக பொதுஜன அதிகாரிகள் இணங்கியதும் உண்டு.

**கிரிகரி:** பெரிய தொழிற் ஸ்தாபன முதலாளிகளும் "நாங்கள் மகத்தான திட்டங்களைக் கையாளப்போகிறோம். ஆகையால் பங்குதாரர்களுக்கு லாப்பிரிவினை குறைந்துவிடும்" என்று பங்குதாரர்களுக்குச் சொல்லியுமிருக்கிறார்கள். ஆகையால் பொதுஜன சேவகர்களுக்கும் முதலாளிகளுக்கும் அதிகமான வித்யாசங்களைக் கண்டுபிடிக்கமுடியாது. ஆகையால் அவை இரண்டும் தலைமைவகிக்கும் அதிகாரியின் தரத்தைப் பொருத்திருக்கிறது.

**கிங்க்ஸ்லி மார்டின்:** இந்திய விவசாயியின் வாழ்க்கை முறையை எவ்விதம் உயர்த்துவதென்று நான் கேட்கிறேன். 100 வருடங்களாக முதலாளிகள் விவசாயியின் வாழ்க்கை முறையை அபிவிருத்திசெய்ய கவனம் செலுத்தவில்லை. இதைச் சாதிப்பதற்கு விரிவான மகத்தான திட்டத்தை நிறுவுவதைவிட வேறுவழியில்லை.

**கிரிகரி:** எதைப்பற்றி திட்டம். இந்திய விவசாயியின் வாழ்கை முறையை எவ்வகையில் உயர்த்துவதென்று? இந்தியாவின் பொதுஜன சுகாதாரத்தில் அதிகப் பொருளைச் செலவிட்டால் வாழ்க்கை முறையை அபிவிருத்தி செய்துவிடலாமென்பதை நான் மறுக்கவில்லை. அதன் மூலமாக ஜனத்தொகை மிகுதியாக அதிகரிக்கும். அதன் மூலம் நிலைமை மோசமாகிவிடும். இந்தியாவிலும் உலகம் பூராவிலும் முக்கியமான விவாதம் யாதெனில் ஜன சமூகத்தின் கைத்தொழிலபிவிருத்திற்கு நிர்வாகம் எவ்வளவு உதவி செய்யக்கூடுமென்பதுதான். பலமான மதவித்தியாசங்களும் ஜனங்களின் 90 சதவிகிதம் விவசாயிகளுமாக உள்ள இந்தியா போன்ற ஒரு நாட்டில் இந்திய நிர்வாகம் அவ்வித முயற்சிகளைச் செய்யத் திட்டங்களை வகுக்க சக்திபெற்றிருக்கிறதா?

**கிங்க்ஸ்லி மார்டின்:** கிரிகரி, நீங்களும் ஒத்துக்கொள்ளுகிறீர்களா? வாழ்கை முறையை உயர்த்த தேசீய திட்டம் அவசியமென்று சொன்னேன். நீங்கள் பொதுஜன சுகாதாரத்தைப்பற்றி ஒப்புக்கொள்ளுகிறீர்கள். அதன்பின் நாம் கைத்தொழில்களைப்பற்றிப் பேசுவோம். அமைப்பைப் பூராவாகத் திருத்தியமைக்காமல் கைத்தொழில் அபிவிருத்தியடையாது. இந்திய தொழிற்சாலைகளைப்பற்றிக் குறைகூறுகிறவர்கள் அது இந்தியாவின் ஏழ்மைத்தனத்தை நிவர்த்திக்கவில்லையென்று சொல்லுகிறார்கள். முதலாளிகளுக்கு அதில் அக்கரை இல்லையென்று சொல்லுகிறேன்.

**கிரிகரி:** முதலாளி பொருள்களை ஏன் விற்பனை செய்யக்கூடாது? உற்பத்திப் பொருள்களை தொழிலாளர்கள்தான் செய்து தொழிலுக்கு உதவி செய்கிறார்கள். நான் இப்பொழுது கைத்தொழிலை விட்டுவிட்டு விவசாயத்தைப்பற்றிப் பேசுகிறேன். இந்திய விவசாயத்தைப்பற்றிச் சொல்லும் நிபுணர்கள் தற்பொழுதுள்ள அபிவிருத்தி முறைகளைக் கையாண்டால் உற்பத்தியை மிகுதியாக அதிகரிக்கலாம் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். மேலும் இந்திய ஜன சமூகத்திலுள்ள சில அம்சங்களையும் நாம் கவனிக்கவேண்டும். முக்கியமாக கிருஷி செய்யும் தகுதி. இது சொத்து உரிமைமூலம் வரவர சிறியதாக ஆகி வருகிறது. இந்தியாவில் அநேக காலமாக கூட்டுறவு இயக்கம் இருந்து வந்திருக்கிறது. ஆகிலும் அதன் ஸ்தாபகர்கள் உத்தேசித்த லக்ஷியங்களை அது பூராவாக அடையவில்லை. ஏனெனில் இந்திய ஜன சமூகத்தைப் போல் பிற்போக்கானதும் பழமையானதுமான நாகரீகம் படைத்த ஒரு சமூகத்தின் ஆத்மிக ஜன சமூக பழக்க வழக்கங்களை மாற்றிவிடுவதென்பது ஜனநாயக முறைகளில் சுலபமாகச் செய்யக்கூடியதில்லை.



**ஸ்மிட்:** ஆகையால் கட்டாயப்படுத்த வேண்டுமென்று நான் சொல்லுகிறேன். கிங்க்ஸ்லி மார்டின், இந்தியாவின் வாழ்க்கை முறையை உயர்த்த பலாத்காரத்தை உபயோகிக்கலாமென்று நீங்களும் நினைக்கிறீர்களா?

**கிங்க்ஸ்லி மார்டின்:** கட்டாயப்படுத்துவதென்பது உணர்ச்சி சம்மந்தமான பிரச்னையாகும். ஸ்தாபன அமைப்பிற்கு அது அவசியமென்றால் ஜனங்கள் கட்டாய முறைக்கு ஆக்ஷேபிக்க மாட்டார்கள். கட்டாயப் படை திரட்டை நாம் எடுத்துக்கொள்ளுவோம். இங்கிலாந்தில் நடைபெறும் கட்டாய முறையைக் கவனிப்போம். யுத்தத்துக்கு முன் கட்டாயப் படை திரட்டுவது கொடுங்கோன்மை என்று இங்கிலாந்திலுள்ள சர்வ கக்ஷிகளும் நினைத்தன. ஆகிலும் யுத்தத்துக்காக சமூக அமைப்பை ஏற்படுத்த வேண்டிய அவசரமான பிரச்னை தோன்றியபொழுது எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். அதன் அவசியம் புலப்பட்டபொழுது கட்டாயப் படை திரட்டுதான் சிறந்த வழியென்றும் அவர்கள் கண்டு பிடித்தார்கள். இந்தியாவின் வாழ்க்கை முறையை அதிகரிக்க நான் கட்டாய முறையை ஏற்படுத்துவதென்று யோசனை செய்தால் முதலில் எல்லாவிதமான பிரசார முறைகளையும் கையாண்டு அதன் மூலம் பொது ஜனங்களுக்கு நம்முடைய அபிப்பிராயத்தை வெளிவிட வேண்டும். அவ்விதம் செய்தால் நாட்டில் நம்மை ஆதரிக்க அநேக உத்சாகமுள்ளவர்கள் முன் வருவார்கள். வாலண்டரி சேவை தானாகவே ஆரம்பிக்கும். அப்பொழுது நாம் பயப்பட்டதற்குக் குறைவாகவே கட்டாய முறை கையாளப்படும்.

**கிரிகரி:** நம்முடைய அநேக திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர ஏராளமான சிப்பந்திகள் பயிற்சியளிக்கப்படவேண்டும். உத்சாகமுள்ளவர்களை நாம் அடக்கியாள வேண்டும். இது மிகவும் சிரம சாத்யமான காரியம். மேலும் அவர்கள் உத்தரவுகளை கொடுமையன்னியிலும் பிறரை துன்புறுத்தாமலும் அமுல் நடத்தும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**கிங்க்ஸிலி மார்ட்டின்:** அநேக மகத்தான சிரமங்கள் இருக்கின்றதென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நான் சொன்னதெல்லாம் ஜனங்களின் பெரும்பான்மையோர் ஒப்புக்கொள்ளும் தேசீய திட்டத்தை அமைப்பதினால் சுதந்திரம் அழிக்கப்படுவதில்லை. அபிவிருத்திக்காக தேசீய திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டால் அப்பொழுது இந்தியாவிலுள்ள வாலியமுள்ள உத்சாகிகள் அதற்கு ஆதாவளிப்பார்கள். அவ்வித உத்சாகம் இப்பொழுது ராஜீய விவகாரங்களிலும் சீர்திருத்தத்திற்கு லாயக்கில்லாத லக்ஷியங்களிலும் வீணாகக் கழிக்கப்படுகிறது.

**கிரிகரி:** அதுவும் கட்டாயத்தின் அளவைப் பொருத்திருக்கிறது. அம்மை குத்துவது, ஜனன மரண பதிவு, தெருக்களைச் சுத்தி செய்வது முதலிய விஷயங்களில் கட்டாயத்தை அதிகமாக உபயோகிக்க முடியாது. ஆகிலும் சொத்து சம்மந்தமான சட்ட திட்டங்களையும் மத ஆசாரங்களையும் பாதிக்கும்பொழுது கட்டாயம் மாறுபாடான அம்சத்தை அடைந்துவிடும். ஜன சமூக சேவையை விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லும்போது அவைகளை எவர் கையாண்டாலும் மிகவும் பலமான சிக்கல்கள் உண்டாகுமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**ஸ்மிட்:** நம்முடைய சர்ச்சையை நாம் முடித்துக்கொள்ளுவோம். ஒரு அம்சத்தில் நாம் பிரச்னையின் அடிப்படையைப் பிடித்து விட்டோம். ஆகிலும் திட்டத்தை நிறுவுவதற்கும் அதை அமுல் நடத்துவதற்கும் பொருப்புள்ள அதிகாரியைப்பற்றி நாம் சர்ச்சை செய்யவில்லை. அந்த அதிகாரி பொது ஜன அபிவிருத்தி மனப்பான்மையுள்ள மத்திய நிர்வாகம் (தேசீய அல்லது சர்வ தேசீய) ஆக இருக்க வேண்டும் என்பதுதான் நமது யோசனை. அதற்கு ஆங்காங்குள்ள அதிகாரிகளும் பொது ஜன ஆமோதனமும் ஏற்பட வேண்டும். இந்த அபிப்பிராயம் இன்று சர்ச்சை செய்த விஷயங்களுக்கும் இதற்கு முன் நாம் சர்ச்சை செய்த உணவுப் பொருள், விவசாயம், பொது ஜன ஆரோக்கியம், குடும்பம் கல்வி, கைத்தொழில் அபிவிருத்தி முதலிய திட்டங்களுக்கும் பொருந்தும்.

இத்துடன் இந்த சர்ச்சைகளை முடித்துக் கொள்வோம். சுதந்திர அஸ்திவாரங்களைப் போட்டு பலப்படுத்துமுன் சர்வதேச ராஜீய பிரச்னையைத் தீர்த்து விடுவது அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது.

மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் கல்லூரி, புதுக்கோட்டை டெக்னிகல் டிரெயினிங் செண்டரில் பயிற்சிக்கு காலியாயுள்ள ஸ்தானங்களை காண்பிக்கும் சிட்டை.

| | | | |
|---|---|---|---|
| எலக்டிரிஷியன்கள் | ... | ... | 16 |
| பிட்டர்கள் | ... | ... | 22 |


'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்குமுந்துங்கள்! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம் :—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 232 (6-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 20–1–45 | முனிஸிபல் ஆபீஸ் | ... | மாலை | 6.00 |
| 21–1–45 | கீரனூர் | ... | ,, | 7.00 |
| ,, | நாஞ்சூர் | ... | ,, | 7.30 |
| 22–1–45 | குடுமியாமலை | ... | ,, | 7.00 |
| ,, | பரம்பூர் | ... | ,, | 7.30 |
| 23–1–45 | பெருங்களூர் | ... | ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... | ,, | 7.30 |
| 24–1–45 | அரிமளம் | ... | மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... | ,, | 7.30 |
| 25–1–45 | உடையாளிப்பட்டி | ... | ,, | 7.00 |
| ,, | கிள்ளுகோட்டை | ... | ,, | 7.30 |
| 26–1–45 | பொ. புதுப்பட்டி | ... | ,, | 7.00 |
| ,, | வேந்தம்பட்டி | ... | ,, | 7.30 |

பிரஸங்கம் 233. (1-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 27–1–45 | முனிஸிபல் ஆபீஸ் | ... | மாலை | 6.00 |
| 28–1–45 | பூவரசகுடி | ... | ,, | 7.00 |
| ,, | வேங்கடக்குளம் | ... | ,, | 7.30 |
| 29–1–45 | மலைக்குடிப்பட்டி | ... | ,, | 7.00 |
| ,, | கோனபட்டு | ... | ,, | 7.30 |
| 30–1–45 | குழிபிறை | ... | ,, | 7.00 |
| ,, | செவலூர் | ... | ,, | 7.30 |
| 31–1–45 | பனையப்பட்டி | ... | மாலை | 7.00 |
| ,, | ராங்கியம் | ... | ,, | 7.30 |
| 1–2–45 | அண்டக்குளம் | ... | ,, | 7.00 |
| ,, | கிள்ளனூர் | ... | ,, | 7.30 |
| 2–2–45 | கொடும்பாளூர் | ... | ,, | 7.00 |
| ,, | விராலூர் | ... | ,, | 7.30 |

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 20—1—45 | திருமெய்யம். |
| 21—1—45 | தீத்தான்விடுதி. |
| 23—1—45 | வடகாடு. |
| 25—1—45 | ஆலங்குடி. |
| 26—1—45 | புதுக்கோட்டை. |
| 27—1—45 | பொன்னமராவதி. |
| 28—1—45 | மருதன்கோன்விடுதி. |
| 30—1—45 | ராமச்சந்திரபுரம். |
| 1—2—45 | குழிபிறை. |
| 2—2—45 | புதுக்கோட்டை. |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—21-1-45.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் ஜனவரிமீ 27உ [நெ. 233


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXXXIII.

## புதுக்கோட்டை ஈ-தர்பார் அவர்களின் யுத்த முயற்சி.

1. யுத்த அறிக்கை நிலயம் (இப்பொழுது தேசீய யுத்த முன்னணி நிலயம்).—1940-ம் வருஷத்தில் இந்த இலாகா அமைக்கப்பட்டது. அதற்கு காப்டன் G. T. B. ஹார்வி தலைவராகவும் ராவ் ஸாஹேப் (இப்பொழுது ராவ் பஹதூர்) N. தியாகராஜய்யரவர்கள் உதவித் தலைவராகவுமிருந்தார்கள். 10—2—42-க்குப் பின் அதற்கு ஜனாப் கான் பஹதூர் P. கலிபுல்லா தலைவராகவும் ராவ் பஹதூர் ஸாஹேப் பஹதூர், உதவி நிர்வாகி (இப்பொழுது முதல் நிர்வாகி) தலைவராகவும் ராவ் பஹதூர் N. தியாகராஜ அய்யர் காரியதரிசியாகவும் இருந்து நடைபெற்று வருகிறது. பொதுஜன சேவையில் ஊக்கமுள்ள அநேக கௌரவ மெம்பர்கள் அதில் சேவை செய்து வருகிறார்கள்.

அதன் முக்கியமான நடவடிக்கையாக தலைநகரில் ஒரு பரிஷ்காரமாக அமைக்கப்பட்ட ஆபீஸும் வாசகசாலையுமிருக்கின்றன. வாசகசாலையை அநேக பிரமுகர்கள் பார்வையிட்டு சிலாகித்துப் பேசியிருக்கிறார்கள். ஸமஸ்தானத்தில் சுற்றுப்புற கிராமங்களிலும் வார சஞ்சிகை மூலமும், பிரசங்கங்கள் மூலமும், உள்நாட்டு, போர்முனையைப் பற்றிய தகவல்களை வெளியிடும் இலவச சினிமாப் படங்கள் மூலமும் உலக விஷயங்கள் சம்பந்தமான நடைமுறை தகவல்கள் பரவச்செய்வதிலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த இலாகா சம்பந்தமாக, பிலம் புரொஜெக்டர்கள், திரைகள், பாட்டரிகள், மாதா மாதம் பிலம்கள், சஞ்சிகை, சிப்பந்திகள் சம்பளம் உள்பட பஸலி 1350-ல் ரூ. 18,600 செலவிடப்பட்டது. யுத்த நிதி எண்டர்டெயின்மெண்ட் கமிட்டியின் லாட்டரி மூலம் அறிக்கை நிலயத்திற்கு ரூ. 10,000 கிடைத்தது. அந்தப் பணத்தைக்கொண்டு நிலயத்திற்கு ஒரு மோட்டார் வாங்கப்பட்டது. அதன் மூலம்தான் கிராமங்களில் சினிமாப் படங்கள் காட்ட வசதி ஏற்பட்டிருக்கிறது.

நிலயத்தில் டவுன், தாலூகா ஆர்கனைசர்கள் ஐந்து பேரும் மொத்தத்தில் 43 மெம்பர்களுமிருக்கிறார்கள். அதற்கு 10 கிளை ஸ்தாபனங்கள் ஸமஸ்தானத்தின் பல பாகங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. வருஷத்தில் சராசரி 500 பிரசங்கங்களுக்கு நிலயம் ஏற்பாடு செய்து வருகிறது. மேன்மைதங்கிய மதராஸ் மாகாண கவர்னர் அவர்கள் இந்த நிலயத்திற்கு 8—2—42-ல் விஜயம் செய்தார்.

2. **யுத்த சஞ்சிகை.**—இந்த நிலயம் முக்கியமாக ஆங்கிலத்திலும் தமிழிலும் 24 பக்கங்களடங்கிய வாரப் பத்திரிகை ஒன்றை பிரசுரித்து வருகிறது. இந்தப் பத்திரிகை ஸமஸ்தானம் பூராவும் அனுப்பப்படுகிறது. ஆரம்பத்தில் தமிழில் 4,000 காபிகளும் ஆங்கிலத்தில் 1,500 காபிகளும் அச்சிடப்பட்டன. காகிதச் சிக்கனத்தை ஒத்து கொஞ்சம் கொஞ்சமாக எண்ணிக்கை குறைக்கப்பட்டு இப்பொழுது தமிழில் 1,750 காபிகளும் ஆங்கிலத்தில், 600 காபிகளும் தான் அச்சிடப்படுகின்றன. கிருஸ்துமஸ் வாரத்தில் மட்டும் அது வெளியிடப்படுவதில்லை. ஸமஸ்தானத்திற்குள் சஞ்சிகை இனாமாக வழங்கப்படுகிறது. ஸமஸ்தானத்துக்கு வெளியிலும் இதை அநேகர் சிலாகித்து வருகிறார்கள். அநேக காபிகள் வெளி நாடுகளிலுள்ள சந்தாதார்களுக்கு அஸல் கிரயத்துக்குச் சிறிது லாபத்துடன் ஒவ்வொரு வாரமும் அனுப்பப்படுகின்றன. அதன் மேன்மை குறையாமல் பரிபாலிக்கப்பட்டுவருகிறது.

3. **'V' டயரிகள்.**—தேசிய யுத்த முன்னணி ஆதரவில் 'V' டயரி ஒன்று வருஷா வருஷம் பிரசுரிக்கப்படுகிறது. அதன் விற்பனை மூலம் யுத்த நிதிக்குக் கீழ்கண்ட பிரகாரம் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| பஸலி 1351 (1—7—41 முதல் 30—6—42 முடிய) | ... | ரூ. 3,269 |
| ,, 1352 (1—7—42 முதல் 30—6—43 முடிய) | ... | ,, 3,519 |
| ,, 1353 (1—7—43 முதல் 30—6—44 முடிய) | ... | ,, 5,006 |

4. **ஆள் சேமிப்பு.**—ராணுவத்தின் சகலவிதமான சேவைப்படைகளுக்கும் ஆட்களைத் திரட்டுவதில் ரிக்ரூடிங் ஆபீஸர்களுக்கு ஸமஸ்தான நிர்வாகம் சகல விதமான ஒத்தாசைகளையும் கொடுத்து வருகிறது. சர்தை தின்த்தன்று ரிக்ரூடிங் விளம்பர கோஷ்டியொன்று ஸமஸ்தான பாண்டுடன் கிராமங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறது. 1944-ம் வருஷம் நவம்பர் மாதம் முடிய தொழில் பயிற்சியுள்ளவர் உள்பட சகல விதமான யுத்த சேவைக்கும் ஸமஸ்தானத்திலிருந்து 1,118 பேர்கள் சென்றிருக்கிறார்கள். இந்த எண்ணிக்கை ஸமஸ்தானத்தில் ரிக்ரூட் செய்து அனுப்பப்பட்டவர்களைக் குறிக்கிறது. ஸமஸ்தானத்திற்கு வெளியிலுள்ள அநேக ஸமஸ்தான வாசிகளும் யுத்த சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். யுத்தத்துக்குச் சேவைசெய்யச் சென்றிருக்கும் நபர்களின் ஜாபிதா ஒன்று சமீபத்தில் தயாரிக்கப்படும்.

ஸமஸ்தானத்திலுள்ள உத்தியோகங்களில் தற்பொழுது ஏற்பட்டுள்ள காயமான ஸ்தானங்களுக்கு யுத்த காலத்தில் தாத்காலிகமாகத்தான் பதிலிகள் நியமிக்கப்படுகிறார்கள். இந்த விதமாக படைகளில் சேருகிறவர்களுக்கு ஆதரவு அளிக்கப்படுகிறது. அந்த ஸ்தானங்களில் 50 சதவிகிதம் நம்மால் மதிக்கப்பட்ட யுத்த சேவையிலீடுபட்டு யுத்தத்திற்குப்பின் திரும்பி வருகிறவர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் காயம் செய்யப்படுவார்கள். மற்ற 50 சதவிகிதத்திற்கு யுத்த காலத்தில் டெம்பரவரியாக வேலைப்பார்த்து வந்தவர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படுவார்கள்.

5. **தொழிலாளர் படைகள்.**—1942-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் முதல் ஆறு மாதத்திற்கு அஸ்ஸாமில் வேலை செய்வதற்காக திருவாங்கூர் ஸமஸ்தான தொழிலாளர் படையுடன் நமது ஸமஸ்தானத்திலிருந்து மூன்று காங்குகள் அனுப்பப்பட்டன. அவர்கள் 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் திரும்பி வந்தார்கள். 1943-ம் வருஷம் ஜூன் மாதத்தில் ஸ்ரீ-தர்பாரவர்கள் 850 பேர்களடங்கிய ஒரு பூராப்படையை அஸ்ஸாமுக்கு அனுப்பினார்கள். அதன் கால அளவு முடிந்தபின் அந்தப்படையும் 1944-ம் வருஷம் ஜூன் மாதத்தில் திரும்பி வந்தது. மறுபடியும் சிலோனுக்கு ஒரு படை அனுப்பப்பட்டது. 1944-ம் வருஷம் ஸெப்டம்பர் மாத முடிவில் அஸ்ஸாமுக்கு மூன்றாவது படை அனுப்பப்பட்டது. தொழிலாளர் இலாகா இந்த படைகளின் ஆட்களையும் அவர்களின் வேலைத் திறமையையும் நன்கு பாராட்டினார்கள்.

6. **தப்பி ஓடிவந்தவர்கள்.**—பர்மா, மலேயாவிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கும் அந்நாடுகளில் எதிரிவசம் அகப்பட்டுக்கொண்டிருக்கும் நபர்களின் குடும்பத்தார்களுக்கும் ஜீவனோபாயமாக வட்டியன்னியில் யுத்தத்துக்குப்பின் அல்லது சக்தியுள்ளபொழுது திரும்பிக்கொடுத்துவிடவேண்டும் என்ற நிபந்தனைகளையின் பேரில் முன்பணம் கொடுத்து உதவியளிக்கப்படுகிறது. வியாபாரத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கிறவர்களுக்கு அந்தப்பணம் மொத்தமாகவே கொடுக்கப்படுகிறது. 1944-ம் வருஷம் அக்டோபர் மாதம் முடிய 31,400 ரூபாய்கள் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கின்றன. சர்வகலாசாலையில் கல்வி பயின்றுவரும் அவர்களின் சந்ததியார்களுக்கு பள்ளிக்கூடச் சம்பளம், சாப்பாட்டுச் செலவு, புஸ்தகச்செலவு, முதலியவற்றிற்குத் தேவையான பொருளும் கொடுக்கப்படுகிறது.



7. **தொழில் பயிற்சி நிலயங்கள்.**—பயிற்சிபெற்ற கைத்தொழில் நிபுணர்கள் மிகுதியாகத் தேவைப்பட்டால் ஸ்ரீ-தர்பார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியா கவர்ன்மெண்டார் அவர்கள் ஸமஸ்தானத்தில் இரண்டு கைத்தொழிற் பயிற்சி நிலயங்களை ஏற்பாடு செய்தார்கள். ஒன்று மாட்சி தங்கிய மன்னர்பிரானின் கல்லூரியில் அமைக்கப்பட்டது. மற்றொன்று மராமத்து இலாகா ஒர்க்ஷாப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. பிட்டர்கள், மின்சார வேலைக்காரர்கள், கருமான்கள், டெக்ஸ்டைல் ரிபிட்டர்கள், தச்சுவேலைக்காரர்கள் இந்த நிலயங்களில் தொழில் கற்றுக்கொடுக்கப்படுகிறார்கள். சிறிது காலத்திற்குமுன் மராமத்து இலாகா ஒர்க்ஷாப்பிலிருந்த கைத்தொழிற் பயிற்சிசாலையை எடுத்துவிட்டார்கள்.

8. **ராணுவ க்ஷேமம்.**—ராணுவ சேவையில் ஈடுபட்டிருக்கும் குடும்பத்தார்களின் க்ஷேமத்தைக் கவனிக்க ஐந்துபேர்களடங்கிய ஒரு கமிட்டி முதலில் நியமிக்கப்பட்டிருந்தது. அது வெற்றிகரமாக வேலை செய்யாததால் அதன் அங்கத்தினராக இருந்ததும் சட்ட சபை மெம்பருமான Mr. J. கோசலராம நாயுடு, ஹானரரி ராணுவ வெல்பேர் ஆபீஸராக நியமிக்கப்பட்டார். அவர் கிராமங்களுக்குச் சென்று குடும்பத்தார்களின் யோக க்ஷேமங்களையும் தேவைகளையும் விசாரித்து வருகிறார். அவருடைய சிபார்சுகளின் பேரில் ராணுவ சேவையில் ஈடுபட்டவர்களின் சந்ததியார்களுக்கும் முன்பணம் கொடுத்து உதவி வருகிறோம். போர் முனையிலிருப்பவர்கள், போர் முனைக்குச் சென்று திரும்பி வந்தவர்கள், அல்லது இறந்தவர்கள், அல்லது நிரந்தரமாக முடமாக்கப்பட்டவர்களின் குடும்பத்தார்களுக்கும் குழந்தைகளுக்கும் கல்வி சம்பந்தமாக இலவசப் படிப்பும், இலவச சாப்பாடும், புஸ்தகச் செலவும் கொடுத்து உதவி வருகிறோம்.

9. **யுத்த நிதிகள்.**—நாளது வரையில் யுத்த நிதிகளுக்குப் பின்வருமாறு பொருள் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றன :—

### உதவி செய்தவர்கள்.

| | —— | | மன்னர் பிரான். | ஸ்ரீ-தர்பார். | முனிஸிபாலிடி. | பொது ஜனங்கள். ரூ. அ. ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | யுத்த அவசிய நிதி | ... | 500 | 10,000 | ...... | 40,681 10 0 |
| 2 | செஞ்சிலுவை நிதி | ... | 5,000 | 16,200 | ...... | 5,739 7 0 |
| 3 | வைத்திய வசதி நிதி | ... | ...... | 1,00,000 | ...... | ...... |
| 4 | வெள்ளி சாமான் நிதி | ... | ...... | ...... | ...... | 2,332 0 0 |
| 5 | யுத்த விமான நிதி | ... | ...... | ...... | ...... | 78,565 4 0 |
| 6 | கிரேக்க யுத்த நிதி | ... | ...... | 1,000 | ...... | ...... |
| 7 | லண்டன் விமானத் தாக்குதலின் மூலம் ஏற்பட்ட கஷ்ட நிவாரண நிதி. | | ...... | ...... | 300 | ...... |
| 8 | விமானத் தாக்குதலின் மூலம் ஏற்பட்ட கஷ்ட நிவாரண (சாரணர்) நிதி. | | ...... | ...... | ...... | 598 13 0 |
| 9 | சைனா தின நிதி | ... | ...... | ...... | ...... | 5,500 0 0 |
| 10 | புதுக்கோட்டை யுத்த (நிதி). * | | ...... | ...... | ...... | 1,01,913 12 9 |
| 11 | போலிஷ் அகதிகள் நிதி | .. | ...... | 2,880 | ...... | ...... |
| 12 | கிரேக்க கஷ்ட நிவாரண நிதி. | | ...... | 1,000 | ...... | ...... |
| 13 | மலையாளம் காலரா கஷ்ட நிவாரண நிதி. | | ...... | 500 | ...... | ...... |
| 14 | ஸோல்ஜர்களுக்கான கிருஸ்துமஸ் பரிசுகள் நிதி. | | 200 | 1,000 | ...... | 100 0 0 |
| | மொத்தம் | ... | 5,700 | 1,32,580 | 300 | 2,35,430 14 9 |

* ஸ்ரீ-திவான் அவர்கள் மாதா மாதம் ரூ. 256—4—0 நன்கொடை கொடுப்பதும் சேர்க்கப்படுகிறது.

மாட்சி தங்கிய மன்னர்பிரானுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டதை ஒட்டி விமானப் படைக்கு உதவியாக ஒரு விமானத்தை வழங்குவதாக மாட்சி தங்கிய மன்னர்பிரான் வெளியிட்டார். விமானத்தின் குறிப்பான செலவைப்பற்றி கடிதப்போக்குவரத்து நடந்து வருகிறது. அது நிர்ணயமானபின் அந்தத் தொகை சரியான அதிகாரிகளுக்கு அனுப்பப்படும்.

10. **தற்காப்பு சேவிங்க்ஸ்.**—தற்காப்பு சேமிப்பு பத்திரங்களில் அரசாங்கத்தார் இது வரையில் 25,10,000 ரூபாய்களை முதலீடு செய்திருக்கிறார்கள். தனிப்பட்ட நபர்கள் ஈ-தர்பார் அவர்கள் அவாராக 5,20,900 ரூபாய்களைப் போட்டிருக்கிறார்கள். மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் 5,000 ரூபாய்களை முதலீடு செய்திருக்கிறார்.

11. **சிறிய சேமிப்பு இயக்கம்.**—இந்த இயக்கமும் நல்ல முறையில் ஜனங்களால் ஆதரிக்கப்படுகிறது. நாளது வரையில் ரூ. 1,16,136 தேசிய சேமிப்பு ஸர்ட்டிபிகேட்டுகளில் போடப்பட்டிருக்கிறது. பலவிதமான பொருமானங்களுள்ள பத்திரங்களிலும் பொருளீட்டப்பட்டிருக்கிறது. 277 ஏஜண்டுகள் வேலை செய்து வருகிறார்கள். அவர்களில் 45 பேர்கள் உத்தியோகப்பற்றற்றவர்கள், மூவர் ஸ்திரீகள். ஏழை மக்களை சந்தித்துப்பேசஆங்காங்கு கமிட்டிகளை ஈ-தர்பார் அவர்கள் அமைத்து வருகிறார்கள். ஒவ்வொரு வட்டத்திலும் 50 பத்து ரூபாய் பத்திரங்கள் விற்கப்படவேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறார்கள். ஸமஸ்தானத்தில் 177 வட்டங்களிருக்கின்றன. இதற்கு ஸமஸ்தானத்தில் ஆதரவு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

12. **விலைவாசி. சர்பரா, கட்டுப்பாடு.**—நிர்வாகம் ஆலோசனை கமிட்டியை நியமித்திருக்கிறது. அது மாதம் ஒரு முறையோ அல்லது அடிக்கடியோ கூடி உணவுப்பொருள், மற்ற பொருள்களின் உத்தம பக்ஷ சில்லறை விலையை நிர்த்தாரணம் செய்து வருகிறது.

இந்திய தற்காப்பு விதிகளின் படி பிரிடிஷ் இந்தியாவில் பிரசுரிக்கப்படும் கட்டுப்பாடு உத்தரவுகளையெல்லாம் கவர்ன்மெண்டார் அமுலுக்குக்கொண்டு வந்திருக்கிறார்கள். முக்கியமானவை :—உணவுப்பொருள் தானியங்களின் கட்டுப்பாடு உத்தரவு, சர்க்கரை கட்டுப்பாடு உத்தரவு, காகிதக் கட்டுப்பாடு உத்தரவு, துணி, நூல் கட்டுப்பாடு (லைசன்ஸ்) உத்தரவு, மோட்டார் வாகனங்களின் உதிரி பாகங்களின் கட்டுப்பாடு உத்தரவு, மருந்து கட்டுப்பாடு உத்தரவு, ரப்பர் சாமான்கள் கட்டுப்பாடு உத்தரவு. அனுமதி அன்னியில் உணவுப்பொருள்கள், புளி, மிளகாய், புண்ணாக்கு, கரி, சவுக்கு, காட்டு மொருப்பு, மர மொரும்புகள் ஸமஸ்தானத்துக்கு வெளியே ஏற்றுமதி செய்யக்கூடாதென்றும் தடை செய்திருக்கிறார்கள்.

சர்க்கரை, உணவுப்பொருள் சம்பந்தமாக ஸமஸ்தானம் மதராஸ் மாகாணத்தின் ஒரு பாகமாகக் கருதப்படுகிறது. மதராஸ் நிர்வாகம் ஸமஸ்தானத்துக்கு கோட்டாக்களைக் கொடுத்து வருகிறார்கள்.

ஸமஸ்தானத்தில் விறகு அதிகமாக இருப்பதால், ராணுவத்திற்குத் தேவையான பொழுது நிர்வாகம் விறகு ஸப்ளை செய்து வருகிறது. திருச்சிராப்பள்ளி கலெக்டரின் வேண்டுகோளின் படி திருச்சிராப்பள்ளியிலுள்ள பொது ஜனங்களுக்கு விற்பனை செய்வதற்காக மாதாமாதம் 500 டன்கள் சவுக்கு விறகு அனுப்ப அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தென் இந்திய ரெயில்வேயிக்கும் அது மாதா மாதம் 150 டன்கள் சவுக்கு விறகை ஸப்ளை செய்து வருகிறது. பிரிடிஷ் நாடுகளுக்கு காட்டுமொரும்பை ஸப்ளை செய்ய தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகிலும் சமீபகாலத்தில் பிரிடிஷ் மாகாணத்திற்கு வெளியிலிருந்து விறகை இறக்குமதி செய்யக்கூடாதென்று மதராஸ் நிர்வாகம் உத்தரவிட்டு விட்டதால் 1—1—45-லிருந்து இந்த ஏற்றுமதி நின்று விட்டது. இது விஷயமாக மதராஸ் நிர்வாகத்துடன் ராயசம் நடந்து வருகிறது.

கூட்டுறவு சங்கங்களின் டெபுடி ரிஜிஸ்தரார் (அவருக்கு இப்பொழுது பொதுஜன சர்பரா ஆபீஸர் என்று பெயர்) தர்பார் அவர்களின் ஆக்ஞைகளுட்பட்டு ஸமஸ்தானத்திற்கு வேண்டிய உணவுப்பொருள் கோட்டாக்களை வாங்கி, விநியோகம் செய்யும் பொறுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்.

அளவு கடந்து சேமிப்பதையும் கள்ள வியாபாரத்தையும் தடுக்க பிரிடிஷ் இந்தியாவை ஒத்து ஈ-தர்பாரர்களும் நடவடிக்கைகளைக் கையாண்டுவருகிறார்கள்.



13. **புயிர் மிகைச்செய் இயக்கம்.**—ஈ-திவான் அவர்களும், கௌன்ஸிலர்களும் தரிசு நிலங்களைப் பார்வையிட்டு அவைகளைச் சாகுபடி செய்யும்படி முதலாளிகளைத் தூண்டி வருகிறார்கள். கௌல் திட்டப்படி நிலங்களை அடமானம் செய்து அவைகளுக்கு பல தகுதிகளாக பூராத்தீர்வையையும் விதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். புஞ்சை நிலங்களை நஞ்சை சாகுபடிக்குக் கொண்டுவருகிறவர்களுக்குத் தண்ணீர் தீர்வை விதிக்கப்படுவதில்லை. நிலங்களை நல்ல முறைக்குக் கொண்டுவருகிறவர்களுக்கு அவர்கள் கடன் கொடுத்து உதவுகிறார்கள். வியாபாரத்துக்குரிய பொருள்களை உற்பத்தி செய்யும்படி அவர்கள் தூண்டுகிறார்கள். பருத்தி சாகுபடி செய்யக்கூடாதென்று விவசாயிகளுக்கு எச்சரிக்கை செய்கிறார்கள். அதற்குப் பதிலாக உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்றும் போதித்து வருகிறார்கள்.

புதுக்கோட்டை சாகுபடி செய்யப்படாத நிலங்களுக்கு அபராதம் விதிக்கும் ரெகுலேஷன் என்ற 1942-ம் வருஷத்திய XVIII-வது ரெகுலேஷனையும் கவர்ன்மெண்டார் சட்டமாக்கியிருக்கிறார்கள். அதன் மூலம் தகுந்த காரணமன்னியில், நிலங்களை சாகுபடி செய்யாத, அவைகளைச் சரிவர சாகுபடி செய்யாத அல்லது சாகுபடி செய்வதாக வேஷம் போடுகிற நில ஸ்வான்தார்களுக்கு அபராத வரி விதிக்கப்படுகிறது. உத்தம பக்ஷமான பூமியை சாகுபடிக்குக் கொண்டுவரவும் அதன் மூலம் உணவுப் பொருள் குறைவு, விலை உயர்வைத் தடுத்து ஸமஸ்தான பிரஜைகளின் க்ஷேமத்தைக் கோருவதும் தான் இந்த ரெகுலேஷனின் நோக்கங்கள். இந்த ரெகுலேஷன் பாஸ் செய்யப்பட்டதின் மூலம் அநேகர்களுக்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்ய ஊக்கமுண்டாகியிருக்கிறது.

அதன் விளைவாக சென்ற இரண்டு பஸலிகளிலும் 47,000 ஏக்கராக்கள் உபரியாக சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த வருஷத்தில் உபரியாக 6,000 ஏக்கராக்கள் சாகுபடிக்கு வரவேண்டுமென்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. இந்தப் பஸலியில் சாகுபடிக்குக் வரக்கூடிய 53,000 ஏக்கராக்களையும் சேர்த்துக்கொண்டால் ஸமஸ்தானத்தில் 3,30,000 ஏக்கராக்கள் சாகுபடி செய்யப்பட்டு வரக்கூடும்.

14. **பெட்ரோல், டயர் பங்கீடு.**—பெட்ரோல் செலவைக் குறைக்க ஈ-தர்பாரவர்கள் அதிக முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பஸலி முடிய 116 பஸ்களிலும், 12 கார்களிலும், 6 லாரிகளிலும் வாய்வுனால் ஓட்டப்படும் சாதனங்களமைக்கப்பட்டிருக்கின்றன. பங்கீடு முறை அமுலுக்கு வந்தபொழுது மூன்று மாதங்களுக்கு 41,740 காலன் பெட்ரோல் செலவாகுமென்று எதிர் பார்க்கப்பட்டது. ஆகிலும் மூன்று மாதங்களில் 8,614 காலன் பெட்ரோல்தான் செலவாகியிருக்கிறது. இவ்விதமாக ஈ-தர்பாரவர்கள் 83.7 பெட்ரோலை மீதப்படுத்திவிட்டார்கள். இந்த விஷயத்தில் இந்தியா பூராவிலும் ஸமஸ்தானம் முதன்மையாக இருக்கிறது. அதை இந்திய நிர்வாகமும் போற்றியிருக்கிறது. ஸமஸ்தானத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் டயர்கள், ட்யூப்களின் கோட்டா அவசியமான வேலைகளிலீடுபட்டிருக்கும் வண்டிகளுக்கே போதுமானதல்ல. கோட்டாவை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்திய கவர்ன்மெண்டாரை ஈ-தர்பாரவர்கள் வேண்டிக்கொண்ட போதிலும் அவர்கள் அதை புறக்கணித்துவிட்டார்கள்.

15. **சில்லரை விஷயங்கள்.**—திருச்சியில் ஸமஸ்தானத்துக்கு சொந்தமான அரண்மனையை ராணுவ அதிகாரிகளிடம் விமானப் படை ஆஸ்பத்திரி உபயோகத்திற்காக ஈ-தர்பார் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அழைப்பின் பேரில் ஒவ்வொரு பக்ஷ ஞாயிறன்று திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய இடங்களிலுள்ள பிரிடிஷ் இந்தியப் படையைச் சேர்ந்த 50, 60 பேர்களும், சுமாராக ஆறு ஆபீஸர்களும் புதுக்கோட்டை தலை நகருக்கு விஜயம் செய்கிறார்கள். அவர்களுக்கு ஈ-தர்பாரவர்கள் போக்குவரத்து வசதியும், சிற்றுண்டி, தேத்தண்ணீர் முதலிய வசதிகளையும், ஊரைச் சுற்றிப்பார்ப்பதற்கும் பொழுது போக்குக்கும் ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்கள். அந்த கோஷ்டிகள் இந்த விஜயங்களைக் கண்டு திருப்தி அடைகிறார்கள்.

இந்த விஜயங்கள் அநேக மாதங்களாக ஒத்திவைக்கப்பட்டிருந்தன. ராணுவம் வேறு அலுவல்களில் ஈடுபட்டிருந்ததாகத் தெரியவருகிறது. ஈ-தர்பார் அவர்களின் அழைப்புக்கிணங்க மறுபடியும் அவ்விஜயங்கள் துவக்கிவிட்டன. மாட்சிதங்கிய மன்னர்பிரான் அவர்கள் ஸோல்ஜர்களுக்கு வசதிகளை அளிக்கும் விஷயத்தில் செய்த உதவிக்காக அவருக்கு நன்றி செலுத்தி மேன்மைதங்கிய சேனாதிபதியிடமிருந்து நமது மன்னருக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 16—1—45 (செவ்வாய்க்கிழமை.) | ஜெனரல் டெம்ப்ஸி டச்சு—ஜெர்மன் எல்லைச் சரகத்தில் புதிய தாக்குதலைத் துவக்கினார். ருஷ்யர் போலந்தில் ராடொமைப் பிடித்தார்கள். |
| 17—1—45 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் வார்ஸாவை விடுவித்தனர். நேசதேசப் படைகள் பர்மாவில் ஐராவதி நதியின் கிழக்குக் கரையை அடைந்தனர். |
| 18—1—45 (வியாழக்கிழமை). | ருஷ்யர்கள் வார்ஸாவிற்கு மேற்கிலுள்ள மோட்லிமைப் பிடித்தார்கள். அமெரிக்கர்கள் ஞர் நதியைத் தாண்டினார்கள். |
| 19—1—45 (வெள்ளிக்கிழமை). | நேசதேசப் படைகள் பர்மாவிலுள்ள காப்வெட்டைப் பிடித்தன. பிரிடிஷ் படைகள் ஷில்பர்க்கை ஆக்கிரமித்தன. |
| 20—1—45 (சனிக்கிழமை). | ருஷ்யர்கள் கிழக்கு பிரஷ்யாவில் டில்ஸிட்டைப் பிடித்தார்கள். பிரெஞ்சுப் படைகள் தெற்கு ஆல்ஸாஸில் புதிய தாக்குதலைத் துவக்கின. ஹங்கேரிய நிர்வாகம் நேசதேசத்தாருடன் யுத்த நிறுத்த ஷரத்துகளில் கையொப்பமிட்டது. |
| 21—1—45 (ஞாயிற்றுக்கிழமை). | மார்ஷல் கூனேவிடமுள்ள ருஷ்ய சேனைக்கும் பெர்லினுக்கும் 165 மைல்களிலிருக்கின்றன. ருஷ்ய சேனை இன்ஸ்டெர்பார்க்கைப் பிடித்தது. நேசதேசப் படைகள் இந்தியா—சைனா தரை மார்க்கத்தை திறந்துவிட்டன. அமெரிக்கர்கள் லூஸானிலுள்ள டார்லாக்கை பிடித்தார்கள். நேசதேசப் படைகள் அக்யாபுக்குத் தெற்கிலுள்ள ராம்ரீத் தீவில் இறங்கிவிட்டன. |
| 22—1—45 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் எல்லாப் போர்முனைகளிலும் முன்னேறி வருகிறார்கள். |

## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.—**

(1) நேசதேசப் படைகள் போர்முனை பூராவிலும் முன்னேறித் தாக்கிவருகின்றன.

(2) நேசதேசப் படைகள் வர்ல்சர்லுக்கு வடக்கில் ஷௌவன் தீவில் இறங்கின.

(3) நேசதேசப் படைகள் வடக்கு ஹாலந்தில் எக்டுக்கு வடகிழக்கிலுள்ள டிலிங்க் கால்வாயைத் தாண்டி எதிரியைத் துறத்தியடித்துவிட்டன. ஸெயிண்ட் ஜாஸ்ட் பிராந்தியத்தில் கடும்போர் நடைபெறுகிறது. வடமேற்கு ஹாலந்து பூராவும் ஜெர்மனியிலிருந்து துணிக்கப்பட்டுவிட்டது.

(4) **மாஸ், ரோயர் நதிகளுக்கு மத்தியில்.**—பிரிடிஷ் படைகள் ஸிட்டார்ட்டுக்கு வடக்கிலும் மாசேயிக்குத் தென்கிழக்கிலும் டச்சு—ஜெர்மன் எல்லைச்சரகத்திலுள்ள ரோயர் நதியை நோக்கி தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள். எதிரியின் பலமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் ஜெர்மனிக்குள் விசிறிபோல் பரவி வருகிறார்கள். மாஸ் நதிக்குக் கிழக்கில் 25 சதுரமைல்கள் கொண்ட முக்கோணம் பிரிடிஷ் படை வசமாகிவிட்டது. கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. டைடர்ன், ஹாங்கென், விஸ்பெர்க், ஹீட், ஸஸ்டெர்ன்,



பீக், இஸன்பிரக், ஸ்டவேஸ்வெர்ட், ஷால்பிரக், ஹானெர்ட், ரெச்ட், நோகர், பாட்டன்டார்ப், ஹின்ஸ்பர்க், எக்டோபார்ஷ், வால்டன்ராத், ஆப்ஸ் பிரெங்கன, லாபெடல், லாச்கன்.

(5) **ஆர்டெனிஸ் உப்பல்.**—அழிக்கப்பட்டுவிட்டது. அங்கிருந்து ஜெர்மானியர்கள் சிக்பிரட் அரணுக்குப் பின்வாங்கிவருகிறார்கள். அங்கு போர்புரியும் அமெரிக்க 1-வது சேனை எதிரி பின்வாங்கும் வழியிலுள்ள ஸெயிண்ட் வித்தைப் பிடித்துவிட்டது. அமெரிக்க 3-வது சேனை சுரி நதியைத்தாண்டி டைகொர்ச்சைப்பிடித்தது. ஜெர்மனிக்குள் வந்துவிட்டது. கீழ்கண்ட இடங்களும் பிடிபட்டன. ஹௌபாலிஸி, வியல்ஸோம், ஓர்டன்வால், தியர்மாண்ட், போர்ஸி, கெர்ச், பெட்டன்டார்ப், டைடன்பெர்க், லான்ஸ்டார்ப், டாண்டல், பொரு, விட்ஸ், பூரென்.

(6) **பாஸ்டாக்னியைச் சுற்றி.**—மிகாம்ப்ஸ், லோன்விலி, ஓபர்வாம்பாக், நீடர்வாம்பாக், ஹாகிவில்லி, போவாங்கி பிடிபட்டன.

(7) **தெற்குப்பகுதி.**—கோல்மார் பகுதியில் ஜெர்மனியின் படை வரிசைக்குள் பிரெஞ்சு சேனை புகுந்துவிட்டது. கோல்மாருக்கும் ஸ்ட்ராஸ் போர்க்குக்கும் மத்தியில் ரைன்நதி பிரதேசத்தில் 40 மைல்கள் அளவில் அமெரிக்க 7-வது சேனை இருபக்கத்தில் தாக்குதலைத் துவக்கிவிட்டது. ஜெர்மானியர்கள் மாகினோ அரணைப் பிளந்துவிட்டதாகவும் ஹாகெனுவைப் பிடித்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் ஹாகெனு இன்னும் நேசதேசவசம் தானிருந்து வருகிறது.

**கிழக்குப் போர்முனை.—**

(1) **தெற்குப் பகுதியில்** ருஷ்யப் படைகள் பிரெஸ்லாப் பகுதியில் 37 மைல்கள் கொண்ட போர்முனையில் ஓடர் நதியை அடைந்துவிட்டன. வடக்கு ஸைலீஷியாவின் ஜீவநாடி போன்ற பிரெஸ்லா—கிளிவிட்ஸ் இருப்புப்பாதை துணிக்கப்பட்டுவிட்டது. ராடோஸ்டும் சாடுகோமாவும் பிடிபட்டன.

(2) **மத்தியப் பகுதியில்** வார்சா, கிராகோ, லோட்ஸ், மாட்லிம், பியாடோர்கௌ விழுந்துவிட்டன. ருஷ்யப்படைகள் இப்பொழுது ஜெர்மன் எல்லைச்சரகத்துக்கு 50 மைலுக்குள்ளும் பெர்லினிலிருந்து கிழக்கில் 165 மைல்களுக்குள்ளும் வந்துவிட்டன.

(3) **வடக்கில்** மால்வா, பிராஸ்னிஷ், புளோன்ஸ்க் விழுந்துவிட்டன. கிழக்குப் பிரஷ்யாவில் சம்பினன், டானின்பர்க், இன்ஸ்டர்பர்க், பிராம்பர்ச், ஆலன்ஸ்டீன், நிஸ்னோ, போஸ்னென், ஓர்டல்ஸ்பர்க், வேஹலா, லாபியூ பிடிபட்டன. கடைசியாகச் சொல்லப்பட்ட இரண்டு இடங்களும் கிழக்குப் பிரஷ்யாவின் தலைநகரமான கோனிக்ஸ்பர்க்குக்குப் போகும் வழியிலிருக்கின்றன. படைகள் பால்டிக் துறைமுகமான டான்சிக்கை நோக்கி முன்னேறுகின்றன. பால்டிக் துறைமுகமான எல்பிங்குக்குத் தென்மேற்கிலுள்ள விஸ்சுலா நதியின் முகத்துவாரத்தைப் படைகள் அடைந்துவிட்டன. கிழக்குப் பிரஷ்யா அநேகமாக தரை மார்க்கமாக ஜெர்மனியிலிருந்து துணிக்கப்பட்டுவிட்டது.

(4) **ஹங்கேரியில்**, புடாபெஸ்டின் முற்றுகை நடந்து வருகிறது. பெஸ்ட் சுத்தி செய்யப்பட்டிருக்கிறது. பூடாவின் ஒரு சிறிய பாகம்தான் பாக்கியிருக்கிறது.

**இதாலி.**—செனியோ நதிக்கரையில் ரோந்துப்படைகளுக்கிடையே சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றன.

**பிலிப்பைன்ஸ்.**—காபாருன் மலைகளில் ஜப்பானிய எதிர்ப்பு நின்றது. அமெரிக்கப்படைகள் தலைநகரமான மணிலாவுக்கு 45 மைல்களுக்குள் வந்து விட்டன. போரோராபியோ, அர்டெண்டா, பாணிக்கீ, சிசான், காபாருவான், வில்லாஸிஸ், தார்மான், சான்மானுவல், காபாஸ், ஸாண்டா மாணிகா, காம்ப்ஓடானல் விடுவிக்கப்பட்டன.

**சைனா.**—தென் கிழக்கு சைனாவிலுள்ள காண்டன் ஹாங்கோ இருப்புப்பாதையின் தெற்குப் பார்ச்வம் பூராவிலும் கடும்போர் மூண்டு விட்டது.

**பர்மா.**—(1) நேசதேசப்படைகள் ஷ்வீபோவுக்குக் கிழக்கில் இராவதி நதியைக் கடந்து காபெட், யோன்பிங்கானைப் பிடித்தன. மாண்ட் லேக்கான போர் சமீபித்துவிட்டது.

(2) சிண்ட்வின் நதியிலுள்ள மாணிவா நகரம் பிடிப்பட்டது.

(3) சைனா, பர்மா எல்லைச் சரகத்திலுள்ள வாண்டிங் பிடிப்பட்டது. லேடோ ரஸ்தா பர்மா ரஸ்தாவுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(4) நேசதேசப்படைகள் அக்யாபுக்குத் தெற்கிலுள்ள ராம்ரீத்தீவிலும், டாங்குப்புக்குப் போகும் ஜப்பானிய போக்கு வரத்து மார்க்கத்திலுள்ள காங்காவுக்குத் தென்மேற்கில் நான்கு மைல்களுக்கு அப்பாலிலுள்ள ஒரு முனையிலும் இறங்கிவிட்டன.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**14—1—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எண்ணெக் கிணறு—ஹெய்டிற்கு (Heide), அருகில்.
தொடர்ச்சியான எண்ணெக் கிணறுகள்.—மாக்டிபர்க் (Magdeburg).
எண்ணெ சேமிப்பு டெப்போக்கள்.—எமின் (Ehmen).
பாலங்கள்.—ரைனின் (Rhine) குறுக்கே.
பென்ஸால் நிலையம் பெரிய எஃகுத் தொழிற்சாலை.—ஹாலன்டார்ப் (Hallnedorf).
ரயில்வே சாமான்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—ஸார்பிரக்கன் (Saarbrucken)
"வி-2" நிலயங்கள்.—ஹாலந்து (Holland). (183 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 31 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
போக்குவரத்துகள்—போ (Po) சமவெளி.
இரவு.—ரயில்வே இலக்குகள்—மேற்கு ஜெர்மனி.
ரயில்வே ஜங்ஷன்.—கிரெவன்பிராய்க் (Grevenbroich).
தொடர்ச்சியான எண்ணெ தொழிற்சாலைகள்.—மெர்ஸ்பர்க் (Merseburg).
எண்ணெ டெப்போ.—டர்ல்மென் (Durlmen), பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

ராணுவ தொழிற்சாலை இலக்குகள்.—பார்மோஸா (Formosa), ஹான்ஷியூ (Honshiu).
ஜப்பானிய ஸப்ளை தளங்கள்,—ஹாங்கௌ (Hankow) (24 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**பர்மா (Burma).**

துருப்பு முகாம்கள், ஸப்ளை, பிரதேசங்கள் போக்குவரத்து லயன்கள்.—மாண்டலே (Mandalay).
தளவாடக் குவியல்கள், கார் நிறுத்திவைக்குமிடங்கள்.—ஸான்வி (Hsonwi).
சேமிப்பு பிரதேசங்கள்.—மாங்கா (Mongncaw).
பெரும் நெருப்பு.—சாக் (Chauk).
மோட்டார் போக்குவரத்து.—ஸகெய்ங் (Sagaing).

**15—1—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ரயில்வே தளங்கள்—ஸார்பிரக்கன் (Saarbrucken).
எதிரி சைனியங்கள்.—பென்பெல்டு (Benfeld).
படகுகள்.—ஸ்கோவன் (Schouwen).
எண்ணெக் கிணறுகள்.—ஹெம்மிங்ஸ்டெட் (Hemmingstedt).
எண்ணெத் தொழிற்சாலை.—மாக்டிபர்க் (Magdeburg).
ஜெர்மன் கப்பல்கள்.—நார்வே (Norway).
ரயில்வேப் பாலம், இதர இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).
போக்குவரத்து இலக்குகள்.—வியன்னா (Vienna) பிரதேசம், டிரவிஸோ (Treviso).
ஸப்ளை விமானங்கள்.—வட இதாலி (N. Italy).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய இலக்குகள்.—பார்மோஸா (Formosa).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.—அக்யாப்பின் (Akyab) வட கிழக்கு.
படகுகள்.—அக்யாப் (Akyab).
போக்குவரத்து இலக்குகள்.—தென் பர்மா (South Burma), ஸியாம் (Siam).
இலக்குகள்.—புரோம் (Prome), ரங்கூன் (Rangoon) பிரதேசம்.
படகுகள்.—ஐராவதி (Irrawaddy).
இலக்குகள்.—மாண்டலேக்கருகில்.

**16—1—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—தொடர்ச்சியான எண்ணெக் கிணறுகள்.—ரூலந்து (Ruhland).
கிரப்—(Krupp), நிலயம் மாக்டிபர்க் (Magdeburg).
சேனைகள் யுத்த தளவாடங்கள், தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—டுயிஸ்டென் (Duisden) டெஸ்ஸா (Dessau).
இதர இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).
"V 2" ஸ்தலங்கள்.—ஹாலந்து (Holland).
E. படகுகள்.—வட கடல் (North Sea).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).
எதிரி ஸப்ளை, யென்சன் மின்சார நிலயங்கள்.—போ (Po) சமவெளி.
பீரங்கிகள்.—லஸ்ஸின் பிக்கோலோ (Lussia Piccolo).
தரைமீதுள்ள விமானங்கள்.—ஸாராஜீவோ (Sarajevo).
கப்பல்கள்,—டால்மோஷியன் கடற்கரை.



விமானச் சண்டைகள், தரைமீதுள்ள விமானங்கள்.—ருஷ்யா யுத்த அரங்கம் முழுதும்.
இரவு.—எண்ணெக் கிணறுகள்.—ஸட்டன்லாந்திலுள்ள பிரக்ஸ் (Brux), ஜெர்மனியிலுள்ள ஸெயிட்ஸ் (Zeitz).
தொடர்ச்சியான எண்ணெக் கிணறுகள்.—வான் (Wanne), எல்க்கல் (Elckel).
ரயில்வே ஜங்ஷன்.—மாக்டிபர்க் (Magdeburg).

**தூரக்கிழக்கு (Far East).**

பார்மோஸா (Formosa).
ராணுவ ஸ்தாபனங்கள்.—ஷிஞ்சிகு (Shinchiku).
ஜப்பானிய விமானங்கள்.—கிலார்க் (Clark) விமான நிலயம், மணிலா (Manila). (81 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**பர்மா (Burma).**

விமான நிலயங்கள்.—ரங்கூன் (Rangoon), மாண்டலே (Mandalay).
எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan).

**17—1—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ரயில்வேப் பாலம்.—ராஸ்டாட் (Rastatt).
எதிரி சைனியங்கள்.—ஸ்டாரெஸ்பர்க்கிற்கு வடக்கு.
போக்குவரத்துகள்.—ரைனிற்கு கிழக்கு.
எண்ணெய்க் கிணறுகள்.—ரூலந்து (Ruhland).
டாங்கி விமானம்.—மாக்டிபர்க் (Magdeburg).
சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—டிரெஸ்டன் (Dresden), டெஸ்ஸா (Dessau).
விமான நிலயங்கள்.—பெர்லினிற்கு தெற்கு (Berlin).
ஜெர்மன் கப்பல்கள்.—வட கடல் (North Sea).
இலக்குகள்—வடமேற்கு இதாலி (N. W. Italy), யூகோஸ்லாவியாவின் கடற்கரை.
கப்பல்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

எதிரி விமான நிலயங்கள்.—மாண்டலேக்கும் (Mandalay), லாஷிக்கும் (Lashi) இடையில்.
துருப்பு முகாம்கள், ஸ்டோர்க் குவியல்கள்.—வடக்கில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
ஜப்பானிய தற்காப்பு முனைகள்.—மைபானிற்கு (Myebon) அருகில்.
படகுகள்.—ஐராவதி (Irrawaddy). !

**18—1—45.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்த நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எதிரி சைனியங்கள், கோட்டைகட்டப்பட்ட கிராமங்கள்—வடக்கு ஹாலந்து (Holland).
எதிரி போக்குவரத்துகள்.—உட்ரெட் (Utrecht), முதல் ஹெங்கெலோ (Hengelo) வரை.
எண்ணெய் சுத்தம் செய்யும் இடங்கள், ஸ்டீமரின் கட்டும் தளங்கள்.—ஹாம்பர்க் (Hamburg).
ரயில்வே ரிபேர் ஸாதனங்கள்.—பாடர்பான் (Paderborn).
பாலங்கள்.—பிரென்னர் கணவாய் (Brenner Pass).
பாலங்கள், ரயில்வேப் போக்குவரத்துக்கள் எண்ணெய்க் குவியல்கள்.—வடகிழக்கு இதாலி (N. E. Italy).
கப்பல்கள்.—டால்மேஷியன் (Talmatian) கடற்கரை.
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்—ஹாங்கௌ (Hankow).
போக்குவரத்து.—ஹாங்காங் (Hongkong).
விமான நிலயம்.—ஷாங்கை (Shanghai), இந்தோ-சைனா (Hindo-China).
விமான நிலயங்கள்.—மனிலா (Manila).
எதிரி சைனியம்.—டார்லக் (Tarlack).

**பர்மா (Burma).**

விமான நிலயங்கள்.—மெய்க்திலா (Meiktila).
போக்குவரத்துகள்.—பர்மாவின் மேரகு கடற்கரை முதல் ஸியாம் (Siam) வரையில்.
எதிரி சேமிப்புகள்.—மத்திய பர்மா (Central Burma).
ஜப்பானிய சைனியங்கள்.—அரக்கான் (Arakan).
ரயில்வே லயனில் உள்ள சிறு பாதை.—மார்ட்டாபன் (Martaban).

**19—1—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—பீரங்கி ஸ்தாபனங்கள்.—ஸிட்டார்ட் (Sittard).
ரஸ்தா பாலம்.—கொரென்ஸிக் (Korrenzig).
போக்குவரத்துகள்.—ஜெர்மனி (Germany), ஆஸ்திரியா (Austria), போ (Po), சமவெளி.
தரைப்படைகளுக்கு உதவி.—இதாலிய யுத்த அரங்கம்.
ரயில்வே லயன்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—ராப் (Rab) தீவு.

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்கள்.—ருஷ்ய அரங்கம் முழுவதும்.
(123 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
இரவு.—இலக்குகள்,—பிர்க்கின் (Birggin), ஈஸன்பர்க் (Easenburg), ஆர்ஸ்பெக் (Orsbeck).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியப் போக்குவரத்துகள்.—லூஸான் (Luzon).

**பர்மா (Burma).**

இலக்குகள்.—அரக்கான் (Arakan), பாஸ்ஸின் (Bassien), மார்ட்டாபன் (Martaban), ஸிங்மாய் (Ciengmai).
படகுகள்.— ஐராவதி (Irrawaddy).

**20—1—45.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—"V-2" நிலயங்கள்.—ஹாலந்து (Holland).
இலக்குகள்.—செயின்ட் வித்தின் (St. Vith) வடகிழக்கு (N. E.) டிரைர் தெற்கு.
ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—பிட்சி (Bitche) முதல் ஸ்டராஸ்பர்க் (Strasbourg).
பல நீராவி யந்திரங்கள்.-மன்ஸ்டருக்கருகில்.
சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார் செய்து சேமிக்குமிடங்கள்.-ரைன் (Rhine), ஹெய்ல்பிரான் (Heilbronn).
ரஸ்தா ரயில் பாலங்கள்.—ரைனுக்கும் (Rhine), மான்ஹிமிற்குக் குறுக்கில்.
ரயில்வே இலக்குகள் எண்ணெய் டெப்போக்கள்.—ஆஸ்திரியா (Austria), ஜெர்மனி (Germany).
எண்ணெய் சேமிப்பு பிரதேசம்.—ரீகன்ஸ்பர்க் (Regensburg).
ரயில்வே லயன்.—பிரென்னர் பாஸ் (Brenner Pass).
போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி, வட இதாலி (North Italy).
விமானச் சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (71 எதிரி விமான நிலயங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய விமான நிலயங்கள் கப்பல்கள் ஸ்தாபனங்கள்.—பார்மோஸா (Formosa). (240 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
கப்பல்கள்.—மாகோ (Mako), ஸாக்ஷிமா (Sakishima).
ஸ்டோர் பிரதேசங்கள்.-பாம்பன் (Bomban).
ஜப்பானிய இலக்குகள்.—நிக்ரோஸ் (Negros).

**பர்மா (Burma).**

ஸப்ளை பிரதேசங்கள்.—நாம்ஷான் (Namshan).
ஸ்டோர்கள்.—மாகோக் (Mogok).
ஜப்பானிய தற்காப்பு —மாண்டலே (Mandalay).
விமான நிலயம்.—மெய்க்திலா (Meiktila).
படகுகள் மோட்டார் போக்குவரத்துகள்.—மத்திய பர்மா (Central Burma).
பீரங்கி ஸ்தாபனங்கள்.-டவுங்கூ (Toungoo), விமான நிலயம்.

### *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**15—1—45.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்லக இல்லே.

**16—1—45.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லே.

**17—1—45.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

இங்கிலாந்தின் தென்கரை

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லே.

**18—1—45** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலுமில்லே.

**19—1—45.** (வெள்ளிக்கிழமை).
**20—1—45** (சனிக்கிழமை).
**21—1—45** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.-இங்கிலாந்தின் தென்கிழக்குக் கரை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லே.

---

## யுத்தக் குறிப்புகள்.

**ருஷ்யப் படையின் அபாரமான வேகம்.** ஸ்டாலின் பேசுவதுடன் காரியம்சையிலும் திறமையைக் காட்டிவிட்டார். அவர் மாரிகாலத் தாக்குதலேத் துவக்கிவிட்டார். இது குறிப்பிட்ட அட்டவணேக்கு ...ர்றியே ஆரம்பித்துவிட்டதாகத் தெரியவருகிறது. போலந்தைப் பூராவாக விடுவிப்பதும் பர்லினுக்குள் நுழைவதும்தான் தற்போதிய தாக்குதலின் லக்ஷியங்கள். ஒன்பது இடங்களில் ருஷ்யா முன்னேறித் தாக்குவதாக ஜெர்மானியர்கள் சொல்லுகிருர்கள். மூன்று முக்கியமான இடங்களில், வடக்கு, மத்திய, தெற்கு பிராந்தியங்களில் மகத்தான தாக்குதல் செய்யப்படுவதாகத் தெரியவருகிறது. மத்தியில் போலந்தின் தலேநகரமான வார்ஸா விடுவிக்கப்பட்டது. வார்ஸாவுக்கு மேற்கில் 5-நாட்களில் 145-மைல்கள் முன்னேறி ருஷ்யப் படைகள் ஜெர்மன எல்லேச் சரகத்திலிருந்து 50-மைல்களுக்கு வந்துவிட்டன. பெர்லினுக்கும் படைவரிசைகளுக்குமிடையே 165-மைல்கள் தூரம்தானிருக்கிறது. தெற்குமுனேயில் லோட்ஸும் கிராகோவும் விழுந்துவிட்டன. ஜெர்மன் சைலிஷியா வழியாக முன்னேறும் ருஷ்யப் படைகள் ஓடர் நதியை அடைந்துவிட்டன. கிழக்குப் பிரஷ்யா பகுதியில் பால்டிக் துறைமுகமான டான்சிக்கை நோக்கி படைகள் முன்னேறுகின்றன. இந்தப் பகுதியில் ஜெர்மனியின் தற்காப்புகளான டானெபர்க், கம்பினன், இன்ஸ்டர்பர்க்கும் விழுந்துவிட்டன.



ஜெர்மனியில் கலக்கமுண்டாகிவிட்டது. ஜெர்மன் ராணுவத் தலேவர் பின்வருமாறு சொல்லுகிருர். "ஒவ்வொரு நிமிஷமும் ருஷ்யர்கள் புதிய படைகளேப் போர்முனேக்கு அனுப்புகிருர்கள். இந்தப் போரில் எதிரி நம்மை பலமாகத் தாக்க உத்தேசித்திருக்கிருன்." நாஸிக் கக்ஷியின் பத்திரிகையான வோல்கிஷர் பியோபாச்சர் பின்வருமாறு எழுதியிருக்கிறது. "ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் பின்பக்கத்தில் வெகுதூரத்தில் ஒரு புதிய போர்முனேயை அமைக்கவேண்டும். அது இன்னும் பூர்த்தியாகவில்லே." ஜெர்மனியின் தேசப்படத்தில் மாறுதல்கள் ஏற்படுவது தவிர்க்கமுடியாததென்று கோயபல்ஸ் ஓலமிடுகிருன். சைலிஷியாப் போர்முனேயில் ஹிம்லர் சுறுசுறுப்புடன் பையன்களேயும், குழந்தைகளேயும், விருத்தர்களேயும் போருக்குச் செல்லும்படி கட்டாயப்படுத்தி வருகிருன்.

வி வி வி வி வி

**வார்ஸா.** போலந்தின் தலேநகரமான வார்ஸா 5½ வருடங்களுக்குப் பின் விடுவிக்கப்பட்டது. 1939-ம்ஞு ஸெப்டம்பர் மாதம் 28உயன்று அது ஜெர்மன் வசமாகிற்று. லப்ளினிலுள்ள கமிட்டி வார்ஸாவுக்குள் நுழைந்து போலந்தின் நிர்வாகத்தை ஒப்புக்கொண்டுவிட்டது.

வார்ஸாவின் துக்ககரமான தோற்றங்கள் எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். நாஸிகளின் காட்டுமிராண்டித்தனத்துக்கு அதுதான் முதல்முதலில் இறையாகிற்று. நாஸிகள் போலந்துக்குள் நுழைந்தபொழுது வார்ஸாவைச் சரண்புகுந்துவிடும்படி ஜெர்மனி வேண்டிக்கொண்டது. அது மறுதளித்து எதிர்த்துப் போராடுவதென்று முடிவு செய்தபொழுது அதன்பேரில் ஏராளமான வெடிகுண்டுகளே ஜெர்மனி வர்ஷித்தது. இது வார்ஸாவுக்கு ஏற்பட்ட முதலாவது தீங்கு. இரண்டாவதாக ஜெர்மன் ஆக்கிரமிப்புக்குப்பின் பொதுமக்கள் துன்புறுத்தப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் இரக்கமன்னியில் கொலே செய்யப்பட்டார்கள்; அயல் நாடுகளுக்கு வெளியேற்றப்பட்டார்கள். காவல்முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். மூன்றுவதாக ஜெனரல் போரிடமுள்ள சொரில்லாப் படைகள் சென்ற வருஷத்தில் காலம் தப்பி நாஸிகளின் ஆக்ஷியிலிருந்து ஜெர்மனியை விடுவிக்க முயன்றுர்கள். இரண்டு மாதங்கள் வரையில் தேசாபிமானப் படைகள் சமாளித்து நின்றன. வார்ஸாவின் சில பாகங்களேயும் விடுவித்தன. ஆனுல் அந்த சமயத்தில் ருஷ்யர்கள் உதவிசெய்ய முன்வரவில்லே. அப்பொழுது வைடப்ஸ்கிலிருந்து முன்னேறிய ருஷ்யப்படைகள் போலிஷ் தலேநகரத்தின் எல்லேச் சரகங்களே அடைந்துவிட்டன. ஆகிலும் ஜெர்மனியின் பிடிப்பு பலமாக இருந்தது. ருஷ்யப் படைகளுக்குப் பின்புறமுள்ள போக்குவரத்துகள் பலப்படவில்லே. அந்த சமயத்தில் பிரிடனும், அமெரிக்காவும் அடைபட்டிருந்த படைகளுக்கு விமானமூலம் உணவுப்பொருள்களேப் போடுவதைத்தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லே.

இப்பொழுது வார்ஸா விடுதலே பெற்றுவிட்டது. ருஷ்யர்களின் முன்னேற்றத்திற்கு எதிர்ப்பில்லே. போரை நடத்தாமலேயே ஜெர்மன் சேனேகள் நகரத்தைக் கைவிட்டுவிட்டு ஓடிவிட்டன.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனே.** ஆர்டெனிஸிலுள்ள ஜெர்மனியின் உப்பல் ஸ்தானம் அநேகமாக அழிக்கப்பட்டுவிட்டது. நேசதேசப் படைகள் ஸெயின்ட் வித்லதைப் பிடித்துவிட்டார்கள். அதன் வழியாகத்தான் ருண்ட்ஸ்டெட் படைகளே ஸீக்பிரட் அரணுக்குப் பின்வாங்கி வருகின்றுன். மால்மெடிக்குத்தெற்கில் பீல்ட் மார்ஷல் மாண்ட்காமெரி செய்து வரும் தாக்குதல் திருப்திகரமாக நடைபெறுகிறது. இரண்டு நாட்களில் ம்யூஸ் நதியை அடைந்துவிடுகிறது, மூன்று வாரங்களில் ஆண்ட்வெர்ப்பைப் பிடித்துவிடுகிறது என்ற ஹிட்லரின் கனவுகளெல்லாம் முறியடிக்கப்பட்டுவிட்டன. பிரிடிஷ் அமெரிக்கப் படைகளே அழித்துவிடுவதென்ற அவனுடைய எண்ணமும் நிறைவேறவில்லே.

**போரின் உச்ச நிலை.** கிழக்கிலும், மேற்கிலும் உதைபட்டு வருவதினால் சில நாட்களுக்குள் ஜெர்மனிக்கு மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுவிட்டது. அடுத்துவரும் சில வாரங்களில் ஜெர்மனியின் விதி நிர்ணயிக்கப் படுமென்றும் யுத்தத்தின் முடிவும் துரிதப்படுமென்றும் தோன்றுகிறது. "மேற்கு முனையில் ஜெர்மனி செய்துவரும் தாக்குதலானது யுத்தத்தை நீடிக்காமல் முடிவை துரிதப்படுத்தும்" என்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் சொன்னது உண்மையானதென்றே நினைக்க வேண்டியதாக இருக்கிறது. மேற்குப் போர்முனையில் ஏராளமான ஜெர்மன் படைகளை நேசதேசத்தார்கள் தேக்கி வைத்திராவிடில் கிழக்கில் இவ்வளவு சுலபமாகவும் துரிதமாகவும் ருஷ்யர்கள் முன்னேறியிருக்கமுடியாது. இப்பொழுது மேற்குப் போர்முனையையா அல்லது கிழக்குப் போர்முனையையா தற்காப்பு செய்வதென்று புரியாமல் ஜெர்மனி திகைத்து நிற்கின்றது. ஒரு பக்கத்தில் அவர்கள் ஓடர் நதியை நம்பியிருக்கிறார்கள். ருஷ்யர் ஓடரைப் போன்ற அநேக நதிகளைத் தாண்டியிருக்கிறார்கள். ஜெர்மன் ரேடியோவில் பேசும் ராஜீய வியாக்யானியான ஹான்ஸ் பிரிட்சி பின்வருமாறு எச்சரிக்கை செய்திருக்கிறார். "ருஷ்யாவின் தற்போதிய தாக்குதல் ஜெர்மனியின் மர்மஸ்தானத்துக்கு சமீபத்தை அடைந்துவிட்டது. ஜெர்மன் உயிர் நிலையையும் அது சமீபித்துவிட்டது." இனிமேல் ஜெர்மனி திட்டப்படி பின்வாங்க முடியாது. அல்லது முன் தயாரிப்புள்ள ஸ்தானங்களுக்கும் பின்வாங்குவதற்கு இடமுமில்லை.

மேற்கு முனையில் நேசப் படைகள் மறுபடியும் ஜெர்மன் எல்லைச் சரகத்தைத் தாண்டி அநேக முனைகளில் முன்னேறித் தாக்கி வருகிறார்கள்.

வி வி வி வி வி

**விந்தையானது.** இந்த சங்கடத்தில் ஜெர்மனியின் நடத்தை ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது. அவர்களுடைய நாட்டில் படையெடுப்பு ஏற்பட்ட பின்னும் நிலைமை மோசமாகி வரும்பொழுதும் இதாலியிலிருக்கும் படைகளை தாய்நாட்டின் தற்காப்புக்காகத் திரும்பி அழைக்காமல் இதாலியில் இன்னும் வைத்திருக்கிறார். ஆர்டெனிஸிலிருந்து பின்புறம் துரத்தியடிக்கப்பட்டபோதிலும் ஆல்ஸாஸில் முன்னேறித் தாக்கி வருகிறார்கள். ஸைலிஷியாவுக்கு ஆபத்து ஏற்பட்ட பின்னும் அவர்கள் புடாபெஸ்டில் போரை நடத்தி வருகிறார்கள். இதற்கு என்ன காரணம்? அபாரமான நெருக்கடியினால் ஏற்பட்ட புத்தியின்மையும், குழப்பமும்தான் அதற்குக் காரணங்கள். இதை நியூ ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை விளக்கிச் சொல்லியிருக்கிறது :—

"ஜெர்மன் ஒலிபரப்பில் ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்யாத ஒரு பிரசங்கமும் கிடையாது. காரிய காரணங்களைச் சொல்லி விவாதம் செய்யாதே. எதைச் செய்தாலும் அதன் லாப நஷ்டத்தை கவனிக்காதே. அவ்விதம் செய்தால் தவறான தோற்றம்தான் ஏற்படும். இப்பொழுது ஜெர்மனிக்கு மிகவும் கியாதி பெறக்கூடிய காலம் வந்து விட்டது. அவர்கள் முன்போல் சாவதானமாக இருக்கக்கூடாது. அதற்கு ஆபத்து அதிகரிக்கலாம். அப்பொழுது நீங்கள் சமாளித்து நிற்காவிடில் நீங்கள் முட்டாள்களாகவும், அற்பர்களாகவும் மதிப்புக்கு அருகதையில்லாதவர்களாகவும் கருதப்படுவீர்கள். இந்த யுத்தத்தில் அநேக அற்புதச் செய்கைகள் தோன்றியிருக்கின்றன. 1940-ல் இங்கிலாந்தில் ஒரு அற்புதம் ஏற்பட்டது. மற்றொன்று ஸ்டாலின்கிராடில் நேர்ந்தது. ரைன் நதிக்கரையிலும் கோனிக்ஸ்பர்க்கிலும் அற்புத நடவடிக்கைகள் நடைபெறக்கூடும். அவ்விதம் நடைபெறுமென்று நாம் நம்பியிருக்கலாம். அவ்விதம் நடைபெறாவிட்டாலும் நம்முடைய நடைமுறையில் வித்தியாசம் காணப்படுவதற்கு இடமில்லை. வாதத்தையும் அற்பமான எண்ணங்களையும் புறக்கணித்தது சரியென்று முடிவுக்கு வரலாம். இப்பொழுது நாம் செய்யவேண்டியதெல்லாம் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை நன்குணர்ந்து அதை சமாளித்து வரவேண்டும்."

ஜெர்மன் ஒலிபரப்பிலும் தேசத்தைச் சுற்றி அக்னி ஜ்வாலைகள் ஏற்பட்டிருக்கிறதென்றும், எல்லா இடங்களிலும் சாவும் அழிவும் ஏற்பட்டுவிட்டதென்றும், மாதாக்கோவில்களும் கட்டடங்களும் தகர்க்கப்படுகின்றனவென்றும், காடுகளும் பயிர்களும் தீப்பற்றி எறிகின்றனவென்றும், நதிகளிலும் ஏரிகளிலும் ஜனங்களின் ரெத்தம் வெள்ளமாய் ஓடுகிறதென்றும் வர்ணிக்கப்படுகிறது.

அதன் பிறகு தாய்நாட்டிற்காக எல்லோரும் சுயநல மறுப்புடன் தியாகம் செய்யவேண்டுமென்று வேண்டுகோள் செய்யப்படுகிறது.

இவ்விதமாக ஜனங்களின் உணர்ச்சியைக் கிளப்பச் செய்யும் பகீரதப் பிரயத்தனங்கள் நீடித்திருக்கச் செய்யமுடியாது. அதற்கு எதிர்முறையில் கிளர்ச்சி ஏற்பட்டால் அது பலமாகயிருக்கும். மிகாபரைப் போல் அகஸ்மாத்தாக ஏதாவது நேரிடுமென்று ஜெர்மனி எதிர்பார்க்கிறது. புத்திசாலித்தனமும் பகுத்தறிவும் போய்விட்டன. நாட்டில் கெடுதலான உணர்ச்சி இருக்கும்படி கட்டாயம் செய்யப்படுகிறது. இந்த மாயையை அகற்றுவதும் கோயபல்ஸ் பல்லவி பாடும் "சண்டை போடும்பொழுது சந்தோஷத்துடனிருங்கள். நேசதேசத்தாருடன் சமாதானம் செய்துகொள்ளுவதைவிட மரணம் நல்லது" என்ற வார்த்தைகளையும் நிறுத்துவதும்தான் நேசதேசத்தார்களின் அலுவலாகும்.



வி வி வி வி வி

**மற்ற போர்முனைகள்.** இதாலியப் போர்முனையில் அயர்வு நிலைபெறுகிறது. அமெரிக்கர்கள் லூஸானில் சாவதானமாக முன்னேறுகிறார்கள். மறுபடியும் பார்மோசாத்தீவும், நாகோயாவும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. பர்மா முனையிலிருந்து நல்ல தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அக்கியாபுக்குத் தெற்கிலுள்ள ராம்ரித்தீவு கைப்பற்றப்பட்டது. தெற்கு பர்மாவுக்கு அதன்மூலம் ஆபத்து அதிகரித்துவிட்டது.

மத்திய பர்மாவில் நேசதேசப்படைகள் ஏற்கனவே 70 மைல்கள் முன்னேறியிருக்கின்றன. அவைகள் இராவதி நதியைத் தாண்டிவிட்டன. மணிவாவும் விழுந்துவிட்டபடியால் நேசதேசப்படைகள் மாண்டலேயிக்குச் சமீபத்தில் வந்துவிட்டன.

வாண்டிங் வீழ்ச்சி பெற்றபின் லெடோ ரஸ்தாவுக்கும், பர்மா ரஸ்தாவுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது பர்மாவிலிருந்து சாமான்கள் சைனாவுக்குச் செல்லக்கூடும்.

தென்கிழக்குச் சைனாவில் காண்டன்—ஹாங்கோ இருப்புப்பாதையின் தெற்குப் பகுதியை ஒட்டி மறுபடியும் கடும்போர் நடைபெறுகிறது. கிழக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் ஸப்ளைகள் வரும் வழியை மூடிவிடுவதற்காக ஜப்பானியர்கள் மற்றொரு பிரயத்னம் செய்து வருகிறார்கள்.

வி வி வி வி வி

**நாம் பிராசீனமான குடியரசுள்ள நாடு.** இந்த நெருக்கடியான சமயத்தில் பிரதம மந்திரி செய்து வரும் மதிக்கக்கூடாத சேவைகளில், விஷயங்களை வெளிப்படுத்தக்கூடியதும், சந்தேகங்களை திடப்படுத்தக்கூடியதும், நழுவிச் செல்லுகிறவர்களை உத்சாகப்படுத்தக்கூடியதுமான சொற்பொழிவுகளை ஆற்றுவதும் ஒன்றாகும். அவ்விதமாக ஜனவரி மாதம் 17-ந்தேதி ஜனப் பிரதிநிதி சபையில் மிஸ்டர் சர்ச்சில் இரண்டு மணி நேரம் பேசி சபையின் நம்பிக்கையைப் பெற்றார். அதிகார ஆசையைப்பற்றி அவர் சொல்லியிருக்கும் அபிப்பிராயம் சரித்திரத்தில் எழுதக்கூடியது. பிரிடன் பேராசை பிடித்தலைகிறது என்று சொல்லப்படும் குற்றச் சாட்டைக் கண்டு கோபம் மூண்டு அவர் கர்ஜித்தார். "நாம் பிராசீனமான குடியரசு நாடு. நமக்கு ராஜ்யங்களை சம்பாதிக்கும் ஆசையில்லை; எண்ணெய் பிரதேசங்களைப் பிடிக்க நாம் ஆசைப்படவில்லை. நமக்கு தளங்கள் தேவையில்லை. உலகத்தின் மற்ற எந்த வல்லரசுடனும் நாம் பலப்போட்டி போடவில்லை. நம்முடைய உரிமைகளைக் காப்பாற்ற நாம் முயலுகிறோம். அதற்காக உலகத்திலுள்ள சிறிய அல்லது பெரிய நாடுகளின் உரிமைகளை பாதிக்கும் முறையில் நாம் குறுக்கிடவில்லை. நாம் அநேக தியாகங்களைச் செய்திருக்கிறோம். இன்னும் அவ்விதம் செய்துவருவோம். அதற்காக மதிப்பும் கண்யமும் வேண்டுவதைத்தவிர வேறு பிரதிப்ரயோசனத்தை நாம் எதிர் பார்க்கவில்லை. நமது நடவடிக்கைகளில் மனிதர்களின் செய்கைக்கு இயற்கையான சில தவறுதல்கள் இருக்கலாம். ஆகிலும் நம்முடைய நடவடிக்கைகள் மகத்தானவை, சுயநலமற்றவை, உயர்வானவை, யதார்த்தமுள்ளவை. பிரிடனும், பிரிடிஷ் சாம்ராஜ்யமும் சுயகாரிய பிரியர்கள், அதிகார ஆசை பிடித்தவர்கள், தேச ஆசை பிடித்தவர்கள், சூழ்ச்சி செய்கிறவர்கள், ஐரோப்பிய சக்திகளிலும் குடியேற்ற நாடுகளை அபிவிருத்தி செய்வதிலும் நோக்கமுள்ளவர்கள் என்று எவர் குற்றம் சாட்டினாலும் அதை நான் ஆக்ஷேபிக்கிறேன். ஒருவரும் எங்களை தூஷிக்கவேண்டாம்."

வி வி வி வி வி

**கிரீஸ்.** கிரீஸைப் பற்றி மிஸ்டர் சர்ச்சில் சொன்ன அபிப்பிராயத்தை அதிகார ஆசையைப் பற்றி ஒரு மேற்கோளாக வைத்துக்கொள்ளலாம். விடுதலையடைந்த நாடுகள் சம்பந்தமாக பிரிடனுக்கு இருந்த மனப்பான்மைக்கு கிரீஸ்தான் உரை கல். கிரீஸைப் பற்றி அவர் பின்வருமாறு சொன்னார். "பிரிடனின் கொள்கை தெளிவானது. சாத்யமான வரையில் ஒன்றுபட்ட சிறந்த நிர்வாகத்தை ஸ்தாபிப்பது, கூடுமான வரையில் அந்நாட்டிற்கு உணவுப் பொருள்களை அனுப்புவது, நியாயமும் ஒழுங்கு முறையும் நிலைபெறும்படி பரிபாலிப்பது, பொதுஜன வாக்கோ அல்லது தேருதலோ நடைபெறும்படி செய்வது, சாத்யமானபொழுது வெகு சீக்கிரத்தில் அந்நாட்டை விட்டு வெளியேறுவது."

**நிபந்தனையற்ற சரணாகதி.** இதைப்பற்றி பேசும்பொழுது மிஸ்டர் சர்ச்சில் பின்வருமாறு சொன்னார். "எதிரிகள் உரிமை கொண்டாடக் கூடாது. ஆகிலும் நீதிமுறைப்படிக்கும் நியாயப்படிக்கும் கிடைக்கக்கூடிய லாபங்களை எதிரி இழந்து விடாமல் நாங்கள் பார்த்துக்கொள்ளுவோம். நாங்கள் தேசங்களை அழிக்கத் தோன்றியவர்களல்ல. தேச மக்களை கொலைசெய்ய முற்பட்டவர்களல்ல. எங்களுடைய பழக்கவழக்கங்களாலும் இயற்கை குணங்களாலும் நாங்கள் கட்டுப்பட்டிருக்கிறோம். நாங்கள் பிசாசுகள் அல்ல, நாங்கள் விசுவாசமுள்ளவர்கள். மனித வர்க்கம் இப்பொழுது உழன்று வரும் ரத்த வெள்ளம், குழப்பத்திலின்றும் சமாதானம், சுதந்திரம், நியாயம், சட்டம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தை அமைக்க முயலுகிறோம். அந்த ஸ்தாபனம் சாச்வதமாகவும் சர்வ ஜனங்களும் நிம்மதியாக வசிக்கக்கூடியதாகவும் இருக்கும்."

வி வி வி வி வி

**யுத்த நோக்கங்களைப்பற்றி ஜனாதிபதி ரூஸ்வெல்ட்.** நான்காவது தடவை அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் ஜனாதிபதி ஆற்றிய சொற்பொழிவில் பிரதம மந்திரியின் அபிப்பிராயங்களையே வெளியிட்டிருக்கிறார். அவர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். நாம் சிறந்த முறைகளை அடைய முயலுகிறோம். நாம் அதை உடன் காலத்தில் அடையாவிட்டாலும் நமது முயற்சியை இடைவிடாது செய்துவருவோம். நாம் தவறுதல்களை செய்யக்கூடும். ஆகிலும் அந்தத் தவறுதல்கள் தைரியக் குறைவினாலும் அல்லது ஒழுங்கு முறைகளைக் கைவிட்டதிலிருந்தும் ஏற்பட்டதாக இருக்கக்கூடாது.

"நாங்கள் மனிதர்களைப்போல வாழ பயிற்சிபெற்றிருக்கிறோம். நெருப்புக் கோழிகளைப்போலும் அல்லாது நாய்களைப்போலும் வசித்துவரவில்லை. நாங்கள் உலகத்தின் பொதுமக்களாகவும் மனித வர்க்கத்தின் அங்கத்தினர்களாகவும் வாழ விரும்புகிறோம். எமர்ஸன் சொன்னமாதிரி ஒரு சிநேகிதனைப்பெறவேண்டுமென்றால் சிநேகபாவத்துடனிருப்பதுதான் நல்லவழி என்ற உண்மையை நாம் அறிவோம்."

வி வி வி வி வி

**பிரசாரம்.** யுத்தத்தைப்பற்றி சரியான தகவல்களை பரவச்செய்யும் முயற்சியைப்பற்றி பரிகாசம் செய்துவந்த காலம் போய்விட்டதென்று நாம் நினைக்கிறோம். இன்னும் அவ்வித அபிப்பிராயம் கொண்டுள்ளவர்களுக்கு இந்த வாரத்தில் மிஸ்டர் G. S. பாஸ்மான் ஆற்றிய சொற்பொழிவு புத்தியைப்புகட்டக்கூடும். அநேக வருஷங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய அறிக்கை, பிரசார இலாகாவின் நடவடிக்கைகள் இப்பொழுது விஸ்தாரமடைந்து விட்டன. போர் முனையைப் பற்றிய தகவல்களை அது பிரசங்கங்கள் மூலமாகவும் சுவர்ப்படங்கள் மூலமாகவும், பிலிம்கள் மூலமாகவும், பிரசுரம் செய்து வருகிறது. ஒலிபெருக்கு அநேக பாஷைகளிலும் செய்யப்படுகிறது. ஒரு தினத்தில் அநேகம் தடவைகள் நடப்புத் தகவல்கள் ஒலி பெருக்கப்படுகின்றன. போர் முனையிலிருந்து கண்ணோக்காரர்கள் அனுப்பும் விருத்தாந்தங்களையும் ஜனங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்தியாவின் அரிய செய்கைகள், சேவைகள், அதன் சக்தி முதலியவற்றைப்பற்றி அயல் நாடுகளுக்கும் தகவல்களைக் கொடுத்து வருகிறது. யுத்தத்தில் தோல்வியுற்று பொய் பிரசாரத்தையே பெரும்பாலும் நம்பியிருக்கும் எதிரியின் கெடுதலான ஒலிபரப்புகளை எதிர்த்து இடைவிடாது பிரசாரம்செய்து வருகிறது. அஜாக்ரதையான சம்பாஷணையையும் இங்கிதமில்லாத கடிதப்போக்குவரத்தையும் நடத்துவதை எதிர்த்து நடைபெறும் நடவடிக்கைகளிலும் அது பங்கெடுத்துக்கொள்ளுகிறது. சிறிய சேமிப்பு இயக்கத்திலும் கள்ள வியாபாரத்தைத் தடுப்பதிலும் அது பேருதவி செய்து வருகிறது. அநேக கட்டுப்பாடு உத்திரவுகளையும் அது அன்வயப்படுத்திச் சொலலுகிறது. சிலாக்கியமான வீடுகள், ரஸ்தாக்கள், அதிகமான சத்துப்பொருள், சுகாதார வாழ்வு முதலிய அம்சங்களை அடிப்படையாகக்கொண்ட உலக சீர்திருத்த திட்டங்களையும் அது ஒலிபெருக்கி வருகிறது. யுத்தக் கண்காக்ஷிகள் மூலம் நவீன யுத்தத்தின் வியாபகத்தையும் சிக்கல்களையும் அது வெளிப்படுத்துகிறது. கைத்தொழிலபிவிருத்திக்கு வருங்காலத்தில் மேன்மை உண்டாகுமென்பதையும் அது வெளியிட்டு வருகிறது.

---

## உச்ச நிலையைக் குறித்து.

(விக்ஹாம் ஸ்டீட்).

நேசதேசங்களின் ராஜீய நிலைமையும் ராணுவ நிலைமையும் நன்கு சோதனை செய்யப்படுகின்றன. இந்த சோதனைக்குப்பின் தெளிவான விளைவுகளுடன் இரண்டும் தோன்றிவிடும். ராஜீய விளைவுகளை நன்குய் ஆராய்ச்சி செய்யுமுன் ராணுவ வெற்றி ஏற்பட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளைவிட இது சிலாக்யமாக இருக்கும். மேலும் வின்ஸ்டன் சர்ச்சில்,



ஜனாதிபதி ரூஸ்வெல்ட், மார்ஷல் ஸ்டாலின் இவர்களின் சந்திப்பினின்றும் அதிக விளைவுகள் ஏற்படக்கூடும்.

மூன்று பெரிய தலைவர்களின் கூட்டத்தில் 1943-ம் வருஷ முடிவில் நடைபெற்ற டெகரான் மகாநாட்டைப்போல் உபயோகமுள்ள முடிவுகள் ஏற்படுமென்று நினைக்கக்கூடும். மேற்குப் போர்முனையில் கடும் போரும் புடாபெஸ்டைச் சுற்றிலும் புடாபெஸ்டிலும் கோரமான போர் நடைபெறுவதிலும் ஒரு முக்கியமான பிரச்னை தோன்றக்கூடும். அதற்கு ஒரு விடையையும் நாம் கண்டுபிடிக்கமுடியவில்லை. நேசதேசப் படையெடுப்பைத் தவிர்க்க ஜெர்மனியின் பலமான முயற்சிகள் ஜெர்மன் ராணுவ சக்தியின் இறுதி படை திரட்டா அல்லது பூர்ணமான தோல்வியை ஒத்திவைக்க ஜெர்மனி இன்னும் அதிக தீவிரமான முயற்சிகளைச் செய்யக்கூடுமாவென்பதும்தான் அந்த பிரச்னை.

ஆர்டெனிஸ் போரிலும் வடமேற்கு ஹங்கேரிப் போரிலும் ஜெர்மானியர்கள் ராணுவ அதிகாரிகள் எதிர் பார்த்ததற்கு மிகுதியான படைகளை உபயோகித்து அதிக மூர்க்கத்தனமாகவும் போரை நடத்தியிருக்கிறார்கள். "இப்பொழுது மிகுந்த அபாயம் ஏற்பட்டுவிட்டது. சர்வத்தையும் தியாகம் செய்யவேண்டும்" என்று ருண்ட்ஸ்டெட் விடுத்த செய்தியையும் "ருண்ட்ஸ்டெட் அவனிடமுள்ள எல்லா மூலபலத்தையும் ஒன்று திறட்டியிருக்கவேண்டும்," என்று மாண்ட் காமரி விடுத்த அறிக்கையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் ருண்ட்ஸ்டெட்டின் முன்னேற்றத்தை ஒழித்துவிட்டால் மேற்குப் பக்கத்திலுள்ள நேசநாடுகள் ஜெர்மனிக்கு சீர்படுத்தமுடியாத நஷ்டத்தை உண்டுபண்ணிவிடுமென்ற முடிவுக்கு வரலாம். அதே மாதிரி ஹங்கேரியிலுள்ள நஷ்டங்களும் ஜெர்மனியின் ஐச்வர்யங்களை பலமாக அழித்து வருகின்றனவென்று வெளிப்படுத்துகின்றன. நேசதேச விமானத்தாக்குதலும் மேற்குப் பக்கத்திலுள்ள ஜெர்மன் ஐச்வர்யங்களை பலமாக அழித்துவருகின்றன. ராணுவ முறையில் ஐரோப்பிய நடவடிக்கைகள் ஜெர்மன் சேனைத் தலைவர்களுக்கு யாதொரு ஆர்வத்தையும் உண்டுபண்ணவில்லை.

பர்மாவில் நேசதேச வெற்றிகளும் பிலிப்பைன்ஸில் அமெரிக்க வெற்றிகளும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளுக்கும் யாதொரு ஆறுதலையும் அளிக்கவில்லை. ஜப்பானிய பலம் அழிக்கப்படுமுன் ஐரோப்பிய யுத்தம் முடிவடைந்துவிடுமென்று நினைத்தது போக நேசதேசத்தாரின் இரு எதிரிகளும்கூடிய சீக்கிரத்தில் வீழ்ச்சி பெற்றுவிடுவார்களென்று நாம் எதிர்பார்க்கலாம். எல்லாப் போர்முனைகளிலும் உலகமளாவிய யுத்தத்தின் உச்ச நிலை சமீபத்துவிட்டதென்பது தெளிவுபடுகிறது.

ராஜீய முறையிலும் உச்ச நிலைமை தோன்றும், அதை மூன்று பெரிய தலைவர்களும் ஒன்றுகூடி சமாளித்துவிடுவார்கள். நேசதேசத்தாரிடம் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டுவிட்டதென்று கிளம்பும் வதந்திகளைப் பரப்புகிறவர்களுக்கு அவைகள் "ஜெர்மனியின் கட்டுக்கதைகள்" என்று ரூஸ்வெல்ட் எச்சரிக்கை செய்திருப்பதற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றன.

கடைசி சமயத்தில் பூர்ணமான வெற்றியிலிருந்து தப்பித்துக்கொள்ள நேசதேசத்தாரிடம் இறுதி லக்ஷியத்தில் ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறதென்று பிரசாரம் செய்வதை ஜெர்மனி நம்பியிருக்கிறது. நேசதேசக் கொள்கைகளில் உள்நாட்டில் ஏற்படும் சில விரோதப்பான்மையை திறமையுடன் பயன்படுத்தி ஜெர்மன் பிரசாரம் அற்பமான சந்தேகங்களை தாத்காலிக மனஸ்தாபனங்களாக ஜோடனை செய்து வருகிறது. இந்த பிரசாரமும் ருண்ட்ஸ்டெட்டின் மேற்குமுனைத் தாக்குதலைவிட அதிக லாபத்தை அடைந்துவிட முடியாது. ராணுவ முன்னேற்றத்தைப்போல நேசதேச ராஜீய முனையில் பலஹீனமான பாகங்களை ஜெர்மனி கண்டுபிடிக்கக்கூடுமானாலும் அந்த பலஹீனத்தை நேசதேசத்தார்கள் எவ்விதம் பலப்படுத்தி விடுவார்களென்பதும் வெளிப்பட்டுவிட்டன.

---

## நிபந்தனையற்ற சரணாகதி.

### அதன் அர்த்தமென்ன ?

**(காமன்ஸ் சபையில் 1945-ம் வருஷம் ஜனவரி மாதம் 17-ம் தேதியன்று மிஸ்டர் சர்ச்சில் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்).**

நிபந்தனையற்ற சரணாகதிக் கொள்கையைக் கைவிட்டுவிடவும் அவ்வித சரணாகதியைச் செய்யும் வரையில் ஜெர்மனியும் ஜப்பானும் எவ்விதச் சூழ்ச்சிகளைச் செய்தாலும் அவர்களுடன் எவ்விதமான பேச்சுகளைத் துவக்கவும் நம்மை ஒன்றும் தூண்டுதல் செய்ய முடியாது.

ஆகிலும் நிபந்தனையற்ற சரணாகதிக் கொள்கையை நிறைவேற்றுவதினால் வெற்றிபெற்ற வல்லரசுகளுக்கு மானிடவர்க்கத்தினிடம் உள்ள கடமையையும் நாகரீகம் படைத்த கிருஸ்தவ நாடுகள் என்ற முறையிலுள்ள பொருப்பும் குறைந்துவிடாதென்று ஜனாதிபதி ரூஸ்வெல்டும் நானும் அடிக்கடி சொல்லியிருக்கிறோம்.

நாங்கள் எதிரிகளிடம் பின்வருமாறு சொல்லுகிறோம். "நீங்கள் நிபந்தனையற்ற சரணாகதியைச் செய்யவேண்டும், ஆகிலும் அதற்கு எவ்வித வரம்பு இருக்கிறதென்பதை நீங்கள் அறிவீர்கள். நாங்கள் தேசங்களை அழிப்பவர்களல்ல, ஜனங்களைச் சிதைப்பவர்களல்ல, நாங்கள் உங்களுடன் பேரம் செய்யவில்லை. உங்களுடைய அபிப்பிராயப்படி நாங்கள் செய்வது சரியில்லையென்று இருக்கலாம். எதிர்த்துப் போராடுவதை நிபந்தனையின்றி விட்டுவிடுங்கள். நாங்கள் எங்களுடைய பழக்கவழக்கங்களுக்கும் இயற்கை குணங்களுக்கும் கட்டுப்பட்டவர்கள் தான்."

நிபந்தனையற்ற சரணாகதிக் கொள்கையைக் கைவிடுவது இப்பொழுது புத்தியீனம் என்பதற்கு மற்றொரு காரணமுமுண்டு. அந்தக் காரணமும் நான் முன்சொன்ன காரணத்திற்கு ஒவ்வக்கூடாததல்ல, முரணானதல்ல. எதிரிகள் ஆயுதம் தாங்கி நிற்கும் வரையிலும், ஐரோப்பாவினுடையவும், உலகத்தினுடையவும் எதிர்கால பத்திரத்தை உத்தேசித்து அவர்களுடன் நாம் விவாதம் செய்யவேண்டியிருக்கும். எதிரிகளின் அக்கிரமமான நடத்தைகளினால் இந்த விவாதத்துக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது யுத்தம் துவங்கி 65 மாதங்கள் ஆகிவிட்டன. அதன் பளுவு இன்னும் மிகுதியாக இருக்கிறது.

நாம் குதூகலப்பட முகாந்திரமிருந்துவருகிறது. கிழக்கிலும், மேற்கிலும் நமது கட்சியில் ஏராளமான படைகள் குவிந்து நிற்கின்றன. ராணுவ வெற்றி வெகுதூரத்தில்தான் காணக்கூடியதாக இருக்கிறது. அதற்கு நாம் அபாரமான தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கும். ஆகிலும் வெற்றி நமக்குத்தான் என்பதில் ஐயமில்லை.

நமக்கு ஏற்பட்டிருந்த பீதி மறைந்து எதிரிகளுக்கு நெருக்கடி உண்டானபொழுது அவர்களுக்கு கதியற்ற முறையில் அதிக ஊக்கம் ஏற்பட்டது. ஒன்றுபட்ட ஆத்ம ரக்ஷணம் என்ற நமது பாந்தவ்யம் நமது பக்கத்தில் தளர்ச்சி பெற ஆரம்பித்துவிட்டது. அது நிலைகுலைந்துவிடும்போலிருக்கிறது. ஆகையால் நமக்குள் உணர்ச்சியிலும் மனோதிடத்திலும் அதிக ஒற்றுமை ஏற்படவேண்டும். நமது ஒன்றுபட்ட லக்ஷியமும் வெளிப்படுத்தப்படவேண்டும். அந்த ஒற்றுமையானது எதிரிகளின் தாத்காலிகமான உத்சாகத்தை அழிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். அவ்விதமான ஒன்றுபட்ட மனப்பான்மையையும் உத்சாகத்தையும் நாம் வெளிப்படுத்த முடியுமா? அதுதான் இப்பொழுது உள்ள முக்கியமான பிரச்னை. அநேக சமயங்களில் தேசங்கள் ஒன்றுபட்டு வெற்றிபெற்று வரும்பொழுது கடைசியில் ஒற்றுமை குலைபட்டுச் சிதறிவிடுவதை நான் அறிவேன். சேனைகளின் கஷ்டங்களுக்கும் தியாகங்களுக்கும் பிறகு அவைகள் மகாநாடு கூடிப் பேசும்பொழுது கிடைத்த லாபங்களை எல்லாம் அந்நாடுகள் உதறித் தள்ளியிருக்கிறார்கள்.

### பிரதிநிதி சபையின் கடமை.

ஆகையால் சபையில் பேசுவதற்கு இது முக்கியமான தருணம் என்று நினைக்கிறேன். யுத்த முயற்சியில் ஈடுபட்டதற்கு எல்லாக் கக்ஷிகளுக்கும் பெருமை உண்டு. நல்லதுக்கோ கெடுதலுக்கோ நாம் இதில் ஈடுபட்டு ஒற்றுமையுடன் இருந்து வருகிறோம். ஒவ்வொரு கக்ஷியும் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு நடந்துகொள்ள கடமைப்பட்டிருக்கிறீர்கள். நிபந்தனையற்ற சரணாகதிக் கொள்கையின் விரிவான அம்சங்களைவிட அதன் நுட்பமான விவரங்களை வெளியிட்டால் அதன்மூலம் போரின் முடிவுக்கு இடையூறுகள் ஏற்படும். பொதுப்படையான இந்த விஷயங்களை ஜெர்மானியர்கள் அறிவார்கள்.

அநேக தேசங்கள் நிபந்தனையற்ற சரணாகதியைச் செய்திருக்கின்றன. அந்நாடுகளுக்கு சௌக்கியமான வாழ்க்கை அமைக்கப்பட்டுவிட்டது. உதாரணமாக பின்லாந்தையும் இதாலியையும் எடுத்துக்கொள்ளுவோம். அந்நாட்டு மக்களை நாம் அடிமைப்படுத்தவில்லை, வதைக்குட்படுத்தவில்லை. இதற்கு எதிர் முறையாக நான் ஜெர்மனிக்குப் பின்வருமாறு சொல்லக்கூடும்.

நீங்கள் இப்பொழுது சரணடைந்தால் 1945-ம் வருஷத்தில் நீங்கள் அனுபவிக்கப்போகும் கஷ்டங்களோடு யுத்தத்துக்குப் பின் நீங்கள் அனுபவிக்கப்போகும் சிரமங்கள் ஒப்பிடக்கூடியதாக இருக்காது. நிபந்தனையற்ற சரணாகதிமூலம் ஏற்படும் சமாதானமூலம் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் ஏற்படக்கூடிய மகத்தான கஷ்டமும் துயரமும் உடன்காலத்திலேயே குறைந்துவிடும். நாங்கள் பிசாசுகளில்லை. நாங்கள் உலகத்தில் சுதந்திர தீபத்தை ஏற்றிவைக்க முற்பட்டிருக்கிறோம். மானிட வர்க்கம் இப்பொழுது உழன்றுவரும் ரத்த வெள்ளத்தினின்றும் குழப்பத்தினின்றும் உலகத்தை உத்தாரணம் செய்து சமாதானம், சுதந்திரம், நியாயம், சட்டம் முதலிய அம்சங்களுள்ள ஒரு அமைப்பை ஸ்தாபிக்க முயன்று வருகிறோம். இந்த அமைப்புதான் எல்லோருக்கும் நிம்மதியான வாசஸ்தலமாக இருக்கும். நிபந்தனையற்ற சரணாகதியின் தத்வங்கள் இவைதான் என்று நான் இச்சபையின்முன் அறிவிக்கிறேன்.



## பிரிடனின் யுத்த லக்ஷியம்.

### சுயநலமறுப்புள்ளது, உயர்வானது, ருஜுவானது.

**(காமன்ஸ் சபையில் 1945-ம் வருஷம் ஜனவரி மாதம் 17-ம் தேதியன்று மிஸ்ட்டர் சர்ச்சில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து).**

பிரிடனும் அதன் சாம்ராஜ்ய நாடுகளும் யாதொரு பேராசையுடனும் ஸ்வபிரயோஜனத்தையும் உத்தேசித்து யுத்தத்தில் ஈடுபடவில்லை. ஜெர்மனியின் அக்கிரமத் தாக்குதலுக்குட்பட்ட போலந்துக்கு நம்மாலியன்ற ஒத்தாசையைச் செய்வது என்ற கடமையை உத்தேசித்துத்தான் நாம் போரிலிறங்கினோம். ஜெர்மனி போலந்தைத் தாக்கினாலும் சரி, மற்றெந்த நாட்டைத் தாக்கினாலும் சரி, நம்முடைய பத்திரத்துக்கு ஹானி ஏற்படும் என்று தோன்றிற்று.

நமக்கு தேசங்களைப் பிடிக்கும் ஆசையில்லை. எண்ணெய்ப் பிரதேசங்களை சம்பாதிக்கும் உத்தேசமில்லை. நமக்கு தளங்களை சம்பாதிக்கவும் பிரியமில்லை. பிரிடன் அதனுடைய நாட்டில் சமாதானத்துடன் வாழத்தான் முயற்சி செய்துவருகிறது.

உலகத்தின் எந்த நாடுகளிலுமுள்ள படை பலத்துடன் நாம் போட்டி போடவில்லை. நாம் நம் உரிமைகளைக் காப்பாற்ற முயலுகிறோம். அதற்காக நாம் உலகத்திலுள்ள பெரிய அல்லது சிறிய நாடுகளின் உரிமைகளில் எங்களுடைய சௌகரியத்துக்காக நாங்கள் குறுக்கிடவில்லை. நம்மிடமுள்ள எல்லாவற்றையும் நாம் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோம். அதற்குப் பதிலாக கண்யத்தையும் மதிப்பையும் விரும்புகிறோமே ஒழிய வேறு பிரதிப்பிரயோஜனத்தை நாம் எதிர் பார்க்கவில்லை. ஆகையால் நமது நாட்டிலும், சாம்ராஜ்யத்திலும், அல்லது உலகத்தின் மற்ற பாகங்களிலும் உள்ளவர்கள் நம்மைப் பற்றியும் நம்முடைய எண்ணங்களைப்பற்றியும் இழிவாகப் பேசவேண்டாம்.

மனிதர்களுக்கு இயற்கையான சில தவறுதல்கள் நமது நடவடிக்கையில் காணப்படலாம். ஆகிலும் நமது நடவடிக்கை சுயநலமற்றவை, உயர்வானவை, யதார்த்தமானவை.

ஆகையால் பிரிடனும் பிரிடிஷ் சாம்ராஜ்யமும் தன்னலத்தைக் கருதுகிறவர்கள், அதிகார ஆசை பிடித்தவர்கள், தேச ஆசை பிடித்தவர்கள், ஐரோப்பிய நடவடிக்கைகளிலும் குடியரசு நாடுகளின் அபிவிருத்தியிலும் கபடமான சூழ்ச்சியுள்ளவர்கள் என்று சொல்லும் குற்றச்சாட்டுகளை நான் ஆக்ஷேபிக்கிறேன்.

---

## பாஸி தத்துவத்தை எதிர்த்து ஸ்திரீகளின் பூர்ணமான முயற்சி.

### எல்லாத் துறைகளிலும் 100 சத விகித ஒத்துழைப்பு.

**(நேசதேச அறிக்கைப் பதிப்பு).**

நேசதேச யுத்த முயற்சிகளில் நேசதேசங்களிலுள்ள ஸ்திரீகள் எல்லோரும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது பல சத விகிதமென்று சொல்லக்கூடும்.

அநேக வருஷங்களால் அவர்களுடைய சேவைகள் பத்திரிகைகளில் அநேக தலையங்கங்களுடன் வெளிவந்திருக்கின்றன. முக்கியமானவைகள், "ஸ்திரீ இஞ்சினியர்களின் உற்பத்தி ஆடவர்களின் உற்பத்தி அளவுக்கு சமமானது." "ஸ்திரீகள் பீரங்கி அமைப்பு ஸ்தலங்களில் சேவை செய்வார்கள்." "ருஷ்யாவில் ஸ்திரீகள் டாங்கிகளை ஓட்டுகிறார்கள், சண்டை விமானங்களை ஓட்டுகிறார்கள்." "ஐரோப்பிய எதிர்ப்புக் கோஷ்டிகளில் ஸ்திரீகளின் தீரம்." இன்று அந்த சேவைகள் நமக்கு அற்புத செய்கைகளாகத் தோன்றவில்லை.

இப்பொழுது காப்டன், இஞ்சினியர் என்று விபரம் குறிக்கப்பட்டால் அநேக நேசநாடுகளில் அவைகள் ஆடவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பொருந்துமென்று கருதப்படுகிறது. பிரிடனில் சேவைப்படைகளுக்குத் தனி அடையாளங்கள் வழங்கப்பட்டாலும் டாக்டர், M. P. என்ற கௌரவங்கள் ஆடவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் வழங்கப்படுவது சகஜமாகிவிட்டது.

இந்த அபிவிருத்தி எல்லா நாடுகளிலும் ஒரேவிதமாகக் காணப்படவில்லை. உலகத்தின் சில பாகங்களில் ஆச்சரியப்படத்தக்கதாகக் காணப்படும் நடவடிக்கைகள் மற்ற சில இடங்களில் சகஜமானதாகக் காணப்படுகின்றன. பாஸி தத்வத்தை எதிர்த்துப் போராடும் முயற்சியில் ஒவ்வொரு தேசத்தின் அளவையும் கண்டுபிடிக்க அளவுகோல் வேண்டுமென்றால் "யுத்தத்தில் ஸ்திரீகளின் சேவையை"யும் கவனிக்கவேண்டும். இந்த சர்ச்சையிலும் ஜனங்களை பிரமிக்கச் செய்யக்கூடிய அநேக உண்மைகள் காணப்படும்.

ஆங்கிலம், ஆபிரிக்க பாஷையைப் பேசும் தெற்கு ஆபிரிக்க ஸ்திரீகள் யுத்தகால சேவையில் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். தெற்கு ஆபிரிக்காவிலுள்ள ஐரோப்பிய

மக்கள் 2 மிலியன் என்று வைத்துக்கொண்டால் தெற்கு ஆபிரிக்காவில் ஸ்திரீகள் உதவிப் படையிலும் ஸ்திரீகளின் சேனை சேவைப்படையிலும் ஒவ்வொன்றிலும் 3,000 அங்கத்தினர்களிருக்கிறார்கள். அந்த மெம்பர்கள் தெற்கு ஆபிரிக்காவிலுள்ள அறுகுறையாக அதிகாரதோரணையுள்ள இயக்கமான தெற்கு ஆபிரிக்க ஸ்திரீகளின் உதவிப்படையிலிருந்து பொருக்கி எடுக்கப்படுகிறார்கள். அந்த சங்கத்தில் 60,000 பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் ஸ்திரீகளின் வாலண்டியர் விமானப்படையும் அங்கு இருக்கிறது. அநேக ஸ்திரீகளின் படைகள் தெற்கு ஆபிரிக்கக் கடற்கரை தற்காப்புப் படைகளாக வேலைசெய்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் யுத்த தளவாட உற்பத்தியிலீடுபடுத்தியிருக்கிறார்கள். நாட்டிலுள்ள அநேக புதிய தொழிற்சாலைகளில் ஸ்திரீகள்தான் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இதேவிதமாக எல்லா நேசதேசங்களிலும் ஸ்திரீகள் சேவை செய்துவருகிறார்கள்.

ஆஸ்திரேலியாவில் ஸ்திரீகளின் சேவைப்படையில் சேனையைச்சேர்ந்த ஸ்திரீகளின் வைத்திய கோஷ்டி ஒன்று இருக்கிறது. ஆஸ்திரேலிய ஸ்திரீகள் கோஷ்டியைச் சேர்ந்த மூன்று தகுதிகள் மத்தியக் கிழக்கிலும் நான்கு நியூகினியாவிலும் வேலை செய்யச் சென்றிருக்கின்றன. வைத்திய இலாகாவைச் சேர்ந்தவர்கள் ஆஸ்திரேலியாவில் சிலவாரங்கள் ஓய்வெடுத்துக்கொண்டபின் பஸிபிக் போருக்கு இரண்டாவது தடவை சேவைக்குச் சென்றார்கள். அவர்கள் தங்களுடைய அந்தஸ்தையும் பொருட்படுத்தவில்லை.

சந்தர்ப்பத்தினாலோ அல்லது வயோதிகத்தினாலோ சேவைப் படைகளிலோ அல்லது தொழிற்சாலைகளிலோ கலந்துகொள்ளக்கூடாத ஸ்திரீகள் சொந்த நாட்டிலேயே இருந்துகொண்டு ஸோல்ஜர்களின் வசதிக்குப் பொருளைச் சேமிக்கும் இயக்கத்தில் அற்புதமான வேலையைச் செய்திருக்கிறார்கள். ஆடவர்கள் செய்யக்கூடிய வேலையில் ஸ்திரீகள் ஈடுபட்டதினால் தாதிகள்போன்ற வேலைக்கு சேர்க்கப்படும் ரிக்ரூட்டுகளின் தரமும் சங்கியையும் குறைந்துவிடவில்லை. ஸ்திரீகள்தான் தாதிவேலைக்கு லாயக்குள்ளவர்களென்பது உலக பிரசித்தமான விஷயம்.

சமீப காலத்தில் நார்வீஜிய தாதியின் தீரத்தை வெளிப்படுத்தும் ஒரு கதை வெளிவந்தது. ஜெர்மானியர்கள் ஆர்க்டிக் பக்கத்திலுள்ள நார்வேயிலிருந்து பின்வாங்கியபொழுது அம்மாது அவள் இருந்த ஆஸ்பத்திரியை அழிவுபடாதபடி காப்பாற்றினாள். அவள் வாரங்கன் வளைகுடாவிற்கு அருகிலுள்ள ஒரு சிறிய நகரமான கைபார்க் என்னுமிடத்திலிருந்த ஆஸ்பத்திரியில் வேலை செய்துவந்தாள். அப்பொழுது ஜெர்மன் படைகள் அந்த நகரத்தை அழித்து அதிலுள்ள ஜனங்களைத் தெற்குநோக்கித் துரத்தியடிக்க நகரத்துக்குள் புகுந்தார்கள். இதே மாதிரி வடக்கு நார்வேயிலுள்ள அநேக நகரங்களை அவர்கள் அழித்திருக்கிறார்கள். தன்னுடைய பத்திரத்தையும் பொருட்படுத்தாமல் அவள் ஜெர்மானியர்களை எதிர்த்து ஆஸ்பத்திரியை அழிக்குமுன் என்னைச் சுட்டுவிடுங்கள் என்று முன் நின்றாள்.

அநேக தடவைகளில் நாஸி ஆபீஸர்கள் அந்த ஆக்ஷேபனைகளுக்குச் செவிகொடாமல் தன்னிஷ்டப்படி நடத்தியது உண்டு. ஆகிலும் இங்கு தாதியின் ஆக்ஷேபனையை அவர் ஏற்றுக்கொண்டதால் ஆஸ்பத்திரி அழிவுபடாமல் காப்பாற்றப்பட்டுவிட்டது. உணவுப் பொருள்கள் அற்றுப்போனபொழுது அவள் ஜெர்மன் சுரங்கவெடிகள் பாவப்பட்ட ஸ்தானங்கள் வழியே சென்று ஜெர்மானியர்கள் கவனக் குறைவினால் கைவிட்டுப் போயிருந்த இரண்டு மூட்டை மாவைக் கொண்டுவந்தாள்.

பிரான்ஸில் ஜெர்மன் ஆக்கிரமிப்பின்பொழுது அநேக ஸ்திரீகள் தங்களுடைய வீடுகளை முதல் உதவி ஸ்தானங்களாக அமைத்துவந்தார்கள். நேசதேச விமானிகள் சுட்டு வீழ்த்தப்பட்டால் அவர்களுக்கு ஸ்திரீகள் சிகிச்சை செய்து அபாயத்துக்கும் உட்பட்டார்கள். நூற்றுக்கணக்கான விமானிகள் தேச ஆரோக்கியமடைந்து பத்திரமான இடங்களுக்குத் தப்பிஓட ஒத்தாசை அளிக்கப்பட்டார்கள். பிரான்ஸின் புனருத்தாரண வேலையிலும் ஸ்திரீகள் சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருக்கிறார்கள். ஸ்திரீகளின் (11) பிரதிநிதிகளும் ஆலோசனை சபைக்கூட்டத்திற்குச் செல்லுகிறார்கள். பெல்ஜியத்தில், பிரிடிஷ் நகர சபைத் தேருதலில் ஓட்டுசெய்வது போன்ற ஓட்டுரிமை பெற்ற ஸ்திரீகள் பிரெஞ்சு ஸ்திரீகளைப்போல தேசிய ஓட்டுரிமைக்காகப் பிரயத்னம் செய்துவருகிறார்கள்.

---

## யூ படகுத் தாக்குதலுக்குப் பதில் நடவடிக்கை.

### கடற்கரை விமானப் படையின் புதிய முறைகள்.

**(விங் கமாண்டர் L. V. பிரேசர்.)**

1945-ம் வருஷத்தில் கடலிலும், தரையிலும் நேசதேசத்தார்கள் பிரமிக்கும்படியான நிகழ்ச்சிகள் நடைபெறுமென்று ஒரு ஜெர்மன் கடற்தளபதி பீத்திக்கொண்டார். தேய்ந்து



போன ஜெர்மன் கடற்படையையும் புறக்கணித்துவிடக்கூடாதென்பது அவருடைய விருப்பம்.

எதிரிகளின் சக்தியைப்பற்றி நேசதேசத்தார்கள் ஒருபொழுதும் குறைவாக மதித்து வரவில்லை.

வான்ருண்ட்ஸ்டெட் பதில் தாக்குதலைச் செய்தார். ஜெர்மன் விமானப்படை மறுபடியும் வெளிக்கிளம்பியது. அகப்பட்டுக்கொண்ட நாய் ஆக்கிரோஷத்துடன் எதிர்த்துப் பாயும் என்பதை அது ஞாபகப்படுத்துகிறது. இது அறிந்த விஷயமானதால் நமக்கு அடிக்கடி ஞாபகமூட்டுவது அவசியமில்லை. அட்லாண்டிக் கடலில் யூ படகு நடவடிக்கைகள் மறுபடியும் ஆரம்பமாகும் என்பதையும் நாம் மதிக்காமலில்லை. கடற்தளபதி குறிப்பிட்டதான நேசதேசத்தாரின் சர்பரா மார்க்கங்களைத் தாக்குவது என்ற நாஸிகளின் பயமுறுத்தல் வீண் பேச்சல்ல. யூ படகுகள் நார்வேயிலிருக்கும் துறைமுகங்களிலும், வளைகுடாக்களிலும் நடவடிக்கையைத்துவக்க தயார்செய்து வருகின்றன. பெர்கனிலும் மற்ற வடக்குக் கரையிலுமுள்ள துறைமுகங்களிலும் கட்டப்பட்டிருக்கும் அடர்த்தியான காங்கிரீட் கோஷ்டங்களிலிருந்து வடக்குக் கடல்வழியாக அட்லாண்டிக் கடலுக்குச் செல்லும் புதிய, அதிக நாசம் விளைவிக்கக்கூடிய நீர்மூழ்கிகள் புறப்படக்கூடும்.

மிஸ்டர் சர்ச்சிலும் ஜனாதிபதி ரூஸ்வெல்டும் சமீப காலத்தில் வெளியிட்ட அறிக்கையில் சமீப காலத்தில் யூ படகுகளின் நடமாட்டம் அதிகரித்துவிட்டதென்றும், அதன் பயனாக நேசதேசத்தார்களுக்குக் கப்பல் நஷ்டம் அதிகமாகிவிட்டதென்றும் சொல்லியிருக்கிறார்கள். நெடுந்தூரம் செல்லும் நீர்மூழ்கிகளிலிருந்து எதிரிகள் அமெரிக்க கடற்கரையில் V குண்டுகளை வீசக்கூடுமென்றும் அவர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

"வெற்றிக்கில்லாமல் பிழைத்து உயிர்தப்பப் போர்புரிந்து வரும் நிலைமையில் யூ படகு யுத்தத்தினால் ஜெர்மனி என்ன லாபத்தை அடையப்போகிறதென்று" அநேகர் கேட்கலாம். சாத்தியமான வரையில் யுத்தத்தை நீடித்து நடத்த ஜெர்மனி முயன்று வருகிறது. அதற்கு நேசதேசத்தாரின் கப்பல்களை மூழ்கடிப்பது ஒரு உபாயம். அமெரிக்காவிலிருந்து வெடிகுண்டுகளை ஏற்றிக்கொண்டுவரும் சாமான் கப்பல்களை, மீன் வெடிகளுக்கு இரையாக்கிவிட்டால் மேற்குப் போர் முனையில் நேசதேசத்தாரின் முன்னேற்றத்துக்குக் குந்தகமேற்படும்.

வெடிகுண்டு வீச்சுக்குட்பட்டுவரும் ஜெர்மன் மக்களிடையே பிரிடனுக்கு வரும் உணவுப் பொருள் கப்பல்களை யூ படகுகள் அழித்து வருகின்றனவென்று சொல்லுவதைவிட பிரசாரத்துக்கு வேறு பண்டம் வேண்டுமா? தற்பொழுது பிரசாரத்துக்கு இவ்விதமான பண்டம்தான் கோயபல்ஸுக்குத் தேவை. அட்லாண்டிக் கடல் போர் மறுபடியும் துவங்கிருக்கலாம். ஒரு புதிய ரக நீர்மூழ்கியை உண்டுபண்ணி விட்டோமென்றும் அதை ஒருவரும் கண்டுபிடிக்க முடியாது என்றும் ஜெர்மனி பிரசாரம் செய்துவருகிறது. அவைகளின் பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஜெர்மனியில் பல்வேறு பாகங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. நீர்மூழ்கிகள் நார்வேயில் கட்டப்படுகின்றன. இந்த யூ படகுகள் நார்வேயிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்று திரும்பி வரும் சக்தி பெற்றவையென்று சொல்லப்படுகிறது.

முக்கியமாக அந்த யூ படகுகள் தண்ணீருக்குள் வெளியே வராமலேயே 28 நாட்கள் இருக்கக்கூடுமென்று ஜெர்மானியர்கள் சொல்லி வருகிறார்கள். இதற்கு சாதகமாக நீர்மூழ்கிகளில் தண்ணீர் மட்டத்துக்கு மேலிருக்கும்படியாக ஒரு குழாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழாய் வழியாக நீர் மூழ்கியிலுள்ள டீசல் இஞ்சினுக்குக் காற்று சப்ளை செய்யப்படுகிறது.

இந்தப் புதிய அபாயத்தை சமாளித்து விடலாமென்று பிரிடிஷ் கடற் கரை விமானப் படையும் யூ படகுகளை அழித்துவரும் பிரிடிஷ் நேசதேசக் கடற்படையும் நம்பிக்கையுடனிருக்கின்றன. மிகவும் பயிற்சி பெற்றதும், ஐந்து வருஷ அனுபவம் பெற்றதும், அட்லாண்டிக் கடலிலும், பிஸ்கே விரிகுடாவிலும் சிறந்த வெற்றிகளைப் பெற்றதுமான கடற்கரை விமானப் படையைச் சேர்ந்த விமானிகள் சந்தர்ப்பம் வரும்பொழுது தாக்கத் தயாராக இருக்கிறார்கள்.

அவர்களின் போர் ரகஸ்யமாகவும் விஞ்ஞான சாஸ்திர முறைப்படிக்கும், ஆடம்பரமன்னியிலும் பகட்டன்னியிலும் நடைபெறுகிறது. இந்தக் குறிப்பான ஏற்பாடான இரக்கமற்ற போர் துணிவுடனும், படங்களுடனும், மார்க்கங்களுடனும், ரோந்துகளுடனும் ரகசிய ஆயுதங்களுடனும் நடத்தப்பட்டு வருகிறது.

ஐந்து வருஷங்களில் ஸண்டர் லாண்டு, கடாலினஸ், லிபரேட்டர் விமானங்களுள்ள படைகள் பூதக் கண்ணாடிக் கண்கள் என்ற முறையை நன்கு பயின்று விட்டார்கள். அவர்கள் பிரிடனின் துறைமுகங்களுக்குச் சமீபத்திலுள்ள ஸமுத்திரங்களில் யூ படகுகளை வேட்டையாடி இருக்கிறார்கள். அட்லாண்டிக்கில் யூ படகுகளை அழித்திருக்கிறார்கள். யூ படகுகளை

பிஸ்கே விரிகுடாவிலுள்ள துறைமுகங்களுக்குச் சென்று ஒளிந்து கொள்ளும்படிக்கும் கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு ஐரோப்பாவில் படைகள் இறங்கும்பொழுது ஸமுத்திர மட்டத்திலும் தண்ணீருக்குள்ளிருக்கும் நீர்மூழ்கிகள் தொந்திரவளிக்காமல் அவைகளை முறியடித்திருக்கின்றன.

மேகமும், ஆகாயமும், நுரை ததும்பும் அலைகளுமுள்ள மகத்தான ஸமுத்திரமும் கூடிய ஒரு விசாலமான பிரதேசத்தில் சில ஆயிரம் அடிகளிலிருந்து நோக்குங்கால் யூ படகு ஒரு சிகரெட்டைப்போல தோன்றும். இப்பொழுது விமானிகள் அதைவிடச் சிறிய வஸ்துக்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் நுரையின் வர்ணம்போல் வெள்ளை பூசப்பட்டு, தண்ணீருக்கு மேல் நீட்டிக்கொண்டிருக்கும் குழாய்களைக் கண்டு பிடிக்கவேண்டும்.

இது நேத்திரங்களுக்கு சிறந்த பரீக்ஷையாகும். ஆகிலும் பிரிடிஷ் கடற்கரை விமானப் படையைச் சேர்ந்த விமானிகள் "பூதக் கண்ணாடி கண்கள்" என்ற முறையை அபிவிருத்தி செய்து வருகிறார்கள். அவர்கள் ஊசி போன்ற ஒரு உருவம் தண்ணீருக்குள் செல்லுவதைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

இந்த முயற்சியில் அவர்களுக்குச் சிறிது வெற்றியும் கிடைத்துவருகிறது. எதிரி எவ்வித யூ படகை உபயோகித்து வந்தாலும் கடற்கரை விமானிகள் தங்களுடைய ரோந்து நடவடிக்கையை தளர்ச்சி செய்வதில்லை. விமானிகள் திடீரென்று போர் புரியத் தயாராக இருக்க வேண்டும். ஆகையினால் அவர்கள் சதாகாலமும் விசாலமான ஸமுத்திரத்தில் ரோந்து செய்து வரவேண்டும். எந்த நேரத்திலும் எதுவும் நேரிடலாம்.

ஆகிலும் அவைகள் குறிப்பான நடவடிக்கைகளைக் கையாளவேண்டும். தனிப்பட்ட ரோந்து நடவடிக்கையின்பொழுது குறிப்பான தாக்குதல்களைச் செய்யவேண்டியிருக்கும். அதற்கு சமீப காலத்தில் ஒரு சிறந்த உதாரணம் கிடைத்தது. ஒரு பிரதேசத்திலிருந்து அநேக நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிலுள்ள மற்றொரு பிரதேசத்துக்கு விமானப் படைகளை அனுப்பும் சக்தி விமான ஆதிக்கத்துக்கு உண்டு என்பது ருஜூச் செய்யப்பட்டது.

கடற்கரை விமானப் படை சென்ற வருஷத்தில் அதிக வெற்றிகளைப் பெற்றிருக்கிறது 1945-ம் வருஷத்தில் ஜெர்மன் கடற்படை உபயோகிக்கும் எந்த உபாயத்தையும் ஒப்பற்ற முஸ்தீப்புகளுடனும் அனுபவமும் தீர்மானமுள்ள விமானிகளுடனும் சமாளிக்கத் தயாராக இருக்கின்றன. கடல் மார்க்கங்களைப் பத்திரப்படுத்தும் வேலையிலும் அது பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. D தினத்தன்று இங்கிலீஷ் கால்வாயின் தென் மேற்கு மூலை வழியாகச் செல்ல முயன்ற யூ படகுகளின் பிரயத்தனத்தை விமானிகள் வீணாக்கி விட்டார்கள். ஜூன் மாதம் 6-ம் தேதியன்று படைகளிறங்கிய பின்னும் கடற்கரை விமானப் படை வெற்றிகரமாக அநேக வேலைகளைச் செய்திருக்கிறது.

1944-ம் வருஷத்தில் கடற்கரை விமானப்படை எதிரியின் 120,000 டன்கள் மொத்த எடையுள்ள சாமான் கப்பல்களையும் மூன்று நாசகாரிகளையும் மற்றும் 40 இதரக் கப்பல்களையும் மூழ்கடித்திருக்கிறது. எதிரியின் அநேக கப்பல்கள் பழுது படுத்தப்பட்டிருக்கின்றன.

பெல்ஜியம் விடுவிக்கப்பட்டுவிட்டதால் கடற்கரை பாம்பர் படைக்கு ஒரு புதிய விமான தளம் கிடைத்துவிட்டது.

ஜெர்மன் நீர்மூழ்கி ஓட்டிகள் இந்த வருஷத்தில் பலவிதமான விமான ஆயுதங்களை சமாளிக்கவேண்டும். அவை பின்வருபவை:—ரோந்து செய்யும் வெடி விமானங்கள், கடல் விமானங்கள், லே தேடு விளக்குகள், ஆறு ராத்தல் எடையுள்ள குண்டுகளை வீசும் மஸ்கிடோ விமானம், மஸ்கிடோ, போபைடர் விமானங்கள் வீசும் அவுட்டு வாணங்கள்.

---

## நேசதேசக் கடற்படை அடிக்கடி ரோந்து செய்து வருகிறது.

### ஜெர்மன் கடற்கரைக் கப்பல்கள் தாக்கப்படுகின்றன.

(பிரியான் டன்ஸ்டால்).

குறைவான தகவல்கள் கிடைத்துவந்த காலங்களில் உலகம் பூராவிலும் பிரிடிஷ் கடற்படையின் நடவடிக்கை குறைந்துவிட்டதென்று எண்ணுவது தவறாகும்.

ஏராளமான கடற்படைகள் எல்லா கால நிலைமைகளிலும் அடிக்கடி கடலில் சஞ்சாரம் செய்து வருகின்றன. யுத்தக் கப்பல் சம்பந்தப்பட்ட மட்டில் அவைகள் சௌகரியமான கால நிலைமையில்தான் வெளிப் புறப்படுமென்பது கிடையாது. பிரிடிஷ் கடற்படையில் ஆயிரக்கணக்கான கப்பல்கள் சதா காலமும் பகலிலும், இரவிலும், கடலிலும் ஸமுத்திரங்களிலும் எதிரியைச் சந்திக்க முடிந்தாலும் முடியாவிட்டாலும் நடமாடி வருகின்றன.



எதிரியின் கப்பல்களை மூழ்கடிப்பதுபோல கடல் மார்க்கங்களில் ஆதிக்கம் பெற்றிருப்பதை பரிபாலித்து வருவதும் யுத்த நடவடிக்கைதான். அதன் மூலம் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் எதிரிகளின் கப்பல்களை ஸமுத்திரங்களில் நடமாட முடியாமல் தடுத்து விடுவதுடன் நேசதேச சமான் கப்பல் கூட்டங்கள் பத்திரமாக கடல் தாண்டிச் செல்வதற்கும் பத்திரமளிக்கின்றன.

ஐரோப்பிய ஸமுத்திரங்களில் இரண்டு இடங்களில் முக்கியமான நடவடிக்கை நடைபெறுகிறது. ஒன்று நார்வே கடற்கரைக்கு அருகில். மற்றொன்று ஷெல்ட் நதி முகத்துவாரத்தைச் சுற்றியுள்ள ஸமுத்திரங்களில். சமீப காலத்தில் நார்வே கடற்கரைக்கருகிலுள்ள பிரிடிஷ் லேசான கடற்கரைக் கப்பல்கள் எதிரியின் நடுத்தரமான சர்ப்பராக்களையும் நார்வே கடற்கரைக்குச் சென்ற M. வகுப்பைச் சேர்ந்த சுரங்கவாரிக் கப்பல்களையும் மூழ்கடித்தன. மற்றொரு துணைக்காவல் கப்பலை பழுதுபடுத்தின. அது அநேகமாக மூழ்கியிருக்கும். தரையிலுள்ள எதிரியின் ஸ்தானங்கள் பேரில் கப்பல்கள் குண்டுகளை வீசின. வடக்கு நார்வேயிலுள்ள ஜெர்மன் தரைப் படைகளின் நிலைமை மோசமாகிவிட்டதற்குப்பின் அங்கிருந்து ஸ்காகராக் வரையில் கடற்கரைக் கப்பல்களின் நடவடிக்கை அதிகரித்துவிட்டது.

டிஸம்பர் 22-ம் தேதியன்று ஷெல்ட் நதி முகத்துவாரத்துக்கருகில் அநேக போர்கள் நடைபெற்றன. அப்பொழுது பிரிடனின் லேசான கடற்கரைக் கப்பல்கள் வால் போல என்ற நாசகாரி, கர்சான், டாரிங்டன் என்ற போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிகளைத் தாக்கும் கிட்டிவாகி என்ற யுத்தக் கப்பல்களின் உதவிகொண்டு ஜெர்மன் இ-படகுக் கூட்டங்களை அழித்தன. இரண்டு இ-படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இரண்டு அநேகமாக மூழ்கிருக்கலாம். ஐந்து பலமாகப் பழுது பட்டன. அந்த இ-படகுகள் ஆண்ட்வெர்ப்புக்குப் போவதற்காக ஷெல்ட் நதி முகத்துவாரத்தைவிட்டுச் செல்லும் நேசதேச சாமான் கப்பல் கூட்டங்களை வழி மறித்துத் தாக்குவதென்று உத்தேசித்திருந்தன. ஜெர்மனி இப்பொழுது நேசதேசக் கப்பல்களை அகண்டமான சமுத்திரங்களில் தாக்கத் துணியாமல் கடற்கரைக் கருகில் தற்காப்பு செய்யும் முறையில், தரையிலிருக்கும் பீரங்கிகளின் வட்டாரத்துக்குட்பட்ட துறைமுகங்களுக்கு நுழையும் நேசதேச சாமான் கப்பல்களைத் தாக்கி வருவதிலிருந்தே ஜெர்மனிக்குக் கடலில் பலஹீனமேற்பட்டுவிட்டதென்பது புலப்படுகிறது.

கடற்தளபதி ஸர் ப்ரூஸ் பிரேசரிடமுள்ள பிரிடிஷ் பஸிபிக் கடற்படை தங்குவதற்கு தளங்களை அமைக்க ஆஸ்திரேலியாவிலுள்ள முக்கியமான துறைமுகங்கள் தயார் செய்யப்படுகின்றன. ஆஸ்திரேலியாவின் கப்பல் கட்டும் நிலயங்களில் மாதம் ஒன்றுக்கு சராசரி 1,250,000 மொத்த டன்கள் எடையுள்ள சாமான் கப்பல்கள் பழுது பார்க்கப்படுகின்றன. சென்ற வருஷத்தில் ஆஸ்திரேலிய கடற் படையைச் சேர்ந்த நீர்மூழ்கிகளை அழிக்கும் கப்பல்கள் 25 மிலியன் டன்கள் மொத்த எடைமானமுள்ள சாமான் கப்பல்களுக்குத் துணைக் காவல் செய்து எதிரியின் நீர்மூழ்கியிலிருந்து ஒருவித நஷ்டமுமேற்படாமல் கப்பல்களை நடத்திச் சென்றிருக்கின்றன.

இந்த இரண்டு அம்சங்களிலிருந்து ஆஸ்திரேலியாவின் கடற்படை, கடற்படையைப் பழுது பார்க்கும் வேலைக்காரர்களும், ஐச்வர்யங்களும் பூர்ணமாக உபயோகிக்கப்படுகின்றனவென்று வெளிப்படுகிறது. இதற்காகத்தான் பிரிடனின் கப்பல் கட்டும் சாலைகளில் வேலை செய்யும் வாலண்டிர்களில் அநேகர் ஆஸ்திரேலியாவில் கடற்படைக்கு ஒத்தாசை செய்வதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆகிலும் ஆஸ்திரேலிய நிர்வாகமும் அதற்காகவே 3,000 தொழிலாளர்களை ஒதுக்கி வைத்திருக்கிறது.

மேலும் கடற்தளபதி பிரேசர் கடற்தளபதி நிமிட்ஸை பெர்ல் துறைமுகத்தில் சந்தித்துப் பேசினார். வருங்கால திட்டத்தைப்பற்றி அவர்களுக்குள் பூர்ணமான ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. பஸிபிக் கடற்படையின் முக்கியமான தளங்கள் ஜப்பானிலிருந்து எவ்வளவு தூரத்திலிருந்து வந்தாலும் கிழக்கு இந்திஸிலும் தெற்கு ஆசியாவின் கடற்கரையிலும் முன்னேறும் வாசல்களையும், தளங்களையும் ஏற்படுத்துவதில் கடற்படைக்கு யாதொரு தடங்கலுமேற்படாது. அவைகள் மூலம் பஸிபிக் படைக்கு வெகுதூரம் சென்று தாக்கும் வசதி ஏற்படும். அதற்கு அனுகூலமாக கடற்படை ஒத்தாசைக்கு சர்பாராக் கப்பலுடன் எண்ணெய்க் கப்பல்களும் முக்கியமாக பழுது பார்க்கும் கப்பல்களும் யந்திரங்கள் உள்ள கப்பல்களும் கடற் படையைச் சேர்ந்த நிபுணர்களும் செல்லவேண்டும்.

பஸிபிக் கடலில் பலமான அமெரிக்கக் கடற் படையுடன் மிகவும் சக்தி வாய்ந்த பிரிடிஷ் கடற்படையும் சேர்ந்து விட்டதால் ஜப்பானியக் கடற்படையை வலுவுச் சண்டைக்கு இழுக்க அதற்கு சௌகரியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிங்கப்பூரில் ஒரு பலமான கடற்படையை வைத்துக்கொண்டு பிலிப்பைன்ஸைச் சுற்றிலும் பார்மோஸாவிலும் அமெரிக்க நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பதென்பதும் ஜப்பானுக்கு இனிமேல் சாத்தியப்

படாது. ஜப்பானியக் கடற்படை எங்கு குவிக்கப்பட்டிருந்தாலும் அதை சமாளிக்க பிரிடிஷ் அமெரிக்கப் படைகளின் பூரா பலமும் போதுமானது. மேலும் பெரிய போர் நடைபெறும் பொழுது உபரிக் கப்பல்களைக் கொண்டு வருவதற்கும் நேசதேச கடற்படைக்கு சௌகரியம் உண்டு.

## 1944-ம் வருஷத்தில் பாம்பர் கமாண்டின் நடவடிக்கைகள்.

### ஜெர்மனி பேரில் 525,000 டன் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன.

**காலின் பெட்ருல்.**

(டெயிலி மெயில் பத்திரிகை ஆகாய நிருபர்).

ஜெர்மனியின் உற்பத்தி அதிகரிப்புக்கும், அதன் சமீப கால ரகசிய ஆயுத உற்பத்திக்கும் காரணங்களை 1944-ம் வருஷத்தில் பிரிடிஷ் பாம்பர் கமாண்டைச் சேர்ந்த விமானங்களின் நடவடிக்கைகளை உத்தியோக முறையில் பரிசீலனை செய்து வெளியிட்டிருக்கும் உண்மைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

சென்ற வருஷத்தில் ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலை லக்ஷியங்களைத் தாக்காமல் பாம்பர் கமாண்ட் விமானப் படை தாக்குதலில் 65 சத விகிதம் ஒன்றுபட்ட கமாண்டின் ஆக்ஞைப்படி வேறு பக்கங்களுக்கு திருப்பி விடப்பட்டது. 1943-ம் வருஷத்தில் ஏழில் ஒரு பாகத்தைத் தவிர பாக்கி குண்டு வீச்சுகளெல்லாம் ஜெர்மனியிலுள்ள லக்ஷியங்கள் பேரில் ஏற்பட்டது.

இந்தப் புள்ளி விபரங்களிலிருந்து ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலை பேரிலும் தனிப்பட்ட எண்ணெய் ஆலைகள் பேரிலும் எவ்வளவு டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன என்ற தகவல்கள் கிடைக்கும். இந்தத் தாக்குதலில் பிரிடிஷ் விமானப் படைதான் விசேஷப் பங்கெடுத்துக்கொண்டது. 1944-ம் வருஷத்தில் விமானப் படை சீப் மார்ஷல் ஸர் ஆர்தர் ஹாரிஸ் 525,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கிறார். யுத்தத்தில் முதல் 4¼ வருஷங்களைவிட இந்த எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகமானது.

1944-ம் வருஷத்தில் வீசப்பட்ட வெடிகுண்டுகள் பின்கண்ட இடங்களில் வீசப்பட்டன ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலை நகரங்கள் 35 சத விகிதம். எதிரியின் போக்குவரத்து மார்க்கங்கள் 18 சத விகிதம். ஜெர்மனியின் சேனைகளிருக்குமிடங்கள் 15 சதவிகிதம். வி ஆயுதங்கள் புறப்படும் ஸ்தலங்கள் 11 சத விகிதம். எஞ்சியுள்ள வெடி குண்டுகள் எண்ணெய் பிரதேசங்கள், விமானங்கள், கப்பற் படைகள் பேரில் வீசப்பட்டன. மேலும் ரகசியமாக ஏராளமான சுரங்க வெடிகளும் எதிரியின் ஸமுத்திரங்களில் பாவப்பட்டன.

ஐரோப்பாவைப் படையெடுக்க வெடி விமானங்கள் ஒத்தாசை செய்யவேண்டியிருந்ததால் ஜெர்மன் தொழிற்சாலைகள் பேரில் மகத்தான முறையில் ஒன்பது தாக்குதல்கள்தான் 1944-ம் வருஷத்தில் செய்யப்பட்டன. இந்த வருஷத்தில் 1943-ம் வருஷத்தைவிட மூன்று மடங்கு அதிகமான வெடிகுண்டுகளை பாம்பர் கமாண்டைச்சேர்ந்த வெடி விமானங்கள் சுமந்து சென்றன.

வெடி குண்டு வீச்சைத்தடுக்க ஜெர்மனி கடுமையான பதில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டதென்று சமீப காலத்தில் சொல்லிவருவதினால் 1943-ம் வருஷத்தைவிட 1944-ல் நமக்கு பாதி அளவுதான் உயிர்ச் சேதமேற்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வருஷத்தில் சென்ற வருஷத்தைவிட 2½ மடங்கு அதிகமான வெடி விமானங்கள் தாக்குதலுக்குச் சென்றன. விமானத் தாக்குதல் 319 இரவுகளில் நடைபெற்றது. துணைக் காவல் செய்யும் சண்டை விமானங்களின் உதவிகொண்டு பாம்பர் கமாண்ட் படைகள் இவ்வருஷத்தில் எதிரியின் 336 விமானங்களை சுட்டு வீழ்த்தியிருக்கின்றன.

மேற்குப் போர் முனையில் ருண்ட்ஸ்டெட் பதில் தாக்குதலைத் துவக்கியபொழுது பிரிடிஷ் தளங்கள் பேரில் கால நிலை மிகவும் கெடுதலாக இருந்ததால் ஒரு வாரத்திற்குள் 680 வெடி விமானங்கள் சொந்த தளங்களைவிட்டு வேறு அவசரமான தளங்களில் இறங்கவேண்டியதாயிற்று. அநேகமாக வெடி விமானங்கள் மேகமும் மூடுபனியும் இல்லாத தளங்களில் பத்திரமாக இறங்கிவிட்டன. ஜெர்மனியின் உப்பலிலிருந்த படைகள் பேரில் 32,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன.

**அமெரிக்க விமானப் படையின் நடவடிக்கைகள்.**

ஐரோப்பாவிலுள்ள ஸ்ட்ராடஜிக் விமானப்படையின் கமாண்டரான லெப்டினெண்ட் ஜெனரல் கார்ல்ஸ்பாட்டன் பின்வருமாறு சொல்லுகிறார். "நேசதேச விமான நடவடிக்கையின் காரணமாக முக்கியமான லக்ஷியங்களைத் தற்காப்புச் செய்வதில் 1,700,000 ஜெர்மானியர்கள் ஈடுபடும்படி நேர்ந்து விட்டது. லக்ஷக்கணக்கானவர்கள் வெடிகுண்டு வீச்சினால் ஏற்பட்ட அழிவைச் சரிப்படுத்துகிறார்கள், நொருக்கப்பட்ட சிறிய யந்திர சாதனங்களை ஒன்று திரட்டுகிறார்கள், அல்லது பூமிக்குள் அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்து வருகிறார்கள்."



ஒரு வருஷத்திற்கு முன் நமது வெடி விமானங்களின் நஷ்டத்தில் ¼ பாகம் விமான எதிர்ப்பு பீரங்கிகளாலும் ¾ பாகம் சண்டை விமானங்களாலுமேற்பட்டது. இரண்டு மாதங்களுக்குமுன் ¾ பாகம் விமான எதிர்ப்பு பீரங்கிகளாலும் ¼ பாகம் சண்டை விமானங்களாலும் நஷ்டமேற்பட்டது. சமீப காலத்தில் நமக்கு ஏற்பட்ட நஷ்டத்தில் பாதி பாகம் பீரங்கிகளாலும் பாதி பாகம் சண்டை விமானங்களாலும் ஏற்பட்டது. இதற்குக் காரணம் ஜெர்மன் விமானங்கள் நமது விமானங்களை எதிர்த்து நிற்க முற்பட்டதுதான்.

இப்பொழுது ஜெர்மன் விமானப் படை யுக்தியுடனும் முன்னேறித் தாக்கும் முறையிலும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. விமானப் படைக்கு புதிய தலைவர் வந்திருப்பதாகத் தோன்றுகிறது. ஆகிலும் அவர் யாரென்று புரியவில்லை.

1944-ம் வருஷத்தில் ஐரோப்பாவிலும், மத்திய தரைக்கடலிலுமுள்ள அமெரிக்க வெடி விமானங்கள் 1,045,728 தடவை பாய்ந்து சென்றன. 958,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளை வீசி இருக்கின்றன. விமானச் சண்டை மூலம் நமக்கு 9,274 விமானங்கள் நஷ்டமாகின. எதிரிக்கு 15,318 விமானங்கள் நஷ்டம்.

## மாண்ட் காமரி அவருடைய படைகளை நேசிக்கிறார்.

**W. L. A.**

(யார்க் ஷையர் போஸ்டு).

பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி பழமையான பழக்கவழக்கங்களைப் பாராட்டுகிறவரல்ல. அவருடைய படைகளுக்கும் பொது மக்களுக்கும் மேகத்தினால் மறைக்கப்பட்டிருக்கும் ஒரு தெய்வமாக விளங்குவதை அவர் நம்புவதில்லை. ரகசியம் தேவைப்படும்பொழுது அவர் எல்லோரையும் போல ரகசியத்தைக் காப்பாற்றுவார். ஆனால் அவர் பகிரங்கமாகப் பேசும் பொழுது துருப்புகளிடம் அவருக்குள்ள நம்பிக்கையைக் காட்டுவார். அது போல் அவர்களும் அவரிடம் நம்பிக்கைகொண்டிருப்பார்கள்.

அது தவறான நடவடிக்கையா? சில குறைகூறுகிறவர்கள் "ஆம், அவர் விளம்பரத்தில் ஆசைப்படுகிறார். அவர் ஒரு ஆடம்பரக்காரர்" என்று சொல்லுகிறார்கள். ஆகிலும் அவருடைய நடவடிக்கைகளை அவற்றின் வெற்றி அல்லது இகழ்ச்சிகளைக்கொண்டுதான் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும். இதுவரையில் அவைகள் வெற்றி பிரமாதமாகத்தானிருந்திருக்கின்றன.

மாண்ட் காமரியிடமுள்ளவர்கள் மிகவும் புத்திசாலிகள். அவர்கள் அவ்விதம்தானிருக்கவேண்டும். அவ்விதமில்லாவிடில் மிகவும் சிக்கலாக யுத்த தந்திரமுள்ள நவீனப் போரை அவர்கள் நடத்தமுடியாது.

ஸோல்ஜர்களுக்கும் பொழுது போக்குகளை அமைக்கும் சிலர் எவ்விதம் அபிப்பிராயப்பட்டாலும், ஸோல்ஜர்கள் மற்ற ஜனங்களைக் காட்டிலும் குறைவான அபிருசியுள்ளவர்களல்ல. அவர்கள் பிரிடிஷ் ஜனசமூகத்தைச் சேர்ந்த ஒரு பகுதியாளர்.

மாண்ட்காமரி அவர்களைப்பற்றி அதிக கவலை எடுத்துக்கொள்ளுகிறார். அவ்விதம் தான் நடந்துகொள்ளுவதாக அவர்கள் மதிக்கவேண்டுமென்றும் அவர் பிரியப்படுகிறார். ஆகையினால்தான் அவர் அடிக்கடி துருப்புகளுக்கு ஸிகரெட்களை விநியோகம் செய்து வருகிறார்.

மேலும் ஸோல்ஜர்களுக்கு விளங்கும்படியாக அவர்களுடைய பாஷையிலேயே அவர் விஷயங்களைத் துலக்கிச் சொல்லுவார். அவர் உபயோகிக்கும் அடுக்குத் தொடர்களை கவனியுங்கள். "நமது கோஷ்டியின் தலைவர் ஜெனரல் ஈசன்ஹவர். எனக்கு ஐக்கிடம் அதிக பக்தி இருக்கிறது." இது மிகையன்னியில் அவருக்கு அளிக்கப்படும் பாராட்டு. இதை நெல்ஸன் அவனுடைய சகாக்களைப் பாராட்டியதற்கு ஒப்பிடலாம்.

அமெரிக்கர்களுக்கு அவர் உரைத்த புகழுரையைக் கவனியுங்கள் "நான் அமெரிக்க ஸோல்ஜரைப் பாராட்டுகிறேன். அவன் சிறந்த போர் வீரனென்றும் நான் எண்ணுகிறேன்."

அவருடைய யுத்த வேதாந்தத்தையும் கவனியுங்கள். "அவசரப்படாதே. எல்லாவற்றையும் தயாராக வைத்துக்கொள். எல்லா பலமும் சமமாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டிருக்கும் கக்ஷிக்குத்தான் வெற்றி நிச்சயம்."

சகதியில் சிரமப்பட்டுப் போர் புரிகிறவர்களும் குழிகளில் பதுங்கி நிற்கும் ஸோல்ஜர்களும் சேனாதிபதியைப்போல ஆர்வமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். சென்ற யுத்தத்தில்

சேனைத் தலைவர்களுடன் ஒத்துழைக்காமல் தனித்து நின்றதுபோல் இப்பொழுது படைகளில்லை. ஐக்கிடம் எவ்வளவு யோக்கியதாம்சமிருந்தபோதிலும் அவர் நம்முடைய துக்கங்களில் கலந்துகொள்ளுவதில்லை. அவருக்கும் மாண்ட் காமரியைப் போலவும் மற்ற பெரிய சேனாதிபதியைப் போலவும் சில கொள்கைகளுண்டு. அவரும் தற்காப்பு அமைப்புகளை சம பலமாக வைத்திருந்தார். ஆகிலும் இந்த விஷயத்தை காண்காணிப்பிலுள்ள துருப்புகளுக்கு அவர் வெளியிடுவதில்லை.

அவர்களுடைய கவனமெல்லாம் போர்முனை பேரில்தான் செலுத்தப்பட்டுவந்தது. மாண்ட்காமரி ஆபிரிக்கப் படைகளுக்கும் அவரிடமுள்ள மற்றவர்களுக்கும் மதிப்புக்கொடுத்தது போல் அவர்கள் போரில் ஒவ்வொருவரும் முக்கியத்வமுள்ளவர்கள் என்ற எண்ணம்கொள்ளவில்லை. படைப்பகுதிக்கும் அதன் ஆபீஸர்களுக்கும் பக்தியைக்காட்டுவது மிகவும் முக்கியத்வமுள்ளதுதான். ஆகிலும் மாண்ட்காமரி படைகளுக்கு விரிவான நோக்கத்தையும் சகோதர பாவத்தையும் புகட்டியிருக்கிறார்.

மாண்ட் காமரியை பேட்டி கண்டபொழுது நான் கேட்ட அவருடைய தெளிவான இனிய சொற்கள் எனக்கு ஞாபகம் வருகிறது. அவருடைய நீல நிறமான கண்களில் உறுதி காணப்பட்டது. அவருடைய குறிப்பான விஷயங்களை சிப்பாய்களின் மொழிலும் முக்கியமான அடுக்குத் தொடர்களை அடிக்கடி சொல்லியும் வெளிப்படுத்தும் பொழுது அவர் அடிக்கடி ரூல்கழியால் மேசையைத் தட்டுவார்.

நான் திரும்பி வந்தபின் என்னுடைய பேட்டியின் மற்ற விஷயங்களைவிட மாண்ட்காமரியைப்பற்றி அநேகர் என்னைக் கேட்டிருக்கிறார்கள். அவர் நம்பிக்கைக்கொண்டிருக்கிறாரா? ஆமாம் அவருக்கு நம்பிக்கையிருக்கிறது. ஆனால் அது அளவுக்கு மிஞ்சியதில்லை. நெபோலியனைப்போல அவர் அதிருஷ்டத்தை நம்பியிருக்கவில்லை. முதன் முதலாக ஸோல்ஜர்களின் மன உறுதி பலமாக இருக்கவேண்டுமென்று அவர் பிரியப்படுகிறார்.

படையிலுள்ளவர்கள் எல்லோரும் சிறந்தவர்களாக இருக்கவேண்டுமென்ற அவர் விரும்புகிறார். இதற்காக அவர்கள் எல்லா விஷயங்களையும் கற்றுக்கொள்ளவேண்டும். இது வீண்பேச்சுடன் நின்றுவிடுவதில்லை. தகப்பனார் குழந்தைகளின் அக்கரைகளை கவனிப்பதுபோல் அவர் ஸோல்ஜர்களின் அக்கரையிலீடுபட்டவர். ஸோல்ஜர்கள் அவர்களுடைய குடும்பத்தாரிடம் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஸோல்ஜர்களுக்கு ஏராளமான கடிதங்களும், பத்திரிகைகளும், ஏராளமாக ரஜாவும் கொடுக்கப்படவேண்டுமென்று அவர் ஆசைப்படுகிறார். துருப்புகளிடையே அவருக்கு செல்வாக்கு இருப்பதற்கு அவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்று அவர் கொண்டிருக்கும் அவாமட்டும் காரணமல்ல.

போருக்காகத் தயார்செய்யும் பொழுதும் போரை நடத்தும்பொழுதும் மாண்ட்காமரி தீர்க்காலோசனை பேரில்தான் அலுவல்களைக் கையாளுவார். அவருக்கு திடீரென்று உத்சாகம் ஏற்பட்டு நடவடிக்கைகளைத் துவக்க உத்தேசம் செய்வதில்லை. எல்லா அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்த்துதான் அவர் முடிவுக்கு வருவார். அநேக வருஷங்களாக புத்திசாலித்தனத்துடனும், ஆத்ம உணர்ச்சியுடனும், தேக அப்பியாசத்துடனும் அவர் இவ்விதமான நெருக்கடிகளுக்காகத் தயார் செய்துகொண்டிருக்கிறார். மாண்ட்காமரி வேஷதாரி, அதிக நிச்சய புத்தியுள்ளவர் என்று சொல்லும் அபிப்ராயம் தவறானது.

சேனாதிபத்யத்தின் முக்கியத்வத்தை அவர் அறிவார். அவர் மேதாவி என்று மார்தட்டிக் கொள்ளுவதில்லை. ஆகிலும் அவருடைய பொறுப்பை அவர் அறிவார். அதுபோல் ஸோல்ஜர்களும் அறியவேண்டுமென்பதுதான் அவருடைய விருப்பம்.

---

## பஸிபிக் போரின் மூன்று அம்சங்கள்.

### ஹூஸானின் ராணுவ முக்கியத்வம்.

(டெயிலி டெலகிராபின் விமான நிருபர்).

பிலிப்பைன்ஸ் பிராந்தியப் போரை நாம் நன்முகச் சர்ச்சை செய்வதற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றன. எதிரிக்கு பிலிப்பைன்ஸில் 100-க்கு மேற்பட்ட விமான தளங்களிருந்தன. அமெரிக்கப் படைகள் லேயிடியில் ஒரு பக்கத்திலிறங்கினார்கள். இதற்குப் பின்னால் ஜப்பானிலுள்ள விமானப் படையும் விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்களும் நடமாடிக் கொண்டிருக்கின்றன. ஹூஸானில் ஏராளமான சண்டை விமானங்களையும் சண்டை வெடி விமானங்களையும் நாம் குவித்தாலொழிய அந்தத் தீவைப் பூராவாகப் பிடிக்கவும் அதை மகத்தான விமான தளமாகவும் கடற்படை தளமாகவும் அமைக்க இயலாது.



தூரக்கிழக்குப் போரில் கடந்து செல்லவேண்டிய தூரத்தை கவனித்தால் இந்தப் பிரச்னையின் முக்கியத்வம் தெளிவுபடும். லேயிடி சைனாக் கடற்கரையிலிருந்து 1,000 மைல்கள் தாண்டி உள்ளது. ஹாங்காங் ஷாங்கேயிலிருந்து 1,000 மைல்கள் தாண்டியிருக்கிறது. ஷாங்கே டோக்கியோவிலிருந்து 1,000 மைல்கள் தாண்டியுள்ளது. ஹூஸான் டோக்கியோவிலிருந்து 1,600 மைல்கள் தாண்டியிருக்கிறது. ஹூஸானிலிருந்து ஜப்பான் 1,200 மைல்கள் தாண்டியிருக்கிறது.

இருவகைப்பட்ட நடவடிக்கையில் இந்த தூரங்கள் அபாரமாகத் தோன்றுகின்றன. 100 மைல் பிரயாணம் செய்யும் ஒரு கடற்படையை விமானங்கள், கப்பற்படையின் தாக்குதலிலிருந்து ரக்ஷிப்பது மிகவும் சிரம சாத்தியமானது. அந்தப் பிரயாணம் 1,000 மைல்களுக்கு நீடித்தால் இந்தப் பிரச்னை மிகவும் சிக்கலாக ஆகிவிடும். மகத்தான ஒன்றுபட்ட நடவடிக்கையின் விளைவுகளை நாம் இப்பொழுது கண்ணுற்று வருகிறோம்.

நீண்ட கால திட்டத்துடன் நடவடிக்கை மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (i) யுத்தக் கப்பல்களையும் விமானந்தாங்கிகளையும் சாமான் கப்பல்களையும் உபயோகித்து சேனைக்கு உதவியளித்து விமான தளங்களைக் கைப்பற்றி ஆக்கிரமிப்பதன் மூலம் எந்த திசையிலும் 500 மைல்கள் கொண்ட தரை, கடல் மார்க்கங்களில் ஆதிக்கம் பெறுவது. (ii) ஜப்பானுக்கு சமீபத்திலுள்ள விமான தளங்களைப் பிடித்து விமான பலத்தை அதிகரித்து அவைகளைக்கொண்டு ஜப்பானின் கைத்தொழிற் சாலைகளை பலமாக அழித்து விடுவது. (iii) இறுதி கட்டத்தில் படைகள் தரை மூலமாகவும், கடல் மூலமாகவும், விமான மூலமாகவும் ஜப்பானைத் தாக்கி அதை ஆக்கிரமிப்பது.

ஹூஸானில் படையெடுத்தபொழுது அமெரிக்கர்கள் முதலாவது கட்ட நடவடிக்கையை விமானந்தாங்கிகளின் உதவிகொண்டு நடத்தி வருகிறார்கள். மார்ஷல்ஸ் தீவுகளுக்குப்பின் பிலிப்பைன்ஸ் தீவுகள் பூராவையும் நாம் ஆக்கிரமித்து விடுவோம். அடுத்தபடியாக படைகள் சீனாவின் கடற்கரையிலும் இறங்கிவிடும். நாம் என்ன செய்தாலும், ஜப்பானைத் தாக்க வசதியளிக்கக்கூடிய விமான தளங்கள் நமது வசமில்லாவிட்டால் பஸிபிக் போர் முடிவடையாது. ஜப்பானிய தொழிற்சாலைகளை திட்டமாக அழிப்பதன் மூலம் நான் ஜப்பானிலேயே இறுதிப் போரை நடத்தவேண்டும்.

பஸிபிக் போரின் தந்திரத்தின் ஒரு அம்சம் குறிப்பிடத்தக்கது. எல்லா இடத்திலும் வலுவுடனிருக்க முடியாதென்பதினால் ஒரு இடத்திலும் அவர்கள் வலுவுடனிருக்கவில்லையென்று ஜப்பானியர்களுக்குப் புலப்பட்டுவிட்டது. அவர்கள் கைப்பற்றிய எல்லாத் தீவுகளையும் அவர்கள் சதா காலமும் காப்பாற்றமுடியாது. நேசதேசத்தார்கள் எதிரியின் பலஹீனமான பாகங்களில் தங்களுடைய படைகளைக் குவித்து விடுகிறார்கள். அவர்கள் ஜப்பானின் எல்லைச்சரக தற்காப்புகளிலுள்ள படைகளுக்கு உதவியனுப்பாமலும் தடுத்துவிடுகிறார்கள். அவ்விதம் அபாயத்தை பொருட்படுத்தல் கடல் மூலம் ஸப்ளைகள் வந்தால் நமது விமானப் படையும் கடற்படையும் அதை வழிமறித்து அழித்துவிடும். ஆகிலும் நாம் ஆசியா கண்டத்தை சமீபிக்கும்பொழுது இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் சௌகரியங்கள் மறைந்துவிடும். தீவு தீவாகத் தாண்டுவது நின்றுவிடும். அத்துடன் ஆங்காங்கு போரை நடத்தும் நமது சக்தியும் குறைந்துவிடும்.

பஸிபிக் போரில் முதல் கட்டம் வெற்றிகரமாக முடிவது மிகவும் அவசியமானதென்றாலும், ஜப்பானை இறுதியில் படைகள் விமான மூலமும் கடல் மூலமாகவும் சென்று ஆக்கிரமிக்கவேண்டுமானால் இரண்டாவது கட்டமான விமானத் தாக்குதலும வெற்றிகரமாகப் பூர்த்தியடையவேண்டும். ஆகையால் நாம் கூறியுள்ள மூன்று கட்டங்களும் மகத்தான திட்டத்தின் சமமான ஒன்றுபட்ட அம்சங்கள். ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு கட்டம் பிராபல்யமுள்ளதாக இருக்கும். பஸிபிக் போரைவிட வேறு எந்த போரிலும் மூவகைப்பட்ட படைகளையும் ஒன்றுபடுத்திப் போரை நடத்த முடியாதென்று நான் நினைக்கிறேன்.

---

## ஜப்பானிய சர்பராக்களுக்கு இருபுறத்திலும் அடி.

### நேசதேச சாமான் கப்பல்கள் இந்துமகா ஸமுத்திரத்தில் செல்லுகின்றன.

(A. J. மாக்வின்னி).

பிரிடிஷ் கடற்படையின் நூதனமான நடமாட்டத்தினாலும் வலிமையினாலும் ஜப்பானிய சர்பரா பிரச்னை பலமாக வலுவடைந்துவிட்டது. ஒரே நாளில், கடற்படை, பர்மாவிலுள்ள அரக்கான் போர்முனையிலுள்ள ஜப்பானிய ஸப்ளை தளமான அக்யாபில் படைகளை இறக்க அவைகளை கப்பலகளில் ஏற்றிச்சென்றது; ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிலுள்ள சுமாத்ராத் தீவிலுள்ள முக்கியமான எண்ணெய் ஸ்தானங்களையும் நொருக்க கப்பல்களையும் அனுப்பிற்று. இதைத் தவிர இந்துமகாஸமுத்திரத்தைத் தாண்டி 2 மிலியன் டன்கள் மொத்த எடையுள்ள

சாமான் கப்பல்கள் தூரக்கிழக்கிலுள்ள நேசதேசப் படைகளுக்கு சாமான்களைக்கொண்டு போயின.

அக்யாபுக்கருகில் லேசான கடற்கரைப் படகுகள் நடமாடிக்கொண்டிருக்கின்றன என்று ஜப்பான் அறியக்கூடும். ஆகிலும் படைகள் வெற்றிகரமாக இறங்கவேண்டுமென்பதற்காக நேசதேசத்தார்கள் பலமான தயாரிப்புச் செய்தார்கள். பிரிடிஷ் படைகள் விமானப் படை ரக்ஷணையுடன் அக்யாப் தீவிலிறங்கியவுடன் ஜப்பானியர் அக்யாபிலிருந்து ஓடிவிட்டார்கள்.

அக்யாப் நஷ்டமானது ஜப்பானுக்கு மிகவும் கெடுதலானது. அந்தத் துறைமுகம்தான் காலடான் நதிக்கும் அரக்கானின் தலைநகரமான மிச்சாங்கு என்ற ஜப்பானிய தளத்துக்கு வடக்கு நோக்கிச் செல்லும் நதி மார்க்கங்களுக்கும் வாசற்படி போன்றது. அதிலிருந்து ஜப்பானிய ஸப்ளைகளைக்கொண்டு போகும் மாயூ நதிக்கும் மார்க்கமிருக்கிறது.

ஆயிரம் மைல்கள் தாண்டி பிரிடனின் விமானந்தாங்கிக் கப்பல்களிலிருந்த விமானங்கள் சுமாத்ராவிலுள்ள ஜப்பானிய எண்ணெய் சுத்திகரிக்கும் சாலையை நொருக்கத் தயாராக இருந்தன. சுமாத்ராவையும் மலேயாவையும் பிரிக்கும் மலாக்கா ஜல சந்தியின் வடகிழக்குக் கரையிலுள்ள பாங்கலான் பிராண்டானைத் தாக்குவதுதான் தாக்குதலின் லக்ஷியம்.

முதன்முதலாக இந்தப் போர்முனையில் புதிய பிரிடிஷ் சண்டை வெடி விமானங்கள் (பையர் பிளைகள்) நடவடிக்கையை மேற்கொண்டன. அவைகளும் அவெஞ்சர் வெடி விமானங்களும் குறி தவறாமல் லக்ஷியத்தின் பேரில் வெடி குண்டுகளை வீசின. ஒளிப்படங்களைக் கவனிக்கும்பொழுது மின்சார யந்திரசாலையும், டாங்கிகளும் முக்கியமான கட்டடங்களும் நேராகத் தாக்கப்பட்டனவென்று வெளியாகுகிறது.

சென்ற விமானத் தாக்குதலைப்போலில்லாமல் ஜப்பானியர்கள் சண்டை விமானங்களைக் கொண்டு பிரிடிஷ் விமானங்களைத் தாக்கினார்கள். விமானந்தாங்கிகளிலிருந்து ஹெல்காட், கார்சேர் சண்டை விமானங்கள் புறப்பட்டன. 7 ஜப்பானிய விமானங்கள் சுட்டுவீழ்த்தப் பட்டு தீப்பிடித்து எறிந்தன. ஜப்பானியர்கள் நமது விமானங்களில் ஒன்றைக்கூடச் சுட்டு வீழ்த்தக்கூடவில்லை. இவ்விதமாக தரையிலிருக்கும் விமானங்கள் விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்களைவிட உயர்வானவை என்ற அபிப்பிராயம் மறுபடியும் மறைந்து விட்டது.

தாக்குதலின் மூலம் எண்ணெய் சுத்தி செய்யும் சாலைகள் அழிபட்டதென்பது ஒருபுறமிருந்தாலும் பினாங்குக்கும் சிங்கப்பூருக்கும் எண்ணெயையும் விமான எண்ணெயையும் பெறுவதாக உத்தேசித்திருந்த ஜப்பான் பாங்லான் பிராண்டான் எண்ணெய் சுத்திகரிக்கும் சாலையை இழந்துவிட்டது, சுமாத்ராவில் கிடைக்கும் எண்ணெயை மலேயாவிலும் ஆசியாவிலுமுள்ள துறைமுகங்களுக்குக் கடல் தாண்டிக்கொண்டு போவதில் ஜப்பானிய எண்ணெய்க் கப்பல்கள் அதிகமான அபாயத்துக்குட்படவேண்டியதாயிற்று. பிரிடிஷ் முற்றுகையைத் தாண்டிச்செல்ல முயலும் ஜப்பானிய எண்ணெய்க் கப்பல்களையும் மற்ற படகுகளையும் வழி மறிக்க பிரிடிஷ் நீர்மூழ்கிகள் எப்பொழுதும் தயாராக இருக்கின்றன.

இந்தத் தாக்குதல்களும் அரக்கானில் படைகளிறங்கியதும் எதிர் காலத்தில் நடைபெறப்போகும் மகத்தான தாக்குதல்களுக்கு முற்போக்கான நடவடிக்கைகள். பஸிபிக்கில் அமெரிக்க கடற்படைத் தாக்குதலைத் தவிர ஜப்பானுக்கு சொந்தமான பிரதேசங்களை பிரிடிஷ் கடற்படை மூன்று அல்லது நான்கு இடங்களில் ஒரே சமயத்தில் சமீப எதிர் காலத்தில் தாக்கக்கூடும். இப்பொழுது பஸிபிக்கிலுள்ள பிரிடிஷ் கடற்படை பலம் ஜப்பானை சமீபித்துவரும் போரில் பங்கெடுத்துக்கொள்ளக்கூடிய பிரிடிஷ் கடற்படையின் பூரா பலம் என்று நினைப்பதற்கில்லை.

பஸிபிக்கிலுள்ள பிரிடிஷ் கடற்படையின் கடற்தளபதிகளின் பெயர்கள் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் யாரென்று அநேகர் ஊகித்துக்கொண்டிருக்கிறார்கள். ரகசியத் தடை நீக்கப்பட்ட பின் அநேக கியாதி பெற்றவர்களின் பெயர் வெளிவரும். அவர்கள் ஜெர்மனியின் கடற்படையை அதோகதிக்குக்கொண்டு வந்தவர்களாக இருப்பார்கள். ஐரோப்பாவில் ஜெர்மன் கடற்படையை நிர்மூலமாக்கியதினால்தான், தூரக்கிழக்கில் ஜப்பானியக் கடற்படையை அழிக்க பிரிடிஷ் கடற்படையை அனுப்புவதற்கு சாதகம் ஏற்பட்டு விட்டது.

---

## பர்மாவில் யுத்தப் போக்கில் மாறுதல்.

### நான்கு நேசதேசப்படைகள் மாண்டலே பேரில் குவிந்துவருகின்றன.

(யார்க் ஷையர் போஸ்ட்).

மத்திய பர்மாவிலுள்ள மிகவும் பெரிய நகரமான மாண்டலேயை நோக்கி நான்கு நேசதேசப் படைகள் குவிந்து வருவதினால், தரைப் போரில் முக்கிய போர் முனையான இந்தப் பகுதியின் நிலைமை நேசதேசத்தார்களுக்கு அனுகூலமாக மாறிவிட்டது.



ஒன்பது மாதங்களுக்கு முன் பிரிடிஷ் படைகள் முன்னேறும் எதிரிப் படைகளுக்கு முன் பின்வாங்கும்படி நேரிட்டது. இன்று ஜப்பானியர்கள் பின்வாங்கும்படி நேரிட்டு விட்டது. வடக்கிலும் வடமேற்கிலுமுள்ள ஜப்பானிய தற்காப்புகளுக்கு அதிக சிரமம் ஏற்பட்டுவிட்டது. எதிரியின் போர் செய்யும் சக்தியும் துருப்புகளின் மன உறுதியும் குறைந்து விட்டதென்று ஸ்பஷ்டமாகத் தெரிய வருகின்றது. சென்ற வருஷம் வசந்த காலத்தில் நேசதேசத்தார்கள் வெற்றிகரமாக நடத்திய போர்களின் விளைவுகள்தான் இவைகளென்று சொல்ல வேண்டும். சென்ற ஏப்ரல் மாதத்தில் ஜப்பானியர்கள் அஸ்ஸாமுக்குள் நுழைந்த பொழுது ஜெனரல் ஸ்டில்வெல் ஜெனரல் ஸ்லிமுடன் கலந்து பேச விமான மூலம் சென்றார். போக்குவரத்து மார்க்கங்களின் பத்திரத்தைப்பற்றி அமெரிக்க ஜெனரல் கவலை கொண்டிருந்தார். முன்னேறித் தாக்குங்கள். உங்களுக்கு சர்ப்பரா மார்க்கம் 10 நாட்களுக்கு மேல் துணிக்கப்படாமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று ஜெனரல் ஸ்லிம் சொன்னார். ஆகிலும் உண்மையாக சர்ப்பரா மார்க்கம் துணிக்கப்படவேயில்லை. படைகள் மிட்கினாவைப் பிடித்தன. இந்த ராணுவ முக்கியத்வமுள்ள நகரம்தான் வடபர்மாவில் நேசதேசத்தாரின் முக்கியமான தளம். வளைக்கப்பட்டிருக்கும் சுதந்திர சைனாவுக்கு விமான மூலம் சப்ளைகளை அனுப்புவதற்கும் அது முக்கியத்துவமுள்ளதாக யிருக்கிறது.

சென்ற வருஷத்தில் பர்மாப் போர் முனையில் எதிரிக்கு அபாரமான நஷ்டமேற்பட்டது. மூன்று டிவிஷன் படைகளும் ஒரு உதவிப் படையும் அழிக்கப்பட்டுவிட்டன. வடக்கு பர்மாவில் ஏற்பட்ட மனித நஷ்டத்தையும் கணக்கிட்டால் மொத்தத்தில் 50,000 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 600 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கொல்லப்பட்ட ஜப்பானியர்களைப்போல பாதி பாகம் படுகாயமடைந்தவர்களென்று வைத்துக்கொண்டாலும் பர்மாவிலுள்ள தற்காப்புப் படைகளை பலப்படுத்த வேண்டுமானால் எதிரி 75,000 ஸோல்ஜர்களை பர்மாவுக்குக் கொண்டுவரவேண்டும். உபரிப் படைகள் மத்தியிலும் அல்லது சுற்றுப் புறங்களிலுள்ள சில இடங்களில்தான் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஜப்பானியப் படைகளைக் கொண்டுவருவதற்கு போக்கு வரத்து சிரமங்களிருக்கின்றன. எதிரியின் கப்பல் மார்க்கங்களுக்கு அபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பாங்காக்—ரெங்கூன் இருப்புப் பாதையை நேசதேச வெடி விமானங்கள் பலமாகத் தாக்கி நொருக்கி வருகின்றன இரண்டாவது முறையைக் கையாளுவதென்றால் மலேயா, போர்னியோ முதலிய இடங்களிலுள்ள படைகளுக்கு பலஹீனமேற்பட்டுவிடும். நேசதேசத் தாக்குதல் ஏற்படும்பொழுது அவைகளும் விழுந்துவிடும். இந்த வெற்றிகளைப் பெற்றதில் நேசதேசத்தார்களுக்கும் சிறிது நஷ்டமேற்பட்டது. •14-வது சேனையில் 40,000 பேர்கள், கொல்லப்பட்டார்கள், காணப்படவில்லை, அல்லது காயம் பட்டார்கள். ஆகிலும் முன்னேறித் தாக்க நேசதேசத்தாரிடம் ஏராளமான படைகளிருக்கின்றன. எதிரியிடம் நஷ்ட ஈடு செய்வதற்குக்கூட உதவிப் படை இல்லை.

சமீப எதிர் காலத்தில் தரையில் மகத்தான போர் மூளும். நேசதேசப் படைகளின் துணிவினாலும், அஸ்ஸாம், பர்மா எல்லைச் சரகத்திலுள்ள மலைவாசிகளின் தீரத்தினாலும், விசுவாசத்தினாலும் அந்தப் போர் நேசதேசத்தாருக்கு அனுகூலமான நிலைமையில் நடைபெறக் கூடும். ஜப்பானியர்களின் போர் முனைக்கு வரும் மார்க்கங்கள் நீண்டதாகவும் கஷ்ட சாத்தியமாகவும் பத்திரமில்லாததாகவும் இருக்கும். நேசதேசத்தாரின் நிலைமை ஒவ்வொரு நாளும் அபிவிருத்தியடைந்து வருகிறது.

---

## பர்மாவுக்குள் நேசதேச முன்னேற்றம்.

### ஜப்பானியர்களின் பொருளாதாரத்துக்கு ஆபத்து.

(கிளாஸ்கோ ஹெரால்ட் பத்திரிகை).

நமது படைகள் மாண்டலேயை நோக்கி முன்னேறுகின்றன. மூன்று வருஷங்களுக்கு முன் ஆரம்ப வெற்றியில் ஜப்பானியர்கள் பிடித்த நெல் விளையும் செழிப்பான பிரதேசங்களுக்கெல்லாம் சமீப எதிர் காலத்தில் அபாயமேற்படக்கூடும்.

இதன் மூலம் ஜப்பானின் உணவுப் பொருள் நிலைமைக்கு பலமான குந்தகமேற்படக் கூடுமாதலால் இது முக்கியத்துவமுள்ளது. ஆகிலும் தாத்காலிகமாக ஜப்பான் கிழக்கு இந்திய நாடுகளிலிருந்து வரும் சப்ளைகளைக்கொண்டு அதை சரிப்படுத்திவிடலாம். ஆகிலும் உலகத்தின் ஒரு கோளத்தில் நடைபெறும் யுத்த திட்டத்தில் அவர்கள் பர்மாவிலிருந்து பின்வாங்கிவிட்டால் ஜப்பான் கொள்ளையடித்துவந்த மலேயாவின் தற்காப்புக்கு இடைஞ்சல் ஏற்படும். பர்மாவைப் போலில்லாமல் மலேயாவில் ஏராளமான துறைமுகங்களிருக்கின்றன.

ஜப்பானியர்களுக்கு தீபகற்பத்தில், முக்கியமாக சிங்கப்பூரில் ஏராளமான படைகளிருக்கின்றன. தரைப் படைகளுக்கு ரக்ஷணையளிக்க விமானங்களையும் அவைகளுக்கு தேவையான விமான தளங்களையும் ஏற்படுத்த ஜப்பானுக்குப் போதுமான அவகாசமிருந்தது. ஆகிலும்

நவீன யுத்த முறையின் ஒன்றுபட்ட நடவடிக்கையில் கடல் வலிமை முக்கியமான பங்கெடுத்துக்கொள்ளக்கூடியது. சமீப எதிர் காலத்தில் ஜப்பானியக் கடற்படை இருபுறத்திலும் தாக்குதலை சமாளிக்க வேண்டியிருக்கும். பஸிபிக்கிலுள்ள அமெரிக்க கடற்படைக்கு பிரிடிஷ் கடற்படையின் சக்தி வாய்ந்த கப்பல்கள் உதவி செய்ய வந்துவிட்டன. ஜப்பானியர்கள் கூடிய சீக்கிரத்தில் எந்த கடற்படையை எதிர்த்துப் போராடுவதென்ற முடிவுக்கு வர வேண்டும். ஒருக்கால் அவர்கள் இரண்டு கடற்படையையும் ஒரே சமயத்தில் சமாளிக்கவேண்டி நேரிட்டாலும் நேரிடும். இப்பொழுது அவர்களுக்கு உதவி செய்வது தூரமான இடவசதிதான். அதுவும் கூடிய சீக்கிரம் விரோதியாக ஆகிவிடும்.


## ‘வி’ டயரி - 1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரு. 1—8—0 ; ஷீப்ஸ்கின் ரு. 1—12—0 ; மொராக்கோ ரு. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணு.

காபிகளுக்குமுந்துங்கள்! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம் :—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

#### பிரஸங்கம் 233 (1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27- 1-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 31- 1-45 | பனையப்பட்டி | ... மாலை 7.00 |
| 28- 1-45 | பூவரசகுடி | ... ,, 7.00 | ,, | பாங்கியம் | ... ,, 7.30 |
| ,, | வேங்கடக்குளம் | ... ,, 7.30 | 1- 2-45 | அண்டக்குளம் | ... ,, 7.00 |
| 29- 1-45 | மலைக்குடிப்பட்டி | ... ,, 7.00 | ,, | இள்ளனூர் | ... ,, 7.30 |
| ,, | கோனாபட்டு | ... ,, 7.30 | 2- 2-45 | கொடும்பாளூர் | ... ,, 7.00 |
| 30- 1-45 | குழிபிறை | ... ,, 7.00 | ,, | விராலூர் | ... ,, 7.30 |
| ,, | செவலூர் | ... ,, 7.30 | | | |

#### பிரஸங்கம் 234 (2-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3- 2-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 7- 2-45 | பெருமாநாடு | ... மாலை 7.00 |
| 4- 2-45 | சூரக்காடு | ... ,, 7.00 | ,, | புல்வயல் | ... ,, 7.30 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, 7.30 | 8- 2-45 | வானரமாணிக்கம் | ... ,, 7.00 |
| 5- 2-45 | தென்னதிரயன்பட்டி | ... ,, 7.00 | ,, | ஏம்பல் | ... ,, 7.30 |
| ,, | விசலூர் | ... ,, 7.30 | 9- 2-45 | விராலிமலை | ... ,, 7.00 |
| 6- 2-45 | மழையூர் | ... ,, 7.00 | ,, | பொருவாய் | ... ,, 7.30 |
| ,, | காரம்பக்குடி | ... ,, 7.30 | | | |

#### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 27— 1—45 | பொன்னமராவதி. | 3— 2—45 | வெட்டம்விடுதி. |
| 28— 1—45 | மருதன்கோன்விடுதி. | 4— 2—45 | ஏம்பல். |
| 30— 1—45 | ராமச்சந்திரபுரம். | 6— 2—45 | கோனாபட்டு. |
| 1— 2—45 | குழிபிறை. | 8— 2—45 | கீழாநிலை. |
| 2— 2—45 | புதுக்கோட்டை. | 9— 2—45 | புதுக்கோட்டை. |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press. Pudukkottai. 1.750—27-1-45.

69.413


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வரு பிப்ரவரிமீ 3உ [ந. 234


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXXXIV.

## ருண்ட்ஸ்டெட்டின் ஐந்தோகை.

(விக்ஹாம் ஸ்டீட்).

(1945-ம் வருஷம் ஜனவரி மாதம் 22-ம் தேதி).

சமீபகால குழப்பமான நிலையிலிருந்து இரண்டு முக்கியமான உண்மைகள் புலப்படுகின்றன. மேற்கு முனையில் நேசதேச ஸ்தானங்களைத் தாக்க ஜெர்மனி செய்த பிரயத்னம் வீணாகிப் போய்விட்டது என்பது ஒன்று. கிழக்கில் ருஷ்யாவின் மாரிகாலத் தாக்குதல் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதென்பது மற்றொன்று. இவ்விதமாக இரண்டு போர் முனைகளில் போர் மூண்டதுதான் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் மனதைக் கலக்குகிறது. இதாலியிலும், ஹங்கேரியிலும் நடைபெறும் போர்மூலம் ஜெர்மனி நான்கு முனைகளில் போரை நடத்த வேண்டியிருக்கிறதென்றும் மேற்குப் பக்கத்தில் தாக்கி வெற்றி பெற்று விட்டால் கிழக்கிலும், மேற்கிலும் ஒரே சமயத்தில் ஏற்படக்கூடிய தாக்குதல் அபாயத்தை ஒத்தி வைத்து விடலாம் அல்லது தடுத்து விடலாமென்பது தான் ஜெர்மனியின் யுத்த தந்திரமென்று தோன்றுகிறது.

“நமக்குப் பேராபத்து ஏற்பட்டிருக்கிறது. சகலத்தையும் தியாகம் செய்யவேண்டும்” என்று தாக்குதல் செய்யும் சேனைகளுக்கு ருண்ட்ஸ்டெட் அனுப்பிய செய்திக்கு இதைத் தவிர வேறு அர்த்தம் கொள்ள முடியாது. ஜெர்மனியின் எல்லைச் சரகத்திலோ அல்லது ஜெர்மனியிலோ ஒரே சமயத்தில் ஏற்படக்கூடிய இருபுறத்தாக்குதலை சமாளிக்க எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டுமென்று தான் அதன் பொருள் இவ்விதம் செய்யாவிடில் ஜெர்மனி எல்லாவற்றையும் இழந்து விடுமாம்.

பிரஸ்ஸல்ஸ், ஆண்ட்வெர்ப் வழியாக ஊடுருவிச் செல்லுவதன் மூலம் தெற்கு ஹாலந்திலும் வடக்கு பெல்ஜியத்திலுமுள்ள பிரிடிஷ், அமெரிக்கப்படைகளைத் துணித்து விட வேண்டுமென்பது தான் ருண்ட்ஸ்டெட்டின் உத்தம பக்ஷமான லக்ஷியம். மேற்குப்பக்கத்திலுள்ள நேசதேசப் படைகளை பலமாக அழித்து விடுவதென்று தான் அவன் உத்தேசித்திருந்தான். இது வெற்றிகரமாக முடிந்திருந்தால் கிழக்கில் எதிர்பார்க்கப்பட்ட ருஷ்ய மாரிகாலத் தாக்குதலைத் தடுக்க ஜெர்மனியின் முக்கியமான படைகளைக் குவிக்க ஜெர்மனிக்குப்

போதுமான அவகாசத்தை அவன் சம்பாதித்திருக்கக்கூடும். இவ்விதமாக இரு போர் முனைகளில் தாக்குதல் என்ற பீதியை அவன் தாத்காலிகமாக நிறுத்தியிருக்கக்கூடும்.

இவ்விதமான உத்தம பக்ஷமான லக்ஷியம் சித்திபெருவிடில் அதம பக்ஷமான லக்ஷியத்தையாவது அடையலாமென்று ருண்ட்ஸ்டெட் உத்தேசித்திருந்தான். கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் ஒரே காலத்தில் தாக்கும் நேசதேசப்படைகளை எதிர்த்துப் போராட ஜெர்மனியிடம் போதுமான பலமில்லாததால் அதைத் தடுக்க முயன்ற ஜெர்மனியின் தந்திரத்தை மேற்கு முனையிலுள்ள நேசதேச யுத்த தந்திரம் முறியடித்து விட்டது. இந்தத் துணிவுகரமான நடவடிக்கையில் ஜெர்மனிக்கு எவ்வித வெற்றி கிடைத்தது என்பதை வருங்காலத்தில் தான் அறியக்கூடும்.

இங்கிலாந்தில் யுத்தக் கைதிகளாகயிருக்கும் ஜெர்மன் ஆபீஸர்கள் இந்த ராணுவ முயற்சி மூலம் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் சமாதானம் செய்து கொள்ளுவதென்ற ராஜீய லக்ஷியத்தையும் அடைந்து விடுவதென்று உத்தேசிக்கிறார்கள் என்று சொல்லி வருகிறார்கள். ராணுவ நெருக்கடியை உத்தேசித்து மேற்குப் பக்கத்திலுள்ள நேசதேசத்தார்கள் நிபந்தனையற்ற சரணாகதிக் கொள்கையைத் திருத்தியமைத்துக் கொள்ளுவார்கள் அல்லது உதறிவிடுவார்களென்று அவர்கள் நம்பியிருக்கிறார்கள். ருண்ட்ஸ்டெட்டின் தாக்குதலின் ராஜீய லக்ஷியம் இது தான் என்றால் அதுவும் ராணுவ லக்ஷியத்தைப் போல முறிபட்டு விட்டது. எந்த நிலைமையிலும் அந்த லக்ஷியம் கைகூடியிருக்காது.

ருண்ட்ஸ்டெட்டின் அதம பக்ஷமான லக்ஷியம் பாக்கியிருக்கிறது. அதைப் பெறுவதற்கு ஒரு லக்ஷம் ஜனங்களையும், நூற்றுக்கணக்கான டாங்கிகளையும், பீரங்கிகளையும், ஆயிரக்கணக்கான போக்குவரத்து வாஹனங்களையும் ருண்ட்ஸ்டெட் இழந்து விட்டான். நேசதேசத்தாருக்கு இந்த நஷ்டத்தில் பாதிக்குக் குறைவாகத்தான் நஷ்டம் ஏற்பட்டது. ஐந்தொகை போட்டால் அபாரமாகக் காவு கொடுத்ததற்கு அவனுக்கு ஒரு லாபமும் கிடைக்கவில்லை.

இந்தத் தாக்குதல் மூலம் நேசதேச விமான நடவடிக்கைக்கும் யாதொரு குதாவடையும் ஏற்படவில்லை. அதை மூன்றாவது போர்முனை என்றே சொல்லலாம். ஜெர்மனியின் யுத்த தொழிற்சாலைகளையும், போக்கு வரத்து மார்க்கங்களையும் வாஹனங்களையும் அழிக்கும் நேசதேச விமானப்படை நடவடிக்கையை அனுகூலமில்லாத காலநிலைதான் ஒருவாறு குறைவு படுத்துகிறது. நேசதேச விமான நடவடிக்கையைத் தடுக்கும் முறையில், நேசதேசத்தார்கள் ஐரோப்பாவைத்தாக்க ஆரம்பத்திலிருந்து இருந்ததைவிட ஜெர்மன் விமானப் படைக்கு பலமான நஷ்டம் ஏற்பட்டு விட்டது.

ஆகையால் மேற்கு முனையில் ருண்ட்ஸ்டெட் மேற்கொண்ட நடவடிக்கை தவரானதில்லையாவென்றும் அதன் மூலம் கிழக்குப் பக்கத்தில் ஆரம்பிக்கப்படும் ருஷ்யத் தாக்குதலை சமாளிக்க ஜெர்மனியின் சக்தி பலஹீனமடைந்து விடவில்லையாவென்றும் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. ராணுவ முறையில் அந்த பிரச்னைக்கு இப்பொழுது பதிலுரைக்க முடியாது. மனோநிலையை உத்தேசித்து அந்த விடை தெளிவாகத் தோன்றுகிறது. ருண்ட்ஸ்டெட்டின் நடவடிக்கை ஆரம்பிக்குமுன் இருந்ததைவிட ஜெர்மனியில் திகைப்பும், துக்கமும் அதிகரித்து விட்டது. ருஷ்யா முடிவான வெற்றியை எதிர்பார்த்துப் போரை நடத்துகிறதென்று ஜெர்மன் பிரமுகர்கள் சொல்லி வருகிறார்கள். முடிவான வெற்றி பெற்று ஜெர்மனியுடன் முடிவாக கணக்கு முடித்துக்கொள்ளுவதென்று ருஷ்யா தீர்மானத்துடனிருக்கிறதென்று மாஸ்கோவிலுள்ள பிரமுகர்கள் பறைசாற்றிவருகிறார்கள்.

ஐரோப்பிய நடவடிக்கைகள் இவ்விதமாக ஜெர்மனியின் இறுதித் தோல்வியைக் குறித்து நடைபெற்று வரும்பொழுது பிலிப்பைன்ஸில் அமெரிக்கப்படைகள் இறங்கியதும் பர்மாவில் பிரிடிஷ் படைகளுக்குக் கிடைத்துவரும் வெற்றிகளும் ஜப்பானியர் மனதில் கலக்கத்தை உண்டுபண்ணியிருக்கின்றன. லூஸானுக்குத் திரும்பி வருவதாக ஜெனரல் மாக் ஆர்தர் விடுத்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றியது கண்டு ஜப்பானியர்களுக்கு பீதி உண்டாகி விட்டது. இந்த பீதி ஞாயமானது. பஸிபிக்கில் ஜப்பான் அமைத்திருந்த கேந்திரஸ்தானங்கள் இரண்டு பாகமாகத் துண்டிக்கப்பட்டுவிட்டன. பஸிபிக் கடலுக்கு சக்திவாய்ந்த பிரிடிஷ் கடற்படையும் வந்துவிட்டபடியால் இந்தப்பிளவு பலப்படுத்தப்படுமென்பதற்கு ஆதாரவு கிடைத்து விட்டது. ஜெர்மனி இறுதியில் முறியடிக்கப்பட்டு ஜப்பானின் மனோதைரியம் குலைந்து விடுவதற்கு முன்னதாகவே இந்த இரண்டு ஜப்பானிய பாகங்களும் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டுவிடும்.

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷ பிப்ரவரி மீ 17உ [ந. 236

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXXXVI.

# பிலிப்பைன்ஸில் அடுத்த நடவடிக்கை என்ன?

## மணிலாவுக்குள் அமெரிக்கர்கள் நுழைந்துவிட்டார்கள்.

மணிலாவுக்குள் ஏராளமான அமெரிக்கப் படைகள் நுழைந்ததுடன் ஜெனரல் மாக் ஆர்தரின் அற்புதமான பிலிப்பைன்ஸ் நடவடிக்கை உச்ச நிலைமையை அடைந்துவிட்டது.

கவசம் பூண்ட முதலாவது குதிரைப்படை கிழக்கிலிருந்து சுற்றிவளைத்துக்கொண்டு பிலிப்பைன்ஸின் தலைநகரமான மணிலாவுக்குள் நுழைந்தது. திங்கட்கிழமை பொழுது விடிவதற்குமுன் அதன் முன்னணிப்படைகள் மணிலாவின் மத்தியபிரதேசத்தை அடைந்தன. வெட்கக்கேடான முறையில் போஷணைக்குறைவும் கோரமாக உடல் மெலிந்து போனதுமான பெரும்பாலும் அமெரிக்கர்களுள்ள 3,700 யுத்தக் கைதிகளையும் 1942-ம் வருஷ ஆரம்பத்திலிருந்து ஸாண்டோ தோமஸ் காவல் முகாமில் அடைபட்டிருந்த, பிரிடிஷ், சாம்ராஜ்ய பொதுமக்களையும் விடுவித்தார்கள். 37-வது டிவிஷன் முதல் குதிரைப் படைக்கு முன்னதாகவே வடக்கிலிருந்து முன்னேறி மணிலாவின் சுற்றுப்புறங்களை அடைந்து எதிரியின் அபாரமான குண்டுவீச்சையும் பொருட்படுத்தாமல் முன்னேறிவந்தது. தெற்கிலிருந்து கடல் மூலமாகவும் ஆகாய மார்க்கமாகவும் தாக்கிவந்த 11-வது படைகள் நாசுக்பாவிலிருந்து மணிலாவை நோக்கி துரிதமாக முன்னேறுவதாக ஜெனரல் மாக் ஆர்தர் வெளியிட்டார். மற்ற படைகளும் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் முன்னணிப்படைகளை வெகு வேகமாகப் பின்பற்றிச் செல்லுகின்றன. மணிலாவைத் தகர்த்து அழித்துவிடுவதற்கு எதிரிக்குக் கொஞ்சம்கூட அவகாசம் கொடுக்கக்கூடாதென்பதுதான் அமெரிக்க கமாண்டின் தெளிவான உத்தேசம். நாசவேலையில் ஜெர்மானியரைப்போல அவ்வளவு நிபுணர்களாக இல்லாவிட்டாலும் ஜப்பானியர்கள் திறமையில் சிலாக்கியமானவர்களென்று வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

லூஸான் வெற்றியில் அடுத்தபடியாக நடவடிக்கைகள் எவையென்று சுலபமாக ஊகிக்கலாம். மணிலாவின் வீழ்ச்சிக்குப்பின் நீளமான, விசித்திரமான அமைப்புள்ள அந்தத் தீவின் தெற்குப் பகுதியிலுள்ள ஜப்பானியர்களை பாடான் தீபகற்பத்திலுள்ள ஜப்பானியர்கள் அடைக்கப்பட்டதுபோல, அதன் மத்திய பாகத்தைக் கைப்பற்றுவதன் மூலம் துணித்துவிடலாம். ஆனால், மணிலா விரிகுடாவை ஒட்டி உள்ளதும் காவைட் துறைமுகம், ஆயுதசாலை முதலியவற்றைக் காப்பாற்றுவதுமான காரிகெடார் தீவைச் சேர்ந்த பலமான அரண்களைத் தாக்க சிரமப்படமாட்டார்கள். அங்குள்ள தற்காப்புகளை கப்பற்படை மூலமாகவும் விமானங்கள் மூலமாகவும் நொருக்கிய பிறகும் அங்குள்ள ஜப்பானியப் படைகளுக்குப் போகும் சர்பராக்களைத் துணித்த பின்னரும்தான் அமெரிக்கர்கள் தாக்க ஆரம்பிப்பார்கள். மணிலா விரிகுடாவிற்கு வடக்கிலுள்ள பெரிய ஆழமான ஜலாசயமும் சூபிக் விரிகுடாவின் தலையிலுள்ளதுமான அலாஸ்காடோவைக் கைப்பற்றியதிலிருந்து அமெரிக்கர்கள் ஒரு சிறந்த கப்பற்துறையையும் மிகவும் உபயோகமுள்ளதும் பலமான தற்காப்புகளுள்ளதுமான துறை

முகத்தையும் பெற்றுவிட்டார்கள். இதிலிருந்தும் மற்ற முன்னணி தளத்திலிருந்தும் அமெரிக்க கடற்படை, இந்தோ சைனு, மலேயா, டச்சுக் கிழக்கு இந்தீஸ் தீவுகளுக்குப் போகும் ஜப்பானியக் கடல் மார்க்கங்களை பயமுறுத்தி வருகின்றன. மற்ருெரு பக்கத்தில் ஜப்பானியக் கடற்படையை பிரிடிஷ் கிழக்குக் கடற்படை பயமுறுத்தி வருகிறது. லூஸானில் இனிமேல் கைவசமாகும் விமான தளங்களும் ஏற்கனவே கிடைத்த விமான தளங்களும் ஜப்பானியப் போக்குவரத்து மார்க்கங்களையும் வாஹனங்களையும் தாக்க அதிக சக்தியை அமெரிக்கர்களுக்கு அளித்துவிடும்.

லூஸானில் எஞ்சியிருக்கும் எதிரிப் படைகளை அமெரிக்கப் படைகளுடன் ஒப்பிட்டால் சங்கியையிலும், முஸ்தீப்பிலும், சலன சக்தியிலும், ஞாய சக்தியிலும் இழிவானவையென்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது. அக்டோபர் மாதத்தில் லெயிடியில் அமெரிக்கப்படை கள் இறங்கியபொழுது மதிப்புப் போட்டபடி பிலிப்பைன்ஸிலிருந்த ஜப்பானிய 14-வது சேனையில் 2,55,000 மனிதர்கள் இருந்தார்கள். லெயிடியிலும் அதற்கு ரக்ஷணையளிக்க கடல் மூலமாகச் செய்த பிரயத்தனத்திலும் ஜப்பானின் பாதி பலம் அழிந்துவிட்டதினுல் லூஸானி விறங்கிய ஒன்பது அமெரிக்க டிவிஷன் படைகள் தீவில் செல்ல முடியாததும், முக்கியக் குறைவுள்ளதுமான பாகங்களைச் சுற்றிலும் ஜப்பானியர்களின் எதிர்ப்பை ஒழித்துவிடுவார்கள் என்று தோன்றுகிறது. ஜப்பானியரிடம் ஏராளமான படைகளிருந்தாலும் பிலிப்பைன்ஸி லும் ந்யூகினியாவிலும் ஜெனரல் மாக் ஆர்தராலும் கடற்தளபதி நிமிட்ஸினுலும் அவர்கள் நிருதியாகத் தோற்கடிக்கப்பட்டதிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்பட்ட வெற்றியானது யந்திர சாதனங்களினுலும் ஐச்வர்ய ஆதிக்கத்தினுலும் ஏற்பட்டதென்பதைவிட அதிக முக்கியத்வம் உள்ளது. ஜெனரல் மாக் ஆர்தரின் நடவடிக்கைகளில் புத்திசாலித்தனமும், துணிவும், மேதையும்தான் மிகுதியாகக் காணப்படுகின்றன.

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 6—2—45 (செவ்வாய்க்கிழமை.) | செம்படை பிரெஸ்லாவுக்குத் தெற்கில் ஒடர் நதியைக் கடந்தது.<br>நேசதேசப் படைகள் ரைன்நதிப் போர்முனையில் நியூ ப்ரேயிஸாக்கைக் ஆக்கிரமித்தன. |
| 7—2—45 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் குன்னர்ஸ் டார்பைப் பிடித்தார்கள்.<br>நேசதேசப் படைகள் கிழக்கு ஆர்டெனிஸிலுள்ள ஔர், சாயியர் நதியைக் கடந்தன. |
| 8—2—45 (வியாழக்கிழமை). | பிரிடிஷ் படை ஹாலந்தில் புதிய தாக்குதலைத் துவக்கி விட்டது. |
| 9—2—45 (வெள்ளிக்கிழமை). | பிரிடிஷ் படைகள் ஸீக்பிரட் அரணுக்குள் நன்கு முன்னேறி யிருக்கின்றன. |
| 10—2—45 (சனிக்கிழமை). | செம்படை கிழக்கு பிரஷ்யாவிலுள்ள எல்பிங்கை ஆக்கிரமித்தது. |
| 11—2—45 (ஞாயிற்றுக்கிழமை). | செம்படை பிரெஸ்லாவுக்கு சமீபத்தில் ஒடருக்கு மேற்கில் ஆறு நகரங்களைக் கைப்பற்றியது.<br>நேசதேசப் படைகள் ஜெர்மனியிலுள்ள க்ளிவைக் கைப் பற்றின. |
| 12—2—45 (திங்கட்கிழமை). | மிகப்பெரிய மூன்று வல்லரசுகளும் கிரைமியாவிலுள்ள யால்டாவில் ஒருவாரமாக நடைபெற்ற மகாநாட்டிமற் குப்பின் எல்லா அம்சங்களிலும் ஒன்றுபட்ட முடிவுக்கு வந்தார்கள்.<br>ருஷ்யர்கள் ஒடருக்கு மேற்கில் பன்ஸ்லாவைக் கைப் பற்றினுர்கள்.<br>ஜெனரல் பேடனின் துருப்புகள் பிரம் என்ற ரஸ்தா ஜங்க்ஷனை ஆக்கிரமித்தன.<br>பிரிடிஷ் படை பர்மாவில் மாண்டலேயிலிருந்து 10 மைல் களுக்குள் வந்துவிட்டது. |



## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.**—(1) ஜெனரல் க்ரோரரிடமுள்ள பிரிடிஷ் துருப்புகளும் கனடிய 1-வது சேனையைச் சேர்ந்த கனடியப் படைகளும் பிப்ரவரி 8-ம் தேதியன்று ஹாலந்தில் மாஸ் நதிக்கும் ரைன் நதிக்கும் மத்தியில் நிஜர்மேகனுக்குத் தென் கிழக்கில் ஒரு புதிய தாக்குதலைத் துவக்கின. அவர்கள் ரேக்ஸ்வால்ட் காட்டை சுத்தி செய்துவிட்டார்கள். ஸீக் பிரட் அரணிலுள்ள க்ளிவ் என்னும் முக்கியமான நகரத்தைப் பிடித்தார்கள்.

கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன:—லிநூத், சாண்ட்போல், நியல், டூதிஸ், பிராசெல்ட், ஏர்லீகாம், வைலர், ஸீஜர்பிளிச், கிரானன்பர்க், பிரங்க், டெண்ட்ஹியூவெல், பிரீடெவெக், ஹேகாண்ட், ஷோட்ஹீட், ஹெக்கனஸ், கென்னப், ஹா, மில்லிஜென், கிகன், மிட்டில்இயர், ஒட்டர்ஸம், செல்டெர்ஹொர்டி.

(2) அமெரிக்க 1-வது சேனை மால்பெண்டனுக்குள் நுழைந்தது.

(3) அமெரிக்க 3-வது சேனை ஔர், சாயர் நதிகளைப் பத்து இடங்களில் தாண்டி விட்டது. எக்டர்னுக்கு வடமேற்கிலுள்ள முக்யமான நகரமான பிரம் விழுந்துவிட்டது. கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன:—பெட்டல், ஜின்ஸ், ஒபர்மாகெலன், ஹார்ஷீட், ஷமிட், ஆவ்ஸீம், கோண்டல்பிரெட், ஹொர்மிஸ்பாண்ட், நீடர்நிஹெலன், ஸ்டின் மேஹலன், லீன்ஸ் பெல்ட், வாட்ஸெராத், ஹொர்ஸ்பெல்ட், வியாண்டன், போலன்டார்ப்.

(4) அமெரிக்க 7-வது சேனை மோடர் நதியைத் தாண்டி பியஸ்டார்பைப் பிடித்தது.

(5) ஆல்ஸாஸின தெற்குப் பக்கத்தில் ரைன் நதியின் மேற்குப் பக்கத்தில் ஜெர்மனி யின் ஏற்பாடான எதிர்ப்பு நின்றுவிட்டது. கோல்மார் பகுதியில் 19-வது ஜெர்மன் சேனை அழிக்கப்பட்டுவிட்டது.

**கிழக்குப் போர்முனை.**—(1) ஒடர் நதியிலுள்ள தற்காப்புகள் இப்பொழுது மத்திய வடக்குப் போர் பகுதிகளில்தான் ருஷ்ய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. தெற்கில் அது ஒன்றும் பயன்படவில்லை. மார்ஷல் கோனியேவின் டாங்கிப் படைகள் ஒடர் நதியை பிரெஸ்லாவுக்கு வடக்கிலும், தெற்கிலும் தாண்டிவிட்டன. பிரெஸ்லா சுற்றி வளைக்கப்பட்டுவிட்டது. கோனியேவ் பெர்லினிலிருந்து 100 மைல்களுக்குள் வந்துவிட்டார். டிரெஸ்டன், லீப்ஸிக்குப் பாதி தூரத்திலிருக்கிறுர்.

(2) கீழ்கண்ட இடங்கள் இந்த வாரத்தில் கைப்பற்றப்பட்டன.

(*a*) **வடக்கு.**—ரீஸ்பர்க், பிராயன்பர்க், பிரியூஸிஷ்சேலான், எல்பிங்க்.

(*b*) **மத்தியில்.**—குன்னர்ஸ்டார்ப், பெர்ன்ஸ்டீன், ட்யூசேகுரோன், மேயர்கிஷ—பிரிட் லாந்து, டட்ஸ், காலிஸ், ந்யூவாடெல்.

(*c*) **தெற்கு.**—சைலீஷியா, வால்டா, என்ஸ்டார்ப், கோபர்ன், பார்ச்விட்ஸ் லீக்னிட்ஸ், லூபன், ஸ்டீனு, ந்யூமார்கட், ஹெயினுப், காந்த், பிசான்கா பான்ஸ்லா, ப்யூதென், ந்யூஹமெர்:

(*d*) **போலந்து.**—மோராவா வெளியில் பியல்ஸ்கோ.

**புடாபஸ்ட்.**—ஹங்கேரியின் தலைநகரான புடாபஸ்ட் ஆக்கிரமிக்கப்பட்டது.

**இதாலி.**—செர்சியோ, போ நதிப் பள்ளத்தாக்குகளில் போர் நடைபெறுகிறது.

**பிலிப்பைன்ஸ்.**—அமெரிக்கர்கள் பாசிக் நதியைத் தாண்டி லூஸானிலுள்ள சாண்டா ஆன்னு மாகாணத்தை எதிரிகளில்லாமல் சுத்தி செய்துவிட்டார்கள். மணிலாவுக்குத் தென் மேற்கிலுள்ள காவைட் என்ற கடற்படை தளம் ஆக்கிரமிக்கப்பட்டது.

**சைனு.**—காண்டன்-ஹாங்கோ இருப்புப் பாதையில் சீனர்கள் முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

**பர்மா.**—மாண்டலேயைத் தாக்கும் தினம் சமீபித்துவிட்டது. இராவதியில் கியாக் மியாஸ்க் பால முனை விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. யுவர் திட்கி பால முனை சுத்திசெய்யப் பட்டுவிட்டது. முன்னேறும் வாசல் பிராந்தியத்திலுள்ள சிங்குவும், தௌங்கியும் பிடி பட்டன.

ஷ்வேலி நதியின் தென்கரையிலுள்ள மியிட்ஸியம் மியிட்லனும் ஆக்கிரமிக்கப்பட்டன.

இராவதிக்கு மேற்கிலுள்ள குன்றுகள் வழியாக முன்னேறிய கிழக்கு ஆபிரிக்கப் படை கள் பர்மா எண்ணெய்ப் பிரதேசங்களுக்கு வடக்குக் கோடியிலுள்ள சௌக்கு சமீபத்தி லுள்ள சேயிக்பியூவை அணுகிவிட்டன.

அரக்கானில் 15-வது சேனைப்பகுதி காங்காவுக்குத் தென்கிழக்கில் எதிரியின் எதிர்ப்பைத் துரத்தியடித்துவிட்டன.

சீன முதலாவது சேனை பர்மா ரஸ்தா வழியாக குட்கேயை நோக்கி முன்னேறுகிறது

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**4—2—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எதிரி மோட்டார் போக்குவரத்துகள், துருப்புகள்—*கால்மார்* (Colmar) *பிரதேசம்.*

ரயில்வேப் பாலம்.—*பிரிஸாக்* (Brisach).

இலக்குகள்.—*பிராம்கார்ட்டன்* (Bremgarten), *கிரிஸ்ஸெம்* (Grissheim).

ரயில்வே தளங்கள்.—*அப்பன்பர்க்* (Offenburg), *ரூட்வெய்ல்* (Rootweil), *டொனுவெஸ்சிங்கன்* (Donaueschingen), *ஸ்டெய்க்* (Steig).

ரஸ்தா, ரயில் இலக்குகள்.—*மேற்கு ஜெர்மனி* (W. Germany).

எதிரி போக்குவரத்துகள்.—*வட இதாலி* (Northern Italy).

ரயில்வே.—*பிரென்னர்* (Brenner).

கப்பல்கள்.—*எட்ரியாடிக்* (Adriatic).

விமானச் சண்டைகள்.—*கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு —பெட்ரோல் நிலயங்கள்-*ரூர்* (Ruhr).

இலக்குகள்.—*போன்* (Bonn), *ஹனோவர்* (Hanover), *டார்ட்மெண்டு* (Dortmund).

**தூரக்கிழக்கு (Far East).**

கடற்படை தளம்.—*காவைட்* (Cavite).

கோட்டைகள்.—*காரிஜிடோர்* (Corregidor).

**பர்மா (Burma).**

துருப்புகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—*மாண்டலே* (Mandalay).

படகு, இயந்திர பீரங்கி ஸ்தலம்.—*ராம்ரீ* (Ramree) *தீவு.*

பாலம்.—*லெட்பாடன்* (Letpadan).

**5—2—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—*ஜெர்மனிமேல் விமான நடவடிக்கைகள் நடந்ததாக ஒரு தகவலும் இல்லை.*

இலக்குகள்.—*வட இதாலி* (N. Italy).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (41 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).*

இரவு.—இலக்குகள்—*பெர்லின்* (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—*போனின்ஸ் தீவிலுள்ள ஹாஹா* (Haha), *இவோஜிமா* (Iwo Jima), *காரோலைன்ஸிலுள்ள பொனுபி* (Ponape), *மார்ஷல்ஸ் தீவுகள்* (Marshall Islands).

**பர்மா (Burma).**

ராணுவ ஸ்டோர்கள்.—*மாண்டலேக்கு* 18 *மைல்கள் வடக்கில்.*

கப்பல்கள், படகுகள்.—*வட ஸியாம்* (North Siam).

படகுகள்.—*ராம்ரீ* (Ramree) *தீவு.*

**6—2—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல் "V-2" சேமிப்பு நிலயங்கள்.—*ஹாலந்து* (Holland).

தொழிற்சாலை போக்குவரத்து.—*மத்திய ஜெர்மனி.*

இலக்குகள்.—*பிரென்னர் கால்வாய்* (Brenner Pass).

எதிரி கப்பல்கள்.—*லிகூரியான்* (Ligurian), *எட்ரியாடிக்* (Adriatic) *கடல்கள்.*

விமானச் சண்டைகள் தரையிலுள்ள விமானங்கள்.—*கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும் (54 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).*

போக்குவரத்து இலக்குகள் —*ஹாலந்து* (Holland).

எண்ணெய்க் குவியல்கள்.—*எம்மரிக்* (Emmerich).

**தூரக்கிழக்கு (Far East).**

பெரிய கப்பற் கூட்டங்கள்.—*வலகனோ* (Volcano) *தீவுகள்.*

**பர்மா (Burma).**

எதிரி துருப்புகள், ஸப்ளை பிரதேசங்கள், விமான எதிர்ப்பு பீரங்கி ஸ்தாபனங்கள்.—*லாஷியோ* (Lashio).

பீரங்கி ஸ்தாபனங்கள், துருப்புகள்.—*மிட்சன்* (Myitson).

ஜப்பானிய சைனியங்கள்.—*சிங்கு* (Singu) *முனை.*

ஸெடா (Sedaw).

படகுகள்.—*ஐராவதி* (Irrawaddy), *அரக்கான்* (Arakan).

ரயில்வே பாலம்.—*சம்பான்* (Chumphon).

**7—2—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ரயில் தளங்கள், தொழிற்சாலை இலக்குகள்.—*மாக்டிபர்க்* (Magdeburg) *செம்னிட்ஸ்* (Chemnitz). இதர முனைகள்.—*மத்திய ஜெர்மனி.*

ரயில் தளங்கள்.—*ராஸ்டாட்* (Rastatt).

போக்குவரத்து ஸ்தலங்கள்.—*ஸ்டோனிக்* (Stoenich), *மன்ஸ்ட்ரிபல்* (Munsterifel). *விட்லிக்* (Wittlich).

தளவாடக் குவியல்கள்.-*ரெய்ன்பாக்* (Rheinbach).

மோட்டார் போக்கு வரத்துகள்.—*டஸ்ஸல்டார்ப்* (Dusseldorf) *பிரதேசம், டிரையர்* (Trier) *கார்ல்ஸ்ரு* (Karlsruhe) *பிரதேசம்.*



எண்ணெ சேமிப்புகள் சுத்தம் செய்யுமிடங்கள்.—*வீயன்ஞ* (Vienna) *பிரதேசம்.*

எண்ணெ சேமிப்புகள்.—*வட இதாலி* (N. Italy).

எதிரி போக்குவரத்துகள் யுத்த தளவாடக் குவியல்கள்.—*போ* (Po-Valley).

ரயில்வே இலக்குகள்.—*வட இதாலி* (N. Italy), *மேற்கு யூகோஸ்லாவியா* (W. Yugoslavia).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—*சிசி* (Chichi), *எடோடோ ஜிமா* (Etoto Jima).

ஜப்பானிய தளம்.—*காடோகோ* (Katoko).

இலக்குகள்.—*பாபல்தாப்* (Babelthap), *கரோலைன்ஸிலுள்ள யாப்* (Yap), *மொரூனிலுள்ள ரோடா* (Rota).

**பர்மா (Burma).**

பாலங்கள்.—*பர்மா-ஸியாம்* (Burma-Siam) *ரயில்வே.*

ஜப்பானிய யுத்த முனைகள்.—*ரேடியோ ஸ்டேஷன்* (Radio Station), *மாண்டலே* (Mandalay).

துருப்புகளும் டாங்கிகளும் :—*அரக்கான்* (Arakan).

இலக்குகள்.—*காங்கா* (Kangaw).

எண்ணெக் கிணறுகள்.—*சாக்கிற்கு* (Chauk) *கிழக்கே.*

விமான நிலயங்கள்.-*மாண்டலே* (Mandaly)-*க்கு தெற்கில்.*

**8—2—45** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—நாசகாரிக் கப்பற் கூட்டம்.—*கோபன்ஹாகன்* (Copenhagen).

ஜெர்மன் துருப்பு முகாம்கள் :—*மேற்கு அரங்கில் உள்ள ஜெர்மன் அரண்களுக்குப் பின்.*

கடைசியான ரைன் பாலம்.—*நீயூன்பர்க்* (Neunburg).

எதிரி ரயில் பாலம்.—*லிப்* (Lipp).

இலக்குகள்.—*ஆம்டி* (Amgde), *பர்க்* (Burg), *காஸல்* (Kassel), *மெய்ன்ஸ்* (Mainz), *காப்லென்ஸ்* (Coblenz), *போன்* (Bonn), *ஹனோவர்* (Hanover), *டஸ்ஸல்டார்ப்* (Dusseldorf), *டுயிஸ்பர்க்* (Duisburg).

போக்குவரத்து இலக்குகள் :—*வீயன்ஞ* (Vienna) *பிரதேசம்.*

ரயில் தளங்கள்.—*ஆஸ்திரியாவிலுள்ள காரஸ்* (Garz).

போக்குவரத்துகள்.—*வட இதாலி* (N. Italy), *யூகோஸ்லாவியா* (Yugoslavia).

கப்பல்கள்.—*எட்ரியாடிக்* (Adriatic).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—தொடர்ச்சியான எண்ணெக் கிணறுகள்.—*போலிட்ஸ்* (Politz).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—*ஹோஹென்பட்பர்க்* (Hohenbudberg).

சுரங்க வெடி பாவுதல்—*எதிரி ஜலப்பிராந்தியங்களில்.*

**தூரக்கிழக்கு (Far East).**

*ஒரு தகவலும் இல்லை.*

**பர்மா (Burma).**

ஜப்பானிய தற்காப்புகள்.—*மாண்டலே* (Mandalay) *யைச் சுற்றிலும்.*

**9—2—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—தொடர்ச்சியான எண்ணெய் கிணறுகள்.—*லட்ஸ்கென்டார்ப்* (Lutzkendorf).

தளவாடம், மோட்டார் போக்குவரத்துகள்.—*வெய்மார்* (Weimar),

ரயில் ரோடுகள்,சேமிப்பு நிலயங்கள்.—*மாக்டிபர்க்* (Magdeburg).

போக்குவரத்து இலக்குகள்.—*ஜெர்மனி* (Germany).

ஜப்பானிய வாயு தொழிற்சாலை —*ஹாலந்து* (Holland).

உதவி.—*மேற்கு அரங்கில் உள்ள தரைப் படைகள்.*

எதிரி இலக்குகள் போக்குவரத்துகள்.—*போ* (Po Valley), *வட இதாலி* (N. Italy).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (7. எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).*

**தூரக்கிழக்கு (Far East).**

*ஒரு தகவலும் இல்லை.*

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.—*மிட்சான்* (Myitson).

சைனியங்கள்.—*மாண்டலே* (Mandalay).

**10—2—45.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.-மோட்டார் குவியல்கள்—*டல்மென்* (Dulmen).

ஸப்மரின்கள்.—*இஜ்முதின்* (Ijmuiden).

சுரங்க வெடி அறுக்கும் கப்பல்கள் கவசம் பூண்ட வண்டிகள்.-*நார்வீஜியக் கடற்கரை.*

எதிரி போக்குவரத்துகள் மோட்டார் போக்குவரத்துகள்.—*போ* (Po) *சமவெளி பிரென்னர்* (Brenner) *சமவெளி.*

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும், (26 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).*

இரவு.—இலக்குகள்—*ஹனோவர்* (Hanover).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தொழிற்சாலை பிரதேசங்கள்.—*டோகியோ* (Tokyo), *யோகோஹாமா* (Yokohama).

ஜப்பானிய விமானங்கள்.—சீனுவிலுள்ள சிங்டாவோ (Tsingtao).
ஹாஹாஜிமா (Hahajima).
ஜப்பானியக் கப்பல்கள்.—பார்மோஸா (Formosa).

பர்மா (Burma).

எதிரி ஸப்ளை லயன்கள்.—பர்மா (Burma), ஸியாம் (Siam).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—மிட்சான் (Myitson) பிரதேசம்.
எதிரி துருப்புகள், சைனியங்கள்.—மாண்டலே (Mandalay).
இலக்குகள்—காங்கா (Kangaw).
ஸப்ளை டெப்போ.—ரங்கூன் (Rangoon).
படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

### விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**5—2—45.** (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**6—2—45.** (செவ்வாய்க்கிழமை).
**7—2—45.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென் கடற்கரை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East

ஒரு தகவலும் இல்லை.

**8—2—45** (வியாழக்கிழமை).
**9—2—45.** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலுமில்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யத் துருப்புகள், டாங்கிகள்.—ஓடரின் கிழக்குக்கரை.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**10—2—45.** (சனிக்கிழமை).
**11—2—45.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென் கடற்கரை.

ருஷ்யா (Russia).

ருஷ்யப் படைகள்.—பிரெஸ்லா (Breslau)விற்கருகில.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

## யுத்தக் குறிப்புகள்.

**யால்டா.** ருஷ்ய பூமியில் மிகப்பெரிய மூவர்களின் மகாநாட்டைப் பற்றிய விவரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. மிஸ்டர் சர்ச்சிலும், ஜனாதிபதி ரூஸ்வெல்டும், பிரதம மந்திரி ஸ்டாலினும் கிரைமியாவின் தெற்குக் கரையில் சிம்பராபூலிலிருந்து 50 மைல்களிலுள்ள யால்டாவில் கூடிப்பேசினார்கள். அது இரண்டாவது சார் நிக்கோலஸின் வேனிர்கால வாசஸ்தலம். யால்டாவுக்குச் செல்லுமுன் மிஸ்டர் சர்ச்சிலும் ஜனாதிபதி ரூஸ்வெல்டும் மால்டாவில் பூர்வாங்க சம்பாஷணையை நடத்தினார்கள். யால்டாவின் மீட்டிங்கு 8 நாட்கள் வரையில் நடைபெற்றது. மகாநாட்டின் முடிவுகளைப்பற்றி அறிக்கை வெளிப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

**நிபந்தனையற்ற சரணாகதி.** ஜெர்மனி நிபந்தனையற்ற சரணாகதி செய்யும் வரையிலும் உலகத்தின் சமாதானம் மறுமுறைக் கலைக்கப்படாமல் இருக்கும்படி ஜெர்மன் ராணுவமும், நாஜி தத்வமும் அழிக்கப்படும் வரையிலும் போரை நடத்துவதென்று நேசதேசத்தார்கள் மறுபடியும் சொல்லிவிட்டார்கள். கீழ்க்கண்ட காரியங்களை நிறைவேற்றுவதாக அவர்கள் உறுதி கொண்டுள்ளார்கள்.

(1) எல்லா ஜெர்மன் படைகளையும் நிராயுதபாணிகளாக்கி கலைத்துவிடுவது:

(2) ஜெர்மனியின் போரை அடிக்கடி நடத்திவரும் ராணுவ அதிகாரிகளை நிரந்தரமாக ஒழித்துவிடுவது:

(3) ஜெர்மன் ராணுவ முஸ்தீப்புகள் எல்லாவற்றையும் அப்புறப்படுத்துவது அல்லது ஒழித்துவிடுவது:

(4) ராணுவ தளவாடங்களை உற்பத்தி செய்யும் ஜெர்மன் தொழிற்சாலைகளை அழித்துவிடுவது அல்லது கட்டுப்படுத்துவது:

(5) யுத்தக் குற்றவாளிகளின் குற்றங்களைப் பரிசிலனை செய்து சீக்கிரமாக தண்டிப்பது. விளைவித்த நாசத்துக்குப் பரிகாரம் கொடுக்கும்படி செய்வது:



## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 23—1—45 (செவ்வாய்க்கிழமை.) | ருஷ்யர்கள் பிராம்பர்க்கைப் பிடித்தார்கள். ருஷ்யர்கள் ஓர்டல்ஸ்பர்க், பிரெயிஸ்டாட், சால்பெல்ட் மொகரெஙகன், வில்லன்பர்க் முதலியவற்றைப் பிடித்தார்கள். |
| 24—1—45 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் யுத்த அரங்கம் பூராவிலும் முன்னேறினார்கள். நேசதேசத்தார்கள் ஹாலந்தில் மாஸ்ட்ரிக்டைப் பிடித்தார்கள். |
| 25—1—45 (வியாழக்கிழமை). | அமெரிக்கர்கள் லூஸானில் கிளார்க் விமான தளத்தைப் பிடித்தார்கள். ருஷ்யா முன்னேறி வந்தது. பிரெஸ்லாவிற்கு சமீபத்திலுள்ள ஒயல்ஸாம் ஆஸ்ட்ரெளவும் பிடிபட்டன. |
| 26—1—45 (வெள்ளிக்கிழமை). | ருஷ்யர்கள் டான்சிக் வளைகுடாவை அடைந்து ஜெர்மனியை கிழக்கு பிரஷ்யாவிலிருந்து துணித்துவிட்டார்கள். செம்படை ஜெர்மனியின் மாகாணமான பிராண்டன்பர்க்கை அடைந்தது. |
| 27—1—45 (சனிக்கிழமை). | ருஷ்யர்கள் கிழக்கு பிரஷ்யாவிலுள்ள ராஸ்டன்பர்க்கையும் சைலீஷியாவிலுள்ள ஸொஸ்னோவியக்கையும் பிடித்தார்கள். |
| 28—1—45 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யர்கள் வடக்கு சைலீஷியாவிலுள்ள காடொவிசைப் பிடித்தார்கள். அமெரிக்கர்கள் ஸெயிண்ட் வித் பகுதியில் புதிய தாக்குதலைத் துவக்கினார்கள். |
| 29—1—45 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் பொஸ்னனுக்கு வடமேறகில் ஜெர்மனிக்குள் நுழைந்துவிட்டார்கள். |

### (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை—**

1. **வடக்குப் பகுதி.**—ரோயர்மாண்டை நோக்கி முன்னேறிவரும் பிரிடிஷ் துருப்புகள் சிக்பிரட் அரணுக்கு முன்னுள்ள ரோயர்நதியை அடைந்துவிட்டது. நேசதேச விமானங்கள் ரூர் பிரதேசத்திலுள்ள இருப்புப்பாதைகளைத் தாக்கிவருகின்றன. கொலோனில் அகதிகள் குவிந்துவிட்டார்கள். கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. ஷாபிஸென், கிர்சோவன், லியக், யூடராத், வஹீடன், டிரெம்மன், ஓவர்ப்ருச, ஹோர்ஸட், புரோஸலன், போஸ்டர்ஹெல்ட், கிராண்டார்ப், நிர்ம், பிராகெலன், போஸ்டர்ஹொல்ட், ரீபன் ஓடியன்பர்க்.

மத்திய ஹாலந்தில் கனடியர்கள் தாக்குதலைத் துவக்கியதாக ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்கள்.

2. **ஆர்டெனிஸ் பகுதி.**—ஜெர்மன் உப்பல் அழிந்துவிட்டது. அங்கு பாக்கியுள்ள ஜெர்மன் படைகளை அமெரிக்க முதலாவது, மூன்றாவது சேனைகள் ஸிக்பிரட் அரணுக்குத் துரத்தியடித்து வருகின்றன. அமெரிக்க 3-ம் படை ஒடர் நதியின் கிழக்குக் கரை ஓரமாக 2 மைல்கள் நீளமுள்ள ஒரு முன்னேறும் வாசலை ஏற்படுத்திவிட்டது. கீழேகண்ட இடங்கள் பிடிப்பட்டன. டிரியர், பிட்பர்க், ஹினர்ஷீட், பட்ஸ்டார்ப், மாஸ்பெல்ட், வாலஷென் ஹாஷன், ஸ்போக், ரோடர், புட்ஷெல்ட், மரிங்கன், ஹான்ஸ்பெல்ட், புல்லாங்க், ஹெரஸ்பாக், ஓபர்ஹாஸன், நியூன்டார்ப், குரோம்பாக், வீஸ்டன், மால்டாங்க், ஔர்தி, ஆமெல், ஹெப்ஷீட், ஹாப்பன்பாக், ஹெரஸ்பாக். ரைன் நதியிலிருந்த முன்னேறும் வாசலை ஜெர்மனி கைவிட்டுவிட்டது.

3. **ஆல்ஸாஸ் பகுதி.**—வாஸ்கஸ் நதியின் நுனி பாகத்திற்கு வடமேற்கில் ஹாகெனு பிராந்தியத்தை நோக்கி மோடர் நதி ஓரமாக ஜெர்மனி செய்த தாக்குதல் பயன்படவில்லை. மோடர் நதியைத் தாண்டித் தப்பி ஓடும் மார்க்கம் துணிக்கப்பட்டுவிட்டது. பிரெஞ்சுப் படைகள் கோல்மார் கால்வாயைத் தாண்டிவிட்டன. முல்ஹாஸன் மறுபடியும் பிடிபட்டுவிட்டது.

**கிழக்குப் போர்முனை—**

**வடக்குப் பகுதி.**—கிழக்கு பிரஷ்யாவின் முக்கால் பாகம் ருஷ்யர் வசமாகிவிட்டது. அதன் தலைநகரமான கோனிக்ஸ்பர்க்கின் வீழ்ச்சி சமீபத்தில் நடைபெறும். ஜெர்மனியை கிழக்கு பிரஷ்யாவிலிருந்து துணித்துவிட்டு ருஷ்யர்கள் பால்டிக் கடற்கரையை அடைந்துவிட்டார்கள். கீழ்கண்ட இடங்கள் பிடிப்பட்டன. ப்ருஸிஷ், முஹல்ஹாஸன், மேரியன்பர்க், ஸ்டும், டோல்க்மிட், நோர்டன்பர்ச், டாபியான், ஆலன்பர்க், லோட்ஸன், கலாபீடா, சென்ஸ்பர்க், பிஷோட்ஸ்பர்க், வார்டன்பர்க்.

**மத்தியப் பகுதி.**—ருஷ்ய சேனைகள் ஜெர்மன் எல்லைச் சரகத்தைத் தாண்டி 30-மைல்கள் நீளமுள்ள அளவில் பொஸ்னன் என்னுமிடத்தில் நுழைந்து, பிறகு பொமரேனியா, பிராண்டன்பர்க் என்ற ஜெர்மன் மாகாணங்களுக்குள் புகுந்து விசிறிபோல் ஒடர் நதியின்பேரிலுள்ள பிராங்பர்ட்டுக்கும் கஸ்டிரினுக்கும் நடுவிலும், பிராங்பர்ட்டுக்கு வடக்கிலும் பரவி வருகின்றன. பெர்லினுக்கு கிழக்கைநோக்கி 70 மைல் அகலமுள்ள ஒரு முன்னணி ஸ்தலத்தையும் அமைக்க முயன்றுவருகின்றன. கீழ்க்கண்ட இடங்கள் பிடிபட்டன. ஹிண்டன்பர்க், ஹொர்ன்ஸ்டாட், வின்சிக், ஸ்ட்ராப்பன், ஜூலிபஸ்பர்க், டிரெப்னிட்ஸ், பிரான்ஸ்நிட்ஸ், மிகோலௌ, கென்யூநோவிட்ஸ், சார்னிநா, ஒபாலனிகா, செல்ம்னோ, லிண்டி, குரொஜான்கி.

போலந்தில் ஆஸ்ட்ரெரி, ஜாவொர்ஸ்னோ, கர்ச்னொரி, லாபின், ஊனிஸ்லா, கெல்ம்சா விழுந்துவிட்டன.

**தெற்கு.**—செகோஸ்லாவேகியாவின் பாதிபாகம் விடுவிக்கப்பட்டது. ஸ்பிஸ்கி, போப்ராட், லௌவி, டார்க், வெல்கா, சாகோபாணி பிடிபட்டன.

**புடாபெஸ்ட்டில்,** பெஸ்டிலுள்ள எதிரியின் படைகள் துடைக்கப்படுகின்றன.

**பிலிப்பைன்ஸ்.**—அமெரிக்க 8-வது சேனை லூஸான் தீவுக்கு மேற்கில் சாம்பாலியோ கடற்கரையிலும், சூபிக் விரிகுடாவிற்கு வாசற்படி போன்ற கிராண்டித்தீவிலும், இறங்கிவிட்டது. மணிலாவுக்குப் போகும் வழியில் கிளார்க்பில்ட் என்ற விமான தளமும், போர்ட் ஸ்டோட்ஸென்பர்க்கும், ஆங்கெல்ஸம், மாகாலாங்க், டாஸொஸ், ஆகாட், ரொஸாரியோ, ஸான் பெர்ணண்டோ முதலிய இடங்களும் பிடிபட்டன. சூபிக் விரிகுடாவிலுள்ள ஒலாங்காபொ என்ற கடற்தளம் பிடிபட்டது. அமெரிக்கர்கள் மணிலாவுக்கு 30 மைல்களுக்குள் வந்துவிட்டார்கள். லூஸான் போரின் முடிவான கட்டம் வந்துவிட்டது.

**பர்மா.**—மாண்டலேக்குப் போகும் வழியிலுள்ள காப்வெட்டும், கியாயூஸ்கியும் விழுந்தன. காப்வெட்டைப் பிடித்தபின் மாண்டலேக்குப் போக்கு வரத்து மார்க்கங்களுக்கான போர் முடிவடைந்தது. கியாயூஸ்கியை ஆக்கிரமித்ததனால் இராவதியின் வளைவிலுள்ள சாகெயிஸ்குக்கு வடமேற்கில் 10 மைல்களுக்குள் நேசதேசப் படைகள் வந்துவிட்டன. 14-வது சேனை இப்பொழுது மாண்டலேக்கு சமீபத்தில் இராவதியிலுள்ள முன்னேறும் வாசல்களில் 20-மைல் அகலமுள்ள பிரதேசத்தில் நிலைத்திருக்கிறது.

மேற்கு ஆபிரிக்கர்கள் மியோகாங்கைப் பிடித்தார்கள்.

ராம்ரித்தீவின் பாதிபாகம் ஆக்கிரமிக்கப்பட்டது. ஜப்பானியர்கள் அரக்கானிலிருந்து வெளியேறுகிறார்கள்.

பர்மா ரஸ்தாவில் தற்காப்புக் கோட்டைகளுக்கு, விமானப்படை நோக்கு மூலமும் பத்திரம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**21—1—45.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்.

**பகல்.**—ரயில் ரஸ்தா சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்கும் தளங்கள் ரைன் (Rhine), ஹெயில்பிரான் (Heilbronn).

**ரஸ்தா ரயில் பாலம்.**—ரைன் குறுக்கில் மான்ஹீம்.

**ரயில்வே இலக்குகள் எண்ணெய் டெப்போக்களும்.**—ஆஸ்திரியா (Austria), ஜெர்மனி (Germany).

**எண்ணெய் சேமிப்பு.**—ரீசன்ஸ்பர்க் (Regensburg).



**போக்குவரத்து இலக்குகள்.**—ஹாலந்து (Holland).

**எண்ணெய் இலக்குகள்.**—வியன்னு (Vienna) பிரதேசம்.

**ஒரு எண்ணெய்க் கிணறு இலக்கு**—பியூம் (Fiume).

**ரயில்வே லயன்.**—பிரென்னர் கால்வாய் (Brenner), போ (Po) சமவெளி.

**கப்பல்கள்.**—எட்ரியாடிக் (Adriatic).

**விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்கள்.**—ருஷ்ய அரங்கம் முழுவதும்.

**இரவு.**—இலக்குகள்.—ஜெர்மனியில் உள்ள காஸ்ஸல் (Kassel).

### தூரக்கிழக்கு (Far East).

**பெரும் ரஸ்தாக்கள் ரயில்வே ரோட் ஸ்தாபனங்கள்.**—படான்காஸ் (Batangas), பைகால் (Bicol).

**ஸ்டோர் பிரதேசங்கள்.**—பாம்பன் விமான நிலயம்.

**ஸ்டோர் நிலயங்கள்.**—ஸேஸ்ஸ்டாபன் (Sanestaban) முனை.

**ஜப்பானிய இலக்குகள்.**—நீக்ரோஸ் (Negros), பார்மோஸா (Formosa) தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள தீவுக் கூட்டங்கள்.

### பர்மா (Burma).

**எதிரி சைனியங்கள்.**—ஐராவதியின் கிழக்கு (East of Irrawaddy).

**இயந்திர பீரங்கி ஸ்தாபனங்கள்.**—டவுன்கூ (Toungoo). விமான நிலயம்.

**படகுகள்.**—ஐராவதி (Irrawaddy).

**22—1—45.** (திங்கட்கிழமை).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

**பகல்.**—தொடர்ச்சியான எண்ணெய்க்கிணறுகள்.—ஸ்டெர்கிரேட் (Sterkrade).

**விமான நிலயங்கள் போக்குவரத்து லயன்கள்** ஹனோவர் (Hanover) பிரதேசம்.

**"V-2" ஸ்டோர் ஸ்தலங்கள்.**—ஹாலந்து (Holland).

**தரைமீதுள்ள விமானங்கள்.**—லாங்கன்ஹாகன் (Langenhagen).

**ஜெர்மன் போக்குவரத்துகள்.**—ஆர்டென்ஸ் உப்பல் (Ardennes).

**தொழிற்சாலை.**—ஆல்ப்ரெஸெர்டம். (Alperserdam).

**எதிரி ராணுவ நிலயங்கள்.**—வாகனிங்கன் (Wageningen).

**இலக்குகள்.**—மான்போர்ட் (Montfort).

**போக்குவரத்துகள்.**—வட இதாலி.

**போக்குவரத்துகள்.**—ஆஸ்திரியா (Austria).

**விமானச் சண்டைகள்.**—ருஷ்யா யுத்த அரங்கம் முழுவதும். (52 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

### தூரக்கிழக்கு (Far East).

**எதிரி தற்காப்புகள்.**—லூஸானின் மத்தியில் படான் (Bataan).

**விமான நிலயங்கள்.**—மாரகினு (Marakina) ஸாப்லா (Zabla).

### பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**23—1—45.** (செவ்வாய்க்கிழமை).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

**பகல்.**—ரயில்வே தளங்கள்—நியூஸ் (Neuss).

**வண்டிகள், பீரங்கி ஸ்தாபனங்கள், நீராவி யந்திரங்கள், பலத்த முனைகள்,**—ஆர்டென்ஸிற்கு கிழக்கில் (Ardennes).

**ரயில் தளங்கள்.**—பிலாங்கன்ஹீம (Blankenheim).

**ஸப்ளை டெப்போ.**—கிரோல்ஸ்டின் (Gerolstein).

**ரயில் தளங்கள்.**—ஹாம்பர்க் (Hamburg), எல்ம்ஸ்டன் (Elmstein) நியூஸ்டாட் (Neustadt).

**விமான நிலயங்கள், ரயில் இலக்குகள்.**—ஹனோவர் (Hanover) பிரதேசம்.

**தொழிற்சாலை.** ஆல்பிராஸ்ஸர்டாம் (Albrasserdam).

**பென்ஸால் தொழிற்சாலை.**—பிர்க்ஹாஸன் (Bruckhausen).

**தொழிற்சாலை ஸ்தாபனம்.**—கெல்சன்கிர்ச்சன் (Gelsenkirchen).

**போக்குவரத்து ஸ்தலங்கள்.**—போ (Po) சமவெளி, வட இதாலி (N. Italy).

**விமானச் சண்டைகள்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

**அலுமினியம் தொழிற்சாலை.**—டாகாவோ (Takao).

**விமான நிலய ஸ்தாபனங்கள்.**—போர்னியோ (Borneo).

**ஜப்பானிய இலக்குகள்.**—தென் மேற்கு பஸிபிக் (S. W. Pacific) முற்றிலும்.

### பர்மா (Burma).

**எதிரி சைனியங்கள்.**—மாண்டலேயிலும், மாண்டலேயைச் சுற்றிலும்.

**24—1—45.** (புதன்கிழமை).

### ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

**பகல்.**—ரயில்வே இலக்குகள், போக்குவரத்துகள்.—வட ஹாலந்து (N. Holland).

**இலக்குகள்.**—மேற்கு ஜெர்மனி (Western Germany).

**போக்குவரத்துகள்.**—வட இதாலி (N. Italy), போ (Po).

**கப்பல்கள்.**—எட்ரியாடிக் (Adriatic).

**விமானச் சண்டைகள்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (21 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

**ஜப்பானிய ஸ்தாபனங்கள்.**—*வால்கனோ தீவுக் கூட்டத்திலுள்ள இவோஜிமா* (Iwo jimo).

**விமான நிலயங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள்.**—*பிலிப்பைன்ஸிலுள்ள லூஸான்* (Luzon).

**பர்மா (Burma).**

இலக்குகள்.—*காங்கா* (Kangaw) *பிரதேசம்.*

ரயில்வே தளங்கள்.—*தாஷி* (Thazi).

விமான நிலயங்கள்.—*மத்திய பர்மா* (Central Burma).

இலக்குகள்.—*மாண்டலேயிலும், மாண்டலேயைச் சுற்றிலும்.*

**25—1—45** (*வியாழக்கிழமை*).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

**பகல்.**—போக்குவரத்துகள்—*ரைன்* (Rhine) *சமவெளி.*

**ரயில்வே இலக்குகள்.**—*ஹாலந்து* (Holland).

**ரயில், ரஸ்தா போக்குவரத்துகள்.**—*மன்ஸ்டர்* (Munster), *பிரதேசம் ஆஸ்னூபிரக்* (Osnabruck).

"V-2" பீரங்கி போக்குவரத்துகள் *ஹாலந்து* (Holland).

**ஜெர்மன் தளவாடங்கள் ஸப்ளேகள், உப்பல்.**-*ஆர்டென்னிஸ்* (Ardennes).

**எதிரி போக்குவரத்துகள், எண்ணெய், யுத்த தளவாடக் குவியல்கள்.**—*வட இதாலி* (N. Italy).

**மோட்டார் போக்குவரத்துகள்.**—*போ* (Po) *சமவெளி.*

**விமானச் சண்டைகள்.**-*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

**நீர் நிலைகள்.**—*அமாய்* (Amoy).

**பெரும் ரஸ்தாக்கள்.**-*லூஸானிலுள்ள மணிலா* (Manila) *பிரதேசம்.*

**பர்மா (Burma).**

**போக்குவரத்து இலக்குகள்.**—*அமாராபுரா* (Amarapura).

**ஜப்பானியத் துருப்புகள் சைனியங்கள்.**—*மியோசாங்* (Mychaung).

**இலக்குகள்.**—*காங்கா* (Kangaw).

**படகுகள்.**—*ஐராவதி* (Irrawaddy).

**பாலம்.**—*தாஷி* (Thazi).

**இலக்குகள்.**-*மாங்மிட்* (Mongmit), *மொகாக்* (Mogok), *லாய்வெங்* (Loiweng).

**எதிரி சைனியங்கள்.**—*முனிவாவின் தென் மேற்கு, காப்வெட்* (Kabwet).

**விமான நிலயங்கள்.**—*ஹெஹோ* (Heho), *மெய்க்திலா* (Meiktila), *ஹசம் ஹககய்* (Hsun Hsai).

**26—1—45.** (*வெள்ளிக்கிழமை*).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

**பகல்.**—**ரஸ்தாக்கள் பாலங்கள்.**—***மேற்கு அரங்கப் போரிடும் ஜெர்மன் சைனியத்திற்கு கிழக்கே.***

**எதிரிப் போக்குவரத்துகள் தளவாடங்கள்.**—*ஆர்டென்ஸ்* (Ardennes) *யூகோஸ்லாவியா* (Yugoslavia).

**எதிரி துருப்புகள் சேமிப்புகள்.**—*யூகோஸ்லாவியா* (Yugoslavia).

போக்குவரத்துகள்—வட *இதாலி*(N. Italy).

**விமானச் சண்டைகள், தரைமீதுள்ள விமானங்கள்.**—*ருஷ்யா யுத்த அரங்கம் முழுதும், (36 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).*

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—*பாடான்* (Bataan).

ஸப்ளை குவியல்கள்.-*பாடாங்காஸ்* (Batangas) *இவோஜிமா* (Iwojima), *பிபிதாப்* (Bhbethuap), *யாப்* (Yap).

**பர்மா (Burma).**

ரயில்வே.—*ஹெஹோ* (Heho), *மெய்க்திலா* (Meiktila).

**27—1—45.** (*சனிக்கிழமை*).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எதிரி தளவாடங்கள், வண்டிகள்.—*ஆர்டன்ஸ்* (Ardennes).

ரயில்வே பாலம்.-*டிரையரிக்கு 16 மைல்கள் வடக்கு* (Trier).

**ரஸ்தா ரயில் போக்குவரத்துகள்.**-*ரூர்* (Ruhr).

**இலக்குகள்.**—*ஹாகனிற்கு வடமேற்கு.*

**ரயில்வே தளங்கள்.**—*ரெய்டிட்* (Rheydt), *முன்சன்* (Munchen), *கிரெவென்பிராய்க்* (Grevenbroich).

ரயில்வேக்கள்.—*போ* (Po), *பிரென்னர்* (Brenner).

பாலங்கள், சேமிப்புகள், மோட்டார் போக்குவரத்துகள்.—*வட இதாலி* (N. Italy).

ரயில்வே தளங்கள்.—*காஸ்டல் பிராஙகோ* (Castel Franco).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.-ரஸ்தா ரயில் போக்குவரத்து.—*மேற்கு அரங்கிற்கு கிழக்கு.*

**தூரக்கிழக்கு (Far East).**

நாங்கிங் (Nanking) *சைனு.*

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—*டங்டிங்* (Tung-ting), *ஏரிப்பிரதேசம்.*

ஜப்பானிய கடற்கரை தற்காப்புகள்.—*காரிஜிடார்* (Corrigidor).

கடற்படை தளம்.—*கவைட்* (Cavite).

**பர்மா (Burma).**

ஜப்பானிய சைனியங்கள்.—*காலிவா* (Kalewa).

விமான நிலயங்கள்.—*மாண்டலேயின் தெற்கு* (S. Mandalay).

இலக்குகள்.—*காங்கா* (Kangaw), *வாயாங்கன்* (Wayongon).

**படகுகள்.—*ஐராவதி* (Irrawaddy).**



## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**22—1—45.** (*திங்கட்கிழமை*).

**23—1—45.** (*செவ்வாய்க்கிழமை*).

**24—1—45.** (*புதன்கிழமை*).

**பிரிடன் (Britain).**

*சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து.*

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*எதிரி விமான நடவடிக்கை இல்லே.*

**25—1—45** (*வியாழக்கிழமை*).

**பிரிடன் (Britain).**

*ஒரு தகவலும் இல்லே.*

**ருஷ்யா (Russia)**

*எதிரி விமான நடவடிக்கை இல்லே.*

**தூரக்கிழக்கு (Far East).**

அமெரிக்க சைனியங்கள்.—*பிலிப்பைனிலுள்ள லூஸான்* (Luzon).

**26—1—45.** (*வெள்ளிக்கிழமை*).

**27—1—45** (*சனிக்கிழமை*).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

*ஒரு தகவலுமில்லே.*

**28—1—45** (*ஞாயிற்றுக்கிழமை*).

**பிரிடன் (Britain).**

*தென் கிழக்கு இங்கிலாந்து.*

**ருஷ்யா (Russia).**

*எதிரி விமான நடவடிக்லக இல்லே.*

**தூரக்கிழக்கு (Far East).**

*ஒரு தகவலும் இல்லே.*

---

## யுத்தக் குறிப்புகள்.

**ருஷ்யத் தாக்குதல்.** *திருப்திகரமாக நடைபெற்றுவருகிறது. வடக்கில் ருஷ்ய சேனைகள் விஸ்சுலா நதியின் முகத்துவாரத்தை அடைந்து ஜெர்மனியிலிருந்து கிழக்கு பிரஷ்யாவை தரை மார்க்கமாகத் துணித்துவிட்டன. லாட்வியாவும் எஸ்தோனியாவும் விடுவிக்கப்பட்டன. கிழக்கு பிரஷ்யாவின் நான்கில் மூன்று பாகம் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. மாசூரியன் ஏரி பிராந்தியத்தில் கடும் போர் நடைபெறுகிறது. ஜெர்மன் துருப்புகள் கிழக்கு பிரஷ்யாவில் சுற்றி வளைக்கப்பட்டுவிட்டன.*

*வடக்கு சைலீஷியாவின் தலைநகரமான ஆப்பெலின் விழுந்துவிட்டது. பிரெஸ்லாவையும் போஸ்னுனேயும் சுற்றிக்கொண்டு சென்ற ருஷ்ய சேனைகள் போமரேனியா, பிராண்டன்பர்க் என்ற ஜெர்மன் மாகாணங்களுக்குள் நுழைந்துவிட்டன. பிராண்டன்பர்க் மாகாணத்தில் தான் பெர்லின் இருக்கிறது.*

*கிழக்குப் போர்முனையில் தாக்குதல் துவக்கியபின் 295,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்கள், 86,330 பேர்கள் கைது செய்யபபட்டிருக்கிறார்கள். 592 விமானங்களும், 2,995 டாங்கிகளும் பிடிபட்டன அல்லது நாசம் செய்யப்பட்டன.*

*300 ருஷ்ய தரை டிவிஷன்களும், 25 கவசம் பூண்ட படைகளும், அநேக குதிரைப் படைகளும், 3,500,000 துருப்புகளும் பால்டிக் கடலுக்கும் கார்பேதியன் மலைகளுக்கும் மத்தியில் "பெர்லினுக்கு வசந்த காலத்துக்குமுன் செல்லவேண்டும்" என்ற மேற்கோளுடன் முன்னேறிவருகின்றன. ருஷ்யர்கள் பல முனைகளிலிருந்தும் பெர்லினை நோக்கிச் செல்லுகிறார்கள். அவர்கள் பின்வருமாறு சொல்லுகிறார்கள். "இதுதான் முடிவுக்கு ஆரம்பம். ஜெர்மனியைக் காப்பாற்றக்கூடிய சிறிது அவகாசம்கூட இப்பொழுது ஜெர்மனிக்கு நாங்கள் கொடுக்கமாட்டோம்".*

வி வி வி வி வி

**பழிக்குப்பழி.** *போர் நடைபெற்ற சைலீஷியாவில் எங்கு பார்த்தாலும் புகை மயமாகக் காணப்படுகிறது. அந்நாட்டை பின் வாங்கும் ஜெர்மானியர்கள் பொசுக்கி அழித்துவிட்டார்கள். சைலீஷியாவிலும் கிழக்குப் பிரஷ்யாவிலும் அழிக்கப்பட்டுள்ள கிராமங்களில் பூனைகளும் நாய்களும் சாம்பலின் மேல் சஞ்சாரம் செய்கின்றன, கால்நடைகளைப் பின்வாங்கும் ஜெர்மானியர்கள் யந்திர பீரங்கியால் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள். ஜெர்மானியர்களும் ருஷ்யர்களைப் போல பெர்லினுக்குப் பின்வாங்குகிறார்கள். பாக்கியிருப்பவர்கள் சில வெறிபிடித்த ஜெர்மானியர்களும் சில சேனையைச் சேர்ந்தவர்களும்தான் முன்னேறிவரும் ருஷ்யப்படைகளை அவர்கள் மறைந்திருந்து சுடவேண்டும், கபடமாக அழிக்கவேண்டுமாம்.*

*"பெர்லினுக்குப் போகும் ரஸ்தாக்கள் பூராவும் ஸ்திரீகளும் குழந்தைகளும் டாங்கிகளின் உச்சியில் உட்கார்ந்துகொண்டும் அல்லது லாரிகளிலும் வண்டிகளிலும் அடைக்கப்பட்டும் செல்லுவதாகவும் அல்லது விவசாய வண்டிகளில் அடைக்கப்பட்டு ஜெர்மன் போக்குவரத்து வண்டிகளால் இழுக்கப்பட்டுச் செல்லுவதாகவும் காணப்படுகிறது. போஸ்னுன் மாகாணத்தில்*

செம்படை வருவதற்கு சில நிமிஷங்களுக்கு முன்னும்கூட அநேக ஜனங்கள் டாங்கிகள் மேலும் லாரிகளிலும் ஏற்றிச் சென்றார்கள்.

"பெர்லினில் குழப்பம் அதிகரித்துவிட்டது. ஆயிரக்கணக்கான அகதிகள் அந்நகருக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். அவர்களின் பிரயாணம் பெர்லினுடன் நின்றுவிடவில்லை. தலைநகரில் அவ்வளவு ஜனங்களும் வசிக்கமுடியாது. அநேகர்கள் மேற்குப் பக்கத்துக்குக் கடத்திச் செல்லப்படுகிறார்கள்".

ஸ்டாக்ஹோமிலுள்ள டெயிலி ஹெரால்ட் பத்திரிகையின் நிருபர் இவ்விதமாக வர்ணித்திருக்கிறார். இது மிகவும் அழகாக இருப்பதினால் இது மிகையானதென்று சொல்லுவதற்கில்லை. இதை ஜெர்மனியின் ஒலிபரப்பு அமைப்பின் முக்கிய ராஜீய நிருபரான ஹான்ஸ் பிரிட்ஸி ஒப்புக்கொள்ளுகிறார். அவர் பின்வருமாறு எழுதுகிறார். "இப்பொழுது நமது ஸ்திரீகளும் குழந்தைகளும் ஓடிவருவதைப் பார்க்கிறோம். நமது ரஸ்தாக்கள் வழியாக ஏராளமான அகதிகள் வந்துகொண்டேயிருக்கிறார்கள்".

வி வி வி வி வி

**வருத்தம்.** கோயபல்ஸ் வெளியிடும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "எல்லா அணைகளும் உடைக்கப்பட்டுவிட்டதுபோலத் தோன்றுகிறது. ருஷ்யச் சேனைகளை எதிர்த்துப் போராட எங்கு புதிய போர்முனைகளை எப்படி அமைப்பதென்று தோன்றவில்லை. வெள்ளப்பெருக்கைத் தடுக்க அணைபோட முயற்சிப்பவருக்கு புயலும் மற்ற அசௌகரியங்களும் ஏற்படுவதுபோல நாம் மிகவும் கஷ்டத்தை அனுபவிக்கிறோம்."

ஜெர்மன் தொழிலாளர் முனையைச் சேர்ந்த மந்திரியான டாக்டர் லே பெர்லின் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார். "தலைநகரத்தை நாம் ருஷ்யர்களிடம் ஒப்படைக்க வேண்டியதாகயிருந்தாலும் அதற்காக நாம் எல்லா இடங்களிலும் கடும் போரை நடத்த வேண்டும்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

டெயிலி மெயில் பத்திரிகையின் ஸ்டாக்ஹோம் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார் "நிலைமையைச் சமாளிக்க முடியாதென்று கண்டுகொண்ட ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் யுத்த நிறுத்தத்தைக் கோரும்படி ஹிட்லருக்கு யோசனை கூறுகிறார்கள். பெர்லினில் எங்கு பார்த்தாலும் சமாதானப் பேச்சு உலாவி வருகிறது. சமாதானத்தைக் கோர தூதர்கள் பிரிடிஷ்—அமெரிக்க அதிகாரிகளிடம் அனுப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ருஷ்யாவுக்கு அனுப்பப்படவில்லை. அவர்கள் திரும்பிவந்து இப்பொழுது நிபந்தனையற்ற சரணாகதி செய்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள்."

ஆனால் இவையெல்லாம் வதந்திகள்தான். அவற்றை எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டும். ஏனெனில் எதிரி இன்னும் பலம் படைத்திருக்கிறான். அவன் போரை நடத்தக் கூடும்.

டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகைக்கு லண்டனிலிருந்து வந்த ஜனவரி 25 தேதியுள்ள கடிதத்தின் சாராம்சம் பின்வருமாறு :—

"ருஷ்ய சேனைகளுக்கும் பெர்லினுக்கும் உள்ள தூரம் குறைந்து வருகிறதென்று ருஷ்ய முன்னேற்றத்தை சிலாகிப்பதன்மூலம் பத்திரிகைகள் ஜனங்களை ஏமாற்றி வருகின்றன. ருஷ்யப்படைகளுக்குப் பின்புறமுள்ள நீண்டபோக்குவரத்து மார்க்கங்களையும் இருப்புப்பாதையில் செல்லும் வண்டிகளை அகலமான வழியில் செல்ல திருத்தியமைக்கவேண்டிய சிரமங்களையும் உற்று நோக்கினால் ருஷ்யர்கள் சில வாரங்களுக்குள் பெர்லினுக்கு வந்துவிடுவார்களென்று எண்ணுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது? பனி உருக ஆரம்பிக்கும் பொழுது ருஷ்யர்கள் ஓடர் நதிக்கரையில் ஊன்றி நின்று பிரெஸ்லா, போஸன், டான்சிக் முதலியவற்றைக் கைப்பற்றக்கூடுமானால், அவர்கள் பெர்லினுக்குச் செல்லவில்லையென்று ஏமாற்றமடையாமல் அவர்களின் வெற்றிக்காக நாம் சந்தோஷப்பட வேண்டியிருக்கும்."

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.** ஏழு முனைகளில் ருஷ்யர்கள் முன்னேறி வருகிறார்கள். வடக்கிலிருந்து தெற்குவரையில் வரிசையாக:—

(1) ஜெனரல் செர்னியாகோவ்ஸ்கியின் மூன்றாவது வெண்மை ருஷ்யச் சேனை கிழக்கு பிரஷ்யாவில் முன்னேறுகிறது.

(2) மார்ஷல் ராகோஸோவ்ஸ்கியின் இரண்டாவது வெண்மை ருஷ்யச் சேனை வார்ஸாவுக்கும், கிழக்கு பிரஷ்யாவுக்கும் மத்தியில் முன்னேறி வருகிறது.



(3) மார்ஷல் சூகோவின் முதல் வெண்மை ருஷ்யச்சேனை வார்ஸாவிற்கு மேற்கிலும் தெற்கிலும் முன்னேறி வருகிறது.

(4) மார்ஷல் கோனியேவின் முதலாவது யூக்ரேனிய சேனை ஜெர்மன் சைலீஷியாவில் பிரெஸ்லாவைத் தாண்டி முன்னேறி வருகிறது.

(5) ஜெனரல் பாட்ரோவின் நான்காவது யூக்ரேனிய சேனை கார்பேதியன் மலைகளின் இரு பக்கங்களிலும் முன்னேறுகிறது.

(6) மார்ஷல் மாலினோவ்ஸ்கியின் இரண்டாவது யூக்ரேனிய சேனை செகோஸ்லாவேகியாவில் பிராடிஸ்லாவாவெளியையும் வியன்னாவையும் நோக்கி முன்னேறுகிறது.

(7) மார்ஷல் டால்யூகினின் மூன்றாவது யூக்ரேனியப் படை ஆஸ்திரியாவுக்குப் போகும் வழியில் ஹங்கேரியின் வடமேற்கு மூலையில் நின்று கொண்டிருக்கிறது.

கிழக்குப் பிரஷ்யா மாசூரியன் ஏரிகள் வழியாக நேர்முகமாகக் தாக்கப்படவில்லை. அதற்கு வடக்கிலும், தெற்கிலும் இரண்டு தாக்குதல்கள் செய்யப்பட்டது. இன்ஸ்டர்பொர்க் வெளிக்கு முக்கியத்வமுள்ள இன்ஸ்டர்பொர்க்கைப் பிடித்தபின் வடக்கிலுள்ள படைகள் கிழக்குப் பிரஷ்யாவின் தலைநகரமான கோனிஸ்பர்க்கை நோக்கி முன்னேறுகின்றன. தெற்கிலுள்ள நதியை ஒட்டிச் செல்லும் சேனை பால்டிக் கடலிலுள்ள டான்சிக்குப் போகும் வழியில் டானன்பர்க்கை கைப்பற்றிவிட்டு எல்பிங்குக்குச் சென்றுவிட்டது. சென்ற யுத்தத்தில் டானன்பர்க்கில்தான் ருஷ்யப் படைகள் படுதோல்வி அடைந்தன. இவ்விதமாக ஜெர்மன் பிரபுக்கள் வசிக்குமிடமான கிழக்குப் பிரஷ்யா சுற்றிவளைக்கப்பட்டுவிட்டது.

மத்தியில் ருஷ்யர்கள் பெர்லினை நோக்கி ஒரு உப்பலான ஸ்தலத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்காக வார்ஸா—பெர்லின் அச்சுபோஸன் வழியாகவும் சைலீஷியாவில் பிரெஸ்லா வழியாகவும் இரண்டு கிடுக்கித் தாக்குதல்கள்மூலம் தாக்கப்பட்டது. அதற்குத் தெற்கில் சமீப காலத்தில் போராவா வெளியைப் பிடிப்பதும் இறுதில் ஓடர் நதியின் அடிபாகத்தின் வழியாகவோ அல்லது வியன்னா மார்க்கமாகவோ ஜெர்மனிக்குச் செல்லுவதும் தான் தாக்குதலின் லக்ஷியங்கள்.

முக்கியமான போர் மத்தியில்தான் நடைபெறுகிறது. அதன் விலாப்பக்கங்களைக் காப்பாற்றத்தான் கிழக்குப் பிரஷ்யாவிலும், சைலீஷியாவிலும், ஹங்கேரியிலும் கடும்போர்கள் நடைபெறுகின்றன. கிழக்குப் பிரஷ்யாப் போர் அத்துடன் முடிவடையப் போவதில்லை. கோனிக்ஸ்பர்க், டான்ஸிக்கைப் பிடிக்கமட்டும் போர்நடைபெறவில்லை. மத்திய தாக்குதல் பெர்லினுக்கு ஆபத்தை உண்டுபண்ணக்கூடியது. இப்பொழுது படைகள் முன்னேறியிருக்கும் இடங்களுக்கும் தலைநகரத்துக்குமிடையே சமவெளியாக இருக்கிறது. இங்கு பின்வாங்கிச் செல்ல யூரல் மலைகளும் ஸ்டெப்பிஸ்களுமில்லை. விபத்துக்காலம் நெருங்கி வருகிறது.

ஆகிலும் ஜெர்மனி அவசர அவசரமாக தற்பொழுது பின்வாங்கிவருவது கட்டாயத்தின் பேரிலா அல்லது காரணத்துடனா என்று இப்பொழுது சொல்லுவதற்கில்லை. குறைவானவர்கள் கைது செய்யப்பட்டதையும், வார்ஸா சுலபமாக வீழ்ச்சிபெற்றதையும் நோக்கும்கால் இரண்டாவது காரணம் சரியென்று தோன்றுகிறது. தற்பொழுது ஜெர்மன் சேனைகளைக் காப்பாற்றுவதற்காக ஜெர்மனி இடத்தைவிட்டுக் கொடுத்துவரலாம். இதுதான் ஜெர்மனியின் யுத்த தந்திரமென்றால் இனிமேல் பின்வாங்க ஜெர்மனிக்கு இடமில்லை. ஆகிலும் ஜெர்மனியின் எண்ணமும் முயற்சியும் எவ்விதமிருப்பினும் ருஷ்யா ஏற்கனவே ஏராளமான மைல்கள் முன்னேறியிருப்பதில் இனிமேல் ருஷ்யாவின் முன்னேற்றம் தளர்ந்துவிடும். அவசரமாக முன்னேறியதில் ருஷ்யர்கள் அநேக ஜெர்மன் தற்காப்பு ஸ்தலங்களைத் தாண்டிச் சென்றிருக்கலாம். அவைகளை சுத்தி செய்யவேண்டும். மேலும் ஜெர்மனியின் போர்முனை குறுகிவிட்டது. அதற்கு உள்நாட்டுப் போக்குவரத்து சௌகரியங்களிருக்கின்றன. எதிரி மேற்கு முனையிலிருந்து கிழக்குப் போர்முனைக்குத் துருப்புகளை அனுப்பிவருகிறான்.

ஜெர்மனியின் போரில் ஒரு வாரத்திற்குள் நெருக்கடி ஏற்படுமென்று ஜெர்மன் பத்திரிகை சொல்லியிருக்கிறது. பெர்லின் ஒரு வாரத்திற்குள் விழுந்து விடுமென்றாவது அல்லது ஐரோப்பிய யுத்தம் சீக்கிரத்தில் முடிந்துவிடுமென்றாவது நம்பிக்கை கொள்ளுவது தவறென்று நாம் சொல்லவேண்டும். ஆகிலும் இவ்வருஷத்தில் முதல் மாதத்தில் யுத்தப் போக்கில் ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கு நேசதேசத்தார்கள் நன்றியறிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். பிப்ரவரிக்குள் யுத்தம் முடிவு பெறாமல் மூடுபனி மூலம் மந்தம் ஏற்பட்டால், வேனிர்காலத்திலோ. இலையுதிர்காலத்திலோ யுத்தம் முடிவு அடையலாம்.

**சைலீஷியா.** போலந்து பூராவும் சைலீஷியாவின் ஒரு பாகமும் ருஷ்ய வசமாகிவிட்டன. சைலீஷியா சரித்திரப் புகழ்பெற்றது. போலந்துக்கும், செகோஸ்லாவேகியாவுக்கும் மத்தியிலிருக்கிறது. ரூரைப்போல் அது ஜெர்மனிக்கு முக்கியத்வமுள்ளது. வடக்கு சைலீஷியா சுரங்கங்களுள்ள ஒரு பிரதேசம். தெற்கு சைலீஷியா பூராவிலும் ஜெர்மானியர்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் விவசாயிகள். சைலீஷியாவில் இவ்விதமாக உணவுப் பொருள்களும் தாவரப் பொருள்களும் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. தெற்கு சைலீஷியாவில் கம்பு, கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்குகள் உற்பத்தியாகுகின்றன. வடக்கு சைலீஷியாவில் ஜெர்மனிக்கு வேண்டிய மூன்றில் ஒரு பங்கு நிலக்கரியும், லிக்னைட்டும், பத்து சதவிகிதம் எஃகும், உலகத்தின் உற்பத்தி அளவில் 1938-ல் மதிப்புப் போட்டபடி 10 சதவிகிதம் துத்தநாகமும் கிடைக்கின்றன. சென்ற இரண்டு வருஷங்களில் யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளை பத்திரமான இடங்களுக்குக் கொண்டுபோகும் நடவடிக்கையில் ஜெர்மனி தொழிற்சாலைகளை இங்கு அமைத்திருக்கிறது. மேற்கு ஜெர்மனியிலிருந்தும் சில தொழிற்சாலைகளை இங்கு கொண்டுவந்திருக்கிறது. இங்கு ஜெர்மனியின் ரசாயனத் தொழிற்சாலை நிலயமும் வருஷத்திற்கு 1 மிலியன்கள் சேர்க்கை எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய சாலைகளுமிருக்கின்றன.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** இங்கு நேசதேசத்தார்களுக்கு முன்னேறித் தாக்கும் நிலைமை ஏற்படாவிட்டாலும் அவர்களுக்குக் கூடிய சீக்கிரம் அந்த நிலைமை ஏற்பட்டுவிடும். ரூண்ட்ஸ்டெட்டின் ஆர்டெனிஸ் உப்பல் அழிக்கப்பட்டுவிட்டது. அதற்கு வடக்கிலுள்ள ஸெயிண்ட்வித்தும் தெற்கிலுள்ள லிட்ஸ்ஸுவும் பிடிபட்டுவிட்டதால் அதன் தோள் வலைகள் முறிக்கப்பட்டுவிட்டன. ரூண்ட்ஸ்டெட்டின் யுத்த தந்திரத்தின்படி இனிமேல் மேற்கு முனையில் முன்னேறுவதில்லை. படைகளைப் பின்வாங்கி, ஸீக்பிரட் அரணுக்கோ அல்லது கிழக்குப் போர்முனைகளுக்கு அவைகளைக் கொண்டுபோக வேண்டும் என்பதுதான். ஆல்ஸாஸில் ஹாகெனுவைப் பிடிக்க ஜெர்மனி செய்த முயற்சி வீணாகிவிட்டது. இதற்கு பதிலாக பிரெஞ்சுப் படைகள் கோல்மாரையும், ஸரன்-ரோஸ் கால்வாயையும் நோக்கி முன்னேறி வருகின்றன.

வி வி வி வி வி

**பர்மா.** நேசதேசப்படைகள் இடைவிடாது முன்னேறி வருகின்றன. மாண்டலேயிக்குப் போகும் மார்க்கத்தில் பலமான எதிர்ப்பு காணப்படுகிறது. ஜப்பானியர்கள் அரக்கானிலிருந்து வெளியேறுகிறார்கள். ராமரீத் தீவில் பாதி. ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. ராமரீ என்பது கடற்கரையிலுள்ள எதிரியின் முக்கிய தளங்களில் ஒன்றான டாங்குப்புக்குச் செல்ல பாய்ச்சல் ஸ்தலம் போன்றது.

வி வி வி வி வி

**பர்மா ரஸ்தா.** பர்மா ரஸ்தாவைத் திறந்ததுதான் இந்த வாரத்திய முக்கிய சம்பவம். க்வீபெக் மாகநாட்டின் ஒரு கட்டளையை லூயி மௌண்ட் பேடன் பிரபு நிறைவேற்றவிட்டார். சைனாவுக்குத் தரைமார்க்கமாகச் செல்லும் சாமான் வண்டிகள் லேடா ரஸ்தா வழியாக, அதை அமைத்த பிரிகேடியர் ஜெனரல் பிக்கின் தலைமையில் புறப்பட்டுவிட்டது. அதை வாண்டிங்கில் வரவேற்பதற்காக மிஸ்டர் R. V. சூங்கும், மற்ற உயர்தர சீன அதிகாரிகளும், ஜெனரல் சென்னால்டும் ஜெனரல் சுல்டானும் சென்றிருக்கிறார்கள். பர்மா முனையிலும் சால்வின் நதிக்கரையிலும் போர் புரிந்துவந்த சீனப்படைகள் மற்றப்படைகளுடன் தொடர்ப்பு ஏற்படுத்திவிட்டன. லேடாவிலிருந்து கன்மிங்குக்குள்ள 1,044 மைல்கள் தூரத்தில் சாமான் வண்டிகள் இப்பொழுது பாதி தூரம் சென்றுவிட்டன. அவைகள் விமான ரக்ஷணையுடன் லேடா ரஸ்தாவைத்தாண்டி பழய பர்மா ரஸ்தாவுக்குள் புகுந்துவிட்டன. அந்த ரஸ்தாவும் பழுதுபார்க்கப்படுகிறது. லேடா ரஸ்தாவின் அமைப்பு இஞ்சினியர்களின் சாமர்த்தியத்தை வெளிப்படுத்துகிறது. சாமான்களை வெகுதூரம் கொண்டுபோய், மலைகள், காடுகள் வழியாகவும் பருவகாலத்தையும் எதிரியின் தொந்திரவையும் பொருட்படுத்தாமல் தினசரி ஒரு மைல் தூரமும் 10 பெரிய பாலங்களும், 154 சிறிய பாலங்களும் உள்ளதாக அந்த ரஸ்தா அமைக்கப்பட்டிருக்கிறது. லேடோவிலிருந்து கன்மிங்குக்கு குறுக்கு வழியாக 435 மைல்கள் தானிருந்தபோதிலும் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் ரஸ்தா 1,000 மைல்கள் நீளமுள்ளது. அலாஸ்கா கனடா ரஸ்தாவை அமைத்த இஞ்சினியர்கள் இந்திய, சீனத் தொழிலாளர்களைக் கொண்டு இந்த ரஸ்தாவை அமைத்திருக்கிறார்கள்.

ரெங்கூனிலிருந்து லாஷியோவுக்குச் செல்லும் பர்மா ரஸ்தாவின் பாகம் எதிரி வசமிருந்து வருகிறது. வடக்கிலிருந்து வாண்டிங்குக்கு முன்னேறிய நேசதேசப்படைகள் புதிய



லேடோ ரஸ்தாவுக்கும், லாஷியோவுக்கு வடகிழக்கிலுள்ள பழைய பர்மா ரஸ்தாவுக்கும் தொடர்பு ஏற்படுத்திவிட்டார்கள்.

8-ம் வருஷ யுத்தத்தை நடத்திவரும் சைனா, ஜப்பானிடமிருந்து அபாயம் அதிகரித்து வரும்பொழுது இந்த ரஸ்தாவை அது வரவேற்கும். இதுவரையில் ஸப்ளைகள் ஹிமய மலையைத்தாண்டிச் சென்றுவந்தன. மூன்று வருடங்களுக்குப்பின் மறுபடியும் திறக்கப்பட்ட இந்த ரஸ்தா இப்பொழுது சைனாவுக்கு ஆறுதலையளிக்கும். ஏனெனில் ஜப்பானியர்கள் இப்பொழுது ஹாங்காங் பீகிங் இருப்புப்பாதையைக் கைப்பற்ற முயன்றுவருகிறார்கள். இப்பொழுது சீனாவின் முற்றுகையில் ஒரு புறம் ஊடுருவிச் செல்லப்பட்டது.

சைனாவின் பொருமைக்கும், விடாமுயற்சிக்கும் பலன் கிடைத்துவிட்டது. கல்கத்தாவிலிருந்து கன்மிங்குக்கு அமைக்கப்படும் குழாய்கள்மூலம் விமான எண்ணெய் ஸப்ளை செய்யப்படும். சைனாவின் யுத்த தளவாட உற்பத்தி இரட்டித்துவிட்டது. சைனாவின் பொருளாதாரப் போர்முனையானது அமெரிக்க பீரங்கிப்படை இலாகாவுடன் தொடர்பினால் வலுப்பட்டிருக்கிறது. இப்பொழுது பர்மா ரஸ்தா மூலமாக கனமான பீரங்கிகளும் டாங்கிகளும் சைனாவுக்குச் செல்லக்கூடும். சீனர்கள் தங்களுக்கு உதவி வருகிறதென்ற உத்சாகத்துடனும் தைரியத்துடனும் இம்பொழுது போரை நடத்தலாம்.

வி வி வி வி வி

**பிலிப்பைன்ஸ்.** மணிலாவின் வீழ்ச்சி வெகு தூரமில்லை. கிளார்க் விமான தளம் பிடிபட்டபின் முன்னேற்றத்திற்கு சௌகரியமேற்பட்டுவிட்டது. ஆங்கெலங், ஆகாட், ரோசாரியோ, சான்பர்னாண்டோ என்ற இடங்கள் பிடிக்கப்பட்டன. அமெரிக்கர்கள் மணிலாவிலிருந்து 30 மைல்களுக்குள் வந்துவிட்டார்கள்.

வி வி வி வி வி

**கிரீஸ்.** கிரீஸின் தற்போதிய நிலைமைக்கு பைரன் என்ற கவி எழுதியிருக்கும் கட்டுரை பொருத்தமாகயிருக்கிறது. 1823-ல் அவர் பின்வருமாறு எழுதினார் "பொதுவாக கிரீஸ் குதூகலப்பட்டுக்கொண்டிருக்க வேண்டிய சமயத்தில் கிரீஸில் விரோதங்கள் இருந்து வருகின்றனவென்பது வருந்தத்தக்கது. கிரீஸின் தற்போதிய பிரச்னைகள் மூன்று விதமானவை, (1) அதன் சுதந்திரத்தைத் திரும்பவும் சம்பாதிக்கவேண்டும். (2) அல்லது ஐரோப்பிய வல்லரசுகளிடம் ஆதினமாக இருக்க வேண்டும். (3) அல்லது துருக்கிய மாகாணத்துடன் திரும்பிச் சேரவேண்டும்.

"இவைகளுள் ஒன்றை அடைய முடிவு செய்யவேண்டும்" உள் நாட்டுக் கலகம் நடந்தால் கடைசியில் சொன்ன இரண்டு விளைவுகள் தான் ஏற்படும். சுதந்திர கிரீஸாக இருக்க வேண்டுமென்றால் அது இன்றே ஒரு முடிவுக்கு வரவேண்டும். இவ்விதமான சந்தர்ப்பம் அதற்குக் கிடைக்காது.

"சமீப காலத்தில் அவர்களின் சார்பாக குறுக்கிட்டது தெய்வானுகூலம் தான். கிரேக்கர்கள் அச்சம் கொள்ளக்கூடிய எதிரிகள் இவ்வுலகிலும் விண்ணுலகிலும் இல்லை. உள்நாட்டுக் கலகத்தைக் கண்டுதான் அவர்கள் அஞ்சுகிறார்கள். அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்துவது தான் நம்முடைய முதல் கடமையாகும்".

---

## உன்னுடைய குமாரன் காரணத்தைக் கேட்கும்பொழுது ?

இந்த உருக்கமான கடிதத்தை மேஜர் ஜான் சைமண்ட்ஸ் போர்முனைக்குச் செல்லுமுன் எழுதினார். இந்தக் கடிதத்தின் பிரதியை மேஜர் சைமாண்ட்ஸின் மனைவி ந்யூஸ் கிரானிகள் பத்திரிகையின் பத்திராதிபருக்கு, அவளுடைய புருஷன் காணப்படவில்லை என்று ரிபோர்டு செய்யப்பட்டபின் அனுப்பினாள். அத்துடன் அனுப்பிய கடிதத்தில் அவள் பின்வருமாறு எழுதினாள்.

"அன்பார்ந்த ஐயா, ஆர்ன் ஹெமுக்குப்போகுமுன் என்னுடைய புருஷன் அவருடைய அபிமானப் பிள்ளைக்கு எழுதிய கடிதத்தின் பிரதியை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். கிளிமுக்கு 3-வயதாகிறது. அவனுடைய தகப்பனான விமானப்படை ஆபீஸரான டோனில்காக் 1943-ம் வருஷத்தில் பிரான்ஸில் சுட்டு வீழ்த்தப்பட்டார்.

உத்தியோகமுறையில் என் புருஷன் காணப்படவில்லையென்று சொல்லப்பட்டது. அவர் ஆர்ன்ஹெமில் கொல்லப்பட்டார் என்று தெரியவருகிறது. இந்தக் கடிதத்தில் அடங்:

யுள்ள செய்தி என்னுடைய மகனுக்குமட்டும் அன்வயிக்கக்கூடியதில்லையாததால் அதை நான் உங்களுக்கு அனுப்புகிறேன்.

பார்பாரா ஸைமண்ட்ஸ், லிவர்பூல்.

அன்பார்ந்த கிளிம்,

இந்தக் கடிதம் உன் கைவசமாகுமுன் நான் கிளைடர் விமானத்தில் பிரான்ஸில் பறந்து செல்லுவேன். அங்கு ஒரு முக்கியமான அலுவலில் நான் ஈடுபடப்போகிறேன். அது முடிவடைந்தபின் நான் திரும்பி வருவேன். நான், உன் தாயார் பார்பாரா, நீ, முதலியவர்கள் ஒன்றுகூடி வாழலாம்.

இப்பொழுது "இது என்ன, அது என்ன என்று நீ கேட்கிறாய். கூடிய சீக்கிரத்தில் இதற்குக் காரணம் என்னவென்று நீ கேட்பாய். சிலகாலம் கிரமித்து நீ இந்த வேலையைப் பற்றி அநேக கேள்விகளைக் கேட்கப்பிரியப்படுவாய். நான் ஏன் இதைச் செய்யவேண்டும். சுகமாக வாழ்வதைவிட்டு, நான் ஏன் நாட்டைவிட்டுச் சென்று, பிறரைச் கொல்லமுயன்று நாம் உயிரைவிடவேண்டும் என்று நீ கேட்கக்கூடும்.

கிளிம், யுத்தம் கொடுமையானதுதான். இதை நீ மறந்துவிடக்கூடாது. பத்து வருஷத்துக்குப்பின் மகத்தான உண்மையான தீரச்செய்கைகளைப் பற்றி நீ அநேக கதைகளைக் கேட்கக்கூடும். யுத்தத்தில் ஏற்படும் ரத்தவெள்ளம், காயம், தொந்திரவு முதலியவற்றைக் காட்டிலும் குடும்பங்கள் பிரிக்கப்படுவதிலிருந்துதான் யுத்தம் கொடுமையானதென்று நாம் செல்லவேண்டியிருக்கிறது.

ஆகிலும் சமாதானமும் கோரமாக இருக்கக்கூடும். அக்காலத்திலும் ஏழ்மைத் தனத்தினாலும், வியாதியினாலும், அக்கிரமத்தினாலும் குடும்ப பிரிவினை ஏற்படக்கூடும். அவர்கள் ஒன்றாக வசித்தாலும் இந்த கஷ்டங்களால் பிரிக்கப்படக்கூடும். அவர்கள் உயிருடனிருந்தாலும் அவர்களிடம் பீதியும் வறுமையும், ஏமாற்றமும், துயரமும் நிறம்பியிருக்கக்கூடும்.

ஆகையால் உன்னுடைய கேள்விக்குச் சுலபமான பதிலை உரைக்கிறேன். வாழ்க்கை முறை இருவகைப்பட்டது. ஒன்று பூர்ணமாக, அழகாக, ஸ்வதந்திரமும் நம்பிக்கையுடனும் வாழ்வது. மற்றொன்று ஸ்வதந்திரமன்னியிலும் நம்பிக்கையன்னியிலும் வாழ்வது.

நான் மேற்கொண்டிருக்கும் வேலை முதல் வகைக்குப் போகும் கதவைத் திறந்துவிடுவதற்காக. இந்த வாழ்க்கைமுறை எல்லா வர்ணத்தாருக்கும் ஜாதியாருக்கும் ஏற்படவேண்டும். நமது விரோதியான பாஸிதத்வம் இந்தக் கதவைத் தாளிட்டுவிட்டது. நாங்கள் சந்தோஷமுள்ள நிலைமையை அமைத்து சந்தோஷமுள்ள வாழ்க்கையை ஏற்படுத்தப் போர் புரிந்துவருகிறோம். பாஸிதத்வம் இந்த சந்தர்ப்பத்தை அழித்துவருகிறது. ஆகையால், கிளிம், இதைவிட உயர்வான வேலை வேறு ஒன்றும் இல்லை.

சமூக சுகவாழ்க்கையை அமைக்க அநேக உயிர்களை தியாகம் செய்தபின் அந்தக்கதவின் வழியாகச் சென்று சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்ளாவிடில் நமது முயற்சி வீணானதாகப் போய்விடும்.

ஆகையால் அந்த வேலையும் முக்கியமானதுதான். அது நீண்டகால திட்டமாக இருக்கும். அது ஒரு நடவடிக்கைமூலம் சித்தித்துவிட்டது. நீ வளர்ச்சிபெறும்பொழுது அந்த பிரச்னை நன்கு புலப்படும்.

அந்த வேலையை நாம் நிறுத்தக்கூடாது. அவ்விதம் நிறுத்தினால் கதவு மறுபடியும் மூடப்பட்டுவிடும். அதை மறுபடியும் திறக்க நீ போர் புரியவேண்டிவரும்.

அந்த வேலையைச் செய்வதற்குப் போர்முனையில் ஈடுபட்டவர்களைப்போல தீரம் அவசியமாகும். நீயும் அதில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி சந்தர்ப்பம் ஏற்பட்டால் இந்த யுத்தத்தில் நாம் செய்த தியாகங்களெல்லாம் உனக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்க செய்யப்பட்டதென்றும், அந்த சந்தர்ப்பத்தைத் தைரியத்துடன் நீ அவலம்பிக்காவிடில் அந்தத் தியாகங்களை நீ வீணாக்கியதாகுமென்றும் நீ அறியவேண்டும்.

மேலும் நீயும் உன்னுடைய தலைமுறையிலுள்ளவர்களும் இந்தக் கதவை மூடும்படி செய்துவிட்டால் நாம் செய்யும் முயற்சியெல்லாம் வியர்த்தமாகப்போய்விடுமென்று ஞாபகப்படுத்திக்கொள்.

மற்றொருவிஷயம், யுத்தமூலமாக ஏற்படும் அநேக நலன்களை நீ கூடியசீக்கிரத்தில் அறியக்கூடும்.

சமாதான காலத்தில் பயங்காளிகளாக இருப்பவர்கள் யுத்தத்தில் தைரியசாலிகளாக இருப்பார்கள்.





இதற்குக் காரணம் பொதுவான லக்ஷியத்துக்காக அவர்கள் தோளோடு தோள்நின்று போரை நடத்துகிறார்கள். அவர் ஒருவரை ஒருவர் நம்பியிருக்கிறார்கள். அதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

ஆகையால் சமாதான காலத்திலும் அவ்விதமே இருக்கவேண்டும். ஜனசமூகம் ஒருவரை மற்றொருவர் எதிர்த்துப்போராடாமல் ஒருவரோடொருவர் ஒத்துழைக்கவேண்டும். நாம் சச்சரவுகளை ஒழிக்கவேண்டும். மனிதர்களுக்கு விரோதத்துக்குக் காரணமான பொருளாதார பிரச்னையை நாம் அழித்துவிடவேண்டும். எல்லோருடைய க்ஷேமத்துக்காகவும் நாம் ஒத்துழைக்கவேண்டும். அவ்விதம் நாம் செய்யக்கூடும். அவ்விதமாக ஒரு நாட்டில் நடைபெற்றுவருகிறது.

ஆகையால் தீரத்தையும் ராஜ விசுவாசத்தையும் போருக்காக உபயோகிக்காதே. தீரத்தையும் ராஜ விசுவாசத்தையும் சமாதானத்தை நிலைநாட்ட உபயோகிக்கவேண்டும்.

கிளிம், நான் போய்வருகிறேன். பார்பாராவை கவனித்துக்கொள். அவள் எனக்குப் பிரியமுள்ளவள்—ஜான்.

---

## கிராகோ—போலந்தின் ரத்தினம்.

### இரக்கமற்ற ஜெர்மன் முறைகள்.

வில்லி பிரெஷாயிர் (டெயிலி ஹெரால்ட்).

போலந்தின் பழைய தலைநகரமும் நான்காவது மிகப்பெரிய நகரமுமான கிராகோவை இரக்கமன்னியிலும் பரிஷ்காரமாகவும் ஜெர்மன் மயமாக்கியதுபோல ஐரோப்பாவிலுள்ள மற்றெந்த நகரத்தையும் ஜெர்மானியர் அவ்விதம் நடத்தவில்லை. போலந்திலுள்ள மற்றெந்த நகரத்தையும்விட கிராகோ அதிக போலிஷ்மயமானதென்று அவர்கள் அறிவார்கள். மேலும் கட்டட அமைப்பிலும் ஜன சமூக அமைப்பிலும் அது போலிஷ் மக்களின் சிறந்த குணங்களை அனுஷ்டித்துவருகிறது. கிராகோவில் அநேக போலிஷ் மன்னர் முடி சூட்டப்பட்டு உயிர் துறந்த வேவல் கோட்டை, மாதாக்கோவில் இரண்டும் ஒன்றாகவுள்ள புகழ்பெற்ற போலிஷ் தேசியக் கோவிலில் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். மலைமேல் முன்பு வலுவாக இருந்த கோட்டையின் சின்னங்களுள்ள வேவல் கிராகோவின் இரத்தினமென்பதுபோல், கிராகோ போலந்தின் இரத்தினமென்று அடிக்கடி வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

பரிகாசம் செய்வதுபோல் போலந்தின் நாஸி கவர்னரான டாக்டர் பிராங்க் கிராகோவிலுள்ள மன்னர் கோட்டையில் வசித்துவந்தார். போலிஷ் ஜனங்களை அழித்ததுபோல் அதன் சரித்திர பிரசித்தியையும் அழித்துவிடும் எண்ணத்துடன் நாஸிகள் கிராகோவிலிருந்த உத்சாகம் ஊட்டக்கூடிய புராதனச் சின்னங்களை அப்புறப்படுத்தினார்கள். அவைகளில் ஸோல்ஜரும் ராஜதந்திரியுமான கோஷியூஸ்கோவின் சிலையும் அகற்றப்பட்டது. கோட்டையையும் கோவிலையும் அவர்கள் புதுப்பித்துச் சீர்படுத்தினார்கள். கிராகோவிலிருந்த 2,50,000 பேர்கள் கஷ்டத்துக்குட்படுத்தப்பட்டார்கள். 70,000 யூதர்கள் இறுதியில் நிர்மூலமாக்கப்பட்டார்கள்.

கிராகோ என்பது கிராகா என்ற ஜெர்மன் நகரமாகிவிட்டது. ஆகிலும் போலீஷ் மக்கள் கிராகோவின் நெடுநாளான சரித்திரத்தை மறந்து விடவில்லை. 1846-ம் வருஷத்தில் ஆஸ்திரியாவுடன் கிராகோ சேர்க்கப்பட்டபின் ஏற்பட்ட சச்சரவுகளையும், அதன்பின் கடைசியில் பில்சுடிஸ்கி 1914-ம் வருஷத்தில் கிராகோவிலிருந்து பிறப்பட்டு கையளவு போலீஷ் தேசாபிமானிகளுடன் சென்று போலீஷ் ஸ்வதந்திரத்தை நிலைநாட்டியதையும், அவர்கள் மறந்துவிடவில்லை. பில்சுடிஸ்கி இப்பொழுது கிராகோவில் பழைய மன்னர்களின் பக்கத்தில் புதைக்கப்பட்டிருக்கிறார். அந்தப் புதை குழியில் போலீஷ் ஜனங்கள் கிராகோவின் விடுதலைக்காக மறுமுறை பிரார்த்தனை செய்துவந்தார்கள். இப்பொழுது ஆக்ஷி செய்தவர்கள் இதற்குமுன் ஆக்ஷி செய்தவர்களைவிட மிகவும் குரூரஸ்வபாவமுள்ளவர்கள்.

கிரகோவில் ஜெர்மனி செய்த அட்டூழியங்களின் அளவை இப்பொழுது சொல்லுவதற்கில்லை. கவர்னரான பிராங்க் பழைய கிருஸ்தவ நாகரீகத்தின் கிழக்கு எல்லைச் சரகமான பிராசீனமான சர்வகலாசாலையை ஜெர்மன் ஸ்தாபனமாக மாற்றிவிட்டார். கிராகோவுக்கு சமீபத்திலிருந்த சுகாதார வசதிக்கு யோக்கியமான சாகோபென் ஹிட்லரின் வாலிபர்களுக்கு விளையாட்டுஸ்தலமாக அமைக்கப்பட்டுவிட்டது. அடிக்கடி சுத்திசெய்வது, தூக்கிச்செல்லுவது, அயல்நாடுகளுக்கு வெளியேற்றுவதுபோன்ற நடவடிக்கைகளுக்குத் தப்பியவர்கள் "உண்மையான டென்கள்" என்று சொல்லப்பட்டுவிட்டார்கள்.

# பிரெஞ்சு பொதுமக்களை அப்புறப்படுத்துவது.

## அட்லாண்டிக் போர்முனையில் அமானுஷமான பிரதேசம்.

(மாஞ்செஸ்டர் கார்டியனின் ராணுவ நிருபர்).

மேற்கு பிரான்ஸில் ஜெர்மன் வசமுள்ள ஸெயிண்ட் நாஸரே பகுதியிலிருந்து பொது மக்களை அப்புறப்படுத்துவது என்று ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதிலிருந்து முக்கியமான போர்முனைகளிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிலும், ஜெர்மனி அதன் பிரகடனத்தில் "அட்லாண்டிக் போர்முனை" என்று குறிப்பிடுவதுமான ஒரு விசித்திரமான போர்முனை நமது கவனத்தை மறுபடியும் கவருகிறது. இந்தப் போர்முனையில் முன்னணிப் படைகளில்லை. ஆனால் அது மனித சஞ்சாரமில்லாத நிருதியற்ற பொட்டல் ஸ்தலம். இது ஜெர்மனியின் ஒவ்வொரு எதிர்ப்பு ஸ்தானத்தையும் சுற்றியுள்ளது. இந்த ஸ்தானங்கள் லோரியாஸிலும், ஸெயிண்ட் நாஸெரெயிலும், லா ரோகலிலும், கிராண்டி நதியின் முத்துவாரத்திலும் காணப்படுகின்றன. லா ரோகலிலிருந்து கிராண்டி வரையிலுள்ள கடற்கரை பூராவும் ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்டது. அது தொடர்ச்சியாக இல்லை. ஆகிலும் அந்த இடத்தை ஜெர்மனியின் ரோந்துப்படைகள் தான் காப்பாற்றி வருகின்றன. படைகள் அங்கு நிரந்தரமாக வைக்கப்படவில்லை. கிராண்டி நதியின் முகத்துவாரத்தின் இரு கரைகளிலும் பலமான ஜெர்மன் படைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

சமீபத்தில் கணக்குப்போடப்பட்டதில் லோரியானில் 25,000 ஜெர்மானியர்களும், ஸெயிண்ட் நாஸெரெயில் 35,000 பேர்களும், லாரோகலிலும் கிராண்டி நதியின் முகத்துவாரத்திலும் மொத்தமாக 40,000 பேர்களும் இருப்தாகத்தெரியவருகிறது. மேற்குப் பக்கத்தில் மொத்தத்தில் 100,000 முதல் 130,000 ஜெர்மானியர்கள் இருக்கலாமென்று தோன்றுகிறது. அவர்கள் பலபட்டரையானவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் நல்ல முறையில் பயிற்சி பெற்றவர்கள் தான்.

லா ரோகலில் யார் தலைமை வகிக்கிறார்களென்பது நிச்சயமாகத் தெரியவில்லை. லுவாருக்கு வடக்கிலுள்ள ஜெர்மானியர்களுக்கு பீரங்கிப்படையின் ஜெனரலான பார்ம்பாசர் தலைமை வகித்து வருகிறார். அவர் பிரெஸ்டிலிருந்தார். பிரெஸ்டு நேசதேச வசமாகுமுன் அவருடைய சிப்பந்திகளுடன் அவர் தப்பி ஓடிவிட்டார். ஒரு ஸ்தாபனத்தை அமைப்பதில் பார்ம்பாசருக்கு அபார சக்தி உண்டு. ஆகையால் பயிற்சி முறையை ஏற்பாடுசெய்து அவரிடமுள்ள பலகலப்பான ஆட்களை திறமையுள்ள ராணுவப்படையாக அவர் தயாரித்துவிட்டார். இந்தப்படையில் முக்கியமாக விமான எதிர்ப்பு, கடற்கரை தற்காப்பு, பீரங்கி முதலிய சேனைப்படைகள் தான் பெரும்பாலும் இருக்கின்றன. ஜெர்மனி பிரான்ஸை ஆக்கிரமித்தபொழுது அந்தப்படைகள் அங்கு ஏராளமாகக் குவிக்கப்பட்டன.

அவர்கள் ஆக்கிரமித்திருக்கும் துறைமுகத்தைச்சுற்றிலும் ஜெர்மானியர்கள் அநேகப் பிரதேசங்களைக் கைவசப்படுத்தி வைத்திருக்கிறார்கள். லொரியானில் கடற்கரையில் 20 மைல் நீளமும் உள்நாட்டில் ஏழு முதல் 12 மைல்கள் அகலமுள்ளதுமான பிரதேசம் எதிரி வசமிருந்துவருகிறது: ஸெயிண்ட் நாஸெரெயைச்சுற்றிலும் ஜெர்மனியின் வட்டாரம். லுவார் நதிக்கு வடக்கில் உத்தம பக்ஷமான பாகத்தில் 25 மைல்கள் உள்நாட்டிலும் நதிக்குத் தெற்கில் 12 மைல்கள் உள்நாட்டிலும் பரவியிருக்கின்றது. லுவாருக்கு வடக்கிலுள்ள பரப்பின் பெரும் பாகம்தான் மகத்தான லா கிராண்டிபிஸரி என்ற சதுப்பு நிலம். ஸெயிண்ட் நாஸரே பகுதியில் தான் உணவுப்பொருள் பிரச்னை அதிகரித்துவிட்டது. அங்கிருக்கும் ஜெர்மானியர்கள் சுற்றுப்புறத்திலுள்ள கிராமங்களுக்கு கொள்ளைக்கோஷ்டிகளை அனுப்பி தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். ஸெயிண்ட் நாஸெரெயிலுள்ள பொதுமக்களுக்கும் உணவுப்பொருள் குறைவு ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாகத்தான் சென்ற இரண்டு மாதங்களுக்குள் இரண்டாவது தடவையாக பொதுமக்களை வெளியேற்றுவது என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

லோரியானும் ஸெயிண்ட் நாஸெரெயும் முக்கியமான யூ-படகு தளங்களாக இருந்தாலும் ஜெர்மானியர்கள் பிரான்ஸை ஆக்கிரமித்திருந்தபொழுது அந்தத் துறைமுகங்களை நன்கு பலப்படுத்தியதினாலும் இப்பொழுது அங்குள்ள ஜெர்மானியர்களிடம் பீரங்கிகளும், அவைகளுக்குத் தேவையான மருந்துகளும் ஏராளமாக இருக்கின்றன. அந்த ஜெர்மன் படைகளை நேசதேசப்படைகளும், போர்புரியும் பிரஞ்சுப்படைகளும் சமாளித்து வருகின்றன. பிரஞ்சுப்படைகளுக்குப்போதுமான முஸ்தீப்புகளில்லை. ஆகிலும் ஜெர்மானியர்களை அந்த ஸ்தானங்களில் அடைத்துவைத்திருக்கும் நடவடிக்கையில் அவர்கள் காட்டிவரும் தைரியமும் திறமையும் போற்றக்கூடியதாகவே இருக்கிறது. அவர்களிடம் நேசதேசத்தாரிடமுள்ள சிறிய ஆயுதங்களும் பீரங்கிகளுமிருக்கின்றன. ஆகிலும் அவர்கள் கைப்பற்றின அநேக ஜெர்மன் 75 மிலிமீட்டர், துப்பாக்கிகளையும் 90 மிலிமீட்டர் உள்ள பீரங்கிகளையும் உபயோகித்து வருகிறார்கள்.



# கடல் போர்.

## 1945-ம் வருஷத்திய திட்டங்கள்.

வின்ஸ்டர் பிரபு (B. B. C. ஒலிபரப்பின் சுருக்கம்).

1945-ம் வருஷத்தில் பிரிடிஷ் கடற்படைக்கு என்ன அலுவல்களிருக்கின்றன? ஜெர்மன் யுத்தக் கப்பல்களான பிஸ்மார்க்கும் டிர்பிட்ஸும் மூழ்கடிக்கப்பட்டுவிட்டதனால் கடற்தளபதி மூரிடமுள்ள கடற்படைக்கு பிரிடனைச் சுற்றியுள்ள ஸமுத்திரங்களில் அதிகமான எதிர்ப்பு இல்லையென்று தோன்றுகிறது. இது வாஸ்தவம்தான். ஆகிலும் ஜெர்மனியிடம் இன்னும் இரண்டு சிறிய போர்க்கப்பல்களும், ஒன்று இரண்டு சஞ்சாரிகளும் சில நாசகாரிகளுமிருக்கின்றன.

பிரிடனிலுள்ள கப்பற்படை குறிப்பான பலத்துடன் அடிக்கடி கண்காணிப்புச் செய்து வந்தால் இந்த ஜெர்மன் கப்பல்கள் சக்திபற்றவைகளாகத்தான் இருக்கவேண்டும். இந்தக் கண்காணிப்பில் சிறிது தளர்ச்சி ஏற்பட்டாலும் அவைகளின் ஒன்று இரண்டு அட்லாண்டிக் கடலுக்குச் சென்று நமது கப்பல்களை பலமாக அழித்துவிடக்கூடும். மற்றொரு அம்சத்தையும் நாம் கவனிக்கவேண்டும். D தினத்தாக்குதலால் ஐரோப்பாவைப் படையெடுக்கும் நடவடிக்கையில் கடைசி நடவடிக்கை என்று நாம் ஏன் எண்ணவேண்டும். நாம் ஒன்றுபட்ட நடவடிக்கைகள் மூலம் படைகளை இறக்கக்கூடிய அநேக இடங்கள் இன்னும் எதிரி வசமிருந்து வருகின்றன.

அவ்விதமான ஒரு முயற்சியை நாம் மேற்கொண்டால் நமது கடற்படைக்குப் போதுமான அளவுக்கு மேல் வேலை இருக்கிறது.

நமது லேசான கடற்கரைப் படைகள் ஜெர்மன் கப்பல்கள் திருட்டுத்தனமாக கடற்கரை ஓரமாகச் செல்லும்பொழுது அவைகளைத் தாக்கும் வேலையிலீடுபடக்கூடும். ஜெர்மனியின் இருப்புப்பாதைகளை நமது விமானப்படை பலமாக அழித்துவருவதினால் ஜெர்மனி முக்கியமான போக்குவரத்துக்குக் கடற்கரை ஓரமாகச் செல்லும் கப்பல்களை நம்பியிருக்கிறது. ஆகையால் நமது மோட்டார் பீரங்கிப் படகுகளுக்கும் மீன்வெடிப் படகுகளுக்கும் ஏராளமான லக்ஷியங்கள் கிடைத்து வருகின்றன.

அடுத்தபடியாக யூ படகுகளை கவனிப்போம். நாம் அவைகளை முறியடித்துவிட்டோம். ஆகிலும் விஞ்ஞான சாஸ்திரிகள் சொல்லுவதுபோல கடல்போரின் நிலைமை நிரந்தரமானதல்ல. யூ படகு யுத்தமென்பது இருபக்கத்திலுமுள்ள விஞ்ஞான சாஸ்திரிகளின் திறமையைப் பொருத்தது. ஒரு கக்ஷி அவர்களுக்கு சௌகரியமளிக்கக்கூடிய நூதனமான முறையைக் கண்டுபிடிக்கிறது. மற்றொரு கக்ஷி அதற்குப் பதில் நடவடிக்கையைக் கண்டுபிடிக்க முயலுகிறது.

ஆகையால் யூ படகுகள் எந்த நேரத்திலும் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து தாத்காலிகமாக ஒரு லாபத்தை அடையக்கூடும். ஆகிலும் யூ படகு நடவடிக்கை அதிகரித்திருக்கிறதென்று கேட்டு திகிலடையக்கூடாது. அப்படி கேள்வியுற்றால் நாம் நம்பிக்கையுடனிருக்கவேண்டும். யூ படகுகளுக்குக் கிடைக்கும் லாபங்கள் நீடித்திருக்க முடியாது. ஆகிலும் அவைகளின் நடவடிக்கையினால் நமது கப்பல்கள் சதாகாலமும் ரோந்து செய்து முன் ஜாக்கிரதையுடனிருக்கவேண்டியதாக இருக்கும்.

அடுத்தபடியாக கடுங்குளிருள்ள வடக்கு ஸமுத்திரங்கள் வழியாக ருஷ்யாவுக்குத் துணைக் காவல்கொண்ட சாமான் கப்பல் கூட்டங்கள் செல்லவேண்டும். அபாயம் குறைந்துவிட்டது. ஆகிலும் கடுமையான காலநிலைமை இருப்பதால் சகிப்புத் தன்மை மிகுதியாக இருக்கவேண்டும்.

இவைதான் பிரிடிஷ் கடற்கரையிலுள்ள கடற்படையின் அலுவல்கள். மத்தியதரைக் கடலில் இப்பொழுது மகத்தான அலுவல்கள் இல்லை. சேனைகளுக்கு சாமான்களைக்கொண்டு போய் ஸப்ளை செய்வதுதான் அதன் முக்கியமான வேலை. சில சமயங்களில் எதிரி வசமுள்ள கடற்கரை ஸ்தானங்கள் பேரில் பீரங்கி பிரயோகம் செய்யவேண்டியதாக இருக்கும். ஏட்ரியாடிக் கடலில் சிறிது நடவடிக்கை இருக்கும். மேலும், கிரீட் தீவும் டொடிகானீஸ் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த தீவுகளும் எதிரி வசமிருக்கின்றன. என்றைக்காவது ஜெர்மானியர்களை அவைகளிலிருந்து துரத்தியடிக்கவேண்டி வரும். அப்பொழுது கப்பல்கள் ஸோல்ஜர்களை ஏற்றிச் செல்லவேண்டியிருக்கும்.

மற்றொரு முக்கியமான அலுவலும் உண்டு. ஏஜியன் கடலிலிருந்து எதிரி சுத்தி செய்யப்பட்டுவிட்டதனால், பாரசீகம், காஸ்பியன் கடல் மார்க்கமாக ருஷ்யாவுக்குச் சாமான்களை அனுப்புவதைவிட சுலபமாக டார்டனலிஸ் வழியாக கருங்கடலுக்கு நாம் சர்பராக்களை அனுப்ப முடியும். இதன் மூலம் கப்பல்கள் பாதி தூரம்தான் செல்லக்கூடியதாக இருக்கும், கப்பல்களும், மாலுமிகளும், கால அளவும் குறைந்துவிடும்.

ஆகிலும் பஸிபிக் ஸமுத்திரத்தில்தான் நேசதேசக் கடற்படைக்கு முக்கிய அலுவல்களிருக்கின்றன. அமெரிக்காவின் கடற்படை அநேக காலமாக இந்த வேலையிலீடுபட்டிருக்கிறது. ஆஸ்திரேலிய நியூஸிலாந்து கடற்படையின் உதவியுடன் ஜப்பானியக் கடற்படையை எதிர்த்துப் போரை நடத்தியதில் அது வெற்றிபெற்றிருக்கிறது. பிரிடன் பஸிபிக் கடலுக்கு ஏராளமான கப்பல்களை அனுப்பி வருகிறது. ஜப்பானை முறியடிப்பதில் நமது கடற்படையும் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளுமென்பதில் ஐயமில்லை. நமக்கு ஏற்பட்ட அநேக தோல்விகளுக்குப் பழி வாங்கவேண்டும். நாம் இழந்த தேசங்களை மீட்கவேண்டும்.

பஸிபிக்கில் அமெரிக்கக் கடற்படைக்கு கடற்தளபதி நிமிட்ஸ் தலைவராகலாம். நமது கடற்படைக்கு கடற்தளபதி ப்ரூஸ் பிரதேசத் தலைவராகவுமிருந்து வருகிறார்கள். ஜப்பானியக் கடற்படையை இறுதியில் தாக்குவதற்கு அவ்விருவரும் கூடி திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். ஜப்பானியர்கள் இறுதி வரையில் போராடுவார்களென்று கடற்தளபதி நிமிட்ஸ் சந்தேகமற அறிந்து ஜப்பானை இறுதியில் முறியடிப்பதற்கு ஜப்பானில் படைகளை இறக்கவேண்டுமென்று சொல்லுகிறார். இந்த நடவடிக்கைக்கு வடக்கு ஆப்பிரிக்காவிலும், ஸிஸிலியிலும், இதாலியிலும், நார்மண்டியிலும் நமக்கு ஏற்பட்ட அனுபவம் உபயோகமுள்ளதாக இருக்கும்.

இவைகள் 1945-ம் வருஷத்தில் கடற்போரின் முக்கிய அம்சங்கள். யுத்தத்தில் அளவு கடந்து நம்பிக்கை கொள்ளுவதும் அல்லது அளவு கடந்து அவநம்பிக்கைப்படுவதும் முட்டாள்தனமானதாகும். நாம் தத்வதரிசிகளாக இருக்கவேண்டும். லாபங்களையும், நஷ்டங்களையும் நாம் சீர் தூக்கிப்பார்க்கவேண்டும். நமது எதிரிகள் இன்னும் உறுதியுடனும் வலிமையுடனும் இருந்து வருகிறார்கள். நாமும் உறுதியுள்ளவர்கள்தான். நமது பலமதிகரித்து வரும்பொழுது எதிரியின் பலம் குன்றி வருகிறது. யுத்த முடிவு ஏற்படுமுன் நாம் அநேக சோதனைகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்படவேண்டியிருக்கும். ஆகிலும் தளர்ச்சி பெறாத நம்பிக்கையுடன் நாம் உறுதியுடன் அவைகளை சமாளித்து வரவேண்டும்.

## ஜெர்மன் கடற்படையின் தோல்வி.

1944-ம் வருஷம் நவம்பர் மாதம் 13-ம் தேதியன்று வான் டிர்பிட்ஸ் என்ற 45,000 டன்கள் எடையுள்ள ஜெர்மனியின் யுத்தக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதுடன் ஜெர்மன் கடற்படை பூர்ணமாக முடமாக்கப்பட்டுவிட்டது. டிர்பிட்ஸ் மூழ்கியதிலிருந்து மேற்கில் நேசதேசத்தாரின் யுத்த முயற்சிக்கு நேர்முகமாக அபாயம் உண்டுபண்ணிவந்த ஜெர்மனியின் சக்தி வாய்ந்த கடற்படை நன்றாய் முறியடிக்கப்பட்டுவிட்டது. ஜெர்மன் கடற்படையின் தோல்விக் கதை ருசிகரமானது. நேசதேச வெற்றிக்கு அபாயம் விளைவித்த ஜெர்மன் கடற்படையை முறியடித்த புகழ் பிரிடிஷ் கடற்படைக்கு உரியதாகும்.

ஜெர்மனியின் கடற்படை யுத்த தந்திரம் நான்கு வகைப்பட்டது. (1) கனமான கவசம் பூண்ட கொள்ளைக்கப்பல்கள். அவை தனிப்பட சஞ்சாரம் செய்துவந்தன. (2) யூ படகு. (3) சுரங்கவெடி பாவும் நடவடிக்கை. (4) லேசான கப்பல் படகுகளின் தாக்குதல். பிரிடிஷ் கடற்படையைவிட ஜெர்மன் கடற்படைக்கு ஆரம்பத்தில் அநேக சௌகரியங்களிருந்தன. அவைகளை ஜெர்மனி நன்கு உபயோகித்துவந்தது. ஆகிலும் நாளடைவில் அது பலனளிக்கக்கூடவில்லை. யுத்தம் ஆரம்பமானபொழுது பிரிடிஷ் கடற்படை பிரிடனைச் சுற்றியும் மற்ற சமுத்திரங்களிலும் சென்ற சாமான் கப்பல் கூட்டங்களுக்குத் துணைக்காவல் புரியவேண்டியிருந்தது. தற்காப்பு முறையிலும் முன்னேறித்தாக்கும் முறையிலும் அடிக்கடி ரோந்து செய்யவேண்டியிருந்தது. சுரங்கவெடி அபாயத்தை நிவர்த்திக்கவேண்டியிருந்தது. யூ படகுகளையும் கொள்ளைக் கப்பல்களையும் சமாளிக்கவேண்டியிருந்தது. ஜெர்மன் கடற்படைக்குக் கடல் மார்க்கங்களைப் பாதுகாக்கவேண்டிய அவசியமில்லை. ஐரோப்பாவின் மேற்குக்கரை பூராவும் தளங்களை வைத்துக்கொண்டிருந்ததால் அதற்கு விசேஷமான சௌகரியமிருந்தது. மேலும் ஜெர்மன் கப்பல்களுக்கு கவசம் மிகுதியாகவுமிருந்தது. வேகமாக சுடக்கூடும் ஏராளமான பீரங்கிகளும் அவைகளிலிருந்தன. அவ்விதமிருந்தும் 1944-ம் வருஷ முடிவில் ஜெர்மன் கடற்படை நிலைகுலைந்துவிட்டது. யூ படகுகளின் சில்லரை விஷமத்தைத் தவிர நேசதேசத்தார்களின் கடலாதிக்கம் பூர்ணமாகிவிட்டது.

1944-ம் வருஷம் முடிய ஜெர்மனியின் கப்பல் நஷ்டம் பின்வருமாறு :—

### யுத்த ஆரம்பத்தில் ஜெர்மனியின் கடற்படை பலம்.

| | |
|---|---|
| யுத்தக் கப்பல்கள் : | ஷார்ன்ஹார்ஸ்ட், நீஸ்நா. |
| சிறிய போர்க்கப்பல்கள் : | லட்ஸொ (அதற்கு, இதற்குமுன் ட்யூச்லந்து என்று பெயர்). |
| 8 அங்குல வாயுள்ள பீரங்கிகளுள்ள சஞ்சாரிகள். | ப்ளூசர், ஹிப்பர். |



| | |
|---|---|
| 6 அங்குல வாயுள்ள பீரங்கிகளுள்ள சஞ்சாரிகள். | லிப்சிக், கோனிக்ஸ்பர்க், கார்ல்ஸ்ரூகி, கோல்ன், எம்டன். |

### யுத்தத்துக்குப்பின் சேர்க்கப்பட்டவை.

| | |
|---|---|
| சண்டைக் கப்பல்கள். | வான்டிர்பிட்ஸ் பிஸ்மார்க். |
| 8 அங்குல வாயுள்ள பீரங்கிகளுள்ள சஞ்சாரிகள். | பிரின்ஸ்யூஜன். |

மற்றும் சிறிய படகுகளும் நீர்மூழ்கிகளும் சேர்க்கப்பட்டன.

### 1944-ம் வருஷம் முடிய ஜெர்மனியின் நஷ்டம்.

| | |
|---|---|
| யுத்தக்கப்பல்கள். | பிஸ்மார்க் (25—5—41-ல் மூழ்கடிக்கப்பட்டது.<br>ஷார்ன்ஹார்ஸ்ட் (26-12-43-ல் மூழ்கடிக்கப்பட்டது).<br>வான்டிர்பிட்ஸ் (13-11-44-ல் மூழ்கடிக்கப்பட்டது). |
| சிறிய போர்க் கப்பல்கள். | அட்மிரல் கிராப் ஸ்பி (17—12—39-ல் தற்கொலை செய்துகொண்டது). |
| சஞ்சாரிகள். | ப்ளூசர் (9—4—40)-ல் மூழ்கடிக்கப்பட்டது).<br>காரல்ஸ்ரூகி (9—4—40) Do.<br>கோனிக்ஸ்பர்க் (9-4-40-ல்) Do. |
| நாசகாரிகள். | சுமாராக 35. |
| மீன் வெடிப் படகுகள். | Do 28. |
| யூ படகுகள். | 1944-ம் வருஷம் ஜூலை வரையில் 500. |

ஜெர்மனியிடம் பாக்கியிருக்கும் கப்பல்களில் நிஸ்நாமுடமாக்கப்பட்டுவிட்டது. அட்மிரல் ஷீரும், லட்சௌவும் மற்ற சஞ்சாரிகளும் பால்டிக் கடலில் அடைபட்டிருக்கின்றன.

## ஹிட்லரின் ஐரோப்பா பேரில் வெடிகுண்டுகள்.

இரண்டாவது உலக யுத்த ஆரம்பத்தில் ஜெர்மன் விமானப் படை ஐரோப்பாவிலுள்ள நூற்றுக்கணக்கான நகரங்கள் பேரிலும் குடிசைகள் பேரிலும் ஏராளமான வெடி குண்டுகளை வீசிற்று. நாகரீகத்தை அழிக்கும் உத்தேசத்துடன் ஜெர்மனி நடத்திய பூர்ணமான யுத்தத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிர் துறந்தார்கள். 1940-ல் பிரிடன் பலமாகத் தாக்கப்பட்டது. ஆகிலும் பிரிடனின் மன உறுதியைக் குலைத்துவிட ஜெர்மனி செய்த முயற்சி வீணாகப்போய்விட்டது. டேவிட்டைப்போல பிரிடன் கோலியத் என்ற ஜெர்மனியை எதிர்த்துப் போராடிற்று. அந்த நெருக்கடியான சமயத்தில்தான் ஜெர்மனியைத் தாக்கக்கூடிய விமானப்படையைத் தயார் செய்யவேண்டுமென்ற உறுதி ஏற்பட்டது. ஆனால் இது புதுமாதிரியான தாக்குதலாகிவிட்டது. ஜெர்மன் தொழிற்சாலைகள், முக்கியமாக ஜெர்மனியின் யுத்த முயற்சிகள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. முன்தீப்புகளில்லாமல் ஹிட்லரின் ஜெர்மனியும்கூட யுத்தத்தை நடத்தமுடியாது.

ஜெர்மனியைத்தாக்கும் விமான நடவடிக்கையின் புள்ளி விபரங்கள் பின்வருமாறு. இந்தப் புள்ளி விபரங்களை கவனித்தால் "ஜெர்மன் நகரங்களை எந்த நாட்டையும்விட பலமான தாக்குதலுக்குட்படுத்துவோம்" என்று மிஸ்டர் சர்ச்சில் சொன்ன வாக்குறுதி நிறைவேறிவிட்டதென்று தெரியவரும்.

### குண்டுவீச்சுக் கணக்கு.

| | பிரிடிஷ் விமானப்படை. | அமெரிக்க விமானப்படை. | மொத்தம். |
|---|---|---|---|
| 1940 | 12,795 டன்கள். | ... | 12,795 டன்கள். |
| 1941 | 31,185 டன்கள். | ... | 31,185 ,, |
| 1942 | 45,285 டன்கள். | சுமாராக 50,000 டன்கள் | |
| 1943 | 1,57,160 டன்கள். | (1942-ம் வருஷம் ஆகஸ்டு முதல் 1943-ம் வருஷம் டிஸம்பர்வரை). | |
| 1944 | 5,25,000 டன்கள் | 9,58,000 | 14,83,000 |

## சாம்ராஜ்ய மனித நஷ்டத்தின் புள்ளி விபரங்கள்.

1945-ம் வருஷம் ஜனவரிமாதம் 16-ம் தேதியன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் பேசியபொழுது யுத்த ஆரம்பத்திலிருந்து 1944-ம் வருஷம் நவம்பர்மாதம் முடிய சாம்

ராஜ்யம் பூராவிலும் சேர்ந்து 10,43,554 மனிதர்கள் நஷ்டமென்று கூறினர். அதன் புள்ளி விபரம் பின்வருமாறு :--

| | கொல்லப்பட்டவர்கள். | காணுமற்போனவர்கள். | காயம்பட்டவர்கள். | கைது செய்யப்பட்டவர்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| கனடா ... | 28,040 | 4,807 | 39,010 | 7,128 | 78,985 |
| ஆஸ்டிரேலியா ... | 18,015 | 6,913 | 34,336 | 25,597 | 84,861 |
| நியூஸிலாந்து ... | 8,919 | 928 | 17,115 | 7,153 | 34,115 |
| தென் ஆபிரிக்கா ... | 5,783 | 599 | 11,796 | 10,765 | 28,943 |
| குடியேற்ற நாடுகள் ... | 4,493 | 14,015 | 3,686 | 6,752 | 28,946 |
| இந்தியா ... | 17,415 | 13,935 | 45,224 | 76,023 | 1,52,597 |
| பிரிடன் (கடல்தாண்டி உள்ளவர்கள் உள்பட). | 1,99,497 | 39,383 | 2,35,207 | 1,61,020 | 6,35,107 |
| மொத்தம் ... | 2,82,162 | 80,580 | 3,86,374 | 2,94,438 | 10,43,554 |

## பிரிடனின் யுத்தகால உணவு விநியோகம்.

### உணவுப்பொருள் நிலைமையில் மாறுதல்கள்.

(L. E. செஸல்).

சென்ற ஐந்து வருடங்களாக போர்ப் படைகளின் அபரிமிதமான தேவைகளை சப்ளை செய்ய பிரிடன் எடுத்துக்கொண்ட மகத்தான யுத்த முயற்சிக்கு உணவுப்பொருள்கள் பங்கீடு செய்யப்பட்டதும், பொதுஜனங்களின் தேவைகளும் குறைக்கப்பட்டதும்தான் முக்கிய காரணங்களாகும். தொழிலாளர்களுக்கு நிலாக்கியமில்லாத, உத்ஸாகக்குறைவை அளிக்கக் கூடிய உணவுப்பொருள் வழங்கப்பட்டபோதிலும் அவர்களின் உயர்தரமான திறமை குன்றிவிடவில்லை.

யுத்தத்துக்குமுன் வழங்கப்பட்ட உணவுப்பொருள்களுடன் யுத்தகாலத்தில் வழங்கப் பட்ட பொருள்களை ஒப்பிட்டுப் பார்த்தால் இப்பொழுது அநேக மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்றுதான் காணப்படும். கசாப், பன்றிக்கறி, வெண்ணெய், மார்கரின், கொழுப்புகள், பால்கட்டி, தேயிலை, சர்க்கரை, வற்றல்கள் முதலியவை பங்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. பங்கீடு என்றால் ஆகாரக் குறைவென்று பொருள்படும். இந்த விஷயத்தில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. புள்ளி விபரங்கள் பின்வருமாறு. பொதுமக்கள் மேலே சொல்லிய உணவுப்பொருள்களில் 1943-ம் வருஷத்தில் பண்டகசாலைகளில் இனம் ஒன்றுக்கு ஒருவாரத்திற்கு 63'84 அவுன்ஸ்தான் வாங்கமுடிந்தது. யுத்தத்துக்குமுன் அது 86'24 அவுன்ஸாக இருந்தது. அதாவது 30-சத விகிதம் இப்பொழுது சாமான் குறைந்துவிட்டது. வெண்ணெ சம்பந்தப்பட்டமட்டில் பொதுமக்கள் 20-சத விகிதம் அதைக் குறைத்துக்கொண்டு, குறைவான ருசியுள்ளதும் மட்டமானதுமான மார்கரினை உள்கொள்ளவேண்டியதாயிற்று.

யுத்தத்துக்குமுன் உலர்ந்த முட்டைகளுக்கும், கட்டிப்பாலுக்கும் அதிகத்தேவை கிடையாது. இப்பொழுது அவைகளின் உபயோகம் அதிகரித்துவிட்டது ஆனால், அவைகள் ஜனங்களின் பிரியத்தை கவர்ந்துவிடவில்லை. உண்மையில் சரியாகவோ, தவறுதலாகவோ, பொதுஜனங்கள் விஞ்ஞான சாஸ்திர முறைப்படி எவ்வளவு சிலாக்யமாகத் தயாரிக்கப்பட்டிருந்தாலும் பதில் வெட்டுகை உண்மையான வஸ்துக்களைப்போல அவ்வளவு சத்துள்ளதாக இருக்குமென்று நம்புகிறார்களில்லை. 1943-ம் வருஷத்தில் சாதாரணமான குடும்பங்கள் கடைகளிலிருந்து உபயோகத்திற்கு 30 ஷெல் முட்டைகளைத்தான் பெற முடிந்தது. குடும்பத்திற்கு அதிக முட்டைகள் கிடைத்ததென்றால் குடும்பத்தில் கோழிகளை வைத்திருக்கவேண்டும். அதற்குப்போடும் தீவனமும் பங்கீடு செய்யப்பட்டிருந்தது.

பொதுப்படையாகச் சொன்னால் பிரிடிஷ் மக்கள் ஸ்தூலமானதும் ஸ்டார்ச் உள்ளதுமான உணவுப்பொருள்களை மிகுதியாக உட்கொள்ளவும் கசாப், கொழுப்பு, சர்க்கரை முதலியவற்றை குறைத்துக்கொள்ளவும், ஆரம்பித்துவிட்டார்கள். ஆகாரத்தின் தரமும் குறைந்துவிட்டது. உருளைக்கிழங்கும், காய்கறியும், ரொட்டியும்தான் அபரிமிதமாக சப்ளை செய்யப்படுகின்றன. மீனும், பங்கீட்டிக்குட்பட்டபோதிலும் அபூர்வமாகிவிட்டது. ஏனெனில் அதை சம்பாதிப்பதில் யுத்தத்தினின்றும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. கனிகளைச் சாப்பிடுவதை பிரிடிஷ் மக்கள் நிறுத்திவிட்டார்கள். உள்நாட்டிலேயே உற்பத்தியாகும் ப்ளம், ஆப்பிள்கள் எல்லா பருவகாலங்களிலும் ஏராளமாகக் கிடைக்கும் ஆனால் வாழைப்பழம், பேரிச்சம்பழம், கிரேப்புகள், கஷ்கொட்டை, ஆரஞ்சுப்பழம் போன்ற ரசமுள்ள கனிகள் அரிதாகிவிட்டன.

உணவுப்பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதிலும் பங்கீடுசெய்வதிலும் கவர்ன்மெண்டார் ஏராளமான பொருளை நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். 1940-ம்



வருஷத்தில் விலைவாசியைக் குறைத்து விற்பனை செய்வதற்காக விவசாயிகளுக்கும் முக்கியமான பொருள்களை வியாபாரம் செய்யும் மற்றவர்களுக்கும் நிர்வாகம் [illegible] மிலியன் பவுன்களைக் கொடுத்திருக்கிறது 1941-ல் விலைவாசியை நிர்த்தாரணம் செய்யும் முயற்சி மூலம் இந்தச் செலவு 140 மிலியன் பவுன்களுக்கு அதிகரித்தது. 1943, 44-ம் வருஷத்தில் இந்தத் தொகை 190 மிலியனாக அதிகரித்தது. சென்ற வருஷ ஆரம்பத்தில் வரவு செலவு திட்டக் கணக்கில் இந்தச் செலவு இன்னும் அதிகரிக்குமென்று பிரிடனின் கோசாதிகாரி மதிப்பிட்டிருக்கிறார்.

யுத்த கால பங்கீடு ஆகாரத்தை உட்கொண்டபோதிலும் பிரிடிஷ் மக்கள் தங்களுடைய அலுவல்களை திறமையுடன் செய்துவந்திருக்கிறார்கள். கிடைத்த பொருள்களைக்கொண்டு ஸ்திரீகள், உணவுப்பொருள் இலாகா தினசரி பத்திரிகைகளின் மூலமாகவும் ஆண்டு பிரசுரங்கள் மூலமாகவும் புஸ்தகங்கள் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் வெளியிட்டுள்ள சமையல் போதனைகளை ஒட்டி பரிசோதனைசெய்து மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள்.

உணவுப்பொருள்களிலே மட்டிலும்தான் பிரிடிஷ் மக்கள் தங்களுடைய சௌக்கியங்களைக் குறைத்துக்கொண்டு சிலாக்கியமான நடவடிக்கைக்கு ஒத்தாசை செய்தார்கள் என்று எண்ண வேண்டாம். ஆடவர்களும் ஸ்திரீகளும் யுத்தத்துக்கு முன்னிருந்த அளவில் பாதி பாகத்துக்கு ஆடைகள் வாங்குவதைக் குறைத்துவிட்டார்கள். அதன் பயனாக எவரும் முன்போல அவ்வளவு பரிஷ்காரமாக ஆடைகளை அணிந்துகொள்ளுவதில்லை. ஒரு ஆடவருக்கு 13 மாதங்களுக்கு ஒரு ஜோடி ஜோடுகள்தான் கிடைக்கும். ஒரு ஸ்திரீக்கு ஒரு வருஷத்தில் 14 மேஜோடுகளுக்குப் பதிலாக 5 அல்லது 6 ஜோடி மேஜோடுகள்தான் கிடைக்கும். இவ்விதம் வசதி குறைந்திக் கொள்ளுவதற்கு அவர்கள் ஏங்களுக்கு அளிக்கப்படும் பங்கீடு அளவை ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும். "அணிந்து கொள்ள ஒன்றுமில்லையென்று' முணுமுணுக்க ஸ்திரீகளுக்குத்தகுந்த முகாந்திரம் இப்பொழுது காணப்படுகிறது.

உணவுப்பொருள், ஆடைகளைப்போலவே தினசரி வாழ்க்கைக்குக்குறிய மற்ற எல்லா சாமான்களிலும் குறைவு ஏற்பட்டிருக்கிறது. யுத்தகால சிரமங்களையும் மற்ற நிலைமையையும் மதித்துப்பார்த்தால்தான் இந்த தியாகங்களின் மேன்மை நன்கு புலப்படும். மிலியன்கள்கணக்கான ஆடவர்களும், ஸ்திரீகளும் சந்தோஷத்துடன் உயர்வான ஆகாரத்தையும் அதிக சௌக்கியங்களையும் கைவிட்டுவிட்டார்களென்பது 1939-ம் வருஷத்திலிருந்து யுத்ததளவாடதொழிற்சாலைகளிலும், தரையிலும், கடலிலும், மற்ற இடங்களிலும் அவர்கள் செய்திருக்கும் அற்புதமான சேவைக்குக் கிடைத்த புகழை அதிகரிக்கக் கூடியதாக இருக்கிறது.

---

## யுத்த தளவாட உற்பத்திசாலைகளின் உத்தமபக்ஷ உற்பத்தி.

### மனித சக்தியின் அமைப்பு.

(கார்டன் ஷாபர்).

1944-ம் வருஷத்தில் பிரிடனின் யுத்த தளவாட உற்பத்தி உச்ச நிலையை அடைந்தது. மனிதபலம் பூராவும் வலுமிக்க போர்ப் படைகளைத் தயாரிக்கவும் ஐரோப்பாவைத்தாக்க தளவாடங்களை உற்பத்தி செய்வதிலும் ஈடுபடுத்தப்பட்டது.

நேசதேசப் படைகள் நார்மண்டியில் இறங்கியபின் பிரிடனின் யுத்த யந்திரம் ஒப்பற்ற முறையில் திறம்பட தளவாடங்களை உற்பத்தி செய்துவருகிறது. போர்முனையின் தேவைகள் மாறிவிட்டதால் மனிதர்களும் யந்திர சாலைகளும் மிகவும் அவசரமாகத் தேவைப்படும் ஆயுதங்களை உற்பத்திசெய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஐரோப்பாவில் போர் நடைபெறும் வரையில் கால்வாயைத்தாண்டி ஆயுதங்கள் ஸப்ளை போய்க்கொண்டே இருக்கும். ஜப்பானை முறியடிக்க கவனம் செலுத்தும் காலம் வரும்பொழுது பஸிபிக் போரின் புதிய தேவைகளுக்குரிய தளவாடங்களையும் தயாரிக்க பிரிடனின் தொழிற்சாலைகள் தயாராக இருக்கும்.

கைத்தொழில் சம்பந்தப்பட்டமட்டில் 1944-ம் வருஷத்திய மகத்தான பிரச்னைகள் யுத்த சம்பந்தமானவை யில்லாமல் வரப்போகும் சமாதானத்தைக் குறித்திருந்தன. சேவைப் படைகளில் ஈடுபட்டிருக்கும் ஆடவர்களையும், ஸ்திரீகளையும் பொதுஜன உத்தியோகங்களில் அமர்த்தவேண்டுமென்று நிறுவப்பட்ட சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக அமைக்கப்பட்ட கமிட்டிகள் அநேக சிரமங்களை நிவர்த்திக்கவேண்டியிருந்தது. படைகள் கலைக்கப்படும்பொழுது இந்த பிரச்னைகள் நூற்றுக்கணக்கான மடங்குகள் அதிகரிக்கும். 1939, 1940-ல் வேலைகளை விட்டுச்சென்ற பையன்கள் திரும்பிவரும்பொழுது மனிதர்களின் ஊதியம் கொடுக்கப்படவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுவார்கள். புதிய தொழிலாளர்களைப் பயில்விக்க உதவிசெய்ய தொழிற்முறைகளைக் கைவிட்ட வியாபாரச் சங்கங்கள் தங்களுடைய தேர்ச்சிபெற்ற வேலைக்காரர்களின் தரத்தைக் காப்பாற்றுவதில் கவலை செலுத்திவருகிறார்கள். அதிக நேரம் வேலை செய்து தங்களுடைய ஊதியத்தைப் பெருக்கிக்கொண்ட தொழிலாளர்கள்,

வேலை செய்வதற்கு சர்தாரணமான காலவரை ஏற்படும்பொழுது வருமானத்தில் குறைவு ஏற்படுமேயென்று கவலைப்படுகிருர்கள்.

அதிருஷ்டவசமாக முக்கியமான பிரச்னைகளைத் தீர்க்க நிர்வாகம் முன்கூடியே அநேக திட்டங்களைப் போட்டிருக்கிறது. ஜெர்மனி முறியடிக்கப்பட்டபின் படை கலைப்பு ஏற்படும் பொழுது போர்முனையிலுள்ளவர்கள் ஒழுங்குமுறையில் பொதுஜன வாழ்க்கைக்குத் திரும்பி விடுவார்கள். மேலும் அநேகர்கள் சமாதான வேலைகளான வீடுகட்டுதல் போன்றவைகளில் ஈடுபடுவார்கள். சேனையில் ஈடுபட்டுத் திரும்பியுள்ளவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் காயம்பட்டவர்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும் அநேக திட்டங்கள் நிறுவப்பட்டிருக் கின்றன. முதல் உலக யுத்தத்தின் முடிவில் முதலாளிகளின் தயவை நம்பியிருந்தது போலில்லாமல் இப்பொழுது நிர்வாகமே அங்க ஹீனர்களுக்கு அலுவல்களை உத்தரவாதம் செய்ய முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிருர்கள்.

ஊதிய கௌன்ஸில்களை அமைக்கவும், தன்னிச்சையாக ஊதிய ஒப்பந்தங்களை சட்ட பூர்வமாகக் கட்டாயப்படுத்தவும் மிஸ்டர் பேவின் கொண்டுவந்திருக்கும் மசோதா யுத்தத்துக்குப்பின் சமாதானத்துக்கு மாறுதலடையும் காலத்தில் மிகவும் உபயோக முள்ளதாக இருக்கும்.

சமாதான பொருளாதாரத்தைத் திருப்பி அமைக்க அத்யாவச்யமான ஏற்றுமதி வியாபாரத்துக்கு அஸ்திவாரம் போடவும் முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன.

வியாபாரச் சங்கத்தின் அமைப்பு முன்பு இருந்ததைவிட மிகவும் பரிஷ்காரமாகவும் திறமையுள்ளதாகவுமிருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் இப்பொழுது 7 மிலியனுக்குமேல் அதிகரித்துவிட்டது. வியாபாரச் சங்கத்தின் இயக்கம் தொழிலாளர்களின் தொழிற்சாலை களையும் தாண்டிப் பரவிவிட்டது. அவைகளுடன் தொழிற் பயிற்சியவர்களும், விஞ்ஞான சாஸ்திரிகளும் பராமரிவைஷ செய்யும் ஆபீஸர்களும் இணைக்கப்பட்டிருக்கிருர்கள். வியாபாரச் சங்க காங்கிரஸுடன் கடைசியாக பிரிடிஷ் விமானப் போக்குவரத்து விமானிகளின் சங்கமும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த சங்கம் யுத்தத்துக்குப்பிந்திய உலக சீர்திருத்தத்தில் பெரும் பங்கெடுத்துக்கொள்ளக்கூடும்.

தேசீய பொருளாதாரம் பூராவிலும் வியாபார சங்கத்தை ஆலோசனை செய்யும் முறை கையாளப்படுகிறது. வியாபாரச் சங்கங்கள், தொழிலாளிகள், நிர்வாக இலாகாக்களின் பிரதிநிதிகள் அடங்கிய மாகாண போர்டுகள், யுத்த முயற்சிக்கும் பொதுஜனங்களின் தேவைக் குறிய பொருள்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளை புனருத்தாரணம் செய்யவும் ஏற்றுமதி வியாபாரத்துக்குத் திட்டங்களை நிறுவவும் உபயோகப்படுத்தப்படுகின்றன. முதலாளிகளும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் அடங்கிய சுமாராக 5,000 கூட்டுறவு உற்பத்தி கமிட்டிகள் தொழிற்சாலைகளில் வேலை செய்துவருகின்றன.

இவ்விதமாக 1945-ம் வருஷத்தில் பிரிடிஷ் தொழிற்சாலைகள் யுத்த அவசியத்திற்கு ஒத்தாசை செய்வதுடன் சமாதானத்துக்குறிய வேலைகளையும் மேன்மையான அமைப்புடன் கவனிக்கவேண்டும். 1919-ல் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பவேண்டுமென்ற பரபரப்பினுல் தாத்காலிகமாக விலைவாசி உயர்வும் வியாபாரக்குறைவும் ஏற்பட்டது போலில்லாமல் இப்பொழுது பிரிடன் சிலாக்கியமான முறையில் தயாராக இருக்கிறது.

1945-ம் வருஷத்திலும் அதன்பிறகும் என்ன சம்பவிக்கக்கூடும்? முதலாவதாக, ஜப்பானுடன் நடத்தவேண்டிய போர் தேசீய ஐச்வர்யத்தின் பெரும்பாகத்தை ஈடுபடுத்தச் செய்துவிடும். மேலும் சமாதான முறைகளைக் கையாளுவது ஏற்பாடாக நடைபெறக்கூடும். இரண்டாவதாக, வியாபாரச் சங்க இயக்கம் சம்பந்தப்பட்டமட்டில் யுத்தத்தினின்றும் தோன்றியிருக்கும் தேசீய, சர்வதேசீய பிரச்னைகளைப்பற்றிய நூதனமான மனப்பான்மையில் நமது நம்பிக்கை நிலைபெற்றிருக்கிறது.

உத்தியோக சம்பந்தமாக நிர்வாகம் வெளியிட்டிருக்கும் அறிக்கை கொள்கையில் முக்கியமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பதை வெளிப்படுத்துகிறது. சென்றமேமாதத்தில் சர்வதேச தொழிலாளர் ஆபீஸினுல் ஆமோதிக்கப்பட் பிலடல்பியா சாஸனம் சர்வதேசங் களின் சம்பந்தங்களில் புதிய யுகம் ஏற்படுமென்ற நம்பிக்கையை வளர்ச்சிக்கிறது.

யுத்த சமயத்தில் தேசீயப் பொருளாதாரத்தில் பிரிடிஷ் வியாபாரச் சங்கம் பிரதான்ய மான ஸ்தானத்தை அடைந்ததுபோல் யுத்தத்துக்குப்பிந்திய வருஷங்களிலும் தன்னுடைய உயர்வான ஸ்தானத்தை நிலைநாட்டிவருமெனறு எதிர்பார்க்கப்படுகிறது. 1937-ம் வருஷத்தில் வியாபாரச் சங்க காங்கிரஸில் தலைமை வகித்தபொழுது ஆற்றிய சொற்பொழிவில் "வியாபாரச் சங்க இயக்கம் ஸமஸ்தானத்தின் ஒரு முக்கியபாகமாக ஆகிவிட்டது" என்று மிஸ்டர் எர்னஸ்ட் பெவின் சொன்னர். அந்த ஸ்தானத்தை அது பரிபாலிப்பதாகவும் உத்தேசிக்கிறது.



சமாதான மகாநாட்டில் பிரதிநிதித்வம் வேண்டுமென்றும் அது வற்புறுத்துகிறது. அதே மாதிரியாக உலக வியாபாரச் சங்க மகாநாட்டிலும் இந்த வேண்டுகோள் பலமாக வற்புறுத்தப்படும்.

தேசீய, சர்வதேசியக் கொள்கைகள், யுத்தத்தினுல் ஏற்பட்ட உற்பத்தி உலகத்தை அமைக்கும்பொழுது, பிரிடிஷ் தொழிற்சாலைகள் எதிர்காலத்தை சிறந்த நம்பிக்கையுடன் சமாளிக்கமுடியும்.

---

## ருஷ்யப் போரில் ரேடியோவின் பங்கு.

போரிஸ் ஹீமலெர், (டெயிலி டெலிகிராப்).

ருஷ்யர்கள் சமீபகாலத்தில் ஒலிபெருக்கியின் 20-வது ஆண்டு பூர்த்தியிழாவைக் கொண் டாடினுர்கள். ஒலிபெருக்கு என்பது பேபரில்லாத தூரத்தைப் பொருட்படுத்தாத ஒரு பத் திரிகை என்று லெனின் வியாக்யானம் செய்தார்.

ருஷ்யாவின் வெகு தூரத்திலுள்ள ஜனங்களின் மன உறுதியை நிலைநாட்டுவதற்கு ரேடியோமூலம் செய்யப்பட்ட ஒலிபெருக்குகள்தான் காரணமாகயிருந்தன. மாஸ்கோ, லெனின்கிராட், ஸ்வெர்ட்லொவ்ஸ்க், விளாடிவாஸ்டாக்கிலுள்ள முதன்மையான ரேடியோ நிலயங்களைத்தவிர அநேக ஆயிரக்கணக்கான மத்திய இடங்களிலும் ரேடியோ அமைப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

மாஸ்கோவிலிருந்து தினசரி 14 தடவை தகவல்கள் வெளியிடப்படுகின்றன. அயல் நாடுகளுக்கு 28 பாஷைகளில் ஒலிபெருக்கப்படுகிறது. ருஷ்யாவுக்குள்ளேயே 70 பாஷை களில் செய்திகள் பரப்பப்படுகின்றன.

ருஷ்யாவின் ஒலிபெருக்குகளை அடிக்கடிக் கேட்டுவரும் நான் ஒரு பிரசங்கத்தை மட்டும் நன்முய் ஞாபகம் வைத்திருக்கிறேன். மாஸ்கோவுக்கு எதிர்பால் வாசஸ்தலங்களை இழந்த குழந்தைகளுக்குப் பேசுவது. மாஸ்கோவிலிருந்து பனிகளால் மூடப்பட்ட காடுகளில் ஒளிந்துகொண்டிருக்கும் கொரில்லாப் படைகளுக்கும், மாஸ்கோ வரையில் ஏராளமான எதிரி களுக்குமுன் தீரத்துடன் பின்வாங்கி வந்த செஞ்சேனையிலுள்ள சுயநலம் கருதாத ருஷ்யர் களுக்கும் அது உத்தரவுகளை அனுப்பி வந்தது. சந்தத்வனி பின்வருமாறு சொல்லி வந்தது. "லெனின்கிராடிலிருந்தாலும், ஸ்டாலின்கிராடிலிருந்தாலும், கொரில்லாப்படைகளிருக்கும் இடத்திலிருந்தாலும்சரி, தைரியத்துடனிருங்கள். உங்களுக்காக பழிக்குப்பழி வாங்க நாங்கள் வந்துவிடுவோம்."

இவ்விதமாக ரேடியோமூலம் ஸ்வதந்தர ருஷ்யாவுக்கும், ஜெர்மன் ஆக்கிரமிப்பு ருஷ்யா வுக்கும், முற்றுகைக்குள்ளானதும், எதிரியால் சுற்றி வளைக்கப்பட்டதுமான, ஸ்மாலென்ஸ்க் குக்கு மேற்கு பக்கத்திலுள்ள கொரில்லாப்படை பிரதேசத்துக்கும் தொடர்பு ஏற்பட்டிருந் தது. ருஷ்யாவிலிருந்து நன்முக துணிக்கப்பட்டதும், தினசரி வெடிகுண்டுகளாலும் பீரங்கி குண்டுகளாலும் நொருக்கப்பட்ட போக்குவரத்துகள் உள்ளதுமான லெனின்கிராட்டில் விசேஷ ரேடியோ டெலிபோன் நிலயங்கள் உபயோகப்படுத்தப்பட்டன.

யுத்த காலத்தில் ரேடியோவின் முக்கியத்துவத்தைப்பற்றி மாஸ்கோ சந்தேகப்படவில்லை. யுத்தத்தில் நெருக்கடி ஏற்பட்ட ஆரம்பகாலத்தில் கொரில்லாப் படைகளுக்கு விசேஷ அறிக் கைகளும், தினசரி இரண்டு தடவை செய்தி ஒலிபரப்பும். கடைசியாக ஒரு நிகழ்ச்சியும் வெளியிடப்பட்டன. கடைசி நிகழ்ச்சிக்குப் பதிலாக இப்பொழுது மார்ஷல் ஸ்டாலினின் வெற்றிச் செய்திகள் ஒலிபெருக்கப்படுகின்றன. அதன்பயனுக தேசாபிமானம் தேசம் பூரா வும் பரவிற்று. அறுவடை செய்யும்பொழுது ருஷ்யர்கள் அதன் செழிமையைப்பற்றி கீதம் பாடி வந்தார்கள்.

ஸ்டாலின்கிராடிலிருந்தும், ஆர்க்டிக்கிலுள்ள கப்பல்களிலிருந்தும், காடுகளிலுள்ள கொரில்லாப்படைகளிடமிருந்தும் வரும் அந்த ரிபோர்டுகளை மாஸ்கோ ஒலிபெருக்கிவந்தது. அந்த கீதத்தையும் அதன் வார்த்தையையும் கேட்டவர்கள் ருஷ்ய தேசம் பூராவும் போர் புரியத் தொடங்கிவிட்டதென்றும், 1941-ம் வருஷத்தில் ஹிட்லரும் அவனுடைய சேனையும் தொடங்கிய போரைத் தடுக்க டால்ஸ்டாயின் ஜனங்கள் பூராவும் ஈடுபட்டுவிட்டார்கள் என்ப தையும் அது குறிப்பிடுகிறது.

---

## யுத்தத்துக்குப்பின் ஏற்படும் மாறுதலின் பொருளாதாரம்.

### உலக வியாபாரத்தின் புனருத்தாரணம்.

(டெயிலி ஹெரால்டின் ராஜதந்திர நிருபரான W. N. யூயர்).

யுத்தத்துக்குப் பிந்திய உலக பிரச்னைகளில் மிகவும் மகத்தான, சிரமசாத்தியமான பிரச்னை யுத்தத்தினுல் ஏற்பட்டிருக்கும் அநேக சீர்கேடுகளைத் திருத்தியமைப்பதுதான். ஒவ்வொரு நாளும் இந்த உண்மை தெளிவுபடுகிறது.

போர் நடைபெற்ற இடங்களிலும், ஜெர்மானியர்கள் ஆக்கிரமித்து மனிதர்களையும், சாமான்களையும் கொள்ளையடித்து இறுதியில் அழித்துவிட்ட பிரதேசங்களிலும் நிலைமை இன்னும் அதிகமாக சீர்கெட்டிருக்கிறது.

இந்த அழிவை பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும், விடுதலைபெற்ற ஒவ்வொரு நாட்டிலும் காணலாம். பொருள் நஷ்டத்துடன் அந்த அழிவு நின்றுவிடவில்லை. ஜன சமூக அமைப்பும் பூராவாக சீர் கெட்டுப்போய்விட்டது. ஆங்காங்குள்ள பழமையான ராஜ்ய நிர்வாக திட்டங்களும் அழிவுபட்டுவிட்டன. ஆகையால் புதிய அமைப்புகளை துரிதமாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

சாதாரணமான எல்லா பொருளாதார திட்டங்களும் மறைந்துவிட்டன. அவைகளும் திருப்பியமைக்கப்படவேண்டும். மிலியன்கணக்கான ஆடவர்கள் ஜெர்மனிக்கு யுத்தக் கைதிகளாகவோ அல்லது அடிமை வேலைக்காரர்களாகவோ கொண்டுபோகப் பட்டிருக்கிறார்கள். ரோமன் சாம்ராஜ்யத்தில் நாகரீகம் படைக்காதவர்கள் படையெடுத்த காலத்திலிருந்து இப்பொழுது ஏற்பட்டதுபோல் ஐரோப்பாவில் அழிவும் சாதாரண வாழ்க்கையில் சீர்கேடும் ஏற்படவில்லை. இப்பொழுது அழிவு துரிதமாகவும், பரிஷ்காரமாகவும் அநேக ஜன சமூகத்தில் ஏற்பட்டுவிட்டது.

இந்த பிராந்தியங்களில் ஏற்பட்ட சிதைவை மட்டும் கவனித்தால் மட்டும் உலகப் பிரச்னையின் முக்கியத்துவம் நமக்குத் தெளிவாகப் புலப்பட்டுவிடாது. யுத்த சீர்கேடு உலகமளாவியதென்பதை நாம் உணரவேண்டும். அதிருஷ்டம் பெற்ற அநேக பிராந்தியங்களுமிருக்கின்றன. யுத்தத்தின் சிரமங்களை அவைகள் அனுபவிக்கவில்லை. அங்கு வெடிகுண்டுகளின் நாசமும் பீரங்கி சப்தமும் கேட்கப்படவில்லை. அந்நாடுகளில் சாதாரணமான ஜன சமூக பொருளாதார வாழ்க்கை ஒரு சிறிதுதான் யுத்த மூலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் சாதாரண ஜனங்களின் வாழ்க்கை முறையில் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை.

ஆனால் அவைகளும் உலக சீர்கேட்டினால் ஒருவாறு பாதிக்கப்படும். உலக சீர்திருத்தத்திலும் அவைகள் ஈடுபடவேண்டியிருக்கும். இது தனிப்பட்ட நாட்டின் பிரச்னையல்ல. உலகமளாவிய பிரச்னையாகும். இந்தப் பிரச்னையின் மகாத்மியம் பிரிடனில் தெளிவாகக் காணப்படுகிறது. உண்மையாக பிரிடன் தான் யுத்தத்தினால் மிகவும் சீர்கேடடைந்த நாடாகும். 5 லக்ஷம் வீடுகள் அழிக்கப்பட்டுவிட்டன, அல்லது வாசத்திற்கு லாயக்கில்லாமல் செய்யப்பட்டுவிட்டன. 4 மிலியன் வீடுகள் பழுதுபட்டுவிட்டன. 11,600,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன.

இதுதான் பொருள் நஷ்டம். பிரிடனின் பொருளாதார வாழ்க்கையிலும் சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது. பூர்ணமான யுத்தத்தை நடத்த தேசமக்கள் படைகளில் தன்னிச்சையாகவே சேர்ந்துகொண்டார்கள்.

பிரிடனின் உற்பத்தி சக்தி நான்கு வருடங்களாக சாதாரண உற்பத்தி முறையிலிருந்து யுத்த தளவாட உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. ஆகையால் தொழிற்சாலையிலீடுபட்டிருக்கும் வேலைக்காரர்களில் 76 சதவிகிதம் அரசாங்க வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். 20 சதவிகிதம்தான் பொதுஜன சர்பராவை உற்பத்தி செய்து வருகிறார்கள். நான்கு சதவிகிதம்தான் ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தியாகம் என்ற முறையில் அதன் முக்கியத்துவம் மிகுதியானதென்று சொல்லத் தேவையில்லை. அதன் மூலம் சாதாரணமான வாழ்க்கை முறை எவ்வளவு தூரம் குறைந்துவிட்டதென்பதும் அதை பொது மக்கள் தாராகவும் சந்தோஷத்துடனும் ஏற்றுக்கொண்டார்களென்பதும் சொல்லத் தேவையில்லை. நம்முடைய விஷயம் அது அல்ல.

நான் என்ன சொல்லுகிறேன் என்றால் யுத்த காலத்தில் ஏற்பட்ட மாறுதலுக்குப் பின் யுத்தம் முடிந்தபின் மற்றொரு மகத்தான மாறுதல் ஏற்படும். கைத்தொழில்களும் உற்பத்தி முறைகளும் சாதாரண வாழ்க்கைக்குரிய தேவைகளை வழங்க முன்னிருந்த ஸ்திதிக்குத் திருத்தியமைக்கப்படவேண்டும்.

இந்த மாறுதல் பிரிடனை மட்டுமில்லாமல் உலகம் பூராவையும் கண்டிப்பாகப் பாதிக்கும். ஏனெனில் பிரிடனின் பொருளாதாரம் மற்றெந்த நாடுகளையும்விட உலக பொருளாதாரத்தில் உறுதியாக இணைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தேசத்தின் பொருளாதார வாழ்க்கைக்கும் இறக்குமதி, ஏற்றுமதி என்ற பிரிடனின் கடல் தாண்டிய வியாபாரமும் அதிக முக்கியத்துவமுள்ளது.

இந்த வியாபாரமும் நாம் இதுவரையில் சரியாக மதிக்கக்கூடாதவண்ணம் சீர்கேடடைந்திருக்கிறது.

யுத்த முயற்சியில் மனித பலத்தை ஈடுபடுத்த வேண்டுமென்ற திட்டத்தின் காரணமாக பிரிடனின் உற்பத்தி யுத்தத்துக்கு முன்னிருந்த 471 மிலியன் பவுன்கள் பெறுமானத்தி



லிருந்து 232 மிலியன் பவுன்களுக்குக் குறைந்துவிட்டது. இன்று விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. ஏற்றுமதிப் பொருள் அளவும் மூன்றில் ஒருபாகம் குறைந்துவிட்டது.

இது மாத்திரமல்ல. சாமான்களின் தரத்திலும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. கப்பல்களை மீதப்படுத்துவதற்காக யுத்த தொழிற்சாலைகளுக்கு சாமான்களை வழங்குவதற்காகவும் இலாக இறக்குமதிப் பொருள்கள் குறைக்கப்பட்டுவிட்டன. உதாரணமாக, இரும்பு, எஃகு, உற்பத்திப் பொருள்கள் வருஷத்தில் 2 மிலியன்களாக இருந்தது போக 134,000 டன்களுக்குக் குறைக்கப்பட்டுவிட்டன.

ஜனத்தொகையின் மற்றொரு பக்கத்தில் பிரிடிஷ் இறக்குமதியும் குறைந்துவிட்டது. உணவுப் பொருள்கள் ஒரு வருஷத்தில் 22 மிலியன் டன்களிலிருந்து 11 மிலியனுக்குக் கீழ் குறைந்துவிட்டது. இயற்கைப் பொருள்கள் 26 மிலியன் டன்களிலிருந்து 12 மிலியன் டன்களுக்குக் குறைவுபட்டுவிட்டன.

பிரிடனின் மகத்தான யுத்த முயற்சியில் பிரிடிஷ் மக்கள்தான் அபாரமான தியாகங்களைச் செய்திருக்கிறார்களென்பதில்லை. நான்கு வருடங்களில் பொருளாதார முறையில் உலகத்திலிருந்து ஐரோப்பா துணிக்கப்பட்டிருந்தது போல அதற்கு ஒப்பிடக்கூடிய முறையில் உலக வியாபாரமும் உலக பொருளாதாரமும் தவிர்க்கக்கூடாத முறையிலும் அவசியமாகவும் யுத்த முயற்சியினால் சீர்கெட்டுப்போய்விட்டது.

பிரிடனின் உலக வியாபாரத்தையும் ஐரோப்பாவின் உலக வியாபாரத்தையும் திருத்தியமைப்பதென்னும் பிரச்னைகள் பிரிடனையும், ஐரோப்பிய நாடுகளையும் மட்டும் பாதிக்கக்கூடியவையல்ல. அவைகள் சிறிதளவிலோ பெரிய அளவிலோ உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தின் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றன. வேர்ஸ்பியர் கணித்திருக்கும் தயை என்னும் குணத்தைப்போல வியாபாரமும் அதில் ஈடுபட்ட இருதரப்பாருக்கும் லாபகரமாக இருக்கும்.

ஆகையால் உலகத்தின் புதிய க்ஷேமத்திற்கு உலக வியாபாரத்தை மறுபடியும் அமைப்பது அத்யாவசியமான நடவடிக்கையாகும். பிரசித்திபெற்ற ஒரு ஆசிரியர் கொள்கைப்படி "க்ஷேமம் என்பது பிரித்துச் சொல்லக்கூடியதில்லை." இந்த உண்மையை 1930-ம் வருஷத்திலும் அதற்குப் பிந்திய வருஷங்களிலும் நமக்கு ஏற்பட்ட கடுமையான அனுபவத்திலிருந்து நாம் நன்கு அறிந்துகொண்டிருக்கவேண்டும்.

---

## ஜப்பானியர்கள் திடீரென்று தாக்கப்பட்டார்கள்.

### மணிலாவுக்கான போர்.

(டைம்ஸ் பத்திரிகையின் மெல்போர்ன் நிருபர்).

மணிலாவுக்குப் போகும் ரஸ்தாவைத் தற்காப்பு செய்வதில் ஜப்பான் வெளிப்படுத்தியிருக்கும் பலஹீனத்தை நோக்கினால் அந்த நகரம் கூடிய சீக்கிரம் விழுந்துவிடுமென்பதில் ஒருவரும் ஆச்சரியப்படக்கூடியதில்லை. அமெரிக்கர்கள் படிப்படியான முறையில் முன்னேறுவதற்கு இப்பொழுது சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இதுவரையில் அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க ஒரு நடவடிக்கையும் காணப்படவில்லை. மணிலாவை கடும்போரை நடத்தாமல் பிடித்துவிடலாமென்று எதிர் பார்ப்பது பேராசையாகும். ஆகிலும் அதை ஆக்கிரமிப்பது தாமதப்படாது என்று அநேக உற்று நோக்காளர்கள் நினைக்கிறார்கள்.

ஜப்பானியர்களின் சக்தியைப்பற்றி ஜெனரல் மாக் ஆர்தரைவிட வேறு எவரும் சரியாக மதிப்புப் போட முடியாது. இந்த பிரதேசத்தில் ஏராளமான ஜப்பானியர்களை எதிர்த்து மூன்று வருடங்களுக்கு முன் அவர் போரை நடத்தினார். முதல்தரமான அறிவுடன் அவர் இப்பொழுது போரை நடத்திவருகிறார். அவருக்கு நல்ல பயிற்சிபெற்றுள்ள துருப்புகளும், பலமான விமானப் படையும் சமீப ஸமுத்திரங்களில் தேவைக்குமேலான கடற்படை பலமும் உதவி செய்து வருகின்றன. கடற்படை அவருக்கு உதவி செய்வதுடன் ஜப்பான் பிலிப்பைன்ஸுக்கு வராமலும் கடல் முற்றுகையும் செய்து வருகிறது.

சொற்ப நஷ்டத்துடன் முன்னேறும் வாசலை ஏற்படுத்தி ஆக்னோ நதியையும் தாண்டிய மிகுதியான சௌகரியத்தை, அவர் துரிதமாகப் பயன் படுத்திக்கொள்ளாவிட்டால் அது விந்தையாகத்தானிருக்கும். ஜப்பானிய ஜெனரல் யமாஷிடா மலேயாவிலிருந்து சிங்கப்பூருக்குத் தாண்டின அவகாசத்தைவிட துரிதமாக மாக்ஆர்தர் மணிலாவுக்கு முன்னேறக்கூடும்.

நாம் ஆக்கிரமித்த நகரங்களில் மணிலாவிலிருந்த போய்மை நிர்வாகம் முன்னேறும் வாசலுக்கு வடகிழக்கில் மலைகளில் காணப்படும் வேனிற்கால தலைநகரமான பாகியோவுக்குக்

கொண்டுபோகப்பட்டு விட்டதென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். படையெடுக்கும் படைகள் பாடார்காஸிலும் மணிலாவுக்குத் தெற்கிலுள்ள பிரதேசத்திலும் இறங்குவார்களென்று எண்ணங் கொண்டு ஜப்பான் அவற்றைப் பலப்படுத்தியது. அவர்கள் முன்னேறுவதற்கு உபயோகித்த மார்க்கத்தை ஜப்பான் அலக்ஷியம் செய்துவிட்டது. மணிலாவைத் தாண்டிச் சென்றுவிடக்கூடுமென்பதை அவர்கள் மதித்துப் பார்க்கவில்லை. அவர்கள் தலைநகரத்துக்கு வடக்கில் மூன்று அரண்களைக் கட்டியிருப்பதாகத் தெரியவருகிறது. அவைகளின் உதவி கொண்டு எதிரி பாகியோவுக்கும் வடக்கு லூஸானுக்கும் பின்வாங்கிவிடக்கூடும்.

எதிரி அபாயத்துக்குட்பட்டு உபயோகித்துவரும் எல்லா மார்க்கங்களிலும் அமெரிக்க விமானப்படை சதாகாலமும் ரோந்து செய்து வருகிறது. இந்த ரஸ்தாக்கள் மூலமாக சமான்களை அனுப்ப எதிரி கால் நடைகள் பூட்டிய வண்டிகளை உபயோகித்து வருகிறானென்று சொல்லப்படுகிறது. இது உண்மையென்றால் எதிரிக்கு போக்குவரவு சாதனங்களும் எண்ணெய்யும் குறைந்து விட்டதென்று தோன்றும். ஜப்பானியர்களிடம் கவசம் பூண்ட சில வாகனங்கள் இருக்கின்றன. சில நாட்களுக்குமுன் நமது விமானங்கள் ரஸ்தாக்களில் சென்ற ஜப்பானிய டாங்கிகளை நொருக்கியிருக்கின்றன. அமெரிக்கர்கள் முன்னேறும் பொழுது சிறிய டாங்குகளையும் சந்தித்து அவைகளையும் அழித்திருக்கிறார்கள். அமெரிக்கர்கள் தெற்கு நோக்கியும் மேற்குப் பக்கத்திலும் துரிதமாக முன்னேறி வருகிறார்கள். ஆனால் கிழக்குப் பக்கத்தில் அவர்களுக்கு பலமான எதிர்ப்பு காணப்படுகிறது.

---

## சீனாவுக்குப்போகும் தரைமார்க்கத்தின் முதல் கட்டம்.

### லேடோ—மிட்கினா ரஸ்தாவின் பூர்த்தி.

(டைம்ஸ் பத்திரிகை).

அஸ்ஸாமின் வடகிழக்குக் கோடியிலுள்ள லேடோவிலிருந்து மிட்கினாவுக்கு ஒரு ரஸ்தா அமைக்கப்பட்டு பூர்த்தியானதிலிருந்து சைனாவுக்குப் போகும் தரை மார்க்கமான ரஸ்தாவை மறுபடியும் திறந்துவிடுவதற்கு மிகவும் முக்கியத்துவமுள்ள முதல் கட்டம் முடிந்து விட்டது என்று சொல்லலாம்.

அடுத்த கட்டம் இதைவிட சுலபமானதாக இருக்கும். மிட்கினா பாமோ ரஸ்தா இப்பொழுது எல்லா காலங்களிலும் உபயோகிக்கக்கூடிய ரஸ்தாவாக அமைக்கப்படும். ஆகிலும் இந்த இடத்தில் ஹுகாங் பள்ளத்தாக்கில் காணப்பட்ட மகத்தான இடையூறுகள் இல்லை. பாமோவைத்தாண்டி நம்காமுக்கு இதேவிதமாகத் திருத்தியமைக்கக்கூடிய ஒரு ரஸ்தா இருக்கிறது. அது இப்பொழுது ஜெனரல் சுல்தானின் வடக்குப் போர்முனை கமாண்டைச் சேர்ந்த சீனப்படைகள் வசமிருந்துவருகிறது. லாஷியோவிலிருந்து சுங்கிங்குக்குச் செல்லும் பர்மா ரஸ்தாவில் ஆடிங்கிலுள்ள படைகளுக்கும் சீனத் துருப்புகளுக்கும் இடையே 12 மைல்களுக்குக் குறைவாகத்தான் வித்தியாசமிருந்து வருகிறது. ஆடிங்கை யூனானிலிருந்துவந்த சீனத் துருப்புகள் பிடித்து, இழந்து, மறுபடியும் சென்ற மாதத்தில் திரும்பிப் பிடித்துவிட்டார்கள்.

லேடோ ரஸ்தாவின் ராணுவ முக்கியத்துவத்தை அதிகமாக மதித்துவிடுவதற்கில்லை. லாஷியோவிலிருந்து பர்மா ரஸ்தா வழியாக ஜப்பானியர்கள் குறுக்கிடுவதற்குமுன் சென்றதைவிட ஹிமாலய மலையைத்தாண்டி ஆகாய மூலமாக சைனாவுக்கு அதிக ஸப்ளைகளை அனுப்பக்கூடுமென்று கொஞ்ச காலத்துக்குமுன் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னார். ஆகிலும் அதன் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும். அஸ்ஸாமிலிருந்து சைனாவுக்கு மோட்டார் லாரிகள் மூலம் நேசதேசத் துருப்புகள் செல்லக்கூடுமாகையால் அவைகள் அங்கு தலைகாட்டும்பொழுது சீனர்களின் எதிர்ப்புக்கு தைரியமும் ஊக்கமும் உண்டாகும். இதுவரையில் ஆகாயமூலம் ஸப்ளைகளைப் பெற்றுவந்த ஜெனரல் சுல்தானின் படைகளுக்கு இதன்மூலம் அதிக சௌகரியம் ஏற்படும்.

ஆகிலும் நேசபக்ஷத்தாரின் நடவடிக்கைக்கு வடக்கு பர்மாவில் லேடோ ரஸ்தா மட்டும் உதவியளிக்கவில்லை. மற்றொரு ரஸ்தாவைப்பற்றி அதிக விவரங்கள் வெளிவரவில்லை. கல்கத்தாவிலிருந்து வடக்கு பர்மாப் போர்முனைக்கு 1,800 மைல்கள் தூரம் குழாய்கள் மூலம் சகலவிதமான எண்ணெயும் கொண்டுபோகப்படுகிறது. லேடோ ரஸ்தாவைப் போல அதிலும் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது. இந்தக் குழாய்கள் 1,800 மைல்கள் தூரம் செல்லுகின்றன. அவைகள் வங்காளத்தின் சமவெளிகள் வழியாகவும் வடக்கு பர்மாவிலுள்ள மலைகள், காடுகள் வழியாகவும் செல்லுகின்றன. 250-ல் ஒரு கஜ தூரமாவது குழாய்கள் நதிகள், பள்ளத்தாக்குகள் கணவாய்கள் வழியாகச் செல்லுகின்றன.



## இந்திய மக்களின் பொருளாதார அபிவிருத்தி.

### யுத்தத்துக்குப் பிந்திய திட்டத்தின் லக்ஷியம்.

(டைம்ஸ் பத்திரிகை).

வைஸ்ராயின் நிர்வாக சபையின் உலக சீர்திருத்த கமிட்டியின் இரண்டாவது ரிபோர்ட்டை பிரசுரித்தபின் திட்டம், அபிவிருத்தி இலாகா மெம்பரின் சுற்றுப் பிரயாணத்தின் விளைவுகளின் சுருக்கத்தையும் இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கிறார்கள்.

மத்திய நிர்வாகத்தினுடையவும், மாகாண நிர்வாகங்களினுடையவும் திட்டங்களை ஒன்றுபடுத்தி அமைக்கும் உத்தேசத்துடன் ஸர் அர்தேஷீர் டாலால் பஞ்சாப், பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், வங்காளம், பீகார் முதலிய இடங்களுக்கு விஜயம் செய்தார். முதல் கட்டமான ஐந்து வருட திட்டத்தை மத்திய நிர்வாகமும் மாகாணங்களும் ஒப்புக்கொண்டுவிட்டன. இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாகாணங்கள் தங்கள் மாகாணங்களிலுள்ள ஐச்வர்யங்களைத் திரட்டவேண்டும். மத்திய நிர்வாகம் அதன் திட்டத்துக்குத் தேவையான பொருள்களை சேமித்தபின் மாகாணங்களுக்கு ஜனத்தொகையின் பேரில் தேவையான உதவியளிக்கும் ஐக்கிய மாகாண, பம்பாய் திட்டங்கள் இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்பட்டு விட்டன. மற்ற மாகாணங்களும் ஜனவரி மாதத்திற்குள்ளாக திட்டங்களைத் தயாரித்துவிடுவார்கள்.

இந்திய ஸமஸ்தானங்களின் பிரச்னை பாக்கியிருக்கிறது, நாட்டிற்குத் தேவையான விரிவான திட்டத்தை ஏற்படுத்துவதில் இந்தியா கவர்ன்மெண்டுடன் ஒத்துழைப்பதாக தனிப்பட்ட அநேக நிர்வாகங்கள் சொல்லிவிட்டன. இது சாத்யமாகுமுன் கோசம், அரசியல் சம்பந்தமாக அநேக பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டுமென்று அதிகார வர்க்கத்தார்கள் சொல்லிவருகிறார்கள். அந்த பிரச்னைகளும் தாமதமன்னியில் தீர்க்கப்படவேண்டும்.

பொதுமக்களின் க்ஷேமத்தைக் கோறி உற்பத்தியை அதிகரிப்பதும், வருமானத்தை அதிகப்படுத்துவதும், வாழ்க்கை முறையை உயர்த்துவதும்தான் மத்திய நிர்வாகத்தின் முக்கியமான நோக்கம். இது நிறைபெறவேண்டுமென்றால் கைத்தொழில் அபிவிருத்தி அதிகரிக்கவேண்டும். அதற்கு அனுகுணமாக தொழிற்சாலையின் நிலைமைக்குத் தக்கவாறு நிர்வாகம் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாள வேண்டும். வெடி மருந்து உற்பத்தி, பொதுஜன சர்பராக்கள், மூலதாரப் பொருள்கள், தாவரப் பொருள் ஏகபோகம் முதலிய தொழிற்கள் நிர்வாகத்தினால் நடத்தப்படவேண்டும் அல்லது அதன் கண்காணிப்புக்குட்பட்டிருக்க வேண்டும். மற்றத் தொழிற்களில் தனிப்பட்டவர்களின் துணிவுக்குப் பூரணமான வசதியளிக்கப்படும். சுங்கவரிச் சங்கம் தாராளமான அளவில் ரக்ஷணையளிக்கும்பொழுது இந்தியாவுக்கும் மேல்நாடுகளுக்குமுள்ள பொருளாதார சம்பந்தங்கள் பிரிடனிலும் அமெரிக்காவிலுமுள்ள ல்யாசன் ஆபீஸ்கள் மூலமும் அந்நாடுகளில் இந்தியத் தொழிலாளர்களுக்கு கைத்தொழில் பயிற்சி அளிப்பதின் மூலமாகவும் பலப்படுத்தப்படும்.

இந்த திட்டத்தைப்பற்றிக் குறைகூறும், இந்தியர்கள் இதனால் பெரிய தொழில்களுக்கு ஆதரவளிக்கப் படுகிறதென்றும் தனிப்பட்டவர்களுக்கு அதிக லாபம் கிடைத்துவிடுமென்றும் சொல்லிவருகிறார்கள். இது சரியான அபிப்ராயமில்லை. பொதுஜனங்களின் பொருள்களை அபிவிருத்தியைக் கோறுவதுதான் அந்த திட்டத்தின் லக்ஷ்யமென்றிருக்கும் பொழுது, தேசிய முயற்சிக்காக நாட்டின் கோசம், வியாபாரம், தொழிற்சாலைகள் எல்லாவற்றினுடையவும் ஒத்துழைப்பெற இந்தியா கவர்ன்மெண்டார் முயற்சி செய்துவருகிறார்கள். பொதுஜன அபிவிருத்திக்குறியதாக இருக்கிறதா என்பதைப் பொருத்துத்தான் நாம் ஒவ்வொரு திட்டத்தையும் மதித்துப் பார்க்கவேண்டும். இதிலிருந்து பொதுமக்களின் ஒத்துழைப்பை நாம் புறக்கணித்துவிட்டோமென்று நினைத்துவிடக்கூடாது.

சாதாரணமான கிராமவாசியின் உத்சாகத்தைக் கிளப்பி அதை போஷித்துவர நல்ல முறையில் போதனை செய்ய தேசம் பூராவுமளாவிய அமைப்பு அவசியமென்று உலக சீர்திருத்த கமிட்டி அதன் இரண்டாவது ரிபோர்ட்டில் சிபார்சு செய்திருக்கிறது. கிழக்கு இந்தியா சங்கத்தில் சொற்பொழியாற்றியபொழுது பிரிகேடியர் பிரையன் சுட்டிக்காட்டியது போல இதற்கு உபயோகமுள்ள ஏஜண்டுகளை போர்முனையிலிருந்து கலைக்கப்பட்டுத் திரும்பி வரும் ஸோல்ஜர்களால் அமைத்துவிடலாம். அவர்களுக்கு சேனையில் இருக்கும்பொழுது சிறிது கல்வியும், விரிவான நோக்கமும், சிலாக்கியமான உணவுப்பொருள், தேக ஆரோக்கியம், துணிவு முதலிய குணங்களை வளர்ச்சிக்கவேண்டுமென்ற ஆவலும் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்குச் சிறிதளவு பயிற்சி அளிக்கப்பட்டால் அவர்கள் கிராம அபிவிருத்திக்கு லாயக்கான உள்நாட்டு இயக்கத்திற்குத் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள். இந்த திட்டத்தை மேற்கொண்டால் சேனையில் கற்றுக்கொடுப்பதுபோல - தனிப்பட்டவர்கள் துணிவு, ஒத்துழைப்பு மூலம் கூட்டுறவு என்ற கொள்கைகளில் இந்தியப் பொதுமக்களுக்கு வெகு சீக்கிரத்தில் கல்வியறிவு ஏற்பட்டுவிடும். நமது திட்டம் நிறைவேறவேண்டுமானால் இவ்விதமான உணர்ச்சிதான் இந்தியப் பொதுமக்களிடையே பரவவேண்டும்.

### தஞ்சாவூர் உபரி உதவி ரிக்ரூட்டிங் ஆபீஸரான சுபதார் G. லோகநாதனின் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிக் குறிப்பு, 1945-ம் ஞு பிப்ரவரி மாதம்.

| | | | |
|---|---|---|---|
| 13—2—45. | புதுக்கோட்டைக்கு விஜயம், ரிக்ரூட்மெண்ட், தங்குதல். | | |
| 14—2—45. | ஆலங்குடிக்கு விஜயம், | Do. | புதுக்கோட்டைக்குத் திரும்புவது. |
| 15—2—45. | அரந்தாங்கிக்கு விஜயம், | Do. | தங்குதல். |
| 16—2—45. | புதுக்கோட்டைக்கு விஜயம், | Do. | தங்குதல். |
| 17—2—45. | அன்னவாசலுக்கு விஜயம், | Do. | புதுக்கோட்டைக்குத் திரும்புவது. |
| 18—2—45. | பொன்னமராவதிக்கு விஜயம், | Do. | Do. |
| 19—2—45. | தஞ்சாவூருக்குப் போவது. | | |


## 'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0 ; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0 ; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில்
முதல் காபிக்கு ரூ. 0—4—3
அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணு.

காபிகளுக்குமுந்துங்கள்! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம் :—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).


### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

#### பிரஸங்கம் 234. (2-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3- 2-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 7- 2-45 | பெருமாநாடு | ... மாலை | 7.00 |
| 4- 2-45 | சூரக்காடு | ... ,, | 7.00 | ,, | புல்வயல் | ... ,, | 7.30 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 | 8- 2-45 | வானரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| 5- 2-45 | தென்னதிரயன்பட்டி | ... ,, | 7.00 | ,, | எம்பல் | ... ,, | 7.30 |
| ,, | விசலூர் | ... ,, | 7.30 | 9- 2-45 | விராலிமலை | ... ,, | 7.00 |
| 6- 2-45 | மலையூர் | ... ,, | 7.00 | ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 | | | | |

#### பிரஸங்கம் 235 (3-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10- 2-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 14- 2-45 | வடவாளம் | ... மாலை | 7.00 |
| 11- 2-45 | கீரப்பழனி | ... ,, | 7.00 | ,, | சம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 |
| ,, | ஆலூர் | ... ,, | 7.30 | 15- 2-45 | கச்சாத்தப்பட்டி | ... ,, | 7.00 |
| 12- 2-45 | புத்தாம்பூர் | ... ,, | 7.00 | ,, | விராச்சிலை | ... ,, | 7.30 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, | 7.30 | 16- 2-45 | நல்லூர் | ... ,, | 7.00 |
| 13- 2-45 | நார்த்தாமலை | ... ,, | 7.00 | ,, | மாத்தூர் | ... ,, | 7.30 |
| ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 | | | | |

#### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 3—2—45 | வெட்டம்விடுதி. | 13—2—45 | வடகாடு. |
| 4—2—45 | எம்பல். | 15—2—45 | கீழாநிலை. |
| 11—2—45 | கல்குடி. | 16—2—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—4-2-45.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்,

பிரசுரம்] 1945-ம் ஞு பிப்ரவரி மீ 10உ [ந. 235


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXXXV.

## ஜெர்மனி ஏன் இன்னும் போரை நடத்துகிறது?

(எமில் லட்விக்).

(லண்டனில் வெளியாகும் ஸண்டே கிராபிக் பத்திரிகையின் கட்டுரையின் சுருக்கம்.)

இந்த யுத்தத்தில் பொருளாதார வசதிகளை அதிகமாக கவனித்து வருகிறார்களேயல்லாது போர்முனையிலுள்ளவர்களின் மனோ உணர்ச்சியைச் சிறிதும் பொருட்படுத்துவதில்லை. 1925-ம் வருஷத்தில் போர்படைகளின் கியாதிபெற்ற மாஜி ஜெனரல்களை யுத்த முடிவை நிர்த்தாரணம் செய்யக்கூடியது முஸ்தீப்புகளுமா, ஸப்ளைகளுமா அல்லது போர்வீரர்களா என்று கேட்டேன். பிரெஞ்சு மார்ஷலான பிடேனும், ஜெர்மன் ஜெனரலான வான்சீக்டும் ஸோல்ஜரின் மன உறுதிதான் முக்கியமானதென்று ஒரேவிதமாக பதிலுரைத்தார்கள்.

இந்த யுத்தத்தில் ஜெர்மனியினுடைய அல்லது பிரிடிஷ் அமெரிக்க கௌரவம் வெற்றிபெறவேண்டும். ஆங்கிலேயர்கள் விளையாடப் பிரியப்படுகிறார்கள். ஜெர்மானியர்களுக்கு அவ்வித ஆசை கிடையாது. இங்கிலாந்தில் விளையாட்டில் தேசம் பூராவும் ஈடுபடும். ஜெர்மானியர் அவ்விதம் ஈடுபடுவதில்லை. ஏசுநாதரின் பத்துக் கட்டளைகளைப்போல் நியாயம் என்ற கொள்கையும் பிரிடனில் வேறூன்றி இருக்கிறது. மேலும் இரண்டிலும் பிறருக்கு சலுகை காட்டுவதென்ற எண்ணம் குடிகொண்டிருக்கிறது. பிரிடனிடம் தனிப்பட்டவர்களுக்குக் கௌரவம் உண்டு என்ற எண்ணமிருக்கிறது. ஜெர்மனியிடம் இது பொதுப்படையாக கூட்டாக உள்ளது. ஜெர்மனியில் கௌரவம் அதிகார வர்க்கத்தாருடன் முடிவடைந்துவிடுகிறது. பொதுஜன வாழ்கையின் எல்லா அம்சங்களிலும் அதிகாரம்தான் கையோங்கி நிற்கிறது.

ஜெர்மனியின் சமூக அமைப்பில் ஒருவர் மற்றொருவருக்கு ஆதாரமென்றும் அவர் பிறரை நம்பியிருக்கிறாரென்றும் அறிந்துகொள்ளவேண்டும். மேலதிகாரியின் பளுவைத் தாங்குவதற்காக கீழே உள்ள ஒரு அதிகாரி அவருக்குக்கீழாக உள்ள அதிகாரியிடம் தன்னுடைய வருத்தத்திற்குப் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். இதுதான் ஜெர்மனியின் நிர்வாக அமைப்பின் தோற்றத்திற்குத் திறவுகோல் போன்றது.

தனிப்பட்டவரில்லாமல் நிர்வாகம் தாக்கப்பட்டால் இரு நாடுகளிலும் வெவ்வேறு விதமான உணர்ச்சி உண்டாகும். சமாதான காலத்தில் ஆங்கிலேயர்களில் சிலர் நிர்வாகத்தை ஆதரித்தும், சிலர் எதிர்த்தும் விவாதம் செய்துவந்தார்கள். ஆனால் ஸ்தாபனம் என்ற முறையில். ஸமஸ்தானத்தையும் பிரதம மந்திரியின் கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டுமென்று ஒருவருக்கும் தோன்றவில்லை. ஜெர்மனியில் அதிகார வர்க்கத்திலுள்ள எவரையும் யாரும் தாக்கினால் பொதுமக்கள் எல்லோரும் ஆயாசப்படுவார்கள். குற்றவாளியை எல்லோரும் அறுவறுப்புடன் நோக்குவார்கள்.

ஜெர்மனியில் அதிகாரவர்க்கத்திலுள்ள எவரும் உடுப்புப் போட்டுக்கொண்டிருப்பார்களாகையால் பொதுஜனங்களுடன் ஒப்பிட்டால் அவர்கள் ஞாய மார்க்கத்திலிருப்பவர்களென்றுதான் தோன்றக்கூடும். முன்காலத்தில் உடுப்புப்போட்ட ஆபீஸர்கள் ரஸ்தாவின் மத்தியில் சென்றால் பொதுமக்கள் அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்பார்கள். கியாதிபெற்ற ஆசிரியர் வாலிபமுள்ள இரண்டு ஆபீஸர்களைக் கண்டால் அவர்களுக்குச்செல்ல வசதியளிக்க அவர் வெகுதூரம் ஒதுங்கிச்செல்லுவார். இதேவிதமாகத்தான் 50 வருடங்களுக்குமுன் ஜெர்மனியில் குடியரசு ஆட்சி இருந்தபொழுதும் இப்பொழுது ஹிட்லரின் ஆட்சி நடைபெறும்பொழுதும் நடைபெற்று வருகிறது.

இதற்காகத்தான் ஜெர்மானியர்கள் பட்டங்களையும் கௌரவ அடையாளங்களையும் மிகுதியாக மதித்துப் பார்க்கிறார்கள். அதிக வருமானம் வரக்கூடியதைவிட குறைவான சம்பளமும் பட்டமும் உள்ள ஒரு வேலையை அவர்கள் மதித்துப் பார்க்கிறார்கள். பிரிடிஷ் சேனையில் போர்முனையிலுள்ள ஜெனரல்கூட அவருடைய கௌரவ அடையாளங்களை போர் நடைபெறும்பொழுது அணிந்துகொள்ளுவதில்லை. அலெக்ஸாண்டரும், மாண்ட்காமரியும், காக்கிச் சட்டைகளை அணிந்துகொண்டு இருக்கிறார்களே ஒழிய தங்களுடைய அந்தஸ்வதை வெளிப்படுத்தவில்லை. ருஷ்யாவில் பிடிப்பட்ட அநேக ஜெனரல்கள் கௌரவ அடையாளங்களை அணிந்துகொண்டிருந்தார்கள். பாரிஸில் சரண்புகுந்த ஜெர்மன் ஜெனரலும் ஏராளமான அடையாளங்களை அணிந்துகொண்டிருந்தான்.

தேசங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் இவ்விதமான வித்யாசங்கள் சகஜமானவையென்று எண்ணக்கூடாது. அவைகள் முக்கியமானவை. அதன்மூலம் இருநாடுகளுக்குமிடையே மனவருத்தமும், யுத்தமும் ஏற்படக்கூடியது. ஹிட்லர் ஜனங்களுக்கு வேலையையும் ஊதியத்தையும் வழங்கி அவர்களின் மனதைக் கவர்ந்தது மட்டுமில்லாமல் அவர்களிடையே வெர்ஸேயில் ஒப்பந்தம் அவமானமான அடிமை ஒப்பந்தம் என்றும் வற்புறுத்தி வந்தான். ராணுவ முறையில் பழிக்குப் பழிவாங்கவேண்டுமென்ற மனோ திடத்தையும் அவர்களிடையே ஊட்டிவந்தான். ஜெர்மனியின் கௌரவ புத்திக்கு அவன் வேறு விதமான கலையை உண்டு பண்ணினான். பிரபுக்கள் உடுப்புகள், பட்டங்கள், கௌரவ அடையாளங்கள் மூலம் தங்களுடைய கண்யத்தைக் காப்பாற்றிவந்தபொழுது பொதுமக்களும் அவர்களுக்கு ஏற்ற முறையில் அவர்களுடைய கௌரவத்தைக் காப்பாற்றி வந்தார்கள்.

ஆகையால் இந்த யுத்தம் ஜெர்மன் மக்களின் யுத்தமாகும். ஒவ்வொரு ஜெர்மானியரும் தனிப்பட்ட முறையில் தாய்நாட்டின் கௌரவத்தைப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று எண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியின் சாதாரண மக்களுக்கு இதற்கு முன்னிருந்ததைவிட நல்ல உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டதால் ஒரு புதிய உணர்ச்சி எங்கு பார்த்தாலும் பரவிவிட்டது. நாட்டை ஆளவேண்டுமென்ற உணர்ச்சி பொதுஜனங்களிடையே உண்டாகிவிட்டதென்று உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. ஒருவரும் அவர்கள் ஒரு கட்சியின் ஏவலாளர்கள், சுதந்திர மற்றவர்கள் என்று நினைக்கவில்லை. கௌரவங்கள், அந்தஸ்துகள், பட்டங்கள் முதலியவற்றை வழங்குவதன் மூலமாக நாஸிக் கட்சி அதன் கொடுமையை மறைமுகப்படுத்திவந்ததால், சுற்றிவளைக்கப்பட்டிருப்பதை ஒருவரும் கண்டுபிடிக்கக்கூடவில்லை.

ஹிட்லர் யுவர்களும் ஹிட்லருக்காக உயிரை அர்ப்பணம் பண்ணக் கூடிய வகையில் கல்வி பயில்விக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்விதமாக கௌரவத்திற்காக பிராணனைத் தியாகம் செய்யும் மனப்பான்மை தேசமக்களின் பெரும் பாகத்தை பாதித்து விட்டது. தனிப்பட்டவரின் கௌரவத்தைப் பொருட்படுத்தாது உள்ள பொதுவான கௌரவம் இப்போதிருப்பது போல ஜெர்மனியில் ஒரு காலத்திலும் இருந்ததில்லை. ஒப்பந்தத்திற்கு ஒருமைப்பட்ட மதம் அவசியமில்லை. மதவித்யாசம் ஒற்றுமைக்குத் தாங்கலாக இருக்காது. யுத்தங்கள் இப்பொழுது மத அபிப்ராயத்திலிருந்து தோன்றவில்லை. இந்த யுத்தத்தில் பல்வேறு மக்களும் நேசதேசக்கட்சியிலும் எதிரிக்கட்சியிலும் போர் புரிந்து வருகிறார்கள். அவர்களை இருவகையாகப் பிரிப்பதெல்லாம் கௌரவத்தைப்பற்றி அவர்களுக்கிடையே உள்ள அபிப்ராய பேதம் தான். இந்த உலக யுத்தமும் அதற்காகத்தான் நடைபெறுகிறது.



# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 30—1—45 (செவ்வாய்க்கிழமை.) | நேசதேசத்தார்கள் ஸ்டாராஸ்பர்க்குக்குச் சமீபத்தில் காம்ப்ஷீமை ஆக்கிரமித்தார்கள். |
| 31—1—45 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் லாண்ட்ஸ்பர்க்கைப் பிடித்தார்கள். அமெரிக்கர்கள் சுபிக் விரிகுடாவில் உள்ள கிராண்டித்தீவில் இறங்கினார்கள். |
| 1—2—45 (வியாழக்கிழமை). | ருஷ்யர்கள் ஸ்வேரினைப் பிடித்தார்கள். அமெரிக்கர்கள் லூஸானில் மணிலாவுக்குத் தெற்கில் மற்றொரு இடத்தில் இறங்கினார்கள். |
| | நேசதேசத்தார்கள் பர்மாவில் காங்காவைப் பிடித்தார்கள். |
| 2—2—45 (வெள்ளிக்கிழமை). | அமெரிக்கர்கள் லூஸானிலுள்ள ஜாப் படைகளை இரண்டு துண்டாக துணித்துவிட்டார்கள். |
| | அமெரிக்க முதல் சேனை ஸீக்பிரட் அரணுக்குள் ஊடுருவிச் சென்றது. |
| 3—2—45 (சனிக்கிழமை). | செம்படை பெர்லினிலிருந்து 41 மைல்களிலுள்ள கஸ்ட்ரினுக்குள் நுழைந்தது. |
| 4—2—45 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசப்படைகள் மணிலாவுக்குள் புகுந்தன. அமெரிக்கர்கள் ஸ்டார்ஸ்பர்க்குக்கு சமீபத்தில் ராத்பாக்கைப் பிடித்தன. |
| | ருஷ்யர்கள் பார்டென்ஸ்டீனைப் பிடித்தார்கள். |
| 5—2—45 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் ஓடர் நதியை அடைந்தார்கள். |

## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை :—**

(1) ஆர்டெனிஸ் உப்பல் பூராவாக அழிக்கப்பட்டுவிட்டதால் அமெரிக்க 1-வது, 3-வது படைகள் பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரியின் கமாண்டிலிருந்து ஜெனரல் ஓமார் பிராட்லியின் கமாண்டுக்கு மாற்றப்பட்டுவிட்டன. ராணுவ காரணங்களுக்காக பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரி அமெரிக்க 9-வது சேனைக்குத் தலைமை வகித்துவருகிறார்.

(2) உப்பலின் வடக்குக் கோடி பூராவிலும் அமெரிக்க 1-வது படை ஸீக்பிரட் அரணை அணுகிவிட்டது. ரூர்பிரக்கில் அவர்கள் ஸீக்பிரட் அரணின் முக்கியமான அரணைப் பிளந்து விட்டார்கள். புல்லாங்கிக்கருகில் அவர்கள் ராகராத்தையும், கிரிங்கெல்ட்டையும், பெரஸ்ஷீட், பிரான்பெல்ட், ஸ்டாச், ஸ்டெசென்பார்ன், சென்பார்ன், எயின்ரூர், வோலஸெபான், மான்ஷாவைச்சுற்றியுள்ள மோர்ஸ்பார்க்கையும் பிடித்துவிட்டார்கள்.

(3) அமெரிக்க 3-வது சேனை ஷ்ணிபல் காட்டிலுள்ள பிரம்முக்கு வடமேற்கில் ஸீக்பிரட் அரண்களை ஊடுறுவிச் சென்றுவிட்டது. செட்ஸ், ஷ்லியர்பாக், லோமர்ஸ்வீலர், ஷோன்பர்க், பெர்க், பினியால்ப், ஸெயிண்ட்வித்துக்கருகிலுள்ள ரோத் முதலியவற்றையும், ஊர் நதிக்கரையிலுள்ள ரோடர்ஹாஸனையும், டீகர்ச்சுக்குக் கிழக்கிலுள்ள ஹோஸ்டார்ப்பையும், ஜெர்மனியில் ஹெகஷீட், குரோஸ்—லாங்கென்பேட்டையும், ஸீக்பிரட் அரணிலுள்ள பிராண்டெஷீட்டையும் அது பிடித்துவிட்டது.

(4) அமெரிக்க 7-வது சேனையும் பிரெஞ்சு 1-ம் படையும் ஸ்டிராஸ்பர்க்குக்குத் தெற்கில் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டுவிட்டன. கோல்மார் பகுதி இருபகுதிகளாகத் துணிக்கப்பட்டுவிட்டது. கோல்மார் முனையில் ரைன் நதியின் பாலங்கள் வழியாகப் பின்வாங்கு

ஜெர்மானியர்களைத் துரத்தியடித்துவருகிறார்கள். நேசதேசப்படைகள் கீழ்கண்ட இடங்களை ஆக்கிரமித்துவிட்டார்கள் அல்லது அவைகளுக்குள் நுழைந்துவிட்டார்கள் :—ஸ்ட்ராஸ்பர்க்—மல்ஹௌஸ், கோல்மார் பகுதிகளில் காம்ப்ஷீம், பெட்டன் ஹாயன், ஒபர்ஹோயன், ராத்பாக், செர்னே, ப்ளிஸ்ஹிம், வின்சென்ஹீம், ஸ்டீன்பாக், அப்ஹோல்ஸ்.

**கிழக்குப் போர்முனை :—**

(1) **கிழக்கு பிரஷ்யா.**—ருஷ்யப்படைகள் பால்டிக் கடல் துறைமுகமான ஸ்டெட்டின் துறைமுகத்துக்கு 22 மைல்களுக்குள் வந்துவிட்டன. கீழ்க்கண்ட இடங்கள் பிடிபட்டன. டொம்னு, ஷிப்பான்வீல், கட்ஸ்டாட், கிரான்ஸ், லாண்ட்ஸ்பர்க், பெர்டன் ஸ்டீன்.

**மத்தி.**—ருஷ்யப் படைகள் பிரெஸ்லாவுக்குத் தென்கிழக்கில் ஓடர் நதியைத் தாண்டிவிட்டன. போமரேனியா, பிராண்டன்பர்க் மாகாணங்களின் குறுக்கே ருஷ்யர்கள் 100 மைல்கள் நீளமுள்ள போர்முனையில் நிலைபெற்றிருக்கிறார்கள். கஸ்ட்ரினுக்கும், பிராங்க்பர்ட்டுக்கும் மத்தியில் பெர்லினை நோக்கி 70 மைல் நீளமுள்ள பிளவை உண்டுபண்ணியிருக்கிறார்கள். கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன :—லாண்ட்ஸ்டார்க், மெசரிட்ஸ், ஷ்வீபஸ், குகிசா, லாசெலி, டோப்பர், ஸ்காம்ப், குரோஸ்பிளம்பர்க், பிளாடௌ, ஜாஸ்ட்ரௌலி, ஷ்வெரிரின், கோனிக்ஸ்வால்டி, லிபனு, டோரன், ஸோல்டின் டிரோஸன், ப்ருடன்பிச், ஷ்லோப்பி, விட்ஸ், சோனன்பர்க், ஸிலன்சிக், ராப்பன், ஸ்ட்ருபர்க், பீர்வால்டி, ந்யூடாம், ந்யூமூல், ஆல்ட்ஷாம்பர்க், ஏஹலா, ப்ரீக், குரோட்கா, லோவன்.

**இதாலி.**—வடக்கு இதாலியின் சில பாகங்களை ஜெர்மானியர்கள் காலிசெய்துவிட்டதாகத் தெரியவருகிறது. பிரென்னர் கணவாய் விமானப்படை மூலம் தாக்கப்படுகிறது. 8-வது சேனை செர்சியோ பள்ளத்தாக்கில் காலிகானோவைப் பிடித்தது. பொலோனு பேயன்ஸாப் போர்முனையில் ஒரு புதிய நேசதேசத் தாக்குதல் துவங்கிவிட்டது.

**பிலிப்பைன்ஸ்.**—பிலிப்பைனின் தலைநகரமான மணிலா விடுவிக்கப்பட்டது. லூஸான் தீவில் கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. லூவாவோ, காபானுடுவான், சண்டாரோசா, காபான், கேலூகான்.

பிலிப்பைன்ஸின் தெற்குக் கோடியிலுள்ள சூலூத் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த ஜோலோத் தீவில் படைகளிறங்கிவிட்டன.

**சைனு.**—காண்டன்—ஹாங்கோ இருப்புப் பாதையை நோக்கி முன்னேறிய ஜப்பானியர்கள் சிசிங், ராமியூங் கைப்பிடித்தார்கள்.

**பர்மா.**—இந்தப் பகுதியில் லெட்கோபின், யவாதிட்கிபி, ஸாட்பாங்கோன் ஆக்கிரமிக்கப்பட்டது.

அரக்கானில் ஹண்டர்ஸ் விரிகுடா பகுதியில் காங்கா விழுந்துவிட்டது. டாமகுப்புக்குப் போகும் கடற்கரை ரஸ்தா துணிக்கப்பட்டது. டெயிங்க்மாவும், காங்காவும் ஆக்கிரமிக்கப்பட்டன. ராம்ரீத் தீவில் படைகள் மற்றொரு இடத்தில் இறங்கிவிட்டன.

காப்வெட் பிராந்தியம் சுத்தி செய்யப்பட்டுவிட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**28—1—45** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

**பகல்.**—சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள் :—கொலோனுக்கு (Cologne) அருகில்.

**2 பென்ஸால் நிலையங்கள், ரயில் தளங்கள்.**—ரூர் (Ruhr).

**பாலங்கள்.**—ரைன் (Rhine).

**போக்குவரத்துகள்.**—ஹாலந்து (Holland).

**சேமிப்புகள்.**—ரூர் (Ruhr).

**போக்குவரத்து இலக்குகள்.**—வட இதாலி, போ (Po) சமவெளி.

**விமானச் சண்டைகள்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும், (116 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**இரவு.**— பேர்லின், ரயில்வே போக்குவரத்துகள் :—ஸ்டட்கார்ட் (Stuttgart).

**தூரக்கிழக்கு (Far East).**

**இலக்குகள்.**—(மணிலா வளைகுடாவிலுள்ள) டிரம் (Drum), கவைட் (Cavite) கடற்படை தளம்.

**பர்மா (Burma).**

**ஜப்பானிய தற்காப்புகள்.**—காங்கா (Kangaw) பிரதேசம்.

**விமான நிலயங்கள்.**—மெய்க்திலா (Meiktila), ஹெஹோ (Heho).



**29—1—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

**பகல்.**—6 ரயில்வே தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்—மேற்கு ஜெர்மனி.

**டாங்கி நிலயம்.**—காஸல் (Kassel).

**பாலம்.**—ரைன் (Rhine), கொலோன் (Cologne).

**"V-2" பீரங்கி லயன்கள்.**—வட ஹாலந்து, மேற்கு ஹாலந்து (Holland).

**ரயில்வே தளங்கள்.**—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf) பிரதேசம். டூரன் (Duren) கோலோன் (Cologe) பர்ம், (Purm).

**மோட்டார் வண்டிகள் நிலயங்கள்.**—செயின்ட் வித் (St. Vith) பிரதேசம்.

**போக்குவரத்துகள்.**—போ (Po-Valley) சமவெளி இதாலி.

**விமானச் சண்டைகள்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (55 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**இரவு.**—பெர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

**ஜப்பானிய சைனியங்கள்.**—மணிலாவிலும் மணிலாவைச் சுற்றிலும்.

**இலக்குகள்.**—ஸுமத்திராவிலுள்ள பாலெம்பாங்கைச்சுற்றிலும்.

**பர்மா (Burma).**

**விமான நிலயங்கள்.**—மெய்க்திலா (Meiktila).

**தற்காப்புகள்.**—மாண்டலேயைச்சுற்றிலும்.

**படகுகள்.**—ஐராவதி (Irrawaddy).

**30—1—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

**பகல்.**—ஜெர்மனியிலும் இதாலியிலும் விமான நடவடிக்கைகள் பற்றி யாதொரு தகவலும் இல்லை.

**விமானச் சண்டைகள்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
(93 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

**ஜப்பானியதளம்.**—இவோஜிமா (Iwo Jima).

**பர்மா (Burma).**

**துருப்பு, ஸப்ளை தளங்கள், தவியல்கள்.**—வட பர்மா (North Burma).

**பீரங்கி ஸ்தாபனங்கள்.**—நாம்கை (Namkhi) பாலம்.

**இலக்குகள்.**—பாங்சாரி (Pangsari).

**விமான நிலயங்கள்.**—மெய்க்திலா (Meiktila), ஹேஹோ (Heho).

**31—1—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

**பகல்.**—ரயில், ரஸ்தா போக்குவரத்துகள், துருப்புகள்.—ஹெல்டெல்பர்க் (Heldelberg), கார்ல்ஸ்ரூ (Karlsruhe), ஸ்டட்கார்ட் (Stuttgart).

**ரயில்வே தளங்கள்.**—புருச்சல் (Bruchsal) ரஸ்தா.

**ரயில் பாலங்கள்.**—ஹெய்ல்பிரான் (Heilbronn), பியர்ஸிம் (Pforzheim) பிரதேசங்கள்.

**பாலம்.**—ரைன் (Rhine), முல்ஹாஸனுக்கு (Mulhausen) வடகிழக்கு.

**எண்ணெய் இலக்குகள்.**—ஆஸ்திரியாவிலுள்ள மூஸ்பீர்பாம் (Moosbierbaum).

**ரயில் ஸ்தாபனங்கள்.**—கிராஸ் (Graz), மாரிபார் (Maribor).

**சேமிப்புகள்.**—வெய்னர் நியூஸ்டாட் (Wiener Neustadt), வில்லியாக்(Villach).

**இலக்குகள்.**—பிரென்னர் (Brenner), ரயில் பாதை.

**எதிரி ரயில் ரஸ்தா போக்குவரத்துகள்.**—வட இதாலி (N. Italy).

**விமானச் சண்டைகள்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
(26 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

**விமான ஸ்தாபனங்கள்.**—வாலெய் (Woleai).

**துறைமுக ஸ்தாபனங்கள்.**—யாப் (Yap).

**இலக்குகள்.**—இவோஜிமா (Iwo Jima).

**பர்மா (Burma).**

**ஜப்பானிய தலைமைக்காரியாலயம்.**—கியாகூஸ் (Kyaukse).

**1—2—45** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

**பகல்.**—ரயில்வே ஜங்ஷன்—மஞ்சன் (Munchen), கிலாட்பாக் (Gladbach).

**ரயில்வே தளங்கள்.**—மான்ஹீம் (Mannheim), லட்விச்ஷாபன் (Ludwigshafen).

**பாலங்கள்.**—வெஸெல் (Wesel) நதி.

**ராணுவ ஸ்தாபனங்கள்.**—ஆஸ்திரியா (Austria).

**எதிரி ஆக்கிரமித்த கட்டடங்கள் தானியத் தவியல்கள்.**—மத்திய யூகோஸ்லாவியா (Central Yugoslavia).

**ரயில் லயன்கள் சேமிப்புகள்.**—போ (Po) சமவெளி.

**கப்பல்கள்.**—எட்ரியாடிக் (Adriatic).

**விமானச் சண்டைகள்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (26 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**இரவு.**—ரயில் ஸ்தலங்கள்—மெய்ன்ஸ் (Mainz), லட்விக்ஷாபன் (Ludwigshafen), ஸீஜென் (Siegen).

**இலக்குகள்.**—பெர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

**இலக்குகள்.**—இவோஜிமா (Iwo Jima).

ஜப்பானியக் கப்பல்கள்.-வால்லனோ (Vollano) வைச்சுற்றிலும், போனின் தீவுகள் (Bonin).
இலக்குகள்.—பாலா (Palau).
சிங்கப்பூர் (Singapore).

**பர்மா (Burma).**

குயூல் (Kule), யேஷின் (Yeshin).
இலக்குகள்.—மாண்டலே (Mandalay).

**2—2—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எண்ணெய்க் கிணறுகள்.—வட ஹாலந்து (Northern Holland).
ரயில்வே தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.-மான்ஹீம் (Mannheim), லட்விக்ஷாயின் (Ludwigshafen).
ரைன் பாலங்கள்—ரூரின் வடமேற்கு.
போக்குவரத்து ஸ்தலங்கள்.—ஸ்கியா இடீஸ் (Schie Idex), பிரான்ஸ்சீட் (Brandscheid), பிரம் (Prum).
படகுகள்.—ரைன் (Rhine).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—கோஸ்பெல்டு (Coesfeld) கிழக்கில்.
ரயில்வே ஸ்தலங்கள்.—மெயன்ஸ் (Mainz), லட்விச்ஷாபன் (Ludwigshafen), ஸீஜென் (Siegen).
ரயில்வே பாலங்கள்.—ரைன் (Rhine), எஞ்சர்ஸ் (Engers) லான் (Lahn) நதி, நாஸா (Nassau), எல்லியூரில் மொஸெல் (Moselle) நதி.
ரஸ்தா சந்திப்புகள்—பிலாங்கன்ஹீம் (Blankenheim), விட்லிக் (Wittlich).
கடற்கரை கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).
இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).
இரவு:—பேர்லின் (Berlin), விஸ்படன் (Wiesbaden) கார்ல்ஸ்ருகி (Karlsruhe).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—வான் இக்கல் (Wanne Eickel).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலுமில்லை.

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

**3—2—45.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—இலக்குகள்—பெர்லின் (Berlin).
போக்குவரத்துகள், இலக்குகள்.—ஹாலந்து (Holland).
எண்ணெய் சுத்தம் செய்யும் இடங்கள், எண்ணெய் சேமிப்புகள்.—எம்மரிச் (Emmerich).
நீராவி யந்திரங்கள்.—ஜெர்மனி (Germany).
ஜெர்மன் கப்பல்.—நார்வேஜியன் கடற்கரை.
ரயில் பாலங்கள்.—பிரென்னர் (Brenner).
விமான நிலயம்—யூகோஸ்லாவியா (Yugoslavia).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
இரவு.—பன்ஸால் நிலங்கள்—பிராஸ்பர் (Prosper), ஹன்ஸா (Hansa).
சுரங்க வெடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்கள்.

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்—வல்கனோ தீவுகள்.
விமான ஸ்தாபனங்கள், ஸ்டோர் பிரதேசங்கள் சிச்சி ஜிமா, (Chichi Jima).
இலக்குகள்—குராபு சாகி (Kurabu Saki), ஷாமுஷு (Shamushu) தீவுகள்.

**பர்மா (Burma).**

ரஸ்தா, ரயில் சந்திப்புகள்—சம்பான் (Chumphon).
ஜப்பானிய தற்காப்புகள்—மாண்டலே (Mandalay)

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**29—1—45.** (திங்கட்கிழமை).
முதல்
**2—2—45.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

**ருஷ்யா (Russia).**

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**3—2—45** (சனிக்கிழமை).
**4—2—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—இங்கிலாந்தின் கிழக்குக்கரை.

**ருஷ்யா (Russia).**

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ஹிட்லரின் ஒலிபெருக்கு.** ஜனவரி 30-ம் தேதி அன்று ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்த பன்னிரண்டாவது வருஷ பூர்த்தி. எப்பொழுதும் போல, ஜெர்மனியை அழிக்க முதலாளிகளுக்கும், ருஷ்யாவுக்கும் சதி ஏற்பட்டதென்று ஹிட்லர் சொற்பொழிவில் விளக்கினான். போல்ஷிவிஸம் என்பது ஐரோப்பாவை அழிக்கும் நோய் என்றும், ஆசியா சமவெளிகளிலிருந்து வந்த பிசாசு என்றும் அவன் வர்ணித்தான். கடமை வார்த்தைகளினால் ஒரு பிரயோஜனமும் ஏற்படாது. ஈஸ்வரன் அவருடைய கட்டளையை நிறைவேற்ற ஜெர்மானியர்களைத்தான் கட்டளையிட்டிருக்கிறார் என்று மறுமுறை கூறினான். இது என்ன அபத்தம். இப்பொழுது இருக்கும் நாஸிகள் அபார சக்தி உள்ளவர்கள் என்று ஒரு பக்கம் கொண்டாடிவிட்டு அதே மூச்சில் இன்று ஜெர்மனியில் நாஸிகளை முதுகில் குத்தக்கூடியவர்கள் அநேகர் இருக்கிறார்களென்றும் அவன் ஒப்புக்கொண்டான். ஜெர்மனியிலுள்ள வாலிபர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும் நோயாளிகளும் முடவர்களும் தங்களுடைய தேவைகளைக் கூடுமான வரையில் குறைத்துக்கொண்டு சாகும் வரையில் போராடவேண்டுமென்று அவன் வேண்டிக்கொண்டான். கடைசியாக தற்பொழுது உள்ள நெருக்கடி ஜெர்மானியர்களை லக்ஷக்கணக்காக அழிக்கக்கூடியதென்று வர்ணித்து நெல்ஸனைப் போலும், சர்ச்சிலைப்போலும் ஒவ்வொரு ஜெர்மானியரும் அவருடைய கடமையைச் செய்ய வேண்டுமென்றும் ரத்தம், வியர்வை முதலியவற்றை தியாகம் செய்யவேண்டுமென்றும் அவன் வேண்டிக்கொண்டான். ஆனால் மகத்தான வெற்றிக்கு முன்னதாக நெல்ஸன் அவ்விதம் பேசிய பொழுது ஹிட்லர் மகத்தான தோல்விக்குமுன் பேசினான் என்பதை அவன் மறந்துவிட்டான். மேலும் தேசம் முஸ்தீப்புகளைத் தயார் செய்துவந்த சமயத்தில் சர்ச்சில் பேசின பொழுது ஜனங்கள் களைத்துப்போயும் ஐசுவர்யங்களும், சிநேகிதர்களும் இல்லாத சமயத்தில் ஹிட்லர் பேசினான் என்பதையும் அவன் மறந்துவிட்டான் போலும்!

வி வி வி வி வி

**1933-ம் வருஷம் ஜனவரி 30-ம் தேதி.** ஹிட்லர் பதவிக்கு வந்த தினம் சரித்திரத்திலேயே மிகவும் கரி நாளாக இருக்கிறது. அன்று உத்சாக மடைந்த வாலிபர்கள் இன்று மறைந்துவிட்டார்கள். அவர்களின் எலும்புகள் ஸ்டாலின்கிராட்டுக்கும் பாலைக்கும் மத்தியிலும் ஆபிரிக்க பாலைவனங்களிலும், இதாலியிலும் புதைபட்டுக் கிடக்கின்றன. ஆயிரம் வருடம் நீடிக்கக்கூடியதாக அமைத்துவிட்டேன் என்று ஹிட்லர் சொன்ன ஜெர்மன் நிர்வாகம் இப்பொழுது சாகும் தருவாயிலிருக்கிறது. நிர்வாகத்தின் பன்னிரண்டாவது வருஷப் பூர்த்தி விழா கொண்டாடப்பட்டு விட்டது. 13-வது வருஷ விழா நடைபெறக்கூடுமா? பலாத்காரத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நிர்வாகம் பலாத்காரத்தினாலேயே அழியப்போகிறது. ஹிட்லர், ஒரு லாபத்தையும் எதிர்பார்க்க முடியாததால் அவன் சரணாகதி அடையமாட்டான. அதிகாரத்துக்கு வந்த தினத்தன்று உலகத்தை ஜயிப்பேன் அல்லது அதை அழிப்பேன் என்று அவன் சொன்னான். இன்று உலகம் காப்பாற்றப்பட்டு விட்டது. ஆனால் ஜெர்மனி சாகும் தருவாயிலிருக்கிறது. ஹிட்லர் ஜெர்மனியை ஒரு பெரிய கொலைக்களமாக அமைத்து வருகிறான்.

வி வி வி வி வி

**நீதி.** 1933-ம் வருஷம் ஜனவரி மாதம் 30-ம் தேதியின் நீதி தெளிவானது. தீமை அழிந்துவிடும், நன்மை மேலோங்கும். தீங்குக்காக ஹிட்லர் அமைத்த ஐரோப்பியக் கோட்டை கிழக்கிலும், மேற்கிலும், நொருங்கி விட்டது. அவன் தகர்த்துவிட நினைத்த நேசதேச ஒற்றுமை இப்பொழுது பலப்பட்டுவருகிறது. மூன்று வல்லரசுகளும் இப்பொழுது ருஷ்யாவில் கருங்கடல் பிரதேசத்தில் சந்தித்துப்பேசுகிறார்கள். அவன் உண்டுபண்ணின ஆயுதங்களெல்லாம் அவன் கையிலிருக்கும் பொழுதே நொருங்கிவிட்டன. நாஸி ஜெர்மனி அநாதையாய் கௌரவமன்னியில் அழியப்போகிறது.

நிலைமை இவ்விதமிருக்கும் பொழுது கோயபல்ஸ் பிரசங்கம் செய்கிறான்.

"பதினொருவது மணி அடிக்கப் போகிறது. சரித்திரத்தின் போக்கு அபாயகரமான நிலைமைக்கு முன்னேறுமோ அல்லது பின்வாங்குமோ என்று தெளிவுபடவில்லை. புயல் காற்றுடன் கூடிய அலைகள் ஜெர்மனி கட்டப்பட்டிருக்கும் பாறைகளின் மீது மோதுகின்றன. உலகத்தின் கண் ஜெர்மனி தனித்து நின்று போராடுவது தான் சரித்திரத்தில் மிகவும் வியசனிக்கத்தக்கது."

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.** ஜெர்மனிக்கு இது நெருக்கடியான சமயம் தான். கிழக்குப் போர்முனையின் வடக்குப் பகுதியில் மெம்மல் பிடிபட்ட பின் ஜெர்மனியின் கடைசி தற்காப்பு ஸ்தானம் சுத்தி செய்யப்பட்டுவிட்டது. பால்டிக் ஸமஸ்தானங்கள் விடுவிக்கப்பட்டுவிட்டன. இது பாக்ரிமானின் அரிய சேவை.

மூன்றாவது வெண்மை ருஷ்யச் சேனையை நடத்திவரும் செர்னியாகோஸ்க் கிழக்குப் பிரஷ்யாவின் தலைநகரமான கோனிக்ஸ்பர்க்கை நெருங்கி வருகிறான்.

அவனுக்கு இடது பக்கத்தில் ரோகோவஸ்க்கியிடமுள்ள இரண்டாவது வெண்மை ருஷ்யச் சேனை டோரனைப் பிடித்தபின் டான்ஸிக், கிட்டினியாவை நோக்கி முன்னேறுகிறது.

அதற்குத் தெற்கில் முதல் வெண்மை ருஷ்யச் சேனை போஸனைத் தாண்டிச் சென்று வடக்கில் ஸ்டெட்டினை நோக்கியும் மத்தியில் பெர்லினை நோக்கியும் தெற்கில் ஸைலீஷியாவிலுள்ள குளோகாவை நோக்கியும் மூன்று திசைகளில் விசிறி போல முன்னேறி வருகிறது. வடக்கில் பெர்லினிலிருந்து டான்ஸிக்குக்குப் போகும் ரஸ்தாவிலுள்ள ஷ்னீடமுகல் என்னும் நகரத்தை தாண்டிச் சென்றுவிட்டான். மத்தியில் கஸ்ட்ரினுக்குள் அவன் புகுந்துவிட்டது. பிராங்க்பர்ட்டை நெருங்கிவிட்டாது. இரண்டும் பெர்லினுக்குப் போகும் நேர்வழியில் ஓடர் நதியிலுள்ள ஜெர்மன் தற்காப்பு ஸ்தலங்கள். அங்கிருந்து பெர்லின் 30 மைலில் இருக்கிறது. தெற்குப் பகுதியில் துருப்புகள் குளோகாவுக்கு சமீபத்தில் ஓடர் நதியை அணுகி வருகின்றன.

தெற்குப் பகுதியில் முதல் யூக்ரேனிய சேனைக்குத் தலைமை வகிக்கும் கோனியேவ் ஸைலீஷியாவிலுள்ள நிலக்கரிப் பிரதேசத்தை பிடித்தபின் பிரெஸ்லாவிற்கு வடக்கில் ஓடர் நதியின் குறுக்கே ஸ்டீனு என்ற இடத்தில் பாலமுனையை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

பெட்ரோவிடமுள்ள நாலாவது யூக்ரேனிய சேனை ஸெக்கோஸ்லாவேகியாவுக்குள் முன்னேறி வருகிறது. மாலினோவஸ்கியிடமுள்ள இரண்டாவது யூக்ரேனிய சேனை வியன்னுவுக்குப் போகும் உத்தேசத்துடன் பிராடிஸ்லாவாவை நோக்கி முன்னேறி வருகிறது. டில்பூக்கினிடமுள்ள மூன்றுவது யூக்ரேனிய சேனை தெற்கிலிருந்து புடாபெஸ்ட்டை வளைத்துவிட்டது.

இவ்விதமாக, பால்டிக்கிலிருந்து டான்யூப் வரையில் ருஷ்யர்கள் ஆரவாரம் செய்துகொண்டு தாக்கி வருகிறார்கள். ஜெர்மனியின் அதோகதி சமீபித்துவிட்டது. ருஷ்யாவின் முன்னேற்றம் எதிர்பார்த்ததற்கு மேலாகவே இருக்கிறது. ருஷ்யர்கள் அநேகமாக கிழக்குப் பிரஷ்யாவையும் வடக்கு ஸைலீஷியாவையும் பிடித்துவிட்டார்கள்.

வி வி வி வி வி

**பெர்லினுக்கான போர்.** பெர்லினுக்கான போருக்குத் தயாராகிவிட்டது. பெர்லினில் ருஷ்ய பீரங்கிகளின் சப்தம் கேட்கிறதாம். ஜெர்மனியின் நிர்வாக இலாகாக்கள் மியூனிக்குக்கும், பவேரியாவுக்கும் கொண்டுபோகப்படுகின்றன. தற்காப்புப் பெட்டிகளும், டாங்கிகளும் தெருக்களைக் காக்கின்றன. கோயபல்ஸ் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். பெர்லின் பலமான தற்காப்புகள் உள்ளதென்றும் ஒவ்வொரு வீடாகவும் அது காப்பாற்றப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

சேனையிலிருந்து ஓடிவந்த கவசம் பூண்ட படைகளும் தப்பித்துக்கொண்ட குற்றவாளிகளும் மற்ற நாடுகளிலிருந்து வந்த தொழிலாளர்களும் இடிந்த வீடுகளில் ஒளிந்துகொண்டு பெர்லின் ஜனங்களைப் பயமுறுத்தி வருகிறார்கள்.

30, 40 மைல்கள் வரையில் மிலியன்கணக்கான அகதிகள் செம்படைக்கு முன்னால் பின்வாங்கி ஓடிவருகிறார்கள்.

இவைகளெல்லாம் மனதைக் கலக்கக்கூடிய தோற்றங்கள். ஆகிலும் ஹிருதயம் இரவிக்கவில்லை. ஒன்னில் ஜெர்மானியர்கள் பெலஜியத்திலும், பிரிடனிலும் பின்வாங்கிய கெதியற்ற அகதிகளை ஈவு இரக்கமன்னில் யந்திர பீரங்கிகள் மூலம் அழித்திருக்கிறார்களென்பதை மறந்துவிட முடியாது. இன்று ருஷ்யர்கள் முன்னேறும்பொழுது போமரேனியாவிலும் பிராண்டன்பர்க்கிலும் கிழக்குப் பிரஷ்யாவிலும் ஸைலீஷியாவிலும் அவ்வித அக்கிரமங்கள் நடைபெறுகின்றனவென்று கோயபல்ஸ்கூடச் சொல்லவில்லை. வெற்றி சமயத்திலும் ருஷ்யர்கள் அடக்கத்துடனும், தாராள மனப்பான்மையுடனும் நடந்துகொள்கிறார்களென்பது போற்றத்தக்கது.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை, மேற்குப் போர்முனை.** இரண்டும் ஒத்துழைக்க ஆரம்பித்துவிட்டன. ஜெனரல் ஈஸன்ஹவர் ஸ்டாலினுடன் தொடர்பு ஏற்படுத்திவிட்டாரென்று ஒரு சுருக்கமான அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. டெஹரான் திட்டம் பலிதயாகிவிட்டது. ருஷ்ய முன்னேற்றத்துக்கு உதவியளிக்கும் முறையில் ஈஸன் ஹவர் தாக்குதலைத் துவக்கிவிட்டார். பர்லின் விமானங்களால் மேற்குப் பக்கத்திலிருந்து அழிக்கப்படுகிறது.



**நிர்மூலமாக்கும் தாக்குதல்கள்.** ருஷ்யர்கள் பெர்லின் வாசலுக்கு வரும்பொழுது விமானத் தாக்குதல் மூலம் பெர்லின் நிர்மூலமாக்கப்படுகிறது. பிப்ரவரி மாதம் 3-ம் தேதியன்று 900 சண்டை விமானங்கள் உதவிகொண்ட 1,000 பறக்கும் கோட்டை விமானங்கள் மூன்று பகுதிகளாகச் சென்று 45 நிமிஷத் தாக்குதலில் 2,500 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போட்டன. அந்த விமானப் படை 300 மைல்கள் நீளமுள்ளதாக நின்றது. தலைப்பக்கத்திலிருந்த விமானங்கள் பெர்லினைத் தாக்கியபொழுது வால் பக்கம் பெல்ஜிய எல்லையைத் தாண்டிச் சென்றது. தாக்குதல் நகரத்தின் மத்தியில் செய்யப்பட்டது. அதன் ஹிருதயம் பிளக்கப்பட்டதுபோல் தோன்றிற்று.

இத்துடன் தாக்குதல் முடிவடையாது. சூகோவ் ஓடர் நதியை அடைந்துவிட்டானென்பது வாஸ்தவம். ஆகிலும் அதை அவன் தாண்டவேண்டும். வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுவிட்டது. ஜெர்மானியர்கள் எதிர்த்துப்போராடும் எண்ணத்துடன் படைகளைக் குவித்திருக்கிறார்கள். ஆகவே தாக்கப்போகிறானென்பது நிச்சயம். ஆகிலும் அது எப்பொழுது என்று சொல்லமுடியவில்லை. யுத்த தந்திரப்படி நூற்றுக்கணக்கான மைல்கள் தாண்டி விஸ்சுலா (வார்ஸாவிலிருந்து) ஓடர் (பிராங்க்பர்ட்) நதிவரையில் முன்னேறிய ருஷ்யப் படைகள் இப்பொழுது ஓய்வெடுத்துக்கொண்டு பலத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். 11-வது மணி அடித்துவிட்ட போதிலும் காலம் மெதுவாகச் செல்லுகிறது.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** ருண்ட்ஸ்டெட்டின் கிருஸ்துமஸ் தாக்குதல் ஜெர்மனியை இரக்ஷித்துவிடும் என்று ஜெர்மனியர்கள் மனதில் தோன்றிய நம்பிக்கை இப்பொழுது அழிந்துவிட்டது. ஆர்டென்னிஸ் உப்பலிலிருந்து படைகளைப் பின்வாங்க ருண்ட்ஸ்டெட் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறான். ரைன் நதிப்போர் துவக்கப்படுமென்று அமெரிக்கர்கள் சொல்லிவிட்டார்கள். வடக்கு முனையில் பிரிடிஷ் துருப்புகள் நிஜ்மேகனை நோக்கி மறுபடியும் முன்னேறுகின்றன. அதற்கு சற்றுத் தெற்கில் அவர்கள் ரோயர் நதியைத் தாண்டி ஜெர்மனிக்குள் போர் புரிகிறார்கள். ஜெனரல் ஓமார் பிராட்லியிடமுள்ள அமெரிக்க முதல், மூன்றுவது சேனைகள் மாங்க்ஷாவுக்கு இரு பக்கத்திலும் முன்னேறி வருகின்றன. ஸீக்பிரட் அரணை பல இடங்களில் ஊடுருவிச் சென்றன. தெற்குப் பகுதியில் கோல்மார் பகுதி இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ரைனுக்கு தப்பியோடும் மார்க்கமும் துணிக்கப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**இதாலி.** இதாலியிலிருந்து ஜெர்மானியர்கள் பின்வாங்குகிறார்கள் என்பதைப்பற்றி தகவல்கள் பலவிதமாக இருக்கின்றன. அது எவ்விதம் இருப்பினும் மத்தியதரைக்கடல் விமானப்படை ப்ரென்னர் கணவாயை விசேஷமாகத் தாக்கிவருகிறது. அதுதான் இதாலியிலிருந்து ஜெர்மானியர்கள் பின்வாங்குவதற்கு முக்கியமான மார்க்கம்.

வி வி வி வி வி

**மணிலா வீழ்ச்சி.** பிப்ரவரி 4-ம் தேதி அன்று பிலிப்பைன்ஸ் தீவின் தலைநகரமான மணிலாவுக்குள் மாக் ஆர்தர் நுழைந்தார். அதிலிருந்து 115 மைல்களுக்கு அப்பாலிலுள்ள லிங்கேயன் வளைகுடாவிலுள்ள தீவின் லூஸானில் படைகள் இறங்கியபின் 26 நாட்களுக்குள் இந்த வெற்றி கிடைத்தது. இரண்டாவது வடக்கில் இறங்கியபின் மேற்கிலும் தெற்கிலும் அவர் படைகளை இறக்கினர். விமான தளங்களைக் படை இறக்கத்திலும் அவர் சூபிக் வளைகுடாவிலுள்ள கடற்படை, விமான தளங்களைக் கைப்பற்றினர். மூன்றுவதில் பாடான் தீபகற்பத்தை வளைத்துக்கொண்டார். அந்தத் தீவில் ஜப்பானியரின் எதிர்ப்பு பலஹீனமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் லெய்ட்டியை இழக்குமுன் சிறிது போரை நடத்தினார்கள். ஆகிலும் மணிலாவுக்குப் போகும்போது அவர்கள் பின்வாங்கி ஓடினார்களே ஒழிய போர் புரிந்ததாகச் சொல்ல முடியாது.

மாக் ஆர்தரின் முயற்சி இத்துடன் நின்றுவிடாது. அவர் சீனாவுக்கும், டோக்கியோவுக்கும் போகவேண்டும். பிலிப்பைன்ஸ் போரை பிலிப்பினோக்களிடம் விட்டுவிட்டு அவர் வேறு நடவடிக்கையைக் கையாளப்போகிறார். அவர் பின்வருமாறு சொல்லுகிறார். "மணிலாவின் வீழ்ச்சி பசிபிக் போரின் ஒரு மகத்தான கட்டத்தை முடிவு செய்கிறது. மற்றொரு கட்டத்தை ஆரம்பிக்கிறது. ஜப்பான்தான் நமது இறுதி லக்ஷியம். டோக்கியோவுக்குச் செல்லவேண்டும் என்பதுதான் அமெரிக்கர்களின் மேற்கோள்."

மூன்று வல்லரசு மகாநாட்டில் பசிபிக் நடவடிக்கைக்கு ஒருவரை தளகர்த்தராக நியமிக்கும் திட்டம் ஆலோசிக்கப்படும் என்று தோன்றுகிறது. மாக் ஆர்தரோ அல்லது மற்றொரு அமெரிக்கரோ நியமிக்கப்படலாம். ருஷ்யாவின் தற்போதிய நிலைமையில் ஜப்பானிய விவகாரங்களில் அது கலந்துகொள்ளாது. இப்பொழுது பசிபிக் போர் அடைந்திருக்கும் கட்டத்தில் மாக் ஆர்தரின் தலைமை பிலிப்பைன்ஸுடன் மட்டும் நின்றுவிடாது. பிலிப்பைன்ஸைப் பிடிப்பது இறுதி லக்ஷியமல்ல. அது மற்ற நடவடிக்கைக்கு தளமாகும். அடுத்த பாய்ச்சல் ஸ்தலம் தெற்கு சைனா. அங்கு மார்ஷல் சியாங்கே ஷேக் தலைமை வகிக்க முடியாது. ஏனெனில் தெற்கு சைனாவின் கடற்கரை இப்பொழுது ஜப்பானியர் வசமிருந்து வருகிறது. உள்நாட்டிலுள்ள தலைமை காரியாலயத்திலிருந்து சியாங்கே ஷேக் கடற்கரைக்கு சுலபமாக வரமுடியாது.

வி வி வி வி வி

**சுமத்ரா.** கிழக்கு இந்தீஸ் கடற்படையைச் சேர்ந்த விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் தெற்கு சுமத்ராவிலுள்ள பாலம்பாங்கிலுள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகளை பலமாகத்தாக்கின. அவைகள் ஜப்பானிய விமானப்படைக்குத் தேவையான எண்ணெயில் 75 சதவிகிதம் உற்பத்தி செய்கின்றன. அங்கிருந்துதான் போர்முனைக்கு வேண்டிய எண்ணெய் ஸப்ளை செய்யப்படுகிறது. ஜப்பானிலும் அப்பேர்ப்பட்ட சாலைகள் உள. ஆகிலும் க்ரூட் எண்ணெயை ஜப்பானுக்குக் கொண்டுபோய் சுத்திசெய்து அதை மறுபடியும் போர்முனைக்குக் கொண்டுவருவது என்பது எண்ணெய்க் கப்பல்களின் மிகுதியான செலவை உண்டுபண்ணும். அதற்குப் போதுமான சக்தி ஜப்பானிடமில்லை. ஜெர்மனியை நேசதேச விமானங்கள் தாக்குவதுபோல ஜப்பானுக்கு கிடைக்கும் எண்ணெயைக் குறைக்கவும் சுத்திகரிக்கும் சாலைகளை நொருக்கவும்தான் ஜப்பானிய எண்ணெய் நிலயங்கள் பலமாக அழிக்கப்படுகின்றன.

வி வி வி வி வி

**மாண்டலேக்கான போர்.** இது இராவதியைத் தாண்டுவதற்கான போராக மாறிவிட்டது. அது பிரமாதமான நதி அல்ல. மாண்டலேக்கருகில் அது 1,000 கஜ அகலமுள்ளது. அதற்குப்பிறகு அது வடக்கு முகமாக ஓடுகிறது. நகரத்திற்கு வடக்கில் 40 முதல் 60 மைல்கள் வரையில் ஜப்பானியரின் எதிர்ப்பு அதிகரித்துவிட்டது. அங்கு நேசதேசப்படைகள் இராவதியை தாபேகினிலும், கியாங்யாங்கிலும் தாண்டிவிட்டன. ஜப்பானியர்கள் நகரத்திற்கு எதிரிலுள்ள பரப்பில் சாகேயிங் மலைகளில் பலமான தற்காப்புகளுடன் இருந்து வருகிறார்கள்.

வி வி வி வி வி

**முதல் சாமான் வண்டிகள்.** சாமான் வண்டிகளின் முதல் தகுதி பிப்ரவரி 4-ம் தேதி அன்று சீனாவிலுள்ள கன்மிங்குக்கு வந்துசேர்ந்து நன்கு வரவேற்கப்பட்டன. வண்டிகள் நுழைந்தபொழுது கூட்டம் கூக்குரலிட்டது. அந்நகரின் சீன கவர்னர் லேடோ ரஸ்தாவைக் கட்டிய பிரிகேடியர் ஜெனரல் பிக்குக்கு வெற்றிக்கான ரஸ்தா என்ற எழுத்துக்கள் உள்ள சிகப்பு வர்ணக்கொடியை பரிசளித்தார்.

---

## போர் இறுதி கட்டத்தை நோக்குகிறது.

### இடைவெளிகளை அடைக்கும் நாஜி முறைகள்.

**கிருஸ்டபர் பக்ளி.**

**(டெயிலி டெலிகிராப்).**

படை வரிசைகளில் ஏற்படும் பிளவுகளை அடைக்க ஜெர்மனி செய்துவரும் முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. ஒரு ஜெர்மன் டிவிஷன் தாக்கப்பட்டு அது பின்வாங்கும்படி நேரிட்டு அப்பொழுது அதற்கு மிகுதியான நஷ்டமேற்பட்டால், ஜெர்மானியர்கள் ஒரு பிரிடிஷ் பிரிகேடுக்கு சமானமான பட்டாளத்தை போர்முனையில் சற்று அமைதியுள்ள பாகத்திலுள்ள மற்றொரு டிவிஷனிலிருந்து கொண்டுவருவது ஜெர்மனியின் வழக்கமாகிவிட்டது. இரண்டு டிவிஷன்களும் முன்னணியிலிருக்கும்பொழுது ஒன்றைக் குறைத்து மற்றொன்றை பலப்படுத்துவதென்பது இறுதியில் ராணுவ தற்கொலை செய்துகொண்டது போலாகும்.

ஆகிலும் தற்பொழுது மேற்கு முனையில் ஜெர்மனிக்கு இதைத் தவிர வேறு உபாயம் கிடையாது. கிழக்கில் ஏற்பட்டிருக்கும் ருஷ்ய முன்னேற்றத்தைத் தடுக்க ஜெர்மானியர்கள் மேற்கிலிருந்து கிழக்குக்கு ஏராளமான படைகளை அனுப்பப்போகிறார்களா? ஜெர்மனி



அவ்விதமாகச் செய்வதாக இப்பொழுது ஒரு சூசகமும் இல்லை. ஆகிலும் போர்முனையிலிருந்து காலாட்படைகள் மட்டும் கிழக்குக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

மாஸ் நதியின் தாழ்வரையிலும் ஷெல்ட் நதி முகத்துவாரத்திலும் எதிரியின் படை பலம் குறைந்துவிட்டது. நதியைத்தாண்டி விடவும் ஆண்ட்வெர்ப்பை நோக்கிக் குவியவும் வைக்கப்பட்டிருந்த துருப்புகள் இப்பொழுது முன்னேறித்தாக்கும் சக்தியைப் பெற்றிருக்கவில்லை. ஆகிலும் இதாலியிருந்தும் நார்வேயிலிருந்தும் துருப்புகள் ஜெர்மனிக்கு வரப்புறப்படுவதாகத் தோன்றவில்லை.

இதாலிய நிலைமை ஸ்வாரஸ்யமானது. 1943-ம் வருஷம் ஜூலை மாதத்தில் நாம் ஸிஸிலியில் படையெடுத்த பொழுது அங்கு மூன்று ஜெர்மன் டிவிஷன்களுக்கு அதிகமான படைகளில்லை. சென்ற வசந்த காலத்தில் காஸினோவைச் சுற்றிக் கடும்போர் நடைபெற்ற பொழுது ஜெர்மன் படை பலம் 19 டிவிஷனுக்கு அதிகரித்துவிட்டது. இப்பொழுது 30-க்கு குறைவான டிவிஷன்கள் இதாலியிலிருக்கின்றன. மற்ற போர்முனைகளில் அவசியம் அதிகரித்தபோதிலும் இதாலியில் ஜெர்மன் படை பலம் அடிக்கடி அதிகரித்துக்கொண்டே வருகிறது.

சுருங்கச் சொன்னால், அடுத்துவரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் காலநிலை சௌகரியமாக இருந்தால் கிழக்கில் ஜெர்மனிக்கு மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்படும். இதைச் சமாளிக்க ஜெர்மனியின் பலத்தின் ஒரு பாதியைத்தான் அது உபயோகிக்க முடியும். மற்றொரு பாதி பாகம் மற்ற எல்லாப்போர் முனைகளிலும் ஈடுபட்டிருக்கிறது. போக்குவரத்து வசதிகள், மார்க்கங்களின் சிரமங்களினால் அந்தப் படைகள் அசைவற்றிருக்கவேண்டி நேரிடும். குத்து மதிப்பாகச் சொன்னால் ஜெர்மன் படைகளின் அணி அமைப்பு பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| கிழக்குப் போர்முனை | 150 முதல் 160 | டிவிஷன்கள். |
| மேற்குப் போர்முனை | 80 | ,, |
| இதாலி | 30 | ,, |
| நார்வேயும் டென்மார்க்கும் | 20 | ,, |

ஜெர்மனியில் 10 முதல் 20 டிவிஷன்கள் திருத்தி அமைக்கப்பட்டு முஸ்தீப்புகள் வழங்கப்படுகின்றன. இவைகளின் பெரும் பாகம் ஜெர்மனியின் உள்நாட்டு அதிருப்தியைத் தடுக்கவும் அல்லது அடக்கவும் அதிகமாகத் தேவைப்படும்.

ருஷ்யாவின் மகத்தான தாக்குதலுக்கு அனுகூலமாக மேற்கில் எவ்வித திட்டங்கள் நிறுவப்பட்டாலும் நமது ஸ்ட்ராடஜிக் வெடிவிமானத் தாக்குதல் அதிகரிக்குமென்று நான் எண்ணுகிறேன். ஜெர்மனியிலுள்ள இருப்புப்பாதைகளும், ரஸ்தாக்களும் மிகுதியாக அழிக்கப்படும். ரைன், டான்யூப், ஓடர் நதிப்பிரதேசங்களிலுள்ள சேர்க்கை எண்ணெய் தொழிற்சாலைகள் அதிகமாகத் தாக்கப்படும். மேற்கு ஹாலந்திலுள்ள லேடன் பிராந்தியத்திலுள்ள V. 2 குண்டு நிலயங்களும் குறிப்பாகத் தாக்கப்படும்.

கடைசியாக இப்பொழுதுதான் யுத்தம் இறுதி கட்டத்தை அடைந்து வருகிறது. சௌகரியமான காலநிலையுள்ள ஒவ்வொரு நாளைய விமானத்தாக்குதலும் இறுதிகட்டத்தின் நீடிப்பை குறைத்துவிடுமென்று எனக்குத் தோன்றுகிறது.

---

## ஜெர்மனியின் ஐந்து முக்கிய எதிரிகள்.

### ஜெனரல் மாடலின் ஒப்புக்கொள்ளுதல்.

**(விங்க் கமாண்டர் *L. V.* பிரேசர்).**

இப்பொழுது ஏன் ஜெர்மனிக்கு வெற்றி கிடைக்கவில்லை என்பதைப்பற்றி இப்பொழுது ஜெனரல் மாடல் ஜெர்மன் சேனைகளிடம் சொல்லிவிட்டார். "எதிரியின் விமானப் படைதான் நம்முடைய முதலாவது எதிரி என்று அவர் தாடஸ்தியமாகவும், சுருக்கமாகவும் மறுக்க முடியாத வகையிலும் முதல் முதலாக ஒப்புக்கொண்டுவிட்டார். இதை விளக்கிச்சொன்னால் பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் ஜெர்மன் சேனையின் சக்கரத்தை சிக்கிக்கொள்ளும்படி செய்துவிடுகின்றன.

1944-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதியன்று ஜெனரல் மாடல் விடுத்த ஒரு உத்தரவு நமது வசமாகிற்று. அதில் சில விஷயங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப்படிக்கும் ஜனங்களிடையே துயரமும், நிர்க்கதியும்தான் பரவக்கூடுமென்பதில் ஐயமில்லை. எல்லோரும் பலமான உறுதியுடன் போரை நடத்தவேண்டுமென்று எப்பொழுதும்

போல அவசியமான முகவுரையைச் சொல்லிவிட்டு மாடல் உண்மையை சற்று வெளியிட ஆரம்பிக்கிறார். தோல்விக்குக் காரணங்களை அலசிப் பார்க்கும் முறையில் (இதிலிருந்து ஜெர்மன் மனவுறுதியும் நம்பிக்கையும் குறைந்துவிட்டதென்று வெளிப்படுகிறது). ஜெனரல் மாடல் சமீப ஜெர்மனியின் சமீபகால போர்முனை அனுபவத்தைப்பற்றி துருப்புகளுக்கு விளக்கிக்காட்டியிருக்கிறார். அந்த முயற்சியானது தற்காப்புப்போரில் குறிப்பான லக்ஷியத்துடன் பதில் தாக்குதலைச் செய்வதற்கு அது உதவக்கூடியதாக இருக்குமென்று அவர் நம்புகிறார்.

அந்த உத்தரவில்கண்ட விஷயங்கள் பின்வருமாறு: "ஜெர்மன் நடவடிக்கைகளின் இகழ்ச்சிக்குக் காரணங்கள்: (1) நேசதேசத்தாரின் தளவாட உயர்வு; (2) நேசதேசத்தாரின் படைகளின் சிறந்த பயிற்சி; (3) ஜெர்மன் துருப்புகளுடைய சிலாக்யமற்ற பயிற்சியும் குன்றிப்போன மனஉறுதியும்; (4) ஜெர்மனியின் குறைவான தலைவர்களும்.

ஜெர்மனியின் வெற்றிக்கு ஐந்து முக்கிய விரோதிகளிருக்கிறார்கள்: (1) எதிரிகளின் விமானப்படையின் நிச்சயமான உயர்வு; (2) நேசதேசத்தாரின் பலமான பீரங்கிப்படை; (3) ஏராள சுரங்கவெடி பூமிகள்; (4) நேசதேசத்தாரின் டாங்கிகள்; (5) துரோகம்.

உத்தரவின் மற்ற பாகங்களில் இவ்விதமான இளப்பமான நிலைமையைச் சமாளிக்க எடுத்துக்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. நான் மாடல் வெளியிட்டிருக்கும் ஒவ்வொரு அம்சத்தையும் ஆராய்ச்சி செய்ய உத்தேசிக்கிறேன்.

நாஸி ஜெனரல் சொல்லியிருக்கும் நேசதேச தளவாட உயர்வு என்ற வாக்கியம் விசேஷமான அர்த்தம் உள்ளது. அது தோல்வியை ஒப்புக்கொள்ளுவதாகும். பிரிடனின் யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளை ஜெர்மன் விமானப்படை அழிக்கமுடியவில்லை. அட்லாண்டிக் கடலைத்தாண்டி அமெரிக்க ஆயுதங்களும், யுத்த முஸ்தீப்புகளும் நிரந்தரமாக வருவதை யூ படகுகள் வழிமறித்து அழிக்கமுடியவில்லை. ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்திசாலைகளை பகல், இரவாக நேசதேச விமானங்கள் அழிப்பதையும் ஜெர்மன் தற்காப்பு அமைப்புகள் தடுக்கமுடியவில்லையென்று பொருள்படுகிறது. இந்த அறிக்கை பிறரை மதிமயங்கச் செய்கிறதாகவும் இருக்கலாம். ஆகிலும், ஜெர்மனியிடம் ஆகாயத்திலும், தரையிலும் போதுமான பலமில்லையென்றும், சமமான பலத்தை அடையவும் அது நம்பமுடியாதென்றும் ஜெர்மனி ஒப்புக்கொண்டுவிட்டதென்பது நிச்சயம்.

நேசதேசப்படைகள் உயர்வான முஸ்தீப்புகளுள்ளவை. நல்ல ஓய்வுஎடுத்துக்கொண்டவையென்றும் சொல்லப்படுகிறது. இதன் அர்த்தம் தெளிவானது. நாஸிகளுக்குப் பூர்ணமான முஸ்தீப்புகளில்லை. அவைகள் புதிய படைகளுமில்லையென்று வெளியாகிறது. இதிலிருந்து யுத்தத்தின் சாச்வதமான படிப்பினை கிடைத்துவிடுகிறது. நேசதேசத்தார்களுக்கு எவ்வித களைப்பு இருந்தாலும், நிலைமை எவ்வளவு கடினமாக இருந்தாலும் அவர்கள் ஜெர்மானியர்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியவர்கள் தான்.

அடுத்தபடியாக ஜெர்மன் நடவடிக்கைகளின் இகழ்ச்சிக்கு "ஜெர்மன் படைகளின் பயிற்சிக் குறைவும், சில சந்தர்ப்பங்களில் தமது படைத்தலைவர்களின் போர் புரியும் ஊக்கக் குறைவும்" தான் காரணமென்று மாடல் ஒப்புக்கொள்ளுகிறார். நேசதேச அபிப்பிராயப்படி இது மிகவும் முக்கியத்வமுள்ளது. சுலபமான நடையில் நேசதேசப் படைகள் திறமையிலும், ஊக்கத்திலும் உயர்வானவையென்று ஸ்தாபித்துவிட்டார்கள் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேலும், நேசதேசப் படைகளுக்குச் சிறந்த தலைவர்கள் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆர்டெனிஸ் பகுதியில் ருண்ட்ஸ்டெட்டின் நம்பிக்கை முறியடிக்கப்பட்டதையும், சைலிஷீயாவிலும், கிழக்குப் பிரஷ்யாவிலும் ருஷ்யர்கள் முன்னேறுவதையும் நோக்கினால் இந்த ஒப்புதலும் அதிக முக்கியத்வமுள்ளதென்றுதான் சொல்லவேண்டும்.

மூன்றாவதாக, ஜெர்மனியின் தோல்விக்கு போர்முனையில் ஜெர்மனியிடம் போதுமான தலைவர்கள் இல்லாததும்தான் காரணமென்று மாடல் சொல்லுகிறார். இது முக்கியமானதுதான். தரையிலும், ஆகாயத்திலும் சரியான தலைவர்கள் கிடையாது. தலைவர்களின் பொறுப்பைப்பற்றி மாடலைத் தவிர வேறு ஒருவரும் சொல்லமுடியாது. சேனா நாயகம் என்பது சேனாதிபதிமுதல் லான்ஸ் கார்பொரல் வரையிலும் பரவியுள்ளது. சேனா நாயகம் ஹிட்லரைப் பொருத்திருக்கிறதென்று ஒவ்வொரு ஜெர்மானியரும் அறிவார். அது அடிக்கடி உபயோகமற்றதாக வெளியாகிவிட்டது.

மாடலின் அடுத்த புகாரைக் கவனிப்போம். இந்தப் புகாரை அவரே தயாரித்து எல்லோருக்கும் வழங்கியிருக்கிறார். அவருடைய அறிக்கையில் போர்முனையில் ஏற்பட்ட தோல்விக்குப் பரிகாரம்தேட சில நடவடிக்கைகள் கையாளப்படவேண்டுமென்று அவர் சொல்லியிருக்கிறார். முதலாவது எதிரி, எதிரியின் விமானப்படை. அதாவது மாடலின்



அபிப்பிராயப்படி எதிரி விமானப்படை என்பது பிரிடிஷ் விமானப்படை, அமெரிக்கப்படை.
அந்த விமானப்படைகள் ஜெர்மன் படை வரிசைகளை முன்பக்கத்திலும் பின்புறத்திலும்
பலமாகத் தாக்கியிருப்பதினால் மாடல்கூட அதற்கு ஆக்ஷேபனையைத் தெரிவித்திருக்கிறார்.
எதிரிகளின் விமான ஆதிக்கத்தினால் அவர்கள் ஜெர்மனியின் தாக்குதல் முனையை அழித்து
விடுகிறார்கள். ஜெர்மன் பீரங்கிகளை அவர்கள் சண்டை வெடிவிமானங்களின் வெடிகுண்டு
வீச்சுமூலம் அழித்துவிடுகிறார்கள். இவ்விதமாகப் படை வரிசைகளுக்குப் பின்புறம் யாதொரு
சலனமும் ஏற்படாமல் அவர்கள் செய்து வருகிறார்கள். நேசதேசத்தாரின் அபிப்பிராயப்படி
இந்த நடவடிக்கைக்கு யாதொரு விதமான ஆக்ஷேபனையையும் சொல்லமுடியாது.

மேலும் பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப்படை நேசதேசப் படைகள் பெர்
லினை நோக்கி முன்னேறுவதற்கு எவ்வளவு உதவி செய்திருக்கின்றனவென்பதையும் மாடல்
சந்தேகமற அறிவார். பாலாய் பொறியிலிருந்து ஜெர்மானியர்கள் தப்பி ஓட முயன்ற
பொழுது தினசரி 1,000 ஜெர்மன் வாஹனங்களை பிரிடிஷ் விமானப்படை அழித்ததென்பதை
யும் அவர் மறந்துவிடவில்லை. பூரா விவரங்களும இன்னும் சொல்லப்படவில்லை. எதிரிகளின்
விமான ஆதிக்கத்தையும் பலஹீனப்படுத்த போர்முனைக்குப் பின்னுள்ள ஜெர்மன் மக்கள்
பரபரப்புடன் விமானப்படைகளையும் தளவாடங்களையும் சேமித்து வருகிறார்களென்றும்
மாடல் சொல்லி வருகிறார். நேசதேசத்தாரின் டாக்டிகல் விமானப்படையின் சக்தியை
அறியும் போர்முனையிலுள்ள ஜெர்மானியர்கள் உள்நாட்டில் செய்துவரும் முயற்சிகள் ஏன்
பயன்படவில்லையென்று ஆச்சரியப்படுகிறார்கள்.

இதற்கு விடையை மாடலும், ருண்ட்ஸ்டெட்டும் அறிவார்கள். 1944-ம் வருஷ நவம்பர் மீ
1உயன்று வெளியிட்ட அறிக்கையில் காணப்படும் ஒவ்வொரு வாக்கியத்திலும் கோபம் ததும்பு
கிறது. இதற்குத் தகுந்த காரணங்களுமிருக்கின்றன. போர்முனைக்கு 40 மைல்களுக்குள்
ளூரில் உள்ள மகத்தான முன்னணி ஸ்தலத்தை நேசதேச விமானங்கள் தாக்கிவருகின்றன
வென்று அவர்கள் அறிவார்கள். போரைத் தொடர்ச்சியாக நடத்துவதற்கு ஜெர்மன் சேனை
கள் நம்பியிருக்கும் ஜெர்மனியின் சிக்கலான போக்குவரத்து அமைப்புகளை நேசதேச விமா
னங்கள் பகல், இரவாகத் தாக்கி நொருக்கிவருகின்றன. கொலோன், எஸ்ஸன், டூயிஸ்பர்க்,
டார்ட்மண்ட் முதலிய இடங்கள்பேரில் ஒவ்வொரு தாக்குதலிலும் 4,000க்கு மேற்பட்ட டன்
கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகள் வீசப்படுகின்றன. நான்கு நாட்களில் கொலோன்
பேரில் 9,000 டன்கள் மொத்த எடையுள்ள குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன. மாடல்
கோபம் கொள்ளுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. பிரிடிஷ் விமானப்படையும், அமெ
ரிக்க விமானப்படையும் நாஸிகளின் எண்ணெய் ஸப்ளை நிலயங்களைத் தாக்கி நொருக்கியிருக்
கின்றன.

மற்றொரு முக்கியமான விஷயத்தை மாடல் ஒப்புக்கொண்டுவிட்டார். இதுதான் 5-வது
எதிரி. நாஸி அமைப்பில் ராஜ துரோக புத்தி காணப்படுகிறது. ஜனங்கள் மௌனமாக
இருக்கவேண்டுமென்று மாடல் வற்புறுத்துகிறார். மனிதர்கள் அதிகமாகப் பேசக்கூடாது.
நாஸி கொள்கைப்படி மனிதர்கள் காரிய காரணத்தை ஆலோசிக்கவும் கூடாது. ஆகிலும்
அவர்கள் கண்களால் பார்ப்பதை ஒருவரும் தடுக்கமுடியாது. மூடுபனியும், உறைபனியும்,
பனிக்கட்டியும் நிரம்பியிருந்த வாரங்களில் பிரிடிஷ் விமானப்படையும், அமெரிக்க விமானப்
படையும் அவர்களின் விமான ஆதிக்கத்தை உபயோகித்து நாஸிகள் நன்கு உணரும்படியாக
நடவடிக்கைகளை நடத்தினவென்பதை அவர்கள் கண்ணுறக் கண்டிருக்கிறார்கள்.

---

## கிழக்குப் போர்முனையில் ருஷ்ய முன்னேற்றம்.

### ஜெர்மனி பலமான அரண் வரிசைகளை அளவு கடந்து நம்பிவிட்டது.

ருஷ்ய முன்னேற்றத்தைப்பற்றி கிளாஸ்கோ ஹெரால்டு பத்திரிகையின் ராணுவ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—

ருஷ்யா இரண்டு முற்போக்கான சௌகரியங்களைச் செய்துகொள்ள வேண்டியதாயிற்று.
முதலாவது, ஓடர் நதி வரையிலும் மற்ற முனையிலும் போரை நடத்த ஸப்ளைகள் இரண்டு
வாரங்களுக்கு முன்னிருந்ததுபோல போர்முனைக்குக் கொண்டுவர வேண்டியதாயிற்று.
இரண்டாவதாக, படைகள் முன்னேறும்பொழுது அவைகளுடன் செல்லும் சாமான்களைக்
கொண்டுபோக போக்குவரத்து ஸாதனங்கள் குவிக்கப்படவேண்டியதாயிற்று.

300 மைல்கள் சாமான்களைக் கொண்டுபோகவேண்டிய மேற்கு முனையில் முன்னேற்றம்
நிச்சயமாகத் தடைபட்டது. ஆகிலும் கிழக்குப் பக்கத்தில் ருஷ்யர்கள் முன்னேறியபொழுது

அவர்கள் ரஸ்தா மூலமாகவோ அல்லது இருப்புப் பாதை மூலமாகவோ சராசரி 1,000 மைல்கள் தாண்டி சாமான்களைக் கொண்டுவர வேண்டியதாயிற்று. எல்லாம் உபயோகத்தில் இருந்துவரும்பொழுது போக்குவரத்து சாதனங்களைத் திரட்டுவது சாத்யமானதல்ல. முன்னேற்ற வேகத்தைப் பரிபாலிக்க வேண்டுமென்றால் முன்கூட்டியே சர்பாரக்களைக் குவித்துக்கொண்டு வாஹனங்களை முன்னேற்றத்துக்கு உதவும்படி செய்துவரவேண்டும். இதுவும் கஷ்ட சாத்தியமான நடவடிக்கைதான். ஆகிலும் ஸ்டாலினுக்குத் திருப்தி ஏற்படும் வரையில் அவைகளை ஏற்பாடு செய்துகொண்டுதான் தாக்குதலைத் துவக்க உத்தரவு அளிக்கப்பட்டது.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டபின் தேசப்படத்தை நோக்குங்கால் அது எவ்வளவு திருப்திகரமாக நடைபெறுகிறதென்று நாம் கண்கூடாகப் பார்க்கலாம். இந்த முன்னேற்ற வேகத்தை ருஷ்யர்கள் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். ஆரம்ப காலத்தில் மிகவும் கடுமையான போரையும் அதன்பின் ஊடுருவிச் செல்லும்பொழுது எதிரி தலைவிறி கோலமாக ஓடுவதையும், ருஷ்யர்கள் பின்தூரத்துவதையும் அவர்கள் எதிர்பார்த்திருக்கக்கூடியதுதான். வேனிர்கால முதல் வாரத் தாக்குதலில் இதுதான் நேர்ந்தது. அப்பொழுது ருஷ்யர்களுக்கு மிகவும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டது.

துரதிருஷ்டவசமாகவோ அல்லது அதிஷ்டவசமாகவோ ஜெர்மனியின் யுத்த தந்திரம் மாறிவிட்டது. எதிரி அநேக வரிசைகளாக தற்காப்புகளை அமைக்க உத்தேசித்திருந்தான். இதன்மூலம் தாக்குகிறவர் பூர்ணமான பலத்துடனிருக்கும்பொழுது முதலெடுப்பில் பலமாக எதிர்த்துப் போராடுவதில்லை. எதிரி வெகுதூரம் முன்னேறி அவனுடைய அணிவகுப்புகள் கலைப்பட்டு முன்னணிப்படைகள் பலமான எதிர்த் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பலஹீனமடைந்திருக்கும்பொழுது ருஷ்யப்படைகளைத் தாக்கிவிடுவதென்று ஜெர்மனி உத்தேசித்திருந்தது.

ஜெர்மனியின் தற்காப்பு திட்டம் இதுதான் என்று ஜெர்மனியே ஒப்புக்கொண்டது. அந்த திட்டம் பின்வருமாறு. ஜெர்மன் பூமியிலும் அல்லது அதற்கு சற்று வெளியிலும் அநேக தற்காப்புப் பகுதிகளை அமைப்பது இந்த திட்டப்படி அநேக நடவடிக்கைகள் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டுவிட்டன என்றும் சொல்லப்படுகிறது.

ருஷ்ய முன்னேற்றத்தின் வேகத்திலிருந்து போர்முனையின் பெரும் பாகத்தில் நமது நேசதேசப்படைகள் எதிரியின் ஸ்தானங்களை குறைவான நஷ்டத்துடன் பிடித்தார்களென்றும் அவர்களிடமிருந்த மிகுதியான பீரங்கிகளும், டாங்கிகளும் எதிரி நம்பியிருந்த எல்லைப்புறத் தற்காப்புகளை வெகுசீக்கிரத்தில் நொருக்கிவிட்டனவென்றும் முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கிறது.

இப்பொழுது மற்றொரு மகத்தான பிரச்னை உண்டாகிறது. எதிர் பாராமல் அதிகமாக முன்னேறிவிட்டால் ஸப்ளை திட்டத்திற்கு அதிக சிரமங்கள் ஏற்படக்கூடும். இந்த பிரச்னையைத்தீர்த்துவிடுவது ருசிகரமானது. இதை அறுகுறையாகத் தீர்த்துவிட்டாலும் தாத்காலிகமாக ஒரு சிரமத்தையும் உண்டுபண்ணிவிட்டது. பிற்காலத்தில்தான் அதன் சிரமங்கள் தோன்றும்.

ஜெர்மனியின் படைபல அமைப்பின் காரணமாக ருஷ்யர்கள் வேகமாக முன்னேறிவிட்டார்கள். அந்த வேகம் அதிகரித்துவிட்டது. கால அளவினாலும், தேச வரம்பினாலும் ஜெர்மானியர்கள் எதிர் பார்த்ததற்கு மாறாகவே ருஷ்யர்கள் முன்னேறிவிட்டார்கள். ருஷ்ய வேகத்தை ஜெர்மனி எங்கு எதிர்த்து நிற்பதென்று முடிவு செய்திருக்கிறார்களென்பது புலப்படவில்லை.

சமீப எதிர்காலத்தில் ஜெர்மனி பலமாக எதிர்த்துப் போராடும் என்று நாம் எதிர் பார்க்கலாம். நேசதேசத்தாரின் முன்னணிக்கு 100 மைல் தூரத்தில் கடும்போர் மூளக்கூடும். மகத்தான முறையில் எதிர்த்துப் போராடும் இடத்தை முடிவு செய்ய ஜெர்மனிக்கு இன்னும் சக்தி இருக்கிறது. இந்த முடிவை அது இன்னும் வெளியிடவில்லை.

ருஷ்யர்கள் நெருங்கி வந்துகொண்டிருக்கும் தொழிற்சாலைப் பிரதேசமான சைலீஷியாவில் அவ்வித எதிர்ப்பு ஏற்படாவிட்டால் அது விந்தையாகத்தானிருக்கும். அதன் நஷ்டம் போலந்தில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட தோல்வியைவிட ஜெர்மனியைப் பாதிக்கக்கூடியதாக இருக்கும். அதைக் காப்பாற்ற ஜெர்மனி பலமான போரை நடத்துமென்று நாம் எதிர் பார்க்கலாம். ஆனால் தற்காப்பு வரிசைகளை அதிகமாக நம்பி ஜெர்மனி மோசம் போய்விட்டதென்று தோன்றுகிறது. ருஷ்யர்கள் ஏராளமான படை பலத்துடன் துரிதமாக முன்னேறிவிட்டதால் ஜெர்மனியின் முயற்சி இனிமேல் பயன்படாதென்று தோன்றுகிறது.



# பிரெஸ்லா—கிழக்கு ஜெர்மனியில் கொலோனுக்கு சமானமானது.

(விக்டர் ஷிப்).

மேற்குப் பக்கத்தில் கொலோனைப்போல் கிழக்குப் பக்கத்தில் பிரெஸ்லா ஜெர்மனிக்கு முக்கியத்வமுள்ளது.

ரைன் நதிக்கரையிலுள்ள கொலோன் நகரம் ஜெர்மனிக்கும் மேற்கு ஐரோப்பாவுக்கும் வியாபாரம், கலை, ஞானம் முதலியவற்றிற்குத் தொடர்பு ஏற்படுத்தியதென்பதில் கீர்த்தியும் முன்னேற்றமும் சம்பாதித்தது. ஓடர் நதியின் பேரிலுள்ள பிரெஸ்லா அவ்வளவு கியாதி பெறுவிட்டாலும் ஜெர்மனிக்கும், கிழக்குக்கும், முக்கியமாக ஜெர்மனிக்கும் ஐரோப்பாவின் தென்கிழக்குக்கும் தொடர்பு ஏற்படுத்தியதென்பதில் செழிப்பான பிரதேசமாகிவிட்டது.

பரப்பிலும், ஜனத்தொகையிலும் சென்ற யுத்தம்வரையில் இரண்டும் சமமாகத்தான் இருந்தன. அதன்பின் ஒவ்வொன்றும் நகர பரிபாலன சபையின் வெற்றிகரமான சாம்ராஜ்யக் கொள்கையைப் பொருத்து மாறுதலடைந்தன. இந்த ஏற்பாட்டின்படி சைலிஷியாவின் தலைநகரமான பிரெஸ்லாவைவிட கொலோன் அதிக முன்னேற்றமடைந்தது. 6,00,000 ஜனத்தொகையுள்ள பிரெஸ்லா பெர்லின், ஹாம்பர்க்குக்கு அடுத்த ஸ்தானம் வகித்ததுபோக, கொலோன், டஸ்ஸல்டார்ப், லீப்சிக், டிரெஸ்டனுக்குப்பின் ஏழாவது ஸ்தானம் வகித்துவிட்டது. ஆனால் இந்த ஜனத்தொகையினால் ஏற்பட்ட அந்தஸ்தை நேசதேச விமானப்படை தலைகீழாக மாற்றிவிட்டது. உணவுப்பொருள் பங்கீடுக்குப் பொறுப்புள்ள மந்திரியான ஹெர்பாக்குக்குத்தான் மேற்கிலிருந்து சைலிஷியாவுக்கு எவ்வளவு ஜனங்கள் ஓடினார்களென்ற புள்ளி விவரம் தெரியவரும். சென்ற வாரம் வரையில் பிரெஸ்லா பேரில் இந்த யுத்தத்தில் விமானத் தாக்குதலே கிடையாது.

அந்நியர்கள் குடியேறியதினால் பிரெஸ்லாவின் ஜனத்தொகை ஒரு மிலியன் அளவுக்கு அதிகரித்தது.

800 வருஷங்களுக்குமுன் பிரெஸ்லா போலந்திடமிருந்து வந்தது. அதன்பின் அது ஸெகோஸ்லோவகியா, ஹங்கேரி, மறுபடியும் ஸெகோஸ்லோவகியா ஆஸ்திரியாவசமிருந்தது. அதன்பின் 200 வருடங்களுக்குமுன் பிரெடரிக் II என்ற பிரஷ்ய மன்னர் அதைக் கைப்பற்றினார்.

---

# நவீனகால பாம்பீ நகரம்.

## வார்ஸாவின் கோரமான தோற்றங்கள்.

ஸ்டீபன் லிடார்.

(நியூஸ் க்ரானிகள் பத்திரிகையின் வார்ஸாவிலுள்ள நிருபர்).

ஒரு வாரத்திற்குமுன் வார்ஸா விடுவிக்கப்பட்டது. போலந்தின் ஒரு காலத்தில் அழகான ரம்யமான தலைநகரத்தின் முக்கியமான பாகங்களைக் கண்டுபிடிக்க நான் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். ஆனால் ஒரு பயனும் கிடைக்கவில்லை.

வார்ஸா அழிந்துவிட்டது. அது மறைந்துவிட்டது. அதற்குப் பதிலாக ஒரு கட்டடத்தூள்கள் காணப்படுகின்றன. இந்தக் குப்பைமேடு உலகத்தில் மிகப் பெரியதென்று சொல்லலாம். நவீனகால பாம்பி என்று சொல்லலாம். இதை உற்றுநோக்கினாலே ஜெர்மனியின் அக்கிரம அழிவு முறையின் போக்கு நன்றாய் விளங்கும்.

வார்ஸாவுக்கு விஜயம் செய்துவந்த அநேகர் அதன் மத்தியில் மிகவும் அழகான புகழ்பெற்ற ஸாக்ஸன் சதுக்கமிருப்பதை அறிவார்கள். அதற்கு பில்சுடுஸ்கி சதுக்கமென்று மறுபெயர் வழங்கப்பட்டது. சதுக்கத்தின் மத்தியில் நின்றுகொண்டு சுற்றிப் பார்த்தேன். எங்கு பார்த்தாலும் அழிவு காணப்பட்டது. என்னுடைய திருஷ்டி கோசரத்தைத் தடுக்க ஒரு இடைஞ்சலும் காணப்படவில்லை. எல்லாம் தரைமட்டமாகிவிட்டது.

சரித்திர புகழ்பெற்ற ஸ்டெல் பியாஸ்டோ நகரம் மறைந்துவிட்டது. 16-வது நூற்றாண்டில் கட்டப்பட்ட வீடுகள் பரிபாலிக்கப்பட்டு அவைகளிருந்த ஸ்தலம் மட்டும் சதுக்கரூபமாகக் காணப்படுகிறது.

வார்ஸாவின் மத்திய நிலயம்தான் போய்விட்டதென்று நினைக்கவேண்டாம். தொழிற்சாலைப் பிரதேசங்களும் போய்விட்டன. வோலா மாகாணத்திலிருந்த பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றுகூட நொருக்கப்படாமலில்லை.

ஊஜாஸ் டெனஸ்கா ரஸ்தாவான வார்ஸாவின் மேற்குக்கோடியில்தான் சில வீடுகள் அதிகமாகப் பழுதுப்படாமலிருக்கின்றன. இந்த வீடுகள்தான் ஜெர்மானியர்களின் வாசஸ்தலமாக நான்கு வருஷங்களுக்குமுன் அமைக்கப்பட்டவை. இது அங்கு காணப்படும் விலாசப்பலகைகளிலிருந்து தெரியவருகிறது.

---

## ஜெர்மன் கடற்படையின் அழிவு.

### கடற்படைப்போரில் கவனமுள்ள மாறுக்கள்.

சமீப காலத்தில் பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த லங்காஸ்டர் விமானங்கள் கிட்னியாத் துறைமுகத்தின் பேரில் வெடிகுண்டுகளால் தாக்கின. பிரிடிஷ் அமெரிக்க சண்டை விமானங்கள் வில்ஹெல்ம்ஷாபன், கீல் முதலிய தளங்களை பிரயோஜனமற்றதாகச் செய்து விட்டதால் கிட்னியாதான் இப்பொழுது ஜெர்மனியின் மிகவும் முக்கியத்வமுள்ள கடற்படை தளமாக இருக்கிறது. இது இங்கிலாந்திலிருந்து 900 மைல்கள் தாண்டியிருப்பதால், அதை எதிரி விமானங்கள் தாக்க முடியாதென்று ஜெர்மன் கடற்படை அதிகாரிகள் நம்பியிருந்தார்கள்.

லங்காஸ்டர் விமானங்கள் தாக்குமுன் வேவுபார்த்த பிரிடிஷ் விமானங்கள் கிட்னியாவில் இரண்டு கவசம் பூண்ட கப்பல்களும், நான்கு சஞ்சாரிகளும் இருந்தன என்று கண்டு பிடித்தன. இவைதத் தவிர கீலைத்தாக்கியபொழுது பலமாகப் பழுதுபட்ட நீஸ்நா என்ற யுத்தக்கப்பலும் அங்கு இருந்தது. நீஸ்நாவைப் பழுதுபார்ப்பது சாத்தியமில்லாததால் அதை இப்பொழுது அக்கக்காகப் பிரித்தெடுக்கிறார்கள். மேலும் அங்கு துறைமுகத்தில் அநேக நீர்மூழ்கிகளும், மற்ற ஜெர்மன் கடற்படையைச்சேர்ந்த கப்பல்களுமிருப்பதை வேவு பார்க்கும் விமானங்கள் கண்டன.

கிட்னியாவைத் தாக்கியதிலிருந்து ஜெர்மனியிடமுள்ள மற்ற போர்க்கப்பல்களின் சக்தியை அழிக்கும் விமானத் தாக்குதல் ஆரம்பிக்கப்படுமென்று நினைக்கக்கூடும். கிட்னியாவில் இந்த ஆறு கனமான கப்பல்கள் இருக்கும் வரையில் பால்டிக்கிலுள்ள ருஷ்யக் கடற்படைக்கும், கடற்கரையில் போர் புரிந்து வரும் செம்படைப் பகுதிகளுக்கும், அபாயம் ஏற்படக்கூடும். கிட்னியாவை லங்காஸ்டர் விமானங்கள் தாக்கியதென்பது பால்டிக் போர்முனையிலுள்ள ருஷ்ய நடவடிக்கைகளுக்கு நேர்முகமாக ஒத்தாசை செய்தது போலாகும்.

கிட்னியாவிலுள்ள இரண்டு கவசம் பூண்ட கப்பல்கள்—அட்மிரல் ஷீரும், லட்சௌவும் தான். நான்கு சஞ்சாரிகளின் பெயர்கள் இன்னும் வெளிவரவில்லை. ஜெர்மன் கடற்படையில் இன்னும் 'இரண்டு கனமானதும் மூன்று லேசானதுமான சஞ்சாரிகள் இருக்கின்றன.

ஜெர்மன் கடற்படையில் இந்த ஏழு கப்பல்கள்தான் பாக்கியிருக்கின்றன. ஷார்ன் ஹார்ஸட், பிஸ்மார்க், அட்மிரல் வான் டிர்பிட், நீஸ்நா என்ற நான்கு யுத்தக் கப்பல்களில் முதல் மூன்றும் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. நீஸ்நா ஏற்கனவே சொல்லப்பட்டதுபோல் பிரிக்கப்படுகிறது.

கவசம் பூண்ட கப்பல்களில் அட்மிரல் கிராப்ஸ்பீ ஹிட்லரின் ஆக்ஞைப்படி பிளேட் நதியின் முகத்துவாரத்தில் அதன் மாலுமிகளாலேயே மூழ்கடிக்கப்பட்டது.

அதன் கனமான மூன்று சஞ்சாரிகளில் ப்ளுசர் என்னும் கப்பல் 1940-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஆஸ்லோவுக்கருகில் மூழ்கடிக்கப்பட்டது. மற்ற இரண்டு கப்பல்களான அட்மிரல் ஷீலரும், பிரின்ஸ் யூஜனும் எங்கு இருக்கின்றனவென்று புரியவில்லை. அநேகமாக கிட்னியாவிலிருக்கலாம்.

யுத்த ஆரம்பத்தில் ஜெர்மனியிடம் ஐந்து லேசான சஞ்சாரிகள் இருந்தன. அவைகளில் கார்ல்ஸ்ருகி, கோனிக்ஸ்பர்க் என்ற இரண்டு சஞ்சாரிகள் நார்வே நடவடிக்கையில் மூழ்கடிக்கப்பட்டன.

இந்தப் பதினைந்து கப்பல்களின் உதவிகொண்டு அதன் திட்டங்களை நிறைவேற்றுவதாக ஜெர்மன் கடற்படை இலாகா நம்பி இருந்தது. 1914–1918-ம் வருஷங்களில் நடைபெற்ற கடற்போரின் படிப்பினைகளிலிருந்து 1914-ம் வருஷத்தைப் போலவே இப்பொழுதும் நடவடிக்கைகளைக் கையாளவேண்டுமென்று கடற்படை அதிகாரிகள் முடிவுக்கு வந்தார்கள். பிரிடிஷ் கடற்படையைவிட ஜெர்மன் கடற்படை எப்பொழுதும் இளப்பமானதால் கடல் மார்க்கமாகச் செல்லும் சாமான் கப்பல்களை ஏராளமாக அழித்துவிடலாமென்று கடற்தளபதிகள் நம்பியிருந்தார்கள். நீர்மூழ்கிகளுடன் ஒன்றுபட்டு ஜெர்மன் கடற்படை எந்த



திசையிலிருந்தும் இங்கிலாந்துக்கு வரும் சப்ளைகளைத் துண்டித்துவிடுவதென்றும் அதன் மூலம் சாம்ராஜ்யத்தின் மர்ம ஸ்தானங்களில் குழப்பத்தை உண்டுபண்ணிவிடுவதென்றும் கடற்படை இலாகா உத்தேசித்தது.

கடற்படை காப்டனாக இருந்த ஆசிரியர் வான்வால் பேயர் ஹார்ட்ஸ் யுத்த ஆரம்பத்தில் பின் வருமாறு எழுதினார்:—"இதுதான் சகலவிதமான தீரமான முயற்சிகளுடையவும் கடற்படைப்போரில் ஏற்படக்கூடிய தவிர்க்க முடியாத தியாகங்களுடையவும் இறுதி லக்ஷியம்" எதிரிகளின் உயர்வான கடற்படையுடன் போர் தொடுக்காமலிருப்பதுதான் கொள்ளைக்கப்பல்களின் யுத்த தந்திரம். "போரை நடத்தாமலேயே அட்லாண்டிக் போரில் வெற்றி பெற வேண்டுமென்பதுதான் இந்த தந்திரத்தின் நோக்கம்."

ஜெர்மனியின் மகத்தான கப்பல்களின் தாக்கும் சக்தியை ருஜுச்செய்ய ஜெர்மன் கடற்படை இலாகாவுக்குக் குறைவான சந்தர்ப்பங்கள்தான் கிடைத்தன. ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் பிரிடிஷ் கடற்படையை எதிர்த்தபொழுது முதலில் ஜெர்மன் யுத்தக் கப்பல்தான் நஷ்டமாகிற்று. உதாரணமாக, பிஸ்மார்க், ஷார்ன்ஹார்ஸட் என்ற கப்பல்களைச் சொல்லலாம்.

பிரிடிஷ் அமெரிக்க விமானப்படை அபிவிருத்தி அடைந்ததனால்தான் ஜெர்மன் கடற்படையைச் சேர்ந்த பெரிய கப்பல்கள் மகா சமுத்திரத்தில் நடமாட முடியாமல் போய்விட்டன. வெகுதூரம் சென்று வேவுபார்க்கும் வெடிவிமானங்களும் கடற்கரை, விமானத் தாங்கிகளிலுள்ள விமானங்களும் ஜெர்மனியையும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளையும் சுற்றியுள்ள சமுத்திரங்களில் ஏராளமாகச் சென்று ரோந்துசெய்து வந்ததினால் ஜெர்மன் கொள்ளைக் கப்பல்கள் முற்றுகையைத் தாண்டிச்செல்ல கொஞ்சம்கூட வசதி பெற்றிருக்கவில்லை. டிர்பிட்டையும், கோனிக்ஸ்பர்க்கையும் விமானப்படை மூழ்கடித்ததென்றாலும் பிரிடிஷ் கடற்படையும், கடல் விமானங்களுந்தான் பிஸ்மார்க்கை மூழ்கடிக்க உதவி செய்து வந்தன. பிரிடன் அதன் தரைப்படைகளையும், கடல் விமானப் படைகளையும் இவ்வளவு அபாயம் பொருந்திய ஆயுதமாக அபிவிருத்தி செய்யக்கூடிய சக்திபெற்றதென்று ஜெர்மன் கடற்படை இலாகா மதிக்கவில்லை போலும்.

கடைசியாக, பிரிடிஷ், ஜெர்மன் யுத்தக்கப்பல்களுக்கிடையே உள்ள முக்கியமான அமைப்பு வித்தியாசங்களைக் கூறுவோம். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் பல பாகங்களுக்குச் செல்லவேண்டியதினால்ஏற்பட்ட சிரமங்களைத் தவிர்த்துவந்த பிரிடிஷ் கப்பல்களில் வேலையாட்களுக்கும், வெடி மருந்துகளுக்கும், மூஸ்திப்புகளுக்கும், போஷணைக்கும் ஜெர்மன் கப்பல்களைவிட மிகுதியான இடவசதி வேண்டும். ஜெர்மன் கப்பல்கள் கடலில் வெகு காலம் தங்குவதில்லை. துறைமுகத்துக்கு வந்தவுடன் மாலுமிகள் கரையில் வசிக்கவேண்டும்.

ஆகையால் ஜெர்மன் கப்பல்கள் அநேக அறைகளாக பலமாக கட்டப்படுவதற்கு போதுமான இடமிருந்தது. அவைகளை மூழ்கடிப்பதும் சிரம சாத்தியமானது. தண்ணீர் மட்டத்துக்குக்கீழ் மீன்வெடியினால் உண்டாகும் பழுதை, கப்பல் மிதந்துகொண்டிருந்தபொழுதே எளிதில் கண்டுபிடித்துவிடலாம். இவ்விதமான அமைப்பு சௌகரியமிருந்தபோதிலும் ஜெர்மன் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் மூழ்கடிக்கப்படுவதிலிருந்து தப்பமுடியவில்லை.

ஜெர்மனியிடம் எஞ்சியுள்ள கப்பல் படைகளைத் தாக்கும் இறுதிப் போர் கிட்னியா நடவடிக்கையுடன் ஆரம்பமாகிவிட்டது.

---

## ஹிட்லரைப் பற்றிய விருத்தாந்தம்.

ஹிட்லரைப்பற்றி கடைசியாக ஆண்ட்வெர்ப்பிலிருந்து ஒரு விருத்தாந்தம் கிடைத்திருக்கிறது. ஹிட்லரும் கோயரிங்கும் தப்பி ஓடுவதற்காக மாறு வேஷம் போட்டுக்கொண்டார்களாம். ஹிட்லர் கிழவன் போல் வெண்மையான தாடியையும் வெண்மையான போலி மயிரையும் வைத்துக்கொண்டாரும். கோயரிங் ஒரு சிகப்புத் தலையுள்ள ஸ்திரீயைப்போல் வேஷம் போட்டுக்கொண்டாரும். இந்த வேஷத்தைப் பரிக்ஷீத்துப் பார்க்க அவ்விருவரும் ஒரு சாராயக் கடைக்குச் சென்று பீர் கொடுக்கும்படி வேண்டினார்களாம்.

ஹிட்லர் அதற்குப் பொருளைக்கொடுத்தபொழுது பீர் கொண்டுவந்த பெண்மணி "ஹிட்லரே, வர்தனம்" என்று சொன்னாளாம். இந்தப் பெண் மரியாதைக்காக அந்த வார்த்தைகளை உபயோகித்தாள் என்று கோயரிங் சொன்ன பின் அவர்கள் மறுபடியும்

பரீக்ஷை செய்யும் நிமித்தம் மறுபடியும் இரண்டு கோப்பை பீர் கொண்டுவரும்படி சொன்னார்களாம்.

இந்தத் தடவை கோயரிங் பணத்தைக்கொடுத்தார். அப்பெண்மணி "ஹெர் மார்ஷல் கோயரிங், வந்தனம்" என்று சொல்லிச் சென்றாள்.

திகிலடைந்து கோயரிங் அந்தப் பெண்ணைத் திருப்பி அழைத்து "எங்களை நீ எப்படிக் கண்டு பிடித்தாய்" என்று வினவினான். "நான் கோயபல்ஸ் அல்லவா" என்று அவள் மெதுவாகச் சொன்னாள்.

---

## பர்மாவில் பதில் நடவடிக்கை.

### மாண்டலேக்கு அபாயம்.

(கிளாஸ்கோ ஹெரால்ட்)

அமெரிக்க சீனப்படைகள் பர்மா ரஸ்தாவைத் திறந்ததும், பிரிடிஷ் இந்திய சேனை மாண்டலேயின் சுற்றுப்புறங்களை அடைந்ததும் ஜப்பான் பசிபிக்கில் கடல் பலத்தை இழந்ததுபோல ஆசியா கண்டத்திலும் ஜப்பான் பலஹீனமடைந்து வருகிறதென்பதற்குச் சரியான அத்தாக்ஷி என்று கருதப்படலாம்.

அப்பத்திரிகை பின்வருமாறும் சொல்லுகிறது. 1940-ம் வருஷத்தில் பர்மா ரஸ்தா மூடப்பட்டது. அதற்கு இரண்டு வருஷங்களுக்குப்பின் பர்மாவை இழக்கும்படி நேரிட்டது. ஒரு வருஷத்துக்கு மேலாக இந்த அபாயம் அதிகமாக இருந்தது. யுத்த ரகசியத்தினால் நாம் மறுபடியும் பதில் நடவடிக்கையை ஆரம்பிக்க முடியுமாவென்று சந்தேகமாக இருந்தது.

சியாமையும் இந்தோ-சைனாவையும் பிடித்தபின் அந்த வெற்றிகள் சாச்வதமானவை என்று ஜப்பான் மனப்பால் குடித்து சைனாவில் முன்னேறத் துணிவுகொண்டது. ஆகிலும் ஜப்பானைப் பழிவாங்கும் படைகள் இந்தியாவில் சேர்க்கப்பட்டன. அஸ்ஸாமிலிருந்து ஜப்பானைத் துரத்தியடித்தபின் யுத்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டதெனறு தோன்றிற்று. மணிப்பூரிலிருந்து சிண்ட்வின் நதிவழியாக முன்னேறுவது சாவாதானமாகவும் கஷ்ட சாத்யமாகவும் இருந்தது. இதற்கு சீதோஷ்ணமும் பிரதேச அமைப்பும்தான் காரணம். எதிரி முரட்டுத்தனமாகப் போர் புரிந்த போதிலும் அவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பின் வாங்கினான். மாண்டலே போய்விடும் பக்ஷத்தில் ஐராவதியை இழந்துவிடுவதைவிட ராணுவ முறையில் அதிக நஷ்டமேற்படுமென்று எதிரி அறியக்கூடும்.

ஜப்பானியப் படைகள் மகோன்னஸ்திதியான திசையிலிருந்தபொழுதும் அவ்வளவு தூரத்திலிருக்கும் போர்முனைகளை பலப்படுத்துவது என்றது சுலபமானதல்ல. ஜப்பானுக்குச் சமீபத்திலும், ஆஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் பிரிடிஷ் படைகளைத் தாக்குவதுதான் அவர்களுக்குப் பத்திரமானதென்று ஜப்பான் நினைத்தது. இந்த திட்டத்தில் ஜப்பான் இரண்டு தவறான அபிப்பிராயங்களைக் கொண்டது. தென்மேற்கு பசிபிக்கிலுள்ள ஜப்பானியப் படைகள் உபயோகமற்ற அற்பமான ஒரு நடவடிக்கையில் வீண்காலம் போக்கி சின்னாபின்னம் அடைந்துவிட்டன. பர்மாவைப் பலமான படைகளுடன் காப்பாற்றுவது என்பதை இது பாதித்துவிட்டது. கடல் தாண்டியிருக்கும் கிழக்கு இந்தீஸைப் பிடித்ததுடன், தென்கிழக்கு ஆசியாவில் சைனாவில்தான் எதிரிக்கு அதிக லாபம் கிடைத்தது. ஆர்தர் துறைமுகத்தைத் தாக்காமலும் அமெரிக்காவை வலுச்சண்டைக்குஇழுக்காமலும் இருந்திருந்தால் சீனப் போரில் அதிக வெற்றியை ஜப்பான் அடைந்திருக்கக்கூடுமென்பதினால் ஜப்பானின் ராஜீய ஆலோசனை துக்கிக்கத்தக்கதாகயிருக்கிறது. ஐரோப்பிய சிறிய நாடுகளைப்போல ஜப்பானும் ஜெர்மனியின் வலுவைக்கண்டு மயங்கிவிட்டது. அவைகளைப் போல் ஜப்பானுக்குஅச்சு நாடுகளுடன் ஏற்பட்ட நட்பும் தோல்வியை உண்டுபண்ணிவிட்டது. அதன் இறுதிஅழிவும் ஏற்படும்.

---

## பர்மாவில் ஜப்பானின் சங்கடம்.

### சர்ப்பராக் கப்பல்களில் பெருவாரி நஷ்டம்.

(பிரியான் டன்ஸ்டால்).

பிரிடிஷ் கடற்படை ஜப்பானியர்களை கிழக்கு சமுத்திரங்களில் பலமாகத் தாக்கி வருகின்றனவென்றும் இது அதிகரிக்குமென்றும் ஹேஷ்யங்கள் தோன்றுகின்றன.



வங்காளக்குடாக் கடலில் அட்மிரல் மௌண்ட் பேட்டனிடமுள்ள பிரிடிஷ் கடற்படை, ஆஸ்திரேலியக் கடற்படை இந்தியத் துறைமுகத்திலிருந்து செல்லும் இந்தியக்கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் பர்மாவைச் சேர்ந்த அரக்கான கடற்கரையில் மற்றொரு ஒன்றுபட்ட நடவடிக்கையை மேற்கொண்டன. இந்த நடவடிக்கையில் அக்யாபுக்கு தென்கிழக்கில் 65மைல்களிலுள்ள ராம்ரீத் தீவு தாக்கப்பட்டது. ஜனவரி மாதம் 21-ம் தேதியன்று கடற்படை, விமானப்படை ரக்ஷணையுடன் பிரிடிஷ் இந்தியத் துருப்புகள் அத்தீவிலிறங்கின. ஜப்பானியரின் எதிர்ப்பே காணப்படவில்லை. ராம்ரீத் தீவில துறைமுக வசதிகள் கிடையாது. ஆகிலும் கியாக்பியூ என்ற தலை நகரத்தில் 10,000 டன்கள் எடையுள்ள சாமான் கப்பல்கள் தங்கக்கூடிய ஆழமான சமுத்திரமிருக்கிறது. அங்கிருந்து சாமான்களை லேசான படகுகளில் தான் கொண்டு போகவேண்டும்.

ராம்ரீ ஒரு விமான தளமென்றதினாலாவது அல்லது வருங்காலத்தில் அது உபயோகமுள்ளதாக இருக்கக்கூடுமென்பதினாலாவது இந்த நடவடிக்கை முக்கியத்வமுள்ளதல்ல. ஆகிலும் சென்ற சில வாரங்களுக்குள் கடற்தளபதி மௌண்ட் பேட்டனின் படைகள் அரக்கான் கடற்கரையில் மேற்கொண்ட ஒன்றுபட்ட நடவடிக்கைகளில் இது மூன்றாவதாகும். இதிலிருந்து இப்பொழுது கடற்தளபதி மௌண்ட் பேட்டனிடம் படைகளை இறக்கப் போதுமான படகுகளிருக்கின்றனவென்பது வெளியாகுகிறது. அதற்குமுன் அவைகள் ஐரோப்பாவின் முதன்மையான தேவைகளுக்கு அவசியமாக இருந்தன.

ராம்ரீத் தீவின் தெற்கு ஓரம் ரெங்கூனிலிருந்து 350 மைல்களுக்குச் சற்று அதிகமான தூரத்தில் தானிருக்கிறது.

கிழக்கிந்தியக் கடற்படையைச் சேர்ந்த பிரிடிஷ் நீர்மூழ்கிகள் ஜப்பானுக்கும், ஜப்பான் வசமுள்ளதுமான ஸப்ளை கப்பல்களில் 84 கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றனவென்று கடற்படை இலாகா சமீப காலத்தில் வெளியிட்டது. இதையும் சேர்த்துக்கொண்டால் சென்ற ஆறு மாதங்களில் பிரிடிஷ் நீர்மூழ்கிகள் 200 ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றனவென்று சொல்லலாம்.

இதை விட, அநேக ஸப்ளைக் கப்பல்கள் பீரங்கிப் பிரயோகத்தினால் பழுது படுத்தப்பட்டிருக்கின்றன அல்லது கடற்கரையில் அடைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையும் எதிரி இழந்துவிட்டானென்றே சொல்லலாம். இந்தக் கப்பல்களின் பெரும்பாகம் சிறிய ரகக் கப்பல்கள்தான். ஆகிலும் அவைகளிலுள்ள சாமான்கள் மிகவும் உபயோகமுள்ளவை. முக்கியமாக சிங்கப்பூரிலிருந்து மலாக்கா ஜலசந்திவழியாக ரெங்கூனுக்கு அனுப்பப்படும் சாமான்கள் பர்மாவிலுள்ள ஜப்பானியப் படைகளின் தேவைகளுக்கு உபயோகப்படக்கூடியவை.

பர்மாவில் ஜப்பானின் சங்கடத்தை அதிகரிப்பதற்கு பிரிடிஷ் நீர்மூழ்கிகள்தான் முக்கிய காரணமென்பதும் உஷ்ணந்தரேகை பிரதேசத்தின் கடுமையான சீதோஷ்ண ஸ்திதியிலும் கிழக்கு சமுத்திரங்களில் வெகுதூரம் ரோந்து செய்வது என்ற பலமான நடவடிக்கைகளிலும் நீர்மூழ்கிப்படை குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுவருகிறதென்பதும் சந்தேகமில்லை. கடைசியாக, கிழக்கு சமுத்திரங்கள் சம்பந்தப்பட்டமட்டில் கடற்தளபதி ஸர் ப்ரூஸ் பிரேசரின் கப்பலான ஹௌ என்ற பிரிடிஷ் யுத்தக்கப்பல் ஸிட்னிக்கு வந்துவிட்டதென்பதினால் ஆஸ்திரேலியத் துறைமுகங்களிலுள்ள பிரிடனின் பசிபிக் கடற்படை பலம் அதிகரித்துவருகிறதென்பதை அது ஞாபகப்படுத்துகிறது. இந்தக் கடற்படை வெகு தூரம் சென்று அதினிடமுள்ள பீரங்கிகளையும், விமானங்களையும் திறமையுடன் உபயோகித்து ஜப்பானியக் கடற்படையைத் தாக்குவதிலும் இந்து மகாசமுத்திரம், தெற்கு பசிபிக் முதலிய பிராந்தியங்களைத் தாண்டி சஞ்சாரம் செய்வதிலும் ஈடுபடும்.

---

## டோகியோவில் பிரமைத்தெளிவு.

### பிரதிநிதி சபையில் காயிஸோவின் சொற்பொழிவு.

ஜப்பானிய பிரதிநிதி சபையில் ஜப்பானிய பிரதம மந்திரியான ஜெனரல் காயிஸோ சமீப காலத்தில் ஆற்றிய சொற்பொழிவு ஜப்பானுக்கு அநேக நாட்களாக ஏற்பட்டு வரும் பிற்போக்குகளின் படிப்பினையை ஜப்பான் நன்குணர்ந்து விட்டதென்பதை வெளிப்படுத்துகிறது என்று யார்க் ஷையர் போஸ்டு பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது.

துரோகமாக ஆரம்பத்தில் தாக்கி கிடைத்த வெற்றிகளுக்குப்பின் ஜப்பானுக்கிருந்த அகம்பாவம் பிடித்த நம்பிக்கை இப்பொழுது போய்விட்டது. நேசதேசத்தாரின் நிபந்தனையற்ற சரணகதிப் பேச்சு பரிசீலிக்கக் கூடியதைத் தவிர வேறொன்றுமில்லை என்று காயிஸோ சொன்ன போதிலும் அவனுடைய சொற்பொழிவில் துயரமும், தத்வ போதமும் மிகுதியாக இருந்தன. "தேசத்துக்கு யுத்த ஆரம்பத்திலிருந்து இப்பொழுதுதான் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. லூஸானில் அமெரிக்கப் படைகளிறங்கியபின் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. பஸிபிக்கிலுள்ள நாளைய நிலைமையில் நம்பிக்கையுடனிருக்க முகாந்திரமில்லை" என்று அவன் சொல்லுகிறான். பிரிட்டனின் நெருக்கடியான சமயத்தில் மிஸ்டர் சர்ச்சில் ஒப்புக்கொண்டது போல், இந்த யதார்த்தமான பேச்சு புத்தி சாலித்தனமும், ராஜதந்திரமும் கூடியதாகயிருக்கிறது. ஆனால் மிஸ்டர் சர்ச்சில் சொற்பொழிவாற்றிய பொழுது பிரிட்டன் அதன் ஐச்வர்யங்களை அப்பொழுதுதான் ஒன்று திரட்டி வந்தது. பிரிட்டன் நிலைமையில் ஏற்பட்ட நெருக்கடியை நன்கு உணர்ந்தது. மேலும் சுலபமாகக் கிடைத்த வெற்றிகளைக்கண்டு பிரிட்டன் தலைகொழுத்து நிற்கவில்லை.

காயிஸோவின் யதார்த்தமான பேச்சு உத்சாகமூட்டுவதைவிட ஜனங்களுக்கு மனச்சோர்வைதான் உண்டுபண்ணும். நேசதேசத்தார்கள் வெகுதூரம் வந்து விட்டார்களென்பதில் ஜப்பானுக்கு சௌகரியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று காயிஸோ நினைக்கலாம். ஆகிலும் ஜப்பானுக்கு கடற்படை, விமானப்படை பலம் பூராவாக இருந்த பொழுதும் கூட அது நேசதேசத்தாரின் கடல் மார்க்கங்களை வெற்றிகரமாகத் தாக்க முடியவில்லை. அதற்குப் பிறகு அதற்குப் பலமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தியை அதிகரிப்பதென்று இப்பொழுது நினைப்பதும் காலந்தப்பியதாகும். ஜப்பானின் போக்குவரத்து மார்க்கங்களும் குறுகலாக இல்லை. ஏனெனில் டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகளில் அதற்கு இன்னும் பிரதேசங்களிருக்கின்றன. நேசதேசத்தார்கள் அதற்கும் பீதியை உண்டுபண்ணிவருகிறார்கள். ஜப்பான் சுலபமாக வெற்றிபெற முடியாதென்று ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி ஷிகமிட்ஸு முடிவு செய்ததும் அவனுடைய பேச்சைக் கேட்டவர்களுக்கு அது மதிப்புக் குறைவான யோசனை என்று தோன்றிற்று.

---

## கூட்டுறவு சங்க ஸ்டோர்கள்.

### ஆந்தனி ஹொர்ன் (க்ருஸெடர் பத்திரிகை).

மூன்றில் ஒரு வீட்டிற்கு பால் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த வியாபாரியால் ஸப்ளை செய்யப்படுகிறது. நான்கில் ஒரு வீட்டார் கூட்டுறவு விநியோக வண்டியிலிருந்து ரொட்டியை வாங்குகிறார்கள். பிரிட்டனில் வீடுகளுக்கு ஸப்ளை செய்யப்படும் தேயிலை கூட்டுறவு சங்க ஸ்டோரிலிருந்து கிடைத்து வருகிறது.

புள்ளி விவரங்கள் ருசிகரமாகயிருக்காது. ஆகிலும் இவைகள் குறிப்பான உண்மைகள் என்பதை அறிய ஐன்ஸ்டீன் அல்லது மாண்டகு நார்மானுடைய அறிவு தேவையில்லை.

அவைகள் மிகவும் சிலாக்யமாக இருப்பதால் சிலருக்கு அவைகளின் மூலம் சங்கடம் ஏற்பட்டுவருகிறது. அவர்கள் "அபாயம் விளைவிக்கக்கூடிய அபிவிருத்தி", "கிடுக்கிகள்" "நியாயமற்ற போட்டி" என்றெல்லாம் புகார் செய்துவருகிறார்கள்.

ஆகிலும் தேசத்திற்குத் தேவையான மாவின் பாதிபாகம் கூட்டுறவு சங்கத்துடன் தொடர்பு இல்லாத இரண்டு தனிப்பட்ட ஸ்தாபனங்களால் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் ஒரு தனிப்பட்ட கம்பெனி பிரிட்டனுக்குத் தேவையான பன்றிக்கறியின் பாதி அளவைத் தயார் செய்கிறதென்றும் மறந்து விடுகிறார்கள்.

அதுபோல சாதாரணமான குடித்தன ஸ்திரீ—அவள்தான் தேசத்தின் பொருளைச் செலவிடுகிறவள்—கவலைப்படுகிறாளா என்று நான் கேட்கிறேன். என்னுடைய பொருளுக்குச் சரியான பொருமானம் கிடைக்கிறதாவென்று அறிய அவள் விரும்புகிறாள்.

மேலும் பிரிட்டன் சம்பந்தப்பட்டமட்டில் யுத்தத்துக்குப் பிந்திய உலகத்திய தொழிற்சாலைகளைப்போல கடை வியாபாரமும் செவ்வன நடைபெற வேண்டுமென்று அது பிரியப்படுகிறது.



உன்னுடைய பொருள் வீணாகச் செலவிடப்படுகிறதென்று நீ அறிந்து விடுவாய்.

நீ செலவு செய்யும் ஒவ்வொரு பவுனிலும் பாதிபாகம் பொருளை விநியோகம் செய்யும் செலவிற்கு ஈடு செய்யப்படுகிறது. அந்தச் செலவு ஏன் இவ்வளவு அதிகமாக இருக்க வேண்டுமென்பதற்கு நான் காரணங்களைக் கூறுகிறேன். பிரிட்டனில் 11 குடும்பத்தார்களுக்கு ஒரு கடை இருக்கிறது. போக்குவரத்து சாதனங்களிலிருப்பவர்கள், குமாஸ்தாக்களைத் தவிர தொழிலாளர்களில் ஏழில் ஒருவர் மற்ற ஆறு பேர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்துவருகிறார்.

ஒரு மாட்டை மூன்று வருஷங்கள் ரக்ஷணை செய்து அதன் சவத்தைகடல் தாண்டி 1,000 மைல்கள் கொண்டுபோவதற்கு செலவாகும் தொகை மூன்று நாட்களுக்குள் அதன் இறைச்சியை விநியோகம் செய்து விற்பனை செய்வதற்கும் செலவாகிறது

இவ்விதமாக பிரிட்டிஷ் குடும்பங்களுக்கு கடை சாமான்கள், ஆடைகள், மற்ற அத்யாவச்யமான பொருள்கள், சில சுகமான வாழ்க்கைக்குரிய பொருள்கள் முதலியவற்றை ஸப்ளை செய்ய பிரிட்டனின் மகத்தான ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட்டுவிட்டது.

இதற்கு ஸ்திரீகள் ஜவாப்தாரியா?

டாப்ஸியைப்போல அது வளர்ந்துவிட்டது. டாப்ஸியைப் போலில்லாமல் அது பெரிய பூதாகாரமான வளர்ந்து செல்லும் பிராணியாகிவிட்டது.

சில வருஷங்களுக்கு முன் பிரிட்டிஷ் கமிஷன் சொன்னதுபோல் விநியோகம் செய்யும் செலவுகள் ஜனசமூகம் நிரந்தரமாகப் பொறுக்கக்கூடாத ஒரு பெரிய பளுவாகும்".

இவ்விதமான பலவகைப்பட்ட பொருள்கள் தேவை என்று சொல்லும் ஸ்திரீகளும் இதற்கு ஒரு சிறிது ஜவாப்தாரிகள்தான். இதன் பயனாகத்தான் கடைகள் எங்குபார்த்தாலும் உண்டாகியிருக்கின்றன. அவைகளின் செலவை வாழ்க்கைக்காரர்கள்தான் பொருத்துக் கொள்ளவேண்டும்.

மிகவும் சிக்கலான ஜனசமூகத்தில் வியாபாரம் ஒன்றின்மூலம்தான் ஒருவன் தன்னிச்சையாக இருக்கலாம்.

இந்தத் தொழிலுக்கு அனுபவம் தேவையில்லை. ஒரு சிறிது மூலதனமும் அபாரமான நம்பிக்கையும் அவசியமாகும். அனுபவ மற்றவர்களும் இதில் மேன்மையை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் ஜன சமூகத்திற்கு அரியசேவை செய்திருக்கிறார்கள். இன்னும் சிலர் அதில் முன்னேற்றமடையவில்லை.

ஆகிலும் அவர்களின் இகழ்ச்சியைப்பற்றி தேசம் வருத்தப்படக்கூடியதில்லை. ஏனென்றால் அவர்களின் வியாபாரம் சாமான்களை வாங்கும் குடும்ப ஸ்திரீயின் அபிருசியைப் பொருத்து இருக்கிறது.

தெருக்கோடியிலுள்ள சிறிய கடை எக்காலத்திலும் நிலைத்திருக்கும். ஏனெனில், அதில் ஜனங்களின் தேவைக்குரிய—அதாவது, சுருட்டுக்கட்டு, சிற்றுண்டி, மாவு இன்னும் சில முக்கியமான தேவைப் பொருள்கள்—பொருள்கள் அதிலிருப்பதால் அதற்கு எப்பொழுதும் கிராக்கி இருக்கும்.

ஒருவகையில் இந்த சிறிய கடைகள்தான் விநியோகம் செய்வதில் குழப்பத்தை உண்டு பண்ணுகின்றன. இந்தக் கடைகளில் பிரயாணிகள்தான் சாதாரண காலங்களில் சாமான்களை விக்கிரயம் செய்வார்கள்.

ஒரு நாள் காலையில் ஒரு பெரிய முதலாளி தன்னுடைய சரக்குகளை விளம்பரம் செய்ய வேண்டுமென்பான். பிற்பகலில் மற்றொரு முதலாளியின் ஏஜண்டு அங்கு வந்து அவனுடைய சரக்குகளை சிலாகித்துப் பேசுவான். கடை வியாபாரியை அநேகர் தொந்தரவு செய்து அவர்களுடைய சரக்குகளை நன்கு விளம்பரம் செய்யவேண்டுமென்று வற்புறுத்துவார்கள்.

ஒவ்வொரு வியாபாரத்திற்கும் மொத்த வியாபாரி சிரமப்பட்டுத்தான் தீரவேண்டும். ஒவ்வொரு வியாபாரத்திலும் ஏற்படும் செலவை வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் பொருத்துக் கொள்ளவேண்டும்.

விலைவாசிகள் வியாபார ஒப்பந்தமூலம் ஒரு கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த விலை எல்லா செலவையும் சேர்த்துத்தானிருக்கும்.

அந்த விலையானது பெரிய ஸ்டோர்கள் பொருளைச் செலவிட்டு சிறிய கடைக்காரர்களை அப்புறப்படுத்தக்கூடியவகையில் வசதியளிக்கக்கூடியதாகத்தானிருக்கும். கடைசியாக கவனிக்கும்பக்ஷத்தில் நீங்கள் ஒரு பெரிய ஸ்டோருக்குச் சென்று காட்டியதை எடுத்தும் பண்டைக் கேட்டுவிட்டு சாமான் வாங்கினீர்களா அல்லது சாமான் வாங்கச்சென்று பண்டைக் கேட்கத் தங்கினீர்களா என்று சொல்லமுடியாமல் போய்விடும். பலவகைப்பட்ட சாமான்களை சில சமயங்களில் பெரிய ஸ்டோர்கள் ஸப்ளை செய்வதில் போட்டி போடுகின்றன. உதாரணமாக, அநேகம் ஸ்டோர்களில் பலரக மேஜோடுகள் 10,000-மும், பலரக கை அங்கியில் 12,000-மும், பலரக கைக்குட்டைகளில் 5,000-மும், பலரக தூக்குப் பைகளில் 4,000-மும், பலரக பல் தேய்க்கும் தூடப்பங்களில் 135-ம் இருந்தன.

இந்தப பலரக சாமான்கள் குழப்பத்தை அதிகரித்தனவே ஒழிய குறைத்துவிடவில்லை. குடித்தன ஸ்திரீ ஏராளமான பொருளைச் செலவிடவேண்டியதாக இருந்தது. ஆகிலும் போட்டியுடன் பலரகங்களுமிருந்தபோதிலும் ஒருவகைப்பட்ட வியாபாரமுறை தலைதூக்கி நின்றது. சீர்கேடான நிலைமையிலிருந்தபொழுதும் அதற்குப் பிறகும் கூட்டுறவு சங்கங்கள் தான் முன்னேற்றமடையக்கூடியவை என்று வெளிப்பட்டது.

என்னுடைய ஆராய்ச்சியில் பிரிடனின் பாதிக்குமேற்பட்ட குடும்பங்கள் அங்கத்தினர்களாக உள்ள கூட்டுறவு சங்கங்கள்தான் சில்லரை வியாபாரத்தை ஒழுங்கான முறையில் நடத்தி வந்திருக்கின்ற என்று கண்டிருக்கிறேன். மிகவும் நெருக்கமான சமயத்திலும் அவைகள் வெற்றிகரமாக வியாபாரத்தை நடத்தியிருக்கின்றன.

வியாபாரம் லாபம் பங்கு லாபமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. ஒரு டவுனுக்கு 1 ஷில்லிங் 8 பென்ஸ் வீதம் சாராசரி லாபம் கிடைத்து வருகிறது.

## புத்தியற்ற குற்றச்சாட்டு.

பங்கு லாபத்தை எல்லோரும் கடுமையாகத் தாக்கி வருகிறார்கள். கூட்டுறவு சங்கத்தின் லக்ஷியத்தை அறியாதவர்கள்தான் அதன் பேரில் குறை கூறுவார்கள்.

அதில் எவ்வளவு குறைகள் இருந்தாலும் கூட்டுறவு சங்கங்கள் வாடிக்கைக்காரர்கள் சௌகரியத்துக்காகத்தான் நடத்தப்படுகின்றன. வாடிக்கைக்காரர்களுக்கு விருப்பமில்லாவிடில் அவர்கள் மற்ற இடங்களில் வாங்கப் போய்விடுவார்கள்.

கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்களை ஆராய்ச்சி செய்தபொழுது அவர்கள் அவர்களுக்குவேண்டிய சமான்களின் நான்கில் மூன்று பாகத்தை ஸ்டோர்களிலிருந்தும் மற்றவைகளை மற்ற கடைகளிலிருந்தும் வாங்கி வந்தார்களென்றும் அதையும் ஸ்டோர் முதலாளிகளிடம் அறிமுகப்படுத்தினார்களென்றும் தெரியவருகிறது. அவர்கள் தனிப்பட்ட நபர்களின் சாமான்களைத்தான் வாங்கப் பிரியப்படுகிறார்கள்.

கூட்டுறவு சங்கங்களை எவ்வளவு பேர்கள் உபயோகிக்கிறார்கள் என்பதை 8 லக்ஷம் மெம்பர்களுள்ள லண்டன் கூட்டுறவு சங்கம் உலகத்திலேயே மிகப்பெரிய சில்லரை வியாபார ஸ்தலம் என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இதேவிதமாக அநேக தொடர்புள்ள ஸ்டோர்களிலும் மிலியன்கள்கணக்கான வாடிக்கைகாரர்களிருக்கிறார்கள். அவர்களும் அதை ஆதரவு செய்துவருகிறார்கள். ஏனெனில் அவைகள் கூடியமட்டில் விலைவாசியைக் குறைத்து ஜனங்களுக்கு உயர்தரமான சாமான்களையும் இதர அழகான பொருள்களையும் சப்ளை செய்து வருகின்றன.

யுத்தத்திற்குப் பிறகு விநியோக முறையில் ஏற்பட்டுள்ள அழிவைக் குறைத்துவிட நிர்வாகம் முயற்சி எடுத்துக்கொள்ளும். விநியோகம் சம்பந்தமாக யுத்தம் நிர்வாகத்துக்கு அநேக படிப்பினைகளை போதித்திருக்கிறது. விநியோகத்திற்காக ஒருஷில்லிங் விலையுள்ள சாமானின் பொருமானத்தில் எவ்வளவு செலவிடப்படுகிறதென்றும் அவர்கள் அறிவார்கள். ஆகையினால்தான் உணவுப்பொருள் மந்திரி இலாகா கடைகாரருக்கு வெண்ணை விற்பனையில் 10 சதவிகிதம்தான் லாபம் கொடுத்து வருகிறது.

இது விலைவாசியின் கட்டுப்பாட்டின் மூலம் அமுல்நடத்தப்படுகிறது. விலைக்கட்டுப்பாடும் அநேக நாட்கள் வரையில் நீடித்திருக்குமாகையால் நிர்வாகம் விநியோகச் செலவைக் குறைத்துவிடலாம்.

பிரிடனின் வியாபாரத்துக்கு எலலாவிதமான வியாபார ஸ்தலங்களும் அவசியமானவை. சின்னக்கடைகளையும், பெரிய ஸ்டோர்களையும், கூட்டுறவு ஸ்டோர்களையும் எடுத்துவிட வேணுமென்பது முட்டாள் தனமாகும். விலைவாசியைக் குறைத்து வைக்க அவைகள் முக்கியமானவை.



புதிய பிரிடனில் கடைகளைத்தவிர மிஸஸ் ப்ரௌன்கள்தான் அதிகமாக காணப்படுவார்கள். சரியான விலைவாசி இருக்கும் பொழுது வாடிக்கைகாரர்கள்தான் சௌகரியமடைவார்கள்.

---

# மின்சாரத்தைப் பரவச் செய்வது—கிரிட் திட்டம்.

## தேசமளாவிய விநியோகமுறை.

**ராபர்ட் நெல்ஸன்.**

(லண்டன் காலிங்).

1935-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் பிரிடனில் பொதுமக்களுக்குச் சொந்தமான மின்சார பரப்புக் கம்பிகள் மூலம் மின்சாரம் பிரிடன் பூராவிலும் பரவச் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இதற்குத்தான் கிரிட் திட்டம் என்று பெயர். 1935-ம் வருஷத்துக்குமுன் அந்த பிரதேசங்களில் பொதுஜன நன்மைக்குறிய மின்சாரம் ஸப்ளை செய்யப்பட்டு வந்தது. ஆகிலும் பிரிடனில் தான் ஒன்றுபட்ட மின்சார ஸப்ளை திட்டம் தேசம் பூராவுக்கும் பிரயோஜனப்படும்படி முதல்முதலில் கையாளப்பட்டது. அதிக ஜனநெருக்கமுள்ள ஒரு தேசத்தில் இது மிகவும் சுலபமான அபிவிருத்தியாக இருந்தது. ஆகிலும் அந்த திட்டத்தில் அநேக சிக்கலான இஞ்சினியரிங் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டியிருந்தன.

இந்த சர்ச்சையில் நாம் மின்சார உற்பத்தியைப் பற்றிப் பேசவில்லை. மின்சாரத்தை எவ்விதம் பரவச்செய்வது, எவ்விதம் அதை விநியோகம் செய்வது என்பதைப்பற்றித்தான் நாம் கவனம் செலுத்தவேண்டும். பொதுஜன நன்மைக்காக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் விநியோகத்தை கட்டுப்படுத்துவதும் அதிகார வர்க்கத்தாரின் அமுலுக்குள்ளேயே இருந்துவருகிறது. ஆகிலும் மின்சார உற்பத்திசாலைகள் தனிப்பட்டவர்களின் சொந்த ஸ்தாபனங்கள். ஆனால் கிரிட் திட்டம் அவ்விதமிருக்கவில்லை.

பிரிடனில் அந்தந்த பிராந்தியத்திற்கு மின்சார ஸப்ளை செய்யும் மானோபலிஉள்ள 600 தனிப்பட்ட பொதுஜன மின்சார ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில் விஸ்தாரம் வேறுபட்டது. சிறிய நகரங்களிலிருந்து 100-க்கணக்கான சதுர மைல்கள் கொண்ட பாப்புகளுமிருக்கின்றன. பெரிய ஸ்தாபனங்கள் நகரங்களையும் தாண்டி அதைச் சுற்றிலும் உள்ள நாட்டுப்புறங்களுக்கும் மின்சாரத்தை ஸப்ளை செய்துவருகின்றன. விரிவாகச் சொன்னால் கிரிட் திட்டம் வருவதற்குமுன் ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒவ்வொரு மின்சார உற்பத்தி யந்திரமும் இருந்துவந்தன. மொத்தமாக 600 யந்திர சாலைகள் இருந்தன. கிரிட் திட்டத்தின்படி மின்சார உற்பத்தி பெரியதும் சிக்கனத்தோடுகூடியதுமான நிலயங்களில் ஒன்றுபடுத்தப்பட்டது. அப்பேற்பட்ட உற்பத்திசாலைகளும் மிகுதியாகத் தேவையுள்ள நிலயங்களில் அமைக்கப்பட்டன.

1935-ம் வருஷத்தில் கிரிட் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டபின் பொதுஜன உபயோகத்துக்காக மின்சாரத்தை உற்பத்தி செய்துவந்த சிறிய யந்திரசாலைகள் பிரிடனில் நின்றுபோய்விட்டன. கிரிட் திட்டத்துக்காகப் பொருக்கி எடுக்கப்பட்ட மின்சார உற்பத்தி நிலயங்கள் 1938-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 31-ம் தேதியன்று 138 ஆக இருந்தது. யுத்த காரணத்தினால் அதற்குப் பிந்திய புள்ளி விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இந்த ஸ்டேஷன்கள் எல்லாம் 1938-ம் வருஷத்தில் பொது ஜனங்களின் தேவைக்குறிய மின்சாரத்தில் 90 சதவிகிதம் உற்பத்திசெய்தன.

ஆனால் நாம் கிரிட் திட்டத்தைப் பற்றிப் பேசுவோம். கிரிட் திட்டத்தை நிறைவேற்றும் சட்டம் 1926-ம் வருஷத்தில் பார்லிமெண்டில் பாஸ் செய்யப்பட்டது. அப்பொழுது மத்திய மின்சார சங்கமும் அமைக்கப்பட்டது. இந்தப் போர்டின் அலுவல்கள் மூன்று. (1) கிரிட்டை அமைப்பது; (2) பொருக்கியெடுக்கப்பட்ட 138 நிலயங்களும் உண்டுபண்ணப்பட்ட மின்சாரத்தை விலைக்கு வாங்கி அதை மறுபடியும் விற்பனை செய்வது; (3) அந்த மின்சாரத்தை தேசம் பூராவிலுமுள்ள 600 நிலயங்களுக்கும் விநியோகம் செய்வது.

கிரிட் திட்ட மூலமாக மத்திய மின்சார சங்கம் எல்லாப் பெரிய நகரங்களுக்கும், மாகாணங்களுக்கும் அநேக சுற்றுப்புற கிராமங்களுக்கும் மின்சாரத்தை ஸப்ளை செய்து வருகிறது. சில வருஷங்களுக்குமுன் கிராமங்களுக்கு மின்சார ஸப்ளை கிடைக்குமென்று கிராம வாசிகள் கனவிலும் கண்டிருக்கமாட்டார்கள்.

மின்சாரத்தைப் பரவச்செய்யும் அமைப்பும் திட்டப்படி நிறைவேற்றப்பட்டது. பிரிடன் 10 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் தேசிய திட்டத்துக்கு ஒத்தவாறு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. இந்தப் பத்து ஜில்லாக்களின் பொதுவான அம்சங்கள் பின்வருமாறு: (1) நிரந்தரமாக வேலை செய்துவரக்கூடிய பெரிய மத்திய நிலயத்திலுள்ள மின்சார உற்பத்திசாலைகளைப் பொருக்கி எடுப்பது; (2) அநாவசியமான நிலயங்களை மூடிவிட்டு அவைகளை மின்சாரத்தை பரவச்செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் பொதுப்படையான திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுவது; (3) 132,000 வோல்ட்கள் சக்தியுள்ள மின்சாரத்தைப் பொருத்துக்கொள்ளக் கூடியதும் ஒவ்வொரு ஸர்க்கூட்டிலும் 50,000 கிலோவாட் மின்சாரத்தைக் கொண்டுபோகக்கூடியதுமான மின்சாரக் கம்பிகளை ஜில்லாவின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கும் ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கும் இணைத்து அமைப்பது.

பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் திட்டத்தில் 300 முக்கியமான ஸ்டேஷன்கள் மூலம் மின்சாரத்தை விலைக்கு வாங்கும ஸ்தாபனத்திற்கு மின்சாரம் ஸப்ளை செய்யப்படுகிறது. இந்த திட்டம் பூர்த்தியடைய 8 வருடங்களாகின. 1934-ம் வருஷ முடிவில்தான் அந்த திட்டம் பூர்த்தியடைந்தது. தேசமளாவிய திட்டத்தின் ஸ்தைரியத்தை ஏற்படுத்த நாம் நிர்க்காலோசனை செய்யவேண்டும். இதன் விரிவான கொள்கை யாதெனில், மத்திய மின்சார சங்கம், மொத்த வியாபாரி போல எல்லா ஸ்டேஷன்களிலிருந்தும் கிடைக்கும் மின்சாரத்தை ஒன்று திரட்டுகிறது. உற்பத்திச் செலவை அனுசரித்த குறிப்பிட்ட விலைக்கு மின்சார உற்பத்தி நிலயங்களிலிருந்து மின்சாரத்தை விலைக்கு வாங்குகிறது. அந்த மின்சாரத்தை மத்திய சங்கம் மின்சார ஸப்ளை ஸ்தாபனங்களுக்கு ஒரு குறிப்பிட்ட விலைக்கு விற்று வருகிறது. அந்த விலையில் கீழ்க்கண்ட அம்சங்களின் செலவும் அதற்கு சிறிது லாபமும் சேர்க்கப்பட்டு இருக்கிறது.

(1) மின்சார கிரயம், அதை வேறு இடத்துக்குக் கொண்டுபோகும் செலவு.

(2) முதலுக்கும் வட்டிக்குமாக சிறிது தொகை.

(3) மத்திய போர்டின் சிப்பந்தி செலவுகள்.

கடைசியாக இவ்விதமான ஒன்றுபட்ட மின்சார ஸப்ளை விநியோகத்தைக் கையாளுவதின் சாதகத்தைப் பற்றி ஒருவார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஜனநெருக்கம் அத்யாவச்யமானதல்ல. நடைமுறையில் இந்த திட்டத்தைக் கையாளுவதில் உலகத்தில் வெவ்வேறு பாகங்களில் முறைகள் மாறுபாடடையலாம். பொதுவான ஒரு திட்டத்தை நிறுவமுடியாது. ஆகிலும் அடிப்படையான நோக்கம் ஒன்றுதான். அதாவது சந்தர்ப்பத்திற்கு ஒத்தவாறு எவ்வித உபயோகத்துக்கும் மின்சாரம் குறைந்த விலைக்கும் யதேஷ்டமாகவும் பலபாகங்களிலும் ஸப்ளை செய்யப்படவேண்டும். நடை முறையில் கையாளுவதிலும் சட்ட திட்டங்களில் ஏற்படக்கூடிய குறைபாடுகளையும் உத்தேசித்துத்தான் பிரிடனில் ஏற்பட்ட அனுபவம் மற்ற நாடுகளுக்கு உபயோகமுள்ளதாக இருக்கும்.

---

## கிச்சனர் சர்வகலாசாலையில் புதிய திட்டம்.

### திறமையுள்ள ஆபீஸர்களின் பயிற்சி.

மேன்மைதங்கிய இந்திய சேனாதிபதியான ஜெனரல் ஸர் கிளாடி ஆசின்லெக் ஜான்ஸியிலிருந்து 64 மைல்களிலுள்ள நௌகாங்கிலுள்ள பழைய கிச்சனர் சர்வகலாசாலையில் ஒரு புதிய கல்வி திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்.

மூன்று வகைப்பட்ட படைகளுக்கு வரும் பிரிடிஷ், இந்திய மாணவர்கள், (அவர்களில் சிலர் சேவைப்படையிலிருந்தே வருகிறார்கள், சிலர் புதிதாக பொதுஜன வாழ்க்கையிலிருந்து வருகிறார்கள்,) ஒரு ஸெலக்ஷன் சபைக்குமுன் ஆஜராகவேண்டும். அவர்களில் சிலர் பரீக்ஷையில் தேர்ச்சிபெற்று விடுகிறார்கள். அவர்கள் பயிற்சி ஸ்தாபனங்களில் ஏதாவது ஒன்றுக்குப் பயிற்சி பெற அனுப்பப்படுகிறார்கள். சிலர் பரிகரிக்கப்படுகிறார்கள். சிலர் ஒத்திவைக்கப்படுகிறார்கள்.



ஒத்திவைக்கப்பட்ட மாணவர்களுக்குப் போதுமான யோக்யதை இருந்தபோதிலும் அவர்கள் ஆபீஸர்களாகப் பயிற்சி பெற இப்பொழுது லாயக்குள்ளவர்களல்லவென்று ஸெலக்ஷன் போர்டு முடிவு செய்திருக்கிறது. அவர்களிடம் உள்ளேயிருக்கும் குணங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

இது வரையில் அப்பேர்ப்பட்டவர்கள் தங்களுடைய படைகளுக்கோ அல்லது வீட்டிற்கோ திரும்பிவந்து மறு முறை ஸெலக்ஷன் போர்டு முன் ஆஜராக அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். ஆகிலும் அவர்களுக்கு குணாதிசயங்களிலும் நாயகத்திலும் போதுமான பயிற்சியளிக்கக்கூடிய விசேஷ ஸ்தாபனங்கள் கிடையாது.

## துணிவும் நம்பிக்கையும்.

கிச்சனர் இடை கால சேவை ப்ரீ—காடட் சர்வகலாசாலையில் அவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பம் அளிக்கப்படும். அங்கு நடைபெறும் ஐந்து மாதப் பயிற்சியானது மாணவர்களின் துணிவையும், ஆண்மைத்தனத்தையும் தன் நம்பிக்கையையும், தேக வலுவையும் அபிவிருத்தி செய்யக்கூடியதாகவும் ஆங்கில பாஷாக்யானத்தை விஸ்தரிப்பதாகவும் இருக்கும். அங்கு யாதொரு விதமான அடக்குமுறையும் கவாத்தும் மிகுதியான ஒத்திகையும் கிடையாது. ஒவ்வொரு மாணுக்கனும் வரிசைப்படி ஒரு தொகுதியின் சார்ஜை ஒப்புக்கொண்டு அவனுக்கு இட்ட அலுவல்களைச் செய்து முடிக்கவேண்டும். அந்தக் கட்டளைகளை நிறைவேற்றும் முறைகளை அவர் அவர்களே நிர்த்தாரணம் செய்துகொள்ளவேண்டும். ஆகிலும் அவர்களுடைய முறைகளை போதகர்கள் கவனித்து, பின் ஒரு சமயத்தில் அவர்களுக்கு ஆலோசனைகளையும் குறை பாடுகளையும் எடுத்துச்சொல்லுவார்கள்.

## தன்னடக்கத்தின் முக்கியத்வம்.

மேலும் ராணுவத்தைப்போல் ஒழுங்கு முறையும் தண்டனையும் அங்கு கிடையாது. தவறாக நடந்துகொள்ளுகிறவர்கள் எச்சரிக்கை செய்யப்படுவார்கள். அவர்கள் மறு முறை தவறாக நடந்துகொண்டால் அவர்களுடைய படைக்கோ அல்லது வீட்டிற்கோ அனுப்பப்படுவார்கள். ஏனெனில் சுய மரியாதையும், பொறுப்பும், தன்னை அடக்கிக்கொள்ளும் சக்தியையும் இழந்தவர்களை போர் படையில் ஆபீஸர்களாக வைத்துக்கொள்ளுவது சாவதானமல்ல. தன்னை அடக்கிக்கொள்ளக்கூடாத ஒருவன் மற்றவர்களுக்குத் தலைமை வகிக்கவோ உத்சாகம் ஊட்டவோ சக்தியற்றவன்.

இந்த கலாசாலை நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மாதம் 50 அல்லது 55 வீதம் 270 பிள்ளைகள் இந்தக் கலாசாலையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இரண்டு கோஷ்டிகள் கலாசாலையில் சேர்ந்துவிட்டன. இப்பொழுது 105 பிள்ளைகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் இந்தியாவின் பல வேறு பாகங்களிலிருந்து வந்து ஒன்றாக ஜீவித்து வேலை செய்து வருகிறார்கள்.

பரீக்ஷார்த்தமாகச் செய்யப்பட்ட இந்த திட்டத்தின் வெற்றியைப் பற்றி இப்பொழுது சொல்லுவது காலம் தப்பியதாகும். ஆகிலும் இதுவரை நடப்பை கவனிக்கும்பொழுது இந்தத் திட்டம் திருப்திகரமாகத்தானிருக்கிறது. ஆகிலும் இந்தப் பயிற்சி காலத்திற்குப்பின் அதிலுள்ள மாணவர்களின் பெரும்பாகம் நாயகம், துணிவு, தன் நம்பிக்கை முதலிய குணங்களை அபிவிருத்தி செய்திருக்கக்கூடுமாதலால் அவர்கள் ஆபீஸர் காடட்டுகளாகப் பயிற்சி பெறுவதற்கு ஸெலக்ஷன் போர்டின் பரீக்ஷையில் வெற்றிபெற வசதியற்றவர்களாக இருப்பார்கள்.

போதகர்களாக வரும் ஆபீஸர்களில் பாதிப்பேர் பிரிடிஷார்கள், பாதிப்பேர்கள் இந்தியர்கள். அவர்களும் பொருக்கியெடுக்கப்பட்டவர்கள். அவர்களும் கலாசாலையின் நோக்கத்தை அறிந்து அதற்கு ஒத்தவாறு பூர்ணமான உத்சாகத்துடன் வேலை செய்து வருகிறார்கள்.

**பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

## தஞ்சாவூர் உபரி உதவி ரிக்ரூட்டிங் ஆபீஸரான சுபதார் G. லோகநாதனின் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிக் குறிப்பு, 1945-ம் வருஷம் பிப்ரவரி மாதம்.

| | | | |
|---|---|---|---|
| 13—2—45. | புதுக்கோட்டைக்கு விஜயம், ரிக்ரூட்மெண்ட், தங்குதல். | | |
| 14—2—45. | ஆலங்குடிக்கு விஜயம், | Do. | புதுக்கோட்டைக்குத் திரும்புவது. |
| 15—2—45. | அரந்தாங்கிக்கு விஜயம், | Do. | தங்குதல். |
| 16—2—45. | புதுக்கோட்டைக்கு விஜயம், | Do. | தங்குதல். |
| 17—2—45. | அன்னவாசலுக்கு விஜயம், | Do. | புதுக்கோட்டைக்குத் திரும்புவது. |
| 18—2—45. | பொன்னமராவதிக்கு விஜயம், | Do. | Do. |
| 19—2—45. | தஞ்சாவூருக்குப் போவது. | | |

---

## மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் கல்லூரி, புதுக்கோட்டை டெக்னிகல் டிரெயினிங் சென்டரில் பயிற்சிக்கு காலியாயுள்ள ஸ்தானங்களை 1—2—45உயில் காண்பிக்கும் சிட்டை.

| | | | |
|---|---|---|---|
| எலக்டிரிஷியன்கள் | ... | ... | 12 |
| பிட்டர்கள் | ... | ... | 15 |

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 235 (3-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10- 2-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 14- 2-45 | வடவாளம் | ... மாலை | 7.00 |
| 11- 2-45 | கீரப்பழனி | ... ,, | 7.00 | ,, | சம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 |
| ,, | ஆவூர் | ... ,, | 7.30 | 15- 2-45 | கச்சராந்தபட்டி | ... ,, | 7.00 |
| 12- 2-45 | புத்தாம்பூர் | ... ,, | 7.00 | ,, | விராச்சிலை | ... ,, | 7.30 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, | 7.30 | 16- 2-45 | கல்லூர் | ... ,, | 7.00 |
| 13- 2-45 | கார்த்தாமலை | ... ,, | 7.00 | ,, | மாத்தூர் | ... ,, | 7.30 |
| ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 236. (4-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17- 2-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 21- 2-45 | பள்ளிவாசல் | ... மாலை | 7.00 |
| 18- 2-45 | ஆலங்குடி | ... ,, | 7.00 | ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, | 7.30 | 22- 2-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| 19- 2-45 | திருமெய்யம் | ... ,, | 7.00 | ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 7.30 |
| ,, | ராமச்சந்திரபுரம் | ... ,, | 7.30 | 23- 2-45 | ஏம்பல் | ... ,, | 7.00 |
| 20- 2-45 | அன்னவாசல் | ... ,, | 7.00 | | | | |
| ,, | கீழக்குறிச்சி | ... ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 11— 2—45 | கல்குடி. | 17— 2—45 | திருமெய்யம். |
| 13— 2—45 | வடகாடு. | 18— 2—45 | விராச்சிலை. |
| 15— 2—45 | கீழாநிலை. | 20— 2—45 | ராமச்சந்திரபுரம். |
| 16— 2—45 | புதுக்கோட்டை. | 22— 2—45 | ஆலங்குடி. |
| | | 23— 2—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—10-2-45.



(6) நாஸிக்கக்ஷி, நாஸி சட்ட திட்டங்கள், நாஸி ஸ்தாபனம், நாஸி அமைப்புகள் முதலியவற்றை அழித்துவிடுவது:

(7) பொதுஜன இலாகாக்களிலிருந்தும், ஜெர்மன் கலைஞான, பொருளாதார வாழ்க்கையிலிருந்தும் சகல விதமான நாஸி, ராணுவ அம்சங்களை அகற்றுவது:

(8) உலகத்தின் எதிர்கால க்ஷேமத்திற்குறிய மற்ற நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளுவது.

ஜெர்மன் மக்களை நாசம்செய்யவேண்டுமென்பது நேசதேசத்தாரின் எண்ணமில்லையென்றும் நாஸி தத்வத்தையும் ராணுவத் தன்மையையும அறவே ஒழிப்பதுதான் அவர்களின் லக்ஷியமென்றும் நேசதேசத்தார்கள் ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டார்கள்.

வி வி வி வி வி

**தொடர்பு கமாண்டு.** நேசதேசசதார்கள் மன உறுதி செய்துகொள்ளுவதுடன் நின்றுவிடவில்லை. அவர்களுடைய முடிவுப்படி அமுல் நடத்தவும் ஏற்பாடு செய்வார்கள். அவர்கள் முன்னைவிட பலமாக தரைமூலமாகவும் ஆகாயத்திலிருந்தும், நான்கு பக்கஙகளிலிருந்தும் ஜெர்மனியை பலமாகத் தாக்குவார்கள். அதற்கு திட்டஙகள் தயாராக இருக்கின்றன. பல்வேறு தாக்குதலை ஒன்றுபடுத்த ஐரோப்பாவில் இப்பொழுதுள்ள கிழக்கு மேற்கு கமாண்டுகளைத் தவிரவும் வாஷிஙடனிலுள்ள ஒன்றுபட்ட காரியலாயத் தலைவர்களையும் தவிரவும் தொடர்புள்ள கமாண்டு எறபடுத்தப்படும்.

ஜப்பானுடன் போரில் ருஷ்யா கலந்துகொள்ளாததால் அதற்கு வாஷிங்டனிலுள்ள காரியாலயத்தில் பிரதிநிதித்வமில்லை. இந்த ஒன்றுபட்ட தொடர்பு கமாண்ட் பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய ராணுவ அதிகாரிகள் அடங்கியுள்தாக இருக்கும். தாக்குதல்களை ஒரே சமயத்தில் ஐரோப்பிய போர்முனைகள் எல்லாவற்றிலும் நடத்தவும் படைகளை ஒன்று திறட்டவும் இந்த கமாண்டுக்குப் பூர்ணமான அதிகாரம் உண்டு. இந்த அமைப்பு இப்பொழுது, மெற்ற அவசியமானது. பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி ருகாவ் இருக்குமிடத்திலிருந்து 300 மைல்களுக்குள்ளாக வந்துவிட்டார்.

வி வி வி வி வி

**மத்திய கண்ட்ரோல் கமிஷன்.** யுத்தம் நடைபெறப்பெற ஒவ்வொரு வல்லரசும் ஜெர்மனியின் ஒரு அரங்கத்தை ஆக்கிரமித்துக்கொள்ளும். இறுதியில் மூன்று வல்லரசுகளின் உயர்தர கமாண்டர்கள் கொண்ட ஒரு மத்திய கண்ட்ரோல் கமிஷன் பெர்லினில் அமைக்கப்படும். இந்த கண்ட்ரோலில் கலந்துகொள்ளும்படி பிரான்ஸுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதுவும் அங்கிகாரம் செய்துவிட்டது. அதற்கும் ஆக்கிரமிப்பு அரங்கம் ஏற்பாடு செய்யப்படும்.

வி வி வி வி வி

**யால்டாவும், டெகரானும்.** யால்டா மகாநாடு டெகரான் மகாநாட்டின் தொடர்புதான் — புரக்ஷி தின விழாவன்று ஸ்டாலின் சொற்பொழிவாற்றியபொழுது டெகரானைச் சுட்டுக்காட்டி டெகரான் திட்டத்தைப்போல சரித்திரத்திலேயே எந்த திட்டமும் ஒன்றுபட்டு நடத்தப்படவில்லை, என்று கூறினார். டெகரானில் போட்ட ஒற்றுமை திட்டம் யால்டாவில் பூர்த்தியடைந்துவிட்டது. நேசதேசத்தார்களிடையே அபிப்பிராய பேதங்கள் தோன்றி அவர்கள் கலைந்துபோய் விடுவார்களென்று எதிரி எண்ணியிருந்ததெல்லாம் வீணுகப் போய்விட்டது. ஒன்றுபட்ட லக்ஷியத்தில் அவர்களுக்கு முன்னிருந்ததைவிட ஒற்றுமை பலப்பட்டுவிட்டது. யால்டா முடிவைப்பற்றி மாஸ்கோ குதுகலமடைந்து திருப்தியடைவதற்கு இதுதான் காரணம். யால்டா முடிவைப்பற்றி டைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு கூறுகிறது. "யால்டா அறிக்கை ஒற்றுமை சம்பந்தமாக ஏற்பட்ட புனிதமான கடமையைக் குறிக்கும் மகத்தான, திருப்திகரமான சாஸனம்." தற்போதைய நூற்றுண்டில் சிருஷ்டிக்கப்பட்ட தஸ்தாவேஜிகளில் யால்டா அறிக்கை மிகவும் திருப்திகரமான்தென்று யார்க் ஷையர் போஸ்டு எழுதியிருக்கிறது.

வி வி வி வி வி

**தன்னிச்சையாக ஏற்பட்டது.** இந்த ஒற்றுமை அவரவர்கள் தன்னிச்சையாக ஏற்படுத்திக் கொண்டதென்பது விசேஷமானது. வீம்புள்ளவர் என்று எதிரிகள் நினைத்த ருஷ்யாவும் மற்றவர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளத் தயாரென்றும், பிரிடனுடனும் அமெரிக்காவுடனும் ஒத்துழைக்கத் தயாரென்றும் வெளிப்படுத்தி விட்டது.

**போலந்து.** எல்லோருடைய மனப்பான்மையையும் சோதிக்கக்கூடியது போலந்து விஷயம்தான். மகாநாடு வெற்றிகரமாக முடிந்ததென்பதற்கு போலிஷ் பிரச்னை சம்பந்தமாக ராஜதந்திர முறையில் ஒப்பந்தம் ஏற்பட்டதுதான் சிறந்த அடையாளம். ருஷ்யா அதன் எல்லைச் சரகத்தை கர்சான்கோடு வரையிலும் விஸ்தாரம் செய்துகொள்ளும். அதற்கு பதிலாக போலந்துக்கு வடக்கிலும் மேற்கிலும் சில பிரதேசங்கள் விட்டுக் கொடுக்கப்படும். லப்ளின் தாத்காலிக நிர்வாகமும் லண்டனிலுள்ள போலிஷ் நிர்வாகமும் நிலைபெற்றிருக்காது. மாஸ்கோவில் நிலைபெறப்போகும் பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய அயல் நாட்டு மந்திரிகளடங்கிய ஒரு கமிஷன் தேசீய ஒற்றுமை நிர்வாகம் ஒன்றை போலந்தில் அமைப்பார்கள். இதுவும் தாத்காலிகமான நிர்வாகம்தான். கொஞ்ச காலத்துக்குப்பின் பொதுஜன வாக்குகளாலும் தேருதலினாலும் அமைக்கப்பட்ட ஜனநாயக நிர்வாகம் அமைக்கப்படும். இந்தத் தேருதலில் நாஸிகளை ஆதரிப்பவர்கள் சேர்க்கப்படமாட்டார்கள். இடைகால ஒற்றுமை நிர்வாகத்தை மூன்று வல்லரசுகளும் ஒப்புக்கொள்ளுவார்கள். இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் லண்டனிலுள்ள போலிஷ் நிர்வாகத்துக்கு ஒற்றுமை நிர்வாகம் அமைக்கப்பட்டவுடன் அவர்கள் வேலைசெய்ய முடியாதென்று பிரிடன் முடிவு நோட்டீஸ் கொடுத்துவிட்டது.

இந்த ஒப்பந்தம் புத்திசாலித்தனமும் தத்வபோதமுமுள்ள சமாதான முறையென்றும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகிலும் எந்த ஒப்பந்தமும் எல்லாக் கக்ஷிகளுக்கும் திருப்தியை அளிக்காது. லப்ளின் நிர்வாகமும் அல்லது லண்டன் நிர்வாகமும் இதை ஒப்புக் கொள்ளவில்லை.

வி வி வி வி வி

**அட்லாண்டிக் சாஸனம்** யோசிக்குமளவில் போலந்தின் பிரச்னையானது அட்லாண்டிக் சாஸனத்தின் கொள்கைகள் பிரகாரம் சுலபமாக தீர்க்கப்பட்டதென்றே சொல்லலாம். அதாவது கஷ்டப்பட்ட ஒவ்வொரு நாட்டிற்கும் அரசியல் உரிமையை வழங்குவது; முதலில் இடைகால நிர்வாகத்தை அமைப்பது, பிறகு நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவது, அவசியமானால் அதற்கு மூன்று வல்லரசுகளும் ஒத்தாசை செய்வது; இறுதியில் பொதுஜன அபிப்பிராயப்படி ஒரு நிர்வாகத்தை அமைப்பது. அந்த நிர்வாகம் நீதி முறைப்படி, சமாதானப் பத்திரம், சுதந்திரம், ஜனசமூகத்தின க்ஷேமம் முதலியவற்றைக் கோரும் உலக அமைப்பில் ஒரு ஸ்தாபனம் வகிப்பது என்ற முறைகள்தான்.

இந்தக் கொள்கைகளின்படி. ஜெர்மனி உள்பட ஒவ்வொரு நாட்டுக்கும் வாழ்க்கை உரிமையையும் மற்ற நான்கு சுதந்திரங்களையும் அனுபவிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

வி வி வி வி வி

**டம்பார்டன் ஓக்ஸ்.** நேசதேசத்தார்கள் எதிர்காலத்தைப்பற்றியும் மறந்துவிடவில்லை. அவர்கள் சொல்லுகிறார்கள், 'சமாதானத்தையும் உலக பத்திரத்தையும் நிலைநாட்ட பொதுவான சர்வதேச ஸ்தாபனத்தை நாங்கள் கூடிய சீக்கிரத்தில் அமைத்துவருவதாக உத்தேசித்திருக்கிறோம்'. அக்கிரம யுத்தத்தைத் தடுப்பதற்கும் யுத்தத்துக்குக் காரணமான ராஜீய, பொருளாதார, ஜனசமூகக் கெடுதல்களை நிவர்த்திக்கவும் இது அவசியமாகும். இதற்கு சமாதானத்தை விரும்பும் நாடுகளெல்லாம் நெருங்கி இடைவிடாது ஒத்துழைக்கவேண்டும். இதுதான் டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டின் முடிவு. இவ்விதமான சர்வதேச ஸ்தாபனத்தை அமைக்க ஒரு சாஸனத்தைத் தயார்செய்ய அமெரிக்காவில் ஸான்பிரான்ஸிஸ்கோவில் 1945-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25-ம் தேதியன்று மகாநாடு கூட்டப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

**நஷ்ட ஈடு.** உலகத்திலுள்ள தேசங்களுக்கு ஜெர்மனி விளைவித்த நஷ்டங்களுக்காக நீதி முறைப்படி ஜெர்மனி நஷ்ட ஈடு செய்யவேண்டிவரும். இதை நிறைவேற்ற நஷ்டத்தின் அளவையும் நஷ்ட ஈட்டை அடையும் முறைகளையும் நிர்த்தாரணம் செய்ய மாஸ்கோவில் ஒரு கமிஷன் ஸ்தாபிக்கப்படும்.

வி வி வி வி வி

**ஓடர் நதி.** ருஷ்யாவில் அநேக போர்முனைகளும் தாக்குதல்களும் இருப்பதற்குக் காரணமிருக்கின்றன. யுத்த முயற்சிகள் சிதறுண்டு கிடக்கின்றன என்று பொருள் கொள்ளுவதற்கில்லை. "பெர்லினுக்குச் செல்லவேண்டும்" என்பதுதான் ருஷ்யாவின் மேற்கொள் என்பது உலகமறிந்த விஷயம்; பெர்லினைச் சுற்றி ஓடர் என்ற நதியிருக்கிறது. பெர்லினுக்குச் சுறுக்காகப் போகும் ரஸ்தா [illegible] ப்ராங்க்பர்ட்டுக்கும் [illegible] மத்தியில் அந்த நதியின் [illegible]

ஜுகாவ் தாக்கி வருகிறான். அவனுடைய பார்சுவங்களை ரக்ஷிப்பதற்கும் மற்ற மார்க்கங்களின் வழியாக பெர்லினுக்குச் செல்லுவதற்கும் தெற்கிலும் வடக்கிலும் மற்ற இரண்டு தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மத்தியிலுள்ள ருஷ்ய உப்பலானது பால்டிக் கடற்கரையிலிருந்து ஸ்டெட்டின் வழியாகவும் ஜெர்மனியால் தாக்கக்கூடியதாக இருக்கிறது. பால்டிக் துறைமுகமான எல்பிங்கைப் பிடித்தபின் கோனிக்ஸ்பர்க்கிலுள்ள ஜெர்மன் படைகள் துணிக்கப்பட்டுவிட்டன. ஸ்டெட்டினை நோக்கி ருஷ்யப்படைகள் முன்னேறிவிட்டதால் டான்ஸிக்கிலுள்ள ஜெர்மன் படைகளும் சுற்றிவளைக்கப்படும்.

சைலீஷியாவில் ஜெர்மானியர்கள் தெற்கு பார்சுவத்தில் பயமுறுத்தியது ஒழிந்து இப்பொழுது ருஷ்யப்படை பெர்லினை பயமுறுத்திவருகிறது. இந்தப்பகுதியில் 8 கோனியெவ் ஓடர் நதியைத்தாண்டி டிரெஸ்டன், லீப்ஸிக்கை நோக்கி முன்னேறிவருகிறான். தெற்குக் கோடியில் அவன் பெஸ்கிட்ஸ் வழியாக பிரனுக்கும் வியன்னுவுக்கும் முன்னேறிவருகிறான்.

வி வி வி வி வி

**மத்தியில்** உப்பல் விசாலப்படுத்தப்படுகிறது. ஆகிலும் பத்திரத்தை உத்தேசித்து அதைப்பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. பிராவ்டா சொல்லுகிறபடி கஸ்ட்ரினிலுள்ள ஓடர் நதியின் சுவர்கள் நொருங்கிவிட்டது. ரெட் ஸ்டார் பத்திரிக்கை சொல்லுகிறபடி போர் இப்பொழுது பெர்லினுக்குப் போகும் சமவெளிகளில் நடக்கிறதென்று தெரியவருகிறது. ருஷ்யப்படைகள் பெர்லினின் மர்மஸ்தானத்தை நோக்கி அம்புகள்போல விசாலமான ரஸ்தாக்கள் வழியாகச் செல்லுகின்றன என்று மாஸ்கோவிலிருந்து தகவல் கிடைத்துள்ளது. ஜுகாவ் கஸ்ட்ரினில் ஓடர் நதியில் 7-வது பால முனையை அமைத்துவிட்டானென்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் வெளியிடுகிறார்கள்.

வி வி வி வி வி

**புடாபெஸ்ட்.** மூன்று மாத முற்றுகைக்குப்பின் புடாபெஸ்ட் விழுந்துவிட்டது. இது ஐரோப்பிய தலைநகரங்களில் புகாரெஸ்டு, ஸோபியா, பெல்கிரேடுக்குப்பின் செஞ்சேனை விடுவித்த நான்காவது தலை நகரம். இப்பொழுது வியன்னுவுக்குப்போகும் மார்க்கம் திறக்கப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**ஒழுங்கீனமும் சீர்கேடும்.** பெர்லின் சமீபகாலத்தில் முற்றுகைக்குட்படுத்தப்படுமாகையால் ஒழுங்கை நிலைநிறுத்துவது ஜெர்மன் ரகசியப் போலீசுக்கு மிகவும் கஷ்ட சாத்யமாகிவிட்டது. நியூஸ் கிரானிகளின் ஸ்டாக்ஹோம் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார். "மிகவும் அபாயமான நிலைமையை ஒவ்வொருவரும் அறிகிறார்கள். ருஷ்யாவிடமிருந்து பீதி அதிகரித்திருக்கிறது. சாத்தியமானால் அநேகர்கள் நாட்டைவிட்டுச் சென்றுவிடுவார்கள். ஆனால் ரயில்வண்டிகளில் அகதிகள் அபாரக்கூட்டமாகச் சென்றுவருகிறார்கள். பெர்லினிலாவது தாழ்வரைகளில் ஒளிகள் இருக்கின்றன. சிறிய நகரங்களில் அவைகளும் இல்லாததால் அங்கு இருப்பதும்கூட பத்திரக் குறைவானது.

சூரிக்கிலிருந்து கிடைத்த செய்தி பின்வருமாறு: "பெர்லினின் சாதாரண வாழ்க்கை சீர்கெட்டுவிட்டது. பொதுஜனங்கள் கூட்டங்கூட்டமாகச் சென்று உணவுப்பொருள் ஸ்டோர்களில் கொள்ளையடித்து வருகிறார்கள். வெடிகுண்டுகளால் உண்டுபண்ணப்பட்ட பிரிவுகளைச் சுற்றி டிராம், இருப்புப்பாதை அமைப்புகள் வளைக்கப்பட்டுக் கிடக்கின்றன. ஸ்டேஷன்களெல்லாம் அநேகமாகப் பாழாகிவிட்டன. நமது சண்டை விமானங்களும் விமான எதிர்ப்பு பீரங்கிகளும் எங்கு சென்றுவிட்டன என்று பெர்லின் ஜனங்கள் கேட்கிறார்கள்."

வி வி வி வி வி

**நாட்டுப் புறங்களிலும்** நிலைமை திருப்திகரமாக இல்லை. சில மாகாணங்களில் டெயிலி மெயில் சொல்லுகிறபடி பங்கீடு முறையும் உபயோகமில்லாமல் போய்விட்டது. ஏனென்றால் உணவுப்பொருள் கிடைக்கவில்லை. கிராமவாசிகள் நாட்டுப்புறங்களுக்குச் சென்று அங்கிருக்கும் உணவுப்பொருள்களை எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஜெர்மன் ரகசியப் போலீஸின் செல்வாக்குக் குறைந்துவிட்டது. வேலை நிறுத்தம் அதிகரித்து விடுகிறது. நாஸிக்கக்ஷியிலிருந்து அநேகர்கள் ஓடிவிட்டதால் அது பலஹீனமடைந்துவிட்டது. சேனைகள் பொதுமக்களின் உறுதியான உதவியை இனிமேல் பெறமுடியாது.

**கோயபல்ஸின் புலம்பல்.** ஜெர்மனியின் துக்க அனுபவம் அதிகரித்து வருவதால் கோயபல்ஸின் வாராந்திர ஒப்பாரி அதிகரித்து விட்டது. டாஸ்ரெக் என்னும் பத்திரிகையில் பிப்ரவரி மாதம் 8-ம் தேதியன்று அவன் பின்வருமாறு எழுதியிருக்கிறான் :—

"கஷ்டங்களைப் பூராவாக அனுபவிக்கும் துர்தசை நமக்கு ஏற்பட்டுவிட்டது. நம்முடைய யுத்த திட்டத்தில் தொழிற் முறையிலும், உணவுப்பொருள் சம்பந்தப்பட்ட மட்டிலும் மிகவும் முக்கியமான பங்கெடுத்துக்கொண்ட ஜெர்மன் பிரதேசங்கள் எதிரி வசமாகி விட்டன. விசாலமான பூ பிரதேசத்தை நம்பி யுத்தம் நடத்திய காலம் இப்பொழுது ஆண்டு மாறிவிட்டது.

"நாம் கைவிட்டுவிடும்படி நேரிடும் ஒவ்வொரு கிராமமும், வயல், நகரம், தொழிற்சாலை முதலியவற்றின் நஷ்டமெல்லாம் நமது யுத்த சக்தியைக் குறைப்பதுடன், எண்ணிக்கையற்ற ஜெர்மானியர்களுக்கு மரணாந்தமான கஷ்டங்களை உண்டுபண்ணுகிறது.

"தொத்து வியாதியும், பஞ்சமும், யுத்தமும், சாவும் நமது நாட்டின் கிழக்கு, தென்கிழக்கு பிராந்தியங்களில் தாண்டவம் ஆடுகின்றன."

வி வி வி வி வி

**மதி மயக்கம்.** போரில் வெற்றி பெறமுடியாதென்று தெரிந்தபின்னும் ஜெர்மானியர்கள் போரை ஏன் நடத்திவருகிறார்கள்? என்று அநேகர் கேட்கலாம். இதற்கு ஜெர்மன் பிரசாரத்தின் மதியை மயங்கச் செய்யும் சக்திதான் காரணம். கோயபல்ஸ் வியர்த்தமாக விம்மி அழுகவில்லை. அவனுடைய ரோதனத்துக்குத் தக்க லக்ஷியமிருக்கிறது. ஜெர்மானியர்கள் உயர்வான ஜாதியாரென்றும் ஹிட்லர் எவ்விதமாகவாவது தோல்வியை நிறுத்தி வெற்றிபெற்றுவிடுவானென்றும் சொல்லுவதற்காகத் தான் அவன் பிரசாரம் செய்கிறான். மேலும் நாஸிகளின் யதேச்சாதிகார முறையில் ஊன்றிக்கிடக்கும் ஜெர்மானியர்களுக்கு போல்ஷிவிக் பூச்சாண்டியைக் காண்பித்து, சரணாகதி செய்தால் ஜெர்மானியர்கள் நிர்மூலமாக்கப்படுவார்களென்று சொல்லுவதற்காகவும் தான் கோயபல்ஸ் பிரயத்தனம் செய்துவருகிறான். யாராவது ஒரு ஜெர்மானியர் சந்தேக மனப்பான்மையுடனிருந்தால் ஜெர்மன் ரகசியப் போலீஸ் அவனை விசேஷமாகக் கவனித்துக் கொள்ளுவார்கள். இதுவரையில் எந்த தேசமும் இவ்வளவு திறமையுடனும் நீண்டகாலமாக பிரசார முறையிலும் அடக்கு முறையிலும், மதிமயங்கி முட்டாள்த்தனமாக இருந்ததில்லை.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** ரைன் நதி பிரதேசமா, ஓடர் நதிப்பிரதேசமா, ரூர் பிரதேசமா, பெர்லினா என்று ஜெர்மனி தத்தளித்துக் கொண்டிருக்கிறது. பிரிடிஷ்-அமெரிக்கப் படைகள் முன்னேறித் தாக்க ஆரம்பித்து விட்டதால் மேற்குப் போர்முனைப் போரும், கிழக்குப் போர்முனைப் போரும் ஒரே காலத்தில் நடைபெறுகின்றன. மேற்குப் போர்முனை பூராவிலும் படைகள் முன்னேறித் தாக்குகின்றன. வடக்கில் பிரிடிஷ், கனடியப்படைகளும், ஆர்டெனிஸில் அமெரிக்க 1-வது, 3-வது சேனைகளும், தெற்கில் அமெரிக்க 7-வது, பிரெஞ்சு 1-வது சேனைகளும் முன்னேறுகின்றன. ஹாலந்தில் நிஜ்மேகனுக்குத் தென்கிழக்கில் பிரிடிஷ்-கனடியப் படைகள் தாக்குமுன் விமான மூலமாகவும் பீரங்கிகள் மூலமாகவும் குண்டுவீச்சு ஏற்பட்டது. ஜெர்மானியர்கள் திகிலடைந்தார்கள். ரெக்ஸ்வால்ட் காட்டின் வழியாகத் துவக்கப்பட்ட இந்தத் தாக்குதல் ஜெர்மனியில் ஸீக்பிரட் அரணுக்குள் ஊடுருவிச் சென்றுவிட்டது.

ஆர்டெனிஸ் பகுதியில் அமெரிக்கப்படைகள் ஜெர்மனிக்குள் மறுபடியும் புகுந்து விட்டன. ஸீக்பிரட் அரணில் மான்ஷானையும் பிரமையும் கைப்பற்றிவிட்டன. வடக்கு ஆல்ஸாஸில் ஹேம்களிலிருந்து ஜெர்மானியர்கள் பின் துரத்தியடிக்கப்பட்டார்கள். அதற்குத் தெற்கில் கோல்மார் பகுதியிலிருந்த ஜெர்மானியர்களை பிரெஞ்சு 1-வது சேனை அழித்துவிட்டது.

வி வி வி வி வி

**பிலிப்பைன்ஸ்.** பிப்ரவரி மாதம் 7-ம் தேதியன்று பிலிப்பைன்ஸின் தலைநகரமான மணிலாவுக்குள் மாக் ஆர்தர் புகுந்து விட்டார். அவருடைய முக்கியமான வேலைகளில் ஒன்று பூர்த்தியாகிவிட்டது. மணிலாவிலுள்ள குயிஸ்லிங் நிர்வாகம் வேனிற்காலத் தலைநகரமான பாகியோவுக்குச் சென்று விட்டது. ஆகிலும் அதன் அங்கத்தினர்களை நியாயமான நிர்வாகம் ராஜ துரோகக் குற்றத்திற்காக விசாரணை செய்யலாம். அடுத்த நடவடிக்கை சைனா கடற்கரையில் ஆரம்பிக்கப்படுமென்று மிஸ்டர் ஹென்றி ஸ்டிம்ஸன் சொல்லிவிட்டார்.



**சைனா.** தெற்கு சைனாவில் கான்டன்-ஹாங்கோ இருப்புப்பாதையில் ஜீனர்கள் முன்னேறித்தாக்க ஆரம்பித்து விட்டார்கள். எதிரிகள் முன்னேறித் தாக்கும் சக்தியை இழந்து விட்டார்கள். சீனப்படைகள் கான்டனுக்கு வடக்கேயுள்ள பிஸ்கெஷக்குக்குள் நுழைந்துவிட்டன. அமெரிக்கப் படைகள் இறங்கி விடுமோ என்ற பீதியினால் ஜப்பானியர்கள் ஷாங்கேயிக்கும் இந்தோ-சைனாவுக்கும் உதவிப் படைகளை அவசர அவசரமாக அனுப்பி வருகிறார்கள்.

வி வி வி வி வி

**பர்மா.** பிப்ரவரி மாதம் 11-ம் தேதியன்று கண்டியிலிருந்து வந்த அறிக்கையில் மாண்டலேயைத் தாக்கும் நாள் வெகு தூரமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இராவதியிலுள்ள முன்னேறும் வாசல்களைச் சுற்றி இன்னமும் போர் நடைபெறுகிறது. ய்வா திட்கிக்கு மேற்கில் இராவதியின் வடகரையில் ஜப்பானியர் வசமிருந்த முன்னேறும் வாசல் ஜப்பானியர்களில்லாமல் சுத்தி செய்யப் பட்டு விட்டது. பிரிடிஷ் துருப்புகள் மாண்டலேயிலிருந்து ஒன்பது மைல்களுக்குள் வந்து விட்டன. ய்வா திட்கிக்குக் கிழக்கில் ஜப்பானியர்கள் சாகேயிங்குக்குத் துரத்தியடிக்கப் படுகிறார்கள். அதற்கு வடக்கில் சாகேயிங் மலைகளுக்கும் கியாக்மியாங் முன்னேறும் வாசலுக்கும் மத்தியில் எதிரிகளின் படைப் பகுதிகளை அழிக்க நடவடிக்கைகள் நடந்து வருகின்றன.

---

## பெர்லினுக்குள் ருஷ்யர்கள் நுழைந்தபொழுது.

*அலெக்ஸாண்டர் ஹவர்ட்.*

(நியூஸ் கிரானிகிள் பத்திரிகை).

185 வருஷங்களுக்கு முன் ஏழு வருஷ யுத்தத்தில் 1760-ம் வருஷத்தில் ருஷ்யர்கள் பிரடரிக் தி கிரேட்டினுடைய சிறந்த படைகளை முறியடித்து பெர்லினை ஆக்கிரமித்தார்கள்.

அப்பொழுது ருஷ்யா, பிரான்ஸ், ஸ்வீடன், ஸாக்ஸனி, ஆஸ்திரியா முதலிய நாடுகள் பிரடரிக்கோடும் அவனுக்கு உதவி செய்த பிரிடனுடனும் போரை நடத்தின.

ஹிட்லர் 1939-ம் வருஷம் மார்ச்சுமீ செய்ததுபோல பிரடரிக்கும் பொஹிமியாவில் படையெடுத்து அநேகம் வெற்றிகளை அடைந்தான். ஆகிலும் அவசரப்பட்டதினால் ஹிட்லர் ஸ்டாலின்கிராடில் படுதோல்வி பெற்றதுபோல் அவரும் கோலினில் படுதோல்வி அடைந்தார். புதிய படைகளைச் சேர்த்து பிரஷ்யா பேரில் மேற்கிலிருந்து படையெடுத்த பிரெஞ்சுக்காரர்களை அவர் தடுத்தார். இதே சமயத்தில ஆஸ்திரியர்கள் சைலீஷியாவுக்குள் புகுந்து பிரெஸ்லாவை பிடித்துவிட்டார்கள்.

இதே சமயத்தில் ருஷ்யர்கள் ஓடர் நதிக்கு முன்னேறினார்கள். இன்றைய ஜெர்மனியைப் போல் அன்று பிரஷ்யா முற்றுகைக்குட்பட்டது.

175[illegible]-ம் வருஷத்தில் ருஷ்ய ஜெனரலான ஸால்டிகோவ், பிரடரிக் பேரில், ஓடர் நதி பேரிலுள்ள குனர்ஸ்டார்பில் மகத்தான வெற்றியைப் பெற்றார். ருஷ்ய வெற்றியைக் கண்டு பிரடரிக் மன்னர் அவமானமடைந்து அவரிடமிருந்த விஷத்தை உட்கொண்டு தற்கொலை செய்துகொள்ள முயன்றார். விடைபெற்றுக்கொண்டு செல்லும் கடிதத்தையும் எழுதி விட்டார்.

அந்நாளில் துருப்புகள் அசைந்து செல்வது மெதுவாகத்தான் நடைபெறக்கூடும். ஆகையால் ருஷ்ய குதிரைப்படைகள் சில மாதங்களுக்குப்பின்தான் 1760-ம் வருஷத்தில் பெர்லினுக்குள் நுழைந்தன.

சரித்திரத்தின் போக்கிலிருந்து ஆச்வாசம் அடைய ஹிட்லர் முயலுகிறான் போலும். ஏனெனில் 1760-ம் வருஷத்தில யுத்தத்தில் வெற்றிகிடைத்துவிட்டதென்று தோன்றிய பொழுது நேச தேசத்தாரிடையே சச்சரவுகள் உண்டாய்விட்டன. ஜெனரல் ஸால்டிக்கோவ் அபாரமாக குடிக்க ஆரம்பித்துவிட்டான். அப்பொழுது சைலீஷிய மலைகளில் யுத்தத்தில் முதிர்ச்சி பெற்ற வீரர்களுடன் வசித்துவந்த சிறிய துணியுள்ள பிரடரிக் பதில் தாக்குதலை செய்ய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துவந்தான்.

ருஷ்யப் படை பெர்லினுக்குள் புகுந்த இரண்டு வருஷங்களுக்குப்பின் பீடர் தி கிரேட்டின் பௌத்திரியான எலிஜபெத் மஹாராணி உயிர் துறந்தாள். அதுதான் பிரடரிக்குச் சந்தர்ப்பம் அளித்தது. அவளுக்கு அடுத்தபடியாக அதிகாரத்துக்கு வந்த மூன்றாவது பீடர் துர்ப்பலமுள்ளவன். பிரடரிக்கையும் பிரஷ்ய தத்வத்தையும் நன்கு போற்றுகிறவன்.

அவனுடைய செல்வாக்கினால் ருஷ்யர்கள் போரிலிருந்து பின்வாங்கினார்கள். கூனர்ஸ்டார்ப்பில் கிடைத்த வெற்றியின பலனையும் பெர்லின் நகரத்தையும் அவர்கள் இழந்தார்கள். பிரஷ்யா புத்துயிர் பெற்றது.

ஆனால் இப்பொழுது நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. ஜெர்மனியும் ருஷ்யாவும் மாறுபாடடைந்துவிட்டன. ஐரோப்பாவிலும் ஒற்றுமை அவசியம் என்ற ஞானம் உண்டாகிவிட்டது.

## போமரேனியா—ஜெர்மனியின் நிர்மானுஷ்யமான மாகாணம்.

(யார்க் ஷையர் போஸ்டின் நிருபர்).

மார்ஷல் ஜூகோவின் வடக்கு பார்ச்வம் ஸ்டெட்டினை நோக்கி முன்னேறும் பொழுது கடந்து செல்லும் போமரேனியா ஜெர்மனியின் மிகவும் நிர்மானுஷ்யமான மாகாணம்.

ஸ்டார்கார்டி என்னும் சிறிய நகரத்திற்கு சில மைல்களில் அநேக வருஷங்களுக்குமுன் மாரிகாலத்தைக் கழித்த ஒரு ஸ்நேகிதர் போமரேனியாவின் நிர்மானுஷ்யமான பிரதேசத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார்.

பழுப்பு நிறமுள்ள மகத்தான பொட்டலில் சில இடங்களில் ஸ்ப்ருஸ், அல்லது பார்ச் மரங்களைத் தவிர வேறு ஒரு புல் பூண்டும் கிடையாது. விவசாயிகள் ஏழைகளாக ஜீவனத்தை நடத்தி வருகிறார்கள். பெரும்பாலும் அவர்கள் உருளைக்கிழங்குதான் சாகுபடி செய்கிறார்கள்.

என்னுடைய ஸ்நேகிதர் பின்வருமாறு சொல்லுகிறார். ஹோகார்த் வரைந்திருக்கும் படங்களைத் தவிர போமரேனியாவைப்போல இவ்வளவு கோரமான, குரூபமான ஜனங்களும் வளைசல் காலும், பலஹீனம், கூனை முதுகு உள்ளவர்களும் எந்த நாட்டிலும் காணப்படவில்லை.

இங்கு பிராசீனமான ஜெர்மன் பிரபுக்கள் தங்களுடைய ஜமீனில் வசித்துவந்தார்கள். அங்கு அவர்கள் செட்டாகவும் சாதாரணமாகவும் வாழ்க்கையை நடத்திவந்தார்கள்.

## ஜெர்மனியின் முக்கியமான போக்குவரத்துகளை நொருக்குவது.

### நேசதேச விமானத் தாக்குதல் ருஷ்ய முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்கிறது.

விங் கமாண்டர் L. V. பிரேசர்.

(1945-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 3-ம் தேதி).

இப்பொழுது யுத்தத்தில் ஈடுபட்ட எந்த நாட்டையும்விட ஜெர்மனி போக்குவரத்து என்ற மகத்தான பிரச்னையைத் தீர்க்கவேண்டியதாக இருக்கிறது. போக்குவரத்துகள் சீர்கெட்டுவிட்டால் எல்லாம் சீர்கெட்டுவிடும். பீரங்கி முழக்கம் குண்டுகளில்லாவிடில் அவைகள் வெறும் குழாய்களாக ஆகிவிடும். எண்ணெய் இல்லாவிடில் விமானங்கள் தரையிலிறங்கிவிடவேண்டியதுதான். ஒரு போர்முனையிலுள்ள இடைவெளியைப் பூர்த்திசெய்ய மற்றொரு போர்முனையிலிருந்து அனுப்பப்படும் கவசம்பூண்ட படைகள் அங்கு செல்ல முடியாது. நிலக்கரி இல்லாவிடில் பெரிய யுத்த தளவாட தொழிற்சாலைகளின் வேலை குறைந்துவிடும்.

ஜெர்மனியின் போக்குவரத்து இன்னும் சீர்கெட்டுப்போய்விடவில்லை. ஆகிலும் ருஷ்ய முன்னேற்றத்துக்குப்பின் அவைகள் பலமாகத் தாக்கப்படுகின்றன. கிழக்கிலிருந்து ஜெர்மனியை நோக்கி முன்னேறுவதில் இரண்டு சக்திகள் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன.

ஒன்று, சக்திவாய்ந்த ருஷ்யச் சேனைகளும், ருஷ்ய டாக்டிகல் விமானப் படையும். மற்றொன்று பிரிடிஷ், அமெரிக்க விமானப் படை. இது மேற்குப் பக்கத்தில் தாக்கிவந்தபோதிலும் கிழக்குப் போர்முனைக்குப் பேருதவி செய்துவருகிறது. ஜெர்மனியின் போக்குவரத்துகளை நொருக்குவதுதான் பிரிடிஷ், அமெரிக்க விமானப்படையின் அலுவல்.

முக்கியமாக ஜெர்மனி நிலக்கரி, எண்ணெய், துருப்புகளைச் சலனம் செய்யவேண்டும். பிரிடிஷ் விமானப்படை டார்ட்மண்ட்-எம்ஸ் கால்வாயை முதன் முதலாகத் தாக்கியபொழுது ஸ்டெட்டினுக்கு வடக்குப் பக்கத்திலுள்ள பால்டிக் பிராந்தியத்திலுள்ள யுத்த தொழிற்சாலைகளில் நிலக்கரிக் குறைவு ஏற்பட்டுவிட்டது. ஜெர்மனிக்குத் தேவையான நிலக்கரி உற்பத்தியில் 50 சதவிகிதம் சைலீஷியாவிலிருந்து கிடைத்து வந்தது. ருஷ்ய முன்னேற்றத்தின் மூலம் அந்தப் பிரதேசத்தை ஜெர்மனி இழந்துவிட்டது. ஆகையால் ஜெர்மனிக்குத் தேவைப்படும் நிலக்கரி இப்பொழுது ரூரிலிருந்துதான் ஸப்ளை செய்யப்படவேண்டும். அ[illegible] மேற்கிலிருந்து கிழக்குக்குக் கொண்டுபோகவேண்டும்.



எண்ணெய் சம்பந்தப்பட்டமட்டில் ஜெர்மனி இப்பொழுது சேர்க்கை எண்ணெய் தொழிற்சாலைகளின் உற்பத்தியைத்தான் நம்பியிருக்கவேண்டும். அமெரிக்க, பிரிடிஷ் கனமான வெடிவிமானங்கள் அநேக காலமாக அந்த லக்ஷியங்களை நொருக்கியபின் எண்ணெய் உற்பத்தி செய்யும் சாலைகள் இப்பொழுது ஜெர்மனியின் மத்தியில் அமைக்கப்பட்டிருக்கின்றன. தரைப்படைகளுக்கும், விமானப் படைக்கும் தேவையான எண்ணெயை கிழக்குப் போர்முனைக்கும், மேற்குப் போர்முனைக்கும் அனுப்பவேண்டும்.

ஒரு போர்முனையிலிருந்து மற்றொரு போர்முனைக்கு துருப்புகளை அனுப்புவதற்கு ஜெர்மனிக்கு எவ்வளவு வாஹனங்கள் தேவை என்பதைக் குறிப்பாகச் சொல்ல முடியாது. ஆர்டெனிஸில் முன்னேறிய படைகளை ஜனவரி மாதம் 21-ம் தேதிமுதல் ருண்ட்ஸ்டெட் பின்வாங்க ஆரம்பித்தான் என்பது நிச்சயம். அவைகளைத் திருத்தியமைத்து மறுபடியும் மேற்கு முனையில் போரைத் துவக்குவதென்று ருண்ட்ஸ்டெட் உத்தேசித்தால், அவன் அதற்காக வெகுதூரம் படைகளைப் பின்வாங்கிவிட்டான்.

மேற்கு முனையிலிருந்து சில சிலாக்யமான டிவிஷன்களைப் பின்வாங்கி ஜெர்மனியின் குறுக்கே அவைகளைக் கொண்டுபோய் பெர்லினுக்குக் கிழக்கிலுள்ள பலஹீனமான தற்காப்புகளை அவன் பலப்படுத்த முயலுவான் என்பது சம்பாவிதமாக இருக்கிறது. இதுதான் ஜெர்மனியின் உத்தேசமென்றால் அது பலமாகத் தடுக்கப்படுகிறது. மேற்கு முனையிலிருந்து விலகிக்கொள்ளுவதிலுள்ள சிரமங்களைத் தவிர போக்குவரத்து சாதனங்களையும் நேசதேச விமானப்படை நொருக்கிவருகிறது. ஜெர்மனி பின்வாங்க ஆரம்பித்த உடனேயே விமானத் தாக்குதலும் துவக்கப்பட்டது. அமெரிக்க விமானப்படை முதல் முதலில் தாக்கி ஆர்டெனிஸிலிருந்து பஸ்கிர்சன் வரையிலுள்ள ரஸ்தாக்களில் 450-க்கு மேற்பட்ட வாஹனங்களை அழித்தது அல்லது பழுது படுத்தியது

இரவின் ரக்ஷணையை உதறிவிட்டு, பட்டப் பகலில் ரஸ்தாக்கள் வழியாக எதிரிப் படைகள் ஏராளமாகப் பின்வாங்கியபொழுது பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப்படை நடவடிக்கையை ஆரம்பித்தது.

ஜெர்மன் சாமான் வண்டிகள், போர் வாஹனங்கள், பீரங்கிகள், லாரிகளின் லக்ஷியங்களெல்லாம், மேற்கு ஜெர்மனியிலுள்ள மகத்தான இருப்புப்பாதை நிலயங்களான, ந்யூஸ், கொலோன், டஸ்ஸல்டார்ப், பான் முதலிய இடங்களுக்குச் செல்லுவதுதான். முதலெடுப்பிலேயே அவைகளை அமெரிக்க டாகடிகல் விமானப்படை தாக்கி பாலேப் பகுதியில் ஏற்பட்டதற்கு சமமான நஷ்டத்தை உண்டுபண்ணின. ஏராளமான சாமான்கள் சென்ற இருப்புப் பாதைகளை மத்திய ரகமுள்ள பிரிடிஷ் பைடர் வெடிவிமானங்கள் தாக்கின. 19-வது அமெரிக்க டாக்டிகல் விமானப் படை ஜனவரி 22-ம் தேதியன்று 950 ரயில்வண்டித் தொடர்களை அழித்திருக்கிறது. மற்ற அமெரிக்க டாக்டிகல் விமானப்படை போர்முனையிலிருந்துவரும் ரஸ்தாக்களில் 1,500 வண்டிகளை அழித்திருக்கின்றது, 1,100 வண்டிகளைப் பழுதுபடுத்தியிருக்கிறது.

அன்று தினமே, டெம்பஸ்ட் சண்டை விமானங்களும், ஸ்பிட்பையர்களும் ஆபிரிக்காவில் கியாதி பெற்ற விமானப்படை உதவி மார்ஷல் பிராட் ஹாஸ்டின் தலைமையில் பீரங்கிகளாலும் அவுட் வாணங்களினாலும் தாக்க ஆரம்பித்தன.

ஆகிலும் இது பிரிடிஷ் அமெரிக்க விமானப்படையின் பூர்ணமான தாக்குதலில்லை, அடுத்தநாள் எட்டாவது அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த பறக்கும் கோட்டை விமானங்களும் லிபரேட்டர்களும் இருப்புப்பாதை மத்திய நிலயங்களை நொருக்கின. இரவில் பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப்படையைச் சேர்ந்த மஸ்கிடோ விமானங்கள் ரஸ்தாக்களையும் இருப்புப்பாதைகளையும் தாக்கி தென்பட்ட எல்லாவற்றையும் சுட்டுவீழ்த்தின. வாரம் முடிவதற்குள் பிரிடிஷ் பாம்பர் கமாண்டைச் சேர்ந்த மகத்தான பலம் யுத்தத்தில் ஈடுபட்டது. இரவு பகலாக லங்காஸ்டர் விமானங்கள், ஹாலிபாக்ஸ் விமானங்கள் இருப்புப் பாதை நிலயங்களைத் தாக்கிவந்தன.

மேற்குப் போர்முனையிலிருந்து ஜெர்மன் படைகள் ஏராளமாகப் பின் வாங்கியபொழுது படைகள் ஜெர்மனிக்குள் வெகுதூரம் சென்றன. ஆகிலும் அவைகள் விமானத்தாக்குதல் வட்டாரத்தைத் தாண்டிச்செல்லவில்லை. பின்வாங்குவது ரூரிலிருந்து ஹானோவர் வரையில் இரண்டு முக்கியகிளைகளாகச் சென்றது. ஒன்று ஆறு பாதைகளாக ஹாமிலிருந்து பியல்பெல்ட் வழியாகச் சென்றது. மற்றொன்று டார்ட்மண்டிலிருந்து பாடர்பார்ன், ஹாமாலின் வழியாக சமகோடாகச்சென்றது. ஒரே நாளில் பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப்படை இந்த இரண்டு மார்க்கங்களில் கிழக்கு நோக்கிச்சென்ற 19 ரயில் வண்டிகளைச் சுட்டுத் தள்ளின, 14 இஞ்சின்கள் அழிந்தன, 63 இஞ்சின்களை பழுதுபடுத்தின, 22 வண்டிகளை நாசம் செய்தன அல்லது பழுதுபடுத்தின.

மறுநாள் அவைகள் 90 ரயில் வண்டிகளைத்தாண்டி 87 இஞ்சின்களையும், 275 வண்டிகளையும் அழித்தன அல்லது பழுதுபடுத்தின. சில நாட்களுக்குள்ளாக இருப்புப்பாதைகள் மிகுதியாகச்சீர்கெட்டு விட்டதினால் ரயில் வண்டிகள் ஹானோவருக்குத் தெற்கில் அநேக மைல்களிலுள்ள கோட்டிங்கன் வரையில் ஒதுக்கிக்கொண்டு போகப்பட்டன.

புதுவருஷப்பிறப்புன்று பிரிடிஷ் விமானத்தளங்களைத்தாக்கியதில் ஏற்பட்ட காயங்களைச் சரிப்படுத்திக் கொண்டிருந்த ஜெர்மன் விமானப்படை பலமாக்க் குறுக்கிட்டது. இந்த நடவடிக்கையில் 34 விமானங்களை இழந்தது, நமக்கு ஒரு விமானந்தான் நஷ்டம். இவ்விதமாக ஜெர்மனியின் போக்குவரத்து வசதிகள் இடைவிடாது தாக்கப்பட்டு வருகின்றன. அசௌகரியமான கால நிலைமையைத் தவிர வேறு ஒன்றும் அதன் நடவடிக்கையை பாதிக்க முடியாது. இதுதான் நேசதேச விமான நடவடிக்கையின் சுருக்கமான விருத்தாந்தம். இவ்விதமாகத்தான் மேற்கிலிருந்து துருப்புகளையும், தளவாடங்களையும், ருஷ்யர்களைத் தாக்க அனுப்ப ஜெர்மனி செய்துவரும் முயற்சி வழிமறிக்கப்பட்டுத் தடங்கலுக்குள்ளாகி வருகிறது.

## அட்மிரல் பிரேசரின் ஜீவ்ய சரித்திரம்.

1943-ம் வருஷம் வசந்தகாலத்தில் வடக்கு ருஷ்யாவுக்குப் போகும் நேசதேச சாமான் கப்பல் கூட்டங்கள் நிருகியாகச் செல்லவேண்டுமென்று பிரதம மந்திரி முடிவு செய்த பொழுது பிரிட்டனைச் சுற்றியுள்ள கடற்படையின் புதிய கடற் தளபதியை அந்த வேலைக்குத் தேர்ந்தெடுத்தார்.

அவர்தான் உதவி கடற் தளபதி (இப்பொழுது கடற் தளபதி) ஸர் ப்ரூஸ் ஆஸ்டின் பிரேசர். மிஸ்ட்டர் சர்ச்சில் அவரை இரண்டாவது தடவை இப்பொழுது தேர்ந்தெடுத்து விட்டார். சென்ற ஆகஸ்டு மாதத்தில் கிழக்குக் கடற்படையின் கடற்தளபதியாக நியமிக்கப்பட்டார். இப்பொழுது அவர் பஸிபிக்கில் அமைக்கப்பட்டுள்ள பிரிடிஷ் கடற்ப்படைக்குக் கடற் தளபதியாக அனுப்பப்பட்டிருக்கிறார்.

முதல்தடவை அவர் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது மிஸ்ட்டர் சேம்பர்லேனின் கூட்டு யுத்த நிர்வாக சபையில் மிஸ்ட்டர் சர்ச்சில் முதல் கடற் பிரபுவாக இருந்தார். 1939-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் கடற்படை சங்கத்தில் அவர் மாறுதல்களைச் செய்தபொழுது ஐந்து கமிஷனர்களில் ஒருவராக ஸர் ப்ரூஸ் பிரேசரை நியமித்தார். பிரேசர் யுத்த காலத்திற்குறிய கப்பல்களைக் கட்டும் வேலையில் பராமரிஷை வேலையில் ஏவப்பட்டார். கடற்படையின் ரகத்தையும், பரிமாணத்தையும் அவர் திட்டம் வகுத்தார். ஏற்கனவே இருந்த யுத்தக் கப்பல்களும் யுத்த அனுபவத்தை ஒட்டித் திருத்தியமைக்கப்பட்டன.

கால சக்ரத்தின் சுழலில் கப்பல்களைக் கட்ட திட்டம் போட்டவரே அவைகளின் கடற் தளபதியாக மிஸ்ட்டர் சர்ச்சிலினால் நியமிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட அந்தஸ்து உயர்வுள்ள வேலை, சுலுவான தல்ல. 1942-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் வடக்கு ருஷ்யாவுக்கு சாமான் கப்பல் கூட்டங்கள் போகாமல் நின்றுவிடுவதற்குமுன் ஒரு சமயத்தில் வின்ஸ்டர் பிரபு பிரபுக்கள் சபையில் ஒப்புக்கொண்டது போல, 38 கப்பல்களில் 34 நமக்கு நஷ்டமாகின.

பிரிடிஷ் உள்நாட்டுக் கப்பற்படையின் தலைவராக இருந்த ஸர் ஜான் டோவேக்குப் பதிலாக வந்தவர் இவ்விதமான கோரமான நிலைமையுடன் வேலையைத் துவக்க வேண்டியதாயிற்று. அப்பொழுது கடற்தளபதி பிரேசர் உதவி கடற்தளபதி அந்தஸ்தத்தான் பெற்றிருந்தார். ஆகிலும் கடற்தளபதியாக ஆக்ட் செய்துவந்தார். கடற்தளபதியாக இல்லாத ஒருவரை பிரிடிஷ் கடற்படையின் முக்கியமான கமாண்டை யுத்த காலத்தில் வகிக்கும்படி செய்தது இதுதான் முதல்தடவையாகும்.

அவர் அதற்கு லாயக்குள்ளவர். சதுரமான அவருடைய தாடைகளும், நீலநிறமுள்ள கண்களும் தேர்ச்சிபெற்ற மாலுமியை ஒத்ததானவை. அவர் இடிமுழக்கம்போல் சிறிப்பார். அவர் வியசனப்படுபவர்போல் இருப்பார். அவரிடம் வெளிப்படையாக உத்சாக குணம் காணப்படாது.

அவர் மிஸ்ட்டர் சர்ச்சிலைக் காணும்பொழுது தொப்பியைத் தூக்கி வந்தனம் செய்வார். அப்பொழுது அவருடைய சிவந்த மயிருக்கும் மிஸ்ட்டர் சர்ச்சிலின் வெண்மை மயிருக்கும் உள்ள வித்தியாசம் நன்கு புலப்படும்.

அவர் ஸ்காட்லாந்து ஜனங்களைப்போல் நாவடக்கமுள்ளவர். அவருடைய உல்லாசம் சாவதானமாகவும் தந்திரமாகவும் தோன்றி திடீரென்று மறைந்துவிடும். அவருடைய குறிப்பான, சொல்பமான, விஷய சூசகமான வார்த்தைகள் அவருடைய குணத்தை பிரகடனம் செய்கின்றன. போர்முனை நெருக்கடியில் பரிகாரப் பேச்சுகளில் ஈடுபட்ட ஸர் ஜேம்ஸ் சோமர்வில்லியைப்போலும் ஸர் ஆண்ட்ரு கன்னிங்ஹாமைப்போலும் அவர் நடந்துகொள்ளமாட்டார்.



வடக்கு ருஷ்யாவுக்குச் செல்லும் கடல் மார்க்கத்தை பத்திரப்படுத்தும் நடவடிக்கையை அவர் உத்தம பக்ஷமான தன்னம்பிக்கையுடனும் அதம பக்ஷமான பிறருதவியுடனும் கையாண்டுவந்தார். அவர் திட்டங்களைத் தானே நிறுவினார். அதற்காகத் தன்னந்தனியே இரவில் வெகுகாலம் வரையில் விழித்திருப்பார்.

கடற்படை பிரச்னைகளில் மிகுந்த அனுபவம் பெற்ற அவர்தான் இதைச் செய்யக்கூடும். அவருக்கு சிறந்த ஞான மிருக்கிறதென்பது அவர் பிரிடிஷ் கடற்படையில் நன்கு மதிக்கப் பெற்ற பீரங்கிப்படை அனுபவமுள்ளவரென்பதிலிருந்தும் கடற்படையைச் சேர்ந்த விமானப் படையின் சக்தியைப் பிரதிபாதனம் செய்கிறவர் என்று மதிக்கப்படுவதிலிருந்தும் வெளியாகுகிறது.

பீரங்கிப் படையின் அவசியத்தில் அவர் கவனம் செலுத்திவந்தபோதிலும் மற்ற விஷயங்களிலும் அவர் கவனம் செலுத்தாமலில்லை. அவருடைய வகுப்பிலும் அவர் முதான்மையாகவும் சதாகாலமும் புதிய ஆயுதத்தின் சக்தியைப்பற்றி சிலாகித்துப் பேசுவதுண்டு. பஸிபிக் கடற்படையின் கடற் தளபதியாக நியமிக்கப்பட்டபின், மேல்போர்னில் ஒரு பேட்டியின் பொழுது, பஸிபிக் போரில் விமானந்தாங்கிகள் தான் முக்யத்துவமுள்ளவையென்று அட்மிரல் பிரேசர் வற்புறுத்தியிருக்கிறார்.

அட்மிரல் பிரேசர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமுன் ருஷ்யாவுக்குப் போகும் சாமான் கப்பல் கூட்டங்கள் சீர்கேடடைந்ததற்கு விமானம் தாங்கிகளையும் விமானங்களையும் பிரிடன் கட்டக்கூடிய சக்திபெற்றிராததுதான் காரணமாவென்று நாம் இனிமேல்தான் அறிந்து கொள்ளவேண்டும்.

ஜெர்மன் விமானப்படை வடக்கு நார்வேயில் கிர்கெனில் என்னுமிடத்தில் நமது சாமான் கப்பல் கூட்டங்கள் செல்லும் மார்க்கத்திலிருந்து 40 மைல் தூரத்தில் நல்ல தளங்களைப் பெற்றிருந்தது என்பது அறிந்த விஷயமே. அதம பக்ஷமான விமானந் தாங்கிகள் கிடைத்தாலொழிய கடற் தளபதி பிரேசர் கப்பல்களை அனுப்பத் துணிவுகொள்ளுவதில்லை. தாத்காலிகமான சிரமங்களை நிவர்த்திக்க அவர் ஒரு சமயத்தில் அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பலையும் உபயோகப்படுத்தினார்.

விமானந் தாங்கிகளில் அதிகமான சண்டை விமானங்களுடனும், கப்பல்கள் செல்லும் வழியை மாற்றியும், சாமான் கப்பல்கள் வட துருவத்துக்குச் சமீபமாகச் சென்றும், அவர் நமது கப்பல்களுக்கு ஏற்பட்ட அபாயத்தை சிறப்புடன் நிவர்த்தி செய்தார்.

வடக்கு நார்வேயிலுள்ள ஆல்டன் வளைகுடாவிலிருந்த 52,000 டன்கள் எடையுள்ள ஜெர்மன் போர்க்கப்பலான டிர்பிட்ஸிடமிருந்தும் 26,000 டன்கள் எடையுள்ள ஜெர்மன் சஞ்சாரியான ஷார்ன் ஹார்ஸ்டிடமிருந்தும், மற்ற ஜெர்மன் கப்பல்களிடமிருந்தும் நமது கப்பல்களுக்கு மற்றொரு அபாயம் ஏற்பட்டிருந்தது. ஒளிகளிலிருந்து அவைகளை வெளிவரும்படி அட்மிரல் பிரேசர் எவ்வளவு புரோச்சாகப்படுத்தியும் ஒன்றும் பலிக்கவில்லை. அதனால் டிர்பிட்ஸை வளைகுடாவிற்குச் சென்று முடமாக்கவேண்டும் அல்லது மூழ்கடிக்க வேண்டுமென்று அவர் முடிவு செய்தார். அவர் செய்த நடவடிக்கை எல்லோரும் அறிந்த விஷயம்தான். ஆகிலும் அவருடைய முறைகள் நூதனமானவையாகையால் அவர் மேற்கொண்ட இரண்டு தாக்குதல்களிலும் ஜெர்மானியர்கள் பிரமிக்கும்படி செய்யப்பட்டார்கள். அவர்கள் பிரேசரின் புத்திசாலித் தனத்தை சமாளிக்கத் தயாராக இல்லை.

1943—1944-ம் வருஷத்தில் மாரிகாலத்தில் நீண்ட நேரமுள்ள இரவுகளில் பிரேசர் சாமான் கப்பல்களை ருஷ்யாவுக்குக் கொண்டுவருவதினால் ஏற்படும் அபாயங்களை ஜெர்மனி அறிய ஆரம்பித்தது. கடைசியாக உள்ள சீட்டான ஷார்ன் ஹார்ஸ்டை அனுப்பி அவைகளைத் தாக்குவதைத் தவிர ஜெர்மனிக்கு வேறுவழியில்லை. இருட்டில் 33 நாட்கள் வீதம் துரிதமாக முன்னேறக்கூடிய இந்தக் கப்பலின் நடவடிக்கைகளை சமாளிக்க பிரேசர் அநேக மாதங்களாகப் பொருமையுடன் திட்டங்களைப் போட்டு அவைகளைப் பழக்கம் செய்திருந்தார். சென்ற கிருஸ்துமஸுக்கு மறு தினத்தன்று பீரங்கிப் பிரயோகத்தினாலும் மீன்வெடிகளாலும் அதை அழித்ததென்பது பீரங்கிப் படையாளரைவிட அவருடைய கப்பலிலிருந்த கவசத்தை அறிந்த கடற்தளபதிக்குப் பெரும் புகழை அளித்துவிட்டது.

## ஜெர்மனியின் ரகசியங்களைக் கண்டுபிடிப்பது.

### விமானப்படையின் ஷெர்லாக் ஹோம்ஸின் வேலை.

#### விமானப்படை நிருபர் எழுதுவது.

அவர்களுக்கு விமான இலாகா தோட்டிகள் அல்லது குப்பைகளைப் பொருக்கி வியாபாரம் செய்யும் நிபுணர்கள் என்று பெயர். விமான தளங்களில் அவர்கள் மிகவும் சங்கடமான நிலைமையிலிருப்பவர்கள் என்றும் குறிப்பிடப்படுவோர்கள். உத்தியோகமுறையில் அவர்களுக்கு பிரிடிஷ்

விமானப்படையின் இரண்டாவது டாக்டிகல் விமானப்படையில் விமான கைத்தொழில் துப்பறியும் வேலைக்காரர்களென்று பெயருண்டு.

அவர்கள் எதிரி உபயோகப்படுத்தக்கூடிய எல்லா புதிய ஆயுதங்களையும் கண்டுபிடிக்க வேண்டும். ஷெர்லாக் ஹோம்ஸ் விமானப்படையைப்போல, ஜெர்மானியர்கள் பின்வாங்கும் பொழுது கைவிட்டுப்போன அல்லது நொறுங்கிப்போன தளவாடங்களை அவர்கள் நன்றாய் பரிசோதித்துப் பார்க்கவேண்டும்.

இந்தக் கைத்தொழில் வேலைக்காரர்கள், எதிரியின் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டபின் அதைச் சேர்ந்த பாகங்களைக் களைந்து எடுத்து ஆராய்ச்சி செய்கிறார்கள். அல்லது தொழிற் சாலை, சாமான் கிட்டங்கி, விமான தளம், இருப்புப்பாதை தளம் முதலியவற்றைக் கூர்மையாகக் கவனித்துவருகிறார்கள்.

புதிய ஆயுதத்தைக் கண்டுபிடிப்பதற்காக அவர்கள் எவ்விதமான வழிகாட்டிகளையும் அலக்ஷியம் செய்யக்கூடாது. நொறுங்கிப்போன கிளாஸ், உலோகம், சாமான்கள் எல்லா வற்றையும் பொருக்கி எடுக்கவேண்டும். அவர்கள் கொண்டுவரும் சாமான்களை பிரிட்டனிலுள்ள விஞ்ஞான சாஸ்திரிகள் இன்னும் விசேஷமாகப் பரிசை செய்வார்கள்.

ஒரு இடத்தில் சந்தேகத்தின் பேரில் எடுக்கப்பட்ட துணுக்கு தனிப்பட்ட முறையில் முக்கியத்துவமில்லாததாக இருக்கலாம். ஆகிலும் மற்றொரு இடத்தில் அகப்பட்ட மற்றொரு துணுக்குடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அது நாஸிகளின் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்தக் கூடும்.

எதிரியின் ஒரு சண்டை விமானம் நமது படை வரிசையில் நொறுங்கி விழுந்து ஒரு வாகனத்தை நொருக்கிற்று என்று வைத்துக்கொள்ளுவோம. இந்த நடவடிக்கையில் வாகனமும், விமானமும் தீப்பற்றி எரியக்கூடும். அவ்விரண்டின் துணுக்குகளும் போர்க்களம் பூராவிலும் பறவிவிடும். அந்த இடத்திற்கு விமானப்படை துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் சென்று அதை சுத்தி செய்துவிடுவார்கள்.

அவர்கள் துணுக்களின் வித்யாசத்தை எவ்விதம் கண்டுபிடிப்பது? பல இடங்களிலிருக்கும் துணுக்குகளை அவர்கள் எவ்விதம் ஆராய்ச்சி செய்யமுடியும். அதற்கு விடை, ஒன்று பொருமை, மற்றொன்று அனுபவம், மறறொன்று கைத்தொழில ஞானம்.

அந்த வேலையின் சிரமத்தைப்பற்றி ஆபீஸர்கள் ஒரு கதையைச் சொல்லுகிறார்கள். தாக்கிவிட்டுத் திரும்பிச்செல்லும் உத்தேசத்துடன்வந்த ஒரு பாக் உல்ப் விமானம் தெற்கு கடற்கரை நகரத்திலிருந்த ஒரு வீட்டின்பேரில் நொருங்கி விழுந்தது. அதன்பின் ஒரு விளக்கு ஸ்தம்பத்தையும் தாக்கியது. வீட்டில் நொருங்கிய பாகங்களும் விளக்கு ஸ்தம்ப துணுக்குகளும் விமானத் துணுக்குகளும் கலந்துவிட்டன.

அந்தத் தூள்களைக் களைந்து எடுத்தபின் உபயோகமுள்ள ஒரு துணுக்குதான் எடுத்துக் கொள்ளப்பட்டது. விசித்ரமான எழுத்துகள் உள்ள ஒரு கண்ணாடிதான் உபயோகமுள்ளதாக இருந்தது. இதுதான் ஒரு பெரிய புதையல் என்று அவர்கள் நினைத்தார்கள்.

அதை மறுமுறை ஆராய்ச்சி செய்தபொழுது விளக்கின் ஒரு சில்லென்றும் அதன் எழுத்துக்கள் ஜில்லா சபையைக் குறிக்கிறதென்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆகிலும் அதைப்பொருக்கி எடுத்தவர்கள் நல்ல வேலையைத்தான் செய்திருக்கிறார்கள். அது வேறு முக்கியத்துவமுள்ளதாக இருக்கலாம். எப்பொழுதும் "இருக்கலாம்" என்ற ஒரு அம்சம் கவனிக்கப்படவேண்டும்.

பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப்படையின் பல பகுதிகளிலும் இவ்வித துப்பறியும் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். இதுபோல அமெரிக்க விமானப்படையிலுள்ள வர்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பு உண்டு. இவர்கள் நார்மண்டி, பிரான்ஸ், பெல்ஜியம், வழியாக ஹாலந்துக்குச் சென்ற விமானப்படையுடன் சென்றிருக்கிறார்கள்.

சில சமயங்களில் அவர்கள் முன்னணியிலும் துருப்புகளுடனும் வேலைசெய்து வருவார்கள். இங்கே கைத்தொழில் பயிற்சியைவிட மற்ற குணங்களும் தேவைப்படும. இங்கு தைரியமும் வேண்டும். ஏனெனில் எதிரி ஒளிந்துகொண்டு சுடவோ அல்லது குண்டுகளை வீசவோ தயாராக இருப்பான்.

விமானம் நொருங்கியபொழுதோ அல்லது பிடிபட்ட விமான தளத்திலோ அவர்கள் உடன் காலத்திலிருக்கவேண்டும். ஏனென்றால் அதற்கு சமீபத்திலுள்ள நகரத்திலும் கிராமங் களிலுமுள்ள பொதுஜனங்கள் அங்குமுன்னதாகவே செல்ல முயலுவார்கள். அங்குசென்று அவர்கள் வெறுக்கும் எதிரியின் சாமான்களை அழிக்கமுயலுவார்கள்.

அநேக சமயங்களில் உபயோகப்படக்கூடிய ஒரு வஸ்துவை பிரெஞ்சு, பெல்ஜிய, டச்சு பொதுமக்கள் கோபத்துடன் சின்னாபின்னப்படுத்தியிருப்பார்கள் பிரான்ஸிலிருந்த மாக்விப் படைகளும் பெல்ஜியம், ஹாலந்திலுள்ள கீழறப்பான் இயக்கங்களும் இவ்விதமான ஆத்திரச் செய்கைகளிலிருந்து அநேக உபயோகமுள்ள சாமான்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.



# வியானை மதிக்காமல் ஜப்பானியர்கள் மனோராஜ்யம் செய்துவிட்டார்கள்.

## எண்ணெய் ஸப்ளைகளை கடல் விமானங்கள் தாக்குகின்றன.

### A. J. மாக்வின்னி.

(அட்மிரல் வியானின் கப்பலிலுள்ள டெயிலி ஹெறால்ட் நிருபர்).

கவியத் தொங்கும் நெற்றியும், சுருசுருப்பும், துணிவுமுள்ளவும் மத்தியதரைக் கடலிலும், மால்டாவிலும் சாமான் கப்பல்களை வெற்றிகரமாக நடத்தியவுமான வியான் இப்பொழுது ஜப்பானியர்களைத்தாக்க தூரக்கிழக்குக்கு வந்துவிட்டார்.

சுமாத்ராவுக்கு அருகில் அவருடைய கப்பலில் நான் சென்றேன். ஜப்பானிய எண்ணெய் பிரதேசங்களை சமீபகாலத்தில் பலமாக பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் தாக்கியதை ரிபோர்ட் செய்த பத்திரிகை நிருபர் நான்தான். இந்த நடவடிக் கையில் கிழக்கு இந்திஸ் கடற்படையின் மிகவும் சக்திவாய்ந்தவைகள் ஈடுபட்டன. அவை களில் முக்கியமானவை, இல்லஸ்டிரியஸ், விக்டோரியஸ், இண்டாமிடபிள், இண்டிபாடிகபிள் என்ற விமானந்தாங்கிகள். 35,000 டன்கள் எடைமானமுள்ள யுத்தக் கப்பலான கிங் ஜார்ஜ், ஆர்கோனட், பிளாக்பிரின்ஸ், யூரியாலஸ் (5,450 டன்கள்) என்ற சஞ்சாரிகள், கிரேன்வில்லி, கெம்பன் பெல்ட், யூர்சா என்ற நாசகாரிகள்.

விமானந்தாங்கிகளிலிருந்த விமானங்கள் கிழக்கு இந்தீஸிலுள்ள ஜப்பானின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிக்கும் சாலையான பாலம்பாங்கைத் தாக்கின. நடவடிக்கைக்குப்பின் நமது விமானிகள் நகைத்துக் கேளிகை செய்தார்கள். விமானிகள் சுமாத்ரா பேரில் ஆகாயத்திலும் கடலிலும் ஜப்பானியர்களை எதிர்த்து ஜப்பானின் மூர்க்கத்தனமான எதிர்ப்பை யும் பொருட்படுத்தாமல் சிறந்த வெற்றியைப் பெற்றார்கள்.

ஒரு மாதத்திற்குள் பிரிடிஷ் கடற்படை சுமத்ராவை நான்காவது தடவை தாக்கியிருக் கிறது. ஐந்து நாட்களுக்குள் கடற்படை இங்கு இரண்டாவது தடவை வந்துவிட்டது. இவ்விதமான தாக்குதல்கள் திரும்பித் திரும்பி நடைபெறுமென்று ஜப்பான் மதித்துப் பார்க்கவில்லை. வியானின் வருகையை மதிக்காமல் அவர்கள் மனோராஜ்யம் செய்துவிட் டார்கள்.

ஐந்து நாட்களுக்குமுன் அவெஞ்சர் வெடி விமானங்களும் புதிய பையர்பிளை சண்டை விமானங்களும் பாலம்பாங்குக்கு சமீபத்திலுள்ள பிளாட்ஜோவிலுள்ள ஜப்பானிய எண்ணெய் சுத்திகரிக்கும் சாலையை அதிகாலையில் தாக்கின. பலமான அழிவுபட்ட ஜப்பானியர்கள் பிளாட்ஜோவை ஒட்டியுள்ள வளைகுடா தாண்டியுள்ள சோங்கே கொராஸ்க் எண்ணெய் சுத்திகரிக்கும் சாலை பாக்கியிருக்கிறதென்று நினைத்து குதூகலப்பட்டுக்கொண்டிருந்தார்கள். சோங்கே கொராஸ்க் தாக்கப்படவில்லை. ஆனால் அதுவும் வியானியின் லக்ஷிய ஜாப்தாவில் சேர்க்கப்பட்டுவிட்டது. விடியற் காலையில் அவெஞ்சர்களும், பையர்பிளைகளும், ஹெல்காட்டு களும் கார்சேர்ஸும் சோங்கே கொராஸ்கைத்தாக்கின.

நமது கடற்படை தளத்திற்குத் திரும்பிச்சென்றுவிட்டதென்று ஜப்பான் நினைத்திருக் கும். புகைக்கூண்டுகளுடனும், விமான எதிர்ப்பு பீரங்கிகளுடனும், சண்டை விமானங் களுடனும் ஜப்பான் பலமாக எதிர்த்துப்போராடிய போதிலும், நமது கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் முதல்தரமான வேலையைச்செய்தன. முந்திய தாக்குதல்களில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்களுக்கு எதிர்ப்பு இல்லாதபோதிலும் இப்பொழுது அவைகள் தாக்கப்படு மென்று வியானுக்கு நம்பிக்கையிருந்தது. அது உண்மையாகிவிட்டது.

"ஆகாயத்தில் ஆறு ஜப்பானிய விமானங்கள் தோன்றின. பிரிடிஷ் கடற்படை பீரங்கிகள் ஏராளமான குண்டுகளை பிரயோகித்தன. வானம் பூராவும் குண்டுகளின் வெடிக்கும் சப்தமும் கேட்டது. ஆகாயம் பூராவும் வெடிமருந்துப்புகை நிரம்பியிருந்தது. 1,000-க்கு மேற்பட்ட பீரங்கிகள் சுட்டன என்று நான் மதிப்பிக்கிறேன். ஸீபையர் விமானங்களும் ஹெல்காட்டுகளும் ஜப்பானிய மீன் வெடிவிமானங்களை எதிர்த்தன. நான்கு நிமிஷங் களுக்குள்ளாக எதிரியின் ஆறு விமானங்களும் அழிக்கப்பட்டன.

---

# மணிலாவைத் தற்காப்பு செய்வதில் ஜப்பானியரின் இகழ்ச்சி.

## தலைநகரத்தின் விடுதலை—முற்குறி.

(டெயிலி டெலிகிராப்).

திட்டப்படி அற்புதமாக நடைபெற்ற நடவடிக்கைமூலம் படைகளிறங்கிய 25 நாட்களுக் குப்பின் ஜெனரல் மாக் ஆர்தரின் துருப்புகள் மணிலாவுக்குள் புகுந்தன.

ஆச்சரியப்படத்தக்க விஷயம் யாதெனில் லிங்கேயன் வளைகுடாவிலிருந்து தெற்குமுக அமெரிக்கர்கள் முன்னேறியபொழுதும், ஸாம்பலஸ் மாகாணத்துக் கடற்கரையிலிருந்து

கிழக்குமுகமாக அமெரிக்கர்கள் பின்பு முன்னேறியபொழுதும் நாசுக்பூவிலிருந்து வடக்கு நோக்கி இறுதியில் அவர்கள் முன்னேறியபொழுதும், ஜப்பானியர்கள் பலமாக எதிர்த்துப் போராடவில்லை யென்பதுதான்.

ஜப்பானியர்களின் இகழ்ச்சிக்குக் காரணமென்ன? அவர்களிடமிருந்த ஏராளமான துருப்புகளை அவர்கள் உபயோகப்படுத்தியிருக்கலாம். ஜப்பானியரின் வெற்றிகளில் மணிலாவும் சிங்கப்பூரும்தான் அதிக முக்கியத்வமுள்ளவை. ஆகிலும் யாதொரு போரன்னியிலும் அவர்கள் மணிலாவை நழுவவிட்டுவிட்டார்கள்.

மணிலா விரிகுடாவுக்குச் செல்வதைத் தடுக்க ஜப்பான் காரிகொடாரைத் தற்காப்பு செய்ய முயலக்கூடும். வடக்கில் காராபால் மலைகளிலும் மாகிட் காகாயான் பள்ளத்தாக்கிலும் அவர்கள் கொரில்லாப் போரை நடத்தக்கூடும். மணிலாவையும் மத்திய சமவெளியின் பெரும் பாகத்தையும் ஜப்பான் இழந்தபின் அது லூஸானில் முக்கியத்வமுள்ள பாகங்களை இழந்துவிட்டது. மேலும் அவர்கள் கௌரவத்தை இழந்துவிட்டார்கள். இதுதான் ஜப்பானுக்கு முக்கியத்வமுள்ளது.

மணிலாவின் விடுதலை அநேக விஷயங்களை ருஜுப்பிக்கிறது. முக்கியமாக இரண்டு ஹேஷ்யங்கள் தோன்றுகின்றன.

முதலாவதாக ஜப்பானியர்கள் சாகும் வரையில் போர் புரியக்கூடுமென்றாலும் அட்மிரல் நிமிட்ஸும் ஜெனரல் மாக் ஆர்தரும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் சீரான நிலைமையைக் கெடுத்துவிட்டார்கள். இரண்டாவதாக, பசிபிக்கில் அமெரிக்கக் கடற்படை, விமானப்படை, தரைப்படையின் ஒன்றுபட்ட சக்தி மிகவும் பலமானதென்று ருஜுவாகி விட்டதால் நேசதேசத்தார்கள் ஜப்பானையே தாக்கப் புறப்பட முடிவு செய்துவிடுவார்கள். இவ்விதமாக சீனாவுக்குச் செல்லுவதையே அவர்கள் நிறுத்திவிடுவார்கள்.

---

# சர்ப்பரா மார்க்கங்களில் நேசதேச ஆதிக்கம்.

## கிழக்கிந்தீஸ் கடற்படையின் சேவை.

(பிரியான் டன்ஸ்டால்.)

கடல் மார்க்கமாக சப்ளைகளைக் கொண்டுபோவதிலும் போக்குவரத்துக்களை நடத்துவதிலும் உலகமளாவிய அதிக்கம் பெற்றிருப்பதில் பிரிடிஷ் கடற்படையின் உதவி எவ்வளவென்பதை சமீப காலத்திய சில சம்பவங்கள் வெளிப்படுத்திவிட்டன. கடற்படை போரில்லாதபொழுது இந்த ஆதிக்கத்தைப் பரிபூர்ணமாக நிலைநாட்டி வைப்பதுதான் பிரிடிஷ் கடற்படையின் வேலை. சாமான் கப்பல்கள் வெற்றிகரமாகப் போய்ச் சேர்ந்தாலும் அல்லது கடற்கரையில் படைகளிறங்கினாலும் இரண்டும் கடற்படை வெற்றிதான். ஏனெனில் எதிரிகள் குறுக்கிட்டாலும், குறுக்கிடாவிட்டாலும் கடற்படையின் எண்ணம் நிறைவேறிவிடுகிறது.

தூரக்கிழக்கு ஸமுத்திரங்களில் கடற் தளபதி ஸர் ப்ரூஸ் பிரேசரிடமுள்ள பிரிடிஷ் பஸிபிக் கடற்படை மேற்கு, தென் மேற்கு பசிபிக்கில் ஜப்பானியர் வசமுள்ள கடலாதிக்கத்தை அழிக்க முயன்று வரும் அமெரிக்கக் கடற்படைக்கு உதவி செய்யத் தயாராகி வருகிறது. பிரிடிஷ் பஸிபிக் கடற் படை, அமெரிக்கக் கடற் படை தலைவரான அட்மிரல் கிங்கின் போதனைப்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அது அட்மிரல் நிமிட்ஸுடனோ அல்லது ஜெனரல் மாக் ஆர்தருடனோ ஒத்துழைக்கத் தயாராக இருக்கும்.

பிலிப்பைன்ஸ் நடவடிக்கையில் ஆஸ்திரேலியா என்னும் ஆஸ்திரேலியக் கப்பல் லூஸானில் பழுதுபட்டுவிட்டது. அந்தக் கப்பல் அதற்கு சில வாரங்களுக்கு முன் லேயிடிக்கருகில் பழுதுபட்டபொழுது கம்மோடார் காலின்ஸ் காயம்பட்டார். காப்டன் டிகேனியூ கொல்லப்பட்டார். இதே சமயத்தில் தென் மேற்கு பசிபிக்கிலுள்ள அநேக தீவுகளில் சிதறுண்டிருக்கும் ஜப்பானியப் படைகளைத் துடைப்பதற்காக ஆஸ்திரேலியப் படைகளை உபயோகிப்பதற்காக ஆஸ்திரேலியப் படைகளை உபயோகிப்பதென்று நேசதேசத்தார்கள் முடிவு செய்திருப்பதினால் பிலிப்பைன்ஸில் ஈடுபடாத ஆஸ்திரேலியக் கப்பல்களுக்கு மிகவும் முக்கியமான அலுவல்களிருக்கின்றன.

வங்காளக்குடாக் கடலில் பர்மாவைச் சேர்ந்த அரக்கான் கடற்கரையில் இரண்டு இடங்களில் படைகளிறங்கிவிட்டன. இவைகளுடன் ஐந்து இடங்களில் படைகளிறங்கியிருக்கின்றன. முதலாவது மெடான் தீபகற்பத்தில் ஒன்றுபட்ட நடவடிக்கை மூலம் படைகளிறங்கின. இரண்டாவது, ராம் ரீத் தீவின்தென்கிழக்குக் கடற்கரைக்கு சில மைல்களுக்கு அப்பாலிலுள்ள செடுபாத் தீவில் கடற்படைகள் கப்பல் மூலமாக இறங்கின. இந்தப் படையெடுப்புகள் அட்மிரல் மௌண்ட் பேடனின் ஒன்றுபட்ட நடவடிக்கைகளின் வலிமை பின் அபிவிருத்தியை வெளிப்படுத்துகின்றன. அதற்கு உதவியாக கிழக்கிந்திய கடற்படையென்று உத்தியோக முறையில்



விவரிக்கப்பட்ட கடற்படை இந்துமகா ஸமுத்திரத்திலிருந்து வருகிறது. ஆகிலும் வாஷிங்டனில் கடற் தளபதி சோமர்வில் பின்வருமாறு சொல்லுகிறார். "இது வரையில் அட்மிரல் மௌண்ட் பேடனுக்கு ஒரு அற்பமான கடற்படை ஒத்தாசைதான் கிடைத்திருக்கிறது."

இந்தப் படையெடுப்புகள் மூலம் ரெங்கூனிலுள்ள ஜப்பானியர்களுக்கு அபாயம் அதிகரித்துவிட்டதுடன் அரக்கானில் வடக்குப் பக்கத்திலுள்ள ஜப்பானியப் படைகள் கடற்கரை ஓரமாகப் பின்வாங்குவது இப்பொழுது துணிக்கப்பட்டுவிட்டது. அப்படைகள் மாண்டலேக்குத் தெற்கிலுள்ள இராவதியை அடைய வேண்டுமென்றால் மலைப் பிரதேசங்கள் வழியாக தென் கிழக்குக்குப் பின்வாங்க வேண்டும்.

சைனாவுக்குத் தரை மார்க்கமாக ஸப்ளைகளை அனுப்ப பர்மா வழியாகத் திறக்கப்பட்டிருக்கும் லேடோ ரஸ்தாவின் உபயோகம் இந்து மகா ஸமுத்திரம், பஸிபிக் ஸமுத்திரம், அட்லாண்டிக் ஸமுத்திரத்தின் வழியாக பிரிடிஷ், அமெரிக்கக் கடற்படை சாமான்களைக் கொண்டு வரும் வெற்றியைப் பொறுத்ததாகும்.

மிஸ்ட்டர் சர்ச்சிலும் ஜனாதிபதி ரூஸ்வெல்டும் கூட்டறிக்கையில் வெளியிட்டதுபோல ஜெர்மன் யூ படகுகளின் நடமாட்டம் இப்பொழுது மிகுதியாக இருக்கிறது. நீண்ட கால அயர்வினால் பிரிடிஷ் கனடிய கடற்படைகள் யூ படகுகளைத் தாக்கும் சக்தியை பலமாக அதிகரித்துவிட்டன. யூ படகுகள் இதற்கு முன் பிரெஞ்சு, கிரேக்க, தெற்கு இதாலிய தளங்களிலிருந்து புறப்பட்டு வந்த சௌகரியங்களை இழந்துவிட்டன. சமீப காலத்தில் அட்லாண்டிக் ஸமுத்திர நடவடிக்கைக்காக ஜெர்மானியர்கள் பெற்றிருந்த முக்கிய தளமான பெர்கனிலிருந்த யூ படகு ஒளிகளை பிரிடிஷ் விமானப் படை பலமாகத் தாக்கிற்று.

நீர்மூழ்கிகளைத் தாக்கும் சக்தி பிரிடனுக்கு அதிகரித்துவிட்டதற்கு அடையாளமாக பைடர் என்ற பிரிடிஷ் விமானம் தாங்கிக் கப்பல் பிரெஞ்சு கடற்படைக்கு மாற்றப்பட்டுவிட்டது. இத்துடன் பிரான்ஸுக்கு 50 லிபர்டிக் கப்பல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. பைடர் கப்பல் சாமான் கப்பல்களுக்குத் துணைக் காவல் புரிவதிலும் ஒன்றுபட்ட நடவடிக்கையிலும் கியாதி பெற்றிருக்கிறது. ஒரு சமயத்தில் அதிலிருந்து சென்ற விமானங்கள் ஒரே தாக்குதலில் இரண்டு யூ படகுகளை மூழ்கடித்தன.

மத்தியதரைக்கடலில் மகத்தான கடற்படை நடவடிக்கைகள் ஓய்ந்துபோய் விட்டபோதிலும் பொதுவாக தெற்கு ஐரோப்பாவுக்கும் இதாலியிலுள்ள நேசதேசப் படைகளுக்கும் சர்ப்பராக்களை அனுப்புவதில் கடற்படை ஒத்தாசை செய்துவருகிறது. சாமான் கப்பல்களுக்குத் துணைக் காவல் செய்ய யுத்தக் கப்பல்கள் தேவைப்படுகின்றன. ஏட்ரியாடிக் கடலில் சமீப காலத்தில் அநேக சம்பவங்கள் நேரிட்டிருக்கின்றன. இங்கு ஜெர்மானியர்கள் இ படகுகளையும் R. படகுகளையும், மாஜி இதாலிய, மாஜி யூகோஸ்லாவிய யுத்தக் கப்பல்களையும் உபயோகித்து வருகிறார்கள். அவர்களுக்கு வெனிஸும் மற்ற ஏட்ரியாடிக் துறைமுகங்களும் உபயோகமுள்ளதாக இருக்கின்றன.

மேலும் மத்தியதரைக்கடல் மார்க்கமாகத்தான் கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் தரைபடையும் விமானப் படையும் அவைகளுக்குத் தேவையான சர்ப்பராக்களும் கொண்டுபோகப்படுகின்றன. இவ்விதமாக தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு நேரான வழி என்பதுடன் ஜப்பானுடன் யுத்தத்தை நடத்துவதற்கும் மத்தியதரைக்கடல் முக்கியமான கடல் மார்க்கமுமாகும்.

---

# ஜப்பானியர்களைத் தாக்குவதில் நீர்மூழ்கிகளின் வெற்றிகள்.

## பஸிபிக் கடற்படையின் அம்சங்கள்.

(ரியர் அட்மிரல் H. G. தர்ஸ்பீல்ட்).

ஜப்பானியர்களைத் தாக்குவதில் பிரிடிஷ் பஸிபிக் கடற்படை, கிழக்கு இந்தியக் கடற்படை முதலிய வற்றைச் சேர்ந்த நீர்மூழ்கிகள் சிறப்பான வெற்றிகளைப் பெற்றன வென்று சமீபகாலத்தில் வெளியிடப்பட்டது.

பர்மாவிலுள்ள ஜப்பானியப்படைகளுக்கும் கிழக்கிலுள்ள தீவுக்கூட்டங்களைச் சேர்ந்த அநேகத் தீவுகளில் துணிக்கப்பட்டிருக்கும் ஜப்பானியப்படைகளுக்கும், உணவுப்பொருள், எண்ணெய், மற்ற பலரக சர்ப்பராக்களைக்கொண்டுபோன 84 கப்பல்கள் வழிமறிக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன. மேலும் 5 கப்பல்கள் மீன்வெடியினாலும் பீரங்கிக் குண்டுகளாலும் பழுது படுத்தப்பட்டன. பிரிடிஷ் நீர்மூழ்கிகள் கடற்கரையிலுள்ள அநேக ஜப்பானிய தளங்கள் பேரில் குண்டுகளைப் பொழிந்தன.

பூகோள அமைப்பினால் நீர்மூழ்கித் தாக்குதலிலிருந்து கப்பல்களுக்கு தற்காப்பு சௌகரியமிருப்பதினால் இந்த வெற்றிகள் விசேஷமுள்ளவை. 1942-ம் வருஷத்தில் முன்னேறியிருந்த ஸ்தானங்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் துரத்தியடிக்கப்பட்டு

தின் மற்ற பாகங்களுக்கும் விஞ்ஞான சாஸ்திர முறையிலும், கைத்தொழில் முறையிலும் தொடர்பு இல்லையென்றும் நாட்டின் பல்வேறு பாகங்களிலுள்ள விஞ்ஞான சாஸ்திர ஸ்தாபனங்களுக்குள் ஒத்துழைப்பு இல்லையென்றும் ஆசிரியர் ஹில் கண்டுபிடித்திருக்கிறார். மேலும் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி ஒரு சிறிதுதான் இந்தியாவில் நடைபெறுகிறதென்றும் அநேக கியாதிபெற்ற விஞ்ஞானிகள் அறிய செய்கைகளைச் செய்திருந்தபோதிலும், தேசத்தின் சீர்திருத்தத்திற்குப் போதுமான அளவு விஞ்ஞான சாஸ்திர நடவடிக்கை இந்தியாவில் இல்லையென்றும் ஆசிரியருக்குத் தெளிவுபட புலப்பட்டது. இந்தியாவின் இயற்கை ஐச்வர்யங்களும் நன்கு மதிக்கப்படவில்லை. மேலும் ஜனக்கணிதி போன்ற முக்கியமான விஷயங்களில் புள்ளி விவரங்கள் குறைவாக இருக்கின்றன. ஆசிரியர் ஹில்லின் ரிபோர்ட்டின் முக்கியத்வத்தை மிகையானதென்று சொல்லமுடியாது.

முதன் முதலாக இப்பொழுதுதான் ஒரு பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரி இந்தியாவின் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி பூராவையும்பற்றி ஆலோசனைகூற அழைக்கப்பட்டார். அவர் குறிப்பான ஒரு பிரச்னையையும் சர்ச்சை செய்ய வரவில்லை. யுத்தத்திற்கும், சமாதான காலத்திற்கும் பிரிடன் ஏற்பாடு செய்திருக்கும் சர்வதேச தேசீய தொடர்பு திட்டத்தை இந்திய நிர்வாகத்துக்கு அவர் சிபார்சு செய்திருக்கிறார். இந்தியாவின் தேவைக்கு உரிய ஒரு ஸ்தாபனத்தை அமைக்க அவர் வழிகளையும் சொல்லியிருக்கிறார். மிகவும் முக்கியமான உள்நாட்டு சம்பந்தமான சிபார்சு யாதெனில், திட்ட அபிவிருத்தி இலாகா தலைவரின்கீழ் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிக்காக மத்திய நிலயம் அமைக்கப்படவேண்டும். அதற்குப் போதுமான பொருளும், வைத்தியம், விவசாயம், தொழிற்சாலை, இன்ஜினியரிங், யுத்த ஆராய்ச்சி சம்பந்தமான விசேஷ போர்டுகள் கொண்ட முஸ்தீப்புகளும் இருக்கவேண்டும். ஆறுவது சங்கம் ஆராய்ச்சிகளைக் கட்டுப்பாடு செய்யவும், இயற்கை ஐச்வரியங்களைப் பரிசீலனை செய்யவும் நிலைபெற்றிருக்கவேண்டும். சொல்பமான தூரமும், போக்குவரத்துகளின் வேகமும், கூட்டங்கள் சுலபமாக ஏற்பாடு செய்யக்கூடியதுமான பிரிடனைப்போல் இந்தியாவில் போர்டுகள்மூலம் அமைக்கப்படும் திட்டம் திறம்பட வேலை செய்யுமா என்பது காலக்கிரமத்தில்தான் தெரியும். ஆகிலும் கூடியமட்டில் ஒத்துழைக்கவேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டிருப்பதால் உள்நாட்டு சிரமங்களைத் தீர்த்துவிட உத்சாகமேற்படும். ஏற்கனவே துவக்கப்பட்டிருக்கும் வேலையை அபிவிருத்தி செய்து பரவச்செய்யவேண்டும், உயர்தர படிப்பிற்கு புதிய பள்ளிக்கூடங்களை அமைக்கவேண்டும் என்ற சிபார்சுகளும் உபயோகமுள்ளவைதான்.

இந்தியா, பிரிடன் இரு நாடுகளுடைய லாபத்திற்காக ஒத்துழைப்பு முறையில் புதிதான ஒரு முறையை கற்பித்ததற்காக புரொபஸர் ஹில்லை நாம் பாராட்டவேண்டியதுதான். சென்ற வருஷம் பிரிடனுக்குச் சென்ற ஆறு இந்திய விஞ்ஞான சாஸ்திரிகளுக்கு பிரிடன் நல்வரவு வழங்கியதையும் ஆசிரியர் ஹில் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது அவரிடத்தில் இந்தியா காட்டிய அக்கரையையும் நோக்கினால் இந்த ரிபோர்ட்டில் வெளியிட்டுள்ள பிரகாரம் இரு நாடுகளிலுள்ள ஆராய்ச்சி நிபுணர்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படும் என்பதற்கு சூசகங்கள் தோன்றுகின்றன.

---

I

## உன்னுடைய அலுவலைச் சரிவர நடத்து.

டிஸம்பர் மாதம் 17-ம் தேதியன்று டில்லியில் ஒலிபெருக்கியபொழுது இந்தியா கமாண்டின் முகான்மையான நிர்வாகியான லெப்டினெண்ட் ஜெனரல் ஸர். W. G. லிண்ட்ஸெல் பின்வருமாறு சொன்னார்:—

"யுத்தத்தின் இரண்டாவது கட்டத்தில் நேசதேசத்தாரின் பூரா கவனமும் ஜப்பானைத் தாக்குவதில் ஈடுபடுத்தப்படும்பொழுது இந்தியா நேசதேச ஸப்ளைக்கு மகத்தான தளமாகிவிடும்.

"இந்நாட்டில் சேர்க்கப்படும் யுத்த தளவாடங்கள் அதிக பிரயாசைபேரில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மிகுந்த கவலையுடன் வெகுதூரம் கொண்டுபோகப்படுகின்றன. அந்த தளவாடங்களை உபயோகப்படுத்துமுன் கண்டுபிடித்து அழித்துவிடவேண்டுமென்று எதிரி பிரியப்படுகிறான். அதை ரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு நம்மிடமிருப்பதினால் ஜப்பானியருக்கு அவச்யமாகத் தேவைப்படும் எந்தத் தகவலையும் நாம் அஜாக்ரதையான பேச்சு மூலமாகவோ அல்லது நடவடிக்கை மூலமாக வெளியிடக்கூடாது."

II

## மேற்கிலிருந்து வரும் எச்சரிக்கை.

மேற்குப் போர்முனையில் கிருஸ்துமஸின்பொழுது ருண்ட் ஸ்டெட் தாக்குதலைத் துவக்கியபொழுது ஏறக்குறைய ஆயிரம் ஜெர்மன் ஒற்றர்களும் நாசவேலைக்காரர்களும் நேசதேச படை வரிசைகளுக்குப் பின்னால் அதேசமயத்தில் ஒரு தாக்குதலைத் துவக்கினார்கள். அவர்கள் எல்லோரும் ஆங்கில பாஷை பேசினார்கள். அவர்கள் எல்லோரும் பிரிடிஷ், அமெரிக்க ஆடைகளை அணிந்துகொண்டார்கள். அவர்கள் பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும், ஹாலந்திலும் சுற்றிவளைக்கப்பட்டார்கள். ஆகிலும் அதற்கு காலதாமதம் ஏற்பட்டது. அதற்குள் அநேக நாசவேலைகள் நடைபெற்றிருக்கவேண்டும்.

ஜெர்மானியர்களைப்போல ஜப்பானுக்கும் நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. இந்த நெருக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்களும் ஜெர்மனியைப்போல எல்லா முறைகளையும் மேற்கொள்ளக்கூடும். அதற்குவேண்டிய உபாயங்களையும் அவர்கள் தேடவேண்டும். நாம் செய்துவரும் திட்டங்களையும் ஏற்பாடுகளையும் அறிய அவர்களுக்கு அபாரமான ஆசையிருந்து வருகிறது.

ராணுவ உடுப்பைப் போட்டுக்கொண்டால் மட்டும் ஒருவன் ஸோல்ஜரென்று எண்ணிவிடமுடியாது. நேசதேசத்தாரின் ஸோல்ஜரைப்போல் ஆடைகளை அணிந்துகொண்டால் அவன் நேசதேச ஸோல்ஜராகிவிடமாட்டான். ஆங்கில பாஷையைப் பேசிவந்தாலும் அவனை ஆங்கிலேயரின் நண்பனாகக் கருதக்கூடாது. ஆகையால் சம்பாஷணையை ஜாக்ரதையுடன் நடத்தவேண்டும்.

III

## தொழிலாளருக்கு வேண்டுகோள்.

மிலியன்கள்கணக்கான டன்கள் எடையுள்ள உணவுப்பொருள்களையும், ராணுவ தளவாடங்களையும், யுத்த முஸ்தீப்புகளையும் கையாளுவதும் ஆயிரக்கணக்கான துருப்புகளைச் சலனம் செய்வதும் மகத்தான அழகான வேலையாகும். கப்பற்கட்டும் நிலயங்களிலும் இருப்புப்பாதை நிலயங்களிலுமுள்ள சாமான்களை துரிதமாக அப்புறப்படுத்தாவிடில் யுத்தப் போக்கு பலமாக பாதிக்கப்பட்டுவிடும்.

எதிரி இதைத்தான் சாதிக்க முயன்று வருகிறான். யுத்த முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கவேண்டுமாம். ஆகையால் ரஸ்தாக்களைப் பாதுகாத்துவரும் ஒவ்வொருவரும் போர்முனையிலுள்ள மற்றவர்களைப்போல முக்கியத்வமுள்ளவர்கள்தான். சேவை என்ற பதத்தின் உண்மையான அர்த்தத்திற்கு ஒத்தவாறு ஒவ்வொருவரும் அத்யாவசியமான சேவை செய்கிறவர்கள்.

ஏமாற்றமடையாமலிருப்பதற்காக எதிரி துப்பறிய விரும்புகிறான். சமீப காலத்தில் நமக்குக் கிடைத்த வெற்றிகளெல்லாம் திடீர் தாக்குதல் மூலம் ஏற்பட்டவைகள்தான். சமீப காலத்தில் பசிபிக்கில் இவ்விதமாகத்தான் ஜப்பான் அகப்பட்டுக்கொண்டது. ஆகையால் அடுத்த தாக்குதலுக்காக இந்தியாவில் எவ்விதமான ஆயத்தம் செய்யப்படுகிறதென்று அறிய எதிரி மிகுதியான பிரயத்தனம் செய்துவருவான். நாம் எதிரியை பலமாகத் தாக்கப் போகிறோம். சாமான்களை அப்புறப்படுத்துகிறவர்களும் உள்நாட்டு வாசிகளும் நமது தாக்குதலின் வலிமையை மற்றவர்களைவிட நன்கு அறிவார்கள். மேலும் வேலையின் ஸ்வபாவத்தினால் ராணுவ அதிகாரிகள் உன்னிடம் நம்பிக்கை வைக்கவேண்டியதாக இருக்கிறது. உன்னை நம்பலாமென்றும் நாம் அறிவோம். ஆகையால் நீ இன்னும் அதிகமாக ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்கிறோம். நாங்கள் வேண்டுவது சுலபமான காரியம் அல்ல. உன்னுடைய வேலை சம்பந்தப்பட்ட ரகசியங்களை பொதுமக்கள் அறியாதபடி ரகசியமாக நீ வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது உன்னைப்போல் வேலை செய்யாதவர்கள் இந்த ரகசியங்களை அறிந்துவிடக்கூடாது.

இந்த வேண்டுகோளுக்குத் தகுந்த காரணங்களுண்டு. இருப்புப்பாதை, கப்பற்கட்டும் தளங்களிலுள்ள தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும், ஸப் ஸ்டேஷன் மாஸ்டர்களும், துறைமுக ஆபீஸர்களும், பாயிண்ட்ஸ்மானும், தொழிலாளர்களும் தேசத்திலுள்ள ராணுவத்தின் தினசரி நிலைமையை நன்கு அறிவார்கள். சாதாரண பொதுமக்களைவிடவும் சாதாரண போர் புரியும் சிப்பாயைவிடவும் அதிகமான தகவல்களை அவர்கள் அறிவார்கள். துருப்புகளும் ஸப்ளைகளும் எங்கிருந்து வருகின்றன, எங்கு போகின்றன, அவைகள் இருப்புப்பாதை வழியாகவா அல்லது கப்பல் வழியாகவா செல்லுகின்றன என்பதெல்லாம் உனக்குத்தான் தெரியவரும். சாமான்கள் எங்கு குவிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் ராணுவ முகாம்களும் விமான தளங்களும் எங்கு இருக்கின்றன என்பதையும் நீ நன்றாக அறிவாய்.

நீ எதிரியின் ஏஜண்டாகவோ அல்லது ஜப்பானிய ஒற்றராகவோ இருந்தால் நூற்றுக்கணக்கான கடற்படைகள், இருப்புப்பாதை நிலயத் தொழிலாளர்களைக் கலந்து தகவல்களை சுலபமாக அறிந்துகொள்ளலாம். வெகு சீக்கிரத்தில் இந்தியாவின் ராணுவ, கடற்படை, விமானப்படையின் நிலைமையைப்பற்றி உனக்கு உபயோகமுள்ள ஒரு திட்டம் கிடைத்துவிடும். ஆனால் அந்தத் தகவல்களை அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் வெளியிட்டிருக்கவேண்டும்.

யுத்தத்துக்கு முன் ஒருவன் தான் செய்த வேலையைப்பற்றி பரிமாரினால் உடனே அவன் வாயை மூடிக்கொள்ளும்படி எல்லோரும் வற்புறுத்துவார்கள். வண்டிகளில் சாமான்களை ஏற்றினாலும் இறக்கினாலும் ஜலங்களுக்கு ஆயாசத்தை உண்டுபண்ணும். இப்பொழுது நிலைமை வேறு விதமானது. தொழிலாளர் வெளியிடும் தகவல்கள் சிலருக்கு புது அறிவை ஊட்டும். இதுவும் ஞாயம்தான். ஏனெனில் என்ன நடைபெறுகிறது, என்ன நடைபெறப்போகிறது என்பதை அறிய ஜனங்கள் பிரியப்படுகிறார்கள். அவர்களுக்கு ஆசையும் அதிகமாக இருக்கிறது.

கடிதங்களை உடைத்து தணிக்கை செய்தாலும், கால அட்டவணையைப்போல் துருப்புகளின் சலனத்தைப் பற்றிய தகவல்களை பத்திரிகைகள் பிரசுரிக்காமல் பார்த்துக்கொண்டாலும் கவர்ன்மெண்டுக்கு மற்றொரு சங்கடமிருந்துவருகிறது. சாதாரணமான தொழிலாளரும் உபயோகமுள்ள தகவல்களை வைத்திருக்கிறான். சம்பாஷணை மூலம் தகவல்கள் புசியாமல் தடுப்பதற்கு ஒரே ஒரு மார்க்கம்தானுண்டு. அதாவது உனக்குத் தெரிந்த தகவல்களை பிரரிடம் பரிமாராமலிருக்க நீ ஒப்புக்கொள்ளவேண்டும்.

ஆகையால் இது எவ்வளவு அவசியமானதென்று நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். உன்னுடைய குடும்பத்தாரிடம்கூட நீ இந்தத் தகவல்களைச் சொல்லக்கூடாது. உன்னுடைய மனைவி அண்டை வீட்டாருடனும், கடை வியாபாரியுடனும் சம்பாஷணை செய்யாவிட்டாலும் உன்னுடைய குழந்தைகள் தகவல்களை அவர்களின் சகாக்களிடம் சொல்லிவிடக்கூடும். தகவல்களை ரகசியமாக வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுவது பொருத்தமாக இராது. உன்னுடைய குடும்பத்துக்கும் அது அழகல்ல. உன்னாலேயே ரகசியத்தைக் காப்பாற்ற முடியாமலிருக்கும்பொழுது உன்னுடைய குடும்பத்தாரும் உன்னுடைய சிநேகிதர்களும் அதை எவ்விதம் காப்பாற்றிவைக்க முடியும். ஆகையால் நீ வீட்டுக்குப் போனவுடன் உன்னுடைய வேலையின் ஞாபகத்தை மறந்துவிடவேண்டும். வேலையைவிட்டுச் செல்லும் பொழுது நீ ஒரு முக்கியமான ஸ்தானம் வகிக்கிறாயென்று நினைத்துக்கொள். எல்லாவற்றையும் பூட்டிவிடவேண்டும். முக்கியமாக டோகியோ ராணுவ அதிகாரிகள் வேண்டும் யாதொரு தகவலையும் பகிரங்கப்படுத்தக்கூடிய சம்பாஷணையை அடக்கிவிடவேண்டும்.

---

# இந்திய விமானப் படை.

## இப்பொழுதும் யுத்தத்துக்குப் பின்னும் ஏற்படக்கூடிய சௌகரியங்கள்.

நீ எல்லா அம்சங்களிலும் தகுதியுள்ளவனென்று ருஜுச் செய்தால் எந்த சமயத்திலும் உனக்கு கமிஷன் அந்தஸ்துள்ள உத்தியோகம் கிடைக்கும். ஒருவனுடைய திறமையைப் பொருத்துத்தான் சம்பள உயர்வு துரிதமாக ஏற்படும். வெகு சீக்கிரத்தில் உச்ச ஸ்தானத்தை நீ அடைவதை ஒன்றும் தடுக்கமுடியாது. நீ திறமை பெற்றிருந்தால் எந்த கமிஷன் பெற்ற உத்தியோகத்தையும் வகிக்கலாம். யுத்தத்துக்குப் பின் இந்திய விமானப் படையில் காயமான அநேக ஸ்தானங்களிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த ஸ்தானங்களில் உனக்கு ஒன்றும் கிடைக்காவிட்டாலும் யுத்தத்துக்குப்பின் இந்தியாவில் அமைக்கப்படும் புதிய தொழிற்சாலைகளில் உனக்கு சௌகரியமான வேலை கிடைக்கும்.

## பயிற்சி.

1. முதலில், ஆரம்பப் பயிற்சி முகாமில் 1½ அல்லது இரண்டு மாதங்கள் வசித்து, பொது ஜனக் கல்வியை சேவையின் தேவைக்குப் பொருந்தும்படி ராணுவ நிலைமைக்குத் திருத்தி அமைத்துக்கொள்ள உனக்கு பயிற்சி அளிக்கப்படும்.

2. அதற்குப்பின் விமானப் படை கைத்தொழிற் பயிற்சிசாலையில் 5 மாத காலம் வரையில் உனக்குப் பிடித்தமாக உள்ள தொழிலில் உனக்குப் பயிற்சி அளிக்கப்படும். இந்த காலத்தில் அந்தத் தொழிலுக்குரிய அதமபக்ஷமான ஊதியம் உனக்குக் கொடுக்கப்படும். இது புரோபேஷன் காலம். எந்த சமயத்திலும் உன்னை மற்றொரு தொழிற் பயிற்சிக்கு மாற்றிவிடலாம். அது உன்னுடைய அபிருசியையும் சேவையின் அவசியத்தையும் பொருத்தது. நீ எவ்வளவுகாலம் பயிற்சி பெறவேண்டுமென்பது உனக்குப் பிடித்தமான தொழில், உன்னுடைய திறமை, உன்னுடைய முன் அனுபவம் முதலியவற்றைப் பொருத்தது.

## ரஜாவும், பர்லோவும்.

1. காஷுவல் லீவ்:—10 நாட்களுக்குக் கொடுக்கப்படும். இது வருஷாந்திர லீவில் சேர்க்கப்படாது. இந்த நாட்களுக்கு இலவச பிரயாணவசதிகள் அளிக்கப்படமாட்டாது.

2. சேர்வீஸ் லீவ்:—45 நாட்கள் வருஷத்திற்கு. பூராச் சம்பளம் அல்லவன்ஸுகளுடனும் சொந்த ஊருக்குச் சென்று திரும்பிவர இலவச ரெயில்வே பாஸும் கொடுக்கப்படும்.



3. மெடிகல் சங்கத்தின் சிபார்சின்பேரில் லீவ்:—போர்டாரின் சிபார்சுப்படி உன்னுடைய சொந்த ஊருக்குச் செல்ல இலவச பிரயாணமும் லீவுக்குப் பூராச் சம்பளமும் கொடுக்கப்படும். இந்த லீவெல்லாம் பிரிவிலேஜ் லீவாகக் கருதப்படும். லீவு கொடுப்பது கமாண்டிங் ஆபீஸரின் அபிப்ராயத்தைப் பொருத்தது.

## சம்பளம்.

ஒரு பரீக்ஷையுடன் உன்னுடைய பயிற்சி காலம் முடிவடையும். பரீக்ஷையில் தேறினால் கீழ்கண்ட வகுப்புகளில் நீ சேவைக்கு அமர்த்தப்படுவாய்.

**விமானப்படை தொழிலாளர் 2-வது வகுப்பு.**

(பரிக்ஷயில் 40 சத விகிதத்துக்குமேல் மார்க் பெற்றிருக்கவேண்டும்).

**விமானப்படை தொழிலாளர் 1-வது வகுப்பு.**

(பரீக்ஷயில் நீ 60 சத விகிதத்துக்குமேல் மார்க் பெற்றிருக்கவேண்டும்).

**தலைமை விமானப் படை தொழிலாளர்.**

(பரீக்ஷையில் நீ 80 சத விகிதத்துக்கு மேல் மார்க் பெற்றிருக்கவேண்டும்).

கீழே குறிப்பிட்ட அட்டவணையிலகண்ட சம்பளம் உனக்குக் கொடுக்கப்படும்.

| அந்தஸ்து. | வகுப்பு. | | | | | | | வெயர்லஸ் ஆபரேடர் வகுப்பு. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | M | A & E | II | I |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| விமானப் படை தொழிளாலர் 2-வது வகுப்பு. | 75 | 60 | 50 | 65 | 40 | 50 | 60 | 60 | ... |
| ,, 1-வது வகுப்பு ... | 90 | 65 | 55 | 66 | 42 | 60 | ... | ... | ... |
| ,, தலைவர் ... | 100 | 70 | 60 | 67/8 | 45 | 63 | ... | ... | ... |
| கார்போரல் ... | 130 | 100 | 80 | 75 | 62 | 75 | ... | ... | ... |
| சார்ஜண்டு ... | 145 | 115 | 85 | 85 | 80 | 85 | 115 | 100 | 130 |
| ப்ளைட் சார்ஜண்ட் ... | 160 | 130 | 90 | 100 | 90 | 95 | 130 | ... | 155 |
| வாரண்டு ஆபீஸர் ... | 225 | 200 | ... | 135 | 120 | 120 | 200 | ... | 175 |

பயிற்சிபெறும் காலத்தில் தொழிலுக்கு ஏற்பட்ட அதமபக்ஷமான, அதாவது A. C. 2-வின் சம்பளம் உனக்கு வழங்கப்படும்.

உன்னுடைய சம்பள உயர்வு விமானப்படையில் நீ சேவை செய்யும் காலத்தையும் உன்னுடைய திறமையையும் பொருத்தது. சம்பள உயர்வின் வேகம் உன்னுடைய திறமையைப் பொருத்தது.

## அல்லவன்ஸ்கள்.

*இலவசச் சாப்பாடு.—*

(a) நல்ல நடத்தைக்காக சம்பளம் (விமானிகளுக்கு) :—
ஆறுமாத நல்ல நடத்தைக்குப் பின் மாதம் 1-க்கு ரூ 1—0—0 வீதம்.
ஒரு வருஷ நல்ல நடத்தைக்குப் பின் மாதம் 1-க்கு ரூ 3—8—0 வீதம்.

(b) நல்ல சேவைக்குச் சம்பளம் (கமிஷன் பெறாதவர்களுக்கு,) :—
ஒரு வருஷத்திற்குப் பின் மாதம் 1-க்கு ரூ 2—0—0 வீதம்.
இரண்டு ,, ரூ 4—0—0 ,,
மூன்று ,, ரூ 6—0—0 ,,

(c) ஸ்பெஷல் டியூட்டிக்காக :—
தேகப்பயிற்சி போதகர் ,, ரூ 2—0—0 ,,

**ஸர்வீஸ் போலீஸ்மென்.—**

அணா 0—11—0.
விமானப் படை வேலைக்காரர் தினம் ஒன்றுக்கு ,, 0—11—0.
கார்போரல் ,, ,, 0— 7—0.
சார்ஜண்ட் ,, ,, 0— 7—0.
ப்ளைட் சார்ஜண்ட் ,, ,, 0—11—0.
வாரண்டு ஆபீஸர் ,,

## முக்கிய குறிப்புகள்.

ஆடைகள் :—பயிற்சி ஆரம்பிக்கப்பட்டவுடன் உடுப்புகளும், படுக்கைகளும் இனாமாகக் கொடுக்கப்படும்.

இடவசதி இனாமாகச் செய்து தரப்படும். விமானிகள் சுத்தமான நல்ல காற்று வீசும் முகாம்களில் வசித்து வருகிறார்கள். மெடிகல் ஆபீஸர்கள் திடீரென்று வாசஸ்தலங்களைப் பார்வையிட்டு அவர்கள் நன்றாக சுகாதாரத்துடனிருக்கும்படி ஏற்பாடு செய்து வருகிறார்கள். யுத்த காலத்தில் விவாகமான விமானிகளுக்கு இடவசதி செய்து தரப்படமாட்டாது.

வைத்திய வசதி :—இனாமாகக் கிடைக்கும். ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை செய்யப்படும். நோய்வாய்ப்பட்டிருக்கும்பொழுது பூராச் சம்பளம் கொடுக்கப்படும்.

பொழுது போக்கு :—தேக ஆரோக்கியமும் கவனிக்கப்படும். சேவை காலம் பூராவும் விளையாட்டுகளுக்கும், பந்தயங்களுக்கும், விஞ்ஞான முறைப்படி தேக அப்பியாசத்துக்கும் வசதிகள் அளிக்கப்படும்.

சம்பளம் :—இங்கு கொடுக்கப்படும் சம்பளம் மீதப்படுத்தக் கூடியதுதான். உன்னுடைய சொந்தச் செலவைத் தவிர பாக்கி எல்லாவற்றையும் சர்க்கார் பொறுத்துக்கொள்ளுகிறார்கள். சலவை, க்ஷவரம், உபரிச் சாப்பாடு, சாமான்கள், ஸிகரெட்டுகள், புகையிலை முதலிய உல்லாசங்கள் முதலிய சொந்தத் தேவைகளை நீ தான் பொருத்துக்கொள்ளவேண்டும்.

சேவையின் கால அளவும் நிபந்தனைகளும் அடிக்கடி மாறக்கூடியவைகளாதலால் இதில் கண்ட தகவல்கள் பூராவும் சரியானவை என்று உத்தரவாதம் செய்யப்படமாட்டாது. ஆகையால் மாணவர்கள் அவர்களுக்குச் சமீபத்திலுள்ள ரிக்ரூடிங் ஆபிஸரிடம் சென்று நூதனமான தகவல்களை அறிந்துகொள்ள வேண்டும்.

இந்தப் பதிப்பு இதற்குமுன் "இந்திய விமானப் படை தருபவை" என்று பிரசுரிக்கப்பட்ட எல்லாவற்றையும் ரத்து செய்துவிடும்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

#### பிரஸங்கம் 236 (4-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17- 2-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 21- 2-45 | பள்ளிவாசல் | ... மாலை 7.00 |
| 18- 2-45 | ஆலங்குடி | ... ,, 7.00 | ,, | தில்லமங்கலம் | ... ,, 7.30 |
| ,, | ராஜியமங்கலம் | ... ,, 7.30 | 22- 2-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, 7.00 |
| 19- 2-45 | விராலிமலை | ... ,, 7.00 | ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, 7.30 |
| 20- 2-45 | அன்னவாசல் | ... ,, 7.00 | 23- 2-45 | எம்பல் | ... ,, 7.00 |
| ,, | கீழக்குறிச்சி | ... ,, 7.30 | | | |

#### பிரஸங்கம் 237 (5-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24- 2-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 28- 2-45 | மலையடிப்பட்டி | ... மாலை 7.00 |
| 25- 2-45 | கீரனூர் | ... ,, 7.00 | ,, | இன்னாகோட்டை | ... ,, 7.30 |
| ,, | நாஞ்சூர் | ... ,, 7.30 | 1- 3-45 | அரிமளம் | ... ,, 7.00 |
| 26- 2-45 | குடுமியாமலை | ... ,, 7.00 | ,, | ராயவரம் | ... ,, 7.30 |
| ,, | பரம்பூர் | ... ,, 7.30 | 2- 3-45 | பொ. புதுப்பட்டி | ... ,, 7.00 |
| 27- 1-45 | பெருங்களூர் | ... ,, 7.00 | ,, | வேந்தம்பட்டி | ... ,, 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, 7.30 | | | |

#### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 17— 2—45 | திருமெய்யம். | 24— 2—45 | பொன்னமராவதி. |
| 18— 2—45 | விராச்சிலை. | 25— 2—45 | தீத்தான்விடுதி. |
| 20— 2—45 | ராமச்சந்திரபுரம். | 27— 2—45 | கல்குடி. |
| 22— 2—45 | ஆலங்குடி. | 1— 3—45 | குழிபிறை. |
| 23— 2—45 | புதுக்கோட்டை. | 2— 3—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—17-2-45.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் பிப்ரவரி மீ 24 உ [ந. 237


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXXXVII.

## யுத்த விமர்சனம்.

### "எதிர் காலம் இவ்வளவு பிரகாசமாக இதற்குமுன் இருந்ததில்லை."

### 15—2—45-ம் தேதியன்று இடயாத்தூரில் புதுக்கோட்டை ஸமஸ்தான திவான் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் துரை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

யுத்தம் இன்னும் ஜெயித்தபாடில்லை. இன்னும் எவ்வளவு காலம் ஜெர்மனி சமாளித்து நிற்குமென்று சொல்லுவதற்கில்லை. அது இப்பொழுது எங்கு பார்த்தாலும் தற்காப்பிலிருந்துகொண்டு மூர்க்கத்தனமாகப் போர்புரிந்துவருகிறது. ஆகிலும் ஐரோப்பியப் போரிலும் சரி, ஆசியாப் போரிலும் சரி, ஒரே ஒரு முடிவுதான் ஏற்படுமென்பது இப்பொழுது தெளிவாக இருக்கிறது.

2. ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் நேசதேசத்தார்களுக்கு என்ன லாபங்கள் கிடைத்திருக்கின்றனவென்று பார்ப்போம். உண்மையாக நாம் குதூகலப்படுவதற்கும் நன்றி செலுத்துவதற்கும் இடமிருக்கிறது. வடக்கு ஆபிரிக்கா, ஸிஸிலி, அநேகமாக மத்திய தரைக்கடல் பிரதேசம் பூராவும், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்தின் பாகம், கிரீஸ், இதாலியின் பெரும்பாகம், ருமேனியா, பல்கேரியா, செகோஸ்லாவேகியாவின் பெரும்பாகம், அநேகமாக போலந்து பூராவும் ஜெர்மானியர் கைப்பற்றியிருந்த ருஷ்யநாடுகள், முதலியவற்றிலிருந்து ஜெர்மானியர்கள் துரத்தியடிக்கப்பட்டுவிட்டார்கள். இப்படி விடுவிக்கப்பட்ட பிரதேசம் ஜெர்மனியைப்போல ஆறு மடங்குள்ளது. கிரீஸில் துரதிருஷ்டவசமாக உள்நாட்டுப் போர்மூண்டது. சமீபகாலத்தில் மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ஈடனும் விமானமூலம் கிரீஸுக்குச் சென்று மனஸ்தாபங்களைத் தீர்த்துவைப்பதற்காக கக்ஷித்தலைவர்களை சந்தித்துப்பேசினார்கள். அதன் பயனாக, இப்பொழுது ஒரு உடன்படிக்கை பூர்த்தியாகிவிட்டது. பெல்ஜியத்திலும் கிரீஸிலுள்ளதுபோல் சிறிது கலவரம் ஏற்பட்டது. ஆகிலும் அங்கு உள்நாட்டுப்போர் மூளவில்லை. கலவரம் அடங்கிவிட்டதாகத் தோன்றுகிறது.

3. மேற்குப் போர்முனையின் நிலைமை பின்வருமாறு. நேசதேசத்தார்கள் ஜெர்மன் எல்லையைத்தாண்டிவிட்டார்கள். ஜெர்மனியின் மேற்கு எல்லைச்சரகத்தில் 100 மைல்கள் கொண்ட பிரதேசத்தில் நேசதேசத்தார்கள் பலஹீனமான ஸ்தானங்களைக் கண்டுபிடித்து அதன்மூலம் மெதுவாக உள்புகுந்தும் வருகிறார்கள். ஏழு நேசதேசப்படைகள் பல பாகங்களில் தாக்கி வருகின்றன. ஆக்கன் உள்பட ஜெர்மனியிலுள்ள முக்கியமான சில

நகரங்கள் வீழ்ந்துவிட்டன. தென்மேற்கிலிருந்து ஜெர்மனிக்குப்போகும் பாதையை
தற்காப்பு செய்துவந்த முக்கிய கோட்டைகளான மெட்ஸ், பெல்போர்ட், முல்ஹவுஸ்
வீழ்ந்துவிட்டன. அதே பிராந்தியத்திலுள்ள முக்கிய நகரமான ஸ்ட்ராஸ்பர்கையும்
நேசதேசத்தார்கள் பிடித்துவிட்டார்கள். பிரான்ஸுக்கும், ஜெர்மனிக்கும் வெகுகாலமாக
சண்டைக்குக் காரணமாக இருந்த பிரெஞ்சு மாகாணமான ஆல்ஸாஸிலிருந்தும் அதற்கு
பக்கத்திலுள்ள லோரேனிலிருந்தும் எதிரிகள் சுத்தி செய்யப்பட்டுவிட்டார்கள். முக்கிய
தொழிற்சாலை பிரதேசங்களாகிய ரூரும், ஸாரும் பயமுறுத்தப்பட்டன. மகத்தான ரைன்
நதியை அநேக இடங்களில் அடைந்துவிட்டார்கள். இரண்டு மாதங்களுக்குமுன், டிசம்பர்
16-ம் தேதியன்று ஜெர்மானியர் அமெரிக்கர்களின் ஒரு படையை திடீரென்று தாக்கி
அவர்களை பெல்ஜியத்திற்குள்ளும், லக்ஸம்பர்க்குக்குள்ளும் துரத்தியடித்தார்கள். அதனால்
அவர்கள் ஒரு பெரிய உப்பலான ஸ்தலத்தைப் பிடித்துவிட்டார்கள். அது நமது ஸமஸ்தானத்
தைப்போல் இரண்டரை மடங்கு பரப்புள்ளது. சுமார் 3,000 சதுரமைல் கொண்டது.
நமது கோரமான போரினால் அவர்களின் முன்னேற்றம் தடைபட்டது. சமீபகாலத்தில்
தெற்குப்பகுதியில் ஜெர்மனி மற்றொரு தாக்குதலைத் துவக்கிற்று. வடக்குப்பகுதியைப்போல்
இங்கு முன்னேற்றம் அதிகமாய் இல்லை. ஆகிலும் நான் ஏற்கனவே சொன்ன ஸ்ட்ராஸ்பர்க்
என்ற முக்கியமான நகரத்தை ஜெர்மானியர் பயமுறுத்தினார்கள். இந்தப் பதில் தாக்குதல்
பூராவும் துரத்தியடிக்கப்பட்டுவிட்டது. எதிரிக்கு ஏராளமான மனிதர்களும், தளவாடங்
களும் நஷ்டமாகிவிட்டன. இந்தப்பகுதியில் நேசதேசத்தார்கள் முன்னேறித்தாக்கும்
சக்தியை மறுபடியும் பெற்றுவிட்டார்கள். போர்முனை பூராவிலும் அவர்கள் தாக்கி வருகி
றார்கள். ஸீக்பிரட் அரணுள்ள பகுதிக்குள் அவர்கள் ஊடுருவிச்சென்றுவிட்டார்கள்.
ஆகிலும் அதைப் பூராவாகப் பிளந்துவிடவில்லை. இந்த அரணில் நமது முன்னேற்றம்
மெதுவாகத்தான் நடைபெறும்.

4. ஜெர்மனிக்குப் பின்பக்கத்தில் அபாயம் உண்டாகிவிட்டது. ருஷ்யாவில் எதிரியின்
பூண்டில்லாமல் சுத்திசெய்தபின். ருஷ்யர்கள் வடக்கே பின்லாந்தையும், தெற்கே ருமேனியா,
பல்கேரியா, சமீபத்தில் தெற்கு ஹங்கேரி, முதலிய நாடுகளையும் சரண்புகுந்துவிடும்படிக்கும்
நேசக்கக்ஷியில் சேர்ந்துகொள்ளும்படிக்கும் செய்துவிட்டார்கள். ஜெர்மனியின் ஒரு பாக
மான கிழக்குப் பிரஷ்யாவை எதிர்த்து பிறகு ரீகா உள்பட பால்டிக் கடற்கரையிலுள்ள
முக்கியமான துறைமுகங்களைப்பிடித்துவிட்டார்கள். அதன்பிறகு ருஷ்யர்கள் கிழக்குப்
போர்முனை பூராவிலும் பலமாக முன்னேறினார்கள். கிழக்குப்பிரஷ்யாவின் பெரும்பாகம்
ருஷ்யர் வசமாகிவிட்டது. அது ஜெர்மனியிலிருந்து துணிக்கப்பட்டுவிட்டது. போலந்தின்
தலைநகரமான வார்ஸா இப்பொழுது விழுந்துவிட்டது. போலந்தின் மேற்கு எல்லைச்சரக
மான பால்டிக் கடற்கரையை நோக்கி அவர்கள் முன்னேறுகிறார்கள். யுத்தத்துக்கு முக்கிய
காரணமானதும் ஹிட்லர் முதன்முதலில் கைப்பற்றியதுமான டான்ஸிக்கையும் ருஷ்யர்கள்
பயமுறுத்துகிறார்கள். மத்தியில் ருஷ்யர்கள் ஒப்பற்ற வேகத்துடன் முன்னேறிவிட்டார்கள்.
இரண்டுவாரங்களுக்குமுன் நான் யுத்த விமர்சனம் செய்தபொழுது பெர்லின் செம்படை
களிருக்குமிடத்திலிருந்து 200 மைல்கள் தூரத்திலிருந்ததென்று சொன்னேன். இப்பொழுது
படைக்கும், பெர்லினுக்கும் மத்தியில் கடைசி இடைஞ்சலான ஓடர் நதியை ருஷ்யர்கள்
அடைந்து ஒரு இடத்தில் அதைக் கடந்துவிட்டார்கள். பெர்லினிலிருந்து ருஷ்யப்படை
களிருக்கும் சமீபமான இடம் 30 மைல் தூரம்தானிருக்கிறது. மோட்டாரில் சென்றால் ஒரு
மணி நேரத்தில் அதைக் கடந்து விடலாம். அதற்குத் தெற்கில், அவர்கள் முக்கிமான சுரங்
கங்களும் தொழிற்சாலைகளுமுள்ள பிரதேசமான சைலீஷியா மாகாணத்தைக் கைப்பற்றி
விட்டார்கள். இந்த நஷ்டம் ஜெர்மனிக்கு மிகவும் கெடுதலானது. அதற்கும் தெற்கில்,
ருஷ்யர்கள் செகோஸ்லாவேகியாவில் முன்னேறிவருகிறார்கள். ஒரு சேனை ஜெர்மனியுடன்
சேர்க்கப்பட்டிருக்கும் ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னாவுக்குப்போகும் ரஸ்தா
வழியாக முன்னேறிவருகிறது. மற்றொன்று ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்டை
சுற்றிவளைத்து நகரத்தின் பெரும்பாகத்தையும் வசப்படுத்திவிட்டது. ஜெர்மானியர்கள்
அந்த நகரத்தில் வீடுவீடாகப் போரை நடத்திவருகிறார்கள். ஜெர்மனியின் கிழக்குப்போர்
முனை பூராவும் பின்புறம் தள்ளப்படுகிறது.

5. ஹிட்லருக்கு ஆள்பலம் குறைந்துவிட்டது. அவனுக்கு பிரான்ஸில் ஆள்சேதம்
அதிகம். 7,50,000 ஜெர்மானியர்களுக்குமேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ருஷ்யப்
போர்முனையில் 90,00,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது கைது செய்யப்
பட்டார்களென்று சொல்லப்படுகிறது. மேலும் பலவகை யுத்த தளவாடங்களில் ஏராளமான
அளவையும் எதிரி இழக்க நேரிட்டது. அமெரிக்க விமானப் படை 15,000 ஜெர்மன் விமானங்
களை 1944-ம் வருஷத்தில் அழித்திருக்கிறது. எதிரியின் எண்ணெய் கையிருப்பும் குறைந்து
விட்டது. ருமேனியாவிலிருந்து கிடைத்த எண்ணெயும் போய் நேசதேச விமான எதிர்ப்பின்
காரணமாக உள்நாட்டு ரஸாயன முறையில் செய்த உற்பத்தியும் குறைந்துவிட்டது. அவ
[illegible]டைய கடைசி சண்டைக் கப்பலான டிர்பிட்ஸை நமது விமானப்படை மூழ்கடித்துவிட்டது.



நான் ஏற்கனவே சொன்ன பிரகாரம் அவன் முக்கிய தொழிற்சாலை பிரதேசமான சைலீஷி
யாவை இழந்துவிட்டான். அவனுடைய போக்குவரத்து மார்க்கங்களும், தொழிற்சாலை
களும், விமானத் தாக்கினால் நொருக்கப்படுகின்றன. எதிரியின் நிர்வாக இலாகாக்கள் பெர்லினி
லிருந்து அப்புறப்படுத்தப்பட்டுவிட்டன. ஜெர்மனியில் உள்ள ரஸ்தாக்கள் வழியாக ஏராள
மான அகதிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியில் சீர்கேடு பூர்த்தியாகிவிட்ட
தென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

6. இதாலியில், உலகத்தில் பெயர்பெற்ற முக்கிய நகரங்களில் ஒன்றாகவும் மர்ம ஸ்தாப
னங்களில் முக்கியமானதுமான ரோமாபுரித் தலைநகரைக் கைப்பற்றியபின் நேசதேசப்படை
கள் வடக்கே முன்னேறி அங்கிருந்து 150 மைல் தூரத்திலுள்ள இதாலியின் இரண்டாவது
முக்கிய நகரமான பிளாரன்ஸைக் கைப்பற்றி இன்னும் இடைவிடாது வடமுகம் முன்னேறி
வருகின்றன. நேசதேசப் படைகள் ஜெர்மானியர்கள் முழுதும் நம்பியிருந்த மகத்தான தற்
காப்பு அரணான கோதிக் அரணை வெகு காலத்துக்கு முன் தகர்த்துவிட்டார்கள். ஆனாலும்
ஜெர்மானியர்கள் பலமாக எதிர்த்துப் போராடி வருகிறார்கள். பருவ காலம் பாதகமாக இருக்
கிறது. ஆகையால் விமான நடவடிக்கை பாதிக்கப்படுகிறது. தரைப்படைகளும், சகதிக் கடல்
போன்ற பூமியைத் தாண்டிச் செல்லவேண்டியிருக்கிறது. நேசதேசப் படைகள் இப்போது
பிளாரன்ஸுக்கு வடக்கில் 100 மைல்களுக்கு அப்பாலிலுள்ள போலோனா என்னும் முக்கியமான
நகரை சமீபித்துவிட்டார்கள். அவர்கள் ஏட்ரியாடிக் கடல் பக்கத்தில் முக்கியமான இடமாகிய
ரேவன்னாவையும் பிடித்துவிட்டார்கள். அவர்கள் சாவதானமாக முன்னேறுவதினால்
ஒன்றும் பாதகமில்லை. இதுதான் சிறந்த நடவடிக்கை. ஏனெனில் அங்கு அநேக ஜெர்மன்
டிவிஷன் படைகளைத் தேக்கி வைப்பதன்மூலமும் நாசம் செய்வதின் மூலமும் ஜெர்மனியின்
தற்காப்புக்கு அவைகள் பயன்படாமல் தடுக்கப்படுகின்றன. இதாலியிலிருந்து ஜெர்மன்
படைகளை வேறு இடங்களுக்குக் கொண்டுபோவதாய்ச் சொல்லப்படுகிறது. ஜெர்மனியின்
தற்காப்புக்கு ஒவ்வொரு ஜெர்மானியனும் அவசியம்தான்.

7. இப்பொழுது ஜப்பானியரைக் கவனிப்போம். என்ன விரைவில் அவர்கள் பர்மா,
மலேயா, டச்சுக்கிழக்கிந்தீஸ் தீவுகளைப் பிடித்துக்கொண்டதும், இந்தியாவையும், நியூகினி
யாவிலிருந்து ஆஸ்திரேலியாவையும், அலுஷியனிலிருந்து அமெரிக்காவையும் அவர்கள் பய
முறுத்தினதும், தாய்லாந்தையும், பிரெஞ்சு இண்டோ-சைனாவையும் அவர்கள் தம்வசப்
படுத்திக்கொண்டதும் உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அந்த விரசுப் போக்கெல்லாம்
இப்பொழுது பழங்கதையாயிற்று. இந்தியாவை படையெடுத்துவிடுவதாக ஜோராகப்
பேசிக்கொண்டு அஸ்ஸாம் மாகாணத்தில் அவர்கள் மணிப்பூரை எதிர்த்தது உங்களுக்குத்
தெரியும். ஆனால் அவர்கள் பூராவாக முறியடிக்கப்பட்டுவிடுவோர்கள். கரடுமுரடான பிர
தேசத்தின் சிரமத்தினாலும் பர்வ காலத்தின் கொடுமையாலும் மிகவும் கஷ்டப்பட்டு நமது
துருப்புகள் ஜப்பானியரை அஸ்ஸாமைவிட்டு துரத்தியடித்ததும் அல்லாமல் இப்பொழுது
அவைகள் பர்மாவுக்குள் புகுந்துவிட்டன. ஒரு நேசதேசப் படை மட்டும் நான்கு மாதங்
களில் 270 மைல்கள் முன்னேறியிருக்கிறது. பர்மாவில் பாதிபாகம் விடுவிக்கப்பட்டு
விட்டது. சைனாவுக்குப் போகும் பர்மா ரஸ்தா சமீப காலத்தில் திறக்கப்பட்டுவிட்டது.
இன்னும் ஜப்பானியர்கள் பின்வாங்கி வருகிறார்கள். இந்தியாவின் சமவெளிகளில் முன்
னேறுவார்களோ என்ற பயம் ஏதாவது இதற்குமுன் இருந்தாலும் அதுவும் இப்பொழுது
அற்றுப்போய்விட்டது.

8. சமீப காலத்தில் நேசதேசத்தார்கள் அரக்கானில் ஒரு புதிய தாக்குதலை துவக்கினார்
கள். அக்யாப் துறைமுகம் பிடிபட்டதுடன் அந்தப் போரும் அநேகமாக முடிவடைந்து
விட்டது. மத்திய பர்மாவில் மாண்டலே என்ற முக்கிய நகரத்தை நேசதேசத்தார்கள்
பயமுறுத்துகிறார்கள். அஸ்ஸாம் பர்மா நடவடிக்கைகளில் இந்திய விமானப் படை அரிய
சேவை செய்திருக்கிறது.

9. பஸிபிக்கிலோ ஜப்பானியர்களை ஒரு தீவுக் கூட்டத்திலிருந்து மற்றொன்றுக்கு
அமெரிக்கர்களும், ஆஸ்திரேலியர்களும் இரக்கமின்றி துரத்திவருகிறார்கள். ஜப்பான் மீது
வெடிகுண்டு போடுவதற்கு தளமாக உபயோகப்படக்கூடிய சில தீவுகளில் நேசதேசப் படை
கள் இறங்கிவிட்டன. பிலிப்பைன்ஸ் தீவுகளிலேயே நேசதேசப்படைகள் இறங்கி அதன்
தலைநகரமான மணிலாவை சமீப காலத்தில் கைப்பற்றி விட்டார்கள். இதன் மூலம் தெற்கி
லுள்ள ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளும் அங்குள்ள துருப்புகளும் துணிக்கப்பட்டு
விட்டன. இதுவரையில் போருக்கு வராமல் தப்பி ஒடிவந்த ஜப்பானியக் கடற்படை பிலிப்
பைன்ஸுக்கு அருகில் அமெரிக்கக் கடற்படையை எதிர்க்கும்படி நேரிட்டு அதில் பெருந்
தோல்வியுற்று விரட்டப்பட்டது. அந்தப் போரில் ஈடுபட்ட இரண்டு கப்பல்களைத் தவிர
பாக்கி 58 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன, அல்லது பழுதுபடுத்தப்பட்டன.
அவைகளில் இரண்டு விமானந் தாங்கிக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. ஒன்று அநேகமாக
மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம், இரண்டு போர்க்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம்,

எட்டு போர்க்கப்பல்கள் பலமாக பழுதுபட்டன. ஜப்பானில் டோக்கியோ தலைநகரமும், நாகஸாகியும், மற்ற முக்கிய நகரங்களும் வெடிகுண்டுகளால் அடிக்கடி தாக்கப்பட்டு வருகின்றன. மஞ்சூரியாவில் சில இடங்களிலும், ஆக்கிரமிக்கப்பட்ட சைனாவில் ஷாங்கே, நாங்கிங்கும், சிங்கப்பூர் முதலிய இடங்களும் தாக்கப்பட்டுவிட்டன. ஜப்பானுக்குத் தேவையான விமான எண்ணெயில் 75 சதவிகிதத்தை ஸப்ளை செய்யும் சுமத்ராவிலுள்ள எண்ணெய் சுத்திசெய்யும் சாலைகளும் தாக்கப்பட்டிருக்கின்றன. இதுதான் ஆரம்பம். ஜெர்மனியைப் போலவே ஜப்பானும் வெடிகுண்டுகளால் நொறுக்கப்படும். ஜப்பானிய விமானப்படை சங்கியையிலும் தரத்திலும் நேசதேசப்படையைவிட இழிவானது. நமக்கு ஒரு விமானம் நஷ்டமென்றால் ஜப்பான் 13 விமானங்களை இழந்துவிடுகிறது. யுத்த ஆரம்பத்திலிருந்து ஜப்பான் 10,000 விமானங்களை இழந்திருக்கிறது. அதன் கடற்படையும் வியாபாரக் கப்பல்களும் கால்கள் முறிக்கப்பட்டு கிடக்கின்றன. வியாபாரக் கப்பல்களில் பாதியோ மூன்றில் ஒன்றோ அழிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. சண்டையின் ஆரம்ப காலத்திலிருந்து அமெரிக்கப்படை 7,480 ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்திருக்கிறது. பஸிபிக் பிராந்தியப்போரில் நேசதேசப்படைகள் 3,000 மைல்கள் முன்னேறியிருக்கின்றன. ஐரோப்பாவிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு பலமான பிரிடிஷ் கடற்படை பஸிபிக்கிலுள்ள அமெரிக்க ஆஸ்திரேலியக் கடற்படைக்கு கூடிய சீக்கிரம் உதவி அளிக்கும்.

10. யூ-படகுகளின் செய்தி என்ன? ஒரு காலத்தில் இவை நமக்கு மிகக்கவலையைக் கொடுத்தன. இப்பொழுது அப்படியில்லை. இப்பொழுது யூ-படகுகளினால் ஏற்படும் நஷ்டம் மிக அல்பமே. சகலவித சாமான்களும் இங்கிலாந்தில் வந்து குவிவதையோ அல்லது இங்கிலாந்திலிருந்து ருஷ்யாவிற்குப் போவதையோ அல்லது நார்மண்டியில் நேசதேசப் படைகள் இறங்குவதையோ இந்த யூ-படகுகள் தடுக்கமுடியவில்லை. இப்பொழுது நாம் பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும் வடக்கு கடற்கரையிலுள்ள யூ-படகுதளங்களைக் கைப்பற்றி விட்டோம். யூ-படகுகளின் நடவடிக்கையாலும், கொள்ளைக்கப்பல்களின் நடவடிக்கையினாலும் நமக்கு ஏற்பட்ட நஷ்டங்களை நாம் ஈடு செய்துவிட்டோம். இப்பொழுது ஜெர்மன் கொள்ளைக்கப்பல்களே கிடையாது. 1944-ம் வருஷத்தில் அமெரிக்கா மட்டும் 1,677 சாமான் கப்பல்களையும் அநேக யுத்தக்கப்பல்களையும் கட்டிமுடித்திருக்கிறது. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து பிரிடன் 722 பெரிய யுத்தக் கப்பல்களையும், 11,000-க்குமேல் சிறிய யுத்தக் கப்பல்களையும், சுமார் 4,000 மற்ற சில்லரைக்கப்பல்களையும் கட்டி முடித்திருக்கிறது.

11. பிரிடனுக்காக போராட்டம் நடந்தகாலத்தில் பிரிடனைக்காப்பாற்றின நமது விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் இப்போது மிகப்பெரிதாக வளர்ந்து கூட்டங்களாகச்சென்று ஜெர்மனியின் நகரங்களிலும் ஐரோப்பாவில் அச்சுநாடுகளின் வசமான பாகங்களிலும் உள்ள கைத்தொழிற்சாலைகளையும் போக்குவரத்து சாதனங்களையும் சர்பராக் குவியல்களையும் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் நொருக்கிக்கொண்டு வருகின்றன. சமீபகாலத்தில் இதுவரை இல்லாதபடி 7,000 விமானங்கள் வரையில் பறந்துசென்று இவைகளையெல்லாம் தாக்கின. 1940-ம் வருஷம் ஜூலை மாதம் முதல் தேதிக்கும், 1944-வருஷம் செப்டம்பர் மாதம் 30 தேதிகளுக்குமிடையே அமெரிக்கர்கள் 2,32,400 விமானங்களையும், 1944-ம் வருஷத்தில் மட்டும் 96,369-ஐயும் கட்டிமுடித்திருக்கிறார்கள். இது இப்படியிருக்க, ஜெர்மனியைக் கவனித்தால், 1940-ம் வருஷத்தில் இருந்தபலத்தில் நாலில் ஒருபங்குதான் இப்பொழுது ஜெர்மன் விமானப்படைக்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பிரிடனில் 1,03,000 விமானங்களைக் கட்டியிருக்கிறார்கள்.

12. ஜெர்மனியின் பாதுகாப்பு நிலயங்களின் மீது பறந்துசென்று அவைகளை ஓயாமல் அழித்துக்கொண்டுவரும் ருஷ்ய விமானப்படையின் செயல்களை நாம் மறக்கக்கூடாது. எதிரி கைவசப்படுத்திக்கொண்ட நாடுகளிலுள்ள தேசாபிமானிகளின் வேலைகளையும் நாம் மறக்கக் கூடாது. அவ்வேலைகள் பாரிஸின் வீழ்ச்சிக்கும் பிரான்ஸின் விடுதலைக்கும் சாதகமளித்தன. அதுபோலவேதான் பெல்ஜியம், யூகோஸ்லாவியா, போலந்து இவைகளிலும். ஆக்கிரமிக்கப்பட்ட ஒவ்வொரு தேசத்திலும் ஜெர்மானியர்கள் தேசாபிமானிகளை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. யுத்தத்தில் ஒரேமுடிவுதான். நேசதேச வெற்றி என்று நடுநிலைமை வகிக்கும் நாடுகள் அறிந்துவிட்டன. ஜெர்மனியுடன் ஏற்பட்டிருந்த எல்லா உறவையும் துருக்கி ரத்து செய்திருக்கிறது. அதேவிதமாக சமீபகாலத்தில் ஜப்பானுடன் ஏற்பட்டிருந்த உறவையும் துருக்கி ரத்துசெய்துவிட்டது. ஸ்வீடன் ஜெர்மனிக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்வதை நிறுத்திவிட்டது. ருமேனியாவும் பல்கேரியாவும், பின்லாந்தும், ஹங்கேரியும் சரணடைந்துவிட்டனவென்று ஏற்கனவேயே சொன்னேன்.

13. இங்கிலாந்தில் எதிரியின் நிகுதியான விமான நடவடிக்கை பழங்கதையாகிவிட்டது. ஜெர்மன் விமானப்படையின் வலிமை குறைந்துவிட்டது. அமெரிக்க விமானப்படைமட்டும் 1944-ம் வருஷத்தில் 15,000 ஜெர்மன் விமானங்களை சுட்டுவீழ்த்தியிருக்கிறது. ஜெர்மனியிலுள்ள பாக்கி விமானப்படை கிழக்கு, மேற்குப் போர்முனைகளில் பூராவாக ஈடுபட்டு



இருக்கிறது. ஆனால் நேசதேசத்தார்களுக்கு இன்னல்களை விளைவிக்க அவைகள் போதுமான அளவு இல்லை. ஜெர்மானியர்கள் பறக்கும் வெடிகுண்டுகள் என்ற புதிய ஆயுதத்தை இங்கிலாந்தின்பேரில் பிரயோகித்துவருகிறார்கள். இவைகளால் முக்கியமாக லண்டனில் 3,000 உயிர்ச்சேதமும் அநேக வீடுகளுக்கு அழிவும் ஏற்பட்டது. இந்த வெடிகுண்டுகளுக்கு உற்பத்தி ஸ்தலங்களாயிருந்த பிரான்ஸின் வடகரையிலிருந்தும் பெல்ஜியத்தின் வடகரையிலிருந்தும் ஜெர்மானியர்கள் துறத்தியடிக்கப்பட்டுவிட்டதால் இப்பொழுது அவர்கள் வெகுதூரத்திலிருந்து விமானங்களில் வந்துதான் பறக்கும் வெடிகுண்டுகளைப் போடமுடியும். சமீபகாலத்தில் அவைகளைப் பற்றியும் நாம் கேள்விப்படவில்லை. இப்பொழுது ஜெர்மானியர் 300 மைல்கள் பறந்து செல்லக்கூடிய அவுட்வாணங்களைக்கொண்டு இங்கிலாந்தைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவைகளை மேற்குப் போர்முனையிலும் உபயோகித்துவருகிறார்கள். அவைகளால் ஏற்பட்ட நஷ்டங்களைப்பற்றி நமக்கு இன்னும் அதிக விவரங்கள் கிடைக்கவில்லை. பிரிடிஷ் விமானப்படை அவைகள் புறப்படும் ஸ்தானங்களைத் தாக்கிவருகிறது. இங்கிலாந்தின்பேரில் அவைகளை உபயோகிப்பதில் யாதொருவிதமான ராணுவ உபயோகமும் ஏற்படாது. அவைகள் குறிப்பாக ஒரு இடத்தைத் தாக்குவது அல்லது தாக்காமலிருப்பது அதிர்ஷ்டவசம்தான். எனினும் இப்பொழுது இங்கிலாந்து விமானங்களால் தாக்கப்படாது அல்லது முன்போல் தாக்கப்படாது என்று நம்பப்படுகிறது. விளக்கு அணைப்பு இப்போது அநேகமாய் எடுக்கப்பட்டுவிட்டது. உள்நாட்டுப் பாதுகாப்பு, குடிகளின் அணிவகுப்பு, நெருப்பு அவிப்பு முதலிய இயக்கங்களுக்கு ஏற்பட்டிருந்த நிபந்தனைகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன. கலே பிடிபட்டபின் ஜெர்மன் நெடுந்தூரம் சுடும் பெரிய பீரங்களின்மூலம் இங்கிலாந்தின் கடற்கரையிலுள்ள டோவரில் விளைவித்த நாசமும் உயிர்ச்சேதமும் தொந்திரவும் ஒழிந்துவிட்டன.

14. எதிர்காலம் இவ்வளவு பிரகாசமாக இதற்குமுன் இருந்ததேயில்லை. அநேக காலமாக நேசதேசங்களுக்கு இடைவிடாது தொடர்ச்சியாய் வெற்றிகிடைத்துவந்திருக்கிறது. மேற்குப் போர்முனையில் இதற்கு சிறு தடங்கல் ஏற்பட்டது ஆனால், நான் ஏற்கனவே சொன்னபிரகாரம் அந்த ஜெர்மன் பதில் தாக்குதல்கள் துறத்தியடிக்கப்பட்டுவிட்டன. நேசதேசத்தார்கள் மறுபடியும் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். நேசதேசங்கள் 17,510 லக்ஷம் ஜனத்தொகையை உடையனவென்றும் அச்சுநாடுகள் 1,970 லக்ஷம் ஜனத்தொகையுடையனவென்பதையும் மறந்துவிடக்கூடாது. அவர்களைப்போல நாம் ஒன்பது பங்கு ஜனத்தொகையைக் கொண்டவர்கள். ஆனாலும், யுத்தத்தில் வெற்றிகிடைத்துவிட்டதென்று இப்பொழுது சொல்லிவிடமுடியாது. அதைப்பற்றி இனிக்கவலை வேண்டாமென்று எண்ணாதீர்கள். போர்முனையில் உள்ளவர்களுக்குக் கடும்போரும், வீட்டில் உள்ளவர்களுக்கு தந்நலம் மறுத்தலும் இருந்தேதீரும். சொற்ப அபஜயங்கள் ஏற்படலாம். நாம் நினைத்தபடியெல்லாம் நடக்காமலிருக்கலாம். ஆனால் முடிவில் நமக்கு வெற்றி நிச்சயம். நேசதேசக் கக்ஷியின் நோக்கங்களைப் பூர்த்தி செய்துவைப்பதில் நாம் ஒவ்வொருவரும் நமது கடமைகளைச் செய்துகொண்டே வருவோமாக. விஷமப்பிரசாரங்களையும், அநியாய லாபம் சம்பாதிப்பதையும், சேமித்து வைத்தலையும் நாம் ஒவ்வொருவரும் அடக்க முயற்சி எடுக்கவேண்டும். இவற்றை பொதுஜனங்கள்தான் அடக்கமுடியும். பொதுஜன ஒத்துழைப்பில்லாமல் சில உத்தியோகஸ்தர்கள்மட்டும் என்ன செய்ய முடியும்? உணவுப்பொருள்கள் உற்பத்தியைப் பெருக்கலாம். அதிக உணவுப்பொருள்களை உண்டாக்குவதில் நாமெடுத்த முயற்சிக்கு ஸமஸ்தானத்தில் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. சென்ற இரண்டு பஸலிகளிலும் 47,000 ஏக்கர்கள் அதிகமாக சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. யுத்தக் கடன் பத்திரங்களிலும், ஸேவிங்க்ஸ் சர்டிபிகேட்டுகளிலும் உங்கள் பணத்தைப்போட்டு வைக்கலாம். இதிலும் நமது ஸமஸ்தானத்தில் திருப்தியான அளவு நடந்திருக்கிறது. இப்போது வெளியிடப்படும் சிறுசேமிப்பு நிதியை உங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளும்படி சிபார்சு செய்கிறேன். தேசீய யுத்த முன்னணியில் அதைப்பற்றி விவரமாகச் சொல்லுவார்கள். அந்த நிதியும் நன்றாய் வளர்ந்து ஸமஸ்தான ஜனங்கள் அதில் ரூபாய்கள் 1,21,166 போட்டிருக்கிறார்கள். உங்களுடைய சொந்த செலவில் நீங்கள் செட்டாய் இருக்கவேண்டும். கலியாணங்களிலும் இவைபோன்ற மற்ற வைபவங்களிலும் ஆடம்பரச் செலவு செய்ய இது காலமல்ல. லாடங்களையும், தள்ளுபடி காகிதங்களையும் பொறுக்கிக்கூட நீங்கள் யுத்தத்திற்கு உதவி செய்யலாம். அப்படி உதவி புரிபவர்களுக்கு பணம் கொடுக்கிறார்கள். வேறு உதவி செய்யாவிட்டாலும் காலம் கெட்டிருக்கும் சமயத்திலும் சந்தோஷமாயிருந்தால் போதுமானது. இதை விட்டுவிட்டு தன்காரியமே பெரிது என்று நினைப்பவர்களாயினும் இப்போது அவர்கள் பணத்தைச் செலவு செய்தால் சாமான் விலை மிகுதியால் பணத்திற்கு சரியான பொருமதி கிடையாது. பணத்தை இப்பொழுது சேமித்துவைத்து வட்டிக்குப்போட்டு, யுத்தத்திற்குப்பிறகு செலவு செய்தால் உங்களிடத்தில் அதிகப்பணம் இருக்கும். அந்தப் பணத்திற்கு அதிகப் பொருளும் வாங்கலாம். இவ்வழிகள் ஒவ்வொன்றிலும் நம்மில் ஒவ்வொருவரும் ஏதேனும் எள்ளளவு அற்பமாயினும் செய்யலாம். அவ்விதம்

செய்தால் எந்த வெற்றியும் அமைதியும் கிடைக்கவேண்டுமென்று நாமெல்லோரும் விரும்பித் துதி செய்துவருகிறோமோ அந்த வெற்றியும் அமைதியும் விரைவில் வந்து எய்தும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 13—2—45 (செவ்வாய்க்கிழமை.) | ருஷ்யர்கள் புடாபெஸ்டைப் பூராவாக ஆக்கிரமித்தனர். அமெரிக்கப்படைகள் லூஸானுக்கு அருகில் காவைட் கடற்படை தளத்தை ஆக்கிரமித்தன. |
| | பிரிடிஷ் படைகள் பர்மாவில் இராவதி நதிக்கரையிலுள்ள சிங்குவைக் கைப்பற்றின. |
| 14—2—45 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் ஷ்னிடேமுகாலைப் பிடித்தார்கள். |
| 15—2—45 (வியாழக்கிழமை). | அமெரிக்க பஸிபிக் கடற்படை டோக்கியோ பிரதேசத்தையும் ஐவோஜிமாவையும் தாக்கிற்று. |
| | மார்ஷல் கோனியேவின் படைகள் பிராண்டன்பர்க் மாகாணத்திற்குள் நுழைந்தன. |
| 16—2—45 (வெள்ளிக்கிழமை). | விமானந் தாங்கிகளில் செல்லும் நேசதேச விமானப்படை டோக்கியோவையும் ஐவோஜிமாவையும் தாக்கிவருகிறது. |
| | அமெரிக்கர்கள் பாடான் தீபகற்பத்தைப் பிடித்தார்கள். |
| 17—2—45 (சனிக்கிழமை). | அமெரிக்கப்படைகள் மணிலா விரிகுடாவில் காரிகெடாரிலிறங்கின. |
| | நேசதேசப்படைகள் ரைன்-மாஸ் நதிகள் பகுதியில் புதுத் தாக்குதலைத் துவக்கின. |
| 18—2—45 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யர்கள் சைலீஷியாவில் சாகானை ஆக்கிரமித்தார்கள். அமெரிக்கர்கள் ஐவோஜிமாவிலிறங்கினார்கள். |
| 19—2—45 (திங்கட்கிழமை). | நேசதேசப்படைகள் ஸீக்பிரட் அரணிலுள்ள கோக்கைக் கைப்பற்றின. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.—**

(1) இந்த வாரத்தில் பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரி ரைன்ஸ்மா நதிப்பகுதியில் முன்னேறித் தாக்க ஆரம்பித்தார். நியர்ஸ் நதியிலுள்ள கோக் என்னும் நகரத்தைச் சுற்றி வளைத்துவிட்டார். கடுமையான போர் நடைபெற்று வருகிறது. கால்காருக்கும், கோக்குக்கும் மத்தியிலுள்ள ரஸ்தாவைத் துணித்துவிட்டார். குஸ்பெர்டன், ஹாயிஸன்டார்ப், ஹெர்வோர்ஸ்ட், ஹாஸம், ஆப்பெர்டன், வில்லியர், ஹாஸல்ட், கெல்லன் கிரிதான்ஸன், ஹரியண்டியரிக், ஹோமர்ஸம் முதலிய இடங்களைப் பிடித்துவிட்டார்.

ஜெனரர் இந்தப் பகுதியில் ஆறு ஜெர்மன் பதில் தாக்குதல்களைத் துறத்தியடித்துவிட்டு ரைன் நதிக் கரையிலும் அதன் கிளைநதியான ஆல்ட் ரைன் நதிக்கரையிலும் தன்னுடைய ஸ்தானங்களை விஸ்தாரப்படுத்திவருகிறான்.

(2) அமெரிக்க 3-வது சேனை எக்டர்னுக் முன்னேறும் வாசல் பகுதியிலுள்ள ஸீக்பிரட் அரணின் மிகவும் பலமான பக்கத்தில் ஊடுருவிச் சென்றது. வியாண்டன், ஆரெஷங்கன், எர்ஷ்வீலர், எக்டர்னுகர்பிரக், எக்டர்னுக்—ஷாங்க்வீலர், ரோர்பாக் நுஸ்ஸாமர்.ஹோஃபி, கிரக்டர்ன், உத்பீல்ட், மாஸ்கார்ன், கேவேனிக் முதலியவற்றைப் பிடித்தது. நஸ்பாம், நீடர்ஸ் கேகனிலிருந்து எதிரிகளைச் சுத்திசெய்தது.

(3) அமெரிக்க 7-வது சேனை ஆல்ஸாஸில் சாரெகுமைன்ஸுக்குத் தெற்கில் தாக்கி ரிம்லிங், பிராயன்பர்க் போல்மெஸ் வில்லியர் முதலிய இடங்களைப் பிடித்தது. ஓபர் ஹாஸனைச் சுத்திசெய்தது, ஆக்டிஞ்சென், எட்ஸ்லிஞ்சென் முதலியவற்றை ஆக்கிரமித்தது.



**கிழக்குப் போர்முனை.—**

வடக்கு (1) கோனிக்ஸ்பர்க் பிராந்தியத்தில் ருஷ்யப்படைகள் ஸின்டென்—பிரிசெஷாப் இருப்புப் பாதையை துணித்துவிட்டன. வோர்ம்டிட், மேகல்ஸாக், புரோகா, மூயண்டர் வால்டி முதலிய நகரங்களைப் பிடித்தன. கோனிக்ஸ்பர்க்குக்காகக் கடும்போர் நடைபெறுகிறது.

(2) புதிய தாக்குதலைத் துவக்கிய ரோகோஸோவ்ஸ்கி, ஜெர்மன் எல்லையைப் பிராம்பெர்க்குக்கு வடமேற்கில் தாண்டி போமரேனியாவுக்குள் நுழைந்துவிட்டான்.

(3) பெர்லின்—டான்ஸிக் கோட்டில் புராம்பர்க்கிலிருந்து 60 மைல்களிலுள்ள ஷ்னிடமூல் என்னும் நகரமும், குரோஸனும், பாப்பர்ஸ் பர்க்கும், பிராங்க்பர்ட்டுக்கருகில் ஒடர்நதியிலுள்ள கிரிஸ்டியான்ஸ்டாட்டும் பிடிபட்டன.

(4) ஒடருக்கு மேற்கில் கோனியேவின் 200 மைல்கள் நீளமுள்ள போர்முனை நியஸி நதிக்கோட்டை அடைந்துவிட்டது. இதுதான் பெர்லினுக்குத் தெற்கிலுள்ள தொழிற்சாலை மாகாணத்துக்குச் செல்ல கடைசியாக உள்ள தடங்கல். ஜெர்மன் தற்காப்பு அரண் அநேக இடங்களில் பிளக்கப்பட்டுவிட்டது. சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் பிரெஸ்லாவுக்கான போர் நடைபெறுகிறது. இந்தப் பகுதியில் ருஷ்யப் படைகள் கீழ்கண்ட இடங்களைப் பிடித்துவிட்டன. ஜாயர், கோல்ட்பர்ச், ந்யூஸ்டாடெல், நியோஸால்ஸ், பிரிஸ்டாட், ஸ்புரோட்டா, ஸ்ட்ர்கா, கிரன்பர்க், சாகான், நாம்பர்க்.

(5) கிழக்குப் போர்முனையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக ஜெர்மானியர்கள் கேந்திர ஸ்தானங்களான பிரெஸ்லா, கோனிக்ஸ்பர்க், குனோகா, ஆர்ன்ஸ்வால்டி முதலிய இடங்களில் பலமாகத் தாக்குகிறார்கள். இந்தத் தாக்குதல்களில் அவர்கள் ருஷ்யர்களிடமிருந்து ஸோமர்பெல்டையும் சோராவையும் திரும்பிப் பிடித்தார்கள். இதன் மூலம் நேசதேசப் படைகள் பிராடிஸ்லாவாவுக்கும், வியன்னாவுக்கும் முன்னேறுவது தாத்காலிகமாகத் தடைபட்டுவிட்டது.

**இதாலி.**—வடக்கு இதாலியில் ஜெர்மானியர் தப்பி ஓடும் மார்க்கங்கள் பேரில் வெடிகுண்டுகள் வீசப்படுகின்றன. மாண்டிகாஞலியின் தெற்குச் சரிவிலிருந்து 5-வது சேனை சற்றுப் பின்வாங்கிவிட்டது. அது பிஸ்டோயியா, போலோஞ ரஸ்தாவுக்கு மேற்கிலுள்ள மாண்டிபெல்வாடிர், மாண்டிகோட்கோவஸ்கோவையும் பிடித்தது.

**பசிபிக்.**—(1) லூஸான் தீவின் தெற்குக் கோடியிலுள்ள மாரிவெலாஸில் படைகள் இறங்கிய பின் பாடான் தீபகற்பம் பிடிக்கப்பட்டது.

(2) மணிலாவுக்கு சமீபத்திலுள்ள வில்லியம் மாகின்லி என்ற கோட்டையும், ஹாகோனையும், டாகிக்கும் பிடிபட்டன.

(3) அமெரிக்கர்கள் மணிலா விரிகுடாவிலுள்ள காரிகொடார் தீவிலிறங்கிவிட்டார்கள். வால்கேனோ தீவுகளைச் சேர்ந்த ஐவோஜிமாவிலிலும் இறங்கிவிட்டார்கள். ஐவோஜிமாவில் மூன்றில் ஒருபாகம் ஆக்கிரமிக்கப்பட்டது. சுராபாகியாமா விமானதளமும் பிடிபட்டது.

(4) பசிபிக்கிலுள்ள கடற்படை டோகியோவிலும், டோகியோவைச் சுற்றிலுமுள்ள விமானதளங்களையும் மற்ற தொழிற்சாலைகளையும் விமானந் தாங்கிகளில் சென்ற விமானங்கள் தாக்கின.

**பர்மா.**—(1) சீனப் படைகள் பர்மா ரஸ்தாவிலுள்ள குட்கேயை ஆக்கிரமித்தன.

(2) பிப்ரவரி 12—13-ம் தேதியன்று மாண்டலேக்கு மேற்கில் 50 மைல்களுக்கப்பால் இராவதி நதி மறுபடியும் தாண்டப்பட்டது.

(3) அரக்கானில் அக்யாபுக்குத் தென்கிழக்கில் 65 மைல்களுக்கப்பாலுள்ள ருய்வாலில் படைகளிறங்கிவிட்டன.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**11—2—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

**பகல்.**—ஸப்ளைக் குவியல்கள், பீரங்கி ஸ்தானங்கள் எதிரி துருப்புகள்.—காக் (Goch) கிற்கும், கெல்டனிற்கும் (Geldern) இடையில்.

**தொழிற்சாலை கட்டடங்கள்.**—வெஸெலுக்கு (Wesel) அருகில்.

**ரயில், ரஸ்தா போக்குவரத்துகள்.**—குட்டர்ஸ்லா (Gutersloh), பீல்பெல்டு (Bielefeld) பிரதேசம்.

**இலக்குகள்.**—கெம்பன் (Kempen), டிரையர் (Trier).

**மோட்டார் ரிப்பேர் டெப்போக்கள்.**—பெர்க் கிலாட்பாக் (Berg-Gladbach), மன்ஸ்டரெய்பல் (Munstereifel).

**போக்குவரத்துகள்.**—வட ஹாலந்து (N. Holland.)

ரயில்வே தளங்கள்.—கெய்ஸர்லாடர்ன் (Kaiserlautern), ஸ்வெய்பிரக்கன் (Sweibrucken), பிரெய்பர்க் (Freiburg).
எதிரி போக்குவரத்துகள் தளவாடக் குவியல்கள்.—வட இதாலி (N. Italy) முழுவதும்.
ரயில் லயன்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி.
விமானச் சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும் (43 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

துூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—மார்கஸ் (Marcus) தீவுகள், வல்கனோ தீவிலுள்ள இவோஜிமா (Iwo Jima), காரோலைன்ஸிலுள்ள டிரக் (Truck), பாபல்தாப் (Babelthaup).

பர்மா (Burma).

தளவாடக் குவியல்கள், பெட்ரோல், எண்ணெய் சேமிப்புகள்.—ரங்கூன் (Rangoon).

**12—2—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—நீராவி யந்திரங்கள், ரயில் கார்கள், படகுகள், ரஸ்தா வண்டிகள்—மேற்கு ஜெர்மனி (Western Germany).
ரயில்வே தளங்கள்.—மெட்ராத் (Modrath), கீர்பெர்க் (Kierberg).
சேமிப்புகள், ரயில் லயன்கள்.—கோலோன் (Cologne), போன் (Bonn), காப்லன்ஸ் (Coblenz) பிரதேசம்.
ஸப்ளை பாதைகள்.—ராட்டர்டாம் (Rotterdam) பிரதேசம்.
ரயில் ரஸ்தா இலக்குகள்.—வட இதாலி (N. Italy).
ராணுவ நிலயங்கள், ரஸ்தா இலக்குகள்.—வடமேற்கு இதாலி (North-West Italy.)
போக்குவரத்து இலக்குகள்.-யூகோஸ்லாவியா (Yugoslavia).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (12 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

துூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்.—காரிஜிடோர் (Corregidor).
துறை ஸ்தாபனங்கள்.—யாப் (Yap) தீவு.
இலக்குகள்.—இவோஜிமா (Iwo Jima).

பர்மா (Burma).

ஜப்பானிய பீரங்கிகள்.—மின்மு (Myinmu).
ரன்வேய் பிரதேசங்கள்.—பினிம் (Pyinm).

**13—2—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—இலக்குகள்.—வியன்னு (Vienna).
ரயில்வே தளங்கள்.—கிராஸ் (Graz), மாரிபார் (Maribor).
விமானச் சண்டைகள்.-கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (9 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
இரவு.-ரயில்வே, தொழிற்சாலை ஸ்தலங்கள்-டிரெஸ்டன் (Dresden).
தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—போலன் (Bohlen).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

துூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

ஜப்பானியத் துருப்புகள்.-ஷ்வேலி (Shweli) நதி முதல் ஸால்வீன் (Salween) நதி வரை.
பீரங்கி ஸ்தாபனங்கள் துருப்புகள்.—மாண்டலே (Mandalay) பிரதேசம்.

**14—2—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.-போக்குவரத்து, தொழிற்சாலை இலக்குகள்—டிரெஸ்டன் (Dresden), செம்னிட்ஸ் (Chemnitz), மாக்டிபர்க் (Magdeburg).
ரயில் பாலம்.—ரைன் (Rhine), நதி வெஸ்ஸல் (Wesel).
ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—ரூர் (Ruhr) வடகிழக்கு.
ரயில் போக்குவரத்து ஸப்ளை பாதைகள்.—ஹாலந்து (Holland).
மோட்டார் வண்டி டெப்போக்கள்.—ஸ்கூவெல்ம் (Schwelm), ஐஸர்லான் (Iserlogn).
ரயில்வேப் பாலங்கள்.—பஸ்கிர்ச்சன் (Fuskirchen), சின்ஸிக் (Sinzig).
ரயில் இலக்குகள்.—பிரென்னர் (Brenner) லயன்.
ரயில் போக்குவரத்து.—போ (Po) சமவெளி.
சேமிப்புகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).
விமானச் சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
இலக்குகள்.—செம்னிட்ஸ் (Chemnitz), டூயிஸ்பர்க் (Duisberg), மெய்ன்ஸ் (Mainz), டெஸ்ஸா (Dessau), நூரம்பர்க் (Nuremburg).

துூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் தற்காப்புகள்.—காரிஜிடார் (Corregidor).

பர்மா (Burma).

எதிரி துருப்புகள் ஸப்ளை ஸ்தலங்கள், போக்குபோக்குவரத்து.—வட, பர்மா (N. Burma.
இலக்குகள்.—மாபின் (Maubin).
படகுகள்.—மார்ட்டாபன் வளைகுடா (Gulf of Martaban).
பிரதேசங்கள்.—மெய்க்திலா (Meiktila).
தற்காப்புகள், துருப்பு சைனியங்கள்.—மாண்டலே (Mandaly).



**15—2—45** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—இலக்குகள்.—வியன்னு (Vienna) பிரதேசம்.
ரயில் தளங்கள்.—கிரஸ் (Graz).
பாலங்கள்.—போ (Po) சமவெளி.
ராணுவ நிலயங்கள்.—வடமேற்கு இதாலி (N.W. Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).
போக்குவரத்துகள்.—வட யூகோஸ்லாவியா (N. Yugoslavia), மத்திய யூகோஸ்லாவியா (Central Yugoslavia).
ரஸ்தா ரயில் இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany), எம்மரிக் (Emmerich), பிரெய்பர்க் (Freiburg).
நீராவி யந்திரங்கள், ரயில் கார்கள், மோட்டார் வண்டிகள்.—ரூர் (Ruhr).
ஸப்ளை குவியல்கள், துருப்பு முகாம்கள்.—லபாக் (Labac).
தொழிற்சாலை.—கார்ல்ஸ்ரூ (Karlsruhe).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்; (39 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

துூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள், விமானங்கள், தரைமீதுள்ள ராணுவ இலக்குகள்.—டோக்யோவிலும் (Tokyo) டோக்கியோவைச் சுற்றிலும்.
ஜப்பானியக் கோட்டைகள்.—இவோஜிமா (Iwo Jima).

பர்மா (Burma).

கிராமங்கள்.—மாண்டலே (Mandalay) யைச் சுற்றிலும்.
ஜப்பானிய சைனியங்கள்.—அரக்கான் (Arakan).
பிரதேசங்கள், விமானங்கள்.—மத்திய பர்மாவிலுள்ள விமான நிலயங்கள்.

**16—2—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—பெட்ரோல் நிலயங்கள், எண்ணெய் சுத்தம் செய்யும் பிரதேசங்கள், ரயில்வே தளங்கள்—ஹாம் (Hamm), ஆஸ்னுபிரக் (Osnabruck), ரெய்ன் (Rheine).
இலக்குகள்.—ஸால்ஸ்பர்கன் (Salzbergen).
விமான நிலயங்கள்.—ரீகன்ஸ்பர்க் (Regensburg).
விஸல் (Wesel) நகரம்.
ரயில் பாலங்கள்.-சின்ஸிக் (Sinzig), மேயன் (Mayen), பிரெம் (Bremm).
ரயில் போக்குவரத்து, போக்குவரத்து இலக்குகள்.-கொலோன் (Cologne), காப்லென்ஸ் (Coblenz).
ரயில்வே தளங்கள்.-ஆபன்பர்க் (Offenburg).
ஸப்ளைக் குவியல்கள், ராணுவ நிலயங்கள், போக்குவரத்து இலக்குகள்.—டிரஸ்டன் (Dresden), கொட்டேஸ் (Kottbus).
ரயில் போக்குவரத்துகள், எண்ணெய் இலக்குகள்.—வீயன்னு (Vienna).
எண்ணெய் சுத்தம் செய்யுமிடம்.—வட இதாலி (Italy).
போக்குவரத்துகள்.—பிரென்னர் (Brenner) கணவாய், யூகோஸ்லாவியா (Yugoslavia).
விமானச் சண்டைகளும் தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (41 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

துூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—டோக்கியோவிலும் (Tokyo), டோக்கியோவைச் சுற்றிலும்.
பீரங்கி ஸ்தாபனங்கள், ஜப்பானிய துருப்பு முகாம்கள்.—இவோஜிமா (Iwo Jima).

பர்மா (Burma).

ஜப்பானியத் தற்காப்புகள்.—மாண்டலே (Mandalay)யைச் சுற்றிலும்.

**17—2—45.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

ரயில்வே தளங்கள்.—ரூரில் (Ruhr) பல இடங்கள்.
எண்ணெய் சுத்தம் செய்யுமிடங்கள்.—சால்பெர்ஜென் (Salzbergen).
விமானத் தொழிற்சாலை.—ஸோலிங்கன் (Solingen).
தொழிற்சாலை.—அன்னு (Unna).
ரஸாயன நிலயங்கள்.—லெவர்குஸெம் (Leverkusem).
ரயில் தளங்கள்.—ஆஸ்திரியா (Austria), வட இதாலி (Northern Italy).
கப்பல் ஸ்தாபனங்கள்.—பியூம் (Fiume).
ரயில் இலக்குகள் —வட இதாலி (N. Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

துூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் தற்காப்புகள்.—இவோஜிமா (Iwo Jima).
இலக்குகள்.—மாண்டலே (Mandalay).
விமான நிலயங்கள்.-மாண்டலே (Mandalay) யின் தெற்கு.
ஜப்பானிய முனைகள்.—அரக்கான் (Arakan).
படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

### விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

12—2—45. (திங்கட்கிழமை).
to
15—2—45 (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

16—2—45. (வெள்ளிக்கிழமை).
to
18—2—45 (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

அமெரிக்க விமான தளங்கள்.—இவோஜிமா (Iwo Jima). (18 தேதி மட்டும் நடந்தது).

---

## யுத்தக் குறிப்புகள்.

**யால்டா மகாநாட்டைப் பற்றிய சிந்தனைகள்.**

(1) மிஸ்ட்டர் சர்ச்சில் யால்டாவிலிருந்து கிரீஸ் மார்க்கமாக
லண்டனுக்கு வந்துவிட்டார். லிவர்பூல் போஸ்டு
பரிகாசமாக எழுதியிருப்பது போல் அவருடைய
பெயரின் மத்தியிலுள்ள ஸ்பென்ஸர் என்பதை எடுத்துவிட்டு எரியல் என்று புகுத்தலாமென்று
நாமும் நினைக்கிறோம். அவர் யுத்த சேவையில் 1,50,000 மைல்கள் சென்றிருக்கிறார்.
யால்டா மகாநாடு அவர் ரூஸ்வெல்ட்டுடன் பேசியதில் 9-வது தடவையாகும். அவர்
ஸ்டாலினுடன் பேசியதில் நான்காவது தடவையாகும். அவர் மற்றும் மார்ஷல் ஜியாங் கே
ஷேக்குடன் ஒரு தடவையும், டிசாலியுடன் அநேகம் தடவையும் சம்பாஷணை செய்திருக்
கிறார். அந்தப் பிரயாணங்களில் அவர் அட்லாண்டிக் கடலைத் தாண்டியிருக்கிறார். அமெரிக்
காவுக்கு 5 தடவைகள் விஜயம் செய்திருக்கிறார். மேலும் கனடா, பாரசீகம், ஐஸ்லாந்து,
எகிப்து, மொராகோ, துருக்கி, சைப்ரஸ், டிரிபோலி, ஆல்ஜியர்ஸ், மால்டா, இதாலி, பிரான்ஸ்
ஆதென்ஸ், ஜிப்ரால்டர் முதலிய இடங்களுக்கும் விஜயம் செய்திருக்கிறார்.

(2) யால்டா திட்டங்கள் அமுல் நடத்த ஆரம்பமாகிவிட்டன. உயர்தர ருஷ்ய
ஜெனரல் ஒன்றுபட்ட காரியாலயத் தலைவர்களுடன் கலந்துகொள்ள வாஷிங்டனுக்குப்
புறப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. கிழக்கு மேற்குப் போர்முனைகளை ஒன்றுபடுத்தி
ஜெர்மனியைத் தாக்க, பிரிடிஷ், அமெரிக்கத் தலைமை ராணுவ அதிகாரிகள் மாஸ்கோவுக்குச்
செல்லுகிறார்கள். நேசதேச படையெடுப்புப் படையின் தலைமை காரியாலயம் முறியடிக்கப்
பட்ட ஜெர்மனியின் உயர்தர நேசதேச ஆக்கிரமண அதிகார வர்க்கம் என்றும் மாற்றி
அமைக்கப்பட்டுவிட்டது. அதற்கு ஜெர்மனியில் ஈசன்ஹவர், சூகோவ், டி லாடர் டீ டாசிக்னி
முதலிய மூவரின் ஆதிக்கத்துக்குட்பட்ட மூன்று அரங்கங்கள் வரையறுக்கப்பட்டுவிட்டன.
உயர்தர ராஜதந்திர அதிகாரிகள் உலக பத்திர மகாநாட்டிற்கு ஸான்பிரான்ஸிஸ்கோவுக்குச்
செல்லத் தயார் செய்துகொள்ளுகிறார்கள்,

(3) ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்குமுள்ள எதிர்கால சம்பந்தங்களைப்பற்றி அநேகர்கள்
பலவிதமாக ஊகித்துவருகிறார்கள். ராணுவ, ராஜதந்திர நிபுணர்கள் பின்வருமாறு வினவு
கிறார்கள். "1941-ம் வருஷம் ஏற்பட்ட நடுநிலைமை ஒப்பந்தத்தை ருஷ்யாவும், ஜப்பானும்
ரத்து செய்யவோ அல்லது புதுப்பித்துக்கொள்ளவோ சந்தர்ப்பமுள்ள தினத்துக்கு மறு
நாள், அதாவது, ஏப்ரல் 25-ம் தேதியன்றுதான் ஸான்பிரான்ஸிஸ்கோவில் மகாநாடு கூட்
டப்படவேண்டும். ஏன்" இது அகஸ்மாத்தாக நேர்ந்து இருக்கலாம் அல்லது அந்தத் தேதிக்கு
பின் ஜப்பான் சம்பந்தமாக ருஷ்யாவின மனோபாவம் மாறுதலடையலாமென்பதற்கு இது
சூசகமாகவுமிருக்கலாம். "ருஷ்யாவிலிருந்து வெகுதூரத்தில் ஜப்பானுக்குப் போகும் வழியில்
ஸான்பிரான்ஸிஸ்கோவில் மூன்று மிகப்பெரிய வல்லரசுகளின் மகாநாட்டில் கலந்துகொள்ள
ஸ்டாலின் கடைசியாக ஒப்புக்கொண்டுவிட்டாரா? ஐரோப்பிய யுத்தத்தை முடித்துவிட்டுத்
தான் ஸ்டாலின் வரப்போகிறாரா? அங்கு ஜப்பானுடன் ருஷ்யாவுக்குள்ள சம்பந்தங்களில்
மாறுதல் ஏற்பட்டுவிட்டதென்று அவர் சொல்லப்போகிறாரா" என்றும் அவர்கள்
கேட்கிறார்கள்.

இந்த ஊகங்களெல்லாம் கற்பிதமாக இருக்கக்கூடும். ஆனால் இவைகளிலிருந்து ஒரு
விஷயம் புலப்படுகிறது. உலகத்தில் பெரிய வல்லரசு என்ற ஹோதாவில் ருஷ்யா இனிமேல்
ஜப்பான் சம்பந்தமாக வழவழப்பான மனப்பான்மையுடனிருக்க முடியாது. விடுதலைபெற்ற
தூரக்கிழக்கு நாடுகளின் எதிர்கால அமைப்பமைப்பற்றி ஸ்டாலினின் அபிப்பிராயத்தை
சர்ச்சிலும், ரூஸ்வெல்டும் யால்டாவில் அறிந்துகொள்ள முயன்றார்களென்பது சம்பாவிதமாக
இருக்கிறது. யால்டா மகாநாட்டிற்கு முன்னதாகவே இந்தப் பிரச்னை சர்ச்சை செய்யப்பட்டு



ஐரோப்பியப் போரில் பலமாக ஈடுபட்டிருந்த
வந்ததென்றும் வதந்திகள் உலாவுகின்றன, இருக்கிறபடியாலும் தூரக்கிழக்கு
இனாலும் தூரக்கிழக்கில் ருஷ்யாவுக்கு அநேக நாடுகள் அதற்கு உரிமை உண்டாகிவிட்டது.
நாடுகள் சம்பந்தமான ஆலோசனைகளில் கலந்துகொள்ள
கடைசியாக வந்த தகவல்களிலிருந்து யால்டாவின் ஒப்பந்தத்தில் மூவரும் கையெழுத்திடாத
போதிலும் தூரக்கிழக்கு நாடுகளின் அமைப்பப்பற்றிய திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்ட
தென்று தெரியவருகிறது.

எதிர்கால நிகழ்ச்சிகள் எவ்விதமிருப்பினும், ஜப்பான் இனிமேல் மஞ்சூரிய எல்லைச்
சரகத்திலுள்ள படைகளை வேறு போர்முனைகளைப் பலப்படுத்த இனிமேல் கொண்டுபோக
முடியாது. மஞ்சூரியா ருஷ்ய ஜப்பானிய எல்லைச்சரகத்திலுள்ளது. அங்கு ஜப்பானியப்
படையின் மூன்றில் ஒரு பங்கு அதாவது 24 காலாட்படை டிவிஷன்களும், 37 கவசம்பூண்ட
பிரிகேடுகளும் இருக்கின்றன. பலமாக முன்னேறித்தாக்க ஆயத்தம் செய்துவரும் சைனாவுக்கு
அப்படைகளை அனுப்புவதென்றால், ஜப்பான் மஞ்சூரியாவையும், சைனாவையும் இழக்க
வேண்டிவரும். ஆனால் ஜப்பான் முட்டாள்தனமாக இந்தக் காரியத்தை மேற்கொண்டால்
நேசதேசத்தார்கள் எதிர் பார்ப்பதற்கு முன்னதாகவே பஸிபிக் யுத்தம் முடிவடைந்துவிடும்.

பஸிபிக்கில் நேசதேசத்தாருக்கு ஏற்பட்ட சமீப வெற்றிகளும் ஜப்பானியக் கடற்கரைக்கு
சமீப தூரத்தில் நின்றுகொண்டிருக்கும் அமெரிக்க விமானந்தாங்கிகளிலிருந்து விமானங்கள்
ஜப்பானின் தலைநகரத்தைத் தாக்கும்படி ஜப்பான் விட்டுவிட்டதும், ஐவோஜிமாவில்
அமெரிக்கப் படைகள் இறங்கமுடியாமல் ஜப்பான் பலஹீனமற்றிருப்பதையும் நோக்குங்கால்
இதற்குமுன் ஜப்பானியரின் வலிமையைப்பற்றிச் சொல்லிவந்ததெல்லாம் மிகையானதென்று
புலப்படுகிறது. அமெரிக்க 5-வது கடற்படையின் தலைவரான கடற்தளபதி ஹால்ஸி,
பின்வருமாறு சொல்லுகிறார். "நாம் ஜப்பானியப்படைகளை துறைமுகங்களைவிட்டு வெளியே
வரும்படி தூண்டவேண்டும். அவர்களிடம் சொல்பக் கப்பல்கள்தானிருக்கின்றன. பாக்கி
யிருப்பவைகளும் திறம்படைத்தவைகளல்ல. நமக்கு மகத்தான வெற்றிகள் கிடைக்
கின்றன வென்றாலும் ஜப்பானியர்களுக்கு அதிக நஷ்டமில்லை. கடற்கரையிலுள்ள
ஜப்பானியர்கள் நம்மை பலமாக எதிர்த்துப்போராடமாட்டார்கள். நாம் உட்புகுந்து அவர்களை
எக்காலத்திலும் கைது செய்துவிடலாம். அவர்கள் எலிகளைப்போல் வளைகளுக்குள் சென்று
விட்டார்கள்."

அவர் மேலும் சொல்லுவதாவது "அவர்கள் நெருக்கடியை உணர்ந்துவிட்டார்கள்.
அழகான சமாதானப் பேச்சுகளை அவர்கள் துவக்கம் செய்வார்கள்."

யால்டா மகாநாட்டுக்குப்பின் ஆச்சரியப்படத்தக்கமுறையில் டோக்கியோ ஒலிபரப்பில்
பின்வருமாறு சொல்லப்பட்டது. "ஜப்பானிய அயல்நாட்டு நிலயம் சமாதானத்தைக்கோரும்
எந்த திட்டத்தையும் புறக்கணித்துவிடாது."

ஆகிலும் ஜப்பான் எவ்விதமான சாகசக்யம் செய்தாலும் சமாதானப் பேச்சை ஏற்றுக்
கொள்ளும் நாள் முடிவடைந்துவிட்டது. நிபந்தனையற்ற சரணாகதியை வற்புறுத்தும்
நேசதேசத்தார்கள் கொஞ்சம்கூட இடம்கொடுக்கமாட்டார்கள். தொழிலாளர்கள் சங்க
மகாநாடும் அவ்விதமே வற்புறுத்தியிருக்கிறது. அத்துடன் யுத்தக் குற்றங்களுக்காக
ஜப்பானியச் சக்ரவர்த்தியை விசாரணை செய்யவேண்டுமென்றும், ஜப்பானிய சாம்ராஜ்யத்
திற்கு பதிலாக குடியரசு ஆக்ஷியை அமைக்கவேண்டுமென்றும் அந்த மகாநாடு தீர்மானித்
திருக்கிறது.

(4) யால்டா மகாநாட்டின் முடிவுகள் பெரும்பாலும் ராணுவ சம்பந்தமுள்ளதாக
இருந்தபோதிலும் கிரீஸ், பிரான்ஸ் சம்பந்தமாக நேசதேசங்களுக்குள்ள மனப்பான்மை
யிலிருந்த சந்தேகங்கள் அந்த மகாநாட்டின் மூலம் நிவர்த்தியாகிவிட்டன.

கிரெமியாவிலிருந்து லண்டனுக்குத் திரும்பிச் செல்லும் வழியில் ஆதென்ஸிலிறங்கி
மிஸ்ட்டர் சர்ச்சில் 20,000 கிரேக்கர்களுள்ள ஒரு கூட்டத்தில் மனமுருகும்படி சொற்
பொழிவாற்றினார்:—இதன் விபரம் பின்வருமாறு.

"நமது பொதுப்படையான லக்ஷியத்தைப்பற்றி அநேகர்கள் தப்பு அபிப்பிராயம்
கொண்டுள்ளார்கள். சிலருக்கு அதன் தன்மை விளங்கவே இல்லை. கிரீஸில் எதற்காகப்
போரை நடத்தினோமென்பதைப் பற்றியும் அநேக தலைவர்கள் பிரசாரம் செய்துவருகிறார்கள்.
கிரேக்க மக்களின் சுதந்திரமும், க்ஷேமமும், சந்தோஷமும் எல்லா தேசங்களுக்கும் ஆப்த
மானதுதான். கிரேக்க விடுதலை இயக்கம் ஒவ்வொன்றிலும் கிரேக்க ஜனங்களுடன் நாங்கள்
ஒன்றுபட்டிருக்கிறோம். இந்த அந்தகாரத்திலிருந்து விலகும் காலம் வரையில் நாங்கள்
உங்களுடன் ஒத்துழைப்போம். வெற்றி பெறப்போகும் நாடுகளில் கிரீஸும் ஒரு ஸ்தானம்
வகிக்குமென்று நான் மனப்பூர்வமாக நம்பியிருக்கிறேன். ஒழுங்குமுறை முன்னேற்கட்டும்
கக்ஷி விரோதங்கள் ஒழியட்டும். ஒற்றுமை ஏற்பட்டு உங்களுக்குள் தீவிரமான சகோதர
பாவம் ஏற்படட்டும். கிரீஸ் என்நாளும் சாசுவதமாக இருக்கவேண்டும்."

(5) பிரான்ஸையும் அதன் சாம்ராஜ்யத்தையும் புனருத்தாரணம் செய்வதற்கும் உலக பத்திர ஏற்பாட்டில் அதையும் சேர்த்துக்கொள்ளவும் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்காவில் டாக்காரில் கடற்படை, விமானப்படை தளத்தை அமைக்க அமெரிக்க நிர்வாகம் பொருளுதவி செய்யும். இறுதியில் டாக்காரையும் ஐக்கியநாடுகளின் உலக பத்திர சபை சர்வ தேசத் தளமாக உபயோகித்துவரும்.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.**

**கால்பந்து விளையாட்டு.** கிழக்குப் போர்முனையில் ருஷ்யாவின் போரை, லெப்டினட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக் சொல்லுவது போல கால்பந்து விளையாட்டுக்கு ஒப்பிடலாம். பெரிய சேனைகளையும் விசாலமான போர் முனைகளையும் பெற்ற ருஷ்யர்கள் ஒவ்வொரு இடமாக முன்னேறித் தாக்கி யுத்த தந்திரத்தை அடிக்கடி மாற்றுகிறார்கள். ஒரு முனையில் எதிரியின் எதிர்ப்பு பலம்பெற்று முன்னேற்றத்துக்குக் குந்தகம் ஏற்பட்டால் ருஷ்யர்கள் மற்றொரு முனையில் பலமாகத் தாக்க ஆரம்பிக்கிறார்கள். ருஷ்ய கமாண்டர்களை கால்பந்து விளையாட்டில் முற்போக்காக உள்ளவர்களுக்கு ஒப்பிடலாம். பந்து விளையாட்டில் முன்னணியிலிருப்பவர்கள் எதிரியின் சமாளிப்புக்குத் தக்கபடி பந்தை ஒருவர் மற்றொருவருக்கு அனுப்பி பந்தைத் தங்கள் வசத்திலேயே வைத்துக்கொண்டு சாவதானமாகவும் உறுதியுடனும் தங்களுடைய லக்ஷியத்தை நோக்கி முன்னேறுவார்கள். அதுபோல ருஷ்யர்கள் பெர்லினை நோக்கி சாவதானமாக முன்னேறுவார்கள். சென்ற வாரத்தில் இவ்விதமாக பிராங்க்பர்ட்டில் எதிரியின் எதிர்ப்பு பலமடைந்தபொழுது ஜூகோவ் அவருடைய தாக்குதலை நிறுத்திக்கொண்டு, அவ்வேலையை கோனியேவிடம் விட்டுவிட்டார். அவர் தெற்கு விலாப்பக்கத்தில் போரை ஆரம்பித்து பிரெஸ்லாவையும், குளோகாவையும் தாண்டிச் சென்று சுற்றி வளைத்துக்கொண்டார். லிக்னிட்ஸைப் பிடித்துக்கொண்டார். போபர் நதியைத் தாண்டினார். இப்பொழுது பெர்லினுக்கு முன்னால் 60 மைல்களிலுள்ள நீஸி நதியின் பேரிலுள்ள கோட்பஸ்—குபன்—பார்ஸ்ட் முதலிய நாடுகளால் அமைக்கப்பட்ட முக்கோணத்தை பயமுறுத்தி வருகிறார். ஒரு வாரத்துக்குமுன் ஜூகோவுக்கும் பெர்லினுக்குமிருந்த தூரத்தைவிட கோனியேவுக்கும் பெர்லினுக்குமிருந்த தூரம் இரண்டு மடங்காக இருந்தது. இப்பொழுது எதிர்ப்பு பலமாக இல்லாததினாலும், துரிதமாக முன்னேறியிருப்பதினாலும் கோனியேவ் முதலில் பெர்லினுக்கு முன்னதாகவே வந்துவிடுவாரோவென்று தோன்றுகிறது. எந்நிலைமையிலும் ஜூகோவைப்போல அவனுக்கும் சமமான சந்தர்ப்பமிருந்துவருகிறது. ஜூகோவின் யுத்த நடவடிக்கைகள் மூடுமந்திரமாக இருந்தபோதிலும் ஜூகோவ் சாவதானமாகவும், உறுதியுடனும் ஓடர் நதியிலுள்ள முன்னேறும் வாசல்களுக்கான போரில் கஸ்ட்ரினிலும் பிராங்க்பர்ட்டிலும் வெற்றிபெற்று வருகிறார் என்று நிச்சயமாய்த் தெரியவருகிறது. இரு கமாண்டர்களும் அநேக முனைகளில் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டுவிட்டார்கள். பெர்லினுக்குச் செல்லுவதற்குத் தடையாக உள்ள ஓடர் நதியிலுள்ள ஜெர்மன் அரண்களை அழிப்பதில் இரு தலைவர்களும் ஒத்துழைத்து வருகிறார்கள்.

இதே சமயத்தில் ஆர்டெனிஸ் தோல்விக்குப்பின் பின்வாங்கித் திருத்தியமைக்கப்பட்ட ஜெர்மன் 6-வது பான்ஸர்படை கிழக்குப் போர்முனைக்குக் கொண்டுவரப்படுகிறது, அதன் தலைவரான குடரியனுக்கு அந்த சேனையை ஜூகோவிருக்கும் பகுதியிலா அல்லது கோனியேவின் பகுதியிலா உபயோகிப்பதென்று திகைப்புண்டாகியிருக்கிறது. பெர்லினுக்கு வடக்கில் மற்றொரு அபாயம் உண்டாகிவிட்டது. ரோகோஸோவ்ஸ்கி பிராம்பர்க்குக்கு வடமேற்கில் ஜெர்மன் எல்லையைத் தாண்டி போமரேனியாவுக்குள் நுழைந்துவிட்டார்.

கடைசியாக வந்த தகவல்களிலிருந்து ருஷ்யத் தாக்குதல் ஆரம்பித்த 5 வாரங்களுக்குப் பின், பதில் தாக்குதல்களை குடரியான் துவக்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

வி வி வி வி வி

**புடாபெஸ்ட்.** டான்யூப் நதியிலுள்ள முக்கியமான நகரமான புடாபெஸ்ட் விழுந்துவிட்டது. அதற்காகக் கடும் போர் மூன்று மாதங்கள் நடைபெற்றது. அதிலிருந்த 4,500 தற்காப்பு அரண்கள் கடும்போருக்குப் பின் அழிக்கப்பட்டன. ஸ்டாலின்கிராட்டைப்போல் அதைத் தற்காப்பு செய்துவிடலாமென்று ஜெர்மானியர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால் அதை வார்சாவைப்போல் தகர்த்துவிடுவதென்று ஸ்டாலின் உறுதிகொண்டிருந்தார். ஆனால் இந்தப் போர் புடாபெஸ்டுக்காக இல்லை. அது வியன்னாவுக்குச் செல்ல முக்கியத்துவமுள்ளது. ஜெர்மன் வியாக்யானி பின்வருமாறு சொல்லுகிறான். "புடாபெஸ்டைப்போல் 10 நகரங்களை நாங்கள் இழந்தாலும் பாதகமில்லை. ஆனால் நாங்கள் வியன்னாவைக் காப்பாற்றவேண்டும்." ஆனால் ருஷ்யாவின் எண்ணம் நிறைவேறிவிட்டது. மாலினோவ்ஸ்கியும், டால்பூகினும் டான்யூப் நதிக்கு வடக்கிலும் தெற்கிலும் மேற்கு ஹங்கேரி வழியாக ஆஸ்திரியா எல்லைச் சரகத்துக்கும் வியன்னாவை நோக்கியும் முன்னேறுவதற்கு யாதொரு தங்குதடையும் இருக்காது.



**மேற்குப் போர்முனை.** சகதியும், வெள்ளப்பெருக்குமுள்ள இந்தப் போர்.—பீல்ட் மார்ஷலின் 14 மைல்கள் நீளமுள்ள போர்முனை மாஸ் நதிக்கும் ரைன் நதிக்கும் மத்தியிலிருக்கிறது. அதன் பாதிபாகம் 7 மைல்கள் விசால மான ரெக்ஸ்வால்ட் காடுள்ளது. காட்டின் வடகிழக்கு மூலையில் க்ளீவிருக்கிறது. அது பிடிபட்டது. அதன் தென்குக்கோடியில் உள்ள கோக்கில் நேசதேசப்படைகள் தெருத் தெருவாகச் சண்டை போடுகிறார்கள். இந்தப்பகுதியிலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் படைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காட்டின் வழியாக ஸீக்பிரட் அரணின் ஒரு அரங்கம் செல்லுகிறது. இது புதிதாக பலமற்றதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில்தான் கனடிய சேனை முன்னேறிவருகிறது. அது ரைன் நதியிலும் அதன் உபநதியான ஆல்டர் ரைன் நதியிலும் வெள்ளப்பெருக்கை நிவர்த்திக்க அணைகளை உடைத்து விடுவதன் மூலம் முன்னேறும் வாசல்களை பலப்படுத்தி வருகிறது. மேலும் சமீபத்திலுள்ள மாஸ், ரோயர் நதியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. க்ளீவிலிருந்து ரைன் நதி வரையில் ஆயிரக்கணக்கான ஏக்கராக்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு விசித்ரமான போர். ஸோல்ஜர்கள் மாலுமியாக ஆகிறார்கள். அவர்கள் மோட்டார் படகுகளை ஓட்டுகிறார்கள். டக்ஸ், விஸல்ஸ், குரோகடைல்ஸ், பப்பலோஸ் என்ற கவசம்பூண்ட வாஹனங்களில் மிதந்து செல்லுகிறார்கள். இந்த சிரமங்களிலிருந்த போதிலும் க்ரேரார் ஒரு வாரத்திற்குள் ஹாலந்திலும் ஜெர்மனியிலும் 150 சதுர மைல்கள் முன்னேறியிருக்கிறான். ஸீக்பிரட் அரணின் இரண்டாவது வரிசையைத்தாண்டிச் சென்றுவிட்டான். கொக்-கால்கார் ரஸ்தாவைத் துணித்துவிட்டான். ரைன் நதியை எம்பரிக்குக்கருகில் அடைந்து விட்டான். இந்த முன்னேற்றத்தைத்தடுக்க ருண்ட்ஸ்டெட் இரண்டாம் பக்ஷமான துருப்புகளை அனுப்பியிருக்கின்றார்.

அமெரிக்க 3-வது சேனை லக்ஸம்பர்க் எல்லைச்சரகத்துக்கு எதிர்த்தாற்போல் பிரம் நதியை நோக்கியுள்ள உன்னதமான பிரதேசத்திற்கு முன்னேறிவிட்டது.

அமெரிக்க 1-வது சேனை ரோயர் ஜலாஸயத்தை அடைந்து விட்டது. அதைத் தற்காப்பு செய்யமுடியாமல், ஸாம்ஸன் தன் தலைமேல் அரண்மனையைத்தள்ளிக் கொண்டது போல, 3-வது சேனை அதைத்தாண்டிச் செல்லுமுன் ஜெர்மனி படைகளை உடைத்துவிட்டது.

வி வி வி வி

**பெர்லின் :** யுத்தம் தலைநகரத்தை நெருங்கி வரவர தலைநகரின் துயரம் அதிகரிக்கிறது. ஒரு அகதி பின்வருமாறு சொல்லுகிறார் :—"விவரிப்பது மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. ஆயிரக்கணக்கான பெர்லின் மக்கள் விமானத்தாக்குதலினாலும், பசிப்பிணியாலும், வெளியில் வாசம் செய்ததாலும், வியாதியாலும் இறந்துபோய்விட்டார்கள். அவர்களைத் தெருக்களிலேயே புதைக்க வேண்டியிருக்கிறது. அதுவும் எப்பொழுதும் சாத்தியமாகவில்லை. செத்துப்போகிறவர்களின் கணக்கு அதிகரித்துவிட்டதால் அநேக கோஷ்டிகள் சென்று சவார்களைப் பொறுக்கி எடுக்கிறார்கள்."

பெர்லினைக் கடைசிவரையில் தற்காப்பு செய்யவேண்டுமென்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது சாத்தியமா? வார்சாவிலும், புடாபெஸ்டிலுமுள்ள ஜெர்மானியர்கள் அவ்விதம்தான் சொல்லிவந்தார்கள். தெருத் தெருவாகவும், வீடு வீடாகவும் சண்டை நடைபெறக்கூடும். ஆகிலும் இறுதியில் பெர்லினின் வீழ்ச்சி நிச்சயம்.

ஆனால் இந்தப் போரில் ஐரோப்பிய யுத்தம் பெர்லினுக்கான போருடன் நின்றுவிடாது. வடக்கு இதாலியை ஜெர்மானியர் உறுதியுடன் தற்காப்பு செய்வதையும், புடாபெஸ்டுக்காக அவர்கள் கோரமாகப் போர் புரிந்ததையும் நோக்குங்கால், அதற்கு தெற்கு ஜெர்மனிதான் முக்கியத்வமுள்ளதென்று தெரியவருகிறது. பெர்லினைவிட தெற்கிலுள்ள மூனிக்குக்குத் தான் முக்கியத்வமுள்ளது. இங்கு கொரில்லாப் போரை நடத்த அவர்களுக்கு மலைகளும், காடுகளும் சௌகரியத்தை அளிக்கின்றன.

கோயபல்ஸ் அவ்விதம்தான் சொன்னான். 1944-ம் வருஷம் அக்டோபர் மாதத்திலேயே ஜெர்மனியின் சிறந்த படையின் பத்திரிகையான டாஸ் ஷ்வார்ஸிகோர் பின்வருமாறு எழுதியிருக்கிறது.

"நேசதேசப் படைகள் நிம்மதியாக இருக்கமுடியாது. எங்கு பார்த்தாலும் அவர்கள் கபடமாக அழிக்கப்படுவார்கள். அவர்கள் பொதுஜன நிர்வாகத்தை ஸ்தாபிக்கக்கூடும். ஆனால் அதன் தலைவர்கள் ஒரு மாதம்கூட ஜீவித்திருக்கமுடியாது. எதிரியின் உத்தரவுகளை மரண அபாயத்துக்குட்படாமல் ஒருவரும் அமுல் நடத்த முடியாது. எதிரிகள் சொற்படி எந்த நியாயாதிபதியும் தீர்மானம் சொல்லுவாரானால் அவர் இரவில் அவருடைய அறையில் கொலை செய்யப்படுவார்."

**பசிபிக்.** — லூஸானுக்குப்பின் காரிகொட்டார் தீவு தாக்கப்படுகிறது.

பிப்ரவரி 16-ம் தேதியன்று அமெரிக்கப்படைகள் காரிகொடார் தீவில் கப்பல்கள் மூலமாகவும் குடைகள் மூலமாகவும் இறங்கின.

பிலிப்பைன்ஸுக்குப் பின் சைனாவையா அல்லது ஜப்பானையா படைகள் தாக்குமென்று அநேகர் ஊகித்து வந்தது தெளிவுபட்டுவிட்டது. டோக்கியோ, யோகஹாமா, யோகோசுகா முதலிய இடங்களை விமானந்தாங்கிகளில் சென்ற 1,300 விமானங்கள் மூன்று தகுதிகளாகச் சென்று தாக்கின. அமெரிக்க பசிபிக் கடற்படை 30 கப்பல்களைக் கொண்டு ஐவோஜிமாவில் படைகளை இறக்கிவிட்டது. அவைகளுக்கு பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் ஒத்தாசை செய்தன. ஐவோஜிமா டோக்கியோவிலிருந்து 700 மைல்கள் தூரத்திலிருக்கிறது. ஜப்பானுக்கு அது தெற்குக் கோடி அரண். அதன் மூன்றில் ஒரு பாகம் ஆக்கிரமிக்கப்பட்டது.

நேசதேச யுத்தக் கப்பல்கள் ஜப்பானியத் தீவான டான்ஷுவுக்கு அப்பாலில் நின்று கடற்கரையைச் சுற்றி காபந்து செய்தபொழுதும் சண்டை விமானங்களும், வெடி விமானங்களும் தலைநகரத்தைத் தாக்கியபொழுதும் ஒரு ஜப்பானியக் கப்பலும் போருக்கு வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. பலாத்காரமாக வெளிப்படுத்தினாலொழிய ஜப்பானியக் கடற்படை வெளிவராதென்பது தெளிவாகத் தோன்றுகிறது. டைம்ஸ் பத்திரிகை பின் வருமாறு சொல்லுகிறது. "ஜப்பானியக் கடற்கரை அருகில் அமெரிக்கர்கள் எவ்வளவு அழகாகக் கப்பல்களை கொண்டுபோனாலும் ஜப்பானியக் கடற்படை விமான ரக்ஷணையன்னியில் தளங்களைவிட்டுக் கிளம்ப துணியுமென்பது அசம்பாவிதம். ஜப்பானுக்கு விமானப்படை பலம் கிடையாது.

வி வி வி வி வி

**யூ படகு.** — மிஸ்டர் சர்ச்சிலும், ஜனாதிபதி ரூஸ்வெல்டும் அவர்களின் கூட்டறிக்கையில் டிசம்பர் மாதத்தைவிட ஜனவரி மாதத்தில் யூ படகு நடவடிக்கை பலமானதென்றும் சாமான் கப்பல்களின் நஷ்டத்தில் மாறுதல் இல்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். யூ படகுகள் புதிய உபாயங்களை மேற்கொண்டிருக்கின்றனவென்றும் கடற்கரைக்கருகிலுள்ள கப்பல்களையே தாக்க முயன்று வருகின்றனவென்றும் அதைச் சமாளிக்க நாம் செய்துவரும் பதில் நடவடிக்கைகளும் திருப்திகரமாக இருக்கின்றனவென்றும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. சரித்திரப் போக்குத் திரும்பித் திரும்பி ஒரேவிதமாகத்தானிருக்குமென்று எதிர்பார்த்தால் இந்த நடவடிக்கைகளையும் நாம் எதிர்பார்க்கவேண்டியதுதான். 1918-ம் வருஷத்திலும் இவ்விதமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முன்போல இப்பொழுதும் நீர்மூழ்கி நடவடிக்கைகளை அதிகரிப்பதின் மூலம் தோல்வியைத் தாமதப்படுத்திவிடலாமென்று எதிரி நினைக்கிறான். ஆனால் இப்பொழுது எதிரி பிரெஞ்சு அட்லாண்டிக் கடற்கரையிலுள்ள நீர்மூழ்கி தளங்களை இழந்துவிட்டதினால் அவனுடைய முயற்சி பயன்படாதென்று அவன் மறந்துவிட்டான் போலிருக்கிறது. 1918-ம் வருஷத்தைப்போல இப்பொழுதும் அவன் கடல் யுத்தத்தில் தோல்வி பெற்றுவிட்டான். இப்பொழுது பிரிடிஷ் கடற்கரையிலுள்ள கப்பல்களை மூழ்கடிக்க முயன்றுவருகிறான். இதற்கு நேசதேசத்தாரின் பரிகாரமாக சாமான் கப்பல்களுக்குத் துணைக்காவல் செய்வதுடன் கடற்கரை ஓரங்களிலுள்ள கப்பல்களையும் ரக்ஷணை செய்ய வேண்டும்.

---

## சரணாகதியா அல்லது நிர்மூலமா?

### ஹிட்லர் செய்துகொள்ளவேண்டிய முடிவு.

(விக்ஹாம் ஸ்டீட்).

ஐரோப்பியப் போரின் கிழக்குப் போர்முனையிலும், மேற்குப் போர்முனையிலும் எதிரி நேசதேசத்தாரின் பலமான தாக்குதலை சமாளிக்க திணறிக்கொண்டிருக்கிறான். ஆகாயத்திலிருந்து நேசதேச விமானிகள் எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களை நொருக்குகின்றனர். தொழிற்சாலைகளை த்வம்சம் செய்கின்றனர். குழப்பமான நிலைமையை அலங்கோலமாகச் செய்துவிடுகின்றனர். கிழக்கு பிரஷ்யா, போமரேனியா, சைலீஷியா முதலிய இடங்களில் இருந்து வெளியேறும் ஜெர்மன் அகதிகள் ரஸ்தாக்கள் வழியாகக் கூட்டம் கூட்டமாக பெர்லினுக்கும் மற்ற அழிவுபட்ட நகரங்களுக்கும் வந்துகொண்டிருக்கிறார்கள். அகதிகளின் சங்கியை எட்டு மிலியன்களிருக்குமென்று சில நடுநிலைமை வகிக்கும் உற்றுநோக்காளர்கள் மதிப்பிடுகிறார்கள். அதமபக்ஷமான மதிப்பு 6 மிலியன்களாக இருக்கிறது. துர்பாக்கியம் உள்ள இந்த ஜனங்களுக்கு தங்களுடைய சொந்த நாடுகளுக்குத் திரும்பிப்போக யாதொரு விதமான நம்பிக்கையும் கிடையாது. 1940-ம் வருஷம் மே மாதத்தில் பெல்ஜியம், கிழக்கு பிரான்ஸிலிருந்து சென்ற அகதிகள் நேசதேசத் துருப்பு நடமாட்டத்திற்குத் தடங்கல்



செய்தபொழுதும் அல்லது அவர்கள் ஜெர்மன் டாங்கிகளால் நசுக்கப்பட்டபொழுதும் அல்லது ஜெர்மன் யந்திர பீரங்கிகளால் சுட்டுத்தள்ளப்பட்டபொழுதும் அவர்கள் குதூகலப்பட்டார்கள்.

இப்பொழுது காலசக்கரம் தலைகீழாக மாறிவிட்டது. இப்பொழுதுதான் ஜெர்மானியர்கள் பூர்ணமான யுத்தத்தின் கோரமான பொருளை அறிந்துவருகிறார்கள்.

ராணுவ நடவடிக்கைகள் நாளுக்குநாள் மாறுபாடடையக்கூடும். கடுங்குளிருக்கும் கனமான பனிக்கட்டிக்குப் பின்னும் பனி உருக ஆரம்பித்தால் சமவெளிகளில் துரிதமாக முன்னேறுவது தடைபடக்கூடும். சிறிது தாமதம் ஏற்பட்டாலும் அது நேசதேச நடவடிக்கைகளை பாதித்துவிடாது. ஓடர் நதியைத் தாண்டியுள்ள பாலமுனைகளிலிருந்து ருஷ்யப் படைகள் பெர்லின் சுற்றுப்புறங்களுக்கு நேர்முகமாக அபாயத்தை உண்டுபண்ணுகின்றன. மேற்கில் அமெரிக்கத் துருப்புகள் ஸீக்பிரட் அரணுக்குள் புகுந்துவிட்டன. ஆல்ஸாஸிலிருந்து ஹாலந்து வரையிலுள்ள நேசதேசத் துருப்புகள் மறுபடியும் முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டன.

ஆர்டனிஸில் ருண்ட்ஸ்டெட் மேற்கொண்ட துணிவுகரமான நடவடிக்கையில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட நஷ்டப் புள்ளி விவரங்களை கவனித்தால் அந்தக் கடைசி சூதாட்டம் ராணுவ முறையில் மகத்தான நாசமுள்ள நடவடிக்கை என்று தோன்றுகிறது. டிஸம்பர், ஜனவரி மாதங்களில் ஜெர்மனிக்கு 2,20,000 மனிதர்கள் நஷ்டம். அதில் பாதிக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 1,400-க்கு மேற்பட்ட டாங்கிகளும் பீரங்கிகளும் எதிரிக்கு நஷ்டமாயின. படைகள் பின்வாங்கும்பொழுது 7,000 ஜெர்மன் போக்குவரத்து வாஹனங்கள் நொருக்கப்பட்டன.

கிழக்குப் போர்முனையிலும் ஹங்கேரியிலும் ஏற்பட்ட ஜெர்மன் நஷ்டங்களையும் சைலீஷியாவிலும் ரூர் பிரதேசத்திலும் ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்திசாலைகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் சேர்த்துப் பார்த்தால் ஒரு பிரச்னை நம் முன் நிற்கிறது. அதாவது, அதிகரித்துவரும் இந்த சிரமங்களை ஜெர்மன் ராணுவ சக்தி எவ்வளவு காலம் சமாளித்து நிற்கக்கூடுமென்பதுதான்.

வடக்கு, மத்திய, தெற்கு ஜெர்மனியிலிருந்தும் ஆஸ்திரியாவிலிருந்தும் படைகளை அரண்களுக்குப்பின் பின்வாங்கிச்சென்றால் எதிர்த்து நிற்பதை நீடித்துவிடலாமென்று ஹிட்லர் நினைக்கலாமே ஒழிய இறுதி அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ளலாமென்று அவன் நம்பமுடியாது. அழிவதா அல்லது சரணாகதி செய்வதா என்பதை ஜெர்மனி இப்பொழுது முடிவு செய்யவேண்டும்.

ஹிட்லர் தந்திரம் தெளிவுபடவில்லை. மேற்கு பிரான்ஸிலும் டங்கர்க்கிலும் ஏராளமான ஜெர்மன் படைகள் துணிக்கப்படும்படி அவன் விட்டுவிட்டான். அவனுடைய படைகள் வடக்கு ஹாலந்திலும், நார்வேயிலும், டென்மார்க்கிலும் இன்னும் நிலைபெற்றிருக்கின்றன. யூகோஸ்லாவியாவிலும் வடமேற்கு ஹங்கேரியிலும் உபயோகமுள்ள டிவிஷன்கள் இருக்கின்றன. வடக்கு இதாலியில் குறைந்த பக்ஷம் 20 டிவிஷன்கள் போரிலீடுபட்டிருக்கின்றன. படைகளை ஒன்று திரட்டி வைத்திருக்கவேண்டிய சமயத்தில் துருப்புகளைப் பல இடங்களில் சிதற வைத்திருப்பது நாசத்திற்கு அடிகோலியதாகும். ஐரோப்பிய யுத்தத்தின் முடிவும் சமீபித்துவிட்டது.

பர்மாவிலும் தூரக்கிழக்கிலும் ஜப்பானியப் படைகளுக்கு இவ்விதமான நெருக்கடியான நிலைமை இன்னும் ஏற்படவில்லையென்றால் நேசதேச முன்னேற்றத்திலிருந்து ஜப்பானின் வெற்றிக் கதைக்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிடுமென்ற ஹேஷ்யங்கள் புலப்படுகின்றன.

மணிலாவை ஜெனரல் மாக் ஆர்தர் கைப்பற்றியபின் வருங்கால நடவடிக்கைகளுக்கு மத்திய பிலிப்பைன்ஸ் முக்கியமான தளமாக இருக்குமென்று தோன்றுகிறது. பிரிடிஷ் கிழக்கு இந்தீஸ் கடற்படை சுமத்ராவைத் தாக்கியதிலிருந்து ஜப்பானின் எண்ணெய் ஸப்ளையின் முக்கால் பாகம் சீர்கெட்டுப்போய்விட்டது. ஐரோப்பாவில் வெற்றி கிடைத்தவுடன் பிரிடிஷ் அமெரிக்கப் படைகள் ஜப்பானைத் தாக்க துரிதமாகக் கிழக்கில் குவிந்துவிடும். ஏற்கனவே ஜப்பானின் சமாளிக்கும் சக்தி பெரும்பாலும் குறைந்துவிட்டது.

ஆகையால் 1945-ம் வருஷ ஆரம்பத்தில் முக்கியமான எதிரியின் வீழ்ச்சி மூலமாக யுத்தம் வெற்றிகரமாக முடிவடைவதற்கு அடிகோலியாகிவிட்டது. உலக சரித்திரத்தில் புதிய பக்கங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைகளை ரூஸ்வெல்டும், ஸ்டாலினும், சர்ச்சிலும் பராமரிசை செய்துவருகிறார்கள்.

## பெர்லினை செம்படை நெருங்குகிறது.

### ஜெர்மானியர்களின் சங்கடம்.

(டெயிலி ஒர்க்கர் பத்திரிகையின் ராணுவ நிருபர்).

ரைன் நதிக்காக மாண்ட் காமரி தாக்குதல் செய்துவரும்பொழுது பெர்லினின் டாங்கி எதிர்ப்பு முன்னணி அகழாக இருந்த ஓடர் நதி பிரயோஜனமில்லாமல் போய்விட்டது

கோனியேவ், ஜுகாவின் முன்னேறும் வாசல்கள் ஒன்றுபட்டுவிட்டால், இரண்டு மகத்தான விலாப்பக்கத் தாக்குதல்களுக்கு வழி திறக்கப்பட்டுவிடும். கோனியேவின் வலது பார்ச்வம் சாக்ஸனிக்குச் சென்றுவிடும். ஜுகோவின் வலது பக்கம் போமரேனியாவுக்குள்ளும் வடக்கு பிராண்டன்பர்க்குக்குள்ளும் சென்றுவிடும். இது வடக்கு வழியாகவும், தெற்கு வழியாகவும் பெர்லினுக்குப் போகும் வழியைத் துணித்துவிடும். ஜுகோவின் மத்தியப் பகுதிப்படைகள் ஜெர்மன் தலைநகரத்தை நோக்கி நேராகச்செல்லும் ரஸ்தா மார்க்கமாக முன்னேறிச் செல்லும்.

செம்படை ராணுவ முறையில் மகத்தான வெற்றியைப் பெற்றுவிட்டது. கோனியேவின் படைகள் ஓடர் நதியை பனி உருக ஆரம்பித்த காலத்திலேயே தாண்டினதுடன் நதியின் மேற்குக் கரையிலிருந்த பலமான கோட்டைகளையும் தகர்த்துவிட்டன. மாட்ரிட்டையும் ஸ்டாலின்கிராட்டையும் தற்காப்பு செய்த லெப்டினண்ட் ஜெனரல் ரோடிம்ட்சேவின் தலைமையிலுள்ள வால்கா நதிப் பிரதேசத்தைச் சேர்ந்த ரக்ஷகப்படைகள் போர்முனையின் முன்னணியில் நின்றன.

ருஷ்யப்படைகள் மூர்க்கத்தனமாக எதிர்த்துப் போராடிய படைகளையும் சமாளித்து 250-க்கு மேற்பட்ட மைல்கள் முன்னேறியிருப்பதினால் இந்த அற்புதச்செய்கை முக்கியத்துவமுள்ளது. மகத்தான செம்படையின் மாரிகாலத் தாக்குதலின் வேகம் குறையவில்லை என்பதையும், ருஷ்ய ராணுவ அதிகாரிகள் உற்பத்தி நிலயங்களிலிருந்து 2,000 மைல்களுக்கு அப்பாலிலும் முக்கியமான சர்பரா நிலயங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்கள் தாண்டியும் போர்புரியும் சேனைகளுக்கு சர்பராக்களை அனுப்பும் பிரச்னையைத் திறமையுடன் கையாண்டுவந்து, போர்முனையின் முக்கியமான இடங்களில் உயர்வான படைகளைக் குவிக்க முடிந்ததென்பதையும் இந்த வெற்றி சந்தேகமற ருஜுச்செய்கிறது.

போமரேனியாவிலும், பிராண்டன்பர்க்கிலும், சைலீஷியாவிலுமுள்ள குடெரியானின் தற்காப்புப் படைகளை ஒரே காலத்தில் தாக்கியும் கோனிக்ஸ்பர்க், எல்பிங், டான்சிக் பிராந்தியம், முதலியவற்றைச்சுற்றி கடும்போரை நடத்துவதன்மூலம் வடக்குப்பகுதியில் ஜெர்மன் சேனைகளைத் தேக்கிவைத்தும் செம்படை ஓடர் முனையில் ஜெர்மனியின் கிழக்கு தற்காப்புகளை பலப்படுத்த முடியாமல் குடேரியானைத் தடுத்துவிட்டது. பிராங்பர்ட்டுக்கும் குஸ்டிரினுக்கும் மத்தியில் ஸ்டெட்டினுக்குப் போகும் மார்க்கத்திலும் குளோகாவிலிருந்து பிரஸ்லா வரையிலுள்ள ஓடர் நதியிலும் பலமாகத் தாக்கியதினாலும் குடெரியானை படைகளை அங்குமிங்கும் அனுப்பமுடியாமல் செய்து, ஜெர்மனியிலிருந்தும் மேற்கிலிருந்தும் வந்த படைகளைக் குவித்து பதில் தாக்குதலையும் செய்யவொட்டாமல் தடைசெய்து விட்டது. அவன் தூக்குத்தூக்காக சிறிய தாக்குதல்களைச் செய்து படைகளை வீண்படுத்தி விட்டான்.

இவ்விதமாக செம்படை ஜெர்மன் சேனையை தீர்க்கமுடியாத சங்கடத்தில் மாட்டி விட்டிருக்கிறது. இறுதித் தாக்குதலுக்காக குறுகலான பகுதியில் படைகளைக் குவித்து விடுவது என்ற கொள்கையை போதித்து அதன்பிரகாரம் நடத்திவந்த ஜெர்மன் ராணுவ தந்திரிகள் செம்படையினுடையவும் அமெரிக்கப் படைகளினுடையவும் சமீபகால தாக்குதல்களினாலும் ஜெர்மனியின் தலைநகரமான பெர்லினுக்கு வரும் எல்லா வழிகளிலும் பரவலாகப் படைகளை வைக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகிவிட்டார்கள்.

தேசப்படத்தை உற்றுநோக்கினால் இந்தக் கெடுதலானபடை ரசனையின் அமைப்பு நன்கு புலப்படும். பலமாக அழிக்கப்பட்டு, போதுமான உதவிப்படையற்ற ஜெர்மன் துருப்புகளின் பெரும்பாகம் பால்டிக் கடலிலிருந்து பாலாடான் ஏரிவரைக்கும் தப்பிப் பிழைப்பதற்காகப் போரை நடத்திவருகிறார்கள். மேலும் கிழக்கிலிருந்து வடக்கு, ஜெர்மனி, ஸெகோஸ்லாவேகியா ஆஸ்திரியா முதலியவற்றிலுள்ள முக்கியமான பிராந்தியங்களுக்குச் செல்லும் ரஸ்தாக்களையும் அவர்கள் தற்காப்பு செய்துவருகிறார்கள்.

ஜெர்மனிக்குத் தெற்கிலிருந்தும், தென்கிழக்கிலிருந்தும் செல்லும் மார்க்கங்களை இதாலியில் கெஸல்ரிங்கிடமுள்ள 28 டிவிஷன் படைகளும் மேற்கு, வடமேற்கு யூகோஸ்லாவியாவில் வேக்கிடமுள்ள 15 முதல் 18-வரை உள்ள டிவிஷன்களும் ரக்ஷித்துவருகின்றன. மேற்கிலிருந்து ஜெர்மன் ஆறுவது பான்சர் படைகள் அப்புறப்படுத்தப்பட்டபின் ரூர்-ரைன் தொழிற்சாலை பிரதேசத்தையும் ஸார்நதிப் பிரதேசத்தையும் அளாவியுள்ள ஸீக்பிரட் அரண் தற்காப்புகளில் 20 டிவிஷன் படைகள்தான் இருக்கின்றன. 12 அல்லது 15 டிவிஷன் படைகள் ஜெர்மனிக்குள் வடக்கிலிருந்து வரும் மார்க்கங்களை ரக்ஷித்துக்கொண்டு ஜெர்மனியில் இருக்கின்றன. லாட்வியாவிலுள்ள 20 டிவிஷன் படைகள் மீட்கமுடியாமல் துணிக்கப்பட்டு விட்டன. அட்லாண்டிக்கடல் பக்கத்திலுள்ள பிரெஞ்சுக் கடற்கரையிலுள்ள ஜெர்மன் படைகள் துணிக்கப்பட்டாலும் மிகவும் முக்கியமான துறைமுகங்களை பிரான்ஸுக்கு உதவாமல் அவைகள் தடுத்துவருவதுடன் ஸ்பெயினிலுள்ள பிராங்கோவுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுவதற்கும் பிரான்ஸில் ஐந்தாம்படை வேலையை நடத்துவதற்கும் ஒத்தாசையாக இருந்துவருகின்றன.

தெற்குப் போர்முனையிலிருந்து ஜெர்மனி யாதொரு படைகளையும் பின்வாங்கமுடியாது. அவ்விதம் செய்தால் அலெக்ஸாண்டரும் டிடோவும் வெகுதூரம் ஊடுறுவிச் சென்று



விடுவார்கள். நார்வேயிலிருந்து சில படைகளைப் பின்வாங்கி வரலாம். ஜெர்மனியிலிருந்த மூலபலத்தை ருஷ்யர்கள் முன்னேறிய சில வாரங்களில் ஜெர்மனி உபயோகப்படுத்திவிட்டதால் மேற்கிலிருந்துதான் ஏதாவது பெரிய படையைத் திரட்டமுடியும்.

நான் ஏற்கனவே சொன்னமாதிரியாக, ஜெர்மன் ஆறுவது பான்ஸர்படை மேற்குப் போர்முனையைவிட்டுப் புறப்பட்டுவிட்டது: ஆனால் இதுவரையில் கிழக்குப் போர்முனையில் ஏற்பாடாகத் தாக்க முற்படவில்லை. அதன் சிறிய பகுதிகள் போர்முனையில் பலஹீனமான பாகங்களை பலப்படுத்த ஈடுபடுத்தப்பட்டு வரலாம். ஆகிலும் அப்படைகளின் பெரும்பாகம் ஓடர்நதி பிரதேசத்தில் காணப்படவில்லை. அப்படைகள் ஏறிச்செல்லும் ரயில்வண்டிகளும் வாஹனங்களும் ஜெர்மன் போக்குவரவு மார்க்கங்களை நேசதேச விமானப்படை தாக்கி வருவதினாலும் அல்லது கிழக்கிலிருந்து மேற்குமுகமாகவும் தெற்குமுகமாகவும் செல்லும் 45,00,000 ஜெர்மன் அகதிகளின் நடமாட்ட நெருக்கடியினாலும் அல்லது ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் நிர்வாகக் குழப்பத்தினாலும் தடைபட்டிருக்கும் அல்லது மெதுவாகத்தான் செல்லக்கூடும். இந்தப் பான்ஸர் படைகள் தெற்குப் பக்கத்திலிருந்து பெர்லினை கோனியேவ் வளைத்துக்கொள்ளாமல் தடுப்பதற்காக லீப்சிக், டிரெஸ்டன் பகுதியில் வைக்கப்பட்டிருக்கக் கூடியது சம்பாவிதம்.

பெர்லினை நோக்கிவரும் ருஷ்யத் தாக்குதலையும் அதே சமயத்தில் ரைன்நதிக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தையும் சமாளிக்கவும் யுத்தத்தை நீடிக்கவும் தென்மேற்கு, தெற்கு ஜெர்மனியிலும், ஆஸ்திரியாவிலும், ஸெகோஸ்லாவேகியாவிலும் நின்று போராட நாஸிக் கக்ஷியும் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளும் உத்தேசித்திருக்கின்றார்களென்று தோன்றுகிறது. இந்தப் பிராந்தியம் மேற்கிலும், வடக்கிலும், கிழக்கிலும் சிறிய மலைகளாலும், தெற்கிலும் தென்கிழக்கிலும் உன்னதமான மலைகளாலும் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அந்த பிரதேசத்தில் பலமான தொழிற்சாலைகளும் சில இயற்கைப் பொருள்களுமிருக்கின்றன. மேற்கிலுள்ள தொழிற்சாலை பிரதேசங்களையும் வடக்கிலும் வடகிழக்கிலுமுள்ள விவசாய பிரதேசங்களையும் ஜெர்மனி இழந்தாலும் புதிய தற்காப்பு பிராந்தியத்திலுள்ள ஐச்வர்யங்களைக்கொண்டு நாஸிகள் சில மாதங்கள் வரையில் போரை நடத்தலாம்.

இந்நிலைமையில் ஐரோப்பாவில் மிகவும் நன்றாய் அமைக்கப்பட்ட பிரதேசங்கள் உள்ள பெர்லினை ஜெர்மனி நிச்சயமாகத் தற்காப்பு செய்ய முயலும். மாட்ரிட், ஸ்டாலின்கிராட், லெனின்கிராட்டைப்போல பெர்லினையும் ஒரு உயர்ந்த அரணாகவும் ஜெர்மனி செய்துவிடக் கூடும். ஸ்பிரிநதியோரமாக உள்ள தொழிற்சாலை நிலயங்களும் தொழிலாளர்கள் விடுதி களும், உள்ள பெர்லினின் கிழக்குப் பக்கத்திலுள்ள சுற்றுப்புறங்கள் தற்காப்புகளை அமைக்கச் சிறந்த பிரதேசம். வெறிபிடித்த S. S. படைகளும் ஜெர்மன் கிரேனேடியர் படைகளும் தற்காப்பு செய்யக்கூடிய பெர்லின் மகத்தான இடையூறாக இருக்கக்கூடும். அந்த எதிர்ப்பைக் குலைத்துவிட ஏராளமான ஜெர்மன் படைகள் தேவைப்படும்.

இந்த திட்டத்தை நிறைவேற்ற உள்நாட்டில் ஏற்பாடான ஒத்தாசை இருக்கவேண்டும். ஜெர்மனியின் நிர்வாகத்தில் குழப்பம் அதிகரித்துவருகிறதென்று அநேக ரிபோர்ட்டுகள் வந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மனியின் போக்குவரத்து நிலயங்களை நேசதேச விமானப் படை அழித்துவருவதினால் இந்தக் குழப்பம் அதிகரித்துவிட்டது. மாண்ட் காமரி நிஜ் மேஜன் பகுதியில் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டார். இதை முற்போக்காகக்கொண்டு மேற்குமுனையில் மகத்தான முறையில் நேசதேசத் தாக்குதல் வலுவடையும் பக்ஷத்தில் ஜெர்மனியின் நிர்வாக, ராணுவ பிரச்னைகள் தீர்க்கமுடியாத நிலைமையை அடைந்துவிடுவதுடன் ஜெர்மனியின் வீழ்ச்சியும் துரிதப்படுத்தப்படும்.

---

## வடக்கு ஜெர்மனியில் நேசதேசத்தாரின் தாக்குதல்.

### நேசதேசத்தாரின் இடுக்கிகள் நெருங்கிவருகின்றன.

**(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்.)**

டி. தினத்தன்று நேசதேசப் படைகள் நார்மண்டி கடற்கரையில் காலடி வைத்த பொழுது முன்னணியிலிருந்த ருஷ்ய ஸோல்ஜர் அங்கிருந்து குறுக்காக 1,400 மைல்களி லிருந்தான்.

இன்று ஓடர் நதியின் நுனி பாகத்தின் கரைகளிலிருக்கும் செம்படை ரைனுக்கு முன்னு ஹுள்ள பிரிடிஷ் ரோந்துப்படைகளுக்கு 360 மைல்களில்தானிருக்கின்றது. சென்ற ஏழு மாதங்களாக ஜெர்மனியை நேசதேசத்தார்கள் நெருக்கி வந்ததின்பயன் இதுதான். நவீன யுத்தத்தில், தீராவியால் ஓட்டப்படும் இஞ்சின்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னிருந் ததைவிட, இப்பொழுது ஒரு எதிரியைத் தானாகப் படிந்துவிடும்படி செய்வது சுலபமானது.

வெகு நாட்களுக்குமுன் நடைபெற்ற யுத்தங்களில் போர் புரிபவர் குறுகலான இடத்
திற்குப் பின்வாங்கிஞல் அதிக பலம் பெறக்கூடியதாக இருந்தது. ஏனெனில் அவனுடைய
எதிர்ப்பு இரண்டு பரிமாணத்தைப் பொருத்திருந்தது. படைவரிசை நீளம் குறைவாக
இருந்தால் அடர்த்தியாக அவைகள் இருக்கக்கூடும். ஆகிலும் போர்முனையில் விமானங்கள்
தோன்றியபின் அந்த சௌகரியம் போய்விட்டது. இப்பொழுது இரு போர்முனைகளில்
போரை நடத்துகிறவர் போர்முனையின் நீளத்தைக் குறைத்துக்கொண்டு தற்காப்புப்படை
வரிசைகளை பலப்படுத்திவிடலாம். ஆனல் படைகளை உள்நாட்டுக்குப் பின்வாங்கிச் செல்லு
வதன் மூலம் அவனுடைய மர்மஸ்தானத்துக்கு சமீபத்திலுள்ள விமான தளங்களை எதிரி வசம்
விட்டுவிடுகிறுன். மேலும் படைகளிருக்கும் பரப்புக் குறைந்து லக்ஷியம் குறுகிவிட்டதனுல்
பலமான விமானத் தாக்குதலையும் அவன் வறவேற்கிறுன்.

மார்ஷல் ஸ்டாலினின் படைகளுக்கும் ஜெனரல் ஈசன் ஹவருக்குமிடையே உள்ள தூரம்
வெகு சீக்கிரமாகக் குறைந்துவிட்டதால் இப்பொழுது அவைகளுக்கு விசேஷ சௌகரியங்கள்
ஏற்பட்டிருக்கின்றன. இந்த சௌகரியம் முன்கால யுத்தங்களில் கிடையாது. இப்பொழுது
ஏற்பட்டிருக்கும் சௌகரியம் யாதெனில் இரு சேனைகளும் ஒரேவிதமான காலதிட்டக்குட்பட்டு
போர்புரியக்கூடும். இரு சேனைகளும் 1,400 மைல்கள் தாண்டி நின்றதைவிட இப்பொழுது
ஒன்றுபட்ட முயற்சியைத் துவக்குவது சுலபமாக இருக்கும்.

இந்த ஒற்றுமை பெர்லின்பேரில் 1,000 அமெரிக்க கனமான வெடி விமானங்கள் தாக்கிய
திலிருந்தும் ஓடர் நதியின் கரைகளில் பலஹீனமான பாகங்களைக் கண்டுபிடிக்க மார்ஷல்
சூகோவின் முன்னணி ரோந்துப்படைகள் முயற்சித்ததிலிருந்தும் வெளிப்படுகிறது.

இப்பொழுதுதான் அமெரிக்க விமானப்படை செம்படையுடன் போர்முனையில் முதல்
முதலாக ஒத்துழைக்க ஆரம்பித்தது என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு தடவை
வெற்றிகரமாக முடிந்த நடவடிக்கை நிகுதியாகவே மேற்கொள்ளப்படுமென்று நாம் எதிர்
பார்க்கலாம். நேசதேசப் படைகளுக்கு இவ்வித சௌகரியங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும்
ஜெர்மனி சீக்கிரத்தில் வீழ்ச்சிபெருமென்று எதிர்பார்க்கக்கூடாது. ஜெர்மனி ஒரு பெரிய
தேசம். இதாலியிலிருந்தோ, அல்லது டான்யூப் நதியிலிருந்தோ அபாயம் ஏற்பட்டாலும்
ஜெர்மானியர்கள் ரோசமுள்ளவர்களென்று வெளிப்படுத்தியிருக்கிறுர்கள்.

வடக்கு ஜெர்மனியில் ஜெர்மனியை மத்தியமாகக்கொண்ட நேசதேச கிடுக்கியின்
புஜங்கள் நிச்சயமாக நெருங்கிவருகின்றன. ஆகிலும் கிடுக்கியின் அச்சு பாகத்தில் அதிக
நெருக்கடி ஏற்பட்டு வருகிறபடியால் ஜெர்மன் படைகள் கிடுக்கியின் பிடிப்பிலிருந்து தெற்குப்
பக்கமாக ஓடி கொரில்லாப் போருக்கு சிலாக்யமான பிரதேசத்துக்குச் சென்றுவிடலா
மென்று எனக்குத் தோன்றுகிறது. மூனிக்கிலுள்ள ஏற்பாடான ஸ்தாபனங்களின் எதிர்ப்பு,
முக்கியமான ஆயுத உற்பத்திசாலைகள் நேசதேச வசமாகியபின், வெகுகாலம் நீடித்திருக்கு
மென்று சொல்லுவதற்கில்லை. ஆகிலும் ஊக்கமுள்ளவர்கள் யுத்தத்தை நீடித்து நடத்தவும்
தாங்கள் உயிரைக் காப்பாற்றவும் தங்களாலியன்றதைச் செய்துவருகிறுர்கள்.

யுத்த முயற்சி முறையில் ஜெர்மனிக்கு இனிமேல் நம்பிக்கைக்கு இடமில்லை. ஆகிலும்
போர்ப்படைகளுக்கு உள்நாட்டு போக்குவரத்து மார்க்கங்களின் சௌகரியங்களிருந்து
வருகின்றன. அவைகள் பெரும்பாலும் பழுதுபட்டிருக்கின்றன. ருண்ட்ஸ்டெட்டின் தாக்கு
தலில் ஈடுபட்ட ஆருவது பான்ஸர்படை ஆர்டெனிஸில் திக்கிறையான டாங்கிகளையும் அதன்
ஓட்டிகளையும் தவிர, பூராவாக கிழக்குப் போர்முனைக்குச் சென்றுவிட்டதிலிருந்து இந்த
சௌகரியம் இருப்பது வெளிப்படுகிறது.

அந்த பான்ஸர்படை அடுத்தபடியாக எங்கு தோன்றுமென்பதைத்தான் நாம் கவனிக்க
வேண்டும். அவைகள் ஓடர் நதியை சூகோவின் படைகள் தாண்டியவுடன் கஸ்ட்ரினுக்கும்
பிராங்பர்ட்டுக்கும் நடுவில் தாக்குமா? அல்லது மார்ஷல் கோனியேவ் வடமேற்கு முகமாக
பெர்லினிக்குச் செல்லாமல் தென்மேற்கு முகமாக வியன்னுவுக்குச் சென்ருல் அவனைத்தாக்க
தெற்கு நோக்கிச் செல்லுமா?

மார்ஷல் கோனியேவ் அவ்விதம் தென்மேற்கை நோக்கிச் சென்ருல் முயற்சிகள்
கலைபட்டதாகக் காணப்படும். ஆகிலும் ஜெர்மானியர்களைவிட ருஷ்யர்கள் அதிக பலம்
பொருந்தியவர்களாதலால் அவர்கள் இவ்விதமான அபாயகரமான நடவடிக்கைகளை
துணிவுடன் மேற்கொள்ளக்கூடும். இந்த நடவடிக்கை வேறுவிதமான சந்தர்ப்பங்களில்
வெற்றிக்கு ஹானியாக இருக்கக்கூடும். கிழக்குப் போர்முனை பூராவிலும் ருஷ்யர்களிடம்
300 டிவிஷன் படைகளிருக்கின்றனவென்று ஜெர்மனி மதிப்புப் போட்டிருக்கிறது. இது
மிகையாக இருக்கக்கூடுமாஞலும் ஜெர்மானியர்களைவிட ருஷ்ய பலம் இரண்டுமடங்குள்ள
தென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

கோனியேவ் வியன்னுவுக்குச் செல்லுவது ஞாயமான நடவடிக்கைதான். ஆருவது
பான்ஸர் படையை எந்த இடத்துக்கு உபயோகமுள்ளவகையில் அனுப்புவது என்பதில்தான்
ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கு அதிக சங்கடம் ஏற்படும்.



# ஜெர்மன் சிப்பாய்கள் பொதுஜனங்களாக மாறுகிருர்கள்.

## கக்ஷி ஊழியர் கோயபல்ஸுக்கு எழுதிய கடிதம்.

ஜனங்கள் உள்ளதுமான
கிழக்குப் பிரஷ்யாவின் இரண்டாவது நகரமும் 100,000 ஜனங்கள் உள்ளதுமான
எல்பிங் வீழ்ச்சியுற்றபின் ஜெர்மன் துருப்புகளிடையே கெடுதல் ஏற்பட்டுவிட்டதென்ற
அறிகுறிகள் தோன்றுகின்றனவென்று டெயிலி எக்ஸ்பிரஸின் மாஸ்கோ நிருபரான
அலாரிக்ஜேகப் எழுதுகிறுர்.

எல்பிங்கிலிருந்து வந்த முதல் ரிபோர்ட் பின்வருமாறு:—"அந்த நகரிலுள்ள அநேகம்
பொதுமக்கள் மிகவும் கிராம்யமான முறையில் நடந்துகொள்ளுகிருர்கள். அடக்கமான புன்
சிரிப்புடன் அவர்கள் அறைகளிலிருந்து ஊர்ந்து வெளியேவந்து, முடிந்துபோய்விட்ட
தென்று உரக்கக் கத்தி, ஹிட்லரை நிந்திக்கிருர்கள். ஆகிலும் அவர்களுடைய கண்களில்
ட்யூடான்களுக்கு இயற்கையான கோபச்சின்னம் காணப்படுகிறது. அவர்கள் நம்மை வெறுக்
கிருர்கள். ஒவ்வொரு ஜெர்மன் ஆடவரும், ஸ்திரீயும் அவரவருடைய பயங்கரமான குற்றத்தை
உணர்ந்துவிட்டதினுல் அவர்களுக்கு பீதி உண்டாகிவிட்டது."

பிப்ரவரி மாதம் 1-ம் தேதியன்று கிழக்கு பிரஷ்யாவிலுள்ள கட்ஸ்டாட்டிலுள்ள நாஸிக்
கக்ஷித் தொழிலாளரான பிராஹில்லி பார்வான்ஸ் காயா டாக்டர் கோயபல்ஸுக்கு எழுதிய
கடிதம் ருஷ்ய வசமாகிவிட்டது. அதன் வாசகம் பின்வருமாறு:—" இந்தக் கடிதம்
உன்னிடம் சேர்ந்துவிடுமென்று நினைக்கிறேன். இந்தச் சிறிய நகரத்தில் நாங்கள் கோரமான
வாழ்க்கையை நடத்திவருகிறேம். மதித்துப் பார்க்கக்கூடாத குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.
எங்களுக்கு உடன் காலத்தில் உதவி வேண்டும். உதவி அனுப்பும்படி ஹிட்லரைக் கெஞ்சிக்
கேட்டுக்கொள்கிறேம். இதன் வழியாகச் செல்லும் ஸோல்ஜர்கள் கொள்ளையடித்துவிட்டு
ஆடைகளைக் களைந்துவிடுகிருர்கள். தெருக்களிலெல்லாம் ஸோல்ஜர்களின் முஸ்தீப்புகள்
சிதறிக்கிடக்கின்றன. சேனைக்குச் சம்பள பட்டுவாடா செய்யும் புஸ்தகங்கள், தொப்பிகள்,
மற்ற முஸ்தீப்புகள் இருக்கின்றன. எடுத்துச் செல்லக்கூடாத அளவுக்கு உணவுப்பொருள்
கள் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டதால் அவைகள் தெருக்களில் சிதறிக்கிடக்கின்றன. நமது
துருப்புகள் பொதுமக்களின் ஆடைகளைத் திருடிக்கொண்டு ஓடிவிடுகிருர்கள். உள்நாட்டி
லுள்ள கக்ஷித்தலைவர்களும் அதையே அனுஷ்டிக்கிருர்கள். ஜனங்களை அதோகதிக்கு விட்டு
விட்டார்கள். நகரத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே குழப்பமாகயிருக்கிறது. கூடுமானவரை
யில் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள் என்று ஸோல்ஜர்கள் தூண்டிவருகிருர்கள்.
நான் அதிகமாக எழுதக்கூடவில்லை ஹிட்லரிடம் ராஜவிச்வாசமுள்ள ஸோல்ஜர்களிடம்
இந்தக் கடிதத்தை அனுப்பியிருக்கிறேன். நான் நாஸிக் கக்ஷியின் பழமையான ஊழியன்.
மாகாண கவர்னரான எரிக்காக் என்னை நன்கு அறிவார்."

உங்களுடைய விச்வாசமுள்ள நண்பன் ஹில்லி பார்வான்ஸ் காயா.

"இது நாஸிகளின் அழுகுரல்" என்று வர்ணித்துவிட்டு ரெட் ஸ்டார் என்னும் பத்திரிகை
அதைப்பற்றி பின்கண்ட வியாக்யானத்தை எழுதியிருக்கிறது. "நாம் கோயபல்ஸுக்கு
இந்தக் கடிதத்தை அனுப்புவோம். கட்ஸ்டாட்டிலிருந்து பெர்லினுக்குப் போகும் தபால்கள்
மாஸ்கோ வழியாகச் செல்லுகின்றன என்பதற்கு நாம் ஜவாப்தாரியல்ல."

எல்பிங்கிலுள்ள யுத்த தளவாட உற்பத்திசெய்யும் 40 தொழிற்சாலைகளில் பெரும்பாகம்
பழுதுபடாமல் ருஷ்ய வசமாகிவிட்டன. அங்கிருந்த யந்திரங்கள் அப்புறப்படுத்தப்படவில்லை.
அங்கு 8,000 பேர்கள் வேலை செய்த டாங்கி உற்பத்திசாலையும், பஸ்ஸிங் மோட்டார் கார்
உற்பத்தி சாலையும், ஆறு குழாய்கள் உள்ள சட்டி பீரங்கிகளை உற்பத்தி செய்யும் தொழிற்
சாலையும், சாகலெட் உற்பத்தி தொழிற்சாலையும், அநேக யந்திர உற்பத்தி நிலயங்களும்,
நதியின் கரையில் ஷிசா கப்பற் கட்டும நிலயங்களும் இருந்தன.

# புதிய ஐரோப்பாவை அமைப்பது.

## மூன்று நேசதேச தலைவர்களின் கூட்டம்.

(டைம்ஸ் பத்திரிகை).

முறைக்குள்ள
மூன்று வல்லரசுகள் கூடும் தேதியும் ராணுவ நிகழ்ச்சிகளின் நடை முறைக்குள்ள
அதன் சம்பந்தத்தையும் நோக்குங்கால் இந்த மகாநாட்டின் நடவடிக்கைக்கு ஐரோப்பாவின்
எதிர்கால அமைப்பைப்பற்றிய பூரா அதிகாரமும் இப்பொழுதே அதற்கு வழங்கப்பட்டிருக்
கிறதென்று தெரியவருகிறது. இதற்குமுன் மூன்று நேசதேசத் தலைவர்கள் கூடிய எந்த
மகாநாடும் இவ்விதமான அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. நாஸிகளின் கொடுங்கோன்மை
இறுதில் எந்த தேசத்திலும் வீழ்ச்சி பெறக்கூடுமாகையால் அப்பொழுது இந்த மூன்று
பிரமுகர்களடங்கிய நேசதேசநாடுகளுக்கு சர்வதேச ஜனசமூகத்தை நல்லதுக்கும்,
கெடுதலுக்கும் திருத்தியமைக்கும் பொறுப்பு உண்டாகிவிடும். இது மிகவும் அத்யாவசியமான
பொறுப்பாகும். ஆகிலும் கிரைமியாவிலிருந்து வரும் தகவல்களைப் பார்த்தால் இந்தப்

பொறுப்பை மூவர்களும் பூர்ணமான பரஸ்பர நம்பிக்கையுடனும் ஒற்றுமையுடனும், ஒருவரோடு மற்றொருவர் விஷயங்களைப் பரிமாறிக்கொண்டும் ஏற்றுவருகிறார்களென்று தெரியவருகிறது. இவ்விதமான ஒற்றுமையிருந்தால்தான் அந்தப்பொறுப்பை நிறைவேற்றமுடியும். மிகவும் விரிவானதும், அதிக சிக்கலானதுமான பிரச்னைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றுப்பட்ட அபிப்பிராயம் ஏற்பட்டதற்குரிய புகழ் பிரதமந்திரிக்கு உரித்ததாகும். பிரிடிஷ் விவகாரங்களின் பூரா நடவடிக்கையையும் மற்ற பெரிய வல்லரசுகளுடன் நெருங்கி ஒத்துழைப்பதன் மூலமாகத்தான் நடத்தவேண்டுமென்ற தீர்மானத்திலிருந்து அவர் ஒருபொழுதும் நழுவிவிடவில்லை. இந்த மகாநாடு, தன்னுடைய நாட்டிற்கும் உலகம் பூராவுக்கும் மிகவும் முக்கியத்வமுள்ளதென்பதை நன்கு அறிந்து, இந்த மகாநாட்டைத் தாமதப்படுத்தக்கூடிய எல்லா இன்னல்களையும் அவர் விடாமுயற்சியுடனும் ஊக்கத்துடன் நிவர்த்திக்க முயன்று வந்திருக்கிறார்.

---

# உயர்வான உலக அமைப்புக்குத் திட்டம்.

## தொழிலாளர்கள் சங்கத்தாரின் மகாநாடு.

(ஹெர்பர்ட் டிரெஸி).

உலகத் தொழிலாளர் சங்க இயக்கத்தைச் சேர்ந்த பொறுப்புள்ள தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் லண்டனில் இந்த வாரத்தில் கூடுவதிலிருந்து அளவு கடந்த நம்பிக்கை கொள்ளப்படுகிறது.

பிரிடனின் தொழிலாளர் சங்க காங்கிரஸின் ஆதரவில் கூட்டப்பட்ட இந்த மகாநாடு லண்டனின் நகர பரிபாலன நிர்வாகம் நடத்தப்படும், தேம்ஸ் நதிக் கரையிலுள்ள பெரிய கட்டடத்தில் துவங்கிவிட்டது.

39 நேசதேச தேசீய தொழிலாளர் சங்க ஸ்தாபனங்களிலிருந்தும், நடுநிலைமை வகிக்கும் ஏழு ஸ்தாபனங்களிலிருந்தும், 10 சர்வதேச ஸ்தாபனங்களிலிருந்தும் விஜயம் செய்திருக்கும் பிரதிநிதிகளுக்கு லண்டன் ஜனங்களின் வரவேற்பை அறிமுகப்படுத்தும் பிரமயத்தில் லண்டன் மாகாண கௌன்ஸிலின் தலைவர் சபையின் சார்பாக பினவருமாறு சொன்னார். "யுத்தத்துக்குப் பின் சிலாக்கியமான உலகமைப்புக்குரிய சாஸனங்களை வெளியிடக்கூடிய அநேக மகாநாடுகள் கூடுவதற்கு இது முதல் சமாதான மகாநாடு என்று நாங்கள் கருதுகிறோம். இந்த நகரத்தில் கூடப்போகும் சர்வதேச மகாநாடுகளுக்கு இந்தக் கூட்டம் முற்போக்கானதென்று நாங்கள் அதை வரவேற்கிறோம்."

பிரிடனின் தொழிலாளர் சங்க காங்கிரஸின் ஜெனரல் சபையின் தலைவரான மிஸ்டர் ஜார்ஜ் ஐஸாக்ஸ் M. P., பிரதிநிதிகளை பிரிடனின் தொழிலாளர்கள் சங்கங்களின் சார்பாக வரவேற்றபொழுது பின்வருமாறு கூறினார். "பிரதிநிதிகளில் அநேகர் மகாநாட்டிற்கு வருவதற்காக யுத்த கால பிரயாணத்திலுள்ள அபாயங்களையும் சிரமங்களையும் சகித்துக் கொள்ளத் துணிவு கொண்டவர்களென்பதை நாங்கள் பாராட்டுகிறோம். இந்த முக்கியமான மகா நாட்டின் முக்கியத்துவத்தைப்பற்றி பிரிடிஷ் தொழிலாளர் சங்க காங்கிரஸின் ஜெனரல் கௌன்ஸிலுக்குள்ள அபிப்பிராயத்தை ஒவ்வொரு பிரதிநிதியும் ஒப்புக்கொள்ளுவாரென்று நம்புகிறேன்."

மிஸ்டர் ஐஸாக்ஸ் மேலும் கூறியதாவது:—"யுத்தம் காரணமாக அநேக வருடங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த சகோதரத் தொழிலாளர்களுடன் எங்களுக்குள்ள நட்பை நாங்கள் புதுப்பித்துக்கொள்ளுகிறோம். இந்த ஹாலுக்குள் நுழையும்பொழுது, வாக்குறுதி செய்த ஒரு காரியத்திற்காக நடத்திய போரில் உயிர் துறந்தவர்கள், ஜெயில்களில் கஷ்டங்களை அனுபவித்தவர்கள், காவல் முகாம்களிலும் சித்ரவதை அறைகளிலும் அவஸ்தைப்பட்டவர்கள், அநேக வருஷங்களாக, பசிப்பிணி, கஷ்டம், துயரம் முதலியவற்றிற்குள்ளாகிய போதிலும் நமது கக்ஷியின் இறுதி வெற்றியில் நம்பிக்கை தளராமலும், அதற்கு அடிப்படையான கொள்கைகளைப் பிறர் கையில் காட்டிக் கொடுக்காமலும் இருந்தவர்கள், முதலிய ஞாபகங்கள் எங்களுக்கு வருகின்றன.

"அகஸ்மாத்தாகவோ அல்லது அதிர்ஷ்டவசமாகவோ இந்த மகாநாடு லண்டன் மாகாண சபையின் சபை அறையில் கூடுகிறது. இந்தக் கட்டடத்தில்தான் லண்டனின் ஜனநாயகம் சுதந்திரமுள்ள ஜன சமூக வாழ்க்கை, சுதந்திரம், நேசதேசத்தார்கள் பாடுபடும் ...கமான வாழ்க்கையெல்லாம் நிலைபெற்றிருக்கின்றன. மகாநாடு இந்த நீண்ட காலப் ...பாரை நடத்திவரும் நேசதேசத்தாரின் உணர்ச்சியை ஒத்து நடவடிக்கைகளை நடத்து...று நான் நினைக்கிறேன். பொதுவான லக்ஷியத்திற்காக நேசதேசத்தாரிடம் காணப்... சேவையும், தியாகமும்தான் நாம் ஆரம்பிக்கப்போகும் சர்ச்சையில் நமக்கு நீதிக்... ளாக இருக்கவேண்டும்.



"இந்த மகா நாட்டைக் கூட்டியதில் பிரிடனின் தொழிலாளர்கள் சங்க காங்கிரஸ்
முக்கியமான லக்ஷியமும் நோக்கமும் யாதெனில் நமது நாளிலேயே மிகவும் அபாயம் நேரும்
படியிருக்கும், ஊக்கமாகவும் தாக்குதலுக்குட்பட்ட, சுதந்திரம், ஜனநாயகம் என்ற கொள்
கைகளைப் போஷித்து பரவச்செய்வதற்காக சர்வதேச தொழிலாளர்கள் சங்க இயக்கத்தின்
ஐச்வர்யங்களை ஒன்றுதிறட்ட வேண்டுமென்பதுதான். இந்த மகாநாட்டின் முக்கியமான அலு
வல்கள், பத்திரமான, சாச்வதமான ஒழுங்கு முறையை அமைப்பதற்கும் உலகம் பூராவிலும்
சமாதானத்தையும் நீதியையும் பத்திரப்படுத்த சர்வதேச ஸ்தாபனத்துக்கு உஸ்திவாரம்
போடுவதற்கும், தொழிலளர் சங்கம் என்ன செய்யக்கூடுமென்பதை ஆலோசிப்பதுதான்.

"காரிய நிகழ்ச்சிக் குறிப்பிலுள்ள மற்றெல்லா விஷயங்களும் இந்த முக்கியமான லக்ஷி
யத்திற்கு உபகரணங்கள்தான். சர்வதேச பத்திரத்தையும் சமாதானத்திற்குரிய பலமான
அமைப்பையும் அடிப்படையாகக்கொண்டுதான் உலகமளாவிய இயக்கத்தின் பிரதிநிதிகளாக
இங்கு கூடியிருக்கும் நாம் தொழிலாளர்கள் சங்கங்களின் லக்ஷியங்களையும் எண்ணங்களை
யும் சாதித்துக்கொள்ளலாம். சர்வதேச அமைப்பு மூலம்தான் சுதந்திர ஜன சமூக வாழ்
க்கையை பலப்படுத்தி அபிவிருத்தி செய்யலாம். இரண்டு உலக யுத்தங்களிலும் அதற்கு
இடைகாலத்திலும் நமக்கு ஏற்பட்ட அனுபவத்திலிருந்து தொழிலாளர் சங்கங்களின் லக்ஷி
யங்களையும், விருப்பங்களையும், நிறைவேற்றுவதென்பது ஜனநாயக ஸ்தாபனங்களின்
தைரியத்தையும் வலிமையையும் பொருத்ததென்று அறிந்திருக்கிறோம். விடுதலைக்காக
போரை நடத்துவதற்காக நாம் நமது சுதந்திரத்தில் அநேகத்தை தியாகம் செய்யவேண்டிய
தாகிவிட்டது. சுதந்திரம் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டபின்னும் உலகம் பூராவிலும் நீதி
ஒழுங்கு முறையுள்ள ஆக்ஷி முறை நிலவும் பொழுதுதான் நம்முடைய சுதந்திரத்தையும்
திருப்பிப்பெற்று அதை விஸ்தாரப்படுத்துவோம்.

மகாநாட்டில் சர்ச்சை செய்யப்படும் அநேக விஷயங்களில் பிரதிநிதிகளுக்குள் அபிப்
பிராய பேதங்களிருக்கலாம். ஆகிலும் இந்த அபிப்பிராய பேதங்கள் மகாநாட்டின் முக்கிய
மான லக்ஷியத்தை புரக்கணித்துவிடக்கூடாது. நானும் என்னுடன் ஒத்துழைப்பவர்களும்
நேசதேசத்தார்கள் யுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஊக்கத்துடன் இந்த மகாநாடும்
சர்ச்சைகளை நடத்துமென்று நம்புகிறோம்.

"தொழிலாளர்கள் சங்க காங்கிரஸ், மகாநாட்டிற்கு அழைப்புப் பத்திரங்களை அனுப்பிய
பொழுது, சர்வதேச தொழிலாளர்கள் சங்க இயக்கத்தின் முக்கியமான சோதனை காலம்
வந்துவிட்டதென்று ஜெனரல் கௌன்ஸில் பலமாக எண்ணம் கொண்டிருந்தது. தொழி
லாளர்களின் பிரதிநிதிகள் கொண்ட தொழிலாளர்கள் சங்கங்கள் மகாநாடு கூட்டி பொது
வான சர்வதேச பிரச்னைகளைச் சர்ச்சை செய்து நமது சர்வதேச இயக்கத்தை புனருத்
தாரணம் செய்ய முற்போக்கான திட்டத்தைக் கண்டுபிடித்தாலொழிய, ஜன சமூகத்தின்
எதிர்கால தோற்றம் கோரமானதாக இருக்குமென்று நாங்கள் முடிவான அபிப்பிராயத்தைக்
கூறிவிட்டோம்.

"எங்களுடைய அபிப்பிராயம் வலுவடைந்துவிட்டது. உலக தொழிலாளர் சங்க
இயக்கத்தில் அதனிடையே உள்ள பிளவுகளாலும் மனஸ்தாபங்களினாலும் அந்த இயக்கத்தின்
முன்னேற்றத்துக்கு அநேக இடையூறுகள் இருந்தன. இந்த மகாநாட்டிற்கு நாங்கள்
வரவேற்கக்கூடிய முக்கியத்துவமுள்ள அநேக பிரமுகர்கள் வராததற்கும் அவர்கள் வரக்
கூடாததற்கான காரணங்களுக்காகவும் நாங்கள் வருந்துகிறோம். ஆகிலும் சர்வதேச தொழி
லாளர்கள் சங்க இயக்கத்தைப் புனருத்தாரணம் செய்ய முயற்சி செய்ய வேண்டுமென்றும்
அந்த முயற்சிக்கு இதுதான் சரியான காலமென்றும் எங்களுக்கு இருந்த எண்ணம் சிறிது
கூட தளர்ச்சி பெறவில்லை.

"யுத்தத்தினால் நமக்கு ஏற்பட்ட சங்கடங்களையும், சுதந்திரத்தில் நமக்குள்ள
நம்பிக்கையை வெளிப்படுத்த நமது ஜனங்கள் செய்திருக்கும் தியாகங்களையும் நமது சர்ச்சை
களுக்கு நியந்தாவான ஜனநாயக வாழ்க்கை முறைகளையும் மதித்துப் பார்த்தால் நமது லக்ஷி
யத்தை நாம் அடைந்துவிடவேண்டுமென்பதில் எங்களுக்கு முன்னைவிட இப்பொழுது திட
மான நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஒற்றுமைதான் நமது லக்ஷியம். இந்த மகாநாட்டின்
சர்ச்சையில் எந்த கட்டத்திலும் அதை நாம் மறந்துவிடக்கூடாது."

# உண்மைகளும் முடிவுக்கு வரவேண்டியதும்.

## குருஸேடர் பத்திரிகையின் படிப்பாளர்களுக்கு கிருஸ்மஸ் தினத்தன்று.

### (J. B. பிரிஸ்ட்லி ஆற்றிய சொற்பொழிவு).

சமீப காலத்தில் நாம ஆழ்ந்த யோசனையிலிறங்கவேண்டும்.

போர்ப்படைகளின் சிறந்த நடவடிக்கைகளைப்பற்றி இப்பொழுது சிந்திப்பது கஷ்ட சாத்தியமானதென்று நீங்கள் சொல்லக்கூடாது. சென்ற யுத்த அனுபவத்திலிருந்து அவ்விதம் நீங்கள் சொல்லுவீர்களென்று நான் அறிவேன். ஆகிலும் இப்பொழுது நீங்கள் முன்னைவிட அதிகமான முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். சென்ற யுத்தத்தின் முடிவிலிருந்ததைவிட இப்பொழுது நிலமை மோசமாக இருக்கிறது.

இவ்விதமாக உலக யுத்தங்களும், அவைகளுக்கு மத்தியில் சில உள்நாட்டுக் கலகங்களும், வியாபாரக் குறைவும், பொருளாதார நெருக்கடிகளும், புரக்ஷிகளும் திரும்பித் திரும்பி வரும்படியாக நாம் விடக்கூடாது. நாகரீகம் இப்பேர்ப்பட்ட பலமான கோமாளித்தனத்தை இனிமேல் தாங்கமுடியாது. கூடிய சீக்கிரத்தில் சமாதான முறையில் வாழ்க்கையை நடத்தி க்ஷேமத்தை அடைவதற்கு மனித வர்க்கம் முடிவு செய்யாவிடில், கொஞ்ச காலத்திற்குள் மனித வர்க்கம் காட்டுமிராண்டிகளின் தன்மையை அடைந்துவிடும்.

இவ்விதமான எச்சரிக்கை கொண்ட பீடிகையுடன் ஆழ்ந்த சிந்தனை செய்வதற்கு உங்களுக்கு நான் சிறிது உதவி செய்யலாமென்று நினைக்கிறேன. நாம் ஒரு விதமாக இதைத் துவக்கம செய்வோம். அது சரியான முறையில் ஆரம்பிக்கப்படவேண்டும். பெருவாரியான ஜனங்கள் தவறான வழியில் தங்களுடைய கவனத்தைச் செலுத்துகிறார்கள். அவர்கள் நாம் இப்பொழுதிருந்துவரும் நிலமையில் சரியானபடி கவனம் செலுத்தவில்லைபோலும். அவர்கள் இந்த உலகிலில்லை என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

### சமூகம்.

துவக்கம் செய்யுமுன் சில உண்மைகளை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். தற்பொழுதுள்ள மானிடர்கள் தனிப்பட்ட முறையில் அவர்களின் முன்னோர்களைவிட உயர்வானவர்களல்ல. உதாரணமாக நான் ஷேக்ஸ்பியரைப்போல் நாடகங்கள் எழுதவில்லை. ஆகிலும் ஒன்று கூடி காரியங்களை நடத்துவதில் அவர்கள் மிகவும் உயர்வானவர்கள்தான். விஞ்ஞான சாஸ்திரம், கற்பனை, அமைப்பு, ஒத்துழைப்பு முதலியவற்றினுல் நமது மூதாதையர்கள் அற்புதமானவையென்று நினைக்கக்கூடிய காரியங்களை நாம் சுலபமாக நிறைவேற்றிவிடுகிறோம்.

நமது யுகத்தின் முக்கிய குணபாகம் யாதெனில் நாம் தனிப்பட்ட முறையில் ஒன்றையும் சாதிப்பதில்லை. கூட்டுறவு முறையில் தான் நாம் உழைத்து வருகிறோம். இந்தக் கூட்டுறவு சங்கீத கோஷ்டிகள், விமானப் படை முதல், மகத்தான அணைகள், மகத்தான ரேடியோ அமைப்புகள் வரையில் பரவியுள்ளது. நாம் ஒன்றுபட்டு சாதிக்கக்கூடிய வரையில்தான் நாம் மூதாதையர்களைவிட உயர்வானவர்களாகிவிட்டோம். ஆகையால் நவீன காலத்திலுள்ள மனிதன் ஜன சமூகத்தைச் சேர்ந்தவன். கூட்டுறவை ஆதரிப்பவன் என்பது ஸ்பஷ்டமானது. இது முதலாவது விஷயம்.

இரண்டாவதாக, உலகில் ஒருவரை மற்றொருவர் நம்பியிருக்கும் நிலயில் நாம் வசித்து வருகிறோம் என்பதும் நிச்சயம். பிராசின காலங்களில் பலவேறு நாகரீகங்களும், ஜன சமூக அமைப்புகளும் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் தொடர்பின்னியில் தனித்து வாழ சௌகரியமிருந்து வந்தது.

இது இனிமேல் சாத்தியப்படாது. உலகிலிருக்கும் எவரும் மற்றொருவரை வர வர அதிகமாக நம்பித்தானிருக்கவேண்டியிருக்கிறது. 1930-ம் வருஷத்தில் நிலமை சீர் கெட்டிருந்த அமெரிக்காவிலிருந்து வெகு தூரத்திலுள்ள தெற்கு சமுத்திரங்களுக்குச் சென்றேன் அங்கும் ஜனங்கள் கஷ்டப்படுவதைக் கண்ணுற்றேன்.

யுத்த ஆரம்பத்திலிருந்து இந்த உண்மை ஊர்ஜிதமாகிவிட்டது. யுத்தத்தினுல் எல்லோரும் நன்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கிரீன்லாந்திலிருந்து, நியூ கினியாவில் வரையில் எங்கிருந்தாலும் எவரும் அதன் தீங்கிலிருந்து தப்பித்துவிடமுடியாது. இவ்விதமான உலகில் நாம் இப்பொழுது ஜிவித்துவருகிறோம். நாம் அதற்காக வருத்தப்பட்டாலும் நாம் உண்மையை மாற்றிவிடமுடியாது.



ஆகையால் நாம் எல்லோரும் ஒரே படகில் உட்கார்ந்திருக்கிறோமென்று நினைப்பது புத்திசாலித்தனமாகும். சிலருக்கு மற்றவர்களைவிட அந்தப் படகில் நல்ல ஸ்தானம் கிடைத்திருக்கலாம். ஆனல் படகு மூழ்கினல் எல்லோரும தண்ணீருக்குள் மூழ்கிவிடவேண்டியதுதான். இது உங்களுக்குப் புரியாவிடில் நான் இதை வேறு வழியில் துலக்கிச்சொல்லுகிறேன்.

உலகத்தில் அவர் அவர்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளக்கூடிய வகையில் இப்பொழுது அநேக ஸ்வதந்திரம் படைத்த நாகரீகங்கள் நிலை பெற்றிருக்கவில்லை. ஒரு இடத்தில் உண்டாகும் மாறுதல்கள் தூரதேசத்திலுள்ள மற்ற இடங்களிலும் மாறுதல்களை உண்டுபண்ணும். அமெரிக்காவிலிருந்த ஆடவர் ஒருவர் 1935-ம் வருஷத்தில் ஆயுத சாலையில் வேலைக்குச் சென்றதால் காலிபோர்னியாவிலிருந்த ஒரு பெண் 1942-ம் வருஷத்தில் விமான உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் வேலைக்கு அமர்ந்து கொள்ளவேண்டியதாகிவிட்டது.

உலகத்தின் ஒரு பாகத்தில் நாஸிதத்வம் என்ற தொத்துநோய் ஏற்பட்டு சிரமமேற்பட்டிருக்கிறது. உலகத்தின் மற்ற பாகங்களில் பெரும்பாலிலும் அந்த தொத்து நோயை அடக்கி இறுதியில் ஒழித்துவிடுவதற்கு யுத்த தாபம் என்ற ஜுரம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் சைனுவிலும் இந்தியாவிலும் உள்ள மிலியன்கள் கணக்கான ஜனங்கள் வறுமைக்குள்ளாகும் தருவாயிலிருக்கிறார்களென்றால் உலகத்தின் மற்ற பாகங்களும் சுவபிரயோஜனத்தை உத்தேசித்தாவது இந்த கோரமான உண்மையைப் பொருட்படுத்தாமலிருக்கமுடியாது. ஆகையால் உலகத்தின் எந்த பாகமும் அலக்ஷிய புத்தியுடனிருந்தால் அதற்காக அது கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிவரும். ஒரு கண்டத்தில் நாகரீகம் பூராவாக மறைந்துவிடும் பக்ஷத்தில் மற்ற கண்டத்திலுள்ளவர்கள் உண்மையாக முன்னேற்றமடைவார்கள் என்று நான் நம்பவில்லை. ஒரே கயிற்றினுல் கட்டப்பட்டு மலையின உச்சிக்கு ஏறும் ஒரு கோஷ்டியின் நிலமையில் நாம் இருந்து வருகிறோம்.

உதாரணமாக இந்த யுத்தம் துவக்குவதற்கு முற்போக்கான சம்பவக் கோர்வையைக் கவனியுங்கள். 1930-ம் வருஷத்தில் நாஸிக் கக்ஷி வலுத்துவிடாமல் பலஹீனமடைந்து வந்தது. ஆனல் 1929-ம் வருஷத்தில் லண்டனில் ஏற்பட்ட செருக்கு ஐரோப்பாவிற்கும் பரவிற்று. ஜெர்மனியில் மிலியன்கள்கணக்கானவர்கள் வேலையின்மியில் திண்டாடிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது நாஸிக்கக்ஷி உன்னதஸ்திதியை அடைய ஆரம்பித்தது. அதற்கு வேலையில்லாததுதான் காரணம். 1933-ம் வருஷத்தில் அது அதிகாரத்துக்கு வந்தது.

ராணுவ கோஷ்டியாருக்கும், நாஸிகளை ஆதரித்து வரும் பெரிய முதலாளிகளுக்கும் வேலையில்லாத்திண்டாட்டத்தை நிவர்த்திக்க மகத்தான முறையில் ஆயுதங்களை மறுபடியும் உற்பத்தி செய்யும் ஏற்பாட்டை ஆரம்பிப்பதுதான் நலமென்று தோன்றிற்று. சில வருஷங்களுக்குள்ளாக நாஸி ஜெர்மனி கனமான ஆயுதங்களுள்ள, கொள்ளைக்கூட்டத்தாருள்ள நாடாக மாறிவிட்டது. அவர்கள் அயல்நாடுகளிலிருந்து தங்களுக்குவேண்டியவைகளை இரக்கமன்னியில் தந்துவிடும்படி பயமுறுத்தவும் முற்பட்டுவிட்டார்கள்.

### துரோக சிந்தனை.

அதன் பிறகு யுத்தம் தவிர்க்கமுடியாதபடி மூண்டுவிட்டது. யுத்தம் உண்மையாக எப்பொழுது எங்கு ஆரம்பித்தது? சம்பவங்களின் கோர்வையைப் பின்பற்றிச் சென்றல் அதற்கு மூலாதாரம் உலகம் பூராவிலும் காணப்படக்கூடும்.

நாம் வசித்துவரும் உலகின் நிலமை இவ்விதமென்றால் ஒரு சிறிய பகுதியின் பத்திரத்துக்கு ஏற்பாடுகளைச் செய்து பிறருடைய க்ஷேமத்தைக் கோராமலிருப்பது முட்டாள்தனமாகும். இதுதான் நாஸிகளுடன் ஒத்துழைத்த, பிரெஞ்சு முதலாளிகள் போன்றவர்கள் செய்த பெரும் தவறு. எப்பாடுபட்டும் கௌரவத்தையும் நல்ல வாழ்க்கையையும் காப்பாற்றவேண்டும், பொருள், அதிகாரம், அந்தஸ்து முதலியவற்றைக் காப்பாற்றவேண்டும் என்று உறுதிகொண்டு அம்முதலாளிகள் நாஸிகள் நடன உறவாடியும் பிரெஞ்சு மக்களுக்கு பாதகமாகவும் ஜீவனம் செய்து வந்தார்கள். இப்பொழுது அவர்கள் பொருள், அதிகாரம், செல்வாக்கு, கௌரவம், மரியாதை எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள். அவர்கள் குறுகிய எண்ணமும் துரோக சிந்தனையும் பெற்றிருந்ததினுல்தான் இந்த அனர்த்தம் விளைந்தது. உலகத்தின் போக்கை அவர்கள் நன்கு அறிந்துகொள்ளவில்லை. "ஜாக், நீ எக்கேடு கெட்டுப்போ, நான் சௌக்கியமாக இருக்கிறேன்" என்று சொல்லும் காலம் ஆண்டு மாறிவிட்டது. நீ அவ்விதம் நினைத்தால் நீ ஏமாற்றமடைந்தவனுகிறாய். நீ நல்ல முறையில் வாழமுடியாது.

நாம் விஷயங்களை ஒன்றுகூட்டிப் பார்ப்போம். நவீன கால மனிதன் நிச்சயமாக ஜன சமூகத்தைச் சேர்ந்தவன். பிறருடன் கூடி வாழ்பவன் என்று சொல்லவேண்டும். அவனுடைய அறிய சேவைகளெல்லாம் கூட்டுறவு முறையில் சம்பாதிக்கப்பட்டவைகள்தான். யுத்தத்திலும் சரி, சமாதான அமைப்பிலும் சரி, அவன் தனிப்பட்ட முறையில் ஒன்றும் செய்துவிட முடியாது. அவ்விதம் சாதிக்கவேண்டுமானால் அவன் மகத்தான முறையில் ஒன்றுபட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். மேலும் நாம் பரஸ்பர ஆதீனமுள்ள உலகில் வாழ்ந்து வருகிறோம். அவ்வுலகில் ஒரு பாகத்தில் நடைபெறும் காரியங்கள் சமீபத்திலோ அல்லது காலக்கிரமத்திலோ மற்ற பாகங்களையும் பாதிக்கக்கூடியதாக இருக்கின்றன.

இவ்விதமான உலகத்தில் உனக்குத் தேவையான அளவுக்குப் பத்திரப்படுத்திக்கொண்டு பிறருக்கு என்ன ஆனாலும் கவலைப்படாமலிருப்பது என்ற நடவடிக்கை குறுகிய நோக்கமும், முட்டாள்தனமும், தன்னலத்தைக் கோருவதும் உள்ளதாக இருக்கும். இந்த திட்டத்தைப் பிரயத்தனம் செய்யும்பொழுதெல்லாம் அது நாசத்தை விளைவித்து விட்டது. இந்தக் கோரமான இகழ்ச்சிகளின் அழிவுகள்தான் ஐரோப்பா பூராவிலும் இன்று காணப்படுகின்றன. நாம் ஆழ்ந்து யோசனை செய்வதற்கு இது ஒரு அடிப்படையான அம்சம்.

### அபாயகரமானது.

இந்த உண்மைகளைப் புறக்கணிக்கும் எந்த யோசனையும் தீவிரமான யோசனையல்ல. அது அபத்தமானது, அபாயகரமானது. நான் இப்பொழுது படிப்பதும், கேழ்ப்பதுமான விஷயங்களில் மூன்றில் இரண்டு பாகம் அபத்தமானதாகவும், அபாயம் பொருந்தியதாகவும் இருக்கின்றன. உண்மையான உலக நடவடிக்கைகளை கவனிக்காததும், தன்னுடைய மனோராஜ்ய உலகத்தில் ரமித்துக்கொண்டிருப்பதுமான அநேகர்கள் தாங்கள்தான் சிறந்த தத்வதர்சிகள் என்று பறைசாற்றி வருகிறார்கள். இது சரியானதல்லவென்று நீங்கள் சந்தேகித்தால் இந்த தத்வதரிசிகள்தான், அநுபவசித்தர்கள்தான் நாஸி தத்வத்தின் அபாயத்தை முதலில் அலக்ஷியம் செய்துவிட்டுப் பின்பு கண்டு கொண்டார்கள். வெறும் மனோராஜ்யம் செய்கிறவர்கள் என்று மதிக்கப்படும் நாம் எல்லாம் அநேக வருஷங்களாக இந்த அபாயத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறோம்.

அநேகர்கள் தாங்கள் திடச்சித்தமுள்ளவர்களென்று சொல்லிக்கொண்டாலும் உண்மையில் அவர்கள் கல் நெஞ்சம் படைத்தவர்களாகத்தானிருக்கிறார்கள்.

நான் வாசிப்பதும், கேழ்ப்பதுமான விஷயங்களில் மூன்றில இரண்டு பாகம் அபத்தமானது. அபாயம் பொருந்தியதென்று மறுபடியும் சொல்லுகிறேன். இன்னும் மானிடர்கள் தனித்து நிற்கவேண்டுமென்று கூக்குரல் போடுகிறார்கள். ஆனால் யந்திர சாதனங்களும், ஏராளமான உற்பத்தியுமுள்ள இந்நாளில் அவர்கள் சொல்லும் பேச்சுகள் பழங்கதையாகத் தானிருக்கிறது.

மற்ற பாகங்களிலுள்ளவர்களைப்பற்றி நாம் கவலைப்படவேண்டாமென்று நாம் அடிக்கடி எழுதியும், பேசியும் வருகிறோம். ஆகிலும் இது உபயோகமற்றதென்று நமக்கு அநேக படிப்பினைகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிடைத்திருக்கின்றன. மனிதர்கள் இன்னும் தங்களுக்குத் தேவையான பத்திரத்தைக் கோரிவிட்டு பிறருடைய க்ஷேமத்தை அலக்ஷியம் செய்துவிடுகிறார்கள். இது நடைமுறையில் உபயோகப்படாது என்று அவர்களுக்குப் புலப்படவில்லை. ஏனென்றால், உண்மையான பத்திரமென்பது பொதுஜன பத்திரம்தான்.

இந்த மனப்பான்மை இருந்துகொண்டேயிருக்கிறது. இதை நாம் நிறுத்திவிட்டாலும், நிலைமையின் மகத்தான உண்மைகளை உணராவிட்டாலும், மற்றவர்களும் அவற்றை அறியவேண்டுமென்று வற்புறுத்தாவிட்டாலும் நாம் ஒரு நாசத்திலிருந்து மற்றொரு நாசத்துக்குள் உழன்றுவிடும்படி நேரிடும். உண்மையாக, வெகு சீக்கிரத்தில் நாமும் வறுமைக்குட்படுவோம், பூமிக்குள் ஒளிகளில் வசிக்கவேண்டிவரும். நம்மைப்போல் வசித்துவரும் மற்ற தேச ஜனங்களுக்கு நாம் அவுட் வாணங்களைத் தயார் செய்து அனுப்பவேண்டியதாக இருக்கும். மற்ற தேசத்தவர்களும் நமக்கு தளவாடங்களை அனுப்பவேண்டிவரும்.

இந்த விஷயத்தில் முடிவு செய்துகொள்ளவேண்டியது உம்முடைய பொறுப்பு. உலகமளாவிய திட்டமும் கூட்டுறவுமுள்ள ஒரு சமூகத்தை அமைக்க நாம் ஒத்துழைக்கலாம் அல்லது அவ்விதம் செய்யாவிடில் பயித்தியம் பிடித்தவர்களுள்ள ஒரு நக்ஷத்திரத்தில் நாம் ஜீவித்துவரும்படியான காலம் வந்துவிடும்.

---



# மாண்டலேக்கான போரில் விமானப்படை உதவி.

## ஜப்பானியப் போக்குவரத்துகள் தாக்கப்படுகின்றன.

(விங்க் கமாண்டர் L. V. பிரேசர்)

---

ஜெர்மனியின் தலைநகரமான பெர்லின் முற்றுகைக்குத் தயார் செய்யப்படுகிறது. ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னாவுக்கு ஆபத்து உண்டாகிவிட்டது. ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்ட் விழுந்துவிட்டது. மற்ற ஐரோப்பிய தலைநகரங்களான ரோம், பாரிஸ், ப்ரெஸ்ஸல்ஸ் சுதந்திரம் பெற்றுவிட்டன. புகாரெஸ்டும், பெல்கிரேடும் விழுந்துவிட்டன. பஸிபிக்கில் மாக் ஆர்தரின் துருப்புகள் மணிலாவைக் கைப்பற்றிவிட்டன.

நேசதேசப்படைகள் எதிரிகளிடமிருந்து பெரிய நகரங்களை மீட்டுவருகிறார்கள். சமீப காலத்தில் பர்மாவின் தலைநகரமான மாண்டலேயும் விடுவிக்கப்படும் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். தேசத்தின் இருப்புப்பாதைகளின் மத்தியில் இராவதி நதிக்கரையிலுள்ள இந்த ராணுவ முக்கியத்துவமுள்ள நகரத்தை பிரிடிஷ் 14-வது சேனை வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வளைத்துவருகிறது. பிரிடிஷ் அமெரிக்க விமானப்படைகள் அவைகளுக்கு ஒத்தாசை செய்துவருகின்றன.

மாண்டலேக்கான போர் மற்ற போர் பிராந்தியங்களைவிட மாறுபாடானது. பிரிடிஷ் அமெரிக்க விமானிகள் தரைப்படைகளுக்கு ஒத்தாசை செய்வதன் மூலம் விமானப்படையின் அபாரமான சக்தியை வெளிப்படுத்திவருகிறார்கள். ஆகாயத்தில் ஜப்பானியப்படை தலைகாட்டாமல் செய்யப்பட்டுவருகிறது. சாத்தியமானபொழுது தரையிலிருக்கும் விமானங்கள் சுட்டுத்தள்ளப்படுகின்றன. எதிரியின் சர்பரா மார்க்கங்களும் பின்வாங்கும் ரஸ்தாக்களும் அடிக்கடி நொருக்கப்படுகின்றன. நேசதேசப்படைகளுக்கு சர்பராக்களும் உதவிப்படையும் விமானமூலம் அனுப்பப்படுகின்றன.

அரக்கான் வழியாக இந்தியாவுக்குள் ஜப்பானியர் முன்னேற முடியாதபொழுது அவர்கள் இம்பால், டிமாபூர் வழியாகத் தாக்கினார்கள். டிட்டிமிலிருந்த 17-வது இந்திய டிவிஷன் பின்வாங்கி இம்பால் சமவெளிக்குச் சென்றது. மற்ற இந்திய டிவிஷன்களும் ஒன்றுபட்டன. போக்குவரத்து விமானங்கள் மூலம் ஒரு டிவிஷன் பூராவும் வந்தது. இந்த டிவிஷன் ஒரு வாரத்துக்குமுன் அரக்கானில் போரை நடத்திவந்தது.

கழுதைகளும், போக்குவரத்து சாதனங்களும், பீரங்கிகளும், சாமான்களும் விமானமூலம் போர்முனைக்குவந்தன. 1944-ம் வருஷம் ஏப்ரல்மாதத்தில் அரக்கானிலிருந்த மற்றொரு டிவிஷன் அதனுடைய சகல முஸ்தீப்புகளுடனும் விமானமூலம் அஸ்ஸாமுக்குக் கொண்டுவரப்பட்டது. ஜப்பானிய விமானமே தென்படாத பருவகாலத்தில் நேசதேச விமானிகள் புயல்காற்றையும் பருவகால பெரும் மழையையும் பொருட்படுத்தாமல் சாமான்களைக் கொண்டுபோனார்கள். காயம்பட்டவர்களை அப்புறப்படுத்தினார்கள். கண்ட இடங்களிலெல்லாம் எதிரியைத் துன்புறுத்தினார்கள்.

இம்பால் சமவெளிக்குச் செல்லும் சகலவிதமான போக்குவரத்துகளையும் துணித்துவிடலாமென்று ஜப்பானியர்கள் எண்ணம் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு உணவுப்பஞ்சமும் முஸ்தீப்புகளின் குறைவும் ஏற்படும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதன்பின் பிரிடிஷ், இந்தியத் துருப்புகள் பதில் தாக்குதலைத் துவக்கி டிட்டிம் ரஸ்தா வழியாக மாண்டலேயை நோக்கி முன்னேறினார்கள்.

பர்மாவில் நேசதேச வெற்றிக்கு விமானமூலம் சர்பரா சப்ளைதான் என்பது வாஸ்தவம். அமெரிக்க, பிரிடிஷ் விமானிகள் ஓட்டும் டாகோடாஸ் இல்லாவிட்டால் பிரிடிஷ் துருப்புகள் இன்னும் மாண்டலேயிலிருந்து வெகுதூரத்தில் தானிருக்கமுடியும்.

ரஸ்தாக்கள் நன்றாக அமைக்கப்படாததும், ரஸ்தாக்களே இல்லாததும், அல்லது ரஸ்தாக்கள் எதிரி வசமுள்ள பிரதேசத்தின் வழியாக செல்லக்கூடியதுமான ஒரு காட்டில்

இருந்த மிகவும் சிக்கலான போக்குவரத்து பிரச்னையை விமானப்படை தீர்த்துவிட்டது. போக்குவரத்து மார்க்கங்களையும் விமானப்படை அழித்து வருவதினால்தான் ஜப்பானியர்களுக்கு மகத்தான சிரமங்கள் ஏற்படுகின்றன. பர்மாவிலுள்ள ஜப்பானின் பிடிப்பும் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ச்சிபெற்றுவருகிறது.

பிரிடிஷ், அமெரிக்க, ஸ்ட்ராடஜிக், டாக்டிகல் விமானப்படைகள் அநேக கோஷ்டிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ட்ராடஜிகல் விமானங்கள் வெகுதூரம் சென்று படை முகாம்கள், இருப்புப்பாதை நிலயங்கள், துறைமுகங்களின் பேரில் வெடிகுண்டுகளை வீசும் பொழுது டாக்டிகல் சண்டை விமானங்களும், பைடர் சண்டை விமானங்களும், அவுட் வாணங்களை வீசும் விமானங்களும், நதிப் போக்குவரத்துகளையும், ரஸ்தா, இருப்புப்பாதை பாலங்களையும், நொருக்கிவருகின்றன.

சில பகுதிகள் பாலங்களை நொருக்குவதிலும், சில இருப்புப் பாதைகளை பிளப்பதிலும், மற்றவைகள் நதிப் போக்குவரத்துகளை மூழ்கடிப்பதிலும், அல்லது நடமாட வொட்டாமல் தடுப்பதிலும் பயிற்சி பெற்றிருக்கின்றன.

சென்ற 12 மாதங்களில் பிரிடிஷ், அமெரிக்க விமானப்படைகள் 500 பாலங்களை அழித்திருக்கின்றன, அல்லது பழுதுபடுத்தியிருக்கின்றன. நீராவிக் கப்பல்கள் முதல் சாமான் படகுகள் உள்பட 4,500 நதி போக்குவரத்து சாதனங்களை மூழ்கடித்திருக்கின்றன அல்லது பழுதுபடுத்தியிருக்கின்றன. 300 ரயில்வே இஞ்சின்களை வெற்றிகரமாகத் தாக்கியிருக்கின்றன. 1,000 மோட்டார் வாஹனங்கள் பேரில் நேராகக் குண்டுகளை வீசியிருக்கின்றன.

ஜப்பானியர்கள் உதவிப் படைகளையும் சர்பராக்களையும் பாங்காக்கிலிருந்து ரெங்கூனுக்கு இருப்புப்பாதை மூலமாகவும் அங்கிருந்து மாண்டலேக்கு விமானத் தாக்குதலுக்குட்பட்ட மார்க்கங்கள் மூலமாகவும் மற்றும் இராவதி நதிவழியாகவும் கொண்டுவர முயற்சி செய்து வருகிறார்கள். போபைடர்களும், மிச்சல்களும், மஸ்கிடோக்களும், ஹரிகென்களும், இடைவிடாது தாக்கி; போக்குவரத்து மார்க்கங்களையும் இருப்புப்பாதைகளையும் நதியில் செல்லும் படகுகளையும் தாக்கிவருகின்றன.

போர்முனைக்குச் செல்லும் பொழுது தலைகீழாக உள்ள இஞ்ஜின்களையும், உடைபட்ட பாலங்களையும், தீக்கிரையான வண்டித்தொடர்களையும், நதிப் படகுகளின் தூள்களையும் கைவிடப்பட்ட வாஹனங்களையும்தான் ஜப்பானியத் துருப்புகள் காண்கிறார்கள். இருப்புப் பாதைகளை நொருக்குவதைக்கண்டு ஜப்பானியர்கள் தந்திரமாக நேசதேசத்தார்கள் தாக்கக் கூடிய இடங்களில் விலக்குப்பாதைகளைத் தயார் செய்திருக்கிறார்கள். தாக்குதல் ஏற்படும் பொழுது வண்டித்தொடர்கள் வெகு சீக்கிரமாக விலக்குப்பாதைகளுக்கு மாற்றிவிடப்படுகின்றன.

பாங்காக்கிலிருந்து ரெங்கூனுக்குவரும் இருப்புப்பாதையை பிரிடிஷ் அமெரிக்க லிபரேடர்களும் வெல்லிங்டன்களும் அடிக்கடி தாக்கிவருகின்றன. சமீபகாலத்தில் டாக்டிகல் விமானப் படை ரெங்கூனிலிருந்து மாண்டலேக்குப் போகும் இருப்புப் பாதையை பலமாகத் தாக்கியதினால் ஜப்பானியத் துருப்புகளை கால்நடையாக வெகுதூரம் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

முன்னேறும் படைகளுக்கு நேசதேசவிமானங்கள், முன்னணிக்கு 100 கஜ தூரம் முன்னதாகத் தாக்கியும், சில சமயங்களில் ஜப்பானியரின் பலஹீனமான விமானங்கள் புறப்படும் விமான தளங்களை நொருக்கியும் ஒத்தாசை செய்துவருகின்றன.

இதுவரையில் நேசதேச விமானப்படைகள் பர்மா பேரிலும் அதைச்சுற்றியுள்ள கடலிலும் தரையிலும் நடவடிக்கையை நடத்தியிருக்கின்றன. அவைகளுக்கு ஆகாய ஆதிக்கம் பூர்ணமாகவிருக்கிறது. மேலும் துருப்புகளுக்கு உபயோகமுள்ளவகையில் அவைகள் லக்ஷியங்களைத் தாக்கிவந்திருக்கின்றன. கிழக்கு விமானப்படையைச் சேர்ந்த கனமான வெடி விமானங்கள் ஸியாமில் கிரா பூசந்தியிலுள்ள ஸம்பானைத்தாக்க வெகுதூரம் பறந்து சென்றன. இருப்புப்பாதை கட்டடங்களுக்கு அவைகள் தீ வைத்தின. பாதைகளைப் பழுது படுத்தின, பாலத்தை நொருக்கின. வண்டித்தொடர்களை பாதையைவிட்டு விலகும்படி செய்தன.



# சேமிப்பு செய்து கடன் கொடுப்பதன்மூலம் வெற்றியை துரிதப்படுத்துங்கள்.

*கனம் ஸர். ஜெரிமி ரெயிஸ்மான்.*

கீழே குறிக்கப்பட்டிருக்கும் வேண்டுகோளில் இந்திய கவர்ன்மெண்டின் பொக்கிஷமெம்பராகிய ஸர் ஜெரிமி ரெயிஸ்மான் இந்தியப் பொது ஜனங்களுக்கு அந்தந்த வகுப்புக்குத் தகுதியான முதலீடுகளின் பல ரகங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். விசேஷமாக சிறிய அளவு சேமிப்பு செய்கிறவர்களுக்கென்று திட்டம் செய்யப்பட்டிருப்பதும் சௌகரியமான வட்டி அளவு உள்ளதுமான பன்னிரண்டு வருஷ தேசீய சேமிப்பு ஸர்ட்டிபிகேட்டைப் பற்றி அவர் வற்புறுத்தியிருக்கிறார். இந்த ஒலிபரப்பு பிரசங்கம் அகில இந்தியா தேசீய சேமிப்பு இருவார இயக்க ஆரம்பத்தில் ஆற்றப்பட்ட போதிலும் ஜனங்களிடையே மீதப்படுத்த வேண்டுமென்ற பழக்கம் உண்டாக்க வேண்டுமென்று ஸர் ஜெரிமி வேண்டுகோள் செய்துள்ளார்.. அவர் சொல்லுவதுபோல இந்தப் பழக்கம் தேசத்துக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நல்ல பலனளிக்கக்கூடியதாக இருக்கும்.

யுத்த காலத்தில் சேமிப்பு என்னும் விஷயத்தைப்பற்றி புதிய விவரங்களைச் சொல்லுவது சுலபமானதல்ல. ஆகிலும் இது தேசத்துக்கும் தனிப்பட்டவருக்கும் மிகவும் முக்கியத்வமுள்ளதாகையால் உங்களுக்குத் தெரிந்த விஷயங்களையே திருப்பிச் சொல்லத் துணிவு கொள்கிறேன்.

## நாம் ஏன் சேமித்துக் கடன் கொடுக்கவேண்டும்?

நம்முள் ஒவ்வொருவரும் யுத்தகால சேமிப்பை கடன் கொடுத்து உதவ வேண்டுமென்பதற்குத் தகுந்த அநேக காரணங்கள் இருக்கின்றன.

முதலாவதாக, சேமிப்பு செய்து அரசாங்கத்துக்குக் கடன் கொடுப்பதன் மூலம் யுத்த காலத்தைக் குறைக்கவும், வெற்றி கிடைக்கும் நாளை துரிதப்படுத்தவும் நீங்கள் ஒத்தாசை செய்கிறீர்கள். யுத்தத்துக்குப் பொருள்தான் மெத்த அவசியம். சாமான்களுக்கும், சேவைப் படைகளுக்கும் பொருள் கொடுக்கவேண்டிய நாடுகளில் பொருள் மனிதர்களைப் போலும் யுத்த தளவாடங்களைப் போலும் உபயோகமுள்ளதாகும்.

இரண்டாவது, சேமிப்பு செய்து கவர்ன்மெண்டுக்குக் கடன் கொடுப்பதின் மூலம் நீங்கள் தேசத்தின் பொருளாதார நிலைமையைப் போஷிக்கவும், எங்கு பார்த்தாலும் துயரத்தை உண்டுபண்ணக்கூடிய விலைவாசிகளின் உயர்வைத் தடுக்கவும் உதவி செய்கிறீர்கள். யுத்த காலத்தில் சாமானகள் குறைவுபடும்தான். ஒவ்வொருவரும் அவருடைய பூரா வருமானத்தையும் செலவழித்து வியாபார ஸ்தலங்களில் போட்டி போட்டால் விலைவாசிகளின் உயர்வு ஏற்படத்தான் ஆகும். தன்னடக்கமன்னியில் எவ்விதமான கட்டுப்பாடு திட்டமும் பயன்படாது. தன்னடக்கமென்றால் ஜனங்கள் அதிகச் செலவு செய்வதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அதாவது கூடுமான வரையில் அவர்கள் மீதப்படுத்த வேண்டுமென்றுதான் சொல்லுகிறோம்.

மூன்றாவதாக, சேமிப்பு செய்து, கவர்ன்மெண்டாருக்குக் கடன் கொடுப்பதினால் நீங்கள் உங்களுடைய உயர்வான சௌகரியத்தையும் தேடிக்கொள்ளுகிறீர்கள். நீங்கள் இப்பொழுது உங்களுடைய பொருளைச் சிறந்த வழியில் உபயோகிக்க முடியாததால் உங்களுடையவும் உங்களுடைய குடும்பத்தாரின் எதிர்கால அவசியத்துக்கும், சாமான்கள் மிகுதியாக இருக்கும் பொழுது நல்ல முறையில் உபயோகிப்பதற்கும், உங்களுக்கு வேண்டியவற்றைப் பொருக்கியெடுத்து உங்களுடைய பொருளுக்கு சிலாக்யமான மதிப்பைப் பெறுவதற்கும் நீங்கள் பொருளைச் சேமித்துவைப்பது நலம்.

நான்காவதாக, சேமிப்பு செய்து முதலீடுசெய்யும் பழக்கத்தைப் பெறுவதினால் உங்களுடைய எதிர்காலத்துக்கு நீங்கள் திட்டம் போட ஆரம்பிப்பதுடன் இந்தியாவின் எதிர்கால

க்ஷேமத்திற்கும் அஸ்திவாரம் போட உதவி செய்து வருகிறீர்கள். இப்பொழுது ஜனங்களின மனதில் எதிர்காலம் சுபிக்ஷமாக இருக்குமென்ற நம்பிக்கை ததும்புகிறது. திட்டம், சீர்திருத்தம், அபிவிருத்தி என்ற திட்டங்கள் எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன. ஏதோ ஒரு சமயத்திலாவது இந்தியாவில் மேன்மையான வாழ்க்கை நிலவுமென்று நாம் எதிர்பார்க்கலாம். இந்த எண்ணம் பூர்த்தியாகுவதற்கு, நான் சொன்னபடி தன்னடக்க முறையை எல்லோரும் பெரும்பாலும் கையாளவேண்டும்.

உன்னுடைய சுய நலத்தை உத்தேசித்தும் உன்னுடைய சகோதரர்களின் நன்மையை உத்தேசித்தும் மீதப்படுத்துவதற்கும் செலவிடுவதற்கும் தகுதியான காலங்களிருக்கின்றன. இன்று தனிப்பட்டவர்களின் செலவை அதமபக்ஷமாகக் குறைத்துக்கொண்டு உத்தமபக்ஷமான ஐச்வர்யங்களை யுத்தத்தை வெற்றிகரமாக நடத்த ஈடுபடுத்தவும் மெத்த அவசியமிருக்கிறது. ஆகிலும் வேலையிலீடுபட்டவர்களுக்கு ஊதியம் கொடுக்கவும் கடுமையான நடவடிக்கைக்குப்பின் ஏற்படும் கெடுதல்களைத் தடுக்கவும் தனிப்பட்டவர்கள் பொருளைச் செலவிடவேண்டிய காலமும் வரும். வியாபாரத்தில் உயர்வும் குறைவும் மாறி மாறி வரும் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். உயர்வை சமப்படுத்துவதும் குறைவை சரிப்படுத்துவதும்தான் ஜனங்களுக்கு உத்சாகத்தைத் தரும். இதை நிறைவேற்ற வேண்டுமானால் சுபிக்ஷமாகயிருக்கும் காலத்தில் செலவைக் கட்டுப்படுத்தவேண்டும். துர்பிக்ஷமாகயிருக்கும் பொழுது செலவை அதிகரிக்கவேண்டும். சேமிப்பு, செலவழிப்பு என்ற நல்ல பழக்க வழக்கங்களை ஜனங்கள் அடைந்துவிட்டால் அவர்கள் சிலாக்கியமான பொதுமக்களாகி விடுகிறார்கள். தங்களுடைய சந்தோஷத்தையும் ஜன சமூகத்தினுடையவும் க்ஷேமத்தை அவர்கள் வளர்ச்சி செய்கிறார்கள்.

## சேமிக்கும் பழக்கத்தை புரோத்சாகம் செய்யவேண்டும்.

நான் மேலே சொன்ன விஷயங்கள் நீங்கள் அறிந்தவைகளே. ஆனாலும் அநேகர்கள் இன்னும் அதன் முக்கியத்வத்தை அறிந்துகொள்ளவில்லை. விஷயமறிந்தவர்கள் ஜன சமூகத்தில் விஷயமறியாதவர்களுக்கு மீதப்படுத்தும் பழக்கத்தை உண்டுபண்ண ஒத்தாசை செய்ய முன்வரவேண்டும். இதைவிட உயர்வான முயற்சி கிடையாது. சிறிய சேமிப்புத் திட்டம் தேசத்திற்கும் தேச மக்களுக்கும் க்ஷேமத்தைத் தரக்கூடியது. இதற்குமுன் எதிர் பார்த்ததற்கு மேலாகவே அதிகமாக பொருளை மீதப்படுத்த இந்தியா சக்தியுள்ளதென்று அது வெளிப்படுத்தியிருக்கிறது. ஆரம்ப காலத்திலேயே இந்த திருப்திகரமான விளைவுகள் ஏற்பட்டிருந்தால் இந்தியாவில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் மிகவும் குறைவுபட்டிருக்கும்.

## பொருளாதார ஸ்தைரியத்தை நிலைநாட்டவேண்டிய அவசியம்.

வெற்றி என்ற ரஸ்தாவின் இறுதிக் கட்டத்தை நாம் அடைந்துவிட்ட போதிலும் வெற்றி எவ்வளவு காலம் கழித்து கிடைக்குமென்று நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. ஆகிலும், யுத்த உற்பத்திகளைக் குறைவு படாமல் போஷிப்பதற்கும் பொருளாதார ஸ்தைரியத்தை நிலைநாட்டுவதற்கும் நமது முயற்ச்சி தளரக்கூடாது. அதாவது சுயநலத்தை உத்தேசித்தும் தேச நலத்தை உத்தேசித்தும் ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்தவர்களும் உத்தமபக்ஷமான பொருளை மீதப்படுத்தி அவற்றை கவர்ன்மெண்டாரிடம் முதலீடு செய்யவேண்டும். சுயநலத்தை உத்தேசித்தும் பொது ஜன நன்மையை உத்தேசித்தும் இந்த முதலீடு சிலாக்யமானதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஏனென்றால், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நாடுகளுடனாவது அல்லது உலகத்திலுள்ள நடு நிலைமை வகிக்கும் நாடுகளுடனாவது ஒப்பிட்டால் இந்தியாவின் பொருளாதார யோக்யப் பொறுப்பும் கண்யமும் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கிறது.

## பல்வேறு முதலீடுகள்.

கவர்ன்மெண்டார் ஒவ்வொரு வகுப்புக்கும் தகுந்த பிரகாரம் பல்வேறு முதலீடு முறைகளை திட்டம் செய்திருக்கிறார்கள். முக்கியமான 3 சத விகித வெற்றிக் கடனுடன் (இது எல்லா பொக்கிஷங்களிலும் ரிஸர்வ், இம்பீரியில் பாங்கிகளிலும் ஏராளமான விற்பனை யாகுகிறது) ரிசர்வ் பாங்கி மூலமாக விற்கப்படும் அநேக, சொல்பகால, நீண்டகால கடன்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. வட்டியில்லாத பரிசுப் பத்திரங்களைப் பற்றிய பிரசுரங்களையும்



நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். அவைகளுக்கு ஆறுமாதங்களுக்கு ஒருதரம் நல்ல பரிசுகள் கிடைக்கும். இவைகளைத் தவிர பல்வேறு போஸ்ட் ஆபீஸ் ஸர்ட்டிபிகேட்டுகளும், டிபாசிட் தொகைகளுக்கு 2 சத விகிதம் வட்டி கொடுக்கும் சேவிங்ஸ் பாங்கியும், 2½ சத விகிதம் வட்டி கொடுக்கிறதும் யுத்தம் முடிந்த ஒரு வருஷத்துக்குப்பின் திரும்பி வாங்கிக்கொள்ளக்கூடியதுமான தற்காப்பு சேமிப்பு பாங்கிகளும், சாதாரணமான பொருமான பத்திரங்களும் 12 வருஷ தேசீய சேமிப்பு ஸர்ட்டிபிகேட்டுகளும் இருந்து வருகின்றன.

## சிறிய சேமிப்பாளருக்கு நல்ல முதலீடு.

கடைசியாகச் சொல்லப்பட்ட திட்டம் சொல்பமாக மீதப்படுத்துகிறவருக்கும் உபயோகமுள்ளது. அதற்கு சௌகரியமான வட்டிவிகிதமும் கொடுக்கப்படுகிறது. சமீப காலத்தில் பிரசுரிக்கப்பட்ட விதிகள் பொருளை முதலீடு செய்வதற்கும் ஸர்டிபிகேட்டுகளை பணமாக்குவதற்கும் சுலபமான முறையை கற்பித்திருக்கின்றன. மேலும் அதன் மூலம் முதலீடு செய்கிறவர்களுக்குப் புதிய சுதந்திரங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. கீழ்தரமான மதிப்புள்ள பத்திரம் ரூ 5 தான். சிறிய சேமிப்பு செய்கிறவர் நான்கு, எட்டு, அல்லது 16 அணுக்கள் பொருமானமுள்ள ஸ்டாம்புகளை வாங்கி, இறுதியில் பத்திரங்களின் உசிதகாலம் வரும் பொழுது 50 சத விகிதம் வருமானத்தைத் தரக்கூடிய ஸர்ட்டிபிகேட்டுகளாக ஸ்டாம்புகளை மாற்றிக்கொள்ளலாம். அந்த திட்டப்படி அதிகாரமுள்ள ஏஜெண்டுகளை நியமிக்கலாம். ஏஜெண்டுகள் நாடுகளிலும், நகரத்திலுமுள்ளவர்களைக் கண்டு, அவர் கொடுக்கும் பொருளை வசூலித்து, அவருக்குப் பதிலாக ஸர்ட்டிபிகேட்டுகளை வாங்கி, அவற்றை பொருளிட்டியவரிடம் கொடுக்கவேண்டும். இந்த திட்டத்தில் முக்கியமான நகரங்களில் சேமிப்பு நிலயங்களை அமைப்பதற்கும் இடமுண்டு.

## பொதுஜன சேவைக்குத் தகுந்த சந்தர்ப்பம்.

பொதுஜன சேவை செய்ய இதில் தகுந்த சந்தர்ப்பமிருக்கிறது. சேமிப்பு இயக்கத்தின் உபயோகத்தை அறியும் அறிவாளிகள் கவர்ன்மெண்டுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் ஒத்தாசை செய்ய முன்வரலாம். இது சம்பந்தமாக நான் ஒரு வேண்டுகோளை விடுக்க உத்தேசிக்கிறேன். அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளுக்கு விற்பனைக்குத் தக்கவாறு கமிஷன் கொடுக்கப்படுகிறதென்றாலும், அவர்கள் தன்னிச்சையாக யாதொரு பிரயோஜனத்தையும் எதிர்பாராமலே சேவை செய்து வரலாம். சிறிய சேமிப்புத் திட்டத்தில் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு சராசரி 3½ அணு வீதம் மீதப்படுத்தவேண்டுமென்பது லக்ஷியம். தற்பொழுதுள்ள நிலைமையிலும் வருமான அளவிலும் இந்த லக்ஷியத்தை அடைவதில் யாதொரு சிரமமும் ஏற்படாதென்று தோன்றுகிறது. அது பொருளாதாரத்தின் ஸ்தைரியத்தை நிலைநாட்டுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

## இடைவிடாத முயற்சி அவசியம்.

கடைசியாக ஒரு விஷயத்தை வற்புறுத்திச் சொல்ல முயலுகிறேன். இப்பொழுது தேவைப் படுவது தூக்குத் தூக்கான தனிப்பட்டவர்களின் முயற்சியல்ல. பொது ஜனங்கள் எல்லோரும் கூடுமானவரையில் சேமிப்பு செய்யும் பழக்கத்தை அனுஷ்டிக்க ஆரம்பிக்க வேண்டும். இந்த நிருதியான பழக்கம் தேசத்திற்கும் தனிப்பட்டவர்களுக்கும் நல்ல பலனை அளிக்கக்கூடும். புத்திசாலித்தனமும் தன்னம்பிக்கையுள்ள அநேக பொது மக்கள் நாட்டில் தோன்றுவார்கள். அவர்கள் நாட்டிலிருப்பதினால் வாழ்க்கை முறையில் பொறுப்பும் சமத்வமும் உத்தரவாதம் செய்யப்படும். எதிர் காலத்தில் இந்தியாவின் போக்கு எப்படி இருந்தாலும் தங்களுக்கான க்ஷேமத்திற்கு திட்டம் போட்டதும் தங்களுடையவும் தங்கள் தேசத்தினுடையவும் எதிர்கால க்ஷேமத்தைக் கோரியவும் ஆன சிறிய சேமிப்புச் செய்தவர்கள் இருப்பார்களென்பது தேசத்தின் மகத்தான வலிமைக்கு சிறந்த ஆதாரமாகவிருக்கும். இந்த உண்மை மற்ற நாடுகளில் ருஜுவாகிவிட்டது. இந்தியாவிலும் அவ்விதமே பலனேற்படுமென்பதில் சந்தேகமில்லை.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 237 (1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24-2-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 28-2-45 | மலையடிப்பட்டி | ... மாலை 7.00 |
| 25-2-45 | கீரனூர் | ... „ 7.00 | „ | கிள்ளுக்கோட்டை | ... „ 7.30 |
| „ | நாஞ்சூர் | ... „ 7.30 | 1-3-45 | அரிமளம் | ... „ 7.00 |
| 26-2-45 | குடுமியாமலை | ... „ 7.00 | „ | ராயவரம் | ... „ 7.30 |
| „ | பரம்பூர் | ... „ 7.30 | 2-3-45 | பொ. புதுப்பட்டி | ... „ 7.00 |
| 27-1-45 | பெருங்களூர் | ... „ 7.00 | „ | வேந்தம்பட்டி | ... „ 7.30 |
| „ | ஆதனக்கோட்டை | ... „ 7.30 | | | |

### பிரஸங்கம் 238. (2-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3-3-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 7-3-45 | பனையப்பட்டி | ... மாலை 7.00 |
| 4-3-45 | சூரக்காடு | ... „ 7.00 | „ | ராங்கியம் | ... „ 7.30 |
| „ | கோட்டைக்காடு | ... „ 7.30 | 8-3-45 | அண்டக்குளம் | ... „ 7.00 |
| 5-3-45 | மலக்குடிப்பட்டி | ... „ 7.00 | „ | கிள்ளனூர் | ... „ 7.30 |
| „ | கோனுபட்டு | ... „ 7.30 | 9-3-45 | கொடும்பாளூர் | ... „ 7.00 |
| 6-3-45 | குழிபிறை | ... „ 7.00 | „ | விராலூர் | ... „ 7.30 |
| „ | செவலூர் | ... „ 7.30 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 24—2—45 | பொன்னமராவதி. | 3—3—45 | வெட்டம்விடுதி. |
| 25—2—45 | தீத்தான்விடுதி. | 4—3—45 | மருதன்கோன்விடுதி. |
| 27—2—45 | கல்குடி. | 6—3—45 | பேராம்பூர். |
| 1—3—45 | குழிபிறை. | 8—3—45 | கிழாநிலை. |
| 2—3—45 | புதுக்கோட்டை. | 9—3—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—25-2-45.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் மார்ச்சுமீ 3உ [ந. 238

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXXXVIII.

## பெர்லின்—மதிக்கமுடியாத நகரம்.

### ஜெர்மனியில் பெர்லினின் ஒப்பற்ற நிலைமை.

ஸெபாஸ்டியன் ஹாப்னர்.

(பிக்சர் போஸ்டு).

தலைநகரத்தை இழப்பதென்பது ஒரு தேசத்தின் யுத்த சக்திக்குக் குந்தகமானது, ஏனெனில் முதலாவதாக நிர்வாக அமைப்பு தட்டுக்கெட்டுப் போய்விடும். இரண்டாவதாக அதைச் சேர்ந்த மாகாணங்களில் அதன் மூலம் அதிக உணர்ச்சி ஏற்படும்.

இந்த இரண்டு காரணங்களும் ஜெர்மனிக்கும் பெர்லினுக்கும் நிச்சயமாகப் பொருந்தும். பெர்லின் வீழ்ச்சி பெற்றால் யுத்தத்தில் பெரிய மாறுதல் ஏற்படும். ஏனெனில் ஜெர்மனியின் பலம் குன்றிவிடுமென்பதுடன் ஜெர்மனியும் அக்கக்காகப் பிரிக்கப்பட்டுவிடும். ஜெர்மனியில் பெர்லினின் நிலைமை ஒப்பற்றது. அதை சுலபமாக மதித்துவிடமுடியாது. பிரிட்டனுக்கு லண்டனைப்போலும் பிரான்ஸுக்கு பாரிஸைப்போலும் பெர்லின் அமைக்கமுடியாத நிராக்ஷேபணையான தேசிய மத்யஸ்தலமல்ல. சதாகாலமும் சிதைவுற்று, ஒற்றுமை வளர்ச்சி பெறாத சரித்திரமுள்ள ஜெர்மன் சரித்திரப்போக்கில் ஜெர்மனியில் ஒரு நகரமும் முதன்மையாக வரவில்லை. சரித்திரப் புகழில் ஜெர்மனியிலுள்ள பிராசீனமான குடியரசு நகரங்கள் பெர்லினைவிட உயர்வானவைகள்.

ஜெர்மனியில் நிர்வாகத்தை நடத்த ஆறு நகரங்கள் தலைநகரமாகயிருக்க வசதியுள்ளதாக இருக்கின்றன. மற்ற நாடுகளைப்போல உத்தியோக முறையில் தலைநகரம் என்று சொல்லப்படுவதைப்பொருத்து நிர்வாகம் நடைபெறவில்லை. மேலும் பெர்லினிலிருந்து ஜெர்மனி எவ்வளவு தூரம் ஆளப்படுகிறதென்பதும் தெளிவுபடவில்லை.

யுத்தத்துக்கு முன்னும் ஹிட்லரின் தலைமை காரியாலயம் பெர்கஸ்காடனில் அமைக்கப்பட்டிருந்தது. இறுதியில் அங்கு வசிக்கலாமென்று அவன் எண்ணியிருந்தான் போலும். யுத்த ஆரம்பத்திலிருந்து அவனுடைய சலனத் தலைமைக் காரியாலயத்திலிருந்து அவன் ஆக்ஷி புரிந்திருக்கிறான். அபூர்வமாகத்தான் பெர்லினுக்கு விஜயம் செய்திருக்கிறான். ஹிம்லருக்கும் சலனம் செய்யும் தலைமைக் காரியாலயமாக இருந்து வருகிறது. தலைநகரில் வசிப்பவர் ஸீனியர் மந்திரியான கோயபல்ஸ்தான்.

ஆகையால் பெர்லின் விழுந்து விட்டால் மத்திய நிர்வாகம் நிலைகுலைந்துவிடும் என்று எண்ணுவதற்கில்லை. தெற்கு, மேற்கு ஜெர்மனியிலுள்ள பொது ஜனங்களின் மனஉறுதி

எவ்விதமும் பாதிக்கப்படுமென்று எண்ணுவதற்கில்லை. பெர்லினின் நஷ்டம் ராணுவத் தகவல்களில் மிகவும் அக்கரமானதென்று ஜனங்கள் நினைக்கக்கூடும். ஜெர்மனியின் மத்திய நிலயமும் எல்லா விஷயங்களுக்கும் சக்கரத்தின் குடம் போன்றதுமான நகரம் வீழ்ச்சிபெற்ற பின் இந்த உணர்ச்சியும் ஏற்படாது.

வியன்னாவை மதிக்காமல் மூனிச், பிராங்பர்ட்போன்ற நகரங்களில் பீதியுடன் ஓரளவு சந்தோஷமும் கலந்திருந்ததென்றால் அதில் ஒரு ஆச்சரியமுமில்லை. இந்த நகரங்களும், இரண்டு தலைமுறையாக பெர்லின் அநியாயமாக முன்னேற்றமடைந்து விட்டதென்று நினைத்து வருகின்றன.

1933-ம் வருஷத்தில் ஜெர்மனியில் பேச்சு உரிமையை ரத்து செய்யுமுன் கடைசியாக சொற்பொழிவாற்றிய பவேரியா மந்திரி பின்வருமாறு சொன்னார். "பாம்பர்க் மாதாக் கோவில் கட்டப்பட்டபொழுது பெர்லின் வாசிகள் உயிர் பத்த ஆரம்பம் செய்து வந்தார்கள்." இது சரித்திர பூர்வமாக அபத்தமாகயிருந்தபோதிலும் பெர்லினைப்பற்றியும் பெர்லின் ஜனங்களைப்பற்றியும் பவேரியா ஜனங்களுக்குள்ள வெறுப்பை அது வெளிப்படுத்துகிறது. இந்த வெறுப்புகளை சமீபகாலத்திற்குமுன் பகிரங்கமாக வெளிவிட்ட ஜனங்கள் பெர்லின் வீழ்ச்சி பெற்றுவிட்டதென்பதைச் செவியுற்று மனோதைரியத்தை இழந்துவிடமாட்டார்கள்.

ஆகிலும் பெர்லின் வாசிகளை நாம் கவனிப்போம். அங்கு ஜனத்தொகை அதிகம். பெர்லினிலுள்ள நிர்வாக ஸ்தாபனங்களை சுலபமாக வேறு இடங்களுக்குக் கொண்டு போகலாம். தேசீய மத்திய ஸ்தலமென்பதையும் வேறு இடத்தில் அமைத்துவிடலாம். ஒரு அம்சத்தில் அதாவது, அதன் விஸ்தாரத்தில் அதற்கு ஒன்றும் இணையாக இராது. மற்றொன்று அதன் சுறுசுறுப்புள்ள ஜனங்கள்.

ஜெர்மனியில் பெர்லின் மிகவும் பெரிய நகரம். அநேக வருஷங்களாக அது அபிவிருத்தியடைந்து வருகிறது. அதிலுள்ள ஏராளமான சுறுசுறுப்புள்ள நகரவாசிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தி தாத்காலிகமாகவேனும் வேறு இத்தகைய மற்றொரு இடத்தில் சுலபமாக குடியேற்றிவிடமுடியாது. அந்த ஜனங்கள் ஒன்றுபட்டிருக்கும் வரையில் ஹிட்லரின ஜெர்மனியிலிருந்து பெர்லின் துணிக்கப்பட்டுவிட்டாலும் தன்னந்தனியாக அது சக்திவாய்ந்த ராஜீய சத்தியாக இருந்துவரக்கூடும். வடக்கு ஜெர்மனியிலுள்ள அநேக பிராந்தியங்கள் பெர்லினுடன் சேர்ந்துக்கொள்ளத்தான்வேண்டும். நாஸிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட பெர்லினுள்ள புதிய ராஜீய சக்தி எவ்வகையில் ஈடுபடுமென்பதை ஒருவரும் ஜோஸ்யம் சொல்லமுடியாது. அது நல்லத்துக்காக வேலை செய்யும் சக்தியாக இருக்குமென்று நான் நிச்சயமாக நினைக்கிறேன். பெர்லின் அழுக்கான நகரமென்றும் பெர்லின ஜனங்கள் நேசிக்கத் தகுதியற்றவர்களென்றும் எனக்குத் தெரியும். ஆனால் பெர்லினும் ஹாம்பர்க்கும் ஜெர்மனியில் மிகவும் குறைவாக நாஸிதத்வத்துக்குட்பட்டவை யென்பதும் உண்மைதான். 1933-ம் வருஷம் முடிய இந்த உண்மை தேருதல் முடிவிலிருந்து வெளிப்படும். அதற்குப் பின் புள்ளிவிவரங்களைக்கொண்டு இதை ருஜூச் செய்யமுடியவில்லை. அது வெளிப்படையான ரகசிய மாகிவிட்டது. ஜெர்மன் யூதர்கள் வெளியேற முடியாவிட்டால் பெர்லினுக்குள் குடியேறினார்கள்.

இது முக்கியத்வமற்றதென்று நாம் அலக்ஷியம் செய்வதற்கில்லை. 1920-ம் வருஷம் வரையில் பெர்லினில் சிவப்பு வர்ணமுள்ளவர்கள் இருந்தார்களென்று சொல்லுவதினால் இந்த நடவடிக்கை ஏற்பட்டதென்றும் நான் நினைக்கவில்லை. ஜெர்மனியிலுள்ள மற்ற நகரவாசிகள் 1930-ம் வருஷத்திற்குள் பழுப்புவர்ணமுள்ளவர்களாக மாறிவிட்டார்கள். நாஸிகளின் அபாரமான கொள்கைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள எவ்விதக்கஷ்டிப்பற்றும் பிரயோஜனப்படவில்லை.

ஆகிலும் பெர்லினின் ஜனசமூக வாழ்கையில் சில அம்சங்கள் இருந்துவந்தன. பகுத்தறிவை அழிக்கக்கூடிய பரிகாச பாவமும் சந்தேகமும் அங்கு காணப்பட்டன. அவைகள் ஜெர்மன் பாஷையின் தோரணையைப் பாதித்துவிட்டன. இந்த உணர்ச்சிகள் நாஸிகளின் அளவுகடந்த கூடமதத்தை ஒருவாறு சமனப்படுத்தி வந்தன. இந்த பரிகாச பாவமும் சந்தேகமும்தான் பெர்லின் மக்களை ஜெர்மனியிலும் ஜெர்மனிக்கு வெளியிலும் செல்வாக்கு அற்றவர்களாகச் செய்து வந்தது. இனிமேலும் அந்த உணர்ச்சிகள் அவ்விதமேதான் செய்து வரும்.

இந்த ஆபாசமான, கட்டுப்பாடற்ற, சுறுசுறுப்புள்ள பெர்லின், கட்டடங்களும் மற்ற அமிதமான விஷயங்களுமுள்ள பெர்லின்—பூராவும் தீங்கு மார்க்கத்திலிறங்கிவிட்டதா? சில சமயங்களில் அதிலுள்ள ஜனங்கள் பெர்லினின் சுறுசுறுப்பான, ருட்பமான சக்திக்கு வருங்காலத்தில் க்ஷேமம் ஏற்படுமென்று நினைத்தார்கள். அதாவது ஜெர்மனியில் இது வரையில் இல்லாதபடி அதிக சுதந்திரமும், விரிவானதும், பிரகாசமானதும் உல்லாசமுள்ளதுமான



பெர்லின் தோன்றுமென்று அவர்கள் நினைத்தார்கள். இவ்விதமாக சுறுசுறுப்பான, பலவகைப்பட்ட ஜனங்களுள்ள, புத்தி சக்தி வாய்ந்த நகரம் சாம்பல் வர்ணமுள்ள படைகள் ஆதிக்கம் பெற்ற உற்சாகமற்ற ஜெர்மன் நிர்வாகத்துடன் ஏதாவது சம்பந்தப்பட்டிருந்ததா? நியூயார்க், பாரிஸ், லண்டன், மாஸ்கோ போல அவைகளின் பழக்கவழக்கங்களை ஏற்றுக் கொள்ளும், குறைகூறும், அல்லது ஒன்று படுத்தும் சர்வதேச பிரசித்திபெற்ற நகரமாக அது இருந்தது.

பெர்லின் சில சமயங்களில் வரப்போகும் யுத்தத்தில் முக்கியமான நகரமாக இருக்குமென்று தோன்றிற்று. 20-வது நூற்றாண்டில் ஆரம்ப வருஷங்களில் அதன் தன் நம்பிக்கையும் அதன் சக்தியும், அதன் முன்னேற்றமடையும் சௌலப்யமும் யுத்தத்தையும், பசிப்பிணியையும் தோல்வியையும், துயரங்களையும் இகழ்ச்சிகளையும் அழித்துவிட்டன. அப்பொழுது பெர்லின் வாலிப பருவத்திலிருந்து வந்ததா அல்லது பெருந்தீயின் அந்தியகால ஜ்வாலையை ஒத்து பிரகாசித்ததா? இந்தக் கேள்விகளுக்கு நாம் இன்றும் பதிலுரைக்க முடியாது.

பெர்லினின் ஜோதி மங்கிவிட்டது. பெர்லினின் ஸ்திதியை அறிந்த நாம் அப்பொழுது இருந்த பெர்லினையும் இன்று பத்திரிகைகளில் தலையங்கத்துடன் வரும் பெர்லினையும் சுலபமாக ஒப்பிட முடியாது.

மிலியன்கள் கணக்கான அகதிகள் பாழாகிப் போன கட்டங்களில் வசித்து, பனியால் விரைத்தும் வறுமைக்குட்பட்டும் அங்கே இருந்து வருகிறார்கள். மதிக்கமுடியாத இந்த நகரத்துக்கு பெருமை பெறக்கூடிய தருணம் ஏற்படலாம். ஹிட்லரின் ஆக்ஷியிலிருந்து விடுவிக்கப்படும் நகரங்களில் முதலாவதான பெரிய நகரமாக அது இருக்கலாம். அல்லது திருத்தியமைக்கமுடியாத வண்ணம் அது ஒரு ஓரே துச்சொப்பனத்தில் மூழ்கி விடலாம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 20—2—45 (செவ்வாய்க்கிழமை.) | அமெரிக்க மாரீன் படைகள் ஐவோஜிமாவிலுள்ள விமான தளத்தைப் பிடித்தன. |
| 21—2—45 (புதன்கிழமை). | அமெரிக்கர்கள் ஸார்நதியிலுள்ள ஸார்பிரக்குக்குள் நுழைந்தார்கள். |
| | சீனப்படைகள் லாஷியோவுக்கு வடக்கிலுள்ள ஹெஸன்வியைப் பிடித்தன. |
| 22—2—45 (வியாழக்கிழமை). | ருஷ்யப் படைகள் நியஸி நதியை அடைந்தன. அமெரிக்கர்கள் ஐவோஜிமாவின் பாதி பாகத்தை ஆக்கிரமித்துவிட்டார்கள். |
| 23—2—45 (வெள்ளிக்கிழமை). | துருக்கி அச்சுநாடுகளுடன் போர் தொடுத்தது. ருஷ்யர்கள் போலந்திலுள்ள போஸ்னனை முற்றிலும் கைப்பற்றினார்கள். |
| 24—2—45 (சனிக்கிழமை). | எகிப்து அச்சுநாடுகளுடன் போர் தொடுத்தது. நேசதேசப் படைகள் ரோயர் நதியைத் தாண்டி ரைன்லாந்துக்குள் நுழைந்தன. |
| 25—2—45 (ஞாயிற்றுக்கிழமை). | அமெரிக்கர்கள் ரேனைக் கைப்பற்றினார்கள். ருஷ்யர்கள் பெர்லினுக்குப்போகும் ரஸ்தாவிலுள்ள மற்ற மூன்று போக்குவரத்து மார்க்கங்களைக் கைப்பற்றினார்கள். |
| 26—2—45 (திங்கட்கிழமை). | நேசதேசப் படைகள் மேற்குப் போர் முனையில் பிளாட்ஸ்ஹீமைப் பிடித்தன. |
| | நேசதேசப் படைகள் பர்மாவில் பாகானைப் பிடித்தன. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை :—**

(1) ஜெர்மானியர்கள் கால்கார்—எம்மரிக்—ச்ளிவ் முக்கோணத்தில் அணைகளை உடைத்துவிட்டு வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திவிட்டார்கள். கோக் கால்கார் ரஸ்தாவில் பலமாக எதிர்த்துப் போராடுகிறார்கள். இங்குள்ள பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரியின் மூன்றுவது சேனையிலுள்ள பிரிடிஷ், கனடியத் துருப்புகளுக்கு கிரோரர் சேனாதிபதி. அவர் வெள்ளத்தின் வழியே முன்னேறுவதால் அவருக்கு அட்மிரல் என்ற பதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த சேனை ரோயர் நதிக்கு எதிர்த்தார்ப்போலுள்ள ஸீக்பிரட் அரணுக்கும் மாஸ் நதிக்கும் ரைன் நதிக்கும் மத்தியிலும் உறுதியுடன் முன்னேறிவருகிறது. அது ஸீக்பிரட் தற்காப்புகளின் கடைசி அரணை ஹாக்வால்ட் அரணை ஊடுருவிச்சென்றுவிட்டது. அதற்கு முன் ரைன் நதி சமவெளியிருக்கிறது.

இந்த வாரத்தில் கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. மாயிலாந்து, ஹௌப், டான்கென், ரோவர்ஹாப். கோக்கும் கால்காரும் சுத்திசெய்யப்பட்டன.

(2) ஜெனரல் ஸிம்ஸனிடமுள்ள அமெரிக்க 9-வது சேனை, அதில் "ஷாக் துருப்புகளிருக்கின்றன". மறுபடியும் தோன்றிவிட்டது. யுத்த யுத்திரத்தை உத்தேசித்து அதன் நடவடிக்கைகள் வெளியிடப்படவில்லை. அது கொலோன் சமவெளி வழியாக ரைட், டஸ்ஸல்டார்புக்குத் தென்மேற்கிலுள்ள மஞ்சன் கிளாட் பாக்கை நோக்கி முன்னேறுகிறதென்றும், தனியாகவே, அல்லது அமெரிக்க 1-வது சேனையுடனோ அது கீழ்கண்ட இடங்களையும் பிடித்ததென்றும் தெரியவருகிறது. செல்கார்ஸ்டார்ப், ஸ்டீன்ஸ்ட்ராஸ், லீக், ஹோலன், லவனிக், காட்சம், பாஸ்லார், பால், ஹோம்னர்க், ஓபர்பீர்சிட், ரிங்குசீட், நாயர்பர்கி, சின்ஸ்பெல்ட், ரூரிக், கினிம்பாக், கேவ்னிக், எர்க்ளென்ஸ்.

(3) அமெரிக்க 1-வது சேனையும் அமெரிக்க 3-வது சேனையும் பிப்ரவரிமாதம் 22-ம் தேதியன்று ஆகனுக்குக் கிழக்கில் புதிய தாக்குதலைத் துவக்கின. ரோயர் நதியைத் தாண்டிய பின் 1-வது சேனை கீழ்கண்ட இடங்களைப்பிடித்தது. கோப்ஷீட், லாபித், ஹோல்ஸ்சென், கிராண்ட்சேர், ஹெயில்பாக், ஆமார்டிங்கன், ஜக்கன், ப்ரிஷ்சிட், ஆப்ஸர், ஓபர்கெச்ஸர், ரேன், பிளாட்ஸ்ஹிம், ஆமெல்ன். அதன்பின் 1-வது சேனை ஸிண்டார்பை அடைந்து அதன்பின் 5 மைல்களுக்கு அப்பாலிலுள்ள தலைநகரமான கொலோன் பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்துவருகிறது.

(4) அமெரிக்க 3-வது சேனை ஸார்பிரக்குக்குள் நுழைந்த பின் ஸார் நதியையும் ப்ரம் நதியையும் தாண்டிவிட்டது. வியாண்டன், டாஸ்பர்க், ஹாம், டாபன், ப்ருடன்பர்க், ஆர்ஸ்சோல்ஸ், ஷோயன்பாக், பிட்டர்ஸ்டோர்ட், பிடிபட்ட பின் அந்த சேனை ஸார் நதிக்குக் கிழக்கிலும் நிம்ஸ் நதிக்கு மேற்கிலுமுள்ள பிட்பர்க் என்றும் (7) ரஸ்தாக்கள் சேரும் ரஸ்தாவுக்குள் நுழைந்தது.

(5) அமெரிக்க 7-வது சேனை பிரெஞ்சு எல்லைச் சரக நகரங்களான ஸ்பிசெரன், பார்பாக் முதலிய நகரங்களைச் சுத்தி செய்தது.

**கிழக்குப் போர்முனை :—**

(1) **கிழக்கு பிரஷ்யாவில்** ஜெர்மனியின் பதில் தாக்குதல்களின் பயனாக ருஷ்யர்கள் ஸாம்லாந்து தீபகற்பத்தில் சற்றுப் பின்வாங்கினார்கள். அவர்கள் அமாலியன் வால்டி, லாஸ்டர்ன், ட்யூடிட்டன் முதலியவற்றைப் பிடித்தார்கள்.

(2) ரோகோஸோவ்ஸ்கியின் இரண்டாவது வெண்மை ருஷ்ய சேனை பால்டிக் கடற்கரையை நோக்கி முன்னேறி வருகிறது, போலிஷ் காரிடாரிலும் அல்லது அதன் வாசற்படியிலுமுள்ள செர்க், சோஜ்னிஸ், பப்ளிட் முதலியவற்றைப் பிடித்துவிட்டது.

(3) முதலாவது வெண்மை ருஷ்ய சேனை போஸ்னானைப் பிடித்துவிட்டது.

(4) **மத்தியில்** ருஷ்யப் படைகள் கீழ்கண்ட இடங்களைப் பிடித்தன. கிராபன்ஹீம், பிரிபஸ், பிபோர்டன், நிவெரால், குரோஸ் ஸார்கன், பேயிபா, ஷென்கன்டார்ப், ட்யூபிளிட், டிரிசெல், ஆர்ன்ஸ்வால்டி.

(5) **அதற்கும் தெற்கில்** கொனியேவ் நிஸி நதிக்கான போரை குபனுக்கும் கோர்லிட்ஸுக்குமிடையே துவக்கியிருக்கிறார். அவர் ப்ருயிஸிஷி, ப்ரிட்லாந்து, பார்கென்பெல்ட், பிடர்ஸ்வால்ட், கோக்பென் முதலிய இடங்களையும் கைப்பற்றிவிட்டார்.

**இதாலி.**—5-வது சேனை பிஸ்டோயியா—பொலோனா ரஸ்தாவுக்கு வடக்கிலுள்ள மௌண்ட் பெல்வெடிரையும் மௌண்ட் கார்காட்ஸ்கோலையும் பிடித்துவிட்டது. எட்டாவது சேனை ஸினியோ நதியின் கிழக்குக் கரையிலுள்ள எதிரியின் தற்காப்புப் படைகளை அழித்துவிட்டது.



**பஸிபிக் :—**

(1) அமெரிக்கப் படைகள் லூஸானில் மணிலாவுக்கு சமீபத்தில் ஸான்மாடியோ, டேயிடே, ஸான் இஸிகோ, மாண்டால்பின் முதலியவற்றைப் பிடித்தன.

(2) அமெரிக்கப் படைகள் மணிலா விரிகுடாவிலுள்ள காபுவா, பிரி, வெர்டி முதலிய தீவுகளைப் பிடித்தார்கள்.

(3) சாரபாசியாமா எதிமலைக் குன்றுக்காக ஐவோஜிமாவில் கடும் போர் நடைபெறுகிறது.

(4) சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் மறுமுறை டோக்கியோ பேரில் வெடிகுண்டுகளை வீசின.

**சைனா.**—ஜப்பானியர்கள் சாங்கியான்பூவையும் சீனர்கள் வியன்ஹூவையும் பிடித்தார்கள். இரண்டும் ஹெனியாங்குக்கு சமீபத்திலிருக்கின்றன.

**பர்மா.**—(1) சீனப்படைகள் பர்மா எல்லைச் சரகத்திலுள்ள ஹெஸன்வி என்னும் நகரத்தைப் பிடித்தார்கள். (2) இராவதி நதியில் முன்னேறும் வாசலுக்கான போரில் நேச தேசப் படைகள் சிகான், பாகான், டெனுன்காயெட்டைப் பிடித்தார்கள்.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**18—2—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.-போக்குவரத்துகள்-வெஸல் (Wesel).

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி, இதாலியிலுள்ள பிரென்னர்(Brenner) ரயில்பாதை.

போக்குவரத்து இலக்குகள்.—வட இதாலி (North Italy).

ராணுவ நிலயங்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

விமானச் சண்டைகள்.—கிழக்கு அரங்கம் முழுவதும். (84 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—டோக்கியோ (Tokyo), போனின்ஸ் தீவிலுள்ள இவோ ஜிமா (Iwo Jima).

**பர்மா (Burma).**

துருப்புகள், தளவாடங்கள், டாங்கிகள், எண்ணெய் கிணறு ஸ்தாபனங்கள்.—யெனான்யாங் (Yenangyang).

படகுகள்.—ஐராவதி (Irrawaddy), மோல்மின் (Moulmein).

பாலங்கள்.—தாஸி (Taazi), ஹெஹோ (Heho).

**19—2—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ரயில்வே ஸ்தலங்கள், தொழிற்சாலை இலக்குகள்-ஹனோவர் (Hanover), பிரென்ஸ்விக் (Brunswick), மாக்டிபர்க் (Magdeburg).

போக்குவரத்து ஸ்தலங்கள்.-வெஸல் (Wesel).

ரயில் தளங்கள்.—வியன்னா (Vienna) கிராஸ் (Graz), கிளாகன்பர்ட் (Klagenfurt).

கடற்படை ஸ்தாபனங்கள்.—போலா (Pola), பியூம் (Fiume).

இலக்குகள்.—பிரென்னர் (Brenner) ரயில் பாதை.

விமானச் சண்டைகளும் தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (109 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

இரவு.—தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—போலன் (Bohlen).

போக்குவரத்து, தொழிற்சாலை ஸ்தலங்கள்—எர்பர்ட் (Erfurt).

இலக்குகள்.—ஹனோவர் (Hanover), பிரமன் (Bremen), பிரன்ஸ்விக் (Brunswick).

விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany).

**தூரக்கிழக்கு (Far East).**

போனின்ஸிலுள்ள நாமாஜிமா (Nama Jima).

தொழிற்சாலை இலக்குகள்.— டோக்கியோ (Tokyo).

**பர்மா (Burma).**

எண்ணெய்க் கிணறுகள் உள்ள பட்டணம்.—சாக் (Chauk).

ஸ்டோர் பிரதேசங்கள்.—மாண்டலே (Mandalay).

**20—2—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.-ரயில் தளங்கள், நீராவியந்திரங்களை ரிபேர் பார்க்குமிடங்கள்.— நூரம்பர்க் (Nuremburg).

ரயில் தளங்கள், இதர இலக்குகள்.—பெர்ச்டெஸ்காடன் (Berchtesgaden).

எண்ணெய்க் கிணறுகள்.-வியன்னாவிற்கருகில் (Vienna).

கப்பல் தளங்கள்.-டிரையெஸ்ட்டி (Trieste).

பாலங்கள்.—பிரென்னர் பாதையில் இதாலிக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையில்.

தளவாடக் குவியல்.—கர்ரரா (Carrara).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (67 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
இரவு.-போக்குவரத்து ஸ்தலங்கள்.—டார்ட்மண்ட் (Dartmund).
தற்காப்புகள்.-ஸீக்பிரட் (Siegfried) அரண்.
துறைமுகப் பிரதேசங்கள்.—டிரையெஸ்ட்டி (Trieste), பியூம் (Fiume), போலா (Pola).
கப்பல்கள்.—நார்வீஜியக் கடற்கரை.
பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—பார்மோஸா (Formosa).

**பர்மா (Burma).**

பாலங்கள்.—பெகு (Pegu) மார்ட்டாபன் (Martaban) ரயில்வே.
"A. A." பீரங்கிகள்.-மாக்பிலெய்ன் (Mokplain).

**21—2—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.-எதிரி தற்காப்புகள்.-கால்கார் (Calcar).
போக்குவரத்துகள்.— ஹாலந்து (Holland), ரூர் (Ruhr).
போக்குவரத்து ஸ்தலங்கள்.— வியன்னு (Vienna).
போக்குவரத்துகள்.—கிழக்கு இதாலி (Eastern Italy), யூகோஸ்லாவிய (Yugoslavia).
துறைமுக ஸ்தாபனங்கள்.—போலா (Pola).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (80 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
இரவு.—பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியத் தற்காப்புகள்.—போனின்ஸில் உள்ள இவோஜிமா (Iwo Jima).

**பர்மா (Burma).**

ஸ்டோர் பிரதேசங்கள்.—மித்தா (Myittha).
ஸப்ளை தளங்கள்.—மாண்டலேயின் (Mandalay) தெற்கு.
பீரங்கி ஸ்தாபனங்கள் துவியல்கள்.—மாண்டலே (Mandalay).

**22—2—45** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—லூன்பர்க் (Luneberg), ஸ்டென்டால் (Stendal), மேற்கு ஜெர்மனியில் 18 இடங்கள்.
பாலங்கள்.—பில்பெல்டு (Bielefeld), ஆல்டன்டிகின் (Altendeken).
பென்ஸால் நிலயங்கள்.—ஸ்கோலவன் (Scholven), ஆஸ்டர்பெல்டு (Osterfeld).
கப்பல்கள்.—வட எட்ரியாடிக் (Northern Adriatic), ஜினேவா (Genoa) வளைகுடா.
ரயில் இலக்குகள்.—மேற்கு, மத்திய போ (Po) சமவெளி.
ரயில் தளங்கள்.—ஆஸ்திரியாவிலுள்ள வியன்னுவுக்கு (Vienna) அருகில்.
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (14 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
இரவு.—ஜேர்மன் கப்பல்கள்—ஸ்காகராக் (Skagerrak).
போக்குவரத்து ஸ்தலங்கள்.—எஸ்ஸன் (Essen).
பென்ஸால் நிலயங்கள்.—கெல்ஸன்கிர்சன் (Gelsenkirchen).
பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியரின் தற்காப்புகள்.—பிரி (Biri) தீவில் லூசானுக்கும் சாமாருக்கும் இடையே.

**பர்மா (Burma).**

ஜப்பானிய முகாம்கள்.-நாம்கை (Namkhai).
இதர இலக்குகள்.—மாண்டலேயிலும் மாண்டலேயைச்சுற்றிலும்.

**23—2—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ரயில்வே ஜங்ஷன்—ஓர்கல் (Woergel).
ரயில்வே இலக்குகள்.—கிளாகன்பர்ட் (Klagenfurt), வில்லூ (Villach), நிட்டிபெல்ட் (Knitteifeld).
பாலங்கள்.—பிரன்னர் கணவாயின் ரயில் பாதைகள்.
எதிரி ஆக்கிரமித்த கட்டடங்கள்.—வட இதாலி (N. Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).
கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic) ஜினேவா (Genoa) வளைகுடா.
ஜெர்மன் தற்காப்புகள்.—மாஸ் நதிக்கும் (Maas). ரைன் (Rhine) நதிக்கும் இடையில்.
இரவு.—பேர்லின் (Berlin).
போக்குவரத்துகள், தொழிற்சாலைகள்.—போர்ஸிம் (Pforzheim).
எதிரிக் கப்பல்கள்.—ஹார்ட்டனிலுள்ள கடற்படை தளம்.
எதிரி விமான நிலயங்கள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).
சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

இலக்குகள்.—ரங்கூன் (Rangoon) முதல் மாண்டலே (Mandalay) வரையில்.
ரயில், ரஸ்தா பாலங்கள்.-ஸகெய்ம்(Sagaing).



எதிரி சைனியங்கள்.—வடகிழக்கு ரூயி (N. E. Ru-Ywa).
ஸ்டோர்ப் பிரதேசங்கள்.-ஹெஹோ (Heho).
எதிரித் துருப்புகள்.—லாஷியோ (Lashio).

**24—2—44** (சனிக்கிழமை).

பகல்.—எண்ணெய்க் கிணறுகள்—ஹம்பர்க் (Humburg), ஹார்பர்க் (Harburg), மிஸ்பர்க் (Misburg).
U-படகு தளங்கள்.—பிரமன் (Bremen).
ரயில் தளங்கள்.—வடமேற்கு ஜெர்மனி (N. Western Germany).
தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—காமன் (Kamen).
"V 2" போக்குவரத்து முனை.—ஹாலந்து (Holland).
எதிரி கவசம்பூண்ட வண்டிகள்.-பிரம்மிற்கும் பிட்பர்க் (Bitburg)கிற்கு மிடையில்.
கோட்டைகள் கட்டப்பட்ட பட்டணங்கள்.—மெர்ச் (Mersch), ஸ்டேட்டர்னிச் (Stetternich).
இலக்குகள்.—கிராஸ் (Graz); கிளாகன்பர்ட் (Klagenfurt).
ரயில்வே தளங்கள்.—உடைன் (Udine), பாடுவா (Padua).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும் (34 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
இரவு இலக்குகள்.—பெர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியத் தற்காப்புகள்.—இவோஜிமா (Iwo Jimo).

**பர்மா (Burma).**

துருப்பு முகாம்கள்.—மாண்டலே (Mandaly).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—மின்னு (Minnu) பாலம்.
களஞ்சியம்.—மெர்கெய் (Mergui).
பெட்ரோல் துவியல்கள்.-அரக்கான் (Arakan).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**19—2—45.** (திங்கட்கிழமை). **to**
**22—2—45** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

**23—2—45.** (வெள்ளிக்கிழமை).
**to**
**25—2—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

## யுத்தக் குறிப்புகள்.

**செம்படை.** செம்படை பிப்ரவரி மாதம் 23-ம் தேதியன்று அதன் 27-வது வருஷ ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடிற்று. அன்று ஸ்டாலினும் அவனுடைய சகாக்களும் பெருமை சொள்ளக்கூடிய நாள். ஏனெனில் சமீப வருஷங்களில் அந்த சேனை உலகத்தின் ராணுவ சரித்திரத்தில் என்றும் அழிக்க முடியாத புகழ் பெற்றுவிட்டது. மேலும் ருஷ்யாவிற்கு ஏற்பட்ட மகத்தான ஆபத்திலிருந்து அது ருஷ்யாவை விடுவித்ததுடன் அதன் எதிரி பேரிலும் பழிக்குப் பழிவாங்கி வருகிறது. நான்கு வருஷங்களுக்குமுன் துரோக சிந்தனையுடனும் ஸ்நேக பாவத்தைப் புறக்கணித்துவிட்டும் ஹிட்லர் ருஷ்யாவை தாக்கியபொழுது தயாராக இல்லாதிருந்த ருஷ்யச் சேனை காலஹரணம் செய்வதற்காகவும் படைகளை பலப்படுத்தவும் ஆயுதங்களை சம்பாதித்துக்கொள்ளவும் ஒவ்வொரு கிராமமாக விட்டுக்கொடுத்துப் பின்வாங்கியது. ஜெர்மனியின் தாக்குதல் பிரமிக்கத்கூடியதாகத் தானிருந்தது. நிலைமை மோசமாகி ருஷ்யா தன்னந் தனியே நின்றபொழுது, தன்னந்தனியே நின்றுகொண்டிருந்த, ஆனால் மனஉறுதி குலையாத பிரிடன் தனக்குள்ள அபாயத்தையும் பொருட்படுத்தாமல் ருஷ்யாவுக்கு நட்பையும், தளவாட உதவியையும் தருவதாக வாக்களித்தது. ஆர்க்டிக் கடல் வழியாக சாமான்களை அனுப்பும் சிரமங்களை பிரிடன் மேற்கொண்டது. இந்து மகா சமுத்திரம், பாரஸீக வளைகுடா, பாரஸீகத்தின் மலைகள், பாலைவனங்கள் வழியாகவும் ருஷ்யாவுக்கு சாமான்களை அனுப்பி வந்தது. இதுவிஷயத்தில் அமெரிக்கா குத்தகைக் கடன் திட்டத்தில் சாமான்களை அனுப்பிவந்தது. இந்த சமயத்தில் காற்றுள்ளபோது தூற்றிக்கொள் என்ற பழமொழிப்படி ஹிட்லர் ருஷ்யாவின் செழிப்பான மாகாணங்களைக் கவர்ந்தான். அதன் உணவுப் பொருள்களையும், தொழிற்சாலைகளையும் கைப்பற்றினான். தலைநகரங்களை முற்றுகை செய்தான், ருஷ்யாவின் எண்ணெய்ப் பிரதேசங்களைக் கைப்பற்றும் உத்தேசத்துடன் காகஸஸ் மலைகள் வரையிலும் ஊடுருவிச் சென்றுவிட்டான். ஆகிலும் மற்றொரு பக்கத்தில் பிரிடன் எடுத்துக் கொண்ட நடவடிக்கை ருஷ்யாவுக்கு உதவியளித்தது. ருஷ்யாவைச் சுற்றி வளைப்பதற்காக விரிவான கிடுக்கித் தாக்குதல் முறையில் வட ஆபிரிக்காவில் ஸூயஸை நோக்கி முன்னேறி வந்த ஜெர்மனி எல் அலாமீனில் பின்வாங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டது. பெரிய இதாலிய,

ஜெர்மன் படைகள் வடக்கு ஆபிரிக்காவின் கிழக்குக் கோடியிலிருந்து மேற்குக் கோடிக்குப் பின் துரத்தியடிக்கப்பட்டன. அப்படைகளும் நிர்மூலமாக்கப்பட்டன. எல் அலாமீன் நிகழ்ச்சிக்குப்பின் ருஷ்யப் போர்முனையில் ஜெர்மன் தாக்குதல் வலிமை தளர்ச்சிபெற்றது. அதே சமயத்தில் வால்கா நதிக்கரையிலுள்ள ஸ்டாலின்கிராடில் ருஷ்யர்களுக்கு மகத்தான வெற்றிகிடைத்தது. ஜெர்மன் படைகள் அழிக்கப்பட்டன. அன்று பின்வாங்க ஆரம்பித்த ஜெர்மானியர்கள் இன்றும் பின்வாங்குவதை நிறுத்தவில்லை. அவர்கள் மேற்கு முனையில் போர் புரியும் தங்களுடைய சகோதரர்களைப் பெர்லினில் சந்தித்தும் ஜெர்மனி வீழ்ச்சிபெறும் வரையிலும் அவர்கள் பின்வாங்குவதை நிறுத்தமாட்டார்கள். ஸ்டாலின்கிராடுக்குப் பின் ருஷ்ய முன்னேற்றவேகம் அதிகரித்துவிட்டது. செம்படை ருஷ்யாவிலிருந்து ஜெர்மனியை அப்புறப்படுத்தியது மட்டுமில்லாமல், பால்டிக் கடலிலிருந்து கருங்கடல் வரையிலும் எல்லைச் சரகத்திலுள்ள எல்லா ஜெர்மன் வசமான நாடுகளையும் விடுவித்துவிட்டது. இப்பொழுது அது பெர்லினைத் தாக்க ஆயத்தம் செய்துவருகிறது.

சென்ற வேனிற்காலத் தாக்குதலில் ருஷ்யா 40-நாட்களுக்குள் பிரிப்பெட் சதுப்பு நிலங்களை மீட்டது. சென்ற மாதத்தில் துவக்கமான மாரிகாலத் தாக்குதலில் ருஷ்யா விஸ்சுலாவையும், ஓடரையும் தாண்டி சைலீஷியா, கிழக்கு பிரஷ்யாவை ஆக்கிரமித்தது. இந்த நாற்பது நாட்களில் எதிரிக்கு ஏராளமான நஷ்டத்தை விளைவித்திருக்கிறது. குறைந்தபக்ஷம் 8,00,000 பேர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 3,50,000 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 300 ஜெர்மன் நகரங்களும் 100 யுத்த தளவாட உற்பத்திசாலைகளும் கைவசப்படுத்தப்பட்டன. 2,400 ரயில்வே ஸ்டேஷன்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. 9,000 மைல்கள் கொண்ட இருப்புப்பாதை கைவசப்படுத்தப்பட்டுவிட்டது. 3,000 விமானங்களும் 4,500 டாங்கிகளும், 12,000 பீரங்கிகளும் கைவசப்படுத்தப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன.

ருஷ்ய மாரிகால முன்னேற்றத்தினால் அதிக விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மேற்குப் போர்முனையில் ஜெர்மனியின் பதில் தாக்குதலும் குலைந்துவிட்டது. ஜெர்மனியைத் தாக்க கிழக்குப் போர்முனையும் மேற்குப்போர்முனையும் ஒன்றுபடும்படியாக ஏற்பட்டுவிட்டது.

இவ்விதமான புகழ்பெற்ற நடவடிக்கை எப்பொழுதும் இருந்ததில்லை. ஆகிலும் நாம் ருஷ்யர்களைப் பாராட்டும்பொழுது ருஷ்யர்கள் அவர்களின் மேற்குப்பக்கத்திலுள்ள நேச நாடுகளுக்கு மிகவும் கடமை செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. D தினத்தன்று பிரிடிஷ் படைகள் நார்மண்டி கடற்கரையிலிறங்கியபொழுது கிழக்குப் போர்முனைக்கும், மேற்குப் போர்முனைக்கும் மத்தியில் 1,400 மைல்கள் தூரமிருந்தது. இன்று அவைகள் 400 மைல்களுக்குள் வந்துவிட்டன என்றால் அதற்காக நாம் ருஷ்ய, பிரிடிஷ் அமெரிக்கப் படைகளின் ஒன்றுபட்ட முயற்சிகளைப் பாராட்டவேண்டியதுதான். ருஷ்யர்கள் சமவெளியாக உள்ள பிரதேசத்தில் 550 மைல்கள் முன்னேறியிருக்கிறார்கள். பிரிடிஷ், அமெரிக்கப்படைகள் நதிகளும், கஷ்ட சாத்யமான பூ பிரதேச அமைப்புமுள்ள பிரதேசங்கள் வழியாக 450 மைல்கள் முன்னேறி இருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.** மகத்தான மாரிகாலத் தாக்குதலில் புதிய கட்டம் தோன்றிவிட்டது. படைகளைத் திருத்தியமைத்துக் கொள்ளுவதற்கும் பலப்படுத்திக்கொள்ளுவதற்கும் சற்று ஓய்வு ஏற்பட்டிருக்கிறது.

தற்பொழுது உள்ள நிலைமை பின்வருமாறு. கிழக்கு பிரஷ்யாவில் வெண்மை ருஷ்ய சேனைக்கு மூன்று அலுவல்களிருக்கின்றன. ஒன்று எர்மிலாந்திலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்தியடிப்பது. இரண்டு பில்லா, கிட்னியா என்ற பால்டிக் துறைமுகங்களைக் கைப்பற்றுவது, மூன்று, தலைநகரமான கோனிக்ஸ்பர்க்கைக் கைப்பற்றுவது. இங்கு ஸாம்லாந்து தீபகற்பத்தில் ஜெர்மானியர்கள் உக்ரமாக எதிர்த்துத் தாக்கி கடல்மார்க்கமாக மேற்குமுகமாகத் தப்பி ஓடலாமென்று உத்தேசித்திருக்கிறார்கள். இங்கு ருஷ்யர்கள் சிறிது இடங்கொடுக்க நேரிட்டுவிட்டது. ஜெர்மானியர்கள் காலிசெய்து ஓடமுயன்றால் அவர்களைத் தாக்க ருஷ்யப்படைகள் கடற்கரையில் ரோந்துசெய்துவருகின்றன.

அதற்குத் தெற்கில் ரோகோஸோவ்ஸ்கி ஜுகாவின் வடக்கு பார்ச்வத்தை பலப்படுத்தி வருகிறான். மத்தியிலுள்ள ஜுகோவின் போர்முனையில் மாறுதல் கிடையாது. ரோகோஸோவ்ஸ்கி நியூஸ்டெட்டினை நோக்கி முன்னேறுகிறார். ஜுகோவ் ஸ்டெட்டினை நோக்கி முன்னேறி ஷனிட்முகல் என்ற ஜெர்மன் தற்காப்பு அரணைப் பிடித்துவிட்டார்.

ஜுகோவின் இடது பார்ச்வத்தை ரக்ஷித்து வரும் கோனியேவ் பலமாக முன்னேறிவிட்டார். அவர் ஓடர், போபர், க்விஸா நதிகளைத் தாண்டிவிட்டார். நியஸ் நதியையும் குபனிலிருந்து கோர்பிட்ஸ் வரையிலுள்ள 60 மைல்கள் தூரத்தில் தாண்ட ஆரம்பித்துவிட்டார். அவர் முன்னால் லீப்ஸிக், டிரெஸ்டன் என்ற முக்கியமான லக்ஷியங்கள் இருக்கின்றன.



**மேற்குப் போர்முனை.** கால்கார்—எம்மரிக்—கிளீவ் முக்கோணத்தில் ஜெர்மானியர்கள் அணைகளை உடைத்துவிட்டதின் மூலம் ஏற்பட்டிருந்த வெள்ளப் பெருக்கு குறைந்து வருகிறது. பிராசீனமான நோவாவைப் போல பூமியைத் தொட்டுக்கொண்டு முன்னேற்ற வேகத்தை அதிகரித்துவிடலாமென்று கிரோருக்கு நம்பிக்கை உண்டாகியிருக்கும். அவர் மாய்லாந்தைக் கைப்பற்றிவிட்டார். அவரும், அவருடைய பிரிடிஷ் சகாக்களும் ஒரு வாரத்திற்குள் பழைய ஸீக்பிரட் அரணையும் புதிய கிரிம்ஹில்ட் அரணையும் வடக்குப் பக்கத்தில் தாண்டிவிட்டார்கள். ஜெர்மனியிலும் பலமாக ஊன்றிக்கொண்டிருக்கிறார்கள். வடக்கில் ஏற்பட்டிருக்கும் இந்த அபாயத்தைத் தடுக்க ரோட்டர் நதி முனையிலிருந்து ஆறு டிவிஷன் படைகளை இங்கு அனுப்பும்படி அவர்கள் ருண்ட்ஸ்டெட்டைக் கட்டாயப்படுத்திவிட்டார்கள். டூரனையும் ஜூலிக்கையும் பிடித்த பின் அமெரிக்க 1-வது, 9-வது சேனைகள் ரோயர் நதியைத் தாண்டியுள்ள முன்னேறும் வாசல்களை ஒன்று படுத்திவிட்டார்கள். கொலோனின் மேற்கு எல்லைப் புறத்திலிருந்து அப்படைகள் 5 மைல்களுக்குள் வந்துவிட்டன. அமெரிக்க 3-வது சேனை ஸார்பிரக்குக்குள் நுழைந்த பின் ஸார் நதியையும், பிரம் நதியையும் தாண்டிவிட்டது. அது இப்பொழுது ஸார்பிரக்குக்குத் தெற்கில் 8 மைல் நீளமுள்ள பிரதேசத்தை ஆக்கிரமித்துவிட்டது. ஜெர்மனிக்குள் 65 மைல்கள் நீளமுள்ள போர்முனையில் நிலைபெற்றிருக்கிறது.

வி வி வி வி வி

**விமானத் தாக்குதல்கள்.** இந்த வாரத்திய நடவடிக்கைகள் மிகவும் பகட்டானவை. அடிக்கடி நடத்தப்பட்டவை. இந்த வாரத்தில் கீழ்கண்ட லக்ஷியங்கள் முக்கியமாகத் தாக்கப்பட்டன.

1. பெர்கஸ்காடனிலுள்ள ஹிட்லரின் ஒளி.
2. டென்மார்க்கிலிருந்து ஆஸ்திரியா வரையிலுள்ள ஸ்ட்ராடஜிக் நிலயங்கள். (இதில் 6,000 விமானங்கள் ஈடுபட்டன).
3. ஆஸ்திரியாவிலும் வடக்கு இதாலியிலும் உள்ள இருப்புப் பாதைகள் (இந்தத் தாக்குதல் 11 நாட்கள் நீடித்தது. இதை சைகிள் வெடி குண்டு வீச்சு என்று வர்ணிக்கிறார்கள்).
4. ஜெர்மன் போக்குவரத்துகள் (ஒரு நாளில் 2,341 தடவை விமானங்கள் பாய்ந்து சென்றன).
5. எண்ணெய் சுத்திகரிக்கும் நிலயங்கள், யூ படகு தளங்கள் (இதில் 1,100 கனமான வெடி விமானங்களும்) 500 சண்டை விமானங்களும் ஈடுபட்டன).
6. டார்ட்மண்ட் (இதில் 1,200 விமானங்கள் ஈடுபட்டன).
7. முனிக் (இதில் 1,500 லிபரேடர்களும், 500 சண்டை விமானங்களும் ஈடுபட்டன).
8. பெர்லின் (இதில் 1,200 பறக்கும் கோட்டை விமானங்களும், லிபரேடர்களும், 700 சண்டை விமானங்களின் உதவிகொண்டு, ஒரு மணி நேரத்திற்குள் 1,250 டன்கள் எடையுள்ள உயர்தர வெடி குண்டுகளையும் 500,000 எறி வெடிகளையும் வீசியிருக்கின்றன).

பெர்கஸ்காடனைத் தாக்கியது இது முதல் நடவடிக்கையாகும். இத்துடன் அது நின்றுவிடாது. நாஸிக் கொள்ளைக்கூட்டத்தார் மத்தியில் பிப்ரவரி 24-ம் தேதியன்று முனிக்கில் ஹிட்லர் சொற்பொழிவாற்றியபொழுது இதைப்பற்றி அவன் ஓலமிட்டிருக்கிறான்.

இந்தத் தாக்குதல்களைக் கண்டு ஜெர்மனி பூராவும் நடுநடுங்குகிறது. இவைகள் "சிதளாக்குகின்றன" என்று ஜெர்மனி ஒரு புதிய வார்த்தையை உபயோகித்து வருகிறது. "காவண்ட்ரி-யை" என்ற வார்த்தையை அவர்கள் மறந்துவிட்டார்கள்போலும்.

வி வி வி வி வி

**6-ம் படை.** தோல்விக்குப் பின் ஜெர்மனிக்கு வெளியிலிருந்து கொரில்லாப் போரை நடத்துவதற்காக ஹிட்லர் யுவர்களடங்கிய ஆறாவது படையை ஹிட்லர் தயாரித்திருக்கிறானென்று பிராவ்டா பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. நாஸிகளை வெறுக்கிறவர்களென்று பாசாங்கு செய்யவும் சந்தர்ப்பம வாய்க்கும்பொழுது நேசதேசத்தார்களைப் பழிவாங்கவும் அநேக நாஸிகள் இப்பொழுதே காவல் கூடங்களுக்கும் கைதி முகாம்களுக்கும் அனுப்பப்படுகிறார்கள். இந்தக் கொள்ளைக் கூட்டத்தாருக்கு ஹிம்லர் தலைமை வகிப்பார். S. S. படையின் தலைமை ஆபீஸரான வில்ஹெல்ம் டிப்ளின் அவருக்கு உதவியாக இருப்பார்.

இதிலிருந்து ஜெர்மனி சமீப காலத்தில் திடீரென்று வீழ்ச்சிபெருமென்று புலப்பட்டாலும், இந்த உபயோகமற்ற, அற்பமான முறைகளைக்கொண்டு வெகு காலம் எதிர்த்துப் போராடலாமென்று எதிரி இன்னமும் நம்பியிருக்கிறான். இந்த நடவடிக்கையினால் தோல்வி பெறும் நாளை ஒத்திவைக்கக்கூடுமானால், நேசதேசத்தார்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு அவர்கள் கலைந்துவிடுவார்களென்றும் ஜெர்மனிக்கு சந்தர்ப்பம் அளிப்பார்களென்றும் அவன் எண்ணியிருக்கிறான். ஆகிலும் யால்டா முடிவுகள் அவனுடைய நம்பிக்கைக்குச் சாவு மணி அடித்துவிட்டன என்பதை அவன் அறியவில்லை போலும்.

வி வி வி வி வி

**உணவுப்பொருள், போக்குவரத்து, காலி செய்வது** என்ற பிரச்னைகள்தான் ஜெர்மனிக்கு இப்பொழுது முக்கியமானவை. ராணுவ காரணங்களைவிட இந்த நெருக்கடிகள்தான் ஜெர்மனியின் வீழ்ச்சியை துரிதப்படுத்தும். வடக்கு சைலீஷியாவிலுள்ள காவை இழந்தபின் ஜெர்மனி வருஷந்தோறும் 110 மிலியன் டன்கள் கொண்ட நிலக்கரியை ஸப்ளை செய்த பிரதேசத்தை இழந்துவிட்டது. ரூரிலும், சாரிலுமுள்ள மற்ற நிலக்கரி உற்பத்தியாகும் நிலயங்களின் உற்பத்தியும் மேற்குப் போர்முனையில் போர்முண்டுவிட்டதினால் குறைந்துவிட்டன. உற்பத்தியில் 28 சதவிகிதம்தான் வெளியே கொண்டுபோகப்படுகிறது. நிலக்கரியன்னியில் மின்சாரமும், பெட்ரோலும், எஃகும் அகப்படாது. ரசாயன முறையில் உற்பத்திசெய்த எண்ணெயும் வெடிகுண்டு வீச்சியின் பயனாகக் குறைந்துவிட்டது. இரண்டாவ்தாக, வார்தகா, டான்ஸிக், மேற்கு பிரஷ்யாவை இழந்தபின் ஜெர்மனியின் உணவுப்பொருள் பிரச்னை மிகவும் சிக்கலாக ஆகிவிட்டது. உணவுப்பொருள்உற்பத்தியாகும் பிரதேசங்களை இழந்ததுமல்லாமல் ஏராளமான அகதிகள் வந்துவிட்டபடியால் அகதிகளுக்கு உணவுப்பொருளை சப்ளை அதிகக் கஷ்டங்களை உண்டுபண்ணிவிட்டது. ஏனெனில் சாதாரணமான ஒரு குறிப்பிட்ட ஜனத்தொகைக்கு வைத்திருந்த உணவுப் பொருள்களை இப்பொழுது உபரியான ஜனங்களுக்கு விநியோகம் செய்யவேண்டியிருக்கிறது.

ஜனங்கள் ஓடிவருவதிலிருந்து மற்ற கஷ்டங்களும் ஏற்பட்டுவிட்டன. கிழக்குப் போர்முனையிலிருந்து இதுவரையில் 4,500,000 பேர்கள் வந்துவிட்டதாகவும் இன்னும் அநேகர்கள் கொனிக்ஸ்பர்க்கிலும், டான்ஸிக்கிலும் பிரெஸ்லாவிலும் காத்துக்கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

நான்காவதாக, போக்குவரத்து பிரச்னையும் நெருக்கடியான நிலைமையை அடைந்துவிட்டது. ஏனென்றால் பாதைகள் நொருக்கப்பட்டதுடன், நிலக்கரியும், வண்டிகளும், எஞ்சின்களும் குறைந்துவிட்டன. மேலும் விமானத்தாக்குதல் சதாகாலமும் நடைபெற்று வருகிறது.

வி வி வி வி வீ

**துருக்கி.** இப்பொழுதுதான் துருக்கி ஜெர்மனிபேரிலும் ஜப்பான் பேரிலும் போர் தொடுத்திருக்கிறது. இத்துடன் நேசக்கக்ஷியில் 37 நாடுகள் போரிலீடுபட்டிருக்கின்றன. யுத்தத்திலீடுபடாமலிருப்பதற்கு காலம் கடந்து சேர்ந்துகொண்டதினால் பாதகமில்லை. 1939-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திய பிரிடிஷ் பிரொஞ்சு ஒப்பந்தப்படி முஸோலினியும் ஹிட்லரும் கிரீஸின்பேரில் படையெடுத்தபொழுது துருக்கி நேசதேசத்தார்களுக்கு உதவியளித்திருக்கவேண்டும். துருக்கி அவ்விதம் செய்யாதபோதிலும் அது எப்பொழுதும் ஸ்நேகபாவமுள்ளதாகவே இருந்து வந்திருக்கிறது. 1944-ம் ஆண்டு ஆகஸ்டு 2உயன்று ஜெர்மனியுடன் அதற்கிருந்த உறவுகளை அது ரத்து செய்தது. துருக்கிக்கு அநேக சொந்த பிரச்னைகளிருக்கின்றன. ஸூயஸிலும் மத்தியக் கிழக்கிலும் அதற்கு அக்கரைகளிருக்கின்றன. ஸான் பிரான்ஸிஸ்கோவில் நடைபெறும் உலக பத்திர மஹாநாட்டில் அதற்கு ஒரு ஸ்தானம் அளிக்கப்படும்.

வி வி வி வி வி

**எகிப்து.** எகிப்தும் அச்சுநாடுகளுடன் போர் தொடுத்துவிட்டது. இது தற்காப்பு முறையில் என்று சொல்லப்படுகிறது. அது கடல் தாண்டி அச்சு நாடுகளுடன் போரை நடத்தத் துருப்புகளை அனுப்பாதென்று சொல்லப்படுகிறது. ஆபிரிக்காவில் இதாலிய ஜெர்மன் படைகள் இருந்தபொழுது எகிப்து செய்த தியாகத்திற்காக அதை நேசதேசமாகக் கருதவேண்டிய உரிமை அதற்கு உண்டு. அதற்குக் கவசம் பூண்ட படைகளை அபிவிருத்தி செய்யக்கருத்தகை கூடன் திட்டப்படி சாமான்கள் அனுப்பப்படும். அதற்கும் ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் ஒரு ஸ்தானம் அளிக்கப்படும்.



**பிரான்ஸ்.** யால்டாவுக்கு அழைக்கப்படாததால் டிகால் ரூஸ்வெல்டை ஆல்ஜியர்ஸில் சந்திக்க மறுத்தானென்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஆகிலும் அந்த மகாநாட்டிற்கு பிரான்ஸும் பிரதிநிதிகளை அனுப்பக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. டிகால் எப்பொழுதும் சதாரணமாக சுலபமாக சம்பாஷணை செய்யக்கூடியவரல்ல. ஆனால் அதன் வாழ்வுக்கு மூன்று வல்லரசுகளும் தான் காரணமென்பதற்கு பிரான்ஸ் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறதென்பதையும் நான்காவது அல்லது ஐந்தாவது பெரிய வல்லரசாக ஆகுமுன் பிரான்ஸ் புனருத்தாரணம் அடையவேண்டியது அவசியமென்பதையும் அது மறந்துவிடக்கூடாது.

வி வி வி வி வி

**மேற்குப் பயணம்.** மார்ச்சு மாதம் 1-ம் தேதிக்குமுன் அச்சு நாடுகளுடன் போர் தொடுக்கும் நாடுகள்தான் ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்கு அழைக்கப்படுமென்று நேசதேசத்தார்கள் வெளியிட்டபின், லெபானனும், ஸிரியாவும், எகிப்தும் அச்சு நாடுகளுடன் போர் தொடுத்துவிட்டன. இன்னும் அநேகம் நாடுகள் அவ்விதம் செய்தால் திருப்தியாக இருக்கும்.

வி வி வி வி வி

**அரேபியா இயக்கம்.** யால்டாவிலிருந்து திரும்பிவந்தபொழுது, சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் அராபியத் தலைவர்களைக் கண்டு பேசியதாகத் தெரியவருகிறது. இது நல்லதுக்குத்தான். அராபிய சங்கம் ஏற்படுத்துவதற்கு அநேக காரணங்களிருக்கின்றன. மத்தியக் கிழக்கிலுள்ள நாடுகளில் பொதுவான பாஷையும், பொதுவான கலைஞானமும், பொதுவான சட்ட திட்டங்களுமிருந்துவருகின்றன. இந்த யுத்தத்தில் அமைக்கப்பட்ட போக்குவரத்து மார்க்கங்கள் மூலம் அவைகளுக்குள் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது. வருங்காலத்திய உலகப் பொருளாதார அமைப்பிலும் சகோதர பாவத்திலும் அவைகளிலுள்ள எண்ணெய்ப் பிரதேசங்கள் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளும்; சமீப காலத்தில், மத்தியக் கிழக்கு விவசாய சபை ஏற்பாடு செய்யப்படும். ஏற்கனவே மத்தியக் கிழக்கு ஸப்ளை மத்திய நிலயம் இருந்துவருகிறது.

ஆனால் அராபிய ஒற்றுமையில் இடையூறுகளும் இருக்கின்றன. யூதர்கள் தங்களுடைய நாடுகளை இழக்க பிரியப்படவில்லை. உள்நாட்டுக் கலகங்களும் இருந்துவருகின்றன. பூகோள அமைப்பினால் கிழக்கு மத்தியதரைக் கடலில் இருப்பதினாலும் சரித்ர பூர்வமாக சங்கத்திற்கு அடிப்படையாக இருந்ததினாலும் ஸிரியாவும், லெபானனும்தான் அராபிய சமாஜத்துக்கு அடிக் கட்டைகள் போன்றவை. பிரான்ஸின் சார்பாக டிகால், ஸிரியா, லெபானனின் அந்தஸ்தை ஒப்புக்கொள்ளமாட்டான். மற்ற நாடுகளும் அதை ஒப்புக்கொள்ளமாட்டா. அதை பிரிடன் அங்கீகரிக்கும். இந்த சமஷ்டியின் அங்கத்தினர்களில் எகிப்தும், ஸிரியாவும் தான் பொருளாதாரத்திலும் கல்வியிலும் முற்போக்கடைந்தவைகள். ஹெட்ஜாஸின் அரசரான இபன்ஸாத்தான் இந்த கோஷ்டியில் பெரியவர். அவர் கிராம்வெல்லுக்கு சமானமானவர். ஒரு கையில் உரைவாளும், ஒருகையில் குரானும் ஏந்தியவர். பாருக் மன்னரும் இஸ்லாமின் காலிப் என்ற பட்டம்பெற வேண்டுமென்று ஆசைப்படுகிறார்.

வி வி வி வி வி

**பஸிபிக்.** கடற் தளபதி நிமிட்ஸுடையவும் மாக் ஆர்தருடையவும் நடவடிக்கைகள் பசிபிக்கில் ஜப்பானைக் குறித்து நடைபெற்றாலும் இரண்டிற்கும் வெவ்வேறு லக்ஷியங்கள் உண்டு. நிமிட்ஸ் ஜப்பானின் வாசற்படிக்கே நேராடிச் செல்ல முயலுகிறான். மாக் ஆர்தர் சைனா கடற் கரைக்குச் சென்று அங்கிருந்து ஜப்பானுக்குச் செல்ல முயலுகிறான்.

நிமிட்ஸின் படைகள் ஐவோஜிமா என்ற தீவிலிறங்கிறன. அது அதன் பரப்பினால் முக்யத்வமுள்ளதல்ல. ஆனால் அதிலுள்ள சமவெளியில் அமெரிக்கர்கள் சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் இறங்கக்கூடிய தளங்களை அமைத்து வருகிறார்கள். ஜப்பானைத் தாக்க அமெரிக்கா தினசரி ஒரு விமானத்தைக் கட்டிவருகிறது.

ஆகையினால்தான் ஐவோஜிமாவிலுள்ள 554-அடி உயரமுள்ள எரிமலை பிரதேசமான சூரிவாசியாமாவுக்காகக் கடும்போர் நடைபெறுகிறது. அந்த எரிமலையைக் குடைந்து ஜப்பானியர்கள் தற்காப்புக்காக உபயோகித்துவருகிறார்கள். ஐவோஜிமாவின் பாதிபாகம் அமெரிக்கர் வசமாகிவிட்டது.

அமெரிக்கப் படைகள் காபுவர், டிரி, வெர்டி என்ற தீவுகளில் இறங்கிவிட்டதாகத் தெரியவருகிறது.

**டோக்கியோ இடைவிடாது வெடிவிமானங்களால் தாக்கப்படுகிறது.**

# சிக்ஷாகாலம் வந்துவிட்டது.

**(இலியா எக்ரன்பர்க்).**

(ரெட் ஸ்டார் பத்திரிகை).

பெர்லினின் தெருக்களில் பனி நிரம்பிய காற்றுகள் வீசுகின்றன. ஆனால் இது காற்று அல்ல. ஜெர்மானியர்களையும் அவர்களின் வஞ்சக புத்தியையும் பீதி துறத்தியடிக்கிறது. அந்தக் காற்றுகள் கிழக்கிலிருந்தும், டான்சிக்கிலிருந்தும், பிரெஸ்லாவிலிருந்தும், பிராங்க் பர்ட்டிலிருந்தும், கஸ்ட்ரினிலிருந்தும் பெர்லினில் பலமாக வீசுகின்றன. சில நாட்களுக்கு முன் பெர்லின் அவர்களுக்கு ஸ்வர்க்கமாக இருந்தது. இப்பொழுது பெர்லின் நகரவாசிகள் ஓட்டம் பிடிக்கிறார்கள். பெர்லினிலுள்ள ஸ்தாபனங்கள் பெர்லினைவிட்டுக் கிளம்பிவிட்டன. "பெர்லினில் ஒரு ஸ்தானத்தைப்பெற நான் எதையும் கொடுப்பேன்" என்று அமானுஷ சத்தியுள்ளவன் சொல்லுகிறான். அவன் பிறருக்கு என்ன ஆசை வார்த்தை காட்டுகிறான்? குபான் மாகாணத்தின் கவர்னர் பதவியா அல்லது நல்ல வம்சாவளியா அல்லது மாஞ்டா னெக்கிலுள்ள முகத்வாரத்திலிருந்து தங்கம் உற்பத்தியாகும் பூமிகளைத் தருவதாகச் சொல்லுகிறானா?

புரோக்களிலிருந்து வரும் சூனியக்காரிகள்போல் ஜெர்மன் ஆடவர்களும் ஸ்திரீகளும் பனிக்கட்டிகள் வழியாக ஓடிவருகிறார்கள். அவர்களின் கொள்ளையடித்த சொத்துக்களில் எஞ்சியவற்றை அவர்கள் எடுத்துச் செல்லுகிறார்கள். ஜெர்மனிக்கு ஏற்பட்டிருந்த புகழின் சின்னங்கள், சாதாரணமான ஜெர்மன் பொருள்கள், மெஸபொடேமியாவின் தேச படங் களும், வாசனை திரவியங்களும், உள்ள பைகளும், அரைக்கச்சையில் மெயின்காம்பிலிருந்து எழுதப்பட்ட மேற்கோள்களும், ஜெர்மன் நிர்வாகச் சின்னமுள்ள சாராயப் புட்டிகளும் அவர்களுடன் கொண்டுபோகப்படுகின்றன. அவர்கள் பீதி மிகுந்து "டாங்கிகள், டாங்கிகள்" என்று கத்திக்கொண்டே போகிறார்கள்.

சமீப தூரத்தில் ருஷ்யாவை ஆறு வாரங்களில் வென்று விடுவேன் என்று சொன்னவரும், "கவனியுங்கள், டாங்கிகள்" என்ற தலையங்கமுள்ள புஸ்தகம் எழுதியவருமான ஜெனரல் குடெரியானிலிருந்து வருகிறார். அவரும் சும்மா இருக்கவில்லை. அவர் மோட்டாரில் ஏறிக் கொண்டு அகதிகளுக்கு முன்னே செல்லப்பார்க்கிறார். அந்தப் புஸ்தகத்தின் தலையங்கம் மாறிவிட்டது. குடெரியானின் பேச்சிலிருந்து அந்த சப்தம் மறைந்துவிட்டது. ருஷ்ய டாங்கிகள் அவனைத் தாக்கிவருகின்றன.

## மின்னல் தாக்குதல்.

ஹிண்டன்பர்க் ஞாபகச் சின்னத்தருகில் ஜெர்மனியின் கௌரவத்தை அழித்த சின்னங் கள் காணப்படுகின்றன. ஜெர்மனி இனிமேல் தலை கிளப்பமுடியாது. நாம் அவர்களின் பூமிக்குள் சென்றுவிட்டோம். ஜெர்மனியின் சிக்ஷாகாலம் வந்துவிட்டது. ஆலன்ஸ்டீனி லும், ஆஸ்ட்ரோடிலும், மாரியன்பர்க்கிலும் நமது படைகள் போக்குவரத்தைக் கட்டுப்பாடு செய்துவருகிறார்கள். இதற்குமுன் இந்த இடங்களில் காலடியர்களுக்கும் சோண்டர்ன்ப்யூரர் களுக்கும் மூதாதையர்களான மெயிஸ்டர்களும், ஹாப் மெயிஸ்டர்களும், ட்யூசெ மெயிஸ்டர் களும் அதிகாரம் செலுத்திவந்தார்கள். இங்கு 800 வருடங்களுக்குமுன் லித்வேனியர்களும் போலிஷ் மக்களும் பின்வருமாறு சொன்னார்கள்: "இங்கு எங்களை ஜெர்மானியர்கள் சித்திர வதை செய்ததுபோல நாங்கள் இறந்து ஸ்வர்க்கம் சென்றபின் நாங்கள் ஜெர்மானியர்களை சித்திர வதை செய்வோம்." (இது சரித்திரத்திலிருந்து வரையப்பட்டிருக்கிறது). இந்த இடங்களில் இதற்குமுன் பிரஷ்யா ஜனங்கள் ருஷ்யப் பெண்மணிகளைத் துன்புறுத்தி இருக் கிறார்கள். சிக்ஷாகாலம் வந்துவிட்டது. இது ஸ்வர்க்கத்திலில்லை. இந்த பூமியிலேயே தோன்றிவிட்டது.

கோனிக்ஸ்பர்க்கில் பொறியில் அகப்பட்ட எலிகளைப்போல ஜெர்மானியர்கள் தவிக் கிறார்கள். யூக்ரேனின் கவர்னரான கோச்சினின் அழுகைகளும் அல்லது ரக்ஷகப் படையின் முயற்சிகளும் அவர்களைக் காப்பாற்றமுடியாது.

அவர்களுக்கு பிரியமுள்ள மின்னல் தாக்குதலை அவர்கள் ஞாபகப்படுத்திக்கொள்ளட்டும். இது மிகுதியாகத் தேவையென்று அவர்கள் விரும்பினார்கள். அது கிடைத்துவிட்டது. உலகம் இவ்விதமான முன்னேற்ற யுத்தத்தை இதுவரையில் பார்த்ததில்லை. கிழக்கு பிரஷ்யா, மேற்கு பிரஷ்யா, சைலீஷியா, போமரேனியா முதலியவைகள் ஒன்றன்பின் ஒன்றாக விழுந்துவிட்டன. பிராண்டன்பர்க் மீது கடுமையான பீரங்கிப் பிரயோகம் நடை பெறுகிறது. அபூர்வமான பெயர்களை வெளியிடும் அரசாங்க வெளியீடுகள் தேவையென்று பெர்லினர்கள் வேண்டிக்கொண்டார்கள். சித்திபராணி, பியாடிகோர்ஸ்க், அப்ரா டர்சோ என்று கேள்விப்பட ஆசைப்பட்டார்கள். அவர்கள் இப்பொழுது கேள்விப்படுவதெல்லாம் அவர்களுக்குத் தெரிந்த நகரங்கள். இந்தத் துயரம் சகிக்கமுடியவில்லை. ஒரு ஸ்திரீ



மற்றவளிடம் பின்வருமாறு சொல்லுகிறாள். "எதிரிகள் வோல்டன்பர்க்குக்குள் நுழைந்து விட்டார்கள்."

நாம் குதூஹலத்துடன் சில பெயர்களை வெளியிடுவோம். லுகாட்ஸ், கிருயிஸ், ஷ்ரோம்பெனன், நெஸ்ஸல்பெக், ஹோர்னக், சாண்டோவிட்ஸ், ஷ்வீண்டேவின், ஸ்ட்ரோப் பன், பிரஸ்னிட்ஸ்.

## காலக்கோளாறு.

சிக்ஷாகாலம் வந்துவிட்டது. எதிரிகள் கிழக்கு பிரஷ்யாவிலும், போஸ்னானிலும், தார்னிலும் மற்ற பன்னிரெண்டு இடங்களிலும் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே போர் அவர்களைத்தாண்டி மேற்குப்பக்கம் சென்று விட்டது. அவர்கள் வெற்றி முரசு அடித்துவந்தார்கள். ஹிட்லர் ஓடிவிட்டதினால் அவர் களை ஹிட்லர் இழந்துவிட்டான்.

வெறிபிடித்த ஜெர்மானியர்களை ஹிட்லர் எவ்விதம் ஆச்வாசப்படுத்தினான். குயிஸ்லிங்க் வந்துவிட்டான். "ஜெர்மனியின் இறுதி வெற்றிக்குப்பின் நார்வேயை எவ்விதம் ஆளுவதென்று முடிவு செய்துவிட்டோம்" என்று ஹிட்லர் சொன்னான். அந்தப் போக்கிரி இன்னும் தன்னுடைய வித்தையைக் காண்பிப்பான். பெர்லினிலிருந்து இப்பொழுது கால்நடையாக ஓடும் ஜெர்மானியர்கள் நார்வேயின் எதிர்கால வாழ்க்கையைப்பற்றி எவ்வாறு நினைக்கிறார்கள் என்று அறிவது ருசிகரமாகயிருக்கும். ஹிட்லரும், குயிஸ்லிங்கும் சந்தித்துப் பேசினார்களா என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் கூடிப் பேசியிருந்தால் யாரை முதலில் தூக்கிலிடுவது என்ற விஷயத்தைப்பற்றித்தான் அவர்கள் பேசியிருக்கக்கூடும்.

ஜெர்மானியர்களுக்கு அதிகமான நுண்ணறிவு கிடையாது. அவர்களை ஆடுகளும் கிளி களும் கலந்த வகுப்பினர் என்று சொல்லலாம். மூன்று வருஷங்களுக்குப்பின் மாஸ்கோவில் தோல்விபெற்றதற்கு ஹிட்லர் மாரிகாலத்தின்பேரில் குற்றம் சாற்றினான். "அந்த நாட்டின் சீதோஷ்ண ஸ்திதி நமக்கு பழக்கமானதல்ல" என்று அவன் சொன்னான். இன்று "ஏரி களும், நதிகளும் பனி உறைந்திருப்பதினால் ருஷ்ய முன்னேற்றத்திற்கு சாதகம் ஏற்பட்டிருக் கிறதென்று" ஜெர்மன பத்திரிகைகள் வெளியிடுகின்றன. ஒருக்கால் பொமரேனியாவி னுடையவும் கிழக்கு பிரஷ்யாவினுடையவும் சீதோஷ்ண ஸ்திதியை ஹிட்லர் அறியவில்லை போலும். ஹிட்லர் யாரிடம் தன்னுடைய செய்கை நியாயமானதென்று சொல்ல முயலு கிறான். விவேகமற்ற ஜனங்களின் முன்பாகத்தானா? எவ்விதமிருப்பினும் அவர்களுக்கு விவேகமில்லை. அல்லது உலகத்தாரை ஆச்வாசப்படுத்த முயலுகிறானா. ஆனால் உலகம் ஒன்றைத்தான் கண்நோக்கிவருகிறது. பனிக்கட்டியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பெர்லினிலுள்ள தூக்குமேடையில் உலகம் கவனம் செலுத்திவருகிறது.

கிளார் சிடங்க் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது. "கிழக்குப் போர்முனை சம்பவங் கள் எவ்விதம் முடிவடையுமென்று ஜோஸ்யம் சொல்லுவது தவறாகும்." இந்த பத்திரிகை கீல் என்னுமிடத்தில் பிரசுரிக்கப்படுகிறது. அது மேற்கிலிருக்கிறது. கில் அமைதியுடனிருக் கிறது. கீலிலுள்ள ஜெர்மானியர்கள் பிரெஸ்லாவில் தாங்கள் இல்லையே என்று குதூகலப் படுகிறார்கள். "எங்களால் ஜோஸ்யம் சொல்லமுடியாதென்றும் சொல்லிவருகிறார்கள்." ஆனால் கிழக்குப் போர் பெர்லினில்தான் முடியுமென்று அவர்களும் அறிவார்கள்.

அட்லாண்டிக் கடல் தாண்டியிருப்பவர்களைத்தவிர மற்றெவரும் நிகழ்ச்சிகளின் முக்கியத் வத்தை அறியாமலில்லை. 1940-ம் வருஷத்தில் இருக்கிறோமென்று கடல் தாண்டிருப்பவர்கள் நினைக்கிறார்கள். "ஜெர்மானியர்கள் முன்னேற்பாடாகப் பின்வாங்குகிறார்களென்று" அவர்கள் செல்லுகிறார்கள். செம்படை பெர்லினுக்குள் நுழையும்பொழுது ந்யூ யார்க் டைம்ஸ் பத்திரிகை நிருபர் பின்வருமாறு எழுதுவாரென்று நினைக்கிறேன். "அநேகமாக ஜெர்மானி யர்கள் ருஷ்யப்படைத்தலைவரின் எண்ணம் நிறைவேறுதபடி தலைநகரத்தையே காலி செய்து விட்டார்கள்." அவர்கள் அவ்விதம்தான் பேசுவார்கள். இது அவர்களின் தொழில்.

## ஜெர்மனியை முறியடிக்க யுத்தம்.

நேசதேசங்களிலுள்ள எல்லா யோக்கியப் பொறுப்புள்ள பத்திரிகைகளும் செம்படை யின் முன்னேற்றத்தைப் பாராட்டிவருகின்றன. சென்ற வேனிற் காலத்தில் நேசதேசப் படைகள் செர்பர்க்கிலிருந்து பிரஸ்ஸல்ஸ் வரையில் முன்னேறியதை நாம் பாராட்டினோம். அவைகளைப்போற்றி வந்தபொழுதும் ருஷ்யப்படைகள் போப்ருயிஸ்கிலிருந்து விஸ்சுலா வரையில் முன்னேறித் தாக்கிவந்தன. ஒரு நாடகக்கொட்டகையில் சிலர் நடிக்கிறார்கள். மற்றவர்கள் அதைப் பாராட்டிக் கை கொட்டுகிறார்கள். ஆனால் போர்முனையில் எல்லோரும் போர் செய்கிறார்கள். தேவகோஷ்டியும் அல்லது ஸ்விஸ் வியாபாரிகளும்தான் கரகோஷம் செய்துவருகிறார்கள். ஆகையால் நேசதேசத்தார்கள் கூடிய சீக்கிரம் பெர்லின் விஷயத்தில் அக்கரை காட்டுவார்களென்று நினைக்கிறேன்.

சில அமெரிக்கர்கள் பந்தயம் வைக்கிறார்கள். அவர்கள் யார் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவோர், நாளைக்கு காலநிலை எவ்விதமிருக்கும் என்பதிலெல்லாம் பந்தயம் வைப்பார்கள். "செம்படையின் முன்னேற்றம் இந்த யுத்தத்தில் கடைசியானதா அல்லது இன்னும் ஒன்று பாக்கியுள்ளதா" என்று இப்பொழுது அவர்கள் பந்தயம் வைக்கவேண்டும். ஜோஸ்யங்களெல்லாம் கற்பிதமானவையென்றும் விஸ்பணியுள்ளவர்கள்தான் இத்துறையிலீடுபடவேண்டுமென்றும் நான் நினைக்கிறேன். இது கடைசித்தாக்குதலாவென்பது பந்தயம் வைப்பவர்களைப் பொருத்திருக்கிறது. செம்படை சம்பந்தப்பட்டமட்டில் அது யுத்தத்தை நீடிப்பதாக உத்தேசிக்கவில்லை. "கிலர் ஸிடங்கின்" ஆசிரியர்களை சந்தேசப்படும்படிக்கும் அல்லது பந்தயம் வைக்கிறவர்களுக்கு ஆர்வம் உண்டாகும்படிக்கும் செய்வதாக அதற்கு உத்தேசமில்லை. கூடுமானவரையில் ஜெர்மானியர்களை சீக்கிரத்தில் ஒழிக்க நாம் முயற்சி செய்வோம்.

ஓடர் நதியிலுள்ள ஜெர்மானியர்களைவிட ரைன் நதியிலுள்ளவர்கள் மனித வர்க்கத்தனிடம் இரக்கமுள்ளவர்களென்று சிலர் சொல்லுகிறார்கள். இவைகள் சர்ச்சைக்கு லாயக்குள்ளவைகள் என்று நான் நினைக்கவில்லை. எங்கிருந்தாலும் ஜெர்மானியர்கள் ஒரே மாதிரிதான். மேற்கு ஜெர்மனி விமானத் தாக்குதலின் சிக்ஷையை அனுபவித்து வருகிறது. இந்த முறையில் ஜெர்மானியர்களுக்கு ஒரு உணர்ச்சியும் ஏற்படாது. அழிவுக்கும் மகத்தான வெடிகுண்டைவிட கைத் துப்பாக்கிதான் அவர்கள் விஷயத்தில் உபயோகமுள்ளது. கோலோனிலும் பிராங்க்பர்ட்டிலுமுள்ள ஜெர்மானியர்கள் இன்னும் சிக்ஷிக்கப்படவில்லை. ஓப்பெல்ன், கோனிக்ஸ்பர்க், பிரெஸ்லாவிலுள்ள ஜெர்மானியர்கள் ஏற்கனவே சிக்ஷிக்கப்பட்டுவிட்டார்கள்.

### ஜெர்மானியர்கள் படிப்பினையை ஏற்க மறுக்கிறார்கள்.

அவர்களுக்கு சிக்ஷை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அது போதிய அளவுக்கில்லை. எல்லோரும் சிக்ஷிக்கப்படவில்லை. இன்னும் அநேகர் பெர்லினிலிருக்கிறார்கள். ஹிட்லர் இன்னும் ஜீவித்திருக்கிறான். அவனைத் தூக்கிலிட்டபாடில்லை. இன்னும் ஜெர்மானியர்கள் ஜீவித்திருக்கிறார்கள். மடிந்து போகவில்லை. அவர்கள் இறுதிவரையில் அவிவேகிளாக இருந்து வருகிறார்கள். பெர்லினிலிருந்து தப்பி ஓடி வந்த நடு நிலைமை வகிப்பவர் ஜெர்மானியர்கள் ருஷ்ய ஸ்திரீகளையும், பெண் மணிகளையும் குழந்தைகளையும் பெர்லின் நகரத்தில் துறத்தியடிக்கிறார்களென்று சொல்லுகிறார். இந்த துர்பார்க்கியமுள்ளவர்கள் எங்கு துறத்தியடிக்கப்படுகிறார்கள்? எவ்விதக் கொடுந்துன்பங்களுக்கு உட்படுத்தப்படப் போகிறார்கள்? இந்த கோரமான தோற்றத்தை நாம் ஒரு நாளும் மறந்துவிடமாட்டோம். கிலி பிடித்த, யுத்தத்தை இழந்த ஜெர்மானியர்கள் தற்காப்பற்ற ருஷ்யக் குழந்தைகளைப் பழிவாங்கும் முறையில் துன்புறுத்தி வருகிறார்கள். இவ்விதமான குற்றவாளிகளுக்கு கருணையும் சலுகையும் காட்டவே முடியாது.

ஒன்றையும் நாம் மறந்துவிடமாட்டோம், நாம் போமரேனியா வழியாக முன்னேறுகிறோம். ஆனால் நம்முன் அழிவுபட்ட, ரத்தம் தோய்ந்த ருஷ்யா நிற்கின்றது ஸ்மாலென்ஸ்கிலும், ஓரலிலும் எதிரி செய்த பொசுக்கல் வேலையின் துர்க்கந்தத்தை நாம் பெர்லினுக்கு எடுத்துச் செல்லுவோம். கோனிஸ்க்ஸ்பர்க்கின் வாசற்படியிலும், பிரெஸ்லாவிலும், ஷ்னிடமுஹலிலும் நாம் வாரனேஷ், ஸ்டாலின்கிராடின் அழிவை மறுமுறைக் காண்கிறோம். லெனின்கிராட்டின் முற்றுகையை அகற்றிய நடவடிக்கை எல்லோராலும் கொண்டாடப்படுகிறது. ஆனால் நாம் முற்றுகையைப் பற்றிச் சற்றுவது யோசனை செய்தோமா? "அம்மா, ரொட்டித்துண்டு" என்று அலறிக்கொண்டு உயிர் துறந்த குழந்தைகளைப் பற்றி நமக்கு ஞாபகம் வந்ததா? ஜெர்மனியின் நகரங்களை அழித்து வரும் ருஷ்யப் படைகள் லெனின்கிராட்டிலுள்ள தாய்மார்கள் குழந்தைகளின் சவங்களைப் புதை குழிகளுக்கு வண்டிகளில் இழுத்துச் சென்றார்களென்பதை மறந்துவிடக் கூடாது. லெனின்கிராட்டின் வீரத்திற்கு அதற்கு கௌரவம் கிடைத்துவிட்டது. ஆனால் லெனின்கிராட் அனுபவித்த கஷ்ட நிஷ்டூரங்களுக்கு பெர்லின் இன்னும் சிக்ஷிக்கப்படவில்லை.

### பீரங்கிக் குண்டுகளுக்கும் உறைபனிக்கும் மத்தியில்.

ஆனால் பெர்லின் எல்லாக் கஷ்டங்களையும் வெகு சீக்கிரத்தில் அனுபவிக்கும். புடனேவ்காவில் கற்ப ஸ்திரீகளின் கற்பை அழித்த ஜெர்மானியர்களின் அக்கிரமத்திற்கு அது சிக்ஷிக்கப்படும். சிறு குழந்தைகளை ஆகாயத்தில் வீசி எறிந்து "இது ஒரு புதிய விளையாட்டு" என்று சொல்லிக்கொண்டு குழந்தைகளைச் சுட்ட கொலைக்கு பெர்லின் சிக்ஷிக்கப்படும். லெனின்கிராட் பகுதியில் ருஷ்ய ஸ்திரீகளை உயிருடன் தீக்கிரையாக்கி "இவர்கள் மாமிசமில்லாமல் வைக்கோலால் செய்யப்பட்டவர்களைப்போல தீப்பற்றி எரிகிறார்கள்" என்று சந்தோஷப்பட்ட ஜெர்மானியர்களுக்காக பெர்லின் சிக்ஷிக்கப்படும். வயது முதிர்ந்த யூதர்களை தலைகளை மட்டும் பூமிக்கு மேல் வைத்து மற்ற பாகங்களை உயிருடன் பூமிக்குள் புதைத்துவிட்டு



"இவைகள் அழகான பூந்தோட்டமாகயிருக்கின்றன" என்று சொன்ன ஜெர்மானியர்களுக்காக பெர்லின் சிக்ஷிக்கப்படும். பெர்லின் இன்னும் மற்ற அக்கிரமங்களுக்காவும் சிக்ஷிக்கப்படும். பெர்லினும் இன்னும் வெகு தூரத்திலில்லை.

ஜெர்மானியர்கள் ஓலமிடுகிறார்கள், அவ்ஸ்தைப்படுகிறார்கள், உறுமுகிறார்கள். ஜெர்மனியின் அக்கிரமக்காரர்கள் பீரங்கி குண்டுகளுக்கும் மூடுபெனி மழைக்கும் மத்தியில் அங்குமிங்கும் திண்டாடுகிறார்கள். அவர்கள் ஓட பிரியப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஓடி ஒளிய இடமில்லை.

பெர்லினுக்குச் செல்லுங்கள். இதைவிட உத்சாகமூட்டக்கூடிய வார்த்தைகள் நமக்கு இல்லை. இந்த வார்த்தைகள் இறந்தவர்களையும் உஜ்ஜிவிக்கச் செய்யும். இந்த வார்த்தைகள் தான் நமக்கு ஜீவாதாரம். நாம் செய்த தியாகங்களும் கஷ்ட நஷ்டங்களும் துயரங்களும் வீணானவையல்லவென்று அந்த வார்த்தைகள் வெளிப்படுத்தும்.

நமக்கு யார் தடை செய்ய முடியும். ஜெனரல் மோடலா அல்லது புதிய உலக அமைப்பா அல்லது ஜெர்மன் உள்நாட்டு ரக்ஷகப்படையா தடை செய்ய முடியும். அவை எல்லாம் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் இனிமேல் அடிக்கவேண்டியது தான், ஓலமிடவேண்டியதுதான். கிலி அதிகரித்துவிட்டது. சிக்ஷாகாலம் வந்துவிட்டது.

---

## ஜெர்மனியின் தெற்கு தற்காப்புகள்.

### இயற்கையான கோட்டைகள்.

(ஆஸ்வால்ட் டச்சு.)

கெஸ்ஸல்ரிங்கின் 27 டிவிஷன் படைகளும் வடக்கு இதாலியில் ஜனவரி மாதத்தில் ஒவ்வொரு அங்குலமாக தற்காப்பு செய்துவந்தபொழுதும் ஜெர்மனியின் கவசம்பூண்ட படைகள் புடாபெஸ்டைச் சுற்றிலும் பலமாகத் தாக்கி ருஷ்யப் படைகளை முன்னேறவொட்டாமல் தடுத்துப் பின்புறம் தள்ளிவந்த பொழுதும் ஹிட்லர் வடக்குப் போர்முனையை காலி செய்துவிட்டு அதன் மூலம் வடக்கு ஜெர்மனியையும் பெர்லினையும் அநேகமாக தியாகம் செய்துவிட்டான. ஜெர்மனியின் சிறந்த படைகளையும் கவசம்பூண்ட படைகளையும தெற்கிலும் தென்கிழக்கிலும் போர்புரிய வைக்கப்பட்டிருப்பதும் வடக்கிலுள்ள தற்காப்புகளை மூல பலமும் பொதுஜன ரக்ஷகப் படையும் காபந்து செய்வதும் அகஸ்மாத்தாக ஏற்பட்ட காரியமா அல்லது இந்த நடவடிக்கைகளுக்கு வேறு லக்ஷியங்களுண்டாவென்று கேட்கிறேன். நவீன டாங்கிகளின் தாக்குதல்களை சமாளிக்க முடியாத பிராந்தியமாகிய வடக்கு ஜெர்மனியின் மகத்தான சமவெளியை விட்டுவிடவும் தெற்கு ஜெர்மனியிலுள்ள மலை பிரதேசங்களையும் விசேஷமாக ஆல்ப்ஸ் மலையைச் சுற்றியுள்ள மாகாணங்களான ஆஸ்திரியாவையும், பவேரியாவையும் காப்பாற்றுகிறதென்று ஹிட்லர் முடிவு செய்து விட்டானா? என்றும் கேட்கிறோம்.

சமீப சில மாதங்களில் நாஸிகள் இன்ஸ்பர்க், கான்ஸ்டென்ஸ் ஏரி, மூனிச், ஸால்ஸ்பர்க்குக்குட்பட்ட பிராந்தியத்தில் பூமிக்குள் பிளக்கமுடியாத ஒரு கோட்டையைக் கட்ட அபாரமான முயற்சி செய்துவருகிறார்களென்று நாம் அறிவோம். ஓபர்கால்ஸ்டார்க்கிலுள்ள ஹிட்லரின் மலைவாசஸ்தலம் நாஸிகளின் வாசஸ்தலமாக அமைக்கப்பட்டுவிட்டது. ஸால்ஸ்காபர்கட்டிலும், வாட்ஸ்மான், ஸக்ஸ்பிட்ஸைச் சுற்றிலுமுள்ள பூமிக்குள்ளிருக்கும் உப்புச் சுரங்கங்களும், வசந்த மண்டபங்களும், குகைகளும், குழிகளும், உணவுப் பொருள்களையும் வெடி மருந்துகளையும் சேமித்து வைக்கும் கிட்டங்கிகளாகத் திருத்தியமைக்கப்படுகின்றன. அங்குள்ள பொதுஜனங்களும், விவசாயிகளும் ஏற்பாடாக வெளியேற்றப்படுகிறார்களென்றும் ஆயிரக்கணக்கான S. S. மனிதர்களும், S. A. மனிதர்களும் விவசாயத்துக்குரிய நிலங்களை வசப்படுத்திக்கொண்டுவிட்டார்களென்றும் அடிக்கடி சொல்லப்படுகிறது. மேலும் தரை மட்டத்திலும் தரைக்குள்ளும் மிகவும் நூதனமான தற்காப்பு முறைகளும், இரும்பினாலும், காங்கிரீட்டும் அமைக்கப்பட்ட ரஸ்தா அடைப்புகளும், மலைகளுக்குள் செல்லும் ஆளைத் தூக்கிச்செல்லும் சாதனங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று கேள்விப்படுகிறோம். மலைகளின் உள் பக்கங்கள் குடையப்பட்டு பூமிக்குள் தொடர்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் பள்ளத்தாக்குகளும், ரஸ்தாக்களும் சந்திக்குமிடங்களில் பீரங்கிகளும், யந்திர பீரங்கிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் பெரிய மலைக் குன்றுகள் வேர் பிடுங்கலாக பிடுங்கப்பட்டு முன்னேறும் எதிரிகள் பேரில் உருட்டிவிடத் தயாராக இருக்கின்றனவென்றும் சொல்லப்படுகிறது. இந்தத் தற்காப்புகளுக்கு உதவியாக சுரங்கவெடி பாவப்பட்ட ஸ்தலங்களும், டாங்கிகளை அழிக்கும் பொறிகளும் ரஸ்தாக்களில் அடைப்புகளும், தற்காப்பு பெட்டிகளும் இருக்கின்றனவாம். நடுநிலைமை நாடுகளிலிருந்து வரும் இந்த ரிபோர்ட்டுகளை கவனித்தால் சென்ற ஆறு வருடங்களாக [illegible] எஞ்சினியர்கள் திட்டம் போட்ட மிகவும் நவீன முறையிலுள்ள தற்காப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று

சொல்லவேண்டும். இந்த விருத்தாந்தத்தின் ஒரு பாகம் உண்மையென்று வைத்துக் கொண்டாலும் மற்றொரு விஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். செம்படைகள் கிழக்கு பிரஷ்யா, சைலீஷியா, பிராண்டன்பர்க் முதலிய இடங்களை ஆக்கிரமித்து வந்தபொழுது முக்கியமான பான்ஸர் படைகளும் ஜெனரல் பிரிஸ்னரிடமுள்ள மூலப்படைகளும் டான்யூப் நதிக்கும் பிளாட்டன்ஸிக்கும் மத்தியில் பதில் தாக்குதல் முறையில் மாவிஞேவிஸ்கியையும் டால்புகினையும் தாக்குவதில் ஏவப்பட்டன. பெர்லினையும் வடக்கு ஜெர்மனி பூராவையும் தாக்கிவரும் ருஷ்யப்படைகளை வடக்கில் தேக்கிவிடுவதைவிட வீயன்னாவையும் ஆல்ப்ஸையும் நோக்கிவரும் செம்படையின் முன்னேற்றத்தைத் தடுக்க வேண்டியதில்தான் ஹிட்லரும் அவனுடைய ஜெனரல்களும் கவலைகொண்டார்களென்று தெரியவருகிறது.

யுத்த தந்திர முறையில் நாஸிகள் தெற்கு ஜெர்மனியில் கடைசியாக நிலைத்துநிற்க ஏன் முடிவு செய்தார்களென்பதையும் பெர்லினையும் ஸ்டெட்டினையும் காப்பாற்றுவதைவிட வீயன்னாவையும் மூனிக்கையும் தற்காப்பு செய்வது சுலபமென்று அவர்கள் ஏன் எண்ணி விட்டார்களென்பதையும் அறிந்துகொள்ளுவது சிரம சாத்யமானதல்ல.

வடக்கு ஜெர்மனி பூராவும் ஒரு பெரிய சமவெளிதான். சிற்சில நதிகளிருக்கின்றன. தற்காப்புக்கு அங்கு யாதொரு சௌகரியங்களுமில்லை. பிரெஸ்லாவிலிருந்து காட்பஸ், டிரெஸ்டன், லிப்சிக், ஹால், மாக்டிபர்க், ஹானோவர், ஆஸ்னாப்ருக் வழியாக ஹாலந்திலுள்ள ஆர்ன்ஹீம் வரையில் ஒரு கோட்டை இழுத்தால் அதற்கு வடக்கில் ஒரு மலைக் குன்றுகூட கிடையாது. சிற்சில இடங்களிலுள்ள குன்றுகள் கடல் மட்டத்திற்கு 600 அடிகளுக்கு மேற்போனவையல்ல. தரை சமவெளியாக இருப்பதுடன் குறுக்கு நெடுக்காக மிகவும் சிலாக்யமான ரஸ்தாக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் டாங்கிகள் நடமாடுவதற்கு அது சிறந்த பிரதேசம். மேலும் இந்த வருஷத்தில் ஜெர்மனியில் மாரிகாலம் மிகவும் கடுமையாக இருக்கிறது. இடையூறாக இருக்கக்கூடிய ஏரிகளும், நதிகளும் பனி உறைந்து இருக்கின்றன. அவைகள் கவசம்பூண்ட படைகளின் முன்னேற்றத்துக்குக் தடங்கல் செய்யாததுடன் சௌகரியத்தையும் அளிக்கின்றன.

தெற்கு பிரதேசத்தின் அமைப்பு மாறுபாடானது. வீயன்னாவில் ஆரம்பித்து தெற்கிலும் மேற்கிலும் வரவர உன்னதமாக இருக்கும் ஆல்ப்ஸ் மலையைப்போல செகோஸ்லாவேகியாவின் வடக்கு எல்லைச் சரகத்தில் ஆரம்பமாகி பவேரியா, சாக்ஸனி, ஆஸ்திரியா வரையில் பரவியிருக்கும் மலைகள் மிகவும் உபயோகமுள்ள இயற்கையான அரண்கள். கார்பேதியன் அல்லது ஆல்ப்ஸ் மலைகளைப் போல செகோஸ்லாவேகியாவின் எல்லைச் சரகத்திலுள்ள மலைகளும் டாங்கி சண்டைக்குச் சௌகரியமற்றவை. போலந்திலும், சைலீஷியாவிலும், கிழக்கு பிரஷ்யாவிலும் பிராண்டன்பர்க்கிலும் நவீன முறையில் மனிதயத்தினத்தினால் அமைக்கப்பட்ட எல்லா அரண்களும் ருஷ்ய டாங்குகளின் முன்னேற்றத்தைத் தடுக்கமுடியவில்லையென்றும் அது போல் பிரான்ஸிலும் ஆக்கனைச் சுற்றியும் அமைக்கப்பட்டிருந்த அரண்களும் பயன்படவில்லையென்றும் நாஸிகள் நன்கு அறிந்துகொண்டார்கள்.

காசினோவிலும் மத்திய இதாலியிலுள்ள மலைகளிலுள்ள மற்ற இடங்களிலும்போல் மனிதனால் அமைக்கப்படும் தற்காப்புகளுக்கு பெரிய மலைகள் இயற்கையாக உதவி செய்தால் தான் கேந்திர ஸ்தானத்தை இழக்கும்படி நேரிட்டாலும் இரண்டாவது, மூன்றாவது அகழ்களை அமைக்க முடியும். நாஸிகள் கடைசியாக நின்று போராட திட்டம் போட்டிருப்பதில் இந்த பாவத்தையும் மதித்துத்தான் பார்த்திருக்கவேண்டும். ஜெர்மன் படைகள் வீழ்ச்சி பெற்றால் S. S. படைகள் தொடர்ச்சியாக எதிர்த்துப் போராடுவதற்கு தெற்கு ஜெர்மனியிலுள்ள இயற்கையான தற்காப்புகள்தான் சௌகரியமளிக்கும். பெர்லினையும் வடக்கு ஜெர்மனியையும் நாஸிகள் காரணத்தை முன்னிட்டும் அல்லது அலக்ஷிய புத்தியினாலும் கைவிட்டுவிட்டார்களென்று எண்ணுவது தவறாகும். ஆகிலும் நாம் கேள்விப்படுவதிலிருந்து துணிவும் ஊக்கமுமுள்ள நாஸிகள் வடக்கு சமவெளியையும், பெர்லின், ஸ்டெட்டின், ஹாம்பர்க், பிரெமன், முதலிய நகரங்களையும் தற்காப்பு செய்வதைவிட தெற்கிலுள்ள ஒவ்வொரு இடத்தையும் தற்காப்பு செய்வதென்று முடிவு செய்து விட்டார்களென்று தோன்றுகிறது.

## ஜெர்மனி நிலக்கரி உற்பத்தியில் பாதி பாகத்தை இழந்துவிட்டது.

### சைலீஷியாவிலுள்ள தொழிற்சாலைகளைக் கைப்பற்றியதின் அர்த்தம்.

(ஆல்வால்ட் டர்சு).

வடக்கு சைலீஷியாவிலுள்ள தொழிற்சாலை பிரதேசத்தையும் டெப்ரோவா, ஐவோர்ஸனேவையும் செம்படை பிடித்த பின் ஜெர்மனி ஒரே மூச்சில் அதன் நிலக்கரி உற்பத்தியின் பாதி அளவை இழந்துவிட்டது. அந்தப் பிரதேசங்களிலிருந்து ஒரு வருஷத்துக்கு 110 மிலியன் டன்கள் எடையுள்ள நிலக்கரி எடுக்கப்படுகிறது.



தற்போதிய ருஷ்யத் தாக்குதலில் மட்டும் ஜெர்மனியின் யுத்த யந்திரத்துக்கு இது அபாரமான பொருளாதார நஷ்டமாகும். வடக்கு சைலீஷியாவை விட ஜெர்மனிக்கு ரூர் பிரதேசத்தில் தான் அபாரமான நிலக்கரிச் சுரங்கங்களிருக்கின்றன. நேசதேசத்தாரின் இடைவிடாத வெடி குண்டு வீச்சின் காரணமாகவும், யந்திர சாதனங்களும் போக்குவரத்து மார்க்கங்களும் சாதனங்களும் அழிக்கப்பட்டுவிட்டதாலும் ரூரில் உள்ள சுரங்கங்களின் உற்பத்தி வருஷத்துக்கு 100 மிலியன் டன்களுக்குக் குறைந்துவிட்டது. ஹிட்லர் வசமுள்ள பாக்கி நாடுகளிலிருந்து ஒரு வருஷத்திற்கு 15 அல்லது 20 மிலியன் டன்கள் நிலக்கரி தான் கிடைத்து வருகிறது.

அநேக மாதங்களாக ஜெர்மனியில் நிலக்கரிக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. டானெட்ஸ் நதிக்கரையிலுள்ள சுரங்கங்களுடன். பிரான்ஸ், பெல்ஜியம், லக்ஸம்பர்க் முதலிய இடங்களிலுள்ள சுரங்கங்களையும் ஜெர்மனி இழந்துவிட்டது. ஸார் மாகாணத்தில் முதல் தரமான போர் நடைபெற்றது. இதன் காரணமாக பொதுஜன வாழ்க்கைக்குத் தேவையானவைகளுக்கும் ஜெர்மன் இருப்புப் பாதைகள், உள் நாட்டுப் போக்குவரத்துகள். முதலியவற்றின் தேவைகளின் பாதி அளவுக்கும், வாயு, மின்சார உற்பத்திசாலையின் தேவையின் பெரும் பாகத்துக்கும் வடக்கு சைலீஷியாவிலிருந்த நிலக்கரி உபயோகப்படுத்தப்பட்டது. கடைசியாக, ரூரிலிருந்து மிகுதியாகவும் போதுமான அளவுக்கும் நிலக்கரி கிடைக்காததால் தொழிற்சாலைகளின் தேவைக்கும் சைலீஷியாவிலிருந்து நிலக்கரி அனுப்பப்படவேண்டியதாயிற்று. ஆகையால் வடக்கு சைலீஷியாவை ஜெர்மனி இழந்ததிலிருந்து பொதுஜனங்களுக்குத் தேவையான நிலக்கரியும், வாயுவும் மின்சாரமும் உடன் காலத்தில் குறைந்துவிட்டன. ரெயில்வே போக்குவரத்து அதமபக்ஷமாகக் குறைந்துவிட்டது. தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படும் நிலக்கரியும் அபாரமாகக் குறைந்துவிட்டது என்று ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை மற்ற ஆதாரங்களிலிருந்து ஈடு செய்ய முடியாது. அத்யாவச்யமான உற்பத்திகளையும் நடத்த முடியாது. நிலக்கரி மட்டும்தான் நஷ்டமாகிற்று என்று எண்ணுவது தவறு. இயற்கைப்பொருள்களிலும் ஜெர்மனி, போலந்து, செகோஸ்லாவேகியா மூன்றும் சேருமிடத்திலுள்ள முக்கோண வடிவமான கருப்பு பிரதேசம் ஜெர்மனியின் சேர்க்கை எண்ணையில் 10 சதவிகிதத்தை சப்ளை செய்து வந்தது. அதில் பாதி பாகம் பெட்ரோல் ஆகும். ஜெர்மனியின் துத்தநாக உலோக உற்பத்தியில் 60 சத விகிதமும் ஈயத்தின் உற்பத்தி அளவில் 60 சத விகிதமும் இயற்கை ரப்பர் உற்பத்தியில் 20 சத விகிதமும் மற்ற உலோகங்களும், ஜெர்மன் கந்தக உற்பத்தி அளவில் 10 சத விகிதமும், வெடி உப்பும் திராவகமும் இந்த பிரதேசத்திலும் கிடைத்து வந்தன. மேலே சொல்லிய தாதுப் பொருள்களை ஜெர்மனி இழந்துவிட்டது. வடக்கு சைலீஷியா தொழிற்சாலை பிரதேசம். ஏராளமான உலகங்களும் இரும்பு ஆலைகளும், தொழிற்சாலைகளும், ஓர்க்ஷாப்புகளும் சொல்பமான இடத்திற்குள் மிகுதியாக உள்ளதென் பதில் கியாதி பெற்றது. புகைப்போக்கிகளும் உலைகளும் எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் யந்திரங்களின் வேலை செய்யும் சப்தம் ஏராளமாக த்வனிக்கிறது. தொழிற்சாலை நகரங்கள் பூராவிலும் அடர்த்தியான புகை அநேக மைல்கள் வரையில் காணப்படுகிறது.

300 சதுர கிலோமிடர்களுக்குள்ளாக அநேக ஜன நெருக்கமுள்ள நகரங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றிலும் 1,00,000க்கு மேற்பட்ட ஜனங்களிருக்கிறார்கள். முக்கியமானவை, கிளிவிட்ஸ், ஹிண்டன்பர்க், பௌதன், கோனிக்ஸ்ஹூயட், காப்போவிட்ஸ், டாம்புரோவா, காச்ஞேவில், பிஸ்மார்க்ஸஹூயட். இந்தக் கருப்பு நிறமுள்ள புகை சூழ்ந்த நகரங்களிலுள்ள தொழிற்சாலைகள் டாங்கிகளுக்குத் தேவையான கவசத்தகடுகள், ரெயில்வே எஞ்சின்கள், ரெயில்வே வண்டிகள், தண்டவாளங்கள், இரும்புக் குழாய்கள் முதல், பீரங்கிக் குண்டுகள், வெடி மருந்துகள், விமானங்களின் பாகங்கள், மின்சார தளவாடங்கள் வரைக்கும் மற்றும் நவீன யுத்த முறைக்குத் தேவையான சகல விதமான பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன. 1943-ம் வருஷம் வசந்த காலத்திலிருந்து ஏராளமான கனமான யந்திரங்கள் ரூரிலிருந்து வடக்கு சைலீஷியாவுக்குக் கொண்டு போகப்பட்டன. நேசதேச விமானப் படை தாக்குதலிலிருந்தும் 1945-ம் வருஷம் ஜனவரி 15-ம் தேதி வரைக்கும் போர்முனைகளிலிருந்தும் பத்திரமானதென்று இந்த பிரதேசம் கருதப்பட்டது.

கடைசியாக இந்தப் பிரதேசத்தில் வருஷத்திற்கு $3\frac{1}{2}$ மிலியன் டன்கள் எடையுள்ள எஃகு உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. ஜெர்மனியின் பூரா எஃகு உற்பத்தி அளவில் இது கால் பாகமுள்ளது.

இவ்விதமான கனமான யுத்த தளவாட உற்பத்திகளை ஜெர்மனி இழந்துவிட்டதால் அதற்கு பதிலாக அது ஒன்றையும் அமைக்கமுடியாது. இந்த உண்மையை ஜெர்மன் பொருளாதாரத் தலைவர்களும் ஒவ்வொரு ஜெர்மன் தளகர்த்தரும் அறிவார்.

பெரும்பாலும் பாழாகியுள்ள ரூர் பிரதேசம் இந்த நஷ்டத்தை ஈடு செய்யமுடியாது. நாஸிகள் தொழிற்சாலைகளை முன்போல அவ்வளவு பலமாக நடத்த உத்தேசிக்கிறார்களா என்பது தான் இப்பொழுது முக்கியமான பிரச்னை. தொழிற்சாலைகளிலிருந்த லக்ஷக்கணக்கான தொழிலாளர்கள் போர்முனைக்கு, அனுப்பப்பட்டிருக்கிறார்கள். பீரங்கிகளை உற்பத்தி செய்வதைவிட பீரங்கிகளைச் சுடுவது தான் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் சேனைக்கு முக்கியத்வமுள்ளதென்று கருதுகிறார்கள். ஜெர்மனியின் மிகவும் முக்கியமான உற்பத்தி நிலயங்களை ஒவ்வொன்றாக இழந்த பின் ஜெர்மனி அதனிடமுள்ள மூலப்பொருள்களை வரும் அநேக மாதங்களில் உபயோகிக்கலாமென்று எண்ணியிருக்கிறதென்று தோன்றுகிறது.

ஜெர்மனி இழந்த 110 மிலியன் டன்கள் நிலக்கரியையும், 3½ மிலியன் டன்கள் எஃகையும் இரும்பு வார்ப்படைகளையும் யந்திர சாதனங்களையும் அது ஈடு செய்யமுடியாது. எஞ்சியுள்ள தொழிற்சாலைகளை நடத்துவதற்கும் அதனிடம் போதுமான வேலைக்காரர்களில்லை. அவைகளிலிருந்தவர்கள் போர்முனையில் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடு செய்துவரும் பொதுஜன ரக்ஷகப்படையில் சேர்க்கப்படுகிறார்கள்.

ஆகையால் இனிமேல் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் குவித்து வைத்திருக்கும் தளவாடங்களைத் தான் உபயோகித்து வரக்கூடும். இந்த முறை எவ்வளவு காலம் நீடித்து நிற்குமென்பதை அறிவது வெகு சுலபம்.

---

## கிரேரரின் முன்னேற்றத்திற்கு வழி தயாரிப்பது.

### இருப்புப்பாதையைத் துணிக்கும் நேசதேச மின்னல் விமானத் தாக்குதல்.

(விங்க் கமாண்டர் *L. V.* பிரேசர், பிப்ரவரி, 1945.)

வட மேற்கிலிருந்து ஜெர்மனிக்கு முன்னேறும் நேசதேசப் படைகளுக்கு சாதகமளிக்கக் கூடிய நடவடிக்கை முடிவடையும் பொழுது ஆகாயப்படை தரைப்படைக்குள்ள ஒன்றுபட்ட நடவடிக்கைக்கு அது சிறந்த உதாரணமாகும். யுத்த தந்திரம் பூராவும் இந்த நடவடிக்கையை அடிப்படையாகக்கொண்டது.

விமானப்படை மார்ஷல் கோனிஸ்க்ஹாமிடமுள்ள இரண்டாவது டாக்டிகல் விமானப் படை அமெரிக்க டாக்டிகல் விமானப்படையினுடையவும் தேவைப்படும் பொழுது இங்கிலாந்திலிருந்து வரும் பிரிடிஷ் அமெரிக்க கனமான வெடி விமானங்களுடையவும் ஒத்தாசையுடன் ஜெனரல் கிரேரரிடமுள்ள தரைப்படைகளுடன் நெருங்கி ஒத்துழைத்து வருகிறது.

கிரேரரின் படைகளின் முன்னேற்றத்திற்காக கனமான, நடுத்தரமான வெடி விமானங்களும், சண்டை விமானங்களும், சண்டை வெடி விமானங்களும் அவுட்வாணங்களைப் போடும் விமானங்களும் உபயோகப்படுத்தப்பட்டன. சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதும் கால நிலையில் சௌகரிய மேற்பட்ட பொழுதும் அவைகள் ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஒத்தாசை செய்து வருகின்றன. பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த பாம்பர் படைகளும் அமெரிக்க 8-வது விமானப்படையும், பிரிடிஷ், அமெரிக்க டாக்டிகல் விமானப்படையும் முன் ஜாக்கிரதையுடன் தயாரிக்கப்பட்ட திட்டப்படி வேலை செய்து வருகின்றன. இந்த திட்டம் எந்த நெருக்கடியையும் சமாளிக்க விரிவாக உள்ளது.

பிப்ரவரி 8-ம் தேதியன்று நிஜ்மேகனுக்குத் தென் கிழக்கில் துவக்கமான கனடிய சேனையின் முன்னேற்றத்துக்கான தயாரிப்புகள் அநேக வாரங்களாக நடைபெற்று வந்தன. பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த இரண்டாவது டாக்டிகல் விமானப்படையைச் சேர்ந்த கோஷ்டிகள் ரூரிலிருந்து வட கிழக்கு நோக்கிச் சென்ற இருப்புப்பாதை போக்குவரத்துகளை நொருக்கி வந்தன. இந்தப் போக்குவரத்துகள் பெர்லினை நோக்கி வரும் ருஷ்ய முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றுவரும் படைகளின் உபயோகத்திற்கு அனுப்பப்பட்டன. ரைன் நதி, மன்ஸ்டர், ஒஸ்னாபிரக்கிலுள்ள எதிரியின் விமான தளங்கள் பேரில் அடிக்கடி ரோந்து செய்யப்பட்டு வந்தது. மாஸ் நதிக்கும் ரைன் நதிக்குமிடையில் எதிரி உபரிப்படைகளைக் குவிக்காமலும் அல்லது விமானப்படைகளை உதவிக்கு அனுப்பாமலும் காபந்து செய்ய ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆகிலும் எதிரிகள் இதை அறியாவண்ணம் இந்த நடவடிக்கைகள் ரகசியமாக நடத்தப்பட்டன.

ஹானேவர் வரையிலுள்ள இருப்புப்பாதை அமைப்புகள் தாக்கப்பட்டன. பிப்ரவரி மாதம் 6-ம் தேதிக்குள் விமானப்படைகள் சாவதானமாக போர்முனை பிராந்தியத்திற்கு சமீபத்தில் குவிந்துவிட்டன. அன்று இரண்டாவது டாக்டிகல் விமானப்படை எதிரியின் போர்முனைக்குப்பின் உள்ள சர்பரா நிலயங்களுக்கும் படைமுகாம்களுக்கும் செல்லும் இருப்புப்பாதைகளைத் துணிக்கும் வேலையில் ஈடுபட்டன. இதைத் தவிர, மிச்சல், போஸ்



டன் விமானங்களும் எமரிக்கிலிருந்து கொஞ்ச தூரத்திலுள்ள எண்ணெய்க் கிட்டங்கி பேரில் வெடி குண்டுகளை வீசின. இந்த எண்ணெய்க் கிட்டங்கி ஒன்று தான் ரைன் நதியின் மேற்குக் கரையிலும் போர்முனை பிரதேசத்திலுள்ள முக்கியமான எண்ணெய் ஸப்ளை நிலயம்.

போர் ஆரம்பிக்குமுன் எதிரியின் போக்குவரத்துகளை நொருக்குவது தான் நமது முக்கியமான லக்ஷியம். அவ்விதம் செய்வதினால் ஒரு போர்முனையிலிருந்து மற்றொரு போர் முனைக்குப் படைகளை அனுப்புவதில் எதிரிக்கு மிகுதியான சங்கடம் ஏற்படும். சர்பராக்களை அனுப்புவது தடைபடும். பின்வாங்கும் மார்க்கங்கள் துணிக்கப்பட்டுவிடும் அல்லது மூடப்பட்டுவிடும். பிப்ரவரி 6-ம் தேதியன்று ஜெர்மனிக்கு மிகவும் முக்கியமான இருப்புப்பாதை 34 இடங்களில் துணிக்கப்பட்டது.

மறுநாள் இரவு, அதாவது நடவடிக்கை ஆரம்பிக்குமுன், பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த 700-க்கு மேற்பட்ட லங்காஸ்டர், ஹாலிபாக்ஸ் விமானங்கள் கோக்கையும் கிளீவையும் தாக்கின. இவைகள் சிறிய நகரங்கள் தான். ஆகிலும் அவைகள் முனனேறும் வழியில் மிகவும் முக்கியமான போக்குவரத்து மார்க்கங்கள். முஸ்தீப்புகளுக்கு அவைகள் தான் சாமான்களைக் குவிக்கக் கூடிய நகரங்கள். சிறிய லக்ஷியங்களை இவ்விதமாக பலமாகத் தாக்குவதிலிருந்து எதிரியின் அநேகர்களும் அவர்களின் சர்பராக்களும் அழிக்கப்பட்டுவிடுவதுடன் அந்த நகரங்கள் இடையூறு ஸ்தலங்களாக இருந்து கட்டடத்தூள்கள் நிறம்பிய ரஸ்தாக்களும் இன்னல்களை விளைவிக்கும்.

முன்னேறும் படைகள் கிளீவுக்குள் நுழைந்ததுடன் ஜெர்மன் யுத்தக் கைதி ஒருவர் வர்ணித்த பிரகாரம் விமானத் தாக்குதலால் விளைந்த நாசத்தை அவர்கள் கண்டார்கள். வெடி விமானங்கள் 4,000 ராத்தல் எடையுள்ள அநேக வெடி குண்டுகளை ஏற்றிச் சென்றன. கோக்கில் வெடி விமானங்கள் லக்ஷியங்கள் பேரில் மிகவும் தாழப்பறந்து வெடி குண்டுகளை வீசிய பொழுது குண்டுகளின் வெடிக்கும் அதிர்ச்சி விமானங்களுக்கும் ஏற்பட்டது.

பொழுது விடிந்தவுடன், கனடியத் தாக்குதல் ஆரம்பிக்குமுன் டாக்டிகல் விமானப் படை தாக்க ஆரம்பித்தது. அவைகளுக்கு மூன்று முக்கியமான அலுவல்களிருந்தன. (1) தரைப்படைகளை எதிரியின் விமானப்படை தாக்காமல் காபந்து செய்வது. (2) அவசியமான பொழுது தரைப்படைகளுக்கு உதவி செய்வது. (3) போர் பிராந்தியத்தை மற்ற இடங்களிலிருந்து துணித்துவிட்டு சர்பராக்கள் வராமலும் படைகள் பின்வாங்கிவிடாமலும் தடுத்துவிடுவது.

ஜெர்மன் விமானப்படை வெளிப்படாததைக் கண்டு பிரிடிஷ், அமெரிக்க விமானிகள் ஏமாற்றமடைந்தார்கள். ரோந்து செய்யும் சண்டை விமானங்கள் எதிரியின் விமான தளங்களைப் பலமாகக் கண்காணிப்புச் செய்து வந்தன.

பிப்ரவரி மாதம் 7-ம் தேதி இரவுக்கும் பிப்ரவரி மாதம் 9-ம் தேதி விடியற்காலத்துக்கும் மத்தியில் டாக்டிகல் விமானப்படை 2,500 தடவைகள் தாக்கியிருக்கின்றது. அந்த முறையிலேயே அதற்குப் பிந்திய நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

சௌகரியமான கால நிலையில் விமானத் தாக்குதலின் மூலம் ஏற்படக்கூடிய அழிவுக்குச் சிறந்த உதாரணமாக இரண்டாவது டாக்டிகல் விமானப் படையின் ஒரு நாளைய நடவடிக்கை விவரங்களை இங்கு கூறுவோம். ரூரிலிருந்து வரும் ஸப்ளை மார்க்கங்களில் 27 என்ஜின்கள் அழிக்கப்பட்டன, 63 பழுதுபடுத்தப்பட்டன. 161 சாமான் வண்டிகள் நொருக்கப்பட்டன. ரஸ்தாக்களில் 87 போக்கு வரத்து வண்டிகள் நொருக்கப்பட்டன. அன்று எதிரியின் ஒரே ஒரு குழல் வாயுவால் ஓடும் விமானமான Me. 262 தான் வானத்தில் தோன்றிற்று.

---

## வடக்கு இதாலியிலிருந்து கெஸ்ஸல்ரிங் பின்வாங்குகிறானா?

### துருப்புகள் வியன்னா போர்முனைக்குச் சென்றுவிட்டன.

ஸூரிக்கிலிருந்து வரும் அநேக ஆதாரங்களிலிருந்து கிடைத்துவரும் தகவல்கள் கெஸ்ஸல்ரிங் வடக்கு இதாலியைக் காலிசெய்யும்படி உத்தரவிட்டுவிட்டானென்றும் பிரென்னர் கணவாயைத்தாண்டி துருப்புகள் வந்துகொண்டிருக்கின்றனவென்றும் வெளிப்படுத்துகின்றன வென்று டெயிலி டெலகிராப்பின் ஸூரிக் நிருபர் எழுதுகிறார்.

புடாபெஸ்ட் ருஷ்யர் வசமாகிவிடுமென்று நிச்சயமாகத் தெரிந்தவுடன் இதாலிய நாடுகளைக் கைவிட்டுவிடும்படி ஹிட்லர் உத்தரவிட்டுவிட்டான் என்று சொல்லப்படுகிறது. சென்ற வார ஆரம்பத்தில் ஐந்து ஜெர்மன் டிவிஷன்கள் தங்களுடைய முஸ்தீப்புகளையும் சர்பராக்களையும் வண்டிகளில் ஏற்ற ஆரம்பித்தன. அதேசமயத்தில் தகுதியான வாசஸ்தலங்களை அமைக்க தெற்கு ஆஸ்திரியாவுக்கு படைகள் அனுப்பப்பட்டன. இதாலியை

விட்டு மோட்டார் படைகளும் காலாட் படைகளும் ஒரு பான்ஸர் கிரனேடியர் படையும் புறப்பட்டுவிட்டது.

இதாலிய ஸ்விஸ் எல்லைச் சரகத்திலிருந்து கடைசியாக வந்த தகவல்கள் பின்வருமாறு: "வெரோனு வழியாக பிரென்னர் கணவாய்க்கு ஏராளமான படைகள் போய்க்கொண்டேயிருக்கின்றன. மோட்டார் படைகள் வெகுவேகமாக டிரெவிஸியோ, லப்ஸ்ஜானு, மாரிபோர், கிரான்வழியாக வியன்னு போர்முனைக்கு விரைந்துசெல்லுகின்றன. ஆஸ்திரியாவின் தலை நகரத்தை ருஷ்யர்கள் தாக்குமுன் அப்படைகள் கேந்திரஸ்தானங்களில் நிலைத்திருக்க வேண்டுமாம்.

இதாலியில் பாஸிதத்வத்தைப் புதிதாகத் தழுவியவர்கள் தங்களுக்கு அதோகதி ஏற்படுமென்று அறிந்து தேசாபிமானப்படைகளுடன் சமாதானம் செய்துகொள்ளப் பிரயத்னம் செய்தார்கள். மதா ஆசிரியர்கள் மூலமாக அவர்கள் விடுதலைக் கமிட்டிக்கு சிபார்சு செய்தனர். தேசாபிமானப்படைகள் சுருக்கமான ஒரு செய்தியை அனுப்பினுர்கள். "நாங்கள் ராஜத் துரோகிகளுடன் பேரம் செய்வதில்லை."

---

## ஜப்பானின் வீழ்ச்சிக்கான சாவுமணி.

### அழிவுக்குப் பல மார்க்கங்கள்.

(டெயிலி டெலிகிராப் பத்திரிகை.)

டோக்கியோவைச் சுற்றிலுமுள்ள விமான தளங்களை நொருக்கிவரும் அமெரிக்காவின் 1,500 விமானங்களின் தாக்குதலை சமாளிக்க ஜப்பான் தயாராக இருக்கிறதென்று ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் வெளியிட்டபொழுது, அவர்கள் ஜப்பானின் வீழ்ச்சிக்கான சாவு மணியை அடித்துவிட்டார்கள். ஜப்பானின் கடற்கரைக்கு 300 மைல்கள் தூரத்தில் நடமாடும் கப்பற் படையிலுள்ள விமானந்தாங்கிகளிலிருந்து புறப்பட்டுவரும் வெடிவிமானங்களின் தாக்குதலை ஜப்பானின் ஆபத்துங்கள் தடுக்கமுடியவில்லையென்று அவர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

பஸிபிக்கில் விசாலமான பரப்புகள் ஜப்பானுக்கு முக்கியமான தற்காப்பாக இருந்தன. அந்த கிரமத்தை கடற் தளபதி நிமிட்ஸ் கடந்துவிட்டார். பெர்ல் துறைமுகத்தை ஜப்பான் துரோக புத்தியுடன் தாக்கியதற்கு ஒரு தலைமுறைக்குமுன் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் மூண்டால், அது பெர்ல் துறைமுகத்திலிருந்து 3,000 மைல்கள் தாண்டியும் ஜப்பானின் மர்மஸ்தானங்களிலிருந்து 1,500 மைல்களுக்குள்ளுமுள்ள குவாம் தீவையும் அதற்கு சமீபத்திலுள்ள தீவுகளையும் கைப்பற்றுவதன் மூலம் முடிவடையும் என்று எதிர் பார்த்தார்கள். கடற் தளபதி நிமிட்ஸ் சென்ற மாதத்தில் அவருடைய தலைமை காரியாலயத்தை குவாமுக்கு மாற்றிக்கொண்டார்.

அமெரிக்கப்படைகளின் வெகுதூர முன்னேற்றத்தின் பலன்களை ஜப்பான் இப்பொழுது தான் அனுபவிக்க ஆரம்பித்திருக்கிறது. கடற் தளபதி மிட்ஷரிடமுள்ள அமெரிக்கக் கடற்படை ஜப்பானைச் சுற்றியுள்ள சமுத்திரங்களில் சஞ்சாரம் செய்யக்கூடும். ஏராளமான விமானந்தாங்கிகள் தொடர்ச்சியாகத் தாக்கிவரும்

ஜப்பானைப் பூர்ணமாக முறியடிக்க வேண்டுமானுல் தரையிலும் கடலிலும் சஞ்சரிக்கும் ஜப்பானியக் கடற்படை பலத்தை அழித்துவிடவேண்டும். கடற் தளபதி மிட்ஷரின் நடவடிக்கைகளின் லக்ஷியமும் இதுதான். ஜப்பானிய யுத்தத் தலைவர்கள் அவர்களால் முடிந்தவரையில் இந்த முயற்சியைத் தடுக்கவேண்டும். அவ்விதம் செய்யவேண்டுமானுல் ஜப்பான் அதன் கடற்படையைத் துணிவுகரமாக போருக்கு அனுப்பவேண்டும். பிலிப்பைன்ஸிலும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களில் ஜப்பானியக் கடற்படைக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்குப்பின் அதன் வலிமை எவ்வளவென்பதை ஒருவரும் மதிக்கமுடியாது. ஆகிலும் கடற் தளபதி நிமிட்ஸிடமுள்ள கடற்படையும் விமானப்படையும் அதற்கு உதவியாக வந்துள்ளதும் தெற்கிலுள்ளதுமான பிரிடிஷ் கிழக்குக் கடற்படையும் ஜப்பானியக் கடற்படையைவிட சங்கியையில் அதிகமானவை.

ஜப்பானியக் கடற்படை பின்வாங்கிவந்தால் அமெரிக்கக் கடற்படைக்கு சர்பரா கிரமங்கள் ஏற்படுமென்றும் அது ஏராளமான கப்பல்களை அனுப்ப முடியாதென்றும் அமெரிக்க தளங்களிலிருந்து வெகுதூரத்திலுள்ள அமெரிக்கக் கடற்படையை, ஜப்பானியக் கடற்படை சமீப தளங்களிலிருந்து சௌகரியமான நிலைமையில் தாக்கக்கூடுமென்றும் ஜப்பானியத் தலைவர்கள் மதிப்புப் போட்டிருந்தார்கள். ஆகிலும் அவர்களின் 'எண்ணப்படி நடைமுறையில் நடைபெறவில்லை. பின்வாங்கும் முறையில் ஜப்பான் அநேக விமானங்களையும் கப்பல்களையும் இழக்க நேரிட்டுவிட்டதால் அமெரிக்கர்களின் முன்னேற்ற வேகத்தைத் தடுக்க அதனிடம் போதுமான படையில்லாமல் போய்விட்டது.



அட்மிரல் மிட்ஷரின் கடற்படைகள் ஜப்பானியக் கடற்படையைத் தேடிவருகின்றன. மற்ற கடற்படையும் விமானப்படையும் மற்ற கடற்படைகளுக்கு வேறு இடங்களில் சவால் விடுக்கின்றன. ஆகிலும் ஜப்பானியக் கடற்படை எதிரிகளைத் தாக்க முன்வரவில்லை. அழிவுக்கு ஏற்பட்டுள்ள பல மார்க்கங்களில் ஒன்றை ஜப்பான் முடிவு செய்துகொள்ள வேண்டும். விமானப்படையும் விமான தளங்களும் நன்றுய் அழிக்கப்படுமுன் கடற்படை அமெரிக்கர்களைத் தாக்கவேண்டும். கடற்படைப் போரின் முடிவு நிச்சயம். மேலும் ஜப்பானியர்களுக்குத் தற்கொலை செய்துகொள்ளும் ஆசை மிகுதியானதால் அவர்கள் கடற் படையைப் போருக்கு அனுப்புவது நிச்சயம். அவ்விதம் செய்யாமல் துறைமுகங்களிலேயே அதை பத்திரப்படுத்திவைத்தால், அது சக்திடற்றதாக வெகு சீக்கிரத்தில் ஆகிவிடும். ஏனெனில் அதற்கு உதவியாக உள்ள விமானப்படை தங்குதடையன்னியில் அழிக்கப்பட்டு வருகிறது. சமீபகாலத்தில் யுத்தத்தில் வெற்றிபெறவும் சமாதானத்தை வளர்ச்சி செய்யவும் ஜப்பானின் போதுமான பாகத்தை ஆக்கிரமிக்கவேண்டுமென்று கடற் தளபதி நிமிட்ஸ் சொன்னுர். பலமான படைகளை ஜப்பானில் இறக்குவதற்கு காலதாமதமானுலும், ஆகாயப் படையையும் கடற்படையையும் ஜப்பான் இழந்துவிடுமாகையால் அதன் வீழ்ச்சி நிச்சயம்.

---

## சாவை இழைக்கும் ஆயுதத்தின் பேரில் இருவர்.

### பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த மனித மீன் வெடிகள்.

(காளரி சாப்பல்.)

இந்த யுத்தத்தில் எச். ஜி. வெல்ஸ், ஜூல்ஸ், வெர்ன் என்ற விஞ்ஞான சாஸ்திரிகளின் கனவுகள் உண்மையாகிவிட்டன. கட்டுக்கதை ஆசிரியர்கள் எதிர்பார்த்த கற்பனைகளான வெடி விமானங்கள், டாங்கிகள், சுளுந்துகள் முதலியவை முதல் உலக யுத்தத்தில் உற்பத்தி செய்யப்பட்டன. இப்பொழுது கற்பனு உலகத்திலிருந்த மற்றும் அநேக சாதனங்கள் உண்மையாகவே போருக்காக உண்டுபண்ணப்பட்டுவிட்டன.

ஓட்டியில்லாத ரேடியோவினுல் நடத்தப்பட்ட டாங்கிகள், அதிகவேகமாகச் செல்லும் வழிமறிக்கும் விமானங்கள், ராடார் கருவிகள், அவுட் வாணங்களை வீசும் பீரங்கிகள், நீர் மூழ்கிகளைக் கண்டுபிடிக்கும் சாதனங்கள், பறக்கும் வெடிகுண்டுகள், வெகுதூரம் செல்லும் அவுட் வாணங்கள், குழல் வாயுவால் ஓடும் விமானங்கள் இந்த யுத்தத்தில் உற்பத்தி செய்யப் பட்டவைகளில் சில சாதனங்கள். இந்த யுத்தத்தில் மிகவும் பகட்டான ஆயுதம் பிரிடிஷ் கடற்படையிலுள்ள மனித மீன் வெடிதான். இந்த ஆயுதத்தின் பூரா விவரங்களும் இன்னும் வெளிவரவில்லை. ஆகிலும் ஏதாவது ஒரு சமயத்தில் ஒளிப் படங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. கடற்படை இலாகாவும் சில புள்ளி விவரங்களை வெளியிட்டிருக்கிறது.

பிரிடிஷ் கடற்படை சம்பந்தப்பட்டமட்டில் இந்த ஆயுதம் 1943-ம் வருஷ ஜனவரியில் உபயோகப்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அப்பொழுது ஒரு இதாலிய சஞ்சாரிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. பாலர்மோவில் ஒரு பெரிய துருப்பேற்றிச் செல்லும் கப்பல் மூழ்கிக் கொண்டிருந்தது.

மனித மீன்வெடி என்பது சாதாரண மீன்வெடியைப்போல் அமைப்புள்ளதென்றும் அதில் இருவர் தண்ணீரில் நீந்தும் ஆடையுடன் அதன் மேல் உட்கார்ந்துகொண்டு தண்ணீர் மட்டத்துக்குமேல் தலைமட்டும் தெரியும்படியாக லக்ஷியத்தைக் குறித்துச் செல்வதென்றும் தெரியவருகிறது.

லக்ஷியத்தைச் சமீபித்தவுடன் மீன்வெடியைத் தண்ணீருக்குள் அமுக்கி அதிலிருக்கும் வெடிக்கும் அடைப்பானை எடுத்துவிட்டு மீன் வெடியைத் தாக்கும் லக்ஷியத்துக்கு அடியில் தள்ளிவிடுவார்கள். பிறகு காலங்கழித்து வெடிக்கும் பியூஸை அமைத்துவிட்டு தப்பி ஓடி விடுவார்கள்.

இந்த சொற்பமான விவரங்கள்தான் அப்பொழுது கிடைத்தன. அதற்குப் பிறகு இந்த மீன் வெடியின் தாக்குதலைப்பற்றி உத்தியோக முறையில் ஒன்றும் வெளியிடப்படவில்லை. இவைகளை டிர்பிட்ஸைத் தாக்கிய சிறிய நீர்மூழ்கிகள் என்று நினைத்துவிடக்கூடாது.

சிறிய நீர்மூழ்கி என்பது நீர்மூழ்கியின் சிறிய ரகம்தான். அதன் ஓட்டிகளும் அதிலே வசித்து வருவார்கள். மனித மீன்வெடி என்பது சிறிய தூரத்தில் ஒரு லக்ஷியத்தைக் குறிப் பாகத் தாக்க அமைக்கப்பட்ட சௌகரியமில்லாத உபாயம். இரண்டு ஆயுதங்களுக்கும் லக்ஷியம் ஒன்றுதான். அவைகளை ஓட்டுகிறவர்கள் திடகாத்திரர்களாகவும், தைரியசாலிகளாகவுமிருக்கவேண்டும்.

சமீப காலத்தில் மறுபடியும் மனித மீன் வெடியின் நடவடிக்கைகள் வெளிவந்தன. உத்தியோக முறையில் பிரசுரிக்கப்படும் லண்டன் கெஜெட்டில் D. S. O. பதக்கம் ஸப்-லெப்டினண்ட் மால்கம் காசருக்கும் விசேஷமான தீரத்திற்காக வழங்கப்படும் பதக்கம் மாலுமி ஹாரி ஸ்மித்துக்கும் அவர்கள் ஜெர்மன் ஆக்கிரமணத்துக்குட்பட்ட ஒரு துறைமுகத்திற்குள் துணிவுகரமாகச் சென்று அங்கிருந்த சஞ்சாரியைத் தாக்கியதற்தாக வழங்கப்பட்டதென்று வெளியிடப்பட்டிருந்தது.

இதாலி யுத்தத்தில் சேர்ந்துகொண்டபொழுது இதாலியிடமிருந்த எட்டு அங்குல பீரங்கிகளுள்ள சஞ்சாரிகளில் கடைசியாகயிருந்த போல்ஸோனு இப்பொழுது அழிக்கப்பட்டது.

யுத்தம் பூராவிலும் போல்ஸோனு எப்பொழுதும் அபாயத்துக்குட்பட்டிருந்தது. 1942-ம் வருஷத்தில் அது ஒரு பிரிடிஷ் நீர்மூழ்கியின் மீன்வெடிகளால் பழுதுபடுத்தப்பட்டது. அப்பொழுது ஸ்பீஷியா துறைமுகத்துக்கு அது சென்றது. ஆகையினால் இதாலி சரணடைந்தபொழுது அது ஜெர்மனி வசமாகிவிட்டது.

போல்ஸோனே இன்னும் அபாயம் பொருந்தியதாதலால் அதை மூழ்கடித்துவிடுவது அவசியம். ஜூன் மாதம் 21-ம் தேதியன்று ஸ்பீஷியாவுக்குப் போகும் மார்க்கத்தில் ஒரு கப்பலிலிருந்து இந்த மனித மீன்வெடி மிதக்கவிடப்பட்டது. அது தண்ணீருக்குள் சென்றதை ஒருவரும் கண்டுபிடிக்கமுடியவில்லை.

மீன்வெடி புறப்பட்ட கப்பல் கடற்கரையில் கொஞ்ச தூரத்திற்குச் சென்று அங்கு திரமுள்ள மாலுமிகளின் வருகையை எதிர் பார்த்துநின்றது.

சில சமயங்களில் கப்பலிருந்த மாலுமிகள் துறைமுகத்திலிருந்து பீரங்கிக் குண்டின் மின்னலையும் தேடு விளக்குகளின் வெளிச்சத்தையும் கண்டார்கள். அதாவது மீன் வெடித் தாக்குதலை அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்களென்று புலப்பட்டது. ஆகிலும் அந்த அடையாளங்கள் தொடர்ச்சியாகயில்லை.

காலம் கடந்த போதிலும் மனித மீன்வெடி மாலுமிகள் திரும்பிவரவில்லை. இறுதியில் காலவரைக்குப்பின் அந்தக் கப்பல் சென்றுவிட்டது.

மறுநாள் விமானமூலம் வேவுபார்த்தபொழுதும் சம்பவத்தின் ஒரு சிறிதுதான் வெளிப்பட்டது. போல்ஸோனே தலைகீழாகக் கவிழ்து மூழ்கிக் கிடந்தது. தாக்குதல் வெற்றிகரமாக முடிந்துவிட்டது.

அதன்பின் ஸப் லெப்டினண்ட் காஸர் கைது செய்யப்பட்டுவிட்டாரென்றும் ஸ்மித்தைப் பற்றி ஒன்றும் தகவலில்லையென்றும் சொல்லப்பட்டது. இறுதியில் ஸ்மித்தை காணப்படாதவர்கள் ஜாபிதாவில் சேர்த்துவிட்டார்கள். ஆகிலும் நல்ல செய்தி கிடைத்தது. ஸ்மித்தின் தாயாருக்கு ஜெர்மன் கைதி முகாமிலிருந்து ஸ்மித் சுகமாக யிருப்பதாக ஒரு கடிதம் வந்தது.

வெகுமதிகளை வழங்கும் பொழுது பின்வருமாறு சொல்லப்பட்டது. "ஸ்பீஷியாத் துறைமுகம் இதாலியின் முகான்மையான கடற்படைதளமானபடியாலும் பலமாகத் தற்காப்பு செய்யப்பட்டிருந்தாலும் இந்த நடவடிக்கை பிரிடிஷ் நீர்மூழ்கிப் படையினரின் அறிய சேவைகளில் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்."

---

# விமான உற்பத்தி.

## மற்ற விஞ்ஞான சாஸ்திரங்களுக்குத் தூண்டுகோல்.

(ரைட் ஹானரபிள் பிராபாசான் பிரபு, P. C.)

1945-ம் வருஷம் ஜனவரி மாதம் 12-ம் தேதியன்று லண்டனில் நடைபெற்ற பிரிடிஷ் அஸோஸியேஷன் மகாநாட்டில் "தொழிற் முறைகளும் விஞ்ஞான சாஸ்திரமும்" என்ற விஷயம் ஆராய்ச்சி செய்யப்பட்டபொழுது ரைட் ஹானரபிள் பிராபாசான் பிரபு "விமான உற்பத்தியை"ப்பற்றி ஒரு சொற்பொழிவாற்றினர்.

விஞ்ஞான சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்துவந்த ரசாயனப் பரிசைஷ சாலைகளில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்களிலிருந்துதான் உலகத்திலுள்ள மகத்தான தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. பாரடே என்பவரின் ஆராய்ச்சி மூலம் மின்சார உற்பத்தித் தொழில் ஆரம்பிக்கப்பட்டது. குருக்ஸ், J. J. தாம்ஸனின் "பதார்த்தத்திற்குப் புதிய அமைப்பு" என்ற ஆராய்ச்சியிலிருந்து மின்சாரத்தில் அணுக்கள் இருக்கின்றனவென்றும் எலக்ட்ரான்களும் கண்டுபிடிக்கப்பட்டன.



இந்த ஆராய்ச்சிதான் ரேடியோவின் அபிவிருத்திக்கு அஸ்திவாரம் போட்டது. சிந்தாமணியைப்போலும் சதாகாலம் விமானப் போக்குவரத்துக்கு அவ்வித ஆதாரமில்லை. "பன்றிகள் பறக்கும்" என்று கருதப்பட்டது. சலனம் செய்வதைப் போலும் அசாத்யமானதென்று கருதப்பட்டது. என்பதை மறுக்க நானே ஒரு பன்றியை விமானத்தில் எடுத்துச் சென்றேன்.

கியாதிபெற்ற கெல்வின் பிரபு ஆகாயத்தில் பறந்து செல்லுவது அசாத்யமானகாரியம் என்று சொல்லிவிட்டார். ஆகையால் விஞ்ஞான சாஸ்திரிகள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தவில்லை. விமானங்களைக்கூட ஆரம்பித்தவர்கள் கோஷ்டியில் அநேக விஞ்ஞான சாஸ்திரிகளும் இருந்தார்கள். அமெரிக்காவில் லாங்க்ஸியும் பிரிடனில் ஹிராம் மாக்ஸிமும் கிட்டத்தட்ட வெற்றிபெற்றார்கள். ஆகிலும் இந்தத் துறையில் விஞ்ஞான உலகம் பூரா வெற்றியையும் அடையவில்லை. துவிச்சக்கிர வியாபாரிகளான ரைட் சகோதரர்கள்தான் இதில் கியாதி பெற்றார்கள்.

இவர்கள் இங்கிலாந்தில் ஒரு சிறிய துவிச்சக்கிர வியாபாரக் கடையை நடத்தி வந்தார்கள். அவர்களும் விஞ்ஞான சாஸ்திர முறையில்தான் இந்த பிரச்னையைக் கையாண்டார்கள். எஞ்சினையும் செய்து பார்த்தார்கள். அவர்கள் இழுப்பு சாதனங்களை அமைத்தார்கள். அவர்கள் சறுக்கி செல்லுவதின்மூலம் ஏற்பட்ட அனுபவங்களையும் புறக்கணித்துவிடவில்லை. ஆனால் அவர்களுக்குக் கிடைத்தவெற்றி விஞ்ஞான சாஸ்திர முறையிலல்ல, தொழிற் பயிற்சி முறையில்தான்.

கியாதிபெற்ற கிளர்க்மாக்ஸ்வெல் கணித சாஸ்திர முறைப்படி மின்சாரக் காந்தத்தில் உள்ள புதிய அம்சங்களை வெளியிட்டதுபோல, ஆகாயத்தில் செல்லும் முறையைக் கண்டுபிடிப்பதற்கு முன் F. W. லங்காஸ்டர் 1897-ம் வருஷத்தில் விஞ்ஞான சாஸ்திர முறைப்படிக்கும் அனுமானப்படிக்கும் விமான உற்பத்திக்குரிய சில விஷயங்களை வெளியிட்டார். ஆகாய விமானம் ஆரம்பமானபின் என்ன அபிவிருத்தி ஏற்பட்டதென்றால் விமானம் மற்ற எல்லா விஞ்ஞான சாஸ்திரங்களையும்விட முன்னேற்ற மடைந்துவிட்டது. விஞ்ஞான சாஸ்திரம் விமானங்களை வரவர அதிக சிலாக்யமாக அமைத்துவருகிறது.

லாகவமும் உறுதியும் இருக்கவேண்டுமென்று முடிவுசெய்ததால் லேசான அலுமினியத்தையும் மாக்னீஷிய சேர்மானத்தையும் ஆராய்ச்சி செய்வதில் கவனம் செலுத்திவந்தார்கள். விமானங்களுடையவும், மற்ற வாழ்க்கை முறைகளின் சௌகரியத்துக்குரிய அநேக வெற்றிகள் கிடைத்தன.

பிற்போக்காக இருந்த அனிலோற்பன்ன சாஸ்திரத்திலும் அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டது. காலத்தின் மாறுதல்களை அறிய அந்த சாஸ்திரமும் அவசியமாயிற்று. அது இப்பொழுது முதிர்ச்சி பெற்ற சாஸ்திரமாக ஆகிவிட்டாலும் யுத்தத்துக்குப் பின் நாம் அதிலிருந்து அதிக பலன்களை அடைவோம்.

டௌன்ஸண்டின் வளையம் ரசாயன ஆராய்ச்சி சாலையிலிருந்தும் அனுபவத்திலிருந்தும் ஏற்பட்ட ஒரு சாதகம். நீண்ட|துளைகளுள்ள இரக்கைகளை ஹாண்ட்லி பேஜஸ் கண்டுபிடித்தார். விமானங்கள் துரிதமாகப் புறப்படுவதற்கும் வேகமாகச் செல்லுவதற்கும் உயர்தரமான எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது.

இனக்கமான சாமான்களைக் கண்டுபிடிப்பதும் முன்னேற்றமடைந்துவருகிறது. ஏனென்றால் விமானங்களை அமைப்பதற்கு அவைகள் அவசியமாக இருக்கின்றன. விமானங்களின் வருகையைக் கண்டுபிடிக்கும் ராடார் கருவிகளும் ஒரு விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாக அபிவிருத்தியடைந்துவிட்டது.

இவ்விதமாக விமானம் கட்டுவதென்பது விஞ்ஞான சாஸ்திரத்திற்கு அநேக பிரச்னைகளையும் சந்தர்ப்பங்களையும் அளித்திருக்கிறது. விஞ்ஞான சாஸ்திரம் ஆகாய சலன சம்பந்தமான பிரச்னைகளை எதிர்த்துவந்தபோதிலும் அது விமான உற்பத்தியை விஸ்தாரப்படுத்தி வருகிறது. இயற்கையான தைரியம், வெளிச்ச ஓட்டம், நெருக்கும் முறைகள் முதலிய பிரச்னைகள் இன்று தீர்க்கப்படுகின்றன.

குழல்வாயுவால் ஓடும் என்ஜினும் வாயுவை உற்பத்திசெய்யும் சாதனங்களும் விமானப் படையில் புதிய ரகங்களை உண்டுபண்ணுகின்றன. அவைகள் வேகம் பொருந்தியதுடன் வெகுதூரமும் செல்லுகின்றன. அந்த உற்பத்தி இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

விமான உற்பத்தியில் விஞ்ஞான சாஸ்திர முறைப்படி ஆராய்ச்சி மிகுதியாகயிருக்க வேண்டும். அவ்வித ஆராய்ச்சி அவசியம். ஏனெனில் அதன் மூலம் மற்ற சில தொழில்களும் அபிவிருத்தியடைகின்றன.

இவ்விதமாக முற்போக்கான பல்வேறுபட்ட கைத்தொழில் முறைகளுள்ள விஞ்ஞான சாஸ்திரமுறையில் திட்டம் போடுகிறவருக்கும் ஒரு பங்குண்டு. அவர் சகலவிதமான தகவல்களையும் அறிந்தவர். சுயமாக நல்ல யோசனை உள்ளவர். அவர் நமக்குப் பேருதவி செய்திருக்கிறார். அவருக்கு நமது பாராட்டு உரித்ததாகும். ஆசிரியர் ஸௌத்வுட் பின் வருமாறு சொல்லியிருக்கிறார். "விமான அமைப்பு சாதாரண இஞ்ஜினியரிங் சாமர்த்தியத்தின் சிரம சாத்யமான முயற்சி." ஆகையால் மற்றெந்த இஞ்ஜினியரிங் வேலைகளையும்விட இதற்கு அதிகமான விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி அவசியமென்று தோன்றவில்லையா?

---

## மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் கல்லூரி, புதுக்கோட்டை டெக்னிகல் டிரெயினிங் சென்டரில் பயிற்சிக்கு காலியாயுள்ள ஸ்தானங்கள் 28—2—45உயில் காண்பிக்கும் சிட்டை.

| | | |
|---|---|---|
| எலக்டிரிஷியன்கள் | ... ... | 15 |
| பிட்டர்கள் | ... ... | 16 |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 238. (2-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3- 3-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 7- 3-45 | பனையப்பட்டி | ... மாலை | 7.00 |
| 4- 3-45 | சூரக்காடு | ... ,, | 7.00 | ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 | 8- 3-45 | அண்டக்குளம் | ... ,, | 7.00 |
| 5- 3-45 | மலக்குடிப்பட்டி | ... ,, | 7.00 | ,, | கிள்ளனூர் | ... ,, | 7.30 |
| ,, | கோனபட்டு | ... ,, | 7.30 | 9- 3-45 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| 6- 3-45 | குழிபிறை | ... ,, | 7.00 | ,, | விராலூர் | ... ,, | 7.30 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 239 (3-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10- 3-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 14- 3-45 | பெருமாநாடு | ... மாலை | 7.00 |
| 11- 3-45 | பூவரசகுடி | ... ,, | 7.00 | ,, | புல்வயல் | ... ,, | 7.30 |
| ,, | வேங்கடக்குளம் | ... ,, | 7.30 | 15- 3-45 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| 12- 3-45 | தென்னதிரயன்பட்டி | ... ,, | 7.00 | ,, | எம்பல் | ... ,, | 7.30 |
| ,, | விசலூர் | ... ,, | 7.30 | 16- 3-45 | விராலிமலை | ... ,, | 7.00 |
| 13- 3-45 | மழையூர் | ... ,, | 7.00 | ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 3— 3—45 | வெட்டம்விடுதி. | 10— 3—45 | திருமெய்யம். |
| 4— 3—45 | மருதன்கோன்விடுதி. | 11— 3—45 | எம்பல். |
| 6— 3—45 | பேராம்பூர். | 13— 3—45 | வடகாடு. |
| 8— 3—45 | கிழாநிலை. | 15— 3—45 | ஆலங்குடி. |
| 9— 3—45 | புதுக்கோட்டை. | 16— 3—45 | புதுக்கோட்டை. |

---

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—4-3-45.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் மார்ச்சு மீ 10உ [ந. 239

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXXXIX.

## யால்டா திட்டங்கள்.

### சாச்வதமான உலக சமாதானத்திற்கும், உலக பந்தோபஸ்துக்கும் ஏற்பாடுகள்.

*அமெரிக்க காங்கிரஸ் சபையில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொற்பொழிவாற்றியது.*

---

### இரண்டு முக்கிய லக்ஷியங்கள்.

உலக அமைதிக்கு நல்ல ஏற்பாடு செய்திருக்கிறோம் என்ற திடமான உணர்ச்சியுடன் நான் கிரிமியா மகாநாட்டிலிருந்து திரும்பிவந்தேன். மகாநாட்டில் இரண்டு விஷயங்கள் முக்கியமாக ஆலோசிக்கப்பட்டன. (1) நேசநாட்டாருக்கு அதிக நஷ்டமின்றி சீக்கிரத்தில் ஜெர்மனியை முறியடிப்பது. இந்தக்காரியம் இப்பொழுது நடைபெறுகிறது.

நம் தாக்குதலின் வேகம் மிகக்கடுமையானது என்பதை ஜெர்மன் மக்களும் படை வீரர்களும் இப்போது உணர்ந்துவருகின்றனர். ஒவ்வொரு நிமிஷமும் ஜெர்மன் பிரதேசத்தில் நம் படை தீரமுள்ள ருஷ்ய சேனையைச் சந்திக்க முன்னேறி வருவதைக்கண்டு நமக்கு மகிழ்ச்சி உண்டாகுகிறது.

(2) நாங்கள் சர்வதேச ஒத்துழைப்புக்கும் திட்டம் வகுத்தோம். அந்த ஒத்துழைப்புத் தான் யுத்தத்துக்குப்பின் உலக அமைதியையும் உலக பந்தோபஸ்தையும் வழங்கக்கூடும். அந்த ஸமஷ்டி தான் உலகத்தின் நிரந்தரமான சமாதானத்திற்கும் ஏற்பாடு செய்யக்கூடும்.

### டெகரானும், யால்டாவும்.

இவ்விரு மகாநாடுகளுக்குமிடையே சுமார் 14 மாதங்கள் கடந்துவிட்டன. இந்த அவகாசத்தில் மூன்று பெரிய வல்லரசுகளின் பொதுஜன பிரதிநிதிகள் ஒன்றுகூடிப் பேசவில்லை. இந்த காலத்தில் போலந்து, கிரீஸ், இதாலி, யூகோஸ்லாவியா முதலிய நாடுகளில் புதிய பிரச்னைகள் தலைகாட்ட ஆரம்பித்தன. ஆகையால் யால்டாவில் நாங்கள் அடிக்கடி கூடி எங்களுடைய அபிப்பிராயங்களை பரிமாறிக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே நாங்கள் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கொருமுறை பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய வெளிநாட்டு மந்திரிகள் கூடிப்பேசவேண்டுமென்று முடிவுசெய்திருக்கிறோம். இப்பொழுது ஏற்பட்ட தகசல்கள் போல இனிமேல் ஏற்படுமென்று இனி கவலைப் படவேண்டி வராது என்று இந்த ஏற்பாட்டின் பிரகாரம் நான் நம்புகிறேன்.

## யால்டா பிரச்னைகள்.

யால்டா மகாநாட்டில் ஜெர்மனியை ராணுவ முறையில் இறுதியில் பூர்ணமாக முறியடிப்பதற்கு திட்டங்களை நிறுவியதுடன் நாங்கள் மிகவும் முக்கியமான சில ராஜீய பிரச்னைகளையும் ஆலோசித்தோம்.

(1) ஜெர்மனியை ஆக்கிரமித்து அடக்கியாளுவது. அதன் ராணுவ பலத்தை பூர்ணமாக அழிப்பது. நாஸிதத்வம் பிரஷ்ய ராணுவமும் உலகத்தின் சமாதானத்திற்கும் நாகரீகத்திற்கும் அபாயம் உண்டுபண்ணும்படியாக தலை தூக்காதபடி ஒடுக்குவது.

(2) டம்பார்ட்டன் ஓக்ஸ் மகாநாட்டிற்கப்புறம் சர்வதேச உலக பத்திர ஸ்தாபனம் விஷயமாக எங்களுக்குள் இருந்த அபிப்ராய பேதத்தை அகற்றுவது.

(3) நாஸிகளின் கொடுமையிலிருந்து விடுபட்ட பிரதேசங்களின் பொதுவான ராஜீய, பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பது.

(4) போலந்து, யூகோஸ்லாவியா சம்பந்தமான சிக்கல்கள்.

பலநாட்கள் நாங்கள் மனம்விட்டு எங்களுடைய அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொண்டபின் எங்களுக்குள் எல்லா விஷயங்களிலும் ஒற்றுமை ஏற்பட்டது. கருத்திலும் காரியத்திலும் நாங்கள் ஒற்றுமையுடன் இருக்க முடிவு செய்தோம்.

எங்களுக்குள் ஒற்றுமை தலைகாட்டாது எனவும், நாங்கள் பிரிந்து நிற்போம் எனவும். அதன்மூலம் அவருக்கும் அவருடைய கொள்ளைக்கூட்டத்தாருக்கும் தோல்வியிலிருந்து தப்பித்துக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுமென்றும் ஹிட்லர் வீணில் எதிர் பார்த்தான்.

யுத்த லக்ஷியங்களிலும் சமாதான லக்ஷியங்களிலும் இப்பொழுது நேசநாட்டாருக்கிடையே தலைகாட்டக்கூடிய ஒற்றுமை மனோபாவம் இதுவரை இருந்ததே இல்லை. கடைசிவரை ஒன்றுபட்டிருக்க நாங்கள் உறுதிகொண்டிருக்கிறோம்.

பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய சிப்பந்திகள் தினசரி கூடிப் பேசினார்கள். பிறகு எங்களுடனும் அவர்கள் பன்முறை சம்பாஷித்தனர். பிறகு ஜெர்மனியை முறியடிக்க நேசதேசத்தார் எவ்விதம் ஒன்றுபட்ட முயற்சிசெய்வதென்ற திட்டம் உருவாக்கப்பட்டது.

டெகரான் மகாநாட்டின்பொழுது ருஷ்யப் போர்முனை அமெரிக்க, பிரிடிஷ் போர் முனைகளிலிருந்து வெகுதூரத்திலிருந்து வந்தது. வெகுதூரம் செல்லும் விமானங்கள் ஸ்ட்ராடஜிக் வெடிகுண்டு வீச்சுமூலம் உதவிசெய்ய முடிந்ததே ஒழிய வேறு அப்பொழுது ருஷ்யப்படைகளுக்கு டாக்டிகல் முறையில் ஒரு உதவியும் செய்யமுடியவில்லை. இப்பொழுது ருஷ்யப்படைகள் போலந்தைத் தாண்டி ஜெர்மன் பூமியிலேயே கிழக்கு பிரதேசத்தில் போரை நடத்திவருகின்றன. மேற்குப் பக்கத்தில் ரைன் நதிக்கு சமீபத்தில் பிரிடிஷ் அமெரிக்கத் துருப்புகள் வந்துவிட்டன. இன்று நிலைமை மாறிவிட்டது. டாக்டிகல் முறையில் இப்பொழுது ஒத்தாசையளிக்க முடியும். இந்த திட்டமும் கிரிமியா மகாநாட்டில் வகுக்கப்பட்டது.

## நிபந்தனையற்ற சரணாகதி.

ஜெர்மனி நிபந்தனையின்றி சரணாகதி புரியும்வரையில் நாங்கள் சும்மாயிருக்கப் போவதில்லை. சீக்கிரத்தில் ஜெர்மன் மக்களும் ஸோல்ஜர்களும் கோஷ்டிகளாகவும் தனித்தனியாகவோ சரணாகதி செய்தால்தான் இப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் துயரம் தீருமென்று அவர்கள் உணரவேண்டும். அவ்விதம் சரணாகதி செய்தால்தான் உலகத்தாருடன் ஜெர்மனி தகுதியான அந்தஸ்துடன் உறவாட அபிவிருத்தியை ..டையமுடியும்.

நிபந்தனையற்ற சரணாகதியைக் கோரும் நாங்கள் ஜெர்மனியின் நாசத்தை விரும்புவதாகவோ அல்லது அதை அடிமைப்படுத்த ஆசைப்படுவதாகவோ எண்ணக்கூடாது.

யால்டா மகாநாட்டைப்பற்றிய இந்தத் தகவல்களை நாஸித் தலைவர்கள் வேண்டுமென்றே ஜெர்மன் பத்திரிகைகளிலும் ஒளிபரப்பிலும் அறிவிக்கவில்லை. மக்களிடம் யால்டா முடிவென்பது ஜெர்மனியின் அடிமைத்தனம், அழிவு என்று அவர்கள் பிரசாரம் செய்தனர்.

நிபந்தனையற்ற சரணாகதி செய்தால் ஜெர்மனிக்கு என்ன நேரிடுமென்று நாங்கள் தெளிவுபடுத்திவிட்டோம். சரணாகதி செய்தவுடன் பிரிடன், ருஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் அங்கு தாத்காலிகமாக ஆதிக்கம் வகிக்கும். ஜெர்மனி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நேசநாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு அரங்கம் அளிக்கப்படும். அந்தந்தப் பகுதியில் அவர்கள் அதிகாரம் வகிப்பார்கள். பெர்லினில் ஒரு தலைமைக் காரியாலயம் ஏற்படுத்தப்பட்டு அதில் நான்கு தேசங்களுக்கும் பிரதித்வம் அளிக்கப்படும். இந்த நான்கு பிரதேச நிர்வாகத்தையும் அந்த கமிஷன் மேற்பார்வையிடும். இதனால் நாஸிமுறையும் நாஸிகக்ஷியும் நிர்மூலமாக்கப்படும். அதன் அநாகரீகமான சட்டதிட்டங்களும், ஸ்தாபனங்களும் அழிக்கப்படும். இதற்குப்பின் நாஸிக் குற்றவாளிகளுக்கு சீக்கிரத்தில், நியாயமான, கடுமையான தண்டனை விதிக்கப்படும். ஜெர்மன் ராணுவம் நிராயுதபாணியாகச் செய்யப்படும். ராணுவ முஸ்தீப்புகள் அழிக்கப்படும். யுத்த தளவாட உற்பத்திகள் ஜெர்மனியில் அடியோடு ஒழிக்கப்படும்.



தங்கள் துராக்கிரமிப்பு காரணமாகப் பாழடைந்த நாட்டினருக்கு ஜெர்மனி நஷ்டப் பரிகாரம் பண்ணும்படி செய்யப்படும்.

பணத்திற்கு பதிலாக பொருளும், யந்திரங்களும், ரெயில்வே சாமான்களும், இயற்கைப் பொருள்களும் வசூலிக்கப்படும். சென்ற யுத்தத்திற்குப்பின் பணத்தைத் தரும்படி கோரியதினால்தான் இந்த அலங்கோலம் ஏற்பட்டிருக்கிறது.

ஜெர்மன் மக்கள் பட்டினி கிடக்கவேண்டுமென்றோ உலகின் இதர பாகங்களுக்கு பளுவாக இருக்கவேண்டுமென்றோ நாங்கள் விரும்பவில்லை. உலக அமைதியை உத்தேசித்தே ஜெர்மனியை அடக்க நாங்கள் விரும்புகிறோம்.

ஜெர்மனிக்கு அக்கிரமப் போரை நடத்த சக்தியிருக்கும் வரையில் எங்களுடைய அந்த லக்ஷியம் நிறைவேறுதென்று எங்களுக்குச் சிறந்த அனுபவம் கிடைத்திருக்கிறது. இந்த லக்ஷியம் ஜெர்மன் மக்களுக்குக் கெடுதலாக இருக்காது. இதிலிருந்து ஜெர்மன் மக்கள் மறுமுறை, இதற்குமுன் கெய்ஸராலும் அவருடைய சிப்பந்திகளாலும், இப்பொழுது ஹிட்லராலும் அவர்களுக்கு விளைந்த நாசத்திற்குட்படாமல் காப்பாற்றப்படுவார்கள்.

அநேக தலைமுறைகளாக உலகத்தாருக்கு கஷ்டங்களையும், அவஸ்தைகளையும் உண்டு பண்ணிவரும் ஜெர்மன் சமூகத்திலுள்ள ஒரு நோயை அகற்றிவிடுவோம்.

## ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு.

அடுத்த மாதம் 25-ம் தேதி ஸான் பிரான்ஸிஸ்கோவில் நேசதேச மகாநாடு நடக்கும். அப்பொழுது உலக அமைதியைப் பாதுகாப்பதற்கும் அக்கிரமப்போர் சாச்வதமாகத் தலையெடுக்காமல் பரிஷ்காரம் செய்யப்படுவதற்கும் சாஸனம் நிச்சயமாய்த் தயாரிக்கப்படும்.

இந்த சமயம் யுத்தம் முடியும் வரைக்கும் உலக அமைதி ஸ்தாபனத்தை நிறுவுவது தாமதிக்கப்படமாட்டாது.

நானும் மற்ற நேசநாடுகளும் இந்த சாஸனத்தையும் யால்டாவின் திட்டம் வகுத்த மற்ற ஏற்பாடுகளையும் அமெரிக்க சபையின் மூன்றில் இரண்டு பாகத்தார் ஆமோதிக்கவேண்டுமென்பதை நான் அறிவேன். சர்வதேச உலக பத்திர ஸ்தாபனத்தை அமைக்கும் நடவடிக்கைகளைப்பற்றி தகுதியுள்ள பிரதிநிதிகள்மூலம் ஸெனட்டுக்கு நான் தகவல்களை இடைவிடாது அறிமுகப்படுத்திவந்திருக்கிறேன். ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்கு ஸெனட், பிரதிநிதி சபை மெம்பர்களின் பிரதிநிதிகள் அழைக்கப்படுவார்கள்.

பிரதிநிதி சபையைச் சேர்ந்த பிரதிநிதிகளில் பாதிப்பேர்கள் குடியரசுக் கக்ஷியைச் சேர்ந்தவர்களாகவும் பாதிக்குப்பாதி ஜனநாயகத்தைச் சேர்ந்தவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அமெரிக்க பிரதிநிதிகள் இரண்டு கக்ஷியைச்சேர்ந்தவர்களாகப் இருப்பார்கள்.

ராணுவ வெற்றியைப்போல உலக சமாதானமும் ஒரு தனிப்பட்ட கக்ஷியினரால் அமைக்கப்படக்கூடியதில்லை. 1940-ம் வருஷத்தில் நாஸிகளும் 1941-ல் ஜப்பானியரும் நம்மீது யுத்தத்தைத் தொடுத்தபோது நாம் யாவரும் பொது நலனையொட்டி வேற்றுமைகளை விட்டொழித்தோம். இதேமாதிரி சமாதான காலத்திலும் ஒவ்வொரு தேசாபிமானமுள்ள அமெரிக்கரும் கடல்தாண்டியுள்ள ஒவ்வொருவரும் ஒத்துழைப்பார்களென்று நான் எதிர்பார்க்கிறேன்.

சமாதானத்தை நிரந்தரமாக நிறுவ, ஒரு தனிப்பட்ட நபரோ, கக்ஷியோ, தேசமோ மட்டுமே ஏற்பாடு செய்யமுடியாது. இதை அமெரிக்கர்களோ, பிரிடிஷார்களோ, ருஷ்யர்களோ, பிரெஞ்சுக்காரர்களோ, அல்லது சீனர்களோ ஏற்பாடு செய்யமுடியாது. பெரிய வல்லரசுகளோ, அல்லது சிறிய வல்லரசுகளோ அதை ஏற்பாடு செய்யமுடியாது. உலகம் பூராவும் ஒத்துழைத்தால்தான் அது சாத்தியம்.

ஆரம்பத்திலேயே இந்த ஏற்பாடு பரிபூர்ணமாக இராது. ஆனால் அந்த சமாதானம் அட்லாண்டிக் சாஸனத்தின் கொள்கைகளையும், மனித வர்க்கத்தின் கண்ய மதிப்பையும், மத ஆராதனை சம்பந்தமான தாராள மனப்பான்மையையும் சுதந்திரத்தையும் அடிப்படையாகக்கொண்டிருக்கும்.

## உலக சமாதானம்.

25 வருஷங்களுக்கு முன்பு அமெரிக்கப் போர்வீரர்கள் தாங்கள் கஷ்டப்பட்டுப் போர் புரிந்து சம்பாதித்த சமாதான வேலையை உலகத்திலுள்ள ராஜ தந்திரிகள் பூர்த்திசெய்து

விடுவார்களென்று எதிர்பார்த்தார்கள். எதிர்பார்த்தபடி காரியம் நடைபெறவில்லை. இப்போதும் நாம் மக்களைத் திண்டாடும்படி செய்து பிழைத்திருக்க மன்றாடும்படி நாம் செய்யப்போவதில்லை. கிரிமியா மகாநாட்டில் மூன்று வல்லரசுகளும் சமாதானத்திற்கு அஸ்திவாரம் பலமாகப் போட்டுவிட்டார்கள்.

அந்த மகாநாட்டின் மூலம் தனிப்பட்டவர்களின் நடவடிக்கையும் உடன்படிக்கைகளும் ஆதிக்க வட்டாரங்களும், பிராபல்ய சமத்வமும் மற்ற எல்லா சாகசங்களும் மறைந்துவிடும். இந்த முறைகள் பல நூற்றாண்டுகளாகக் கையாளப்பட்டு பயன்படாமல் போய்விட்டன. சமாதானத்தை விரும்பும் எல்லா தேசங்களும் இறுதியில் கலந்துகொள்ளக் கூடிய சர்வதேச ஸ்தாபனத்தை அமைக்க நாங்கள் உத்தேசித்திருக்கிறோம்.

அமெரிக்க பிரதிநிதி சபையும் அமெரிக்க பொது ஜனங்களும் இந்த மகாநாட்டின் முடிவுகளை சாஸ்வதமான சமாதானத்திற்குரிய அமைப்பு என்று ஒப்புக்கொள்ளுவார்களென்று நினைக்கிறேன். அந்த அமைப்பின்கீழ் ஈச்வர கிருபையினால் நமது குழந்தைகளும் பேரப்பிள்ளைகளும், உலக மக்களும் வசித்து வரக்கூடிய அழகிய வாழ்க்கையை அமைக்க நாம் முற்படுவோம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 27—2—45 (செவ்வாய்க்கிழமை.) | லெபானன் அச்சுநாடுகளுடன் போர் தொடுத்தது. |
| 28—2—45 (புதன்கிழமை). | அமெரிக்க 3-வது சேனை டிரியருக்கு சமீபத்திலுள்ள பிட்பர்க்கைக் கைப்பற்றிற்று. |
| | ருஷ்யர்கள் நியூஸ்டெட்டினைப் பிடித்தார்கள். |
| 1—3—45 (வியாழக்கிழமை). | பிரிடிஷ் ஜன பிரதிநிதி சபை யால்டா மகாநாட்டின் முடிவுகளை ஏகமனதுடன் நம்பிக்கைத் தீர்மான மூலம் ஒப்புக்கொண்டது. |
| | அமெரிக்கர்கள் ரேயிட்டையும் மஞ்சன்கிளாட்பாக்கையும் ஆக்கிரமித்தார்கள். |
| | அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பாலாவான் தீவிலிறங்கின. |
| 2—3—45 (வெள்ளிக்கிழமை). | அமெரிக்கர்கள் கிரெபெல்டையும் நியூஸையும் ஆக்கிரமித்தன. |
| | அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸிலுள்ள லூபாங் தீவை ஆக்கிரமித்தார்கள். |
| 3—3—45 (சனிக்கிழமை). | அமெரிக்கப் படைகள் மாஸ் நதிக்குக் கிழக்கிலுள்ள அமெரிக்கர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டன. |
| | ருஷ்யர்கள் ரம்மல்ஸ்பர்க்கைப் பிடித்தார்கள். |
| 4—3—45 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யர்கள் போமரேனியாவில் பைரிட்ஸ் என்ற இருப்புப் பாதை ஜங்ஷனைக் கைப்பற்றினார்கள். பால்டிக் கடற்கரையை இரண்டு இடங்களில் அடைந்துவிட்டார்கள். |
| 5—3—45 (திங்கட்கிழமை). | அமெரிக்கர்கள் கொலோனுக்குள் புகுந்துவிட்டார்கள். நேசதேசப் படைகள் பர்மாவில் மாண்டலேக்கு 75 மைல்கள் தெற்கிலுள்ள மேயிக்டிலாவைப் பிடித்தன. |
| 6—3—45 (செவ்வாய்க்கிழமை). | அமெரிக்கர்கள் கொலோன் பூராவையும் ஆக்கிரமித்துவிட்டார்கள். |



### (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை—**

1. ஜெர்மனியின் தொழிற்சாலை, மாதாகோவில் நகரமும், ரைன்லாந்தின் நிர்வாக மத்திய நிலயமுமான கொலோன் விழுந்துவிட்டது.

2. வடக்குப் பகுதியில் இந்த வார ஆரம்பத்தில் விஸாம், கொர்வன்ஹீமும், ஹாக்வால்ட்காடும் பிடிபட்டன. எல்ஸ்டெரன், வாலபாக், ஜான்ஸ்லிங்கல், ஹால்மான்ஸ்கோப், காபெலன், இஸ்ஸம், ரியூர்ட், சான்ஸ்பாக் என்ற நகரங்களும் பிடிபட்டன.

3. கனடிய 1-வது படை ரைன் நதியின் மேற்குக் கரையிலுள்ள வேஸலுக்கு வந்துவிட்டது.

4. அமெரிக்க 1-வது படை எர்ப்ட் நதியைத் தாண்டிய பின் ரைன் நதியை அடைந்துவிட்டது. அமெரிக்க 9-வது படையும் அங்கு இருக்கிறது.

5. அமெரிக்க 3-வது சேனை டிரியரையும், பெல்லிங்கனையும் பிடித்தபின் கைல்நதியை அடைந்துவிட்டது. பிட்பர்க்குக்கருகில் ஒரு முன்னேறும் வாசலையும் ஏற்படுத்திவிட்டது.

6. அமெரிக்க 7-வது சேனை சார்பிரக்கனுக்குத் தென்மேற்கில் லார்நதி பிரதேசத்தில் தாக்குதலைத் துவக்கிவிட்டது.

**கிழக்குப் போர்முனை—**

1. 1-வது 2-வது வெண்மை ருஷ்ய சேனைத் தலைவர்களான மார்ஷல் சூகோவும், மார்ஷல் ரோகோஸோவ்ஸ்கியும் கிழக்கு பிரஷ்யாவிலும், போமரேனியாவிலும் உள்ள ஜெர்மன் சேனைகளை அழித்தபின் பால்டிக் கடலை அடைந்துவிட்டார்கள்.

2. இந்த நடவடிக்கைகளில் நியூஸ்டெட்டினையும், பிரிச்லாவையும் கோஸ்லினையும் பிடித்ததன்மூலம் கிழக்கு போமரேனியாவையும் மேற்கு போமரேனியாவையும் ரோகோஸோவ்ஸ்கி துணித்துவிட்டார்.

3. கோல்பர்க் பிரதேசத்தில் ரோகோஸோவ்ஸ்கிக்கு மேற்குப் பக்கத்தில் பால்டிக் கடற்கரையை சூகோவ் அடைந்துவிட்டார். அவர் பின்கண்ட இடங்களைப் பிடித்தார். ஷீவல்பீன், பேயர்வால்டி, டெம்பல்பர்க், கால்கன்பர்க். டிரெம்பர்க், வாங்கரின், லேப்ஸ், பிரீன்வால்டி, ரீஜன்வால்டி, கோயர்லின், ஸ்டார்கிராட், நாகார்ட், போல்சின், டிரெப்டௌ, காமின், கிரீபென்பர்க், பிளாந்தே, குல்ஸௌ.

4. டான்ஸிக்குக்கு மேற்கிலும் தெற்கிலுமுள்ள மால்காவும், கிராடென்ஸூம் கோனியேவ் வசமாகிவிட்டன.

**இதாலி, மத்தியதரைக்கடல்.**—(1) காசால் பார்செட்டிக்கு வடக்கிலுள்ள ஆட்ரியாடிக் கடற்கரை பிரதேசத்தை 8-வது சேனை சுத்தி செய்துவிட்டது.

(2) ஈஜியன் கடலிலுள்ள ரோட்ஸ்தீவுக்கு வடமேற்கில் 20 மைல்களிலுள்ள பிஸ்கோபித்தீவில் நேசதேசப்படைகள் இறங்கிவிட்டன.

**ஐவோஜிமா.**—அமெரிக்கர்கள் இந்தத் தீவிலுள்ள மோடோயாமா மலையை ஆக்கிரமித்துவிட்டார்கள். கடும்போர் நடைபெறுகிறது.

**பிலிப்பைன்ஸ்.**—(1) லூஸானுக்கு வடமேற்கிலுள்ள இலோகோஸ் நார்டி மாகாணத்திலிருந்து ஜப்பானியப்படைகள் சுத்தி செய்யப்பட்டன. லூஸானிலுள்ள டிக்டிக், சாண்டா ரோசா, நிவா விஸ்கேயி முதலிய இடங்கள் விடுவிக்கப்பட்டன.

(2) பாலாவன், லூவாங்க், டினிடிங்கேயோ, பூரியா டிஸ்கேயோ முதலிய தீவுகளில் படைகளிறங்கிவிட்டன.

**சீனு.**—சீனர்கள் ஹெங்கியாங்குக்கு சமீபத்திலுள்ள சாலிங்கைத் திரும்பிப் பிடித்துவிட்டன.

**பர்மா.**—(1) நேசதேசப் படைகள் சிங்குக்கு சமீபத்திலுள்ள கெட்டின் தீவிலிறங்கிவிட்டன.

(2) மாண்டலே பிரதேசத்தில் நாக்குன் பிராந்தியத்தில் ஒரு புதிய முன்னேறும் வாசல் அமைக்கப்பட்டது. யேஸின் என்ற கிராமமும் மெயிக்டிலா விமான தளமும் பிடிபட்டன.

சமீப காலத்தில் கிடைத்த தகவலிலிருந்து மாண்டலேயுக்குள் படைகள் நுழைந்துவிட்டன.

(3) சீனர்கள் லாஷியோவைப் பிடித்துவிட்டார்கள்.

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**25—2—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—ரயில் தளங்கள்-*மியூனிச்* (Munich), *ஆஸ்ச்சாபன்பர்க்* (Aschaffenburg), *உல்ம்* (Ulm).

மான நிலயங்கள்.—*கிபல்ஸ்டாட்* (Giebelstadt), *ஸ்காவாபிஸ்ச்சால்* (Schwabischhall).

ங்கி கூட்டம்.—*ஆஸ்ச்சாபன்பர்க்* (Aschaffenburg).

ண்ணெய் சேமிப்பு டெப்போ.—*நியூபர்க்* (Neuberg).

தாடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—*காமன்* (Kamen).

ப்பாக்கி நிலயங்கள், போக்குவரத்துகள்.—*ஹாலந்து* (Holland).

போக்குவரத்துகள்.—*ஆஸ்திரியாவிலுள்ள லின்ஸ்* (Linz).

லக்குகள்.—*பிரென்னர் கணவாய்* (Brenner Pass).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—*கிராஸ்* (Graz), *க்லாகன்பர்ட்* (Klagenfurt), *பிரெஸ்ஸியா* (Brescia).

போக்குவரத்துகள்.—*வட இதாலி* (N. Italy).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—*பெர்லின்* (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—*இவோ ஜிமா* (Iwo Jima).

**பர்மா (Burma).**

ஸ்தாப் பாலங்கள்.—*வட பர்மா, மத்திய பர்மா.*

ரயில்வே மோட்டார் வண்டிகள், படகுகள்.—*பறந்த பிரதேசங்கள்.*

எதிரி சைனியங்கள்.—*அரக்கான்* (Arakan).

பாலங்கள்.—*மியன்மு* (Myinmu), *பாகான்* (Pagan).

**26—2—45.** (திங்கட்கிழமை).

ஜெர்மனியும் ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—இலக்குகள்—*பெர்லின்* (Berlin).

எண்ணெக் கிணறுகள்.—*டார்ட்மண்ட்* (Dortmund).

எண்ணெ ஸ்தலங்கள்.—*காமன்* (Kamen).

'V' இலக்குகள்.—*ஹாலந்து* (Holland).

இலக்குகள்.—*பிரென்னர்* (Brenner) *கணவாய், யூகோஸ்லாவியா* (Yugoslavia).

போக்குவரத்துகள்.—*வட இதாலி* (North Italy).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—*பெர்லின்* (Berlin).

கப்பல்கள்.—*காகர்ராக்* (Kagerrak).

**தூரக்கிழக்கு (Far East).**

**பர்மா (Burma).**

*ஒரு தகவலும் இல்லை.*

**27—2—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—*ஆக்ஸ்பர்க்* (Augsburg), *விரோணு* (Verona).

போக்குவரத்துகள்.—*வட இதாலி* (North Italy), *யூகோஸ்லாவியா* (Yugoslavia).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

*ஒரு தகவலும் இல்லை.*

**பர்மா (Burma).**

ஜப்பானியத் தற்காப்புகள்.—*மாண்டலேயைச் சுற்றிலும்.*

**28—2—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார்செய்து சேமிக்குமிடங்கள், தொழிற்சாலை இலக்குகள்—*வட மேற்கு ஜெர்மனி* (N. W. Germany), *காஸஸல்* (Kassel) *ஸோயெஸ்ட்* (Soest), *ஸ்கூவெர்ட்* (Schwerte), *ஹாகன்* (Hagen).

நிலயங்கள்.—*நார்ட்ஸ்டெர்ன்* (Nordstern).

போக்குவரத்துகள்.—*ஆஸ்திரியா* (Austria), *இதாலி* (Italy), *யூகோஸ்லாவியா* (Yugoslavia).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—*இவோஜிமா* (Iwo Jima).

கப்பல்கள்.—*ஹாங்காங்* (Hong-Kong).

**பர்மா (Burma).**

ரயில்வே இலக்குகள்.—*ஸெடான்* (Sedan).

ஸப்ளைகள், துருப்புகள்.—*வடக்கில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

விமான உதவி.—*எல்லா அரங்களிலும் உள்ள தரைப்பாகம்.*

**1—3—45** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—(103 *எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன*).

ரயில் ஸ்தலங்கள்.—*ஹெயில்பிரான்* (Heilbronn), *உல்ம்* (Ulm), *கோப்பிங்கின்* (Goppingen), *ஆக்ஸ்பர்க்* (Augsburg).



இலக்குகள்.—*மான்ஹீம்* (Mannheim), *காமன்* (Kamen).

V-இலக்குகள்.—*நெதர்லாண்ட்ஸ்* (Netherlands).

இலக்குகள்.—*ஆஸ்திரியா* (Austria), *யூகோஸ்லாவியா* (Yugoslavia), *வட இதாலி* (N. Italy).

எண்ணெய் கிணறு.—*மூஸ்பிர்பாம்* (Moosbierbaum).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (62 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).*

**தூரக்கிழக்கு (Far East).**

*ஒரு தகவலும் இல்லை.*

**பர்மா (Burma).**

இலக்குகள்.—*மாண்டலே* (Mandalay).

விமான நிலயங்கள்.—*மெய்க்திலா* (Meiktla).

**2—3—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எதிரி துருப்புகள், பீரங்கி ஸ்தாபனங்கள் இதர இலக்குகள்—*கொலோன்* (Cologne).

இலக்குகள்.—*மாக்டிபர்க்* (Magdeburg).

"V-2" இலக்குகள்.—*ஹாலந்து* (Holland).

இலக்குகள்.—*லின்ஸ்* (Linz) *பிரதேசம்.*

ரயில்வே தளங்கள்.—*பிரெஸ்ஸியா* (Brescia).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—இலக்குகள்—*பெர்லின்* (Berlin), *கொலோன்* (Cologne), *காஸ்ஸல்* (Kassel).

**தூரக்கிழக்கு (Far East).**

மக்காசம் ரயில்வே தொழிற்சாலை.—*பாங்காக்* (Bangkok).

**பர்மா (Burma).**

ரயில்வே ஜங்ஷன்.—*கோராட்* (Korat).

எதிரி சைனியங்கள்.—*அரக்கான்* (Arakan).

**3—3—45.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—3 தொழிற்சாலை நிலயங்கள்—*பிரன்ஸ்விக்* (Brunswick).

4 எண்ணெய் சுத்தம் செய்யுமிடங்கள்.—*மாக்டிபர்க்* (Magdeburg), *பிரன்ஸ்விக்* (Brunswick).

ரயில் தளங்கள்.—*செம்னிட்ஸ்* (Chemnitz).

'V படை" இலக்குகள்.—*ஹாலந்து* (Holland).

பாலங்கள்.—*பிரென்னர்* (Brenner), *கணவாயில் உள்ள ரயில் பாதைகள்.*

ரயில் இலக்குகள்.—*வட இதாலி* (N. Italy), *யூகோஸ்லாவியா* (Yugoslavia).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—எதிரிக்கப்பல்கள்—*நார்வே* (Norway).

இலக்குகள்.—*பெர்லின்* (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

கப்பற்கட்டுத்துறைகள்.—சிங்கப்பூர் (Singapore).

ஜப்பானிய இலக்குகள்.—*இவோஜிமா* (Iwo Jimo). *பார்மோஸா* (Formosa).

**பர்மா (Burma).**

ஸப்ளை பிரதேசம்.—*டாங்டிவின்ஜீ* (Taungdwingi.)

ஸப்ளைக் குவியல்கள்.—*துருப்பு முகாம்கள் மாண்டலே* (Mandalay).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**26—2—45.** (திங்கட்கிழமை) **to 4—3—45** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**—*ஒரு தகவலும் இல்லை.*

---

## யுத்தக் குறிப்புகள்.

**ஸான்பிரான்ஸிஸ்கோ.** *இது முகம்மதியர்களுக்கு மெக்கா போல எல்லா தேசங்களுக்கும் யாத்ரை ஸ்தலமாகிவிட்டது. இந்த வாரத்தில் அநேக நாடுகள் அச்சு நாடுகளுடன் போர் தொடுத்துவிட்டன. ஸான்பிரான்ஸிஸ்கோ மகா நாட்டில் கலந்து கொள்ளுவதற்கும் நேசதேசங்களின் "கிளப்" என்று ஈடன் சொன்ன ஸமாஜத்தில் அங்கத்தினராகச் சேர்ந்துகொள்ளுவதற்கும் அது சாதகமளிக்கும். ஏற்கனவே ஜெர்மனியுடன் போர் தொடுத்திருந்த இரான், இப்பொழுது ஜப்பானுடனும் போர் தொடுத்துவிட்டது. ஸாடி அரபியா ஜெர்மனியுடனும், ஜப்பானுடனும் போர் தொடுத்துவிட்டது. பின்லாந்து ஸெப்டம்பர் மாதம் 15-ம் தேதி முதல் பின்னிஷ்—ருஷ்ய ஒப்பந்தப்படி ஜெர்மனியுடனிருந்த உறவை ரத்து செய்துவிட்டது. அந்த ஒப்பந்தப்படி பின்லாந்தைவிட்டு ஜெர்மன் படைகள் வெளியேறும்படி கட்டாயப்படுத்தப்பட்டன. அச்சு நாடுகளுடனும் அனுதாபம் காட்டிவந்ததும் ருஷ்யாவுக்கு நீலப் படைகளை அனுப்பியதும் இழிவான நடத்தையுள்ள ஸ்பெயினும், நண்பனாக இருக்க ஆசைப்படுகிறது. 1942-ம் வருஷத்தில்*

ஸ்பெயினில் அகப்பட்டுக்கொண்ட 573 அமெரிக்க, 279 பிரிடிஷ் விமானிகளை விடுவித்திருப்பதாக நேசதேசத்தார்களிடம் ஞாபகப்படுத்துவதன் மூலம் அது அதனுடைய நல்ல எண்ணங்களை வெளியிட்டிருக்கிறது. போர்ச்சுகல் போர் தொடுக்கவில்லை. ஏனெனில் எதிர் காலத்தில் யுத்த நிறுத்த ஏற்பாடு செய்ய ஐரோப்பாவில் நடுநிலைமை வகிக்கும் ஒரு நாடு இருக்க வேண்டுமென்று நேசதேசத்தார்கள் விரும்புகிறார்கள். போலந்தைத்தவிர பாக்கி 45 நாடுகளும் ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருக்கின்றன. போலந்தில் தேசீய ஒற்றுமையுள்ள நிர்வாகம் ஏற்பட்டபின் அதுவும் மகா நாட்டிற்கு அழைக்கப்படும்.

ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்கு சர்வதேசங்களும் பிரதிநிதிகளை அனுப்புவதற்குத் தகுந்த காரணங்கள் உள. அச்சு நாடுகளின் தோல்வியைப்பற்றி இனி சந்தேகமில்லை. ஒரு புதிய உலகம் ஜனிக்கப்போகிறது. உலகத்தின் வருங்கால அமைப்பு அவர்களின் கையிலிருக்கிறதென்று சர்வதேசங்களும் கண்டுகொண்டன. அமெரிக்கப் பிரதிநிதி சபையில் இந்த வாரத்தில் ஆற்றிய சொற்பொழிவில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வெளியிட்டதுபோல உலகத்தின் சமாதானத்தை நிறுவுவது, ஒரு கக்ஷியினுடையவோ அல்லது கேவலம் ராணுவ நடவடிக்கையினாலோ சாத்தியமில்லை. எவ்வளவு சக்தியும் செல்வாக்கும் பெற்றிருந்தாலும் தனிப்பட்ட நபரோ, கக்ஷியோ, நாடோ உலகத்தின் வருங்கால அமைப்பை நிறைவேற்றிவிட முடியாது. எதிர்காலத்தில் சமாதானத்தை பிரிடனோ, அமெரிக்காவோ, ருஷ்யாவோ, பிரான்ஸோ, சைனாவோ நிறுவ முடியாது. அது சிறிய பெரிய எல்லா தேசங்களின் பொதுவான அக்கரையாகும். அது ஆரம்ப காலத்தில் சிறந்த உருவான ஸ்தாபனமாக இருக்காது. ஆகிலும் ஆரம்ப கால முதல் அந்த ஸ்தாபனம் அட்லாண்டிக் சாஸனத்தின் நியாயமான சிலாக்கியமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

ஜனாதிபதி அமெரிக்கர்களுக்குப் பின்வருமாறு அறிவித்தார் :—

"கிரிமியா மகாநாட்டின் முடிவுகள் தனிப்பட்டவர்களின் நடவடிக்கை, தனிப்பட்ட ஒப்பந்தங்கள், செல்வாக்கு வட்டாரங்கள், பிராபல்ய சமத்வம், மற்ற சாகசக்யங்கள், எல்லாவற்றிற்கும் முடிவு ஏற்படுத்திவிட்டன. அநேக நூற்றாண்டுகளாக பரீக்ஷித்துப் பார்க்கப்பட்ட இந்த முறைகள் பயன்படாமல் போய்விட்டன. அவைகளுக்குப் பதிலாக நாங்கள் சர்வதேச ஸ்தாபனத்தை அமைக்க உத்தேசித்திருக்கிறோம். அந்த ஸ்தாபனத்தில் சமாதானத்தை விரும்பும் எல்லா தேசங்களும் சேர்ந்துகொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படும்."

அவர் பின்கண்ட எச்சரிக்கையையும் விடுத்தார் :—

"கிரிமியா அமெரிக்க சரித்திரத்தில் ஒரு முக்கியமான கட்டம். அநேக சந்ததிகள் வரையில் அமெரிக்காவினுடையவும் உலகத்தினுடையவும் விதியையும் நிர்ணயிப்பதும், உலக ஒத்துழைப்புக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுவதும் ஸெனட் சபையின் கையிலிருக்கிறது."

அடுத்த மாதத்தில் கூடும் ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாடு டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டில் கோடீகரித்த பிரகாரம் உலக பத்திரத்திற்காக சர்வதேச ஸ்தாபனத்தை அமைப்பதற்காக விவரங்களை நிர்த்தாரணம் செய்யும்.

வி வி வி வி வி

**ஜெர்மனியின் எதிர்காலம்.** ஜெர்மனியின் எதிர்கால க்ஷேமம் இனிமேல் ஈச்வர கிருபையை ஒட்டியதில்லை. நேசதேசத்தார்கள் வசம் வந்துவிட்டது. யால்டா மகாநாட்டில் ஏற்பட்ட ரகசியமான முடிவுகளைப்பற்றிய சில உண்மைகளை இந்த வாரத்தில் ஜனாதிபதி பத்திரிகை ஆசிரியர்களிடம் வெளியிட்டிருக்கிறார். அதாவது, வெஸ்ட்பாலியா, பாலடினெட்டிலிருந்து ஒரு புதிய தேசம் அமைக்கப்படும். அது சர்வதேசங்களின் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படும். பிரிடனும், ருஷ்யாவும், அமெரிக்காவும் ஜெர்மனியின் மேற்கு, கிழக்கு, தெற்கு அரங்கங்களை ஆக்கிரமித்துவிடும்.

வி வி வி வி வி

**கோயபல்ஸின் வாராந்திர ஒப்பாரி.** இந்த ஒப்பாரியை கவனித்தால் சமீபித்துவிட்ட துர்தசையை நாஸிகள் நன்கு உணர்ந்துவிட்டார்கள் என்று தெரியவருகிறது. ஜெர்மனிக்கு மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டதென்று அவர் ஒலிபரப்பில் ஒப்புக்கொண்டு, ஜனங்கள் உயிர்துறக்கு முன் அவர்களின் தலைவர்களும் உயிர் துறந்துவிடுவார்களென்று ஜனங்களை ஆச்வாசப்படுத்தியிருக்கிறான். அது பேடிஜம். நாஸித் தலைவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளும்முன் மற்றவர்களை மாய்த்துவிடுவார்கள். போர்முனைகளில் ஜெர்மன் ஸோல்ஜர்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் காவு கொடுக்கப்படுகிறார்கள், மேலும் நாஸிகளின் அதிகாரத்துக்கு அடிப்படையாக இருந்த ஜெர்மன் பிரபுக்களும் நிர்மூலமாக்கப்படுகிறார்களென்று டெயிலி மெயில் பத்திரிகையின் பெர்ன் நிருபரான பிலிப் ஜோர்டன் எழுதியிருக்கிறார். ஹிட்லரைக் கொலை செய்த முயற்சித்ததற்குப் பின் அவர்களை ஏதாவது ஒரு காரணத்தைக்கொண்டு ஒவ்வொருவராகக் கொலைசெய்வது நாஸிகளின் திட்டம் ஆகிவிட்டது. லண்டனில் அயல்நாட்டு மந்திரியாக இருந்த பெர்ன்ஸ்டார்ட் பிரபு அவர்களில் ஒருவர். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அவர் தாராளக் கக்ஷியைச் சேர்ந்தவர் என்று குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் உண்மையான காரணம் யாதெனில் அவர் பிரிடனின் ஸ்நேகிதர், யுத்த நிறுத்தப் பேச்சுகளில் அவர் சம்பாஷனைகளை நடத்தக்கூடியவர் என்பதுதான்.



வி வி வி வி வி

**பொறிவைத்தவர்கள் பொறியில் அகப்பட்டுக்கொள்ளுகிறார்கள்.** பெர்லினுக்குள் நுழையும்பொழுது எதிரிகளை பொறிக்குள் அகப்படும்படி செய்யும் உத்தேசத்துடன் அமைக்கப்பட்ட டாங்கிப்பொறிகளும், முட்டுக்கட்டைகளும், முள்ளுக்கம்பிகளும் ஜெர்மானியர்களுக்கே சாவுப்பொறியாக ஆகிவிட்டன. தினசரி நடைபெறும் விமான நடவடிக்கையிலிருந்து தப்பிஓட முயலும் பெர்லின் ஜனங்கள் எதிரிக்காக அமைக்கப்பட்ட பொறிகளில் அகப்பட்டுக்கொண்டு தப்பி ஓடக்கூடவில்லை. அவர்கள் அகஸ்மாத்தாக சுரங்கவெடி பாவப்பட்ட ஸ்தலங்களின் மேல் மிதித்துவிடுகிறார்கள். நெருப்பு அணைக்கும் படைகளும் ரக்ஷகப்படைகளும் பொறிகளில் அகப்பட்டுக்கொள்வதினால் விமானத் தாக்குதலுக்குட்பட்ட ஜனங்களுக்கு உதவிசெய்யச் செல்லமுடியவில்லை.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.— ரைன் நதிப் போர்.** சென்ற வருஷம் நடைபெற்ற சேன் நதிப் போருக்கும் இவ்வருஷம் நடைபெறும் ரைன் நதிப்போருக்கும் சாம்யம் உண்டென்று லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக் சொல்லுகிறார். நிஜ்மேகனுக்கு சமீபத்திலுள்ள எம்மரிச் கேயனுக்கும் பாலேயிக்கும் ஒப்பிடக்கூடியது. இந்த இரண்டு கேந்திர ஸ்தாபனங்களிலும் எதிரியின் முக்கியமான பலத்தை ஈடுபடுத்தி மற்ற போர்முனைகளிலுள்ள அமெரிக்கப் படைகளின் முன்னேற்றத்துக்கு சௌகரியம் அளிப்பதுதான் பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரியின் யுத்த தந்திரம். இரண்டு வாரங்களுக்கு முன்தான் கனடிய சேனையும் அதிலுள்ள நான்கில் மூன்று பாகமுள்ள பிரிடிஷார்களும் மாஸ் நதிக்கும் ரைன் நதிக்கும் மத்தியில் தெற்கை நோக்கி முன்னேறினார்கள். ஆனால் அப்பொழுது ரோயர் நதியில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதினால் அவரிடமிருந்த 9-வது அமெரிக்க சேனை முன்னேறக்கூடவில்லை. ஆகிலும் கேயனிலும் பாலேயிலும் செய்ததுபோல பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி சற்று பொறுமையுடனிருந்தார். ஆகிலும் குறுகிய போர்முனையில் சாவதானமாக வலுவாகத் தாக்கிவந்தார். இதற்கு உத்தேசித்த பலன் கிடைத்தது. காந்தம் இழுப்பதுபோல ரோயர் நதித் தற்காப்புகளிலிருந்து 9 டிவிஷன் படைகளை ருண்ட்ஸ்டெட் இங்கு கொண்டுவந்தான். இந்த சமயத்தில் 9-வது சேனை ரோயர் நதிப் பிரதேசத்தில் பலமாகத் தாக்கிற்று. வெள்ளப் பெருக்குக் குறைந்தும், கிரோரரின் முன்னேற்றத்தைத் தடுக்க படைகள் அனுப்பப்பட்டதினால் தற்காப்புகள் பலஹீனமடைந்தும் போய்விட்டதால் ஜெனரல் ஸிம்ப்ஸன் முன்னேறித் தாக்கி ரோயர் நதியைத் தாண்டிவிட்டார். இந்த நடவடிக்கையை நார்மண்டியில் ஸெயிண்ட் லோவில் படைகள் ஊடுறுவிச்சென்றதற்கு சமமானதென்று சொல்லலாம்.

ரோயர் நதியின் கிழக்குக்கரையை அடைந்தபின் ஸீக்பிரெட் அரணைத் தாண்டிச்சென்று மஞ்சன் கிளாட்பாக், கிரொபல்ட், நியூஸ் முதலியதை தாண்டிச் செல்லுவது சுலபமாகிவிட்டது.

இதே சமயத்தில் ஜெனரல் ஹொட்ஜஸின் முதல் சேனை எ நதியைத் தாண்டி நேராகக் கொலோனுக்குச் சென்றது. இதே சமயத்தில் கிரேரரின் கனடிய சேனையும் கிளிவ், கோக், ஹாக்வால்ட் காடு, கால்கார், ஊடம், விஸ் வழியாகச் சென்று டேயிஸ்யர்க்குக்கு வடக்கிலுள்ள வேஸலிலுள்ள ரைன் நதிப் பாலத்தைத் தாண்டிவிட்டது.

கொலோன், ரைன் நதியின் கரையில் நேசதேசத்தார்களிருக்கும் பக்கத்திலிருக்கிறது. விமானத் தாக்குதலால் மதிக்க முடியாத வண்ணம் ஏற்கனவே தரை மட்டமாகியிருக்கும் நகரம். அது உற்று நோக்காளர்கள் பின்வருமாறு சொல்லுகிறார்கள். "கொலோன் பாழாகிவிட்டது. சுற்றுப்புறங்களில்தான் சில கட்டடங்கள் காணப்படுகின்றன. பொதுமக்களின் பெரும்பான்மையோர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். எஞ்சியிருக்கும் சிலர் ஒளிகளில் வசித்து வருகிறார்கள். அங்கு கடைகளும், சினிமாக்களும், ஹோட்டல்களும் பொதுஜன வாழ்க்கையும் காணப்படவில்லை. உணவுப் பொருள்கள் ரயில் வண்டித் தொடர்

களில் கொண்டுவரப்படுகின்றன. நகரத்தின் மத்தியிலுள்ள கியாதி பெற்ற சதுக்கம் மதிக்கக்கூடாதபடித் தூளாகிவிட்டது. நெசவுத் தொழிற்சாலைகளில் ஒன்றும் உற்பத்தியாகுவதில்லை. யுத்த தளவாட உற்பத்தி சாலைகள் பாழாகிவிட்டன.

கொலோனை அமெரிக்க 1-வது சேனையும் 3-வது சேனையும் பிடித்துவிட்டன.

ரூர் பிரதேசம் பூராவும் திறக்கப்பட்டுவிட்டது. ரூரும் ரைன் நதியும் சேருமிடத்தில் நிலக்கரிச் சுரங்கங்களும், இரும்பு, எஃகு, ரசாயன, நெசவு ஆலைகள் உள்ள நிலயங்களுமான டூயிஸ்பர்க், மல்ஹீம், ஒபர்ஹாஸன், எஸ்ஸன், டப்ஸல்டார், வஸ்பர்தால் என்ற தொழிற்சாலை நகரங்களிருக்கின்றன.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** ஜெர்மனிக்குள் வெகு தூரம் எட்டிவிட்டது. இனிமேல் நேசதேசப் படைகளைத் தடுக்க ஸீக்பிரட் அரணும் காடுகளும் கிடையாது. ரைன் நதியிலுள்ள தற்காப்புகள் நொருங்கிவிட்டால் நேசதேச டாங்கிகள், அவ்ராஞ்சஸ் போருக்குப் பின் பிரான்ஸில் ஒரே மூச்சாக முன்னேறியது போல் ஜெர்மனியில் முன்னேறிவிடும். 'நேசதேசத்தார்கள் ஏராளமான படைகளைக் குவித்திருக்கிறார்கள். அவர்கள் ஏராளமான படைகளைப் போரில் ஈடுபடுத்துகிறார்கள். அவர்களிடம் ஏராளமான யுத்த தளவாடங்கள் இருக்கின்றன. போர்முனைக்குப் பின் ஆறு டாங்கி டிவிஷன்களிருக்கின்றன.

ரைன் நதிக்கான போரில் ஜெர்மனி ஏற்கனவே 90,000 போர் வீரர்களை இழந்திருக்கிறது. 15 டிவிஷன் படைகள். கொல்லப்பட்டிருக்கிறார்கள், காயம்பட்டிருக்கிறார்கள். அல்லது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ரைன் நதிக்கு மேற்குக் கரையிலுள்ள கனேடிய 1-வது, அமெரிக்க 9-வது, சேனைகளுடன் ருண்ட்ஸ்டெட் மூர்க்கத்தனமாகப் போர் புரிந்துகொண்டே படைகளைப் பின்வாங்கிவருகிறான். முதலாவது குடைத்துருப்புகளின் பெரும் பாகமும் 15-வது சேனையின் பெரும் பாகமும் ஏற்கனவே நதியின் கிழக்குக் கரைக்கு வந்துவிட்டன. கொஞ்சம் கொஞ்சமாக வெஸல் பாலத்திற்குப்பின்வாங்கி, அங்குவந்தபின் போரை நிறுத்தி நதியைத்தாண்டிச் சென்று பாலத்தை உடைத்துவிடுவதென்பதுதான் ருண்ட்ஸ்டெட்டின் யுத்த தந்திரம்.

வி வி வி வி வி

**விமான நடவடிக்கை.** நேச விமானப்படையும் ஜெர்மனியை பலமாகத்தாக்கி வருகின்றன. தூரத்திலும் சமீபத்திலுமுள்ள எதிரியின் போக்குவரத்து மார்க்கங்கள் இடைவிடாது பலமாகத் தாக்கப்படுகின்றன. இரண்டு வாரமாக பெர்லின் அடிக்கடி தாக்கப்படுகிறது.

வி வி வி வி வி

**பதில் நடவடிக்கை.** ஜெர்மன் ஓட்டியில்லா விமானங்கள் இங்கிலாந்தில் இரண்டு நாள் இரவில் வந்து, முதல்நாள் விசாலமான பரப்பிலும் மறுநாள் குறிப்பிட்ட அளவிலும் வெடிகுண்டுகளைப் போட்டன. சொற்ப சேதமும் ஏற்பட்டது. இந்தக் கஷ்டம் வடக்கு ஹாலந்திலுள்ள V ஆயுதங்கள் புறப்படும் இடங்களிலிருந்து எதிரி துரத்தியடிக்கப்படும்வரையில் இருந்தேதீரும். நேசதேசத்தார்கள் கொலோனுக்குள் நுழைந்தபின்னும் பெர்லினுக்கு அபாயத்தை உண்டுபண்ணும் நிலைமையிலிருக்கும் பொழுதும் ஜெர்மனி வடக்கு ஹாலந்திலிருந்து பின்வாங்கிவிடவில்லை. இது ஜெர்மனியின் பழிவாங்கும் வெறியைப்பொருத்தது. வடக்கு ஹாலந்தில் ஸீக்பிரட் அரணின் தொடர்ச்சி என்று சொல்லக்கூடிய இஜெஸல் அரணில் அவர்கள் நிலைத்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**ருஷ்யப் போர்முனை.** இந்த வாரத்தில் மார்ஷல் ரொகோஸோவ்ஸ்கியின் இரண்டாவது வெண்மை ருஷ்ய சேனை டான்ஸிக்-ஸ்டெட்டின் இருப்புப்பாதையிலுள்ள கோஸ்லினைத்தாண்டி டான்ஸிக்குக்கும் போமரேனியாவிலுள்ள ஸ்டெட்டினுக்கும் நடுவில் முன்னேறி பால்டிக் கடலை அடைந்துவிட்டது. கடற்கரையை அடைந்ததிலிருந்து டான்ஸிக் கடலிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**பஸிபிக்.** அமெரிக்கர் தீவு தீவாக 18 தீவுகளைப்பிடித்தபின் பிலிப்பைன்ஸில் படைகள் காலூன்றிக்கொண்டுவிட்டன. ஜப்பானியர்கள் ஐவோஜிமாவில் இன்னும் கோரமாகப் போர்புரிந்து வந்தபோதிலும் இறுதியில் அவர்கள் எல்லோரும் தற்கொலை செய்துகொண்டுவிடுவார்கள். ஜப்பானிய



ஆபீஸர்கள் தற்கொலை செய்துகொள்ளுவதாகச் சொல்லப்படுகிறது. நேசதேசத்தாரின் முன்னேறும் வழியில் நூற்றுக்கணக்கான ஆடவர்களுடையவும், ஸ்திரீகளுடையவும் சவங்கள் சிதறிக்கிடக்கின்றன.

அமெரிக்க ஜன பிரதிநிதி சபைக்கு இவ்வாரத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொற்பொழிவாற்றியபொழுது, யால்டா மகாநாட்டில் பஸிபிக் போரைப்பற்றி சர்ச்சை நடைபெறாவிட்டாலும் பிரிடிஷ், அமெரிக்க மந்திரிகள் ஜப்பானை பலமாகத் தாக்கும் திட்டத்தைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டிருந்தார்களென்று ஜனாதிபதி சொல்லியிருக்கிறார்.

இந்த வாரத்தில் டோகியோ பேரில் மூன்று தடவைகள் வெடிகுண்டுகள் வீசப்பட்டன.

வி வி வி வி வி

**பர்மா.** பிரிடிஷ் துருப்புகள் மாண்டலேக்கு மேற்கில் 31 மைல்களிலுள்ளதும் இராவதியிலுள்ளதுமான நிகாருன் பிராந்தியத்தில் ஒரு முன்னேறும் வாசலை ஏற்படுத்திவிட்டார்கள். கடைசியாக வந்த தகவல்களிலிருந்து 19-வது இந்திய டிவிஷனைச் சேர்ந்த படைகள் மாண்டலேக்குள் நுழைந்துவிட்டன. அதன் வடக்கு சுற்றுப்புறத்திலுள்ள காபோவில் போர்புரிந்துவருகிறார்கள். நேசதேசப்படைகள் ஸிங்குவுக்கு சமீபத்திலிருக்கும் கெத்தின் தீவில் இறங்கிவிட்டார்கள்.

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள்.** 1. பிரிடிஷ் ஜன பிரதிநிதி சபை போலந்தைப்பற்றி யால்டாவில் செய்த முடிவுகளை 396 வோட்டுகள் சார்பாகவும் 23 பேர்கள் எதிராகவும் கொண்டு அங்கீகாரம் செய்தது.

2. பிரிடிஷ் ஜன பிரதிநிதி சபை சர்ச்சிலிடமும் சபைக்குள்ள நம்பிக்கையையும் கிரிமியா மகாநாட்டின் முடிவுகளையும் ஏகமனதுடன் ஒப்புக்கொண்டது.

3. ஸான்பிராஸிஸ்கோ மகாநாட்டிற்குப் பூர்வாங்கமாக சாம்ராஜ்ய மகாநாடு கூடும். அதற்கு இந்தியாவும் அழைக்கப்படும்.

---

## மேற்குப் போர்முனையில் இறுதி போராட்டம்.

### நேசதேசப் படைகள் ஜெர்மன் தற்காப்புகளை நொருக்குகின்றன.

(லெப்டினன்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

யுத்த அறிக்கைகளை ஆழ்ந்து கவனிக்காவிட்டால் மேற்குப் போர்முனையில் அதிக சுறுசுறுப்பு இல்லையென்றும் இதாலியின் கால் போன்ற பக்கத்தில் பீல்ட் மார்ஷல் அலெக்ஸாண்டரின் படைகள் கஷ்டப்பட்டு முன்னேறியதுபோல் மாஸ் நதிக்கும் ரைன் நதிக்கும் மத்தியிலுள்ள பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரியின் படைகள் சாவதானமாக முன்னேறும்படி உத்தரவிடப்பட்டிருக்கின்றனவென்றும் தோன்றும். ஒரு வகையில் இரண்டு நடவடிக்கைக்கும் சாம்யம் உண்டு.

பீல்ட் மார்ஷல் அலெக்ஸாண்டரும் அவருக்குப்பின் தலைமை வகிக்கும் ஜெனரல் மார்க்கிளர்க்கும் இதாலியிலுள்ள 15-வது சேனையின் உதவி கொண்டு ஜெர்மனியைத் தாக்கிவரும் முக்கிய போர்முனையிலிருந்து வெகுதூரத்தில் 27 ஜெர்மன் டிவிஷன்களை தற்காப்புப் போரை நடத்தும்படி தேக்கி வைத்திருக்கின்றன. இதாலியிலுள்ள ஜெர்மன் படைகளைப் பின்வாங்கும்படி கெஸ்ஸல்ரிங்குக்கு உத்தரவு கிடைத்திருக்கிறதென்று ஹேஷ்யங்கள் காணப்படுகின்றனவென்பது உண்மைதான். ஆகிலும் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை சமாளிக்க ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு ஆடவரும் டாங்கியும் உபயோகப்பட வேண்டியிருக்கும்பொழுது சிறந்த 27 ஜெர்மன் டிவிஷன்களை 15-வது சேனை தேக்கி வைத்துவிட்டதென்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரியின் தற்போதிய தாக்குதல் மேற்குப் போர்முனையில் இறுதித் தாக்குதலுக்கு முற்போக்கானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், நாம் உண்மைகளை மதித்து ஊகத்தைப் புறக்கணித்து விடுவோம். உண்மைகள் பின்வருமாறு: 75 சதவிகிதம் பிரிடிஷ் படைகளுள்ள முதலாவது கனேடிய சேனை மாஸ் நதிக்கும் ரைன் நதிக்கும் மத்தியில் தென்கிழக்கு முகமாக ஒரு தாக்குதலை துவக்கியபின், ஜெர்மானியர்கள் இங்கு உபரியாக 7 ஜெர்மன் டிவிஷன்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த உபரிப் படைகள் மேற்குப் போர்முனையின் மற்ற எந்த பாகத்திலிருந்தும் வந்திருக்கவேண்டும். அல்லது மற்ற போர்முனைகளிலிருந்து கிடைத்த உதவாக்கரையான ஆட்களைக்கொண்டு மிகவும் சிரமத்துடன் அமைக்கப்படும் மூலபலத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கவேண்டும்.

பிரிடிஷ் கனடியத் தாக்குதலை ஜெர்மானியர்கள் மிகவும் பலமான பீதியுடன் பொருட்படுத்தியிருக்கவேண்டுமென்பது சகஜமானதுதான். ஏனெனில் இந்த இடத்தில் கிடைக்கக்கூடிய எவ்வித வெற்றி மூலம் ரைன் நதிக்கு மேற்கில் ஜெர்மானியர்கள் அமைத்திருக்கும் எல்லா தற்காப்புகளுக்குமுள்ள விலாப்பக்கம் பலஹீனமடைந்துவிடும். ஆகையால் இந்த அபாயத்தை ஸீக்பிரட் அரணின் ஒரு பாகத்தை பலஹீனப்படுத்தவேண்டியிருந்தாலும் பொருட்படுத்தாமல் ஜெர்மனி சமாளிக்கவேண்டும்.

பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி மறுபடியும் துருப்புகளுக்கு ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறார். அவர் பின்வருமாறு சொல்லுகிறார். "எல்லாப் போர்முனை நடவடிக்கைகளும் ஜெர்மன் யுத்தத்தில் இறுதி கட்டத்தை அடைந்துவிட்டன. 9-வது அமெரிக்க சேனையும் முதலாவது கனடிய, இரண்டாவது பிரிடிஷ் சேனையும் உள்ள 21-வது சேனை இறுதித் தாக்குதலுக்குத் தயாராக இருக்கிறது."

இத்தருணத்தில் மேற்கிலும் கிழக்கிலும் நேசதேசப் படைகள் நாடுகளை அதிகமாக மீட்கவில்லையென்பது உண்மைதான். மார்ஷல் கோனியேவ்மட்டும் கோட்பஸுக்கும் டிரெஸ்டனுக்கும் முன்னேறியிருக்கிறார். ஆகிலும் புயலுக்குமுன் அமைதி காணப்படுவதுபோல் தோன்றுகிறது. ஜூன் மாதத்திற்குப் பிறகு ஜெர்மன் தற்காப்புகளை 1,400 மைல் வித்தியாசத்திலிருந்து 400 மைல்களுக்குக் குறைவாகச் சுருக்கியிருக்கிறார்கள். ஆகையால் இந்தத் தாக்குதல்களை இனிமேல் ஜெர்மனி சமாளித்து நிற்கமுடியாது. கடைசித் தாக்குதல் கூடிய சீக்கிரத்தில் ஏற்படும். கிழக்கில் 240 ருஷ்ய டிவிஷன்களும் மேற்குப் பக்கத்தில் 80 பிரிடிஷ், அமெரிக்க, பிரெஞ்சு டிவிஷன் படைகளும் தாக்கக்கூடும்.

கிழக்கிலும், மேற்கிலுமுள்ள நேசதேசப் படைகளின் சங்கியையிலுள்ள வித்தியாசம் விசித்திரமாக முதலெடுப்பில் தோன்றலாம். ஜெனரல் ஈசன்ஹவரிடமுள்ள படைகளைப் போல மூன்று மடங்குள்ள படைகளை ருஷ்யா ஏன் உபயோகிக்கவேண்டுமென்றும் எல்லோரும் கேட்கலாம். மேற்குப் புறத்திலுள்ள நேசதேசத்தார்களின் கப்பற்படையும் விமானப் படையும் ருஷ்யர்களைவிட சங்கியையில் அதிகமானதென்று நான் சொல்லப்போவதில்லை. ஐரோப்பாவில் தரைப் போரில் பிரிடனும் அமெரிக்காவும் சொல்பமான படைகளை ஈடுபடுத்தியிருப்பதற்கு இதுதான் ஒரு முக்கிய காரணம். ஆனால், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ருஷ்யாவுக்கு ஜெர்மனியை எதிர்ப்பது என்ற ஒரு போர்முனைதான் இருந்து வருகிறது. பிரிடனும், அமெரிக்காவும் ஜப்பானியர்களைத் தாக்குவது என்ற இரண்டாவது மகத்தான போரை நடத்தவேண்டியிருக்கிறது. பிரிடிஷ் படைகள் குறைந்த பக்ஷம் 20 பல்வேறு போர்முனைகளில் போரை நடத்தியிருக்கிறார்கள்.

அகாலத்தில் துருப்புகளை கிழக்குப் போர்முனையில் ஈடுபடுத்திவிட்டார்களா என்ற பிரச்னையைப்பற்றி எனக்குப் போதுமான அளவு தகவல்கள் கிடைக்காததினால் நான் அதைப்பற்றி வியாக்யானம் செய்யப்போவதில்லை. ஐரோப்பியப் போரில் மந்த நிலையும், பஸிபிக் போரில் சுறுசுறுப்பும் காணப்படும்பொழுது, உலகத்தார் சமாதானம் பெற்று நஷ்டங்களை மதித்துப் பார்ப்பதற்குமுன், இரண்டு போர்களிலும் நாம் வெற்றி பெறவேண்டுமென்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியம்.

மின்னல் தாக்குதலின் மத்தியில் சுய புத்தியுள்ள எவரும் தங்களுடைய வாசஸ்தலத்திற்கு விரிவான முறையில் பழுதுபார்க்க ஆரம்பிக்கமாட்டார்கள். ஜெர்மனியையும் ஜப்பானையும் திராணியற்றவர்களாகச் செய்துவிடும் வரையில் இந்த உலக யுத்தம் முடிவடையாது. அநேக ஜனங்கள் இந்த உண்மையை மறந்துவிடுகிறார்கள். ஜெர்மனியுடன் இறுதிப் போரை நடத்த பிரிடன் 5½ வருஷங்களாகவும், ருஷ்யா மூன்றரை வருஷங்களாகவும், அமெரிக்கா மூன்று வருஷங்களாகவும் போரை நடத்தியிருக்கும்பொழுது, ஜப்பானை முறியடிக்க இரண்டுக்கு மேற்பட்ட வல்லரசுகள் ஈடுபடாதென்று தோன்றுகிறதென்பதையும் அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

---

# பெர்லினின் தற்காப்பு அமைப்பு.

## நாஸித் தலைவர்களின் திட்டம்.

**(டெயிலி ஹெரால்ட் பத்திரிகையின் ஸ்டாக்ஹோம் நிருபரான வாலேஸ் கிங்).**

பெர்லினின் தற்காப்பு அமைப்பின் திட்டம் நன்கு புலப்படுகிறது. அது மூன்று அரங்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது, பெர்லினைச் சுற்றி ஆடோபான் அமைத்திருக்கும் வெளிவளையும், இரண்டாவது கிராமங்களுக்கும் நகரத்தைச்சுற்றியுள்ள வாசஸ்தலங்களுக்கும் மத்தியில், மூன்றாவது தெருக்கள், கால்வாய்கள், நதி.



நாஸித் தலைவர்களின் உத்தேசம் பின்வருமாறு :—

வடக்கில் ஓரியன்பர்க்கிலிருந்து பெர்னு, ஆல்டானஸ்பர்க், எர்க்னர், ஸோசன், டிரேபின் பிலிட்ஸ் வழியாக அமைக்கப்பட்டிருக்கும் முதல் அரங்கத்தில் ருஷ்யர்கள் ஜெர்மன் கவசம் பூண்ட படைகளுடன் போரை நடத்தவேண்டும். இந்தப் பிராந்தியத்தில் சுரங்கவெடி பாவப்பட்ட ஸ்தலங்கள், டாங்கித் பொறிகள், முட்டுக்கட்டைகளுடன் ஏராளமான தற்காப்பு அமைப்புகளும் கட்டப்பட்டிருக்கின்றன. காட்டிலுள்ள மரங்கள் பாதிவரையில் வெட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் இடையூறுகளாக இருப்பதுடன் அந்தப் பிரதேசங்களில் சுலபமாகத் தற்காப்புகளையும் அமைத்துவிடலாயக்காக இருக்கும். பெர்லினைச் சுற்றியுள்ள ஏரிகளும் ஸ்பிரீ—வால்டிலுள்ள நதிகளும் கால்வாய்களும் தற்காப்புக்கு மிகவும் உபயோகமுள்ளவை.

இரண்டாவது சுரங்கமென்பது சுற்றுப்புறத்திலுள்ள கோட்டைகள். அவற்றில் தற்காப்புப் பெட்டிகளும், சுரங்கவெடிகளும் டாங்கிப் பொறிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. வயல்களிலும் வீட்டுத் தோட்டங்களிலும் ஸ்திரீகளும் குழந்தைகளும் அகழ்களை வெட்டிவருகிறார்கள். முட்டுக்கட்டைகளைக் கட்டிவருகிறார்கள்.

மூன்றாவது அரங்கமான பெர்லினில் முட்டுக் கட்டைகளுக்குத் தேவையான தளவாடங்களை நேசதேசத்தாரே ஸப்ளை செய்திருக்கிறார்கள். வெடிகுண்டு வீச்சினால் அநேக கட்டடங்கள் நொருக்கித் தூளாக இருக்கின்றன.

---

# ஆகாயப் போர் ஒரே போர்முனையாகிவிட்டது.

## ஸ்ட்ராடஜிக் வெடிகுண்டு வீச்சும், டாக்டிகல் வெடிகுண்டு வீச்சும் ஒன்றுபட்டுள்ளன.

**விங் கமாண்டர் L. V. பிரேசர்.**

அநேக திசைகளிலிருந்து ஜெர்மனியை இறுதியாக பலமாகத் தாக்க வேண்டுமென்று பீல்ட் மார்ஷல் சொல்லி வருவதற்கு நேசதேச விமானப்படை மிகுதியாக ஒத்தாசை செய்யும் என்பதை ஒவ்வொரு அரசாங்க வெளியீடும்தெளிவு படுத்திவருகின்றன.

ஜெர்மனியைச் சுற்றி ஆகாயத்திலிருந்து போடப்பட்டிருக்கும் வளையம் நெருங்கி வரும்பொழுது ஸ்ட்ராடஜிக் தாக்குதல் சுலபமாகி விட்டது. ஒவ்வொரு தாக்குதலுக்குமுள்ள அவசியத்தை நாம் நன்கு அறிய சாத்தியமாக இருக்கிறது. இப்பொழுது வெடிகுண்டு வீச்சு நீண்ட கால திட்டத்தைப் பொருத்திருக்கவில்லை. பீல்ட் மார்ஷல் சொல்லும் குத்துச்சண்டை முறைப்படி இனிமேல் நாம் கோலிக் கோலி வந்து கொண்டிருக்கவேண்டியதில்லை. இனிமேல் நாம் எதிரியின் பலஹீனமான பாகங்களில் கொஞ்சம் தூரம் செல்லும் விமானங்களைக் கொண்டு பலமாகத் தாக்கி வரவேண்டும்.

இது இறுதித் தாக்குதலாகத் தோன்றுகிறது. ஆகையால் அல்பமான விஷயங்களை அடைந்து நாம் வெற்றி பெற்றதாக இருக்கக்கூடாது.

ஏன் நாம் குறிப்பான லக்ஷியங்களைமட்டும் தாக்கி வருகிறோமென்று நினைத்து சிலர் பிரமித்து நிற்கிறார்கள். இப்பொழுது ஸ்ட்ராடஜிக், டாக்டிகல் வெடி குண்டு வீச்சுகள் ஒன்றுபட்டிருக்கின்றன என்பது தான் இதற்குக் காரணம். இங்லாந்திலிருந்து வரும் வெகு தூரம் செல்லும் வெடி விமானங்கள் குண்டுகளை வீசினாலும் சரி, டாக்டிகள் விமானப்படை மேற்குப் போர் முனையில் குண்டுகளை வீசினாலும் சரி, அல்லது இதாலியிலிருந்து புறப்படும் விமானங்கள் தாக்கினாலும், அந்த நடவடிக்கைகள் கிழக்கிலும், மேற்கிலுமுள்ள நேசதேசப் படைகளுக்கு நேர்முகமாக ஒத்தாசை செய்கின்றன.

இந்த இறுதித் தாக்குதலின் முக்கியமான அம்சம் யாதெனில் பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் ருஷ்யப் படையுடன் ஒத்துழைப்பதுடன் மேற்கு முனையில் படைகள் முன்னேறுவதற்கும் ஒத்தாசை செய்து வருகின்றன. ஆகாய மார்க்கம் எல்லாப் போர் முனைகளையும் ஒன்றுபடுத்திவிட்டது.

ருஷ்ய நிகழ்ச்சிக்கு உதவியளிக்கும் முறையில் தாக்கப்படும் லக்ஷியங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். (1) எண்ணெய், (2) போக்கு வரத்துக்கள், (3) நிர்வாகத்துக்கும் ராணுவ ஒத்திகைகளை ஏற்பாடு செய்ய அத்தியாவசியமான நகரங்கள்.

ஜெர்மனிக்கு எண்ணெய் பிரச்னையும் கஷ்டமாகிவிட்டது. ஜெர்மனிக்குத் தேவையான நிலக்கரியின் மூன்றின் ஒரு பாகத்தை உற்பத்தி செய்யும் ஸைலீஷியாவை இழந்த பின் ரூரிலிருந்து வரும் நிலக்கரியை ஜெர்மனி பூராவுக்கும் விநியோகம் செய்ய வேண்டும். ஏற்கனவே

அதிகப் போக்குவரத்துள்ள ரயில்வேக்களுக்கு அதிக நெருக்கடி ஏற்படும். ரூரிலும் மத்திய ஜெர்மனியிலும் உள்ள ரஸாயன மூலம் உற்பத்தி செய்யப்படும் எண்ணெயும் இடைவிடாது தாக்கப்படுகிறது. ஸ்டெட்டினுக்கருகிலுள்ள போலிட்ஸ், லியூனு, சுடேடன்லாந்திலுள்ள பிரக்ஸ், லீப்ஸிக்குக்கருகிலுள்ள ஸீட்ஸிலுள்ள எண்ணெய் உற்பத்திசாலைகளும் நொருக்கப்படுகின்றன.

அடிப்படையான எண்ணெயும் நிலக்கரியும் இல்லாவிடில் ஜெர்மனியின் நிலைமை மோசமாகி விடும். அவை இல்லாவிடில் டாங்கிகளும், விமானப்படையும் நின்று விடும், தொழிற்சாலை யந்திரங்கள் அசைவற்றுப் போய் விடும், துருப்புகள், ஸப்ளைகளைக் கொண்டு போகும் அத்தியாவச்யமான வேலைகளைச் செய்யவொட்டாமல் ரெயில் வண்டி போக்குவரத்துகள்கெட்டுப் போய்விடும். ஸைலீஷியாவின் நஷ்டத்தை ஈடுபடுத்த மேற்கிலிருந்து கிழக்குக்கு நிலக்கரியை எடுத்துச் செல்லவேண்டும். இந்த நடவடிக்கையையும் கஷ்ட சாத்தியமாகச் செய்ய இருப்புப்பாதைகளும் நதி மார்க்கங்களும் அடிக்கடி தாக்கப்படுகின்றன.

ஜெர்மனிக்கு எப்பொழுதும் நிலக்கரிக் குறைவு ஏற்பட்டிருந்ததில்லை. அது ஸ்காண்டிநேவியாவுக்கும் இதாலிக்கும் ஏற்றுமதி செய்ய சக்தி பெற்றிருந்தது. ஆகிலும் அவைகளைக் கொண்டு போகக்கூடிய போக்குவரத்து மார்க்கங்களும் சாதகங்களும் நொருக்கப்பட்டு வருகின்றன. இருப்புப் பாதைகள் மூலம் ஏராளமான நிலக்கரி கொண்டு போகப்படுகிறது. மேலும் கால்வாய்கள் மூலமாகவும் நிலக்கரி அபரிமிதமாகக் கொண்டு போகப்படுகிறது.

ஆகையினால் தான் பாம்பர் படைகள் டார்ட்மண்ட் எம்ஸ் கால்வாயையும், மிட்டலாந்து கால்வாயையும் தாக்கின. ஆகையினால் தான் ஜெர்மானியர்கள் ஒவ்வொரு தடவை அவைகள் உடைபட்ட பின்னும் அவைகளை அதிக பிரயாசைப்பட்டு இடைவிடாது பழுது பார்த்து வருகிறார்கள். ருஷ்ய முன்னேற்றத்திற்கு அநேக மாதங்களுக்கு முன்னதாகவே பிரிடிஷ், அமெரிக்க வெடிவிமானங்கள் போக்குவரத்து மார்க்கங்களைத் தாக்கி வந்தன. முதலில் இதாலியிலிருந்து புறப்பட்ட நேசதேச விமானங்கள் ஹங்கேரி, ருமேனியா யூகோஸ்லாவியாவைத் தாக்கின. அவைகளுக்கு உதவியாக பிரிடனிலிருந்து புறப்படும் வெடி விமானங்களும் தாக்கி வந்தன. வட்டாரத்துக்குட்பட்ட லக்ஷியங்கள் கிழக்குப் பிராந்திய நடவடிக்கைக்குட்பட்டன.

டான்யூப் நதிக்கரையில் புடாபெஸ்டிலுள்ள இரண்டு முக்கிய பாலங்கள் தாக்கப்பட்டன. அவைவின்றி, டான்யூப் நதியில் சுரங்க வெடிகள் பாவப்பட்டன. புகாரெஸ்டைச் சுற்றியுள்ள போக்குவரத்துகள் நொருக்கப்பட்டன. ஜெர்மனியின் கிழக்குப் பக்கத்திலுள்ள சேனைகளுக்கு உதவிப்படைகள் அனுப்பும் திட்டத்தைக் குலைக்க இருப்புப் பாதைகளும் துண்டிக்கப்பட்டன. பிப்ரவரி மாதத்தில் இதாலியிலிருந்து வரும் விமானங்கள் வியன்னு, கிராஸ், கிளாகன்பர்ட், ஆஸ்திரேலியாவிலுள்ள மற்ற இடங்களிலுள்ள இருப்புப்பாதை, எண்ணெய், தொழிற்சாலை லக்ஷியங்கள் பேரில் வெடி குண்டுகளை வீசின. ஆனால் சமீப காலத்தில் ஜெர்மனியிலுள்ள முக்கிய லக்ஷியங்களான, போக்குவரத்து மத்தியஸ்தலங்களும், ருஷ்ய முன்னேற்றத்தைத் தடுக்க அமைக்கப்பட்டிருந்த தற்காப்புகளும், ஸ்டெட்டினும், கோனிக்ஸ்பர்க்கும், பெர்லினும், கோட்பஸும், டிரெஸ்டனும், செம்னிட்ஸும் தாக்கப்பட்டன,

கிழக்குப் போர்முனைக்கு உதவிப்படைகளை அனுப்ப முடியாமல் செய்ய அமெரிக்க 8-வது விமானப்படை பகலில் பலமாகத் தாக்கியபின், பிரிடிஷ் மஸ்கிடோ விமானங்கள் பெர்லினைத் தாக்கி வந்தன. பெர்லினுக்கு அடுத்த படியாக முக்கியத்வமுள்ள ரெயில்வே ஜங்க்ஷனை மாக்டிபர்க்கும் பலமாகத் தாக்கப்பட்டது.

இருப்புப் பாதைகளின் மத்திய நிலயமான டிரெஸ்டன் தாக்கப்பட்டதால் இருப்புப் பாதை அமைப்புகள் நிலை குலைந்து விட்டன. தெற்கு, கிழக்கு ஜெர்மனிக்குப் போகும் இருப்புப் பாதைகள் இங்கு சந்திக்கின்றன. மேலும் முக்கியமான ரஸ்தாக்களும் இங்கு ஒன்று கூடுகின்றன. மற்ற நகரங்களிலிருந்து, அப்புறப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்புகள் இங்கு அவசரஅவசரமாக அமைக்கப்படுகின்றன. போர் முனைக்குச் செல்லத் தயாராக இருந்த துருப்புகள் இங்கு அநேக கட்டடங்களில் வசித்து வந்தன.

இதே காரணத்திற்காகத்தான் கோட்பஸும், செம்னிட்ஸும் தாக்கப்பட்டன, கோட்பஸ் ஒரு பெரிய இருப்புப்பாதை ஜங்ஷன். அது கிழக்குப் பக்கத்திய எல்லைச் சரக தற்காப்பாக அமைக்கப்பட்டு வருகிறது. செம்னிட்ஸ் என்பது ஸாக்ஸனியிலுள்ள ஒரு மிகப்பெரிய தொழிற்சாலை ஸ்தலம். அங்கு ஒரு மிகப் பெரிய ரெயில்வே பழுது பாக்கும் சாலையிருக்கிறது.



படைகளுக்கு முஸ்தீப்புகளைப்பெறவும் நாம் திருத்தியமைத்துக்கொள்ளவும் இவ்விதமான நகரங்கள் முக்கியத்வ முள்ளவை. ருஷ்ய முன்னேற்றத்திற்கு முன் டிரெஸ்டனும், செம்னிட்ஸும் கோட்பஸும் கவனிக்கப்படவில்லை. ஏனெனில் அவைகளைவிட ரூர் பிரதேசத்தில் தாக்குதலுக்குரிய மிகவும் முக்கியமான தொழிற்சாலை லக்ஷியங்கள் அப்பொழுது கவனிக்கப்படவேண்டியிருந்தது. ஆனால் அவைகள் இப்பொழுது முக்கியத்வம் பெற்றுவிட்டன.

இந்த நகரங்களைச் சும்மா விட்டு விட்டால் அவைகளில் துருப்புகள் வாசம் செய்வதுடன் எதிர்ப்புகளை ஏற்பாடு செய்ய அவைகள் டெலிபோன் வசதிகளையும் அளிக்கக்கூடும்.

கிழக்குப் போர் முனையில் மாறுதல் ஏற்படும் பொழுது மற்ற நகரங்களும் வெடி குண்டு வீச்சுக்கு இலக்குகளாகிவிடும். ஏனெனில் பிரிடிஷ், இதாலிய தளங்களிலிருந்து புறப்படும் பிரிடிஷ். அமெரிக்க விமானங்கள் ருஷ்யப்படைகளின் எவ்வித வேண்டுகோளையும் நிறைவேற்றத் தயாராக இருக்கும். ஆகாயப் படை போர் சம்பந்தப்பட்ட மட்டில் போர் முனை ஒன்றுபட்டது தான்.

---

## ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்தியில் குறிப்பிடத்தக்க குறைவு.

### ஸ்ட்ராடஜிக் வெடிகுண்டு வீச்சின் விளைவு.

**விமானப்படை கமாண்டர் ஹவார்ட் வில்லியம்ஸ்.**

(டெயிலி டெலிகிராப்).

கிழக்கிலும்,மேற்கிலும், தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் ஸ்ட்ராடஜிக் வெடி விமானிகள் வாக்குறுதி செய்தபிரகாரம் ஹிட்லர் கஷ்டங்களை அனுபவித்துவருகிறான். அவனுக்கு மிகவும் அவசியமான எல்லாப் பொருள்களும் அவனுக்குக் குறைந்துவிட்டது. எண்ணெய், நிலக்கரி, விமானங்கள், டாங்கிகள், பீரங்கிகள், லாரிகள், ரயில்வே எஞ்ஜின்கள், கப்பல்கள். யூ-படகுகள், மற்ற சகலவிதமான ராணுவ முஸ்தீப்புகள் எல்லாம் குறைவுபட்டுவிட்டன. அவைகளின் குறைவினால் எதிரிக்குத் தோல்வி முன்நிற்கிறது.

நமது கனமான வெடி விமானங்கள் ஜெர்மனிபேரில் வட்டமிடும்பொழுது என்ன நேரிடுகிறது. முதலாவதாக, 1,400 லங்காஸ்டர் விமானங்களும் ஹாலிபாக்ஸ் விமானங்களும், தாக்குவதற்காக சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள மிகவும் சுறுசுறுப்பும் தைரியமும் உள்ளவர்களில் பொருக்கி யெடுக்கப்பட்டவர்களான 10,000 பேர்களும் செல்லுகிறார்கள். அவர்களுக்குப்பின் மற்றொரு 10,000 பேர்கள் தாக்குதலில் கலந்துகொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

இவர்கள் போர்முனையிலுள்ள அநேக டிவிஷன் காலாட் படைகளுக்குச் சமானமானவர்கள். குறைவாக மதித்துப்பார்த்தாலும் பாம்பர் கமாண்டைச் சேர்ந்த படைகளுக்கு உதவிசெய்ய 1,00,000 ஆள்கள் தேவைப்படும். மகத்தான பாம்பர்படை 5,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளை அரைமணி நேரத்திற்குள் வீசும் சக்தியானது அதே சமயத்தில் ஒரு டஜன் டிவிஷன்கள் அதே கால அளவில் சுடக்கூடிய குண்டு வீச்சளவிற்கு சமானமானது.

ஜெர்மனியின் யுத்த முயற்சிக்கு ஏற்பட்ட நஷ்டத்தை இப்பொழுது நான் விவரித்துச் சொல்ல முயன்றால், யுத்தத்துக்குப்பின் நான் குறைத்துச்சொன்னதாக எல்லோரும் மதிக்கக் கூடும். யுத்த தளவாட உற்பத்தியிலீடுபட்ட முக்கியமான 90 ஸ்தானங்களில் 70 ஸ்தானங்கள் பலமாகத் தாக்கப்பட்டிருக்கின்றனவென்று நான் மதிக்கிறேன். அவைகளில் 58 ஹாம்பர்க்கையும், கொலோனையும் போல பலமாக அழிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 58 நகரங்களில் குறைவாக மதிப்புப்போட்டாலும் முக்கியமான ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்தி 25 சதவிகிதத்துக்குக் குறைந்துவிட்டதென்று சொல்லலாம்.

டங்கர்க்கிலிருந்து நார்மண்டியில் படைகள் இறங்கியவரையில் நமது பாம்பர்படை ஓட்டிகள் தான் எதிரியின் நாட்டில் போரை நடத்தியிருக்கிறார்கள் அவைகள் மிகவும் நீண்ட, பிரயாசையுள்ள வருஷங்கள். நாமும் நமது நேசதேசப்படைகளும், ஒன்றுபட்ட விமானப் படைகளும் இந்த பாம்பர் கமாண்டின் நடவடிக்கைகளின் பலனை இப்பொழுது அனுபவிக்கின்றன.

---

## செம்படையின் விமானப்படை சக்தி.

**லண்டனில் வெளிவரும் "ஏரனுடிக்ஸ்" பத்திரிகை ஆசிரியரான மேஜர் ஆலிவர் ஸ்டுவர்ட்.**

விமானப்படை உபயோகத்தில் உள்ள இரண்டு வித்தியாசமுள்ளகொள்கைகள் இப்பொழுது நடைபெற்றுவரும் மகத்தான ருஷ்ய முன்னேற்ற நடவடிக்கையில் சந்தித்து ஒன்றுபட்டு

விட்டன. ஆரம்பம் முதற்கொண்டு ருஷ்ய விமானப்படை முக்கியமாக செம்படைக்கு நேர்முகமாக ஒத்தாசை செய்வதில் ஈடுபட்டிருந்தது. ஆனால் பிரிடிஷ், அமெரிக்க வெடி விமானங்கள் பெரும்பாலும் எதிரியின் யுத்த தொழிற்சாலை பிரதேசங்களைத் தாக்குவதில் அதிக முயற்சி செய்துவந்தன.

இப்பொழுது படைகளுக்கு உதவி செய்வதும் தொழிற்சாலை பிரதேசங்களை நொருக்குவதும் ஒன்றுபட்டுவிட்டன. கோனியேவின் படைகளுக்கு ருஷ்யாவின் நடுத்தரமான வெடி விமானங்களும் சண்டை விமானங்களும் நேராக ஒத்தாசை செய்துவரும்பொழுது பிரிடனின் விமானப்படையைச் சேர்ந்ததும் அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்ததுமான வெகுதூரம் செல்லும் ஸ்ட்ராடஜிகல் வெடி விமானங்கள் மறைமுகமாக ருஷ்யப் படைகளுக்கு உதவி செய்துவருகின்றன.

எதிரியின் பதில் தாக்குதல்களைத் தூரத்தியடிப்பதிலும் தரைப்படைகளால் வளைக்கப்பட்ட எதிரியின் படைகளை அழிப்பதிலும் கையாளப்படும் முறைகளைப்பற்றி ருஷ்ய சேனையின் கர்னலான லோஷோவாயிஷெவ் செங்கோ வர்ணித்திருக்கிறார்.

பருந்துப் பாய்ச்சல் செய்வதும் அவுட் வாணங்களைப் போடுவதும் தாக்குதலில் கையாளப்படுகின்றன. விமானத்திலிருந்து போடும் அவுட் வாணத்தை நடைமுறையில் உபயோகத்துக்குக் கொண்டுவந்தது ருஷ்ய விமானப்படைதான். ஸ்டார்ம்விக் என்ற ருஷ்ய விமானம்தான் இதை முதலில் பிரயோகித்தது. அதுப் பருந்துப் பாய்ச்சல் நடவடிக்கைக்கும் உபயோகமுள்ளது. புதிய யாக் 9 F. சண்டை விமானங்களும் மற்ற ருஷ்ய சண்டை விமானங்களும் அவுட் வாணங்களை ஏற்றிச் செல்லுகின்றன. மேலும் அவைகள் படைகளுக்கும் உதவி செய்யக்கூடியவை.

விமான மூலம் துருப்புகளும் ஏற்றிச் செல்லப்படுகின்றன. ருஷ்யாதான் குடைத் துருப்புகளை முதன்முதலில் ஏற்பாடு செய்தது. விமானங்களிலிருந்து சர்பராக்களை வழங்குவதிலும் அதிக மேன்மையை அடைந்திருக்கிறது. யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் ருஷ்யாவின் கொரில்லாப் படைகளுக்கு விமான மூலம்தான் சர்பராக்கள் வழங்கப்பட்டன.

ஆகையால் தரைப்படைகளுக்கு ஒத்தாசை செய்வதுதான் விமானப்படையின் முக்கியமான வேலை என்று ருஷ்யர்கள் எண்ணியிருக்கிறார்கள். விமானப் போர் இரண்டாவது பக்ஷமான நடவடிக்கை. ஆகிலும் ருஷ்ய விமானிகள் நிபுணர்களென்று ருஜுச் செய்திருக்கிறார்கள்.

ருஷ்ய விமானிகள் டாக்டிகல் தாக்குதலிலும் கியாதி பெற்றிருக்கிறார்கள். கிழக்குப் போர்முனையின் போர்களை ஜெர்மன் விமானப்படை பாதிக்காமலிருக்கும்படி அவர்கள் தடுத்துவந்திருக்கிறார்கள். மேலும் போர்முனையிலுள்ள துருப்புகளுக்கும் அவர்கள் உபயோகமுள்ளவகையில் ஒத்தாசை செய்திருக்கிறார்கள்.

பிரிடனிலிருந்தும், இதாலியிலிருந்தும் புறப்படும் பிரிடிஷ், அமெரிக்க கனமான வெடி விமானங்கள் ருஷ்ய விமானப் படையின் உயர்வைப் போஷிக்கவும், பலப்படுத்தவும் சாத்யமான எல்லா நடவடிக்கைகளையும் கையாண்டு வந்திருக்கின்றன. ஜெர்மன் சர்பரா மார்க்கங்களையும் பதில் தாக்குதல்களுக்காக துருப்புகளும் சர்பராக்களும் குவிக்கப்பட்டிருந்த பிராந்தியங்களையும் அவைகள் கனமான வெடிகுண்டுகளைப் போட்டு நொருக்கியிருக்கின்றன.

இந்த நடவடிக்கைகளை நடத்த விமானங்கள் வெகுதூரம் பறந்து செல்லவேண்டியதாக இருந்தது. ஆகிலும் முயற்சிக்குத் தகுந்த பலன் கிடைத்துவந்தது.

ஜெர்மனி ருஷ்யாபேரில் யுத்தத்தைத் துவக்கியபொழுது ருஷ்ய விமானப்படை மிகவும் சொல்பமாகயிருந்தது. இப்பொழுது கடுமையான போரிலும் ருஷ்ய விமானப்படை அதன் திறமையை வெளிப்படுத்திவிட்டது. அது இப்பொழுது படைகளுக்கு நேர்முகமாக உதவி செய்யும் சிறந்த படையாக மாறிவிட்டது. விமான யுத்தத்தை ஆதரிக்கும் எல்லோரும் ருஷ்ய விமானப் படையைப் பாராட்டக்கூடிய நிலைமையை அது அடைந்துவிட்டது.

---

## நேசதேச சாமான் கப்பல் கூட்டம் ருஷ்யாவுக்கு பத்திரமாகச் சென்றது.

### ஆர்க்டிக்கில் யூ படகுக் கூட்டம் முறியடிக்கப்பட்டது.

(பிரியான் டன்ஸ்டால்).

ஒரு முக்கியமான நேசதேச சாமான் கப்பல் கூட்டம் பிரிடிஷ் யுத்தக் கப்பல்களுடையவும் கடற்படையைச் சேர்ந்த விமானங்களுடையவும் காபந்துடன் வடக்கு ருஷ்யாவுக்குச் சென்று பத்திரமாக பிரிடினுக்குத் திரும்பி வந்ததென்பது, பிரிடிஷ் கடற்படை 1941-ம் வருஷ வேனிர் காலத்திலிருந்து செம்படைகளுக்கு உதவியளித்து வந்திருக்கும் அளவை வெளிப்படுத்துகிறது.



இந்தத் தடவையில் ஜெர்மானியர்கள் 10 யூ படகுகளையும் மீன் வெடிகளைப் போடும் விமானங்களையும் வைத்திருந்த போதிலும சாமான் கப்பல் கூட்டத்தை ஒரு தடவை கூடத் தாக்கக்கூடவில்லை. இரண்டு யூ படகுகள் அழிக்கப்பட்டன. மற்றவைகள் பழுதுபட்டன. மூன்று ஜெர்மன் விமானங்கள் அழிக்கப்பட்டன. மற்றவைகளில் சில பழுதுபடுத்தப்பட்டன. பிரிடனைச் சேர்ந்த ஒரு கடற்படை விமானம் நஷ்டமாகிற்று.

மிகவும் கடுமையான குளிருள்ள சீதோஷ்ண ஸ்திதியில் இந்தத் துணைக்காவல் கப்பல் கூட்டம் சென்றதினால், பிரிடிஷ் கடற்படைக்கும் விமானப் படைக்கும் இருந்த புகழ் அதிகரித்துவிட்டது. இந்தக் கடும் குளிரிலும் விமானந்தாங்கிகளின் மேல் தட்டுகள் ஆர்க்டிக் கடல்களில் தத்தளித்துக்கொண்டிருந்த பொழுதும் விமானங்கள் பறந்து சென்று பூராவான பகல் வெளிச்சம் என்றும் சொல்லக் கூடிய மூன்று மணி நிலபெற்றுள்ள சண்டை வெளிச்சத்தில் யூ படகுகளைக் கண்டுபிடித்து அழித்திருக்கின்றன.

காம்பானியா, நாயிரானா என்ற சஞ்சாரியும், பிரிடிஷ் கடற்படை, அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த மற்ற யுத்தக் கப்பல்களும் கொண்ட துணைக் காவல் கப்பல் படைக்குரியர் அட்மிரல் R. R. மாக்ரிகர், C. B. D, S. O. தலைமை வகித்தார்.

இது ஒரு புறமிருக்க, ஆர்க்டிக்கிலும் வடக்கு அட்லாண்டிக்கிலும் பிரிடிஷ் கடற்படை ருஷ்ய சேனைகளுக்குப் போகும் சர்பராக்களுக்கு ரக்ஷணையளிப்பதுடன், ஜெர்மானியர்கள் நார்வீஜிய கடற்கரையை உபயோகிக்காமலும் காபந்து செய்து வருகின்றன.

இதே சமயத்தில் பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் விடுதலை பெற்ற ஐரோப்பியக் கடற்கரைகளிலும் நடமாடி வருகின்றன. பெல்ஜியத்திலுள்ள கப்பற் தளங்களிலுள்ள வேலையாட்கள் ஆண்ட்வெர்ப்பிலுள்ள பிரிடிஷ் யுத்தக் கப்பல்களைப் பழுதுபார்த்து வருகிறார்களென்பதிலிருந்து இது வெளியாகுகிறது. இந்த சௌகரியத்தைப் பெற்ற முதல் கப்பல் பிரிடிஷ் கப்பலான வானிஷ என்ற 28 வருஷங்களாகவுள்ள V. வகுப்பு நாசகாரி. இந்தக் கப்பல் இறந்து போன காப்டன் வாகரின் நீர்மூழ்கிகளை வேட்டையாடும் கப்பல் கூட்டத்துடன் சென்று கியாதிபெற்றது.

இதாலியில் கிழக்கில் ஏட்ரியாடிக்கடலிலிருப்பது போல் மேற்கிலுள்ள லிகூரியன் கடலிலும் சமீப காலத்தில் புதிதாக கடற்படை நடவடிக்கைகள் நடந்தேறின. எதிரிகள் வசம் ஜெனோவாவும், ஸ்பீஷியாவும் இருந்த போதிலும் லிகூரியன் கடலில் எதிரியின் கடற்படை நடமாட்டம் இல்லை. ஆகிலும் நேசதேச கடற்படை கடற்கரையில் பீரங்கிப் பிரயோகம் செய்வதுடன் அதன் நடவடிக்கையை வரையறுத்துக்கொண்டது. இந்த வேலையில் பிரிடிஷ் நாசகாரிகளான மாச்லெஸ்ஸும், மிடியாரும், பிரெஞ்சு சஞ்சாரியான பாஸ்கும் டெம்படையும் அமெரிக்க நாசகாரியான மாக்ளானுகளும் பெரும் பங்கெடுத்துக்கொண்டன. பிரெஞ்சு, இதாலிய எல்லைச் சரகத்தில் நேசதேசத்தாரின் தரை நடவடிக்கைகளுக்கு உதவி செய்வதுதான் அதன் லக்ஷியம்.

தரைப்போரில் சென்ற செப்டம்பர் மாதத்தில் தெற்கு பிரான்ஸிலிறங்கிய படைகள் ஈடுபட்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைகள் இதாலிய நடவடிக்கைகளிலிருந்து தனிப்பட்டவைகள். ஆனால் யுத்த தந்திர முறையில் இரு நடவடிக்கைகளுக்கும் சம்பந்தமுண்டு. முக்கியமாக நேசதேசக் கடற்படை இதாலியின் வடக்கு, மேற்குக் கடற்கரைகளின் பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்ய ஈடுபடுத்தப்படலாம்.

நீர்மூழ்கி போர்பாயி நஷ்டமாகிவிட்டதென்று கடற்படை இலாகா வெளியிட்டிருப்பதிலிருந்து 1942-ம் வருஷத்திலிருந்த மத்தியதரைக்கடலின் நிலைமை நமக்கு ஞாபகம் வருகிறது. இந்த நீர்மூழ்கி 35,000 டன் எடையுள்ள எதிரியின் கப்பல்களை அழித்திருக்கிறது. சுரங்க வெடி பாவுவதிலும் உபயோகமுள்ள வேலை செய்திருக்கிறது. மேலும் மால்டாவுக்கு நெருக்கடி ஏற்பட்டிருந்த பொழுது அதற்குத் தேவையான விமான எண்ணெயையும் வெடி மருந்துகளையும் ஸப்ளை செய்திருக்கிறது.

கனடியக் கடற்படை ருஷ்யாவுக்குச் செல்லும் சாமான் கப்பல் கூட்டங்களுக்குத் துணைக் காவல் புரிந்ததென்றும் பசிபிக்கிலும் நடவடிக்கைகளில் ஈடுபட கனடியக் கடற்படை திட்டங்கள் போட்டு வருகிறதென்றும் முன் கூடியே சொல்லுவதிலிருந்து கனடா பசிபிக்கிலும், அட்லாண்டிக்கிலும் வல்லமை பொருந்தியதென்பது ருஜுவாகுகிறது. பிரிடனுக்கு சமீப காலத்தில் விஜயம் செய்த கனடியக் கடற்படை மந்திரியான மிஸ்டர் ஆங்கன் மாக்டனல்ட்; கனடிய சஞ்சாரியான ஊகாண்டாவும் இப்பொழுது கட்டப்பட்டுவரும் ஒண்டாரியோ என்ற புதிய சஞ்சாரியும் தென்மேற்கு பசிபிக்கில் பிரிடிஷ் கடற்படையுடன் சேர்ந்து போரில் ஈடுபடுமென்று சென்ற வாரத்தில் ஒட்டாவாவில் வெளியிட்டார்.

சொற்பகாலமாக கனடிய கடற்படையில் நாசகாரிகளும், போர்க் கப்பல்களும், நீர்மூழ்கிகளைத் தாக்கும் கப்பல்களும், சுரங்கவாரிக் கப்பல்களும் கவசம் பூண்ட சாமான் கப்பல்களைச் சேர்ந்த சஞ்சாரிகளும் ஏராளமாக இருப்பதால் உலகத்திலேயே நீர்மூழ்கிகளைத் தாக்கும் கடற்படையில் மிகவும் வலுவுள்ளன என்று கேழ்விப்பட்ட போதிலும் கனடிய கடற்படையில் சஞ்சாரிகள் இருக்கின்றனவென்று இப்பொழுது தான முதல் முதலில் சொல்லப்பட்டிருக்கிறது. ஊகாண்டா என்னும் சஞ்சாரி 8,000 டன்கள் எடையுள்ளது. அதில் 6 அங்குல வாயுள்ள 9 பீரங்கிகளிருக்கின்றன. இது 1942-ம் வருஷத்தில் கட்டப்பட்டது. அது ஆரம்பத்தில் பிஜி ரகத்தைச் சேர்ந்ததாகயிருந்து திருத்தியமைக்கப்பட்டது. யுத்தத்திற்குப் பின் அப்பேர்ப்பட்ட அநேக கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒண்டாரியைப் பற்றி யாதொரு தகவல்களும் கிடைக்கவில்லை. அதுவும் பிஜி ரகத்தைச் சேர்ந்ததாக விருக்குமென்று நினைக்கலாம்.

கனேடியரின் பசிபிக் பிராந்தியக் கடற்படை தளம் எஸ்கிமால்ட் என்பது. அங்குள்ள 1,150 அடி நீளமுள்ள கப்பற்துறையில் கனார்ட் ஒயிட்ஸ்டாரின் கப்பலான க்வீன் எலிஸபத் 1942-ம் வருஷத்தில் துருப்பேற்றிச்செல்லும் கப்பலாகத் திருத்தியமைக்கப்பட்டது.

---

## ருஷ்யக் கடற்படை.

**கார்டன் மேஸன்.**

செம்படையின் மகிமையினால் மங்கிப்போயிருக்கும் ருஷ்யக் கடற்படையும் இந்தப் போரில் அதன் சேவையும் ருஷ்யாவிற்கு வெளியிலுள்ள நாட்டார்களுக்குக் கொஞ்சங்கூட விளங்கவில்லை. ஆகிலும் ருஷ்யக் கடற்படை ருஷ்யாவின் யுத்த முயற்சிக்குப் பேருதவி செய்திருக்கிறது. அதன் மாலுமிகளின் ஊக்கமும், செம்படையின் ஊக்கத்துக்குச் சமானமானதாகச் சொல்லலாம்.

ஜெர்மன் சேனைகளின் வீரம் மேலோங்கி நின்ற நாளில் அவைகளை எதிர்த்து நீபர் நதியிலும் டான் நதியிலும் ருஷ்யக் கடற்படை நடமாடின. கருங்கடல் கடற்படையைச் சேர்ந்த படகுகளின் மாலுமிகளின் தீரமும், கருங் கடல் கடற்படையைச் சேர்ந்த மாரின் படைகள் ஓடெஸ்ஸாவையும், ஸெபாஸ்டபூலையும் தற்காப்பு செய்யும் முறையில் மாரின் படைகளுக்கு இயற்கை குணமான தீரத்துடனும் உறுதியுடனும் தரையில் போரை நடத்தியதும், ருஷ்ய கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் கருங்கடலில் எதிரியின் நீர்மூழ்கிகளை அடிக்கடித் தாக்கியதும் இவை எல்லாம் தனிப்பட்ட சம்பவங்கள். ஆகிலும் இந்த நடவடிக்கைகளும் தீரம் பொருந்தியவைகள்.

1942—43-ம் வருஷ மாரிகாலத்தில் கம்மாண்டோத் தாக்குதல்களும், கிழக்கு கிரிமியா கடற்கரைகளில் கருங்கடல் கடற்படையைச் சேர்ந்தவர்கள் இறங்கியதும், ஒன்றுபட்டு நடவடிக்கையை மேற்கொண்டதும், அமைதி உள்ளதென்றும் படைகளின் ஓய்வுக்கும் லாயக்குள்ளதென்று ஜெர்மானியர் நினைத்திருந்த தெற்கு ருஷ்ய மாகாணத்திலுள்ள ஜெர்மானியர்களுக்குச் சதாகாலமும் பீதியை உண்டுபண்ணி வந்தது. கிரிமியாவில் ரிவீராவிலுள்ள யால்டாவையும் மற்ற விடுமுறை வாசஸ்தல நகரங்களையும் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் யுத்தத்தில் காயம்பட்டவர்களின் விடுதிகளாக உபயோகப்படுத்தி வந்தார்கள். ஆகிலும் கருங்கடல் கடற்படையைச்சேர்ந்தவர்கள் தியோடோஸியாவிலும் கெர்ச்சிலும் இறங்கியதிலிருந்து கிரிமியாவில் ஜெர்மானியர்கள் வெகுகாலம் நீடித்திருக்கமுடியாதென்று அடிக்கடி எச்சரிக்கை செய்ததுபோலாகும்.



பால்டிக் கடலில் ருஷ்ய பால்டிக் கடற்படையைச் சேர்ந்த கப்பல்களும் மாலுமிகளும் ஜெர்மன் படைகள் துரிதமாக முன்னேறிவந்த காலத்தில் ஒவ்வொரு தளமாகக் கைவிட்டுவிட்டுப் பின்வாங்கிவந்த ரீகா, ஓர்சல், ஹார்ங்காவிலிருந்து ருஷ்ய நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும், மற்ற கலங்களும் கடும்போர் செய்துகொண்டே பின்லாந்து வளைகுடாவிலும் குரோன்ஸ்டாட் தளத்திலுமுள்ள பத்திரமான இடங்களுக்குப் பின் வாங்கிச்சென்றன. லெனின்கிராட் வெகு காலமாக முற்றுகை செய்யப்பட்டபொழுதும் பால்டிக் கடற்படை சும்மாயிருக்கவில்லை.

சரணடைய மறுத்து வருமைக் குட்பட்டு வந்த நகரத்தை முற்றுகை செய்துவந்த எதிரியின் ஸ்தானங்களை கடற் படையின் பீரங்கிகளும், கடற் கரையிலுள்ள பீரங்கிகளும் குண்டுகளால் நொருக்கி வந்தன. கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் எதிரியின விமானத் தாக்குதல்களை சமாளித்து வந்தன. பால்டிக்கில் வந்த எதிரியின் நீர்மூழ்கிகளைத் தேடுவதிலும் ஈடுபட்டிருந்தன.

ஜெர்மானியர்கள் பின்வாங்கிவிட்டாலும் அதன் வேலை முடிந்துவிடவில்லை. ஜெர்மன் கடற்படையின் பெரும்பாகம் பால்டிக்கிலிருந்து வருகிறது. இந்த போர் பிராந்தியத்தை ஜெர்மானியர்கள் போரின்றி இழந்துவிடமாட்டார்கள். அது அவர்களுக்கு மிகவும் முக்கியத்வமுள்ளது. பால்டிக் கடற்கரை பூராவும் ரிகா வளைகுடாவிலிருந்து போமரேனியாவின் கடற்கரை வரைக்கும் எதிரியின் போர்முனையை செம்படை பல பகுதிகளாகப் பிரித்துவிட்டது. லாட்வியாவின் வடமேற்கு பாகத்தில் ஒரு பெரிய படைப் பகுதி இருக்கிறது. மற்றொன்று சாம்லாந்து தீபகற்பத்திலிருக்கிறது. மற்றொன்று கிழக்கு பிரஷ்யாவில் கோனிக்ஸ்பர்க்குக்கு மேற்கில் இருக்கிறது.

இந்த நிலைமையிலிருந்து எதிரியின் கடற்படை போக்குவரத்துக்கு அதிக முக்கியத்வம் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் அதன் மூலம் எதிரிக்கு உதவிப் படைகள் வரக்கூடும், சாமான்கள் அனுப்பக்கூடும். பிறகு அவசியமானால் அவைகள் காலிசெய்து ஓடக்கூடும். இந்தப் போக்குவரத்துகளை அழிக்கும் போர் இப்பொழுது நடைபெறுகிறது. ருஷ்ய ரிபோர்ட்டுகளிலிருந்து ஜெர்மன் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் டான்ஸிக் விரிகுடாவிலும், கிட்னியாவிலும், பில்லாவிலும் கடைசிவரையில் எதிரிகள் நிலைத்து நிற்பதற்கு உதவியளித்து வருகின்றனவென்று சொல்லப்படுகிறது.

டான்ஸிக் விரிகுடாவை ஜெர்மனி இழந்துவிட்டால் கடற்கரையில் ஆங்காங்கு தற்காப்பு செய்துவரும் படைகளுக்கு மிகுந்த ஆபத்து ஏற்பட்டுவிடும். தூர வடக்கில் வெண்மைக் கடலிலும், போண்ட்ஸ் கடலிலும் ருஷ்யாவின் வடக்குக் கடற்படையைச் சேர்ந்த கப்பல்களும் விமானங்களும், வடக்கு பின்லாந்திலிருந்தும் நார்வேயிலிருந்தும் நடமாடி வந்த ஜெர்மன் படைகளை அநேக வருஷங்களாக எதிர்த்துப் போராடியிருக்கின்றன.

எதிரிக்கு இரண்டு முக்கிய நோக்கங்களுண்டு. ஒன்று பனிக்கட்டி நிரம்பிய கடற்கரையுள்ள மர்மான்ஸ் பிராந்தியத்தைக் கைப்பற்றுவது. அதன்மூலம் ருஷ்யா பூராவும் உபயோகப்படக்கூடிய ஒரு தளத்தை வடக்குக் கப்பற்படைக்குக் கிட்டாமல் செய்துவிடுவது. இரண்டு, ருஷ்ய வடக்குத் துறைமுகங்களுக்கு ஆயிரக்கணக்கான டாங்கிகளையும், விமானங்களையும், லக்ஷக்கணக்கான டன்களான மற்ற முஸ்தீப்புகளையும் கொண்டு வரும் நேசதேசக் கப்பற்கூட்டங்களை வழிமறித்துச் சிதற அடிப்பது அல்லது நாசம் செய்வது. எதிரிகள் தரைப் படைகளைக் கொண்டும், கப்பல்களைக் கொணடும், நீர்மூழ்கிகளைக் கொண்டும், வடக்கு நார்வேயிலுள்ள வெடிவிமானங்களைக் கொண்டும் தாக்கிவந்தார்கள்.

நேசதேசத்தார்களுக்கும் ருஷ்யாவுக்கும் இடையேயுள்ள கடல் மார்க்கங்களைச் சுத்தி செய்து காபந்து செய்வதில் பிரிடிஷ் கடற் படையையும் ருஷ்ய வடக்குக் கடற்படையும் எவ்வளவு வருஷங்கள் நன்றாக ஒத்துழைத்தன என்பதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்லுவதற்கில்லை. வடக்குக் கடற்படையிலுள்ள நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும், கடற்படையைச் சேர்ந்த விமானங்களும் பனிக்கட்டி நிறம்பிய வடக்கு பிரதேசத்தில் வெகுகாலம் உறுதியுடன் போரை நடத்தின. பின்லாந்து போரிலிருந்து விலகிக்கொண்டுவிட்டதாலும் செம்படையின் முன்னேற்றத்தைத் தடுக்க வடக்கு நார்வேயில் நார்வீஜியப்படைகள் இறங்கிவிட்டதாலும் நிலையில் சற்று தெளிவு ஏற்பட்டுவிட்டது.

சமீபகாலத்தில் ருஷ்யத் துறைமுகத்துக்குச் சென்ற நேசதேச சாமான் கப்பல் கூட்டத்தை எதிரிகள் தாக்கினார்கள். பிரிடிஷ் துணைக் காவல் கடற்படை அநேக நீர்மூழ்கி களை மூழ்கடித்தது. அநேக ஜெர்மன் விமானங்களை சுட்டுவீழ்த்திவிட்டது.

கடற்படையின் வேலை எதிர்த்துப் போராடுவதுடன் நின்றுவிடவில்லை. கடல் மார்க்கங் களிலிருந்து சுரங்கவெடிகளை அகற்றுவது, காலநிலைமையை ஆராய்ச்சிசெய்வது, மிதந்து செல்லும் பனிக்கட்டி போன்ற இயற்கையான அபாயங்களைக் கண்காணிப்பு செய்வது என்ற வேலைகளிலும் கப்பற்படை ஈடுபடவேண்டும்.

பிரிடிஷ் கடற்படையின் வேலையும் முடிந்துவிடவில்லை. யுத்தம் முடியும் வரையில் அதன் கப்பல்கள் எதிரியைத் தாக்கிவருவதுடன் ருஷ்யாவுக்குப் போகும் குறுகலான கடல் மார்க்கங்களையும் அது சுத்திசெய்துவரும்.

---

## ஒத்துழைப்பிலிருந்து பூர்ணமாக யுத்தத்திலீடுபடுவது.

### எகிப்து செய்த முடிவின் முக்கியத்வம்.

(டைம்ஸ் பத்திரிகை).

கெய்ரோவில் நடைபெற்ற மற்றொரு ராஜீய அக்கிரமம் உலகத்தாரையும் எகிப்தையும் பிரமிக்கும்படி செய்துவிட்டது. சென்ற அக்டோபர் மாதத்தில் வாப்ட் பார்த்தாப்பு செய்யப் பட்டபின் ஆமத்மாகர்பாஷா பிரதம மந்திரி பதவிக்கு வந்தார். அவருடைய நிர்வாகத்தின் ஆரம்பகாலத்தில் பிரிடிஷ் ரெஸிடெண்டு அவர்கள் கொலை செய்யப்பட்டார். இப்பொழுது அவரே சுட்டுக்கொல்லப்பட்டார். அவருடைய அகால மரணத்தைக்கண்டு பிரிடன் துக்கிக்கும். ஏனெனில் அவர் அநேக வருஷங்களாக பிரிடனின் தாடஸ்த்யமான நண்பர். குதூகலப்பட வேண்டிய நாளை இந்த அக்கிரமம் கரி நாளாகச் செய்துவிட்டது. ஏனெனில் மரணம் ஏற்பட்ட பொழுது ஆமத்மாகர்பாஷா சட்டசபையின் ஒரு கூட்டத்திலிருந்து மற்றொரு கூட்டம் இருந்த அறைக்கு ஜெர்மனி பேரிலும் ஜப்பான் பேரிலும் எகிப்து போர் தொடுத்ததென்பதை பிரகடனம் செய்யச் சென்றுகொண்டிருந்தார்.

யுத்தத்தின் மிகவும் நெருக்கடியான சமயங்களில் எகிப்திலுள்ள முக்கியமான கக்ஷிகள் பிரிடனுடன் தாடஸ்த்யமாக ஸ்நேகபாவத்துடனிருந்து வந்தன. அச்சுநாடுகள் ஸூயஸ் கால்வாய் வழியாகவும் இந்துமகாசமுத்திரம் வழியாக ஊடுருவிச் செல்லாமல் தடுக்க ஏராள மான எதிரிகளுடன் பிரிடிஷ் படைகள் போர்புரிந்து வந்தபொழுது நகஸ்பாஷாவின் நிர் வாகமும் வாப்ட் இயக்கமும் பேருதவி செய்துவந்தன. கிரிமியாவிலிருந்து திரும்பிவந்த மிஸ்ட்டர் சர்ச்சிலுடனும் மிஸ்ட்டர் ஈடனுடனும் கலந்தபின் இறந்துபோன பிரதமமந்திரியும் அவருடைய சகாக்களும் ஒத்துழைத்து வந்ததை நிறுத்தி பூர்ணமாக யுத்தத்திலீடுபடுவ தென்று முடிவு செய்திருப்பதிலிருந்து, யுத்தத்துக்குப்பின் உலக அமைப்புக்குரிய ஸ்தா பனத்தை அமைக்கும் சம்பாஷணைகளில் கலந்துகொள்ள எகிப்தும் பிரியப்படுகிற தென்றும் அவர்கள் முடிவு செய்துவிட்டார்களென்று தோன்றுகிறது.

ஏப்ரல் 25-ம் தேதியன்று ஸான்பிரான்ஸிஸ்கோவில் ஆரம்பமாகும் மகாநாட்டிற்கு நேச தேசத்தைச் சேர்ந்தவர்கள் தான் அழைக்கப்படுவார்கள். எகிப்து போருக்கு அதன் படைகளை அனுப்புமென்று நாம் எண்ணக்கூடாதபோதிலும் அந்த மகாநாட்டில் கலந்துகொள்ள எகிப்து பூர்ணமாக யோக்யதை பெற்றிருக்க வேண்டுமென்று சொல்லுவது எல்லோருக்கும் நல்லதுதான்.

ஆமத்மாகரின் குறுகிய நிர்வாக காலத்தில் முக்கியமாக சென்ற நவம்பர் மாதத்தில் அலெக்ஸாண்டிரியாவில் அராபிய நாடுகளின் மகாநாடு நடந்தது. அதை ஒட்டி இதன் முடிவு களை ஒரு ஸ்தாபன ரூபமாக அமைக்க சமீப காலத்தில் அநேகக்கூட்டங்கள் நடைபெற்றன. யுத்தத்திற்குப்பின் அராபிய நாடுகள் கொண்ட ஒரு சங்கம் அமைக்கப்படுவதற்கு நல்ல ஹேஷ்யங்கள் காணப்படுகின்றன. அந்த சங்கம் அநேக பாந்தவ்யமுள்ள நாடுகளை ஒன்று படுத்திவிடும். இப்பொழுது இருக்கும் அநேக தேசங்கள் 1918-ம் வருஷத்தில் ஆட்டமான் சாம்ராஜ்யம் சீர் கெட்டுப்போனபொழுது தோன்றியவைகள். அவைகள் ஒன்றுபட்டு இனி மேல் உலகத்தின் மிகவும் முக்கியமான ஒரு பாகத்தின் சமாதானத்தைக் காப்பாற்றக்கூடும்.



பொதுஜன க்ஷேமத்துக்கும் சமாதானத்தை நிறுவுவதற்கும் பிரயாசைப் டக்கூடிய எந்த ஜன ஸமாஜத்தையும் பெரிய வல்லரசுகள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகிலும் மற்ற தனிப்பட்ட சங்கங்களைப்போல இந்த சங்கமும் நேசதேசத்தாரின் செல் வாக்குக்குட்பட்டு அமைக்கப்பட்டால்தான் யுத்தத்துக்குப்பிந்திய உலகத்தில் திரம்பட வேலை செய்யும். இந்தக் காரணத்தை ஒட்டிதான் எகிப்தும் அதைப்பின்பற்றும் மற்ற அராபிய நாடு களும் ஸான்பிரான்ஸ்கோவிலும் அதற்குப்பின் நடைபெறும் சமாதான மகாநாட்டிலும் விசேஷமாக வரவேற்கப்படும். அந்த மகாநாட்டில் கலந்துகொள்ளும் உரிமையை, அது நாகரீகம் நிலைத்திருப்பதற்கு அபாயம் உண்டுபண்ணின அக்கிரமப்போரை நடத்திய கொடுங் கோன்மையை ஒழித்து விடுவதற்காகப் பாடுபடும் நேசதேசங்களுடன் சேர்ந்து கொண்டதின் மூலம், சம்பாதித்துவிட்டது.

---

## ஜப்பானியக் கடற்படைக்கு என்ன நேரிட்டது?

### டோக்கியோ ராணுவ அதிகாரிகளின் வியப்புறத்தக்க சோம்பேறித்தனம்.

லூஸானை அமெரிக்கர்கள் படையெடுத்ததில் உள்ள விசேஷ அம்சங்களில் ஜப்பானை பிரமிக்கும்படி வெற்றிகரமாகச் செய்ததும் ஒன்று என்று நேசதேச அறிக்கை வெளியிடு கிறது.

நேசதேசத்தாரின் 800 கப்பல்களை ஜப்பான் படையெடுப்புக்கு சில நாட்களுக்கு முன் பார்த்திருக்கவேண்டும். ஆனால் அதன் லக்ஷியம் ஜப்பானுக்குப் புலப்படவில்லை.

லெயிடியைப் பிடித்ததின் மூலம் பிலிப்பைன்ஸிலுள்ள ஜப்பானியப் படைகள் இரண் டாகத் துணிக்கப்பட்டு விட்டன. அதற்குப்பின் அமெரிக்கப் படைகள் லூஸானுக்கு நேர் தெற்கிலுள்ள மிண்டொரோவில் இறங்கின. மணிலாவைத் தாக்கும் படைகள் தெற்கிலிருந்து தான் வருமென்று ஜப்பான் எண்ணியிருந்தது இதிலிருந்து ஊர்ஜிதப்பட்டிருக்கலாம்.

மாக் ஆர்தரின் புதிய படையெடுப்புப் படைகள் மணிலாவைத் தாண்டி வடக்கு நோக்கிச் சென்றபொழுது, பலமாக நேசதேச விமானங்களால் தாக்கப்பட்டு வந்த பார்மோ ஸாவில் படைகள் இறங்குமென்று ஜப்பானியத் தலைவர்கள் எதிர் பார்த்தார்கள். அந்த சமயத்தில் எதிரியின் கடற்படை. பார்மோஸாவை காக்கத் தற்காப்பு ஸ்தானங்களுக்குக் கொண்டுபோகப்படுகிறதென்று சொல்லப்பட்டது. ஆனால் நேசதேசக் கடற்படை அதன் போக்கை மாற்றிவிட்டது. ஜனவரி மாதம் 9-ம் தேதியன்று காலை 9-30 மணிக்கு ஜெனரல் குருகணிடமுள்ள அமெரிக்க ஆறுவது சேனையைச் சேர்ந்த படைகள் லிங்கேயன் வளைகுடா வில் இறங்கின. மணிலாவைத் தாக்கும் நடவடிக்கை வடக்கிலிருந்து துவக்கப்பட்டது.

இதே சமயத்தில் பசிபிக்கில் உயர்தர கமாண்டரான கடற்தளபதி நிமிட்ஸ் அவருடைய தலைமைக் காரியாலயத்தை குவாம் தீவுக்கு மாற்றிக்கொண்டார். இந்த அமெரிக்கக் கடற் படை தளத்தை ஜப்பானியர்கள் 1941-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் கைப்பற்றினார்கள். அதை 1944-ம் வருஷம் ஜூலை மாதத்தில் அமெரிக்கப் படைகள் தாக்கின. மாரியானஸ் தீவுக் கூட்டத்தில் குவாம் மிகவும் பெரிய தீவு. அது சுமாராக 30 மைல்கள் நீளமும் எழு மைல்கள் அகலமும் விஸ்தாரமுள்ளது. அதில் சிறந்த கப்பற்துறையும் $3\frac{1}{2}$ மைல்கள் அகல முள்ள துறைமுகமும் இருக்கின்றன. அதைத் திரும்பிப் பிடித்தபின் அமெரிக்கப் படைகள் அதிலும் அதற்குச் சமீபத்திலுள்ள ஸைபான் தீவிலும் உள்ள விமான தளங்களைப் பழுது பார்த்து அபிவிருத்தி செய்திருக்கின்றன.

மாரியானஸிலிருந்த விமானங்களின் தாக்குதலினால் எதிரியைப் பின்புறம் தள்ளும் நட வடிக்கை இடைவிடாது முன்னேற்றமடைந்து வந்தது. மிட்வே தீவுகளிலும் பிலிப்பைன் ஸுக்கு அருகிலும் நடைபெற்ற கடற்படை போரில் ஜப்பான் இழந்த முனனேறித்தாக்கும் சக்தியைத் திரும்பிப் பெறுவதற்கு ஜப்பானுக்கு யாதொரு அவகாசமும் அளிக்கப்படவில்லை,

ஜப்பானிய சாம்ராஜ்யமும் அது கைப்பற்றியிருக்கும் நாடுகளும் தாக்குவதற்குச் சுலபமான லக்ஷியங்களாக இருப்பதினால் நேசதேசக் கமாண்டர்கள் அடிக்கடி திட்டங்களை மாற்றிப் பல இடங்களில் தாக்கலாம். ஒவ்வொரு புதிய தாக்குதலும் எதிரியை பிரமிக்கச் செய்யும். பசிபிக்கில் பூராவாகத் தற்காப்பு செய்துவரும் ஜப்பான் நேசதேசத்தாரின் புதிய நடமாட்டத்தைக் கண்டுபிடித்தாலும் இது போக்கைக் காட்டும் நடவடிக்கையென்றும் முக்கியமான நடவடிக்கை ஜப்பானிய அமைப்பின் நுட்பமான பாகத்தைத் தாக்க ஆரம்பிக்கப்படுமென்பதை அது ஒருபொழுதும் அறிய முடியாது.

உதவி கடற்தளபதி மார்க் மிட்ஷரிடமுள்ள மகத்தான கடற்படையின் வருகையை ஜப்பானிய அதிகாரிகள் அறிந்திருக்க வேண்டும். இந்தக் கடற்படை 200 மைல்கள் நீளமுள்ள போர்முனையை அமைக்கக்கூடுமென்று குவாமிலிருந்து நிருபர்கள் வர்ணித்திருக்கிறார்கள். லெயிடியையும் லூஸானையும் படைகள் தாக்கியபொழுது ஜப்பானுக்கு இருந்த சுறுசுறுப்பின்மை இப்பொழுதும் பதில் தாக்குதலைச் செய்யவொட்டாமல் அதைத் தடுத்து விட்டது. அந்தக் கடற்படையில் 15 விமானந் தாங்கிகள் இருந்தனவென்றும் அவைகள் ஜப்பானியக் கடற்கரைக்கு 300 மைல்களுக்குள் சென்றனவென்றும், அவைகளிலிருந்த 1,500 வெடி விமானங்கள் சென்று டோகியோ பேரிலும், ஷிகுசா பேரிலும் இரண்டு நாட்கள் வரையில் பலமாகக் குண்டுகளை வீசினவென்றும் சொல்லப்படுகிறது.

இந்தத் துணிவுகரமான நடவடிக்கை மூலம் போனின்ஸ் தீவுகளில் பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டதும், படைகளிறங்கியதும் மறைமுகப்படுத்தப்பட்டன. டோக்கியோவிலிருந்து 700 மைல்களிலுள்ள ஐவோஜிமாத் தீவுபேரில் 36 மணி நேரங்கள் வரையில் இடைவிடாது பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. போனினையும் வால்கெனோவையும் நேசதேசப் படைகள் கைப்பற்றிவிட்டால் அவைகள் டோக்கியோவிலிருந்து 650 மைல்கள் தூரத்திற்குள் கேந்திர ஸ்தானங்களைப் பெற்றுவிடுவார்கள். அப்பொழுது சிறுது தூரம் செல்லும் சண்டை விமானங்கள் தூரக்கிழக்கிலுள்ள அச்சு நாட்டாரின் ஹிருதயத்தைத் தாக்குவதில் கலந்துகொள்ளக்கூடும். ஜப்பானின் உள்வளைய யுத்த அரங்கத்துக்கு ஆபத்து உண்டாக்கின தளங்களான மாரியானஸ் தீவுகளை ஜப்பான் பதில்முறையில் தாக்க முயன்றால் இந்தத் தீவுகள் எல்லைப் புறத் தற்காப்புகளாக இருக்கும்.

ஜப்பானிய சாம்ராஜ்யக் கடற்படைக்கு என்ன நேரிட்டு விட்டதென்றுதான் நேசதேசக் கடற்படை மாலுமிகள் வினவிக் கொண்டிருக்கிறார்கள்? பசிபிக்கில் கடற்படையின் பிராபல்ய சம்த்வம் ஜப்பானுக்கு பிரதிகூலமாக ஆகிவிட்டதென்பது உண்மை. ஜப்பானிய கடற்படைக்குக் கட்டளையிடப்பட்ட கோரமான ஜப்பானின் தற்காப்பு வேலையிலும் ஜப்பானிய கடற்படை அபாயத்துக்குட்பட வேண்டியதாக இருக்கும். ஏனெனில் நேசதேசக் கடற்படைகள் ஜப்பானைச் சுற்றியுள்ள சமுத்திரங்களில் ஒத்திகை செய்து வருகின்றன. போனின்ஸ், வால்கெனோஸ் போன்ற பாய்ச்சல் ஸ்தலங்களில் வளையங்களை அமைத்து வருகின்றன. ஜப்பானியப் படைகளைப் போருக்கு வரும்படி புரோத்சாகம் செய்துவிட்டால் அதைவிட நேசதேச பசிபிக் கடற்படைகளுக்கு ருசிகரமான நடவடிக்கை இருக்காது. ஆகிலும் ஜப்பானிய யுத்தத் தலைவர்கள் சாத்யமான வரையில் நீண்ட காலத்துக்குப் போரை நடத்தாமல் ஒத்தி வைத்துவிடுவார்களென்று தோன்றுகிறது. சென்ற வாரத்தின்ருசிகரமான சம்பவங்கள் காயிஸோவின் நிர்வாகத்துக்கு அநேக கோரமான உண்மைகளை வெளிப்படுத்திவிட்டன. விரிவுப்பட்டுருக்கும் தூரக்கிழக்கு சமக்ஷேம கோளத்தின் மத்திய பாகமான ஜப்பானும் ஜப்பானிய சாம் ராஜ்யத்தின் எல்லைப் புறங்களிலுள்ள ஒரு புள்ளியைப்போலச் சுலபமாகத் தாக்கக்கூடியது என்று புலப்பட்டுவிட்டது.

பழிவாங்கும் முறையில் பெர்லினை வெடி விமானங்கள் தாக்குவதிலிருந்து தோன்றும் அக்னி ஜ்வாலைகள் தூரக்கிழக்கில் டோக்கியோ தீப்பற்றி எரியும்பொழுது எதிர் ஒளிகளைப் பிரதி பலிக்கும். அச்சு என்பதை ஒரு மெழுகு திரிக்கு சமமாகச் சொல்லலாம். அதன் இரு ஓரங்களும் தீப்பிடித்து எரியும்பொழுது அது சீக்கிரத்தில் நிர்மூலமாகிவிடுமென்பது நிச்சயம்.



# தூரக்கிழக்கு நடவடிக்கைகளின் தோரணை.

---

## டோக்கியோவை அமெரிக்க விமானந் தாங்கிகள் தாக்குகின்றன.

**லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் பிரௌன்ரிக்.**

(ஈவ்னிங் நியூஸ்)

1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதியன்று நான் பின்வருமாறு எழுதினேன். "இத்தருணத்தில் நிலமையைப் பாதி விரிந்த விசிறிக்கு ஒப்பிடுவது பொருத்தமானதுதான். விசிறியை வைத்திருப்பது டோக்கியோ. விசிறியின் மேற்கு ஓரம் அண்டாமான் தீவு வரையில் 3,500 மைல்கள் நீளமுள்ளது. அதே நீளமுள்ள கிழக்கு ஓரம் நியூபிரிடனில் முடிவடைகிறது, விசிறியின் தலைபாகம் சுமத்ரா, ஜாவா, டிமார், ந்யூகினியாவின் தெற்குக்கரைகள் ஓரமாக 4,500 மைல்கள் நீளமுள்ளதாக உள்ளது. இந்த விசிறிக்குட்பட்ட பிரதேசம் ஜப்பானியரின் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருக்கிறது."

மூன்று வருஷங்களுககுப்பின் பாதி விரிக்கப்பட்ட விசிறியின் அகலம் பாதிக்குமேல் குறைந்துவிட்டது, மேற்கு ஓரம் ஹாங்காங்குக்கு வெளியே தெற்கு பர்மா வரையில் நீண்டு இருக்கிறது. கிழக்கு ஓரம் இப்பொழுது தென்கிழக்கில் ஸாலமன்ஸ் வரையில் பரவியிருக்கவில்லை. ஆனால் தென்மேற்கு மூலையாக மணிலா வழியாக ஜாவாவுக்குப் பரவியிருக்கிறது. டோக்கியோவிலிருந்து பிலிப்பைன்ஸ் வழியாக ஜாவாவுக்குச் செல்லும் கோட்டிற்குக் கிழக்கில கடற்தளபதி நிமிட்ஸிடமுள்ள கடற்படையும் மாக்ஆர்தரிடமுள்ள ஒன்றுபட்ட படைகளும் ஆதிக்கம் பெற்றுவிட்டன.

இதிலிருந்து ஜப்பான் வசமுள்ள எல்லாத்தீவுகளும் திரும்பிப்பிடிக்கப்பட்டு நியாயமான ஸ்வான்தார்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன என்று சொல்லுவதற்கில்லை. ஜாவாவிலிருந்து ஸாலமன்ஸ் வரையிலுள்ள தீவுத்தொடர்களில் ஜப்பானியப் படைகள் இனனமும இருந்து வருகின்றன. அப்படைகள் வடக்கில் 3,000 மைல்கள் தாண்டியுள்ள தாய் நாட்டிலிருந்து தொடர்பன்னியில் துணிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படைகளுக்கும் ஜப்பானுக்கும் கடல் மார்க்கமாகத்தான் போக்குவரத்து நடைபெறவேண்டும். கடல் மார்க்கம் அமெரிக்கக் கடற்படையின் ஆதிக்கத்துக்குட்பட்டுவிடடது. இங்கு அடைபட்டிருக்கும் ஜப்பானியப் படைகளின் அழிவு நிச்சயம்

ஜப்பானியர்கள் அக்கிரமப்போரின் உச்சநிலையை அடைய மூன்று மாதங்களுக்கு மேலாகின. ஜப்பானியரின் கபடமான நடவடிக்கை மூலம் இழந்த பிரதேசத்தின் பாதி பாகத்தை மீட்க நேசதேசத்தார்களுக்கு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன.

ஆகிலும் இந்த சாவதானமான நடவடிக்கைக்கு நல்லகாரணங்கள் உள, இந்த மூன்று வருடங்களில் பிரிடிஷ் சாம்ராஜ்யமும் அமெரிக்கநாடுகளும் ஐரோப்பாவிலும் ஐரோப்பாவைச் சுற்றிலும், ஏழு சமுத்ரஙகளிலும், சமுத்ரத்திற்கு அடியிலும், சரித்ரத்திலேயே மிகவும் மகத்தான போரை நடத்தவேண்டியிருந்தது,

அவர்களின் ஒன்றுபட்ட கடற்படையின் ஒரு அமசம்தான் இப்பொழுது ஜப்பானைத் தாக்க உபயோகிக்கப்படுகிறது. ஆகிலும் அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் ஹான்ஷூ என்ற ஜப்பானுக்கு சமீபத்திலுள்ள தீவுக்கு 300 மைல்களுக்கருகில் நடமாடி வருகின்றன. விமானந் தாங்கிகளில் சென்ற விமானஙகள் டோக்கியோவைத்தாக்கி, பெர்ல் துறைமுகத்தை வஞ்சக புத்தியுடன் தாக்க திட்டம் போட்டவர்களுக்கும், ஜெனரல் டூலிட்டில் டோக்கியோவை முதல் முதலில் தாக்கியபொழுது ஜப்பானியர் வசமான அமெரிக்க விமானிகளைக் கொலை செய்தவர்களுக்கும் என்ன நேரிடுமென்பதற்கும் அடையாளம் காட்டி வருகின்றன.

அதே சமயத்தில் அமெரிக்க மாரின் படைகள் டோக்கியோவிலிருந்து தெற்கில் 750 மைல்களிலுள்ள ஐவோஜிமாத்தீவிலிறங்கி விட்டன, இந்த நடவடிக்கை மூலம் மாரியானு

ஸிலிருந்து ஜப்பானிலுள்ள தொழிற்சாலைகள், பிரதேசங்கள் பேரில் வெடிகுண்டுகளை வீசச் சென்ற பறக்கும் கோட்டை விமானங்களை வழிமறித்துத் தாக்க உபயோகமுள்ளதாக இருந்த தளத்தை ஜப்பான் இழந்து விட்டது.

ஐரோப்பாவின் முதலாவது எதிரியான ஜெர்மனியை பிரிடனும், அமெரிக்காவும் தாக்கி வரும்பொழுதே இந்த நடவடிக்கை முடிவு பெற்றிருக்கிறது. ஆனால் இப்பொழுது பலமான பிரிடிஷ் கடற்படைகள் தூரக்கிழக்குக்குச் சென்றிருக்கின்றன. ஆரோமான்சஸில் படைகளை இறக்கின படகுகளும் இப்பொழுது கடற் தளபதி மௌண்ட் பாட்டனுடைய கடற்படையில் சேர்ந்து கொள்ள தூரக்கிழக்குக்குப் புறப்பட்டு விட்டன,

தூரக்கிழக்கில் பிரிடனும், அமெரிக்காவும் மட்டிலும் ஈடுபட்டிருக்கு இந்த இரண்டாம் வது மகத்தான போரை ஐரோப்பாவில் ருஷ்ய நடவடிக்கையையும் ஜெனரல் ஈசன் ஹவரிடமுள்ள படைகளின் நடவடிக்கைகளையும் ஒப்பிட்டுக் குறைகூறுகிறவர்கள் மறைந்து வருகிறார்கள். ருஷ்யாவின் பூராபலமும் ஜெர்மனியின் கிழக்கு எல்லைச் சரகத்தைத் தாக்குவதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. ருஷ்யர்களிடம் 250 டிவிஷன் படைகளிருக்கின்றன வென்று ஜெர்மானியர்கள் மதிப்பிடுகிறார்கள்.

மேற்குப்போர்முனையில் ஜெனரல் ஈசன் ஹவரிடம் அதில் மூன்றில் ஒரு பங்குகூட படைகளில்லை. ஆகிலும் டிதினத்திற்குப்பின் கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் முன்னேறும் படைகள் ஜெர்மன் தற்காப்புப் படைகளை 1,000 மைல்களுக்கு மேல் பின்புறம் தள்ளியிருக்கிறன.

சென்ற வருஷம் ஜூன் மாதத்தில் மினஸ்க்கிலிருந்த செம்படைக்கும் ஆரோமாஞ்சனிலுள்ள பிரிடிஷ் அமெரிக்கப்படைகளுக்கும் 1,400 மைல்கள் இடைவெளி இருந்தது. இப்பொழுது அவைகள் 400 மைல் தூரத்தில்தானிருக்கின்றன. முன்னேறியிருக்கும் தூரத்தில் அதிக வித்யாசமில்லை. அவ்விருபடைகளும் ருஷ்ய ஸோல்ஜரைப்போல பிரிடிஷ் ஸோல்ஜரும் நன்றாகப் போர் புரிந்தான் என்று மார்தட்டிக் கொள்ளலாம்.

---

## மாண்டலேயிக்காகக் கடும்போர்.

### நேசதேசப் படைகள் மூன்று பக்கங்களிலிருந்து வளைத்துவருகிறார்கள்.

(டெயிலி மெயில்).

மாண்டலே நகரத்துக்கு மூன்று பக்கங்களிலும் போர் மூண்டுவிட்டது.

19-வது இந்திய சேனைப்பகுதி வடக்குப் பக்கத்தில் பின்பக்கத்திலுள்ள எதிரிகளைத் துரத்தியடித்துவருகிறது. சில மாதங்களுக்குமுன் அந்த இடங்கள்தான் முதல்தரமான போர்முனையாக இருந்தன. இராவதி நதியைத்தாண்டி சில மைல்களிலுள்ள சாகேயிங் சமவெளிகளில் உள்ள நகரத்துக்கு வடமேற்குப் பக்கத்தில் கடும்போர் நடைபெறுகிறது. மற்ற படைகள் தென்மேற்கு மூலையிலிருந்து மாண்டலேயை நோக்கி முன்னேறுகின்றன.

நாம் போர்புரியும் பிரதேசம் மிகவும் கெடுதலாக இருப்பதினால் ஜீப்புகளை மலைகளின் பேரில் கயிறுகட்டி இழுத்துத் தூக்கவேண்டியிருக்கிறது. மாண்டலேக்கு 36 மைல்களிலுள்ள ஸிங்குவுக்குத் தெற்கில் ஸ்தானங்களை நாம் சம்பாதித்தும் இராவதியைத் தாண்டி பாலமுனைகளை நாம் காப்பாற்றக்கூடிய சக்திபெற்றதும் நமக்கு மகத்தான வெற்றிகள்.

ஆனால் இது போரின் ஒரு பாகம்தான். மற்றும் இரண்டு போர்கள் இருக்கின்றன. (1) மத்திய பர்மாவில் இராவதி நதிக்கான போர். இது இறுதியில் (2) தெற்கு பர்மாவிலுள்ள ஸால்வீன் நதிக்கான போராக முடியும்



பொதுஜன நம்பிக்கைக்கு மாறாக, ஜப்பானிய சேனையை அழிக்கும் போருக்காக பர்மாவில் ஆதிக்கம் பெருவதென்ற போரில் மாண்டலே மிகவும் முக்கியத்துவமுள்ளதாக இருக்காது. மாண்டலே வீழ்ச்சி பெற்றால் ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் மேற்குப் பக்கத்தில் ஜப்பானுக்குத் தோல்வி ஏற்பட்டுவிட்டதென்று ஏற்படுமாகையால் மாண்டலேயில் ஜப்பானியர்கள் கோரமான போரை நடத்திவருகிறார்கள். மேலும் மாண்டலேயிலிருந்து கிழக்கு நோக்கிப்போகும் ரஸ்தா ஷான் ஸமஸ்தானங்களுக்குச் செல்லும் மார்க்கங்களில் ஒன்றாகும். அங்குதான் ஜப்பான் தப்பி ஓடக்கூடிய ரஸ்தா இருக்கிறது. இதைத்தான் "ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் ஓரத்திலுள்ள இரண்டாவது தற்காப்பு அரண்" என்று ஜப்பானியர்கள் சொல்லுகிறார்கள்.

இராவதி நதிக்கரையிலுள்ள அநேக முன்னேறும் வாசல்களைச் சுற்றியுள்ள போர்முனைகளில் புதிய ஜப்பானியப் படைகள் காணப்படுகின்றன. ஜப்பானியர்கள் மலேயாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் பின்வாங்கி வருகிறார்களென்று வாஷிங்டனிலிருந்துவரும் ரிபோர்ட்டுகளுக்கு இது நேர் விரோதமாக இருக்கிறது.

ஆகிலும் ஜப்பானுக்கு உதவி முஸ்திப்புகள் அற்றுப்போய் அது பின்வாங்குவதாக உத்தேசித்தால், படைகள் கிழக்கு நோக்கித்தான் செல்லக்கூடும். அவர்கள் மலைகள் வழியாகப் பின்வாங்கும்பொழுது அவர்களை வழிமறித்துத் தாக்குவது கஷ்ட சாத்யமான பிரச்னையாகும்.

---

## 2,532 இந்தியப்படை வீரர்கள்.

---

இந்த யுத்தத்தில் 1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் முடிய இந்திய சேனையிலுள்ள ஆபீஸர்களுக்கும் ஸோல்ஜர்களுக்கும் அவர்களின் தீரத்திற்காகவும் சிரத்தைக்காகவும் கௌரவ அடையாளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அநேகர்களைப்பற்றிய விருத்தாந்தங்கள் வெளியிடப்பட்டு அவர்களுக்கு யோக்யதாப்பத்திரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. எல்லாப் போர்முனைகளிலும் இந்தியப்படைகள் காட்டியுள்ள தீரத்தை நேசதேசத்தார்கள் பாராட்டியிருக்கிறார்கள். அதைக்கண்டு எதிரிகள் நடுநடுங்குகிறார்கள். இந்தப் போர்வீரர்கள் சர்வதேச சமாஜத்தில் இந்தியாவுக்கு ஒரு கௌரவமான ஸ்தானத்தை சம்பாதித்திருக்கிறார்கள்.

பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் தீரத்திற்காக வழங்கப்பட்ட உயர்தர கௌரவ அடையாளமான விக்டோரியா கிராஸ் பதக்கங்கள் பெற்றதில் இந்தியா இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. இந்தப் பதக்கம் பின்வருமாறு அளிக்கப்பட்டிருக்கிறது.

பிரிடன் 75, இந்தியா 18, ஆஸ்திரேலியா 11, நியூஸிலாந்து 7, கனடா 3, தெற்கு ஆபிரிக்கா 1, பிஜி, 1.

இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட மற்ற கௌரவ அடையாளங்கள் பின்வருமாறு:—

142. D. S. O.-க்கள், 291 இந்திய யோக்யதாப் பத்திரங்கள், 580 மிலிடரி கிராஸ்கள் 954 இந்திய D. S. O. பதக்கங்கள், 546 ராணுவப் பதக்கங்கள்.

## தஞ்சாவூர் உபரி அஸிஸ்டெண்டு ரிக்ரூட்டிங் ஆபீஸரான சுபநார் G. லோகநாதனின் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சியின் சுருக்கம்.

**1945-ம் ௵ மார்ச்சு மாதம்.**

| | | | |
|---|---|---|---|
| 13-3-45. | செவ்வாய்க்கிழமை. | புதுக்கோட்டைக்கு வருகை. | ரிக்ரூட்மெண்டு, தங்குவது. |
| 14-3-45. | புதன்கிழமை ... | கீழச்சிவல்பட்டிக்கு பிரயாணம். | ரிக்ரூட்மெண்டு, புதுக்கோட்டையில் தங்குவது. |
| 15-3-45. | வியாழக்கிழமை ... | அன்னவாசலுக்குப் பிரயாணம். | ரிக்ரூட்மெண்டு, தங்குவது. |
| 16-3-45. | வெள்ளிக்கிழமை... | கீரனூருக்குப் பிரயாணம். | ரிக்ரூட்மெண்டு, திரும்பிச் செல்வது. |

**பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 239 (3-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10- 3-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 14- 3-45 | பெருமாநாடு | ... மாலை 7.00 |
| 11- 3-45 | பூவரசகுடி | ... „ 7.00 | „ | புல்வயல் | ... „ 7.30 |
| „ | வேங்கடக்குளம் | ... „ 7.30 | 15- 3-45 | வாளரமாணிக்கம் | ... „ 7.00 |
| 12- 3-45 | தென்னதிரயன்பட்டி | ... „ 7.00 | „ | எம்பல் | ... „ 7.30 |
| „ | விசலூர் | ... „ 7.30 | 16- 3-45 | விராலிமலை | ... „ 7.00 |
| 13- 3-45 | மழையூர் | ... „ 7.00 | „ | பொருவாய் | ... „ 7.30 |
| „ | காரம்பக்குடி | ... „ 7.30 | | | |

### பிரஸங்கம் 240. (4-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17- 3-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 21- 3-45 | வடவாளம் | ... மாலை 7.00 |
| 18- 8-45 | கொன்னையூர் | ... „ 7.00 | „ | சம்மட்டிவிடுதி | ... „ 7.30 |
| „ | மேலவேகுப்பட்டி | ... „ 7.30 | 22- 3-45 | நச்சாந்துபட்டி | ... „ 7.00 |
| 19- 3-45 | புத்தாம்பூர் | ... „ 7.00 | „ | விராச்சிலை | ... „ 7.30 |
| „ | வைத்திக்கோவில் | ... „ 7.30 | 23- 3-45 | மலம்பட்டி | ... „ 7.00 |
| 20- 3-45 | ஆலங்குடி | ... „ 7.00 | „ | பரம்பூர் | ... „ 7.30 |
| „ | ராசியமங்கலம் | ... „ 7.30 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 10— 3—45 | திருமெய்யம். | 17— 3—45 | பொன்னமராவதி. |
| 11— 3—45 | எம்பல். | 18— 3—45 | விராச்சிலை. |
| 13— 3—45 | வடகாடு. | 20— 3—45 | ராமச்சந்திரபுரம். |
| 15— 3—45 | ஆலங்குடி. | 22— 3—45 | குழிபிறை. |
| 16— 3—45 | புதுக்கோட்டை. | 23-- 3—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—11-3-45.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் ௵ மார்ச்சு ௴ 17௳ [ந. 240

**தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.**

பிரஸங்கம் CCXL.

## நாம் நம்பியிருக்கும் லக்ஷியம்.

(அப்ஸவர் பத்திரிகை).

நாம் ஆறுவது வருஷ யுத்தத்தை நடத்திவருகிறோம். தோல்வியின் சமீப அபாயமிருந்த பொழுது நமக்கு இருந்த மிகுதியான ஊக்கம் இப்பொழுது குறைந்துவிட்டது. எதிரிக்கு அவ்வித நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகையினால் கடுமையாக இறுதிப் போரை நடத்தவேண்டியிருக்கும். வரப்போகும் மாதங்களில் நமக்கு எது உத்ஸாகத்தை ஊட்டி நம்முடைய முயற்சியைத் தளரவிடாமல் செய்து வரப்போகிறது? ஒன்றே ஒன்று தான். நாம் நம்பியிருக்கும் லக்ஷியம் தான். யாதொரு விதமான லஜ்ஜையன்னியிலும் அந்த லக்ஷியத்தை நாம் கடைப் பிடிக்கவேண்டும். அதாவது நம்முடைய நோக்கங்கள் ஞாயமானவை என்ற உறுதியான நம்பிக்கை தான். மற்ற ஒன்றும் பயன்படாது. புகழும், ராணுவ வெற்றிப் பளபளப்பும் பிரயோஜனப்படாது. வெறுப்பும் பழிவாங்கும் தன்மையும் வெகு சீக்கிரத்தில் பிறர் பேரில் குற்றம் சாட்டும் உணர்ச்சியையும் நம்மிடம் உண்டு பண்ணிவிடும். எல்லாவற்றையும் விட வெற்றி நமக்குக் கிட்டிவிட்டதென்றும் நாம் போரின் இறுதிக் கட்டத்திலிருக்கிறோமென்றும் அடிக்கடி சொல்லுவதும் பயன்படாது.

சமீப காலத்தில் அபாயகரமான இந்த போலிதாது புஷ்டிகளை நாம் ஏராளமாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். நமது உண்மையான பலமான, நமது நியாயமான லக்ஷியம், ராஜ தந்திர போரத்தினால் மங்கிவிட்டது. அந்தப் பேச்சுகள் சாதுர்யமாக இருக்கின்றனவே அல்லாது புத்தி சாலித்தனமுள்ளதாகத் தோன்றவில்லை. ஆகிலும் நமது லக்ஷியம் அழிக்க முடியாதது. சாதுர்யமாக சமாதானத்தையே பின்பற்றியிருக்கக்கூடிய காலத்தில், நம்முடன் எதிரி போர் தொடுக்காத பொழுதே நாம் போரிலீடுபட்டோம். அந்த யுத்த ஆர்வம் 1940-ம் வருஷத்தில் பிரிடன் தன்னந்தனியே நின்ற பொழுது ஜ்வலிக்க ஆரம்பித்தது. ராஜ தந்திரிகளின் மகாநாட்டில் அழிக்கமுடியாத வண்ணம் அந்த ஆர்வம் நமது உள்ளத்தில் வேரூன்றிநிற்கின்றது. நமது லக்ஷியம் என்னவென்றும், அதிருந்து நமது லக்ஷியத்தை மறந்துவிடக்கூடிய எவ்வகையான ஆசை வார்த்தைகளிலிருந்தாலும் அதை நாம் புறக்கணித்துவிடவேண்டும்.

நாம் அமானுஷமான சக்தி பெற்றவர்களைச் சேர்ந்தவர்களல்ல. அவ்விதமான பாவனை நமக்கு ஏற்பட்டால் நம்மைவிட பெரிய வல்லரசுகள் இருக்கிறார்கள் என்ற துக்ககரமான தோற்றம் உண்டாகும்படி நேரிட்டு வருகிறது. இந்தத் தீவிலுள்ள நாம் சிறிய தேசங்களுக்குள் மிகப்பெரிய தேசம். உலகம் பூராவிலுமுள்ள சிறிய நாடுகளுக்குத் தலைமை வகிப்பது, அவைகளை ரக்ஷிப்பது என்றலத்தில் தான் நமது இயற்கையான பலமிருந்து வருகிறது.

நாம் ஒரு ஐரோப்பிய நாடு. ஐரோப்பிய விவகாரங்களை நாம் ஒரு பொழுதும் கைவிட முடியாது. ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சியையும் நாம் விரும்பக்கூடாது. சுறுசுறுப்பான நேசதேசத்தார்களில நாம் தான் ஐரோப்பாவின் இயற்கையான பிரமுகர்கள்.

இதுவரையில் இல்லாதபடி சுதந்திரமுள்ள சர்வ தேச ஸ்தாபனத்தை அமைக்கும் பரீக்ஷையில் வெற்றி பெற்ற சாம்ராஜ்ய நாடுகள் கொண்ட அமைப்பின் மத்திய நிலயமாக நாமிருந்து வருகிறோம். ஸ்வதந்திரமுள்ள சங்கங்களும், சமஷ்டிகளும், மற்ற எந்த அமைப்புகளும் தேவைப்படும் பொழுது நாம் நாயகர்களாகவும் போதகர்களாகவும் இருந்து வருகிறோம். யுத்தத்தினல் சீர்கெட்டுப்போன ஐரோப்பாவைவிட நாம் வேறு எங்கு அவ்வித சேவையைச் செய்யக்கூடும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 6—3—45 (செவ்வாய்க்கிழமை.) | நேசதேசப்படைகள் கொலோன் பூராவையும் ஆக்கிரமித்தன. |
| | ருஷ்யர்கள் கிராடென்ஸைக் கைப்பற்றினர்கள். |
| 7—3—45 (புதன்கிழமை). | நேசதேசப்படைகள் ரைன் நதியிலுள்ள பானுக்குள் நுழைந்தன. |
| | சீன 1-வது சேனை பர்மாவிலுள்ள லாஷியோவைப் பிடித்தது. |
| 8—3—45 (வியாழக்கிழமை). | நேசதேசப்படைகள் பர்மாவில் மாண்டலேக்குள் நுழைந்தன. |
| | அமெரிக்கர்கள் ரெமெசனுக்குக்கருகில் ரைன் நதியைக் கடந்தார்கள். |
| 9—3—45 (வெள்ளிக்கிழமை). | அமெரிக்க 1-வது, 3-வது சேனைகள் காப்ளென்ஸுக்கு வடமேற்கில் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டன. |
| | ஜப்பானியர்கள் இந்தோ-சைனவிலுள்ள பிரெஞ்சுப் படைகளை நிராயுதபாணிகளாக்கிவிட்டார்கள். |
| 10—3—45 (சனிக்கிழமை). | செம்படை டான்சிக்குக்குள் ஊடுருவிச் சென்றது. |
| | அமெரிக்கர்கள் ஜெர்மனியில் விட்டிலிச்சைக் கைப்பற்றினர்கள். |
| 11—3—45 (ஞாயிற்றுக்கிழமை). | அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸிலுள்ள மிண்டானேத் தீவில் இறங்கினர்கள். |
| | செம்படை கோல்பெர்க்குக்கு மேற்கில் பால்டிக் கடலை அடைந்தது. |
| | பிரிடிஷ் விமானப்படை பட்டப் பகலில் எஸ்ஸன் பேரில் 5,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளை வீசியது. |
| 12—3—45 (திங்கட்கிழமை). | நேசதேசப்படைகள் ரைன் நதியின் கிழக்குக் கரையில் முன்னேறி வருகிறார்கள். |
| | அமெரிக்கர்கள் சாம்போங்காவிலுள்ள முக்கிய நகரத்தையும் சான்ரோக்கிலுள்ள விமான தளத்தையும் கைப்பற்றினர்கள். |

### (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.—**

(1) நேசதேசப்படைகள் ரைன் நதிக்கு மேற்குப் பக்கத்தில் வெஸலுக்கும் காப்ளென்ஸுக்கும் மத்தியில் 150 மைல் கொண்ட பிரதேசத்தை வசப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

(2) கனடிய 1-வது சேனையும், அமெரிக்க 9-வது சேனையும வெஸலுக்கு சமீபத்திலுள்ள சான்ஸ்பாக், ஸான்டன், ஆல்பன், வால்லாச், ரெயின்பர்க் முதலிய நகரங்களைப் பிடித்தார்கள். வெஸல் பால முனையிலிருந்து பின்வாங்கிவிட்டார்கள்.



(3) அமெரிக்க 1-வது சேனை மார்ச்சு 7-ம் தேதியன்று ரைன் நதியை ரெமெஜன் என்னுமிடத்தில் தாண்டிற்று. அதன்பின் அது 23 நகரங்களைப் பிடித்தது. கிழக்குக் கரையில் 13 மைல்கள் நீளமும், ஆறு மைல்கள் அகலமும் உள்ள முன்னேறும் வாசலை ஏற்படுத்திவிட்டது. ஜெர்மானியர்கள் ரெமெஜனிலுள்ள லூடன்டார்ப் பாலத்தை பீரங்கிப் பிரயோகத்தின் மூலம் நாசம் செய்ய முயன்று வருகிறார்கள்.

ரைன் நதியின் உபநதியான அபாரைத் தாண்டிய அமெரிக்க 1-வது சேனை, அமெரிக்க 3-வது சேனையுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டுவிட்டது. அவை இரண்டும் எய்பலிலுள்ள ஜெர்மன் படைகளை வளைத்துவருகின்றன.

(4) அமெரிக்க 3-வது படை ரைன் நதியும் மோசலும் சேரும் இடத்திலுள்ள காப்ளென்ஸை நோக்கி முன்னேறுகிறது. ரூபர்னுக், விட்லிக்கை அது கைப்பற்றிவிட்டது.

**கிழக்குப் போர்முனை.—**

(1) **வடக்கில்** ரோகோஸோவ்ஸ்கியிடமுள்ள 2-வது வெண்மை ருஷ்யச் சேனை டான்சிக்கை நோக்கி முன்னேறுகிறது. ரியூகிக்-ஸ்டார்கராட், கினியூ, ப்யூடௌ, கோஸியர்ஸின், ஸ்டோல்ப், ஷ்லாவி, ரூகன்வால்டி, லாயன்பர்க், கார்டேஸி, டியங்கன்ஹாப், ந்யூடிக், டெசியூ டிர்சான் ந்யூஸ்டாட், புட்ஸ்க், லாங்கனு, போகல்ஷா, நீஸ்டெனு முதலியவற்றைக் கைப்பற்றிவிட்டது.

(2) **மத்தியில்** ஜூகோவிடமுள்ள 1-வது வெண்மை ருஷ்யச் சேனை மறுபடியும் பெர்லினை நோக்கி முன்னேறித் தாக்கிவருகிறது. அது பிராங்க்பர்ட்டில் முக்கிய நகரமான குஸ்ட்ரினைப் பிடித்தது. குஸ்ட்ரினின் பெரும்பாகம் ஓடர் நதியின் மேற்குக் கரையிலிருப்பதால் அது ஓடர் நதியைத் தாண்டியிருக்கவேண்டும்.

அது ஸ்டெட்டினுக்குத் தெற்கிலுள்ள க்ரீபன்ஹாகனையும் பிடித்திருக்கிறது.

(3) மாலினேவ்ஸ்கியிடமுள்ள இரண்டாவது யூக்ரேனிய சேனை பிராடிஸ்லாவுக்குக் கிழக்கிலுள்ள பான் ஸ்டியாவ்னிகாவை ஆக்கிரமித்தது.

(4) ஹங்கேரியப் போர்முனையில் டான்யூப் நதிக்குச் செல்ல ஜெர்மானியர் செய்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

**இதாலி.**—நேசதேசப்படைகள் மாண்டி டெல்லா குரோசி, மாண்டி டெல்லா காஸ்டெலானு, மாண்டி டெல்லா ஸ்பீ, மாண்டி கிராண்டி டி, ஆயினே, காஸ்டல் ந்யூவோ, மாண்டி ஸ்பிகோ லினே முதலியவற்றைப் பிடித்தன.

**மத்தியதரைக்கடல்.**—கிரேக்க கமாண்டுப் படைகள் சைக்ளேட்ஸிலுள்ள மிலாஸ் தீவில் இறங்கிவிட்டன.

**பஸிபிக்.—**

(1) லூஸான் தீவில் பெலேயன், காலாடாகான், ஆரிங்கெ, லெமெரி பிடிபட்டன படாங்காஸ் என்ற தலைநகரமும் விழுந்துவிட்டது.

(2) ஐவோஜிமாவில் இறுதி நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

(3) ஐவோஜிமாவுக்கு மேற்கிலுள்ள காங்கோசுவியா, காமா என்ற தீவுகளிலும், பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மிண்டானேவிலும், போகன்வில்லிக்கு வடமேற்கில் சாபோசித் தீவிலும் படைகள் இறங்கிவிட்டன.

(4) மிண்டானேத் தீவில் ஸாம்பிராங்கா நகரமும் சாங்குரு என்ற விமான தளமும் பிடிபட்டன.

**சைன.**—சீனப் படைகள் குயிச்வானை மீட்டுவிட்டு காஞ்சௌவை நோக்கி முன்னேறுகின்றன.

**பர்மா.**—மாண்டலேயைச் சுற்றியுள்ள மலேயா, ஒன்மின், கியோ, நாட்டாடா, மாண்டலேக் குன்று விழுந்துவிட்டது. மாண்டலேக்கான போர் நடந்துவருகிறது.

சீனப் படைகள் பர்மா ரஸ்தா முடியும் இடமான லாஷியோவைத் திரும்பப் பிடித்துவிட்டார்கள்.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**4—3—45** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—வான்னி இக்கல் (Wanne Fickel).

ரயில் தளங்கள், தளவாட டெப்போ, தொழிற்சாலை இலக்குகள்.—உல்ம் (Ulm).

ஓட்டியில்லா விமான இலக்குகள்.—ஹாலந்து (Holland).

பாலங்கள்.—டார்ட்மண்ட் (Dortmund), எம்ஸ் (Ems) கால்வாய்.

எண்ணெய்க் கிணறு ஸ்தாபனம்.—காமன் (Kamen).

ரயில்வே தொழிற்சாலைகள்.—ஆஸ்திரியா (Austria), ஹங்கேரி (Hungary).)

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (15 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

இரவு.—இலக்குகள்—பெர்லின் (Berlin), எஸ்ஸென் (Essen).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய இலக்குகள்.—இவோஜிமா (Iwo Jimo).

**பர்மா (Burma).**

எதிரி துருப்பு சைனியங்கள்.—மாண்டலேயிலும் (Mandalay) மாண்டலேயைச் சுற்றிலும்.

**5—3—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

ரயில்வே தளவாடங்கள், தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—செம்னிட்ஸ் (Chemnitz).

எண்ணெய் சுத்தி செய்யும் கிணறு.—ஹார்பர்க் (Harburg).

பென்ஸால் நிலயம்.—கெல்சென்கிர்ச்சன் (Gelsenkirchen).

ரஸ்தா ரயில், பாலங்கள்.—வீஸல் (Wesel).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin).

போக்குவரத்துகள்.—வடமேற்கு இதாலி, ஆஸ்திரியா (Austria), யூகோஸ்லாவியா (Yugoslavia).

இலக்குகள்.—பிரென்னர் (Brenner) கணவாய்.

**தூரக்கிழக்கு (Far East).**

டோக்கியோ (Tokyo).

**பர்மா (Burma).**

2 பாலங்கள்.—பெகு (Pegu) ஈ (Ye) ரயில்வே.

இலக்குகள்.—லாஷியோ (Lashio), மாண்டலே (Mandalay), ரஸ்தா.

இலக்குகள்.—டவுங்கூ (Toungoo), மாண்டலே (Mandalay). யின் தென்கிழக்கு.

துவியல்கள்.—மெய்க்திலா (Meiktila), வின் கிழக்கு.

**6—3—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எண்ணெய் சுத்தி செய்யும் கிணறுகள்.—ஸால்ஸ்பெர்கன் (Salzbergen).

எதிரி துருப்புகள், தளவாடங்கள், போக்குவரத்துகள்.—வீஸல் (Wesel).

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—யூகோஸ்லாவியாவிலுள்ள கிராஜ் (Graz).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin), வீஸல் (Wesel), ஸாஸ்ஸன்நிட்ஸ் (Sassenitz).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

ரயில்வேக்கள், களஞ்சியங்கள்.—ஸிட்டாங் (Sittang) நதி. (65 மைல்கள் ரெங்கூனுக்கு வடகிழக்கு).

ஜப்பானியப் போக்குவரத்து அரண்கள்.—லாஷியோ (Lashio), மெய்க்திலா (Meiktila).

**7—3—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—3 பென்ஸால் நிலயங்கள், எண்ணெய் சுத்தி செய்யும் கிணறு.—டார்ட்மண்ட் (Dortmund).

பெரிய அணை.—பீல்பெல்டு (Beelefeld).

ரயில்வே தளங்கள்.—ஸோயெஸ்ட் (Soest). செய்கன் (Siegen).

எதிரிக் கப்பல்கள்.—காட்டிகாட் (Kattegat), ஸ்வீடனுக்கும் (Sweden) டென்மார்க்கும் ஸ்காகர்ராக் (Skagerrak).

போக்குவரத்துகள் ஸப்ளை லயன்கள்.—வட இதாலி (N. Italy), ஆஸ்திரியா (Austria).

கோட்டை கட்டப்பட்ட கட்டடங்கள் பீரங்கிகள் ரஸ்தா ரயில் போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி.

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (29 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு.—பெர்லின் (Berlin).

தொழிற்சாலைகள் நிறைந்த டவுன்.—டெஸ்ஸா (Dessau).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—ஹார்பர்க் (Harburg).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—வடகிழக்கு சைனு (N. F. China).

ஜப்பானியத் தற்காப்புகள்.—மின்டானோ (Mindanao)

**பர்மா (Burma).**

களஞ்சியங்கள், ரயில்வேக்கள்.—மார்ட்டாபன் (Martaban).

3 பாலங்கள்.—பர்மா (Burma), ஸியாம் (Siam).

முக்கியமான பிரதேசம்.—கிங்கான் (Kyungon).

**8—3—45.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—பென்ஸால் நிலயங்கள் தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—கெல்சன்கிர்ச்சன் (Gelsenkirchen), டார்ட்மண்ட் (Dortmund).

ரயில்வே தளங்கள்.—பெட்ஸ்டார்ப் (Betzdorf), டில்லன்பர்க் (Dillenburg), ஸீகன் (Siegen), எஸ்ஸன் (Essen), கிஸன் (Giessen).

இலக்குகள்.—ஹங்கேரி (Hungary).

போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin).

ஸப்ரீன் தளம்.—வாஸ் (Voss).

இலக்குகள்.—ஹனோவர் (Hanover), ஹாகன் (Hagen), காஸ்ஸல் (Kassel), ப்லோம் (Blohm).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

ஜப்பானியக் குவியல்கள்.—ரங்கூன் (Rangoon).

குவியல்கள்.—புரோம் (Prome)

2 பாலங்கள்.—பெகு (Pegu), மார்ட்டாபன் (Martaban) ரயில்வே.

எதிரி சைனியங்கள்.—மாண்டலேயிலும் மாண்டலேயைச் சுற்றிலும்.

மோட்டார் போக்குவரத்துகள்.—லாஷியோ (Lashio)வுக்கு தென்மேற்கு.

2 ஜப்பானியக் கப்பல்கள்.—பர்மாவின் தென்கரை.

**9—3—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—டாங்கித் தொழிற்சாலை நிலயங்கள்.—காஸல் (Kassel).

ரயில்வே தளங்கள்.—காஸல் (Kassel), ஆஸ்னுபிரக் (Osnabruck), மன்ஸ்டர் (Munster), ரெய்ன் (Rhein), மேலுள்ள பிராங்பர்ட் (Frankfurt-on Main).

2 பென்ஸால் நிலயங்கள்.—டாட்லென் (Dattlen).

ஜெர்மன் கப்பல்கள்.—நார்வே (Norway).

போக்குவரத்துகள்.—ஹங்கேரி (Hungary) யூகோஸ்லாவியா (Yugoslavia) வட இதாலி (Italy).

இலக்குகள்.—கிராஸ் (Graz).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும். (61 எதிரி விமானங்கள் சுட்டு தள்ளபபட்டன.

இரவு.—பெர்லின் (Berlin).

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—டார்ஸ்டர்ன் (Dorsten) ஹார்டர்ன் (Haltern).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

ஸப்ளை பிரதேசங்கள்.—மாண்டலே (Mandalay)வின் தெற்கு.

குவியல்கள்.—தாஸி (Thazi) வடக்கு;

ஸப்ளைகள்.—தாஸி (Thazi).

பாலங்கள்.—ஸாபா (Hsipaw) மாண்டலே (Mandalay).

**10—3—45.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

நூர் ரெயில் தளங்கள்.—டார்ட் மாண்ட் (Dortmund, ஸோயெஸ்டு (Soest) பாடர்பான் (Paderborn).

ஓட்டியில்லா விமான பிரதேசங்கள்.—ஹாலந்து )Hollond).

எண்ணெய், ஸ்தலங்கள்.—ஸ்கோல்வின் (Scholven) ப்ரூயிர் (Brue).

எதிரி சேனைகள்.—வீஸல் (Wesel).

பாரோனு பாலங்கள்.—பிரென்னர் (Brenner) பாலங்கள்.

ரயில்வே இலக்குகள்.—வட மேற்கு யூகோஸ்லாவியா (N. W. Yugoslavia).

விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—பெர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

ஷிச்சிஜிமா (Chichi Jima) ஹாஹாஜிமா (Haha Jima).

ஜப்பானிய சைனியங்கள்.—பாலாஸ் (Palaus) யாப் (Yap.

**பர்மா (Burma).**

குவியல்கள்.—ரெங்கூன் (Rangoon).

பாலங்கள்.—தான்புயிஸாயிட் (Thanbiuzayat.)

ஸ்டோர்கள்.—ஸிபா (Hsipaw).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**5—3—45.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

இலக்குகள்.—இங்கிலாந்தின் தென் கிழக்கு கரை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**6—3—45.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலேயக் கரை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**7—3—45.** (புதன்கிழமை).
**to**
**11—3—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia) தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஸோல்ஜரின் விமர்சனம்.** பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரி ஐரோப்பிய யுத்த நிலைமையை விமர்சனம் செய்திருக்கிறார். அது பின்வருமாறு:—

"இறுதி வெற்றி நிச்சயமென்பதில் ஐயமில்லை. அது எப்பொழுது என்பதுதான் சந்தேகத்திலிருந்து வருகிறது. பெல்ஜிய பூமியில் யாதொரு ஜெர்மன் ஸோல்ஜரும் இல்லை. எதிரி ஒருபொழுதும் அங்கு வரமுடியாது.

"இந்த யுத்தத்தில் அநேக நெருக்கடிகளை நாம் அனுபவித்திருக்கிறோம். அந்தக் காலம் போய்விட்டது. நாம் சமாளித்துவிட்டோம். ஒன்றன்பின் ஒன்றாக நேசதேசத்தார்கள் எதிரிகளின் எல்லைப்புற தற்காப்புகளை அழித்துவிட்டு இப்பொழுது கிழக்கிலும் மேற்கிலும் ஜெர்மன் பூமியிலேயே போரை நடத்திவருகிறார்கள்.

"மேற்கில் நாம் ரைன் நதியைத் தாண்டிவிட்டோம். ஜெர்மனியின் தலைநகரமான நகரம் நேசதேசத் தரைப்படையும், விமானப்படையும் தாக்கும் அபாயத்துக்குட்பட்டு விட்டது.

"ஜெர்மனி கண்யமுள்ள மிலியன்கள்கணக்கான ஜனங்களுக்குத் துயரத்தை உண்டு பண்ணிற்று. அவர்கள் இப்பொழுது கொடுங்கோன்மையின் விளைவை அனுபவித்து வருகிறார்கள்".

வி வி வி வி வி

**கொடுங்கோன்மையின் விளைவு.** பீல்ட் மார்ஷல் சொன்ன வார்த்தைகள் யதார்த்தமானவை தான். உலகத்தின் துயரத்திற்கு ஜெர்மனிதான் காரணம். கொடுங்கோன்மையின் விளைவை ஜெர்மனியும் ஐரோப்பாவும் அனுபவித்துவருகிறது. ஆயிரக்கணக்காகவும் நூற்றுக்கணக்காகவும் அடிமை முகாம்களிலிருந்து ஆடவர்களும் ஸ்திரீகளும் வந்துகொண்டிருக்கிறார்கள். நேசதேசத்தார்கள் ஜெர்மனிக்குள் புகுந்துவிட்டதால் அவர்கள் சுதந்திரம் பெற்றுவிட்டார்கள். ருஷ்யர்கள், போல்கள், யூகோஸ்லாவியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், இதாலியர்கள், டச்சுக்காரர்கள், லக்ஸம்பர்க்கைச் சேர்ந்தவர்கள், பெல்ஜியர்கள் முதலியவர்கள் ஜெர்மனியில் வீடன்னியில், பிச்சை வாங்கிக்கொண்டும், திருடிக்கொண்டும், பசியுடனும், இளைத்துப்போயும் திரிகிறார்கள்.

வி வி வி வி வி

**ஜெர்மானியரின் நிலைமை.** ஜெர்மானியர்களும் சுகமாக இருக்கவில்லை. "இன்று பெர்லினில் காய்கறிகளை வாங்கவேண்டுமானால் நீ அதிருஷ்டசாலியாக இருக்கவேண்டும் என்று ஸ்விடிஷ் ரிபோர்ட்டர் சொல்லுகிறார். "சுயமான பீர் கிடைப்பதில்லை, கால்நடைகள் இளைத்துப் போய்விட்டன. மின்சாரக் குறைவினால் உஷ்ணமான ஸ்நானம் கிடைப்பதில்லை. பெர்லினிலுள்ளவர்கள் எலிகளையும் பூனைகளையும், குதிரைகளையும், மிருகக் கண்காக்ஷியிலுள்ள மற்ற மிருகங்களையும் தின்கிறார்கள். "இந்த விவரங்களில சில மிகையாக இருக்கலாம்". ஆகிலும் ஜெர்மனியில் உண்மையான கிரமம் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது.

ஜெர்மானியர்களின் மன உறுதியின் தற்போதைய நிலைமையைப்பற்றி நம்பத்தக்க தகவல் கிடைத்திருக்கிறது. ஜெர்மன் ரகசிய போலீஸ் மகத்தான முயற்சி செய்துவந்த போதிலும் பொது ஜனங்களின் மன உறுதி குலைந்துவருகிறது. ஜெர்மன் ஸோல்ஜர்கள் ஏராளமாக சரணாகதி செய்துவிடுகிறார்கள். போர்புரிய முடியாதபொழுது ஜெர்மன் ஸோல்ஜர்கள் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள். இச்சமயத்தில் ஹிட்லரும், கோயபல்ஸும் அதிர்ஷ்ட வசமாக நிலைமையில் மாறுதல் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறார்கள். தங்களுடைய படை பல சக்தியைவிட ஆத்மீக சக்திதான் தங்களுக்கு உதவக்கூடுமென்று அவர்கள் இப்பொழுது நம்புகிறார்கள்.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** ஜெனரல் ஐசன்ஹவர் அவருடைய வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டார். ரைன் நதிக்கு மேற்கிலுள்ள பாகம் பூராவும் ஜெர்மானியர் இல்லாமல் சுத்திசெய்யப்பட்டிருக்கிறது. இன்று நேசதேசப் படைகள் ரைன் நதிக்கரையில் வேசலிலிருந்து பான் வரைக்கும் ஊன்றி நிற்கிறார்கள். கொலோனும் பானும் விழுந்துவிட்டன. காப்ளென்ஸும் விழுந்துவிடும். அமெரிக்க 1-வது படை ரைன் நதியை ரெமெகனுக்கருகில் தாண்டிவிட்டது. கிழக்குக் கரையிலுள்ள அநேக இடங்களைப் பிடித்துவிட்டது. அமெரிக்க 1-வது சேனையும், 3-வது சேனையும் ஆதர் நதிக்கருகில் ஒன்று சேர்ந்துவிட்டன.

அமெரிக்க 15-வது சேனை இப்பொழுது தோன்றி அதுவும் அமெரிக்க 1-வது, 3-வது சேனைகளுடன் தொடர்பு ஏற்படுத்திவிட்டது. ரைன் நதியில் வெஸலிலுள்ள முக்கியமான பால முனையிலிருந்து ஜெர்மானியர்களைப் பின்வாங்கும்படி பிரிடிஷ், அமெரிக்கச் சேனைகள் கட்டாயப்படுத்திவிட்டன.

வி வி வி வி வி

**ருண்ட்ஸ்டெட்டின் தவறு.** இந்தப் பின்வாங்குதல் ஜெர்மனிக்குப் பெரிய பிற்போக்காகும். ரோயர் நதியை ஒரு வாரத்துக்குமுன் அமெரிக்க 1-வது, 9-வது சேனைகள் தாண்டுவதற்குமுன் ஜெர்மனியின் எதிர்ப்பு மூர்க்கத்தனமாக இருந்தது. இதேவிதமாக ரோயர் நதியிலிருந்து ரைன் நதி வரைக்கும் முன்னேறும் பொழுதும் அந்த கிரமங்கள் ஏற்படும் என்று நேசதேசத்தார்கள் எதிர்பார்த்தார்கள். ஆகிலும் இந்தப் பிரதேசம் ஒரு வார டயத்திற்குள் கடக்கப்பட்டுவிட்டது. இந்த அவக்கேடுக்கு ருண்ட்ஸ்டெட்டின் தவறான யுத்த தந்திரம்தான் காரணம் என்று தோன்றுகிறது. இருப்புக்குத் தகுந்தபடி அவன் செலவு செய்யவில்லை. பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரியின் படைகளை எதிர்த்துப் போராட படைகளை அனுப்பிவிட்டதால் ரோயர் நதிப் போரை அவன் இழந்தான். ரோயர் நதிப் போரை நடத்தியதினால் அவனுடைய பலம் அழிந்தது. அதன் பின் ரைன் நதிக்கு மேற்கில் போரை நடத்தவேண்டியதாக நிர்ப்பந்தமேற்பட்ட பொழுது அவனிடம் போதுமான படை பலமில்லை. ஆபீஸர்களும் ஸோல்ஜர்களும் குறைவுபட்டுப்போய் விமான நடவடிக்கையின் மூலம் போக்குவரத்துக்கள் அழிக்கப்பட்டதாலும் அவன் பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்ல.

இந்த நடவடிக்கைகளில் ருண்ட்ஸ்டெட்டுக்கு 60,000 மனிதர்கள் நஷ்டமேற்பட்டது. ஆகிலும் பலேப் பகுதியைப்போல இங்கு நஷ்டம் அதிகமாக இல்லை. எஞ்சிய படைகளுடன் அவன் தப்பி ஓடிவிட்டு ரைன் நதியின் கிழக்குக் கரையில் தற்காப்புகளை அமைக்க அவன் முயன்று வருகிறான்.

கொலோனின் வீழ்ச்சி ஜெர்மன் மக்கள் மன உறுதியைக் குலைத்துவிடக்கூடுமென்றாலும் அது ஜெர்மனிக்குள் பிரவேசிப்பதற்குத் தகுதியான வாசற்படியில்லை. கொலோனுக்கு எதிர்த்தாற்போலுள்ள பிரதேசம் புதர்களும் காடுகளும் உள்ள குன்று பிரதேசம். அங்கு சிறிது குறுகலான ரஸ்தாக்கள்தானிருக்கின்றன. அதை ஆர்டெனிஸுக்கு ஒப்பிடலாம்.

ரைன் நதி மேற்குப் போர் முனையிலுள்ள ஜெர்மன் தற்காப்புகளாகயிருக்கும் நதிகளில் மிகப் பெரியது. ஆகிலும் நேசதேசப் படைகள் இதுவரையில் தாண்டியிருக்கும் மற்ற நதிகளைவிட இது பிரமாதமானதல்ல. ஆகிலும் நேசதேசத்தார்கள் முன்னேறும் வாசலைப் பெருக்கிக்கொண்டு சர்ப்பராக்களைக் குவிப்பதற்காக சற்று ஓய்வெடுத்துக்கொள்ளக் கூடும்.

வி வி வி வி வி

**சற்று அயர்வுதான்.** இது யுத்த நிறுத்தமில்லை. அயர்வுதான். பிரமாதமான நடவடிக்கைகள் தொடரும். சர்ச்சில் மேற்குப் போர் முனைக்கு விஜயம் செய்து கமாண்டர்களை சந்தித்துப் பேசினார். அவர் போர் முனைக்கு விஜயம் செய்தால் மகத்தான சம்பவங்கள் நேரிடும். அமெரிக்க 15-வது சேனை தோன்றியிருக்கிறது. பிரிடிஷ் இரண்டாவது சேனையும் வந்துவிட்டது. அது இருக்குமிடம் ரகசியமாக இருக்கிறது. இறுதியாகஒரு தாக்குதலின் மூலம் எல்லாம் முடிவு பெறும்" என்று சர்ச்சில் சொல்லியிருக்கிறார். கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் ஒன்றுபட்ட சேனைகள் பலமாகத் தாக்கினால் ஐரோப்பிய யுத்தம் முடிவடையுமென்பது அதன் பொருள்.

**விமான நடவடிக்கை.** எப்பொழுதும்போல மும்மரமாக நடைபெற்று வருகிறது. கிழக்கிலும் மேற்கிலுமுள்ள விமானப் படைகள் ஜெர்மனியைப் பாழாக்க ஒன்றுபட்டுவிட்டன. ஸர் ஆர்தர் டெட்டரைக் கூட்டு கமாண்டராக நியமித்ததில் விசேஷமிருக்கிறது. ரூர் பிரதேசத்தில் 450 சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தை பிரிடிஷ் விமானப் படைகள் உருவில்லாமல் அழித்துவிட்டன. வெடிகுண்டு வீச்சுக்குட்பட்ட பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த ஆபீஸர் பின்வருமாறு சொல்லுகிறார்:—

"இந்தப் பள்ளத் தாக்கில் முக்கியத்துவமுள்ள எந்த நகரமும் முக்கியமான தொழிற்சாலைகளும் ஒன்றும் காணப்படவில்லை." ஜெர்மன் தொழிற்சாலைகளை அழிக்கும் திட்டம் கொண்ட சீப் மார்ஷல் ஸர் ஆர்தர் ஹாரிஸின் திட்டம் இப்பொழுது பயங்கரமான சக்தியாக மாறிவிட்டது. இன்று பெர்லினும் ஹாம்பர்க்கும் மிகவும் பலமாகத் தாக்கப்படுகின்றன. இந்த வாரத்தில் தொடர்ச்சியாக 18 நாளாக 1,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகள் பெர்லின்பேரில் போடப்பட்டிருக்கின்றன. அவைகள் பெரும்பாலும் 4,000 ராத்தல் எடையுள்ள பிரதேசம் திக்கிரையாகிவிட்டது. இந்த வாரத்தில் கிரப்ஸ் ஆயுத உற்பத்திசாலையுள்ள எஸ்ஸன் பேரிலும், ரூர் பிரதேசத்திலுள்ள பெரிய போக்குவரத்து நிலயமான டார்ட்மண்ட் பேரிலும் 5,000 விமானங்கள் முறையே 35,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கின்றன.

ஜெனரல் ஐசன்ஹவர் விமானப்படை சீப் மார்ஷலுக்குப் பின்கண்ட பாராட்டை அனுப்பியிருக்கிறார்.

"பாம்பர் கமாண்டைச் சேர்ந்த விமானப்படைகள் அநேக வருஷங்களாக நடத்திவரும் விமானத் தாக்குதலினுடையவும் 1942-ம் வருஷம் முதல் 8-வது விமானப் படையினுடையவும் தாக்குதலினுடையவும் உபயோகத்தின் பலனை நேசதேசப் படைகள் அடைந்துவிட்டன. ஜெர்மனியின் யுத்த முயற்சிக்கு ஏற்பட்ட நஷ்டம் மகத்தானது. விமானப் படையினர் செய்திருக்கும் தியாகங்கள் மூலம் எல்லாப் போர்முனைகளிலும் வெற்றி கிடைப்பதற்கு சௌகரியம் ஏற்பட்டிருக்கிறதென்று அவர்கள் அறியவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.** ருஷ்யப் போர்முனையில் வடக்கிலும், மத்தியிலும், தெற்கிலும் மகத்தான போர்கள் நடைபெறுகின்றன. ஹிட்லர் ஓடர் நதி முனையைப் பார்வையிட்டதாகவும் விஷயங்களை கவனித்துவரத் தலைமைக் காரியாலயத்தை பெர்லினுக்கு சமீபத்தில் அமைத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

மத்திய ஓடர் நதிப் பகுதியில் 60 மைல் நீளமுள்ள போர்முனையில் ஜுகாவ் மறுபடியும் போரைத் துவக்கிவிட்டான். கேந்திர ஸ்தானமான கஸ்ட்ரினையும் பிடித்துவிட்டான். ஸ்டெட்டினுக்காக இறுதிப் போர் மூண்டுவிட்டது.

வடக்குப் பக்கத்தில் மூன்று ருஷ்யச் சேனைகள் டான்சிக்—கிட்னியாவைக் கைப்பற்றக் குவிந்து வருகின்றன.

கோனியேவ் டிரெஸ்டினை நோக்கி முன்னேறுகிறார். மாலினோவ்ஸ்கி ஹங்கேரியில் பிராடிஸ்லாவாப் பகுதியில் பலமாகத் தாக்கி வருகிறான். பாலடின் ஏரிக்கும் புடாபெஸ்டுக்கும் மத்தியில் ஜெர்மனி மேற்கொண்ட தாக்குதல் வீணாகிவிட்டது.

வி வி வி வி வி

**பஸிபிக் பிராந்தியம்.** (1) படைகள் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மிண்டானோத் தீவில் இறங்கிவிட்டன. லூஸானிலிருந்து மிண்டானோ வரையிலுள்ள பிலிப்பைன்ஸின் மேற்குக் கடற்கரை அமெரிக்கர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டுவிட்டது.

(2) ஐவோஜிமா நடவடிக்கைகள் முடிவடையும் தருவாயை சமீபித்து விட்டன. இறுதிப்போர் குன்றுகளும், பிளவுகளும், தற்காப்புகளும் உள்ள பிரதேசத்தில் நடைபெறுகிறது.

(3) சைனாவிலுள்ள ஸ்தானங்களிலிருந்து ஜப்பானிய சாம்ராஜ்யம் இறுதியில் தாக்கப்படலாமென்று கடற்தளபதி நிமிட்ஸ் சொல்லியிருக்கிறார்.

(4) பிரிடிஷ் பஸிபிக் கடற்படை போரைத் துவக்கத் தயாராக இருக்கிறது. அதன் வேகத்தையும் அதன் சக்தியையும்பற்றி ஜனங்கள் வீணாக வாதம் செய்து வருகிறார்கள். இந்தக் கடற்படையில் யுத்தக் கப்பல்களான க்வீன் எலிஸபத்தும், வாலியண்டும், ரெச்லியூ என்ற பிரெஞ்சு யுத்தக்கப்பலும், டிராம்ப் என்ற டச்சுக் கப்பலும் மற்று அநேக சஞ்சாரிகளும், நாசகாரிகளும், விமானந் தாங்கிக் கப்பல்களுமிருக்கின்றனவென்று கடற்படை இலாகா முதல் புரபுவான மிஸ்டர் A. V. அலெக்ஸாண்டர் வெளியிட்டிருக்கிறார்.

(5) ஜப்பானில் நேசதேசப் படைகள் படையெடுத்து விடுமென்று எதிர்பார்க்க வேண்டியதுதான் என்று ஜப்பானிய பிரதம மந்திரி காயிஸோ ஜப்பானியர்களுக்கு எச்சரித்திருக்கிறான். நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறதென்று அவன் சொல்லிவிட்டான்.

(6) ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் கண்டிப்பாய் மூளுமென்று அமெரிக்க ஜனப்பிரதிநிதி சபைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் சண்டை மூண்டால் என்று சொல்லவேண்டியதில்லை. அது எப்பொழுது என்பதுதான் தீராத பிரச்னை. இரண்டு நாடுகளுக்குமிடையே உள்ள வித்தியாசங்கள் பலாத்காரத்தைத் தவிர மற்ற வகைகளில் தீர்த்துக்கொள்ளக்கூடியவையல்ல.

வி வி வி வி வி

**பிரெஞ்சு இந்தோ சைனா.** நேசதேசப்படைகள் பிரெஞ்சு இந்தோசைனாவில் இறங்கிவிடும் என்ற பீதியின்பேரில் ஜப்பானியர்கள் அந்த நாட்டின் நிர்வாகத்தை ஜப்பான் எடுத்துக்கொண்டுவிட்டது. விஷியின் அதிகாரம் இன்னும் இருந்துவருகிறதென்ற கட்டுக்கதை இத்துடன் மறைந்தது. இந்தோ சைனா நிர்வாகம் சைனாவுடனும் அமெரிக்காவுடனும் சதிசெய்துவருகிறதென்றும் ஜப்பானியக் கப்பல்களைத் தாக்கி வருகிறதென்றும் நேசதேசத் தாக்குதல்களுக்கு உதவியளித்துவருகிறதென்றும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இந்தோ சைனாவிலுள்ள ராணுவமும், போலீஸும் நிராயுதபாணிகளாகச் செய்யப்பட்டுவிட்டன. அவர்களுக்கும் ஜப்பானிய ராணுவப்படைக்கும் பகிரங்கமாக சச்சரவுகள் ஏற்பட்டிருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி

**அன்னம் ராஜ்யம்.** இந்தோ சைனாவிலுள்ள அன்னம் ராஜ்யம் சுதந்திர முரசு அடித்துவிட்டு கிழக்கு ஆசியா திட்டத்தில் சேர்ந்து ஜப்பானுடன் ஒத்துழைக்க முற்பட்டுவிட்டது. அதை ஜப்பான் வசப்படுத்திவிட்டதென்று தான் சொல்லவேண்டும்.

வி வி வி வி வி

**பர்மா—மாண்டலேக்கான போர்.** மிக்டிலா விமான தளத்தைப் பிடித்தும், மாண்டலேக்கருகிலுள்ள அநேக கிராமங்களையும் நகரங்களையும் கைப்பற்றியதும் ஐராவதியைத் தாண்டி அநேக முன்னேறும் வாசல்களை ஏற்படுத்தியதும் கடைசியாகப் பலனை அளித்துவிட்டன. ஜெனரல் ரீஸ்டமுள்ள 19-வது இந்திய டிவிஷன் சிங்குபால முனையிலிருந்து மாண்டலேக்குள் நுழைந்துவிட்டது. நகரத்தின் பாதிபாகம் நேசதேசவசமாகிவிட்டது. அதில் மாண்டலேக் குன்றும் சேர்ந்தது. ஜப்பானியர்கள் இப்பொழுது சரணாகதி செய்யவேண்டும் அல்லது ஷான் ஸமஸ்தானங்களுக்குள் பின்வாங்கி ஓடவேண்டும். மாண்டலே விழுந்துவிட்டால் வடக்கு பர்மா பூராவும் வீழ்ச்சிபெறும். வட கிழக்குப் போர்முனையில் ஷான் ஸமஸ்தானத்தில் ஜெனரல் சுல்தானின் துருப்புகள் பர்மா ரஸ்தாவின் முடிவு இடமான லாஷியோவைக் கைப்பற்றிவிட்டன.

வி வி வி வி வி

**பிரிடிஷ் யுத்த மந்திரியின் யுத்த விமர்சனம்.** பிரிடிஷ் யுத்த மந்திரியான ஸர் ஜேம்ஸ் கிரிக் யுத்த சம்பந்தமான வரவு செலவு திட்டத்தை காமன்ஸ் சபையில் சமர்ப்பித்தபொழுது ஜெர்மனியுடன் யுத்தத்தை நடத்துவதுபோல ஜப்பானுடனும் பிரிடிஷ் நிர்வாகம் மும்மரமாகப் போரை நடத்தவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. ஐரோப்பிய யுத்தத்தை முடித்தபின் இங்கிலாந்து சும்மாயிருந்துவிடுமென்று சில சந்தேகங்கள் சொல்லுவதற்கு இது பதிலாகும். மற்ற எந்த வல்லரசைப்போலும் தூரக்கிழக்கில் பிரிடனுக்கு அபாரமான அக்கரை இருக்கிறதென்றும் நேசதேசத்தார்களுக்கு பிரிடன் செலுத்தவேண்டிய செய்நன்றியை அது மறந்துவிடவில்லையென்றும் அவர்கள் மறந்துவிட்டார்கள்.

ஜெர்மன் பலத்தைவிட பிரிடிஷ் பலம் உயர்வானதென்று அவர் சுட்டிக் காட்டினார். பிரிடிஷாரின் பலத்துக்கு சமமான பலத்தை ருண்ட்ஸ்டெட் பெற்றிருந்தால் டிஸம்பர் 16-ம் தேதியன்று அவன் ஆர்டனிஸில் தாக்கியபொழுது 36-மணி நேரத்திற்குள் பிரஸ்ஸல்ஸை அடைந்து நேசதேசக்காரரை சங்கடமான நிலைமைக்குட்படுத்தியிருப்பான். நமது 21-வது படைக்கு ஜெர்மன் கவசங்கள் இருந்திருந்தால் ஆகஸ்டு 2[illegible] தேதியன்று அது [illegible] தாண்டியிருக்கும். ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று பிரஸ்ஸல்ஸை அடைந்திருக்கும். ஸெப்டம்பர் 4-ம் தேதியன்று ஆண்ட்வெர்ப்புக்குச் சென்றிருக்கும். [illegible] பாஸ்டகேல பிராந்தியத்தைத் துணித்திருக்கும். தற்பொழுதுள்ள சார்ச்சில், க்ராம்வெல் டாங்குகளைவிட புதிய, சிறந்த டாங்குகள் கட்டப்படுகின்றனவென்றும் அவர் சொன்னார்.

ஐரோப்பாவில் விடுதலை பெற்ற விடுதலை பெறப் போகும் [illegible] களின் கதியைப்பற்றியும் அவர் சில விஷயங்களை வெளியிட்டார். பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்திலுள்ளவர்களுக்கு மட்டும் 30,10[illegible] டன்கள் [illegible] உணவு [illegible]

அனுப்பப்பட்டிருக்கின்றனவென்றும் தினசரி 7,000 டன்கள் கொடுக்கப்படுகின்றனவென்றும் சொல்லப்படுகிறது. பிப்ரவரி மத்யகாலம் வரையில் 2,00,000 டன்கள் கிரீஸுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றனவென்றும் இதாலிக்கு டிசம்பர் மாதம் முடிய 1 மிலியன் டன்கள் அனுப்பப் பட்டிருக்கின்றனவென்றும் சொன்னார். உணவுப் பொருள்களுக்காக நேசதேசத்தாரின் உதவியை எதிர்பார்த்து மிலியன் கணக்கான அகதிகள் இருந்து வருகிறார்களென்றும் அவர் உரைத்தார்.

வீ வீ வீ வீ வீ

**பாராட்டுகள்.** இந்த வாரத்தில் இந்திய ஸோல்ஜரின் போர் வீரத்தைப் பற்றி அநேக புகழுரைகள் வெளிவந்திருக்கின்றன.—

1. 15-வது சேனையின் தலைவரான ஜெனரல் கிளார்க் 4-வது, 8-வது, 10-வது இந்திய டிவிஷன்களின் அரிய செய்கைகள் குறிப்பிடத்தக்கவை. அவர்கள் தற்காப்புக்கு சௌகரிய மளிக்கும் கரடுமுரடான பூபிரதேச அமைப்புள்ள இடத்தில் முரட்டு ஸ்வாபவமுள்ள எதிரியுடன் கோரமாக போர்களை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்கள். இந்தத் துருப்புகளின் முன்னேற்றத்தை எந்த இடையூறும் வெகுகாலம் தாமதப்படுத்த முடியாது. அல்லது எந்தத் தடங்கலும் அவர்களின் மன உறுதியையும் போர் சக்தியையும் குறைத்து விடவில்லை.

2. ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டு—இந்தியர்களுக்கு அமெரிக்க பிரஜா உரிமையை வழங்க வேண்டுமென்ற பிரதிநிதிகளின் சபைத் தலைவருக்கு, அவர் சிபார்சு செய்யும் முறையில் பின்வருமாறு சொன்னார்.

"இந்தச் சட்டத்தை இயற்றுவது முக்யமானது, விரும்பத்தக்கது. இதை நிறைவேற்றினால் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கும் சாச்வதமான சமாதானத்தை நிறுவுவதற்கும் அதிக உதவி கிடைக்கும்.

"அச்சுநாடுகளுடன் நடத்திவரும் போரில் இந்தியா எவ்விதமான சேவை செய்திருக்கிறதென்பதை இந்தக் கமிட்டி நன்கு அறியுமென்று நினைக்கிறேன். தன்னிச்சையாக முன்வந்தவர்களைக்கொண்டு திரட்டப்பட்ட இந்திய சேனை ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும், சாதுர்யத்துடனும், தீரத்துடனும் போர்புரிந்திருக்கிறது. யுத்தத்தை நடத்துவதற்குரிய முக்கியமான இயற்கைப்பொருள்கள், ஆக்கப்பட்ட பொருள்கள் முதலியவற்றின் பெரும்பாகத்தையும் இந்தியா கொடுத்து வந்தது. இனிமேலும் கொடுத்து வரும்".

"இப்பொழுது இருந்து வரும் சட்ட திட்டங்கள் கிழக்கு இந்திய ஜனங்கள் சம்பந்தமாக வித்யாசம் பாராட்டுகிறது, மனக்கசப்பை உண்டுபண்ணுகிறது, அதனால் இப்பொழுது ஒரு பயனும் ஏற்படவில்லை. நம் இருதேச மக்களுடைய கண்யத்துக்கும் அது பொருத்தமில்லாதது".

---

## "ரைன் நதியில் காவல்".

### புராணப்புகழும் விசித்ர சரித்திரமும் உள்ள நதி.

(டெயிலி டெலிகிராப்.)

1840-ம் வருஷம் ஆரம்பத்தில் மாக்ஸ் ஷ்னெக்கன்பர்கர் என்ற ரைன் நதியைச் சேர்ந்தவர் தேசாபிமான ஆர்வத்துடன் சில வார்த்தைகளை எழுதினார். அவருடைய தாய் நாட்டின் அடையாளமாக அந்த வார்த்தைகள் இன்றும் இருந்து வருகின்றன. அவை பின்வருமாறு.

ரைன் நதியிலுள்ள காவல் உறுதியாகவும் நேர்மையாகவுமிருந்து வருகிறது.

இரண்டாவது பாட்டு பின்வருமாறு.

எதிரிகளை எதிர்த்துப் போராட இங்கு ஒருலக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள் அவர்களின் கவனமுள்ள கண்கள் மின்னல் போல் பிரகாசிக்கின்றன. அங்கு முன்னேறிவரும் எந்த எதிரியும் உயிர் துறந்து விடுவான்

1944-ம் வருஷம் ஆரம்பத்தில் ஜெர்மன் ஸோல்ஜர்களுக்கு "ரைன் நதியில் காவல்" என்ற ஒரு புதிய துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டது. சிவப்புத் துணியும் மத்யகால ஸோல்ஜரைப் போல கவசம் உள்ள ஆடையும் அணிந்திருக்க ஒரு ஜெர்மன் வீரரின் படத்திற்கு மேல் "ரைன் நதியில் காவல்" என்ற எழுத்துக்கள் கம்பீரமாக அச்சடிக்கப்பட்டிருந்தன. அந்த ஸோல்ஜர் கையில் ஒரு உரைவாள் பிடிக்கப்பட்டிருந்தது. அவனுக்குப்பின் ரைன் நதியும் மாதிரி ஜெர்மன் கோட்டையும் காணப்பட்டன.

ரைனலாந்துதான் ஜெர்மனியின் சரித்திரத்துக்கும் புராணக்கதைக்கும் மூலாதாரமானது. பொது ஜனங்கள் சந்தோஷத்துடன் ஞாபகப்படுத்திக் கொள்ளும் எந்த விஷயமும் ரைன்லாந்திலிருந்து தோன்றியதுவதான. பலமான வெடிகுண்டு வீச்சுக்குப் பின்னும் ரைன்



லாந்து தான் ஜெர்மனிக்குத் தேவையான இரும்பு, எஃகின் பாதி பாகத்தை ஸப்ளை செய்து வருகிறது.

ரைன் நதியை நோக்கியிருக்கும் பிஸ்மார்க்கின் பயங்கரமான சிலையுள்ள கொலோன் எந்த நேரத்திலும் வீழ்ச்சி பெறும். 1870-ம் வருஷத்தில் பிரான்ஸிடமிருந்து ஆல்ஸாஸையும் லோரேனையும் கைப்பற்றி விட்டு ரைன் நதிப்பிரதேசத்தை ஜெர்மன் மயமாக பிஸ்மார்க் செய்து விட்டான். அதற்குமுன் 1806-ம் வருஷத்தில் சிறியதும், பெரியதுமான 100 ஜில் லாக்களை ஒன்று படுத்தி ரைன் நதி சமஷ்டியை ஏற்பாடு செய்த நெபோலியன் தான் ஜெர் மனியின் ஒற்றுமைக்கு அடி கோலினான்.

1850-ம் வருஷத்திற்குப்பின் தொழிற்சாலை சம்பந்தமான புரட்சியினால் ரைன்லாந்தின் அமைப்பு மாறிவிட்டது. 20 வருஷங்களுக்குள் எரிப்ஸன் என்ற கிராமம் கிரிப்ஸ் தொழிற் சாலையுள்ள பெரிய நகரமாகி விட்டது. கோலோனில் 24 மைல்கள் நீளமும் 3 மைல்கள் அகலமும் உள்ள லிக்னைட் என்ற உலோகம் கிடைத்தது. ஹிட்லர் ரெக்ஸாடோயாக்னன் என்பதைக் கட்டினான். லூதர், பீதோவன், ஹேகல், ஷூமான் முதலியவர்களின் விடுதி கள் சுற்றுப் பிரயாணிகளுக்கு விடுதிகளாக இருந்தது போக இப்பொழுது வேறு விதமான அபிவிருத்திகளுக்கு உபயோகப்பட்டன.

ரைன் நதி ஓரமாக 850 மைல்கள் தூரத்திற்கு வரிசையாக இலக்கமிட்டு, புராணங்கள் எழுதப்பட்டிருந்த கோட்டைகளின் சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றன. ஆகிலும் சிறுவை யுத்தத்திலீடுபட்ட வீரர்களும் அல்லது அவர்களுக்காக வேதனைப்பட்டு உயிர் துறந்தவர்களுமான பெண்மணிகளும் வசித்த கோட்டைகளையும் ஹிட்லர் கவனிக்கவில்லை. அவன் கொலோனில் வசிக்காமல் 360 மைல்கள் தாண்டியுள்ள பெர்கஸ்காடனில் வசித்து வருகிறான்,

436 வருஷத்தில் ஹூணர்கள் பர்கண்டியன் ராஜ்யத்தை முறியடித்ததை அடிப்படையாகக் கொண்டு கிருஸ்துக்குபின் 1,100 முதல் 1,200 வருஷங்களுக்குள் வரையப்பட்ட பிராசீனமான ஜெர்மன் புராணக்கதைகளில் ஒன்றான நிபலஸன் பின்வருமாறு, ஒரு மேற் கோளுடன் முடிவடைகிறது. "அப்பொழுதே அவர்கள் வாழ்வினையின் அனுபவம் சித்தமான தென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்." ஒவ்வொரு சந்தோஷமும் துக்கத்தில்தான் எப்பொழுதும் முடியும் என்று அதில் எழுதப்பட்டிருக்கிறது.

---

## நாஸிகளின் ஆக்ஷிக்குட்பட்ட டான்சிக்.

### டான்சிக்கின் மாஜி பத்திரிகாசிரியரான ஜான் கிட்லின்.

ரோகோஸோவ்ஸ்கியின் படைகள் பால்டிக்கடலை நோக்கி முன்னேறுவதினால் மறுபடியும் காடான்ஸ் என்று போலந்து மக்கள் அழைத்த டான்சிக் என்னும் சுதந்திரமுள்ள நகரம் போரில் சிக்கிவிட்டது.

1939-ம் வருஷம் ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று டான்சிக் துறைமுகத்திற்குத் திறவு கோல் போன்ற வெஸ்டர் பிளேட் என்னுமிடத்தை 280 போலிஷ் ஸோலஜர்களும் அவர்களின் மேஜரும் ஜெர்மன் எதிர்ப்புக்கு எதிரே தற்காப்புச் செய்ததற்கும் 1915-ம் வருஷம் மார்ச்சு மாதத்திய நிலைமைக்கும் எவ்வளவு வித்யாசம் பாருங்கள்.

பயிற்சிக் கப்பல் என்று ஜெர்மானியர்கள் புகழ் சொல்லிய ஜெர்மன் சஞ்சாரியான ஷ்லிஸ்விக் ஹோல்ஸ்டீன் ஆகஸ்டு 28-ம் தேதியன்று டான்சிக் துறைமுகத்திற்குள் சிநேக பாவத்துடன் நுழைந்தது. இந்தக் கப்பல்தான் வெஸ்டர் பிளேட் பேரில் பீரங்கிப்பிரயோகம் செய்தது.

18 நாள்கள் வரையில் போலிஷ் படைகள் ஜெர்மன் பீரங்கிப் பிரயோகத்தையும் ஜெர்மன் விமானப்படையின் வெடிகுண்டு வீச்சையும் சமாளித்து நின்றார்கள். 18-வது நாள் பிற்பகல் 3-மணிக்கு எஞ்சியிருந்த 78 பேர்கள் வெஸ்டர் பிளேட்டிலிருந்து வெள்ளைக்கொடியுடன் வெளியே வந்தார்கள். அவர்களிடம் வெடிமருந்து அற்றுப்போய்விட்டது.

இவ்விதமாக டான்சிக்கும் அதன் துறைமுகமும் ஜெர்மனி வசமாகின. மகாண கவர்னரான பார்ஸ்டருக்கும் டான்சிக் ஸெனட்டின் தலைவருக்கும், கிரேயிஸருக்கும், டான்சிக்கிலுள்ள நாஸிகளுக்கும் ஹிட்லர் செய்த வாக்குறுதியை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டது. ஜூலை மாதத்தில் ஹிட்லர் கிழக்குப் பிரஷ்யாவுக்கு விஜயம் செய்தபொழுது டான்சிக்கை அவர்களுக்குத் திரும்பி வழங்கிவிடுவதாக வாக்குறுதி செய்தாரல்லவா?

உலகத்தாரும் டான்சிக் வாசிகளும் ஹிட்லருடையவும் அவருடைய நாஸிக் கக்ஷியினுடையவும் வார்த்தைகளை மதிக்காமல் ஹிட்லரின் பேச்சைக்கண்டு பரிகாசம் செய்தார்கள். டான்சிக் ஜனங்கள் இயற்கையாக அமைதியும், நிச்சய புத்தியுமுள்ளவர்கள். அவர்கள் வியாபாரிகள். அவர்களுக்கு கப்பல்களும் வியாபாரமும்தான் தெரியும். பிரச்னைகளைத் தீர்க்க அவர்கள் பலாத்காரத்தை உபயோகித்தவர்களல்ல.

1934-ம் வருஷத்தில் ஹிட்லரின் அபாயத்தை அவர்கள் அறியத் தொடங்கினார்கள். அந்த நகரத்திலேயே உலகத்தை திடுக்கிடக்கூடிய நடவடிக்கைகள் நடைபெறுவதை அவர்கள் அப்பொழுதே கண்டார்கள். அவர்கள் திடீரென்று தாக்கப்பட்டதற்கு அவர்கள் ஜவாப்தாரிகளல்ல.

1934-ம் வருஷத்தில் டான்சிக்கில் புதிய யுகம் ஆரம்பமாகிற்று. ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தவுடன் டான்சிக்கிலுள்ள நாஸிகளுக்கு தைரியமுண்டாகிற்று. அவர்களின் பகிரங்கமான நடவடிக்கைகள் சட்ட சம்பந்தமுள்ளவையாக ஆகிவிட்டன. அவர்கள் அநேக கக்ஷி ஆபீஸ்களையும் கிளை ஸ்தாபனங்களையும் அமைத்தார்கள். யூதர்களை தூஷிக்கும் டை ஸ்டார்மர், நாஸிகள் வெளியிடும் வோக்ஷர் பியோபாக்டர் என்ற பத்திரிகைகளும் மற்ற பத்திரிகைகளும் நகரில பத்திரிகை நிலயங்களை அமைத்தன. தெருக்கள் பூராவிலும் செஞ்சட்டையினரும், கருஞ் சட்டையினரும் நடமாடினார்கள். வீடுகளின் பேரில் ஜெர்மன் த்வஜங்கள் ஏற்றிவைக்கப்பட்டன.

"இன்று ஜெர்மனி நம்முடையது, வருங்காலத்தில் உலகம் பூராவும் நமது வசமாகிவிடும்" என்று பாடிக்கொண்டே சங்கீதத்துடனும், சுளுந்துகளுடனும் நாஸி கோஷ்டிகள் பகலிலும் இரவிலும் ஊர்வலம் சென்றார்கள்.

அதன்பின் பொதுமக்களை நாஸிக்கக்ஷியில் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்யப்பட்டது. முதலில வாலிபர்கள் வந்தார்கள். ஜெர்மன் யுவர்களைப்போல அவர்களும் நாஸிகளாக இருந்தால் சுதந்திரத்துடன் தண்டனையன்னியில் பிறரை சுட்டுக்கொல்லலாமென்று அறிந்து மதிமயங்கிக் கிடந்தார்கள். அதன்பின் யூதர்களை வதைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

ராஜீயத் துறையிலும் நாஸிகள் புரக்ஷி செய்ய ஆரம்பித்தார்கள். ஸெனட் சபைக்கு நடைபெற்ற தேருதலில் டான்சிக் வாசிகள் நாஸி பிரதிநிதிகளே வரவேண்டுமென்று விரும்பினார்கள். உத்தியோகமுறையில் நிலைபெற்றிருந்தாலும் பொதுஜன சேவைக் கக்ஷியும் அதன் பத்திரிகைகளும் அடக்கியாளப்பட்டன. கடைசியாக இருந்த இரண்டு போலிஷ் பிரதிநிதிகளும் ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அங்கு அவர்களின் உருவே காணப்படவில்லை.

நாஸிகளுக்குத் துணிவு அதிகரித்தது. அவர்கள் போலிஷ் போஸ்ட் ஆபீஸ் வேலைக்காரர்களைக் கைது செய்தார்கள். போலிஷ் பள்ளிக்கூடங்களுக்குக் குழந்தைகளை அனுப்பிய போலிஷ் ஜனங்கள் துன்புறுத்தப்பட்டார்கள். ஸ்வஸ்திகாக் கொடிகளை வீடுகளின்பேரில் ஏற்றிவைக்க மறுத்தவர்களைக் கைது செய்தார்கள். கடைகளிலும், சினிமாக்களிலும், பொதுஜன விடுதிகளிலும் "யூதர்கள் வரக்கூடாது" என்ற விளம்பரங்கள் காணப்பட்டன. யுத்தம் துவக்கும் வரையில் நாஸிகளின் நடவடிக்கைகள் வரவர மூர்க்கத்தனமாக அதிகரித்து வந்தன.

ஆனால் டான்சிக் வாசிகள் ஒருபொழுதும் நாஸி மயமாகவில்லை. கோயபல்ஸ் அந்த ஊருக்கு அநேகம் தடவை வந்து பிரசங்கம் செய்தபோதிலும் அவர்கள் அந்தக் கட்டடத்திற்குச் செல்லவில்லை.

1938-ம் வருஷம் ஜூன் மாதத்தில் நகரின் முக்கியத் தெருவான லாங்க்ஸ்ட்ராஸியில் ஒரு முக்கியமான சம்பவம் நடைபெற்றது. யூதர்களைக் கொலை செய்வது நடைபெற்றது. அப்பொழுது ஆரவாரம் ஏற்பட்டது. "இது இழிவான நடத்தை" என்று நாஸிகள்முன் டான்சிக் வாசிகள் கோஷித்தனர்.

இந்த வெளிப்படையான நாஸி நடவடிக்கைகளுடன் கிழக்கு பிரஷ்யாவிலிருந்த அநேக நாஸிகள் சுற்றுப் பிரயாணிகள் என்ற வியாஜயத்துடன் டான்சிக்குக்குள் குடியேறினார்கள். வேலைக்காரர்கள் என்ற வியாஜத்துடன் டான்சிக்கிலுள்ள நாஸிகள் கிழக்கு பிரஷ்யாவுக்குச் சென்று அங்கு கடுமையான ராணுவப் பயிற்சி பெற்றுவந்தார்கள்.

இன்று செம்படை முன்னேறி வருகிறது. டான்சிக் ஜெர்மன் ஆதிக்கத்திலிருந்து மீட்கப்பட்டுவிடும்.

---

## நேசதேசக் கக்ஷியில் 2 லக்ஷத்துக்கு மேற்பட்ட போலிஷ் மக்கள் போர் புரிகிறார்கள்.

(டெயிலி ஹெரால்ட்).

பிப்ரவரி மாதம் 27-ம் தேதியன்று மிஸ்டர் சர்ச்சில் ஆற்றிய சொற்பொழிவில் ஒரு முக்கியமான அம்சம் யாதெனில், நேசதேசத்தார் கக்ஷியில் போர் புரியும் போலிஷ் படையைச் சேர்ந்தவர்கள், அவர்கள் இஷ்டப்பட்டால் பிரிடிஷ் பிரஜைகளாக இருக்க அனுமதி அளிக்கப்படவேண்டுமென்பதுதான்,



சமாராக இதாலியில் 80,000 போலிஷ் துருப்புகளும், மேற்குப் போர்முனையில் 15,000 போலிஷ் துருப்புகளும், மத்திய கிழக்கில் 50,000 துருப்புகளும் பிரிடனில் 30,000 பேர்களும, விமானப் படையில் 12.000 போலிஷ் ஜனங்களும் இருந்துவருகிறார்கள். போலிஷ் கடற்படையில் 3,500 பேர்களும் சாமான் கப்பல்களில் 6,000 அல்லது 7,000 ஆட்களும் இருந்து வருகிறார்கள். மேலும் பிரிடனில் ஏறக்குறைய 15,000 போலிஷ் பொது ஜனங்களும் பிரான்ஸில் 10,000 போலிஷ் வாலண்டியர்களும் படைகளில் சேர்ந்து கொள்ளத்தயாராக இருக்கிறார்கள். கடைசியில் சொல்லப்பட்ட இருதரப்பாருக்கும் பிரிடிஷ் பிரஜைகளின் உரிமை அனுபவிக்குமாவென்பதை மிஸ்டர் சர்ச்சில் விளக்கிச் சொல்லவில்லை.

---

## பிரிடனும் ஆருவது வருஷ யுத்தமும்.

(நியூ ரிபப்ளிக் என்னும் பத்திரிகையில் மிஸ்டர் ஜார்ஜ் சௌல்).

பிரிடனுக்கு சமீபகாலத்தில் சென்றிராத எவரும் அமெரிக்காவுக்கும் பிரிடனுக்கும் இடையிலுள்ள தூரத்தையும் அல்லது போக்குவரத்து மார்க்கங்களிலுள்ள சிரமங்களையும் எந்த அமெரிக்கரும் மதித்துவிட முடியாது. அமெரிக்காவைவிட பிரிடன் 3,000 மைல்கள் யுத்த அரங்கத்துக்கு சமீபத்திலிருக்கிறதென்று சொல்லுவதென்றால் அது பூகோள சம்பந்தமானது மட்டுமில்லாமல் ஜனசமூக சம்பந்தமான உண்மையையும் வெளியிட்டதாகும். யுத்த அரங்கத்திலிருப்பதென்பது யுத்தத்தைப்பற்றி வாசிப்பதோ அல்லது ரேடியோவில் அதைப் பற்றிக் கேட்பதோ போன்றதல்ல.

பிரிடிஷ் மக்களின் நான்கில் ஒரு பங்குள்ள லண்டன் ஒரு யுத்த அரங்கம். தெற்கு இங்கிலாந்திலுள்ள மற்ற நகரங்களையும் சேர்த்துக்கொண்டால் பொது ஜனங்களின் பாதி பாகம் வெடிகுண்டு வீச்சு சிரமத்தை அனுபவிக்கிறதென்று சொல்லவேண்டும். முன்னிருந்ததுபோல நிலமை அவ்வளவு கெடுதலாக இல்லை. ஆனாலும் தெற்கு இங்கிலாந்திலுள்ளவர்கள் இப்பொழுதும் தினசரி கட்டடங்கள் ஆடுவதையும், பலகணிகள் அசைவதையும், அனுபவித்து அதன்பின் V வெடிகுண்டுகள் வெடிப்பதையும் கேட்கிறார்கள்.

பிரிடிஷார்கள் அவைகளை இலக்ஷியம் செய்யாமலேயே தங்களுடைய அலுவல்களைக் கவனித்து வருகிறார்கள். மின்னல் வெடிவிமானத் தாக்குதல்களை நாங்கள் மறந்துவிட்டோமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகிலும் அவர்களிடையே அதன் சின்னங்கள் காணப்படுகின்றன. வாழ்க்கை முறையைப்பற்றி அனுதாபப்படக்கூடிய சில அம்சங்களை நாம் காணக்கூடும். அதிக பிரயாசையும் தொந்திரவும் என்னவென்பதை அமெரிக்கர்கள் குறைவாகத்தான் அறிகிறார்கள். ஆரம்பத்தில் அபரிமிதமாக இல்லாத ஒரு பொருளாதார நிலமையில பிரிடன் பூர்ணமாக யுத்த முயற்சியில் ஈடுபட்டு ஜனங்களின் தினசரி வாழ்க்கையில் உள்ள போகங்களை எல்லாம் குறைத்துக்கொண்டதென்பதை அனுபவித்தாலொழிய நன்கு ஒருவரும் மதிக்கமுடியாது.

வருங்காலத்தில் எவ்விதமான சிரமங்கள் ஏற்பட்டாலும் பிரிடிஷ் மக்கள் பழமையான ஊக்கத்துடன் அவைகளை சமாளிக்க உறுதிகொண்டிருக்கிறார்களென்று எனக்குப் புலப்பட்டது.

பிரிடனும், அமெரிக்காவும் பிரிந்து செல்லக்கூடுமென்ற அபாயம் பொருளாதார நடவடிக்கையில்தான் மகத்தானதாக இருந்தது. ஆகிலும் அவரவர்கள் தங்களுடைய பிரச்னைகளைத் தீர்த்துவிடலாமென்று உறுதியுடனிருக்கிறார்களென்று தெரியவருகிறது. ஆகிலும் உலகப் பொருளாதார அமைப்பில் தங்களைவிட பிரிடன் மிகவும் முக்கியத்வமுள்ளதென்பதை பிரிடன் நன்கு அறிந்திருக்கிறது. நமது சரித்திரத்தையும் நமது ராஜீய ஸ்தாபனங்களையும் அறிந்த அவர்கள் நாம் திட்டங்களைக் கெடுத்துவிடமாட்டோமென்று அதிக நம்பிக்கை கொள்ளவில்லை.

---

## தொழிலாளர்கள் பூர்த்திசெய்து விடுகிறார்கள்.

### பிரிடனின் யுத்தகால வாழ்க்கை.

யுத்தத்தின் காரணமாக பிரிடனின் தொழிலாளர்களின் நிலமையில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

லண்டனில் பாங்கியில் தலைமை ஆபீஸிலிருந்த ஒரு உத்தியோகஸ்தர் காட்டுப்புறத்துக்குச் சென்றுவிட்டார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவருக்கு வயது 55. அவர் கட்டாய சேவைக்கு வயது முதிர்ந்தவர். அவருக்குக் கலியாணம்ஆகி இரண்டு குழந்தைகள் உள்ளன. 20-வயதுள்ள பையன் மெடிகல் பள்ளிக்கூடத்தில் மாணவன். மெடிகல், விஞ்ஞான சாஸ்திரம், இஞ்ஜினியரிங்கைச் சேர்ந்த 23,000 மாணவர்கள் கட்டாயமுறையில் சேவைக்குச் சேர்க்கப்படுவதில்லை. அதுபோல் மாணவர்களும் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. பரீக்ஷை பாஸ் பண்ணினபின் அவர்கள் சேவைக்கு முன்வரவேண்டும். மெடிகல் பள்ளிக்கூடத்திலுள்ள

அவருடைய பையனின் படிப்பு பறக்கும் வெடிகுண்டு தாக்குதலினால் சிரம சாத்யமாகி விட்டது. போக்குவரத்து மார்க்கங்கள் துணிக்கப்படுகின்றன. உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. 23-வயதுள்ள அவருடைய மகன் ஸ்திரீகளின் தரைப்படையில் சேர்ந்துகொள்ள ஒரு நல்ல உத்தியோகத்திலிருந்து விலகிக்கொண்டாள். இலவசச் சாப்பாட்டுடனும் வாசஸ்தலத்துடனும் அதம பக்ஷமாக வாரத்திற்கு 22 ஷில்லிங் 6 பென்ஸ் சம்பளத்தில் அவர் வாழ்க்கையை நடத்திவரவேண்டும். அவருடைய சம்சாரம் ஸ்திரீகள் வாலண்டரி சேவைப் படையிலும் பிரதேச ஸ்திரீகள் ஸ்தாபன கமிட்டியிலும் சதாகாலமும் வேலைசெய்து வருகிறாள்.

நாளைக்கு 12-மணி நேரம்.

சமாதான காலத்தைவிட இந்த நாளில் அவர் தினசரி 12-மணி நேரம் வரையில் வேலை செய்துவருகிறார். அவருடன் வேலை செய்தவர்கள் 55 சத விகிதம் குறைக்கப்பட்டு விட்டார்கள். அவர்களுக்குப் பதிலாக 11 சத விகிதம் ஸ்திரீகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பத்திரத்தை உத்தேசித்தும் வியாபாரத்தைத் தொடர்ச்சியாக நடத்துவதை உத்தேசித்தும் அவருடைய பாங்கி லண்டனிலிருந்து நாட்டுப்புறத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. யுத்தகாலத்தில் லண்டனைவிட்டு வெளியேறிய 22,500,000 பொதுஜனங்களில் அவரும் அவருடைய மனைவியும் சேர்ந்தவர்கள்.

பாங்கியில் அவர்களுக்கு ஒரு வாசஸ்தலத்தைக் கொடுத்தார்கள். அவ்விதமில்லாவிடில் பிரதேச அதிகாரிகள் சிறிய குடிசைகளிலும் அல்லது ஹாஸ்டலிலும் அவர்களை வசிக்கச் செய்திருப்பார்கள். அல்லது தொழிலாளர் மந்திரி இலாகா தேசீய சேவைப்படை ஹாஸ்டல்ஸ் கார்பொரேஷன் மூலமாக அவ்விதம் ஏற்பாடு செய்திருக்கும்.

லண்டனைவிட்டு வெளியேறியதிலிருந்து அவர்கள் மகனையும் மகளையும் விட்டுப் பிரிய வேண்டியதாயிற்று. 1941-ம் வருஷம் வரையில் அவருக்குக் கொடுக்கப்பட்ட பெட்ரோல் பங்கீட்டுச் சீட்டை குழந்தைகளை அகஸ்மாத்தாகப் பார்க்கச்செல்ல உபயோகித்துவந்தார். இப்பொழுது அவர் ரயில்வண்டியை நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. அவைகளில் செல்லும் பிரயாணிகளும் 125 சதவிகிதம் அதிகரித்துவிட்டார்கள்.

கட்டடக் கூட்டுறவுச் சங்கம் மூலமாக வாங்கப்பட்ட அவருடைய லண்டனிலுள்ள வீட்டிலுள்ள இரும்பு சாமான்களை முதலில் எடுத்துக்கொண்டார்கள். அதன்பின் அந்த வீட்டை வெடிகுண்டு வீச்சினால் வீடற்றவர்களுக்கு வழங்க நகரசபை எடுத்துக்கொண்டது.

வருமான வரி.

இப்பொழுது அவருக்கு வருமானம் 1,000 பவுன்கள்தான். அவர் இப்பொழுது 326 பவுன்கள் வருமானவரி கொடுக்கவேண்டியிருக்கிறது. 1939-ம் வருஷத்தில் அது 128 பவுன்களாக இருந்தது. அவருக்கு யுத்தத்துக்குப் பிற்காலத்திய வெகுமானமாக 48 பவுன்கள் கொடுக்கிறார்கள். அவர் செட்டாக ஜீவனம் செய்தால வருஷத்தில் 200 பவுன்களை மீதப்படுத்தலாம்.

அவர் பெரிய சேமிப்பு இயக்கத்தில் ஏராளமான பொருளை முதலீடு செய்திருக்கிறார். நாட்டுப்புறத்திலுள்ள சேமிப்பு இயக்கத்திற்கு அவர் தலைவன். அந்த இயக்கத்தில் 3 லக்ஷம் பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். "பெரிய சேமிப்பு" என்பது யுத்தக்கடன், தேசிய யுத்தக் கடன் பத்திரங்கள், சேவிங்ஸ் பத்திரங்கள் கொண்டது. இந்தத் தொகை 5,000 மிலியன் பவுன்களாகிவிட்டது. "சிறிய சேமிப்பு" என்பது சேமிப்பு ஸர்ட்டிபிகேட்டுகள், தற்காப்புப் பத்திரங்கள், சேவிங்ஸ் பாங்கி டிபாஸிட்டுகள் கொண்டது. இந்தத் தொகை 3,000 மிலியன் பவுன்களாகிவிட்டது.

அவர் மற்று சில ஸ்தாபனங்களுக்கும் பொருளுதவி செய்திருக்கிறார். முக்கியமாக, சிகிச்சைக்கான நிதி, ஒலிபரப்பு வேண்டுகோள்கள், விமானத்தாக்குதலால் ஏற்பட்ட கஷ்ட நிவாரண நிதி, ருஷ்யாவுக்கு உதவி, சைனாவுக்கு உதவி, முதலியவைகள்.

பொருளுக்கு சாமான் விக்கிரயம்.

அவருடைய மனைவிக்கு அவகாசம் கிடையாது. ஆகையால் அவரே சாமான்களை வாங்குகிறார். சில ஸ்டோர்கள் சாமான்களை வழங்கும் மோட்டார்களை வைத்து சாமான்களை விநியோகம் செய்துவருகிறார்கள். ஆனால் சாமான்கள் கடனாகக் கொடுக்கப்படாமல் பொருளுக்குத்தான் விக்கிரயம் செய்யப்படுகின்றன. அவ்விதம் செய்வதால் கணக்குகள் வைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் குறைந்துவிட்டது.

காகித ஸப்ளை $12\frac{1}{2}$ சதவிகிதமாகக் குறைந்துவிட்டதால் காகிதப் பைகளும் குறைந்துவிட்டதால் சாமான் வாங்குவது சிரமமாகிவிட்டது. பங்கீட்டுப் புஸ்தகங்களும் விரிவாக இருக்கின்றன. இது கேம்பிரிட்ஜ் கணக்கு ஆசிரியரின் குயுக்தியான திட்டம். பழக்கமில்லாதவர்களுக்கு இது சாமான்யமாக புலப்படாது. சமாதான காலத்தைவிட இப்பொழுது



கிடைக்கும் உணவுப்பொருள் மிகவும் குறைவானது. வெண்ணைக்குப்பதிலாக மார்கரைனும், ஒரு வீட்டிற்கு ஒரு வாரத்திற்கு கசாய் ஒரு துண்டும், தான் கிடைக்கின்றன. புதிய கனிவர்க்கங்கள் அபூர்வமானவை. உருளைக்கிழங்கு அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. ஆகிலும் உணவுப்பொருள் இலாகாவின் பத்திரிகை பிரசுரங்களில் பங்கீடு உணவுப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படவேண்டிய பதார்த்தங்கள் விளம்பரம் செய்யப்படுகின்றன. போஜன சாலைகளில் வழங்கப்படும் உணவுப்பொருள்கள் பங்கீடு செய்யப்படுவதில்லை. ஆகிலும் இரண்டுதடவைகள்தான் அவைகள் பரிமாறப்படும். அதன் விலை 5 ஷில்லிங். எல்லா வகுப்பினரும் யுத்தகால போஜனசாலைகளுக்குச் செல்லுகிறார்கள். அங்குதான் குறைந்த விலைக்கு நல்ல உணவு கிடைக்கும். துணிமணிகளின் சராசரி விலை 66 சதவிகிதம் அதிகரித்துவிட்டது. சீமான்கள் போட்டுக்கொள்ளும் மேல்அங்கி, கால்சட்டை, ஜோடுகள், மேஜோடுகள் எல்லாம் ஒரு வருஷத்தில் பங்கீடுச் சீட்டுக்குச் சரிக்கட்டிவிடும்.

"அத்யாவச்யமில்லாத துணிமணிகளுக்கு 100 சதவிகிதம் வாங்குகிறவர்களுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. இது மற்ற உல்லாசத்துக்குரிய பொருள்களுக்கும் அன்வயிக்கும். அதாவது நகைகள், தோல்பைகள் முதலியவை. இதன் பயனாக யுத்தத்துக்குமுன் 5 ஷில்லிங்காக இருந்த சிறு பை இப்பொழுது 3 பவுன்கள் விலைக்கு விற்கப்படும். ஆகையால் ஜனங்கள் வாங்கும் சாமானகளின் அளவு 41 சதவிகிதம் குறைந்துவிட்டது.

இதைத்தவிற இன்னும் அநேக வரிகளையும் அவர்கள் செலுத்தவேண்டியிருக்கிறது. 20 சிகரெட்டுகளுக்கு 1 ஷில்லிங் 9 பென்ஸ் வரி செலுத்தவேண்டும். இதற்குமுன் அது $5\frac{1}{2}$ பென்ஸாக இருந்தது. போதைப் பொருள்கள் விஸ்கி இரண்டு பைண்டுக்கு இப்பொழுது 39 ஷில்லிங் 4 பென்ஸ் கொடுக்கவேண்டும். யுத்தத்துக்குமுன் அது 18 ஷில்லிங் 6 பென்ஸாக இருந்தது.

கிருஹ கிருத்யம்.

வீட்டு வேலைக்காரி உதவிப்பயிற்சிப் படைக்குச் சேர்க்கப்பட்டுவிட்டாள். ஆகையால் அவர் தன்னுடைய மனைவிக்கு கிருஹ கிருத்யத்தில் ஒத்தாசை செய்கிறான். சாமான்களும் கிடைப்பதில்லை. உதாரணமாக துடைப்பங்களும், துடைக்கும் சாதனங்களும் யுத்தத்திற்கு முன்னிருந்ததற்கு 40 சதவிகிதம் குறைந்துவிட்டன. கட்டடவேலை செய்கிறவர்களின் சங்கியை பாதிக்குக் குறைந்துவிட்டது. அவர்களும் யுத்த நஷ்டத்தைப் பழுதுபார்த்து வருகிறார்கள். ஆகையால் அவர் அவர்கள் குழாய்களைப் பழுதுபார்த்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அவர் அவர்கள் தங்களுடைய ஜோடுகளைப் பழுதுபார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் சக்கிலியர்களின் சங்கியை குறைந்துவிட்டதால் வேலையில் தாமதம் ஏற்படக்கூடும்.

அவருக்கு வேலை நேரம் அதிகரித்திருந்தபோதிலும் ஓய்வு நேரத்தில் அவர் அநேக இயக்கங்களில் ஈடுபட்டிருக்கிறார். அவர் 12,50,000 பொதுஜன தற்காப்பு சேவைப்படைகளில் ஒருவன். ஒரு வாலண்டியர், ஆனால் இப்பொழுது வயதுவடைந்த எல்லோரும் அந்த சேவையில் ஈடுபடவேண்டும். பிரிடனிலுள்ள 1 லக்ஷம் ரத்ததானம் செய்தவர்களில் அவரும் ஒருவர். ஒரு உயிரைக் காப்பாற்ற 9 பேர்களின் ரத்தம் அவசியமென்று சொல்லப்படுகிறது. இரண்டாவது சேனைமட்டும் 3 லக்ஷம் கொடையாளர்களின் ரத்தத்தை உபயோகித்திருக்கிறது.

5 மிலியன் தோட்டப்பயிர் உற்பத்தி செய்பவர்களில் அவரும் ஒருவர். அழகான புஷ்பத் தோட்டங்களும், பொட்டல்களும் காய்கரிகளை உற்பத்திசெய்ய உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் பழைய சாமான்களைச் சேகரிப்பதில் அவர் அந்தப் பிரதேசத்தின் ஸ்வோர்ட்.

பொழுது போக்கு.

அவர் புத்தகம் வாங்கும் ஆர்வமுள்ளவராக இருந்தபோதிலும் நூற்றுக்கணக்கான புத்தகங்களைச் சேர்க்கும் இயக்கத்துக்குக் கொடுத்திருக்கிறார். நாட்டுப்புறத்திலுள்ள புத்தகசாலை புத்தகங்களைப் பாகுபாடு செய்து புத்தகபண்டுக்கும், வெடிகுண்டுகளால் நொருக்கப்பட்ட புத்தகசாலைகளுக்கும் புத்தகங்களையும் அனுப்பியிருக்கிறது.

அவர் காப் விளையாட்டில் உத்சாகமுள்ளவர், ஆகிலும் அவர் விளையாடும் இடத்தைப் பண்படுத்திவிட்டார்கள். இவ்விதமாக யுத்த சமயத்தில் 7 மிலியன் ஏகராக்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. வேனிற்காலத்தில் அந்த இடத்திலுள்ள கேடு விளக்கு கோஷ்டியுடன் கிரிகட் விளையாடியிருக்கிறார். முதல்தரமான ஆட்டங்களையும் கவனித்திருக்கிறார். அதற்கு பிரவேசக்கட்டணம் மூலம் கிடைத்த 12,000 பவுன்கள் சேவைப்படையினரின் உதவிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

லண்டனுக்கு அவர் காரிய விஷயமாக வரும்பொழுது விதிகளின்படி அவர் ஒரு ஹோட்டலில் நான்கு இரவுகளுக்குமேல் தங்கக்கூடாதபோதிலும் அவர் வெடிகுண்டுகளுக்குத் தப்பின சில நாடகசாலைகளுக்கு விஜயம் செய்வார்.

நகர சபையின் ஆதரவின்கீழ் சங்கீத கலையை அபிவிருத்தி செய்வதற்காக சுற்றுப்
பிரயாணம் செய்துவரும சங்கீத கோஷ்டியின் கீதங்களை அவர் கேட்பதுண்டு. சாயங்
காலங்களில் அவர் இரண்டு ரேடியோ ஒலிபெருக்குகளைச் செவிகொடுத்துக் கேட்பார்.
ஆகிலும் அவருக்கு கிராமபோன் பிளேட்டுகள் கிடைக்காது. ஏனெனில் அவைகளின் ஸப்ளை
யுத்தத்துக்கு முன்னிருந்ததைவிட 45 சதவிகிதம் குறைந்துவிட்டது.

## ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டின் அலுவல்கள்.

ஏப்ரல் மாதம் 25-ம் தேதியன்று ஸான்பிரான்ஸ்கோவில் எல்லா நேசதேச நாடுகளுடை
யவும் அவர்களுடன் ஸ்நேகபாவமுள்ள நாடுகளுடையவும் உயர்தர ராஜ தந்திரிகள் கூடு
வார்கள். இந்தக் கூட்டத்திற்கு பிரிடனும், அமெரிக்காவும், ருஷ்யாவும், பிரான்ஸும்,
சைனாவும் அழைப்புக் கடிதங்களை அனுப்பியிருக்கின்றன.

நேசதேச அறிக்கை வெளியிடுவதுபோல் இந்த மகாநாடு சமாதானத்தையும் உலக
பத்திரத்தையும் நிறுவ உபாயங்களை தேடும் தீவிரமான முயற்சியில் ஈடுபடும். நேசதேச
யுத்த முயற்சியில் காணப்பட்ட கூட்டு முயற்சி, பொதுவான தியாகம், ஒன்றுபட்ட லக்ஷியம்
முதலியவைகள், அச்சுநாடுகளின் கொடுங்கோன்மை முறியடிக்கப்பட்டபின் எதிர்காலத்தில்
யுத்தம் மூளாமல் தடுக்கக்கூடியதும் கிடைத்த சமாதானத்தைக்கொண்டு உலகத்தின்
க்ஷேமத்தை சர்வதேச நடவடிக்கை மூலம் அபிவிருத்தி செய்யக்கூடியதுமான ஒரு பொது
வான சர்வதேச ஸ்தாபனத்தை அமைக்காவிடில் பிரயோஜனமற்றதாக ஆகிவிடும்.

ஸ்வதந்திர உலகத்திலுள்ள சாதாரண பொதுமக்களுக்கு நம்பிக்கை ஒரு புறமும்
சந்தேகம் மற்றொரு புறமும் ஏற்பட்டிருக்கிறது. சென்ற யுத்த முடிவில் அநேகர்கள்
வீரத்துடன் பேசினார்கள். அழகிய எண்ணங்களும் வெளியிடப்பட்டன. சர்வதேச
சங்கத்தை ஸ்தாபிக்கும்பொழுது காணப்பட்ட பளபளப்பான எண்ணங்கள் காலக்கிரமத்தில்
ஏற்பட்ட தெளிவினால் மங்கிப்போய்விட்டன. எவ்வளவு குறைபாடுகள் இருந்தபோதிலும்
சர்வதேச சங்கம் உலக சரித்திரத்தில ஒரு முற்போக்கான அமைப்புதான். அதன்
பிரயோஜனம் மிகுதியாக இருந்தபோதிலும் இப்பொழுது அவைகள் மறை பொருளாகி
விட்டன. அதன் குறைவுபாடுகளிலிருந்து அநேக உபயோகமுள்ள படிப்பினைகள்
கிடைத்திருக்கின்றன.

உலக சரித்திரத்திலேயே முதன் முதலாக சமாதானத்தை நிறுவ முயற்சி செய்வது
நிஷ்பிரயோஜனமானதென்று சொல்லுகிறவர்களுக்கு பிரதம மந்திரி சர்ச்சில் பதிலுரைத்
திருக்கிறார். 1943-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 6-ம் தேதியன்று ஹார்வார்ட் சர்வகலா
சாலையில் அவர் பின்வருமாறு சொற்பொழிவாற்றியிருக்கிறார். "25 வருஷங்களுக்கு முன்
சென்ற யுத்தத்துக்குப்பின் சர்வதேச சங்கத்தை உண்டுபண்ணி அது திறம்படவேலை செய்ய
வேண்டுமென்று திட்டம் போட்டவர்களின் அரியவேலையை நாம் கவனித்திருக்கிறோம்.
சர்வதேச சங்கம் பிரயோஜனமில்லாமல் போய்விட்டதென்று சொல்லப்படுகிறது. அப்படி
யானால், காலக்கிரமத்தில் அதை எல்லோரும் உதறிவிட்டு அதைப்பிறர் கையில் காட்டிக்
கொடுத்ததினால்தான் அது பயன்படாமல் போய்விட்டது. அனுபவத்திலிருந்து உலக
சமாதானத்தை பரிபாலிக்கவும் உலக யுத்தங்களுக்கான காரணங்களைக்கண்டு பிடிக்கவும்
சர்வதேச சங்கத்தைவிட அதிக வலுவும், அதிக திறமையும், அதிக அதிகாரமும் பெற்ற
உலக ஸ்தாபனம் அவசியமென்று நாங்கள் தெரிந்துகொண்டிருக்கிறோம்".

1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் 21-ம் தேதியன்று மிஸ்டர் சர்ச்சில் பின்வருமாறு
ஒலிபெருக்கியிருக்கிறார். "சர்வதேச சங்கத்தை உண்டுபண்ணியதினால் ஏற்பட்ட மகத்தான
லாபங்களை நாம் லேசாகப் புரக்கணித்துவிடமாட்டோமென்று நம்புகிறேன். சர்வதேச
சங்கத்தின் அடிப்படைக் கொள்கையான ஸ்வதந்திரம், நியாயம், ஒழுங்கு முறை போன்ற
உயர்வான எண்ணங்கள்தான் நமக்கு அஸ்திவாரம் என்றும் நாம் கருதவேண்டும்."

1919-ம் வருஷம் ஜனவரி மாதம் 20-ம் தேதியன்று பாரீஸில் கூடிய சமாதான
மகாநாட்டிற்குச் சென்ற அதிகாரிகளைவிட ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்குச் செல்லும்
பிரதி நிதிகளுக்கு விசேஷமான சௌகரியங்களிருக்கின்றன. முதலாவது, சர்வதேச
சங்கத்திலிருந்து கிடைத்த அனுபவம். இரண்டாவது, 1919-ம் வருஷத்திலிருந்ததைவிட
இப்பொழுது இந்த மகாநாட்டிற்கு முன்னதாகவே பொதுப்படையான சர்வதேச ஸ்தா
பனத்தை ஸ்தாபிக்க முற்போக்கான சர்ச்சைகள் நடைபெற்றிருக்கின்றன. ஏற்கனவே நாம்
குறிப்பிட்ட 1943-ம் வருஷத்திய மார்ச்சு மாதத்திய சொற்பொழிவில் மிஸ்டர் சர்ச்சில்
உலக பத்திரத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டிய பிரச்னையும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிற
தென்று சொன்னார். ஆகிலும் டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டில்தான் அந்தக் குறிப்புகள்
உருவாக்கப்பட்டு பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா, சைனா என்ற நான்கு வல்லரசுகளின்
அங்கீகாரத்தையும் பெற்றன.



கிரிமியா மகாநாட்டைப்பற்றிய அறிக்கையில் சொல்லியிருப்பதுபோல, டம்பார்டன்
மகாநாட்டில் பொதுவான சர்வதேச ஸ்தாபனத்திற்கு நாங்கள் அஸ்திவாரம் போட்டு
விட்டோம். இந்த அலுவலின் முக்கியத்வத்தையும் மகத்தான தன்மையையும் யோசிக்கும்
கால் விரிவான அநேக அம்சங்களில் ஒன்றுபட்ட அபிப்பிராயம் ஏற்பட்டது. உத்தேசிக்கப்
பட்டிருக்கும் ஸ்தாபனத்தின் லக்ஷியங்கள் பின்வருமாறு "சர்வதேச சமாதானத்தையும்
உலக பத்திரத்தையும் பரிபாலிப்பது, தேசங்களுக்குள் ஸ்நேகபாவத்தை அபிவிருத்தி
செய்வது, சர்வதேசப் பொருளாதார, ஜன சமூக, மனிதவர்க்கத்தினிடம் அனுதாபம் காட்டக்
கூடிய இதர பிரச்னைகளைத், சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் தீர்த்து வைப்பது, இந்த
பொதுப்படையான லக்ஷியங்களைப் பெறுவதற்காக சர்வதேசங்களின் ஒத்துழைப்பைப் பெற
ஒரு மத்திய ஸ்தலத்தை நிர்த்தாரணம் செய்வது."

ஸ்தாபனத்தை நடத்துவதற்கும் மற்ற அங்கத்தினர்களின் கவனிப்புக்குமான கொள்கை
களை நான்கு வல்லரசுகளும் ஒப்புக்கொண்டார்கள். (1) சமாதானத்தை விரும்பும் நாடுகள்
ஆட்சி முறையில் சமத்வமுள்ளவை. (2) ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களுக்குள்ள பொறுப்பை
நடத்துவதாக அவைகள் வாக்குறுதி செய்யவேண்டும். (3) சமாதான முறையில் வியவ
காரங்களைத் தீர்த்துவிடுவது. (4) அந்த ஸ்தாபனத்தின் சாஸனத்தின் பிரகாரம் ஸ்தாபனம்
மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் மெம்பர்கள் பூரணமான ஆதரவளிப்பது. ஸ்தா
பனம் எந்த நாட்டைக் குறித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறதோ அந்த நாட்டிற்கு
ஸ்தாபனத்தின் அங்கத்தினரான எந்த நாடும் உதவியளிக்கக்கூடாது.

டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டின் ஸ்தாபன அமைப்பு திட்டங்களும் தெளிவானவை,
நடைமுறையில் உபயோகமுள்ளவை. இந்தத் திட்டங்கள் பின்வருமாறு. (1) இந்த ஸ்தா
பனத்தின் எல்லா அங்கத்தினர்களும் அடங்கிய ஒரு பொதுவான அஸெம்பிளி. இந்த ஸ்தா
பனத்தில் சமாதானத்தை விரும்பும் எல்லா நாடுகளும் சேர்ந்துகொள்ளலாம். (2) 11 பிரதி
நிதிகளடங்கிய உலக பத்திர சபை. இந்த பதினொன்று பிரதிநிதிகளில் பிரிடிஷ், அமெரிக்க,
ருஷ்ய, சீன, பிரெஞ்சு பிரதிநிதிகளுக்கு சாஸ்வதமான ஸ்தானமுண்டு. மற்ற தாத்காலிக
மான ஆறு ஸ்தானங்களுக்கு பிரதிநிதிகளை இரண்டு வருஷ கால அளவிற்கு ஜெனரல்
அஸெம்பிளி தேர்ந்தெடுக்கும். (3) சர்வதேச நீதி ஸ்தலம். (4) நிர்வாகிகள் அடங்கிய
ஒரு காரியாலயம்.

உலக ஸ்திதியை அபிவிருத்தி செய்ய சர்வதேச ஒத்துழைப்பு அமைப்புக்கான ஒரு
ஸ்தாபனம் அதில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஜெனரல் அஸெம்பிளியில் மூன்று வருஷகால
வரையுள்ள 18 தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளுள்ள பொருளாதார, ஜன சமூக சபை ஒன்று
ஏற்படுத்தப்படும். இந்த சபையின் கிளை ஸ்தாபனங்களாக மூன்று உப சபைகளும் அமைக்கப்
படும். ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் அல்லது திட்டம் போடப்பட்டிருக்கும் ஸ்தா
பனங்களான, நேசதேச கஷ்ட நிவாரண, புனருத்தாரண சங்கமும், உணவுப்பொருள்,
விவசாய ஸ்தாபனமும், சர்வதேச செலாவணி நிதியும், சீர்திருத்த பாங்கும், பொருளாதார,
ஜன சமூக சபையின் கண்காணிப்புக்குட்படுவார்கள். இந்த சபை அந்த ஸ்தாபனங்
களுடன் கலந்துபேசியும் சிபார்சுகளை கவனித்தும் நடவடிக்கைகளை ஒன்றுபடுத்திவரும்.

யுத்தமும் யுத்தத்துக்குப்பின் அதன் சிரமங்களும் குறையக் குறைய பொதுவான
சர்வதேச ஸ்தாபனத்தின் உபயோகமுள்ள நிலைமை ஸ்பஷ்டமாகத் தெரியவரும். மற்றொரு
யுத்தம் மூளாமல் ஏற்பாடு செய்யவேண்டிய இத்தருணத்தில் உலக பத்திர சபையில்தான்
அதிக கவனம் செலுத்தப்படுகிறது. சர்வதேச சமாதானத்தையும் உலக பத்திரத்தையும்
நிலைநாட்டும் பொறுப்பு அந்த உலக பத்திர ஸ்தாபனம்தான் ஏற்றுக்கொள்ளும்.

டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டில் முடிவு பெறாத ஒரு பிரச்னையை கிரிமியா மகாநாடு
தீர்த்து வைத்ததென்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். அதாவது உலக
பத்திர சபையில் வோட்டுக் கொடுக்கும் உரிமை. இது வரையில் அங்கு ஏற்பட்ட ஒப்பந்தம்
வெளியிடப்படவில்லை. ஆகிலும் பிரான்ஸ், சைனாவுடன் மகாநாட்டிற்கு அழைப்புப்
பத்திரங்களை அனுப்புவதைப்பற்றிப் பேசி முடிந்தவுடன் முடிவு செய்யப்பட்ட திட்டங்கள்
வெளியிடப்படும் என்று யால்டா அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

## யுத்தத்துக்குப் பின் உலக பத்திரம்.

### சாம்ராஜ்ய மகாநாட்டின் விவாதங்கள்.

(ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் விசேஷ பிரதிநிதி).

பிரிடிஷ் சர்வதேச வியவகார சங்கத்தார் லண்டனில் கூடிய சாம்ராஜ்ய சம்பந்த
மகாநாட்டில் முதல்வாரத்தில் உலக பத்திரம் என்ற விஷயம் முக்கியமாக சர்ச்சை செய்யப்
பட்டது. ஆஸ்திரேலியா, கனடா, இந்தியா, நியூஸிலாந்து, தெற்கு ஆபிரிக்கா, பிரிடன்
முதலிய நாடுகளின் பிரதிநிதிகளும், தெற்கு ரோடிஷியா, பர்மா முதலிய நாடுகளின் உற்று
நோக்காளர்களும் உத்தியோக முறையிலில்லாவிட்டாலும் நிபுணர்கள் என்ற முறையில்

அந்தந்த நாடுகளின் பொதுவான அக்கறைகள் சம்பந்தமாக அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொண்டார்கள். அவர்களுடைய லக்ஷியம் பிரச்னைகளை ஆராய்ச்சி செய்வதே ஒழிய, முடிவுக்கு வருவதில்லை. ஆகிலும் அதன் விளைவுகள் ஸான்பிரான்ஸிஸ்கோவில் கூடும் நேச தேசத்தார்களின் மகாநாட்டிற்குக் கிடைத்துவிடும். ஏப்ரலில் கூடும் அந்த மகாநாட்டில் உலகத்தின் சமாதானத்தையும், உலகத்தின் பத்திரத்தையும் பரிபாலிக்க ஏற்பாடு செய்யப்படும் உலக ஸ்தாபனம் உருவாக்கப்படும்.

லண்டன் மகாநாடு ரகசியமாக நடைபெற்றது. ஆகிலும் சம்பாஷணைகளின் முக்கியமான சில குறிப்புகள் கிடைத்திருக்கின்றன. குறிப்பான பிரச்னைகளைத் தீர்க்கும் விஷயத்தில் குறிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதில் அந்தக் கூட்டத்தில் ஒன்றுபட்ட முடிவு ஏற்பட்டது.

உதாரணமாக, யுத்தத்துக்குப் பிந்திய ஐரோப்பாவைப்பற்றிய விவாதத்தில் பிரிடன் சாம்ராஜ்யத்தின் பூர்ண ஆதரவுடன் விசேஷமான பங்கெடுத்துக்கொள்ளவேண்டுமென்று சாம்ராஜ்யப் பிரதிநிதிகள் ஏகமனதாக முடிவுக்கு வந்தார்கள். ஐரோப்பாவிலிருந்து சாம்ராஜ்ய நாடுகள் விலகியிருந்தாலும் அவைகள் விலகி நிற்கக்கூடாததென்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் மேற்கில் பாழாகப்போன தேசங்களைப் புனருத்தாரணம் செய்வதில் அவைகள் சுறுசுறுப்பான பங்கெடுத்துக்கொள்ளவேண்டும்.

மகாநாட்டின் சர்ச்சையில் சமாதானத்தை நிறுவுவதிலும் அதை அடைவதற்குரிய வழிகளைத் தேடுவதிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

## நேசதேசத்தாரின் விமான ஆதிக்கம்.

### ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்கிளேரின் விமர்சனம்.

மார்ச்சு மாதம் 6-ம தேதியன்று ஜனப்பிரதிநிதி சபையில் ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்கிளேர் ஆகாய ஆதிக்கம் என்னும் விஷயத்தைப்பற்றி சொற்பொழிவாற்றினார். அதில் ஜெர்மனி அனுபவித்திருக்கும் நாசத்தைப்பற்றிய கோரமான தோற்றமும் அந்நாட்டில் இனிமேல் ஏற்படக்கூடிய நஷ்டத்தைப்பற்றியும் நாஜிகள் இதைத் தடுக்க சக்தியற்றவர்களென்றும் ஆனால் நம்பிக்கையற்று அவர்கள் எதிர்த்துப் போராடுவதினால் ஜெர்மனியை மேன்மேலும் படுகுழியில் தள்ள முயன்று வருகிறார்களென்றும் மான்செஸ்டர் கார்டியன் வியாக்யானம் எழுதியிருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன் ஜெர்மானியர்கள் பிறர் தேசத்துக்குச் சென்று குண்டுகள் வீசுவதை நிறுத்திவிட்டு தங்களுடைய நாட்டையும் யுத்தத் தொழிற்சாலைகளையும் ரக்ஷிக்க சண்டை விமானங்களைக் கூட்டுவதில் அதிக கவனம் செலுத்தி வந்தார்கள். இதற்கு பதில் முறையாக பிரிடிஷ், அமெரிக்க விமானப் படைகள் ஜெர்மனியில் சண்டை விமானங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை பலமாகத் தாக்கின. அதன் விளைவாக விமானங்கள் உற்பத்தி குறைந்தது. எண்ணெய் உற்பத்தி குறைந்தது. பயிற்சி பெற்ற வேலைக்காரர்களும் விமானிகளும் குறைந்து விட்டார்கள். D. தினம் சமீபத்து விடும்படி நேரிட்டது.

ஜெர்மனிக்கு ஏற்பட்ட குறைவினாலும், நமக்கு ஏற்பட்ட ஆகாய ஆதிக்கத்தினாலும் என்ன பலன்கள் ஏற்பட்டனவென்று விமானப் படை இலாகா காரியதரிசி வெளியிட்டிருக்கிறார். அட்லாண்டிக் அரண் நொறுக்கப்பட்டு ஜெர்மன் போக்குவரத்து மார்க்கங்கள் பேரிலும் துருப்புகள் பேரிலும் பாம்பர் கமாண்ட் வெடி குண்டுகளை வீசுவதற்கும் கொரில்லாப் படைகளுக்கு வெடி மருந்துகளையும் சர்ப்பராக்களையும் விமான மூலம் போடுவதற்கும் சௌகரியமேற்பட்டது. கடற்கரை விமானப் படை இங்கிலீஷ் கால்வாயிலுள்ள யூ படகுகளையும் கப்பல்களையும் தாக்குவதற்கு சௌகரியமேற்பட்டது. போக்குவரத்து விமானப் படைகள் துருப்புகளை ஏற்றிச் செல்லுவதற்கும் ஐரோப்பாவிலிருந்து 55,000 காயம் பட்டவர்களை, பிரிடனுக்குக் கொண்டுவருவதற்கும் சௌகரியமேற்பட்டிருந்தது.

இந்த சௌகரியம் நஷ்டமில்லாமல் கிடைத்துவிடவில்லை. சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் முதல் ஸெப்டம்பர் மாதம் முடிய 10,000 பேர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், காயம்பட்டிருக்கிறார்கள், காணமல் போயிருக்கிறார்கள். ஆகிலும் விமான நஷ்டம் 1942-ம் வருஷத்தில் 4.1 சதவிகிதமாக இருந்தது. 1944-ம் வருஷத்தில் 1.7 ஆகக் குறைந்தது. இந்த வருஷத்தில் 1.1 சதவிகிதத்துக்குக் குறைந்துவிட்டது. இதன் மூலம் நமக்கு ஆகாய ஆதிக்கம் அதிகரிக்கிறதென்றும் எதிரியின் தற்காப்புகளின் வீழ்ச்சி அதிகரித்து வருகிறதென்றும் தெரியவருகிறது.

## நேசதேச விமானப்படையின் பலமான தாக்குதல்.

### 26,000 விமானிகள் 24-மணி நேரத்தில் ஜெர்மனியைத் தாக்குகிறார்கள்.

**விங் கமாண்டர் L. V. பிரேசர்.**

பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் மிகவும் நன்றாக ஒத்துழைத்து வருகின்றன என்பது சென்ற சில நாட்களில் நன்கு வெளியிடப்பட்டிருக்கிறது. ஹிட்லரின் ஜெர்மனியின் பெரும் பாகத்தில் நேசதேச விமானப்படையின் பூரா சக்தியும் உபயோகப்படுத்தப்படுகிறது. அதன் பாகுபாடுகள் எவ்விதமிருப்பினும் அதற்கு ஒரே ஒரு லக்ஷியம் உண்டு. அதாவது எதிரிகளின தொழிற்சாலைகள், போர்முனைகள், எண்ணெய் உற்பத்தி சாலைகள், இருப்புப்பாதைகள் முதலியவற்றை அழித்து விடவேண்டும்.

பிரிடிஷ், அமெரிக்க விமானப்படைகள் கையாண்டு வரும் திட்டங்கள் மூன்று வல்லரசுகளும் அவர்களின் காரியஸ்தர்களும் கூடிப்பேசிய அநேக மகாநாடுகளில் நிறுவப்பட்டவை. இந்தப் பொதுப் படையான திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு பிரிடிஷ், அமெரிக்கக் கூட்டுக் கமிட்டி ஒவ்வொரு வாரமும் கூடி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் தகவல்களைக் கொண்டு எந்த லக்ஷியங்களை முதலில் தாக்குவதென்று நிர்த்தாரணம் செய்வார்கள். இந்த ஜாப்தா பிரிடிஷ் பாம்பர் கமாண்டின் தலைவருக்கும் அமெரிக்க 8-வது விமானப் படைத் தலைவருக்கும் அனுப்பப்படும். அவ்விருவரும் கூடி இந்த லக்ஷியங்களை எவ்விதம் எப்பொழுது தாக்குவதென்று முடிவு செய்வார்கள்.

பாம்பர் படை வரிசைகளும் அவைகளுக்குத் துணையாகச் செல்லும் சண்டை விமானங்களும் ஜெர்மனி பேரில் 200 அல்லது 300 மைல்கள் தூரம் பறவி நிற்கின்றன என்றும் பகலிலும், இரவிலும் தாக்குதல் செய்து ஆயிரக்கணக்கான டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளைப் போடுகின்றனவென்றும், பகல் நேரங்களில் பிரிடிஷ் அமெரிக்க டாக்டிகல் விமானங்கள் மேற்குப் போர் முனையில் 3,000, 4,000 தடவை பாய்ந்து சென்றனவென்றும் கேள்விப்படுகிறோம். நமக்குக் கிட்டாத அநேக புள்ளி விவரங்களும் இருக்கின்றன. அவைகள் மேற்கில் மட்டும் விமானப் படைக்கு எவ்வளவு ஆதிக்கம் கிடைத்திருக்கிறதென்றும் தங்கு தடையற்ற முன்னேற்றத்திற்கு ஏராளமான படைகள் தேவையென்றும் வெளிப்படுத்துகின்றன.

ஒவ்வொரு வெடிகுண்டு வீச்சு நடவடிக்கையும் ஒரு மகத்தான போருக்கு சமமானது. குறைத்து மதிக்கப்பட்ட புள்ளி விவரங்களுள்ள ஒரு பகல், இரவு நடவடிக்கையை எடுத்துக் கொள்ளுவோம். இந்த இரவில் பிரிடிஷ் பாம்பர் படையைச் சேர்ந்த 1,000 லங்காஸ்டர் விமானங்களும், ஹாலிபாக்ஸ் விமானங்களும் வோர்மஸ், டுயிஸ்பர்க் மற்ற இடங்களிலுள்ள போக்குவரத்து நிலயங்களைத் தாக்கச் சென்றன. ஒரு விமானத்தில் ஏழு பேர்கள் வீதம் 7,000 பேர்கள் சென்றார்கள். இதைத் தவிர அவைகளுக்கு உதவியாக இரவு சண்டை விமானங்களும் வழிமறிக்கும் விமானங்களும் சென்றன.

மறுநாள் அமெரிக்க 8-வது விமானப்படையைச் சேர்ந்த 1,400 கனமான விமானங்கள் ஒவ்வொன்றிலும் 10 விமானிகளுடனும் 800 சண்டை விமானங்களுடனும் சென்றன. அன்றைய தினமே ஐரோப்பாவிலுள்ள பிரிடிஷ், அமெரிக்க டாக்டிகல் விமானப்படைகள் 4,300 தடவை பாய்ந்து சென்றன. இவைகள் குறிப்பான புள்ளி விவரங்கள். அன்று மேற்கிலிருந்து 19,000 நேசதேச விமானிகள் ஜெர்மனி பேரிலும் ஐரோப்பா பேரிலும் பறந்து சென்றார்களென்று வெளியாகுகிறது.

இவ்விதமாக 24 மணி நேரத்திற்குள் ஜெர்மனியைத் தாக்கும் விமான நடவடிக்கையில் 26,000 விமானிகள் ஈடுபட்டார்கள். இந்தப் புள்ளி விவரங்களைத் தவிர விமானங்களைப் பழுது பார்க்கும் தரைப்படையினரையும் நாம் கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

20 லக்ஷம் காலன் பெட்ரோலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் பாம்பர் படையை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். 1,000 வெடி விமானங்களைத் தாக்குதலுக்குத் தயாரிக்க 10 லக்ஷம் மணி நேரம் வேலை செய்ய வேண்டும். அந்த வெடிவிமானங்களில் 20 லக்ஷம் காலன் பெட்ரோலும் 4,000 டன்கள் மொத்த எடையுள்ள குண்டுகளும் அமைக்கப்படவேண்டும்.

1,00,000 விமானப்படை மெக்கானிக்குகள் வெடிவிமானங்களைப் பார்வையிட்டிருக்க வேண்டும். அதைத்தவிர ஆயிரக்கான ஆடவர்களும், ஸ்திரீகளும், கிளினர் முதல், மின்சார வேலைக்காரர்கள், கவசம் அமைப்பவர்கள், பெட்ரோல் பௌஸர்களை ஓட்டுகிறவர்கள் போன்ற எல்லோரும் ஈடுபட்டிருக்கவேண்டும். 2,500 லாரிகளும், டிராலிகளும், சாமான் கொண்டுவரும் சாதனங்களும் வெடிகுண்டுக் குவியல்களிருந்து விமானப்படையில் வெடி குண்டுகளை ஏற்றும் வேலையில் ஈடுபட்டிருக்கும். இங்கிலாந்திலுள்ள அமெரிக்க 8-வது விமானப்படையின் நடவடிக்கைகளுக்கும் டச்சு, பெல்ஜிய விமானத்தளங்களிலுள்ள டாக்டிகல் விமானப்படையின் நடவடிக்கைகளுக்கும் தேவைப்பட்ட வேலைக்காரர்களை மதித்துப்பார்த்தால் இந்தப் புள்ளி விபரங்கள் இந்த மகத்தான நடவடிக்கையின் சிரமங்களை நன்குவெளிப்படுத்தும். சமீபகாலத்தில் ஏழு நாட்களுக்குள் பிரிடிஷ் பாம்பர்படை 5,570 விமானங்களையும் 14,800 டன்கள் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளை அனுப்பியிருக்கிறது. அமெரிக்க 8-வது விமானப்படை 8,790 விமானங்களையும் 19,300 டன்கள் மொத்த எடையுள்ள வெடி குண்டுகளையும் அனுப்பியிருக்கிறது. இந்தப்புள்ளி விபரங்களைக்கொண்டு மதிக்கமுடியாத

பரிச்ரமும், தைரியமும் துணிவும் இந்த நடவடிக்கையில் உபயோகப்படுத்தப்பட்டன. இந்த முயற்சிகளுக்குப் படிப்படியாக வெற்றி அதிகரித்துக்கொண்டு வந்திருக்கிறது.

பிரிடன் ஒரு பெரிய விமானதளமாக மாறிவிட்டது. எண்ணெய்க் குழாய்களை அமைக்க திட்டம் போட்டவர்களின் முன்யோசனையும் இந்த வெற்றிக்கு உதவியிருக்கிறது. துறைமுகங்களிலிருந்து சாமான் கிட்டங்கிகளுக்கும் விமான தளங்களுக்கும் செல்லும் ஆயிரம் மைலகள் நீளமுள்ள குழாய்களில்லாவிடில வெடி விமான நடவடிக்கை இவ்வளவு உன்னதமான ஸ்திதியை அடைந்திருக்காது. 7 மிலியன் பவுன்கள் செலவு செய்வதற்குத் தகுந்த பயன் கிடைத்தது. 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் நெருக்கடியான சமயத்தில் அமைக்கப்பட்ட இந்தக் குழாய்கள் மூலம் எந்த இடத்திலிருந்தாலும் வெடி விமானங்கள் ஒரு குழாயைத் திருப்பின மாத்திரத்தில் துறைமுகங்களிலிருந்து வரும் எண்ணெயை விமானங்களிலுள்ள டாங்குகளில் நிறப்பி விடலாம்.

அந்த ஏழு நாட்களில் பிரிடிஷ் இரண்டாவது டாக்டிகல் விமானப்படை ஹாலந்திலும், பெல்ஜியத்திலும், பிரான்ஸிலுமுள்ள விமான தளங்களிலிருந்த 6,531 தடவையும் அமெரிக்க டாக்டிகல் விமானப்படை 14,375 தடவையும் பாய்ந்து சென்றிருக்கின்றன. இந்த வாரத்தில் கால நிலைமை அடிக்கடி மாறிக்கொண்டு வந்தபடியால் ஒரு நாள் இரண்டாவது டாக்டிகல் விமானப்படை 14 விமானங்களைத்தான் அனுப்ப முடிந்தது. மற்றொரு நாளில் 1,715 தடவை விமானங்கள் பறந்து சென்றன. விமான நடவடிக்கைக்கு இடைஞ்சல் செய்வது காலநிலையே ஒழிய ஜெர்மன் விமானப்படையல்ல.

இந்த வருஷத்தில் பிப்ரவரி மாதம் முதல் இரண்டு வாரங்களில் ஜெர்மனி பேரில் ஏற்பட்ட பாம்பர் படையின் விமான நடவடிக்கையில் ஏற்பட்ட நஷ்ட அளவு 1943-ம் வருஷத்தில் இதே சமயத்தில் ஏற்பட்ட நஷ்ட அளவுக்குக் கால்பாகத்துக்குக்குறைவு தான். இதற்கு அநேக காரணங்கள் உண்டு. ஜெர்மன் விமானப்படையின் நடவடிக்கை இதற்கு மிகவும் முக்கியமான காரணமல்ல. எதிரி ஏராளமான ராஜ்யங்களை இழந்து விட்டதினால் முன்போல அவனுக்கு எச்சரிக்கை செய்யக்கூடிய ஏற்பாடுகள் குறைவுபட்டுவிட்டன. சென்ற சில நாட்களில் மேற்குப் பக்கத்திலிருந்து ஜெர்மனி எவ்வளவு பலமாகத் தாக்கப்பட்ட போதிலும் இன்னும் தாக்குதல் உச்ச நிலைமையை அடைந்துவிட்டதென்பதற்கு யாதொரு ஸூசனையும் புலப்படவில்லை.

---

## பிரிடிஷ் சுரங்கவெடிகள் மூலம் 1,000 கப்பல்கள் நஷ்டமாகியிருக்கின்றன

### ஜெர்மனியின் அழிவுபட்டுவரும் கடற்படை பலம்.

(பிரியான் டன்ஸ்டால்).

அட்லாண்டிக்கிலும் மத்தியதரைக்கடலிலும் கடற்படைப் போருக்கு யாதொரு சந்தர்ப்பமும் ஏற்படாதென்றாலும், கடற்கரை பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்வதுடன், பிரிடிஷ் கடற்படைக்கு வேறு அலுவல்களுமிருக்கின்றன.

ஐரோப்பாவுக்கும் ஐரோப்பாவிலிருந்தும் செல்லக்கூடிய பிரிடிஷ், அமெரிக்கக் கப்பல்களைக் காப்பாற்றுவதும் ஜெர்மனியிடம் எஞ்சியுள்ள கடற்கரைக் கப்பல்களையும் அழிப்பதும் தான் பிரிடிஷ் கடற்படையின் வேலை. இந்தக் கடற்படையிலுள்ள யுத்தக் கப்பல்களின் எடைமானம் சொல்பமானதுதான. இப்பொழுது இருக்கும் நிலமையை நெபோலியன் தொடுத்த யுத்தங்களின் இறுதிக் கட்டத்துக்கு ஒப்பிடலாம். பிரிடிஷ் கடற்படை இதற்கு முன் கிடைத்த லாடங்களை நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

சென்ற சிலநாட்களில் சுரங்கவெடிகளைப் பாவும் நடவடிக்கையைப்பற்றி அநேக தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இந்த மிகவும் முக்கியமான நவீன கடற்படைப் போரிலுள்ள ஒரு அம்சத்துக்கும் கடற்படை நடவடிக்கைக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. இன்று சுரங்கவெடிகளைப் பாவுவதென்பது தற்காப்புமுறையுடன் நின்றுவிடவில்லை. எதிரி அவனுக்கு சொந்தமான சமுத்திரங்களை உபயோகப்படுத்தாமலிருப்பதற்கும் இது முற்போக்கான நடவடிக்கையாகும். பிரிடிஷ் கடற்படை இலாகா சமீபகாலத்தில் வெளியிட்ட அறிக்கையிலிருந்து யுத்த ஆரம்பத்திலிருந்து பிரிடிஷ் சுரங்கவெடிகள் மூலம் எதிரியின் பலவகைப்பட்ட கப்பல்களில் 1 000 மூழ்கடிக்கப்பட்டனவென்று தெரியவருகிறது.

சுரங்கவெடிகளைப் பாவுவதில் இருமுறைகள் கையாளப்படுகின்றன. முதல் முறையில் மிகவும் சிறிய சஞ்சாரியைப்போன்ற அளவில் கட்டப்பட்ட உயர்தர வேகமுள்ள சுரங்கவெடிகளைப் பாவும் கப்பல்களும், நாசகாரிகளும், நீர்மூழ்கிகளும், லேசான கடற்கரைப் படைகளைச் சேர்ந்த போர்க் கப்பல்களும் ஈடுபட்டிருக்கின்றன.

இரண்டாவதாக, சுரங்கவெடிகள் ஆகாயமார்க்கத்திலிருந்து பாவப்படுகின்றன. இந்த நடவடிக்கையில் பிரிடிஷ் விமானப்படையும் கடற்படையைச் சேர்ந்த விமானங்களும் ஈடுபட்டன. சுரங்கவெடிகளால் எதிரிக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டத்தில் 60 சதவிகிதம பிரிடிஷ் பாம்பர் கமாண்ட் படையின் நடவடிக்கையினால் ஏற்பட்டதென்று கடற்படை இலாகாவில் வெளியிட்டிருக்கிறது.



இது குறிப்பிடத்தக்க நடவடிக்கை. ஏனெனில் யுத்த ஆரம்பத்தில் உபயோகப்படுத்தப்
பட்ட ஹாம்ப்டன் விமானங்கள் அனேகமாக ஒரு கடற் சுரங்கவெடியைத்தான் ஏற்றிச்
செல்லக்கூடியதாக இருந்தன. விமானங்களில் சொல்பமான சுரங்கவெடிகளைத்தான் ஏற்றிச்
செல்லக்கூடுமென்றாலும், எந்த யுத்தக் கப்பலும் நீர்மூழ்கியும் செல்லக்கூடாத சமுத்திரங்
களில் சுரங்கவெடிகளைப் பாவும் சௌகரியத்தை அவைகள் பெற்றிருக்கின்றன.

பால்டிக் கடலில் பிரிடிஷ் கடற்படையின் சுரங்கவெடிகளைப் பாவும் நடவடிக்கை
உபயோகமுள்ளதென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. கடற்கரையோரமாகச் செல்லும்
கப்பல்களும், ருஷ்யப் போருக்குச் சென்ற சரபராக் கப்பல்களும் பயிற்சிபெறும் யூ்படகு
களும் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. பால்டிக் கடலுக்கு வெளியில் பிரிடிஷ் கடற்படையும்,
பிரிடிஷ் விமானப்படையும், ஒன்றுபட்டு நார்வேயிலிருந்து பிஸ்கே விரிகுடாவிலுள்ள
ஸ்பானிஷ் எல்லைச் சரகம் வரையிலுள்ள ஆக்கிரமிப்பு ஐரோப்பா கடற்கரை பூராவிலும்
சுரங்கவெடிகளைப் போட்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைகளில் ஹெலிகோலாந்துக்குச்
சமீபத்திலுள்ள காட்டிகாட், ஸ்காகராக்கினால் சூழப்பட்ட சமுத்திரங்களில் சுரங்கவெடிகள்
பாவப்பட்டதும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

யூ படகுகளையும் கடற்கரை ஓரமாகச் செல்லும் கப்பல்களையும் சுரங்கவெடிகள் மூலம்
அழிப்பதுடன் நவம்பர் மாதத்தில் படைகள் வடக்கு ஆபிரிக்காவில் இறங்குவதற்கும் 1914-ம்
வருஷம் ஜூன் மாதத்தில் D தினத்தன்று படைகள் இறங்குவதற்கும் தடங்கல் ஏற்படாத
படி அவைகள் காபந்துசெய்தன.

ஜெர்மனிக்கு கடலில் பலஹீனமேற்பட்டிருக்கிறதென்பதும் கூடியமட்டில் ஏதாவது
நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று எதிரி முயற்சி செய்துவருகிறானென்பதும்
ஐரோப்பாவுக்கும் ஐரோப்பாவிலிருந்தும் நடைபெறும் போக்குவரத்துக் கப்பல்களை வழி
மறிக்க முயலும் யூ படகுகளை நாம் தாக்கிவருவதிலிருந்து வெளியாகுகின்றன. பிரிடிஷ்
போர்க் கப்பல்கள் இரண்டு யூ படகுகளை மூழ்கடித்திருக்கின்றன. அநேகம் யூ படகுகளைப்
பழுதுபடுத்தியிருக்கின்றன.

சென்ற நவம்பர் மாதத்தில் எலிஸபத் இளவரசி மிதக்கவிட்ட கப்பல் வான்கார்ட் என்று
கடற்படை இலாகா வெளியிட்டுவிட்டதினால் ஜப்பானை எதிர்த்துத் தாக்க ஏராளமான படை
கள் குவிக்கப்படுகின்றன என்பதை அது ஞாபகப்படுத்துகிறது. வான்கார்ட் என்னும் பெயர்
நைல் நதிப்போரில் நெல்ஸன் ஏறிச்சென்ற கப்பலின் பெயரை ஒத்திருக்கிறது. ஆகிலும்
இந்தக் கப்பல் கட்டப்பட்டுவரும் யுத்தக் கப்பல்களின் ஜாப்தாவில் சேர்க்கப்பட்டிருக்க
வில்லை.

1939-ம் வருஷத்தில் இரண்டு பெயர் தெரியாத கப்பல்களும் கட்ட திட்டம் போடப்
பட்டனவென்று சொல்லப்படுகிறது. அவைகளுடன் லையான், டெமெரேர் என்ற யுத்தக்
கப்பல்களும் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. ஆகிலும் அவைகளைப் பற்றி அதற்குப்பின் யாதொரு
தகவல்களும் உத்தியோக முறையில் வெளியிடப்படவில்லை.

பஸிபிக் கடற் படையை வரவேற்பதற்கும், அதற்குச் சேவையான முக்கியமான
உணவுப் பொருள்களை வழங்குவதற்கும் ஆஸ்திரேலியா பெரும் பிரயத்னம் செய்துவருகிற
தென்று சொல்லப்படுகிறது. ஆஸ்திரேலியர்களுக்கு அளிக்கப்படும் கசாப் பங்கீடு, ஆஸ்திரே
லியாவிலுள்ள பிரிடிஷ், அமெரிக்கப் படைகளுக்கு வழங்குவதற்காகக் குறைக்கப்படும்.
ஆஸ்திரேலியாவிலும ஏராளமான கப்பல்களிருக்கின்றன. அதில் 8 அங்குல வாயுள்ள
இரண்டு பீரங்கிகளுள்ள சஞ்சாரிகளும், 50 நீர்மூழ்கிகளைத் தாக்கும் கப்பல்களும், 70 மோட்
டார் படகுகளும், 170 பலவகைப்பட்ட படகுகளும் இருக்கின்றன.

---

## இதாலியிலும் யூகோஸ்லாவியாவிலும் நடவடிக்கைகள்.

### நெல்ஸனின் ஆர்வம் கொரில்லாப் படைகளுக்கு உதவுகிறது.

(பிரியான் டன்ஸ்டால்).

ஜெர்மன் கடற்படையினுடையவும் விமானப் படையினுடையவும் பலஹீனம், நார்
வேஜியன் கடற்கரைக்கருகிலுள்ள சமுத்திரங்களிலுள்ள ஜெர்மன் கடற்படையின் தற்
போதிய நிலமையிலிருந்து நன்கு வெளியாகுகிறது. கடற்படையின் பலஹீனம் நேர்முக
மாகவும் விமானப் படையின் பலஹீனம் நேரில்லாத வகையிலும் பிரிடிஷ் கடற்படை 1939-ம்
வருஷத்திலிருந்து மேற்கொண்ட உயர்வான நடவடிக்கையிலிருந்து விளைந்ததாகும். பிரிடிஷ்
விமானப் படையைச் சேர்ந்த கடற்கரை விமானப் படைகள் கடற்படையுடன் சென்று
பகல் இரவாக ஜெர்மன் கடற்கரைக் கப்பல்களை பால்டிக் கடலுக்கு அருகிலும் ஸ்காகராக்கி
லும் தாக்கிவருகின்றன.

ஜெர்மானியர்கள் நார்வேயிலிருக்கும் ஜெர்மன் படைகளைக் காலி செய்வதற்காக கப்பற்
படையை உபயோகித்துவருகிறார்கள். சண்டை விமானங்களும் கனமான விமான எதிர்ப்பு
பீரங்கிகளும் அவைகளுக்கு ரக்ஷணையளிக்கக்கூடும். ஆகிலும் இவ்விரண்டும் ஜெர்மனிக்கு

அகப்படவில்லை. ஜெர்மன் கப்பற்படையும் நஷ்ட ஈடு செய்யப்படாததால் பலம் குன்றி
விட்டது. மேலும் ஜெர்மனியின் பலஹீனமுள்ள விமானப் படை மிகவும் பலமான விமா
னப் படையை சமாளிக்க வேண்டியிருக்கிறது. கடலாதிக்கமிருப்பதினால் அந்த விமானப்
படைக்கு உலகத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் பெட்ரோலும் சர்பராக்களும் ஏராளமாகக்
கிடைத்துவருகின்றன.

கடற்கரை விமானப் படையும் கடற் படையைச் சேர்ந்த விமானங்களும் ஷெல்ட் நதி
முகத்துவாரத்தில் நடமாடும் நேசதேசக் கப்பல்களை வழி மறிக்க முயலும் ஜெர்மன் இ-படகு
களைத் தாக்கிவருகின்றன. இந்தத் தாக்குதல் பிரிடனிலிருந்து வரும் தளங்களைவிட ஷெல்ட்
நதி முகத்துவாரத்துக்கும் டச்சுக் கடற்கரைக்கும் சமீபத்திலுள்ள பெல்ஜிய தளங்களிலிருந்து
நடைபெற்றன.

பிரிடிஷ் கடற்படை, விமானப் படையின் நடவடிக்கையின் பயனாக, ஐரோப்பாவில்
ஜெர்மன் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளின் கடற்கரை ஓரமாக நடைபெறும். ஜெர்மன் கடற்
படை விமானப் படையின் தற்போதய நடவடிக்கை இரண்டரை வருடங்களுக்கு முன்னிருந்
ததை விட மாறுபட்டதாக இருக்கிறது. 1912-ம் வருஷம் ஜுலை மாதத்தில் வடக்கு கடல்
வழியாக ருஷ்யாவுக்குச் சென்ற சாமான் கப்பல்களைப் பற்றிய தவறான அபிப்பிராயங்களைத்
திருத்துவதற்காக சமீப காலத்தில் வெளியிடப்பட்ட பிரிடிஷ் கடற்படை இலாகா அறிக்கை
யிலிருந்து இது வெளியாகுகிறது.

அந்த சாமான் கப்பல் கூட்டத்தை வழிமறிக்க எதிரிக்கு அந்த சமயத்தில் மிகுதியான
சௌகரியமுமிருந்தது. ஏனெனில் எதிரியிடம் சக்தி வாய்ந்த யூ படகுகளும் தரையிலுள்ள
விமானப் படையும் நார்வே வளைகுடாக்களிலுள்ள அநேக கனமான கப்பல்களுமிருந்து
வந்தன. ஜெர்மன் விமானப் படையை எதிர்த்துப் போராட அந்த சமயத்தில் பிரிடிஷ்
கடற்படையில் விமானம் தாங்கிகளும் கடற் படையைச் சேர்ந்த விமானங்களும் போது
மான அளவு இல்லை. அந்த வருஷம் கால நிலைமையும் சாமான் கப்பல்களைக் கண்டுபிடிக்க
போதுமான பகல் வெளிச்சமுள்ளதாக இருந்து ஜெர்மானியர்களுக்கு சௌகரியமளித்து
வந்தது.

பிரிடனிலிருந்து வடக்கு ருஷ்யாவுக்குச் சென்ற 35 சாமான் கப்பல்களுக்கு ஆறு நாச
காரிகளும், நீர்மூழ்கிகளை அழிக்கும் 11 சிறிய கப்பல்களும், இரண்டு விமான எதிர்ப்பு
பீரங்கிகளுள்ள கப்பல்களும் துணை சென்றன. சாமான் கப்பல்கூட்டம் ஐஸ்லாந்துக்கு வட
கிழக்கிலிருந்தபொழுது ரக்ஷிணையளிக்க முதலாவது சஞ்சாரிக் கப்பல் கூட்டமும் அனுப்பப்
பட்டது. வேவு பார்க்கும் விமானங்கள், டிர்பிட்ஸும், ஹிப்பரும் இன்னும் சில ஜெர்மன்
நாசகாரிகளும் சாமான் கப்பல் கூட்டத்தைத் தாக்க டிராண்ட்ஹிமை விட்டுப் புறப்பட்டு
விட்டனவென்று அறிமுகப்படுத்தின. ஆகையினால் பிரிடனிலிருந்த கடற் படையும் வடக்கு
நோக்கிச் சென்றது.

தாக்குதலுக்குப் பூர்வாங்கமாக மீன் வெடி வீசும் ஜெர்மன் வெடி விமானங்களும்
யூ படகுகளும் அடிக்கடி தாக்கி துணைக் காவல் கப்பல்களில் ஐந்தை மூழ்கடித்துவிட்டன.
மேலும் சாமான் கப்பல்களையும் வடக்கு முனைக்கு வடக்குக்குச் சென்றபொழுதும் ஜெர்
மன் கப்பல்கள் தாக்கக்கூடிய நிலைமையேற்பட்டபொழுதும் ஆகாயத்திலிருந்தும் கடலிலிருந்
தும், நீர்மூழ்கிகளிடமிருந்தும் தாக்குதல் அபாயத்துக்குட்பட்ட சாமான் கப்பல்களின்
நிலைமை மிகவும் மோசமாகி இருந்தது. உடனே கப்பல் கூட்டம் பிரிந்து செல்லவேண்டும்
என்று உத்திரவிடப்பட்டது, அவ்விதம் செய்யாவிடில் எதிரியின் தாக்குதலுக்கு ஒரு பெரிய
லக்ஷியம் கிடைத்துவிடுவதுடன் துணைக் காவல் கப்பல்கள், சாமான் கப்பல்களுக்கு ரக்ஷிணை
யளிப்பதுடன் எதிரியின கப்பல்களுடன் போர் புரியவும் வேண்டியிருக்கும். இந்த சிரமம்
நிவர்த்திக்கப்பட்டது. இந்த உபாயத்தை நாம் கையாண்டபோதிலும் ஜெர்மன் விமானப்
படையும் யூ படகுகளும் பின்னும் 19 கப்பல்களை மூழ்கடித்துவிட்டன.

1941-ம் வருஷம் ஜுன் மாதம் முதல் பிரிடனிலிருந்து சென்ற சாமான் கப்பல்களில்
91 சத விகிதம் ருஷ்யாவுக்கு பத்திரமாகச் சென்ற வடக்கு மார்க்கத்தில் இதுதான் மிகவும்
ஜாஸ்தியான கப்பல் நஷ்டம்.

ஒரு வருஷத்திற்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது நிலைமையில் தெளிவு ஏற்பட்டிருக்
கிறது. டிர்பிட்ஸ் மூழ்கடிக்கப்பட்டுவிட்டது. யூ படகுகளை நாம் அழித்து வருகிறோம்.
ஜெர்மன் விமானப் படை மறைந்துவிட்டது. பிரிடிஷ் விமானந் தாங்கிகள் வடக்கு
ருஷ்ய மார்க்கம் பூராவிலும் சுறுசுறுப்பாக நடமாடிக்கொண்டிருக்கின்றன. கடல் மார்க்
கத்திலேற்பட்ட சௌகரியமான நிலைமைக்கு செம்படையின் அபாரமான வெற்றியும் சம்
பந்தமுள்ளதுதான்.

மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் ஜெர்மனியின் மேல் துருக்கி போர் தொடுத்துவிட்ட
தென்று சொல்லிவிட்டதிலிருந்து டார்டனில்ஸ், மார்மோராக் கடல், பாஸ்பரஸ் என்ற
துருக்கி சமுத்திரங்கள் வழியாக ருஷ்யக் கருங்கடல் துறைமுகங்களுக்கு நேசதேச சப்ளைகள்
பத்திரமாகப் போய்க்கொண்டிருந்தன என்ற சௌகரியமான நிலைமை ஊர்ஜிதமாகிவிட்டது

அனுப்பினர். ஜப்பானியர்கள் அவ்விதம் செய்யமாட்டார்களென்று அவருக்குத் தெரிந்து அவருடைய இறுதிக் கடிதத்தில் பின்கண்ட வாக்கியங்களையும் சேர்த்து எழுதினர். "என்னுடைய கோரிக்கையை நீங்கள் அங்கீகாரம் செய்யாவிட்டால் புஷிடோ உணர்ச்சியையும் சாமுரார் கோட்பாட்டையும் மதித்து நீங்கள் இஸ்டாா முகாமிலுள்ள எல்லா பொது மக்களும் விக்டோரியா வாசற்படியாக நாமசமன்னியில் வெளிவர அனுமதிக்கவேண்டும். அவ்விதம் செய்தால்தான் அனுவசியமான மனித அழிவு ஏற்படாது." இந்த இறுதிக் கடிதத்துக்கு யாதொரு விடையும் இல்லை. பிலிப்பைன்ஸ் ஜனங்களில் ஒருவரேனும் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பிலிப்பைன்ஸ் பொதுஜன ஆஸ்பத்திரியிலிருந்த 6,000 பேர்கள் உயிர் தப்பினார்கள். இதற்குக் காரணம் அமெரிக்கர்கள் துரிதமாகத் தாக்கியதுதான். தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஜப்பானியர்கள் தடியாக இருந்ததால் பிலிப்பைன்ஸ் ஜனங்களபேரில் கவனம் செலுத்தக்கூடவில்லை.

மற்ற இடங்களிலும் தோல்விபெற்ற ஜப்பானியர்களின் அக்கிரம சுபாவத்தைப்பற்றி அநேக ருஜுக்கள் கிடைத்திருக்கின்றன. பொதுஜனங்கள் வீடுகளுக்குள் அடைபட்டபின் வீடுகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டன. அவர்கள் பத்திரத்துக்காக ஓடும்பொழுது அவர்கள் கட்டப்பட்டு, சனியன்களால் குத்தப்பட்டு, யந்திர பீரங்கிகளால் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். அநேகர்கள் கோரமாகச் சின்னாபின்னம் செய்யப்பட்டார்கள்.

ஜப்பானியர்களால் கொல்லப்பட்ட தாயையும் தகப்பனையும் இழந்த ஒரு சிறுவன் அவனுடைய சட்டைப்பையிலிருந்து "ஜப்பானிய கலைஞான போதனை" என்ற கட்டுரையுள்ள ஒரு ஜப்பானியப் பத்திரிகையை எடுத்தான். அந்தக் கட்டுரையில் பின்வருமாறு எழுதியிருந்தது. "சமக்ஷேம வட்டார நாடுகளில் ஏற்பட்டதுபோல் பிலிப்பைன்ஸிலும் புனருத்தாரண வேலை ஜப்பானிய கலைஞானத்தின் போதனையுடன் கையாளப்பட்டுவருகிறது. ஜப்பானை அறிந்தால்தான் ஜப்பானிய கலைஞானத்தை அறியலாம். பிலிப்பினோக்கள் ஜப்பானியர்களின் அநேக விஷயங்களை அறிந்துகொள்ளவில்லை. முக்கியமாக ஜப்பானுக்கு சமீபத்தில் அவர்கள் இருந்தபோதிலும் ஜப்பானிய வாழ்க்கையின் ஆத்மீககலையை அறிந்து கொள்ளவில்லை. முக்கியமாக சாதாரணமான பிலிப்பினோ ஜப்பானியர்களின் அஞ்சா நெஞ்சத்தையும் அவர்களின் நிராக்ஷேபனையான விசுவாசத்தையும் அறியமாட்டான். ஜப்பானியரின் கலைஞானத்தை அறிந்தால்தான் ஜப்பானியர்களின் தன்மையையும், பெரிய கிழக்கு ஆசியா யுத்தத்தை நடத்தும் ஜப்பானின் எண்ணத்தையும் அறிந்துகொள்ளலாம்."

"பிலிப்பினோக்கள் இப்பொழுது ஜப்பானிய கலைஞானத்தில் எல்லா அம்சத்தையும் அறிந்துவிட்டார்கள்" என்று அச்சிறுவன் மிகவும் வருத்தத்துடன் வெளியிட்டான்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 240 (4-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17- 3-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 21- 3-45 | வடவாளம் | ... மாலை | 7.00 |
| 18- 3-45 | கொன்னையூர் | ... ,, | 7.00 | ,, | சம்பட்டிவிடுதி | ... ,, | 7.30 |
| ,, | மேலவேகுப்பட்டி | ... ,, | 7.30 | 22- 3-45 | நச்சாந்துபட்டி | ... ,, | 7.00 |
| 19- 3-45 | புத்தாம்பூர் | ... ,, | 7.00 | ,, | விராச்சிலை | ... ,, | 7.30 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, | 7.30 | 23- 3-45 | மேலம்பட்டி | ... ,, | 7.00 |
| 20- 3-45 | ஆலங்குடி | ... ,, | 7.00 | ,, | பரம்பூர் | ... ,, | 7.30 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 241 (5-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24- 3-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 28- 3-45 | அன்னவாசல் | ... ,, | 7.00 |
| 25- 3-45 | காரத்தாமலை | ... ,, | 7.00 | ,, | கீழக்குறிச்சி | ... ,, | 7.30 |
| 26- 3-45 | திருமெய்யம் | ... ,, | 7.00 | 29- 3-45 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 | ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 |
| 27- 3-45 | புலியூர் | ... ,, | 7.00 | 30- 3-45 | ஓமாங்கலை-புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 | ,, | ஓமாங்கலைக்கோட்டை | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 17— 3—45 | பொன்னமராவதி. | 24— 3—45 | திருமெய்யம். |
| 18— 3—45 | விராச்சிலை. | 25— 3—45 | ஏம்பல். |
| 20— 3—45 | ராமச்சந்திரபுரம். | 27— 3—45 | குடுமியாமலை. |
| 22— 3—45 | குழிபிறை. | 29— 3—45 | ஆலங்குடி. |
| 23— 3—45 | புதுக்கோட்டை. | 30— 3—45 | புதுக்கோட்டை. |

69413

---

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—18-3-45.